# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி 3


**3/6**

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| **வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை** | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| **வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை** | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208 ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222 [Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225 மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230 [Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239 [Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார் பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச் 1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348 [Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390 [Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427 [Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440 [Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465 ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே 1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490 [Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509 ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516 [Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525 [Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573 [Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610 [Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664 R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664 [Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721 பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732 [Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740 ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741 [Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761 [Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776 [Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786 [Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833 [Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839 மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843 ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899 பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916 [Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936 மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004 [Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013 மார்ச் 1888 [Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013 [Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| | | | **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| | | | **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| | | | **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382 மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431 [Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448 [Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504 மார்ச்1893 & R 2436 பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 & R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559 [Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 & R5882 [Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை** | | | | |
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625 மார்ச்1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636 ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657 ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657 ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704 [Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| **வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை** | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786 மார்ச்1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900<br>[Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904<br>[Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942<br>மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988<br>ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018<br>[Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168 [Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270 [ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270 ( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278 மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278 [ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282 ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291 ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297 [ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312 மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315 ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379 நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஓவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| **வருடம் 1899 #R 2411 முதல் R 2552** | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455 ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464 மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467 மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469 மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470 மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473 மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| **வருடம் 1900# R 2553முதல் R 2747வரை** | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592 மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622 மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளைஅதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630 [ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646 [ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743 டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745 டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

| வருடம் 1901# R 2751முதல் R 2928வரை | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369<br>மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431<br>[Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521<br>[ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534<br>ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537<br>ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542<br>ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544<br>ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548<br>மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551<br>மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர்<br>1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749<br>ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759<br>Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759<br>ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820<br>[R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850<br>செப்டம்பர்<br>1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877<br>அக்டோபர்<br>1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879<br>அக்டோபர்<br>1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885<br>நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887<br>நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895<br>நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900<br>டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346<br>மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363<br>[ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374<br>[R3017]<br>[R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375<br>ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384<br>மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 &<br>R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கத்தரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கத்தரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341<br>(தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342<br>நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370<br>[Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370<br>[Page 377]<br>R 5371<br>[Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377<br>[Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377<br>[Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552 செப்டம்பர் 1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560 செப்டம்பர் 1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563 செப்டம்பர் 1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570 செப்டம்பர் 1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572 [Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572 [Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577 நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள் ]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603 [Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | ' நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உரபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | ˙ இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722 [ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722 [ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724 [ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728 [ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732 [ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733 [ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735 [ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736 [ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737 [ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742 [ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746 [ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747 [ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749 [ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750 [ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751<br>[ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752<br>[ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754<br>[ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758<br>[ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762<br>[Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874<br>[ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 &<br>R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875<br>[ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின் நிரூபணம் | 2658 |
| 657 | R 5876<br>[ Page 99] | 6 | எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878<br>[ Page 101] | 5 | புயலின்மத்தியில் சமாதானம் | 2664 |
| 659 | R 5879 &<br>R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879<br>[ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை<br>நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882<br>[ Page 105]<br>[R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885<br>[ Page 117] | 4 | கிறிஸ்துவோடு நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886<br>[Page 118] | 2 | சிறு நரிகள் | 2689 |
| 663 | R 5886<br>[ Page 125] | 2 | · சகோதரர்களை முறையாகவோ,<br>முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப்<br>பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889<br>[ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம் | 2697 |
| 667 | R 5890<br>[ Page 133] | 3 | இயேசு மரித்து எல்லோருக்காகவும்<br>ஈட்டுத்தொகை செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891<br>[ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 &<br>R 4374 & R<br>3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896<br>[ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898<br>[ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899<br>[ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900<br>[ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905<br>[ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907<br>[ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907<br>[ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909<br>[R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913<br>[ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917<br>[ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919<br>[ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923<br>[ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929<br>[ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931<br>[ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

# நாட்கள் பொல்லாதவைகளானதால்...

*"ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." (எபேசியர் 5:15, 16)*

இவ்வசனத்தில் இடம்பெறும் "கவனமாய்" என்ற வார்த்தைக்கான ஆங்கில வார்த்தை "Circumspect, Circum" என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது; இதன் அர்த்தமாவது விழிப்பாய் இருப்பதாகும். உண்மை கிறிஸ்தவனுடைய பாதை மிக நெருக்கமானதாகும்; அது சோதனைகளினாலும், படுகுழிகளினாலும், பொல்லாங்கனின் சூழ்ச்சிகளினாலும் வெகுவாய் நிறைந்துள்ளபடியினால், நமக்கு அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கான மாபெரும் ஆபத்து உள்ளது. நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிகளையும் கவனமாய்ப் பார்ப்பதோடு மாத்திரமல்லாமல், நாம் ஞானமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்; அதாவது பூமியிலுள்ள நமது சக சிருஷ்டிப்புக்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; அதாவது பரத்திலிருந்து வருகிற பரிசுத்தமும், சமாதானமும், அன்புள்ளதுமான ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; எனினும் முதலாவதாக நாம் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் கடந்து சென்று கொண்டிருக்கும் பாடுகள், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் குறித்து, கடிதங்கள் எங்களுக்கு வருவதால், முந்தைய காலங்களைக் காட்டிலும் அவர்களுடைய சோதனைகள் அநேகமாகவும், கடுமையாகவும் இருப்பதை நாம் உணர்கின்றோம். "கவனமாய் நடக்க" ஆவலுள்ள சோதனைக்குட்பட்டவர்களிடமிருந்து, ஜெப விண்ணப்பங்களும், கர்த்தருடைய வழி குறித்ததான ஆலோசனை வேண்டி கடிதங்களும் வருகின்றன. நம்மால் முடிந்தமட்டும் கர்த்தரோடு நடக்கத்தக்கதாக வழிகாட்டும் விதமாக அமையும் வேதவாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, மகிழ்ச்சியோடு இவர்களுக்குப் பதிலளிக்கின்றோம்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால்" நமது எதிராளியானவன் விசேஷமாகக் கிரியை செய்வதால், தற்காலத்தில் நினைவுகூரப்படுவதற்கும், கடைபிடிக்கப்படுவதற்கும் அவசியமானதும், எல்லாக் காலக்கட்டங்களிலும் அவசியமானதும், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் பொருந்தக்கூடியதுமான சில பொதுவான கோட்பாடுகளை நாம் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம். யூத யுக அறுவடையின் போது காணப்பட்டது போன்று, சுவிசேஷ யுக அறுவடையின் போதும் காணப்பட்டது; மேலும் எதிர்ப்புகள் ஜெப ஆலயங்களிலும், வேதபாரகர் மற்றும் பரிசேயரிடமிருந்து வந்ததுமல்லாமல், வீட்டிற்குள்ளாகவும் எதிர்ப்புகள் காணப்பட்டது . . . பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலும், கணவன் மனைவிக்கு இடையிலும் . . . கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும் ஏற்பட்டது. எதிராளியானவன் எந்த அளவுக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்த நாடுகின்றானோ, அவ்வளவாய் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வார்த்தையிலோ, கிரியையிலோ தவறு செய்யாதபடிக்கு மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கக்கடவர்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் . . . விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சையின் நாட்களாய் இருக்கிறபடியால் . . . கவனமாய் நடவுங்கள்.

## நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கான சில உதவிபுரியும் கோட்பாடுகள்

நாம் பரிந்துரைக்கும் கோட்பாடுகள் பின்வருமாறு:-

1. ஒவ்வொருவனும் தன்தன் காரியத்தைக் கவனிப்பதாக மனதில் முடிவெடுப்பானாக.

நாம் மற்றவருடைய காரியங்களில் தலையிடக்கூடாது என்று வேதவாக்கியங்கள் நமக்கு எச்சரிப்பூட்டுகின்றது. ஒவ்வொருவரும் வாழ்க்கையின் அனுபவங்கள் வாயிலாக இந்த அருமையான கோட்பாட்டைக் கற்றுக்கொண்டிருந்தாலும், வெகுசிலரே இக்கோட்பாட்டின்படி

கவனமாய் நடக்கின்றார்கள். நம்முடைய கரங்களையும், நேரங்களையும், வாயையும் ஆக்கிரமித்துக் கொள்ளத்தக்கதாக நம்மிடத்தில் போதுமான அளவு நம் சொந்த காரியங்களும், கர்த்தருடைய ஊழியங்களும் இல்லையெனில், நம்மில் ஏதோ தவறு உள்ளது; மேலும் அது சரி செய்து கொள்ளப்படத்தக்கதாகக் கவனமாய் ஜெபிக்கவும், கவனமாய்த் தெய்வீக வார்த்தைகளால் கற்றுக்கொள்ளப்படவும் வேண்டும்.

நமது பராமரிப்பின் கீழ் இருப்பவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவனமற்றவர்களாகவோ அல்லது நாம் பொறுப்பேற்றுள்ளவர்களின் விஷயத்தில் கவனமற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் இக்கோட்பாடு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது பொறுப்பின் கீழ் உள்ளவர்களுக்கு நாம் சில காரியங்களைச் செய்யும்போது கூட, நாம் அவர்களின் உரிமைகளையும் மற்றும் மற்றவர்களின் உரிமைகளையும் கருத்தில் கொண்டவர்களாகவும், அதிலும் விசேஷமாக நமது உரிமைகளை நாம் மேலோங்க செய்யவிடாமல் கவனமாய் இருக்க வேண்டும். நம்முடைய சொந்த விஷயங்களில் நமக்கு முழுமையான நீதி கிடைக்காவிட்டாலும், மற்றவரின் விஷயத்தில் நம்முடைய கையாளுதல் நீதியாய்க் காணப்பட வேண்டும், இரக்கம் காட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்.

2. நாம் நம்மிடத்திலும், நம்முடைய பெலவீனத்திலும் பொறுமையாய் இருப்பதைக்காட்டிலும், மற்றவரிடத்திலும், அவர்களுடைய குற்றங்குறைகளைக் காணும்போதும் மிகுந்த பொறுமையுடன் காணப்பட வேண்டும்.

விழுகையின் காரணமாக முழு உலகமும் சரீர பிரகாரமாகவும், ஒழுக்கரீதியிலும், மனரீதியிலும் ஆரோக்கியமற்றவர்கள் என்பதை நாம் நினைவுகூருகையில், அவர்களுடைய பெலவீனங்களுக்காக நாம் அனுதாபம் கொள்ளவேண்டும். கர்த்தர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் நமது கறைகளை, கிருபையுடன் மறைக்கச் சித்தமுள்ளவராய் இருக்கையில், நம்மைக் காட்டிலும் மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் அனுதாபமும், உருக்கமான இரக்கமுமே கொள்ளவேண்டும். இக்கோட்பாடு விசேஷமாக உங்கள் குழந்தைகளுக்குப் பொருந்தும். உங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படும் பெலவீனங்கள், உங்களிடத்திலிருந்து அல்லது உங்கள் வாயிலாகவே அவர்களுக்குக் கொஞ்சம் வந்துள்ளதால், அவர்களுடைய தப்பிதங்களை கையாளும்போது, நீங்கள் உங்கள் சொந்த தவறுகளை எவ்வாறு கையாளுவீர்களோ, அப்படியே அவர்களிடத்திலும் நீதியாய்க் கையாள வேண்டும், . . . அவர்களை நீதியின்படி சரிசெய்ய உண்மையுடனும், கண்டிப்புடனும் கையாள வேண்டும், அதேசமயம் இதை அனுதாபத்துடனும், இரக்கத்துடனும், அன்புடனும் செய்யவேண்டும்.

3. முன்கோபியாகவும், எளிதில் சினம்கொள்கிறவர்களாயும் இராதேயுங்கள்.

மற்றவர்களுடைய வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் இரக்கத்துடனும், பரந்த மனப்பான்மையுடனும் கண்ணோக்கம் கொள்ளுங்கள். அற்ப விஷயங்கள் அல்லது சிறு எதிர்த்தாக்குதல்கள் கண்டுகொள்ளப்படாமல் விடப்படலாம், அதாவது அன்பு மற்றும் பெருந்தன்மையின் சால்வையினால் மறைத்து மூடப்படலாம். கடுமையான குற்றங்கள் கூட, வேண்டுமென்றே செய்யப்படாததுபோல் கருதப்பட்டு, கோபத்தைத் தூண்டாதவாறு அன்பான வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும், அதாவது கிருபை பொருந்தின வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும். இப்படியாகக் குற்றமாகக் கருதப்பட்ட அநேக சந்தர்ப்பங்களில், குற்றம் இல்லை என்றும் நிரூபிக்கப்பட்டும் உள்ளது.

இக்கோட்பாடு, "கெட்ட சம்சயங்களில்" ஈடுபட வேண்டாம் என்ற வேதவாக்கியங்களில் அடங்குகின்றது . . . மற்றவர்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளுக்குப் பின்னாக தவறான/பொல்லாத நோக்கங்கள் இருப்பதாக நாம் கற்பனை செய்யக்கூடாது. கெட்ட சம்சயங்கள் என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிரானதாகவும், தேவபக்திக்கு எதிரானதாகவும் இருக்கின்றது என அப்போஸ்தலர் பட்டியலிடுகின்றார். கெட்ட சம்சயங்கள் என்பது பொறாமை மற்றும் சண்டையின் ஆவிக்கு ஒத்ததாக இருக்கின்றது. இது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியையாய் இருக்கின்றது. (1 தீமோத்தேயு 6:3-5; கலாத்தியர் 5:19-21).

## ஆவியின் பிரமாணமாகிய அன்பு

இதற்கு எதிர்மறையான விஷயங்களையும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார், அதாவது தேவனுடைய ஜனங்களை ஜெநிப்பித்துள்ள அன்பின் ஆவியினுடைய அம்சங்கள் குறித்தும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார். இந்த அன்பின் ஆவியைக் கர்த்தருடைய ஜனங்கள் நாள்தோறும் விருத்திச் செய்ய வேண்டும். இவைகள் அவர்களுக்குள் வளருமாயின், இது அவர்கள் ஜெயம்கொள்கிறவர்களாய் இருப்பதற்கான பிரதான நிரூபணங்களாகும். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." (1 கொரிந்தியர் 13)

இத்தகைய அன்பின் மனப்பான்மையினைப் பெற்றிருப்பவர்கள் மீது, தீமையானவர்கள் ஆதிக்கம் செலுத்திடுவார்களே என்று வலியுறுத்தப்படலாம். இந்த அன்பின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள் மென்மையானவர்களாகவோ அல்லது மழுங்கினவர்களாகவோ இருக்க மாட்டார்கள் என்று நாம் பதில் அளிக்கின்றோம்; இந்த அளவிலான அன்பை வளர்ப்பதில் அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, அவர்களை வளர்த்திற்று, மேலும் "கர்த்தருக்குப் பயப்படுதலில் அவருக்கு உகந்த வாசனை உடையவர்களாக்கிற்று". அன்புடையவர்கள் - மறுக்கமுடியாத சான்றுகளினால் வலுக்கட்டாயமாக தீமை ஒருவரிடத்தில் இருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் காணப்படும்போது தவிர, மற்றபடி குற்றத்தைச் சாற்றுவதை இவர்கள் தவிர்க்கின்றபோதிலும், தீமை தலைத்தூக்குவதைக் கண்ட மாத்திரத்திலேயே ஜாக்கிரதையாய் இருப்பார்கள்.

ஆனால் நாம் நம்மையும் தெரியாமல் ஒரு குற்றமற்ற நபர் மீது குற்றம் சுமத்தாதபடிக்குப் பெரும்பாலும் (பொறுமையாய்ச் சகித்து) சில சிறு (நற்பெயர் கெடுதல் போன்றதான) இழப்புகளை அனுபவிப்பதும், துணிந்து சில இழப்புகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்வதும் நலமாயிருக்கும். மேலும், இந்தக் கர்த்தருடைய ஆலோசனையின்படி செயல்பட்டவர்களுக்கு உண்டான எவ்விதமான இழப்புகளையும் ஈடுசெய்ய கர்த்தர் மிகுந்த வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.

தம்மை அன்புகூருபவர்களுக்கு இந்த அனைத்து அனுபவங்களையும் நன்மைக்கு ஏதுவாக மாற்ற அவர் வல்லமை கொண்டவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கின்றார். "நான் கட்டளையிட்டதை நீங்கள் செய்வீர்களானால், என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்று அவர் கூறுவதின் மூலம் தம்முடைய ஏற்பாட்டில் பலிக்கு முன் கீழ்ப்படிதலை வைக்கின்றார்.

ஒருவன் மற்ற விஷயங்களில் எவ்வளவுதான் கவனமுள்ளவனாய்க் காணப்பட்டாலும், "தீமை பேசுதலைக்" குறித்த கர்த்தருடைய இந்தக் கட்டளையை அசட்டை பண்ணுவானானால், அவன் தானே சிக்கிக்கொள்வதற்கு ஏதுவாக தனக்கு வலையைப் பின்னுகிறவனாக இருக்கின்றான்; ஏனெனில் எந்த இருதயம் உடன்சிருஷ்டியின் மீது சந்தேகம் மற்றும் குற்றப்பார்வை கொண்டுள்ளதோ, அந்த இருயதம் தேவனையே சந்தேகிக்கும் அளவு கொஞ்சம் தயாராகியுள்ளது. கசப்பின் ஆவி என்பது கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய அன்பின்

ஆவிக்கும் எதிராக யுத்தம் பண்ணுகிறதாய் உள்ளது. இரண்டில் ஏதோ ஒன்று ஜெயம்கொள்ளும். தவறான ஆவி வெளியேற்றப்பட வேண்டும், இல்லையேல் அது புதுச்சிருஷ்டியைத் தீட்டுப்படுத்தி அவனை "புறம்பாக்கப்பட்டவனாக்கி விடும்." மாறாக ஒருவேளை புதுச்சிருஷ்டி ஜெயம்கொண்டால், அதாவது தீமைபேசுதல் ஜெயம்கொள்ளப்பட்டால் தற்கால போராட்டங்கள், குழப்பங்கள், இடர்பாடுகளுக்கு எதிரான யுத்தத்தில், பாதி யுத்தம் முடிவு பெற்றதாகிவிடும். அனுமானங்கள் இருதயத்திலிருந்து எழும்புகின்றது, அது ஒன்றில் நன்மையான வார்த்தைகள், கிரியைகளுக்கு அல்லது தீமையான வார்த்தைகள், கிரியைகளுக்கு நேராக வழிநடத்துகின்றது.

4. நீங்கள் தீமையாய்ப் பேசப்பட்டால், உங்களைக் குற்றமற்றவர்களாகக் காண்பித்துக்கொள்ளத்தக்கதாக வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் விளக்கலாம், ஆனால் இதற்கு மேலாக செய்வதைத் தவிர்த்துவிடுங்கள்.

ஒருவேளை நீங்களும் பதிலுக்குத் தீமைபேசினால் தவறுசெய்கிறவர்களாகிவிடுவீர்கள். எந்த மனுஷனும் தீமைக்குத் தீமை செய்யாதிருக்கக்கடவன் . . . ஒருவேளை உங்கள் அயலார் பேசினது தவறானதாய் இருந்து, நீங்கள் பேசப்போவது உண்மையாய் இருந்தாலும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். இதை, உங்கள்மேல் சுமத்தப்பட்டக் குற்றத்திற்கு எதிராக விளக்கம் கொடுக்கும்போது நினைவில் கொள்ளுங்கள், அதாவது உங்களை குற்றம் சாட்டுபவர் மீது எதிர்குற்றச்சாட்டுகளைச் சுமத்த முற்படாதீர்கள்; ஏனெனில் நீங்கள் அப்படிச் செய்வீர்களானால், நீங்களும் தீமை பேசுகிறவராகிவிடுவீர்கள்.

## பொன்னான சட்டம்

இது வேதவாக்கியங்களின் அடிப்படையிலான சட்டமாகும். மற்றவர்கள் நமக்குச் செய்ததுபோல் அல்ல, மாறாக மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என நாம் விரும்புகின்றோமோ/கருதுகின்றோமோ, அதைத்தான் நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். நமக்குச் செய்யப்பட்ட தவறுகளானது, நாம் செய்யும் தப்பிதங்களை ஒருபோதும் நியாயப்படுத்தப் போவதில்லை. "நன்மை வரும்படி தீமை செய்யுங்கள்" என்பது போன்றதான சாத்தானின் வஞ்சனைகளுக்குத் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இடம் கொடுக்கக்கூடாது. தூஷிக்கிறவர்களின் பொய்யான மற்றும் தவறான குற்றச்சாட்டுகள் தவறு என்று நாம் விவரித்துக் காட்ட எவ்வித வேதவாக்கியங்களும் தடைவிதிக்கவில்லை என்றாலும் . . . ஒருவேளை ஒவ்வொரு எதிரிடையான பொல்லாத குற்றச்சாட்டுகளுக்கும் எதிராக போராடுவதில் நாம் சாத்தானையும், வஞ்சிக்கப்பட்ட அவனுடைய அநீதியான ஊழியர்களையும் பின்பற்றுகிறவர்களாக இருக்கும் பட்சத்தில், நாம் இவ்வேலையில் அதிகம் மும்முரமாய் (busy) இருக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதை அனுபவங்கள் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும். ஒருவேளை நாம் இவ்வேலையைச் செய்ய விருப்பமுள்ளவர்களாய் இருப்பதைச் சாத்தான் கண்டானானால், மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தியை நாம் அறிவிப்பதற்கு, நமக்குப் போதுமான நேரம் இல்லாமல் போகத்தக்கதாக, ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக போராடுவதில் நம்மை அதிகம் மும்முரம் அடைய செய்திடுவான், பின்னர்ச் சாத்தான் ஜெயம்கொண்டவனாகவும், நாம் தோற்றவர்களாகவும் ஆகிவிடுவோம்.

மாறாக நம்முடைய பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடும் ஓட்டத்திற்கான அழைப்பிற்கு இசைவாக, நாம் கீழ்ப்படிதலுடன் அவருடைய பாதங்களில் சகலவற்றையும் சமர்ப்பித்த பலியின் ஒரு பாகமாக, நம்முடைய நற்பெயரையும் கர்த்தரிடத்தில் சமர்ப்பிப்போமாக. நம்முடைய காரியங்களுக்காகப் போராடுவதின் மூலம், இராஜாவின் வேலையைப் புறக்கணிக்க மாட்டோம் என்று நாம் தீர்மானித்ததின் காரணமாக, நாம் சில நற்பெயர்களை இழந்தோமானால், நாம் கிறிஸ்துவுக்காக பாடுகள் சகித்தவர்களாகக் கருதப்படுவோம்; மேலும் இப்படிச் செய்யும் பட்சத்தில், பரலோகத்தில் நம்முடைய பலன் மிகுதியாகவும் இருக்கும். யுத்தம் முடிவடையும்போது, ஜெயம்கொண்டவர்கள் முடிசூட்டப்படுவார்கள்.

ஒவ்வொரு கர்த்தருடைய ஜனங்களும் தாங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் முடிந்தமட்டும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வெளிச்சத்தைப் பிரகாசிப்பதில் எந்த அளவு உண்மையும், வைராக்கியமும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் நம்முடைய ஒவ்வொரு வார்த்தையும், கிரியையும் தீயதாய்க் காண்பிக்கத்தக்கதாக திரித்துக் காட்ட நாடுபவனாகிய நம்முடைய மாபெரும் எதிராளியானவனின் தூஷணமான எதிர்ப்புகள் காணப்படும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவன் திரித்துப் பேசுவதற்கான காரணம், சகோதரரைக்

குற்றம்சாட்டுகிறவனாகிய அவனால் உண்மையான எவ்வித குற்றச்சாட்டுகளையும் காண முடியாததாலேயே ஆகும். மேலும் அவன் பிரதான ஊழியக்காரனாகிய நமது கர்த்தருக்கு விரோதமாக வெறி கொண்டது போல, சத்தியத்தின் எளிமையான ஊழியர்களுக்கும் எதிராக வெறி கொண்டுள்ளான். நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்தை மீறினார் என்று சிலுவையில் அறையப்பட்டதையும், இவைகள் ஆலயத்தின் பிரதான வகுப்பார்முன்பு நடந்தது என்பதையும், அவருடைய சொந்த சீஷர்களுள், ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

எதிராளியானவனால் தாக்கப்படும்போது . . . அவனுடைய பிரதிநிதிகள் யாராயினும், அவர்களுடைய ஏவுகணைகள் எதுவாயிருந்தாலும், அத்தருணங்களில், "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3). ஒருவேளை நாம் உண்மையாய்ச் சகித்தோமானால் . . . அவனால் (சாத்தான்) தீங்கு செய்ய முடியாது, மாறாக கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நற்பெயர் பெருக மாத்திரமே செய்கின்றது மற்றும் தேவன் தமது நோக்கம் கருதி நன்மைக்கு ஏதுவாக மாற்ற முடியாத அளவு அவன் எவ்வித வெளித்தோற்றமான தீங்கையும் கூடச்செய்ய முடியாது . . . சிலசமயம் கோதுமையிலிருந்து களையையும், பதரையும் சலித்தெடுப்பதுக்கூட அந்த நன்மையாக இருக்கும்.

5. தீமை பேசுதல், தூஷணங்கள் மற்றும் பழிப்பேச்சுகள், தேவனுடைய ஜனங்களிடம் காணப்படக்கூடாது என்று கண்டிப்பாக தடைப்பண்ணப்பட்டுள்ளது.

ஒருவேளை தீமைபேச்சுகள் உண்மையாக இருப்பினும், இவைகள் அன்பின் ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். பழிப்பேச்சுகள் பேசும் தன்மையைத் தடுக்கும்விதமாக வேதவாக்கியங்களானது, மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களில் மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்கான ஒரே வழிமுறையினைச் மிகக் கவனமாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களும்கூட இந்தத் தெய்வீகக் கோட்பாட்டைக் குறித்து அறியாமையிலேயே காணப்படுகின்றார்கள், ஆகவே கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்கள் பெரும்பாலும் (சதா பழித்தூற்றுகிறவராக) புரளி பரப்புபவராகக் காணப்படுகின்றனர். இக்கோட்பாடானது, நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட சில விசேஷித்த கட்டளைகளில் ஒன்றாகும் மற்றும் இக்கோட்பாடானது "நான் கட்டளையிடும் யாவற்றையும் செய்வீர்களானால், நீங்கள் என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்ற வாக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில், இது மீறப்படும் காரியமானது, அநேகர் இன்னமும் சீஷத்துவத்தில் முன்னேறவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது.

## கர்த்தருடைய வழியைப் பின்பற்றுங்கள்

இக்கோட்பாட்டைக் கொஞ்சம் கவனமாகப் பார்ப்போம். ஒருவேளை இக்கோட்பாடு பின்பற்றப்பட்டால், தீமை பேச்சுகள், பழிப்பேச்சுகள், வதந்திகள்/வீண்பேச்சுகள் தவிர்க்கப்படலாம்.

முதலாவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் கூடிப்பேச வேண்டும், அதாவது தான் பாதிக்கப்பட்டுள்ளதாக எண்ணி குற்றம் சாட்டுகிறவனுடைய வெளிப்படையான பேச்சு வார்த்தையாகும்; இந்த நபரை நாம் "A" என்ற பெயரில் அழைப்போம். குற்றம் சாட்டுபவர்மேல் தனக்குத் தீமையான எண்ணம் இல்லை என்று எண்ணுபவரை "B" என்ற பெயரில் அழைப்போம். இவர்கள் இருவரும் தங்கள், தங்கள் நடத்தைச் சரியாக இருக்கின்றது என்று எண்ணி, காரியத்தைக் குறித்து விவாதம் பண்ணி, இருவரும் ஒரே கண்ணோட்டத்தில் வரக்கூடுமோ என்று பார்ப்பதற்கென்று சகோதரர்களாகக் கூடிவந்துள்ளனர். ஒருவேளை அவர்கள் ஒன்றுபட்டால், எல்லாம் நலமாய் முடியும்; பிரச்சனையும் முடிவுக்கு வந்துவிடும்; சமாதானம் நிலவும்; அச்சுறுத்தும் பிரிவினை தடுக்கப்பட்டுவிடும்; மேலும் ஒருவரும் ஞானி என்று சொல்வதற்கில்லை.

ஒருவேளை இருவரும் உடன்பாட்டிற்குள் வரவில்லையெனில், "A" தனது கூற்றை வெளியே கூறி, பழித்தூற்ற ஆரம்பிக்கக் கூடாது. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான

நண்பர்களிடம் கூடச் சொல்லக் கூடாது. ஒருவேளை அவன் காரியத்தை வெளியே கூறி, பின்பு "எதுவும் வெளியே சொல்ல வேண்டாம்; விசேஷமாக நான் உன்னிடம் கூறினேன் என்று சொல்ல வேண்டாம்" என்று கூறலாமா? . . . இல்லை, கூடாது . . . காரியம் இன்னமும் "உனக்கும் அவனுக்கும் (A மற்றும் B) இடையில்தான்" உள்ளது. ஒருவேளை "A" இவ்விஷயத்தை முக்கியம் என்று கருதி, இன்னும் பிரயாசங்கள் எடுக்க விரும்பினால், அவனுக்கு ஒரு வழி உள்ளது . . . அதாவது, தன்னோடு கூட "B"-ஐ சந்திக்க இரண்டு அல்லது மூன்று நபரைக் கூட்டிக்கொண்டு சென்று, அவர்கள் இரண்டு பக்கத்தின் காரியங்களையும் கேட்டு, சரி மற்றும் தவறு என்ன என்பது பற்றின தங்களுடைய பகுத்தறிதலைத் தெரிவிப்பதேயாகும். இந்த இரண்டு அல்லது மூன்று பேர் எப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருந்து தெரிந்துகொள்ளப்பட வேண்டுமெனில் . . .

(1) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "B"-க்கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "A"-கு நம்பிக்கை இருக்க வேண்டும்; (2) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "A"-கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "B" -கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

தான் தெரிந்துகொள்ள விரும்பும் இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளடங்கியுள்ள நண்பர்களிடம் "A" காரியங்களைச் சற்று அதிகமாகவே கலந்துபேசுவது, அதாவது அவர்கள் (மறுபக்கம் செவிசாய்க்காமல்) தனக்கே ஆதரவு அளிக்கத்தக்கதாகவும், சாட்சியாளர்கள் தவறான அபிப்பிராயத்துடனும், "B"-கு எதிராக ஏற்கனவே மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டு, பேச்சுவார்த்தைக்குச் செல்லத்தக்கதாகவும் "A" பேசுவது என்பது போதகரின் கட்டளையினுடைய ஆவிக்கும், நீதியின் ஆவிக்கும் முற்றிலும் எதிர்மாறானதாகும். இரண்டு பேர் நடுவில் உள்ள பிரச்சனைகளை, அவர்கள் இருவரின் முன்னிலையிலேயே கேட்பதற்கு, இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளே கொண்டுவரப்படுவது வரையிலும், காரியம் A மற்றும் B இடையில் மாத்திரமே இருக்க வேண்டும்.

## உதவுவதற்கே ஒழிய காயப்படுத்துவதற்கல்ல

"சகோதரருடைய" தீர்ப்பு "B"-க்கு எதிராக இருக்குமாயின், அவர்களுக்கு "B" செவிசாய்க்க வேண்டும், மேலும் "B"-இன் மனஉணர்வு ஒத்துப்போக முடியாத அளவு (அவர்களின் தீர்ப்பில்) ஏதேனும் கோட்பாடுகள் காணப்பட்டால் தவிர, மற்றபடி "B" சாட்சியாளர்களின் கண்ணோட்டத்தை நீதியானதாகவும், நியாயமானதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை "சகோதரர்கள்", "B"-இன் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பார்களானால், "A" தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வேண்டும்; மேலும், மனசாட்சி தடைபண்ணினால் தவிர மற்றபடி, சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு, "B"-இடமும் மற்றும் சகோதரர்களிடமும், தன்னுடைய குறைவான மதிப்பீட்டினால் உண்டுபண்ணின தொல்லைக்காக மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற எவரும், "வெளிவராத" விதத்திலும்கூட மற்றவர்களிடம் காரியங்களைக் கூறி பழித்தூற்றுகிறவனாக மாறக்கூடாது.

ஒருவேளை தீர்ப்பானது "A"-கு எதிராக வழங்கப்பட்டால், ஒருவேளை அவர் இதினிமித்தம் காயமடைந்ததாகவும், சரியில்லாத சாட்சியாளர்கள் தெரிந்து கொள்ளப்பட்டக் காரணத்தின் நிமித்தம் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்பதாகவும் எண்ணினார் என்றால், "A" (நமது கர்த்தருடைய இக்கட்டளைக்கு மீறாத விதத்தில்) வேறு (சாட்சியாளர்களை) ஆலோசகர்களை அழைத்து, முன்பு செய்த பிரகாரம் செயல்படுத்தலாம். இவர்களுடைய தீர்ப்பும் ஒருவேளை "A"-கு எதிராகவே காணப்பட்டால் அல்லது எல்லோரும் "B"-கு ஆதரவு கொடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் "A" யாருடைய தீர்ப்பின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாத நிலையில் காணப்பட்டாரானால், "A" தன்னிடத்தில் இருக்கும் பிரச்சனை இறுமாப்பு என்று உணர்ந்து, உபவாசித்து, ஜெபம் பண்ணி, நீதியின் கோட்பாடுகள் குறித்துக் கவனமாய்க் கற்க வேண்டும். ஆனால் காரியங்களை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ, சபைக்கோ அல்லது வேறு எவரிடமோ கூறுவதற்கு இப்பொழுதும் "A"-கு அதிகாரம் இல்லை. அப்படி ஒருவேளை "A" செயல்பட்டால், அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியாததையும், சத்தியம்

மற்றும் அன்பின் ஆவிக்கு விரோதமான தீயதும், மாம்சீகமானதுமான ஆவி அவரிடம் இருப்பதையும் இச்செயல்பாடு சுட்டிக்காட்டுகின்றது.

ஒருவேளை சாட்சியாளர்கள் "B"-கு எதிராக கொஞ்சம் விஷயத்தில் எதிர்ப்பும், "A"-கு கொஞ்சம் விஷயத்தில் ஆதரவும் தெரிவித்தார்களானால், சகோதரராகிய "A" மற்றும் "B"-யும்கூடக் காரியங்களை அவ்விதத்திலேயே பார்த்து, சமாதானத்துடன் காரியங்களை ஒழுங்குபடுத்த நாடவேண்டும். இப்படியான சூழ்நிலைகளில் மற்றவருடைய காரியங்களை வெளியே சொல்வதற்கு இடம் இருக்காது.

ஒருவேளை சாட்சியாளர்கள் முற்றிலும் "B"-கு எதிராகவும், "A"-கு முற்றிலும் சாதகமாகவும் தீர்மானித்தும், அவர்களுக்கு "B" செவிசாய்க்காமலோ அல்லது தவறைச் சரிசெய்து கொள்ளாமலோ அல்லது "A"-கு காயம் விளைவிப்பதை நிறுத்தாமலோ காணப்பட்டாலும்கூட "A"-கு "B"-ஐ குறித்து வெளியே பழித்தூற்ற அதிகாரம் இல்லை, மேலும் சாட்சியாளர்களாகிய சகோதரர்களுக்குக்கூட "B"-ஐ குறித்துப் பழிதூற்ற அதிகாரமில்லை. "A" இன்னும் பிரயாசம் எடுக்க விரும்பினால், அவருக்கு ஒரே ஒரு வழி மாத்திரம் உள்ளது . . . "A"-யும், குழுவினரும் சேர்ந்து காரியத்தை சபைக்கு முன்வைப்பதே அவ்வழியாகும். சபையார், இருவரின் சார்பில் உள்ள விஷயங்களைக் கேட்க வேண்டும் . . . பின்னர் "A" அல்லது "B" இவர்களில் யாரேனும் சபையாரின் ஆலோசனையை ஏற்க மறுப்பாரானால், சபையார் அனைவராலும் அச்சகோதரன் புறம்பாக்கப்பட்டவனாக - சபையார் அல்லாதவனாகக் கருதப்பட வேண்டும்; ஐக்கியம் அவனிடம் வைத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும்; அச்சகோதரன் மனம்வருந்தி, சீர்ப்பொருந்தும் வரை மரித்துப் போனவனாகக் கருதப்பட வேண்டும்.

ஓர் அங்கத்தினுடைய பொறுப்புகள் மற்றவரால் செய்ய முடியாது . . . ஒவ்வொருவரும் கர்த்தருடைய கட்டளையின்படி தனக்கானவைகளைச் செய்துகொள்ள வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய கட்டளை மீறப்பட்டு, பழித்தூற்றும் காரியங்கள் நடந்தேறி, சபையாரை உபத்திரவத்திற்குள்ளாக்கி, சபை முழுவதையும் அவமானப்படுத்துகிறதாய் இருக்கும் பட்சத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, அப்பிரச்சனையைக் கையாள வேண்டும். இவர்கள் பிரச்சனைகள் என்ன என்று விசாரிப்பதோடல்லாமல், அவதூற்றைப் பரப்பின உண்மையான கிளர்ச்சியாளர்களும் யாரென்று விசாரித்து, அவர்களைக் கடிந்து கொள்ளவும் வேண்டும்.

ஆனால், அனைவரும் ஏதோ விஷயங்களில் பூரணமற்றவர்கள் என்பதை நினைவுகூர்ந்து, அன்புடன் சகல கடிந்துகொள்ளுதலும் காணப்பட வேண்டும். எல்லா விஷயங்களிலும் நோக்கம், திருத்தம் செய்வதாக இருக்க வேண்டுமே ஒழிய, தண்டனை வழங்க வேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் கர்த்தருக்கு மாத்திரம் உரியதாகும். மனம் திருந்தாத அந்தச் சகோதரனோடு ஒரு குறிப்பிட்ட காலம்வரைச் சபையார் ஐக்கியம் கொள்ளக்கூடாது மற்றும் மனம்திரும்புதல் பிரத்தியட்சம் ஆகும்போது, மீண்டும் சபையார் ஐக்கியம் கொள்வதைத் தொடர வேண்டும். நாம் அன்பு காண்பிப்பதையும், சந்தோஷம் மற்றும் சமாதானம் ஏற்படுத்துவதையுமே கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இவற்றை நாமும் அவருடைய சீஷர்களாக இருந்து செய்ய வேண்டும். வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டால் நிச்சயமாக பாதிப்பு ஏற்படும்.

இவ்விதமாக முதலில் மறைமுகமாகப் பழித்தூற்றும் பாவமாகக் காணப்பட்டு, பின்னர் மாம்சம் மற்றும் பிசாசின் கீழ்த்தரமான கிரியையாக மாறி சத்தியத்திற்குள்ளான வளர்ச்சியையும், அன்பின் ஆவியையும் தடுத்துப்போடுகிறதான காரியங்களிலிருந்து கர்த்தர் தமது உண்மையான சீஷர்களைப் பாதுகாக்கின்றார். மேலும் யாரொருவர் பழிப்பேசுபவர்களின் பேச்சுவார்த்தைகளைக் கேட்டு, பழித்தூற்றுபவர்களின் தவறான போக்கை உற்சாகமூட்டுகின்றாரோ, அவரும் அவர்களின் பொல்லாத செயல்பாடுகளுக்குப் பங்காளியாவார் என்பதையும்கூட நாம் தெரிவிக்கின்றோம்; மேலும் கர்த்தருடைய கட்டளையை மீறின காரியத்திலும் அவர்களோடு உடன்பங்காளியாவார் என்பதையும் தெரிவிக்கின்றோம். தேவனுடைய உண்மையான ஜனங்கள் பழித்தூற்றுபவர்களின் பழிப்பேச்சைக் கேட்க மறுத்து, அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையையும், வேதம் அங்கீகரிக்கும் ஒரே வழிமுறையையும் சுட்டிக்காண்பிக்க வேண்டும். "தேவனைப் பார்க்கிலும் நாம் ஞானவான்களோ?" . . . நாம் நம்முடைய சொந்த கணிப்புகளை நம்ப முடியாது என்றும், உடனே மேய்ப்பனின் சத்தத்தை நம்பிக்கையுடன் பின்தொடர்வதே பாதுகாப்பானது என்றும் அனுபவங்கள் நமக்குக் கற்பித்துத் தந்துள்ளது.

## அன்புடன் கடிந்துகொள்ளுங்கள்

ஒரு சகோதரனோ, சகோதரியோ மற்றவர்களைக் குறித்து உங்களிடம் பழித்தூற்ற ஆரம்பித்தால், அவரை உடனடியாகத் தடுத்துவிடுங்கள் . . . இதை அன்புடனும், அதே சமயம் உறுதியுடனும் செய்யுங்கள். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11). சபையில் மாபெரும் தொல்லையை ஏற்படுத்தக் கூடிய, நமது கர்த்தருடைய கட்டளைக்கு எதிரான இந்த மீறுதலில் பங்குகொள்ளும் எவ்விதமான காரியங்களையும் மறுத்துவிடுங்கள். ஒருவேளை குறைகூறும் சகோதரனோ, சகோதரியோ, ஆவிக்குரிய காரியங்களில் குழந்தையாக இருப்பார்களானால், அவர்களின் கவனத்துக்கு, இவ்விஷயத்தைக் குறித்த்தான கர்த்தருடைய கட்டளையைக் கொண்டுபோங்கள். (அதாவது மத்தேயு 18:15; 1 தீமோத்தேயு 5:19 எடுத்துக்கூறுங்கள்). ஒருவேளை மற்றவரைக் குறித்த பழிப்பேச்சுகள் உங்களிடத்தில் நேரடியாகப் பேசப்படாமல், மற்றவரிடம் பேசிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளில்/கூட்டங்களில், நீங்கள் நிற்க, உங்கள் செவியில் விழுமாயின் உங்கள் நிராகரிப்பை உடனடியாக தெரிவிக்கும் விதத்தில் (கூட்டத்தை விட்டு) பின்வாங்கிவிடுங்கள்.

ஒருவேளை பழித்தூற்றும் விஷயத்தைக் குறித்ததான கர்த்தருடைய கட்டளை, பழித்தூற்றுபவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், பழித்தூற்றும் சகோதரன் இன்னமும் தீமைபேசுதலையும், பழிப்பேச்சையும், தூஷணங்களையும் தொடர்வாரானால், உங்களிடம் தொடர்ந்து தனது பழிப்பேச்சுகளைத் தொடர்வாரானால், அவரைத் திட்டவட்டமாகக் கடிந்துகொள்ளும் வண்ணமாக, "நீங்கள் இப்படிப் பேசுவதை என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது, நான் கேட்கவும் கூடாது; ஒருவேளை நான் கேட்டுக்கொண்டிருந்தால், நீங்கள் கர்த்தருடைய கட்டளையை மீறி குற்றவாளியாக (criminal) இருப்பது போல நானும் (criminal) குற்றவாளியாகிவிடுவேன். ஒருவேளை நான் உங்களின் இக்கதையைக் கேட்க வேண்டியதாய் இருப்பினும், என்னால் அதை நம்ப முடியாது, ஏனெனில் எந்தக் கிறிஸ்தவன் கர்த்தருடைய வசனத்தை மதியாமல், தவறுகளைச் சரிசெய்து கொள்வதற்கான அவருடைய திட்டத்தைப் பின்பற்றாமல் இருக்கிறானோ, அவனிடம் கர்த்தருடைய ஆவி இல்லாதபடியால், அவனுடைய வார்த்தைகளும் நம்புவதற்கு ஏதுவல்லாததாகும்" என்று கூறி கடந்துபோக வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளைத் தட்டிக்கழிக்கிறவனும், புரட்டுகிறவனும், உடன் சீஷர்களின் வார்த்தைகளையும், கிரியைகளையும் குறித்துப் புரட்ட தயங்கமாட்டான். நீங்கள் இத்தகைய தூஷண பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலோ அல்லது அப்பேச்சுக்களுக்கோ, அப்பேச்சைப் பேசுகிற வதந்தியாளர்களுக்கோ, பழித்தூற்றுபவர்களுக்கோ ஆதரவு தெரிவித்தாலோ, நீங்களும் அந்தப் பாவத்திற்கும் அதன் சகல பின்விளைவுகளுக்கும் பங்காளிகள் ஆவீர்கள்; ஒருவேளை இதினிமித்தம் "கசப்பான வேர்" முளைத்து விட்டால், இதனால் தீட்டுப்பட்டவர்களில், நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் (எபிரெயர் 12:15).

## அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள்

உலகத்தின் நிலைப்பாட்டைப் பொறுத்தமட்டில் அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள். ஷேக்ஸ்பியர் இப்படியாக எழுதுகின்றார்:

> "என்னுடைய பணப்பையைத் திருடுகின்றவன், பயனற்றதையே திருடுகின்றான்;
> ஆனால் என்னுடைய நற்பெயரை என்னிடத்திலிருந்து அபகரிப்பவனை
> அது பணக்காரனாக்காது; உண்மையில் என்னைத்தான் அது ஏழ்மையாக்குகின்றது."

கிறிஸ்தவ நிலைபாட்டின்படியும், மாபெரும் போதகரின் கருத்துபடியும், அவதூறு பண்ணுகிறவர்கள் கொலைக்காரர்கள் ஆவார்கள். (மத்தேயு 5:22; 1 யோவான் 3:15 பார்க்கவும்). ஆகவே அவதூறு சொல்வதற்கான சிந்தனையானது, பிசாசின் ஆவி என்பது போல விலக்கப்பட வேண்டும்.

6. மிகப் பாதகமான வாதைகளிடமிருந்து ஒதுங்கியிருப்பதுபோல், தேவனுடைய ஜனங்கள் பெருமையைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இக்கோட்பாடானது மிக நல்ல கோட்பாடாகும்; இது வேதவாக்கியங்கள் அளிக்கும் கோட்பாடாகும், மேலும் இது தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இரட்டிப்பாக அவசியப்படும் கோட்பாடாகும். இப்படிக் கூறுவது விநோதமாய் தோன்றலாம் . . . தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் திட்டம் குறித்ததான மாபெரும் வெளிச்சம் கொடுக்கப்படும் காரணத்தினிமித்தம் அவருடைய ஜனங்கள் தங்களை மிகவும் தாழ்த்தியும், தெய்வீக ஈவுகளின் மீது அதிகம் சார்ந்தவர்களாகவும், தேவன் மீது அதிகம் நம்பிக்கை கொண்டவர்களாகவும், தங்களின் மீது நம்பிக்கை வைக்காதவர்களாகவும் தானே காணப்படுவார்கள்? என்று நீங்கள் யோசிக்கலாம். தேவனுடைய ஜனங்கள் இப்பண்புடையவர்களாகத்தான் என்றென்றும், எப்போதும் காணப்பட வேண்டும், ஆனால் அந்தோ! . . . அநேகர் இப்படியாக இருப்பதில்லை.

அநேகர் யுகங்களைப் பற்றின திட்டத்தின் அறிவைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் தங்களை விசேஷித்த ஞானிகள் அல்லது பெரியவர்கள் அல்லது நல்லவர்கள் என்று எண்ணிவிடுகின்றனர்; இவர்களோ தேவன் ஞானிகளுக்கும், பெரியவர்களுக்கும், சத்தியத்தை மறைத்துவிடுவார் என்பதையும், அவருக்கு முன்பாக எந்த மாம்சமானவைகளும் (தன்னைத்தான்) புகழ்ந்திடக்கூடாது என்பதையும் மறந்துவிட்டார்கள். ஆதாயம் கருதி, வியாபாரிகள் தங்கள் வாணிகச் சரக்குகளை விரும்புவது போன்று, இவர்களும் சத்தியத்தைச் சுயநலத்துடன் விரும்புகின்றனர். ஒருவேளை சத்தியத்தைக் கொடுத்து/விற்று இவர்கள் ஆஸ்திகளை எதிர்பார்க்காவிட்டாலும், கொஞ்சம் விளம்பரத்தை எதிர்பார்க்கின்றார்கள்; அதாவது மற்றவர்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கு, அதாவது சத்தியத்தை சிறிது சிறிதாக எடுத்துக்கூறி, அதன்மூலம் தாங்கள் ஞானமுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து விளம்பரப்படுத்தித் தங்களை பெருமைப்படுத்திக் கொள்ள நாடுகின்றனர்.

## தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை

இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் இவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளாத பட்சத்தில் சீக்கிரத்திலோ அல்லது கொஞ்சம் காலம் கழிந்தோ முற்றிலும் வழி விலகி, உதவி செய்வதற்குப் பதிலாக, பாதிப்புகளை உண்டாக்கிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நோக்கத்திற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. மேலும் அவர்களுக்கு எவ்வளவுதான் திறமைகள் இருந்தாலும், அவர்களுடைய தற்பெருமையினாலே அவர்கள் இடறிப்போகும்படியாக நிச்சயமாக அனுமதித்துவிடுவார். உண்மையிலேயே திறமை உள்ளவர்கள் அல்லது திறமை தங்களுக்கு இருப்பது போன்று கற்பனை செய்து கொள்பவர்களே பெருமையின் ஆவியினால் உண்மையில் இன்னலுக்குள்ளாக அகப்படுகின்றார்கள். தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார், ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ தமது கிருபையை அளிக்கின்றார். இந்த வெளியீட்டுகளின் இதழாசிரியர் தனது ஞானத்தையோ அல்லது ஆற்றலையோ குறித்து வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்பெருமை அடித்துக்கொள்ளவில்லை என்பதற்கு நமது வெளியீடுகளின் வாசகர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர். நாங்கள் சத்தியத்தைக் குறித்துப் பெருமை பாராட்டியிருக்கின்றோம், இன்னும் அதைக் குறித்து பெருமை பாராட்டுவோம், அதாவது சத்தியத்தினுடைய பிரகாசமான மின்சாரம் போன்ற கதிருக்கு முன்பாக எந்த மனித தத்துவங்களும் ஒரு மெழுகுத்திரியின் வெளிச்சத்தைக் கூடக் காட்ட முடியவில்லை என்று பெருமை பாராட்டுகிறோமே ஒழிய, அச்சத்தியத்தை வெளிக்கொண்டுவந்தவர் நானே என்று ஒருபோதும் பெருமை பாராட்டிக்கொள்ளவில்லை. காரணம் என்னவெனில், அச்சத்தியங்களை நாங்கள் உருவாக்கவில்லை, மாறாக தேவன்தாமே "ஏற்றவேளையில்" "ஏற்றகாலத்தின் உணவாக/சத்தியமாக" வெளிப்படுத்தியுள்ளார். மேலும் நாங்களோ அல்லது வேறு எந்த மனுஷர்களோ உருவாக்கும் உபதேசங்களைக்காட்டிலும் இச்சத்தியங்கள் மிகவும் அருமையானவைகளாக இருப்பதினால், இச்சத்தியத்திற்குத் தேவனே ஆசிரியர் என்றும், அதனை வெளிப்படுத்தினவர் என்றும் நாங்கள் நம்பகின்றோம்.

ஒருவேளை தேவனுடைய கிருபையினால், தற்கால அறுவடை சத்தியத்தை மற்றவருக்கு வெளிப்படுத்தும் வேலையில் நாங்கள் எந்தெந்த விதங்களில் பயன்படுத்தப்பட்டாலும், அவ்வேலையின் நிமித்தம் நாங்கள் களிகூருகின்றோம்; மேலும் எங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள உக்கிராணத்துவத்தில் உண்மையாய் இருக்க தொடருவோம், ஆனாலும் இவ்விஷத்தில் தற்பெருமை கொள்வதற்கு எங்களிடத்தில் இடமோ, அவசியமோ, காரணமோ இல்லை. இவ்வேலைக்குப் பாத்திரமானவர்களையும், பொருத்தமானவர்களையும், திறமை

மிக்கவர்களையும் நமது எஜமான் உடனே கண்டுபிடிக்க வல்லவர் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த காரியமாய் உள்ளது. ஆனால், 1 கொரிந்தியர் 1:27-29 "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" என்பதே நமக்கான விளக்கமாகும்.

ஆகவே தேவனுடைய கிருபையினாலே இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாகிய அனைவரும் கர்த்தருக்கு முன்பாக அதிக தாழ்மையுள்ளவர்களாக இருக்கும்படி எச்சரிப்பூட்டுகின்றோம். ஏனெனில், ஒருவேளை பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிச்சமானது இருளாகிப் போகுமானால், அவ்விருள் எவ்வளவு பெரியதாக இருக்கும் . . . எத்துணை நம்பிக்கையற்ற நிலைமையாகக் காணப்படும்! அப்படிப்பட்டவர்களைக் குறித்துக் கூறுகையில், அப்போஸ்தலர் குறிப்பிட்டது போல, அவர்கள் ஜீவனுக்குரிய பாதையை அறியாமல் இருந்திருந்தால் அது அவர்களுக்கு நலமாய் இருந்திருக்கும். உப்பு சாரமற்றுப் போனால் அது ஒன்றிற்கும் உதவாது, சொல்லப்போனால் மண்ணைப் போன்றாகிவிடும்.

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

7. சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்.

தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் குற்றமனசாட்சியற்ற நிலையைக் காத்துக்கொள்கிறவர்களாய் இருங்கள். இருதயத்தில், அதாவது எண்ணங்களில் சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்; பொல்லாப்பான எவ்வித எண்ணங்களுக்கும் இருதயத்தில் இடம் கொடாதிருங்கள். தீமையான எண்ணங்கள் குடிகொள்ளாதபடிக்கு கிறிஸ்து இயேசுவை உங்கள் மனதிற்கு முன்பாக மாதிரியாக நிறுத்திக்கொள்ளுங்கள். தீமையான எண்ணங்கள் வெளியிலிருந்தோ அல்லது உங்களுக்குள்ளிருந்தோ உங்களிடத்தில் அழையாமல் நுழைகிறது என்றால், தேவையான எல்லாச் சூழ்நிலைகளிலும் உதவி அளிக்கப்படும் என்று வாக்களித்தவரிடம் கிருபைக்காக உங்கள் இருதயங்களை ஜெபத்தில் உயர்த்துங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங்கீதம் 19:14) என்ற ஜெபமும், சிந்தையும் உங்களிடத்தில் எப்பொழுதும் காணப்படுவதாக.

8. வேதவாக்கியங்களின் பல்வேறு விசேஷித்தக் கட்டளைகளை மதிப்புடன் கருதி, அவைகளைக் கைக்கொள்ள நாடுகையில், அந்தத் தெய்வீகப் பிரமாணத்தின் அடிப்படையான கொள்கைகளை அதிகமதிகமாய்ப் புரிந்துகொள்வதற்கும், அதற்கு இசைவாக நடக்கவும் நாட வேண்டும்.

இப்படிச்செய்வோமேயானால் கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பாக ஒருவேளை சுட்டிக்காட்டப்படாத நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளில் காணப்படும் தவறுகளையும், சரியானவைகளையும் நம்மால் கண்டுபிடிக்க முடியும். நாம் எவ்வளவாக தெய்வீக பிரமாணத்தின் அடிப்படை கோட்பாடுகளைப் புரிந்துகொண்டு, அதற்கு இசைவாய்ச் செயல்படுகின்றோமோ, அவ்வளவாய் தெய்வீக வார்த்தையின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். சங்கீதம் 119:97-105 பார்க்கவும்.

9. கிறிஸ்துவின் குணலட்சணத்திற்கு அல்லது சிந்தனைக்கு எதிரான, குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் சண்டையிடுகின்ற குணலட்சணங்களை விலக்கி/தவிர்த்துவிடுங்கள், அதாவது அன்பிற்கு எதிர்மாறான இவைகளைத் தவிர்த்துவிடுங்கள்.

உலகம், மாம்சம் மற்றும் பிசாசையும், இவர்களின் பல்வேறு கண்ணிகளையும் எதிர்த்து மேற்கொள்வதற்குக் கொஞ்சம் எதிர்த்துப்போராடுகிற மனப்பான்மையுடன் கூடிய தைரியம்

தேவையாய் உள்ளது. இந்தப் போராடுகின்ற மனப்பான்மையானது ஒருவேளை ஞானமாகவும், சரியான விதத்திலும் கையாளப்பட்டால், அதாவது பாவத்திற்கு எதிராக முதலாவது நம்மிடத்திலும், இரண்டாவதாக மற்றவரிடத்திலும் கையாளப்பட்டால், இந்தப் போராடுகின்ற மனப்பான்மை கர்த்தருடைய நோக்கத்திற்கும், நமக்கும் மிக விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். ஒருவேளை இப்போராடும் மனப்பான்மையானது கர்த்தருக்காவும், அவருடைய ஜனங்களுக்காகவும், சாத்தானுடைய இருளின் வல்லமைகள் மற்றும் மூடநம்பிக்கைக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டால் இப்போராடும் மனப்பான்மையானது நமக்கு விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். இதுவே வேதவாக்கியங்களில், "நல்ல போராட்டத்தைப் போராடுதல்" என்று அழைக்கப்படுகின்றது; மேலும் நீதி மற்றும் சத்தியத்திற்கான இந்த யுத்தத்தில், நமது தலைவரின் கனத்தையும், அவருடைய ஜனங்களின் சுயாதீனங்களையும் காப்பாற்றுவதற்கென யுத்தம் பண்ணும் தைரியமான போர் வீரர்களாக நாம் அனைவரும் காணப்பட வேண்டும்.

## நல்ல போரராட்டத்தைப் போராடுங்கள்

ஆனால் எதிர்த்துப்போராடும் மனப்பான்மையை இப்படியாக நல்ல விதத்தில் பயன்படுத்துவது என்பது இவ்வுலகத்தின் அதிபதியானவனுக்குப் பிரியமாய் இராது, ஆகையால் அவனால் நேரடியாகப் பயன்படுத்த முடியாத இம்மனப்பான்மையைத் தவறான வழியில் திருப்ப நாடி முயற்சிப்பான். இதன் விளைவாக அவன் (சாத்தான்) சிலரிடத்தில் இப்போராடும் மனப்பான்மையைப் பிரதானமான கடமை என்று எண்ணிக்கொள்ளத்தக்கதாக முயற்சி செய்வான். மேலும் சாத்தான் - அவர்கள் எல்லாவற்றோடும், அனைவரோடும் போராடும்படி அவர்களை ஊக்கமூட்ட முயற்சிப்பான், அதாவது இருளின் அதிகாரத்தைக் காட்டிலும் சகோதர சகோதரிகளையும், பெயரளவிலான கிறிஸ்தவர்களைக் குருடாக்கி வைத்துள்ள தப்பறைகளுக்கும், அறியாமைக்கும் எதிராக போராடுவதைக்காட்டிலும் பெயர்க்கிறிஸ்தவ மனிதர்களையும் எதிர்த்துப்போராட அவர்களைச் சாத்தான் ஊக்குவிப்பான். "தேவனுக்கு எதிராக போராடும்" நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து நிறுத்துவதே உண்மையில் சாத்தானுடைய விருப்பமாக உள்ளது.

இவ்விஷயத்தில் கவனமுள்ளவர்களாய் இருக்கக்கடவோம். நாம் மற்றவரின் முன்பு தடுக்கலின் கல்லைப் போட்டுவிடாதபடிக்கு, முதலில் நாம் அனைவரும் நம்மை நாமே நிதானித்தறிவோமாக. அற்பவிஷயங்களை மலை அளவு பெரிதாக்கவும், சின்னஞ்சிறிய விஷயங்களையும், ஒன்றிற்கும் உதவாத விஷயங்களையும் குறித்துப் போராடுகிற மற்றும் குற்றம் காணும் (குறைகூறும்) இயல்புடையவர்களாகவும் நம்மை ஆக்கக்கூடிய தவறான ஆவிகளுக்கு எதிராக நம்முடைய சொந்த இருதயங்களில் நாம் போராடுவோமாக. "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தம் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதிமொழிகள் 16:32). சத்தியத்தின் மீதான அன்பினாலும், கர்த்தரின் மீதான அன்பினாலும், அவருடைய ஜனங்களாகிய சகோதர சகோதரிகளின் மீதான அன்பினாலும்தான் நாம் சத்தியத்திற்காக போராடுகிறோமே ஒழிய, சுயமகிமை தேடும் நோக்கங்களுக்காக நம்முடைய போராடுதல் காணப்படக்கூடாது என்பதில் நாம் நம்மைக்காக்க வேண்டியவர்களாக இருப்போமாக. நம்முடைய நோக்கம் அல்லது ஆவி ஒருவேளை அன்பின் அடிப்படையில் இருக்கும் பட்சத்தில், இவ்வன்பானது உடன் ஊழியர்களாகிய சகோதர சகோதரிகளிடத்திலான நம்முடைய பிரயாசங்கள் அன்பிலும், சாந்தத்திலும், பொறுமையிலும், தாழ்மையிலும் சாரம் ஏறினதாக வெளிப்படும். "எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவர்களாய்" நாம் இருக்கக்கடவோம் (2 தீமோத்தேயு 2:24). துரிதமும், ஆற்றலும் உள்ள "ஆவியின் பட்டயமாகிய" தேவனுடைய வார்த்தையே, துண்டித்துப் போடுகிற வேலை அனைத்தையும் செய்ய அனுமதிப்போமாக.

10. துர்க்குணம், பொறாமை, விரோதம், பகை ஆகியவைகளோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய சகல எண்ணங்களையும், உணர்வுகளையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.

கணநேரம்கூட இவைகளுக்கு உங்களுடைய இருதயங்களில் எவ்வித இடத்தையும் கொடாதிருங்கள்; ஏனெனில் இவைகள் மற்றவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவது ஒருபக்கமாக இருப்பினும் உங்களுக்கே நிச்சயமாக அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கும்.

உங்கள் இருதயம், உங்கள் சித்தம், உங்கள் நோக்கங்கள் மற்றும் விருப்பங்கள், தேவன் மீதான அன்பிலும், அவருடைய சகல சிருஷ்டிகள் மீதான அன்பிலும் நிரம்பி இருக்கட்டும் . . . தேவன்பால் அதிக அன்பும் மற்றும் இதற்கேற்ப அவருடைய ஆவியைப் பெற்றவர்களாக, அவர் காட்டும் வழியில் நடக்கின்ற யாவரோடும் அன்பும் காட்ட வேண்டும்.

11. உங்கள் மனசாட்சியை நம்பாதிருங்கள்.

மனசாட்சியின் மீது நம்பிக்கை வைக்காதீர்கள். ஒருவேளை மனசாட்சியானது உங்களுக்குப் போதுமான வழிகாட்டியாக இருக்குமாயின், உங்களுக்கு வேதவாக்கியங்களின் தேவை அவசியமாயிராதே. பெரும்பான்மையான ஜனங்களுக்கு, கொஞ்சமும் மனசாட்சி என்பதே கிடையாது, காரணம் மனசாட்சிக்கு வழிகாட்டியாக இருக்கும்படிக்கு தேவன் கொடுத்துள்ள நியாயப்பிரமாணங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஜனங்கள் குருடர்களாய் இருக்கின்றனர். இவர்களைக் காட்டிலும் அவல நிலையில் இருப்பவர்களைத்தான் 1 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அது கொடுக்கும் வெளிச்சத்திற்கு ஏற்ப கவனமாய் நடப்பது தவிர்க்க முடியாத அவசியமாய் இருக்கின்றது.

12. நீதிக்கும் மற்றும் சத்தியத்திற்கும் தவிர மற்றபடி தைரியம் உள்ளவர்களாய் இருக்காதீர்கள்.

பாவத்தைக் குறித்தும், எஜமானுக்கு சினமூட்டுவதைக் குறித்தும், "நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தய பொருளாகிய" மாபெரும் பரிசை இழந்துபோக நேரிடும் நிலை குறித்ததுமான பயபக்தியுடன் கூடிய பயம் உங்களுக்கு இருப்பது நலமாயிருக்கும். "இடறி விழுந்துபோகிறவர்கள்" அனைவரிலும் பெரும்பாலானோர் முதலாவது சகல பயத்தையும் இழந்து, தன்னம்பிக்கை உள்ளவர்களாக ஆகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் "... இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிடுவதில்லை" என்பதை மறந்து விடுகின்றார்கள். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்பதற்கு இவர்கள் இந்தத் தகுதியான பயத்தை இழந்துபோனதே ஒரு காரணமாக இருக்கின்றது. (எபிரெயர் 6:6; 2 பேதுரு 1:5-10; எபிரெயர் 4:1)

---

# ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும்

## LORD,CHOOSE MY CROSS FOR ME

அது ஒரு துன்பத்தின் காலம், என்னுடைய இருதயமோ
நன்மையான பகுதியை அன்பு செய்தாலும், அதை அறிந்திருந்தாலும்,
வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கமுறைகளையும் முரண்பாடுகளையும் துன்பங்களையும்
கண்டு விரக்கதியடைந்துள்ளதே,
எனக்குக் கொடுக்கப்பட்ட இவைகளை நான் எண்ணிடும்போதினிலே,
அன்பிற்காக எனக்கு அளிக்கப்பட்ட சோதனைகள், விசுவாசத்தின் பரீட்சைகள்,
நான் எப்போதும், மரணபரியந்தம் நிலைத்து நிற்பேன் என்று எண்ணுதற்கில்லை,
நாம் தரிசித்து நடவாமல், விசுவாசத்தில் நடக்கிறோம் என்று
சொல்லுகிறவருடைய வல்லமையில் ஐயமுற்று,
சந்தேகப்பட்டு முழுமையாகவே விரக்தியடைந்துவிட்டாலும் - என்
சிலுவையை சுமக்கவே முடியவில்லை என்ற எண்ணம் எழுகின்றதே,
ஆ, அதன் சுமையோ நிச்சயமாகவே அதிகமாகவே உள்ளதுவே,
நான் தினம்தினம் சந்திக்கும் மற்றவர்கள் சுமக்கும் சிலுவையை விடவும்
எனக்குக் கொடுக்கப்பட்ட சிலுவையோ அதிக பாரமாகவே உள்ளதுவே,
ஆனாலும் எனக்கென நியமிக்கப்பட்ட ஜீவ கிரீடத்தை இழந்துபோகவும்
கூடாதென்றே எண்ணுகின்றேன் - நானே.

ஓர் ஆழ்ந்த அமைதி சுற்றிலுமாகவே ஆட்சிசெய்யுதே,
இயற்கையின் ஒலி சிறிதளவுகூட ஒலிக்கவில்லையே,
அந்திப்பொழுதின் நிழல்கள் அமைதியை எடுத்துரைப்பதாகக் காணப்படுதே
என்னுடைய களைப்படைந்த ஆவியின் சமாதானமோ விழுந்துவிட்டதே,
ஒரு கணம் தயங்கி, ஒரு பரலோக ஒளி முழுமையாக ஆச்சரியத்தால்
விரிந்த விழிகளால் நான் பார்க்கும்போதில் என் மீது விழுந்ததுவே,
வெள்ளியாலான இறக்கைகளையுடைய தேவ தூதர்கள்
எங்கெங்கும் காணப்பட்டனரே, தேவ தூதர்களின் இசையோ, அந்தக் குணப்படுத்தத்தக்க
நறுமணமுள்ள மணம், காற்றினிலே எங்கும் பரவியதே, புளங்காங்கிதமடையச் செய்ததுவே, மற்ற
யாவரும் முழங்கால்களை மடக்கி வணங்கிடும் அந்த ஒருவர் என்அருகினில் மென்மையாகவே
வந்தாரே,
நானோ நடுக்கத்துடனே விழுந்துகிடந்தேனே,
என்னைப் பின்பற்றிவா, நானே வழி என்று அவர் மொழிந்தாரே,
இவ்வாறாகவே அவர் கூறியப்பின்னே என்னை
அவர் வெகு உயரத்திற்கே அழைத்துச் சென்றாரே,
அங்கே, அன்பினால் வனையப்பெற்ற விதானத்தின் கீழே
என்னுடைய சிலுவையைவிட பெரியதும் சிறியதுமான
சிலுவைகள் பல அங்கே கண்டேனே,
அதில் ஒன்று பற்றிக்கொள்வதற்கு மிகவும் அழகாய்,
மிகச் சிறியதாய், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டதாய்,
கற்கள் பதிக்கப்பட்டு மிக அழகாகவே காட்சி தந்ததுவே,
ஆஹா, இது எனக்குப் பொருத்தமாக இருக்குமோ?
சுமப்பதற்கும் மிக எளிதாய் இருக்குமோ, என்றெண்ணியே,
அந்தச் சிறு சிலுவைதனை உடனடியாக
ஓடிச்சென்று ஆவலுடன் எடுத்துக்கொண்டேன்,
ஆனாலும் எல்லாமும் ஒரே ஒரு கணம்தான்.
என் அடிப்படையே ஆட்டம் கண்டதுவே,
ஒளிவீசக்கூடிய அந்தக் காண்பதற்கினிய
இலகுவாயிருக்கும் என்றெண்ணிய இரத்தினக்கற்கள்
மிகமிக அதிகமான பாரமாகவே எனக்குக் காணப்பட்டதுவே,
இவ்வாறாக இருக்கக்கூடாதே, நான் கதறினேன், மீண்டும் திரும்பப்பார்த்தேன்,
யாராவது, ஏதாவது இந்தப் பாரத்தை இலகுவாக்க மாட்டார்களா?
என்றே சுற்றும் முற்றும் பார்த்தேன், ஆனால் ஓர் அழகான சிலுவையின் மீதே
நான் கண் பதிக்கும்வரை நான் கடந்து சென்றேன்,
அழகான பூக்கள் செதுக்கப்பட்ட வண்ணம்
அதைச் சுற்றிலும், கோர்த்துப் பின்னிக் காணப்பட்டதுவே,

**--1124--**

அதிலே கிருபையும் அழகும் ஒருங்கே அமைந்து காணப்பட்டதுவே,
ஆச்சரியமாகவே நான் அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோதினிலே,
இன்னமும் ஆச்சரியப்பட்டுப்போனேன் - அதைப் பலர்
கடந்துபோனார்கள் என்றே நான் எண்ணினேன்,
ஆனால் அழகாகக் காணப்பட்ட அந்த அமைப்பின் பின்னே
மறைக்கப்பட்ட துன்பங்கள் எனக்குத் தெரியவரலானதே,
அந்த அழகான வண்ணமிகு பூக்கள் கொண்ட காரியத்தின் அடியினிலே
முட்கள் காணப்பட்டதுவே, இந்தச் சிலுவையை என்னால் சுமக்க முடியாதே, வருத்தத்துடன்
நான் கூறினேன், இப்படியாகவே ஒவ்வொன்றும்,
அங்கே சுற்றியிருந்த எல்லாவற்றிலும், எந்த ஒரு சிலுவையும்
என் தேவையைப் பூர்த்தி செய்வதாய் காணப்படவில்லையே,
அழுதுகொண்டே ஒவ்வொரு பாரமான சுமையையும் கீழே இறக்கி வைத்தேன்,
ஆனால், என் மீது விசுவாசம் கொள், சிலுவையில்லையேல் கிரீடமில்லையே
என்னுடைய பரிபூரணமான அன்பு உன்மீது காட்டப்படுமே என்று கூறும்
என்னுடைய வழிகாட்டியின் குரல் எனக்குக் கேட்டதுவே,
அகன்ற விழிகளுடன், விருப்பத்துடனும் உறுதியான மனதுடனே,
எனது பூமிக்குரிய சிலுவையை நான் சுமந்திட திரும்பினேன்,
நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையுமாய்,
வேறெதுவும் மறைவான தீங்குவந்து சேர்ந்திடுமோ என்ற அச்சத்துடனே,
பின்னர், ஏற்கெனவே முன்னேற்பாடாய் நியமிக்கப்பட்ட பாதையிலே,
கேட்பதற்கான செவிகளுடனே, கீழ்ப்படியவும் ஆயத்தமாகவே,
சிலுவை ஒன்று ஆடம்பரமற்ற, தெளிவான, வெளிப்படையான
வடிவத்திலே காணும்படி கிடைத்ததே,
அன்பினால் ஆன வார்த்தைகள் அதிலே வடிக்கப்பட்டிருந்ததே,
நன்றியுடனே அதனை நிலையிலிருந்து தூக்கி நிறுத்தினேன்,
பெருமகிழ்வுடனே, அங்கிருந்த சிலுவைகளிலேயே
இதுதான் சிறந்த சிலுவை என நான் உறுதி செய்தேனே,
இது நான் சுமப்பதற்கு ஏற்றது என்றும் கண்டுகொண்டேனே,
இவ்வாறாக நான் தெரிந்துகொண்ட சிலுவையைக் குறித்து
இரகசியமாக அறிக்கை செய்தபோதினிலே,
ஒரு பரலோகப் பிரகாசம் அதன்மீது வந்து தங்கக்கண்டேனே,
நான் எனது சுமையைத் தாங்குவதற்காக சற்றே குனிந்தபோதினிலே,
எனக்கு மீண்டும் பழைய சிலுவையின் ஞாபகம் வந்ததே,
ஆனால், அது எத்தனை மாறுபாடாய் தோன்றியது?
இப்போதோ அதன் விலையுயர்ந்த மதிப்பை என்னால் உணரமுடிந்ததே - ஆம்,
இப்போது வேறொன்று நன்றாக இருக்கும் என்று இனியும் நான் கூறமாட்டேன்,
ஆஹா, இனி எந்தன் ஒரே விருப்பம் என்னவென்றால்,
என்னைக் குறித்து நன்கு தெரிந்தவர் எனக்குத் தெரிந்தெடுத்துத் தருவார்,
எனவே, என்னதான் அவர் அன்பினால் எனக்கு அனுமதிக்கின்றாரோ,
அதுதான் சிறந்ததென்றே நான் நம்பிடுவேனே,
ஏனென்றால் அவர் மட்டுமே அறிந்திடுவார், முடிவுதனையே.

– Unknown (R3606)

----------------------

**--1125--**

# தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை

## கொலோசெயர் 2:18

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பெரிய எண்ணிக்கையான கூடுகைகளிலும், சொற்ப எண்ணிக்கையான கூடுகைகளிலும், அவர்களை அனைத்துக் காலக்கட்டங்களிலும் அச்சுறுத்திய தவறான மனோபாவத்திற்கு எதிராகவே, நமக்கு அப்போஸ்தலன் எச்சரிக்கை வழங்குகின்றார்; நமக்கு அல்லது சபையில் வேறுசில மனிதர்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தல் மற்றும் "தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக" இருக்கும் கர்த்தருக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்காமல் இருத்தல் எனும் அபாயத்திற்கு எதிராகவே அப்போஸ்தலன் நமக்கு எச்சரிக்கின்றார். சில அங்கத்தினர்கள் "கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்" என்ற உண்மையினை மறந்துபோனவர்களாக, தலைக்குரிய ஸ்தானத்தை எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் இந்த மறதியின் விளைவாக தங்களைக்குறித்து மகிவும் அதிகமாய் எண்ணிக்கொள்பவர்களாகவும், கர்த்தருடைய நோக்கங்களுக்கடுத்த முழுப்பாரமும், பொறுப்பும் மற்றும் அழுத்தமும் தங்கள் மீதுதான் காணப்படுகின்றது என்று கற்பனை கோட்டைக் கட்டுகிறவர்களாகவும், தலைமைத்துவத்தினை மிகவும் அதிகமாய் எடுத்துக்கொள்பவர்களாகவும் ஆகிவிடுகின்றனர் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இத்தகைய தவறான ஸ்தானம் எடுத்துக்கொள்ளுதலுக்கு அங்கீகரிப்பையும், ஆதரவையும் வழங்குகின்றதான சபையிலுள்ள முதன்மை வகுக்காத மற்ற அங்கத்தினர்களை எச்சரிக்கும் வண்ணமாக, அவர்களது இத்தகைய பணிந்து செல்லுதலானது மிதமிஞ்சினது என்றும், அவர்களுக்கும், அவர்கள் ஊழியம் புரிகின்றதான நோக்கங்களுக்கும் ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும் என்றும், தூதுவர்கள், செய்தியாளர்கள், சபையினுடைய பிரதிநிதியானவர்கள் என்பவர்கள் அவர்களது உண்மை, நற்கிரியை மற்றும் தாழ்மைக்குத்தக்கதாக உயர்வாய் எண்ணப்பட்டாலும், தொழுதுகொள்ளப்படக்கூடாது என்றும் அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றார் (வெளிப்படுத்தல் 1:20; 2:1). தங்களை முற்றிலுமாய்ப் புறக்கணித்துப்போட்டு, இந்தத் தூதர்கள் அல்லது மூப்பர்கள் மீது பாரம், பொறுப்பு மற்றும் ஆளும் வல்லமை யாவற்றையும் வைத்துவிடும் இத்தகைய பணிவானது - சரியற்றது என்றும், கிறிஸ்துவுக்கு உண்மையற்று இருப்பதையும், அவரது ஏற்பாடுகளைச் சரியாய்ப் புரிந்துகொள்ள தவறியுள்ளதையும் சுட்டிக்காட்டுகின்றது என்றும் அப்போஸ்தலன் மற்ற அங்கத்தினர்களை எச்சரிக்கின்றார்.

## எதிர் எதிராயுள்ள மிதமிஞ்சின நிலைப்பாடுகளிலுள்ள அபாயங்கள்

இப்படி எதிர் எதிராயுள்ள மிதமிஞ்சின நிலைப்பாட்டினைப் பெற்றிருக்கும் இருவகுப்பினரையும் கண்டித்தப் பிற்பாடு, அடுத்ததாக இவ்விரு தரத்தாரின் பிரச்சனையானது, தலையானவரை - அதாவது சபையின் ஒரே உண்மையான தலையானவரை அவருக்கே உரிய கனம்கொடுத்து, பற்றிக்கொள்ள தவறுவதேயாகும் என்று விவரிக்க அப்போஸ்தலன் தொடருகின்றார். நம்மை நாமே உயர்த்திக்கொண்டு, சபையில் நமது கர்த்தருக்கான ஸ்தானத்தைப் பிடுங்கி எடுத்து மற்றும் அவரது வார்த்தைகளையும், ஏற்பாடுகளையும் புறக்கணித்து, அவரது ஊழியக்காரர்கள் என்று பெருமைக்கொண்டிருந்தாலும் சரி அல்லது இம்மாதிரியான விஷயங்களுக்கு அமைதியாய்ப் பணிந்துபோய், கர்த்தருடைய சரீரத்தில், அவரது ஸ்தானத்தைப் பிடுங்கி எடுத்துக்கொள்பவர்களை வணங்கிக்கொண்டிருந்தாலும் சரி, இருதரப்பிலுமே பிரச்சனை ஒன்றே - அதாவது உண்மையான தலையினைச் சரியாய் அடையாளம் கண்டுகொள்ள தவறுவதே ஆகும்.

கிறிஸ்துவே சபையின் தலையானவர் எனும் உண்மையினை நாம் ஏற்றுக்கொள்வோமானால், அதன் அடிப்படையில் அனைத்து விவாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடுவோமாக; நாம் உடன்படிக்கைப் பெட்டியினைச் சமநிலைக்குக் கொண்டுவர பிடிக்கவில்லையெனில், எல்லாம் துண்டுகளாக உடைந்துபோய்விடும் என்றோ, சீயோனின் எந்த ஒரு சிறு கூட்டத்திற்கடுத்த தெய்வீகத் திட்டம் தொடர்புடைய விஷயத்தில் நாம்தான் முக்கிய பிரதிநிதி என்றோ ஒரு கணம்கூட எண்ணிவிட வேண்டாம் (1 நாளாகமம் 13:10). இத்தகைய தற்பெருமையான எண்ணங்கள் யாவும் நம்முடைய இரட்சிப்பின் அதிபதி தொடர்புடைய விஷயத்தில் துரோக தன்மையுடையவையாக இருக்கின்றது, ஏனெனில் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று அவர் கூறியிருக்கின்றார் மற்றும் நாமும் அவரது

வார்த்தையினை நம்புகின்றோம். கர்த்தர் தம்முடைய காரணங்களுக்காக ஊழியம் புரிவதற்கெனச் சபையில் ஏற்படுத்தியுள்ளதான, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் - தெய்வீகத் திட்டம் நடந்தேறுவதற்கு, முற்றிலும் தான் அவசியமற்றவன் என்றும், தெய்வீகத் திட்டத்தில் ஒரு பங்கினைத் தனக்கு அருளப்பெற்றிருப்பது சுத்த கிருபையே ஆகும் என்றும், தன்னால் ஏறெடுக்க முடிந்திட்டதான எந்தச் சிறு ஊழியங்களையும், பலிகளையும் மிஞ்சுமளவுக்கு நாள்தோறும் தனக்கான ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றது என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகையால் அவன் தனது சகோதர சகோதரிகள் மத்தியில் ஓர் ஊழியக்காரனாக, தேவனுடைய மாபெரும் திட்டத்தில் ஏதேனும் பங்கினைப் பெற்றிடுவதற்குத் தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான் என்ற சிந்தனையால் இறுமாப்படையாமல், தாழ்மைகொள்ள வேண்டும் மற்றும் கர்த்தரே அவரது சபையின் தலையாக இருப்பதினால், நம்பிக்கைக்குப் பாத்திரமாய் ஒப்படைக்கப்பட்ட ஸ்தானங்களில், தாழ்மையுடன் காணப்படத் தவறும் யார் ஒருவரும் தாழ்த்தப்படுவார் மற்றும் தனக்கும், மற்றவர்களுக்கும் இழப்பாய் அநேகமாய்க் காணப்படும் விதத்தில் சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் இழந்துபோய்விடுவார் என்று அவன் தெளிவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு சகோதரன் தங்கள் மத்தியில் தன்னைத்தான் உயர்த்திக்கொள்வதற்கும் மற்றும் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ எண்ணிக்கையில் காணப்படும் கூடுகையினைக் குறித்து "என் சபை," "என் பின்னடியார்கள்" என்று அவர் பேசிடுவதற்கும் அமைதியாய் அனுமதித்துக் கொண்டிருக்கும், அந்தத் தாழ்மையுள்ள சகோதரர்களும் சகோதரிகளும் அந்தச் சகோதரனுக்குத் தீங்கிழைக்கின்றவர்களாகவும், தவறாய் நடப்பதற்கு அவரை ஊக்குவிப்பவர்களாகவும் இருப்பது மாத்திரமல்லாமல், சபையின் உண்மையான தலையாய் இருப்பவருக்கும் உண்மையற்றவர்களாகி விடுகின்றனர். இம்மாதிரியான சூழ்நிலைகளுக்கும், வார்த்தைகளுக்கும் பணிந்துசெல்கின்றவன், "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீனத்தை" சரிவர உணராமல் இருப்பதை நிரூபிக்கின்றான் - ஒன்றில் தான் "கிறிஸ்துவில் குழந்தையாய்" இருக்கின்றான் என்று அல்லது சபை மற்றும் சபையின் தலைக்குரிய கனம் தொடர்புடைய விஷயத்தில் உரிய விழிப்புக்கொண்டிருப்பதில் உறங்கிப்போய் விட்டான் என்று நிரூபிக்கின்றான். மனப்பூர்வமாய்ச் சொல்லப்படவில்லை என்று இம்மாதிரியான காரியங்களுக்கு விளக்கம் கொடுப்பதில் பிரயோஜனமில்லை. இம்மாதிரியான வார்த்தைகளும், உரிமைப்பாராட்டுதல்களும், ஏற்கெனவே ஏதோ சில கவலைக்கிடமான விஷயம் சம்பவித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் கிறிஸ்துவின் தலையைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக தன்னைக்குறித்துப் பேசுவதற்கோ, கர்த்தருடைய ஜனங்களைத் தன்னுடைய சபை என்று பேசுவதற்கோ, கர்த்தருக்கு உண்மையாய் இருக்கும் கிறிஸ்துவின் சபைக்கான எந்தத் தாழ்மையுள்ள மூப்பரும் எண்ணவே மாட்டார்.

இப்படியான வெளியரங்கமான குற்றங்களுக்கு வெளியரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டு மன்னிப்புக் கேட்கப்பட வேண்டும்; இல்லையேல் இத்தகைய வழிநடத்துபவர்கள் பின்னிருக்கைக்கு அனுப்பப்பட வேண்டும். எண்ணிப்பார்க்கப்பட முடியாதளவுக்கு அவருக்குப் பேச்சுத்திறமைக் காணப்பட்டாலும், பொது ஊழியங்களுக்கென வேறு எவருக்குமே தாலந்துகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தன்னைக் குறித்துத் தற்பெருமையடைந்து, சபையில் தலையானவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும் ஒருவனைக்காட்டிலும், சரீரத்திலேயே மிகவும் குறைவுள்ள, பெலவீனமான, மிகவும் சிறப்பற்ற நிலையிலுள்ள அங்கத்தினனே கர்த்தருடைய கணிப்பில் போதிப்பதற்கு நன்கு தகுதியுடையவனாய்க் காணப்படுவான். "கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோசெயர் 2:18, 19) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

## சுயம் முதலாவது, தேவன் இரண்டாவது

"மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் (மற்றும் பொதுவாய் மேல் அதிகாரங்களுக்கும்)

கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்துகின்றார் (2 தீமோத்தேயு 3:1-5).

இக்காட்சி நம்முடைய நாட்களில் பெயரளவிலான கிறிஸ்தவமண்டலத்திற்கு நன்கு பொருந்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இந்த ஆவியானது அவ்வப்போது பரிசுத்தவான்களுடைய பாளயத்தை - உலகம் மற்றும் அதன் ஆவியினை ஜெயங்கொள்வதற்கென நாடிக்கொண்டிருக்கின்றதான அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அடங்கின சிறு கூட்டத்தினரைப் படையெடுத்துவர முற்படும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது விஷயம் குறித்து அப்போஸ்தலன் இத்தனை அழுத்தத்துடன் எழுதுவது என்பது, அவர் சார்பில் அனுதாபக் குறைவு காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இராது மற்றும் அவரது வார்த்தைகளை நாம் மேற்கோளிடுவது என்பது நம் சார்பில் அனுதாபக்குறைவு காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறதாயும் இராது என்பது உறுதியே. ஆனால் இப்பிரச்சனை என்பது, இத்தகைய இறுமாப்புடைய சகோதரருக்கு விசேஷமாய்த் தீங்கு விளைவிக்கிறதாயும், துன்பம் கொடுக்கிறதாயும் காணப்படும்; மற்றெல்லாவற்றைக்காட்டிலும் இது நிச்சயமாய் ஆவிக்குரிய சத்துவத்தினை அழித்துப்போட்டு, உபதேச ரீதியிலும் மற்றும் ஆவிக்குரிய ரீதியிலும் இருளுக்குள் வழிநடத்திவிடுகிறதாய் இருக்கும்.

கர்த்தருடைய ஜனங்களில் மிகுந்த தாலந்துடையவர்களாய் இருப்பவர்களைச் சூழும் இந்த அபாயத்திற்கு எதிராக அப்போஸ்தலனாகிய யாக்கோபு நம்மை எச்சரிக்கின்றார். "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அவர் எழுதியுள்ளார். சகோதரருக்கான எங்களது அன்பின் காரணமாகவும், அவர்களைக்குறித்த எங்களது உயர்வான எண்ணங்கள் காரணமாகவும் மற்றும் அவர்களது ஊழியங்களை நாங்கள் மதிப்பதன் காரணமாகவும் மற்றும் தற்போது மாத்திரமல்லாமல், நித்தியமாய் எதிர்காலத்திலும் அவர்கள் கர்த்தருக்கான ஊழியத்தினைத் தொடர வேண்டும் என்ற எங்களது விருப்பத்தின் காரணமாகவுந்தான், தனிப்பட்ட விதத்திலல்ல, மாறாக பொதுவாய் இக்கருத்தினை அழுத்தி வலியுறுத்துவது அவசியமென நாங்கள் எண்ணுகின்றோம்.

சரீரத்தில் தாழ்மையான ஸ்தானங்களிலோ அல்லது குறிப்பிடத்தக்க ஸ்தானங்களிலோ கர்த்தரால் நியமிக்கப்படுபவர்கள் யாவரும், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நினைவுகூரும்படிக்கு - அதாவது நமது கர்த்தர் தம்மைத்தாமே தாழ்த்தி, பின்பு உயர்த்தப்பட்டக் காரியமானது பிதாவின் திட்டத்தில் காணப்படும் கொள்கை ஒன்றினை விவரிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இதன் கீழ் அவரது இராஜரிக ஆசாரிய கூட்டத்தார் யாவரும், ஏற்றகாலத்தில் உயர்த்தப்படத்தக்கதாக தங்களைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில்கொள்ளும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6) என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். உயர்த்தப்படுவதற்குரிய காலம் இதுவல்ல; தற்கால சூழ்நிலைகளின் கீழ் நம்மையோ அல்லது மற்றவர்களையோ நாம் உயர்த்த முற்படுவது என்பது விழுந்துபோவதற்கு ஏதுவான மகா ஆபத்திற்கு உள்ளாகிவிடுவதாயிருக்கும். ஆகையால் உண்மையும், தாழ்மையுமுள்ள இருதயமுடைய யாவரும், சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பம் துவங்கி, இவ்வகுப்பாருடைய பாதையில் மிக மோசமான இடறுதலின் கல்லாக இருந்துவந்துள்ள இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்போஸ்தலர்கள் மத்தியிலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்பது தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஞாபகம்கொள்கின்றோம். அவர்களைக் கண்டிக்கும் வண்ணமாக நமது கர்த்தர்: "நீங்கள் பிள்ளைகளைப்போல் தாழ்மைக்கொள்ளாவிட்டால், இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்று கூறின வார்த்தைகளையும்கூட நாம் ஞாபகத்தில் கொண்டிருப்போமாக.

## தாழ்மையுள்ளவர்கள் மாத்திரமே பாதுகாப்பாய் இருப்பார்கள்

இராஜ்யத்தில் இடம்பெறுவதற்கு மிகவும் அடிப்படையான அவசியங்களில் ஒன்றாக தாழ்மைக் காணப்படுகின்றது என்று இப்படியாக நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். இதன் முக்கியத்துவத்தையும், இதற்கான காரணத்தையும் நம்மால் காணமுடிகின்றது. தனது தாழ்மையின் ஆவியினை முழுமையாய் நிரூபித்திடாத ஒருவரை இராஜ்யத்தின் மகிமைக்கும்,

கனத்திற்கும் மற்றும் அழியாமைக்கும் மற்றும் திவ்விய சுபாவத்திற்கும் உயர்த்திடுவது என்பது அந்நபர் இன்னொரு சாத்தான், இன்னொரு எதிராளியாக மாறிடுவதற்குரிய ஸ்தானத்தில் வைத்திடுவதாயிருக்கும் மற்றும் அந்நபர் ஒன்றன்பின் ஒன்றாக வஞ்சனைக்குள்ளாகி பிதாவினுடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் உண்மையில் இருப்பவர்கள் யாவருக்குமான நமது பரலோகப் பிதாவின் ஏற்பாடுகளுடைய தயாளத்திற்கும் மிஞ்சி, திவ்விய கனங்களைப் பங்கிட்டுக்கொள்ள விரும்புகிறவராகிவிடுவார்.

இன்னும் அதிகக் காலமில்லை, பிரியமான சகோதரரே - பொறுமையாய் இருப்போமாக. விசுவாசமும் கொண்டிருப்போமாக; சந்தேகிக்கிறவர்களாக இருக்க வேண்டாம். சபையில் அதிகாரத்தினைப் பெற்றிடுவதற்கும், பயன்படுத்திடுவதற்குமான பிரயாசங்கள் அநேகமானவைகள், ஆரம்பத்தில் நல்நோக்கங்களுடனே, சபையினுடைய மேலான நலனுக்கடுத்தக் காரியங்களைச் செய்திடுவதற்கான விருப்பத்துடனே ஏறெடுக்கப்படுகின்றது. அத்தருணங்களில் தெய்வீகத் திட்டத்திற்கு நாம் எவ்வளவு அவசியமற்றவர்கள் என்றும், தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக ஒவ்வொரு சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் கர்த்தர் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்கு வல்லவராய் இருக்கின்றார் என்றும் உணர்ந்துகொள்ளுமளவுக்கு விசுவாசமானது போதுமான அளவுக்குப் பலமானதாய்க் காணப்படவில்லை. சபையின் காரியங்களை நிர்வகிக்கும் விஷயத்தில் கர்த்தருடைய வல்லமையின் மீது அதிகமான விசுவாசம் கொண்டிருத்தல் என்பது, தங்கள் சொந்த ஞானம் மற்றும் திறமையின் அடிப்படையில் சபையின் காரியங்களை நிர்வகிப்பதற்கு ஏதுவான அவரது ஜனங்கள் சிலரின் பிரயாசங்களைப் பெரிதும் எதிர்த்துச் செயல்படுவதாய் இருக்கும். அவர் தம்முடைய சித்தத்தின்படி அனைத்தையும் செய்திடுவதற்கு விருப்பமும், வல்லமையுமுள்ளவராக இருக்கின்றார் என்பதை நினைவில் கொள்வோமாக. நமக்கான உயர்ந்த ஸ்தானம் என்பது தாழ்மை நிலையினை எடுத்துக்கொள்வதாக இருக்கின்றது என்றும், பெரிதான வெற்றி என்பது, சுயத்தை வெல்வதாய் இருக்கின்றது என்றும், நமது கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தையினுடைய ஸ்தானத்தையும், அதிகாரத்தையும் பிடுங்கியெடுப்பதில் என்னதான் வெற்றியடைந்தாலும், அது இறுதியில் அனுகூலமற்ற விளைவையே நமக்குக் கொண்டு வரும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. ஆகவே நம்மைக் காத்துக்கொள்வதற்கும், சபையினுடைய நலனுக்கடுத்தக் காரியங்களுக்காகவும் மற்றும் கர்த்தரைக் கனம்பண்ணும் பொருட்டாகவும், நாம் சுயத்தை அடக்கிவைப்பது அவசியமாய் இருக்கின்றது. கவிஞனின் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்வோமாக மற்றும் அவற்றை தினந்தோறும் செயல்படுத்திடுவோமாக:

ஒ! ஒன்றுமில்லாதவனாய், ஒன்றுமில்லாதவனாய் ஆகிடுவதற்கு,
எந்தனை தாழ்த்திடுவது மிகுந்த வலி தருவதாயினும்;
புழுதிமட்டும் எந்தனை தாழ்த்துகின்றேனே - அப்போதே
உலகம் எந்தன் இரட்சகரைக் காண இயலுமே.

ஒன்றுமில்லாதவனாய், ஒன்றுமில்லாதவனாக ஆக விரும்புகின்றேனே
அவருக்கே உலகத்தின் துதிகள் எழும்பிட;
அவரே ஆசீர்வாதத்திற்கு ஊற்றாயிருக்கிறாரே,
ஆம், அவரே துதிக்குப் பாத்திரர்."

"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:5) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையும், மாதிரியையும் எப்போதும் நினைவில் வைத்திருப்போமாக.

---

# யார் நினைவுகூருவது ஏற்றது?

*கேள்வி.* நினைவுகூருதலானது கிறிஸ்துவினுடைய பலியின்மீதான விசுவாசத்தின் வாயிலாக, அவரது நீதியைச் சொந்தமாக்கிக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றது என்று கூறுவது சரியா? சரியென்றால் விசுவாசத்தின் வாயிலாக நீதிமானாக்கப்பட்ட, ஆனால் இன்னமும் அர்ப்பணம் பண்ணாத ஒரு நபர், அடையாளச் சின்னங்களில் பங்கெடுப்பதற்கு முழு உரிமையுடையவராய் இருக்கின்றாரா?

*பதில்.* இந்தத் தற்கால யுகத்தில் நீதிமானாக்கப்படுவதற்கான ஒரே நோக்கமானது, நீதிமானாக்கப்பட்டவன் தன்னை அர்ப்பணம்பண்ணுவதற்குத் தகுதியாக்குவதேயாகும் மற்றும் அர்ப்பணம்பண்ணுவதற்கும், புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் என்று ஒருவன் தன்னுடைய நீதிமானாக்கப்படுதலைப் பயன்படுத்தவில்லையெனில், அவன் தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றுக்கொண்டவனாய் இருக்கின்றான் - அதைப் பயன்படுத்துவதற்குத் தவறுகின்றவனாய் இருக்கின்றான். அவன் செய்வது பின்வரும் உதாரணத்திற்கு ஒத்ததாய் இருக்கும்: ஐசுவரியமுள்ள நண்பர் ஒருவர், ஏழை ஒருவன் பொருட்களைத் தன்னுடைய கடையில் வாங்கத்தக்கதாகச் சீட்டுக் கொடுத்துவிட்டு, "1905-ஆம் வருடமாகிய இந்த வருடத்தில், எந்த ஒரு காலபகுதியிலும் ஜான் பிலாங்கோ (அ) மேரி பிலாங்கோ, என்னுடைய கடையில் இந்தச் சீட்டைக் கொண்டுவந்து காண்பிப்பார்களானால், அவர்கள் விரும்புகிற பொருட்களுக்கு விலையில் பத்தில் ஒரு பாகத்தினைச் செலுத்தினால் போதும், அவர்கள் வாங்கின பொருட்கள் அனைத்திற்குமான விலையில் 90 சதவிகிதமான பாகத்தினை நான் செலுத்திடுவேன்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை ஜான் பிலாங்கோ (அ) மேரி பிலாங்கோ அந்த வருடத்தில் அந்தச் சீட்டினைக் கொண்டுசெல்வதற்கும், அந்தக் குறிப்பிட்டக் காலப்பகுதியில் பொருட்கள் எதையேனும் வாங்குவதற்கும் தவறினால், அந்தச் சீட்டானது உண்மையில் அவர்களுக்குப் பயனற்றதாய் இருக்கும், ஏனெனில் அவர்கள் அதன் நன்மை பயக்கும் நிபந்தனைகளைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதுபோலவே இப்பொழுது விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டவர்கள், தங்களையே அர்ப்பணம்பண்ணுவதற்கும், பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், தற்கால சிலாக்கியங்களைப் பலிச்செலுத்துதல் எனும் சிறிய விலைக்கொடுத்து மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை அடைவதற்குமான சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருக்கின்றனர் மற்றும் பரம அழைப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இந்த யுகத்தில் தனது நீதிமானாக்கப்படுதலை இப்படியாய்ப் பயன்படுத்தாதவன், அதினால் எந்த நன்மையும் அடையாதவனாய் இருக்கின்றான்; ஏனெனில் அது இந்த ஜீவிதம் முடிவதோடு, செயலற்றுப் போய்விடுகின்றது மற்றும் அடுத்துவரும் ஜீவியத்தில், மீதமான மனுக்குலத்திற்குக் காணப்படுவதுபோலவே அதே நிபந்தனைகளுடன் புதுப்பிக்கப்பட வேண்டும்.

இதை நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பொருத்திப்பார்த்தல்: நினைவுகூருதல் இராப்போஜனமானது, நம்முடைய நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தைப் புசித்தலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவினுடைய பாடுகளில் ஐக்கியங்கொள்ளுதலை, பாத்திரத்தில் பங்கெடுத்தலையும்கூட அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இந்த இரண்டு கருத்துகளுமே அந்த அடையாளத்தில் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது மற்றும் அதை நாம் பொருத்திப்பார்க்கும் விஷயத்தில், அதைப் பகுதிகளாகப் பிரித்திடக்கூடாது. ஆகையால் கிறிஸ்துவினுடைய நீதியில் பங்கெடுப்பதன் வாயிலாகநீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவரோடுகூடப் பலியிலும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதிலும் உடன்சுதந்தரர்களானவர்கள் மாத்திரமே ஒழிய, மற்றவர்கள் நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பது ஏற்றதாயிராது.

*****

# நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார்

**தானியேல் 6:10-23**

பொய்யான புகழ்ச்சியும், வீண்புகழ்ச்சியும், கர்த்தருடைய ஜனங்களுக்குத் தீங்குபண்ணுவதற்கான எதிராளியானவனுடைய கருவிகளாய்க் காணப்பட்டிருக்கின்றன மற்றும் அநேகந்தரம், தீங்கும் விளைவித்துள்ளது மற்றும் இந்த உண்மையினை அடையாளம் கண்டுகொள்பவர்கள் யாவரும் விசேஷமாய் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும். உண்மைதான் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களில் எவருமே தரியு இராஜா போன்று அதிகாரம் அல்லது கீர்த்தியின் உப்பரிகையில் வைக்கப்படுகிறதுமில்லை, சொல்லர்த்தமாய்த் தொழுதுகொள்ளப்படுவதற்கும் வாய்ப்புமில்லை; எனினும் சிறு உலகங்கள், சிறு சாம்ராஜ்யங்கள், அதாவது அதே கொள்கைகள் ஏறத்தாழ செயல்படுத்தப்படுகின்றதான அறிமுகமான சிறுவட்டாரங்கள் காணப்படவே செய்கின்றன.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒவ்வொரு சிறு கூட்டங்களிலும், தாலந்துகள் காரணமாகவோ அல்லது வேறு தேவ செய்கையினால் ஏற்பட்டச் சந்தர்ப்பங்கள் காரணமாகவோ கூட்டத்தாருடைய அன்பிலும், மதிப்பிலும் முதன்மையாய்க் காணப்படுகிற ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் இருப்பார்கள் மற்றும் இது நியாயமானது மாத்திரமல்லாமல், நீதியானதும்கூட என்று கர்த்தருடைய வசனமானது சுட்டிக்காட்டுகின்றது. அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாய் இருப்பார்களானால், அவர்களது ஊழியத்தின் நிமித்தமாக அவர்கள் அன்புகூரப்பட வேண்டும் மற்றும் கனப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவர்கள் இன்னமும் சகோதரர்கள்தான் என்றும், கர்த்தருக்கு மாத்திரம் உரியதான கனமும், மரியாதையும் எவ்விதத்திலும் அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடாது என்றும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். தேவனானவர் எல்லா விதத்திலும் பிரதானமானவராகவும், தொழுதுகொள்ளுவதற்குப் பாத்திரமான ஒரே ஒருவராகவும் இருக்கின்றார் என்ற இந்தக் கொள்கையில், எந்தச் சபை அல்லது தேசக்கூட்டமைப்பினாலும் தலையிட முடியாது. சபையிலுள்ள சகோதரர்களும், சகோதரிகளும் உண்மையுள்ள வழிநடத்துனர்களை மிகவும் உயர்வாய் எண்ணுகையில், தங்களால் கர்த்தருடைய மற்றும் அவரது மந்தையினுடைய ஊழியக்காரர்களென ஒப்புக்கொள்ள முடிபவர்களை முகஸ்துதி அல்லது தற்பெருமைக்கொள்ளச் செய்து, அல்லது எவ்விதத்திலாகிலும் இறுமாப்படையச் செய்து, இப்படியாய் அவர்களைச் சீரழித்துப் போடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுபோலவே தேவனுடைய குடும்பத்தில் காணப்படும் ஒவ்வொரு வழிநடத்துனனும், பெருமை, பேராசை மற்றும் இச்சையினுடைய நயவஞ்சகமான தாக்கங்களுக்கு எதிராகவும் மற்றும் சத்தியத்தின் நிமித்தமும், அதுபற்றின அறிவின் நிமித்தமும், அதை மற்றவர்களுக்கு முன்வைத்திடுவதற்கான ஏதோ சில திறமைகள் நிமித்தமும், தேவனுக்குச் சேரவேண்டிய கனத்தினைத் தனக்கென ஏற்றுக்கொள்ளும் காரியத்திற்கு எதிராகவும் விழிப்பாய் இருந்திட வேண்டும். தாழ்மை என்பது சந்தேகத்திற்கிடமின்றி நமக்கான படிப்பினைகளில் மிகவும் முக்கியமானதொன்றாய் இருக்கின்றது - இதை எந்த அளவிலாகிலும் புறக்கணிப்பவர்கள், நிச்சயமாக இதன் காரணமாக துன்பத்திற்குள்ளாவார்கள்.

ஜெபத்திற்கான ஒழுங்கு மற்றும் அவசியம் குறித்தும் நாம் பார்க்கலாம். கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணுகின்ற சிலர் - முழு ஜீவியமே ஜெபமாக இருக்க வேண்டும் என்றும், தொழுதுகொள்ளும்போதும், ஸ்தோத்திரிக்கும்போதும், கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிடும் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்படக்கூடாது என்றுமுள்ள - ஒழுங்கில்லாத ஜெபத்தினை வலியுறுத்துவது குறித்து அவ்வப்போது கேட்கையில் நாங்கள் ஆச்சரியமடைகின்றோம். இத்தகைய புதுக்கருத்துக்களானது எங்களுக்கு அதிர்ச்சியுண்டாக்குகின்றது - இக்கருத்துக்களின் காரணகாரியமானது, புரிந்துகொள்ள முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. உண்மைதான் நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணிட வேண்டும். கர்த்தருக்காகவும், அவரது காரணங்களுக்காகவும் நம்முடைய முழு ஜீவியமே மிகவும் அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவரது காருண்யத்தினைக் குறித்த நன்றியுணர்வால் நம்முடைய மனங்களானது மிகவும் நிரம்பிக் காணப்பட வேண்டும் மற்றும் அவரிடத்திலான நம்முடைய விசுவாசமானது, மிகவும் உறுதியாகவும், மிகவும் பிரகாசமாகவும் காணப்பட வேண்டும் - இப்படி இருந்தால் ஒவ்வொரு காரியத்திலும் மனதில் அவர்

சித்தத்தினையே எப்போதும் நாம் பெற்றிருப்போம் மற்றும் இப்படியாய்த் தொடர்ச்சியாக இருதயத்தில் ஜெப சிந்தையுடன் காணப்படுவோம். ஆனாலும் இந்த இருதய நிலையினை - மிகவும் குறிப்பான மற்றும் ஒழுங்கான விதத்தில் ஒருவேளை விரும்பும்பட்சத்தில் முழங்காற்படியிட்டு மற்றும் கூடுமானால் சிலசமயங்களில் தனிமையிலாகிலும் கர்த்தரிடம் செல்லாமல், எந்தக் கிறிஸ்தவனாலும் தக்கவைத்திட முடியாது - "உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு."

இது குடும்ப ஜெபங்கள் அல்லது கர்த்தருடைய குடும்ப வட்டாரமாகிய சபையில் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் பற்றின சிந்தனைக்குத் தடைவிதிக்கிறதில்லை. நமது கர்த்தர் இதற்குத் தமது ஒப்புதலைத் தெரிவிக்கும் வண்ணமாக, அவர் தனித்து ஜெபம்பண்ணத்தக்கதாக தனிமையில் மாத்திரமல்லாமல், சில சமயங்களில் சீஷர்களுக்காக, சீஷர்களோடு ஜெபித்துமுள்ளார். உதாரணத்திற்கு, யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவு பண்ணப்பட்டுள்ளதான ஜெபம் காணப்படுகின்றது மற்றும் சபையில் ஜெபம் பண்ணுதல் தொடர்பான அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் காணப்படுகின்றன மற்றும் ஜெபத்தில் கலந்துகொள்ளும் மற்றவர்களாலும் புரிந்துகொள்ளப்படத்தக்கதான தொனியிலும், குரலிலும் ஜெபம் ஏறெடுக்கும் ஒழுங்கினைக் குறித்துக் கவனத்திற்குக்கொண்டுவருகின்றதான அப்போஸ்தலரின் வார்த்தைகளும் காணப்படுகின்றன. இவைகளுக்கு எதிர்மாறாகப் போராடுகின்றவர்கள், தங்களால் புரிந்துகொள்ளப்படாத காரியங்களுக்கு எதிராக போராடுகின்றதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இவர்கள் எவ்வளவுதான் திறமிக்கவர்களாய் இருப்பினும், இவர்களுக்குக் கர்த்தருடைய ஜனங்களின் கூடுகைகளில் முதன்மையான ஸ்தானங்கள் கொடுக்கப்படக்கூடாது. மந்தையில் வழிநடத்துனர்களாக இருக்கும்படிக்கு, இவர்கள் அழைக்கப்படுவதற்கு முன்னதாக, முதலாவதாக இவர்கள் கற்றுக் கொள்வார்களாக. இதே கொள்கையானது - ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரித்தல் தொடர்புடைய விஷயத்திற்கு எதிராகப் போராடுகிறவர்களுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இத்தகையவர்கள் அன்பாய் நடத்தப்பட வேண்டும்; ஏனெனில் நம்முடைய சத்துருக்கள்கூட அன்பாய் நடத்தப்பட வேண்டும்; ஆனால் இவர்கள் - அதாவது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தின் அறிவும், அவ்விசுவாசத்திற்கு மதிப்பும் கொண்டிராதவர்கள் மற்றும் கர்த்தரினாலும், அவரது அப்போஸ்தலர்களினாலும் நிறுவப்பட்ட நடைமுறைகள் யாவற்றிற்கும் மதிப்புக் கொண்டிராதவர்கள் - கர்த்தருடைய மந்தைக்கான ஊழியக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது.

---

# மகிமையின் மேல் மகிமை

## FROM GLORY TO GLORY

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு,ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.-**2கொரிந்தியர்3:18 .**

நமது பரம பிதாவினுடைய குணலட்சணத்திற்கு ஒப்பாக ஒரு முழுமையான மாற்றம் அடைய வேண்டும் என்பதே, தேவனுடைய ஒவ்வொரு உண்மையான பிள்ளையினுடைய தொடர்சியான பிரயாசமாக இருக்க வேண்டும்.அவரது திட்டம் குறித்த அறிவை நாம் பெற்றுக்கொண்டிருப்பதும்,தகுதியற்ற நமது இனத்தின் மீதான அவருடைய இரக்கம் மற்றும் கிருபையை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ளுதலைப்பெற்றிருப்பதும், நற்செய்தியை நாம் சந்தோஷத்துடன் மற்றவருக்கு அறிவிப்பதும் போதாது,இன்னுமாக சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தியினால் நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கின்ற விஷயத்தில் அசாதாரணமான வைராக்கியம் கொண்டிருப்பதும் போதாது,ஏனெனில் இவைகள் அனைத்தையும் இவைகளைக் காட்டிலும் அதிகமாகவும் நாம் செய்யலாம்,ஆயினும் ஒருவேளை நம்முடைய பரம பிதாவினுடைய தயவும், கிருபையும் அதற்கே உரிய தாக்கத்தை நம்முடைய சொந்த இருதயங்களில் ஏற்படுத்த நாம் அனுமதிக்காமல் இருப்போமாகில், நம்முடைய அறிவும்,நம்முடைய நற்கிரியைகளும் நமக்கு நன்மை பயபிக்காது.

ஆகவே தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்கும்போதும்,அவ்வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது குணலட்சணங்களைப் பற்றிக் கற்கும்போதும்,நம்முடைய பிரதானமான நோக்கம் நம்முடைய சொந்த இருதயங்களும், மனங்களும் அவருக்கு ஒத்த தன்மை நிலைமையை அடைவதேயாகும். 1தெசலோனிக்கேயர் 4:3-ஆம் வசனம் வாசிக்கவும். அதாவது தேவனாகிய கர்த்தர் தம்முடைய வார்த்தைகள் மூலம் செயல்படுகின்ற நமது ஆவியினால் அவருக்கு ஒப்பான மகிமையான சாயலாக நாம் மாற்றப்பட வேண்டிய நற்கிரியையை நிறைவேற்றவும், இவ்விதமாக வரவிருக்கின்ற யுகத்தில் அவருடைய எல்லையற்ற கிருபையை அனுபவிக்க நம்மை பாத்திரமாக்கவும் தக்கதாக நாம் முழுமையாய் (அவருக்கென) பிரித்து வைக்கப்டுவது அல்லது மனமும்,இருதயமும் முழுமையாக கர்த்தருக்கென்று அர்ப்பணம் பண்ணப்படுவதே தேவ சித்தமாகும். பாடத்தின் ஆதார வசனத்தில் சபை முழுவதும், அதாவது நாமெல்லாரும் மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் என்றவிஷயத்தை நாம் குறிப்பாக கவனிக்கின்றோம். ஆகையால் இப்படியாக மறுரூபமடையாதவர்கள், இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பார் அல்ல. இது ஆழமாக கவனிக்கப்பட்ட வேண்டிய கருத்தாகும்,இது அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவரும் மிக கவனமாக கருத வேண்டிய கருத்தாகும். நாம் நம்மையே கர்த்தருக்கென்று முழுமையாக அர்ப்பணம் பண்ணியுள்ளோமோ?என்பது நமக்கான கேள்வியாக இராமல் மாறாக இப்படியானதொரு அர்ப்பணம் செய்துள்ள நாம், அந்த அர்ப்பணத்திற்கு இசைவாக,தினந்தோறும்நமது தேவனுக்கு ஒப்பான மகிமையான சாயலாக அதிகமதிகமாய் முழுமையாக மறுரூபப்படத்தக்கதாக தேவனுடைய ஆவியின் மாற்றம் உருவாக்கும் ஆற்றலுக்குக் கீழ் நம்மையே நாம் முழுமையாக ஒப்புக்கொடுக்கின்றோமா? என்பதே நமக்கான கேள்வியாகும்.

அர்ப்பணம் பண்ணி, உண்மையுள்ளவர்களாக காணப்படும்அனைவரையும் நோக்கி அப்போஸ்தலர் பேசின பிரகாரம், வனைந்து மற்றும் மாற்றம் கொண்டுவரும் தேவஆவியின் ஆற்றலின் கீழ் நாம் மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகின்றோம் என நம்மாலும் இப்பொழுது

கூற முடியும். இதனை நாம் ஒருவரில் ஒருவர் காண்கின்றபடியினால், தேவனுக்கு நன்றி! மேலும் இதில் நாம் மேன்மையும் பாராட்டுகின்றோம். நேற்று, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அங்கத்தைத் தெய்வீக வழிநடத்துதலின் சுத்தியல் அடித்தபோதோ,அந்தஅங்கத்திடமிருந்துஅருவருப்பானதேவையற்று வளர்ந்திருந்த பெருமை கீழே விழுந்துவிட்டது.இன்று அவர் மிகவும் அருமையாக காணப்படுகின்றார், ஏனெனில் அவர் மேல் விழுந்த அடியை அவர் எதிர்க்காமல்,அதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார்.நேற்று முன்தினமோ வேறு ஒருவரை வலி மற்றும் சோர்வு உண்டாக்கும் மெருகூட்டுதலின் வேலையில் காணப்பட்டத்தை பார்த்தோம்,அவரோ அதற்குத் தன்னை பொறுமையுடன் ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார்... ஓ இன்று அவர் எவ்வளவு பிரகாசிக்கின்றார்! ஒவ்வொருவரும் தெய்வீக மாதிரியைக் கடுமையாக முயற்சி செய்து பார்க்கிறதையும், அதைப்பின்பற்ற முயற்சிக்கிறதையும்நாங்கள் ஒருவருக்கொருவர் நாள் தோறும் பார்க்கின்றோம். மேலும் இப்படியாக காணப்படுபவர்கள் அனைவரிடத்திலும், மென்மைப்படுத்தியதற்கும், புடமிட்டதற்கும் மற்றும் அழகுப்படுத்தியதற்குமுறிய தாக்கத்தை /விளைவை பார்க்கவே செய்கின்றோம். ஆகவே அவருடைய சித்தத்திற்கென தாங்களைமுழுமையாய் ஒப்புக்கொடுக்கிற அனைவர் மீதும் தேவனுடைய ஆவி கிரியைச் செய்கின்றது.

தெய்வீக வழிநடத்துதலின் சுத்தியல், உளி மற்றும் வழவழப்பாக்குவதற்குறிய மண், காகிதம் மாற்றம் உண்டாக்கும் வேலையில் மிக அவசியமான பங்கை நிறைவேற்றினாலும்,அதாவது உடனடியாகவும், மிகவும் முழுமையாகவும் ஆவியின் அன்பான ஆற்றல் மூலம் அகற்றப்பட முடியாத மாம்சத்தின் பல பழைய பிடிவாதமான பலவீனங்களிருந்து நம்மை விடுவித்தாலும் அப்போஸ்தாலர் 2கொரிந்தியர்3:18-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக்கூறி நாம் மாற்றம் அடைவதற்கு என விசேஷமாக நியமிக்கப்பட்டுள்ள உதவி கருவியைச்சுட்டிக்காண்பிக்கின்றார், அதாவது தேவனுடைய வார்த்தையிலும்,அவருடைய ஸ்நாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய மகிமையைக் குணலட்சணங்களை கவனமாகவும்,தொடர்ச்சியாகவும் கவனிப்பதே விசேஷமாக நியமிக்கப்பட்டுள்ள உதவி கருவியென சுட்டிக்காண்பிக்கின்றார்.

"திறந்த முகமாய்" என்பது பயம் அல்லது மூடநம்பிக்கை அல்லது தவறான அபிப்பிராயாம் என்னும் குறுக்கிடும் முகத்திரைகள் இல்லாமல்,எளிமையான இருதயமும், மனமும் கொண்டிருப்பதாகும். ஆகையால் நாம் கர்த்தருடைய மகிமையான குணலட்சணங்களை காண்கின்றோம். நேரடியாக பார்க்காமல் கண்ணாடியிலே காண்கிறது போல, அதாவது அவருடைய வார்த்தையாகிய கண்ணாடியிலே பிரதிபலிக்கின்றதும் அவருடைய ஜீவனுள்ள வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவில் சித்தரிக்கப்பட்டதுமாகிய மகிமையான குணலட்சணங்களைக் காண்கின்றோம்.இந்த அவருடைய மகிமையான குணலட்சணங்கள் பற்றின ஆராய்ச்சில் நமக்கு உதவி அளிக்கும்படிக்குக் கர்த்தருடைய ஆவியின் பாக்கியமான ஆற்றல்கள் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது.இந்த ஆவியானது சகல சத்தியத்திலும் நம்மைவழிநடத்தி, வரவிருப்பவைகளை நமக்குக் காட்டி தருகின்றதாகவும் இருக்கும்.

கண்ணாடியிலே பார்க்கும் பொழுது,தெய்வீக நீதி குறித்த எத்துணை மகிமையான காட்சியாக பார்க்கின்றோம் இந்த நீதியானது தேவனுடைய சிங்காசனத்தினுடைய ஆதாரம் என்றும் நம்முடைய சகல தற்கால மற்றும் எதிர்காலமும் கண்டு கொண்டுவிடுகின்றோம் (சங்கீதம்-97:2). ஒரு வேளை நம்மால் தேவனுடைய நீதியைக்கண்டு புரிந்துகொள்ள முடியவில்லையெனில்,அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்று எவ்விதமான நிச்சயத்தையும் நாம் கொண்டிருக்க/ பெற்றிருக்க முடியாது.ஏனெனில் நீதியை புரிந்துகொள்ள முடியவில்லையெனில், ஒரு வேளை தேவன் மனம் மாறலாம் என்று சொல்லக் கூடியவர்களாக நாம் காணப்படலாம். ஆனால் இதற்கு மாறாக, தேவன்

**--1134--**

மாறாதவர் என்றும் அவர் சொல்லியவைகள் எதுவோ அவைகள் நிச்சயமாய் நிறைவேறும் என்றும் நம்மால் கூறமுடியும். நம்முடைய பாவ சந்ததி மீது வளைந்து கொடுக்காத நீதியானது தீர்ப்பை வழங்கியுள்ளது என்று பாருங்கள். 60-வது நூற்றாண்டுகளுக்கு மேலாக சந்ததியார்கள் இந்த நீதியின் தீர்பைக்கண்டுள்ளனர்,மேலும் நீதியின் கோரிக்கையை இயேசு கிறிஸ்துவின் பலியானது முழுமையாய் நிறைவேற்றித் தீர்க்கும் வரையிலும்,அந்தத் தீர்ப்பை ரத்துச் செய்வதற்கு வானத்திலோ (அ) பூமியிலோ எந்த அதிகாரமும் காணப்படவில்லை.நீதியானது, தேவனுடைய வார்த்தையை உரைக்கின்றது.மற்றும் என்ன நடந்தாலும் அது மீறி,மாற்றப்படுவதில்லை பாவநிலையில் உள்ள மனுக்குலத்திற்குரிய நீதியான தீர்ப்பின்,விஷயத்தோடு,நமது இறுதி முழுமையான மற்றும் மகிமையான விடுதலையின் விஷயத்திலும் கூட அவருடைய நீதி செயல்படுவதை நாம் பார்க்கலாம். ஏனெனில் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் மரண சாபத்தினின்று மீட்கப்பட்டுள்ளப்படியால், பாவங்களை நமக்கு மன்னிப்பதற்கு தேவன் நீதியுள்ளவாராகக் காணப்படுகின்றார்.(1யோவான் 1:9)

இவ்விதமாக தேவனுடைய குணலட்சணத்தில் நாம் நீதியைக்கண்டு தேவன் நம்முடைய சிருஷ்டிகளுக்கு அடுத்த சகல விஷயங்களிலும் இந்த (நீதியின்) கொள்கையை எத்துணை நுணுக்கமான கவனத்துடன் கருத்தில் எடுத்துக் கொள்கின்றார் மற்றும் மதிப்புக் கொடுக்கின்றார் என நாம் கவனிக்கையில், நம்முடைய சகல கையாளுதல்களிலும் இதே கொள்கைக்கு நாம் மதிப்புக் கொடுக்க தேவன் எவ்வளவு விரும்புவார் என்பதையும்நாம் காண்கின்றோம். இவ்விதமாக நம்முடைய ஒவ்வொரு கையாளுதல்களிலும் எந்த அளவுக்கு இந்த நீதியைக் கடைப்பிடிக்கின்றோம் என நாம் கவனித்து பார்க்கத்தக்கத்தாக நாம் வழிநடத்தப்படுகின்றோம்,இன்னுமாக நம்முடைய சகல நடத்தைகளுக்கு அடிப்படைக் கொள்கையாக இந்த நீதியே காணப்பட வேண்டும் என்று நினைவில் கொள்ளதக்கதாகவும் நாம் வழிநடத்தப்படுகின்றோம், வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானல் நாம் இரக்கமுடையவர்களாக, பெருந்தன்மையுடையவர்களாக ஆகுவதற்கு முன்னதாக நாம் நீதியுள்ளவர்களாக காணப்பட வேண்டும். இந்த (நீதியின்) கொள்கையானது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய குணலட்சணங்களில் குறிப்பிடத்தக்க விதத்தில் காணப்படவேண்டும்.

அடுத்ததாக நாம்தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் கவனிக்கின்றோம். நம்முடைய விழுந்துபோன சந்ததி மேல் கடந்து வந்த மரணம் தீர்ப்பானது மிகவும் இரக்கமுள்ள தீர்ப்பாகும். இந்த மரண தீர்ப்பானது, பின்வரும் வார்த்தைகளைக் கூறுவதற்குச் சமமாக காணப்படுகின்றது,அதாவது பார், என்னுடைய சொந்த விருப்பத்தினல் நான்உனக்கு ஜீவனையும் அதன் சகல ஆசீர்வாதங்களையும் சரியாக பயன்படுத்தும் நிபந்தனையின் கீழ் என்றென்றும் அனுபவிக்க அருளினேன்.ஆனால் இப்பொழுதோ,நீ என்னுடைய தயவை தவறாக பயன்படுத்தினால் அதை உன்னிடமிருந்து எடுத்து விடுகின்றேன். நீயோ நீ எடுக்கப்பட்ட மண்ணிற்கே திரும்புவாய் என்பதாகும்.

மரித்துக் கொண்டிருக்கும் காரியத்திலும்,மரித்துக் கொண்டிருக்கும் ஒரு சந்ததியைத் தண்டனையில் பங்கடைய செய்யும் காரியத்திலும், சிந்தனை செய்யாத ஒருவருக்கு தேவனுடைய இரக்கம் வெளிப்படுவதாக தெரியாது,ஆனால் தேவனுடைய திட்டத்தைப் பார்க்கின்றவர்களோ இவை அனைத்திலும் இரக்கமற்ற கொடுமைக்கான எதையும் பார்க்க முடியாமல்,மாறாக ஓர் இரக்கமுள்ள ஞானத்தையேபார்க்கின்றார்கள். அதுவும் ஏற்ற வேளையில் ஸ்திரீயின் வித்தானது தீமையை நசுக்கி சர்பத்தின் தலையை மிதித்து, ஒரு காலத்தில் பாவத்தில் பிறந்த முழு இனத்தையும் விடுவித்து, பிற்பாடு ஜீவனையும் அதன் சகல பாக்கியமான சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவரையும் புதுப்பிக்கும் என்ற வாக்குத்தத்தில் மங்கலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கின்றார்கள். மேலும் இந்த இரக்கத்தில் தேவன் அன்பாகவே இருக்கின்றார் என்ற வாக்கியத்தின்

--1135--

உண்மையை நாம் பார்க்கின்றோம். இவ்வாறாக நன்றியுள்ளவர்களிடத்திலும், நன்றியில்லாதவர்களிடத்திலும் நாம் அன்பாகவும், இரக்கமாகவும் இருப்பதற்கு கற்றுக் கொள்கின்றோம்.

பரம பிதாவினுடைய சகல சிருஷ்டிகளுக்கான அவருடைய அளவற்ற ஏற்பாடுகளையும்/ வழிநடத்துதல்களையும்,அவருடைய பரிவான பராமரிப்பையும் நாம் கவனிக்கின்றோம். ஏனெனில் குருவிகள் கூட உடுத்துவிக்கப்பட்டு, போஷிக்கப்படுகின்றன, மற்றும் காட்டுபுஷ்பங்களும் மகிமையினால் உடுத்துவிக்கப்பட்டுள்ளது. இங்குத் தெய்வீக கிருபை மற்றும் பரந்த மணப்பான்மை குறித்த விலையேறப்பெற்றப்படிப்பினைகளைப் பெற்றுக் கொள்கின்றோம். இவ்விதமாக இந்த மகிமையான குணலட்சணத்திற்குரிய குணலட்சண பெயர்பட்டியல் வாயிலாக தெய்வீக வார்த்தை எனும் கண்ணாடியில் நாம் பின்பற்றுவதற்குறிய மாதிரியை பார்க்கின்றோம்.மேலும் அவருக்குள் காணப்படும் அன்பானவைகள் துாய்மையானவைகள், பரிசுத்தமானவைகள் மற்றும் அருமையானவைகள் யாவற்றையும் நாம் கவனமாய் பார்த்து சிந்திக்கையில் வருடங்கள் செல்லச்செல்ல நாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி மகிமையின் மேல் மகிமையடைந்து அவருடைய சாயலுக்கு ஒப்பான சாயலை அடைகின்றோம். தேவனுடைய குமாரன் மீதான விசுவாசத்தினால் நாம் தரிபிக்கப்பட்டுள்ள கறையற்ற நீதியின் வஸ்திரத்தை ஒவ்வொரு குணலட்சணமும் அழகுபடுத்தும் வரையிலும் வேலை தொடரட்டும்,குமாரனுடைய பூமிக்குரிய வாழ்க்கையானது, பிதாவினுடைய குணலட்சணத்தினுடைய பூரண உதாரணமாக காணப்பட்டது.ஆகவேதான்இயேசுவினால், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கூற முடிந்தது. ஆகவே கிறிஸ்துவின் அன்பையும், நற்குணத்தையும், பொறுமையையும், உண்மையையும், வைராக்கியத்தையும், சுயத்தைப் பலி செலுத்தும் சிந்தையையும், தனிப்பட்ட நேர்மையையும் நாம் நன்கு கவனிப்போமாகநன்கு கவனித்து அவருடைய மாதிரியைப் பின்பற்றி அவருடைய சாயலில் பிரகாசிக்க வேண்டும்.

2கொரிந்தியர் 4:7-ஆம் வசனம் வாசிக்கவும்.தேவனுடைய ஆவியினுடைய தாக்கத்தின் கீழ் நம்மைநாம் தொடர்ந்து ஒப்புக் கொடுக்கும்போதுதான் நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கின்றவர்களாக இருப்போம். (1பேதுரு 2:9).இந்தப் பாவப்பட்ட/எளிய மண்பாண்டங்கள் அதிகமதிகமாக நமதுதேவனுடைய புண்ணியங்களை அறிவிக்கத்தக்கதாக நம்முடைய பிரயாசங்களும், ஜெபங்களும் தொடர்ந்து காணப்படுவதாக! நாம் சரீரத்திலும், மனதிலும் சுத்தமாக இருக்கக்கடவோம். வாயினின்று எவ்விதமாக கிரியைகளும் பரிசுத்த ஆவியின் இந்த ஜீவனுள்ள ஆலயத்தைக் கனவீனப்படுத்தாதிருப்பதாக. நம்முடைய பெலவீனங்கள் நிமித்தம் நாம் மிகவும் பூரணமற்ற நிலையில் நற்கிரியைகளைச் செய்வது உண்மை தான். ஆனால் தேவனுடைய கிருபையினால், தீமை என்று நாம் அறிந்தவைகளையாகிலும் நாம் தவிர்போமாக.

ஆமென்!!!

-----------------

--1136--

R 3700

# "மகிமையான அறிவிப்பு"

## லூக்கா 2:1-20

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."
(வசனம் 11)

கிருபையிலும், அறிவிலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் வளர, வளர, அவர்களுக்கு, பெத்லகேமின் புல்வெளிகளில் மேய்ப்பவர்களுக்குத் தேவதூதர்களால் கூறப்பட்ட செய்தியானது மிகமிக விலையேறப் பெற்றதாக ஆகிவிடுகின்றது. யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டத்தின் மீதான புரிந்துக்கொள்ளுதலின் காதுகள் மற்றும் கண்கள் படிப்படியாகத் தெளிவாகும்போது, பெத்லகேமில் கொடுக்கப்பட்ட அந்தத் தீர்க்கதரிசன செய்தியானது ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் சுருக்கம் எனத் தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். நமது இரட்சகரின் பிறப்பு எனும் மாபெரும் சம்பவத்தின் மீது நம்முடைய கவனமும் அடிக்கடி ஈர்க்கப்படுகின்றது. இரட்சகரின் பிறப்பு டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி அன்று சம்பவிக்கவில்லை என்பதோ அல்லது கர்த்தர் அநேகமாக அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி அன்று பிறந்திருப்பார் என்பதோ முக்கியமல்ல. அத்தகைய மகாபெரியவரின் பிறப்பு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், மனுக்குலத்திற்கு மிகவும் பெரிய விஷயமானபடியால், அவர் நம்முடைய இனத்திற்குச் செய்துள்ள விஷயங்களை உணர்ந்துள்ள யாவராலும் எல்லா நாளிலும் நினைவுகூரப்பட்டு, கொண்டாடப்பட வேண்டும். 4000 வருடங்களுக்கு மேலாக தெளிவில்லாமல் காணப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்கள், அன்று மனுக்குலத்திற்கு அருளப்பட்டது; மேலும், இது ஏதேன் தோட்டத்தில், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் உலகத்தின் மீது வந்த மாபெரும் பாவத்தின் சாபம் மற்றும் மரணம் இறுதியாக மாற்றப்படும் என்பதைச் சுட்டிக்காட்டித் தெரிவித்தது; மேலும் சாபத்திற்குப் பதிலாக ஜீவனைப் பெறுவதற்கான ஆசீர்வாதம் கர்த்தரால் அருளப்படும் என்பதையும் தெரிவித்தது. இந்தச் செய்தியானது, விசேஷமாய் உடன்படிக்கைப் பண்ணினவர்களும், தெய்வீகத் தயவை பெற்ற ஜனங்களுமாகிய யூதர்கள் மத்தியில், நமது கர்த்தரின் பிறப்பினுடைய காலப்பகுதி வரையிலும், அநேக நிழல்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் வாயிலாக அருளப்பட்டு வந்தது. யூதர்கள் வாணிக நோக்கத்துடன், நாகரிக உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்டிருந்தார்கள், ஆகையால், ஒரே தேவன் மீதான விசுவாசமும், மேசியாவின் மூலமான இஸ்ரயேலின் மீட்பு பற்றின விசுவாசமும் கொஞ்சமோ, அதிகமோ அனைத்து ஜனங்கள் மத்தியிலும் காணப்பட்டது; ஆகையால்தான், நம்முடைய கர்த்தர் பிறந்த காலக்கட்டத்தில், "மக்கள் மீட்பரை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்" என்று வாசிக்கின்றோம் (லூக்கா 3:15, திருவிவிலியம்). இந்த எதிர்ப்பார்ப்பு, தானியேலின் தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் ஜனங்கள் மத்தியில் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை. தானியேலின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலம், நமது கர்த்தர் முதிர்ச்சியை அடைந்து, ஊழியத்திற்கென்று தம்மை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டு, மாபெரும் நிஜமான பிரதான ஆசாரியனாகவும், இஸ்ரயேல் மற்றும் உலகத்தின் மீதான மாபெரும் நிஜமான இராஜாவாகவும் அபிஷேகிக்கப்பட்ட காலப்பகுதியான, அவரின் 30-ஆம் வயதின் வருடத்தையே குறிக்கின்றது என்பதை நாம் இப்பொழுது தெளிவாக அறிந்துள்ளோம்.

### "பெத்லகேமிலிருந்து நாசரேத்துக்கு..."

முற்காலங்களில் கனம் வாய்ந்த பட்டணங்களும், இழிவான பட்டணங்களும் காணப்பட்டன. பெத்லகேம், கனம் வாய்ந்த பட்டணங்களில் ஒன்றாகவும் மற்றும் நாசரேத், கனம் குறைந்த பட்டணங்களில் ஒன்றாகவும் அக்காலங்களில் கருதப்பட்டது. பெத்லகேம் இஸ்ரயேலின் பிரியமான இராஜாவாகிய தாவீதின் பட்டணமாகக் கருதப்பட்டது. நமது கர்த்தரின் தாயாகிய மரியாளும், அவளுடைய புருஷனாகிய யோசேப்புமாகிய இருவரும் தாவீதின் வம்சத்தில் வந்தவர்கள் என்று வேதவாக்கியங்கள் விவரிக்கின்றன. மேலும், மேசியா, பெத்லகேமில் பிறப்பார் என்று முன்பு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் தற்செயலாய் அங்கு நிறைவேறினது போலவும் தோன்றலாம் (மீகா 5:2). ரோம சாம்ராஜ்யம் முழு உலகத்தையும் அக்காலக்கட்டத்தில் ஆளுகை செய்து கொண்டிருந்தது. யூதர்கள், ரோமர்களுக்குக் கீழ்ப்பட்டு இருந்தபோது, கீழ்ப்பட்டிருக்கும் நிலையிலிருந்து தங்களை

விடுவித்து, உலகத்தின் மீதான ஆளுகையில், ஆளுகை செய்யும் வகுப்பாராய், தங்களை ஏற்படுத்தப் போகும் மேசியாவுக்காக, மன அமைதியிலில்லாமல் காத்திருந்தார்கள். அகுஸ்து ராயர், ரோம மாபெரும் சக்கரவர்த்தியாக இருந்த காலக்கட்டத்தில், வரி முறைமையைக் கொண்டு வருவதற்கென, உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட கட்டளை பிறப்பித்தார். இந்த இராஜ கட்டளைக்கு இணங்க, யோசேப்பும், மரியாளும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்ய, தங்கள் சொந்த ஊருக்குப் போனார்கள் என்றும், இவ்விதமாக இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்றும் லூக்கா அவர்கள் பதிவு செய்துள்ளார். இதே கட்டளைக்கு இணங்க, அநேக ஜனங்கள் பிரயாணம் செய்தபடியால், அங்கு, இடம் நெருக்கடி ஏற்பட்டதின் விளைவாக, விடுதிகளின் தொழுவங்கள் கூடத் தங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. யோசேப்பும், மரியாளும், தாமதமாக வந்தபடியால், எளிமையான தொழுவங்களில் தங்க வேண்டியதாயிற்று. இவ்வாறாக உலகத்தையே ஆளுகை செய்யப் போகிற இராஜ்யத்தை உடைய மகிமையின் இராஜா, மாம்சத்தில் வந்து தொழுவத்தில் பிறந்து, கால்நடைகளின் தீவனப்பெட்டியில் கிடத்தப்பட்டார்.

## ‘‘தேவதூதர்களும், மேய்ப்பர்களும்’’

யுகங்களைக் கடந்த செய்தியான, மேசியாவாகிய இயேசுவின் பிறப்பு குறித்த செய்தியை, சர்வ வல்லமையுள்ளவரிடமிருந்து தேவதூதர்கள் மூலமாகப் பெற்றுக்கொண்ட மேய்ப்பர்கள் நற்பண்புகள் உடையவர்களாக இருந்திருக்க வேண்டும். முதலாவதாக ஒரு தேவதூதன் மேய்ப்பர்களுக்குத் தோன்றி, அவர்களுடைய பயங்களைப் புறம்பாக்கும் விதமாக, ‘‘பயப்படாதிருங்கள், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்’’ என்றார். மனித மனங்களில், ஓங்கி நிற்கும் உணர்வுகளில் ஒன்று ‘‘பயமாகும்.’’ அதிலும் விசேஷமாக, கர்த்தரிடத்திலிருந்து வெளிப்படுத்தல்கள் வரும்போது பயம் ஏற்படுவது உறுதியே. மனுஷர்கள், அதாவது மனுக்குலத்திலேயே, உயர்ந்த பண்புகள் உள்ள மனுஷர்களும் கூடத் தாங்கள் பூரணமற்றவர்கள் என்றும், சர்வ வல்லமையுள்ளவர் பூரணமானவர் என்றும், அவருடைய பிரமாணங்கள் பூரணமானவைகள் என்றும் உணர்ந்துள்ளனர். உலகமானது, தங்கள் மீது ஒரு சாபத்தை அல்லது குற்றச்சாட்டைச் சர்வ வல்லமையுள்ளவர் வைத்துள்ளார் என்பதை உணர்ந்துள்ளனர்; மேலும், தங்களிடத்தில் இன்னும் பாவம் பெருகிக் கொண்டிருப்பதால், இன்னும் ஒரு சாபமோ அல்லது குற்றச்சாட்டோ தங்கள் மேல் வந்துவிடும் என்று பயந்து விடுகின்றனர். இன்றும், தெய்வீகக் குணம் மற்றும் திட்டம் அறிந்த சிலர் தவிர, மற்ற அனைவரிடமும் இவ்வச்சம் காணவேப்படுகின்றது. ஆகவேதான் பொதுவாக உலகம், மதத்தை வெறுக்கின்றது மற்றும் உலகம் மதத்தை விலக்கி வைக்க விரும்புகின்றது; காரணம் குற்றமனசாட்சி, மற்றும் குற்றம் சாட்டப்படுவோம் என்ற அச்சமேயாகும். அப்போது தேவதூதர்கள் செய்தது போன்று, இன்றும் தேவனுடைய பிள்ளைகள், உலகத்தின் அச்சத்தைப் போக்க வேண்டும், அதாவது, அவர்களுடைய அச்சத்திற்குத் தேவன் அப்பாற்பட்டவர் என்றும், ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் தீர்ப்பின் மூலம் வந்த சாபமாகிய மரணத்திலிருந்து உலகமாகிய அவர்களை மீட்கும் அளவு, தேவன் அன்பு கொண்டுள்ளார் என்றும் அறிவித்து அச்சத்தைப் போக்க வேண்டும். ‘‘நற்செய்தி’’ என்பதற்கு, வேறொரு மொழிப்பெயர்ப்பில் ‘‘சுவிசேஷம்’’ என்று இடம்பெறுகின்றது. சுவிசேஷம் என்பது நற்செய்தி, எனும் கருத்து எவ்வளவு அருமையாக இருக்கின்றது. ஆனால் தேவனுடைய திட்டத்தைப் புரிந்துக்கொள்ளாத, அநேக கிறிஸ்துவர்கள் தேவனுடைய வார்த்தைகளையும், குணலட்சணங்களையும் தவறாகப் புரிந்துக்கொண்டு, இருண்ட யுகத்தின் பல்வேறு செய்திகளுக்கு ‘‘சுவிசேஷம்’’ என்ற பெயரைச் சூட்டி, மனுக்குலத்திற்கான பங்காக உத்தரிக்கும் ஸ்தலம் மற்றும் நித்தியமான சித்திரவதைக் காணப்படுகின்றது என்று போதிக்கின்றார்கள். அந்தோ பரிதாபம்! இந்தத் தவறான கருத்துகளிலிருந்து நாம் விலகி, சுவிசேஷமே, நற்செய்தி என்ற கருத்தை ஏற்றுக்கொள்வோம். தேவதூதன், இந்த நற்செய்தி, எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் செய்தி என்று விவரித்தார். ஆ! தேவனுக்கு நன்றி. நாம் இதுவரை புரிந்துக்கொண்டவைகளைக் காட்டிலும் தேவனுடைய திட்டம் அகலமாகவும், ஆழமாகவும், உன்னதமாகவும், பிரமாண்டமாகவும் இருக்கின்றது. சுவிசேஷமானது, தற்போது கேட்கிறதற்குச் செவியும், காண்பதற்குக் கண்களும் உள்ள சிறு கூட்டத்திற்கு மாத்திரம் நற்செய்தியாய் இராமல், தேவனுடைய ஏற்றக் காலத்தில் அனைத்து ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷமாக இருக்கும். ஆதாமின் ஒவ்வொரு சந்ததியாரும், அவருடைய விழுகையிலும், விழுகையின் விளைவாக வந்த மரணச் சாபத்திலும், பங்கடைந்ததுபோல, நமது கர்த்தரால் கையளித்ததும், கல்வாரியில் நிறைவேற்றினதுமாகிய மாபெரும் மீட்பின் பலியில், மனுக்குலத்தின் ஒவ்வொருவரும் பங்கடைவார்கள். நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய திட்டம், நிறைவேறித் தீரும்போது, அது எல்லா ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறதாக இருக்கும். மேலும் இந்தச் செய்தி, நமது கர்த்தர் பிறந்த உடனே கொடுக்கப்பட்டது;

காரணம், இவர் மூலமே தெய்வீக நோக்கம் மற்றும் திட்டத்தின் மகிமையான அனைத்து விஷயங்களும் இறுதியில் நிறைவேற்றப்படும் என்பதேயாகும்.

## "செய்திக்கான காரணம்"

என்றென்றும் மாறாத தேவன், சாபத் தீர்ப்பை ஒருகாலத்தில் அளித்தவர், காரியங்களை மாற்றி, சாபத்திற்குப் பதிலாக, ஆசீர்வாதத்தை அளிக்கப் போகிறதற்கான காரணம் என்ன? என்று அறிய விரும்பும் ஜனங்களுக்கு, பதிலாகவும் இச்செய்தி காணப்பட்டது. தேவதூதன் அங்குத் தெய்வீகத் திட்டத்தின் கோட்பாட்டைக் கூறினார், அதாவது, "இன்று கர்த்தராகிய கிறிஸ்து (மேசியா) என்னும் இரட்சகர் உங்களுக்குப் பிறந்திருக்கிறார்" என்பதே ஆகும் (லூக்கா 2:11). இங்குத் தேவன், எப்படி நீதியுள்ளவராகவே இருந்து, இயேசுவை ஏற்றுக்கொள்ளும் பாவிகளை நீதிமான்களாக்குபவராகவும் இருப்பார் என்ற முழுச் சுவிசேஷத்திற்கான திறவுகோல் இருக்கின்றது. இங்கு வரும் "இரட்சகர்" என்ற வார்த்தையின் அர்த்தம் ஜீவன் கொடுப்பவராகும். மேலும், பாவத்தின் சம்பளம் மரணமாக இருக்க, இது மனுக்குலத்தின் மீது சாபமாக இருக்க, பிறந்திருக்கும் இந்த மேசியா, மனுக்குலத்திற்கு மீண்டும் ஜீவன் கொடுப்பதின் மூலம், மரணத் தீர்ப்பிலிருந்து மீட்டுக்கொள்வார் என்னும் கருத்து எவ்வளவு அருமையாக இருக்கின்றது. அவர் எப்படி ஜீவன் கொடுப்பார் என்பது அப்போது விவரிக்க அவசியப்படவுமில்லை, ஆனால், இப்போது புதிய ஏற்பாட்டு விளக்கத்தின் வெளிச்சம் காரணமாக, நம்முடைய கர்த்தர் தமது ஜீவனைச் சுயமாய் விரும்பி வந்து ஒப்புக்கொடுத்து, அநீதிமான்களுக்காக, நீதிமானாகிய அவர் மரித்து, ஆதாம் மற்றும் அவர் மேல் வந்த தீர்ப்பைச் சுதந்தரித்துக் கொண்ட அவரின் சந்ததிக்கும் எதிராய் இருந்த தெய்வீக நீதி கோரின விஷயங்களைத் திருப்திப்படுத்தினார் என்பதைப் புரிந்துக்கொள்கின்றோம். இயேசுவின் பிறப்பில் ஆரம்பித்த நம்முடைய இரட்சிப்புக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தை, நாம் ஆழமாக பார்க்க ஆரம்பிக்கையில், தேவதூதர் சேனைகள் போன்று நாமும், பரலோகத்தில் இருக்கும் தேவனுக்குத் துதிகளையும், மனுப்புத்திரரின் பிள்ளைகள் மீது அவர் காட்டின அவருடைய இரக்கத்திற்கு நன்றிகளையும் உரத்தக் குரலில் தெரிவிக்க ஆவல் கொள்வோம். பெத்லகேமில், குழந்தையாக பிறந்தவர் எதிர்க்காலத்தில்தான் இரட்சகர் ஆவார் என்றாலும், இயேசு முப்பது வயதை அடையும் வரை, அபிஷேகிக்கப்பட்டவராக ஆக முடியாது என்றாலும், அவர் முப்பதாவது வயது அடைந்தும், இன்னும் 3½ ஆண்டும் தம்முடைய ஜீவனை படிப்படியாக தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தாலும், அவருடைய பலிக் கல்வாரியில்தான் நிறைவடையும் என்றாலும், அவர் மூன்று நாட்களுக்குப் பிற்பாடுதான் உயிர்த்தெழும்புவார் என்றாலும், பின்பு நாற்பது நாட்களுக்குப் பின்னரே பரலோகம் திரும்புவார் என்றாலும், பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடே ஆசீர்வாதங்கள் செயல்முறைப்படுத்தப்படும் என்றாலும், தெய்வீகத் திட்டம் முதலாவதாக துளிர்விட ஆரம்பித்தபோதே தேவதூதர்கள் மகிழ்ந்து பாடினார்கள். தேவதூதர்கள் இரட்சிப்பைக் குறித்த தெய்வீகத் திட்டம் முதலாவதாக துளிர் விட ஆரம்பித்த போதே மகிழ்ந்து, பாடினதுபோல, தெய்வீகத் திட்டத்தின் முடிவைக் குறித்து விசுவாசம் கொண்டிருக்கும் அனைவராலும், குமாரனும், நமது கர்த்தருமானவர் மூலம் உன்னதமான தேவனுக்குத் துதிகளைச் செலுத்தவும் முடியும், சந்தோஷப்படவும் முடியும்.

## "நம்பிக்கையினால் இரட்சிக்கப்படுதல்"

தேவதூதன் இந்தச் செய்தியைக் கொடுத்து 19-நூற்றாண்டுகளுக்கு மேலாகியும், விசுவாச கண்கள் மற்றும் செவிகள் உடைய "சிறுமந்தையினருக்கு" விசுவாசத்தினால் சில விஷயங்கள் நிறைவேறியுள்ளதே தவிர, மற்றபடி நிறைவடையவில்லை. ஆனால் மாபெரும் சித்திரவதையைக் குறித்த செய்தியானது, இன்று கிறிஸ்துவின் நாமத்தில் பரப்பப்பட்டுள்ளது. இது தெய்வீகத் திட்டத்திற்கு அவமானமாகவும், தெய்வீகக் குணலட்சணங்களுக்கு கனவீனமாகவும் காணப்படுகின்றது. (சித்திரவதை, நரகம் முதலியவைக் குறித்த) இந்தச் செய்தி சந்தோஷத்தைக் கொண்டு செல்வதற்குப் பதிலாக, அனைவருக்கும், அதிலும் விசேஷமாக இரக்க மனமுள்ளவர்களுக்குக் கவலையையும், கஷ்டத்தையும் கொண்டு சென்றது. உண்மையைச் சொல்லப் போனால், கர்த்தர் இயேசுவைக் குறித்த தவறான செய்தியோ அல்லது சரியான செய்தியோ, எதுவும் அனைத்து ஜனங்களின் கவனத்திற்கும் சென்று சேரவில்லை. இன்றும், அதாவது 19-நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் கூட, மனுக்குலத்தில் ஒரு சிறு பகுதியினர் மாத்திரமே, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளும் கொடுக்கப்பட்ட அவருடைய நாமத்தை அறிந்திருக்கின்றார்கள்; "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப்போஸ்தலர் 4:12). கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்குள்

இன்று களிக்கூர்ந்து, தங்களுடைய இருதயங்களுக்குள் ஆரம்பிக்கப்பட்ட தேவனுடைய இரட்சிப்பு, இனி முழு வானங்களுக்குக் கீழாக நிறைவேற்றப்படும் என்று விசுவாசத்தினால் பார்க்கிறவர்களுக்கு (சபை) வரும் இரட்சிப்பைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இதைக் குறித்துத்தான் "நம்பிக்கையினால் இரட்சிக்கப்படும்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?" (ரோமர் 8:24). நாம் உண்மையாக இரட்சிக்கப்படவில்லை, நாம் இன்னமும் பாவம், வலி, விழுகை, மரணம் ஆகியவற்றினால்தான் சூழப்பட்டிருக்கின்றோம், மரணச் சாபம் இன்றும் மாற்றப்படவும் இல்லை. கர்த்தருடைய ஜனங்கள் இன்று விசுவாசத்தினாலே, நம்பிக்கையினாலே இரட்சிப்பைப் பெற்றிருக்கின்றார்கள். எதிர்க்காலத்தில் வரும் இரட்சிப்பு, மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் மற்றும் உண்மையுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள தெய்வீகச் சுபாவம், கனம், மகிமையில் பங்கேற்பது பற்றியதான எதிர்ப்பார்ப்பு மிகவும் பலமாகவும், மிகவும் தெளிவாகவும் இருப்பதினால், இந்த எதிர்ப்பார்ப்பை உடையவர்கள் சோதனைகள், இடர்பாடுகள் மத்தியிலும், மனுக்குலத்தின் மீது காணப்படும் சாபத்தினால் வந்த பெலவீனங்கள் மற்றும் சாதகமற்ற சூழ்நிலைகள் மத்தியிலும் சொல்ல முடியாத அளவு சந்தோஷம் அடைய முடியும்.

## "நற்செய்தியைக் குறித்த ஒரு தீர்க்கத்தரிசனம்"

தேவதூதன் வாயிலாகக் கொடுக்கப்பட்ட செய்தியானது, ஆயிரவருட யுகத்தின்போது, சபைக்காகவும், உலகத்திற்காகவும் நிறைவேற்றப்படப் போகின்ற நல்விஷயங்களைக் குறித்த தீர்க்கத்தரிசனமே ஆகும். சபை முதலாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும். முதலாம் உயிர்த்தெழுதல் என்பது, சாத்தான் கட்டப்பட்ட நிலையில், முழு உலகத்தின் மீது சத்தியம் மற்றும் நீதியின் செல்வாக்குக் காணப்படும் ஆயிரவருட யுகத்தின்போது, கிறிஸ்துவோடு ஜீவித்து, ஆளுகை செய்யும் பரிசுத்தவான்களுக்கு உரியதாகும். ஆயிரவருட யுகத்தின் விடியலில் சபையின் விடுதலை சம்பவிக்கும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றது; "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5). நமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தில் உள்ள மகிமையான நம்பிக்கையில் நாம் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், ஆதாமின் சந்ததியரை நேசித்து, அவர்களைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்த இயேசுவின் மூலம், முழு மனுக்குலமும் அரவணைக்கப்பட்டு, ஆசீர்வாதம் கொடுக்கப்படத்தக்கதாக தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம், ஆழமும், அகலமும், உயரமும், நீளமுமாக இருக்கின்றது என்று நாம் உணர்ந்து சந்தோஷம் அடைகின்றோம். ஆயிரவருட யுகத்தின்போதுதான், தேவதூதன் வாயிலாகக் கொடுக்கப்பட்ட தீர்க்கத்தரிசனம் நிறைவேறும். மேலும் நம்மை, தம்முடைய பலியினால் மீட்டுக்கொண்ட மாபெரும் இரட்சகர், இராஜாவாக, மகியைமான மேசியாவாக நின்று, மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் சீர்த்தூக்கி, ஆசீர்வதிக்கும் பொருட்டு, உலகத்தில் தம்முடைய நீதியின் ஆளுகையை ஸ்தாபிப்பார். இதற்கு இசைவாகவே, அப்போஸ்தலரின் வார்த்தைகள் காணப்படுகின்றது; அதாவது, "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" (அப்போஸ்தலர் 3:19-21). ஒருவேளை உலகத்தின் கிரியை அல்லது புண்ணியம் அல்லது நீதியன் அடிப்படையில்தான் உலகத்திற்கு இரட்சிப்பு என்று கர்த்தர் ஏற்படுத்தியிருந்தால், நாம் உண்மையில் பயப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக, தேவன் எதிர்க்காலத்திற்குரிய ஆசீர்வாதத்தை நம்முடைய தகுதியின் அடிப்படையில் ஏற்படுத்தாமல், அவருடைய குமாரனின் தகுதி மற்றும் பலியின் அடிப்படையிலேயே ஏற்படுத்தியுள்ளார். "ஜீவன் கொடுக்கும் (இரட்சகர்) மேசியாவாகிய கர்த்தர் உங்களுக்காகப் பிறந்திருக்கின்றார்" என்பதே தேவதூதன் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியாக இருந்தது. தற்கால சுவிசேஷ யுகத்தின் சோதனைகள் மற்றும் பாடுகள், இப்போது மனுக்குலமிடமிருந்து முன்னதாகவே பிரித்துச் சேர்க்கப்படும் சிறுமந்தையின், நலன் கருதி தெய்வீக மேற்பார்வையின் கீழ் நடக்கின்றது என்பது எவ்வளவு சந்தோஷத்தை அளிக்கின்றது. தேவனுடைய அருமையான குமாரனும், நம்முடைய கர்த்தரும், நம்முடைய நம்பிக்கையும், நம்முடைய மணவாளனுமாய் இருக்கிறவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பாகும்படிக்கு, பரிசுத்த ஆவியின் கனிகள் நம்மில் வளருவதற்கு அவசியமான மெருகூட்டுதலையும், செதுக்குதலையும் தற்கால பாடுகள் மற்றும் சோதனைகள் அளிப்பதை நாம் பார்க்கின்றோம். ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மணவாட்டியாகும்படிக்கு

உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் விரைவில் நிறைவடைந்து, மகிமையில் பிரவேசிப்பார்கள் என்ற காரியம் எவ்வளவு மகிழ்ச்சியாய் உள்ளது. இவர்கள் தங்கள் கர்த்தரும், ஆண்டவருமானவருடன் உலகத்தை ஆசீர்வதித்து, சீர்த்தூக்கும் காரியத்தைச் செய்யும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பது எவ்வளவு அருமையான காரியமாக இருக்கின்றது. இத்தகைய உன்னதமான கனம் அல்லது சிலாக்கியம் அல்லது ஆசீர்வாதத்தை வேறு யாரால் பெற்றிருக்க முடியும்.

## “தேவதூதனின் பாடல்”

தேவதூதன் நற்செய்தியை அறிவித்த பின்னர், பரம சேனையும் மேய்ப்பர்களுக்குத் தோன்றி, “உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக” என்று கூறி, தேவனைத் துதித்தார்கள். இதுவும் கூட ஒரு தீர்க்கதரிசனமே. இது தேவனுடைய ஏற்ற வேளையில் நிறைவேற்றப்படும் என்றும், இதன் நிறைவேறுதல் சமீபித்திருக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கின்றோம். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு இன்னும் மகிமை சேரவும் இல்லை, பூமியிலே மனுஷர் மத்தியில் சமாதானம் இன்னும் வரவுமில்லை. தற்போது எதிர்மாறாகவேதான் காணப்படுகின்றது. தேவனுடைய நாமம் இன்று தூஷிக்கப்பட்டு வருகின்றது. தேவனுடைய நாமமானது, கேலியாக தெய்வீக நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களால், பேய்களைத் தெய்வமாகக் கருதி அவைகளை வழிபடும் புறஜாதிகளால் மாத்திரம் தூஷிக்கப்படாமல், கிறிஸ்துவ ஜனங்களினாலும் தினந்தோறும் தூஷிக்கப்படுகின்றது. தூஷணம் என்பது ஒருவரைக் கனவீனப்படுத்தி, தவறாய்க் காட்டுதலாகும். நாம் அனைவரும் ஒரு காலங்களில் தெய்வீக நாமத்தைத் தவறாய்க் காட்டினதின் மூலம் அவரைத் தூஷித்துள்ளோம். இதற்குத் தேவன் நம்மேல் இரக்கமாய் இருப்பாராக. ஒரு காலத்தில் தேவனுடைய குணலட்சணத்தையும், தெய்வீகத் திட்டத்தையும் தவறாய்க் காட்டியிருந்தோம்; மேலும், பாவத்தில் பிறந்த தமது திரளான சிருஷ்டிகளை, நித்தியத்திற்கும் சித்திரவதை செய்யும்படிக்கு அன்பு, இரக்கம், நீதி மற்றும் சத்தியமுள்ள தேவன் திட்டம் போட்டுள்ளார் என்றும் தவறாய் அவரைக் குறித்துக் காட்டியிருந்தோம். நாம் அறியாமையில் இவைகளைச் செய்தபடியால், தேவன் நம்மேல் இரக்கமாய் இருக்கின்றார். இதுபோல அறியாமையில் தேவனைத் தவறாக காட்டிக் கொண்டிருக்கிற மற்றவர்கள் மீது நாமும் இரக்கம் காண்பித்து, அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் தேவனுடைய அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை உணரத்தக்கதாக நம்முடைய பிரயாசங்களைத் தொடர்ந்து செய்வோமாக! பூமியில் மனுஷருக்குச் சமாதானமும், நன்மையும் என்று உரைக்கப்பட்ட வார்த்தைகள், இரட்சகரின் பிறப்பில் நிறைவேறவில்லை என்பதினால், இது ஒரு தீர்க்கதரிசனம் என்றும், ஆயிரவருட அரசாட்சியின்போது நிறைவேறும் என்றும் காட்டுகின்றது. கர்த்தருடைய ஜனங்களுக்குக் கூடப் பூமியில் சமாதானம் இல்லை. கர்த்தருடைய ஜனங்களின் இருதயத்தில் காணப்படும் சமாதானம், அவர்கள் கர்த்தர் மீதும், அவர் வாக்களித்துள்ள மகிமையான விஷயங்களின் மீதுமான விசுவாசத்தின் அடிப்படையிலேயே உள்ளது. நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலர்களும் கூட, தற்காலத்தில் தேவபக்தியாய் நடப்பவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள் என்றும், ஒரு மனுஷனுடைய சத்துருக்கள் அவன் சொந்த வீட்டாரே என்றும் கூறியுள்ளார்கள் (2 தீமோத்தேயு 3:12). நாம் குழப்பமடையாமல், இவைகள் அனைத்தும் நிறைவேறும் கிறிஸ்துவின் நாளிற்காக விசுவாசக் கண்களின் பார்வையோடு, காத்திருப்போம். கிறிஸ்துவின் நாளில்தான், கர்த்தருடைய மகிமையின் அறிவினால் நிரம்பி, சமாதானம் பூமியில் காணப்படும். அக்காலக்கட்டத்தில் தெய்வீகத் தயவு வந்து, தவித்துக் கொண்டிருக்கும் முழு மனுக்குலத்தின் மீது இருக்கும் சாபத்தை மாற்றிப் போடும் (ரோமர் 8:22). ஆயிரவருட அரசாட்சி ஆரம்பித்த உடனே இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறாமல், யுகத்தின் முடிவில், மனுஷ ஜாதி பாவம், வியாதி, வலி, துன்பம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்தும், ஆதாம் இழந்த அனைத்திலிருந்தும் மீண்டுமாக இராஜ்யத்தின் முறைமைகளால் தூக்கப்படும்போது நிறைவேறும். அதுவரையிலும் உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும் சேராது, பூமியிலே சமாதானமும் மனுஷர் மத்தியில் காணப்படுவதில்லை. கிறிஸ்து மூலமாய் வெளிப்பட்டுள்ள தேவனுடைய நீதியை மனுக்குலம் கண்ட பின்னர், முழு மனுக்குலமும் தெய்வீக அன்பையும், தயவையும் ஏற்றுக்கொண்டுவிடும் என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. மாறாக, நித்தியஜீவனைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களும், தெய்வீகத் தயவை ஏற்றுக்கொள்ளாத ஒரு வகுப்பாரும் இருப்பார்கள் என்றும், அவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர்கள் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாகப் போதிக்கின்றன. இப்படி ஆயிரவருட யுக முடிவின்போது சாத்தானும், துணிகர பாவிகளும் அழிக்கப்படுவார்கள்; மேலும், அப்போது வானத்திலும், பூமியிலும் உள்ள யாவரும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனையும், ஆட்டிக்குட்டியானவரையும் என்றென்றைக்கும் துதிக்கும் காலமாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்க் கூறுகின்றது. வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்ட தெய்வீகத்

திட்டத்தின்படி, மாபெரும் இரட்சிப்பின் திட்டம் நிறைவடையும்போது, மீட்கப்பட்ட மனுக்குலம், இறுதியில் ஓசன்னா! உன்னதத்தில் தேவனுக்கு மகிமை, பூமியில் மனுஷர் மத்தியில் சமாதானம் என்று ஆர்ப்பரிப்பார்கள்.

## "மகிமையிலிருந்து, மாட்டுத்தொழுவத்திற்கு..."

நமது கர்த்தரின் பிறப்புக் காலம் தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். இதைக் குறித்து, 2-ஆம் Volume-இல் நாம் விரிவாக பார்த்துள்ளதால், அதை மீண்டுமாக பார்க்க போவதில்லை. அகஸ்து ராயனின் கட்டளைபடி, ஒவ்வொரு குடும்பமும், கோத்திரமும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். யோசேப்பும், மரியாளும், தாவீதின் வம்ச வழியைச் சார்ந்தவர்கள் ஆனபடியால், தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமுக்குச் சென்றார்கள். பெத்லகேம் மலையருகே உள்ள சிறிய பட்டணமாகும். அந்தத் தேசத்தின் விடுதிகள், நம்முடைய விடுதிகளிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். அவைகளுக்கு வரவேற்பறை இல்லாமல் பிரகாரம் இருக்கின்றது. தேவையான எவ்வித சாமான்களும் இல்லாத பெரிய அறைகள் பிரயாணிகளுக்குக் கொடுக்கப்படும். பிரயாணி தனக்குத் தேவையான படுக்கை விரிப்புகள், உணவுகள், பொருட்கள், தங்களுடன் கொண்டு வந்து அவ்வறைகளில் பயன்படுத்துவதுண்டு. குதிரைகள், ஒட்டகங்கள் முதலியவைகளுக்குக் கீழ்த்தளத்தில் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் கூட்ட நெருக்கடியின்போது, மேல் அறைகள் அனைத்தும் நிரம்பி இருக்க, கொட்டில்கள் கூடத் தங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. லோகோஸாய் இருந்தவர் உலகத்திற்கு வந்தபோது, மிகவும் எளிமையான தொழுவத்தில் பிறந்தார் (யோவான் 1:2). தேவதூதர்கள் கூறினதைக் கேட்ட மேய்ப்பர்கள், அங்கு வந்து குழந்தையைக் கண்டு, பின்னர், புறப்பட்டுப் போய் உண்மையை அறிவித்தார்கள். ஆனால் மரியாளோ பெருமையடித்துக் கொள்ளாமல், தேவனுடைய ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தாள்.

**ஆமென்!**

R 3702

# "நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள்"

## மத்தேயு 2:1-12

"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா." - நீதிமொழிகள் 23:26

யூதர்களுக்கு இராஜாவாக புதிதாய்ப் பிறந்த குழந்தையாகிய இயேசுவை, வெள்ளைப்போளம், தூபவர்க்கம் மற்றும் பொன்னாகிய பரிசுப் பொருட்களோடு பார்க்க நாடி முயற்சித்த கிழக்கிலுள்ள சாஸ்திரிகள் பற்றியே நம்முடைய இன்றைய பாடம் அமைகின்றது. இச்சம்பவத்திலிருந்து மாபெரும் மேசியாவிற்குரிய நம்முடைய கடமைகள் மற்றும் அவைகளைப் புதுப்பித்தல் பற்றியும், அவைகளைப் பெருக்கிக் கொள்வது பற்றியும் சில விலையேறப்பெற்ற ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாரம்பரிய கண்ணோட்டத்தின்படி மூன்று நபர்கள் என அனுமானிக்கப்படும் சாஸ்திரிகள், எருசலேமுக்கு வந்தார்கள், மேலும் இவர்கள் வந்து, யூதர்களுக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். செய்தி பரவினபோது, பரிசுத்த நகரம் முழுவதும் பரவசம் உண்டாயிற்று; காரணம் பல நூற்றாண்டுகளாக வாக்களிக்கப்பட்டுள்ள மேசியா, தீர்க்கதரிசனங்களின்படி வருவதற்குரிய சமயமாய் அக்காலம் இருந்தது. மேலும் மனுஷர்கள், மேசியாவின் வருகைக்காக அப்போது காத்திருந்தார்கள் என்றும் வாசிக்கின்றோம். இந்த எதிர்ப்பார்ப்பு, பெர்சியாவிலிருந்து மேசியாவுக்கு வணக்கம் செலுத்த வந்த சாஸ்திரிகளினால் உச்சக்கட்டம் அடைந்தது. செய்தி பரவி, இறுதியில் அரண்மனை வட்டாரத்துக்குள் வந்து, பின்னர் ஏரோதின் செவிகளுக்கு எட்டினது. தன்னுடைய முக்கியத்துவத்தைப் புறம்பாக்கிப் போடுபவராகவும், இராஜாவுக்குரிய கனத்தைப் பங்குப்போடுபவராகவும் இருக்கும் யார் மீதும் பொறாமை கொண்டவராகவும் ஏரோது இருந்தார் என்பதில் ஐயமில்லை. மேலும் ஏரோது, தான் இராயனுடைய அரசாட்சியில் அவருடைய பிரதிநிதி போன்று இருப்பதினாலும், தான் ரோம சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளதினாலும், தன்னுடைய கட்டுப்பபாட்டின் கீழ் இருக்கும் தேசத்தில், இராயனுக்கு எதிரான நாமத்தில் எவ்விதமான இராஜாவும் எழும்பாமல் பார்த்துக் கொள்வது தனது கடமையெனக் கருதியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

### "பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்"

ஆகவே ஏரோது, சாஸ்திரிகளை வரவழைக்க ஆள் அனுப்பினார். அவர்களுடைய தேடுகையில் தனக்கும் ஆர்வம் உள்ளதுபோல போலியாக பாவனை பண்ணி, இத்தனை தொலைதூரத் தேசத்தில் இருக்கும் அவர்கள், மேசியாவைக் குறித்து எப்படி அறிய வந்தார்கள் என்றும், குழந்தையைக் கண்டுபிடிக்கும் இடத்தை அவர்கள் எப்படி அறிந்துக்கொண்டார்கள் என்றும் அவர்களிடம் கேள்வி கேட்டார். அவர்கள் கிழக்கில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டதாகக் கூறினார்கள். கிழக்கில் உள்ள மாகிகள் வான சாஸ்திரிகளாக இருந்தபடியால் அவர்கள் தனிப்பட்ட நபர் மற்றும் தேசத்தினுடைய வரலாற்றை நட்சத்திரத்திலிருந்து அறியக்கூடியவர்களாக இருந்தார்கள். மனுஷர்கள் மற்றும் தேசங்களுடைய சரித்திரத்தை எந்த அளவுக்குக் கர்த்தர் நட்சத்திரங்களுடைய ஏற்பாடுகளில் எழுதியிருப்பார்/வைத்திருப்பார் என்பதைக் குறித்து நாம் முடிவு எடுக்க வேண்டாம். ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில் நட்சத்திர மண்டலங்கள் சங்கீதக்காரன் விவரிப்பது போன்று தேவனுடைய மாபெரும் புத்தகமாக இருக்கின்றது; "இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கின்றது" (சங்கீதம் 19:2). நம்மிடத்தில் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகள் இருக்கிறபடியால் நாம் மனுஷனுடைய பாரம்பரியத்தையோ, கட்டுக்கதைகளையோ, வான சாஸ்திரிகளின் உதவியையோ நாட அவசியமில்லை; காரணம், "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு: பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19).

வான சாஸ்திரத்தில் எந்த அளவிற்கு உண்மை இருக்கும் என்பதை நாம் அறிய முற்படாமல், கிழக்கிலுள்ள சாஸ்திரிகள் மேசியாவின் பிறப்பை அறிந்துக்கொள்வதற்கும், அவர் எந்த நாட்டை

சார்ந்தவர் என்று அறிந்துக்கொள்வதற்கும் அவர்களை வழிநடத்தின அந்த விசேஷமான நட்சத்திரத்தின் தோன்றுதலில் உண்மை உள்ளது என்று மாத்திரம் உறுதியடைகின்றோம். கர்த்தர் அவர்களை, சொப்பனத்தில் தோன்றி எச்சரித்தது போன்று, வேறு விதங்களிலும் இக்காரியங்களைக் குறித்ததான கூடுதல் விவரம் கொடுத்திருக்க வேண்டும். சாஸ்திரிகளுடைய மேசியாவின் தேடுதலில் ஆர்வம் கொண்டுள்ளது போன்று, ஏரோது போலித்தனம் பண்ணினான். ஏரோது தனக்கு உதவி செய்யும்படி, யூதேயாவின் ஞானிகளை அழைப்பித்தார். இவர்கள் வானசாஸ்திரிகள் அல்ல, இவர்கள் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கத்தரிசனங்களையும் கற்றுத்தேர்ந்தவர்களாகிய பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் ஆவர். அவர்களிடம் மேசியா எங்கே பிறப்பார் என்று தீர்க்கத்தரிசிகள் முன்னுரைத்துள்ளார்கள் என்று ஏரோது கேட்டார். இதற்கு "யூதேயாவின் பெத்லகேம்" என்பது அவர்களுடைய பதிலாக இருந்தது. இந்தப் பட்டணம் ஆறு மைல் தூர தொலைவில் இருந்தபடியால், கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் புறப்பட்டுச் சென்றார்கள். சாஸ்திரிகள் தாங்கள் குழந்தையைக் கண்ட பின்பு, இராஜாவும் வந்து குழந்தையைப் பணிந்து கொள்ளத்தக்கதாக, குழந்தையைப் பார்த்த இடத்தைத் திரும்பி வந்து அறிவிப்போம் என்று வாக்களித்துச் சென்றார்கள். ஆனால், ஏரோதோ இந்தத் தகவலைப் பயன்படுத்தி குழந்தையாய் இருக்கும் இயேசுவை அழிக்க முற்படப் போகின்றார்.

பெத்லகேமுக்குப் போகும் வழியில், அவர்களுக்கு கிழக்கில் தோன்றின வியக்கத்தகு நட்சத்திரம், மீண்டும் தோன்றி குழந்தையும், அதன் தாயும் இருக்கும் வீட்டிற்கு வழிகாட்டினது. அந்த நட்சத்திரம் வெளிச்சம் அல்லது தீபந்தம் போன்று தோன்றியிருக்கும். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த **பேராசிரியர் சார்லஸ் ஏ. யங்** அவர்கள், நட்சத்திரங்கள் திடீரென வானத்தில் தோன்றி, பின்னர் மிகவும் பிரகாசமடைவதும், பின்னர் ஓரிரு வருடங்களில் மங்கி போவதும் அரிதான சம்பவம் அல்ல என்று குறிப்பிடுகின்றார். இப்படியான நட்சத்திரம் 1901-ஆம் ஆண்டில் கூடத் தோன்றியுள்ளது. ஆனால் ஒரு பிரகாசமான நட்சத்திரம் தோன்றினது என்பதே நம்முடைய கருத்தாக இருக்கின்றது.

## "கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள்"

"**டேக்டியஸ், சுய்டோஜஸ்** மற்றும் **ஜோசப்பஸ்** போன்ற வரலாற்று ஆசிரியர்கள், கிழக்குப் பகுதிகள் முழுவதிலும் அச்சயமத்தில், யூதேயாவில் ஒரு வல்லமையான முடியரசு தோன்றி, உலகம் முழுவதையும் ஆளுகை செய்யும் என்ற கருத்துத் தீவிரமாகக் காணப்பட்டது என்று நமக்கு தெரிவிக்கின்றார்கள்" - **பரரார்.**

"இக்காலக்கட்டத்திற்குச் சற்று முன்பு வாழ்ந்த வரலாற்று ஆசிரியராகிய **விர்ஜில்** அவர்கள், பரலோகத்திலிருந்து ஒரு குழந்தை வந்து, பாவத்தை எடுத்துப்போடுவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது என்று தெரிவிக்கின்றார்" - **ஜேகோபஸ்.**

"**கன்பியுசியஸ்** என்பவரும் இத்தகைய இரட்சகர் தோன்றுவார் என்று தீர்க்கத்தரிசனம் உரைத்துள்ளார், மேலும், இவருடைய பின்னடியார்களின் பிரதிநிதி இரட்சகரைத் தேடிப் போவார் என்றும் கூறியுள்ளார். இதுவே புத்த மதம் சீனாவில் அறிமுகமாவதற்கான காரணமாயிற்று." - **ஆபோட்.**

"இவர்கள் அனைவரையும் காட்டிலும் **சொராஸ்டர்** என்பவர் மிகவும் தெளிவாகத் தீர்க்கத்தரிசனம் உரைத்துள்ளார். சொராஸ்டர் எரேமியாவின் சீஷனாக இருந்தபடியால், அவரிடமே இவர் மேசியாவைக் குறித்த விஷயங்களை அறிந்து, அவரைக் குறித்துத், தன்னுடைய சீஷர்களிடம் பேசியுள்ளார் என்று **நெஸ்டோரியர்கள்** கூறுகின்றார்கள்" - **பெர்சிய சமயப் பிரச்சாரர்.**

பெர்சியா, உலகத்தின் பிரதான நாடாக இருக்கும் சமயத்தில் தானியேலும், அவருடன் கூட இருந்த மற்ற மூன்று எபிரெயர்களாகிய அனனியா, மீஷாயேல் மற்றும் அசரியா பெர்சியாவில் பிரபுக்களாகவும், அங்குள்ள ஞானிகளுடன் நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். இவர்கள் வாயிலாக, இயேசுவைக் குறித்த தீர்க்கத்தரிசனம் வம்சாவழியாக வந்தது என்பதையும் நாம் புரிந்துக்கொள்ளலாம். ஆகவே, மேசியாவினுடைய பிறப்பின் காலம் தொடர்பான தானியேலின் தீர்க்கத்தரிசனங்கள் சொராஸ்டரின் சீஷர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். இன்னுமாக யூதர்கள் சிதறடிக்கப்பட்டுப் பல்வேறு

இடங்களில் காணப்பட்டார்கள். இவர்களிடம் தேவனால் நீண்ட காலத்திற்கு முன்பு வாக்களிக்கப்பட்டுள்ள, மாபெரும் மேசியாவைக் குறித்த நம்பிக்கையும் இருந்தது.மேலும், இஸ்ரயேலுக்கு மாத்திரம் அல்லாமல் பூமியின் குடிகள் அனைத்தின் மேலும் ஆசீர்வாதம் கொண்டு வருபவர் என்று இந்த மேசியாவைக் குறித்துத் தீர்க்கத்தரிசனம் வழங்கப்பட்டிருந்தது.

## "வெள்ளைப்போளம், தூபவர்க்கம் மற்றும் பொன்"

தேவன் தம்முடைய நற்செய்தியை அறிவிப்பதற்கு தூதுவர்களாகத் தெரிந்துக்கொண்டவர்கள், ஞானிகளாய் மாத்திரம் இராமல் பயபக்தியுள்ள, விசுவாசமுள்ள புருஷர்களாகவும் இருந்தார்கள். மேலும், யூதேயா மற்றும் எருசலேமில் உள்ள ஜனங்களை விழித்தெழுப்பப்பண்ணுவதற்கும், மாபெரும் இராஜாவைக் குறித்து அறிவிப்பதற்கும் தேவன் கிழக்கிலிருந்து, தூதுவர்களைத் தெரிந்துக்கொண்டது, விதிவிலக்கான விஷயமல்ல. அவர்கள் புறஜாதி மனுஷர்களாகவும், தேவன் வழிநடத்தினவர்களாகவும், வாக்களித்த ஜனங்களைச் சார்ந்தவர்களாகவும் இல்லாதிருந்தும், அவர்களும் நல்ல மனுஷர்களாகவும், பயபக்தியுள்ள மனுஷர்களாகவும், பூமியின் மீது வரவிருக்கின்ற சமாதானத்தின் ஆசீர்வாதத்தைக் குறித்து அறிய விரும்புகிறவர்களாகவும் இருந்தார்கள். எந்த ஜாதியராய் இருந்தாலும், மனுஷர்கள் மத்தியிலேயே நல்ல சித்தம் கொண்ட மனுஷர்களைக் கர்த்தர் தமது பிரதிநிதிகளாக, தூதுவர்களாகத் தெரிந்துக்கொள்ள பிரியம் கொள்வார்.

கிறிஸ்துவ மண்டலத்தில் உள்ள அநேகர், இந்த ஞானமுள்ள சாஸ்திரிகளாகிய புறஜாதி மனுஷர்களிடமிருந்து அநேக முக்கியமான பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மனுப்புத்திரர்களுக்கு வெளிப்படும் தேவனுடைய இரக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு, தவறான தேசப்பற்று எதுவும், இந்தச் சாஸ்திரிகளுக்கு இடையூறாக இருக்கவில்லை. மேலும், அவர்கள் இரட்சகரைக் கண்டபோது, அவரைச் சூழ்ந்திருக்கும் எளிமையான சுற்றுச்சூழலைக் கண்டும் அவர்கள் ஐயங்கொள்ளவில்லை. அவர்கள் மூன்று விதத்தில் அவரை வணங்கினார்கள், அதாவது, 1) அவர்கள் அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து சரீரப்பிரகாரமாகத் தங்களுடைய பயபக்தியை வெளிப்படுத்தினார்கள். 2) அவர்கள் தங்களுடைய இருதயத்தில் அவரை வணங்கி, தங்களுடைய சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் நாவினால் வெளிப்படுத்தினார்கள். 3) அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, இராஜாவுக்குப் பொருத்தமான மூன்று அன்பளிப்புகளை அவருக்குக் கொடுத்தார்கள். வெள்ளைப்போளம், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் தன்மையையும், தூபவர்க்கமானது துதியையும், பொன்னானது கீழ்ப்படிதலையும் அடையாளப்படுத்துகின்றது.

## "உங்கள் சரீரங்களைத் தேவனுக்கேற்ற ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதே, உங்கள் புத்தியுள்ள ஆராதனையாக இருக்கும்"

மாபெரும் மேசியாவைக் குறித்தும், அவருடைய ஊழியத்தைக் குறித்தும் மிகக் குறைவான அறிவும், வெளிச்சமும் கொண்டிருந்த அந்த உண்மையான புறஜாதி மனுஷர்களிடம் காணப்பட்ட பயபக்தியின் ஆவியை நம்மோடு ஒப்பிடும்போது நமக்கு வெட்கம் வருகின்றது. ஏனெனில், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைக் காண்பதற்கு அவர்களைக் காட்டிலும் பிரகாசமான வெளிச்சத்தை நாம் பெற்றிருக்கின்றோம்; மேலும், அவருடைய நட்சத்திரத்தை மிகத் தெளிவாக நாம் கண்டிருக்கின்றோம்; மேலும், தீர்க்கத்தரிசனங்களின் வாயிலாக நாம் அவரிடம் வழிநடத்தப்பட்டிருக்கின்றோம். மேலும், நாம் அவரைக் குழந்தை பருவத்தில் பார்த்ததோடு அல்லாமல், நம்முடைய பாடுகள், கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு சுமப்பதற்கும், தம்முடைய ஆத்துமாவைப் பாவத்திற்கான பலியாக ஒப்புக்கொடுப்பதற்குரிய பூரணராக அவரைப் பார்த்திருக்கின்றோம்; அதாவது, அவருடைய தழும்புகளினால் நாம் குணமாவதற்கு உரிய பூரணராக அவரைப் பார்த்திருக்கின்றோம். நம்மை இப்படியாக நேசித்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மைச் சம்பாதித்தவரின் பாதங்களில் எவ்விதமான பலிகளைச் சமர்ப்பிக்கப் போகின்றோம்? மேலும், பரலோகத்தில் இருப்பவரின் சத்தத்தின் வாயிலாக, மனுக்குலத்திற்கும், நமக்கும் மகா கிருபைகளை அருளின மாபெரும் இராஜாவிற்கு - எவ்விதத்தில் நம்முடைய சரீரங்களை முழுமையாய் அர்ப்பணித்து, எவ்விதத்தில் ஆழமான பயபக்தியோடு நம்முடைய முட்டுகளை மடக்கி வணக்கம் தெரிவிப்போம்? நாம் நம்முடைய வெள்ளைப்போளத்தை அவருக்கு அர்ப்பணித்துள்ளோமா? கசப்பான அனுபவத்தின் பட்சத்திலும் அவருக்கு ஊழியம் செய்யும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளோமா? அவரோடுகூடப் பாடு அனுபவிக்கும் பட்சத்தில்,

இராஜாவாகிய அவரைக் கனப்படுத்துவதில் சந்தோஷத்தை வெளிக்காட்டியுள்ளோமா? வெளித்தோற்றமாய் இல்லாமல், இருதயத்தில் அவரை வணங்கி உள்ளோமா? வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இருதயப்பூர்வமான நன்றியை, துதியைத் தூபவர்க்கமாக அவருக்கு செலுத்தியுள்ளோமா?

நம்முடைய பூமிக்குரிய பொருட்களாகிய, நம்முடைய பொன்னை அவருடைய பாதங்களில் சமர்ப்பித்துள்ளோமா? நம்மிடத்தில் உள்ள அனைத்தும் மற்றும் நாம் பலிச்செலுத்தும் அனைத்தும், மகா இராஜாவாகிய இம்மானுயேல் ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் குறைவானவைகள் என்பதை நாம் உணர்ந்துள்ளோமா? இப்படியாக நம்முடைய தற்போதைய மனப்பான்மை காணப்படுகின்றதா? மேலும், இதே மனப்பான்மை இனிவரும் நாட்களிலும் நம்முடைய தற்கால பயணம் முடியும் வரையிலும் நீடித்து நம்மிடம் காணப்படுமா?

"உங்கள் சரீரங்களை, பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதே புத்தியுள்ள ஆராதனை" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள், கர்த்தரிடத்தில் நாம் முதலாவதாகச் செய்துகொண்ட அர்ப்பணிப்பை மாத்திரம் குறிக்காமல், தினந்தோறும் சுயத்திற்கு மரிப்பதையும், நாளுக்குநாள், கர்த்தருடைய ஊழியங்களில் ஜீவித்து, நம்முடைய சரீரத்திலும், ஆவியிலும் அவரை மகிமைப்படுத்துவதையும் குறிக்கும் பலியின் உடன்படிக்கையாக இருக்கின்றது. ஆரம்பத்தில் நம்மிடம் காணப்பட்ட இந்த மனப்பான்மை எதிர்க்காலத்திலும் காணப்படுமா? ஞானத்திலும், அன்பிலும், ஊழியத்திலும், ஆராதிப்பதிலும், வளருவதில் நாம் தொடருவோமா? நம்முடைய கிருபையான பரலோக இராஜாவுக்கு, அதாவது, சீக்கிரத்தில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறவருக்கு, அவருடைய சிங்காசனத்தில் நாம் உட்காருவதற்கும், அவருடைய மகிமையில் பங்கடைவதற்கும், நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக மனுக்குலத்தின் மீது ஆசீர்வாதங்கனைப் பொழியும் மாபெரும் வேலையில் அவரோடு பங்கடைவதற்கு நம்மை அழைத்தவருக்கு, நம்மிடத்தில் உள்ள கொஞ்சமானவைகளை அவர் பாதத்தில் வைக்கும் சிலாக்கியத்தில் நாம் வளருவோமா?

## "என் மகனே, உன்னுடைய இருதயத்தை எனக்குத் தா"

நம்முடைய பொன்னான ஆதார வசனத்தை இங்கு நினைவுகூருவது நல்லது. இது குமாரர்கள் ஸ்தானத்தில் வராத பாவிகளுக்குப் பொருந்துவதில்லை. பாவிகளுக்கு ஒரு செய்தி உள்ளது; அதாவது, மனந்திரும்புவதற்கான ஓர் அழைப்பு உள்ளது; அதாவது, பாவத்தைத் துறந்து, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வரும் நீதிமானாக்கப்படுதலை ஏற்றுக்கொள்வதற்கான அழைப்பு உள்ளது. ஆனால் யார் பாவங்களுக்காக மனம் வருந்தி, பின்னர் மனந்திரும்பின ஓர் ஜீவியம் வாழ முயற்சித்து, முந்தைய தவறுகளிலிருந்து மீண்டு வந்து, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசம் வைத்து, தேவனுடைய குமாரனின் மரணம் மூலம் தேவனோடு ஒப்புரவாகிக் காணப்படுகின்றார்களோ, அத்தகையவர்களுக்கே, "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்ற நம்முடைய ஆதார வசனம் பொருந்தும்.

நாம் நம்முடைய இருதயங்களைக் கொடுப்பது என்பது நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் முழுமையாகக் கொடுப்பதை அடையாளப்படுத்துகின்றது. சாஸ்திரிகள் கொடுத்த மூன்று அன்பளிப்புகளும், "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்ற சுருக்கமான வாக்கியத்திற்குள் அடங்கிவிடுகின்றது. யார் ஒருவர் தனது இருதயத்தைக் கர்த்தருக்கு முழுமையாகவும், தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல் கொடுக்கின்றார்களோ, அவர்கள் இராஜாவுக்கு மகிமை சேரும் வண்ணமாக அவருடைய ஊழியத்தில் பயன்படும்படி தன்னுடைய சரீரத்தை, தன்னுடைய ஆராதனையை, பயபக்தியை, துதியை, தனது பூமிக்குரிய பொக்கிஷங்களை, நேரத்தை, திறமையை, செல்வாக்கை, பணத்தை மற்றும் எல்லாவற்றையும் கொடுக்கின்றவாகளாக இருக்கின்றனர்.

இவ்விதமான முயற்சிகளை எடுக்காதவர்கள், உடனடியாக எடுக்கும்படி வலியுறுத்துகின்றோம். அப்போஸ்தலர் கூறுகின்றதுபோல, இதுவே நம்முடைய புத்தியுள்ள ஆராதனையாக இருக்கின்றது. தேவன் நம்முடைய ஊழியங்களை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்றும், நம்முடைய அன்பான மீட்பரின் நீதியின்

வஸ்திரத்தினால் மூடப்பட்டுள்ள நாம், நம்மையே ஒப்புக்கொடுக்கும் நமக்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியும்போது, புத்தியுள்ள ஜனங்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

கர்த்தருடைய கிருபையை ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு, தங்களுடைய சரீரங்களை ஜீவபலியாக ஏற்கெனவே ஒப்புக்கொடுத்து, தங்களுடைய இருதயங்களை ஏற்கெனவே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறவர்களுக்கு நாம் நினைப்பூட்ட விரும்புவது என்னவெனில், பலிப்பீடத்தின் மேல் ஒருமுறை வைக்கப்பட்ட உங்கள் பலி, அங்கேயே காணப்பட வேண்டும். மேலும், அது பலிப்பீடத்தின் மீது காணப்படுவது வரையிலும், அதிகமதிகமான சந்தோஷத்தோடு ஊழியம் செய்யப்பட வேண்டும். பலிச் செலுத்துவதற்கான ஒவ்வொரு வாய்ப்புகளும் அதிகமதிகமாக உணர்ந்துகொள்ளப்படவும் வேண்டும் மற்றும் புத்திக்கெட்டாத தேவ சமாதானமானது இருதயத்தை ஆளும் அனுபவங்கள் அதிகமதிகமாய்க் காணப்படவும் வேண்டும். மேலும், தேவன் தம்மையும், தமது குமாரனையும் அன்பு செய்கிறவர்களுக்கென்று வைத்திருக்கம் மகிமையான விஷயங்களுக்கு, ஆவியின் கிருபைகள் மூலம் அதிகமதிகமாய் நாம் ஆயத்தம்பண்ணப்படவும் வேண்டும் என்பதேயாகும்.

**ஆமென்!**

# பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906

வெளிநாடுகளிலுள்ள நம்முடைய வாசகர்களின் நன்மைக்காக, நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கான ஆசரிப்பிற்குரிய தியதியை நாம் முன்கூட்டியே அறிவிக்கின்றோம். மீண்டுமாக இரண்டு தியதிகளில், ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் நமக்கு வந்துள்ளது. நம்மால் தேட முடிந்த அனைத்து ஆல்மனாக்குகளிலும் (almanac)/ஆண்டுக்குறிப்பேடுகளிலும் (calendar), இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னர்வரும் அமாவாசைக்கான தியதி மார்ச் 24-ஆம் தியதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தியதியிலிருந்து கணக்கிடுகையில் நீசான் 13-ஆம் தேதியினுடைய இரவாகிய நினைவுகூருதலின் நாளின் தியதியானது ஏப்ரல் 6-ஆம் தியதியாகக் காணப்படுகின்றது. ஆனால் அனைத்து almanac/ஆண்டுக்குறிப்பேடுகளும் நாங்கள் அறிந்திருக்கிறவரை, பௌர்ணமியின் தியதியினை ஏப்ரல் 9 என்று கொடுத்துள்ளது. நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்திருக்கிற பிரகாரம், வேதவாக்கியங்களில் சந்திரனானது, யூத ஜாதிக்கு அடையாளமாய் இருக்கின்றது மற்றும் இதற்கான நோக்கம் இஸ்ரயேலுக்கான வாய்ப்புகளும், பரீட்சைகளும், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படும் காலப்பகுதியில் முழு அளவில் காணப்பட்டது என்பதற்கும், சிலுவையில் அறையப்பட்ட காலம் முதற்கொண்டு, அந்த ஜாதியாருக்கான ஒளி நலிவுற ஆரம்பித்தது என்பதற்கும் அடையாளமாகக் காணப்படவே ஆகும்.

இம்முரண்பாட்டிற்கு (அ) அமாவாசையிலிருந்து பௌர்ணமி வருவதற்கு எப்படி 16-நாட்கள் தேவைப்படும் என்பதற்குக் காரணம் அறிய முடியாததினால், நாங்கள் அலிகெனியின் வான் ஆய்வு மையத்தினைக் கண்காணிப்பவர்களிடம் (Allegheny Observatory Astronomers) விசாரித்தோம்; அவர்களாலும் காரணம் கூறமுடியவில்லை மற்றும் almanac/ஆண்டுக்குறிப்பேட்டின் விவரங்கள் சரியே என்று உறுதி மாத்திரமே செய்தனர். அவர்கள் எங்களை வாஷிங்டனில் (Washington, D.C.) உள்ள அமெரிக்க கடற்படை ஆய்வு மையத்திடம் விசாரிக்கும்படிக்குப் பரிந்துரைத்தனர்; இவர்களும்கூட நமக்கு almanac/ஆண்டுக்குறிப்பேட்டின் தியதிகளை உறுதிப்படுத்தினார்கள். ஆனாலும் இந்த முரண்பாட்டினுடைய விநோதத்திற்கான காரணத்தை அல்லது சாதாரணமாகவே சந்திரனானது பௌர்ணமி பாகத்தை அடைவதற்கு 14-நாட்கள் போதுமானதாய் இருக்க, ஏன் இத்தருணத்தில் 16 நாட்கள் எடுத்துக்கொள்கின்றது என்பதற்கான காரணத்தைக் கொடுக்க முடியாதவர்களாய் இருந்தார்கள்.

அமெரிக்க கடற்படை ஆய்வு மையம்,
வாஷிங்டன், டி. சி.
திரு. சி. டி. ரசல்,

ஐயா, கடந்த 31-ஆம் தேதியன்று நீங்கள் அனுப்பியுள்ளதான செய்தியினை நான் பெற்றுக்கொண்டேன்; அதில் 1906-ஆம் ஆண்டினுடைய சில ஆல்மனாக்குகளில் அமாவாசையானது மார்ச் 24-ஆம் தேதி, மாலை 6:52-க்கு இடம்பெறுவதாகவும், அதன் பௌர்ணமியானது ஏப்ரல் 9-ஆம் தேதி மதியம் 1:12-க்கு இடம்பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இடைவெளி 15 நாட்களும், 6 மணி நேரங்களுமாகக் காணப்படுவதினால், இதில் சில முரண்பாடு இருப்பதாக உங்களுக்குத் தோன்றுவதாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இதற்குப் பதிலளிக்கும் வண்ணமாக, நான் உங்களுக்குத் தகவல் அளிப்பது என்னவெனில், கூறப்பட்டுள்ள தகவல் சரியாக உள்ளது என்பதும், நேரமானது கிழக்கத்திய நேரப்படி உள்ளது என்பதுமேயாகும். சந்திரனுடைய வட்டத்தின் மா விலகல் (சுற்றுப்பாதையின் வட்ட விலகல்) காரணமாக அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும்இடையிலான காலப்பகுதியானது, அபூர்வமாக 15 நாட்களைத் தாண்டுகின்றதாய் இருக்கின்றது.

உங்கள் மதிப்பிற்குரிய,
வால்டர். எஸ். ஹார்ஷ்மேன்,
கணித பேராசிரியர்,
யு. எஸ். என். கடலோடிகளின் ஆண்டு குறிப்புநூல் இயக்குநர்.

நினைவுகூருதல் ஆசரிப்பதற்கான சரியான தியதியினைத் துல்லியமாய் உறுதிப்படுத்திடுவதற்கு நாங்கள் இவ்வளவு நுணுக்கமாய் ஆராய்ந்திட்டாலும், துல்லியமான தியதியே முக்கியமானது என்ற எண்ணத்தினைப் பதியவைத்திடுவதற்கு நாம் விரும்பவில்லை. நாம்

நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றோம். நினைவுகூருதலை நாம் ஆசரித்தல் என்பது சிலாக்கியமும், வாய்ப்புமே ஒழிய கட்டாயப்படுத்தும் கட்டளையல்ல. அதன் ஆசரிப்பிற்கு நாம் ஒன்றுபோல் ஒரு தியதியினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதை நாம் சரியான மனநிலையில் ஆசரிக்க வேண்டும் என்றும், அதாவது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிழலானது, உலகத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாக, தேவாட்டுக்குட்டியாகிய இயேசுவின் மரணத்தில் நிறைவடைந்ததற்கான நினைவுகூருதல் என்று ஆசரிக்க வேண்டும் என்றுமுள்ளவைகளே முக்கியமானவைகளாகும். நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றாரே, ஆகையால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். வேறு எதையும் அல்ல, இதையே அவரை நினைவுகூரும் வண்ணமாகவும், அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், தற்காலத்தில் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களுக்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளதான பலியுடன்கூடிய ஊழியங்களில் நம்முடைய ஜீவியங்களை அவரோடுகூட ஒப்புக்கொடுப்பதற்குமான நம்முடைய உடன்படிக்கையினை உறுதிப்படுத்தும் வண்ணமாகவும் நாம் செய்கின்றோம். நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான மிகுந்த ஏற்றவேளை, ஏப்ரல் 8-ஆம் தேதி, ஞாயிறன்று இரவாகும் என்று நாம் முடிவு செய்கின்றோம். யூதர்களும் இதையே கைக்கொண்டு, ஏப்ரல் 10-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமையை, பஸ்கா பண்டிகைக்கு (அ) நீசான் 15-ஆம் தேதியின் ஆரம்பம் என ஆசரிக்கின்றனர். இந்தக் கணக்கிடுதலின்படி நீசான் 14-ஆம் தேதி என்பது, ஏப்ரல் 9-ஆம் தேதி திங்கட்கிழமையாய் இருக்கும் மற்றும் யூதருடைய கணக்கிடுதலின்படி, நாளானது முந்தின மாலையோடு, அதாவது ஏப்ரல் 8-ஆம் தேதி, ஞாயிறு மாலையோடு துவங்குகின்றதாய் இருக்கின்றது. அந்தத் தியதியில், நாம் அனைவரும் ஒன்றுபோல் நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரிப்போமாக.

*****

R 3718/42/355

# மனந்திரும்பிவந்த கெட்டக்குமாரன்.

திரும்பிவா, திரும்பி வந்திடு, உன் தந்தையின் குரலொலி கெஞ்சுகின்றதே,
நீயோ, வெகு தொலைவில் நெறி தவறி அலைகின்றாயே,
"Return, return! thy Father's voice is pleading, Tho' far astray, I bid thee turn again! Thy robe is rent, thy tender feet are bleeding,

நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன், திரும்பி வந்திடு.
உன் ஆடையோ பழசாகிக் கிழிந்துவிட்டதே,
உன் இருதயமோ மயக்கமுற்றே, மெலிந்து தளர்ந்துவிட்டதே, உன் தளிர் பாதங்கள் கல்பட்டு, முள்பட்டு,காயத்தால் இரத்தம் கசிகின்றதே,
பஞ்சத்தால் ஏற்பட்ட வலிகளினால் உன் உடல் நலம் கெட்டுவிட்டதே,
எனதன்பு மகனே, திரும்ப வந்திடு, நான் உன்னை வரவேற்க எப்போதும் காத்திருக்கின்றேன்,
Return, my child: a welcome here awaits thee: No longer in the distant country rove;
Resist the cruel tempter that belates thee, And keeps thee from my dwelling and my love

தூரதேசத்தில் இனி ஒரு கன நேரமும் இலக்கின்றி அலைந்து திரிந்திட வேண்டாம்,
உன்னைக் காலந்தாழ்த்தித் தயங்கச்செய்யும் சோதனைக்காரனின் கொடூரமான முயற்சியைத் தகர்த்தெரிந்துவிட்டே மனந்திரும்பு, திரும்ப வந்திடு.
Return, return! Thy Father's loving-kindness Thou long hast scorned, and done his grace despite; Yet in his touch is healing for thy blindness, And he can turn thy darkness into light. Return in all thy rags of sin's defilement; Return with all thy want and sore distress;
Thy Father's voice bespeaks his reconcilement:

உன் தந்தையின் அன்பு கனிந்துவிட்டதே, இரக்கம் கொண்டதே,
Father's loving-kindness Thou long hast scorned, and done his grace despite; Yet in his touch is healing for thy blindness, And he can turn thy darkness into light. Return in all thy rags of sin's defilement;

நெடுங்காலமாகவே நீ அவரை அவமதிப்பு செய்துவிட்டாய்,
அவரின் தொடுதலுக்குள்ளே உன் குருட்டுக் கண்கள் திறக்கப்படுமே,சுகம் பெறுமே,
உன் இருளை அவர் பிரகாசமான வெளிச்சமாக்கிடுவாரே,
Return, return! Thy
Return with all thy want and sore distress;
Thy Father's voice bespeaks his reconcilement: Flee to thy Savior, and thy guilt confess.

உன் பாவக்கறைபடிந்த கந்தலாடையுடனே அவரிடம் திரும்பவந்திடு,
உன் இரட்சகரின் குரலொலி முன்பே பேசி சமரசம் உண்டாக்கிவிட்டதே,"
"Return, return! Thy substance hath been wasted-- Thou hast not aught to bring but thy poor heart; Yet art thou longing for the bread once tasted, And for his paths of peace, and faith's good part? Return, for why shouldst thou delay the

அவரது மார்பின் அரவணைப்புக்குள்ளே புகுந்திடு, அங்கே உன் குற்றங்களை, பாவங்களை அறிக்கையிட்டுவிடு,
திரும்பவந்திடு, திரும்பவந்திடு,உன் செல்வங்கள் யாவும் வீணாகிச் செலவாகிவிட்டதே, pardon Thy Father's great
compassion waits to grant! Arise and go, before thy doubts shall harden The homesick yearnings of the penitent.

**--1150--**

"Return, return! Leave thou the swine and famine And seek again the plenty of thy home!

**உன் நைந்த இருதயத்தைத் தவிர வேறொரு பொருளையும நீ எடுத்துவர அவசியமில்லை,**
**ஒருகாலத்தில் நீ இனிமையாக ருசித்து உண்ட அப்பத்திற்காகவே ஏங்கவில்லையோ**
**அவரின் சமாதான வழிகளுக்காய் ஏக்கம் கொண்டாயோ?**
**அவரின் விசுவாசத்தின் நல்ல பங்கினுக்காய் விருப்பம் கொள்வாயே,**
**மனம் திரும்பு. மன்னிப்பு பெறவே ஏன் காலம் தாழ்த்துகின்றாய்?**
**ஊன் தந்தையின் மாபெரும் கழிவிரக்கம் மன்னிப்பைக்கொடுத்திடவே காத்து நிற்குதே,**-- Thou hast not aught to bring but thy
poor heart; Yet art thou longing for the bread once tasted, And for his paths of peace, and faith's good part? Return, for why shouldst thou delay the pardon Thy Father's great
compassion waits to grant! Arise and go, before thy doubts shall harden The homesick
yearnings of the penitent.

**எழும்பு, திரும்ப செல்.உன் சந்தேக மனம் மீண்டும் கடினமடைவதற்குள் சென்று சேர்ந்திடு.**
**வீட்டு ஏக்கம் உன்னை மனம் வருத்தம் கொள்ளச் செய்ய வில்லையோ?**
**மனம் திரும்பு, திரும்பவந்திடு,பன்றிகள் உண்ணும் உணவையும், பஞ்சத்தையும் விட்டு வந்திடு,**
**உன் வீட்டிலுள்ள பெருஞ்செல்வத்தைத் திரும்பப் பெற்றிடு,**"Return, return! Leave thou the swine and famine And seek again the plenty of thy home!
Why dost thou toil among the husks of mammon

**உலகத்தின் செல்வங்களைக் கெட்டவழியினில் ஈட்டியுள்ள தனதேவதையின் உமியுடனே நீ ஏன் கஷடப்பட வேண்டும்?**
come? Return thou to his arms, his kiss, his blessing, Accept the robe, the sandals, and
the ring, After thy sinfulness and guilt confessing, By Jesus found, lost treasure of the
King!

**அவர் கரங்களின் அரவணைப்புக்குள்ளே திரும்ப வந்திடு,**
**அவரின் பரிசுத்த முத்தமதை பெற்றுக்கொண்டே ஆசீர்வாதத்தை அடைந்துகொண்டிடு.**
**உனக்கு அவர்கொடுக்கும் கறையில்லா வெண்வஸ்திரம் தன்னைஅணிந்துகொள்.**
**புதுக் காலணிகளை அணிந்து கொள்வாய், முத்திரை மோதிரம்தன்னை விரலில் அணிந்துகொள்,**
**உன்னுடையபாவங்கள் அனைத்தையும் அவர் மன்னித்தவிடுவார்,**
**நீயோ, உன் ராஜாவின் தொலைந்துபோன பெருஞ்செல்வத்தை, பொக்கிஷங்களை**
**மீண்டும் பெற்றுக்கொள்வாய்மீண்டும் திரும்பிவா.**
"Return, return! The angel-hosts bend o'er thee-- They wait to bear the tidings' joyful
sound. They have beheld the Savior dying for thee, And will rejoice to sing, The lost is
found! Return, for he will heal all thy backsliding-- Will love thee freely, and will thus forgive; Come, weary soul, rest in his love abiding, Thou hast been dead--arise to-day andlive!"

**பரிசுத்த தூதர்களின் சேனைகள் உன்னைநோக்கிக் குனிந்து அழைக்குதே,**
**சந்தோஷத்தின் உச்சிதனைத்தொட்டு முழக்கமிடக்காத்து நிற்குதே,**
**உன் இரட்சகர் உனக்காக இறந்துவிட்டார், ஈடுகிரையம் செலுத்திவிட்டார் என்பதை உணர்த்துகின்றாரே.**
**களைப்படைந்த விரக்தியடைந்த ஆத்துமாவே, திரும்பி வந்திடு, மனம் திரும்பி வா, அவர் உன் பின் மாற்றங்களையெல்லாம் குணப்படுத்தி**

உன்னை முற்றிலும் கட்டுப்பாடின்றிஅ ன்பு செய்வார், இவ்வாறாகத்தான் அவர் உன்னை மன்னித்திடுவார்,

அவர் அன்பின் முடுதலுக்குள்ளேதிரும்ப வந்திடு, மரித்துப்போன நீ, இன்றே ஜீவன்பெற்று எழுந்து வாழ்ந்திடு.

கொழுத்தக்கன்றுகள் அடிக்கப்பட்டே விருந்துகொண்டாடிடுவார்,

சந்தோஷ மிகுதியால் உயர்ந்த வஸ்திரம் எடுத்துவந்தே உனக்குப்போர்த்திடுவார்,நைந்துபோன கால்களுக்குப் புது பாதரட்சைகள் அணிவித்திடுவார்,காணாமற்போய்விட்ட நீ, திரும்பச் சென்று காணப்படவே ஒப்புக்கொடுத்திடு.

R 3726

# "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம்"

## மாற்கு 1:21-34

"பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கினார்." மாற்கு 1:34.

வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று நமது கர்த்தர் கூறியுள்ளார் (மத்தேயு 11:23). நம்முடைய பாடமானது கப்பர்நகூம் எவ்வளவாக வானபரியந்தம் உயர்த்தப்பட்டது என்று நமக்கு இப்பொழுது எடுத்துக் காண்பிக்கப் போகின்றது; அதாவது கப்பர்நகூமின் ஜனங்களுக்கு, அவர்களின் வியாதிகளைச் சொஸ்தப்படுத்தின நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தின் ஆரம்ப காலப்பகுதிகளில் அருளப்பட்ட மாபெரும் இரக்கங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களை நம்முடைய இந்தப் பாடமானது நமக்கு எடுத்துக் காண்பிக்கப் போகின்றது. எனினும், சொற்பமான நபர்களே அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டனர். மேலும், இயேசு கூறின பிரகாரமாக அப்பட்டணமானது பாதாளபரியந்தம் தாழ்த்தப்பட்டது. அதாவது, அப்பட்டணம் எரிகின்ற (அ) சித்திரவதைப்படுத்துகின்ற இடத்திற்குள் தள்ளப்படாமல், (hades) ஹேடிஸ்க்குள், அதாவது படுகுழிக்குள் (grave), அதாவது மரித்த நிலைக்குள் விடப்பட்டது என்று நாம் அறிகின்றோம். அப்பட்டணமானது முற்றிலும் அடையாளம் தெரியாமல் போய்விட்டது. மேலும், அது காணப்பட்ட இடம் கூட இன்று திட்டவட்டமாகத் தெரியாத நிலையிலேயே உள்ளது. ஒரு குறிப்பிட்ட கற்குவியலே கப்பர்நகூம் காணப்பட்ட இடம் எனக் கூறிவரப்படுகின்றது.

கப்பர்நகூம் பட்டணமானது, கலிலேயா கடலின் அருகே, அதாவது நமது கடந்த பாடத்தில் அற்புதவிதமாக அநேக மீன்கள் வந்த கடலின் அருகே காணப்பட்டது. அடுத்து வந்த ஓய்வு நாள் அன்று, இயேசுவுடைய சீஷர்கள் ஆகும்படிக்குத் தங்களுடைய அனைத்தையும் விட்டுவந்த நான்கு மீனவர்களோடுகூட இயேசு, கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்திற்குள் பிரவேசித்தார். யூதர்களின் ஜெப ஆலயங்களில் (Synagogue) மிகுந்த சுதந்திரம் அருளப்பட்டிருந்தது. மேலும், பயபக்தியுள்ள எவரும் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் குறித்ததான தங்களுடைய கண்ணோட்டங்களை முன்வைப்பதற்கான வாய்ப்பும் அருளப்பட்டிருந்தது. நமது கர்த்தர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஜனங்களுக்குப் போதித்தபோது, அவருடைய உபதேசம் மற்றும் அவருடைய போதனைகள் குறித்தும் ஆச்சரியம் அடைந்தார்கள். வேதவாக்கியங்களைக்குறித்துச் சதுசேயர் மற்றும் வேதபாரகர்கள் சண்டைச் சச்சரவு செய்து கொண்டு, வேத வாக்கியங்களின் அர்த்தங்களை யூகம் செய்து அவைகளின் அர்த்தங்களைக் குழப்பிக்கொள்வதையும், வேதவாக்கியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாத புதிர்கள்போல் ஆக்குவதையுமே ஜெப ஆலயங்களில் ஜனங்கள் பார்த்துப் பழகியிருந்தார்கள். ஆனால், இயேசுவோ "அதிகாரமுடையவராய்" வேதவாக்கியங்களின் அர்த்தங்களை முழுவதும் புரிந்துக்கொண்டிருந்த ஆண்டவர் போல் போதித்தார்.

உண்மைதான், நமது கர்த்தர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்தான். மேலும், மற்றவர்கள் அறிந்திராதக் காரியங்கள்பற்றின அறிவு அவருக்கு இருந்ததும் உண்மைதான்; ஆனால், அக்காரியங்களைக் குறித்தெல்லாம் அவர் போதிக்கவில்லை என்பதை அவர் நிக்கொதேமுவிடம் பேசின வார்த்தைகளிலிருந்து நாம் உறுதிப்படுத்தலாம்; அதாவது, "பூமிக்கடுத்தக் காரியங்களை" நான் உங்களுக்குச் சொல்லியும், நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவான் 3:12). கர்த்தரோ தெய்வீக வெளிப்படுத்தல்களான, நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் குறித்தும் அவைகளின் நிறைவேறுதல் குறித்துமே போதித்தவராகக் காணப்பட்டார். இதை "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்" என்றும், "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது" என்றும், அவர் பேசின வார்த்தைகள் மூலமாகவே நாம் நிச்சயித்துக்கொள்ளலாம் (யோவான் 12:49; 7:16).

ஆகவே, கர்த்தருடைய சகல பிரதிநிதிகளும் கூட இப்படியாகவே போதிக்க வேண்டும். அதாவது, மனித யூகங்களையும், தத்துவங்களையும் போதியாமல், தேவனுடைய வார்த்தைகளையே போதிக்க வேண்டும். "சொப்பனங்கண்ட தீர்க்கத்தரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என்

வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 23:28). "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும் இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20). "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திச்சொல்லு" (2 தீமோத்தேயு 4:2). "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபிரெயர் 4:12). "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்துக்கொண்டார்கள்" (அப்போஸ்தலர் 4:13).

ஆகவே கர்த்தருக்கும், அவருடைய சாட்சியின் வேதவாக்கியங்களுக்கும் உண்மையும், நேர்மையுமாய் இருப்பவர்கள், உலகத்தாரிடம் தெளிவற்ற விதத்தில் பேசாமல் ஏற்றவேளையில், "சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகிய" தேவனுடைய செய்தியை அறிவிப்பார்கள்.

## "உம்மை இன்னார் என்று அறிவேன்"

இயேசு பேசிக்கொண்டிருக்கையில் அல்லது அவருடைய சொற்பொழிவு அநேகமாக முடியும்போது, "நசரேயனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களை கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்ற வார்த்தைகளை, ஜெப ஆலயத்தில் காணப்பட்ட சபையார் கேட்டபோது அதிர்ச்சியடைந்தார்கள் (வசனம் 24). இவ்வார்த்தைகளைப் பேசினது அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவன் ஆவான். ஆனால், இன்றைய நாட்களிலோ, இப்படிப்பட்ட மனிதன், பைத்தியம் பிடித்தவனாகக் கருதப்பட்டு, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்பகத்தில் சேர்க்கப்படுவான். அதற்காக இன்று மனநிலை பாதிக்கப்பட்டவர்களாய் இருக்கும் அனைத்துப் பைத்தியக்காரர்களும், அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. மூளையானது நோயினால் தாக்கப்பட்டுப் பைத்தியமாய்ப் போனவர்களும் உண்டு என்பது உண்மைதான்; ஆயினும் பைத்தியக்காரர்களாகக் கருதப்படும் ஜனங்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அசுத்த ஆவிகளினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்றும் நாம் நம்புகின்றோம்.

மனுக்குலத்தை ஆட்கொள்ளும் இந்த அசுத்த ஆவிகள் ஒருகாலத்தில் தேவதூதர்களாகக் காணப்பட்டு, நோவாவின் நாட்களில் பாவம் செய்த காரணமாக தெய்வீகத் தயவினின்று தள்ளப்பட்டு, அன்று முதல் ஆயிரம் வருஷம் அரசாட்சியின் மாபெரும் நாளுக்குரிய நியாயத் தீர்ப்பிற்கென்று, இருளின் சங்கிலிகளால் கட்டப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என வேறு கட்டுரைகளில் நாம் ஏற்கெனவே எழுதியுள்ளோம் (யூதா 1:6); மேலும் ஆயிரம் வருஷம் அரசாட்சியின்போது, கிறிஸ்துவாகிய இயேசுவும், சபையும் மகிமையடையும்போது, மனிதன் நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சிக்கப்படுவதற்கான வாய்ப்புப் பெற்றுக்கொள்வதோடு, இந்த விழுந்துபோன தூதர்களும் பெற்றுக்கொள்வார்கள் (1 கொரிந்தியர் 6:3). இதற்கிடையில் மனுக்குலத்தோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கும், மனிதர்கள் தங்கள் சித்தங்களை ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவர்கள் மேல் ஆதிக்கம் கொள்வதற்குமான இந்த விழுந்துபோன தூதர்களுடைய பிரயாசங்கள் இடைவிடாமல் தொடரும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிலுள்ள வேத வாக்கியங்களில் எங்கும், தேவனிடம் பயபக்தியுடன் காணப்படும் அனைவரும், ஆவியுலக ஊடகங்கள் மற்றும் ஆவியுலகக் கோட்பாடுகளின் கூட்டங்கள் மற்றும் சைத்தான் தனமாயுள்ள இந்த ஆவிகளுடன் வைத்துக்கொள்ளும் எல்லா விதமான தொடர்புகள் ஆகியவற்றிற்கு எச்சரிக்கப்படுகின்றனர். இந்த எச்சரிப்புகளை மீண்டும் மீண்டுமாக வலியுறுத்துவது நமது கடமையாக இருக்கின்றது, காரணம் முன்பு காணப்பட்டதைக்காட்டிலும் இந்த விழுந்துபோன ஆவிகளின் செல்வாக்கு/தாக்கம் இன்று மிகுந்த செயல்பாட்டில் காணப்படுகின்றது; இன்னுமாக, நம்முடைய நாட்களில் அதாவது இன்னும் கொஞ்ச காலத்திற்குள் கிறிஸ்தவ மண்டலம் முழுவதின் மேலும் வரவிருக்கும் மாபெரும் பரீட்சையின்/சோதனையின் ஒரு பாகமாக, இந்த விழுந்துபோன ஆவிகளின், அதிக வல்லமையான

செயல்பாடுகள் இன்னும் அதிகரிக்கும் என வேதவாக்கியங்கள் காட்டுகின்றது. ஐரோப்பியா அல்லது அமெரிக்காவைக்காட்டிலும் ஆஸ்திரேலியாவில் ஆவியுலக தொடர்புகளும், கோட்பாடுகளும் மிகுந்த முன்னேற்றமும், மிகுந்த ஆற்றலும் அடைந்துகொண்டு வருகின்றது என நாம் அறிந்துவருகிறோம், அதுமாத்திரமல்ல, அது எல்லா திசைகளிலும் விரைந்துப் பாய்கின்றது என்பதையும் நாம் அறிந்துவருகின்றோம்.

நம்முடைய பாடத்தில் இடம்பெறும் இச்சம்வத்தில் வரும் அசுத்த ஆவியானது, மேசியா வரும்போது சகல தீமையும் நீக்கப்பட்டு, அழிக்கப்பட்டுவிடும் என்பதை அறிந்துள்ளதுபோல் தோன்றுகின்றது. வேறு ஒரு சம்பவத்தின் பதிவு இப்படியாகத் தெரிவிக்கின்றது . . . "காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ? (மத்தேயு 8:29) . . . அதாவது மேசியா மூலம் வல்லமை வெளிப்படுவதற்கான காலம் இன்னும் எதிர்க்காலத்தில் உள்ளது என்ற செய்தியை அந்த ஆவி பெற்றிருப்பது போன்று (அ) முன்னுணர்வுகொண்டிருப்பது போன்று இவ்வசனம் வாசிக்கையில் நமக்குத் தோன்றுகின்றது . . . "எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ? என்ற வசனத்தில் இடம்பெறும் வேதனை என்ற வார்த்தையானது தண்டித்தலை, வேகமாக நடத்துதல் என்ற பொருளைக்கொடுக்கின்றது. அக்கால கட்டம்வரையிலும் தேவஆவியினால் ஏவப்பட்டு வேதத்தில் எழுத்தாளர்கள், விழுந்துபோன ஆவிகள்மேல் வரப்போகின்ற தண்டனையின் தன்மையைச் சுட்டிக்காட்டி எழுதவில்லை; மேலும் அந்தத் தண்டனையானது தங்களுக்கான அழிவாகவே இருக்கும் என இந்த விழுந்துபோன ஆவிகள் யூகித்துக் கொண்டன.

பாவ நிவாரண பலியாகிய நமது கர்த்தருடைய மரணத்தையும், தெய்வீக வல்லமையினால் உண்டான அவருடைய உயிர்த்தெழுதலையும் பார்த்த விழுந்துபோன ஆவிகள், தாங்கள் ஒரு காலத்தில் உணர்ந்துக்கொள்ளாததும், இப்பொழுது மனுக்குலத்தின் சார்பாக வெளிப்பட்டதுமான தேவனுடைய அன்பையும், தேவனுடைய வல்லமையையும் உணர்ந்துக்கொண்டார்கள்; மேலும், ஏற்றகாலத்தில் மனுக்குலம் மீது தேவனுடைய இரக்கம் வரும் என்ற கருத்தானது, விழுந்துபோன ஆவிகளின் கூட்டத்தார் மத்தியிலும், மனந்திரும்பின தூதர்கள் கூட ஏற்றக்காலத்தில் கிறிஸ்துவின் மூலம் தெய்வீக இரக்கத்தில் பங்கடைவதற்கான வாய்ப்பை அடைவார்கள் என்பது குறித்ததான நம்பிக்கை, இந்த விழுந்துபோன ஆவிகள் மத்தியிலுள்ள சிலருக்கு வந்துவிட்டது என அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகின்றார். இது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகம் என்பதை நாம் அறிவோம். அதாவது, கிறிஸ்து வெளிப்படும் போதும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போதும் விழுந்துபோன மனிதர்கள் மாத்திரமல்லாமல், விழுந்துபோன தூதர்களும் நியாயம் தீர்க்கப்படுவது (அ) பரீட்சிக்கப்படுவது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகம் என்பதை நாம் அறிவோம் (1 கொரிந்தியர் 6:3).

அசுத்த ஆவி அம்மனுஷனை விட்டு வெளியேறும்படி நமது கர்த்தர் கட்டளையிட்டார். அதாவது, அம்மனுஷனுடைய மனம் மற்றும் சரீரத்தின் மீதான ஆதிக்கத்தை விட்டுவிடக் கட்டளையிட்டார். இயேசுவினிடத்தில் காணப்படும் அதிகாரத்தை எதிர்ப்பதற்கு அந்த அசுத்த ஆவிக்கு வல்லமை இல்லாமல் இருந்தபோதிலும், அந்த மனுஷனை விட்டு போகையில், அவனுக்கு சில கஷ்டங்களைக் கொடுப்பதில் அவ்வாவியானது தடைப்பண்ணப்படவில்லை. லூக்கா 4:35-ஆம் வசனத்தில், பிசாசானது அம்மனுஷனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி விட்டுச்சென்றது என நாம் வாசிக்கின்றோம். இவ்விதமாக, தீய ஆவிகளின் கொடுமையான செயல்கள் வெளிப்படுத்தப்பட்டன. பரிசுத்தமான ஆவிகள்/தூதர்கள் இவ்விதமாக அலைக்கழித்து ஆட்டிப்படைப்பதில்லை. தேவன் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கங்களுடைய தனித்துவத்தைக் கருத்தில் கொண்டவராகவும் காணப்பட்டு, அவர்களுடைய தனித்துவத்தில் தலையிடுவதில்லை; மேலும், பரிசுத்தமான தேவ தூதர்களும் இப்படியாகத் தலையிடுவதில்லை. பிசாசுகள் மனுஷனுடைய சுயமாய்ச் சிந்திக்கும் திறனை, இல்லாமல் ஆக்கிப்போட்டு, மனுஷனுடைய (சுய) சித்தத்தை அடக்கி வயப்படுத்துவது போன்று தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு செயல்படுவதில்லை. மாறாக, ஒருவருடைய சித்தத்திற்கும், சுயமாய்ச் சிந்திக்கும் திறனுக்கும் இசைவாகவே தேவன் செயல்படுகின்றவராக இருக்கின்றார் (அவர் சித்தத்தை வற்புறுத்துகிறவர் அல்ல). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக முழுமையாக அர்ப்பணம் பண்ணின விசுவாசி, தன்னுடைய சிந்தையிலும், வார்த்தையிலும், நடத்தையிலும் கர்த்தரிடத்தில் மகிமையான உறவிற்குள் வருவதற்கு ஏற்ப அதிகமதிகமாய்ப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், சுயசித்தத்திற்கு எதிராக அவன் அங்கீகரித்துள்ள தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது குறித்த கோட்பாடுகளையோ, தெய்வீகப் போதனைகளையோ எவ்விதத்திலாகிலும் அவனால் புறக்கணிக்கப்படுமாயின், இதற்கு ஏற்ப பரிசுத்த ஆவியும், தெளிந்த புத்தியின் ஆவியும், தேவனுடைய ஆவியும் தணிந்துப் போய்விடும்; மேலும், இந்த ஆவியானது எந்த விதத்திலும் நம்மிடத்தில்/நம்மேல் திணிக்கப்படவில்லை, மாறாக

இவ்வாவி தக்கவைக்கப்பட்டு, பெருக பண்ணப்பட வேண்டுமாயின் நாம் அவைகள் மீது விருப்பம் கொண்டிருக்க வேண்டும், அவைகளைப் பற்றிப்பிடித்து வைத்திருக்க வேண்டும் மற்றும் அவைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

## ''போதகத்தைக் குறித்து ஆச்சரியமடைதல்''

நமது கர்த்தர் போதிக்கையில் அவர் பாவம், துக்கம், வலி மற்றும் மரணத்திற்கான காரணம் பற்றி விவரித்திருக்க வேண்டும். அதாவது, இவைகள் ஆதியில் கீழ்ப்படியாமையின் நிமித்தம் உண்டானவைகள் என்றும், இவைகள் சாபம் என்றும், பின்னர் தேவனுடைய ஏற்றகாலத்திலும், அவருக்குரிய வழிமுறைகளிலும் இச்சாபமானது உலகத்திடமிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்றும், தீய ஆவிகள் வஞ்சனைப் பண்ணுவதற்கும், தாக்குதல் பண்ணுவதற்கும் வல்லமையும், அதிகாரமும் இல்லாமல் அப்போது காணப்படும் என்றும், மேசியா மூலம் தேவன் வாக்களித்துள்ள ஆசீர்வாதத்தின் மகிமையான காலை வேளையில் நோய், வலி மற்றும் மரணம் யாவும் அப்புறப்படுத்தப்படும் என்றும் விவரித்திருக்க வேண்டும். இந்தப் பிரமிக்கத்தக்கப் போதனைகள், ஜனங்கள் இதுவரையிலும் வேதபாரகரிடமிருந்து கேட்டவைகளைவிட மிகவும் தெளிவாக இருந்தபடியாலும் அசுத்த ஆவியைத் துரத்தின கர்த்தருடைய வல்லமையானது ஜனங்களுக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுத்தபடியினாலும் அனைத்து ஜனங்களும் பிரமித்து நின்றார்கள். மேலும், ஜனங்கள் கடற்கரையில் நின்று தங்களுக்குப் போதித்துக் கொண்டிருப்பவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசி என்றும், ஒருவேளை மேசியாவாகக் கூட இருக்கலாம் என்றும் ஜனங்கள் போதுமான அளவு உணர்ந்துக்கொண்டார்கள்.

இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகியிருந்த போதிலும், கலிலேயாவிலுள்ள கானாவூரில் அவர் அற்புதம் செய்து வெகுநாள் சென்றிருந்த போதிலும், அப்பகுதியில் ''பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது'' எனப் போதுமான அளவு போதித்திருந்த போதிலும், இச்சம்பவமே வியாதி மற்றும் அசுத்த ஆவிகள் மீது கர்த்தருக்கு இருக்கும் அற்புதகரமான வல்லமையை அப்பட்டமாக வெளிப்படுத்தினதில், முதல் சம்பவமாக விளங்குகின்றது எனத் தோன்றுகிறது. இல்லையேல், இயேசு போதித்தவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அப்பட்டணத்து ஜனங்கள் இவ்வளவுக்கு ஆச்சரியமடைந்திருக்க முடியாது. ஆனால், அவருடைய சீஷர்களாகும்படிக்குத் தங்களுடையது அனைத்தையும் விட்டுச்சென்ற அந்த நான்கு மீனவர்கள், மற்றவர்களைக் காட்டிலும் குறைவாக பிரமிப்படைந்திருக்க வேண்டும் என்பது நிச்சயமே; ஏனெனில், அவர்கள் கானாவூரில் திராட்சரசம் அவர் உண்டுபண்ணினதைக்குறித்தும், இந்த அசுத்த ஆவி விரட்டப்படுவதற்குக் கொஞ்ச நாள் முன்பு அற்புதமான விதத்தில் மீன்கள் பிடிப்பட்டது குறித்ததுமான அறிவு அவர்களிடத்தில் இருந்ததாலேயே ஆகும்.

ஜெப ஆலயத்திலிருந்து இயேசுவும், நான்கு சீஷர்களும் புறப்பட்டுப் பேதுருவின் வீட்டிற்குள் பிரவேசித்தார்கள், அங்குப் பேதுருவின் மாமியார் கடும் ஜுரத்தினால் வியாதிப்பட்டு இருந்தாள்; அவளைக் கர்த்தர் சுகப்படுத்தினார். பிசாசைத் துரத்தின இச்சம்பவமானது, சீஷர்களுடைய மனதில் நமது கர்த்தர் வியாதிகளைச் சுகப்படுத்துவதற்கும் வல்லவர் என்பதான எண்ணங்களை உதிக்கச் செய்தது. ஆகவேதான் சீஷர்கள், ஜெப ஆலயத்திற்குப் போவதற்கு முன்பு, (அதாவது இச்சம்பவத்தைத் தொடர்ந்து, அவர்களுக்குள் நோய்களைச் சுகமளிக்கும் கர்த்தருடைய வல்லமை குறித்த எண்ணங்கள் உதிப்பதற்கு முன்பும்), அந்த ஸ்தீரியைச் சொஸ்தப்படுத்த வேண்டும் என்ற எந்த விதமான வேண்டுகோள்களையும் வைக்கவில்லை. நமது கர்த்தர் அந்த ஸ்தீரியின் கரங்களைப் பிடித்து அவளை எழுப்பி விட்டார், உடனடியாக ஜுரம் அவளை விட்டுக் கடந்துப் போயிற்று. பொதுவாக காய்ச்சல் உடைய நோயாளிகளுக்குக் காய்ச்சல் நின்றாலும், சரீர பெலவீனமும், வலுவின்மையும் காணப்படுவது வழக்கம். ஆனால் பேதுருவின் மாமியோ தனது வீட்டில் வந்த விருந்தாளியாகிய அவர்களுக்கு உடனடியாகப் பணிவிடை செய்யவும், உணவு பரிமாறவும் தக்கதாக முழுப் பெலத்துடன் காணப்பட்டாள் என்று பார்க்கின்றோம்.

## ''அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார்''

மாலை பொழுது, அதாவது சூரியன் மறையும்பொழுது நாளின் முடிவாக இருந்ததால், மாத்திரமல்ல, மாறாக யூதர்களின் வழக்கத்தின்படி ஓய்வுநாள் மாலை வேளையான சூரியன் மறையும் வேளையில் நிறைவடைவதால், இதுவே சரியான நேரம் என ஜனங்கள் கருதி, வியாதியஸ்தர்களையும், பிசாசு பிடித்தவர்களையும், கர்த்தர் விடுதலை பண்ணத்தக்கதாக அவரிடத்தில் அழைத்து வந்தார்கள். இந்தச் சொஸ்தமாக்குதல்கள் அனைத்தையும் அவர் தமது

சொந்த சத்துவத்தை, உயிராற்றலைக் கொடுத்தே செய்தார் என்பதில் நமக்கு நிச்சயமே. அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார் என்றும், வியாதிகளைச் சுமந்தார் என்றும் அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிப்பதோடு, வேறு ஒரு சொஸ்தப்படுத்தும் சம்பவத்தில் இவ்விஷயங்கள் நேரடியாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது." "அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" (மத்தேயு 8:17; லூக்கா 6:19). லூக்கா 6:19-ஆம் வசனத்தில் வரும் **வல்லமை** என்பதற்கான ஆங்கில வார்த்தை Virtue ஆகும், இதன் அர்த்தம் வல்லமை, வலிமை, உயிராற்றல் என்பவைகளாகும். இப்படியாக, நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பிற்கான உடன்படிக்கையை நிறைவேற்றினார். மேலும், இவ்விதமாக மற்றவர்களுக்கு உதவி பண்ணும் பொருட்டுக் கர்த்தர் தமது வலிமையை/சத்துவத்தைப் பயன்படுத்தின காரியமாவது அவருடைய ஊழியத்தின் முடிவு வரையிலும் தொடர்ந்தது. அதாவது, எவ்விதமான மறுப்பும் தெரிவிக்காமல், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, நம்மை அவருடைய இரத்தத்தினாலும், அவருடைய பலியாக்கப்பட்ட ஜீவியத்தினாலும் மீட்டுக்கொள்ளத்தக்கதாக, அநீதிமான்களுக்கு ஒரு நீதிமானாயும், பாவிகளுக்குத் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுப்பது வரையிலும் தொடர்ந்தது.

"அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை" (வசனம் 34) எனப் பதிவுகள் தெரிவிக்கின்றது. இதுபோலவே, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டுக்கொண்டிருந்த குறிச்சொல்லுகின்ற ஸ்திரீயையும் பவுல் கடிந்துகொள்கின்றார் (அப்போஸ்தலர் 16:17). கர்த்தர் தம்மைக்குறித்தும் தமது திட்டத்தைக்குறித்தும் பிசாசுகள் சாட்சிக் கொடுப்பதை விரும்பவில்லை என்பது எவ்வளவு தெளிவாகத் தெரிகின்றது. மீண்டும் புதுப்பிக்கப்படாத அனைவருக்கும் இது பொருந்தும். இப்படிப்பட்டவர்களுக்குச், "சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்" என்ற வார்த்தைகளே நமது கர்த்தர் கூறும் வார்த்தைகளாய் இருக்கின்றது (சங்கீதம் 50:17). கர்த்தருடைய ஸ்தானாதிபதிகளாகவும், அவருடைய வாய்க்கருவிகளாகவும் இருப்பது, கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுக்குரிய விசேஷித்த சிலாக்கியமாகும்; அது அவர்களுக்குக்கெனக் கொடுக்கப்பட்ட விசேஷித்த கனமாகும். "அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துக்கொள்ளுவார்கள்" (தானியேல் 12:10).

தேவனுக்குரிய விஷயங்களில் ஞானத்துடன் காணப்பட்டு, தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஜீவிக்க முயற்சி பண்ணுபவர்களுக்கே, தேவனுடைய உண்மையான திட்டம் குறித்ததான தெளிவான புரிந்துக்கொள்ளுதல் காணப்படும்; மற்றவர்களோ குழப்பத்தில் காணப்பட்டு இருளில் காணப்படுவார்கள். ஆகவேதான் தீர்க்கத்தரிசி, கிறிஸ்துவாகிய அபிஷேகம் பண்ணப்பட்டவருடைய முழுச் சரீரத்தைக்குறித்து, "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்......"என்று குறிப்பிடுகின்றார் (ஏசாயா 61:1). அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தவிர வேறு எவரும், தேவனுடைய செய்தியை அறிவிக்கும் போதகர்களாகக் (teacher) கருதப்படுவதில்லை; மேலும் அபிஷேகம் பண்ணப்பட்ட அனைவரும், அவர்கள் பெற்றிருக்கும் அபிஷேகத்திற்கு ஏற்ப வேதவாக்கியங்களின் நியாயமான வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில் அவர்களுடைய விருப்பம் மற்றும் வாய்ப்பிற்கு ஏற்றாற்போல் கர்த்தருடைய பிரதிநிதிகளாகவும், அவருடைய வாய்க்கருவிகளாகவும் இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றுக்கொள்வார்கள்.

அடுத்த நாள் காலையில் ஜனங்கள், தங்கள் மத்தியில் ஒரு மாபெரும் போதகர், மாபெரும் சொஸ்தமாக்குபவர் இருக்கின்றார் என்ற எண்ணத்தில் உற்சாகமடைந்தவர்களாக, இயேசுவை மீண்டும் தேடினார்கள்; ஆனால் அவரோ தாம் அடுத்த ஊர்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ண வேண்டும் என்று கூறி அதிகாலையில், இருட்டோடே வனாந்தரமான ஓர் இடத்திற்குப் புறப்பட்டு போய்விட்டார்; அதாவது அவர் தமது பிதாவுக்கடுத்த வேலைகளில் ஈடுபட வேண்டும் என்றும், முழு மந்தையின் நலனையும், தேவைகளையும் தாம் சந்திக்க வேண்டும் என்று கூறி

புறப்பட்டுப் போய்விட்டார். தெய்வீகத் தயவின் நிரூபணங்களாகிய இந்த அற்புதங்களானது கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாய் இருக்கும் அனைவரும் தம்முடைய குணங்கள் மற்றும் வேலைகளைப் பார்க்கையில், தாம் பிதாவின் பிரதிநிதி என்றும், மேசியா என்றும் நம்பிக்கை வைப்பதற்கு மாத்திரம் ஏதுவாய் இருக்க வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமாயிருந்தது என்பது நமக்கு நிச்சயமே. இந்த அற்புதங்களாகிய சான்றுகளைக் (token) கொடுத்தப் பிற்பாடு, அவர் அவ்விடத்தை விட்டுப் போய்விடுவார்; அதாவது அவ்விடத்தில் தமது அற்புதமாகிய சான்றைக் கண்டவர்கள் மத்தியில், சரியான இருதய நிலையில் இல்லாதவர்கள் மறந்துவிடவும், தங்களின் கவனத்தை இழந்துவிடவும், தங்களின் அனல், ஆர்வம் தணிந்து விடுவதற்கு ஏதுவாகவும், ஆனால் உத்தம இஸ்ரயோலர்களோ நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலமாயத் தேவன் வாக்களித்துள்ள ஆறுதலுக்காக காத்து இருப்பதற்கும், அவர் அறிவித்துள்ள இராஜ்யத்திற்காக கவனித்து, நம்பிக்கை வைத்து, காவல் காத்து, ஜெபம் பண்ணுவதற்கும் ஏதுவாகவும் அவ்விடத்தை விட்டுக் கர்த்தர் போய்விடுவார்.

இப்படியே இச்சம்பவத்திலும் கர்த்தர் நடந்து கொண்டார். கர்த்தர் தெரிந்துக்கொள்ளப்படும் வகுப்பாரை மாத்திரமே நாடுகின்றார்; அதாவது அவரை ஆவியிலும், சத்தியத்திலும் தொழுது கொள்ளுபவர்களை மாத்திரமே தேடுகின்றார்; அவர் திரளான ஜனக்கூட்டத்தாரைத் தேடவில்லை; இப்படித் தேடுவதற்கான வேளையும் இன்னும் வரவில்லை. ஏற்றகாலத்தில் குருடான சகல கண்களும் திறக்கப்படும், சகல செவிடான காதுகளும் திறக்கப்படும், மேலும் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கர்த்தரை அறிகிற அறிவு அருளப்படும், ஆனால் இப்பொழுதோ கர்த்தர் தம்முடைய மணவாட்டியின் அங்கங்களாகும் ஒரு விசேஷித்த வகுப்பாரையே தேடிக்கொண்டிருக்கின்றார்.

## "அவர் அநேகரைச் சொஸ்தப்படுத்தினார்"

கர்த்தர் தம்முடைய ஊழிய காலங்களில் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினார் என்பதில் நமக்கு ஐயமில்லை என்றாலும், அவர் பாலஸ்தீனியாவிலுள்ள அனைத்து வியாதியஸ்தர்களையும் சொஸ்தமாக்கினார் என்ற எண்ணம் நமக்கில்லை. அவருடைய ஊழியம் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதாய் இராமல், சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதாகவே இருந்தது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும் காரியமானது, கவனத்தை ஈர்ப்பதற்கும், விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், தம்மைத் தேவனுடைய விரல் எனச் சுட்டிக்காண்பிப்பதற்குமேயாகும். யோவான் 5:1-9 ஆகிய வசனங்களிலுள்ள சம்பவத்தில், அநேக வியாதிஸ்தர்கள் மத்தியில் ஒருவன் மாத்திரமே சொஸ்தமாக்கப்படுகின்றான் என்பதையும் நாம் பார்க்கின்றோம். கப்பர்நகூம் பட்டணத்திலுள்ள அனைத்து வியாதியஸ்தர்களும் சொஸ்தமாக்கப்படவில்லை என்றாலும் அநேகர் சொஸ்தமாக்கப்பட்டார்கள் எனப் பதிவுகள் தெரிவிக்கின்றது; ஆனால் அது ஒரு சிறு பட்டணம்தான், ஆயினும் மற்றப் பட்டணங்களைப் பார்க்கிலும் இப்பட்டணத்திற்கு ஆச்சரியமான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகள் அருளப்பட்டது என்று நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, அதாவது அப்பட்டணத்தின் வியாதியஸ்தர்கள் சொஸ்தமாக்கப்பட்டதன் மூலமாகவும், பிசாசு பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதின் மூலமாகவும் இப்பட்டணத்திற்குக் கிடைத்த சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான விஷயங்களிலேயே இப்பட்டணமானது வானபரியந்தம் உயர்த்தப்பட்டது என நாம் பார்க்கின்றோம்.

## "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்"

இப்பாடத்தைப் படிக்கும் அநேகருடைய மனதில், "கர்த்தரை உண்மையாய் விசுவாசிக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் ஜெபத்தின் மூலம் ஒருவரையொருவர் சொஸ்தப்படுத்திக் கொண்டவர்களாக இருக்க வேண்டும், மற்றும் ஒருபோதும் நோய்வாய்ப்பட்டவர்களாக இருக்கக்கூடாது" என்ற சிலரின் விவாதங்கள் நினைவுக்குவரும் என்பதில் ஐயமில்லை. இப்படியாக விவாதிப்பவர்கள், மாற்கு 16:17-18-ஆம் வசனங்களை ஆதாரமாய் முன்வைக்கின்றனர், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்."

மேற்கூறப்பட்டுள்ள நமது அருமையான நண்பர்கள், இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அவை பின்வருமாறு:

(1) மாற்கு 16:9 முதல் கடைசி வரையிலான வசனங்கள் வேதாகமத்தின் பழைய மூலப்பிரதிகளில் காணப்படுவதில்லை; மேலும் இவ்வசனங்கள் மாற்கு எழுதி பதிவு செய்துள்ள காரியங்களுடன் கூட்டிச்சேர்க்கபட்டுள்ளதால், இவ்வார்த்தைகள் முழுவதும் (தேவ ஆவியினால்) ஏவப்பட்டு, அதிகாரமுள்ளவைகளாக எழுதப்படவில்லை. அனைத்துக் கல்வியறிவு பெற்றவர்களும் இதை அறிந்திருக்கின்றார்கள்; மேலும் இந்தச் சேர்க்கப்பட்ட வசனங்களை முன்வைப்பவர்களில் பெரும்பாலானோர், இவ்வார்த்தைகள் சேர்க்கப்பட்டவைகள் என்பது தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளத்தக்கதாக போதுமான அளவு புத்திசாலிகளாகவே இருக்கின்றார்கள் என நாம் அனுமானிக்கின்றோம். அப்படி இருந்தும் வேதவாக்கியங்கள் அல்ல என்று தாங்கள் அறிந்திருக்கிறவைகளை வேதவாக்கியங்கள் என இவர்கள் முன்வைப்பது ஏன்?

(2) இந்த வார்த்தைகள் கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்தில் பொருந்தக்கூடியவைகள் அல்ல. மேலும் கர்த்தருடைய பின்னடியார்களுக்கு அவ்வார்த்தைகள் பொருந்தும் என முன்வைப்பவர்களும் கூட, தாங்கள் அவைகளை நம்பவில்லை என்பதையும் கூட வெளிக்காட்டுகின்றனர். இவர்களால் சர்ப்பங்களைக் கைகளில் எடுக்க முடியாது, மேலும் சாவுக்கேதுவான யாதொன்றையும் குடிப்பதற்கு அஞ்சுகின்றனர், இவர்களால் பிசாசுகளைத் துரத்தவும் முடிகிறதில்லை, மேலும் வியாதியஸ்தர்களின் மேல் தங்கள் கைகளை வைப்பதன் மூலம் இவர்கள் அனைவராலும் சொஸ்தப்படுத்த முடிகிறதுமில்லை.

நமது கர்த்தருடைய அற்புதங்கள் ஜனங்களுக்குச் சுட்டிக்காட்டும் குறிப்புகளாக இருந்ததோடல்லாமல், இறுதியில் பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்கான மாபெரும் பிரமாண்டமான விதத்தில் அவர் பயன்படுத்தப் போகின்ற வல்லமையையும் கூடச் சித்தரித்துக் காட்டுகின்றது. பதிவுகள் தெரிவிக்கிறவைகளை வைத்துப் பார்க்கையில் கர்த்தர் தம்முடைய வல்லமையைத் தமது பின்னடியார்கள், அதாவது தமது சீஷர்கள் மீது பயன்படுத்தவில்லை. அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதே அவர்களுக்கான அழைப்பாய் உள்ளது; மேலும் சரீர பிரகாரமான ஆரோக்கியத்தையும், குணமாக்குதலையும் நாடுவதற்குப் பதிலாக இவர்கள் சத்தியத்தின் ஊழியத்தின் பொருட்டுத் தங்கள் சகோதர சகோதரிகளுக்காக தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தருடைய பின்னடியார்கள் சரீர பிரகாரமான ஆரோக்கியம் பெற்றுக்கொள்வதற்கும், சோதனைகள், பிரச்சனைகள், பாரங்கள், வலிகள் மற்றும் வேதனைகளிலிருந்து விடுதலைப் பெற்றுக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டுள்ளனர் என்ற கருத்தைப் பெற்றிருப்பவர்கள் தவறான கருத்தையே பெற்றிருக்கின்றார்கள். தேவ பக்தியுடன் கூடிய ஜீவியமும், சமாதானமுடைய இருதயமும், சரீர ஆரோக்கியத்திற்கு ஆதரவானவைகள் என்பது உண்மைதான்; ஆயினும் இராஜாவினுடைய ஊழியத்தைச் சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் செய்கையில் சரீர பிரகாரமாக கொஞ்சம் களைப்பும், சோர்வும் ஏற்படுவதும் உண்மைதான்; சில சமயம் சரீர பிரகாரமான அசௌகரியங்களும் கூட ஏற்படுகின்றன; மேலும் இவ்விதமான சரீரப்பிரகாரமான பாதிப்புகள் நம்முடைய பலியின் ஒரு பாகமாகவும், நம்முடைய நன்மைக்கு ஏதுவாக தேவன் மாற்றிப்போடும் நம்முடைய அனுபவங்களின் ஒரு பாகமாகவும் கருதப்பட வேண்டும்.

கர்த்தருடைய சிட்சிக்கும் கோலினுடைய துன்பங்கள், வியாதிகள், முதலானவைகள் மூலம் அவருடைய கரங்களிலிருந்து மிக அருமையான ஆசீர்வாதங்களைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் பெற்றுக்கொண்டுள்ளனர். இவ்விதமாக சாபத்தின் அம்சமாகிய சில தீமைகள் அநேக தருணங்களில், கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கும், தங்களின் அனுபவங்கள் மூலம் வரும் படிப்பினைகளைச் சரியான விதத்தில் கற்றுக்கொள்பவர்களுக்கும், நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டுள்ளது. பரலோகத்தில் எவ்வித வியாதியும் இருப்பதில்லை; மேலும் சாபங்களையெல்லாம் ஆயிரம் வருஷம் அரசாட்சியானது மாற்றிப்போட்டு, கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் கீழ்த் தேவனை ஏற்றுக்கொள்பவர்களுக்கு பூரணத்தையும், இழந்த அனைத்தையும் திரும்பப் கொடுத்தப் பிற்பாடு மற்றும், கீழ்ப்படியாதவர்கள் அனைவரையும் அழித்த பிற்பாடு எவ்விதமான வியாதியும் இருப்பதில்லை. ஆனால் இதற்கான காலம் இன்னும் வரவில்லை; நாம் இன்னமும் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறவர்களாக இருக்கின்றோம்; ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாக வந்தவைகளின் நிமித்தம் நமக்குப் பங்காக சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் பெலவீனங்கள் இன்னமும் காணப்படுகின்றது. கர்த்தர் நமக்குச் சில நோய் எதிர்ப்புச் சக்தியை (immunity) அல்லது விசேஷித்த விதமான புத்துணர்வை அவருடைய ஞானத்தின்படியேயும், நாம் செய்ய வேண்டும் என்று அவர் நமக்கு நிர்ணயித்துள்ள வேலைக்குரிய தேவைகள் பற்றியதான

அவருடைய அறிவின்படியேயும் நமக்கு அருளுவார். ஆனால், அதற்கென்று நாம் பூமிக்குரிய தயவுகளையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் (immunity) அவரிடத்தில் கேட்டு நமது பலியைப் பின்வாங்கிப்போட முயற்சிக்கக்கூடாது. மாறாக, பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பூமிக்குரியவற்றில் நல்லவைகளைக் கொடுக்க விருப்பம் கொள்வதைப் பார்க்கிலும், நமது பிதாவாகிய தேவன் தமது பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுக்க அதிக விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்பதை நாம் உணர்ந்தவர்களாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையே கேட்க வேண்டும்.

பரிசுத்த ஆவி நமக்குக் கொடுக்கப்படும்போது, அது படிப்படியாக ஒழுக்க ரீதியிலான (அ) சரீர ரீதியிலான சோதனைகள் மற்றும் பாடுகளின் மூலம் அன்பு, சாந்தம் மற்றும் பொறுமையில் வளருவதற்கான படிப்பினைகளைப் படிப்படியாகக் கொடுக்கின்றது. வேதவார்த்தைகள் பற்றின அறிவினாலும், அதன் ஆவியினால் ஆட்கொள்ளப்படுவதினாலும் வளரும், தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள், தங்களுக்கு நன்மையாக இருக்கும் எனக் கர்த்தர் காணும் எந்தப் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் கர்த்தர் மேல் விசுவாசம் வைப்பதிலும், கர்த்தருடைய ஞானத்தை ஒத்துக்கொள்வதிலும் சந்தோஷம் கொள்வார்கள். நமக்கான விசேஷித்த அனுகூலங்கள் ஆவிக்குரியவைகளேயாகும்; மேலும் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கப்பர்நகூமிலோ அல்லது நமது கர்த்தருடைய ஊழிய நாட்கள் முழுவதிலுமோ ஆரம்பிக்காமல், அவர் பரத்திற்கு ஏறி, பிதாவினிடத்திலிருந்து தமது பரிசை/பலனையும், தமது பின்னடியார்களை ஜெநிப்பித்தலின் ஆவியினால் புதிய சுபாவத்திற்குள் கொண்டுவருவதற்கான அதிகாரத்தையும் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளன்றே ஆரம்பித்தது.

நாம் அப்பங்களையும், மீன்களையும், சரீர பிரகாரமான சுகங்களையும் நாடாமல் இருப்போமாக. ஏனெனில், இவைகளையெல்லாம் புறஜாதிகளே நாடுகின்றார்கள்; மாறாக, நாம் ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும், பலத்தையும், வல்லமையையும், தெய்வீக ஞானம் மற்றும் அன்பு நமக்குக் கூட்டி வழங்கும் சகல பூமக்குரியவைகளையுமே நாடக்கடவோம்.

**ஆமென்!**

---

# “பாவமன்னிப்பு”
## மாற்கு 2:1-12

“பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு.” -(வசனம் 10)

நம்முடைய கடந்த பாடத்தின் சம்பவத்திற்குப் பின்னர், நமது கர்த்தர் கலிலேயாவிலுள்ள மற்றப் பட்டணங்களுக்குச் சென்று பிரசங்கம் பண்ணின பிற்பாடு மீண்டும் கப்பர்நகூமுக்கு வந்தார். கப்பர்நகூம் இப்பொழுது அவருடைய சொந்த ஊர் ஆகிவிட்டது (மத்தேயு 4:13). அவர் வீட்டில் இருக்கின்றார் என ஜனங்கள் கேள்விப்பட்டபோது, அவ்வீட்டிற்கு வந்து விட்டார்கள். அக்காலக்கட்டத்தில் நடுத்தர நிலையிலுள்ள ஜனங்களின் வீடு ஒரே ஒரு அறையைக் கொண்டதாகக் காணப்பட்டது; மேலும் அதன் அளவு 20x40 அடியாகவும் காணப்பட்டது; மேலும் கூரையானது கனமுள்ள மரத்தண்டுகளினால் அமைக்கப்பட்டிருந்தது; இன்னுமாக இம்மரத்தண்டுகளின் மேல் மரப்பலகைகள் அல்லது கற்பலகைகள் வைக்கப்பட்டு, அவைகள் முற்றிலும் மண் அல்லது புல் கலந்த புல்பத்தைகளால் பூசப்பட்டுக் காணப்படுகின்றது. வெளிபுறத்தில் வைக்கப்பட்டிருக்கும் படிக்கட்டுகளின் மூலம் இக்கூரை பகுதிக்கு ஏறிப்போய், கோடைக்காலங்களில் அதை உறங்குவதற்கான இடமாகப் பயன்படுத்தவது வழக்கமாயிருந்தது.

இயேசு ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசி என்றும், அவரிடத்தில் அற்புதமான வல்லமை இருக்கின்றது என்றுமான உண்மைகளினால் சமீப காலத்தில் உணர்வடைந்த ஜனங்களாகிய தமது ஊராருக்கு இயேசு பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். இயேசு நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்யம் குறித்தும், அது சமீபித்துள்ளது, அதாவது வாசலருகே வந்துவிட்டது என்பது குறித்தும், அந்தச் செய்தியையும் அதன் ஆசீர்வாதங்களை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள விருப்பமாயிருக்கிறார்களா என்றதான கேள்வி குறித்தும்தான் பிரசங்கித்து இருப்பார் என்பதில் ஐயமில்லை. இத்தருணத்தில் முற்றிலும் உதவியற்ற நிலையில் காணப்பட்ட ஒரு முடக்குவாதமுற்றவனை நான்கு பேர் படுக்கையில் எடுத்துக்கொண்டு, அவன் வியாதி சொஸ்தமடைய வேண்டும் என்ற நோக்கத்தில் வீட்டிற்கு வந்தார்கள். இவனுடைய இயலாமை மற்றும் உதவியற்ற நிலைமை காரணமாகவே, இயேசு கப்பர்நகூமிலுள்ள அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தின முந்தின தருணத்தில் இயேசுவினிடத்தில் வந்து சொஸ்தமடைய இவனால் முடியாமல் போயிற்று. இப்பொழுதோ இவன் நண்பர்களையும், உதவியாளர்களையும் பெற்றிருந்தபடியால், இவனால் இயேசு இருக்கும் இடத்திற்கு வந்த போதிலும், இவனால் அவர் அருகாமையில் போக முடியவில்லை, காரணம் ஜனங்கள் இவனுக்கு இடம் விட்டு ஒதுங்கி வழி கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

இவனை இவ்வளவு தூரம் அழைத்துக் கொண்டு வந்த இவனுடைய விசுவாசமானது, இயேசுவின் அருகாமையில் செல்வதற்கான வழி ஏதாவது கிடைக்கும் என்றும் அவனுக்குள் உறுதியாய்க் காணப்பட்டது. ஒருவழியாக இவன் வீட்டின் கூரைக்கு எடுத்துச்செல்லப்பட்டான், பின்னர் கூரையின் ஒரு பகுதியிலுள்ள மண் தோண்டியெடுக்கப்பட்டு, மரப்பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டு, இறுதியாக ஆங்காங்கே கிடைத்த கயிறுகளைப் பயன்படுத்தி, இவன் இயேசுவுக்கு அருகாமையில் அவருடைய பார்வை படத்தக்கதாக கீழே இறக்கிவிடப்பட்டான். கர்த்தருடைய சொஸ்தப்படுத்தும் வல்லமையின் மீது இவனுக்குப் பலமான விசுவாசம் காணப்பட்டதோடல்லாமல், தான் இவ்விதமாக முரட்டுத்தனமாக உள்ளே நுழைந்ததற்கு இயேசு கோபம் கொள்ளாமல், பொறுமையோடு காணப்பட்டு, தன்னுடைய தேவையின் ஆழத்தை உணர்ந்துக்கொள்வார் என இயேசுவினுடைய பரந்த மனப்பான்மை மற்றும் நற்குணங்களின் மீதும் இவனுக்குப் பலமான விசுவாசம் காணப்பட்டது.

இயேசுவும் அவர்கள்மேல் குற்றம்சாட்டுவதற்குப் பதிலாகவும், கைதுச் செய்வேன் என்று பயமுறுத்துவதற்குப் பதிலாகவும், அவர்களுடைய முரட்டுத்தனமான செய்கைகளுக்காக அவர்கள்மேல் குற்றம் சுமத்துவதற்குப் பதிலாகவும், அவர்களிடத்தில் வெளிப்பட்ட விசுவாசத்தில் மிகவும் உவகைக் கொண்டு அவனுடைய குறுக்கிடுதலைப் பொருட்படுத்தாமல், தமது அழையாத விருந்தாளியாகிய அவனை மிகுந்த இரக்கத்துடன் வரவேற்று, “மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன” என்று கூறினார். ஒருவேளை நோயுற்ற அந்த இளைஞன், சொஸ்தமடைவதற்கான எதிர்ப்பார்ப்புக் கொண்டிருந்ததைக் காட்டிலும், அவன் அவனுடைய

பாவங்களைக்குறித்தும், அப்பாவத்திற்கான மன்னிப்பைக்குறித்தும் அக்கறைச் செலுத்தாமல் இருந்ததுபோல் தோன்றுகின்றது; எது எப்படி இருப்பினும், இங்கு நமது கர்த்தர் பிரதானமானதும், முக்கியத்துவம் உள்ளதுமான விஷயத்தை முன்வைத்தார். நமது கர்த்தருடைய பிரதானமான வேலை, பாவம் சுமப்பதும், போதிப்பதுமேயாகும், மேலும் தற்காலத்தில் அவர் செய்து கொண்டிருக்கும் சொஸ்தப்படுத்தப்படும் வேலைகளானது, போதிக்கப்படும் பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவே நிகழ்த்தப்பட்டன.

## "ஞானமுள்ள மற்றும் ஞானமற்ற கவனிப்பு"

இயேசு பேசினவைகளையும், செய்கின்றவைகளையும் கவனிப்பதில் அங்கிருந்த ஜனங்கள் கவனமாயிருந்தார்கள். இந்த ஜனங்கள் மத்தியில், ஜனங்களால் அதிகாரமுடையவர்களாக பார்க்கப்படுகின்றவர்களும், நியாயப்பிரமாணம் குறித்து நன்கு அறிந்தவர்களுமாகிய வேதபாரகரில் சிலரும் காணப்பட்டனர். இவர்களும் மற்றவர்களைப் போன்று இயேசுவின் போதனைகள் மேலும், ஆச்சரியமான அற்புதங்கள் மேலும் கவரப்பட்டவர்களாக, இயேசுவின் வார்த்தைகளையும், கிரியைகளையும் கவனித்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது இவர்கள் அவரிடத்தில் ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்தார்கள்; அதாவது தேவனுக்கு மாத்திரமே உரியதாகக் காணப்படும் ஓர் அதிகாரத்தையும், ஒரு வல்லமையையும் இயேசு உரிமையின்றி தமக்கென எடுத்துக்கொண்ட குற்றத்தைப் பார்த்தனர். இந்த ஓர் எண்ணத்தைத் தூண்டும் விதமாகவே இயேசு இவ்வார்த்தைகளைச் சொல்லி இருக்க வேண்டும் என நாம் அனுமானிக்கின்றோம். அவர் அவர்களுடைய இருதயங்களை உணர்ந்துக்கொண்டவராக மாற்கு 2:8, 9 ஆகிய வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். அதாவது "நீங்கள் நம்புவதற்கு எது எளிதாக இருக்கும்? என்னால் பாவங்களை மன்னிக்க முடியும் என்பது நம்புவதற்கு உங்களுக்கு எளிதாக இருக்கின்றதா? அல்லது இவன் பாவங்கள் காரணமாக இவனுக்கு உண்டானவற்றை என்னால் சொஸ்தப்படுத்த முடியும் என்பது உங்களுக்கு நம்புவதற்கு எளிதாக இருக்கின்றதா? மேலும் பாவங்களை மன்னிப்பதற்கான என்னுடைய அதிகாரத்தை நிரூபிப்பதற்காக நான் இந்தச் சொஸ்தமாக்குதலைச் செய்தேன். மேலும் நான் செய்யும் இக்காரியமானது நான் தேவதூஷணம் சொல்லவில்லை என்பதற்கும், எனக்குக் கொடுக்கப்படாத உரிமையை நான் எனக்கு உரிமையாக்கிக்கொள்ளவில்லை என்பதற்கும், நான் பிதாவின் விசேஷமான பிரதிநிதி என்று சொல்லுவதின் மூலம் நான் என்னையே பிதாவாக தகாதவிதமாய்க் காட்டிக்கொள்ளவில்லை என்பதற்கும் சாட்சியாக விளங்கும் என்ற விதத்தில் இயேசு கூறினார். பின்னர் முடக்குவாதத்துடன் காணப்பட்ட அந்த இளைஞனை நோக்கி "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 2:11).

அந்த மனுஷன் எழுந்து நின்று, சற்று நேரத்திற்கு முன்னதாக ஜனங்களுக்கு முன்பாக, தான் கிடத்தப்பட்டிருந்த படுக்கையை எடுத்து சென்ற போது, ஜனங்கள் ஆச்சரியமடைந்து, தேவனை மகிமைப்படுத்தும் விதமாக, "நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை" என்றார்கள், மேலும் "அதிசயமான காரியங்களை இன்று கண்டோம்" என ஜனங்கள் கூறினதாக லூக்கா, தனது சுவிஷேசத்தில் பதிவு செய்துள்ளார் (லூக்கா 5:26). அவர்கள் மேசியா தமது இராஜ்யம் குறித்து விவரிப்பதையும், பாவங்களை மன்னிப்பதற்கான தமது வல்லமை குறித்து அறிவிப்பதையும், அந்த வல்லமையை ஓர் அற்புதத்தின் வாயிலாக விளக்குவதையும் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆகையால் தேவனுடைய இராஜ்யம் உடனடியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும், அதன் விளைவாக முழு உலகத்தின் மீது தெய்வீகத் தயவு வந்தடைந்து, இனிமேல் எந்த நோயும், வலியும், சாவும், அழுகையும், பாவமும், மரணமும் இல்லை என்ற நிலை அடையும் வரையிலும் முழு உலகத்தின் மீது திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் பெருக வேண்டும் என்றும் அவர்கள் விரும்புவார்கள் அல்லவா. எனினும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் சீர்த்திருத்தலின் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக ஒரு குறிப்பிட்ட வேலை நிறைவேற வேண்டியுள்ளது, அதாவது முதல் காரியமாகத் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய, சிறுமந்தை, அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி தெரிந்துக்கொள்ளப்பட வேண்டும். தெய்வீக ஏற்பாட்டின் படியான இவர்களது எண்ணிக்கையை இஸ்ரயேலர்களால் நிரப்ப முடியவில்லை. ஆகவே கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, தேவனுடைய தயவானது, தெரிந்துக்கொள்ளப்பட வேண்டியவர்களின் மீதமான எண்ணிக்கையை நிறைவு செய்யும் வண்ணமாக மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து, புறஜாதிகளுக்குக் கடந்து போயிற்று.

இந்தத் தெரிந்துக்கொள்ளப்படுதல் காரியமானது கிட்டத்தட்ட முடியும் தருவாயில் வந்துள்ளது என்பது நமது எதிர்ப்பார்ப்பாயும், நமது நம்பிக்கையாயும் இருக்கின்றது. இன்னுமாக

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது சீக்கிரத்தில், கிறிஸ்துவினுடைய சபையை முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் கனம், மகிமை, அழியாமை மற்றும் இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்துவத்தை அடையச் செய்யும் என்பதும், அதன் பிற்பாடு பூமியின் குடிகள் அனைத்தின் மீதும் இராஜ்யத்தின் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் கடந்துவரும் என்பதும் நமது எதிர்ப்பார்ப்பாயும், நமது நம்பிக்கையாயும் இருக்கின்றது.

பாவமும், அதன் மன்னிப்புச் சார்ந்த விஷயங்களே நமது இந்தப் பாடத்தின் சாராம்சமாக இருக்கின்றபடியால், இப்பொழுது அதன்மேல் நமது கவனத்தை நாம் திருப்புவோமாக.

வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்ற பிரகாரம் பாவம், மனுக்குலம் அனைவரிலும் காணப்படுவது மாத்திரமல்லாமல், பாவத்தைப்பற்றின உள்ளுணர்வும் பரவலாகவே காணப்படுகின்றது. அநீதியான அனைத்தும் பாவம் என்றும், பூரணமற்ற அனைத்தும் பாவம் என்றும் வேதாகமம் முன்னிறுத்தும் காரியங்களை இன்று உலக ஜனங்களும் பொதுவாக உணர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றார்கள். நியாயப்பிரமாணத்தின் கீழ்க்காணப்படும் யூதர்களும் கூட, நியாயப்பிரமாணம் முன்வைக்கும் விஷயங்களைக் கைக்கொள்ள முடியாததை உணர்கையில், தாங்களும் பாவிகள் என்றும், நியாயப்பிரமாணத்தை மீறினதால் தாங்களும் பாவிகள், அக்கிரமக்காரர்கள் என்றும் நேர்மையாய் ஒத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுகின்றனர். இன்னும் மேலான தளத்திலுள்ள தேவனுடைய பிரமாணங்களைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பதினால் இவர்கள், “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு உள்ளத்தோடும், முழு இருதயத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு கூருவாயாக என்றும், நீ உன்னை நேசிப்பது போல உன் அயலானையும் நேசிப்பாயாக” என்றதுமான இவர்களுக்குரிய பூரண பிரமாணத்தோடு தங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், இவர்களால் இன்னும் அதிகமாக மற்றவர்களைக் காட்டிலும், தங்கள் சொந்த பெலவீனங்களையும், குறைபாடுகளையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆனால் யூதர்களுடைய பிரமாணமோ அல்லது கிறிஸ்தவர்களுடைய பிரமாணமோ, போதனைகளோ இல்லாதவர்களிடம் போதுமானளவு மனசாட்சியும், மற்றும் மனிதனுடைய சிருஷ்டிப்பின் போது அவனிடத்தில் எழுதப்பட்டு, வீழ்ச்சியின் 6000 வருடக்காலத்தின் விளைவாக அதிகம் தடயம் இல்லாமல் போயிருப்பினும், போதுமானளவுக்கு கொஞ்சம் ஆதி பிரமாணம் இன்னமும் காணப்படுகின்றது; மேலும் இதன் மூலம் அவர்கள் தங்களிடத்தில் பெலவீனங்கள்/குறைப்பாடுகள் இருக்கின்றது என உணர்ந்துக்கொள்கின்றனர்; மேலும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்ற பிரகாரமாக இவர்கள் தங்களுக்கு முன்பாக வைத்திருக்கும் நீதியின் கொள்கைகள் பொறுத்த விஷயத்தில் தாங்கள் பாவிகள் என்றே ஒப்புக்கொள்கின்றனர்; ஆனால் சிலசமயம் இவர்கள் தங்கள் தவறுகளுக்குச் சாக்குப்போக்குச் சொல்கிறவர்களாய் இருந்தாலும், மற்றப்படி இவர்கள் தங்கள் தவறான பாவ செயல்களைத் தெளிவாய் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர்.

கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நமக்கான படிப்பினைகள், பெருகுகையில், பாவத்தைப் பற்றின நமது உணர்ந்துக்கொள்ளுதல் அதிகரிக்கும் விஷயம் குறிப்பிடத்தக்கதான காரியமாகும். அதாவது தீமை செய்ய நிறுத்தி, நன்மை செய்ய நாம் கற்றுக்கொள்ளும் அளவிற்கு ஏற்ப பாவத்தைப் பற்றின உணர்ந்துக்கொள்ளுதல் நமக்குள் அதிகரிக்கின்றது. இப்படியாக மிகுந்த வளர்ச்சியடைந்த பரிசுத்தவான், மிகவும் சீர்க்கேடான நிலையில் காணப்படும் பாவியைக் காட்டிலும் பாவத்தைக் குறித்த தெளிவான புரிந்துக்கொள்ளுதலும், பாவத்தின் மீது மிகுதியான வெறுப்பும் கொண்டிருப்பான். தேவன் பாவத்தை வெறுக்கின்றவராகவும், அதற்கு இசைவாக இருக்க முடியாதவராகவும் காணப்படுகின்றார். தேவன் பாவத்திற்கு எதிரான தமது ஆணையையும், தமது தீர்ப்பையும், தமது சட்டத்தையும் விதித்துள்ளார்; மேலும் பாவம் முற்றிலும் வேரோடே அழிக்கப்படும் என்றும், பாவத்தை விரும்பி, துணிகரமுடன் பாவத்தைச் செய்பவர்கள் பாவத்தின் கூட்டாளிகளாகக் கருதப்பட்டும், பாவத்தோடு அழிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்துள்ளார்.

பாவத்தைக்குறித்து நாம் அதிகமதிகமாய்ப் பார்க்கும்/தியானிக்கும்போது, அதன் மாசுபடுத்தும் தன்மை குறித்தும், அதன் அழிக்கும் தன்மைகள் குறித்தும் அதிகமதிகமாய் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது, இன்னுமாகப் பாவத்தினிமித்தம் மனுக்குலத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கின தெய்வீக நீதியைக்குறித்தும் நம்மால் அதிகமாக உணர்ந்துக்கொள்ள முடிகின்றது (ரோமர் 8:3). நீதியைக்குறித்தும், சத்தியம், பரிசுத்தம், தூய்மையைக்குறித்தும் நமது புரிந்துக்கொள்ளுதல்கள் மிகுந்த முன்னேற்றத்தில் காணப்படும்போது, பாவம் குறித்ததான தெய்வீகக் கண்ணோட்டத்தை நாமும் அதிகம் புரிந்துக்கொள்ளப்பட உதவப்படுவோம், மேலும் பாவம் மற்றும் பாவிகளுக்கு எதிரான கர்த்தரையும், அவரது தீர்ப்பையும் குறித்து, “கர்த்தாவே, தேவரீருடைய வழிகள் நீதியும்

சத்தியமுமானவைகள் என்று நாமும் சொல்லுகிறவர்களாய்க் காணப்படுவோம் (வெளிப்படுத்தல் 15:3).

## ''தெய்வீக இரக்கத்தின் செயல்பாடு''

நம்முடைய இனத்திற்கு எதிராக மரணத் தண்டனை தீர்ப்பு வழங்கின தெய்வீக நீதியைக் குறித்ததான அதிகமான புரிந்துக்கொள்ளுதலுக்குள் நாம் வர வர, நம் மீதான தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் குறித்ததான புரிந்துக்கொள்ளுதலுக்கும் நாம் அதிகமாய்க் கடந்து வருவோம், மேலும் ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்பதின் நிமித்தம் நாம் அதிகமதிகமாய் மகிழ்ச்சிக்குள்ளும் கடந்து வருகின்றோம். தேவனும் இப்படி ஒருவனும் கெட்டுப்போகக்கூடாது என்று சித்தம் கொண்டிருப்பதினால், அனைவரும் தம்மிடத்திற்குத் திரும்பி வந்து ஜீவன் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதாவது நித்தியஜீவன் பெற்றுக்கொள்ளத்தக்கதாக போதுமான அளவு ஆழமும், போதுமான அளவு உயரமும், போதுமான அளவு அகலமும் உள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இரக்கத்தினுடைய இந்த ஏற்பாடானது பாவத்தைக் கண்மூடிக் கொண்டு அனுமதித்துவிடுவதுமில்லை, அதேச்சமயம் பாவியும், இந்தப் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு அனுமதிப்பதுமில்லை. மீட்கப்படுகிறவர்கள், தங்கள் விழுந்துபோன நிலைமையையும், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மரணத் தண்டனையில் விளங்கும் நீதியையும், தாங்கள் விடுவிக்கப்படும் காரியமானது தெய்வீக இரக்கத்தினாலே உண்டாகிறது என்பதையும் புரிந்துக்கொண்டவர்களாய் இருப்பது அவசியமாகும். இந்தப் பாடங்களை அவர்கள் (மனுக்குலம்) கற்றுக்கொள்ளாதது வரையிலும், இவர்களால் தேவனால் ஏற்பாடு செய்யப்பட்டவைகளை ஒருபோதும் புரிந்துக்கொள்ள முடியாது. தேவன் அவர்களுக்கு நித்தியஜீவன் கொடுப்பதற்காக முன்வைத்துள்ள நிபந்தனைகளையும் புரிந்துக்கொள்ள முடியாது; அதாவது தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, மன்னிப்பு அடைவதும், அவருக்கும், அவருடைய நீதியின் கொள்கைகளுக்கும் கீழ்ப்படிவதும் ஆகியவைகளே நித்தியஜீவன் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் ஆகும்.

## ''வேறே நாமம் கொடுக்கப்படவில்லை''

நமது இனத்தை மீட்பதற்காக, பரம பிதா ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார், மேலும் அதை அவர் தமது வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ளார்; மேலும் இத்திட்டத்தின் வாயிலாக அவர் அனைவருக்கும் இரக்கத்தை அருளுவார், எனினும் இயேசுவின் மூலம், அதாவது, ''அவருடைய இரக்கத்தின் மீதான விசுவாசத்தின் மூலமே இந்த இரக்கம் வந்தது'' என்று அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. இப்படி ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில் வேறு வழியில்லை (ரோமர் 3:25). மேலும் இது பிதாவினிடத்தில் வருகின்ற ஒவ்வொருவரும், தான் ஒரு பாவி என்றும் தன்னுடைய சொந்த பாவத்திற்கான தண்டனையைத் தன்னால் நிவர்த்தி செய்துகொண்டு ஜீவிக்க முடியாது என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும்; இன்னுமாக தனக்குண்டான இரட்சிப்பானது கிறிஸ்துவின் வழியாகச் செயல்பட்ட தெய்வீக இரக்கத்தினாலேயே ஆகும் என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது; மேலும் இது மீட்பராகிய இயேசு பாவிகளுக்கும், தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்து நியமிக்கும் நிபந்தனைகள் முழுமையாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் சம்மதிக்கபட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. யாரெல்லாம் உண்மையாக பாவத்திற்காக மனம் வருந்தி, தேவனிடத்திற்குத் திரும்பும்படிக்குக் கிறிஸ்து அளிக்கும் உதவிகள், போதனைகள் மற்றும் வழிநடத்துதலிகளின் கீழ்த் தங்களால் முடிந்த மட்டும் பிரயாசம் எடுக்கின்றார்களோ, அவர்கள் எல்லோரையும் பூரண நிலைமைக்கும், தேவனுடன் முழுமையான உறவு நிலைமைக்கும் கொண்டு வருவதற்கு உதவி செய்வதாக கிறிஸ்து முன்மொழிகின்றார். இப்படிப்பட்டவர்களுக்கு மாத்திரமே, அதாவது உண்மையாய்ப் பாவத்திற்காக மனம் வருந்துகிறவர்களுக்கும், அவருடைய உதவி, வழிநடத்துதல் மற்றும் போதனைகளின் கீழ்க் காணப்பட்டு முடிந்தமட்டும் பிரயாசம் எடுப்பவர்களுக்கும் மாத்திரமே, பூரண நிலைமை அருளப்படும். இப்படிப்பட்டப்பட்டவர்கள் மாத்திரமே, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கி கொண்டவர் மூலம் உண்டாகும் மீட்பின் மூலமாகவும், அவருடைய உதவியின் மூலமாகவும் நித்தியஜீவனை அடைவார்கள்.

## ‘‘பாவங்கள் நிவர்த்திச்செய்யப்படுதல்/போக்கப்படுதல்’’

பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படுகின்ற விஷயத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிறைவேறும் என்று வேத வாக்கியம் நமக்கு நிச்சயம் அளிக்கும் காரியங்களுக்கும், தற்காலத்தில் தேவையான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் காட்டும் அனைவராலும், தற்காலத்தில் அனுபவிக்கப்படும் பாவங்கள் மன்னிக்கப்படும் காரியங்களுக்கும் இடையில் மாபெரும் வித்தியாசம் இருப்பதை இங்குக் காட்டுவது நலமாயிருக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சம்பவிக்கும் பாவ நிவர்த்தியானது, முதலாவது சபைக்குச் செய்யப்படும் காரியமாக இருக்கின்றது; அதாவது சபை முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய மகிமையான ஆசீர்வாதங்களில் பங்கடையும் சமயம் முதல், அவர்களிடத்தில் பாவத்திற்கான எவ்விதமான சுவடுகளும் இல்லாமல் ஆக்கப்படும். தற்காலத்தில் சபை ஜனங்கள் உண்மையில் பூரணமற்றவர்களாகவும், குறைபாடு உடையவர்களாகவும், பாவத்தின் தடயங்கள் உள்ளவர்களாகவுந்தான் காணப்படுகின்றனர்; மேலும் இவர்களுக்கு இலவசமாய் அருளப்பட்டுள்ள கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால், இவர்கள் தொடர்ந்து மூடப்பட்டுக் காணப்பட வேண்டிய அவசியத்திலும் காணப்படுகின்றார்கள். ஆனால் இவர்களுக்கு உயிர்த்தெழுதலின் மாற்றம் சம்பவிக்கும்போது, பாவத்தின் சகல கறைகளும் இவர்களிடமிருந்து போய்விடும். அப்போஸ்தலரால் விவரிக்கப்பட்டுள்ளது போன்று கனவீனத்தில் விதைக்கப்பட்டது, மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டது, பலமுள்ளதாய் எழுந்திருக்கும், ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரமாய் எழுந்திருக்கும். பிற்பாடு அவர்களுக்கு நீதி தரிப்பிக்கப்பட்டதாக எண்ணப்பட வேண்டியதில்லை, அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே முற்றிலும் பூரணமுள்ளவர்களாகவும், முற்றிலும் நீதியுள்ளவர்களாகவும் காணப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:42-44).

உலகத்தின் பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படும் காரியமானது உடனடியாகவோ, ஒரு நொடி பொழுதிலோ, கண் இமைக்கும் நேரத்திலோ நடக்காமல், படிப்படியாக ஆயிரம் வருஷம் யுகம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும் காரியமாகும். ஒவ்வொரு மனிதனும் பாவத்தை உணர்ந்து, இராஜ்யத்தின் சட்டங்களுக்கு உட்பட்ட நிலையில் செயல்படும்போதும், நீதியின் வழியிலும், பரிசுத்தத்தின் பெரும்பாதையான வழியிலும் அவன் ஏறெடுக்கும் பிரயாசங்களுக்கான பலனாக, அவன் பெலன் அடைவதில் வளர்வதை உணர்ந்துக்கொள்ள முடியும். நாட்கள் செல்ல செல்ல, வருடங்கள் செல்ல செல்ல, அவன் மன ரீதியிலான, ஒழுக்க ரீதியிலான மற்றும் சரீர ரீதியிலான வளர்ச்சியிலும் அதிகரிப்பான்; ஆனால் இத்தகைய இக்காலக்கட்டத்தின் திரளான வாய்ப்புகள் இருந்தபோதிலும், வளர்ச்சியடைய தவறிப் போகிறவர்கள் மீட்பரின் இராஜ்யம் மூலமாக நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான மீதமான எல்லாவித வாய்ப்புகள் பெறுவதற்கும் பாத்திரமற்றவர்கள் என்று கருதப்பட்டு, இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள். இராஜ்யத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய பாவங்கள் முற்றிலும் நிவர்த்திச் செய்யப்பட்டு காணப்படுகின்றவர்கள், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் முழுமையான மனம் மற்றும் சரீரத்தின் பூரண நிலைமையை அடைந்து, வெளிப்படுத்தல் 20:10-ஆம் வசனத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி நீதியின் கொள்கைகளுக்கு இவர்களுடைய இருதயங்கள் உண்மையாய் இருக்கின்றதா எனச் சோதிக்கப்படுவார்கள். இந்த இறுதி பரீட்சையானது மனுக்குலத்தின் குடும்பத்தின் மீது பொதுவாக வரக்கூடிய ஒன்றாகக் காணப்படும்; மேலும் இந்த இறுதி பரீட்சையானது, ஏதேனில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சைக்குப் பொருந்தக் கூடியதாய் இருக்கும்; இரண்டு பரீட்சைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவெனில், இந்த இறுதி பரீட்சையானது இவர்கள் பாவம் மற்றும் வீழ்ச்சியின் அனுபவத்திற்குள் கடந்து சென்று, இவைகளிலிருந்து விடுதலையடைந்து மற்றும் நீதியின் அரசாட்சிக்குரிய அனுபவத்திற்குள் கடந்து சென்ற பிற்பாடு வருகின்றது. ஆகவே இவர்கள் இந்தப் பரீட்சையில் திருப்திகரமாக வெற்றிக்கொள்ளத்தக்கதான சரியான நிலையில் காணப்படுவார்கள்; ஆனால் இவர்கள் தோற்பார்களானால் இராஜ்யத்தில் இவர்களுக்கு அருளப்பட்ட அனுகூலமான சூழ்நிலைகளின் கீழ் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் நிபந்தனைகளுக்கு, அதாவது இவர்களுடைய இருதயம், தேவனுடன் இசைவுக்குள் வரவில்லை என்பதை நிரூபித்துக்காட்டுகின்றது. இப்படிப்பட்டவர்கள் சாத்தானோடு சேர்த்து அழிக்கப்படுவார்கள், ஏனெனில் இவர்களிடம் சாத்தானுடைய பண்புகளில் சில காணப்படுகின்றன.

## “பாவங்கள் மன்னிக்கப்படுதல்” (Forgiveness of Sins)

யாருக்கு விரோதமாய் மீறுதல் செய்யப்பட்டதோ, அவரே பாவத்தை மன்னிக்க அதிகாரமுடையவர் என்பதுதான் நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கும் சம்பவத்தில், வேதபாரகர்களுடைய எண்ணமாகயிருந்தது. ஒருவேளை "A" என்ற நபர், "B" என்ற நபருக்கு விரோதமாகப் பாவங்கள் செய்வரானால், அவரை மன்னிக்கும் அதிகாரம் "C" என்ற (மூன்றாம்) நபருக்கு இல்லை. "B" என்ற நபருக்கு மாத்திரமே கோபம் அடைவதற்கான உரிமையும் இருக்கின்றது, மேலும் இவருக்கே மன்னிக்கும் அதிகாரமும் இருக்கின்றது. வேதபாரகர்களின் எண்ணம்/கணிப்புச் சரியாகதான் இருந்துள்ளது. நாமும் கூடச் சில சமயங்களில் ஒருவர் இன்னொருவருடைய சுயாதீனம் மற்றும் உரிமைகளில் குறுக்கிட்டு, ஒருவருக்கொருவர் விரோதமாகப் பாவம் செய்துவிடுகின்றோம், மேலும் நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டிய அவசியமும் உள்ளது, எனினும் செய்யப்படும் சகல பாவங்களும் பிரதானமாகத் தேவனுக்கு எதிராகவே செய்யப்படுகின்றது. பாவங்கள் என்பது அவருடைய நீதியின் பிரமாணங்களை மீறுவதாகும். அனைத்து அநீதியான காரியங்களும் பாவமாகும், அதாவது அநீதியான அனைத்தும் தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் எதிரான பாவமாகும். தேவன் தம்முடைய சிருஷ்டிகள் நியாயம் தீர்க்கப்படத்தக்கதாகவும், சரி மற்றும் தவற்றிற்கான நிலைப்பாட்டை அவரே நிர்ணயித்துள்ளார்; மேலும் அவரே நீதிபதியாகவும் இருக்கின்றார்.

## “எப்படி, இயேசுவினால் பாவங்களை மன்னிக்க முடியும்?”

பாவம் மற்றும் அதற்குரிய தண்டனைக்குத் தொடர்புடைய விஷயங்களில், இயேசுவால் அல்லது இயேசுவின் மூலம் பரமபிதா பாவங்களை மன்னிக்க முடியும் என்ற விதத்தில் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவன் நிர்ணயித்துள்ளார் என்பதே நமது பதிலாகும். தெய்வீக ஏற்பாடானது மிகவும் திட்டவட்டமாய்/ மாற்ற முடியாததாய் இருந்தபடியால், பாவங்களை மன்னிப்பதற்கான அதிகாரம் பிதாவினுடைய கரங்களிலிருந்து, பிதாவே எடுத்து போட்டுவிட்டார்; ஏனெனில் ஆதாம் மற்றும் அவர் சந்ததியாரின் விஷயத்தில் அவர்களுடைய பாவத்திற்கு எதிரான, உறுதியான, நிச்சயமான மாற்ற முடியாத தண்டனையைப் பிதா தாமே நிர்ணயித்து விட்டார். பிதா வேறுவிதமாக செய்திருந்திருக்கலாம், அதாவது விழுந்துபோன தூதர்களைக் கையாண்டது போன்று, மனுக்குலத்திற்கும் செய்திருக்கலாம், அதாவது நேரடியாக அவர்களுக்கு மரணத் தீர்ப்பை அளிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குச் சிலவிதமான கட்டுப்பாடுகளை வைத்திருந்திருக்கலாம். ஆனால் ஒருமுறை மரணத் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டால், அதை மாற்றவோ அல்லது இல்லாமல் ஆக்கிப்போடவோ முடியாது. தேவனாலும் கூடத் தம்முடைய மாற்ற முடியாத பிரமாணங்களை மாற்றிப்போட முடியாது.

ஆனாலும் கூட மனுக்குலத்திற்கு எதிரான இந்த மாற்றமுடியாத தீர்ப்பானது, சிருஷ்டிகரால் எப்படி ஏற்றக் காலத்தில் தள்ளுபடிச் செய்யப்படும், அதாவது தீர்ப்பைப் பின்வாங்கிக் கொள்ளாமல், மாறாக தள்ளுபடிச் செய்வதற்குத் தேவையானவற்றை ஒரு மீட்பர் மூலம் எப்படிச் சந்திக்கலாம் என்ற முழு அறிவுடனே சிருஷ்டிகரால் அளிக்கப்பட்டது. ஆகவேதான் நமது கர்த்தராகிய இயேசு உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக தெய்வீகத் திட்டத்தில் காணப்படுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், மீட்பை அவசியமாக்கிய மரணத் தண்டனையைத் தேவன் அளிப்பதற்கு முன்னதாகவே, தேவன் தமது மனதில் மீட்பின் திட்டத்தைக் கொண்டிருந்தார்.

## “ஆதியில் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகக் கிருபை”

இயேசு உலகத்திற்கு வந்து, ஈடுபலி விலைக்கிரயம் கொடுப்பதற்கு முன்னதாகவே, தேவன் தமது கிருபை/இரக்கத்தை ஆபிரகாமிடத்திலும், மற்றவர்களிடத்திலும் வெளிப்படுத்தியுள்ளாரே என நீங்கள் கேட்கலாம். தெய்வீகக் கிருபை/இரக்கம் வெளிப்பட்டது உண்மைதான்; ஆனால் ஏற்றகாலத்தில் பாவிகளுக்கான ஈடுபலி கொடுக்கப்படும் என்று இருக்கும் தெய்வீக நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த வெளிப்படுத்தல் காணப்பட்டது என்பதே நமது பதிலாகும். ஆனாலும் அப்பொழுது வெளிப்பட்ட இரக்கமானது, பாவ நிவர்த்திக்குரியதாய் இருக்கவில்லை. ஒருபோதும் இல்லை, பாவ நிவர்த்திச் செய்யும் காரியமானது ஈடுபலி செலுத்தப்படுவதற்கு முன்பு செய்யப்பட முடியாது; மேலும் பாவ நிவர்த்தியானது, மகிமையடைந்த மீட்பர் மூலமாகவே தேவனால்

செய்யப்படும். முற்பிதாக்கள் தேவன் மீது வைத்த விசுவாசத்திற்கு ஏற்ப, அவர்கள் அனைவருக்கும் இப்படிப்பட்ட தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வது நியாயமானதேயாகும். மேலும் மீட்பர் மூலம் தேவன் தாம் அருளவேண்டும் என நோக்கம் கொண்டிருக்கும் காரியங்கள் **குறித்த வெளிப்படுத்தல்கள்** மாத்திரமே இவர்களுக்கு அருளக்கூடிய இரக்கமாக உள்ளது எனும் காரியம் நியாயமானதாகவே தோன்றுகின்றது.

## ''மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவம்''

இஸ்ரயேல் தேசத்தோடு தேவன் ஏற்படுத்தி இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ், அவ்வுடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருந்த மோசே மூலம் ஒரு குறிப்பிட்ட விதத்திலும், அளவிலும் பாவ மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் காணப்பட்டது. வருடந்தோறும் செலுத்தப்பட்ட இந்தப் பாவ நிவாரண பலிக்கான ஏற்பாடுகள், புதிய உடன்படிக்கையின் கீழ், மத்தியஸ்தராகக் காணப்படப் போகின்ற கிறிஸ்துவின் மூலம் வரப்போகின்ற ஆசீர்வாதங்களுக்கு நிழலாய் அமைகின்றன. முற்பிதாக்கள் போன்று இஸ்ரயேலர்களும் விசுவாசத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட அளவில் தேவனுடைய இரக்கத்தை அனுபவித்தார்கள், ஆனால் முற்பிதாக்கள் போல் இஸ்ரயேலர்களுக்கும் பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படவில்லை. மாறாக அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகின்ற பிரகாரமாக இஸ்ரயேலர்களின் பலிகளும், பாவ நிவாரண பலிகளும் உண்மையில் ஒருபோதும் அவர்களுடைய பாவங்களை எடுத்துப்போடாமல்/ நிவர்த்திச் செய்யாமல், பாவங்களை உண்மையில் தள்ளும்படிச் செய்து, பின்னர் இறுதியில் நிவர்த்திச் செய்துவிடும் மேலான பலிகளுக்குரிய நிழலாய் மாத்திரம் இருந்தன. (எபிரெயர் 10:1-4; அப்போஸ்தலர் 3:19).

## ''இயேசுவின் மன்னிப்பினுடைய அளவு''

ஒருவேளை பரம பிதா தம்முடைய சொந்த பிரமாணங்களினால் கட்டப்பட்டவராகக் காணப்பட்டு, ஈடுபலி விலைக்கிரயம் செலுத்தப்படாமல் பாவங்களை நிவர்த்திச் செய்ய முடியாது என்றால், நமது கர்த்தரால் இப்படிச் செய்ய முடியுமா? இந்த விஷயத்தில், பிதாவைக் காட்டிலும், இயேசுவுக்கு மிகுந்த அதிகாரம் உள்ளதா? இல்லை என்பதே நமது பதிலாகும். இயேசு முடக்குவாதமுள்ள மனுஷனிடத்தில் பேசின வார்த்தைகள், அம்மனுஷனுடைய பாவங்களை நிவர்த்திச் செய்து விடுவது எனும் அர்த்தத்தில் பேசப்படாமல், முற்காலங்களில் பிதா ஏற்கெனவே ஆபிரகாம் மற்றும் மற்றவர்களுக்கு அருளின பாவங்களுக்கான மன்னிப்பையே அருளினார். "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டுவிட்டன" என இயேசு கூறினபோதும், அம்மனுஷன் இன்னமும் உதவியற்றவனாகவே கிடந்தான். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும், அவனுடைய பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படவில்லை. அவன் இன்னமும் பாவத்தின் கொடூரமான தாக்கங்களுக்குரிய உதாரணமாகவே படுத்துக் கிடந்தான். இதற்குப் பிற்பாடு, நமது கர்த்தர் அம்மனிதனிடம், "எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ" எனக் கூறின வார்த்தைகள் சீர்த்திருத்தலின் தன்மை கொண்டது போன்று காணப்பட்டாலும், அது அம்மனுஷனுடைய பாவங்களை நிவர்த்திச் செய்துவிடுவதாக இருக்கவில்லை. அவனுடைய பாவங்கள் முற்றிலும் நிவர்த்திச் செய்யப்படும்/போக்கப்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டிருக்குமாயின், அது அவனுக்கு விழுகையின் நிமித்தம் உண்டான சகல பூரணமற்ற தன்மைகளிலிருந்தும் அவன் சீர்த்தூக்கப்பட்டு, சரீரத்திலும், மனதிலும், ஒழுக்கத்திலும் பூரண மனிதனுக்குரிய பூரண நிலைக்கு அவன் உயர்த்தப்படுவதைக் குறிக்கும். ஆனால் இப்படியான காரியங்கள் எதையும் இயேசு அம்மனுஷனுக்குச் செய்யவில்லை; மாறாக இயேசு அம்மனுஷனுக்கு இருந்த விசேஷமான பிரச்சனையை (முடக்குவாதத்தை) மாத்திரமே சொஸ்தப்படுத்தினார்.

இன்னுமாக கர்த்தர் இவ்வார்த்தைகளைப் பேசுகையில், அவர் ஆதி பாவத்தையோ, அதன் மரணத் தண்டனையையோ குறிப்பிடவில்லை. அவர் அவனுடைய பாவங்களைக்குறித்துக் குறிப்பிடுகையில் அதனை பன்மையில், அதாவது பாவங்கள் (sins) எனக் குறிப்பிட்டார், அதாவது அம்மனுஷனுக்குப் பிதாவாகிய ஆதாமின் பாவம் மற்றும் ஆதாமின் தண்டனையிலிருந்து வரும் பங்கோடு சேர்ந்து, அவனுடைய சொந்த பாவமும் காணப்படுகின்றது. அந்த மனுஷன் மோசேயின் உடன்படிக்கையின் கீழுள்ள ஒரு யூதனாக இருந்தான். ஆதி பாவத்தில் இம்மனுஷனுக்கு இருக்கும் பங்கிற்கு, அனைத்து யூதர்களுடன் இவனுக்கும் சேர்ந்து வருடந்தோறும் பலிச் செலுத்தப்பட்டு வருகின்றது; மேலும் செலுத்தப்படும் பலியின் நிமித்தம் உண்டாகும் ஒப்புரவாகுதலின் நிமித்தம், யூதனாகிய அவன், கர்த்தருக்கு முன்பு நிற்க முடிந்தவனானான். யூத ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலுடன் காணப்படும் வரையிலும் அவர்கள் வியாதி முதலியவைகளிலிருந்து விடுதலையாய்

இருப்பார்களெனக் கர்த்தர் இந்த ஜனங்களோடு பண்ணின உடன்படிக்கையின் ஒப்பந்தத்திற்கும் ஏற்புடையவனாக/பாத்திரவானாக இருப்பான். ஆகவே ஒவ்வொரு யூதனுடைய விஷயத்திலும், அவனுக்கு வியாதிகள் காணப்படுமாயின் அது அவனுடைய தனிப்பட்ட குற்றங்கள் மற்றும் தனிப்பட்ட மீறுதல்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் கர்த்தரும் வேறு எந்த ஜனங்கள் மற்றும் ஜாதியாரிடத்திலும் உடன்படிக்கைப் பண்ணாத விதத்தில் இவர்களுடன் பண்ணியுள்ளார்.

## "நமது கர்த்தர் ஏற்கெனவே பலியாக்கப்பட்டார்"

ஆதாமின் பாவம் மற்றும் அதற்கான தண்டனைக்குறித்த விஷயத்தில் நமது கர்த்தர் சமாதானம் மற்றும் மன்னிப்பு அளிப்பதற்கும், இறுதியில் பாவங்கள் நிவர்த்தியாக்கப்படும்/போக்கப்படும் என்பது குறித்த வாக்குறுதி அளிப்பதற்கும் உரிமை கொண்டுள்ளார், ஏனெனில் அவர் நிறைவேற்றும்படிக்கு வந்திருந்ததற்கான வேலையை அவர் இன்னமும் முடிக்கவில்லை என்றாலும், அவர் இன்னமும் ஈடுபலியை நிறைவேற்றவில்லை என்றாலும், அவர் அதனை ஆரம்பித்துள்ளார். அவருடைய ஞானஸ்நானத்தின் போது, அவர் தமது ஜீவியத்தை அர்ப்பணித்துள்ளார், தமது ஜீவனை ஒப்புக்கொடுத்துள்ளார், பலியாக அதனை பிதாவினிடத்தில் ஒப்புவித்தார், மேலும் ஒருவிதத்தில் பிதாவும் அதனை ஏற்றுக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தை (Contract) தாம் ஏற்றுக்கொண்டுள்ளதை வெளிப்படுத்தும் பொருட்டு, நமது கர்த்தர் தமது உயிர்த்தெழுதலின்போது பெற்றுக்கொண்ட மகிமையான ஆசீர்வாதங்களுக்குரிய முதல் கனியாகிய பரிசுத்த ஆவியை நமது கர்த்தருக்குக் கொடுத்தார்.

இந்தப் பலியை அவர் ஏற்கெனவே பண்ணியிருந்தாலும், அதனை முடிவு பரியந்தம் நிறைவேற்ற கர்த்தர் முழு நோக்கம் கொண்டிருந்ததாலுமே நமது கர்த்தர் தம்மை விசுவாசிப்பவர்களிடம், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றும், "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" என்றும் உள்ள வார்த்தைகளைக் கூறுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருந்தார் (யோவான் 3:36,6:54); அதாவது யார் ஒருவன் என்மேல் விசுவாசம் வைத்து, என்னுடைய உண்மையும், நேர்மையும் உள்ள பின்னடியான் ஆகின்றானோ, அவன் புதிய ஜீவனுக்குள் தனக்குள்ளாக ஜெநிப்பிக்கப்பட்டுவிட்டதாக எண்ணக்கடவன்; இன்னுமாக ஆயிரம் வருஷம் அரசாட்சியின் விஷயத்தில் அவன் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாகவும், அதன் பூரணமான சூழ்நிலைகளில் நித்தியத்திற்கான ஜீவனை அடையத்தக்கதாகவும் நான் அதுவரையிலும் அவனை நடத்தி, அவனுக்கு உதவி செய்வேன் என்றும் அவன் அறியக்கடவன் என்ற விதத்தில் இயேசு அவ்வசனத்தில் குறிப்பிடுகின்றார்.

சுவிஷேச யுகம் முழுவதும் சபை, "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றவர்களாய்" இருக்கின்றார்கள். விசுவாசத்தின் மூலமாக நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளதை உணர்கின்றோம், மேலும் விசுவாசத்தின் மூலமாக நாம் முதலாம் உயிர்த்தெழுதல் அடைவோம் என்றும், நமது ஆண்டவரின் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் நாம் பங்கடைவோம் என்றும் எதிர்க்காலத்தை நோக்கிப் பார்க்கின்றோம் மற்றும் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றோம். மேலும் விசுவாசத்தின் மூலம் நாம் திருப்தி அடைந்து, நம்பிக்கையில் இளைப்பாறுகின்றோம். ஆம், நாம் அவருடைய சாயலில் விழிக்கும்போது உண்மையாகத் திருப்தியடைவோம் (சங்கீதம் 17:15).

**ஆமென்!**

---

# சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல்

தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவாகத் தங்கள் ஜீவியங்கள் காணப்படுவதற்கென ஊக்கமாய் நாடிக்கொண்டிருக்கின்றதான அன்பான சகோதர சகோதரிகளில் சிலர் மில்லேனியல் டாண் தொகுதி VI-ஐ வாசிக்கையில், முன்பில்லாத அளவுக்கு மிகத் தெளிவாய் மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான செயல்முறைகள் தொடர்பான திவ்விய ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர். அதில் முன்வைக்கப்பட்டுள்ளதான கட்டளைகள் அனைத்தையுமே கைக்கொள்வது அவர்களுக்கு அவசியமில்லை என்று சிலருக்கு நினைப்பூட்டப்படுவது அவசியமாய் இருக்கின்றது. சகோதரனுடைய தவறை அவர்கள் விட்டுவிடலாம் என்று எண்ணுவார்களானால், அது அவர்களது சிலாக்கியமாகும்; ஆனால் ஒருவேளை தவறை அவர்களால் விட்டுவிட முடியவில்லையெனில், அது அவர்களைத் தொடர்ந்து பாதித்துக்கொண்டிருக்கின்றதென்றால், அக்காரியத்தைக்குறித்து அவர்கள் மற்றவர்களிடத்தில் சொல்லாமல், மாறாக தவறைச் சரிப்படுத்துவதற்கு இருக்கும் ஒரே செயல்முறையென அவ்வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய கட்டளைகளைப் பின்பற்றிட வேண்டும்.

கீழ்ப்படியாமல் பிடிவாதமாய்க் காணப்படுபவர்களுக்கான - அதாவது செய்யப்பட்ட தவறுகளுக்கு எதிரான சகோதரனுடைய தனிப்பட்ட தெரிவித்தல்களுக்குச் செவிசாய்க்காமலும், இரண்டு (அ) மூன்று சகோதரருடைய ஆலோசனைக்குச் செவிசாய்க்காமலும், சபையாருடைய வார்த்தைகளுக்கும் செவிசாய்க்காமலும் இருப்பவர்களுக்கான தண்டனை வகை குறித்துச் சிலர் கேட்கின்றனர் - என்ன தண்டனை இத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நம்மிடம் கேட்கப்படுகின்றது. நம்முடைய சகோதரனைத் தண்டிப்பதற்கான உரிமை நமக்கு இல்லவேயில்லை என்பதே நம்முடைய பதிலாகும். அதைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கூறுகின்றார் மற்றும் தற்காலத்தில் ஒருவர் இன்னொருவரின் மாம்சத்தின்படியான பெலவீனத்தின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்தில் நாம் திறமிக்கவர்களல்ல மற்றும் இதன் காரணமாக ஒருவர் இன்னொருவரின் பெலவீனத்தின் விஷயத்தில் மற்றவர் கொண்டிருக்கும் பொறுப்பின் அளவைக்குறித்து நியாயந்தீர்க்கும் விஷயத்திலும், நாம் திறமற்றவர்களாய் இருக்கின்றோம் மற்றும் கர்த்தர் நியாயமாய் இவைகளை நியாயந்தீர்ப்பார். மன்னிப்பதே நம்முடைய காரியமாய் இருக்கின்றதே ஒழிய, தண்டிப்பது நம்முடைய காரியமல்ல; நமக்குச் செய்யப்படும் பாதகத்தை நிறுத்த நாடுவது நம்முடைய சிலாக்கியமாய் இருக்கின்றது; ஆனால் கடந்த காலங்களில் நடந்துள்ளதான எதற்கும், எந்தத் தண்டனையையும் நாம் அளித்திடக்கூடாது.

மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைகளிலுள்ள முழுப்பாடம் என்னவெனில்: இப்படியாக நமது சகோதரனுடைய அன்பை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் நமக்கு இன்னுமாய் அச்சகோதரன் பாதகம் பண்ணுவதிலிருந்து அவனைத் தடுப்பதற்கும் நாம் நாடிட வேண்டும் என்பதேயாகும். இப்படிச் செய்வதில் நாம் ஜெயமடைவோமானால், அதினால் அவனை நம்முடைய சகோதரர் என மீண்டுமாய்ப் பெற்றுக்கொள்வோம், அவனைக் குணமடையச் செய்வோம். ஆகையால் சகோதரனைச் சபையார் முன்னிலையில் கொண்டுவருவது தண்டனைக்கொடுப்பதற்கே என்பது எண்ணமாயிருப்பதில்லை, மாறாக கண்டிக்கப்படுவதற்காக, திருத்தப்படுவதற்காக, அவன் தன் நடத்தையிலுள்ள தவற்றினைக் கண்டு, அதை ஒப்புக்கொண்டு, தவறு செய்வதை விட்டுவிடத்தக்கதாகக் கடைசிமுறையாக மாத்திரமே அவன் சபையார் முன்னிலையில் கொண்டுசெல்லப்படுகின்றான். ஒவ்வொரு நடவடிக்கையிலும், சகோதரனைச் சரியான வழிக்குத் திருப்பிடுவதற்கே பிரயாசம் காணப்பட வேண்டுமே ஒழிய, அவன் தவற்றை அம்பலப்படுத்துவதற்காகவோ, அவனுக்குப் பாதகம்பண்ணுவதற்காகவோ, அவனைத் தண்டிப்பதற்காகவோ பிரயாசம் காணப்படக்கூடாது; ஏனெனில் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்லியுள்ளார்.

இந்த ஒரு வேதவாக்கியத்தின்படி சபையார் செய்ய முடிகிறது என்னவெனில்: அச்சகோதரனை மனந்திரும்பப்பண்ணுவதற்கும், சீர்பொருந்தபண்ணுவதற்கும் எடுத்த பிரயாசங்களினால் பிரயோஜனம் இல்லாமல் போகுகையில், அவன் சரியானவற்றைச் செய்வதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்துவது வரையிலும், சபையார் அவனிடமிருந்து

விசேஷித்த சகோதர ஐக்கியத்தினை நீக்கிக்கொள்ளலாம். அவன் விருப்பத்தினை வெளிப்படுத்தின பிற்பாடு, அவன் மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்டக்காலம் சகோதரனை, "அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும்" நடத்துவதும்கூட, அவனுக்கு பாதகம் பண்ணுவதை, அவனைத் தண்டிப்பதை, அவனைத் தாக்கி பழித்தூற்றுவதை, உலகத்திற்கு முன்னிலையில் அவனை அவமானப்படுத்துவதை (அ) அவமதிப்பதைக் குறிப்பதில்லை. இவைகளை - (பாதகம்பண்ணுதலையோ, தண்டிப்பதையோ, தாக்கிப் பழித்தூற்றுவதையோ, அவமானப்படுத்துவதையோ) - அஞ்ஞானிக்கோ (அ) ஆயக்காரனுக்கோ செய்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. எந்த ஓர் அஞ்ஞானியையோ அல்லது ஆயக்காரனையோ நாம் நடத்துவதுபோன்று, அச்சகோதரனை நாம் அன்பான, மரியாதையான விதத்தில் நடத்திட வேண்டும் மற்றும் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராகிய சபைக்கு உரியதான விசேஷித்த உரிமைகள் (அ) சிலாக்கியங்கள் (அ) வாழ்த்துக்கள் (அ) வாக்குகள் (vote) அளிக்கும் வாய்ப்புகள் கொடுக்க மறுக்கப்பட வேண்டும்.

---

# தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும்

கேள்வி -- சகோதரர் ரசல் அவர்களே: நீங்கள் தவறிழைக்காதவராகக் கருதப்பட முடியாது என்று எழுதப்பட்ட கடிதம் ஒன்றினை நான் சமீபத்தில் பெற்றுக்கொண்டேன்; இப்படி எழுதிடுவதற்கான காரணம், அக்கடிதத்தினை எழுதினவர், கர்த்தருடைய ஊழியத்தினை மேற்பார்வையிடத்தக்கதாக தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு கூடுகைகளில் தேர்ந்தெடுத்தல் ஒழுங்கு தொடர்புடைய உங்களது கண்ணோட்டங்கள் மாற்றமடைந்துள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றார் என்பதினாலாகும். நான் குறிப்பிடும் அக்கடிதத்தினை எழுதினவர் ஒரு காலத்தில் பரிசுத்த லூயி சபையாரின் மூப்பராக இருந்தவர் என்று நான் எண்ணுகின்றேன்; சபையாரால் அவர் பிற்பாடு தேர்ந்தெடுக்கப்படாததால், சபையார் "பாபிலோன்" போன்றாகிவிட்டனர் என்று கூறி, அவர்கள் ஐக்கியத்தினின்று ஒதுங்கிக்கொண்டவராவார். நான் குறிப்பிடும் அக்கடிதத்தில், அவர் பழைய வாட்ச் டவர் வெளியீட்டின் ஒரு பகுதியினைத் தெரிவிக்கின்றார்; அப்பகுதியானது, மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அவசியம் இல்லை என்பதாகத் தாங்கள் அக்காலத்தில் கருதியுள்ளதாகத் தெரிகின்றது. பிற்பாடு அவர் - மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தங்களது பரிந்துரை மற்றும் மூப்பர்களுக்குரிய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்கும் தங்களது வார்த்தைகள் இடம்பெற்றுள்ள சமீபக்கால வாட்ச் டவர் மற்றும் மில்லேனியேல் டாண், தொகுதி VI-ஆம் வெளியீடுகளிலிருந்தும் - அக்கடிதத்தில் மேற்கோளிட்டுள்ளார்

என்னுடைய கேள்வி என்னவெனில்: இது உண்மைதானா? இவ்விஷயம் குறித்த தங்களது கண்ணோட்டத்தினைத் தாங்கள் மாற்றிக்கொண்டுள்ளீர்களா மற்றும் மாற்றிக்கொண்டுள்ளீர்களானால், ஏன் என்று நான் அறிந்துகொள்ளலாமா?

**பதில்:** முதலாவதாக நான் தவறிழைக்கா தன்மையுள்ளவன் என்று ஒருபோதும் உரிமைபாராட்டிக்கொள்ளவில்லை என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன். கர்த்தருடைய கிருபையினால், நான் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கு முன்பாக, தவறிழைக்காத் தன்மையுள்ளவனாய் இருந்திட என்னால் எதிர்ப்பார்த்திட முடியாது; முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடே நிறைவானது வரும்போது, குறைவானது ஒழிந்துபோம்; நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வோம்; மற்றும் பார்க்கப்பட்டிருக்கிறபடியே பார்ப்போம்.

எந்தத் தப்பறையும் இல்லாதபடிக்குக் கர்த்தரினால் மேற்பார்வையிடப்பட்டுள்ளதான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்களை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நீங்கள் பூமியிலே எவற்றைக் கட்டுகின்றீர்களோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டதாக அங்கீகரிக்கப்படும் என்றும், நீங்கள் பூமியிலே எவற்றைக் கட்டவிழ்கின்றீர்களோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்கப்பட்டதாக அங்கீகரிக்கப்படும் என்றும் எழுதினவர்களாகிய அப்போஸ்தலர்களைக் குறித்துக் கர்த்தர் கூறியிருக்கின்றார். ஆகையால் பரிசுத்த ஆவி வழங்கப்பட்ட காலப்பகுதியில் கர்த்தருடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருக்கும்படிக்கு, அவரால் திட்டமிடப்பட்டதான அந்தப் பன்னிரண்டு மனிதர்களால் முன்வைக்கப்பட்ட காரியங்களானது, தவறற்றவையாக, உண்மையானவையாக, பிழையற்றதாக நாம் கருதிடலாம். ஆனால் அந்தப் பன்னிரண்டு பேரும் தேவவல்லமையினால் அற்புதகரமாகத் தாங்கப்பட்டது போன்று, அப்போஸ்தலர்கள் அல்லாத வேறு எவரும், தாங்கப்பட்டதாகவோ அல்லது வேதவாக்கியங்களுக்கு மேலாக மற்றவர்களுடைய வார்த்தைகளையும், எழுத்துக்களையும் நாம் கருதும்படியாக தேவவார்த்தைகள் நமக்கு அதிகாரமளிக்கின்றது என்றோ நம்பிடுவதற்கு நமக்கு எந்த ஆதாரமும் இல்லை. இதையே நாம் எப்போதும் முன்வைத்து வருகின்றோம். நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் தம்முடைய வார்த்தைகளைக் கொடுத்துள்ள பிரகாரமாகவே, தேவவார்த்தைகளை உண்மையாய் முன்வைப்பதே நம்முடைய பிரயாசமாக இருந்துவருகின்றது - நம்முடைய ஆண்டவருக்கே நாம் நிற்போம் அல்லது சாய்வோம். கர்த்தருடைய ஆவியினால் வழிநடத்தப்பட்டு, இப்பொழுது தற்கால சத்தியத்தினுடைய வெளிச்சத்தில் நடந்துகொண்டிருக்கும் கர்த்தருடைய அருமையான ஜனங்களுடைய அங்கீகரிப்பை, நம்முடைய வழிமுறையானது பெற்றிருக்கின்றதென நாம் விசுவாசிக்கின்றோம்.

## நமது கண்ணோட்டம் வேறுபட்டுள்ளது

நாங்கள் அறிவில் வளர்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதையும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய பல்வேறு சிறு கூடுகைகளில் மூப்பர்கள் அல்லது வழிநடத்துபவர்கள் பற்றின கர்த்தருடைய சித்தத்தினைக் கொஞ்சம் வேறுபட்ட வெளிச்சத்தில் இப்பொழுது பார்க்கின்றோம் என்பதையும் நாங்கள் மறுக்கவில்லை. ஆரம்பக்காலங்களில் சத்தியத்திற்குள்ளாக வந்து, அந்தந்தச் சிறு கூட்டத்திற்குத் தானாக வழிநடத்துபவர்களானவர்களிடத்தில் நாம் அதிகமாக எதிர்ப்பார்த்ததே நம்முடைய கணிப்பில் உள்ள தவறாய் இருந்தது. இத்தகையவர்களிடத்திலுள்ள சத்திய அறிவானது, அவர்களிடத்தில் தாழ்மைகொள்ளச் செய்வதற்கு ஏதுவான தாக்கத்தினை ஏற்படுத்தி, தங்களுக்கு எந்தச் சிறப்பும் இல்லை என்பதை உணரச் செய்திடும் என்பதும் மற்றும் தேவனுடைய வாய்க் கருவிகளாகத்தான் மற்றும் அவரால் பயன்படுத்தப்படுவதினாலும்தான் தாங்கள் அறிய அருளப்பெற்றிருக்கும் எதையும், மற்றவர்களுக்கு முன்வைத்திட முடிகிறவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை உணரச்செய்திடும் என்பதும், இத்தகையவர்களைக் குறித்து நாம் அன்புடன் கொண்டிருந்த உயர்வான கண்ணோட்டமாய் இருந்தது. இத்தகையவர்கள் எல்லாவிதத்திலும் மந்தைக்கு மாதிரியாய் இருப்பார்கள் என்பது நம்முடைய உயர்வான நம்பிக்கையாய் இருந்தது; இன்னுமாகக் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில் இத்தகையவர்களைப் போன்று, சத்தியத்தினை முன்வைத்திடுவதற்குச் சமமான திறமையுள்ள அல்லது அதிகமான திறமையுள்ள ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ அந்தச் சிறு கூட்டத்திற்குள்ளாக வருகையில், அன்பின் ஆவியானது கனம்பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திகொள்ளச் செய்திட வழிநடத்திடும் என்றும், இப்படியாகக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குரிய ஊழியத்தில் பங்கெடுக்கப்பண்ண ஒருவருக்கொருவர் உதவிசெய்திடவும், ஊக்குவித்திடவும் வழி நடத்திடும் என்றும் இத்தகையவர்கள் குறித்து நம்முடைய உயர்வான எதிர்ப்பார்ப்புக் காணப்பட்டது.

இக்கருத்துக்களை மனதில் கொண்டவர்களாகவும், இப்பொழுது ஏற்றகாலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதும் மற்றும் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களினால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதுமான பெரியளவிலான கிருபைகள் மற்றும் சத்தியங்களின் காரணமாகவும் - ஆதிதிருச்சபையாருக்கு அப்போஸ்தலர்களினால் திட்டமிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளதான வழிமுறையினை, இப்பொழுது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் பின்பற்ற அவசியமிராது என்று நாங்கள் அப்போது முடிவெடுத்தோம். தெய்வீக மேற்பார்வையின் கீழ் அப்போஸ்தலர்களினால் திட்டமிடப்பட்டுள்ளதான ஏற்பாடுகளானது, மற்றவர்களால் திட்டமிடப்படும் எந்த ஏற்பாட்டைக் காட்டிலும் மேம்பட்டது என்பதையும் மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் மறுரூபமடைவதினால் நாம் அனைவரும் முழுமையும், பூரணமும் அடைந்து, ஆண்டவரோடு நேரடியான தொடர்புக்குள் வரும் அந்த உயிர்த்தெழுதலுக்கு முன்புவரை, முழுச்சபைக்குமே அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான ஒழுங்குமுறைகள் அவசியமாய் இருக்கும் என்பதையும் உணர்ந்துகொள்ள தவறிப்போனதிலேயே எங்கள் தவறு காணப்படுகின்றது.

அருமையான சகோதரர்கள் மத்தியில் கொஞ்சம் போட்டிமனப்பான்மைக் காணப்படுவதைக் கண்டபோது மற்றும் அநேகரிடத்தில் கூடுகைகளில் மூப்பர்த்துவத்தினை ஊழியமாகப் பார்த்திடுவதற்குப் பதிலாக பதவியென அடைந்திடுவதற்கான ஆசைக் காணப்படுவதைக் கண்டபோது மற்றும் தங்களைப் போன்று சமமான திறமையுடையவர்களாகவும், சமமான சத்திய அறிவுடையவர்களாகவும், ஆவியின் பட்டயத்தினைக் கையாளுவதற்குத் திறமையுள்ளவர்களாகவும் காணப்படும் மற்றச் சகோதரர்கள் வழிநடத்துபவர்களாக வருவதிலிருந்தும் மற்றும் வளருவதிலிருந்தும் தடைப்பண்ணுவதைக் கண்டபோது - எங்களுடைய தவறு எங்களுக்குப் புரியவந்தது. தேவனுடைய ஜனங்களை இறுமாப்பாய் ஆண்டிட ஒரு சகோதரன் விரும்புகிறாரெனில் - தான் ஏதோ தவறிழைக்காத தன்மையுடையவர் போன்றும், சகோதர சகோதரிகள் ஏதோ தரம் குறைந்தவர்கள் போன்றும் எண்ணி, சபையை நடத்திட அச்சகோதரன் விரும்புகிறாரெனில், இம்மாதிரியான சூழ்நிலையில் என்ன செய்யப்பட வேண்டும் என்று விசாரிக்கும் அன்புடன்கூடிய கேள்விகள் எனக்கு கர்த்தருடைய ஜனங்களுள்ள பல்வேறு சிறுசிறு கூடுகைகளிலிருந்து வந்தது. நாங்கள் அனைவருக்கும் நிதானத்தை அறிவுறுத்தினோம்; விசேஷமாக போதிக்கும் திறமையில் சிறந்த நிலை என்பது விசேஷமாய் அபாயகரமானது எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நண்பர்களுக்கு நினைப்பூட்டி, குற்றம் சாட்டப்பட்டுள்ள சகோதரன் இரக்கத்துடன் நியாயம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், இப்படியான சகோதரனை அவர்கள்

சீர்ப்படுத்துகையில், அவ்விஷயத்தில் தங்களுக்கிருக்கும் அபாயங்களையும், சொந்த பெலவீனங்களையும் நினைவில்கொண்டிருக்க வேண்டும் என்றும், அறிவுறுத்தினோம். மேலும் திவ்விய ஒழுங்கிலும்சரி, பகுத்தறிவின்படியான ஒழுங்கிலும் சரி அர்ப்பணிக்கப்பட்டவர்களின் முழுச்சபையாரும், தங்களுக்கான வழிநடத்துபவர் தொடர்புடைய கர்த்தருடைய சித்தத்தினை நாடிட வேண்டும் மற்றும் தீர்மானித்திட வேண்டும் என்றும், சபை செய்ய வேண்டிய இக்காரியத்தினை அவர்களிடமிருந்து பறித்திடுவதற்கும், ஊழியத்திற்கென்றுள்ள கர்த்தருடைய தேர்வாக, தான் ஒருவன் மாத்திரமே காணப்படுவதாக, சபையாருக்கெனத் தீர்மானிப்பதற்கும், எந்த மனுஷனையும் அனுமதித்திடக் கூடாது என்றும் நாங்கள் அவர்களுக்கு உறுதியாகக் கூறினோம்.

சுயநாட்டத்தின் ஆவி மற்றும் பெரியவராய் இருப்பதற்கான ஆசையையும் வெளிப்படுத்தும் ஒருவர் அந்த ஊழியத்திற்குப் பொருத்தமற்றவராய் இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது என்றும், வழிநடத்துபவராக "இறுமாப்புள்ள" ஒருவர் தொடர்வது என்பது, சபையாருக்குப் பாதகமாய் இருப்பது மாத்திரமல்லாமல், வழிநடத்தும் அவருக்கும் பாதகமாய் இருக்கும், காரணம் தேவன் பெருமை உள்ளவர்களையும், சுயநாட்டம் உடையவர்களையும் எதிர்க்கின்றார் மற்றும் தாழ்மையுள்ளவர்களுக்குத் தம்முடைய கிருபைகளை அருளுகின்றார் என்ற வேதவாக்கிய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம் என்றும் நாங்கள் அறிவுரை வழங்கினோம். புதிய மனதிற்கு இசைவான புதிய சரீரத்தின் பூரணமானது, மாம்சத்தினுடைய தற்போதைய அபூரணத்தினுடைய இடத்தினை முழுமையாய் எடுத்துக்கொள்ளும் காலமாகிய - "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" - என்பதே அப்போஸ்தலனுடைய புத்திமதியாய் இருக்கின்றது (1 பேதுரு 5:6).

நீங்கள் பரிசுத்த லூயிசிலுள்ள சபையாரைக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள் மற்றும் அந்தச் சிறு கூட்டத்தாருக்கு வழிநடத்துபவர் நிமித்தம் சிரமம் இருந்தது மற்றும் அநேகமாக உங்களால் குறிப்பிடப்படும் அக்கடிதத்தினை எழுதினவருடன்தான் இருந்தது என்பது எனக்கு நினைவில் இருக்கின்றது. அவர் சபையின் காரியங்கள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு அனுமதிக்கப்படாததன் காரணமாக, முழுச்சபையாரிடத்திலும் கோபம் அடைந்தார். தேவன் தன்னை அந்த ஸ்தானத்திற்கு நியமித்ததை அவர் அறிந்துள்ளதாகவும், இவ்விஷயத்தில் தனக்கு ஆதரவு வழங்குவதைத் தவிர, சபையார் வேறு எதுவும் செய்யக்கூடாது என்றும், தனக்கு ஆதரவு வழங்குகையில், சபையார் கர்த்தரையும், கர்த்தருடைய சித்தத்தையும் ஆதரிப்பவர்களாய் இருப்பார்கள் என்றும் வலியுறுத்தி, அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவர் தான் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்றும், தனக்கு வாக்குகள் அளிக்கப்படக் கூடாது என்றும், மாறாக தான் தெய்வீக நியமனமானவராக, சபையாரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதை நான் சபையாருக்கு வலியுறுத்திட விரும்பிட்டார்.

நான் பொறுமை காத்து, என்னால் முடிந்தமட்டுமான கனிவான விதத்தில், நம்முடைய சொந்த நடக்கை தொடர்புடையதான கர்த்தருடைய சத்தம் என்னவென்று, நம்முடைய மனங்களில், வேத வாக்கியங்களினுடைய உதவியின் மூலம் ஆராயப்பட வேண்டும் என்றும், சபை தொடர்புடையதான கர்த்தருடைய சத்தம் என்னவென்று, அர்ப்பணிக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் தேவவார்த்தையினின்று அடையப்பெற்றதான ஆவியின் மனதினை வெளிப்படுத்த நாடுவதினால் - இவர்கள் யாவருடைய மன உணர்வுகளின்/கருத்துகளின் வெளிப்படுத்தல் வாயிலாக ஆராயப்பட வேண்டும் என்றும், அவருக்குச் சுட்டிக்காட்டினேன்.

அச்சகோதரனுடைய தெய்வீக நியமனத்தினை நான் அங்கீகரியாததால், அவர் மனம் புண்பட்டது மற்றும் பலவருடத்திற்குப் பிற்பாடு அந்த மனகசப்பானது இப்பொழுது, நீங்கள் குறிப்பிடும் கடிதத்தின் வாயிலாக வெளிப்படுகின்றது என்று எண்ணுகின்றேன்; இக்கடிதத்தின் நகல்களானது உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது போன்று, மற்றவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன்.

இந்த உண்மைகள் மற்றும் அனுபவங்களானது, "பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்துதலாகிய" அப்போஸ்தல முறைமையின் ஞானத்தினை என் மனதிற்கு நிரூபித்தது மாத்திரமல்லாமல், இம்முறைமையின் அவசியத்தினையும் என் மனதிற்கு நிரூபித்ததாய் இருந்தது (தீத்து 1:5). இம்முறைமை இல்லையெனில் கர்த்தருடைய ஜனங்கள் அறிவிலும், ஆவியின் கிருபைகளிலும் நேர்த்தியாய் வளர்ச்சியடைய முடியாமல் காணப்படுவார்கள், இன்னுமாக கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையினைப் பற்றியும் மற்றும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசித்து, அவருடைய ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவரும் சமமாய்ச் சகோதரர்களாக, ஒரே

வகுப்பினராக, ஒரே கூட்டத்தாராக, ஒரே சரீரமாக இருப்பது பற்றியுமுள்ள முழுமையான உணர்ந்து கொள்ளுதலுக்குள்ளாக வரமுடியாமல் காணப்படுவார்கள்.

இக்கேள்வி தொடர்புடைய விஷயத்தில் நான் ஆரம்பத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டைக் குறித்தோ அல்லது இப்பொழுது நான் கொண்டிருக்கும் நிலைப்பாட்டைக் குறித்தோ நான் வெட்கமடையவில்லை. நான் முழுச்சூழ்நிலையினையையும் கிரகித்துக்கொள்ளாததற்காகவும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடும், பரத்திற்குரியவைகளை நாடின பிற்பாடும், பரத்திலிருந்து வரும் ஞானத்தினால் நடத்தப்படுவதற்கு முயற்சித்தப் பிற்பாடும், நண்பர்களுடைய மாம்சத்தில் இன்னமும் காணப்படுகின்றதான சுயநலம் மற்றும் பேராசைகளைக் குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கு நான் தவறிவிட்டதற்காகவும் நான் ஆச்சரியப்படவில்லை.

தற்காலத்தில் கர்த்தருடைய வாய்க் கருவிகளாகக் காணப்படும் யாரையாவது அல்லது என்னை, இந்த யுகத்தினுடைய துவக்கத்தில் கர்த்தரினால் அற்புதகரமாக வழிநடத்தப்பட்டதான விசேஷித்த அந்தப் பன்னிரண்டு வாய்க் கருவிகளுடன் நான் ஒப்புமை பண்ணிடாமல், அக்காலத்தில் பிரதானமாய்க் காணப்பட்டவர்களில் சிலருக்குக்கூட, பல்வேறு காரியங்களில் ஆவியின் மனநிலையை உணர்ந்துகொள்வது அவசியமாய் இருந்தது என்ற உண்மையினைக் கவனத்திற்குக் கொண்டுவர பிரயாசம் எடுக்கின்றேன்; உதாரணத்திற்கு: யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே தடையாக இருந்த நடுச்சுவர் உடைந்து விட்டது என்றும், இதனால் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிபந்தனைகளின் கீழ் இப்பொழுது கர்த்தருடைய தயவுகள் விஷயத்தில், விசேஷித்த முன்னுரிமை தொடர்புடைய விஷயத்தில் யூதனென்றோ, புறஜாதியென்றோ, அடிமையென்றோ, சுயாதீனனென்றோ இல்லை என்றும் உள்ள படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கு முன்னதாக, அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு ஒரு தரிசனமும், அதைத் தொடர்ந்து அனுபவங்களும் வேண்டியிருந்தது. அக்காரியம் தொடர்பான சத்தியத்தினைப் பேதுருவுக்குக் காண்பித்திட, அவர் ஒருவகையான தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார்; நான் இன்னொரு வகையான தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன் - அதாவது அப்போஸ்தல முறைமையினிடத்திற்கு என்னை வழிநடத்திட்ட மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய சரியான வளர்ச்சிக்கும், கட்டப்படுதலுக்கும், அபிவிருத்திக்கும் அந்த முறைமையானது இன்னமும் அவசியமாய் இருக்கின்றதென என்னை நம்பச் செய்திட்டதான அனுபவ பாடத்தினைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு சிறு சிறு சபையார்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

## நடைமுறையில் எம்மாற்றமும் இல்லை

வழிநடத்துபவர்கள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, அந்தந்த சிறு சிறு சபையார் தங்களுக்கான வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உண்மையானது, நாங்கள் சபை பிரிவாகிவிட்டோம், பாபிலோன் போன்றாகிவிட்டோம் என்பதை நிரூபிக்கின்றதாக, அச்சகோதரனுடைய கடிதம் தெரிவிப்பதாக, நீங்கள் கூறுவதாக நான் புரிந்துகொள்கின்றேன். சத்தியத்தின் ஆவியினை இழக்கத் துவங்கியுள்ளவர்களுக்கு மற்றும் இருளுக்குள்ளாகப் போகத் துவங்கியுள்ளவர்களுக்குக் காரியங்கள் எப்படியாய்த் தோற்றமளிக்கும் என்று கூறுவது சிரமமே. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், ஒருவர் தன்னைத் தெய்வீக நியமனத்தின்படியானவராக எண்ணுவதாகக் கூறினதற்காக மாத்திரம், அவரைச் சபையார் வழிநடத்துபவராக அங்கீகரித்திட வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை. சத்தியத்தினைப் பெற்றிருப்பவர்கள் யாவரும் ஒரே இருதயத்துடன், ஒரே மனதுடன், ஒவ்வொருவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கும் மற்றும் தங்களால் முடிந்தமட்டும் மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மகிழத்தக்கதாய் அவர்கள் மத்தியிலுள்ள கர்த்தருடைய ஆவியானது, அவர்களை இயக்கிடும் என்பதும் மற்றும் இப்படியாகக் கர்த்தருடைய சித்தம் நிறைவேற்றப்படும் என்பதும் நம்முடைய கருத்தாய் இருந்தது. உடன் ஊழியர்களிடத்தில் நாம் அதிகம் எதிர்ப்பார்ப்புக் கொண்டிருந்ததிலும், ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய அப்போஸ்தல முறைமையாகிய "கைகளை நீட்டும் முறைமையினை" அல்லது இவ்விஷயம் தொடர்பான கர்த்தருடைய மனம் குறித்த அர்ப்பணிக்கப்பட்டவர்களின் கருத்தினை உறுதிப்படுத்திடுவதற்கான வேறு ஏதாகிலும் முறைமையினைப் பின்பற்றிடுவதற்கு நாம் தவறினதிலும்தான், முழுத்தவறும் காணப்படுகின்றது.

## இப்பொழுது அமைப்பல்ல/organization

நாங்கள் ஒரு சபை பிரிவை/denomination அல்லது உட்பிரிவை/sect உருவாக்கிவிட்டோமெனச் சொல்பவர்கள், உண்மையினைத் திரித்துக் கூறுபவர்களாய் இருக்கின்றனர். உட்பிரிவு/sect என்பது பிரிதலைக் குறிக்கின்றது மற்றும் நாங்கள் எதிலிருந்தும் பிரியவில்லை. தேவனுடைய ஜனங்கள் யாவரையும் கர்த்தரோடும், ஒருவரோடு ஒருவரும் இருதய உறவிற்குள்ளாகவும், ஐக்கியத்திற்குள்ளாகவும் கொண்டுவருவதற்கே நம்முடைய பிரயாசம் காணப்படுகின்றது. விலையேறப்பெற்ற இரத்தத்தினைத் தங்களுக்கான மீட்பின் கிரயம் என்று விசுவாசிப்பவர்களும் மற்றும் கர்த்தருக்கான ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப் பண்ணுகிறவர்களும் மற்றும் இதற்குச் சாட்சி பகிர்கின்றவர்களுமானவர்கள் யாவரையும் நாம் சகோதரர்களென ஏற்றுக்கொள்கின்றோம். இவ்விஷயங்களில் இசைவாய்க் காணப்படுபவரை - ஆனால் இவையல்லாதவைகளிலும், குறைவான முக்கியத்துவம் உள்ள பாடங்களிலும் அவரது கருத்துகள் என்னவாக இருப்பினும், அவரைக் கிறிஸ்தவ ஐக்கியத்தினின்று நாம் புறந்தள்ளுவதில்லை.

நாம் ஒரு சபை பிரிவினர்/ denomination அல்ல; ஏனெனில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அல்லாமல், வேறெந்த நாமத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. நாங்கள் கிறிஸ்தவர்கள். நாங்கள் வேதவாக்கியங்களில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான அனைத்து நாமங்களையும் ஏற்றுக் கொள்கின்றோம், எனினும் இவைகளில் ஒன்றையாகிலும் கிறிஸ்தவ சபை பிரிவுகளிலுள்ள நம்முடைய நண்பர்கள் சூட்டிக்கொள்வது போன்று, வேறுபடுத்திக் காண்பிக்கும் நாமமாக நாம் பயன்படுத்துகிறதில்லை. ஒவ்வொரு தனிநபரும், கர்த்தரோடுகூடத் தனது உறவினைக் கொண்டிருக்கின்றான் மற்றும் கர்த்தரோடு உறவு பெற்றிருப்பதின் காரணமாக, இப்படியாகக் கர்த்தரோடு உறவு பெற்றிருக்கும் யாவரோடும் உறவு பெற்றிருப்பான்; ஏனெனில் கிறிஸ்துவின் சபை ஒன்றாய் இருக்கின்றது. கர்த்தரோடுள்ள இந்த நம்முடைய ஒன்றிணைதலானது, வேதவாக்கியங்களின் படியான ஒன்றிணைதலாகும் மற்றும் இது ஒன்று மாத்திரமே உள்ளது; மற்றும் நாங்கள் அறிந்திருக்கிறவரைக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின வேறெந்த கூட்டத்தாரும் இந்த ஒரு நிலைக்கு முழுமையாய் வந்ததாக இல்லை. கர்த்தருடைய கிருபையினால், இந்த ஓர் உறவு நிலையில், அவர் "நல்லது!" என்று கூறி, நம்மைத் தம்முடைய மகிமையான இராஜ்யத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்வது வரையிலும் நிற்போமென நாம் நம்புகின்றோம்.

## பாபிலோன் என்ற வார்த்தை

"பாபிலோன்" என்ற வார்த்தையின் அர்த்தமாவது, நாம் அடிக்கடி சுட்டிக்காண்பிப்பது போன்று, குழப்பத்தினைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஒழுங்குமுறைச் சார்ந்த விஷயத்தில் குழப்பம் இல்லை; ஏனெனில் பாபிலோனின் பல்வேறு பகுதிகளானது, அதன் பல்வேறு சபை பிரிவுகளானது, எந்தக் குழப்பமும் அனுமதிக்கப்படாத அளவுக்கு மிகவும் வரம்புள்ள ஒழுங்குமுறைகளை உடையதாய் இருக்கின்றது. பாபிலோனின் குழப்பமானது, அவளது உபதேசங்களில் காணப்படுகின்றது; அவை வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாதவைகளாகவும், குழப்பமானவைகளாகவும், முரண்பாடானவைகளாகவும், பெரும்பான்மையானவைகள் தவறானவைகளாகவும் காணப்படுகின்றது. உங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதான கடிதத்தினை எழுதின சகோதரன், பாபிலோனின் நிலைக்குள்ளாகும் அபாயத்தில் காணப்படுபவராகக் காணப்படுகின்றார் என்று நாம் அஞ்சுகின்றோம் - மூப்பர்கள் சார்புடைய அவரது கருத்துக்களானது முழுவதும் குழப்பமானவைகளாகக் காணப்படுகின்றது என்பது உறுதி. தானும், மற்ற மூப்பர்களும் எந்த மனித நியமனத்தின் பேரில் இல்லாமல், மாறாக திவ்விய நியமனத்தின்பேரில் சபையை ஆண்டிட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகையில், பாபிலோன் என்று நாம் எண்ணுகின்றதான உரோமின் போப் செய்வதைக் காட்டிலும் மிகவும் மிஞ்சி செயல்படும் நிலைக்குள்ளாகுகின்றார்; ஏனெனில் உரோமின் போப் கூடத் தகாதவிதமாய்க் கைப்பற்றுவதன் மூலம் இந்த, தன் ஸ்தானத்தை அடைந்திடாமல், மாறாக Cardinal/கார்டினல்களினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

---

R 3746

# "நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து, கவனியுங்கள்"
## மத்தேயு 7:15-29

"திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்."
யாக்கோபு 1:22

நம் பாடம் மலைப்பிரசங்கத்தின் காரியங்களைப் பின்தொடர்ந்துவரும் காரியங்கள் பற்றியதாகும். கர்த்தருடைய ஜனங்கள் கேட்ட காரியங்களைக்குறித்த முக்கியத்துவத்தை, அவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காகவும், நற்செய்தியைக் கேட்பதோடுகூட, அதற்குக் கீழ்ப்படிவதுகுறித்த முக்கியத்துவத்தை அவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காகவும் கர்த்தர் உவமையாக இவைகளைப் பேசியுள்ளார். அவருடைய வார்த்தைகளானது, கவனமாய்க் கீழ்ப்படிதலின் மூலம் உண்டாகும் நல்ல விளைவுகளிலிருந்து, கீழ்ப்படிய தவறிப்போவதினால் உண்டாகும் திருப்திகரமற்ற விளைவுகளை வேறுபடுத்திக் காண்பிக்கின்றது. மந்தைகளைத் தவறாய் வழி நடத்தும்படிக்கு, மந்தைகள் மத்தியில் வருவார்கள் என்று கர்த்தரால் அறிவிக்கப்பட்டுள்ள கள்ள போதகர்களை நாம் கவனித்துப்பார்த்து அறிந்துக்கொள்வது எவ்விதத்திலும் பொல்லாத ஊகங்கள் ஆகாது. மேலும், மந்தையின் கவனத்திற்கு, இப்படிப்பட்ட தவறான போதகர்களைக்கொண்டு வருவதும் தீமை பேசுதலாகவும் இருக்காது. கள்ள போதகர்களைக் குறித்து, ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் முன்னமேகூறி, அவர்களுக்கு எதிராக எச்சரித்தும் உள்ளபடியால், ஆண்டவருடைய மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றுகிற அனைவரும் அப்படியே செய்ய வேண்டும்.

நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டியுள்ள விதத்திலேயே நாமும் அத்தகையவர்களை வேறுபடுத்திக் கண்டறிந்துக்கொள்ள வேண்டும். வெளித்தோற்றத்தில் இத்தகையவர்கள் மென்மையுள்ளவர்களாகவும், மெருகூட்டப்பட்டவர்களாகவும், கல்வியறிவு உடையவர்களாகவும், நற்குணங்கள் உடையவர்களாகவும் காணப்பட்டாலும், இத்தகையவர்களை நாம் மந்தைக்கான தலைவர்களாக ஏற்றுக்கொள்வதற்கு, நம்பிக்கை வைப்பதற்கு முன்னதாகவும், இத்தகையவர்களிடமும், இவர்களுடைய நோக்கங்களுடனும், இலட்சியங்களுடனும், தனிப்பட்ட வாழ்க்கையுடனும் நாம் நெருங்கி பழகிப்போவதற்கு முன்னதாகவும், இத்தகையவர்களுடைய வெளித்தோற்றமான அறிகுறிகளைக்காட்டிலும், மற்ற அநேகக்காரியங்களினால் இவர்களை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். இதைக்குறித்துதான், இத்தகையவர்கள் வெளித்தோற்றத்தில் பரிசுத்தமடைந்திருந்த தோற்றம் கொண்டிருந்தாலும், அதேசமயம் இவர்கள் சுயநலமுள்ளவர்களாகவும், பேராசையுள்ளவர்களாகவும் இருப்பார்களானால், இவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையுடன் காணப்பட வேண்டுமெனக் கர்த்தர் நமக்குக் கூறுவதின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்." "தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்" (அப்போஸ்தலர் 20:29; 2 பேதுரு 2:1, 3).

ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டிருக்கும் ஓநாய்களைக் கண்டுபிடிப்பதிலும், எதிர்ப்பதிலும், அவர்களிடமிருந்து தூர இருப்பதிலும் நாம் விழிப்பாய் இருக்க வேண்டியிருப்பினும், நமது கர்த்தருடைய **மற்றச்சில** போதனைகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, நமக்கெதிராய் இராதவர்கள், நம் சார்பில்தான்/பட்சத்தில்தான் இருக்கின்றார்கள் என்றும், கர்த்தருக்குச் சொந்தமானவர்களென எவர்களுடைய இருதயங்களும், குணலட்சணங்களும் சாட்சிக் கொடுகின்றதோ, அவர்கள் ஒருவேளை கர்த்தருக்கான ஊழியத்திலும் அவருடைய செய்தியைப் பிரகடனப்படுத்தும் விஷயத்திலும் நம்மோடுக் கூடப் பின்பற்றுகின்றவர்களாக இல்லாமல் இருந்தாலும், அவர்களை நாம் ஓநாய்களெனக் கண்டனம் பண்ணவோ அல்லது சகோதரர் என்று ஏற்க மறுக்கவோ கூடாது என்றுமுள்ள போதகரின் போதனைகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும் (மாற்கு 9:38-40; லூக்கா 9:49-50). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நாம் அனைவரிடமும் அன்புகூர வேண்டும். மேலும், கர்த்தரை அன்புகூருபவர்களும், அவருடைய ஆவியை வெளிப்படுத்துகிறவர்களுமாய் இருக்கும் அனைவருக்கும், அவர்கள் நம்மோடு சேர்ந்து காணப்பட்டாலும், காணப்படாவிட்டாலும், நாம் வாழ்த்துதல் சொல்ல வேண்டும். தெய்வீகப் பிரமாணம் மிக அகலமாகவும், அதேசமயம் மிகக்

குறுகலாகவும்கூட உள்ளது. சீஷத்துவம் மற்றும் குணலட்சணத்தின் விஷயத்தில் தெய்வீகப் பிரமாணம் குறுகலாக இருக்கின்றது. மீட்கும் இரத்தத்தின் மீதான விசுவாசம், ஆண்டவருக்கு அர்ப்பணம் பண்ணுதல் மற்றும் அவருடைய ஆவியை வெளிப்படுத்துவதே சீஷத்துவத்திற்கான காரியங்களாகும். தெய்வீகப் பிரமாணம் இவர்களுக்குள் அகலமாகக் காணப்படுகின்றது. ஆயினும், உலகத்தின் விஷயங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தெய்வீகப் பிரமாணம் குறுகலாகவே இருக்கின்றது.

## "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"

கள்ளப் போதகர்களிடமிருந்து, உண்மையுள்ளவர்களை நாம் அறிந்துக்கொள்வது எப்படி என்ற நம்முடைய கேள்விக்கு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று கர்த்தர் பதிலளிக்கின்றார். இதை விவரிக்கும் வண்ணமாக, பாலஸ்தீனியாவில் ஒரு முட்செடியில் திராட்சப்பழங்களைப்போன்ற பழங்களும், அத்திபழத்தின் வடிவத்திற்கு ஒத்த ஒருவகை முட்பூண்டுகளும் காணப்படுகின்றதாய் இருப்பினும், முட்செடிகளில் உண்மையான திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் உண்மையான அத்திப்பழங்களையும் எதிர்ப்பார்க்க முடியுமோ என்ற கேள்வியின் மூலம் கர்த்தர் விவரிக்கின்றார். ஆயினும், திராட்சப்பழங்கள் போன்றும், அத்திபழ வடிவைப்போன்றும் பழங்கள் இருந்தாலும், அதனை யாரும் திராட்சப்பழம் என்று நம்பி ஏமாறும் ஆபத்தில் இல்லை. அதோடுகூட, கர்த்தருடைய ஜனங்களில் எவரும் சக கிறிஸ்துவின் பின்னடியார்களுடைய ஜீவியத்தின் கனிகள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்பான விஷயத்தில் தெளிவில்லாதவர்களாகவும் இருக்கக்கூடாது.

கர்த்தருடைய உண்மையான ஜனங்களினுடைய ஜீவியத்தின் கனிகள், அவர்களோடு தொடர்புக்குள்வரும் அனைவருக்கும் புத்துணர்வையும், போஷாக்களிக்கின்றதாகவும் இருக்கும் என்பதே கருத்தாகும். அதேசமயம், முட்பூண்டுகளைப்போன்றிருப்பவர்கள் தப்பறைகள், பொல்லாத ஊகங்கள், தவறான உபதேசங்களெனும் பிரச்சனையை உண்டுபண்ணும் விதைகளை எப்பொழுதும் வீசிக் கொண்டிருப்பவர்களாகக் காணப்படுவார்கள். இன்னுமாக, சிலர் புத்துணர்வு அளிக்கும் கனியைக் கொடுப்பதற்குப் பதிலாக, முட்செடிகளைப் போன்று தங்களோடு தொடர்புக்குள் வருபவர்களை, காயப்படுத்துவதற்கும், தொந்தரவு பண்ணுவதற்கும், எரிச்சல் அடையச்செய்வதற்கும், மனவேதனை அடையப்பண்ணுவதற்கும், வளர்ச்சியைத் தடைபண்ணுவதற்கும் ஏதுவாக தொடர்ந்து செயல்படுகின்றவர்களாய் இருப்பவர்கள். கர்த்தருடைய ஜனங்களைத் தவறாய் வழிநடத்தக்கூடிய கள்ளப்போதகர்களுக்கும், மந்தைக்கான ஊழியத்திற்கெனத் தங்களுடைய ஜீவனையே சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கக்கூடிய உடன் மேய்ப்பர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கர்த்தருடைய ஜனங்களால் எளிதில் கண்டுகொள்ள முடியும் என்பதே கருத்தாகும். ஒரு வகுப்பார் எப்போதும் தீங்கு விளைவிப்பவர்களாகவும், பெலவீனப்படுத்துகின்றவர்களாகவும், நாசம் உண்டாக்குகின்றவர்களாகவும் இருப்பார்கள்; மற்றொரு வகுப்பார் எப்போதும் உதவி அளிப்பவர்களாகவும், கட்டி எழுப்புபவர்களாகவும், பெலப்படுத்துகின்றவர்களாகவும், சமாதானம் பண்ணுகின்றவர்களாகவும் இருப்பார்கள்.

ஓநாய்களுக்கும், மந்தைக்கும் மற்றும் கனிக்கொடுக்கிற செடிகளுக்கும், பாதகமான செடிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நமக்கு அளித்தது போதுமென்று எண்ணாமல், நமது கர்த்தர் மற்றும் ஒரு விளக்கத்தை அதாவது, இன்னும் ஆராய்வதற்கு உதவியான ஒரு விளக்கத்தைக்கொடுக்கின்றார். கெட்ட மரத்திடமிருந்து நல்ல மரத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றார். தவறான ஒரு கிறிஸ்தவனிடமிருந்து, ஓர் ஆரோக்கியமான கிறிஸ்தவனை வேறுபடுத்திக்காட்டுகின்றார். நல்ல மரம் நல்ல கனிகளைக்கொடுக்கும், கெட்ட மரம் கெட்ட கனிகளைக்கொடுக்கும், அதாவது விரும்பத்தகாத பொல்லாத கனிகளைக்கொடுக்கும் என்று விவரிக்கின்றார். இவைகளை நாம் இயற்கையில் பார்த்திருக்கின்றோம். ஆரோக்கியமான நிலையிலுள்ள ஆப்பிள் மரம், ஆரோக்கியமான ஆப்பிள் பழங்களைக்கொடுக்கும். ஆனால், நோய் தாக்கப்பட்டு, பராமரிப்பு இல்லாமல் வெட்டி விடப்படாமல், புழுக்களால் தாக்கப்பட்டுள்ள மரமானது, புழுக்களுள்ள நலிந்துபோன கனிகளைக்கொடுக்கின்றன.

கர்த்தர் கொடுத்துள்ள இந்த உவமை விளக்கத்தில், சரியான விதத்திலேயும், ஆரோக்கியமான விதத்திலேயும் தங்களுடைய ஓட்டத்தை ஆரம்பிக்கும் தம்முடைய சீஷர்கள்,

பொல்லாதவர்களாகவும், தங்களுடைய ஆவிக்குரிய பெலத்தையும், கனிகொடுக்கும் தன்மையையும், கவனமாய் இருக்கும் தன்மையையும் இழந்து போகிறவர்களாகவும் ஆகுவதற்கு வாய்ப்புண்டு என்ற உண்மையைக் குறிப்பிடுகின்றார். மண்ணில் போஷாக்கற்ற தன்மை ஏற்படும்போது மரம் நோய்வாய்ப்பட்டு அழிந்து போய்விடுகின்றது. ஆகவே, கிறிஸ்தவன் ஒருவன் அறிவில் பெருகினாலும், சரியானவகையான ஆவிக்குரிய போஷாக்கை அவன் எடுத்துக்கொள்ளவில்லையெனில், ஆவிக்குரியவற்றில் கீழ்நோக்கிப்போவதற்கான வாய்ப்புகள் உண்டு. மேலும், தேவையற்ற மரக்கிளைகளை வெட்டிவிடாமல் இருக்கும்போது கிளைமுளைகள் (sucker) வளர்ந்து, மரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தி, அது கனி கொடுக்காதபடி, அதை இறுதியில் அழித்துப் போடுவதுபோல, கிறிஸ்தவனுக்கும் குணலட்சணமும், ஆவியின் கனிகளும் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக சிட்சைகள், தேவையற்றவைகளை வெட்டிவிடும் காரியம் அவசியமாகும். நம்முடைய பரமபிதா மாபெரும் தோட்டக்காரராவார். மேலும், சரியான பராமரிப்பை நமக்குக்கொடுப்பதாக அவர் வாக்களித்தும் உள்ளார். எனினும், மரங்களின் விஷயத்தில் காணப்படுவதுபோன்று, அப்படியே நம் விஷயத்தில் காணப்படுவதில்லை. காரணம், (மரங்களைக்காட்டிலும்) நம்முடைய உயர்தரமான பிறப்பினிமித்தமும், சித்தம், தனித்தன்மை ஆகியவற்றில் நமக்குத் தேவன் போன்ற சாயல் இருப்பதினிமித்தமும் நாம் வித்தியாசமாகக் கையாளப்படுகின்றோம்.

நமக்கு என்ன போஷாக்குத் தேவை என்று முடிவுபண்ணுவது ஒரு குறிப்பிட்டளவு நம்முடைய பொறுப்பில் விடப்பட்டுள்ளது. தேவன் சத்தியம் எனும் நல்ல மண்ணையும்/நிலத்தையும், புத்துணர்வு அளிக்கும் கிருபை எனும் மழை தூறலையும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் எனும் போஷாக்கையும் கொடுக்கின்றார். ஆனால், இவைகளைப் பயன்படுத்திக் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதென்பது அவருடைய ஜனங்கள் ஒவ்வொருவருக்கான பொறுப்பாகும். ஒருவேளை நாம் குறைவுள்ளவர்களாகி, போஷாக்கு இன்மையின் காரணத்தினால் கனிக்கொடுக்காதவர்களாகிப்போனால், இதற்குத் தோட்டக்காரர் பொறுப்பாளியல்ல. அவருடைய நல்ல வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் போஷாக்கைக்கொடுக்கத் தவறுவதில்லை. நமக்குப் போஷாக்கு இல்லையெனில், தவறு நம்மிடத்தில்தான் உள்ளது. இப்படியே வெட்டிவிடுதலின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கர்த்தர் பரீட்சைகளை, கஷ்டங்களை, சிட்சைகளை அனுப்புகின்றார். ஆனால், இவைகளை நாம் தவிர்ப்பதும்/புறக்கணித்துத் தாண்டிச் செல்வதற்கும், இவைகளைப் பயன்படுத்தத் தவறுவதற்கும், இவைகள் மூலம் நம்முடைய சுபவாத்தில் வளர்ந்துள்ள தவறான காரியங்களையும், பெலவீனங்களையும், குறைவுகளையும் சரிச் செய்துகொள்ள தவறுவதற்கும் வாய்ப்புண்டு. எவ்வளவுதான் வளர்ச்சிகள் நம்மிடத்தில் ஏற்பட்டாலும் அல்லது எவ்வளவுதான் வெட்டிவிடுதலை நாம் பெற்றுக்கொண்டாலும், உவமையில் வருகின்றதுபோல நம்முடைய சத்துவத்தை எடுத்துப்போடுகிறதும் மற்றும் அங்கீகரிக்கப்படத்தக்கதான கனியை நாம் கொடுக்காதபடிக்கு நம்மைத் தடைபண்ணிப் போடுகிறதுமான கிளைமுளைகள் போன்றதான வீடுகள், நிலங்கள் (அ) பூமிக்குரிய இலட்சியங்கள், பொருட்கள் (அ) நபர்கள் மீது நாம் நமது ஆவல்களை வைப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

ஆரோக்கியமான மரம் கெட்ட கனிகளைக்கொடுக்க முடியாது; கெட்ட மரமும் நல்ல கனிகளைக்கொடுக்க முடியாது. கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தை என்னும் கண்ணாடியின் முன்நின்று தன்னைப் பரிசோதித்து, தன்னுடைய சொந்த குணலட்சணங்கள், பண்புகள் தெய்வீக நிலைப்பாட்டிற்கு ஒத்துப்போகின்றதா (அ) ஒத்துப்போகாத நிலையில் இருக்கின்றதா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதாயினும், கனி நல்ல கனியா (அ) கெட்ட கனியா என்று தீர்மானிக்கும் இவ்விஷயத்தில் கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒவ்வொருவனும் மற்றவர்களுடைய விஷயத்திலும், தன்னுடைய சொந்த விஷயத்திலும் நியாயத்தீர்ப்பைப் பண்ணுவதற்குச் சொல்லப்பட்டுள்ளனர். அதாவது, என்னுடைய சொந்த வாழ்க்கையினுடைய பலன்கள், கனிகள், சாட்சி என்ன என்பதையும், என்னுடைய சகோதரனுடைய ஜீவியத்தினுடைய பலன்கள், கனிகள், சாட்சி என்ன என்பதையும் தீர்மானிப்பதில் நாம் நியாயத்தீர்ப்புச் செய்யலாம். இம்மாதிரியான பரீட்சைகள் தம்முடைய மந்தைக்குத் தலைவர்களாக இருப்பவர்களிடத்தில் விசேஷமாகப் பொருந்தும் என்று நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார். சபையை வழிநடத்துபவர்களாக இருப்பவர்கள் அனைவரும் மாதிரிகளாகக் காணப்பட வேண்டும். மேலும், இந்த நற்கனிகளே, நல்ல ஆரோக்கியமான குணலட்சணத்திற்குரிய அதாவது, கர்த்தருக்கு முழு இசைவுடன் காணப்படும் குணலட்சணத்திற்குரிய தேர்வாகப் பார்க்கப்பட வேண்டும். அனைவரும் பூரணமற்றவர்கள் என்பது உண்மைதான். மேலும், இருப்பதிலேயே சிறந்த நோக்கம் இருந்தாலுங்கூட, நாம் விரும்பிய அனைத்தையும் நம்மால் செய்ய முடியவில்லை என்பதும் உண்மையே. ஆனால், கர்த்தருடைய சகோதரர்களிலேயே பெலவீனனாய்க் காணப்படும்

சகோதரர்கூட மற்றச் சகோதரர்கள் உணர்ந்துக்கொள்ளத்தக்கதாக சில கனிகளையாகிலும் கொடுக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். மேலும் இந்தக் கனிகளானது, மற்றச் சகோதரர்களால் தெய்வீக நிலைப்பாட்டின்படி அதாவது, மாம்சத்தின்படியிராமல், ஆவியின்/சித்தத்தின்படி அங்கீகரிக்கபட வேண்டும். ஆகையால், தேவனுடைய உண்மையான பிள்ளைகளனைவரும், சகோதரருக்கு முன்பும், உலகத்துக்கு முன்பும் நேர்மையையும், நோக்கத்தில் உண்மையையும், அனைத்து விஷயங்களிலும் பரலோகத்திலிருக்கும் பிதாவினுடைய சித்தத்தையே செய்ய நாடும் அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்தை, மனதை, சித்தத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

இன்றுவரையிலும் பாலஸ்தீனியாவில் கனிகொடுக்கும் மரங்கள் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால், கனிகொடுக்காத மரமும், மிகக்குறைவான கனிகளைக் கொடுக்கும் மரமும் விட்டு வைக்கப்படுவதில்லை. ஏனெனில், இத்தகைய மரம் வைத்து வைக்கப்பட்டிருந்தால் வருமானம் வருவதற்குப்பதிலாக நஷ்டமே ஏற்படுகின்றது. இதற்கு இசைவாகவே நமது கர்த்தருடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (யோவான் 15:2).

யூத ஜனங்களை அடையாளப்படுத்துவதற்கென நமது கர்த்தர் அத்திமரத்தைப் பயன்படுத்தினார். மேலும், அது விரும்பிய கனி/பலனைக்கொடுக்கவில்லை என்றும், அது வெட்டப்பட்டு, அழிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டுகின்றார். யூத ஜனங்களை, முற்றிலும் அழித்துப் போட்ட அடையாளமான "அக்கினியானது" அத்திமரத்தை அழித்துவிட்டது. யூதர்கள் நிச்சயமாக கர்த்தருடைய கரத்திலிருந்து இன்னும் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தாலும் கூட, அவ்வாசீர்வாதத்தை, "அவர்களுடைய பிதாக்களோடு பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல" என்று கர்த்தர் கூறுகின்றார் (எரேமியா 31:32). ஆசீர்வாதமானது, புதிய உடன்படிக்கையின் வாயிலாகவே எதிர்க்காலத்தில் இஸ்ரயேலுக்கும், மற்ற ஜாதியாருக்கும் கடந்துவரும். இதுபோலவே, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலுங்கூட நல்ல மரம் மற்றும் கெட்ட கனி தொடர்பான தனி நபர் பரீட்சைகள், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் வருவது மாத்திரமல்லாமல், இன்னுமாக கிறிஸ்தவ மண்டலமும் ஒட்டுமொத்தமாகக் கனியற்றவர்களாகவும், கர்த்தருக்குத் திருப்தி அளிக்காதவர்களாகவும் நிரூபிக்கப்படுவார்கள்/கண்டுபிடிக்கப்படுவார்கள். மேலும், கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்கள் சேர்க்கப்பட்டு, மகிமையடைந்த பிற்பாடு, மரமாகிய அமைப்பு முழுவதுமாக மகா உபத்திரவக் காலத்திற்குள் கடந்து செல்லும். இந்த மகா உபத்திரவக் காலத்தோடு, இந்த யுகம் நிறைவடைந்து, புதிய யுகம் ஆரம்பமாகும். கிறிஸ்தவ மண்டலத்தில் காணப்பட்ட ஜனங்கள் ஆயிரவருஷ யுகத்தினுடைய உடன்படிக்கையின் கீழ் நிச்சயமாய்த் தயவடைந்து, ஆசீர்வாதம் அடைந்தாலுங்கூட, இவர்களுக்கு தற்காலத்திலுள்ள ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் முன்வைக்கப்பட்ட விசேஷமான சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் என்றென்றைக்குமாக மறைந்து போய்விடும்.

## "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை"

அடுத்ததாக, நமது கர்த்தர் பெயரளவிலான அநேக எண்ணிக்கைக்கொண்ட பின்னடியார்கள், அவருடைய ஆவியைக்கொண்டிராதவர்களாகவும், அவர் விரும்புகிற கனிகளைக்கொடாதவர்களாகவும், அவரால் அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் வகுப்பாரின் அங்கங்கள் அல்லாதவர்களாகவும் காணப்படுவார்கள் என்று கூறுகின்றார். ஆனால், வெளித்தோற்றத்தில் அழைக்கப்பட்டவர்கள் போன்றும், அவர் விரும்பும் கனிகொடுக்கிறவர்கள் போன்றும் காணப்படுவார்கள். இப்படியாக, இருப்பவர்கள் "அநேகராய்" இருப்பார்கள் என்றும் கர்த்தர் குறிப்பிடுகின்றார். இன்னுமாக, அவர் "அந்நாளில்" இருப்பார்கள் என்று சொல்லும்போது, நம்முடைய நாட்களை அதாவது, இந்த யுகத்தின் முடிவின்போது . . . சோதனை காலத்தை . . . தம்முடைய சம்பத்தைக் கூட்டிச் சேர்க்கவும், அவர்களைத் தம்முடைய மணவாட்டியாக, தம்முடைய அங்கங்களாக, இராஜ்யத்தில் தம்முடன் கூட இருப்பவர்களாக மகிமைப்படுத்தபடும் வருங்காலத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். "அந்நாளில் . . ." அதாவது நம்முடைய நாட்களில் அநேகர், தாங்கள் கர்த்தரை அறிவார்கள் என்றும், தாங்கள் தீர்க்கத்தரிசனம் சொல்பவர்கள் (அ) போதகர்கள் என்றும், தாங்கள் பிசாசுகளைத் துரத்தி, பாவத்தையும், பல்வேறு தீமைகளையும் எதிர்த்தார்கள் என்றும், அவருடைய நாமத்தில் பல வல்லமையான கிரியைகளைச் செய்தார்கள் என்றும், கல்லூரிகள், குருமார்கள் பயிற்சி

கல்லூரிகளையும், உதவி புரியும் காப்பகங்கள் முதலியவைகளை அமைத்தார்கள் என்றும் கூறுவார்கள். "உம்முடைய நாமம்" என்று சொல்லுகையில் இவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை மந்திரம்போல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

இவ்விஷயங்கள் நம்முடைய நாட்களில் எவ்வளவு உண்மையாகக் காணப்படுகின்றது! ஆண்டவருடைய வார்த்தைக்கும், ஆவிக்கும் எதிரான விதத்தில் அடிக்கடி எத்தனை பேர் கர்த்தருடைய நாமத்தை வழங்கி, தங்களுடைய வியாபார நிறுவனங்களோடு, கர்த்தருடைய நாமத்தை இணைத்துக்கொள்கின்றனர். ஏன் இவர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகின்றனர்? மந்திர வார்த்தைகளாகப் பயன்படுத்திக்கொள்ளும் மந்திரவாதிபோல இவர்கள் செயல்படுகின்றனர். இன்னுமாக, தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்கும், தங்களுடைய மனங்களைத் திருப்திப் படுத்திக்கொள்வதற்கும், தங்களுடைய சுய சித்தங்களைச் செய்து வருவதின் மூலம், தாங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்து வருகின்றார்கள் என்று தங்களையே நம்ப வைப்பதற்கும், கர்த்தருடைய நாமத்தை இவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். இவ்விஷயங்கள் நம்முடைய நாட்களிலுள்ள அனைத்து மத அமைப்புகளிலும் எவ்வளவுக்கு உண்மையாகக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு சபைகளை எடுத்துக்கொள்ளுங்கள், இவர்களுடைய மதவெறியின் ஆவிக்கும், விசுவாசப் பிரமாணங்களுக்கும், முறைகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராக தெய்வீகப் பார்வை காணப்படுகின்றது என இவர்கள் ஏறக்குறைய தெளிவாக அறிந்திருந்தபோதிலும், இவர்களுடைய அமைப்புகளுடனும்/ ஸ்தாபனங்களுடனும், முறைமைகளுடனும் கிறிஸ்துவின் நாமத்தை ஏதோ ஒருவிதத்திலாகிலும் இணைத்துக்கொள்ளாததுவரையிலும் இவர்கள் திருப்திக்கொள்வதில்லை.

ஆனால், பரீட்சிக்கின்ற காலம் சமீபித்துள்ளது. இந்த அமைப்புகளுடைய கனிகுறித்து கர்த்தர் விசாரிப்பார்; அவர் ஏமாற்றப்பட முடியாதவர்; அனைவரும் தம்முடைய நியாயத்தீர்ப்பு நீதியானது என்று காணத்தக்கதாக, கெட்ட கனிகளை அவர் வெளிப்படுத்துவார். கர்த்தருடைய வார்த்தைகள் இவர்களால் புறக்கணிக்கப்பட்டதினிமித்தம் சீர்க்குலைவு ஏற்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்படும். கிளைமுளைகளைத் தறித்துப்போடுவதற்கு ஏதுவான அனுபவங்களனைத்தும் அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தருடைய வார்த்தைகள் புறக்கணிக்கப்பட்டதினிமித்தம் பெருமை, ஆஸ்தி, உலகப்பிரகாரமான இலட்சியம், பகட்டுத்தன்மை முதலிய கிளைமுளைகள் விருத்தியடைந்துள்ளது வெளிப்படுத்தப்படும். பாபிலோனிலுள்ள தீர்க்கதரிசிகள், கள்ளத் தீர்க்கதரிசிகள் என்றும், இவர்களுடைய போதனைகளானது ஜனங்களைத் தவறாய் வழிநடத்தியுள்ளது என்றும், ஆசீர்வாதம் அருளுவதற்குப் பதிலாகப் பாதகத்தையே/பாதிப்பையே உண்டுபண்ணியுள்ளது என்றும், பிரகாசமடையச் செய்வதற்குப்பதிலாக குருடாக்கவே செய்துள்ளது என்றும் வெளிப்படுத்தப்படும். இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்தியுள்ள பட்சிக்கிற ஓநாய்கள் என்றும், மனுஷருடைய கனம் மற்றும் முக்கியத்துவம் மற்றும் பிரபலத்தை அடக்கியுள்ள இலட்சியங்களுக்காக பசி கொண்டவர்கள் என்றும், தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களைப் பெருக்கிக்கொள்வதற்காக மந்தையின் நலன்களை விற்றுப்போட்டவர்கள் என்றும் வெளிப்படுத்தப்படும். இவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கும் விஷயமும், தங்களையே வஞ்சித்துப்போட்ட விஷயமும், மதவெறியின் விஷயமும், இயேசுவின் நாமம் எனும் மந்திர வஸ்திரத்தின் கீழ் இவர்கள் விருத்திச்செய்த காரியமே ஒழிய, இவர்கள் அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் பரிசுத்த ஆவியை விருத்திச் செய்துகொள்ளவில்லை என்பதும் வெளிப்படுத்தப்படும். இவைகள் அனைத்தையும் அந்நாள் அறிவிக்கும்/வெளிப்படுத்தும். இவர்களால் தேவனுடைய நாமம் கனவீனப்படுத்தப்பட்டது என்பதற்கும், அவருடைய வார்த்தைகள் தவறாய்க் காட்டப்பட்டது என்பதற்கும், இறுதியில் முழு உலகமும் சாட்சியாக விளங்குவார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகள் தங்களுடைய சொந்த பொழிவை/ஆதாயத்தை அதாவது, தங்களுடைய சொந்த சபை பிரிவின் ஆதாயத்தையே தேடினவர்களாக இருந்தார்கள் (ஏசாயா 56:11).

கர்த்தர் இந்தச் சபை பிரிவுகளை ஒருபோதும் அறியவில்லை. அதாவது, அவர் இவைகளை ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை, அவர் இவைகளுக்கு அதிகாரமும் அளிக்கவில்லை. இவை மனுஷரால் உண்டுபண்ணப்பட்டவைகளும், மனுஷனுக்கானவைகளுமே ஒழிய, கர்த்தருக்காகவும் கர்த்தருடைய மகிமைக்காகவும் அல்ல. கிறிஸ்தவ மார்க்கத்தினுடையதாய்க் காணப்படும் அனைத்தும் தங்களால்தான் என்று கூறி, பெருமைகொண்டு, தற்பெருமை அடித்துக்கொண்டிருக்கும் இவர்களோ, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதும், மீட்பருக்கென்று அர்ப்பணம் பண்ணிக்கொண்டதுமான ஆதி திருச்சபையாரின் எளிமையின் மூலமாகத் கர்த்தருடைய நோக்கம் தழைத்தோங்கும்விஷயத்தில், தங்களுடைய உதவி இல்லாமலேயே

தழைத்தோங்கியிருக்கும் என்பதை உணராமல் காணப்படுகின்றனர். மணவாட்டி வகுப்பார் சேர்க்கப்பட்டு, மீதமானவர்கள் விடப்படுவதைத்தான், "நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை, ஒருக்காலும் உங்களை அங்கீகரிக்கவில்லை, ஒருக்காலும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை" என்ற வார்த்தைகள் தெரியப்படுத்துகின்றன. மேலும், கர்த்தரிடமிருந்து அதிகாரம் பெற்றிராத இந்தச் சபை பிரிவுகள், மகா உபத்திரவக் காலத்திற்குள் கடந்து செல்வார்கள். இந்தப் போலி அமைப்புகள் மூலம் வஞ்சிக்கப்பட்டுள்ள அனைத்து ஜனக்கூட்டமும், சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், தேவனுடைய கிருபையான திட்டத்தின் நிறைவேறுதலில் வெளிப்படும் அவருடைய குணலட்சணத்தைப்பற்றின சரியான புரிந்துக்கொள்ளுதலை அடைவதற்குமுரிய மகிமையான வாய்ப்புகளுக்குள் ஆயிரவருஷ யுகத்தில் கடந்துவருவார்கள் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆகவே, மாபெரும் பரிசையடைய தவறுகிறவர்கள், சிறிய பரிசை (அ) சீர்ப்படுத்தப்படுதலில் தேவதயவைப் பெற்றுக்கொள்வதற்கான மகிமையான வாய்ப்பை இன்னமும் பெற்றிருக்கின்றார்கள்.

## "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்"

"பாபிலோன்" என்று அழைக்கப்படும் சபை பிரிவுகளுக்குள் இன்னமும் உற்சாகமுள்ள வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்களிடத்தில் சத்திய அறிவு சென்று சேர்ந்து, அவர்களை விடுவிக்கும் என்றும் நாம் நம்புகின்றோம். இதைக் கர்த்தர், "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வா" என்று கூறுவதன் மூலம் தெரிவிக்கின்றார். அவருடைய ஜனங்களில் சிலர், பாபிலோனில் இன்னமும் காணப்படுவதை முன்வைப்பதின் மூலம், இவர்களை வெளியே வரும்படி அழைப்பதே, கர்த்தருடைய நாமத்தில் நாம் தற்காலத்தில் செய்ய வேண்டிய ஊழியமாகும். இந்தத் தற்கால/ஏற்றகால சத்தியமானது கர்த்தருக்கு உரியவர்கள் யார் என்றும், அவர்கள் எங்கே நிற்கின்றார்கள் என்பதையும், அவர்களுக்கான கடமை என்னவென்பதையும் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. அக்கிரமத்தின் அமைப்புகளிலுள்ள, உற்சாகமுள்ள வேலைக்காரர்கள் தவிர மீதமானவர்கள், உண்மைக்கு எதிராகக் காணப்படுகின்ற இவர்கள், தேவனுடைய செய்தியைத் தவறாய்க் காட்டுகின்றவர்களாகிய இவர்கள், ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளவர்களாகிய இவர்கள், இருதயத்தில் கர்த்தருக்கு உண்மையாக இராதபடியினால், பாபிலோனிலிருந்து வெளியே வரமாட்டார்கள். மேலும், இவர்கள் பாபிலோன் மீதுவரும் கண்டனத்துக்கு உள்ளாவார்கள். இவர்கள் மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசித்து, சிறிது காலம் கர்த்தருடனான அனைத்து ஐக்கியத்தினின்றும் துண்டிக்கப்படுவார்கள். இந்த அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள், தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டத்தைத் தவறாய்க் காட்டி, மனுக்குலத்தின் உலகத்தின்மேல் வருவதற்கு உதவிபுரிந்த உபத்திரவங்களுக்குள் முழுமையாய் அமுக்கப்படுவார்கள். அது கடுமையான சிட்சையாக இருக்கும். "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" என்பதே இவர்களுக்கான நம்முடைய நம்பிக்கையாகும் (ஏசாயா 26:9).

## "கன்மலையின் மீதா அல்லது மணலின் மீதா"

உவமையில் கன்மலையின் மீது கட்டப்பட்ட வீடானது சபையையும் மற்றும் மணலின் மீது கட்டப்பட்ட வீடானது உலகத்தையும் குறிப்பதில்லை. மாறாக, சபைக்குள் இருக்கும் இரு பிரிவினரையே குறிக்கின்றது. "அவர் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்பவர்களே" இவ்வுமையில் அடங்குகின்றனர் (இவ்வுமையில் வரும் பாத்திரங்கள் ஆவர்). உலகம் நமது கர்த்தருடைய செய்தியைக் கேட்பதில்லை. அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று, உலகத்தார் ஆவியக்குரிய விஷயங்களுக்குக் குருடர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கின்றனர். கர்த்தருடைய வார்த்தைகளைக்கேட்டு, அதனை ஏற்றுக்கொள்கிறவர்கள் பெயரளவிலான சபையாராக இருக்கின்றனர். இப்படியாகப் பெயரளவாகக் காணப்படும் சபையார் மத்தியில் சிலர் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். மற்றவர்களோ கீழ்ப்படியாதவர்களாகக் காணப்படுகின்றனர். கீழ்ப்படிகின்றவர்கள், கன்மலை மீது கட்டப்பட்டவர்களாகவும், கீழ்ப்படியாதவர்கள் மணல் மீது கட்டப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

கன்மலையின் மீது கட்டப்பட்டவர்கள், கர்த்தருடைய செய்தியைக் கேட்பவர்களாக மாத்திரம் இராமல், அதற்குத் தங்களால் முடிந்தமட்டும் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இருக்கின்றனர் எனக் கர்த்தர் கூறுகின்றார். மலைப்பிரசங்கத்தின் வாயிலாக எவைகள் தேவனுடைய அங்கீகரிப்பிற்குப்

பாத்திரமானவைகள் என்றும், எவைகள் தேவனுடைய அங்கீகரிப்பிற்குப் பாத்திரமற்றவைகள் என்றும் கர்த்தர் கூறின விஷயங்களே கர்த்தருடைய செய்தியாகும். இந்தத் தெய்வீகப் போதனைகளுக்கு, பரலோகத்தின் செய்திகளுக்கு ஏற்றபடிச் செய்கின்றவர்களும், செய்வதற்குத் தங்களால் முடிந்தளவுக்கு நாடுபவர்களும் நிலையாய் இருக்கும் அஸ்திபாரத்தைப் போட்டுக்கொள்கின்றனர். இந்த அஸ்திபாரம் தற்கால ஜீவியத்தின் புயல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகளால் சேதமடைவதில்லை.

ஆண்டவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அதற்கு "ஆம் கர்த்தாவே" என்று கூறியும், செயல்முறையில் ஆண்டவருடைய போதனைகளைச் செயல்படுத்தாதவர்கள், கிறிஸ்து மீது, அதாவது சத்தியம் எனும் கன்மலையின் மீது சரியாகக் கட்டப்படாதவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் நிலையற்ற அஸ்திபாரத்தின் மீது தங்களுடைய நம்பிக்கையை, தங்களுடைய விசுவாசத்தைக் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் மீது ஜீவியத்தின் நாசமோசங்கள் வருகையில், இவர்களுடைய நம்பிக்கை வலுவிழந்துவிடுகின்றன; மற்றும், இவர்களுடைய விசுவாசம் சீர்க்குலைந்து போய்விடுகின்றன. இவ்விதமாக, நாம் அவருடைய சித்ததத்தை அறிந்துக்கொள்வது அதாவது, உபதேச ரீதியாக அறிந்துக்கொள்வது மாத்திரம் போதுமானதாயிராமல், மாறாக அவருடைய போதனைகளுக்கு முழு இசைவான நிலையில் நாம் கொண்டுவரப்படுவதற்கும், இருதய பூர்வமான இசைவான நிலையில் நாம் கொண்டு வரப்படுவதற்கும், நம்மால் முடிந்தமட்டும் ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கீழ்ப்படியும் நிலையில் கொண்டுவரப்படுவதற்கும் ஏதுவான குணலட்சணத்தினுடைய அத்தகைய ஒரு வளர்ச்சியைக் கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார் என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றார். கீழ்ப்படிதல் இல்லாத, கிருபையில் வளர்ச்சியில்லாத அறிவின் மீது கட்டப்பட்ட விசுவாசத்தை உடையவர்கள், இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள், மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாகவும் இருக்கமாட்டார்கள், தேவனுடைய நேச குமாரனோடு உடன்சுதந்திரராகவும் ஆகமாட்டார்கள்.

## "அந்நாளின் அக்கினி"

இப்பாடத்தில், நமது கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்கள் மீது வரும் சோதனைகள் மற்றும் பரீட்சைகளை மாத்திரம் விவரியாமல் விசேஷமாக, இந்த யுகத்தின் முடிவில் அதாவது, "அறுவடை" காலத்தில் வரும் மாபெரும் பரீட்சையையும் விவரிக்கின்றவராக இருக்கின்றார். உவமையில் அவருடைய பின்னடியார்கள் என்று அறிக்கைப் பண்ணுபவர்களுடைய விசுவாச கட்டிடத்தின் மீது பெருமழை, பெருவெள்ளம் மற்றும் காற்று அடிக்கின்றது. மேலும், இவைகள் கர்த்தருடைய போதனைகளுக்கு இசைவாக சரியான விதத்தில் கட்டப்படாதவர்களின் விசுவாசத்தைக் கவிழ்த்து விடுகின்றது. ஆனால், சத்தியம் எனும் கன்மலை மீது அஸ்திபாரமிடப்பட்டவர்களின் விசுவாசத்தைச் சேதப்படுத்த முடியவில்லை என்று பார்க்கின்றோம். கிறிஸ்தவ மண்டலம் முழுவதின் மீதும், ஒரு வல்லமையான சத்திய பெருமழை சொரிந்துக்கொண்டு இருக்கின்றது. பயங்கரமான/பெரிய காற்று ஏற்கெனவே சீறி வீசிக்கொண்டிருக்கின்றது. பல்வேறு சபை பிரிவுகள் அதிர்ச்சியில் நடுங்கிக்கொண்டிருக்கின்றது. மனித பாரம்பரியம், விசுவாசப் பிரமாணங்கள், கூற்றுகள், "இருண்ட யுகத்தினுடைய" மூட நம்பிக்கைகள், அறிவீனங்கள் மீதான அவர்களுடைய அஸ்திபாரங்கள் திருப்தியற்றது என்பது உணரப்பட்டு வருகின்றது. சீக்கிரத்தில் சத்தியம் எனும் புயல்கள் (காற்று), பெயர்ச்சபையின் மணலாகிய அஸ்திபாரத்தை அசைத்துவிடும். பின்னர் அழிவு தொடரும். தேவனுடைய உண்மையான ஜனங்கள் மாத்திரமே, ஏற்கெனவே ஆரம்பமாயுள்ள "அந்நாளுக்குரிய" மாபெரும் புயலில் நிலைநிற்பார்கள்.

கர்த்தர் குறிப்பிட்டுள்ள இதே வெள்ளத்தையும், காற்றையும்தான், ஏசாயா தீர்க்கத்தரிசியின் மூலமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. "நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும். நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்; வாதை புரண்டுவரும்போது அதின்கீழ் மிதிக்கப்படுவீர்கள். அது புரண்டு வந்த மாத்திரத்தில் உங்களை அடித்துக்கொண்டுபோம்; அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டுவரும்; அதைப்பற்றிப் பிறக்கும் செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும்." (ஏசாயா 28:17-19)

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும், "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே

வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்று கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 3:13). பவுல் உண்மையான விசுவாசிகள் கன்மலையின் மீது, உண்மையான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்பதை மாத்திரம் சுட்டிக் காண்பிக்காமல், சரியான வீடும் இருக்க வேண்டியதின் அவசியத்தையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றவராக இருக்கின்றார். அதாவது விசுவாசமும், (வீடு) சரியான அஸ்திபாரமும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றார். ஒருவகை விசுவாச வீடு மரம், புல், வைக்கோலால், எரிந்து அழிந்து போகக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டுள்ளது என்றும், இவைகள் ஒவ்வொரு உபதேசத்தையும் சோதித்து, தப்பறைகளை அழித்துப்போடும் தெய்வீக நியாயத்தீர்ப்பு என்னும் அந்நாளுக்குரிய அக்கினியால் விரைவில் அழிக்கப்பட்டுவிடும் என்றும் பவுல் சித்தரித்துக் காட்டுகின்றார். இன்னும் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள், தெய்வீக வாக்குத்தத்தங்களினால் கட்டப்பட்டுள்ள சரியான இன்னொரு வகை விசுவாச வீட்டையும், அவை எப்படி ஒவ்வொரு பரீட்சையிலும் நிலைத்து நிற்கும் என்றும் பவுல் சித்தரித்துக் காட்டுகின்றார்.

எந்தப் பரீட்சையிலும் நாம் நிலைத்து நிற்கத்தக்கதாக நாம் கற்பாறையான அஸ்திபாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது முதலாம் படிப்பினையாகும். இரண்டவதாக, கிறிஸ்துவின் மீது விசுவாசமும், அவருக்கும், பாவ நிவாரண வேலையிலும் நேர்மையும் கொண்டு, கன்மலை மீது காணப்படுபவர்களில் இரண்டு வகுப்பார் காணப்படுவார்கள் என்பதாகும். "சிறு மந்தையினர்" என்ற வகுப்பார், தேவ வார்த்தைக்கு உண்மையுடனிருந்து, அதை உயர்த்திப்பிடித்து, அதைப் பாதுகாத்தவர்கள் ஆவார்கள்; மற்றும் "திரள்கூட்டத்தினர்" என்ற வகுப்பார் தெய்வீக வாக்குத்தத்தம் தொடர்பான விஷயங்களில் போதுமானளவு ஜாக்கிரதை கொண்டிராதவர்களும், போதுமானளவு கடினமாய் முயற்சிக்காதவர்களும் ஆவார்கள். மேலும், திரள்கூட்டத்தினருடைய விசுவாசக் கட்டிடமானது பட்சிக்கப்படத்தக்கதான தப்பறைகளைப் பெருமளவில் கொண்டுள்ளது. "ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்." "அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (1 கொரிந்தியர் 3:12, 15; வெளிப்படுத்தல் 7:14).

## "திருவசனத்தின்படிச் செய்கிறவர்களாக இருங்கள்"

"திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:22). தெய்வீகச் சித்தம் மற்றும் திட்டம் பற்றின அறிவினால் நாம் கனப்படுத்தப்படுவது, மாபெரும் ஆசீர்வாதமும், வரமுமாக இருந்தாலும் கூட, இது மாபெரும் பொறுப்பையும் நமக்குக்கொண்டு வருகின்றது. "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" (லூக்கா 12:48). பரலோகத்திலிருந்து இயேசு கிறிஸ்து மூலமாய்ச் சமாதானத்தைப் பேசுபவருடைய குரலைக் கேட்டுள்ள நமக்கு, பாவமன்னிப்புப்பற்றின செய்தியினுடைய பலத்தினால், அர்ப்பணிப்பின் வாயிலாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நமக்கு, மற்றவர்களைக்காட்டிலும் அதிக பொறுப்புள்ளது. நாம் அழைக்கப்பட்டுள்ள மகிமையான காரியங்களை அடைவதற்கு நாம் இந்தக் கனத்தை மாத்திரம் கொண்டிருப்பவர்களாயிராமல், நாம் சிலாக்கியங்களைப் பயன்படுத்த வேண்டும்; மற்றும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு நம்முடைய கீழ்ப்படிதல் மூலமாக நாம் சிலாக்கியங்களை ஏற்றுக்கொண்டுள்ளதையும் காட்ட வேண்டும். தெய்வீக ஊழியத்திற்கு நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தல், நீதிக்கு உண்மையாய்க் கீழ்ப்படிதல் மற்றும் இதே பாதையில் மற்றவர்களும் செல்வதற்கான உதவி அளிப்பதில் பிரயாசம் எடுத்தல் எனும் வகையில் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதல் காட்டுவதின் மூலம் நாம் சிலாக்கியங்களை ஏற்றுக்கொண்டுள்ளதையும் காட்ட வேண்டும்.

**ஆமென்!**

---

# பஸ்காவைப் பலியிட வேண்டிய

## லூக்கா 22:7

பஸ்கா என்ற வார்த்தையானது, யூதர்கள் மத்தியில் பண்டிகை வாரத்திற்கென்று, அதாவது நீசான் மாதம் பதினைந்தாம் தேதி துவங்கும் பஸ்கா பண்டிகைக்கென்று வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பெயராய்க் காணப்படுகின்றது. ஆனால் **இதையும்** மற்றும் பண்டிகை என்ற வார்த்தை இடம்பெறாத நிலையில் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானது, பஸ்கா என்று பொதுவாய்க் குறிப்பிடப்பட்டிருக்கின்றதுமான வேதவாக்கியங்களில் இடம்பெறும் **பஸ்கா என்ற வார்த்தையையும்** நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது. அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானது பஸ்கா என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு உதாரணமாக, "பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது" என்று நாம் வாசிக்கின்றோம். இன்னுமாக நண்பர் ஒருவரிடத்தில் கேட்கும்படிக்காக நமது கர்த்தர் சீஷர்களை அனுப்பினபோது, "அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்" என்பதாக நாம் வாசிக்கின்றோம். மீண்டுமாக "பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" என்று வாசிக்கின்றோம். ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கென நமது கர்த்தர் சீஷர்களோடு அமர்ந்தபோது, "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய இராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இதைப் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்கா 22:7, 11, 13, 15, 16).

பஸ்கா ஆட்டுக்குட்டியைப்பார்க்கிலும், யூதர்களானவர்கள் இன்னமும் பஸ்கா வாரத்தைக்குறித்தே அதிகம் கவனிக்கிறவர்களாக இருப்பினும், நாமோ நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய மாதிரிக்கு இசைவாக, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டிக்கு" நிழலான மற்றும் உலகத்திற்கு முன்னதாகவே கடந்துபோகப்படுகின்றவர்களாகிய (அ) தப்புவிக்கப்படுபவர்களாகிய "முதற்பேறானவர்களின் சபையாகிய," இப்பொழுது விசுவாசிக்கின்ற நாம், யாருடைய தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்படுகின்றோமோ, அவருக்கு நிழலான ஆட்டுக்குட்டியின் மீதே விசேஷித்தக் கவனத்தைக் கொண்டிருக்கின்றோம்.

யூதர்களுக்கான தேவனுடைய ஏற்பாடுகளானது நிழலானவைகளாகவும், நிஜமான அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு விலையேறப்பெற்ற பாடங்கள் நிரம்பினவைகளாகவும் காணப்படுகின்றன. நிழலில் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் இரண்டு மாபெரும் மதம் சார்ந்த நிகழ்வுகளை அருளியிருந்தார்; ஒன்று மதச் சார்பற்ற ஆண்டினுடைய துவக்கத்திலும், மற்றொன்று மதச் சார்புடைய ஆண்டினுடைய துவக்கத்திலும் கொடுத்திருந்தார். மதச் சார்புடைய ஆண்டானது வசந்த/இளவேனிற் காலத்தில், இளவேனிற் சம இரவு பகல் நாளை (vernal equinox) தொடர்ந்துவரும் முதல் அமாவாசையிலிருந்து எண்ணப்படுகின்றது; கிட்டத்தட்ட ஏப்ரல் 1-ஆம் தேதியாகும்; ஆனால் சூரிய மற்றும் சந்திரக்காலத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றதாய் இருக்கும். இது தொடர்புடையதாகவே, அதாவது அவர்களது மதச் சார்புடைய ஆண்டினுடைய துவக்கக்காலத்தில், கர்த்தர் பஸ்காவை நியமித்தார்; அதாவது பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுதலும், புசிக்கப்படுதலும் பதினான்காம் தேதியில் இடம்பெற வேண்டும் என்றும், இதைப் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையினுடைய பஸ்கா வாரமானது தொடர வேண்டும் என்றும் நியமித்தார். யூதர்களுக்கான மதச் சார்பற்ற ஆண்டானது ஆறு மாதங்களுக்குப் பிற்பாடு, ஏழாம் மாதத்தில், கிட்டத்தட்ட அக்டோபர் 1-ஆம் தேதியில் துவங்குகின்றது; இந்த மதச்சார்பற்ற ஆண்டு தொடர்புடையதாகவே கூடாரப் பண்டிகைத் தொடர்பாகப் பாவநிவாரண பலிகள் நியமிக்கப்பட்டன; இத்தருணத்தின்போது, இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டு, கானானுக்குப் போகும் வழியிலான தங்களது வனாந்தரப்பிரயாணத்தை நினைவுகூர்ந்தார்கள்.

இந்த இரண்டு மாபெரும் மதம் சார்ந்த ஆசரிப்புகளும் ஒரே பாடத்தினை வெவ்வேறு கோணங்களில் அடையாளப்படுத்துகின்றன; முதலாவது ஆசரிப்பானது மிகவும் குறிப்பாக முதற்பேறானவர்களின் கடந்துபோகுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; இந்த முதற்பேறானவர்கள், பின்னர் ஆசாரியத்துவப் பொறுப்பினைப் பெற்றுக்கொண்டதான லேவி கோத்திரத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்நிழலானது மோசேயை உள்ளடக்கினதான இந்த ஆசாரிய கோத்திரத்தின் வாயிலான இஸ்ரயேல் அனைத்திற்குமான விடுதலையையும்கூட அடையாளப்படுத்துகின்றது என்றாலும், இந்நிழலானது விசேஷமாக, குறிப்பாக, முழுமையாக முதற்பேறானவர்களாகிய, ஆசாரிய கோத்திரத்தினுடைய விடுதலையை, ஆசீர்வாதத்தை மாத்திரமே

கையாளுகின்றதாய் இருக்கின்றது. ஏழாம் மாதத்தின் நிழலானது, மிகக் குறிப்பாக முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான நிவாரணத்தை, மன்னிப்பை மற்றும் தேவனுடன் ஒப்புரவாக விரும்பும் மனுக்குலம் யாவருடைய ஒப்புரவாகுதலைத் தெரிவிக்கின்றதாய் இருப்பினும், இந்தப் பாவநிவாரண நாளினுடைய பலியில், சபையினுடைய பாவங்களுக்கான பாவநிவர்த்தியானது, பாவநிவாரண நாளினுடைய முதலாம் பலியினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாலும், பொதுவான உலகத்தினுடைய பாவங்களுக்கான பலியானது, இரண்டாம் பலியினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாலும், உலகத்தின் மீது ஆசீர்வாதம் கடந்துவருவதற்கு முன்னதாக, சபையினிடத்தில் தேவனுடைய விசேஷித்த தேவதயவானது கடந்துவருவது தெரிவிக்கப்படுகின்றது.

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளில் பொதுவாய் உணர்ந்துகொள்ளப்படாத ஆற்றலும், அர்த்தமும் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 5:7). நம்முடைய கர்த்தர் உலகத்தினுடைய பஸ்காவாயிராமல், சபையினுடைய பஸ்காவாகக் காணப்படுகின்றார். இஸ்ரயேல் அனைத்தும் மனுக்குலத்தின் உலகத்திற்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் ஜனங்கள் அனைவருடைய அடிமைத்தனமானது, மனுக்குலம் முழுவதும் பாவம், மரணம் மற்றும் நிழலில் பார்வோன் எனும் — நிஜத்தில் சாத்தான் எனும் மாபெரும் விசாரணைக்காரன் கீழ் அடிமைப்பட்டிருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அனைவருமே விடுவிக்கப்பட வேண்டுமென்பதே விருப்பமாகக் காணப்பட்டது மற்றும் கர்த்தருடைய ஏற்பாடானது, அனைவரையும் இறுதியில் விடுவிக்கப்போகின்றது. இதையே அப்போஸ்தலன் பின்வருமாறு எழுதுகையில் விவரிக்கின்றார்: "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்."

ஆனால் அப்போஸ்தலன் தவிப்பவர்களை இரண்டு வகுப்பார்களாக பிரிக்கும் வண்ணமாக, "தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குக் காத்துக்கொண்டிருந்து . . . . இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" (உரோமர் 8:19, 20, 22) என்று கூறுகின்றார். இங்கு அவர் சாத்தானுடைய அடிமைத்தனம், பாவத்தின் வல்லமை மற்றும் மரணத்தின் வல்லமையினின்று மனுக்குலத்தின் உலகத்தினுடைய விடுதலையானது, உலகத்தினை ஆளுகைச் செய்யும் தேவனுடைய இராஜ்யம் என மகிமையிலும், வல்லமையிலும் கிறிஸ்து, மகிமையடைந்த சபையினுடைய வெளிப்படுதல் மூலமாக மாத்திரமே வருமென்று குறிப்பிடுகின்றார். முதற்பேறான சபையானவளின் தற்காலத்தினுடைய நிலையினைக்குறித்தும் அப்போஸ்தலன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (உரோமர் 8:23). இரண்டு வகுப்பாருக்கும் தவிக்கும் அனுபவம் காணப்படுகின்றது மற்றும் இரண்டு வகுப்பாருக்கும், காத்திருக்கும் அனுபவங்களும் காணப்படுகின்றன; ஆனால் அவர்கள் வெவ்வேறு காரியங்களுக்காகவும் காத்திருக்கின்றனர். முதற்பேறான சபையானவள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கெடுப்பதின் வாயிலாக, கிறிஸ்துவின் சரீரமென, அவளது விடுதலைக்காகக் காத்திருக்கின்றாள். பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகவும், தெய்வீக நிபந்தனைகளின்படி தெய்வீகத் தயவை விரும்பும் யாவரையும் தூக்கிவிடத்தக்கதாகவும், சபை வகுப்பார் பூரணமடைந்து, மகிமையடைந்து, அதிகாரம் பெற்றுக்கொண்டு, தங்கள் பிதாவினுடைய இராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பதற்காக, தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி உலகமோ காத்துக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது நிழலைப்பார்க்கலாம்; இஸ்ரயேலர் அனைவரும் சங்காரத்தூதனால் ஆபத்தில் காணப்படாமல், மாறாக முதற்பேறானவர்கள் மாத்திரமே காணப்பட்டார்கள் என்பதைக் கவனியுங்கள். எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் மாத்திரமே சங்காரம் பண்ணப்பட்டனர். ஆகையால் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே தப்புவிக்கப்பட்டனர் (அ) கடந்துபோகப்பட்டனர். ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டவர்களாகிய இந்த முதற்பேறானவர்களைக் கர்த்தர் விசேஷமாக தம்முடையவர்கள் என்று குறிப்பிடுகின்றார்; மற்றும் இவர்களைப் பிரித்து விசேஷித்த, சொந்த ஜனங்களென வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்துக் கோத்திரங்களிலுமுள்ள முதற்பேறானவர்களுக்குப் பதிலாக லேவிக் கோத்திரமானது கர்த்தரினால் எடுத்துக்கொள்ளப்பட்டது; இந்தக் கோத்திரத்தினை விசேஷமாய்த் தம்முடையவர்களென அவர் ஏற்றுக்கொண்டார் மற்றும் இவர்கள் நிழலில் விசுவாச வீட்டாரை அடையாளப்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட்டனர். இந்த விசுவாச வீட்டாரிலிருந்து, அடுத்ததாக நமது பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவுக்கும், அவரது சரீரமாகிய சபை எனும் உடன் ஆசாரியர்களாகிய ஆசாரியக் கூட்டத்தாருக்கும் நிழலாய்க் காணப்படும் ஓர் ஆசாரியக்

குடும்பத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆகையால் இப்படியாய்க் காரியங்களைத் தெளிவாய்ப்பார்க்க முடிகின்றவர்களால், பஸ்காவானது விசுவாச வீட்டாருடன் மாத்திரமே தொடர்புடையதெனக் கண்டுகொள்வார்கள். இதற்கு இசைவாகப் பார்க்கையில் ஆட்டுக்குட்டியினைப் புசிக்கும் காரியத்திற்கு நிஜமான கர்த்தருடைய இராப்போஜனமானது, உலகத்திற்காக ஏற்படுத்தப்படாமல், விசுவாச வீட்டாருக்கென்று முழுமையாகவும், தனிப்பட்ட விதத்திலும் நிறுவப்பட்ட ஒன்றாய்க் காணப்படுகின்றது.

## பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

நிழலில் ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதையும், அதன் இரத்தமானது வீட்டினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதையும், அதன் மாம்சமானது, கசப்பான கீரைகளுடன் புசிக்கப்படுவதையும் காண்கையில், இவைகளின் நிஜத்தைப் பார்க்கையில், கிறிஸ்துவே நிஜமான ஆட்டுக்குட்டி என்றும், அவரது இரத்தம் நம்முடைய இருதயங்களில் தெளிக்கப்படும்போது, நம்மைத் துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாக்கி, நாம் கடந்துபோகப்பட்டோமென, நாம் தப்புவிக்கப்பட்டோம் என, அவரது இரத்தத்தின் வாயிலாக நமக்கு ஜீவன் அருளப்பட்டதென நமக்கு உறுதியளிக்கிறது என்றும் நாம் காண்கின்றோம். இந்தத் தெளிக்கப்படுதலானது, விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் ஆட்டுக்குட்டியினைக் கசப்பான கீரைகளுடன் புசித்தல் என்பது நிஜத்தில் நம்முடைய அர்ப்பணித்தலையும், கிறிஸ்துவில் நம்முடைய பங்கெடுத்தலையும், அவரது பாடுகளில் நமது பங்கெடுத்தலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; கசப்பான கீரைகள் குறிக்கின்றதான சுயத்தை வெறுத்தல்களானது, பசியைத் தூண்டிவிடுகிறதாய் இருந்து, அதிகமதிகமாய் ஆட்டுக்குட்டியில் பங்கெடுப்பதற்கு நம்மை ஊக்குவிக்கின்றதாய் இருக்கின்றது. சாட்சியினை நம்புபவர்கள் அனைவரும், விலையேறப்பெற்ற இரத்தத்தினை விசுவாசிக்கின்ற அனைவரும் கடந்துபோகப்பட்டவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இவர்கள் இன்னுமாகத் தேவனைப் பணிந்துகொள்வதற்கும், அவருக்கு ஊழியம் செய்திடுவதற்கும் விரும்புகின்றவர்களும், தேவனை அன்புகூருபவர்களுக்குமான ஜனங்கள் அனைவருடைய பொதுவான விடுதலைக்காகக் காத்திருக்கவும் செய்கின்றனர். இப்படியாக விசுவாசிக்கின்றவர்கள் தங்களைத் தற்காலத்தில் அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் கருதி, மேன்மையான பரம தேசமாகிய, பரம கானானை எதிர்நோக்கினவர்களாகக் காணப்பட்டனர். இக்காரியங்கள் அனைத்தும் நிழலான இஸ்ரயேலில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது; ஏனெனில் அந்தப் பஸ்கா இரவில் ஆட்டுக்குட்டியைப் புசிக்கையில், அவர்கள் கையில் தடிப் பிடித்துக்கொண்டவர்களாகவும், பிரயாணத்திற்கென அரைக் கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். இதுபோலவே இன்றுள்ள கர்த்தருடைய உண்மையுள்ள ஜனங்களானவர்கள் தங்களை அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், நிரந்தரமான இடமற்றவர்களாகவும் உணர்ந்து மேலானவைகளை நாடுபவர்களாகக் காணப்பட வேண்டும்.

## கர்த்தருடைய இராப்போஜனம்

நாம் மேலே குறிப்பிட்டிருப்பவைகளே, கர்த்தருடைய இராப்போஜனம் என்றும், இயேசுவின் இறுதிவிருந்து சடங்கு (Communion, Eucharist) என்றும் பொதுவாய் அழைக்கப்படுகின்றதும், காவல் கோபுரத்தின் (Watch Tower) வாசகர்களால் நினைவுகூருதல் (Memorial) என்று அறியப்பட்டிருக்கின்றதுமான நமது கர்த்தருடைய மரணத்தினை நினைவுகூரும் ஆசரிப்பிற்கான அடிப்படையாக இருக்கின்றதெனக் கிறிஸ்தவ ஜனங்கள் அனைவரும் ஓரளவிற்கு அடையாளம் கண்டுகொண்டவர்களாய்க் காணப்படுகின்றனர். பெரும்பான்மையான கிறிஸ்தவ ஜனங்களுடைய பிரச்சனை என்னவெனில், அவர்களுடைய வேத ஆராய்ச்சியில் போதுமானளவுக்கு ஆராய்ச்சியும், விடாமுயற்சியும் இல்லாமையே ஆகும்; மற்றும் இதன் காரணமாக இவ்விஷயத்திலும், மதம் சார்ந்த அனைத்துக் காரியங்களிலும் தங்களது விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் ஏறக்குறைய குழப்பமுடையவர்களாகவும், தெளிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் கர்த்தருடைய வார்த்தையைப் போதியாமல், பெரும்பாலும் மனிதர்களுடைய பாரம்பரியங்களையே போதிப்பதினாலும்; உலகத்திற்கே பிரதானமாய்ப் பிரசங்கம் பண்ணுகிறவர்களாய் இருந்து, கடந்துபோகப்பட்டவர்களாகிய, அதாவது மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்துபோனவர்களாகிய, அதாவது தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகப் புத்திரர்களென ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகிய — முதற்பேறானவர்களின் சபைக்குப் பிரசங்கம் பண்ணாதவர்களாக இருந்ததினாலேயே, இவர்களது ஊழியமானது, குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவானதாக நமக்குத் தோன்றுகின்றது.

நமது கர்த்தருடைய பலியை, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலாகப்பார்ப்பது தொடர்புடைய விஷயத்தினாலான தெளிவற்ற கண்ணோட்டமானது

நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய ஆசரிப்பிற்கான ஏற்றக்காலம் தொடர்புடைய விஷயத்திலுள்ள குழப்பத்தில் நன்கு வெளிப்படுகின்றது. கிறிஸ்தவ மண்டலத்தை நாம் பார்க்கையில், புராட்டஸ்டண்டினர் இந்த ஆசரிப்பை, நினைவுகூருதலை, பரவலாய் ஆசரிக்கின்றனர். ஆனால் அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்காமல், மற்றும் ஆண்டுநிறைவு நாளினைப் பொருட்படுத்தாமல் ஏதோ நிழலான பஸ்காவிற்கும், நாம் ஆசரிக்கும்படிக்கு நமது கர்த்தரினால் கட்டளையிடப்பட்டதான நிஜத்திற்கும் தொடர்பு இருப்பதை அறியாதவர்கள்போல, ஆசரித்து வருவதை நாம் காண்கின்றோம். ஆகையால் சிலர் இராப்போஜனத்தை நான்கு மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் வாரந்தோறும் என்றும் ஆசரிக்கின்றனர்; கடைசியில் குறிப்பிடப்பட்டவர்கள் தவிர மீதமானவர்கள் அனைவரும் இவ்வாசரிப்பின் காரியத்தினை விருப்பத்திற்கு ஏற்ப, வசதிக்கேற்ப செய்கிற காரியமாய்க் கருதி, இந்த விசேஷித்த மற்றும் சரியான வருடந்தோறுமான ஆசரிப்பை, ஆசரிக்காமல் காணப்படுகின்றனர். சீஷர்கள் (Disciples) என்ற கிறிஸ்தவ பிரிவிலுள்ள நமது சகோதரர்கள் வாரந்தோறும் ஆசரிக்க வேண்டுமென விடாப்பிடியாய்க் காணப்படுகின்றனர்; இதற்குக் காரணம் என்னவெனில் இவர்கள் அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில், கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கு ஞாபகார்த்தமாய்க் கூடினதான வாரக்கூடுகைகளில், அவர்கள் "அப்பம் பிட்டதாக" வாசிக்கின்றனர். கொள்கைகள் எதையும் நிதானித்துப்பார்க்காமல் இராப்போஜனத்தின் ஆசரிப்பானது, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் அப்பம் பிட்கப்படுதலை மாத்திரமே குறிக்குமென இவர்கள் முடிவிற்கு வந்துவிட்டனர்.

ஆனால் நமது கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அப்பம் பிட்கும் நிகழ்வினால் தம்மை பல்வேறு தருணங்களில் — எம்மாவு என்னும் கிராமத்திலும், மீண்டுமாக மேல்வீட்டறையிலும் — வெளிப்படுத்தினதை ஆதித் திருச்சபையினர் நினைவுகூர்ந்ததினால், அவர்களுக்கும், நம் அனைவருக்கும் எல்லாமுமாகக் காணப்பட்ட அந்த உயிர்த்தெழுதலினாலான சந்தோஷங்கள் மீண்டும் மீண்டுமாக நினைப்பூட்டப்படுவதற்கென வாரத்தினுடைய முதல்நாளில் ஒன்றுகூடுவதில் மகிழ்வுற்றனர் என்று நாம் காண்கின்றோம். பொது மாநாடுகள் நிறைவடைகையில் நாம் கொண்டிருப்பதான அன்பின் விருந்துகள் (அ) சாதாரணமான உணவைப்பார்க்கிலும் மேலான ஒன்றை அவர்கள் உண்டதாக எந்தக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாக ஆதித் திருச்சபையினர் செய்ததினால், நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றார் என்பதினால் மற்றும் தேவனுடைய இரக்கத்தினால் தெளிக்கப்பட்ட அவரது இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாக நாம் கடந்துபோகப்பட்டுள்ளோம் என்பதினால் ஆதித் திருச்சபையினர் வாரத்தின் முதல் நாளில் பஸ்காவை ஆசரித்ததாகவும் எந்தக் குறிப்பும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாக அப்பம் பிட்குதலை அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனமாகக் கருதினதாகவும் குறிப்பிடப்படவுமில்லை; கர்த்தருடைய நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் அப்பத்துடன்கூட முக்கியமான அம்சமாகத் திகழும் பாத்திரம் குறித்தும் குறிப்பிடப்படவுமில்லை.

## ஒரு தப்பறை மற்றொன்றிற்கு வழிநடத்துகின்றது

நமது கர்த்தருடைய நினைவுகூருதலுக்கான வருடந்தோறுமான ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் இந்த அஜாக்கிரதையின் ஆரம்பமானது எளிமையாக அடையாளம் கண்டுகொள்ளப்படலாம். ஆதித் திருச்சபையானது இதை வருடந்தோறும் ஆசரித்தது மற்றும் வருடந்தோறுமான இந்த ஆசரிப்பானது பழமைமிக்க கிறிஸ்தவ சபைகளால், உரோமன் கத்தோலிக்கர்கள், கிரேக்க கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பிலர்கள் முதலானவர்களால் இன்னமும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது; இவர்கள் அனைவரும் புனித வெள்ளியை, கிறிஸ்துவாகிய நம்முடைய பஸ்காவின் இந்த அடிக்கப்படுதலின் நினைவுகூருதலாகக் கொண்டாடுகின்றனர். ஆனால் இவர்கள் இக்காரியங்கள் அனைத்தினுடைய முக்கியத்துவம் வாய்ந்த முக்கியத்துவங்களைப் பெரிதும் பார்க்கத் தவறிப்போனவர்களானார்கள். மூன்றாம் நூற்றாண்டினுடைய காலப்பகுதியில் உள்ளே நுழைந்த மிகவும் கடுமையான தப்பறையாகிய பூசைப் பலியானது, வருடந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டிய நினைவுகூருதலிலும், இதில் நினைவுகூரப்படுகின்றதான மாபெரும் பலியிலும் மையம் கொள்ளவேண்டிய விசேஷித்த கவனத்தை அதன்பால் ஈர்த்துவிட்டதாய்க் காணப்படுகின்றது. பூசை பலியில், அதை ஏறெடுக்கும் குருவானவர் மூன்று புனிதமான இலத்தீன் வார்த்தைகளை உச்சரித்து அப்பம் மற்றும் திராட்சரசம் மீது அற்புதம் புரிவதால், அவைகள் மாறி, இயேசுவின் மாம்சமாகவும், இரத்தமாகவும் உண்மையில் ஆகிவிடுகிறதாம். இப்படியாகப் பூசை பலியை ஏறெடுக்கும் குருவானவர் புதிதாய்க் கிறிஸ்துவைப் பலிச்செலுத்துவதாகவும், பாவிகளுக்காக ஏறெடுக்கப்படும் பூசையில், தனிப்பட்ட பாவங்களுக்கெனக் குருவானவர் புதிய பாவநிவாரண பலியைச்செலுத்துவதாகவும் கூறப்படுகின்றது. இப்படியாக மனுக்குலத்தினுடைய இருதயங்களானது, பாவங்களுக்கான ஒரே

பாவநிவாரண பலியினின்று, அதாவது ஒரே தரம் மற்றும் என்றென்றுமாக விசுவாசிகள் அனைவரையும் கடந்துபோகப்பண்ணினதுமான ஒரே பாவநிவாரண பலியினின்று திசைத் திருப்பப்பட்டு, தங்கள் பார்வைகளைக் குருமார்கள், பூசை மற்றும் ஆசீர்வாதங்கள் மற்றும் தீர்த்தம் முதலானவைகள் மீது ஈர்க்கப்பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். இதைக் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில், தம்முடைய சபையில், தம்முடைய ஆலயத்தில் "பாழாக்கும் அருவருப்பு" ஸ்தாபிக்கப்படும் என்று கூறிக் குறிப்பிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை (தானியேல் 11:31). மில்லேனியல் டாண் (Millennial Dawn), தொகுதி-III, அத்தியாயம்-III, IV.

உரோமன் கத்தோலிக்கர்களிடமிருந்து வந்ததான புராட்டஸ்டண்டினர்கள், மதம் சார்ந்த தங்கள் ஆதிக் கருத்துக்களை உரோமன் கத்தோலிக்க மார்க்கத்திடமிருந்து பெற்றிருக்கின்றபடியால், உரோமன் கத்தோலிக்க அமைப்பினுடைய தப்பறைகளில் பல இவர்களிடத்திலும் ஒட்டிக்கொண்டிருப்பதிலும், தேவனுடைய வார்த்தைகளினுடைய அநேக ஆவிக்குரிய போதனைகளினுடைய ஆழமான முக்கியத்துவம் தொடர்புடைய விஷயங்களில் தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்களைக் குருடான நிலையில் இவர்கள் பெற்றிருப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது இப்பாடத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதனையின் விஷயத்திலும்கூட உண்மையாய் இருக்கின்றது. நமது கர்த்தருடைய, அப்போஸ்தலர்களுடைய, மோசேயினுடைய, தீர்க்கத்தரிசிகளினுடைய, சபைக்கான பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட போதகர்களுடைய போதனைகளை நாம் தெளிவாய்ப்பார்க்கத்தக்கதாக, "இருண்ட யுகங்களுடைய" தப்பறைகளினின்று நமது மனங்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்பதே நாம் அனைவரும் வாஞ்சிக்க வேண்டிய காரியமாய் இருக்கின்றது.

## வேளை வந்தபோது

பஸ்கா தொடர்புடையதான வேதவாக்கியங்களின் பதிவும், இதற்குப்பதிலாக நிறுவப்பட்டதும், இதற்கான நிஜமாக அவரது சீஷர்கள் அவரை நினைவுகூருவதுமான கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதுமான வேதவாக்கியங்களின் பதிவு அனைத்தும் வேளைப்பற்றின நுணுக்கமான விவரத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அதாவது பல்வேறு கிறிஸ்தவ பிரிவினர்களின் பொதுவான வழக்கத்தின்படி காலையிலோ, மதியத்திலோ, பிற்பகலிலோ ஆசரிக்கப்படாமல், சாயங்காலத்தில் அது ஆசரிக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தரும், அவரது அப்போஸ்தலர்களும் நீசான் மாதம் 14-ம் நாள் ஆரம்பமாகுவது வரையிலும் பஸ்காவிற்கென உட்காரவில்லை. இதுபோலவே தங்களை விசுவாச வீட்டாரின் அங்கத்தினர்களென, முதற்பேறானவர்களுடைய சபையின் அங்கத்தினர்களென அடையாளங்கண்டுகொள்பவர்கள் அனைவரும் இந்த விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் ஆண்டவருடைய வழிக்காட்டுதலைப் பின்பற்றிடுவதற்கு ஜாக்கிரதையாய் இருந்திட வேண்டும். இதில் ஆசீர்வாதமும், அர்த்தமும் காணப்படுகின்றன. அவர் ஆசரித்ததான அதே இரவில், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டதான அதே இரவில், அவர் அப்பத்தை எடுத்து, அதைப்பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். நாம் இன்னமும் அதே இரவில் காணப்படுகின்றோம் மற்றும் அந்த அப்பத்தைப் புசித்தலும், அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுதலும், கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் இன்னும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

நீசான் மாதம் 14-ம் தேதியே இவ்வாசரிப்பிற்கான சரியானவேளை என்ற விஷயத்திலும், இஸ்ரயேலர்கள் அனைவரும் இதே நாளில்தான் சரியாய் ஆசரிக்க வேண்டுமென்ற விஷயத்திலும் நமது கர்த்தர் தெளிவாய் இருந்தார். மேலும் சரியாய் மாதத்தினுடைய ஆரம்பத்தைக் கணிப்பதில் அவ்வளவுக்கு நுணுக்கம் இருப்பதில்லை. (சந்திரனுடைய படிப்படியான நிலையின்) சந்திர கலையின்/ moon phase அடிப்படையில் யூதருடைய காலக்கணக்கீட்டின் முறைமை காணப்படுவதினால், அக்கணக்கீடு, நம்முடையதிலிருந்து வேறுபட்டதாகவே இருக்கும் மற்றும் இதனால் அவர்களது மாதத்தினுடைய துல்லியமான ஆரம்பத்தைக் கண்டுபிடிப்பதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது. விசேஷமாக இளவேனிற் சம இரவு பகல் நாள் தொடர்புடையதாகவும், யூதர்களின் விஷயத்தில் இன்னொரு நிழலானது, பஸ்கா அறுவடையின் காலத்தில் வரவேண்டுமெனக் குறிப்பிடுவது தொடர்புடையதாகவும், இக்கணக்கீடு கணக்கிடப்படுவதால் மிகுந்த சிரமம் காணப்படுகின்றது. இவ்விஷயங்களையெல்லாம் அறிந்திருப்பவர்கள் அனைவரும், வாக்குவாதமும், கருத்துவேறுபாடும் இல்லாமல், சந்திர காலக்கணக்கீட்டின்படி, அறுவடைக் காலத்திற்கு இணக்கமாக யூதர்களுடைய வருடத்தின் ஆரம்பத்திற்கான தேதியினை முடிவு செய்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று என்று ஒத்துக்கொள்வார்கள். ஒரு தேதியை புதிய வருடத்தின் ஆரம்பத்திற்கான தேதி எனவும், ஒரு தேதியை அவ்வருடத்தினுடைய 14-ஆம் தேதி எனவும் நிர்ணயிக்கும் வேலையினை உடைய வேதப்பாரகர்களால் ஜனங்களுக்காகத் தீர்மானிக்கப்படும் தேதியானது கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி, நினைவுகூருதலுக்காய் நிறுவப்பட்ட தேதியாகுகின்றது. வேறு வார்த்தையில்

சொல்ல வேண்டுமெனில், வேதபாரகர்கள் ஒருநாள் முந்தியோ (அ) பிந்தியோ ஒரு தேதியை நிர்ணயித்தார்களா என்பது ஒரு காரியமல்ல; ஒன்றுபோல்/வேறுபாடற்ற தேதி காணப்பட வேண்டும் மற்றும் முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியானது மாறுபாடற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இன்றும் காரியங்கள் இப்படியாகவே காணப்படுகின்றது. யூத காலத்தின்படி முதல் மாதத்தின், முதலாம் தேதியினுடைய கணக்கிடுதலை உறுதிப்படுத்தும் விஷயத்தில் எவ்விதமான பதட்டமடைதலோ அல்லது சிறியதைப் பெரிதாக்கி பார்த்தலோ அவசியமில்லை; மாறாக ஒரே நாளில் சூரியன் அஸ்தமனத்திற்குப் பின்னர் அனைவரும் நினைவுகூருதலை ஆசரிப்பதிலும் மற்றும் எந்தநாள் நீசான் மாதத்தின் 14-ஆம் தேதியாக ஆசரிக்கப்பட வேண்டும் என்பதிலும் சரியாய் இருப்பதே அவசியமானதாகவும், ஏற்றதாகவும் உள்ளது. ஜனவரி மாதம் 15-ஆம் தேதியினுடைய நம்முடைய வெளியீட்டில் நீசான் மாதத்தினுடைய முதலாம் தேதியை, இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் அமாவாசை நாளைத் திட்டவட்டமாய் நிர்ணயிக்கும் விஷயத்தில் சிரமமுள்ள வருடங்களில் இவ்வருடமும் ஒன்றென நாம் சுட்டிக்காண்பித்திருந்தோம். இதற்கு நாம் முக்கியத்துவம் செலுத்துவதில்லை; நினைவுகூருதலை ஏப்ரல் 8-ஆம், ஞாயிறு இரவில் ஆசரிப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். இது யூதருடைய கடைப்பிடிப்பிற்கு இசைவானதாகவும், நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 9-ஆம் தேதியன்று பௌர்ணமி வருகின்றது என்ற உண்மைக்குப் பொருந்துகின்றதாகவும் காணப்படுகின்றது. நினைவில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: (1) அது வருஷத்தினுடைய இளவேனிற் காலத்தில், கிட்டத்தட்ட பஸ்கா காலத்தில் இருக்க வேண்டும்; (2) தேதியானது வேறுபாடற்று ஒன்றுபோல் கடைப்பிடிக்கப்பட வேண்டும்; (3) ஆதியில் எகிப்தில் நிறுவப்பட்டதற்கு இசைவாகவும், பின்னர் நமது கர்த்தரால் நிறுவப்பட்டதான நினைவுகூருதலுக்கு இசைவாகவும் சாயங்காலத்தில் ஆசரிக்கப்பட வேண்டும்.

மேற்கூறினவைகளுக்கு இசைவாக, கடைசி பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றதான நேரத்தில், அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், நமக்காக அடிக்கப்பட்டதான நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரணத்தினை நினைவுகூரும்படிக்கு ஒன்றுகூட வேண்டுமென்றிருக்கின்றனர். அதே காலப்பகுதியில் உலகமெங்கும் காணப்படும் அங்கங்களுடைய சிறுசிறு கூட்டத்தினர் ஆசரித்ததாகச் செய்திகளைப் பின்னர்த் தெரிந்துகொள்வோம் என்றும் நாம் நம்புகின்றோம். பார்வோன் மற்றும் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான விடுதலையை, நினைவுகூர்ந்திடுவதற்கென நாம் யூதர்களைப்போன்று ஒன்று கூடிடவில்லை, மாறாக நிஜமான இஸ்ரயேலர்களெனச் சாத்தானுடைய வல்லமையினின்றும், பாவத்தினுடைய ஆளுகையினின்றும் தப்பிடுவதற்கு நாடுகின்றோம். சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியையும், கசப்பான கீரைகளையும் புசிப்பதற்காகவும், எகிப்தில் நடந்த கடந்துபோகுதலை நினைவுகூருவதற்காகவும் நாம் ஒன்றுக்கூடாமல், மாறாக தேவ ஆட்டுக்குட்டியானவரின் மரணத்தினை நமது பஸ்கா என்று அடையாளம் கண்டுகொள்வதற்கும், நினைவுகூருவதற்கும், அவரையும், அவர் கொடுத்த சத்தியங்களைப் புசிப்பதற்கும், நமக்காக அவர் கையளித்ததான ஜீவிக்கும் உரிமைகளை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வதற்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களென நாம் ஒன்று கூடுகின்றோம்.

இன்னுமாக, நமது கர்த்தரினால் விவரிக்கப்பட்டுள்ளதுபோன்று, புளிப்பில்லாத அப்பத்தினை, நமக்காகப் பிட்கப்பட்டதான அவரது மாம்சத்தினுடைய தூய்மையை அடையாளப்படுத்துகிறதற்காகவும், திராட்சப்பழரசத்தை நமக்காகச் சிந்தப்பட்ட அவரது இரத்தத்தை அடையாளப்படுத்துகிறதற்காகவும் மாத்திரமாக நாம் பயன்படுத்தாமலும், அப்போஸ்தலனுடைய விளக்கத்தின் வெளிச்சத்தில், அந்தப் பெரிய அப்பத்தின் ஒரு பாகமெனக் கிறிஸ்துவோடுகூடப் பிட்கப்படுவதும், அந்தப் பெரிய பாத்திரத்தின் ஒரு பாகமென அவரது பாடு மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில் ஐக்கியம்கொள்வதும் நம்முடைய சிலாக்கியத்தின் பாகமாக இருக்கின்றது என்று புரிந்துகொள்கின்றோம். இந்த இரண்டு கண்ணோட்டத்திலிருந்து, முதலாவதாக கடந்துபோகப்பட்டவர்கள் என்ற நிலையிலும், இரண்டாவதாக இனிவரும் காலத்தில் தெய்வீகத் தயவையும், தேவனுடைய புத்திரர்களுக்குரிய சுயாதீனத்தையும் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரையும் பாவம் மற்றும் சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து வெளியே வழிநடத்தும் மாபெரும் வேலையில் அவரோடுகூட நாம் பங்கடையத்தக்கதாக, பலியில் அவரோடுகூட இணைந்துகொண்டவர்கள் என்ற நிலையிலும், கர்த்தருடனான நம்முடைய உறவைப் பார்க்கின்றோம். நமக்கு அருளப்பட்டதான சிலாக்கியமானது, எத்துணை பிரமாண்டமாய் உள்ளது! அப்போஸ்தலன் பின்வருமாறு சொல்லியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை . . .

# ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

வானத்திலிருந்து இறங்கிவந்ததும், நமக்காகப் பிட்கப்பட்டதுமான இந்த அப்பத்தைப் புசித்தல் என்பது நாம் வருடந்தோறும் ஒன்றுகூடுகிறதான விசேஷ தருணத்திற்குரியது மாத்திரமல்ல. நமது கர்த்தருடைய கட்டளையின் பேரில் வருடந்தோறுமான ஒன்றுகூடுதலானது, அவர் இல்லாத இரவு முழுவதுமான, அவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதான காலை வரையிலுமான நமது அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பண்டிகையை இப்படியான விசேஷித்த விதத்தில் மற்றும் நினைவுகூரும் விதத்தில் வருஷத்திற்கு ஒருமுறை மாத்திரம் நாம் ஆசரிக்காமல், நாளுக்குநாள், ஒவ்வொரு மணி நேரமும் தேவ ஆட்டுக்குட்டியைப் புசிக்க வேண்டும்; விசுவாசத்தினால் அவரது தகுதிகளை, புண்ணியங்களை உணர்ந்து, நமதாக்கிக்கொள்ள வேண்டும்; கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகள் அனைத்திலும் வளர்ந்திட வேண்டும். "நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதான ஆண்டவருடைய வார்த்தைகளானது, கட்டளையான விதத்தில் காணப்பட்டது என்பதை நாம் நினைவுகூருகின்றோம். நம்முடைய கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் இந்த வருடாந்தர ஆசரிப்பில், நாம் என்ன செய்கின்றோம் என்பது குறித்து, இனிமேல் நம்முடைய மனங்களில் எவ்வித சந்தேகங்களும் காணப்படாது; கிறிஸ்து நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியென அடிக்கப்பட்டார் என்பதை நாம் உணர்ந்துகொண்டபடியால், நாம் பண்டிகையை ஆசரிக்கின்றோம். ஆண்டுநிறைவு நாளைப்போல், வேறெந்த ஒரு வேளையும் மிகவும் ஏற்றதாய்க் காணப்படாது. அது சூரியக்காலத்தின்படியோ (அ) சந்திரக்காலத்தின்படியோ கணக்கிடப்பட்டாலும் சரி, வாரத்தினுடைய நாட்களுக்கு ஏற்பவோ (அ) மாதத்தினுடைய நாட்களுக்கு ஏற்பவோ கணக்கிடப்பட்டாலும், அது சந்தேகத்திற்கிடமின்றி வருடாந்தரமான ஆசரிப்பேயாகும்; நாம் அதைச் செய்யும் போதெல்லாம், ஒவ்வொரு வருடமும் அதைச் செய்யும்போதெல்லாம், வருடந்தோறும் அதன் ஆண்டுநிறைவு நாளில் அதைச் செய்யும்போதெல்லாம் நாம் நிழலை நினைவுகூர்ந்து ஆசரிக்காமல், மாபெரும் நிஜமாகிய இயேசு எனும் நமது மீட்பரை நினைவுகூர்ந்தே ஆசரிக்கின்றவர்களாய் இருக்கின்றோம்.

வரவிருக்கும் நினைவுகூருதலின் ஆசரிப்பானது அனைவருக்கும் மிகவும் நன்மை மற்றும் நலம் பயக்கின்ற ஒன்றாய்க் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம். எவரும் இச்சிலாக்கியத்தினைக் கவனிக்கத்தவறாமல் இருப்பதற்கு நாம் வலியுறுத்துகின்றோம் மற்றும் கர்த்தரையும், அவரது பலியினுடைய சுத்திகரிக்கும் வல்லமையையும், நாம் அவரிடத்தில் பண்ணியுள்ளதான அர்ப்பணிப்பையும் குறித்து உணர்ந்த நிலையில் உத்தம இருதய நோக்கத்துடன் பங்கெடுக்கும் அனைவருக்கும், இந்தப் பண்டிகையை ஆசரித்ததின் விளைவாகவும், இந்த யுகத்திற்கும், அடுத்துவரும் யுகத்திற்குமான திட்டம் அனைத்தும் மையம் கொண்டுள்ளதான மாபெரும் மைய உண்மையினை நினைவுகூர்ந்ததின் விளைவாகவும், விசேஷமான ஆசீர்வாதம் கடந்துவரும் என்றும் நாம் உறுதியளிக்கின்றோம்.

இந்த நினைவுகூருதலுக்காக மாநாடுகளில் பல்வேறு கூட்டமான கர்த்தருடைய ஜனங்கள் கூடிடுவதுபோன்று கூடாமல், சிறுசிறு கூட்டத்தினராகக்கூடி ஆசரிப்பது சிறந்தது என்பதை அருமையான நண்பர்கள் நினைவில்கொள்ளும்படி நாம் வலியுறுத்துகின்றோம். கர்த்தரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் தனியாகக் கூடினார்கள் மற்றும் இதை ஒவ்வொரு குடும்பமும் தனியாய்க் கூடிக்கொள்ளும் யூதருடைய வழக்கத்தின்படியே செய்தார்கள். ஆகையால் கர்த்தருடைய ஜனங்களுடைய ஒவ்வொரு சிறு கூட்டமும் ஒரு குடும்பமாக, சகோதரக்கூட்டத்தாராகக் காணப்படுகின்றனர். புளிப்பில்லாத அப்பத்தினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையெனில், சோடா ரொட்டிகளை/பிஸ்கோத்துகளை (Soda Biscuits) எளிதில் பெற்றுக்கொள்ளலாம்; இது புளிப்பற்ற சிறு அப்பமாகும், அதாவது காடிச்சத்து (yeast)/புளிப்புச் சேர்க்காமல் உண்டுப்பண்ணப்பட்ட அப்பமாகும். திராட்சப்பழச்சாறு (grape juice) கிடைக்கவில்லையெனில், உலர்ந்த திராட்சைகளானது, நீருடன் வேகவைக்கப்பட்டு இப்படியாக திராட்சப்பழரசம் (fruit of the vine) தயாரிக்கப்படலாம் அல்லது எவரேனும் விரும்பினால் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தை (wine) பயன்படுத்திக் கொள்ளலாம். நமது கர்த்தர் எதைப் பயன்படுத்தினார் என்பதை நாம் உறுதிச்செய்வது என்பது கூடாத காரியமாகும். (fermented liquor) புளிப்பேற்றப்பட்டதான பானமானது, மதுபானத்தின் (strong drink) விஷயத்தில் அடங்கி கிடக்கும் ஆசைகளைத் தூண்டிவிட்டு, இப்படியாக இதைப் பானம்பண்ணுகிறவர்களுக்கு இது கண்ணியாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக, நாம் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழ ரசத்தையே (unfermented fruit of the vine) நம் சார்பில் பறிந்துரைக்கின்றோம். ஒவ்வொரு சிறுகூட்டத்தாரும் கூடுகையில், எங்குமுள்ள கர்த்தருடைய அருமையான ஜனங்களிலுள்ள மற்றவர்கள் அனைவரையும் ஜெபத்தில் நினைவுகூர்ந்து, மிகவும் ஏற்கத்தக்க விதத்திலும், மிக முழுமையான விதத்திலும் பாடுகள், பலி,

மரணம் எனும் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுப்பதற்கும், அவருடைய சரீரமாகிய ஒரே சபையின், ஒரே ஜீவனின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும் நமக்கு உதவுகின்றதான கர்த்தருடைய ஆவியானது, அதிகமதிகமாக நம் அனைவருடைய இருதயங்களில் அருளப் பெறுவதற்கு அவரிடம் வேண்டிக்கொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

தங்களுடைய அர்ப்பணிப்பை ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளப்படுத்த விரும்புகிறவர்களின் சௌகரியத்திற்காக, அலிகெனியிலுள்ள (Allegheny) பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel) வைத்து, ஏப்ரல் 8-ஆம் தேதி ஞாயிறன்று, காலை 10 மணிக்கு ஞானஸ்நான ஆராதனை நடைப்பெறும். எல்லாவிடங்களிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய (ஒவ்வொரு) சிறுசபைக்கூட்டத்தாரும், ஞானஸ்நானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திடுவார்கள் என்பதில் ஐயமில்லை மற்றும் மாலையில் நடைப்பெறவிருக்கின்றதான நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு முன்னதாக, ஞானஸ்நான ஆராதனைக்கான ஏற்பாட்டினை விரும்புகின்றவர்கள், கூடுமானவரை முன்கூட்டியே இங்குத் தங்களது விருப்பங்களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

*****

# ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

*"சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." (கலாத்தியர் 5:13-15)*

கர்த்தருடைய ஆவி எங்கேயோ, அங்கே சுயாதீனம் காணப்படும். இது உலகத்தின் சரித்திரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் விளங்கியுள்ளது. யூதர்களானவர்கள் நியாயப்பிரமாணத்தினுடைய அறிவுரையைப் பெற்றிருந்ததினாலும், அதன் ஆவியையும் ஓரளவுக்குப் பெற்றிருந்ததினாலும், பல நூற்றாண்டுகள் காலமாக, அவர்கள் ஜெயிக்க முடியாத ஜனங்களாக அறியப்பட்டிருந்தார்கள். அதாவது அவர்கள் அவ்வப்போது சிறைப்பிடிக்கப்பட்டனர், எனினும் சுயாதீனத்தின் ஆவியினால் அவர்கள் மிகவும் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் இருந்ததினால், அவர்கள் தங்களைச் சிறைப்படுத்தினவர்களுக்கும் மற்றும் பெரிய அண்டை நாடுகளுக்கும் எப்போதும் பிரச்சனைப்பண்ணுபவர்களாகவே இருந்து வந்தனர்.

இதைப் போலவே, ஆனாலும் அதிகமான அளவில், கிறிஸ்தவத்தின் விஷயத்திலும் இருந்துள்ளது; எங்கெல்லாம் தேவனுடைய வார்த்தைக் கடந்து சென்றுள்ளதோ, அதற்கேற்ப சுயாதீனத்தின் மீதான விருப்பத்திற்குரிய தூண்டப்படுதலே விளைவாக இருந்துமுள்ளது. "இருண்ட யுகங்களில்" தேவனுடைய வார்த்தையானது "இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கும்போதும்" மற்றும் இதன் இடத்தில் தவறான போதனைகள் இடம்பெற்றபோதும், சுயாதீனத்தின் ஆவியானது தூங்கிகொண்டிருந்தது மற்றும் உலகத்திலும் ஓரளவுக்குச் சமாதானமும், ஜனங்கள் பொதுவான அடிமை நிலைக்குள்ளாகக் காணப்படும் காரியமும் நிலவினது. சீர்த்திருத்த இயக்கம் வந்த மாத்திரத்தில் சுயாதீனத்திற்கான விருப்பம் மறுபடியுமாக மலர்ந்தது. இதற்குரிய சமீபக்காலத்து உதாரணம் ரஷ்யாவில் பார்க்கப்படலாம்.

கிறிஸ்துவும், அவரது அப்போஸ்தலர்களும் யுத்தத்தையும், அதிருப்தியையும் மற்றும் சண்டைகளையும் கற்பித்துக்கொடுத்ததாகவோ - மோசேயும், நியாயப்பிரமாணமும் இவற்றைக் கற்பித்துக்கொடுத்ததாகவோ நாம் சொல்லவரவில்லை. மாறாக அன்பு, சமாதானம், சகோதர சிநேகம், தயவு, பொறுமை, சாந்தம் முதலானவைகளே நமது கர்த்தர் மற்றும் அவரது ஊழியக்காரர்களுடைய போதனைகளாக இருந்தது. தேவவார்த்தையினின்று புறப்படும் தாக்கமானது இருவகைப்படும். சிலர் பிரகாசிப்பித்தல் மற்றும் சுயாதீனம் ஆகியவற்றோடுகூடத் தெய்வீக அறிவுரைகளையும் பெற்றுக்கொண்டவர்களாக, ஆவியின் கனிகளைப் பேணி வளர்த்து உருவாக்கிட நாடுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்; வேறு சிலர் அறிவின் வாயிலாக சுயாதீனத்தின் ஆவியினைப் பெற்றுக்கொண்டாலும், சத்தியத்தின் ஆவியினைப் பெற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்பட்டு, அறிவினை விழுந்துபோன சுபாவத்தினுடைய சுயநலப்போக்குடன் இணைத்துக்கொண்டவர்களாகி, தங்கள் அறிவுத்திறனுடைய பெருக்கத்தின் காரணமாக மிகவும் அதிருப்திக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

## சபையின் மீதான சத்தியத்தின் தாக்கம்

உலகத்தின் உண்மையான ஒரு முக்கியப் பாகமாகவும், மேலும் திவ்விய வார்த்தை மற்றும் திட்டம் குறித்த குறைவான அறிவு பெற்றும் மற்றும் திவ்விய அறிவுரைகளுக்குச் செவிச் சாய்ப்பதற்குரிய குறைவான பிரயாசங்களுடன் பூசிமெழுகுகின்றதாகவும் காணப்படும் - பெயர்ச்சபை என்ற ஒன்றும் உள்ளது; ஆனால் பாவத்திலிருந்து திரும்பிச் சிந்தையிலும், வார்த்தையிலும் மற்றும் கிரியையிலுமுள்ள முழுமையான அர்ப்பணிப்புடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களை மாத்திரமே மெய்ச்சபையானது உள்ளடக்கிப் பெற்றுள்ளது. இத்தகையவர்களிடத்தில் சத்தியமானது எத்தகைய தாக்கத்தினைக்கொண்டிருக்கின்றது? இந்தப் "புதுச்சிருஷ்டிகளும்கூடத்" தாங்கள் பெற்றுக்கொண்டுள்ளதான அறிவும் மற்றும் அந்த

அறிவின் வாயிலாக வரும் சுயாதீனத்தின் ஆவியும், தங்கள் மாம்சத்தின் மீது ஒருவகையான தாக்கத்தினையும் மற்றும் தங்கள் சித்தங்கள், தங்கள் இருதயங்கள் மீது இன்னொரு வகையான தாக்கத்தினையும் கொண்டிருப்பதைக் காண்கின்றார்கள். இவர்கள் தங்கள் இருதயங்களில் - தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்வதற்கும், யாவரோடும் சமாதானமாய்க் காணப்படுவதற்கும், கிறிஸ்துவினுடைய ஆவியின் கிருபைகளையும், கனிகளையும் பேணிவளர்த்து உருவாக்கிடுவதற்கும் மற்றும் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சகஅங்கத்தினர்களிடம் அன்பாயும், கனிவாயும் நடந்து கொள்வதற்கும் மாத்திரமல்லாமல், உலகத்தாரிடமும் கனிவாய் நடந்துகொள்வதற்கும் விரும்புகின்றனர். ஆனாலும் தங்கள் சொந்த மாம்சத்துடன் போராடும் விஷயத்திலும் மற்றும் வார்த்தையிலும், கிரியையிலும், மாம்சத்தின்மீது புதிய மனமானது ஆதிக்கம் பண்ணிடுவதற்கு அனுமதிக்கும் விஷயத்திலும் அவர்களில் சிலர் அதிகமாயும், சிலர் குறைவாயும் சிரமத்திற்குள்ளாகுகின்றனர்.

"நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால்" எனும் நமது ஆதார வசனத்தினுடைய வார்த்தைகளின் அர்த்தத்தினை எந்தக் கிறிஸ்தவன் அனுபவத்தின் வாயிலாக அறியாமல் இருப்பான்? ஒருவேளை மாம்சத்தினுடைய பெலவீனம் மற்றும் ஒருதலையான விருப்பு வெறுப்புகளினின்று விலக்கி, பிரித்துவைத்து, ஒருவேளை தேவஜனங்களின் இருதயங்களிடம், அவர்களது சித்தங்களிடம், அவர்களது நோக்கங்களிடம், விசாரிக்கப்பட்டால்/கேட்டுக்கொள்ளப்பட்டால், அவர்கள் ஒவ்வொருவருமே தனது சகோதர சகோதரிகளுடன் சமாதானமாய் வாழ்வதற்கும், தனது சாந்தத்தின், அமைதலான பண்புகளின், தனது கனிவின், சகோதர சிநேகத்தின் வாயிலாக தேவனை மகிமைப்படுத்திடுவதற்கும், உரிய தனது விருப்பத்தின் விஷயத்தில் பூரணமாய் இணங்குபவர்களாய் இருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் இப்படியாக முடியாது, ஏனெனில் சுயநலத்தினால் வருந்தத்தக்க விதத்தில் உருச்சிதைக்கப்பட்டு, திரிந்த நிலையில் காணப்படுகின்றதான பழைய சரீரத்தில் புதிய சித்தத்தினைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் புதிய சித்தமானது, மாம்சத்திற்கு எதிராக "நல்லதொரு போராட்டம் போராடிட வேண்டும்" மற்றும் நீதியானவைகளை, மேலானவைகளை, நலமானவைகளைச் செய்ய - இவைகளைக் குறைபாடுகளுடனே அடையப்பெற்றாலும் - இவைகளைச் செய்ய நாடிடவும் மற்றும் இவைகளை விரும்பிடும் அளவிற்காகிலும் நாம் ஜெயம் கொண்டிட வேண்டும்.

சத்தியமானது பெலவீனமானவர்களைவிட பலமானப் பாத்திரங்களையே பற்றிக்கொள்கின்றதாகத் தெரிகின்றது. ஜெயங்கொள்பவர்களாகிய "சிறுமந்தையினரில் அங்கத்தினர்களாய் இருப்பதற்குக் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படாத பலமில்லாதவர்கள் மற்றும் எளிதில் மிகவும் வளைந்துகொடுப்பவர்கள் அநேகரைக் காட்டிலும் இந்தப் பலமான பாத்திரங்கள் தங்களது மாம்சத்தில் மிகுதியான உறுதியையும், மனோதிடத்தையும், எதிர்த்துப்போராடும் தன்மையையும் பெற்றிருக்கின்றனர். இப்படியாகப் பார்க்கும்போது நம்மைக் கர்த்தர் ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக்கின அதே பண்பே மற்றும் ஜெயங்கொள்ளும் நிலைக்கு ஏதுவாக்கின அந்த ஒரே தகுதியே, வீரியமான பாத்திரங்கள் சபையாகக் கூடிடும்போது, சில விதங்களில் கவலைக்கிடமாய் அனுகூலமற்றதாகக் காணப்படுகின்றது. சேற்றினால் சூழ்ந்திருக்கும் வைரத்தினால் எதையும் வெட்டமுடியாது, எதையும் கீறிட முடியாது; ஆனால் திரளான வைரங்களை ஒன்றாய் வைத்துப் பாருங்கள், சேறு அதிகமாய் அப்புறப்படுத்தப்படும்போது, கீறல்களும், உரசல்களும், வெட்டுதல்களும் அதிகமாய் ஏற்படுகின்றது. இப்படியாகவே கர்த்தருடைய சம்பத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது - அவர்கள் அதிகமாய் ஒன்றுகூடுகையில், அவர்கள் அதிகமாய் விழிப்படைகின்றார்கள்; பிணக்குகளுக்கும் அதிகம் வாய்ப்புக் காணப்படும் மற்றும் வழவழப்பாகவும், பிசுபிசுப்பாகவும், உராய்வைத் தடுக்கிறதாகவும் உள்ள எண்ணெய் போன்றதான பரிசுத்த ஆவியினால் அவர்கள் அனைவருமே முழுமையாய் நிரம்பப் பெற்றிருப்பதற்கும், மூடப்படுவதற்கும் மிகுந்த அவசியம் காணப்படுகின்றது.

## சோதனைகள் அதிகரிக்கும்

ஒரு விதத்தில் பார்க்கையில், கர்த்தருடைய ஜனங்கள் கிருபையிலும், அறிவிலும் மற்றும் ஆவியின் கனிகளிலும், வரங்களிலும் வளர்கையில், சபையில் பிணக்குகள் ஏற்படுவதற்கான அபாயம் குறைவானதாகவே இருக்க வேண்டும் என்று நாம் காண்கின்றோம்; ஆனால் இன்னொரு விதத்தில் கரடுமுரடானவைகளைக் காட்டிலும், மெருகிடப்பட்டுள்ளதான வைரங்களே அதிகமான உரசலை ஏற்படுத்தும் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக.

சத்தியத்திலுள்ள நமது ஆரம்பக்காலக்கட்ட அனுபவங்களின்போது, நாம் கொஞ்சம் குழந்தைகளைப் போலவே காணப்பட்டிருந்தோம் - நாம் கற்றுக்கொண்டு வருகின்றதான பாடங்கள் தொடர்புடைய விஷயத்தில் ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்கும், வாக்குவாதம் பண்ணுவதற்கும் நமக்கு அதிகம் தெரியாமல் இருந்தது. ஒவ்வொருவரும் அறிவிலும், சத்தியத்தின் புரிந்துகொள்ளுதலிலும் வளரும்போது, இதுபோலவே சத்தியத்தின் ஆவியிலும் வளர வேண்டும்; இல்லையேல் ஒருவர் அறிவின் விஷயத்தில் வளர்ந்திருப்பது என்பது, அவர் அறிவின் விஷயத்தில் குழந்தையாய்க் காணப்பட்டபோது இருந்ததைக்காட்டிலும் இப்போதே தனது அருமையான சகோதர சகோதரிகளுக்கு மிக அதிகமான விதத்தில் சோதனையாய் அமைவதைக் குறிக்கின்றதாயிருக்கும்.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கையில், நம்முடைய நாட்களில் வெளிப்படும் ஒவ்வொரு சத்தியத்தினுடைய, விசேஷமாக தேவ வார்த்தையினுடைய வெளிச்சத்தில், வருடாவருடம் பிணக்குகள் அதிகம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது என்றும், 1906-வருடத்திற்கான "சகோதரரே நீடிய பொறுமையாயிருங்கள்" (யாக்கோபு 5:7) என்ற வசனத்தினை நாம் நினைவில்கொள்வதற்கு மிகுந்த அவசியத்தினைப் பெற்றிருக்கின்றோம் என்றும் அறிந்துகொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவ்வசனத்தினுடைய முந்தின பாகமானது - இவ்வார்த்தைகள், விசேஷமாய் யுகத்தினுடைய முடிவு காலத்திற்குப் பொருத்திடுவதற்கான நோக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு உபத்திரவத்தின் காலமானது, அதாவது ஐசுவரியவான்களுக்கும், தரித்திரருக்கும் இடையில் விழுந்துபோன சுபாவத்தினுடைய சுயநலம் மற்றும் அறிவு பெருக்கத்தின் அடிப்படையில் வரவிருக்கின்றதான போராட்டமானது, துல்லியமாய் விவரிக்கப்பட்டுள்ளது. பின்னர் "சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்; இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்" என்ற புத்திமதி கடந்துவருகின்றது (யாக்கோபு 5:9, 7).

நாம் பார்த்துவருகிற பாடமும், நாம் ஆராய்ந்துவருகின்றதான இவ்வசனத்திற்கு முழு இசைவாகவே காணப்படுகின்றது. நமக்குப் பொறுமை அவசியமாய் இருக்கின்றது; முக்கியமாய் நம்மைப் போலவே இடுக்கமான வழியில் நடப்பதற்கும், இராஜ்யத்தில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரத்தை அடைவதற்கும் நாடுகிறவர்களுக்கு எதிராக எவ்வகையான விரோதங்களையோ அல்லது கடுமையான உணர்வுகளையோ நாம் கொண்டிருப்பது, நமக்குத் தகுதியாய் இராது என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியமாய் உள்ளது. மற்றவர்களுடைய நலனுக்காக நாம் நமது சொந்த உரிமைகள், சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்கள் சிலவற்றினைத் தியாகம் பண்ணிட விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இது சத்தியம் தவறாய்ப் பேசப்படும்போது, அதற்காக பேசிடுவதற்கு நாம் உரிமையினையும், வாய்ப்பினையும் கொண்டிருக்கும்போது, நாம் அமைதலாய் இருந்து, அதைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. சத்தியத்திற்கு ஆதரவாய், தப்பறைக்கு எதிராய் நாம் கருத்தூன்றி போராடிட வேண்டும், ஆனால் நாம் சகோதர சகோதரிகளுக்கு எதிராகப் போராடிடக் கூடாது. கர்த்தர் அப்போஸ்தலர்கள் வாயிலாக நமக்குக் கொடுத்திட்டதான நமது கிறிஸ்தவ விசுவாசத்தினுடைய அஸ்திபாரமாகிய ஈடுபலியினை மறுதலிக்கிறவர் யாரேனும் காணப்படும் பட்சத்தில், இத்தகையவரிடத்தில் எவ்வகையான ஐக்கியமும் நாம் வைத்திருப்பது தொடர்புடைய விஷயத்தில், எத்தனை உறுதியாய்க் காணப்பட வேண்டும் என்பதில் எந்த ஐயமும் நாம் அடைய வேண்டியதில்லை (1 கொரிந்தியர் 5:11). ஆனால் சத்தியத்தின் கொள்கை உட்படாத நிலையில் சகோதர சகோதரிகளின் மத்தியில் பிணக்குகள்/உராய்வுகள் ஏற்படக்கூடிய பல்லாயிரம் விஷயங்கள் காணப்படும்; மற்றும் இவைகளை ஒற்றுமை, சமாதானம் மற்றும் ஐக்கியத்தின் நலன் கருதி, விட்டுவிட விருப்பமும், மகிழ்ச்சியும் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். எனினும் இது சரியான தருணங்களில், சத்தியம் பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதல்களை நாம் முன்வைத்திடக்கூடாது என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக காரியங்களை நாம் பார்க்க முடிகின்றதுபோல, பார்க்க முடியாதவர்களிடத்தில் நாம் முன்வைக்கும் காரியங்களை வற்புறுத்தவோ, திணிக்கவோ வேண்டாம்.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும்கூடச் சிலர் மற்றவர்களுடைய முரட்டுத்தன்மை மற்றும் அவதூறுகளினால் "கடிக்கப்பட்டு" காயமடைவதோடு மாத்திரமல்லாமல், பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மை உண்டாகும் இம்மாதிரியான சூழ்நிலை ஏற்படும் என்றும், அது தேவபிள்ளைகளுக்குத் தகுதியாயிராததும், நாய்கள் சண்டையிடுவதற்குக் கிட்டத்தட்ட ஒத்திருக்கிறதுமான சண்டைச்சச்சரவாய்க் காணப்படும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதாகத் தெரிகின்றது.

"நீங்கள் ஒருவரையொருவர் பட்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். சுவிசேஷத்தின் மூலமாய் நம்முடையது என்று நாம் அறிந்திருப்பதான சுயாதீனம் பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதலில், நாம் சிறியதும், பெரியதுமான நம்முடைய சுயாதீனங்களுக்காக நாம் மிகவும் போராடுகிறவர்களாய் இருந்து, இதனால் கிறிஸ்து மரித்துள்ளதான ஏதோ ஒரு சகோதரனை நாம் பட்சித்துப்போடுவோமானால் என்னவாகும்! ஒருவரைக் காயப்படுத்துவதினால், நம்முடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியங்களை விஷமாக்கிப்போட்டு, நாமும் பட்சிக்கப்பட்டுப் போகுமளவுக்கு - கர்த்தர் நம்மை அழைத்துள்ளதும், ஓட்டத்தினை நாம் ஓடுவதற்குமான கிருபையான காரியங்கள் தொடர்புடைய விஷயங்களில் இழப்பிற்குள்ளாகுமளவுக்கு, சண்டையின் ஆவி நம்மிடத்தில் கிரியைப் பண்ணுமானால், என்னவாகும்! "நீங்கள் ஒருவரையொருவர் பட்சிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள் நம்முடைய இருதயங்களில் ஒலித்துக்கொண்டிருப்பதாக.

இந்தச் சிந்தையினை நம்முடைய மனங்களில் கொண்டவர்களாக, நம்முடைய சொந்த மாம்ச பெலவீனங்களுக்கு எதிராகப் போராடுவதற்காகவும் மற்றும் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக நல்லதொரு போராட்டம் போராடத்தக்கதாக மாதிரியினாலும், வார்த்தையினாலும் சகோதரருக்கு உதவி செய்து, அவர்களுக்காகப் போராடத்தக்கதாகவும் அதிகமதிகமாய்த் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொள்வோமாக.

---

**R 3752**

# "ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும்"
## மத்தேயு 12:1-14

"ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" யாத்திராகமம் 20:8

ஓய்வுநாளைக் குறித்த சரியான கருத்துக்களைச் சொற்பமானவர்களே அறிந்திருக்கின்றனர். சிலர் தங்களை மோசேயின் பிரமாணத்திற்குக் கீழிருக்கும் யூதர்களாகக் கருதிக்கொள்கின்றார்கள். இன்னும் வேறு சிலரோ மறு எல்லைக்குப்போய், தாங்கள் பிரமாணங்களுக்குக் கீழிராமல், கிருபையின் கீழ் இருக்கின்றோம் என்று கூறி, ஓய்வுநாளின் காரியங்களை முற்றிலும் தள்ளிவிடுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த இரண்டு எல்லைகளுக்கும்/ கருத்துக்களுக்கும் இடைப்பட்ட கருத்தே சரியான கண்ணோட்டமாக இருக்குமென்று நாம் நம்புகின்றோம்.

தேவன் யூத தேசத்தாரை, அதாவது ஆபிரகாமின் பிள்ளைகள் அனைவரையும், யாக்கோபின் மூலமாக, உலகத்தில் தமக்குரிய விசேஷமான சம்பத்தாக ஏற்றுக்கொண்டார். இவர்களுடன் மோசேயின் வாயிலாக சீனாயில் தேவன் நியாயப்பிரமாண உடன்படிக்கையைச் செய்தார்; இவர்களிடம் தேவன் தம்முடைய தூதுவர்களாகிய தீர்க்கதரிசிகளையும், இறுதியில் தம்முடைய குமாரனையும் அனுப்பினார். இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம் தேவனுடைய கிருபையில் நிலைத்திருப்பார்கள் என்றும், வியாதி, வலி, வறட்சி மற்றும் பஞ்சத்திற்குப் பதிலாக, ஜனங்கள், நிலம், மந்தைகள் மீது தெய்வீக ஆசீர்வாதம் நிலைத்திருக்கும் என்றும் இவர்களோடேயல்லாமல், மற்றபடி வேறு எந்தத் தேசத்தாரோடும் தேவன் தமது ஒப்பந்தத்தைப் போட்டுக்கொள்ளவில்லை. வேறு எந்தத் தேசத்தாருக்கும் சீனாயின் நியாயப்பிரமாணமும் கொடுக்கப்படவில்லை, உடன்படிக்கையும் பண்ணப்படவில்லை. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" (ஆமோஸ் 3:2).

யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தப் பிற்பாடு, மற்றும் இயேசு சிலுவையில் நியாயப்பிரமாண உடன்படிக்கையை முடிவிற்குக்கொண்டு வந்த பிற்பாடு, சிலர் எதிர்மாறாக கற்பனை செய்துகொள்வது போன்று நியாயப்பிரமாணமானது, உலகத்தின் மற்றத் தேசத்தாருக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை. யூத தேசத்தார் மத்தியில் இருந்தும், மற்றத் தேசத்தார் மத்தியில் இருந்தும் தெரிந்தெடுக்கப்படும் கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய சபைக்கும் கூட நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" ரோமர் 10:4. யாரெல்லாம் இந்தக் கருத்தை தெளிவாகப் புரிந்திருக்கின்றார்களோ, அவர்களே ஓய்வுநாளைக்குறித்தும், நியாயப்பிரமாணத்தின் மற்ற அனைத்து அம்சங்களைக்குறித்துமுள்ள சரியான கண்ணோட்டங்களுக்கான அஸ்திபாரத்தைப் பெற்றிருப்பார்கள்; மேலும் இக்கருத்தைப் புரிந்துக்கொள்ளாதவர்களே ஓய்வுநாளின் காரியங்களிலும் குழப்பத்துடனே காணப்படுவார்கள்.

## "இந்த உலகத்தின் இராஜ்யங்கள்"

யூதர்களின் ஓய்வுநாளையோ அல்லது வேறெந்த ஓய்வுநாளையோ ஐரோப்பியா மற்றும் அமெரிக்கா தேசங்களானது, தங்கள் ஜனங்கள் அநுசரிக்கும்படி நடைமுறைக்குக்கொண்டு வரலாமே? என்று நாம் கேள்வி கேட்பது நமக்கடுத்தக் காரியமல்ல. உண்மைதான், நாகரிக உலகமானது, "கிறிஸ்தவ மண்டலம்" அதாவது கிறிஸ்துவின் இராஜ்யம் என்று அழைக்கப்படுகின்றது; ஆனால் இது ஒவ்வாத பெயராகும். பூமியின் இராஜ்யங்கள் இன்னமும் இவ்வுலகத்தின் லோகாதிபதியினுடைய ஆளுகையின் கீழேயே காணப்படுகின்றது (2 கொரிந்தியர் 4:4). இவைகள் இந்த உலகத்தின் இராஜ்யங்களே, மாறாக தேவனுடைய இராஜ்யங்கள் அல்ல. இந்த இராஜ்யங்கள் நிலவிக்கொண்டிருப்பதைத் தேவன் அறிந்தவராக இருக்கின்றார் என்பது உண்மைதான். மேலும், இந்த இராஜ்யங்களை ஒரு குறிப்பட்ட காலம் வரையிலும் தேவன் அனுமதித்துள்ளார்; ஆனால் இந்த இராஜ்யங்கள் மீது அதிகாரம் செலுத்த தேவன் ஒருபோதும்

முயன்றதுமில்லை, இன்னுமாக இந்தப் பூரணமற்ற இராஜ்யங்களுக்கு தாம்தான் பொறுப்பாளி என்று நிலைநிறுத்திக் கொள்ளவுமில்லை; இந்த இராஜ்யங்கள், அவருடைய இராஜ்யங்கள் அல்ல. பரலோகத்தின் தேவன், ஆயிர வருஷம் அரசாட்சியின்போது, கிறிஸ்துவும், சபையுமாகிய, மகிமையடைந்திருந்த மேசியாவின் கரங்களைக்கொண்டு தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, அந்த இராஜ்யத்தின் ஒழுங்குகளும், சூழ்நிலைகளும் இந்த உலகத்தின் இராஜ்யங்களுடைய சூழ்நிலைக்கு மிகவும் வேறுபாடாகக் காணப்படும். ஆகவேதான் ஓய்வுநாள் முதலியவைகளை உலகத்தின் தேசங்கள் அநுசரிக்கும்படி, தேவன் கட்டளையிடவில்லை; உலகத்தார் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இராதபடியினாலும், வேறெந்தப் பிரமாணங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்படாததினாலும், பிரமாணத்திற்கடுத்த விஷயங்களில் உலகத்தார் என்ன செய்தாலும், அது அவர்கள் கட்டளையிடப்படாமலேயே விருப்பம்கொண்டு செய்கிறதாக இருக்கும்.

இயேசு நியாயப்பிரமாண உடன்படிக்கையைச் சிலுவையின்மேல் ஆணியடித்து முடிவிற்குக்கொண்டு வந்தபடியால், அவருடைய பின்னடியார்களாகிய கிறிஸ்தவ விசுவாசிகள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இல்லை. மாறாக, அப்போஸ்தலர் குறிப்பிடும் வண்ணமாக, "நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்" (கொலோசெயர் 2:14; ரோமர் 6:14). மோசேயின் கரங்கள் மூலம் இஸ்ரயேலின் மீது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் காலத்திற்கு நிலவின உறவுமுறை போன்றே, தேவனிடத்திலான நம்முடைய உறவு காணப்படுகின்றது; அதாவது, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு அனுபவித்த அதே உறவுமுறை, அதாவது ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய நிபந்தனையின் கீழுள்ள கிருபயின் உறவுமுறையையே நாம் தேவனிடத்தில் கொண்டுள்ளோம். நாம் வாக்குத்தத்தத்தின் உண்மையான சந்ததியாக இருக்கின்றோம் (கலாத்தியர் 3:29). நியாயப்பிரமாணம் இல்லாமலேயே ஆபிரகாமும், ஈசாக்கும் மற்றும் யாக்கோபும் செழித்தோங்குகினார்களா? ஆம்! அதே கிருபையின் சூழ்நிலைகளின் கீழ் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாலும் அதிகமதிகமாக செழித்தோங்கலாம். ஏனெனில், மாபெரும் மீட்பரிடத்திலும், இவரை மையமாகக் கொண்டுள்ள மகாமேன்மையான வாக்குத்தத்தங்களிடத்திலும் விசுவாசத்தின் மூலம் நமக்கிருக்கும் விசேஷமான உறவின் வாயிலாக அனைத்து வழிகளும்/காரியங்களும் இப்பொழுது நமக்கு மிகவும் அனுகூலமாய் உள்ளது; மீட்பருடைய மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படும் அனைவருக்கும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் பொருந்தக்கூடியதாய் இருக்கின்றன.

## "குமாரனால் விடுதலையாக்கப்படுபவர்கள்"

நியாயப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவது தொடர்பான விஷயத்தில் நியாயப்பிரமாண உடன்படிக்கையினின்று விடுவிக்கப்பட்டாயிற்று என்று சொல்லப்படும் கருத்தின் நிமித்தம் சிலருக்கு அச்சம் ஏற்பட்டு விடுகின்றது. இப்படி அச்சம் கொள்பவர்களுக்கு, நியாயப்பிரமாணம் இல்லாமலேயே ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோபு கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நாம் நினைப்பூட்டுகின்றோம். இவர்கள் தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசமே, இவர்கள் அறிந்துக்கொண்டிருப்பற்கு ஏற்பவும் மற்றும் இவர்களால் முடிந்தமட்டும் இவர்கள் தெய்வீகச் சித்தத்தைச் செய்யும் கடமைக்குள்ளாக இவர்களைக் கொண்டுவருகின்றது; மேலும் இப்படியாகவே நம் விஷயத்திலும் காணப்படுகின்றது. ஏனெனில், நாம் தேவனுடைய பிள்ளைகளாக, அவருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய ஆவியின்/சிந்தையின் பங்காளிகளாக ஆக்கப்பட்டுள்ளதால், இதுமுதல் நம்முடைய செய்கைகள் அன்பால் ஆளப்பட வேண்டும்; மற்றும், நமக்கு அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கின்றது. அதாவது, ஒருவேளை நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் அங்கம் ஆகுவதற்கெனப் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கின்றோம் என்றால், இது நாம் அன்பின் ஆவியைப் பெற்றிருக்கின்றோம் என்பதாக இருக்கும். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கின்றார். மேலும், தேவன் பேரிலான இந்த அன்பு வளரும்போது இந்த அன்பானது, தேவனோடு இசைவாக வாழும் அனைவரின் பேரிலும் காட்டும் அன்பாகவும், மற்றும் தேவன் தம்முடைய அனைத்துச் சிருஷ்டிகள் மீதும் கொண்டுள்ள இரக்கத்துடன்கூடிய அன்பாகவும் காணப்படும். இத்தகைய அன்பானது, நம்மால் முடிந்தமட்டும் தெய்வீகச் சித்தத்திற்கு நாம் இசைவாகச் செயல்படுவதற்கும் நம்மை நடத்துகின்றது; நம்முடைய நோக்கங்கள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையில் நம்மைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்ற கர்த்தரானவர் மற்றும் நம்முடைய பூரணமற்ற தன்மைகளையும், வேண்டுமென்றே இல்லாத குறைவுகளையும் மூடிப்போடுகின்ற கர்த்தரானவர் நமது, இருதயத்தினுடைய இந்த ஊழியத்தையும், நோக்கத்தையும் தெய்வீகப் பிரமாணத்தினுடைய பூரணமான கைக்கொள்ளுதல்களாகவே

கருதிக்கொள்கின்றார். "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (ரோமர் 8:4). நாம் எவ்வளவுதான் தெய்வீகப் பிரமாணத்திற்குரிய முழுமையான ஆவியில் குறைவுப்பட்டிருந்தாலும், நம்மால் முடிந்த மட்டிலுமான நம்முடைய அன்றாட பிரயாசங்கள் காணப்படும் பட்சத்தில், நாம் தெய்வீகப் பிரமாணத்தை முழுமையாய் நிறைவேற்றுகிறவர்களாகவே கருதப்படுகின்றோம்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், தேவன் இப்பொழுது இஸ்ரயேலுடன் தொடர்பு வைக்கவில்லை என்பதும், அவர் தமக்கென வேறு எந்தத் தேசத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் நமக்கு விளங்குகின்றது. மாறாக, அவர் ஒரு புதிய தேசத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார். மேலும், இந்தப் புதிய தேசத்திற்கான குடிகளை அவர் அனைத்துத் தேசம், கோத்திரம், ஜனங்கள் மற்றும் பாஷைக்காரர்கள் மத்தியிலிருந்து சேர்த்துக் கொண்டிருக்கின்றார். இந்தப் புதிய தேசத்தார், சபையாக இருக்கின்றார்கள். இவர்களைக் குறித்தது, "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 பேதுரு 2:9). இந்தப் புதிய தேசம் நிறைவடைந்து, மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் சென்று, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆளுகை செய்து, ஆசீர்வதித்து மற்றும் சீர்தூக்கி விடுவார்கள். தேவனுடைய வழிநடத்துதல்கள், போதனைகள், பரீட்சைகள் முதலியவைகள் இந்தப் புதிய தேசத்தின் (சபை) மீதே காணப்படுகின்றது; ஆம், நாம் பார்த்த வண்ணமாக, தேவன் மீதும், நம்முடைய அயலார் மீதும் காட்ட வேண்டிய அன்புக்கான பிரமாணத்தை அல்லாமல் வேறு எந்தப் பிரமாணத்தையும் தேவன் நம் மீது வைக்கவில்லை. இந்தப் பரிசுத்தமான தேசத்தின்/ஜாதியின் அங்கத்திற்குள் நாம் சேர்க்கப்படுவதற்கு முன்பு, அதன் அன்பின் பிரமாணத்தை நாம் ஏற்றுக்கொண்டு, சுயநலமானது அந்தகாரத்தின் கிரியையாக இருக்கின்றது என்றும் அடையாளம் கண்டுகொண்டிருந்தோம். மேலும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நாம் தேவனிடத்திலும், நம்முடைய அயலாரிடத்திலும் காட்ட வேண்டிய அன்பின் முழு அர்த்தத்தையும் நாம் அதிகமதிகமாகக் கற்றுக்கொண்டிருக்கின்றோம். இந்தப் படிப்பினைகள் தொடரும். ஆனாலும், இராஜ்யத்தின் அங்கங்களாக நாம் பரலோகத்திற்குரியதும், நித்தியத்திற்குரியதுமான ஸ்தானத்திற்கு மாற்றப்படுவதற்கு நாம் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்கு முன்பு, இந்தப் படிப்பினைகள் ஒரு குறிப்பிட்ட நிறைவை அல்லது பலன் கொடுக்கின்ற நிலையை அடைய வேண்டும்.

## "கர்த்தருடனான நம்முடைய உறவு"

மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமாகிய பத்துக்கட்டளைகள் முதலியவைகளோடு நமக்குத் தொடர்பு இல்லையா? இல்லை; நாம் நியாயப்பிரமாணத்தின்று விடுதலையுள்ளவர்களாக இருக்கின்றோம். தேவனுக்கு நன்றி! எனினும் நாம் விடுதலையாக்கப்பட்டுள்ள அந்த நியாயப்பிரமாணத்தை ஆராய்வதின் மூலம் நாம் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில், இந்த நியாயப்பிரமாணமானது நீதியுள்ளது, பரிசுத்தமுள்ளது மற்றும் நல்லது என்று நாம் அறிந்துள்ளோம். மேலும், இந்த நியாயப்பிரமாணம் பூரணமற்றதாய் இருந்த காரணத்தினால், இது தள்ளி வைக்கப்படாமல், மாறாக மனிதன் பூரணமற்றவனாகவும், அதைக் கைக்கொள்ள முடியாதவனாகவும், அதன் வாயிலாக ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாதவனாகவும் இருந்ததினாலேயே நியாயப்பிரமாணம் தள்ளிவைக்கப்பட்டது. ஆகையால், இந்தப் பூரணமான நியாப்பிரமாணத்தை நாம் ஆராய முற்படுகையில், அதன் வெளித்தோற்றத்தை மாத்திரமே நாம் அறிந்துக்கொள்வதற்கு நாடாமல், விசேஷமாக அதன் உள்ளான அர்த்தத்தை, அதன் ஆவியை அறிந்துக்கொள்வதற்கும் மற்றும் அதன் முக்கியத்துவமும், அது சுட்டிக்காட்டும் காரியமும் என்ன என்பதை அறிந்துக்கொள்வதற்கும் நாம் நாட வேண்டும். அதன் முக்கியத்துவத்தையும், அர்த்தத்தையும் குறித்து உறுதியடைந்த பிற்பாடு, புதிய சிருஷ்டிகளாகிய நாம் நம்முடைய பெலவீனங்கள், பூரணமற்ற தன்மைகள் மற்றும் வேண்டுமென்றே செய்யாத குறைபாடுகள் அனைத்தையும் தேவனுடைய ஆட்டிக்குட்டியானவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் ஈடு செய்துவிடுகின்றது என்பதை அறிந்த நிலையிலும் இந்த நியாயப்பிரமாணத்தின் ஆவி தொடர்பாக நாம் சேகரித்துள்ள ஆசீர்வாதத்திற்குரிய கருத்துக்கள் அனைத்தோடும் நம்முடைய ஜீவியங்களை இசைவாக வாழுவதற்கு நாம் நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

இதை நாம் செய்ய வேண்டும், ஆனாலும் இரட்சிப்படைவதற்கு என்று இதை நாம் செய்ய வேண்டியதில்லை; நாம் இரட்சிப்பு அடைந்தும், பாவங்கள் மன்னிக்கப்பட்டும், இன்னும் ஒருபடி மேலாக பரிசுத்த ஆவியினால் புதிய ஜீவனுக்கு, ஒரு புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டுள்ளபடியால், நாம் நம்மை நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நீதிமானாக்கிக்கொள்ள நாட வேண்டாம். ஏனெனில், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கின்றோம். இப்பொழுதோ நாம் புதிய சிருஷ்டிகளாக நமது பரம பிதாவைப் பிரியப்படுத்த நாடுகின்றபடியால், தெய்வீகச் சித்தம் குறித்துத் தெளிவாகப் புரிந்துக்கொள்வதற்கும் மற்றும் தேவன் மீது காண்பிக்க வேண்டிய அன்பின் விஷயத்தில் நாம் நம்மால் முடிந்தமட்டும் எல்லாவற்றையும் வல்லமையோடு செய்வதற்கும் என, மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது நமக்கு வழங்கும் ஏதேனும் கருத்துக்களில் மகிழ்ச்சிக்கொள்கின்றவர்களாகவும் இருப்போம்.

இப்படியாக நாம் பத்துக் கட்டளைகளைப் பார்க்கும்போது, "ஆம், இந்த நியாயப்பிரமாணங்கள் பூரணமானவைகள்தான்" என்று கூறுவோம்; மேலும் அவைகளை நாம் அதிகமதிகமாய் ஆராயும்போது, அவைகளுடைய முக்கியத்துவத்தின்/கருத்தின் ஆழத்தை நம்மால் கிரகித்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு, முதலாம் மற்றும் இரண்டாம் கற்பனைகளில், விக்கிரகங்களை உண்டுபண்ணி, அவைகளை வழிபடக்கூடாது என்று மாத்திரம் நாம் தடைப்பண்ணப்படாமல், தேவனுடைய இடத்தில் வேறெந்த ஒரு காரியத்தையும் வைக்கக்கூடாது, அதாவது, மனைவி (அ) பிள்ளைகள் (அ) செல்வம் (அ) சுயம் முதலியவைகளை வைக்கக் கூடாது என்றும் சரிசமமாகக் தடைப்பண்ணப்படுகின்றோம். இப்படியாகவே ஓய்வுநாள் தொடர்புடைய நான்காம் கட்டளையைப் பார்க்கும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தாங்கள் எந்த ஒரு குறிப்பிட்ட நாளுக்குக் கீழ்க் கட்டுண்டவர்களாக இல்லை என்பதை அறிந்துக்கொண்டாலும், அவர்கள், இந்தக் கட்டளையின் நோக்கம் (அ) ஆவி என்ன என்பதை அறிந்துக்கொள்வதற்கும், அந்த ஆவிக்கு இசைவுடன் காணப்படுவதற்கும் விரும்புவார்கள். மாம்சீக இஸ்ரயேலர்கள் இந்த மூன்று கட்டளைகளினுடைய வெளித்தோற்றத்தை மாத்திரமே அறிந்துக்கொண்டார்களே ஒழிய, அதன் உண்மையான கருப்பொருளை முற்றிலுமாகவே அறிய தவறிவிட்டார்கள்; மேலும் இவர்களைப் போலவே இன்றைய காலத்திலுள்ள அநேக கிறிஸ்தவர்களும் கூட, இந்தக் கட்டளைகளை, யூதர்களின் கண்ணோட்டத்தின்படியே மாத்திரம் பார்க்கிறவர்களாக இருந்து, அதன் உண்மையான தாழ்ப்பரியத்தைக் காண தவறிப்போகிறவர்களாக இருக்கின்றனர்.

## "இந்த இளைப்பாறுதலில் பிரவேசித்துள்ள நமக்கு ஓர் ஓய்வு"

ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் கர்த்தர் இயேசுவை நம்முடைய மீட்பராக, நமக்கு ஜீவன் அளிப்பவராக, நம்முடைய பாவத்திற்கான பரிகாரியாக ஏற்றுக்கொண்ட உடனே, நாம் பிரவேசிக்கும் விசுவாசமாகிய இளைப்பாறுதல் எனும் இந்த ஓய்வுநாளின் உண்மையான அர்த்தத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். இந்த இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளோம் என நாம் நம்ப ஆரம்பிக்கும் பட்சத்திலும், மற்றும் நாம் கர்த்தருக்கு ஒருவேளை உண்மையாய் இருந்து, அவருடைய அன்பில் நிலைத்திருப்போமானால், நம்முடைய ஓய்வு ஒருபோதும் முடிவதில்லை. "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" (எபிரெயர் 4:3).

விசுவாசம், வாரத்தின் அனைத்து நாட்களிலும் காணப்பட வேண்டும்; மேலும் இவ்விதமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு நாளும் ஓய்வைக் கைக்கொள்கின்றனர். அதாவது, கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட வேலையின் நிமித்தம் ஓய்வாகக் காணப்படுகின்றார்கள். அதாவது, நியாயப்பிரமாணம் மூலம் நம்மை நாம் நீதிமானாக்குவதற்கான அனைத்துப் பிரயாசங்களாகிய, நம்மடைய சொந்த வேலைகளிலிருந்து நாம் ஓய்வு அடைந்திருக்கின்றோம். நம்முடைய கர்த்தருடைய ஊழியம் அவருக்கு முடிவில்லாத ஓய்வாக இருந்தது அல்லவா? அதுபோல, இன்றைய கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் விசுவாசத்தின் மூலம் கர்த்தரில் இளைப்பாறினால், உலகத்திற்குள் நம்மை அவருடைய ஸ்தானாதிபதிகளாக அனுப்பி வைத்தவருடைய கிரியைகளைச் செய்ய நாமும் நாடினால், நமக்கும் ஒவ்வொருநாளும் (கர்த்தருக்கு இருந்ததுபோன்று) ஓய்வுநாளாக இருக்கும் அல்லவா? இவ்விதமாக ஜீவியத்தின் சகல வேலையும் நமக்குப் பரிசுத்தமானதாய்க் காணப்படும். நாம் புசித்தாலும் (அ) குடித்தாலும், எழுதினாலும் (அ) பேசினாலும், தூங்கினாலும் (அ) விழித்தாலும், அழுக்குகளைத் தேய்த்துக் கழுவினாலும் (அ) மண்ணைத் தோண்டினாலும், நாம் அனைத்தையும் தேவனுடைய மகிமைக்காகவே செய்கின்றோம்; அதாவது எதைச்செய்தாலும், அதைத் தேவனுக்கென்றே செய்வதுபோன்று செய்கிறவர்களாகவும் மற்றும் நாம் செய்யும் அனைத்து

வேலைகளிலும் நாம் நம்முடைய இருதயங்களில் ஓய்வின் இளைப்பாறுதலைத் தக்க வைத்துக்கொள்கிறவர்களாகவும், அதாவது நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் கூடே உள்ள நமக்கான உறவின் காரணமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக அன்பிலும், பராமரிப்பிலும் இளைப்பாறுதலைத் தக்க வைத்துக்கொள்கிறவர்களாகவும் நாம் காணப்பட வேண்டும்.

## "ஞாயிற்றுக்கிழமை அனுசரிப்புச் சரியான ஒழுக்கமுறை"

உண்மையான இளைப்பாறுதல் என்ன என்பதை அறிந்த நிலையிலும், அதனை அனுபவித்த நிலையிலும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள், கிறிஸ்தவ மண்டலத்தின் அமைதிகாலச் சட்டங்களின்படி நியமிக்கப்பட்டுள்ள ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டுமா? என்ற கேள்விகள் எழும்பலாம்; மூன்று காரணங்களின் நிமித்தம் நம்முடைய பதில் ஆம் என்றே உள்ளது. அந்த மூன்று காரணங்களும் பின்வருமாறு:

(1) கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மனசாட்சிக்கு முரண்பாடாய்க் காணப்படாத மனித சட்டத்தின் எந்தக் கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பதே தெய்வீகக் கட்டளையாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த ஓய்வுநாள் குறித்த மனித சட்டமானது நம்முடைய மனசாட்சிக்கு முரண்பாடானதாக இல்லை என்பதையும் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

(2) ஒருவேளை மற்ற ஜனங்களே தங்கள் வேலைகளிலிருந்து ஒருநாள் ஓய்ந்திருக்க முடிகின்றது என்றால், கர்த்தருடைய ஜனங்களாலும் அப்படிச் செய்ய முடியும். மேலும், இவர்கள் உலகத்தாரைக் காட்டிலும் அனுகூலமாய், ஒருநாள் ஓய்ந்திருக்க முடியும். ஏனெனில், நமக்குத் தேவனைக்குறித்தும், அவருடைய வார்த்தைகளைக்குறித்தும் உள்ள மேலான அறிவு இருக்கின்றபடியால், உலக வேலைகளிலிருந்து நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அந்த நேரத்தை நம்மால் ஞானமாகவும், சிறப்பாகவும் பயன்படுத்த முடியும்.

(3) உலகமும், பெயர்க் கிறிஸ்தவ மண்டலமும், ஓய்வுநாள் குறித்த விஷயத்தில் தவறு செய்துள்ளதாலும், மற்றும் யூத பிரமாணங்களுடைய கருத்தாகிய ஏழு நாட்களில் ஒன்றை மத ரீதியிலான ஓய்வுநாளாகக் கொண்டிருக்கும் கருத்தைக் கொண்டுள்ளதாலும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மிகுந்த நன்மை உண்டாகி உள்ளது. ஆகையால் உலகம் தவறு செய்தாலும், அறியாமையில் கட்டளையிட்டிருந்தாலும், அதனை தேவன் தம்மை அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக மாற்றியுள்ளார்.

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், தங்களுக்கு ஏழு நாட்களில், ஒரு நாளானது மாம்சீக வேலைகளினின்று விசேஷமான ஓய்வுக்காகவும், ஆவிக்குரிய வேலைகள், சந்தோஷங்கள் மற்றும் புத்துணர்வில் பங்குக்கொள்வதற்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ள சிலாக்கியத்தின் நிமித்தம் சந்தோஷங்கொள்வதோடு மாத்திரமல்லாமல், உலகம் தங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றது என்றும், (கிறிஸ்தவ மண்டலத்தாரால், தெய்வீகக் கட்டளையாக வந்தது என்று அனுமானிக்கப்படும்) இந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் சட்டத்தைத் தாங்கள் மீறும் காரியமானது, நன்மைக்கு ஏதுவாக தங்களுடைய செல்வாக்கைக் குறைத்துப்போடுவதாக இருக்கும் என்றும் அறிந்துக்கொள்ள வேண்டும். ஆகவே, உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும் தங்களுடைய அயலார்களைக் காட்டிலும் ஞாயிற்றுக் கிழமையை, ஓய்வுநாளாக அநுசரிக்கும் விஷயத்தில் கண்டிப்புடன் (அ) மிகுந்த கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்பதே நம்முடைய புத்திமதியாகும்; அதாவது மிகவும் அவசியம் வாய்ந்த காரியங்கள் அல்லது இரக்கம் காட்டும் வேலைகள் தவிர மற்றபடி உள்ள அனைத்து வேலைகளையும் நாம் அந்நாளில் தவிர்த்து, இந்த விலையேறப்பெற்ற நாளை கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருளாகவும்/உதவியாகவும் மற்றும் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருவதற்கான மாபெரும் சிலாக்கியமாகவும் மற்றும் வாய்ப்பாகவும் கருத வேண்டும் என்பதே நாம் அளிக்கும் புத்திமதியாகும். இந்த நியமிக்கப்பட்ட (ஞாயிற்றுக்கிழமை) ஓய்வின் நாளன்று நாகரிகமான தேசத்தில், நம்முடைய இல்லங்கள் மிகவும் அமைதியானதாக இருக்கக்கடவது; நாம் வசிக்கும் வீடுகளில்/இடங்களில் வேலை புரிகின்ற எவ்விதமான சத்தங்கள் (அ) லௌகீக இன்பங்களின் ஆரவார சத்தங்கள் இல்லாமல் இருக்கக்கடவது. ஆனால் நம்பிக்கையின், அன்பின், விசுவாசத்தின் சந்தோஷங்கள் பெருகக்கடவது. மேலும், நம்முடைய மகிழ்ச்சியான இருதயங்கள் நம்முடைய மகிழ்ச்சிகரமான வார்த்தைகளிலும், தொனிகளிலும், பார்வைகளிலும் வெளிப்படக்கடவது; இவ்விதமாக, கர்த்தருக்குள் நாம் கொண்டிருக்கும் நம்முடைய மகிழ்ச்சியும், நம்முடைய தன்னடக்கமும், நம்மோடு காணப்படும் அனைவருக்கும் வெளியரங்கமாகி, அவர்கள் நாம் இயேசுவோடுகூட இருந்தவர்கள் என்றும், அவரிடமிருந்து கற்றுக்கொண்டவர்கள்

என்றும் அறிந்துக்கொள்வார்கள். "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துக்கொண்டார்கள்" (அப்போஸ்தலர் 4:13). நாம் மிகவும் நெருக்கமாய்க் காணப்படும் நம்முடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம், நம்முடைய கண்ணோட்டத்தின்படி, ஒவ்வொரு ஓய்வுநாளும் விசுவாசத்தில் இளைப்பாறும் ஓய்வுநாளாகக் காணப்படுகின்றது என்று விவரிக்கலாம்; இன்னுமாக நாம் அழிந்துபோகக்கூடிய மாம்சீக உணவுகளுக்காக வேலை செய்வதற்குச் சில நாட்கள் அவசியப்பட்டாலும், நம்முடைய இருதயங்கள் ஓய்வுநாளுக்குரிய மாபெரும் கர்த்தரிலும், அவர் நிறைவேற்றின வேலையிலும் இன்னமும் இளைப்பாறிக் கொண்டுதான் இருக்கின்றது என்றும் விவரிக்கலாம்.

இன்று வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம், யூதர்கள் செய்ய வேண்டும் என்று அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட நியாயப்பிரமாணத்தினுடைய வெளித்தோற்றமான அனைத்துக் காரியங்களுக்கும் நாம் இசைவாகக் காணப்பட முற்படுவது என்பது நமக்கான காரியமல்ல. உதாரணத்திற்கு ஒரு நான்கு சக்கர வண்டியை (car), ஓய்வு நாளன்று ஓட்டிக்கொண்டு செல்வது என்பது நான்காம் கட்டளையை (யூதர்கள்) மீறுவதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை; ஒருவேளை யூதர்களுடைய நியாயப்பிரமாணமானது நம் மீது ஆளுகை கொண்டிருக்குமாயின், நாம் நான்கு சக்கர வண்டியை ஓட்டிச்செல்வதும், அதில் அமர்ந்து பிரயாணம் பண்ணுவதும் முற்றிலும் தவறாகவும், பாவச் செயலாகவும் காணப்படும். ஆனால் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றபடியாலும், ஞாயிற்றுக்கிழமைகளில் வண்டியில் பிரயாணம் பண்ணுவதைச் சட்டங்கள் தடைப்பண்ணாததாலும், அது உடன் மனிதர்களால் தீமை என்று கருதப்படாததாலும், பிரயாண விஷயத்திலும் சரி, இதுபோன்ற மற்ற விஷயத்திலும் சரி, நாம் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளில் பிரயாணத்திற்குரிய சொகுசுகளின் நன்மையைப் பயன்படுத்துவதில் தவறில்லை.

## "பரிசேயர்களின் ஓய்வு"

நம்முடைய பாடம், யூதர்களுடைய நியாயப்பிரமாணம் நடைமுறையில் காணப்பட்ட காலம் சம்பந்தமானது. மேலும், இன்றைய காலங்களில் யூத போதகர்களால் ஒருமனப்பட்டு வலியுறுத்தப்படும் மிதமிஞ்சின அனுசரிப்புகளைக் காட்டிலும், அன்றைய காலக்கட்டத்தில் நான்காம் கட்டளைக்குக் காணப்பட்ட சரியான விளக்கம், நாம் அக்கட்டளையை அனுசரிக்கும் விதத்திற்கு மிகவும் இசைவாகக் காணப்படுகின்றது. அன்றைக்கும், இன்றைக்கும் இடையே காணப்பட்ட வித்தியாசம் என்னவெனில், அன்று நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்பட்ட யூதர்கள் ஓய்வுநாளில் எவ்விதமான உலகத்திற்குரிய வேலைகளும் செய்யக்கூடாது என்று தடைப்பண்ணப்பட்டிருந்தார்கள். ஆனால், இன்று நாமோ நம்முடைய ஆவிக்குரிய சிலாக்கியங்களை முழுமையாக, அதிகமாக அனுபவிப்பதற்கு ஏதுவாக நாமே விலகிக்கொள்ள விரும்பும் பூமிக்குரிய வேலைகள் மற்றும் பூமிக்குரிய சட்டங்கள் சொல்லும் வரையறைகள் தவிர மற்றபடி நமக்கு எத்தகைய தடையும் விதிக்கப்படவில்லை.

இயேசுவும், அவருடைய சீஷர்களும் கோதுமை வயலின் வழியே காணப்பட்ட பொது வழியில் நடந்துக்கொண்டு சென்றிருந்தார்கள். பயிர்கள் கிட்டத்தட்ட முதிர்ந்த நிலையை அடைந்திருந்தது. சீஷர்கள் பசியாக இருந்ததின் நிமித்தம் கொஞ்சம் கதிர்களைக் கொய்து எடுத்து, கோதுமையைப் புசிக்கும் வண்ணமாக அதின் உமியை அகற்றும்படிக்கு கோதுமை மணிகளைத் தங்கள் கைகளுக்கிடையே தேய்த்தார்கள். பரிசேயர்கள் தெய்வீகமான நியாயப்பிரமாணத்தின் உள்காரியங்களைக் காட்டிலும், அதன் வெளிக்காரியங்களை அறிந்திருந்தவர்களானபடியால், நியாயப்பிரமாணத்தின் உண்மையான சாரத்தை (அ) ஆவியை முற்றிலும் அறிய தவறியும், அதைப் புறக்கணித்தும் இருந்து, அதை வெளித்தோற்றமாக அனுசரிக்கும் விஷயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தவர்களாகக் காணப்பட்டார்கள். ஆகவே இயேசுவின் சீஷர்களை, நியாயப்பிரமாணத்தை மீறினவர்களாகவும், இயேசு அவர்களுடைய போதகராக இருந்தும், அவர்களை அவர் கடிந்துகொள்ளவில்லை என்பதாகவும் குற்றம் சாட்டிக்கொண்டு, தங்களுடைய மத பக்தியை வெளிக்காட்டுவதற்குமான வாய்ப்பு இப்பொழுது கிடைத்துள்ளது என்று பரிசேயர்கள் எண்ணிக்கொண்டார்கள். இதே ஆவியை, இன்றும் அடிக்கடி நம்மால் பார்க்க முடிகின்றது. இன்றைய நாட்களில் சிலர் ஓய்வுநாளன்று தாங்கள் வண்டியில் பயணம் செய்யக்கூடாது என்ற விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் தங்களுடைய மனங்களை உலகக்காரியங்களுக்குப் பின் அலைப்பாய விடுவதோடு மாத்திரமல்லாமல், மிகவும் மோசமாக தீமையான காரியங்களில் அல்லது அன்றைய தினத்தில் தங்களுடைய அயலாரைக்காட்டிலும்

எப்படித் தாங்கள் முந்திக்கொள்ளலாம் என்பது தொடர்பான திட்டங்களில் அலைப்பாய விட்டுவிடுகின்றார்கள். இது மாய்மாலமாகும், மேலும் இது தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி மோசமான பாவங்களாகவும் உள்ளது.

தேவனிடத்திலும், மனுஷரிடத்தில் காண்பிக்கப்பட வேண்டிய/செய்யப்பட வேண்டிய நியாயப்பிரமாணத்தின் உண்மையான சாரத்தை யூதர்கள் புறக்கணித்து, தேவையற்ற விஷயங்களில் நியாயப்பிரமாணத்தை அவர்கள் மிகைப்படுத்தின காரியங்கள் நமக்கு உண்மையில் வேடிக்கையாக இருக்கின்றது. உதாரணத்துக்கு, இந்த ரபிகளின் சட்டத்தின்படி கொசுவை அடிப்பது என்பது வேட்டையாடுவதற்குச் சமமாக இருக்கின்றது; ஆகையால் இக்காரியம் ஓய்வுநாளன்று தடை பண்ணப்பட்டுள்ளது. இன்னுமாக, இரண்டு உள்ளங்கைகளால் கோதுமை மணியின் உமி தேய்த்து உரிக்கப்பட்டு ஊதிவிடப்படுவது என்பது கோதுமையைப் புடைப்பதற்கும், கதிரடிப்பதற்கும் சமமாய் இருப்பதினால், இக்காரியம் ஓய்வுநாளின் ஓய்வை மீறுவதாக மிகைப்படுத்தப்பட்டது. நமது கர்த்தர் இவர்களுடைய இக்குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளாமல், மாறாக தம்முடைய சீஷர்கள் செய்த காரியம் தவறல்ல என்றும், தம்மால் அங்கீகரிக்கப்படுவதோடு கூட, இந்தப் பரிசேயர்கள் அங்கீகரிக்கும் சில பிதாக்களின் செயல்பாடுகள் மூலமாகவும் சீஷர்கள் செய்த காரியம் தவறல்ல என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார். தேவை மற்றும் இரக்கத்திற்கான உதாரணமாக ஆசாரியர்கள் மாத்திரமே புசிக்கக்கூடிய தேவசமூகத்தின் அப்பத்தை, தாவீது புசித்த சம்பவத்தை நமது கர்த்தர் எடுத்துக்கொண்டார்; தாவீது பசியாய் இருந்தபடியால் இப்படியாகச் செய்துகொண்டார். இன்னுமாக ஆசாரியர்களும், லேவியர்களும், ஒவ்வொரு ஓய்வுநாளிலும், யூதர்களுடைய தேவாலயத்தில் ஆராதனை தொடர்பான விஷயங்களில் வேலை செய்வதையும் நமது கர்த்தர் உதாரணமாகச் சுட்டிக்காண்பித்தார். இப்படியான அங்கீகரிக்கப்பட்டக் காரியங்கள் ஓய்வுநாளின் சரியான கோட்பாடுகளைக் காட்டுகின்றது என நமது கர்த்தர் முன்வைத்தார். பயிர்களை ஓய்வுநாளன்று அறுவடை செய்வதோ, புடைப்பதோ, கதிரடிப்பதோ சரி என்று நமது கர்த்தர் சொல்ல முற்படாமல், பசியை ஆற்றுவதற்கான காரியங்களில், அதாவது அப்போஸ்தலர்கள் தங்கள் பசியை ஆற்றுவதற்கு இப்படிச்செய்த காரியங்களில், அவர்கள் ஓய்வுநாளில் வேலை செய்துவிட்டார்கள் என்ற விளக்கங்களைக் கொண்டுவந்து நுழைத்து, அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்றும், ஓய்வுநாளின் கட்டளைகளை மீறிவிட்டார்கள் என்றும் சொல்லப்படக்கூடாது என்பதே நமது கர்த்தரின் வாதமாக இருக்கின்றது.

## "ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்"

வேதவாக்கியங்களைக் கொண்டு, பரிசேயர்களின் கூற்றுகள் ஏற்கப்பட முடியாது என்று அவர்களிடம் நமது கர்த்தர் வலியுறுத்தின பிற்பாடு, நியாயப்பிரமாணத்தின் அர்த்தத்தை விளக்கிக் கூறுவதற்கான தம்முடைய அதிகாரத்தைக்குறித்து நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார். "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" என்றார். ஒருவேளை ஓய்வுநாளில் ஆலயத்தின் பணிகளை, லேவியர்கள் செய்வதே சரி என்றால், இயேசு இந்தத் தேவாலயத்தைக் காட்டிலும் பெரியவராகவும், தேவனுடைய குமாரனாகவும், தேவனுடைய பிரதிநிதியாகவும் இருக்கின்றபடியால், அவருடைய சீஷர்கள் அவரால் அங்கீகரிக்கப்பட்ட எதையும் மற்றும், அவருக்கான ஊழியத்திற்கென்று எதையும் கவலையின்றிச் செய்யலாம். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்கள் முன்பு இப்படியாக அவருக்கு எதிர்ப்பேச்சுப்பேச முடியாத அளவுக்குச் சொல்வன்மையுடையவராகத் திகழ்வதிலிருந்து, அவர் எப்படிப்பட்ட தனித்துவமான சிறப்புப் பெற்றிருக்கும் மனிதனாக இருந்திருக்கக் கூடும் என்பது நமக்குத் தெரிகின்றது. எந்த ஒரு மனுஷனும் பேசாததுபோல் நமது கர்த்தர் பேசினவராக இருந்ததோடல்லாமல், அவருடைய தோற்றம் கூட விழுந்துபோன இனத்தின் அங்கங்களைக்காட்டிலும் தலைச்சிறந்ததாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

"மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்" (மத்தேயு 12:8). இயேசு ஓய்வுநாளின் ஆண்டவராகவும், மாபெரும் போதகராகவும் இருந்தபடியால், நியாயப்பிரமாணத்தின் விஷயங்களை இவர் நிறைவேற்றுவதன் மூலம், அதைச் சிலுவையில் அறைந்துப்போட்டு, நியாயப்பிரமாணத்தையும், இந்த ஓய்வுநாள் எனும் அம்சத்தையும் ஒழித்துப்போடுவதற்கு மாத்திரம் அவர் அதிகாரம் கொண்டவராய் இராமல் மாறாக ஓய்வுநாளின் ஆண்டவராகிய இயேசு, சரியான போதகராகக் காணப்பட்டு, நியாயப்பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தையும் யூதர்களுக்கு முன்வைக்கின்றவராகவும் இருந்தார். "பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்" என்ற காரியங்களைக்

கர்த்தர் நமது கவனத்திற்குக் கொண்டு வந்தார் (ஓசியா 6:6). மேலும் ஒருவேளை ஓசியா 6:6-ஆம் வசனத்தின் இரக்கம் எனும் காரியத்திற்குப் பரிசேயர்கள் தங்கள் எண்ணங்களைத் திருப்பியிருந்திருப்பார்களானால், இவர்களுடைய எண்ணங்கள் மிகவும் இசைவானதாகவும் காணப்பட்டு, ஓய்வுநாளின் கட்டளையை மீறவில்லை என்று கர்த்தர் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் தமது சீஷர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பிடாதவர்களாகவும் இருந்திருப்பார்கள் என்றார் கர்த்தர்.

இன்றைய நாட்களிலும் கூட குற்றம் கண்டுபிடிப்பவர்களிடமும், குறைகளை விமர்சனம் பண்ணுகிறவர்களிடமும், இரக்கமும், அன்பும் குறைவாகக் காணப்படுகின்றது. அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய்க் காணப்படுகின்றது. மேலும், யாரிடம் அன்பு அதிகமாக உள்ளதோ, அவர்களே (தேவையான) நிலைப்பாட்டை/உயர்வை எட்டக்கூடியவர்களாக இருப்பார்கள். நம்முடைய நண்பர்களிடமும், சகோதர சகோதரிகளிடமும், உலகத்தாரிடமும், நம்முடைய சத்துருக்களிடமும் நாம் காண்பிக்கும் இரக்கமானது, நம்மிடம் அன்பு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு ஜெப ஆலயத்தில் சென்றபோது, அங்கும் இதே கேள்வி கேட்கப்பட்டது. அங்குச் சூம்பின கைகளையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான், மேலும் இயேசுவைச் சிக்க வைக்கும் வண்ணமாக, ஓய்வுநாளன்று இம்மனுஷனைச் சுகப்படுத்துவது சரியான காரியமாக இருக்குமா என்று பரிசேயர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள். பரிசேயர்களுக்கு வேறு வழியில்லாமல் இருந்தபடியால், அவரை ஏதாகிலும் குற்றம் சாட்ட நாடினார்கள்; அவருடைய சீஷர்களுக்காக அவர் வாதம் பண்ணி முடிந்தாகிவிட்டது, இப்பொழுது இயேசு தாமே ஓய்வுநாளில் அம்மனுஷனைச் சொஸ்தப்படுத்தும் காரியத்தில் இறங்குவாரா? எனப் பரிசேயர்கள் எதிர்ப்பார்த்தார்கள்.

தேவனுடைய கணிப்பில் பலியைப் பார்க்கிலும் இரக்கம் செய்தலே முக்கியம் என்பதைக் கர்த்தர் கோடிட்டுக் காட்டி, வியாதியடைந்திருந்த மனுஷனுக்கு இரக்கம் காட்டும் செயலில் இறங்கினார். முதலாவதாக, பரிசேயர்களுடைய சொந்த வாழ்க்கையின், நடத்தையின் மூலமாகவே அவர்கள் முரண்பாடாகக் காணப்படுகின்றார்கள் என்பதை அவர்களுக்குக் காட்டினார்; ஒருவேளை அவர்களிடம் ஓர் ஆடு மாத்திரமே இருந்தது என்றால், அது ஓர் ஓய்வுநாளின் போது குழிக்குள் விழுந்துவிட்டது என்றால், அந்த ஆட்டின் மீதான அன்பின் காரணமாக அல்லாமல், அதன் இழப்பு, மதிப்பீடு குறித்த அச்சத்தின் காரணமாக அது காப்பாற்றப்படும் என்றார்.

"ஆட்டைப் பார்க்கிலும் மனுஷன் எவ்வளவு விசேஷித்தவன்?" என்று நமது கர்த்தர் கேட்டார்; இன்னுமாக, "ஓய்வுநாளன்று நன்மை செய்வது நியாயம்தானே?" என்றும் நமது கர்த்தர் கேட்டார். மனுஷன், மிருகத்தைப் பார்க்கிலும் விசேஷித்தவனா என்ற கேள்விக்கு உலகத்தார் பதில் கூறத்தயங்குவார்கள்/கஷ்டப்படுவார்கள்; ஆனால், ஆவிக்குரிய இஸ்ரயேவர்களாகிய கர்த்தருடைய ஜனங்கள் இக்கேள்விக்கு உடனடியாகப் பதில் கொடுத்துவிடுவார்கள். தேவனுடைய கிருபையினால் கர்த்தர் தம்மையே மனுஷனுக்கான ஈடுபலியாகக் கொடுத்தபோது மனுஷனுடைய முக்கியத்துவம் என்ன என்பதை நமக்கு முன் வைத்தார். ஆகையால், கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்பவர்கள், பூமிக்குரிய (அ) ஆவிக்குரிய விஷயத்தில், தனக்கடுத்த மனுஷனுக்கு விடுதலை அளிப்பதற்குத் தாங்கள் செய்யும் எக்காரியங்களும் தங்களுக்கான சிலாக்கியம் என அதிகமதிகமாக எண்ணிக்கொள்ள வேண்டும்.

பரிசேயர்களுக்கு எல்லா கட்டங்களிலும் பதில் கொடுக்கப்பட்டது. மேலும், மாபெரும் போதகராகிய கர்த்தருடன் தங்களுக்கு ஏற்படும் மோதலின் நிமித்தம், ஜனங்கள் முன்னிலையில் தங்களுக்கான செல்வாக்கின் மதிப்புக் குறைந்து போவதைப் பரிசேயர்கள் உணர்ந்துக்கொண்டார்கள். ஆகவே, இயேசு தம்முடைய வார்த்தையினால் சூம்பின கரங்களையுடைய மனுஷனைச் சொஸ்தப்படுத்தினபடியால், அவரை அழித்துப் போடும்படிக்கு ஆலோசனைச் செய்வதற்கென, ஜெப ஆலயத்தைவிட்டுக் கோபத்துடன் வெளியேறினார்கள். இவர்கள் தங்கள் முக்கியத்துவத்தைக் கருதினவர்களாக இருந்தார்கள். இவர்கள் தங்களுடைய மதிப்பைக் களங்கப்படுத்தும் எச்செயலானாலும் சரி, அது கர்த்தருக்கும், அவருடைய நோக்கத்திற்கும் பாதிப்பை உண்டுபண்ண வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும், இவர்கள் தாங்கள்தான் பாரம்பரியமான கூட்டத்தாராக இருக்கின்றபடியால், தங்களுக்கு ஒத்துப்போகாத வார்த்தைகளையும், நடத்தைகளையும் உடையவருடைய செல்வாக்கானது இஸ்ரயேல் முழுவதும் பரவாமல் இருப்பதற்கென அவரைக் கொன்றுபோடுவது சரியானக்காரியமே என்றும் எண்ணினார்கள். இதேபோன்ற ஆவி, இன்றும் காணப்படுகின்றது; மதத்திற்காக

வெளித்தோற்றமான வைராக்கியங்கொண்டுள்ள அநேக ஜனங்கள் மத்தியிலேயே, நாம் காணப்படுகின்றோம். இவர்கள் அன்பிலும், இரக்கத்திலும் மிகவும் குறைவுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அமைப்பின்/ஸ்தாபன பிரிவின் ஆவியினால் மிகவும் ஆட்கொள்ளப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். மேலும், ஆண்டவருடைய சரீரத்தின் அங்கங்கள் முன்வைக்கும் சத்தியமானது, அமைப்பின் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டுள்ள இவர்களின் கனத்தையும், உலகத்தின் முன்பான இவர்களுடைய அந்தஸ்தையும் குறைவுபடுத்தும் பட்சத்தில், ஆண்டவருடைய சரீரத்தின் அங்கங்களை இவர்கள் துன்பப்படுத்தவும் விரும்புவார்கள். அன்பான நண்பர்களே, நாம் ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, கர்த்தருடனான நம்முடைய உறவைப் புரிந்தும், உணர்ந்தும் கொண்டு, நியாயப்பிரமாணத்தின் சாரத்திற்கு/ஆவிக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கக்கடவோம்.

**ஆமென்!**

---

# "இயேசுவுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை"

## லூக்கா 7:1-17

"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்." - யோவான் 11:25

நமது கர்த்தராகிய இயேசுவுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை காணப்பட்டது. ஏனெனில், தெய்வீக திட்டத்தின்படி இவரே தம்மைப் பலியாக்குவதின் மூலமாக உலகத்தை மீட்டுக்கொள்ளவும், பின்னர் உலகத்தை முன்னிருந்த நிலைமைக்குக்கொண்டு வரவேண்டியவராக இருக்கின்றார். இவ்வேலைகள் இவர்களை மரணத்தினின்று விழித்தெழுப்புவதாக மாத்திரம் காணப்படாமல், நோயினுடைய மரித்துக்கொண்டே இருக்கும் நிலையை மேற்கொள்வதற்கு ஏதுவான அத்தகைய ஓர் உயிர் ஆற்றலையும் இவர்களுக்கு அளித்து, இறுதியில் இப்படியாக உயிர்த்தெழுப்பப்பட்ட இவர்கள், கீழ்ப்படியாமையின் காரணமாக கிடைத்திட்ட "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18:4) என்ற வசனத்தினுடைய தீர்ப்பினிமித்தம் நம்முடைய ஆதிப்பெற்றோர்கள் ஏதேன் தோட்டத்தில் இழந்துபோயிருந்த முழுப் பூரணத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். இதுவே நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீகத் திட்டத்தினுடைய அனைத்துக் காரியங்களிலுமே மிக முக்கியமான அம்சமாகும். மேலும், இதை நாம் தெளிவாகப் புரிந்துக்கொள்வோமானால், இது தெய்வீகத் திட்டத்தினுடைய மற்ற அனைத்து அம்சங்களையும் நாம் புரிந்துக்கொள்வதற்கு உதவி செய்துவிடும். மரணம் என்பது ஜீவனற்ற நிலை, ஜீவன் இழந்துபோன நிலை என்றும், ஜீவன் பெற நாம் அபாத்திரர்களாகத் தீர்க்கப்பட்டுள்ளபடியால், இம்மரணம் நம் இனத்தின் மீது காணப்படும் தண்டனையாக இருக்கின்றது என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆதி பாவம் காரணமாக நம் மீது வந்துள்ள சாபம் அல்லது தீர்ப்பினின்று உள்ள மீட்பையே, எதிர்க்கால ஜீவியத்தைக்குறித்த அனைத்து வேதவாக்கியங்களும் குறிப்பாகக் காட்டுகின்றது. கடனை (அ) தீர்ப்பை ரத்து செய்வது என்பது மனுக்குலத்தை மீண்டும் முந்தின நிலைக்குக் கொண்டு வருவதில்லை என்றாலும், அது மனிதன் இழந்த அனைத்தையும் மீண்டுமாக திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு, அவனுக்கு இருந்த நீதியின்படியான தடையை மாற்றிவிட்டது. பின்வரும் காரியங்களே நமது இரட்சகருடைய வேலையாக இருக்கின்றது. முதலாவதாக, கர்த்தரின் வேலையானது மீட்பின் வேலையாக இருக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில் மீட்கப்பட்டவர்களில் சிலரைத் தம்முடைய அங்கங்களாக, தம்முடைய மணவாட்டியாக, தம்முடைய சபையாக, தலையாகிய தம் கீழ் ஏற்றுக்கொள்வதற்கும், அடுத்த யுகத்திற்குரிய சீர்த்திருத்துதலின்/திரும்பக்கொடுத்தலின் மாபெரும் வேலையில் இவர்களைத் தம்முடன் உடன்வேலையாட்களாக ஏற்றுக்கொள்வதற்கும் கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்தை பயன்படுத்தினாலும், இந்த மீட்பு, அவருடைய முதலாம் வருகையின்போதே செய்து முடிக்கப்பட்டது.

இரண்டாவதாக, கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது அவருடைய சபை, அவருடைய அங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு, ஆயத்தப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டு, அவருடன் கனத்திலும், மகிமையிலும், அழியாமையிலும் பங்கடைந்து காணப்படும்போது, அவருடைய வேலை திரும்பக்கொடுத்தலாகக் காணப்படும். அப்பொழுது மீட்பின் முழுவேலையும் மனுக்குலத்தின் உலகத்தின் மேல் செலுத்தப்படும் . . . இது இவர்களை மரணத்தினின்று விழித்தெழுப்பி, அக்ஷணமே முழுமையான பூரணம் அடையச்செய்வதின் மூலம் செய்யப்படாமல் மாறாக, முதலாவதாக இவர்கள் மரணம் எனும் நித்திரையினின்று விழித்தெழுப்பப்பட்டு, பிற்பாடு ஆயிரவருஷ யுகத்திற்குரிய போதனைகள் மற்றும் ஒழுக்கங்கள் மூலம் இவர்களுடைய ஒத்துழைப்புடன், இவர்கள் படிப்படியாகச் சீர்த்தூக்கப்பட்டு மேலும், இந்த இரக்கங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு இவர்கள் வெளிப்படுத்தும் பதிலுக்கேற்ப இவர்கள் படிப்படியாக பாவம் மற்றும் மரணத்தினின்று, நித்தியஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள். கீழ்ப்படியாதவர்கள் நித்தியஜீவன் பெற்றுக்கொள்ள அபாத்திரர்களாகக் கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள்.

## “ஜீவன் கொடுப்பவராகிய இயேசு”

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தினுடைய (யோவான் 11:25) வார்த்தைகள் நம்முடைய கர்த்தருக்கு விசேஷமாக எதிர்காலத்தில் பொருந்தக்கூடியதாக இருப்பினும் அதாவது, அவருடைய ஆயிரவருஷ ஆளுகையின் ஆரம்பத்தில் அவருக்குப் பொருந்தக்கூடியதாக இருப்பினும் அதாவது, மரணத்தை அழித்துப்போட்டு அதன் வல்லமையினின்று, மாபெரும் சிறைச்சாலையினின்று, விழுகையின் காரணமாக வந்திட்ட பெலவீனங்களினின்று மனுக்குலத்தை அவர் தூக்கி எடுக்கும்போது அவருக்குப் பொருந்தக்கூடியதாக இருப்பினும், சிலவிதங்களில் அவருடைய முதலாம் வருகையின்போதும் அவருக்குப் பொருந்தக்கூடியதாகவும் இருக்கின்றது. நமது கர்த்தருடைய சொந்த பலியானது, அவர் கல்வாரியில் மரிப்பதுவரையிலும் நிறைவேறாமல் இருப்பதும் மற்றும் அவருடைய சரீரத்தினுடைய அங்கங்களின் பலிகள் நிறைவேறி முடிவதற்குப் பல நூற்றாண்டுகள் இருக்கின்றது உண்மைதான். ஆனால், நமது கர்த்தர், 30-ஆம் வயதில் பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கும், தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்குமெனத் தம்மையே முழுமையாக அர்ப்பணம் பண்ணினபோது, அவர் செய்யும்படிக்கு தமது கையில் எடுத்துக்கொண்ட அந்தத் தெய்வீகத் திட்டமானது, பிற்பாடு நிறைவேறி முடியப்போகிற தம்முடைய சொந்த பலியினுடைய நிறைவேறுதலையும், தம்முடைய சபையாகிய நிறைவடையும் சரீரத்தின் பலியினுடைய நிறைவேறுதலுமாகிய அம்சங்களையும் உள்ளடக்கினதாகக் காணப்பட்டது.

நமது பரம பிதா, கர்த்தர் தமது பலியை (நிச்சயமாய்) நிறைவேற்றித் தீருவார் என்று கருதின காரியமானது, பிதா பரிசுத்த ஆவியைக் கர்த்தருக்கு அருளின காரியத்திலிருந்து உறுதியாகுகின்றது. கர்த்தர் மேல் அருளப்பட்ட இந்த அபிஷேகமானது, அவரை மேசியாவாக, கிறிஸ்துவாக, சபையாகிய கர்த்தரின் சரீரத்தினுடைய நம்பிக்கையாகவும் மற்றும் இறுதியில் நடைபெறப்போகிற அனைத்துக் காரியங்களுக்குமான நம்பிக்கையாகவும் ஆக்கியது. ஆகவே, நமது கர்த்தர், தாம் பண்ணின பலியின் அந்த உடன்படிக்கையை, பலியை ஒருபோதும் தவறாதபடியினாலும், மற்றும் பிதாவும் அவரைத் தவறாதவராகவே கருதினபடியினாலும், கர்த்தர் தம்முடைய சொந்த ஓட்டம் முடிவுபெறும் என்ற விசுவாசத்திலும், அதேசமயம் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவை நம்பிக்கையில் கண்ணோக்கினவராகவும், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் தேவனுடைய அனைத்து நல் திட்டங்களும்/நோக்கங்களும், தமக்குள்ளும், தம் மூலமாகவும் இறுதியில் நிறைவேறித் தீரும் என்ற நிச்சயத்துடன் கண்ணோக்கினவராகவும் அவர் காணப்பட்டபடியினாலும், இக்கண்ணோட்டத்தின்படி அவர் எண்ணுவதும், செயல்படுவதும், பேசுவதும் அவருக்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. ஆகையால், இக்கண்ணோட்டத்தின்படியே அவர், “நான் உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன்” என்று கூறினார். கர்த்தர் தாம் ஏறெடுத்துள்ள பலியின் வேலையானது, உலகத்திற்கு தாம் ஜீவன் கொடுப்பவராக இருக்கும் சிலாக்கியத்தைத் தமக்குப் பெற்றுக்கொடுக்கும் என்பதை அறிந்திருந்தார். இன்னுமாக, இந்த உரிமையைத் தாம் செயல்படுத்தும்போது, கல்லறையினின்று மரித்தவர்களைத் தாம் வெளியே கொண்டு வருவதோடு மாத்திரமல்லாமல், தம் மூலம் பிதாவினிடத்தில் வருகிறவர்களும், சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படிய இருதயத்தில் விருப்பம் கொண்டுள்ளவர்களுமாகிய அனைவரையும் முற்றிலுமாக மரண நிலையினின்று, பூரணத்திற்குத் தம்மால் கொண்டு வரமுடியும் என்பதையும் அறிந்திருந்தார்.

## “நமது கர்த்தருடைய அற்புதங்கள், உதாரணங்களே ஆகும்”

நமது கர்த்தர் ஜீவன் கொடுப்பவர் என்பதை நிரூபித்துக் காட்டும் கண்ணோட்டத்தில்தான் அவருடைய அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன. ஜீவன் கொடுப்பதற்கான உரிமை (அ) சிலாக்கியம் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை மாத்திரம் காட்டுகிறதாயிராமல், ஜீவன் கொடுப்பதில் தமக்குப் பிரியம் உள்ளது எனும் விஷயத்தையும் வெளிப்படுத்தும் கண்ணோட்டத்தில்தான் அவருடைய அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன. இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது, கர்த்தர் தம்முடைய மகிமையடைந்த சபையுடன் மற்றும் சபையின் மூலம், தம்முடைய ஆயிரம் வருஷம் ஆளுகையின்போது செய்யப்போகின்ற பிரமாண்டமான வேலைக்கான சிறு உதாரணங்களாகவே நமது கர்த்தருடைய அற்புதங்கள் காணப்படுகின்றன. சகல குருடான கண்களும் திறக்கப்பட்டு, சகல செவிடர்களின் செவிகள் திறக்கப்பட்டு, மனரீதியிலும், ஒழுக்கரீதியிலும், சரீர ரீதியிலும் முடமாய் இருந்தவர்கள் சொஸ்தமாக்கப்பட்டு, பாவத்திலும், அக்கிரமத்திலும் காணப்பட்ட சகல மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, உலக தோற்றம் முதல் சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் வாயின்மூலம் வாக்களிக்கப்பட்ட பிரகாரம் இழந்துபோன அனைத்தையும், கீழ்ப்படிதல் காட்டுவதன் மூலம் படிப்படியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் ஆயிரம் வருஷம் ஆளுகையின்

பிரம்மாண்டமான வேலைகளுக்குக் கர்த்தருடைய அற்புதங்கள் சிறு உதாரணங்களாகவே காணப்படுகின்றது (அப்போஸ்தலர் 3:19-23).

நம்முடைய இந்தப் பாடமானது மலைப்பிரசங்கத்திற்குப் பின் தொடர்ந்த சம்பவங்களை உள்ளடக்கியுள்ளது. மலையில் ஆச்சரியமான போதனைகளை வழங்கினவருக்குள், அற்புதமான வல்லமை இருப்பது சாட்சி அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களை மத்தேயு மற்றும் லூக்கா தங்களுடைய மனங்களில் கொண்டவர்களாகத்தான், வசன காரியங்களை இப்படியாக ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். இயேசுவை நாசரேத் ஊரான் என்று ஏளனத்துடன் புறக்கணித்து ஒதுக்கினபடியால் இயேசு இப்பொழுது அவருடைய (புதிய) ஊரும், பேதுருவின் ஊரும், மற்றவர்களின் ஊருமாகிய கப்பர்நகூமுக்கு, கலிலேயா கடல் வழியாக வந்தார். முன்னொருமுறை அவர் கப்பர்நகூமில் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. மேலும், அவருடைய கீர்த்தி அனைத்து வகுப்பாரையும் எட்டியிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. உரோம சேவகர்களுக்கு அதிகாரியான ஒரு நூற்றுக்கதிபதி இங்கு வாழ்ந்து கொண்டிருந்தார். மேலும், இவருடைய முக்கியமான ஊழியக்காரன் வியாதிபட்டபடியால், இவனை இயேசு சொஸ்தப்படுத்த வேண்டும் என்று இவர் ஆவல் கொண்டார். இச்சம்பவத்தின் பதிவுகளானது இம்மனுஷன் தாழ்மையான மனங்கொண்டவர் என்பதையும், விசுவாசத்தினாலும், பரந்த மனப்பான்மையினாலும் நிறைந்தவர் என்பதையும் காட்டுகின்றது. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நூற்றுக்கதிபதிகளும் பயபக்தியுடையவர்களாகவே காணப்படுகின்றனர். "நூற்றுக்கதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்." "இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்" (மத்தேயு 27:54; அப்போஸ்தலர் 10:1). இந்தக் கொர்நேலியு என்பவரே புறஜாதியிலிருந்து முதலாவதாக கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறினவர் ஆவார்.

## "பெருந்தன்மையுள்ள நூற்றுக்கதிபதி"

நம்முடைய பாடத்தில்வரும் நூற்றுக்கதிபதி ஞானமுள்ளவராகவும், தாழ்மையுள்ளவராகவும் காணப்படுகின்றார். தான் ஒரு புறஜாதியாக இருக்கின்றபடியால், தனக்கு இந்த யூத தீர்க்கதரிசியிடத்திலும், அவர் இஸ்ரயேலர்களுக்காகச் செய்துகொண்டுவரும் பணியிலும் உரிமை இல்லை என்பதை உணர்ந்தவராக இருந்தார். ஆகவே, தன்னுடைய வேலைக்காரனைச் சொஸ்தமாக்கும்படிக்குத் தம்பொருட்டு இயேசுவினிடத்தில் விண்ணப்பம் வைப்பதற்கு, இவர் பட்டணத்தின் சில மூப்பர்களை இயேசுவினிடத்திற்கு அனுப்பி வைத்தார். பட்டணத்து மூப்பர்கள் என்று சொல்லும்போது, இவர்கள் ஜெபஆலயத்தின் மூப்பர்களாயிராமல், பட்டணத்தின் பிரதான மனுஷர்களாய் இருந்தார்கள். தாழ்மையான மனம் இல்லாத எந்த மனுஷனும் நிச்சயமாக தன்னுடைய சொந்த ஸ்தானத்திற்குரிய மதிப்பை எண்ணியிருப்பான்; இன்னுமாக, யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே பிரிக்கும் சுவர் இருக்கின்றது என்றும், புறஜாதிகள் யூதர்களுக்குரிய தெய்வீக இரக்கத்தினின்று தவிர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வேதவாக்கியங்களும், யூதர்களும் குறிப்பிடுகின்ற வேறுபாட்டைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாதவனாகவும் இருந்திருப்பான். இந்த நூற்றுக்கதிபதியும், பிள்ளைகளில் ஒருவன் என்று உரிமை பாராட்டிக்கொள்ளாத நிலையில் பிள்ளைகளின் மேஜையினின்றுவிழும் துணிக்கைகளை விரும்பின சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய ஸ்திரீயைப் போன்றவர்தான்.

மூப்பர்கள் நூற்றுக்கதிபதியின் சார்பில் இயேசுவினிடத்தில் வந்து, நூற்றுக்கதிபதி யூதனாக இல்லாமல் இருந்தபோதிலும், அவர் பெருந்தன்மையுள்ளவர் என்றும், அவர் இஸ்ரயேலர்களை நேசிப்பவர் என்றும், அவர் புறஜாதியாக இருக்கும் காரியத்தினிமித்தம் அவரால் பங்குக்கொள்ள முடியாத போதிலும், இஸ்ரயேலர்களாகிய தாங்கள் தொழுதுகொள்வதற்கெனத் தங்களுக்கு ஜெப ஆலயத்தை அவர் கட்டிக்கொடுத்தார் என்றும் கூறி கருத்தாய் வேண்டிக்கொண்டார்கள். ஒருவேளை இந்த நூற்றுக்கதிபதி மதிப்பானவராய்த் தன்னைக் காட்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தான் "பிள்ளைகளில்" ஒருவரல்ல என்னும் உண்மையைக் கருத்தில் எடுத்துக்கொள்வதைப் புறக்கணித்திருப்பாரானால், விண்ணப்பத்திற்கு அருள் செய்வதற்கு முன்னதாக, மேற்கூறிய விஷயங்கள் சம்பந்தமான சில படிப்பினைகளைப் பதிய வைக்க வேண்டிய அவசியம் இயேசுவிற்கு உண்டாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மேற்கூறின அனைத்து விஷயங்களும் அவர் வேண்டியுள்ள விண்ணப்பத்தில் ஒப்புக்கொண்டிருப்பதினால், நமது கர்த்தர் உடனடியாக விண்ணப்பத்திற்கு இணங்கினார். எந்த ஒரு காரியத்திலும் நாம் கர்த்தரைத் தாழ்மையுடன் அணுக வேண்டும் என்பதும், இந்தத் தாழ்மை அவருடைய தயவுகளையும், ஆசீர்வாதங்களையும் நாம்

பெற்றுக்கொள்ளத்தக்கதாக நம்மை ஆயத்தப்படுத்தும் என்பதும் நம் ஒவ்வொருவருக்கும் இங்குக் கிடைக்கும் படிப்பினையாகும். நாமுங்கூட அவரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதற்கு எவ்விதமான உரிமையோ, புண்ணியமோ நம்மிடத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும். இன்னுமாக நாமும் தகுதியற்றவர்கள் என்றும், கெஞ்சி பணிந்து கேட்பவர்கள் என்றும், அவருடைய கரங்களினின்று நீதியை/தீர்ப்பை அடைவதற்காக இல்லாமல் கிருபையையும் இரக்கத்தையும் நாடுபவர்கள் என்றுமுள்ள கண்ணோட்டத்தில் நாம் கர்த்தரை அணுக வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இன்னுமாக நூற்றுக்கதிபதி, தான் ஒரு புறஜாதியாக இருக்கின்றபடியால், தன்னுடைய வீட்டில் ஒரு யூதர் பிரவேசிப்பது, யூதர்களுடைய வழக்கத்தின்படி சரியானதல்ல என்றும், இப்படி பிரவேசிப்பது யூதர்களைத் தீட்டுப்படுத்தும் என்றுமுள்ள விஷயத்தை நினைவுகூர்ந்தார். இந்த நூற்றுக்கதிபதி, தான் ஒரு பாவி என்றும், வல்லமை கொண்டிருக்கின்றாரென தன்னால் ஒப்புக்கொள்ளும் இயேசுவானவர், சர்வ வல்லமையுள்ளவரின் பிரதிநிதி என்றும் உணர்ந்துக் கொண்டிருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை. இந்த நூற்றுக்கதிபதியின் உணர்வுகள், "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப்போக வேண்டும்" என்ற பேதுருவின் வார்த்தைகளுக்கு ஒத்திருக்கின்றன (லூக்கா 5:8).

இன்னுமாக, ஒருவேளை கர்த்தர் சம்பவத்தின் இடத்தில் இருக்கும்போது அவரால் வல்லமையைச் செயல்படுத்த முடியுமானால், சம்பவத்தின் இடத்தில் அவர் காணப்படாமலும், அவரால் தமது சொஸ்தப்படுத்தும் வல்லமையைச் செயல்படுத்த முடியும் என்று நூற்றுக்கதிபதி யோசித்தார். இன்னுமாக, இந்த நூற்றுக்கதிபதி இருக்கும் பட்டணமாகிய கப்பர்நகூமிலிருந்த இராஜாவின் மனுஷனுடைய குமாரனை, கர்த்தர் இயேசு கானாவூரில் இருந்துகொண்டு தமது வார்த்தை மூலம் சொஸ்தப்படுத்தின விஷயத்தையும், நூற்றுக்கதிபதி அநேகமாகக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். இந்தக் காரணங்களினிமித்தம் ஆண்டவர் இயேசு தன்னுடைய வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க தான் பாத்திரவானல்ல என்பதையும், ஆண்டவரை வருத்தப்படுத்த தனக்கு விருப்பமில்லை என்பதையும், ஆண்டவர் வாயினின்று புறப்படும் வார்த்தையே போதும் என்பதையும் தனக்கு முழுமையான விசுவாசம் இருக்கின்றது என்பதையும், ஆண்டவரிடத்தில் விவரித்துச் சொல்வதற்காக நூற்றுக்கதிபதி உடனடியாகத் தூதர்களை அனுப்பி வைத்தார். இன்னுமாக, கர்த்தருடைய வார்த்தை மீது தனக்கு இருக்கும் இந்த விசுவாசத்தை லூக்கா 7:8-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் விவரிக்கின்றார். அதாவது, தனக்கும் குறிப்பிட்டளவு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இந்த அதிகாரத்தினால் தன்னால் தன்னுடைய ஊழியக்காரனைப் போ என்றும், வா என்றும் சொல்லமுடியும்; இதைப்போலவே, தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய இயேசுவுக்கும் இயற்கையினுடைய செல்வாக்குகளின் மீது அதிகாரம் உண்டென்றும், தனது ஊழியக்காரனிடமிருந்து நோயை போ என்று கூறி இயேசு கட்டளையிட்டால், தனது ஊழியக்காரன் சொஸ்தமடைவான் என்றும் நூற்றுக்கதிபதி இயேசுவினுடைய வார்த்தைகள் மீதான தனது விசுவாசத்தை விளக்கிக்காட்டினார்.

## "அந்நியனுடைய ஆச்சரியப்படத்தக்கதான விசுவாசம்"

"இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 7:9). இயேசு ஆச்சரியப்பட்டதாகக் குறிப்பிடப்படும் மற்ற ஒரே ஒருஇடம், மாற்கு 6:6-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பல வருடங்களாக தயவு பெற்ற ஜனங்களிடம், மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களிடம், தெய்வீக வாக்குத்தத்தங்களினால் மிகவும் சம்பூரணமாகப் போஷிக்கப்பட்ட ஜனங்களிடம், தெய்வீக வழிநடத்துதல்களினால் போதிக்கப்பட்ட ஜனங்களிடம், எதிர்ப்பார்த்தளவுக்கு விசுவாசம் காணப்படவில்லை. ஆனால், தயவு பெற்றிராத புறஜாதிகளோ, அநேகவிதங்களில் குறிப்பிடத்தக்கதான விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஆகையால் கப்பர்நகூமின் ஜனங்களை, சோதோம் மற்றும் கொமோராவின் அந்நிய தெய்வங்களை வணங்கும் ஜனங்களுடன் கர்த்தர் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கர்த்தர் இயேசு "தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்: கோராசினே உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும், சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு

நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" என்ற வார்த்தைகளைப் பேசியதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை (மத்தேயு 11:20-23).

அந்நிய தேவனை வணங்குகின்ற ஜனங்கள் அனைவருக்கும், யூதர்கள் அனைவருக்கும் பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து வெளியே வருவதற்கும், பாவத்தின் மூலம் இழந்ததும், விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொண்டதுமான ஜீவனுக்குரிய நிலைக்கு மீண்டும் கீழ்ப்படிதல் காரணமாகக் கொண்டு வரப்படுவதற்கும் ஏதுவாக ஆயிரம் வருஷம் யுகத்தின் கிருபையான வாய்ப்புகளை அருளுவது தெய்வீகத் திட்டமாய் இருக்கின்றது என வேதவாக்கியங்கள் வாக்களிப்பதால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றோம். மத சம்பந்தமான விஷயங்களில், முக்கியமாய்க் காணப்படுபவர்களில் சிலர், உலகத்தாரைக் காட்டிலும் கர்த்தரிடத்திலும் அவருடைய நற்பண்புகளிடத்திலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும் வைத்துள்ள குறைவான விசுவாசத்தை/விசுவாசமின்மையைப் பார்த்துச் சிலசமயம் நாம் ஆச்சரியப்பட்டிருக்கின்றோம் அல்லவா? ஆனால், இப்படியாக விசுவாசமின்மையுடன் காணப்படுபவர்கள், கர்த்தரைப்பற்றின அறிவு பூமி முழுவதையும் நிரப்பும்பொழுதும், சகல மனுக்குலத்தின் புரிந்துக்கொள்ளுதலின் கண்களும், தேவனுடைய மகிமைப்பற்றின அறிவை உணர்ந்துகொள்ளத்தக்கதாகத் திறக்கப்படும்போதும் எவ்வளவாய் ஆச்சரியப்படுவார்கள். இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் அல்லாதவர்களாய்க் காணப்படுபவர்கள், அப்பொழுது அவருடைய ஜனங்கள் ஆகுவார்கள்; மற்றும், இப்பொழுது பலவிதத்திலும் அதிக அனுகூலங்களைப் பெற்றிருந்தும், வெளிவேஷமான பக்தியை மாத்திரம் காட்டிக்கொண்டிருப்பவர்கள், இப்பொழுது தாழ்வாகக் கருதப்படும் சிலருக்கு முன்பாக, அப்பொழுது தாழ்வாகக் காணப்படுவார்கள்.

நமது கர்த்தரும், சீஷர்களும், அவரைப் பின்தொடர்ந்து சென்ற திரளான ஜனங்கள் கூட்டமும் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்கள். ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது அடக்கம் பண்ணும் ஊர்வலம் இவர்களுக்கு முன் எதிர்ப்பட்டார்கள். கைம்பெண்ணாகிய தாயும், புலம்பி வருத்தமடைந்த நண்பர்களும், பாடையைச் சுமந்து வருகிறவர்களும், ஊர்வலத்தில் காணப்பட்டார்கள். அக்கைம்பெண்ணாகிய தாய்க்கு ஒரே மகனாய் இருந்த வாலிபன் மரித்துப் போனவனாக, பாடையில் கிடத்தப்பட்டிருந்தான். நமது கர்த்தர் கைம்பெண்ணினுடைய கண்ணீரைக் கண்டு, மனதுருகி, "அழாதே" என்று சொன்னார். "கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக்கா 7:14-15). ஒருவேளை இச்சம்பவம் கற்பனை கதையாக இருக்குமாயின், விதவை உடனடியாகக் கர்த்தருடைய பாதத்தில் விழுந்து, உரத்த சத்தத்தில் அவரைப் புகழ்ந்திருப்பாள், இன்னுமாக, அந்தத் திரளான ஜனக்கூட்டமும் சேர்ந்து அவரை வாழ்த்தியிருப்பார்கள் என்று பதிவுகள் இருந்திருக்கும். ஆனால், சம்பவத்தின் பதிவுகள் "எல்லாரும் பயமடைந்தார்கள்" என்றே தெரிவிக்கின்றது. அதாவது, இயேசுவின் வல்லமையினால், தேவன் அவர்கள் அருகாமையில் காணப்படுகின்றார் என்ற உணர்ந்துகொள்ளுதலின் காரணமாக ஜனங்கள் எல்லாரும் பயமடைந்தார்கள்.

மனுக்குலம் தேவனுக்கு எதிர்மாறாக இருக்கும் தங்களுடைய சொந்த குறைவுகளையும், பூரணமற்ற தன்மையையும், அதேசமயம் சர்வவல்லமையுள்ள தேவனுடைய பரிசுத்தத்தையும், முழுமையான பூரணத்தையும், உணரும் போது தேவன் சமீபமாய்க் காணப்படுகின்றார் என்ற எண்ணத்தினால் அவர்களுக்குப் பயமே ஏற்படுகின்றது. அங்கிருந்த திரளான ஜனங்கள் உரத்த குரலில் ஓசன்னா என்று கூறி தேவனை மகிமைப்படுத்தாமல் மாறாக, மகா தீர்க்கத்தரிசியானவர், மகா போதகர் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றார் என்றும், தேவன் அவருக்குள் இருக்கின்றார் என்றும் உணர்ந்தவர்களாக, "தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார்" என்று கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். யூதர்களுடைய பிதாக்களின் விஷயத்தில் அவர்களிடத்திலான கர்த்தருடைய தயவை, அற்புதங்கள் உறுதிபடுத்தின. விசேஷமான கையாளுதல்களை யூதர்கள் அக்காலகட்டத்தில் மீண்டுமாக எதிர்ப்பார்த்திருந்தார்கள். இன்னுமாக, மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கத்தரிசி ஆனால், மோசேயைக்காட்டிலும் வல்லமையுள்ள தீர்க்கத்தரிசி எழுப்பப்படுவார் என்று உரைக்கப்பட்டிருந்த தீர்க்கத்தரிசனத்தையும் அக்காலகட்டத்தில் யூதர்கள் நினைவுகூர்ந்து காணப்பட்டார்கள். பேதுரு, அப்போஸ்தலர் 3:19-21 வரையிலான வசனங்களில் குறிப்பிட்ட காரியங்கள் சிலவற்றை யூதர்கள் அக்காலக்கட்டத்தில் எதிர்ப்பார்த்து இருந்தார்கள். அதாவது,

தேவன் தம்முடைய ஜனங்களைப் புதுப்பிப்பதன் மூலமாகவும், அவர்களை ஆசீர்வதிப்பதன் மூலமாகவும், சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் மூலம் உரைத்திட்ட திரும்பக்கொடுத்தலின் காலங்களை அவர்களுக்கு அனுப்புவதின் மூலமாகவும் தமது தயவை வெளிப்படுத்துவார் என யூதர்கள் அக்காலக்கட்டத்தில் எதிர்ப்பார்த்தார்கள்.

## "தீர்க்கத்தரிசி, ஆசாரியன் மற்றும் இராஜா"

இவர்களுடைய எதிர்ப்பார்ப்பு சரிதான். இயேசு மகா தீர்க்கத்தரிசியாகவும், பிதா மற்றும் பிதாவின் தயவிற்கான பிரதிநிதியாகவும் காணப்பட்டார். எனினும், விசுவாசத்திற்கான பரீட்சை எத்தனை நீண்ட காலமாய் இருந்தது! கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களை எழுப்புவதற்கும் இவ்விதமாக, பரம பிதாவினுடைய திட்டம் முழுமையாக நிறைவேறுவதற்கும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, திரும்பக்கொடுத்தலின் காலங்கள் முழுமையாய் வருவதற்கும் எத்துணை நீண்டகாலம் அவசியமாய் உள்ளது. நமக்கான பாவநிவாரண பலியாக தம்மை மரணம் வரையிலும் கீழ்ப்படிதலுடன் ஒப்புக்கொடுத்தவருடைய புண்ணியத்தின் பலனால் மனுக்குத்தின் மீது வரப்போகும் மகா உலகளவிலான ஆசீர்வாதங்களுக்கான உதாரணங்களாகவே, நமது மீட்பர் சொஸ்தப்படுத்தின வேலைகளும், மரணத்தின் நித்திரையினின்று (சிலரை) விழித்தெழுப்பப் பண்ணின வேலைகளும் காணப்பட்டது. இயேசுவின் செய்தியும், அவருடைய வேலையும், பட்டணத்தின் சகல பகுதிகளிலும் பரவினதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நமது கர்த்தருடைய அற்புதங்களால் நிறைவேற்றப்பட்டன என அக்காலத்தில் உணரப்பட்ட வேலையை விட, ஒரு மாபெரும் வேலை நிறைவேற்றப்பட்டது. நமது கர்த்தருடைய ஊழியத்தின் போது சுமார் "500 சகோரர்கள்" மாத்திரமே சேர்க்கப்பட்டார்கள் என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகின்றது. அதாவது, 500 பேர் மாத்திரமே சகோதரர்கள் என்ற பெயரில் அழைக்கப்படுவதற்குப் பாத்திரராகக் காணப்பட்டதும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அந்த நாற்பது நாட்களின்போது அவரைக் காணும் சிலாக்கியம் இத்தனை பேருக்கு மாத்திரமே கிடைத்தது என்பதும் நம்மை ஆச்சரியப்படுத்தலாம். எனினும், புதிய யுகத்தின் கீழ்ப் பெந்தெகொஸ்தே நாள் முதலான அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் கீழ் அநேகர் பலனாய் வந்தார்கள். உதாரணத்திற்கு, நாயீன் ஊரின் இந்த விதவையும், அவளுடைய குமாரனும் கடைசியில், இயேசுவின் பின்னடியார்கள் ஆகியிருப்பார்கள் என்று நாம் எண்ணுவது சரியே. இன்னுமாக, அக்கூட்டத்தில் இருந்தவர்களும், அற்புதத்தைக் கண்டவர்களும், சரியன இருதய நிலையைக் கொண்டிருந்தவர்களும், மேசியாவின் மீது விசுவாசம் வைத்திருப்பார்கள். இன்னுமாக, சந்தேகத்திற்கிடமின்றி, "தடுப்புச் சுவர்" இடிக்கப்பட்ட பிற்பாடும், புறஜாதியாகிய கொர்நேலியு இந்த விசுவாச ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்பட்ட பிற்பாடும், இப்பாடத்தில் நாம் பார்த்த நூற்றுக்கதிபதி, நிச்சயமாக கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தியினால் தொடப்பட்டிருப்பார். கர்த்தருடைய ஊழியத்தில், நம்முடைய சொந்த பிரயாசத்திற்கான முழுப் பலனையும் நாம் உடனடியாக எதிர்ப்பார்க்கக் கூடாது என்பதே இங்கு நாம் கற்றுக்கொள்கின்ற பாடமாகும். நாம் மனநிறைவு உள்ளவர்களாக ஊழியம் புரிய வேண்டும்; காத்திருப்பதிலும் மனநிறைவுடன் காணப்பட வேண்டும்; மற்றும், கர்த்தர் தாமே அவருடைய வார்த்தைகளுக்கும், செய்திக்கும் பின்னாகக் காணப்பட்டு, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாகுவதற்குப் பாத்திரரென, தாம் கருதுகின்றவர்களையே அவர் தெரிந்தெடுப்பார் என்று உணர்ந்துக்கொண்டவர்களாகவும் நாம் காணப்பட வேண்டும். சில உலகப்பிரகாரமான மனுஷர்கள் சத்தியம் தொடர்பான சில அறிவிற்குள்ளாக இக்காலக்கட்டத்தில் வரலாம்; ஆயினும், இவர்கள் இச்சத்தியத்தினால் முழுமையாய் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. மேலும் (தற்காலத்திலுள்ள) சத்தியத்திற்கான நம்முடைய ஊழியங்கள் மூலமாகவும், கர்த்தருக்கான நம்முடைய தற்கால பிரயாசங்கள் மூலமாகவும், இவர்கள் போகப்போக உபத்திரவக் காலத்தின் பாடுகள் மற்றும் உபத்திரவங்களினால் அல்லது பிற்பாடு ஆயிரம் வருஷம் யுகத்தின்போது நன்மை பெற்றுக்கொள்வார்கள் என்பதே இங்கு நமக்குக் கிடைக்கும் மற்றுமொரு கருத்தாகும்.

ஆகவே, நமக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கு ஏற்ப, நாம் எல்லா இடத்திலும் நல்ல விதைகளைத் தூவுவோமாக. ஏனெனில், இதுவோ (அ) அதுவோ எது செழித்து, வளரும் என்பதை நாம் அறியோம். சிலசமயம் எங்கு நாம் அதிக வைராக்கியங்கொண்டு, பிரயாசம் எடுக்கின்றோமோ, அங்குப் பலனே கிடைக்காமல் போகின்றது; மேலும், எங்கு நாம் குறைவான பலன்களை எதிர்ப்பார்க்கின்றோமோ, அங்குத்தான் சிலசமயம் அதிக பலன் கிடைக்கின்றது. நம்முடைய வைராக்கியம் (அ) பிரயாசங்களுக்கு ஏற்பவே கர்த்தர் நமக்குப் பரிசளிப்பாரே ஒழிய, நம்முடைய பிரயாசத்தினால் உண்டான பலன்களின் அடிப்படையிலல்ல என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. கர்த்தர் நம்மிடத்தில்தான் (நமக்குள்தான்) பிரதானமான பலன்களை எதிர்ப்பார்க்கின்றார். அதாவது, அவருடைய ஆவியின் கனிகளில் வளருவதே அவர் நாடும் பிரதானமான பலன்களாகும். இந்தப்

பலன்களாகிய ஆவிக்குரிய கனிகளின் வளர்ச்சியானது, அவர் மீதும், அவருடைய செய்தியின் மீதும், சகோதரர் மீதும், ஒட்டுமொத்த மனுக்குலத்தின் மீதும், நம்முடைய சத்துருக்கள் மீதுமான நம்முடைய அன்பின் வாயிலாக வெளிப்படுகின்றது.

## ''சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்''

நமது கர்த்தருடைய குணமாக்கும் ஊழியங்கள், சில வருடங்களே நீடித்தன. இன்னுமாக, சொற்பமான யூத ஜனங்களைத்தான் சென்றடையவும் செய்தது. ஆனால், கர்த்தர் பரமேறின பிற்பாடு, "தம்முடைய சரீரத்தின் அங்கங்கள்" என்று அழைக்கும் தம்முடைய சீஷர்கள் மூலமாக, மேலான தளத்தில் குணப்படுத்தும் வேலையைச் செய்து கொண்டு வருகின்றார். (1 கொரிந்தியர் 21:27). இவர்கள் மூலம் கர்த்தர் செயல்படுவதினால், அநேக கண்கள் திறக்கப்பட்டுள்ளது, அநேக செவிகள் திறக்கப்பட்டுள்ளது, அநேக ஒழுக்க ரீதியிலான முடக்குகள் குணமாக்கப்பட்டுள்ளது மற்றும் அப்போஸ்தலர், "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்," "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள், அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." எபேசியர் 2:1; கொலோசெயர் 3:1; ரோமர் 8:11-ஆகிய வசனங்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இயேசுவின் வல்லமையான கிரியைகளைக் கண்ட பிற்பாடும், யூதர்கள் அவரைப் புறக்கணித்தக் காரியத்தைக்குறித்து நாம் ஆச்சரியடைவோமானால், பரலோகத்திலிருந்து மிகத் தெளிவாக நம்மிடத்தில் பேசியவரை, நம்மைக் குணப்படுத்தின தழும்புகளைக் கொண்டவரை மற்றும், உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார் என நாம் உணர்ந்துக்கொண்டவரை ஏதோவிதத்தில் சந்தேகிப்போமானால் அல்லது, ஏதோ விதத்தில் இவருக்கு உண்மையற்றவர்களாய் இருப்போமானால், நம்மைக்குறித்து என்னவெல்லாம் பேசப்படும். ஆகவே, புதிய ஜீவனுக்குள் உயிர்ப்பிக்கப்படும் அனுபவத்தை அனுபவித்தவர்கள் மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், இயேசுவின் மூலம் செயல்படும் தெய்வீக வல்லமை, ஈவு, ஞானம் மற்றும் அன்பின் விவரிப்பைத் தெளிவாக அடைந்துள்ளபடியால், ஒருவேளை இவர்கள் மறுதலித்துப் போவார்களெனில், இவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்கள் ஆவார்கள். "மறுதலித்துப்போனவர்கள், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (எபிரெயர் 6:6). இவ்வசனத்தில் இவர்கள் அறியாமை அல்லது பெலவீனம் காரணமாக மறுதலித்துக் கடந்து போகாமல், துணிகரமான செயல்பாடுகளினாலேயே மறுதலிக்கின்றார்களென குறிப்பிடுகின்றார். இன்னுமாக, இப்படிப்பட்டவர்களின் செயல்பாடானது, இயேசுவோடுக் கூட இருந்த யூதர்கள் அவர்பால் கொண்டிருந்த இருதய நிலைக்கு ஒத்திருக்கின்றது என்றும், இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துவதற்கு ஒத்திருக்கின்றது என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று நாம் நமது அழைப்பை, அபாத்திரமான நிலையில் முடிக்காமல் காணப்படுவோமாக. இன்னுமாக, நம்மை அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவருடைய கரங்களினின்று நாம் பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்கும், தயவுகளுக்கும், வெட்கக்கேடான பிரதிபலனைச் செலுத்தும் நிலைக்கு ஆளாகாமல் இருப்போமாக. நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கக்கடவோம். புதிய சிருஷ்டியாக நம்மில் ஆரம்பிக்கப்பட்ட உயிர்த்தெழுதலின் வேலையானது, தேவனுடைய கிருபையினால் முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவேற வேண்டும் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. முதலாம் உயிர்த்தெழுதலில், க்ஷணப்பொழுதில் நாம் நமது கர்த்தரைப் போன்று மாறி, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர்களாய் இருப்போம்.

**ஆமென்!**

---

# மணவாளனின் புறா
## THE BRIDEGROOM'S DOVE

வெண்புறாவே, பெண் புறாவே,

மணவாளன் யாரிடம் பேசுகின்றாரோ ?

யாரிடம் என்று எண்ணுகிறாய் ? என் ஆத்துமாவே,

உன்னைத்தான் அவர் அழைக்கிறார் என்றே அனுமானிக்க இயலவில்லையா ?

என்ஆத்துமமே, அவர் அன்பின் புறாவே,

அது ஆத்தும மணாளனின் அன்பின் அழைப்பல்லவா ?

பெருந்தன்மையானது, சாந்தமானது, மென்மையானது, அதற்கு நான் தகுதியுள்ளவனோ ?

நான் வீணாக உற்றுப்பார்க்கிறேன், இதில் ஏதேனும்

ஒரு குணத்திற்குள் நான் பொருந்துகிறேனோ ?

ஆனாலும் என் ஆத்துமாவே, உன்னை அவர் மீட்டுக்கொண்டதால்

அவர் அன்புக்குகந்த புறாவாகிவிடலாமே,

ஆனாலும் இயேசு ஏன் இந்த பாதுகாப்பற்ற புறாவை நேசிக்கவேண்டும் ?

துணிவில்லாத இப்புறாவை

மணவாளன் ஏன் விரும்புகிறார் என்றால்,

புறா ஓர் காக்கை இனமோ, கொட்டும் கொடுக்கோ கொண்டதுமில்லை,

சண்டைபோடவோ பிரத்யேகமாகவே ஆயுதம் எதுவும் இதற்கு வாய்க்கவில்லை,

அதன் இறக்கைகள் மட்டுமே அதன் பாதுகாப்பு,

பறப்பதே அதன் வெற்றி, அதன் ஆத்தும நேசரின் அன்பு ஒன்றே அதன் புகலிடமாம்,

இந்த ஏழைப்புறாவோ,

பருந்துவந்தால் பறந்துசெல்லும்,

பாதுகாப்பாய் தப்பித்துக்கொள்ளும்,

அவருடனே பக்கம் அமர்ந்து ஆட்சிசெய்திட,

அவர் சிலுவைதனை சுமந்துசெல்ல,

அவர் கிரீடம்தனை நித்தியத்துக்கும் அணிந்திட,

அவர் மகிமையிலே பங்குபெற்றிடவே அழைக்கின்றாரே.

**--1212--**

___________

# உனக்காக வேண்டிக்கொண்டேன்

**"சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ, உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்."**

**லூக்கா 22:31, 32**

பஸ்கா நாட்கள் சமீபித்தபோது நமது கர்த்தர், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்று கூறி, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்" தமக்காக விண்ணப்பம் பண்ணினதோடல்லாமல், தமக்கு அருமையாய் இருந்த பின்னடியார்களுக்கும் மிகுந்த அக்கறை கொண்டவராக, அவர்கள் பிரவேசிக்க இருக்கின்ற "சோதனைக் காலத்தைக்" குறித்து அவர்கள் உணரும்படி செய்வதற்காக, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறினார். நமது கர்த்தருடைய பூமிக்குரிய அனுபவங்களிலேயே இவ்வேளையானது மிகவும் சோதனைக்குரியதாய் இருந்தது மாத்திரம் அல்லாமல், இவ்வேளையானது, அவருடைய அப்போஸ்தலர்களுக்கும், விசேஷமாக யூதாஸ் மற்றும் பேதுருவுக்கும் மிகவும் சோதனைக்குரியதாய் இருந்தது. அப்போஸ்தலர்கள் மத்தியில் இந்த இரண்டு மனுஷர்களும் முக்கியமானவர்களாகக் காணப்பட்டார்கள். ஒருவர் அச்சிறு கூட்டத்தாருக்குப் பொருளாளராகவும், தேவைக்கானவைகளை வாங்கும் நபராகவும் காணப்பட்டார். பேதுருவோ, கர்த்தருடைய காரணத்திற்காக/நோக்கத்திற்காக விசேஷமான தைரியத்துடன் போராடுபவராகவும், பன்னிரண்டு பேரின் வாயாக இருந்து இயேசுதான் மேசியா என்ற அவர்களின் விசுவாசத்தை அறிவித்தவராகவும், கர்த்தரை எல்லாரும் கைவிட்டுப் போய்விட்டாலும், தான் ஒருபோதும் அப்படிப் போகமாட்டேன் என்று வெளிப்படையாகக் கூறினவருமாவார். மனுஷனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பதிமூன்று பேர் (இயேசு + பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்) மேல் வரும் எந்தச் சோதனையும், இவர்கள் மத்தியில் காணப்படும் பலவீனர்கள் மற்றும் முக்கியத்துவம் அற்றவர்கள் மீதே வருமே ஒழிய, இந்த மூன்று (இயேசு, பேதுரு, யூதாஸ்) முக்கியமானவர்கள் மீது வராது என்றே அனுமானிக்கப்படலாம்.

## மூன்று பேர் சோதிக்கப்பட்டார்கள், ஆனால் முடிவுகள் வித்தியாசமானவைகள்

விசேஷமாகச் சோதிக்கப்பட்ட மூன்று பேரின் விஷயங்களை நாம் பார்க்கும்போது, சில முக்கியத்துவம் வாய்ந்த படிப்பினைகளை நாம் பெற்றுக்கொள்ளலாம். நமது கர்த்தருடைய வழிமுறை நேர்த்தியாக இருந்தது. அதாவது தாழ்மை, பயம் மற்றும் சோதனைகளை உணர்ந்துகொள்ளுதல் ஆகியவை அவரை விழிப்புடன் இருப்பதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும் நேராக வழிநடத்திற்று. எல்லாவிதத்திலும் வலிமையாய் இருந்த சோதனைகளுக்குத்தப்பி அவர் வெளிவந்தார். மேலுமாக, அவர் ஆசாரியர்கள் மற்றும் பிலாத்துவுக்கு முன்பு வெளியரங்கமாகக் குற்றம் சுமத்தப்பட்டபோதும், திரளான ஜனக்கூட்டத்திற்கு முன்பு அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தபோதும், அவர் மிகுந்த அமைதலுடன் காணப்பட்டார். காரணம், தேவன் அவரைப் பலப்படுத்தியிருந்தார். அவரே நமக்கான முன்மாதிரி. நாமும்அவரைப்போன்று ஆபத்துகளைச் சந்திக்க மறுக்காமலும், நம்முடைய சொந்த பலம் மற்றும் தைரியம் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்ளாமலும் இருந்து தேவனுடைய கரங்களின் மேல் சாய்ந்துகொண்டு, அவருடைய கிருபையினால், ஜெயங்கொண்டவர்களாக வெளி வர வேண்டும்.

பேதுருவின் சம்பவம், சூழ்நிலை நமக்கு நன்கு ஞாபகத்தில் உள்ளது. பலமுள்ள நல்ல மனுஷன் பேதுரு. அவர் தனக்கான ஆபத்துக்களை உணர்ந்து கொள்ளவில்லை. ஆதலால், அவர் சாத்தானின் தந்திரங்களுக்கு ஆயத்தமாய் இருக்காமல், மிகவும் சோதனையான நிலைமைக்குள் அனுமதிக்கப்பட்டப்படியால், பேதுரு பெருமை பாராட்டிக்கொண்ட தைரியம் பறந்து போய்விட்டது. அவருடைய பலமுள்ள குணம் மறைந்துவிட்டது. கர்த்தரை நிந்தனையாய்ப் பேசி அவரை மறுதலித்தும்விட்டார். மனிதன் எளிதில் விழக்கூடியவன் என்பதற்கான எத்துணை பாடமாக இது

அமைகின்றது. மேலும், நாமும் பிசாசின் தந்திரங்களினால் மேற்கொள்ளப்பட்டு, சிக்க வைக்கப்படுவோம் என்பதற்கான பாடமாகவும் இது அமைகின்றது. நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதப்படிக்கு நாம் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவது நம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அவசியமாய் உள்ளது. "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (KJV); "எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" (திருவிவிலியம்) என்று கர்த்தர் நாம் ஜெபம் பண்ணுவதற்குக் கற்றுக்கொடுத்த மாதிரியை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருப்பது அவசியமாகும். "Abandon us not in temptation, but deliver us from the evil one" (Diaglott) (மத்தேயு 6:13).

யூதாசுக்கு அது ஒரு கேடு காலமாக இருந்தது; உண்மையுள்ள இருதயமுள்ள பேதுரு, விழித்திருந்து ஜெபம் பண்ணி, தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாததினால், எதிராளியானவன் அவரை ஏமாற்றி, வஞ்சித்து, தவறாய் வழிநடத்த முடிந்ததானால், சரியான இருதயம் இல்லாமல், சுயநலம், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க நாடுதல், பேராசைகொண்டிருந்த யூதாசிடம் எதிராளியானவன் என்னவெல்லாம் செய்யக்கூடும்? யூதாசின் மீதான சாத்தானின் உடனடியான செயல் நடந்தேறினது என்பதில் நமக்கு ஐயமில்லை. யூதாஸ், எதிராளியானவனின் கண்ணிக்குள் உடனே சிக்குண்டு விழுந்து, போதகரை முப்பது வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக்கொடுக்கும்படிக்கு தனது இருதயத்தையும், சக்தியையும் ஒப்புக்கொடுத்து விட்டார். உண்மையும், உத்தமமாய்க் காணப்பட்டும், சற்று நேரம் தடுமாற்றம் அடைந்ததும், பயம் அடைந்ததும், விழித்து ஜெபம் பண்ணி தன்னைக் காத்துக்கொள்ளாததுமான பேதுருவின் விஷயத்திலிருந்து, யூதாசின் விஷயம் முற்றிலும் வேறுபட்டதாகும். இந்த இரண்டு மனிதர்களையும் சூழ்ந்த ஆபத்து ஒன்றாயிருப்பினும், இவர்களுடைய இருதயத்தின் நிலை வேறுபட்டு காணப்பட்டப்படியினால், இவர்கள் இருவரின் சூழ்நிலைகள் முற்றிலும் வேறுபட்டதாகும்.

## உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

இப்படியாகத்தானே கர்த்தருடைய சகல பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்படும் அல்லவா? சோதனைகள் நம் ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக வருகையில், வேறுபட்ட முடிவுகளை/பலன்களைக்கொண்டு வருவதற்கான இரகசியமும் இதுதான் அல்லவா? இன்றைய யூதாஸ் வகுப்பாரும், எப்போதும்போல், சோதனைகள் அவர்களுக்கு வரும்போது, அவைகளைஅவர்கள் ஏற்றுக்கொண்டு, அச்சோதனைகளில் நன்கு தங்களது பொழுதைப்போக்கி, பேராசை (அ) தவறான கவர்ச்சிகளின் ஆவிக்குள் பிரவேசித்தவர்களாகி, அதினால் விழுங்கப்பட்டும் போய்விடுகின்றனர். பேதுரு வகுப்பாரும் எப்போதும்போல், இன்றும் நம் மத்தியில் உண்மையான இருதயத்துடனும், அதேசமயம் எதிராளியானவனின் கவர்ச்சிகளிலிருந்து பாதுகாக்கப்படத்தக்கதாக, போதுமான அளவு விழிப்பும், ஜெபமும் அற்றவர்களாய்க் காணப்பட்டு, சில சமயங்களில் எதிர்பாராத விதத்தில் வீழ்ச்சியடைந்து, சில நிமிடங்கள் கர்த்தரை அவமதிப்புச் செய்வதோடல்லாமல், தங்களுடைய சொந்த இருதயத்தையும், மனசாட்சியையும் கூட அவமதிப்புச் செய்துவிடுகின்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த இரண்டு வகுப்பாருக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம் இருதய நிலையே ஆகும். பேதுரு வகுப்பார் தாங்கள் செய்ய விரும்பாததையே செய்துவிடுகின்றனர் (அ) அவர்கள் உண்மையில் செய்ய விரும்புவதைச் செய்யாமல் விட்டுவிடுகின்றனர். மேலுமாக, இவர்களுடைய பிரச்சனை, இவர்களுடைய மாம்சத்தின் பெலவீனமாகவும், எதிராளியானவனின் வல்லமையான மேற்கொள்ளுதலாகவும், தேவையான வேளையில் உதவி அளிக்கப்படும் என்று கர்த்தர் வாக்களித்துள்ள உதவியைப் பெற்றுக்கொள்ள தவறிப்போகிற தன்மையாகவும் காணப்படுகின்றது.

யூதாஸ் வகுப்பாரின் இருதயத்தில் உண்மை காணப்படுவதில்லை. மாறாக, சுயநலமே காணப்படுகின்றது. மேலும், இவர்கள் இருதயப்பூர்வமாக எதிராளியானவனுடைய திட்டங்களுக்குள் பிரவேசிப்பதினால், இவர்கள் தங்களுடைய முழு மனதோடு இத்தவறான வழியில் செல்கின்றனர். பேதுருவும், யூதாசும் மனம் வருந்தின போதிலும், ஒருவர் மீண்டுமாக தெய்வீகத் தயவிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்றும், மற்றவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் நாம் பார்க்கையில், தேவன் அவர்களுக்கிடையே வித்தியாசம் காட்டுவது வெளிப்படுகின்றது. அதாவது இருதயத்தில் நேர்மை கொண்டவரும், அதேசமயம் சிக்குண்டவராக/அகப்பட்டவராக மாத்திரம் காணப்பட்ட பேதுரு, மீண்டுமாகச் சீர்ப்பொருந்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் பிற்பாடு மனவருந்தினதினிமித்தம் யூதாசிடம் மனசாட்சி காணப்பட்டிருப்பினும், தேவனுடைய பார்வையில்

இன்றியமையாததாய்க் காணப்படும் இருதயப்பூர்வமான உண்மையான மனவருத்தம் அவரிடம் காணப்படவில்லை. என்னதான் யூதாஸ் கர்த்தரோடு நெருக்கமாக பழகினவராய் இருந்தாலும், அவரிடத்தில் உண்மையான இருதயப்பூர்வமான மனவருத்தம் காணப்படாதது மன்னிக்கப்பட முடியாததாகும்.

இந்த இரண்டு மனுஷருடைய இருதயங்களில் காணப்படும் வித்தியாசத்தினிமித்தம், கர்த்தரானவர் ஒருவருக்காக பிதாவுக்கு முன்பு பரிந்து பேசுகிறவராகவும், மற்றவருக்கு பரிந்து பேசுபவராக இராதவராகவும் இருக்க முடியும் என்று நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில் உள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகள் நமக்கு நிச்சயம் அளிக்கின்றது. பேதுரு, இருதயத்தில் கர்த்தருக்கு உண்மை கொண்டிருந்தும், மாம்சத்தில் பலவீனமுள்ள தன்மையுடன், பாதுகாப்பிற்காக அளிக்கப்பட்டுள்ள தெய்வீக ஏற்பாடுகள் குறித்துக் கவனமற்று/அஜாக்கிரதையாய் இருப்பவர்களுக்கு அடையாளமாய் திகழ்கின்றார். பேதுரு இன்னமும், கர்த்தருடைய ஆடுகளில் ஒன்றாகவேதான் இருக்கின்றார். ஆகையால், அவர் இன்னமும் மேய்ப்பனின் பராமரிப்பிற்குக் கீழாகவேதான் காணப்படுகின்றார். பேதுரு இன்னமும் கர்த்தருடைய அங்கங்களில் ஒருவராகத்தான் இருக்கின்றார். ஆகவே, இவருடைய நலன்கருதி தலை ஏறெடுக்கும் அக்கறைக்கும், மேற்பார்வைக்கும் இவர் இன்னமும் கீழ்ப்பட்டவராகவேதான் காணப்படுகின்றார். கர்த்தர் நேசித்து, தமது ஜீவனையே கொடுத்துவிட்ட, அவருக்கென்று நியமிக்கப்பட்டுள்ள கற்புள்ள கன்னிகையின் அங்கங்களில் ஒருவராக இன்னமும் பேதுரு காணப்பட்டார். ஆகவே, நிச்சயிக்கப்பட்ட மணவாளனாக அவர் ஏறெடுக்க வேண்டிய விண்ணப்பங்களைச் சரியானபடி ஏறெடுப்பார், எடுக்கவும் செய்தார்.

ஆனால், யூதாசின் விஷயத்தில், அவருடைய இருதயமானது, சுயநலத்தினிமித்தம் தூரம் போய்விட்டது. இன்னுமாக, கர்த்தருக்குக் கொடுக்கும் மதிப்பும் மற்றும் ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தருக்காக அவர் கொண்டிருந்த அன்பும் யூதாசின் இருதயத்திற்குத் தூரமாயின. இன்னுமாக, ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் மீது யூதாஸ் கொண்டிருந்த அன்பானது மரித்துப் போய்விட்டது. மேலும், அது சுயநலம் மற்றும் பேராசையினால் விழுங்கப்பட்டும் போய்விட்டது. இப்படியாக, கர்த்தரிடத்திலிருந்து முற்றிலுமாக விலகிப்போன இருதயத்திற்குள் சாத்தான் பிரவேசித்தான் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இப்படியாக, யூதாஸ் தனது இருதயத்தையும், பலத்தையும், அர்ப்பணிப்பையும் கர்த்தரிடத்திலிருந்து விருப்பத்துடன் திரும்பப் பின்னுக்கு எடுத்துவிட்டு, இவைகள் அனைத்தையும், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்தும் தன்னுடைய உள்ளார்ந்த நோக்கத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டதால், அவர் எதிராளியானவனின் ஆயுதமானார். ஆகவேதான், "தாம் சிலுவையில் அறையப்பட வேண்டியது – இடறல்கள் வருவது அவசியம். ஆனாலும், எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்று நமது போதகர் கூறினார். (மத்தேயு 18:7)

## இன்றும் நிலவும் அதே சூழ்நிலைகள்

நம்முடைய அனுபவங்களில் நாம் பார்த்த வரையிலும், பஸ்கா காலங்கள் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கு எப்போதும் விசேஷித்த ஆபத்துகள் மற்றும் விசேஷித்த நெருக்கங்கள் நிறைந்த சூழ்நிலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக்காலக்கட்டத்தில் நாம் அறியாத ஏதோ சில காரணங்களுக்காக, எதிராளியானவன் விசேஷித்த விதமான வல்லமை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றான். பஸ்கா காலம் சமீபிக்கையில், நாம் காலம் காலமாகப் பார்த்து வந்தது என்னவெனில், சத்தியத்தின் மீது ஏதோ விதத்திலான தாக்குதல் மற்றும் சத்தியம் தொடர்புடைய விஷயங்களில் ஏதோவிதமான சில விசேஷமான சோதனைகள் (அ) பரீட்சைகள் மூலம் சாத்தானின் செயல்பாடுகள் வெளிப்படுகின்றன. உண்மையான இருதயமுடைய கர்த்தருடைய சீஷர்களில் ஒருவரும், அவருடைய கரங்களிலிருந்து, எதிராளியானவனால் பிடுங்கிப் போடப்பட முடியாது என்பதை நாம் முன்கூட்டியே அறிந்திருப்பினும், கர்த்தர் தம்முடைய சீஷர்கள் சோதனைக்குள் பிரவேசித்து விடாதப்படிக்கு, விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள் என்று கூறின புத்திமதியின் மேல் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென நாம் விரும்புகின்றோம்/கருத்துத் தெரிவிக்கின்றோம்.

யூதாஸ்தான், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவன் என்று இயேசு அறிந்திருந்தபடியினால், இயேசு, யூதாசின் நடவடிக்கையைக் கண்டு ஆச்சரியமோ, அங்கலாய்ப்போ

அடையவில்லை. மேலும், "தம்முடனே அப்பம் புசிக்கிறவன் தம்மேல் அவன் குதிகாலைக் தூக்குவான்" மற்றும் தமக்கு உதவியாளனாகவும், கூட்டாளியாகவும், பிராண சிநேகிதனுமாய் இருந்தவன் தமக்குச் சத்துருவாக வேண்டும் என்பதான இந்த அனைத்து எண்ணங்களும் நம்முடைய அருமையான போதகருக்குக் கவலையான தாக்கம் ஏற்படுத்தியிருக்க வேண்டும் (யோவான் 13:18; சங்கீதம் 41:9). நமது கர்த்தரானவர், அவருடைய கொடுமையான சத்துருவின் மீதும் அனுதாபப்படக் கூடியவராக இருந்தார். அதேசமயம், எதிராளியானவனுடைய திடீர் தாக்குதலை முதலில் எதிர்த்துப் போராட முடியாமல் இருந்தும், பிற்பாடு தெய்வீக இரக்கம் மற்றும் உதவியினால் குணமடைந்த பேதுருவுக்கும் கூட அனுதாபம் காட்டக் கூடியவரானார்.

கிறிஸ்துவின் சரீரம் ஒன்றாய் இருப்பதினாலும், தம்முடைய அங்கங்களிலேயே மிகச் சிறியவரான ஒருவருக்கு ஏதேனும் செய்யப்பட்டால், அது அவருக்கே/கிறிஸ்துவுக்கே செய்யப்பட்டதாகும் எனக் கர்த்தர் கூறியிருப்பதினாலும், சுவிசேஷ யுகத்தின் ஆரம்பம் முதல், இன்றுவரை யூதாஸ் வகுப்பாரும், பேதுரு வகுப்பாரும் எந்த அளவுக்கு தங்கள் உடன்/கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களைக் காட்டிக் கொடுக்கவோ (அ) மறுதலிக்கவோ செய்கின்றார்களோ, அவைகள் எல்லாம் கர்த்தரை மறுதலித்து, காட்டிக் கொடுப்பதாகவே கருதப்படுகின்றது. ஆகவே, "உன் விசுவாசம் ஒழிந்து போகாதப்படிக்கு உனக்காக நான் வேண்டிக்கொண்டேன்" என்று பேதுருவிடம் நம் கர்த்தர் கூறின வார்த்தைகளுடைய முக்கியத்துவத்தை நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

பேதுரு வகுப்பார் அனைவரின் சார்பாக கர்த்தரே பிதாவுக்கு முன்பு பரிந்து பேசுபவராகவும், பிரதிநிதியாகவும், தலையாகவும் காணப்படுகின்றார். கர்த்தருடைய உதவி இல்லாமல் மற்றும் நம் சார்பாக அவர் பிதாவின் முன்னிலையில் தோன்றி, அவருடைய சொந்த பலியினால் உண்டான புண்ணியத்தை நம் சார்பாக செயல்படுத்தவில்லையெனில், நம்மில் ஒருவரும் நிலைநிற்க முடியாது; இயேசுவோடுகூடப் பங்கடையும்படி தேவன் நம்மை அழைத்த ஆசீர்வாதங்களைப் பெற நாம் தகுதியற்றவர்களாய் ஆகி, பாத்திரமற்றவர்களென நியாயம் தீர்க்கப்பட்டுப் போய்விடுவோம். இப்படிப்பட்டவர்களுக்காக நமது கர்த்தர் ஜெபம் பண்ணி, இப்படியாக பரிந்துபேசி, அவர்களிடத்தில் காணப்பட்ட வேண்டுமென்றே செய்யப்படாத குறைபாடுகளை சரிசெய்திருக்க, கர்த்தருடைய ஆவி பெற்றிருப்பவர்களும், பேதுரு வகுப்பார் மேல் அன்பும், இரக்கமும், அனுதாபமும் கொண்டு, அவர்களுக்கு உதவியளிக்கும் வண்ணமாக அவர்களிடம் பேச வேண்டும். ஆனால் வெளிப்படையான மற்றும் திட்டம்போட்டுச் செயல்பட்டதான சத்துருவும், துரோகியுமான யூதாசுக்கு, போதகர் எவ்விதமான இப்படிப்பட்ட அனுதாப வார்த்தைகளைக்கொண்டிராதது போன்று, இப்படிப்பட்டவர்களுக்காக நமக்கு மனக்கவலை உணர்வுகள் காணப்பட்டாலும், அவர்களுடைய தீமையான கிரியைகளுக்கு ஒத்தாசை (அ) ஆதரவு தெரிவிக்கும் எவ்விதமான உணர்வுகளுக்கும் நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஏதேனும் ஓர் அப்போஸ்தலன், யூதாசுடன் கூடச் செயல்பட்டிருப்பாரானால், அது அவனுடைய பொல்லாத கிரியைகளில் பங்குகொள்வதாகிவிடும்.

## கோதுமையைப் புடைக்கிறதுபோல் உன்னைப் புடைக்க

பேதுருவுக்கும், இவரைப்போன்ற பண்பும், அனுபவமும் பெற்றிருக்கும் மற்றவர்களுக்கும் நாம் எவ்வளவுதான் அனுதாபம் கொண்டிருப்பினும், மேலும் பேதுரு தனக்காக விழித்திருந்து, ஜெபம் பண்ணும் விஷயத்தில் அஜாக்கிரதையுடன் காணப்பட்ட விஷயத்தில், அவருக்காக கர்த்தர் ஜெபம் பண்ணினதினிமித்தம், பேதுரு பின்வாங்கிப் போகாமலும், தேவனுடனான தன்னுடைய உறவை இழந்துபோகாமலும் இருந்ததினிமித்தம், நாம் எவ்வளவுதான் பேதுருவோடு சேர்ந்து களிக்கூர்ந்தாலும், நாம் பேதுரு வகுப்பாரில் ஒருவராக இருப்பதற்கு நாடாமல், நமது கர்த்தர் தாமே அடையாளப்படுத்தும் வகுப்பாரில் ஒருவராக இருக்கவே நாம் நாட வேண்டும். தற்காலத்தில் எதிராளியானவனின் சோதனைகளினால் மேற்கொள்ளப்படாத அளவிற்கு உண்மையுடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் காணப்படும் வகுப்பாரில் ஒருவராக நாம் இருக்கக்கடவோம்.

நாம், "அறுவடையின்" காலத்தில் இருக்கின்றோம். அதாவது, கோதுமையிலிருந்து களையைப் பிரித்து எடுப்பதற்கான காலம் வந்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால், கோதுமையினின்று பதரைப் பிரிக்கக்கூடியதான, புடைக்கும் வேலைக்கான காலம் வந்துவிட்டது. கோதுமை மற்றும் பதர் எனும் நிழலானது, கடந்துபோன காலங்களில் உள்ள சபைக்குரிய அனுபவங்களுக்கு ஓரளவு பொருந்தக்கூடியதாக இருப்பினும், அது, "யுகங்களின் முடிவில்"

காணப்படும் சபைக்கு விசேஷமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என்பதில் நமக்கு நிச்சயமே. அதாவது, யூதர் யுகத்தின் முடிவில் (அ) அறுவடையின் போது, வாழ்ந்த சபை அங்கங்களுக்கும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் (அ) அறுவடையின் போது, அதாவது இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் சபை அங்கங்களுக்கும் விசேஷமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. நமது கர்த்தர் இத்தகைய புடைப்புகளை அனுமதிப்பதில் பிரியமுள்ளவராக இருக்கின்றார். அவைகள் அவசியமாயும் காணப்படுகின்றது; அதாவது யூதாஸ் வகுப்பாரை முற்றிலும் புடைத்து எடுப்பதற்கும், பேதுரு வகுப்பார் சோதனைகளினாலும் மற்றும் பிரச்சனைகளினாலும், தங்கள் சொந்த பலவீனங்கள் குறித்த உணர்ந்துகொள்ளுதலினாலும் தூண்டப்படுவதற்கு ஏதுவாகவும், தேவனுடைய பாதுகாக்கும் கிருபை தங்களுக்கு இல்லையெனில், தாங்கள் முழுமையாய்த் தோற்றுவிட நேரிடும் என்பது பற்றின அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும், சகல வல்லமையுள்ள அவர்களுடைய தலையாய் இருப்பவர் மேல் விசுவாசம் கொள்ளவும், அதிகமதிகமாய்ச் சாந்தத்திலும், விழிப்பிலும், ஜெபத்திலும் வளர்ச்சிக்கொள்ளத்தக்கதாக இவ்வனுபவங்கள் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் அவர்களுக்கு உதவியாய் இருப்பதற்கு ஏதுவாகவும் சோதனைகள் அவசியமாய்க் காணப்படுகின்றது.

"பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்கு" என்ற வார்த்தைகள் தற்காலமானது பூச்சக்கரத்தின் குடிகளுக்குச் சோதனைக் காலமாய் இருக்கும் என்று சுட்டிக்காட்டுகின்றது (வெளிப்படுத்தல் 3:10). இன்னுமாக "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்ற வார்த்தைகள் மூலம் தற்காலமானது உண்மை சபையாருக்கும் கூடக் கடுமையான சோதனைக் காலமாய் இருக்கும் என்றும், விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு என்னும் பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களே அக்கடுமையான சோதனையில் நிலைநிற்கும் என்றும் உள்ள வாக்குறுதியையும் நாம் நினைவுகூருகின்றோம். (1 கொரிந்தியர் 3:13)

## அந்த நாளின் அக்கினி

எங்கெல்லாம் பூரணமான அன்பின் நிலை எட்டப்படவில்லையோ, அதை இந்த நாளின், "அக்கினியானது," இந்த நாளின் புடைப்புகளானது வெளிப்படுத்திவிடும். அதாவது, குறைவு பெற்றவர்களைக் கர்த்தர் பிரித்துவிடுவார். இது துக்கத்தை உண்டு பண்ணுகிறதாய் இருக்கும். அதாவது, மாம்சீக உறவுகள் துண்டிக்கப்படும்போது, அருமையானவர்களிடத்தில் காணப்பட்ட நம்பிக்கைகள்/எதிர்பார்ப்புகள் அழிக்கப்பட்டுப் போகும்போது, நமக்குத் துக்கம் ஏற்படும் என்றாலும், இவ்விஷயம் தொடர்பாக, கர்த்தர் நமக்கு அளிக்கும் செய்தியானது, கர்த்தரால் கட்டளையிடப்படாத அந்நிய அக்கினியைச் செலுத்தின ஆரோனின் உடன் ஆசாரியர்கள் மரித்தபோது, அவர்களினிமித்தம் ஆரோனுக்கும், அவருடைய மற்றக் குமாரருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையில் நிழலாகக் காணப்படுகின்றது. "பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். மோசே ஆரோனையும், எலெயாசார் இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரயேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக" (லேவியராகமம் 10:1, 6). உயிரோடிருக்கிற மீதமுள்ள ஆசாரியர்கள், கர்த்தரால் அறுப்புண்டுப்போகப் பண்ணினவர்களுக்காக துக்கம் அனுசரிக்கவோ (அ) புலம்பவோ கூடாது என்று கர்த்தருடைய வாயாக இருந்த மோசே அறிவிக்கின்றார். மேலும் அவர்கள் ஒருவேளை துக்கம் அனுசரிப்பார்களானால், அது அவர்களை, கர்த்தருக்கு முன்பு உண்மையற்றவர்களாகவும், இவ்விஷயத்தில் விளங்கும் தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அங்கீகரிப்பதில்/ஏற்றுக்கொள்வதில் தவறிப் போகிறவர்களாகவும் காண்பித்துவிடும்.

"கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்" அளவு நம்முடைய நாட்களில் உள்ள "புடைப்புகள்" காணப்படும் என்று, அதாவது கர்த்தருக்கும், அவருடைய தெய்வீக ஏற்பாடுகளுக்கும் நாம் கொண்டிருக்கும் நம்முடைய அன்பையும், நம்முடைய உண்மையையும்

நிரூபிக்கும் அளவு சோதனைகள் கடுமையாக, அதாவது விசாரணை செய்யும் விதத்தில் காணப்படும் என்று மிகத் தெளிவாகக் கர்த்தர் தம்முடைய தீர்க்கத்தரிசனத்தில் வெளிப்படுத்தியுள்ளார் (மத்தேயு 24:24). உண்மையுள்ளவர்கள் வஞ்சிக்கப்பட்டுப் போவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இவர்களுடைய மகிமையான தலை அவர்களுக்கான ஆதரவாளராக நிற்கின்றார். இவர்கள் அவருடைய பின்னடியார்கள் ஆவார்கள். இவர்கள் அவருக்கென்று நிச்சயிக்கப்பட்டவர்களும், அவருடைய அங்கங்களும் ஆவார்கள். அவர் இவர்களுடைய தலையாகவும், பிரதிநிதியாகவும், ஸ்தானாபதியாகவும் காணப்படுகின்றார். மேலுமாக, அவர் இவர்களுக்காக, பரிந்துபேசுகின்றார். இவர்களுக்காக விண்ணப்பமும், ஜெபமும் ஏறெடுக்கின்றார். மேலுமாக, இவர்களுடைய விசுவாசம் ஒழிந்துபோவதில்லை; ஏனெனில் இவர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் ஆவார்கள்; ஏனெனில் இவர்கள் எவ்வளவுதான் மாம்சத்தில் பெலவீனர்களாக இருந்தாலும், இருதயத்தில் இவர்கள் பூரணர்களாகவும், அவருக்கும் மற்றும் அவருடைய நோக்கத்திற்கும் மற்றும் தங்களுடைய உடன் அங்கங்களுக்கும் முற்றிலும் உண்மையானவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலேயேயாகும்.

ஆகவே, வருடத்தின் இக்காலக்கட்டத்தில், எப்போதும் கூறுவதுபோன்று, மீண்டுமாக, "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள்" என்ற போதகரின் வார்த்தைகளைத் தொனிக்கப் பண்ணுகின்றோம். போதகரின் வார்த்தைகள் எப்படி இரு வகுப்பாருக்கு விழுந்ததோ, அப்படியே நம்முடைய வார்த்தைகளும் இரு வகுப்பார் காதுகளில் விழுகின்றது. அதாவது, சிலர் நம்முடைய இந்த எச்சரிப்பையும் பெரிதாகக் கருதிக்கொள்ளாமல், தங்களையே ஆபத்திற்குள் திணித்துக்கொள்வார்கள். வேறு சிலரோ போதகரின் சத்தத்தில் உள்ள எச்சரிப்புக்குச் செவிசாய்த்துக் கொள்வார்கள்; மேலும் இவர்களுக்கோ இது தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான தேவனுடைய வல்லமையின் ஒரு பாகமாகக் காணப்படும்.

*****

# மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி

## *தீமை பேசுதல் மற்றும் பொல்லாத சம்சயங்கள்*

பெரோயா வகுப்புகளின் கூட்டத்தலைவர்கள், ஒவ்வொரு கேள்வியையும் அதற்கே உரிய வரிசையின்படி கலந்தாராய்வதிலிருந்து மாறாமல் கலந்தாய்வைத் தக்கவைத்துக்கொள்வதற்குப் பிரயாசப்பட வேண்டும். இல்லையேல் பின்னர் இடம்பெறும் கேள்விகளானது பகுதி, கலந்தாராயப்பட்ட நிலையிலும், முற்றிலும் உள்வாங்கப்படாத நிலைமையிலும், திருப்தி ஏற்படாத நிலைமையிலும் விடப்பட்டிருக்கும்.

முடிந்தமட்டிலுமான பிரயோஜனம் காணப்பட வேண்டுமெனில், வழிநடத்துபவர் முழுப்பாடத்தையும் படித்திருக்க வேண்டும் மற்றும் சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் அவனுக்கு அல்லது அவளுக்குக் கொடுக்கப்பட்ட பாகத்தினைப் படித்திருக்க வேண்டும். மேற்கோளிடப்பட்டிருக்கும் டாண்களும் (volumes), புத்தகங்களும் மற்றும் டவர் கட்டுரைகளும் (ரீப்பிரிண்ட்ஸ்) கையில் காணப்பட வேண்டும்.

---

R 3779

# "அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்"

## மாற்கு 6:30-44

"என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்." - யோவான் 6:32

இரண்டிரண்டு பேராகக் கர்த்தர் அனுப்பி வைத்திருந்த ஊழியத்திலிருந்து, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் திரும்பினார்கள். அவர்கள் ஐயத்திற்கு இடமின்றி குறிப்பிட்ட காலம் நியமிக்கப்பட்டுத் திரும்பியிருக்க வேண்டும். அநேகமாக கப்பர்நகூமே ஒன்றுகூடிச் சேரும் இடமாக இருந்திருக்க வேண்டும். இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் வந்திருத்தல், ஜனங்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தினது. ஏனெனில், அச்சமயம் நமது கர்த்தருடைய கீர்த்திப் பரவலாய் பரவி காணப்பட்டது. இயேசுவின் ஆலோசனையின்படி, பன்னிரண்டு பேரும், அவர்கள் தங்கள் காரியங்களைக்குறித்துத் தொந்தரவுகளின்றி பேசுவதற்கும், அதாவது தங்களது ஊழியத்தில் ஏற்பட்ட தங்களது அனுபவங்களைக்குறித்துப் பேசுவதற்கும், அவர்களது அனுபவம் தொடர்பாக தாம் கொடுக்க விரும்பும் பாடங்களை இயேசு அளிப்பதற்குமெனப் பன்னிரண்டு பேரும் அவருடன்கூட வனாந்தரமான இடத்திற்குப் போனார்கள். அவர்களுக்கு இந்த இளைப்பாறுதல் பயனுள்ளதாக இருக்கும் என நமது கர்த்தர் கூடக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாடம் இன்று வாழும் நமக்குப் பொருந்தும் அல்லவா?

### 'ஜனங்கள் எதிர்ப்பார்ப்பில் காணப்பட்டார்கள்''

ஜனங்கள் கர்த்தருடைய போதனைகளுக்குப் பசியாக இருந்தபடியால், படகு சென்ற திசையைக் கவனித்து, அநேகர் கால்நடையாய் நடந்து, படகு சென்ற திசைக்குச் சென்றனர். மேலும், சிலர் ஓடிச் சென்றபடியால் ஆண்டவர் சென்ற படகு கரையை எட்டுவதற்கு முன்பாக இடத்தையடைந்து அவருக்காகக் காத்திருந்தனர். ஏற்கெனவே அநேக காரியங்களைத் தம்மிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஜனங்கள், தாம் தனிமையில் இருப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் எடுத்திட்ட முயற்சியைக் குறிக்கிட்டதினிமித்தம், கர்த்தர் கோபம் அடைந்தாரா? இல்லை! கோபங்கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய இருதயம், அனுதாபத்தினால் நிறைந்திருந்தது. அவர் ஜனங்களைக் கண்டு மனதுருகினார்; காரணம், அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக இருந்தார்கள். யோவான் ஸ்நானன், தேவனுடைய இராஜ்யம் வருவதைக்குறித்து அறிவித்துக் கொண்டு வந்தார். இயேசுவும் இராஜ்யத்தைச் சித்தரிக்கும் உவமைகளைக் கூறினார். இதை ஜனங்கள் பூரணமாய்ப் புரிந்துக்கொள்ளவில்லை. கர்த்தர் இரண்டிரண்டு பேராக அனுப்பி வைத்திட்ட சீஷர்களும் மனந்திரும்புதலைக்குறித்தும், இராஜ்யத்திற்காக ஆயத்தப்படுவதுகுறித்தும் அறிவித்தார்கள். பொல்லாப்பான ஜீவியம் பண்ணி வந்த ஏரோது இராஜா, தீர்க்கத்தரிசிகளில் பெரியவர்களில் ஒருவரான யோவானைச் சிரைச்சேதம் பண்ணினான். பின்னர், அவன் தள்ளிவிட்ட மனைவியின் தகப்பனாகிய, அரபிய தேசத்து இராஜாவாகிய அரேத்தாவுடன் யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தான். ஏரோதின் சேனை தோற்றது. மேலும், ஜனங்கள் மத்தியில் கொந்தளிப்பும், கிளர்ச்சியும் காணப்பட்டது. இந்தக் குழப்பங்களின் முடிவு என்னவாக இருக்கும் என்றும், தேவனுடைய இராஜ்யம் எப்பொழுது மற்றும் எப்படி ஸ்தாபிக்கப்படும் என்றும், ஜனங்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இயேசு உண்மையில் மேசியாவா (அ) இல்லையா என்றும், அவர் சீக்கிரத்தில் தம்மை இராஜாவாக அறிவிப்பாரா என்றும், முன்வந்து தங்களை ஒப்புக்கொடுக்கும் போர்ச்சேவகர்களை அழைப்பாரா என்றும், ஜனங்களுக்குள் கேள்விகள் எழும்பியது. இக்காரியம் குறித்து ஜனங்கள் மிகவும் உற்சாகமடைய ஆரம்பித்தார்கள். மேலும், இப்படியாக இருந்த சில நாட்களுக்குள்ளாகத் தெய்வீகத் திட்டம் மற்றும் கர்த்தருடைய ஏற்பாட்டிற்கு எதிர்மாறாக, ஜனங்கள் தம்மை வலுக்கட்டாயமாக, இராஜாவாக்கி விடாதபடிக்கு, கப்பர்நகூமில் கர்த்தர் தம்முடைய பொதுப்படையான ஊழியத்திலிருந்து விலகினார் என்றும் நாம் அறிவோம்.

நமது கர்த்தர் இளைப்பாற விரும்பினாலும், ஜனங்களுக்குப் போதிப்பதை அவரால் செய்யாமலும் இருக்கமுடியாது. அவர் உண்மையான மேய்ப்பர் ஆவார்; மற்றும் கல்வாரியில் மாத்திரமல்லாமல் மாறாக, அனைத்து மணி நேரங்களிலும், தினமும், தம்முடைய பலியின் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் தமது ஊழிய வருடங்களிலும், தமது ஊழியத்தை

நிறைவேற்றுவதற்கும், ஆடுகளுக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருந்தார். இதுவே கர்த்தருடைய உண்மையான சீஷர்கள் அனைவரின் ஆவியாக/சிந்தையாகக் காணப்பட வேண்டும்; இந்த ஆவி/சிந்தையானது, அவருடைய வார்த்தைகளை உட்கொண்டு, அவருடைய வழிகாட்டிகளைப் பின்பற்றி, கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதன் மூலம், ஆண்டவருடைய பரிசுத்த ஆவியில் பங்கடைகையில் அதிகமடையும்.

## ''உம்முடைய இராஜ்யம் வருவதாக''

பாபிலோனிலுள்ள அநேக கர்த்தருடைய ஜனங்கள், இதே நிலையில் காணப்படுகின்றனர்; அதாவது, நாம் குறிப்பிடத்தக்க காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றும், மாபெரும் சில யுக மாற்றங்கள் நடைபெறவிருக்கின்றது என்றும் எளிதில் ஒத்துக்கொள்கின்றனர். ஆயிர வருட இராஜ்யம் சமீமாய் இருக்கின்றது எனவும், அது வாசலருகே வந்துவிட்டது எனவும் சில காரியங்களைக்குறித்து அநேகர் கேட்டிருக்கின்றனர்; மற்றும் அந்த ராஜ்யம் எப்படி, எப்பொழுது, எங்கு, ஏன் ஸ்தாபிக்கப்படும் என்றும் யோசித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அரசியல் தலைவர்களை உற்று நோக்குகையில் ஏறக்குறைய குழப்பத்தையே காண்கின்றனர்; மற்றும் யுத்தங்கள் பற்றியும், யுத்தங்கள் பற்றின வதந்திகளையும் கேள்விப்படுகின்றனர் மற்றும் சீக்கிரத்தில் அனைத்துக் காரியங்களும் சரியாகிவிடும் என்ற பொதுவுடைமைக் கொள்கைவாதிகளின் குரல்களையும் கேட்கின்றனர். இவர்கள், முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமிடையே சீக்கிரம் பிரச்சனைக்குரிய காலம் வரவிருக்கின்றது என்றும் கவனிக்கின்றனர்; மேலும், இவர்கள் தங்களுக்கான சரியான நடத்தை என்னவாகக் காணப்பட வேண்டும் என்பது தொடர்பான தகவலுக்காக, வழிகாட்டிக்காக, வழிநடத்துதலுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போன்றே இவர்கள் காணப்படுகின்றனர்.

பாபிலோனில் அநேக மேய்ப்பர்கள் இருப்பது உண்மைதான். ஆனால், இந்த மேய்ப்பர்களோ, தங்களை அவநம்பிக்கைக்கு நேராகவும், பரிணாமகொள்கைகளுக்கு நேராகவும், வேதாகமத்தில் குற்றம் கண்டுபிடிக்கும் தன்மைக்கும் நேராகவும் வழிநடத்துகின்றனர் என எந்தளவுக்கு மந்தைகள் கவனிக்கின்றார்களோ, அவ்வளவாய் இந்த மேய்ப்பர்களுடைய வழிநடத்துதலில் ஆடுகளுக்கு பயமும், நம்பிக்கையின்மையும் ஏற்பட்டுள்ளது. யாரிடம் செல்ல வேண்டும் என்று தெரியாமல் (பாபிலோனுக்குள் இருக்கும் இந்த) ஆடுகள் காணப்படுகின்றனர். இவர்களுடைய செவிகளுக்கு எட்டும் மிகவும் திருப்திகரமான பாகம், நாம் அறிவிக்கின்ற இராஜ்யத்தின் செய்தியாகும். எனினும், பயத்தின் மூலமாகவும், மூடநம்பிக்கைகள் மூலமாகவும், பாதிரியார்களின் சூழ்ச்சி மூலமாகவும் இவர்களை அடக்கி வைத்துள்ள, இவர்களுடைய மேய்ப்பர்களின் வெளிப்படையான கண்டனம் மற்றும் பழிப்புரை மத்தியில் இச்செய்தியை ஏற்றுக்கொள்ள பயப்படுகின்றனர். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கமும், தாங்கள் கர்த்தருக்காக ஸ்தானாதிபதியாக இருக்கிறார்கள் என்றும், சகல ஜனங்களுக்கும் மகா சந்தோஷமாயிருக்கும் நற்செய்தியை அறிவிப்பதிலும், ஆடுகளைச் சரியான வழியில் உண்மையான மேய்ப்பனிடம் வழிநடத்துவதற்கு உதவுவதிலும் கர்த்தருடைய வாய்க்கருவியாக பயன்படுத்தப்படுவதில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஓரளவுக்குப் பசியாய் இருக்கும் அனைவரையும் வழிநடத்திவிடலாம் என நாம் எதிர்ப்பார்க்க முடியாது; அந்நியர்களின் சத்தத்திற்குச் செவிக்கொடுக்காமல், மாறாக தேவனுடைய குமாரனுடைய சத்தத்தை அதாவது, சத்தியத்தின் குரலைப் பின்தொடரத்தக்கதான இருதய நிலையில், ஒரு சிறு மந்தையினர் மாத்திரமே காணப்படுவார்கள் என்பது நிச்சயமே. எனினும் ஆண்டவர்போல, நாமும் அனைவர் மேலும் மனதுருக்கங்கொண்டு, தற்காலத்தில் தெளிவாகக் கேட்க முடியாதவர்கள், வெகு சீக்கிரத்தில், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, செவிடான காதுகள் அனைத்தும் திறக்கப்பட்டு, தேவனுடைய மகிமை பற்றின அறிவு முழுப் பூமியையும் நிரப்பும்போது, தெளிவாகக் கேட்பார்கள் என்பதினால் களிக்கூர வேண்டும்.

## ''அநேக விசேஷங்களை அவர்களுக்குப் போதித்தார்''

ஆண்டவருடைய மாதிரியிலிருந்து, நாம் ஒரு படிப்பினையை எடுத்துக்கொள்ள வேண்டும். திரளான ஜனங்களுடைய நன்மைக்கு ஏதுவானதும், ஆறுதலுக்கு ஏதுவானதும் மற்றும் போகப்போக ஆழமான காரியங்களை அவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக (அவர்களை ஆயத்தம் பண்ணுகிறதுமான) அநேக காரியங்களை அவர் ஜனங்களுக்குக்கூட போதித்திருக்க முடியும்.

அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும், அவருடைய விசேஷித்த அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாய் இருந்தவர்களுக்குங்கூட, அவர் கூறுவதற்கு இன்னும் அநேக காரியங்கள் இருந்தது. "தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது" (மாற்கு 4:11). எனினும் சீஷர்களுக்குக் கூடச் சொல்லப்படாமல் விட்டுவிடுவதற்கு ஏதுவான சில விஷயங்கள் இருந்தது. "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16:12, 13).

அப்போஸ்தலர் கூறுகிறதுபோல, தேவனுடைய ஆழமான காரியங்களையும், இரகசியங்களில் மறைக்கப்பட்டுள்ள தேவனுடைய ஞானத்தையும், அவரைப்பற்றின அறிவில் வளர்ந்துள்ளவர்களிடத்திலும், ஆழமான சத்தியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இருதயத்தில் ஆயத்தமாய்க் காணப்படுபவர்களிடத்திலும் நாம் பேசலாம். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பவர்களை, பலமான ஆகாரத்தினால் மூச்சுத் திணற செய்துவிடுவதற்கு எதிராக, நாம் விசேஷித்த விதமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். எனினும், நாம் அவர்களைப் பட்டினியும் போடக்கூடாது. மாறாக, அவர்கள் வளரத்தக்கதாக, அவர்களுக்குப் பால் ஆகாரத்தை நாம் கொடுத்திட வேண்டும். நமது கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய முன்மாதிரியையும் நாம் நினைவில் கொள்வோமாக; அவர், "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்றார். இந்த அவருடைய வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொருவரும், கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், ஊழியம் புரிவதற்கு ஆரம்ப காலங்களில் நீங்கள் எடுத்திட்ட பிரயாசங்களில், நன்மைக்குப் பதிலாகப் பாதிப்பையே உண்டு பண்ணினீர்கள் என்று கண்டிப்பாக உணர்ந்துக்கொள்வீர்கள்; இப்படியாக நன்மைக்குப்பதிலாக பாதிப்பு ஏற்படுத்தினதற்குக் காரணம் ஞானமின்மையும், முன்யோசனையற்ற தன்மையும், கர்த்தருடைய அறிவுரைகளுக்குச் செவிக்கொடுக்கத் தவறிப்போன நிலையும், குழந்தைகளுக்குப் பாலும், புருஷர்களுக்குப் பலமான ஆகாரமும் கொடுக்கும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றத் தவறிப்போன நிலையுமே ஆகும்.

இன்னொரு சுவிசேஷ புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதிவின்படி, ஜனங்களுக்குப் போதித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் ஜனங்களைவிட்டு, மலைப்பகுதியில் தம்முடைய சீஷர்களுடன் சென்றார் என்றும், அங்கு அவர்களுடைய ஊழியங்களைக்குறித்து சிந்தனைச் செய்தார்கள் என்றும் பார்க்கின்றோம். இப்படியாக ஐக்கியம் கொள்வதற்கும், பிரயாணத்தின்போது படகிலிருக்கையில் அனைத்தையும் எண்ணிப்பார்ப்பதற்குமுரிய வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்தது என்பதில் ஐயமில்லை. அந்நாளின் பிற்பகுதியில், மத்தியான வேளையில், அவர் மலையிலிருந்து இறங்கி கீழே வந்தார்; மற்றும் அங்கு ஏற்கெனவே கூடியிருந்த கூட்டத்தாருடன், அதிகமான வழிப் பிரயாணிகளும் பெருமளவில் சேர்ந்தனர், அதாவது, பஸ்கா பண்டிகைக்காக எருசலேமை நோக்கி அவ்வேளையில் அவ்வழியாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டு வந்த பிரயாணிகளும் சேர்ந்துக்கொண்டார்கள். மொத்தமாக பல்லாயிரம் பேர்கள் இருந்தார்கள். அங்குப் புதிதாய் வந்தவர்களுங்கூட அநேக கேள்விகளுடனும், நாட்டத்துடனும் இருந்திருப்பார்கள்; மற்றும் நமது கர்த்தர் போதனைகளையும், விரிவான விளக்கங்களையும் கொடுத்திருக்க வேண்டும்.

## "அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்"

இரவு நெருங்கியது; மேலும், ஜனங்களைக் கர்த்தர் அனுப்பிவிடும்படி சீஷர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால், அவர்கள் அறியாத நோக்கம் ஒன்றை அவர் கொண்டிருந்தார். அதாவது, அவருடைய முழு ஊழியத்திலும், செய்யப்பட்ட மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றைச் செய்ய அவர் அப்போது நோக்கம் கொண்டிருந்தார். எனினும் இதைப்பற்றி அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக, ஜனங்களை அவர்கள் பந்தியிருக்கச் சொல்லி, பின்னர் அவர்களது இயலாமையில் அவர்களுக்குத் தாம் உதவுவதன் மூலம், இயல்பான விதத்தில் அற்புதத்தை அரங்கேற்ற சித்தங்கொண்டார். அவர்களிடம் என்ன உணவு இருக்கின்றது எனக் கர்த்தர் கேட்டார்; ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் கொண்டிருந்த சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டான்; இது நமது கர்த்தருடைய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது; திரளான ஜனங்களை ஆசீர்வதிக்கும் வேலையில், ஒத்துழைப்பதற்கான தமது விருப்பத்தைக் கர்த்தர் வெளிப்படுத்த விரும்பினார். மேலும், இப்படியாக அவருடைய சொந்த ஜனங்கள் மற்றும் உலகத்துடனான அவருடைய கையாளுதலின் பொதுவான ஓர் அம்சத்தைச் சித்தரித்துக் காட்டினார். அவர் நம்முடைய நேரத்தையும்,

தாலந்துகளையும் எடுத்துக் கொள்கின்றார். மேலும், இவைகள் சிறியதாகவும், அற்பமானதாகவும் இருப்பினும், இவைகளை ஆசீர்வதித்து, இவைகளைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்தி, மாபெரும் காரியங்களைச் செய்துமுடிக்கின்றார். இப்படியாகக் கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டு, தம்முடைய பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய இரக்கங்களைச் சுமந்துச் சென்றவர்களிடமிருந்து, இரக்கங்களைப் பெற்றுக் கொண்டவர்களை அவர் ஆசீர்வதிப்பதைக் காட்டிலும், இந்த அனுபவங்கள் மற்றும் படிப்பினைகள் மூலம், சுமந்துச் சென்றவர்களையே மிக அதிகமாக கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார்.

ஆண்டவர் கட்டளையிடும் காரியங்கள் தொடர்பான விஷயங்களில், கீழ்ப்படிவதற்கு சீஷர்கள் கற்றுக்கொண்டிருந்தனர்; ஆகவே, பரிமாறுவதற்கு உணவு இல்லாமல் இருந்த போது, விருந்து உண்பதற்கென ஐம்பது, ஐம்பது பேராக அங்கிருந்த ஜனங்களை அவர்கள் பந்தி அமரச் செய்வதின் மூலம், அவர்கள் ஜனங்களின் முன்பு தங்களை முட்டாளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற விதத்தில் காணப்பட்ட கர்த்தருடைய கட்டளைக்கு, அவர்கள் எந்த மறுப்பும் தெரிவித்ததாகப் பதிவுகள் காணப்படவில்லை. தங்கள் வலைகளை மீன்களினால் நிரம்பப்பண்ணினவர், மரண நித்திரையிலிருந்து விழித்து எழப்பண்ணினவர், தொடாமலேயே, ஒரு வார்த்தை மூலமாக சுகப்படுத்தினவர், சூம்பின கரங்களைச் சரி பண்ணினவர், தங்களிலிருந்து முற்றிலும் அப்பாற்பட்டவர் என அப்போஸ்தலர்கள் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அப்போஸ்தலர்கள் கீழ்ப்படிந்தார்கள்; மீதியைக் கர்த்தர் பார்த்துக்கொண்டார்.

## "அப்பத்தை ஆசீர்வதித்தல்"

நம்முடைய பாடத்தின் ஆதார பகுதியானது, கர்த்தர் அப்பத்தை ஆசீர்வதித்தார் என வழங்குகின்றது; இதே சம்பவம் குறித்த யோவான் சுவிசேஷத்தின் பதிவானது, "அவர் ஸ்தோத்திரஞ் செய்தார்" எனக் காணப்படுகின்றது. இரண்டுமே இசைவாகவே உள்ளது. அதாவது, தேவனுக்கு ஸ்தோத்திரம்/நன்றி செலுத்திய காரியமானது, அப்பத்தின் மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. ஒருவேளை பிதாவினுடைய ஒரே பேறான குமாரனே சாதாரணமான உணவிற்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அதன்மேல் தெய்வீக ஆசீர்வாதத்தைக் கேட்பது தகுதியானதாய் இருக்குமானால், அவருடைய பின்னடியார்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் ஒவ்வொருவரும் இக்காரியத்திலும் சரி, மற்றக் காரியங்களிலும் சரி, அவரது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். உணவானது, நமக்கான தேவனுடைய ஏற்பாடு என்றும், தாராளம்/இரக்கம் என்றும் நாம் உணர்கையில், நம்முடைய நன்றிகளைச் செலுத்தாமல் அல்லது அதனை ஒப்புக்கொள்ளாமல், நம்மால் எப்படி உணவை உட்கொள்ள முடியும்? இப்படியாக நன்றிச் செலுத்துபவர்கள் அனைவரும், தங்கள் உணவின் மீது விசேஷித்த ஆசீர்வாதத்தையும், இந்த உணவைப் பயன்படுத்துவதன் மூலம், மற்றவர்கள் பெற்றுக்கொள்ளத் தவறும் விசேஷித்த ஞானத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. நன்றியுடன் கர்த்தரை நோக்கி/ஏறெடுத்துப்பார்ப்பதன் விளைவாகவும், அவருடைய ஏற்பாடுகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வதன் விளைவாகவும் வரும் இருதயத்தின் சமாதானம் மற்றும் இளைப்பாறுதலானது, இயற்கையாகவே உணவு செரிமானத்திற்கு அனுகூலமாய் இருக்கும் அமைதியான நிலையை உருவாக்குகின்றது. இனிமையான மற்றும் நன்றியுணர்வுடன் கூடிய மனப்பான்மை இருக்கும்போது, புசிக்கப்படும் உணவானது நன்றியற்ற மனப்பான்மையில் (அ) கோபத்தில் (அ) அதிருப்தியில் புசிக்கப்படும் இதே உணவளிக்கும் ஊட்டத்தைப் பார்க்கிலும் அதிகம் ஊட்டமளிக்கின்றதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நமது கர்த்தர் நன்றி ஏறெடுத்த விருந்து, ஆடம்பரமான ஒன்றல்ல என்பதையும் கவனிக்கவும்; அது மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட விதத்திலும் பரிமாறப்படவில்லை; அது உயர்தரமான உணவும் அல்ல; அது எளிமையான வாற்கோதுமை அப்பமாகவும், உலர்ந்த மீன்களாகவும்தான் இருந்தது. நம்முடைய கர்த்தருடைய நாட்களிலிருந்த உணவு முறையிலுள்ள எளிமையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், இன்றும் கிழக்கத்திய நாட்டு ஜனங்கள் மத்தியில் காணப்படும் எளிமையான உணவு முறையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், ஜப்பான் தரைப்படையினருக்கு அளிக்கப்படும் உணவிலும், ஜப்பான் குடும்பத்தார் வழக்கமாகப் பயன்படுத்தும் உணவிலுமுள்ள எளிமையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், தரத்திலும் சரி, அளவிலும் சரி நம்முடைய நாட்களில் அநேக ஜனங்கள் அதிக உணவுகள் எடுத்துக் கொண்டும், எவ்விதமான நன்மையை அடையவில்லை என்ற பாடத்தையும் நாம் அடைகின்றோம்; மற்றும் உணவில் எளிமை என்பது அதிகம் ஆரோக்கியமாய் இருப்பதற்கு மாத்திரம் உதவாமல், ஆவிக்குரிய புத்துணர்வு அடைவதற்கும், பரத்திலிருந்து அப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றவர்களுக்கு சத்திய சேவை செய்வதற்கும்,

அதிகமான நேரத்தை ஒதுக்கியும் கொடுக்கின்றது என்ற பாடத்தையும் நாம் அடைகின்றோம். ஒவ்வொருவரும் இக்காரியத்தைக் குறித்துச் சிந்தித்துப் பார்த்து, தனது சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும், அவன் சிந்திப்பதற்குக் கண்டிப்பாகக் கடமைப்பட்டுள்ள மற்றவர்களின் நலன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும்.

நம்முடைய பணச் செலவுகள் எவ்வளவு எளிமையாக இருப்பினும், தேவனுக்கு நன்றி ஏறெடுப்பது தகுதியானது என்ற பாடத்தை அனைவராலும் ஒப்புக்கொள்ளலாம். இந்த வெளியீட்டை வாசிக்கும் வாசகர்கள், தங்களுடைய குடும்பத்தில் இப்படியாக நன்றி ஏறெடுக்கும் சிலாக்கியத்தை முடிந்தமட்டும் புறக்கணித்துப் போடவில்லையென்று அதாவது, குடும்பத்தின் காரியங்களில் அதிகாரமுடைய நபர்களாக இருந்து, இப்படி நன்றி ஏறெடுக்கும் சிலாக்கியத்தைப் புறக்கணித்துப் போடவில்லை என்று நாம் நம்புகின்றோம். குடும்பத்தில் நன்றி ஏறெடுக்கும் நமது வழக்கத்தை, விருந்தினர் அல்லது அந்நியர் வந்திருக்கையில் தடைப்பண்ணிட முடியாது. அதேசமயம் உணவகம், சிற்றுண்டிச் சாலைகளிலுள்ள பொது மேஜைகளில் காணப்படும்போதெல்லாம், கர்த்தருக்கு வெளிப்படையாக நன்றி ஏறெடுப்பதும் எப்பொழுதும் தகுதியானதே எனவும் நாம் எண்ண முடியாது. இப்படியாகப் பொது இடங்களிலுள்ள உணவு பரிமாறப்படும் மேஜைகளில் நாம் காணப்படுகையில், நாம் கர்த்தரிடம் பெற்றுக் கொண்டதை ஒப்புக்கொள்வது நமக்கு நலமாக இருப்பினும், ஒருவேளை நாம் இப்படிச் செய்வது என்பது நம்மைப் பரிசேயர் முறைபோன்று தவறாக வெளிக்காட்டும் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், நாம் இப்படிச் செய்வதைத் தவிர்ப்பது நலமாக இருக்கும். இப்படியான சூழ்நிலைகளில் நாம் உணவு உண்பதற்கு முன்னதாக நாம் நன்றியை, நம்மைச் சுற்றியிருப்போருக்கு வெளிப்படையான செய்கைகள் (அ) வார்த்தைகள் மூலம் காட்டாதவிதத்தில், இருதயத்திற்குள் ஏறெடுக்க வேண்டும்.

## "சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்"

வேறொரு பதிவில் கர்த்தர் அப்பத்தைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடம் கொடுத்தார் என்றும், சீஷர்கள் அதை ஜனங்களிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள் என்றும் காணப்படுகின்றது. இப்படியாக, நமது கர்த்தர் காரியங்களை ஒழுங்குப்படுத்தியதில் எவ்வளவு கிருபையுள்ளவராகக் காணப்பட்டிருந்திருக்கின்றார்! இப்படியாகச் சீஷர்களே அற்புதத்தின் வல்லமைக்கு மேலான சாட்சியாளர்களாகக் காணப்பட்டார்கள்; மற்றும் ஜனங்களுக்கும், அப்போஸ்தலர்கள் ஏறக்குறைய பரிச்சயமானார்கள்; அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு இந்த ஜனங்களில் அநேகரை, அநேகமாகச் சந்தித்திருக்க வேண்டும்; மற்றும் அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய பிரதிநிதிகளாக இவர்களுக்குப் பரலோக அப்பத்தை வழங்கினவர்கள் ஆனார்கள். இன்றும் இப்படியாகவே உள்ளது. ஏனெனில், "கர்த்தர் தம்முடையவர்களை அறிந்துள்ளபடியினால்" அவர் தம்முடையவர்களைக் கண்டுபிடித்து, அவர்களைப் போஷித்துப் பலப்படுத்துவார் (2 தீமோத்தேயு 2:19). பசியாய் இருக்கும் ஜனங்களிடத்தில் தற்கால சத்தியத்தை எடுத்துச் செல்லும் விஷயத்தில், அவர் ஒன்றும் நம்மைச் சார்ந்திருக்கவில்லை. மாறாக, நம்முடைய நன்மைக்காகவே, நாம் அவருடன் உடன்வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தை நமக்குக் கொடுக்கின்றார். இதனை நாம் எவ்வளவாய் உணர்ந்துக்கொள்ள வேண்டும்! நம்மிடத்தில் காணப்படும் ஏதேனும் கொஞ்சம் வாற்கோதுமை அப்பங்கள், ஏதேனும் சிறு மீன்கள், ஏதேனும் டாலர்கள் மற்றும் நாணயங்கள், ஏதேனும் செப்புக் காசுகள் மற்றும் வெள்ளி நாணயங்கள், நம்முடைய எந்த நேரங்களும், செல்வாக்குகளும் கர்த்தருடைய பாக்கியமான வேலைகளில் பயன்படுத்தப்படத்தக்கதாக நாம் எவ்வளவு பேராவலுடன் காணப்பட வேண்டும்!

நம்முடைய பங்கில் இப்படியாகச் செய்வதென்பது வேதவாக்கியங்களில் பலி என்ற பெயரில் மேன்மையாய் வழங்கப்பட்டாலும், இச்சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துக்கொள்பவர்கள் இதனை நேர்மாறாக, ஓர் ஆசீர்வாதமாக, ஒரு சிலாக்கியமாக, ஒரு தயவாகவே கருதிக்கொள்வார்கள். இந்தச் சிலாக்கியமானது, இன்று தற்கால சத்தியத்தில் களிகூர்ந்து கொண்டிருப்பவர்களால் மிகவும் மேன்மையாகக் கணிக்க/மதிப்பிடுவதைப்பார்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவர்களிடத்தில், அறுவடை செய்தியைப் பிரகடனப்படுத்துவதற்குரிய (பண) வளத்தில் ஒருபோதும் குறைவில்லாமல் இருப்பது குறித்தும், அதுவும் இவர்கள் பண்டிகைகள், கண்காட்சிகள் முதலியவைகள் மூலம் உலகத்தாரிடமிருந்து உதவிகள் கேட்காமலும், மற்றும் பணத்திற்காக அல்லது காணிக்கைப் பெட்டிகள் மூலம் இவர்கள் கர்த்தருடைய ஜனங்களைத் தொந்தரவு செய்து கேட்காமலும் காணப்படுவது குறித்தும், சத்தியத்திற்கு எதிரிகளாகவும், சத்தியத்தை அவமதிக்கிறவர்களாகவும் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் வியப்பாகவே இருந்துள்ளது; சத்தியத்துடன் கூடக் கர்த்தருடைய

ஆவியும் காணப்படுவதினால், சத்தியத்தையும், கர்த்தருடைய ஊழியத்திற்கும் பயன்படுத்தப்படும் ஏதாகிலும் விதத்திலுள்ள தாலந்தையும் பெற்றிருப்பவர்கள், அவைகள் பயன்படுத்தப்படுவதில் சொல்லமுடியாதளவு சந்தோஷத்தினால் களிக்கூருகின்றனர், மற்றும் இவர்கள் அனுபவிக்கும் இந்தச் சிலாக்கியங்களுக்காக ஆண்டவருக்கு நன்றியும் ஏறெடுக்கின்றனர்.

## ‘‘எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்’’

சுவையான உணவை மாத்திரமல்லாமல், திருப்திகரமாக அதாவது, அனைவரும் நிரம்பப் பெற்றுக்கொள்ளத்தக்கதான உணவைக் கர்த்தர் அளித்தார். ஒருவேளை ருசி கூட்டும் பொருள்கள், காரச்சுவைப் பொருள்கள், குழம்புகள், இனிப்புகள், முதலியவைகள் அளிக்கப்பட்டிருந்தால் அதிகமாய்க் கட்டுப்பாடற்றுப் புசிக்குமளவுக்கு ஏற்ப, இந்த வாற்கோதுமை அப்பங்களும், காய்ந்த மீன்களும் அடங்கிய உணவு புசிக்கப்படுவதில்லையென நாம் நியாயமாக அனுமானிக்கலாம். ஒருவேளை நாம் எளிமையான உணவுகளில் ஜீவித்து, நம்முடைய உணவின் மீதுள்ள விருப்பங்களை அதிகமாக ஊட்டிவிடாமலும், பசிக்கான திருப்திபடுத்தும் எல்லையை மிஞ்சிச் சாப்பிடுவதற்கும் நம்மையே நாம் உற்சாகமளிக்காமலும் இருந்திருப்போமானால், நம் அனைவருக்குள்ளும் காணப்படும் இயல்பானது, நாம் போதுமானளவு சாப்பிட்டுவிட்டோம் என்பதை நாம் அறியத்தக்கதாக அநேகமாகச் செயல்படும்.

இங்குக் காணப்படும் திரளான ஜனக்கூட்டத்தார் சில விதத்தில், ஆயிரவருஷம் யுகத்தில் காணப்படும் உலகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார்கள். இப்பொழுது அவருடைய விசேஷித்த சீஷர்களாக அவரைப் பின்பற்றுகின்றவர்கள், ஆயிரவருஷம் யுகத்தின்போது நித்திய ஜீவனுக்குரிய அப்பங்களை ஆண்டவரிடத்திலிருந்து அதிகமாய்ப் பெற்றிருப்பார்கள், மற்றும் அவைகளைப் பூமியின் சகல குடிகளுக்கும் அளிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்வார்கள். ஜனங்கள் அனைவரும் நிரம்பப் பெற்றுக்கொள்வதற்கும், புத்துணர்வு அடைவதற்கும், பெலப்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வார்கள். இன்று இக்காரியத்தில் உலகம் எவ்வளவு குறைவுப்பட்டிருக்கின்றது என நாம் காண்கின்றோம்; ஆனால், எதிர்க்காலத்திற்காகக் காணப்படும் திரளான தேவனுடைய ஏற்பாடுகளை நாம் அறியும்போதும், அனைவரும் இலவசமாய் ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், திருப்திக்கொள்ளுமளவுக்கு ஜீவ அப்பத்தைப் புசிக்கத்தக்கதாகவும், ஒவ்வொரு சிருஷ்டிக்கும் நம்முடைய மீட்பருடன், நாம் உடன்வேலையாட்களாகப் பகிர்ந்து கொடுக்கும் வேலையிலுள்ள நமது பங்கைக்குறித்து அறியும் போதும், நமது இருதயங்கள் களிக்கூருகின்றன; இந்த அற்புதத்திற்குப் பிற்பாடுதான், ஜீவ அப்பம் குறித்து நமது கர்த்தர் பேசினார் (யோவான் 6:26-58).

## ‘‘மீதியானவைகளைச் சேகரித்தல்’’

ஜனங்கள் விருந்தைப் புசித்து, மீதியாய் விட்டிருந்ததைச் சேகரிப்பதற்கெனக் கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைப்பது என்பது கடுமையான சிக்கனம் போன்று தோன்றலாம். ஐயாயிரம் ஜனங்களால் தொட்டுச் சாப்பிடப்பட்டு, மீதி கிடந்த துண்டுகளைப் பயன்படுத்த, தம்முடைய உண்மையுள்ள பன்னிரண்டு அப்போஸ்தலர்களை ஆளாக்குவதும் கடுமையான சிக்கனம் எனத் தோன்றலாம். ஜனங்களால் சாப்பிட்டு விடப்பட்ட துண்டுகள் பறவைகள் மற்றும் அணில்கள் சாப்பிடும்படிக்கு விடப்பட்டது என்றும், அப்போஸ்தலர்களால் சேகரித்துச் சேர்க்கப்பட்ட துண்டுகள், நமது கர்த்தருடைய கரங்களினால் உடைக்கப்பட்ட துண்டுகள் என்றும் அனுமானிப்பது, அதிகம் நியாயமாய்க் காணப்படுகின்றது. அவர் அப்பங்களையும், மீன்களையும் பிட்டுக் கொடுத்தபோது, அவைகள் திரளாய்ப் பெருகின. ஆகவே, அவர் மீண்டும், மீண்டுமாக சீஷர்களிடம் உணவைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் அதை ஜனங்களுக்கு எடுத்துச் சென்றார்கள்; மற்றும் நமது கர்த்தர் அருகில் கொஞ்சம் உணவு இன்னும் காணப்பட்டது. இவைகள் பன்னிரண்டு கூடைகள் நிரம்பத்தக்கதாகவும், நல்லதாகவும், சுத்தமானதாகவும், பிற்பாடு பயன்படுத்துமளவுக்கு நல்ல நிலைமையிலும் காணப்பட்டது.

சிக்கனம் குறித்த பாடம் நம் அனைவருக்கும் பொருத்தமானதேயாகும். ஆனால், நம்முடைய அனுபவத்தின்படி, உலகத்திலேயே தரித்திரராய் இருப்பவர்களாகிய கர்த்தருடைய ஜனங்களுக்கும் அடிக்கடி இந்தப் பாடம் மிகவும் அவசியமாய்க் காணப்படுகின்றது. (உணவுகளை) உண்டாக்குவதற்குரிய வல்லமையைக் கர்த்தர் அதிகமாய்ப் பெற்றிருந்தாலும், தம்முடைய சீஷர்கள் சிக்கனத்தின் கோட்பாடு குறித்து அறியவும், அதை அவர்கள் நடைமுறைப்படுத்தவும் விரும்பினார்.

அவருடைய வல்லமையின் ஐசுவரியமானது, அவருடையவர்களாய் இருக்கும் எவரும் ஊதாரிச் செலவாளிகளாய் இருப்பதற்கான காரணமாய் இருக்கக்கூடாது. எந்த ஒரு காரியத்திலும் ஊதாரித்தனம் என்பது, நமது கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் புறம்பாகவே காணப்பட வேண்டும். ஒருவேளை நம்முடைய தேவைக்கும் மிஞ்சி நமக்கு இருக்குமாயின், தேவைகளைக் காட்டிலும் குறைவாகப் பெற்றிருக்கும் நிலையில் காணப்படும் மற்றவர்கள் இல்லையோ? ஒருவேளை நாம் ஆண்டவருடைய ஆவியைப் பெற்றிருப்போமானால், பெருந்தன்மை/தாராளமனம் மற்றும் உதவியின் ஆவியையும் நாம் பெற்றிருப்போம், இதுவும் நாம் அவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பான சாயலை அதிகமதிகமாய் அடைகையில், பெருகுகின்றதாய் இருக்கும்.

இதே பாடம், அறுவடை வேலை தொடர்புடையதாகவும் நம்மிடத்தில் வருகின்றது. "நமது கர்த்தர் ஐசுவரியவானாக இருக்க, அவருடைய பின்னடியார்களில் எவரேனும் ஏன் ஏழையாக இருக்க வேண்டும்?" என்று நாம் சில சமயம் நமக்குள்ளாகவே கேட்டிருக்கின்றோம். அவருடைய வேலைக்குத் தேவையானதை மாத்திரம் கொடுத்துவிட்டு அதற்கு மேலாக கர்த்தர் கொடுக்காத காரியமானது, சந்தேகத்திற்கிடமின்றி நம்முடைய நன்மைக்கேதுவானதேயாகும். இச்சம்பவத்திலுள்ள பாடமானது, அவருடைய ஊழியம் தொடர்பான காரியங்களில் அவர் தம்முடைய பின்னடியார்களுக்குப் பலிச் செலுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொடுக்க விரும்புகின்றார், மற்றும் இப்படியாக நம்மை ஆசீர்வதித்து, நமக்கான சிலாக்கியங்களைக்குறித்து அதிகமதிகமாக நாம் புரிந்துக்கொள்ள உதவுவதும் ஆகும். ஒருவேளை ஐசுவரியமுள்ள நண்பர்களினாலும், திரளான பணங்களினாலும் அறுவடை வேலை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், இது அதிகபடியான உலகப்பிரகார ஆவியையும், அதிகமான பெருமையையும், வெளிப்படையாகக் காட்டிக்கொள்வதையும் வளர்த்துவிடும். மேலும், இது (கர்த்தருடைய) நோக்கத்திற்கு அனுகூலமற்றதாகவும், நம்முடைய சொந்த வளர்ச்சிக்குச் சாதகமற்றதாகவும் காணப்பட்டுவிடும். நாம் பெற்றுக்கொண்டிருப்பவைகளில் நாம் திருப்திக் கொள்வோமாக. அதாவது, எளிமையான அப்பம் மற்றும் மீனுடன், நமது கர்த்தருடைய ஆசீர்வாதத்துடன் திருப்திக்கொள்வோமாக. நம்முடைய உக்கிராணத்துவம் குறித்த உண்மையுள்ள கணக்கை நாம் ஒப்புவிக்கத்தக்கதாகவும், நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளை, நிலத்தடியில் புதைத்து வைக்காமல் மாறாக, நம்மால் முடிந்தமட்டும், நம்முடைய இராஜாவினுடைய மகிமைக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றோமா என்பதைப் பார்த்துக்கொள்ளத்தக்கதாகவும் அப்பத்துண்டுகள் குறித்தும் நாம் கவனமாய் இருப்போமாக.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனம் கூறுகின்றதுபோல, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நன்மைக்காக அதாவது, ஜீவனுக்கான அப்பத்திற்காகவும், இயேசுவுக்காகவும், இயேசு அளிக்கும் இரட்சிப்பிற்காகவும், இவர் மூலமாகவும், இவரோடு தொடர்புள்ள சிலாக்கியங்கள் மூலமாகவும் வரவிருக்கும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவுக்கு நாம் நன்றி ஏறெடுக்க வேண்டும். அனைத்தும் பிதாவிடமிருந்து வந்துள்ளது, மற்றும் நமக்கான அனைத்து ஈவுகளும் குமாரன் மூலம் வந்துள்ளது. நன்றியுணர்வு என்பது மிகச் சிறிய கைமாறாகும்; இது சுயத்தைப் பலிச் செலுத்தும் ஆவியை உள்ளடக்கிய பூரண அன்பிற்கு நேராக வழிநடத்துகின்றது.

**ஆமென்!**

---

# பரலோக இராஜ்யத்தில் பெரியவன்

**மத்தேயு 18:1-14**

மறுரூப மலையின் சம்பவத்தின்போது, கர்த்தரோடுகூட அங்குக் காணப்படாத சீஷர்கள், தரிசனத்தைப் பார்த்திட்டவர்களும், அதைப் பிற்பாடு தங்களுக்குத் தெரியப்படுத்தினவர்களுமானவர்கள் மீது கொஞ்சம் பொறாமை அடைந்தனர். இது மலையில் கர்த்தரோடுகூடக் காணப்பட்டதான பேதுருவும், யாக்கோபும், யோவானும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் மற்றச் சீஷர்களைக் காட்டிலும் மிக அதிகமாய்ச் சலுகைகள் பெற்றுக்கொள்வார்கள் என்பதைக் குறிக்கக்கூடுமோ? இயேசுவுக்குப் பின் சற்றுத் தொலைத் தூரத்தில் அவர்கள் பிரயாணம்பண்ணிக்கொண்டிருக்கையில், வரவிருக்கின்ற இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்பது தொடர்பான வாக்குவாதம் சூடேறியது. அவர்களது வாக்குவாதங்கள் என்ன என்பதை நமது கர்த்தர் அப்போதே அறிந்திருந்தார் மற்றும் மிகவும் தவறாய்க் காணப்படுபவர்களை மட்டும் தனித்துக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக அவர் இக்காரியத்தினைப் பொதுவான படிப்பினையாகவும், யாவருக்கும் பிரயோஜனமாகவும், உதவிகரமாகவும், பலப்படுத்துகிறதாயும் இருக்கும்படி செய்தார். அவரது மாதிரியானது அவரது பின்னடியார்களுக்கு விலையேறப்பெற்றதாய் இருக்கின்றதல்லவா? நாமும் முடிந்தமட்டும் தனி மனித பண்புகளையும் மற்றும் தனிப்பட்ட ஏதேனும் ஒரு நபரையும் குறித்து விசேஷமாய்க் குறைகூறுவதை/விமர்சனத்திற்குள்ளாக்குவதைத் தவிர்ப்பது ஞானமான காரியமாய் இருக்குமல்லவா? மனுக்குலம் யாவரிடத்திலும் குற்றங்களும், குறைகளும், ஒருவருக்கு ஒன்றிலும், இன்னொருவருக்கு இன்னொன்றிலும் காணவேபடுகின்றது மற்றும் விசேஷமாகக் கடுமையாய்க் கண்டிப்பதற்கெனக் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருவரைத் தனியாகப் பிரிப்பது ஞானமாய் இருந்ததில்லை; இத்தருணத்தில் ஆண்டவர் செய்ததுபோன்று செய்வது நலமானதாய் இருக்கும் - அதாவது அனைவருக்கும், தவறுச்செய்தவருக்கும், தங்களின் கண்ணோட்டங்களிலும், முடிவுகளிலும் கிட்டத்தட்ட சரியாய்க் காணப்படுபவர்களுக்கும்கூட உதவிக்கரமாய் இருக்கும் விதத்தில் அவ்விஷயம் குறித்த பொதுவான படிப்பினையைக் கொடுப்பதாகும்.

தற்காலத்தில் சபையானது, இராஜ்யமானது - கருநிலைமையில், இன்னும் மகிமைப்படுத்தப்படாமல், உலகத்தால் அடையாளம் கண்டுகொள்ளப்படாமல் காணப்படுகின்றது; ஆனால் சபை ஒருவர் இன்னொருவரினாலும், கர்த்தரினாலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. சகோதரர் மத்தியில் தாழ்மையும், குழந்தைக்கு ஒத்த தன்மையும், கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி உண்மையான மேன்மைக்கான அடையாளமாக மதிக்கப்பட வேண்டும். குழந்தைக்கு ஒத்த தன்மையுள்ள வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் - பூமியின் குடிகள் யாவையும் ஆசீர்வதிக்கும் தேவனுடைய பிரதிநிதியென இராஜ்யமானது வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், எதிர்க்காலத்தில் - மிக உயர்வாய்க் கனப்படுத்தப்படுவார்கள் என்பதில் நிச்சயமே.

தாழ்மையுள்ளவர்கள், கற்பிக்கப்படத்தக்கவர்கள், எளிமையானவர்கள், மாய்மாலமற்றவர்கள் - பெரியவர்களென எண்ணப்பட வேண்டும் எனும் இக்கருத்திற்கு இசைவாக, அனைத்துச் சபைகளிலும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின அனைத்துக் கூட்டங்களிலும், சபையில் மூப்பர்த்துவத்திற்கும், முதன்மையான ஊழியங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரிலேயே மனதிலும், நடத்தையிலும் மிகத் தாழ்மையாய்க் காணப்படுபவர்கள் மத்தியிலிருந்து எடுக்கப்பட்டவர்களாக இருப்பதைக் காணவே நாம் எதிர்ப்பார்த்திட வேண்டும். ஆனால் இப்படி இல்லாமல் வேறு நிலைமைக் காணப்படுமானால், அது நம்முடைய இப்பாடத்தினுடைய சம்பவம் தொடர்பான கர்த்தருடைய கருத்தினைச் சபையார் சரியாய்ப் புரிந்துகொள்ளவில்லை மற்றும் உணர்ந்துகொள்ளவில்லை மற்றும் அதற்குக் கீழ்ப்படியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

எனினும் இது ஐந்து தாலந்துகளையுடைய சகோதரன் அவற்றைக்குறித்து முற்றிலும் உணர்வற்றவராகவும், அவற்றைப் பயன்படுத்தாமல் அலட்சியம்பண்ணுபவராகவும் காணப்பட வேண்டும் என்று குறிப்பதாகாது. இது இவர் சகோதரர் மத்தியில் வேறு சிலர் கொஞ்சம் தாலந்துகளை உடையவர்களாய் இருக்கின்றனர் என்ற காரியத்திற்குக் கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்று குறிப்பதாய் இராது; மாறாக இது இவர் தனது தாலந்துகள்

சம்பந்தப்பட்ட விஷயத்தில், அதைக் கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த நன்மைக்காகப் பயன்படுத்திட வேண்டும் என்ற விருப்பத்தை மாத்திரமே கொண்டிருக்குமளவுக்கு, அத்தகையதொரு அன்பையும், அத்தகையதொரு தாழ்மையையும் பெற்றிருக்க வேண்டுமென்று குறிக்கின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக தன்னுடைய தாலந்துகளை - தனிப்பட்ட இலட்சியங்களுக்காகவும், தற்பெருமையாய்ப் பேசுகிறதற்காகவும் அல்லது தன்னுடைய தாலந்துகள் மாத்திரம் அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாக, மற்றவர்களுடைய தாலந்துகளை, வாய்ப்புகளை மற்றும் சிலாக்கியங்களை நசுக்கிட நாடிடுவதற்காகவும் - பயன்படுத்துவதற்கு ஒரு கணம்கூட இவர் சிந்தியாதளவுக்கு, இவர் மிகவும் தாழ்மையான மனதையும், கர்த்தருக்காக மிகுந்த வைராக்கியத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது இவர் ஐந்து தாலந்துகளை உடையவராய் இருப்பாரானால் மற்றும் சரியான, குழந்தைக்கொத்த தாழ்மையின் ஆவியினைப் பெற்றிருப்பாரானால், இவர் அருமையான சகோதரரிடத்தில் அப்படியொரு அக்கறைகொண்டிருந்து, கர்த்தருடைய முழுக்காரணத்திற்கடுத்த நன்மைக்காகவும், பல்வேறு சகோதர சகோதரிகளுடைய கட்டியெழுப்பப்படுதலுக்கும், பெலப்படுத்தப்படுதலுக்கும் மற்றும் பரஸ்பர பக்திவிருத்திக்கும் ஏதுவாய்க் காணப்படும் விதத்தில், அந்தச் சகோதர சகோதரிகளின் பல்வேறு தாலந்துகளானது உபயோகமாகத்தக்கதாகவும் - இவர் தன்னால் முடிந்த நியாயமான அனைத்தையும் செய்திடுவார் என்பதைக் குறிப்பதாய் இருக்கும்; இப்படியாகக் கிறிஸ்துவின் முழுச்சரீரமும், அதன் குறைவுகளையும், தேவைகளையும் மற்றும் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலுமான ஆறுதல்களையும் சந்தித்துக்கொள்ளும்.

---

# அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி

இந்தப் பெரோயா வேதாகம பாடங்களினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது குறித்த நல்ல தகவல்களை நாம் கேள்விப்படுகின்றோம். ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் இந்தப் பாடங்களுக்கென ஒரு விசேஷித்தக் கூட்டத்தைப் பெற்றிருக்கவும் மற்றும் ஒரு வழிநடத்துபவரைக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்காகிலும் தெரிந்துகொள்ளவும் நாம் வலியுறுத்துகின்றோம்; அதாவது இவ்வாராய்ச்சிகளுடைய ஆவிக்குள்ளாகக் கடந்து செல்பவரும், சபையாரிடமிருந்து பதிலை எப்படி வரவழைப்பது என்பதைத் தெரிந்திருப்பவரும் மற்றும் பின்னர் ஒவ்வொரு கேள்வியின் முடிவிலும் சுருக்கமாய்க் கூற முடிகிறவருமான வழிநடத்துபவர் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையினைப் பின்பற்றி அலிகெனியிலுள்ள சபையார் இந்த வகுப்புகளை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் பெற்றிருக்கின்றனர் மற்றும் இதிலுள்ள ஆர்வமானது, கடந்த எட்டு மாதங்களாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை இருமடங்காகியுள்ள உண்மையினால் வெளிப்படுகின்றது.

நன்கு வாசிப்பவர்கள் அநேகர் ஒரு சபையில் காணப்படுவார்களானால், ஒவ்வொருவருக்கும் ஒரு மேற்கோளானது வாசிக்கும்படி சொல்லப்படலாம்; ஒருவேளை சிலர்தான் இருப்பார்களானால், ஒருவரே அநேகம் மேற்கோள் பாகங்களை வாசிக்கும்படி சொல்லப்படலாம். (வாசிப்பது தெளிவாய் இருக்க வேண்டும் இல்லையேல் பிரயோஜனம் இராது). வேதவாக்கிய மேற்கோள் முதலாவதாகவும், பின்னர் டாண் (volumes) மேற்கோள் பாகங்களும் இடம்பெறுகின்றன; டாணின் ஆறு தொகுதிகளும் A, B, C, D, E, F என்ற ஆங்கில எழுத்துக்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; T-என்பது "ஆசரிப்புக் கூடார நிழல்களை" சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் S-என்பது "Spiritism"-ஐ சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; Z-என்ற எழுத்தானது வாட்ச் டவர் (ரீபிரிண்ட்ஸ்) கட்டுரைகளைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; '02-152 என்பது 1902-ஆம் வருடத்தின் 152-ஆம் பக்கத்திலுள்ள கட்டுரையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பத்தி நிரல்கள் (columns) மற்றும் பத்திகளானது (paragraphs) col. 2, par. 3 என்று சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.

## ஜூலை-1

1. அன்பு என்றால் என்ன? Z. '03-55 (2nd col. last par.); Z. '03-58; (1st col. par. 2).

2. அப்போஸ்தலன் அன்பை எப்படி விவரிக்கின்றார்?

1 கொரிந்தியர் 13:1, Z. '03-56 (1st col. Par. 1).
1 கொரிந்தியர் 13:2, Z. '03-56 (1st col. par. 2).
I கொரிந்தியர் 13:3, Z.'03-56 (1st col. par. 3; 2nd col. par. 1).
I கொரிந்தியர் 13:4, Z.'03-56 (2nd col. par. 2, 3); Z.'03-57 (1st col. par. 1, 2); Z.'97-247 (1st col. par. 1-4).
I கொரிந்தியர் 13:5, Z.'03-57 (1st col. par. 3 to 2nd col. par. 3); Z.'97-247 (1st col. par. 5 and 2nd col.)
I கொரிந்தியர் 13:6, Z.'03-57 (2nd col. par. 4); Z.'97-248 (1st col. 1 to 3).
I கொரிந்தியர் 13:7, Z.'03-58 (1st col. par. 1); Z.'97-248 (2nd col. par. 1 to 3).
I கொரிந்தியர் 13:8, Z.'03-58 (1st col. par. 3); Z.'97-248 (2nd col. par. 4).
I கொரிந்தியர் 13:9-12, Z.'03-58 (2nd col. par. 1, 2); Z.'97-249 (1st col. par. 1 to 3).
I கொரிந்தியர் 13:13, Z.'97-249 (2nd col. par. 1).

3. ------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வாசிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவனும் தனது வேதாகமத்தை அல்லது டாணை (volume) அல்லது டவரை (ரீப்பிரிண்ட்ஸ்) கைகளில் பெற்றிருக்க வேண்டும்; முன்னமே வாசித்திருக்க வேண்டும் மற்றும் வழிநடத்துபவர் சொல்கையில், தாமதியாமல் வாசிப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும். அனைவருமே வேதாகமங்களையும், டாண்களையும் பெற்றிருக்க வேண்டும் மற்றும் பழைய டவர் கட்டுரைகளைச் (ரீப்பிரிண்ட்ஸ்) சபையில் யாரேனும் பெற்றிருப்பார்கள்; மற்றும் இவர்கள் சபையாரின் பிரயோஜனத்திற்காக, புத்தகங்களை இரவலுக்குக் கொடுத்திட மகிழ்ச்சியோடு காணப்படுவார்கள்.

மேற்கோள் பாகங்களானது வாசித்தப் பிற்பாடும் மற்றும் வழிநடத்துபவர் பதிலைச் சுருக்கமாய் இறுதியில் கூறி, அடுத்த கேள்வியை வாசிக்க முற்படுவதற்கு முன்பாகவும், ஒவ்வொரு கேள்வியைக் குறித்துக் கலந்தாய்வதற்கான வாய்ப்பானது கொடுக்கப்பட வேண்டும். அச்சடிக்கப்பட்டக் கேள்விகளானது, அவைகள் அனைத்தும் கலந்தாய்வுபண்ணப்படுவது வரையிலும் அச்சடிக்கப்பட்ட வரிசைஒழுங்கின் வண்ணமாகவே, கண்டிப்பாய்க் கடைப்பிடிக்கும்படிக்கு வலியுறுத்துகின்றோம். பொதுவாகவே பாடம் பற்றின அனைத்துக் கேள்விகளுமே கொடுக்கப்பட்டிருக்கும். இதை (வரிசை ஒழுங்கை) வலியுறுத்துவதற்கான காரணம் என்னவெனில், ஒருவேளை கடைசியில் இடம்பெறும் கேள்விகளானது முன்னமே கொண்டுவரப்படுமாயின், பின்வரும் பாடங்களானது சீர்க்குலைவிற்குள்ளாகிடும். வழிநடத்துபவர் அன்போடும், கனிவோடும், அதே நேரம் உறுதியோடும் சபையாரைக் கலந்தாராயப்படும் கேள்வியினின்று திசைமாறாதபடிக்கு வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் இதில் அவருக்கு, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினை ஆராயும் விஷயத்தில், ஒழுங்கின் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டுகொள்ளும் யாவரின் ஒத்துழைப்பும் தேவைப்படும்.

---

R 3803

# "எனக்கு பிறன் யார்?"

## லூக்கா 10:25-37

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." - மத்தேயு 5:7

இயேசு பொது ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதித்து விளக்குபவராகக் காணப்பட்டார், எனினும் அவர் தம்மை யூதர்கள் மத்தியிலுள்ள வேதபாரகர்கள் மற்றும் வேத சாஸ்திரிகளுடன் இணைத்துக்கொள்ளவில்லை/காண்பிக்கவில்லை. அவர்களிடமிருந்து நியாயப்பிரமாணத்தைக் குறித்த வேறுபட்ட கண்ணோட்டத்தை இயேசு கொண்டிருந்தார், மற்றும் அவர் வேறுவிதத்தில் கற்றுக்கொடுப்பவராகவும் காணப்பட்டார். பொது/சாமானிய ஜனங்கள் அவர் கூறுவதை மகிழ்ச்சியுடன் கேட்டனர்; ஆனால் யூத வேத சாஸ்திரிகளோ, பொது ஜனங்களின் கவனத்தை ஈர்த்ததுமில்லை அல்லது பொது ஜனங்களுக்குப் போதிக்க முற்பட்டதும் இல்லை, மாறாக அவர்கள், அவர்களைப் போன்றவர்களுடனும், இன்னும் ஜனங்கள் மத்தியில் துறவிகளென காணப்படும் பரிசேயர்களுடனும், தெய்வீக நியாயப்பிரமாணம் தொடர்புடைய மாபெரும் பிரச்சனைகளை விவாதித்தவர்களாய் மாத்திரமே காணப்பட்டனர்.

கர்த்தர் கூறுவதைப் பொது ஜனங்கள் மகிழ்ச்சியுடன் கேட்டாலும், அவருடைய போதனைகளை அவர்கள் தெளிவாகப் புரிந்துக்கொள்ளவில்லை, காரணம் திரளானவர்களாய் இருக்கும் ஜனக்கூட்டத்தாருக்குப் புரியாமல் இருக்கத்தக்கதாகவும், பக்தி வைராக்கிமுள்ள உத்தம இஸ்ரயேலர்கள் இன்னும் அதிகமாய்க் கேட்பதற்கும், விசாரிப்பதற்குமென விசேஷமாய் ஈர்க்கப்படத்தக்கதாகவுமான நோக்கத்திற்கென்று, அவர் ஜனங்களிடம் உவமைகளினாலும், மறைபொருள்களினாலும்தான் பேசினார். இந்தப் பக்திவைராக்கியமுள்ள உத்தம இஸ்ரயேலர்களுக்கே, அவர் மாற்கு 4:11-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறி, உவமைகளை விவரித்தார். எனினும் ஆண்டவருடைய பாணியில் (style) ஏதோ ஒன்று மிகவும் கவரும் வண்ணமாக இருந்தபடியினால், அவருடைய போதனைகளை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ளாதவர்களும் கூட, "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று கூறினார்கள்; இன்னுமாக, "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டனர்" என்றும் நாம் வாசிக்கின்றோம்; இன்னுமாக, "அவர் வேதபாரகரைப்போல் (தெளிவில்லாமல்) போதியாமல், அதிகாரமுடையவராய் (தாம் பேசும் காரியத்தைப் பற்றி முழுவதும் அறிந்தவராய்) அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (யோவான் 7:46; லூக்கா 4:22; மத்தேயு 7:29).

இதன் காரணமாகவேதான், இயேசுவின் மீது பொறாமை, நியாயசாஸ்திரிகள் மத்தியில் எழும்பிற்று. அவர்களைப் பொறுத்தமட்டில் அவர் போட்டிப் போடுகின்ற போதகராக இருந்தார்; ஆகவே கல்லாதவர்களென இவர்களால் அறியப்பட்டிருந்த இயேசுவின் பின்னடியார்கள் முன்பாக, இயேசு கேலிக்கு இடமாகத்தக்கதாக, அவரைச் சிக்க வைக்க இவர்கள் நாடினார்கள். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்கள் வெற்றிக் காணவில்லை; பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கர்த்தருடைய ஞானமானது இவர்களை மிஞ்சி காணப்பட்டது; இவர்களுடைய வாக்குவாதத்தில் இவர்களையே இயேசு சிக்க வைத்தார். இதற்கு இந்த நம்முடைய பாடங்கூட ஓர் உதாரணமாகும். நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கண்டிப்பான நீதியின் விஷயங்களுக்கு எதிராக, அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய நம்முடைய கர்த்தருடைய போதனைகள் காணப்படுகின்றது என நியாயசாஸ்திரிகளில் ஒருவர் எண்ணிக்கொண்டு, இயேசுவை ஒரு கேள்வியினால் அகப்படுத்தும்படிக்கு நாடினார். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் என்ன என்று இயேசுவிடம் கேட்க வேண்டுமென அவர் முடிவு பண்ணியிருந்தார். "தேவனைப் போன்று அன்பான, பரந்த மனப்பான்மையுடன் கூடிய குணத்தை வெளிப்படுத்துகின்றவர்கள் அனைவருக்கும் நித்திய ஜீவன் கொடுக்கப்படும்" என்றோ அல்லது "என்னுடைய சீஷனாகி, என்னுடைய போதனைகளைக் கைக்கொள்வீரேயானால் நீர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம்" என்றோ இயேசு பதிலளிப்பார் என்று அந்த நியாயசாஸ்திரி எதிர்ப்பார்த்தார். இப்படியாக இயேசு பதில் கொடுக்கும் தருணத்தில், இயேசுவின் போதனைகள் நியாயப்பிரமாணத்தை இரத்துச் செய்கின்றது என்றும், நியாயப்பிரமாணத்தை அவமாக்கிவிட்டது என்றும், அவர் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்துவிட்டார் என்றுமுள்ள உண்மையின் மீது கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று நியாயசாஸ்திரி எண்ணியிருந்தார்.

## “சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய்”

இந்தப் நியாயசாஸ்திரியே, தன் வாயினாலேயே பதிலளிக்க நமது கர்த்தர் பண்ணினார்; “நீர் நியாயப்பிரமாணத்தைப் போதிப்பவர்; நித்திய ஜீவன் பெறப்படுவது தொடர்புடைய விஷயத்தில் நியாயப்பிரமாணம் என்ன கூறுகின்றது என்று நீரே எங்களுக்குச் சொல்லும்” என்ற விதத்தில் இயேசு அம்மனுஷனிடத்தில் கூறினார். இது கேள்விக்கேட்கும் பதிலாக இருந்தது; மேலும் இதற்கு நியாயசாஸ்திரி பதில் கூற முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார், காரணம், “நியாயப்பிரமாணம் சொல்கிறதென்ன?” என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிடும் யூதர்கள் மத்தியில் காணப்பட்ட பொதுவான ஒரு கேள்வியாக விளங்கி வந்தது (உபாகமம் 6:5; லேவியராகமம் 19:18). இக்கேள்விக்கான இதே பதிலைத்தான் சற்று முன்பு நமது கர்த்தரால், அவரிடம் வந்த ஐசுவரியமான வாலிபனுக்குக் குறிப்பிடப்பட்டது. “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” என்று நன்கு அறியப்பட்டிருந்த நியாயப்பிரமாணத்தின் கொள்கையை, நியாயசாஸ்திரி சொன்னார். இயேசு அவரை நோக்கி, “நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய்; அப்பொழுது பிழைப்பாய்” என்றார்.

## “நியாயப்பிரமாணமும், சுவிசேஷமும் ஒப்பிடப்படுதல்”

ஏன் இயேசு நியாயப்பிரமாணத்தை மேற்கோளிட்டுக் குறிப்பிட்டார்? ஏன் இந்த வாய்ப்பை, அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குப் பயன்படுத்தவில்லை? “என் மீது விசுவாசம் வைத்து, பின்னர் என்னுடைய சீஷனாக என்னுடைய அடிச்சுவடுகளில் நடக்கத்தக்கதாக முழுமையான ஓர் அர்ப்பணிப்பைப் பண்ணுவதே நித்திய ஜீவனை அடைவதற்கான ஒரே வழி” என ஏன் இயேசு நியாயசாஸ்திரியிடம் கூறவில்லை?; “மனுஷன் இரட்சிக்கப்படத்தக்கதாக, இயேசுவின் நாமத்தையல்லாமல், வேறே நாமம் வானத்தின் கீழ்க் கொடுக்கப்படவில்லை” என்று ஏன் இயேசு, அம்மனுஷனிடம் கூறவில்லை?; “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்” என ஏன் இயேசு அம்மனுஷனிடம் கூறவில்லை?” (அப்போஸ்தலர் 4:12; 1 யோவான் 5:12).

அப்படி ஒருவேளை இயேசு பதிலளித்திருந்திருப்பாரானால், அது அந்த நியாயசாஸ்திரி இருந்த மனநிலைக்கு மிகவும் பலமான ஆகாரமாய் இருந்திருக்குமென நாம் பதிலளிக்கின்றோம். அம்மனுஷன் இயேசுவின் மூலமாக தெய்வீக இரக்கத்தை எதிர்ப்பார்க்க ஆயத்தப்படுவதற்கு முன்னதாக, முதலாவது அம்மனுஷன், தெய்வீக நியாயப்பிரமாணம் முழுவதையும் தன்னால் கைக்கொள்ள முடியாமல் இருக்கும் இயலாமையை உணர்ந்துக்கொள்வது அவசியமாய் இருந்தது. பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளைப் பொறுத்தமட்டில், பிரச்சனை என்னவெனில், இவர்கள் தெய்வீக நியாயப்பிரமாணமானது மிகவும் உயர்வானதாகவும், பிரமாண்டமானதாகவும், பூரணமானதாகவும் இருப்பதை உணர்ந்து, அதன் நிபந்தனைகளைத் தங்களுடைய பெலவீனமான மற்றும் விழுந்துபோன நிலைமையில் பூரணமாய்ச் சந்திக்க இயலாது என்பதை அறிந்திருந்தும் மற்றும் தாங்களும் மற்ற மனிதர்களைப் போலவே மரிக்கின்றனர் என்பதையும் நன்கு அறிந்திருந்தும், இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது போன்று நடித்துக்கொண்டிருப்பதும், இன்னுமாக இவர்கள் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாக்கப்பட்டுள்ளதுபோல் நடித்துக்கொண்டிருப்பதும் மற்றும் இன்னுமாக நியாயப்பிரமாணத்தினால் தங்களுக்கு நித்திய ஜீவன் கிடைப்பது போன்று நடித்துக்கொண்டிருப்பதுமேயாகும்.

சில ஜனங்கள், தேவன் ஒரு பரிபூரணமான (கொள்கையை) அளவுகோலைக் கொண்டிருக்கின்றார் என்றும், இந்தக் கொள்கைக்கு/அளவுக்கோலுக்கு இசைவாய் வராமல் எவரும் நித்திய ஜீவனை எதிர்ப்பார்க்க முடியாது என்றும், ஒப்புக்கொள்வதற்கு ஆயத்தமாய் இன்னும் காணப்படுகின்றனர்; யூதர்கள் மத்தியில் அன்று காணப்பட்டது போன்று, இன்றும் அநேகர், தாங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான தெய்வீகக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு ஏற்ப ஓரளவுக்கு காணப்படுகின்றனர் என நம்புவதன் மூலம், தங்களுக்காக மீட்பின் தொகையை அளிப்பதற்குரிய ஒரு மீட்பருக்காக, ஓர் இரட்சகருக்காக எதிர்நோக்கமாலும், தங்களுடைய கறைகளை மூடிப்போடுவதன் மூலம், பிதாவுடன் தங்களை ஒப்புரவாக்கி, பாவங்களுக்கான மன்னிப்பையும், பாவங்களிலிருந்து பாதுகாப்பையும் தங்களுக்கு அருளக்கூடிய ஒரு மீட்பரை எதிர்நோக்காமலும் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் அனைவரும் தெய்வீக நீதிக்கு ஓர்

அளவுகோல்/ கொள்கை இருக்கின்றது, அது மிகவும் உயரிய அளவுகோல் என்றுள்ள பாடத்தை முதலாவதாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் தேவனுடைய கொள்கை/அளவுகோல் எவ்வளவு உயர்வானதாக இருக்கின்றது என்றும், அந்தக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு ஏற்ப தாங்கள் காணப்படத்தக்கதாக தங்களால் ஏறெடுக்கும் சிறந்த பிரயாசங்கள் எவ்வளவு பூரணமற்றது என்றும் காண்கையில், இவர்கள் நித்திய ஜீவனை அடையும் விஷயத்தில் கர்த்தரிடமிருந்து உதவிக்காக நோக்க ஆரம்பிப்பார்கள். இந்த ஒரு பாடத்தைத்தான் அந்த நியாயசாஸ்திரி கற்றுக்கொள்ள வேண்டுமெனக் கர்த்தர் விரும்பினார், ஆகவேதான் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்ப்பது என்ன என்பதற்கான பதில் வார்த்தைகளை அம்மனுஷனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தேவனை ஒருவன் தன்னுடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் அன்புகூருவது என்பது எவற்றையெல்லாம் உள்ளடக்கும் என வாக்குவாதம் பண்ணிட நியாயசாஸ்திரி முற்படவில்லை. சிலர் தேவனை அன்புகூருவதாகவும், அவருக்கு ஊழியம் புரிவதாகவும் கூறுவதுண்டு. வேறுசிலர் இவர்கள் இப்படிக் கூறும் விஷயத்தில் எதையும் நிரூபிக்க முடியாமல் இருந்தும், அக்கூற்றின் உண்மையைக் குறித்துச் சந்தேக நிலையிலேயே காணப்படுவார்கள்; ஏனெனில் கர்த்தரும், அந்தந்த மனுஷரும்தான் சரியாக தன்தன் இருதயத்தைக் கணிக்க முடியும். இந்த அன்பு பற்றின விஷயம் ஏதோ முக்கியத்துவம் அற்றது போன்றும், அது ஏதோ தெரிந்த விஷயம் போன்றும், அது குறித்த மாபெரும் கேள்வியை நியாயசாஸ்திரி கேட்காமல் விட்டுவிட்டார்; ஆனால் ஒருவேளை நியாயசாஸ்திரி கர்த்தருக்கு அப்படி ஒரு அர்ப்பணிப்புப் பண்ணுவது என்பது குறிப்பது என்ன? எனக் குறைக்காணும் விதத்தில் ஆராய முற்பட்டிருப்பாரானால், அந்தக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு, தான் மிகவும் குறைவுபட்ட நிலையில் காணப்படுவதைக் கண்டிருப்பார்.

இக்கேள்வியை நாம் தவிர்த்துவிடாமல் காணப்படுவோமாக அல்லது முக்கியத்துவமற்றதாக எடுத்துக்கொள்ளாமல் இருப்போமாக; கர்த்தருக்காக நாம் கொண்டிருக்கும் நம்முடைய அன்பானது, வீட்டிலும், குடும்பத்திலுமுள்ள பிரியமானவர்கள் மீதான நம்முடைய அன்பைக் காட்டிலும் மற்றும் முழு உலகத்தார் மீதான நம்முடைய அன்பைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்படத்தக்கதாக, நம்முடைய அன்புகள்/நேசங்கள் அனைத்தும் கர்த்தர்மேல் மையம் கொண்டிருப்பது என்பதே, கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தோடு அன்பு செய்வதைக் குறிப்பதாக இருக்கும் என்பதை நாம் அறியக்கடவோம். கர்த்தரை நம்முடைய முழு ஆத்துமாவோடு அன்புகூருவது என்பது, நம்முடைய முழு ஆத்துமாவோடும், நம்முடைய வார்த்தைகள், பார்வைகள் மற்றும் நம்முடைய துதிகள் மூலமாக மாத்திரம் நம்முடைய அன்பு வெளிப்படுவோதடல்லாமல், இன்னுமாக நம்முடைய ஊழியங்கள், ஜீவியத்தின் நடத்தைகள் யாவும், நம்முடைய அன்பின் விஷயத்திலும், ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும் தேவனுக்கே முதலிடம் என்பதை சாட்சிப் பகருவதாக இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. மூன்றாவதாக கர்த்தரை நம்முடைய முழுப் பலத்துடன் அன்புகூருவது என்பது, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும் விஷயத்திலும், அவருடைய சித்தமென நாம் புரிந்துக்கொள்ளும் அவருடைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் விஷயத்திலும், எல்லாவற்றிலும் நாம் பயன்படுத்தத்தக்கதாக ஆயத்தமாயிருக்கும் வண்ணமாக நம்முடைய நேரமும், தாலந்தும், செல்வாக்கும், நமது தேவனுக்குப் பயன்படத்தக்கதாகக் காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நான்காவதாக நமது கர்த்தரை நம்முடைய முழு மனதுடன் அன்புகூருவது என்பது, கர்த்தரைப் புரிந்துக்கொள்ளும் விஷயத்திலும், அவருடைய தெய்வீகப் பிரமாணங்களைப் புரிந்துக்கொள்ளும் விஷயத்திலும், அப்பிரமாணங்களுடன் இசைவாய் வரும் விஷயத்திலும் அறிவு சார்ந்த பிரயாசம் எடுப்பதின் மூலம், "தேவனைத் தொழுதுகொள்பவர்கள், ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்" என்று கர்த்தர் கூறினதற்கு ஏற்ப, நம்முடைய ஊழியமும், தொழுதுகொள்ளுதலும் புத்தியுள்ளதாய் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

## "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக"

கர்த்தருக்கு நியாயப்பிரமாணத்தைப் பற்றிப் பதில் கூறுகையில், "உன்னில் நீ அன்புகூருவது போல, பிறனிலும் அன்புகூருவாயாக" எனும் நியாயப்பிரமாணத்திற்கு, தான் அளித்துள்ள பதிலின் பின் பாகத்தை, தான் மீறுவதாக தன்னுடைய அன்றாட நடத்தையானது தன்னைக் குற்றவாளி எனத் தீர்க்கும் என்று நியாயசாஸ்திரி உணர்ந்துக்கொண்டார். இது, தான் தாக்கப்படுவதற்கு ஏதுவான கட்டம் என்றும், தன்னுடைய பதிலைக்கொண்டே, தன்னைக் கர்த்தர் சிக்கவைத்துவிட்டார் என்றும் நியாயசாஸ்திரி உணர்ந்துக்கொண்டார். நியாயசாஸ்திரி, தான் தன்னில் அன்புகூருவது போன்று

தன்னுடைய அயலானை, தான் எவ்வாறு தன்னுடைய அனுதின ஜீவியத்தில் அன்புகூரவில்லை என்பதையும், தன்னைப்போன்ற வகுப்பாரிடமிருந்து, பொது ஜனங்களை, ஆயக்காரர்களை மற்றும் பாவிகளை வேற்றுமையாக, தான் பார்த்ததையும், தற்போது இயேசுவைச் சிக்கவைப்பதற்கு, தான் ஏறெடுத்துள்ள பிரயாசத்திலும், தான் தன்னில் அன்புகூருவது போன்று தன்னுடைய அயலானாகிய இயேசுவில் அன்புகூராமல், இயேசுவை எதிராளி போன்று நடத்துவதையும் நியாயசாஸ்திரி அறிந்திருந்தான். தன்னுடன் காணப்படும் வகுப்பாரிலுள்ள மற்றவர்களைப் போலவே தானும், தன்னுடைய சொந்த இனத்திலுள்ள கீழ்மட்ட ஜனங்களிடம் திமிர்த்தனத்தோடும், வெறுத்து ஒதுக்கும் மனப்பான்மையோடும் காணப்படுவதை உணர்ந்தார். வேதபாரகர் நியாயப்பிரமாணத்தில் கைத்தேர்ந்தவராய்க் காணப்பட்டிருந்தார். தங்கள் வகுப்பாரைச் சேர்ந்தவர்களை, தங்களைப் போன்ற வாழ்க்கை மட்டத்தில் காணப்படுபவர்களைத்தான், நியாயப்பிரணமாணத்தின்படி, தங்களில் அன்புகூருவது போன்று, தாங்கள் அன்புகூரப்பட வேண்டிய அயலார்கள் என்று பரிசேயர்களும், வேதபாரகர்களும் கொண்டிருந்த அதே விளக்கத்தைத்தான் நியாயசாஸ்திரியும் கொண்டிருந்தார். ஆகவே மிகுந்த நம்பிக்கையுடன், "எனக்குப் பிறன் யார்?" என்று இயேசுவுக்குப் பதில் கூறினார். அதாவது, "இவ்விஷயத்தில் தான் நாம் வேறுபடுகின்றோம் என நான் எண்ணுகின்றேன். என்னுடைய வகுப்பைச் சேர்ந்தவர்களை நான் அன்புகூர்ந்து, மதித்து, உறவுகொண்டிருந்து, மற்றவர்களை ஏறக்குறைய வெறுத்து ஒதுக்கும்போதுதான், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதாக நான் கருதுகின்றேன். எப்படி நீர் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வேறுமுறையில் செயல்படுத்துகின்றீர்? ஒவ்வொருவரும் தன்னுடைய வகுப்பில் உள்ளவர்களையே தனது அயலானாகக் கருதி, அவர்களை அன்புகூர்ந்து, அவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமே ஒழிய, வெளி உலகத்தில் காணப்படும் மற்றவர்களுடன் அல்ல என்றுதான் நியாயப்பிரமாணம் தெரிவிக்கின்றது என்பதை நீர் ஒப்புக்கொள்வீர் என்று நான் எண்ணுகின்றேன்" என்றவிதத்தில் நியாயசாஸ்திரி இயேசுவினிடத்தில் பேசினார்.

பொதுவாய்ச் சம்பவிக்கக்கூடிய காரியம் ஒன்றை வைத்து, அதாவது நியாயசாஸ்திரிகள் அறிந்திருக்கிற ஒன்றைக் கர்த்தர் வைத்து, வியத்தகு ஞானத்துடன் ஓர் உவமையைச் சித்தரித்தார். எருசலேமுக்கும், எரிகோவுக்கும் இடையேயுள்ள ஒரு பாதையைக் காட்சியில் முன் வைத்தார்; அது ஒரு குறுகிய வழிநடைப்பாதையாய் இருந்தது, சில இடங்களில் மிகவும் செங்குத்தாகவும் காணப்பட்டது, பாறை இடுக்குகளும் காணப்பட்டது; இது கொள்ளையர்கள் காணப்படும் பகுதியாம்; இந்தக் கொள்ளையர்கள், மலைகளிலுள்ள திரளான குகைகளில் வாழ்ந்து, வழிப்போக்கர்களைத் தாக்குபவர்களாக இருந்தனர். இன்றும்கூட எரிகோவுக்கு நேராகப் போகும் பிரயாணத்தின்போது, பிரயாணிகள் ஆயுதம் தரித்த அரேபியர்களைத் துணைக்குக்கொண்டு செல்வது வழக்கமாய் இருக்கின்றது. இந்தப் பாதையில் போய்க் கொண்டிருந்த ஒரு பிரயாணியை, கொள்ளையர்கள் தாக்கி, அவனை அடித்து, குற்றுயிராகப் போட்டு, அவனுடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டதாக நமது கர்த்தர் சித்தரித்தார். ஓர் ஆசாரியன் அவ்வழியில் போனதாகவும், அம்மனுஷனைக் கண்டு, தானும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுப் போகாதபடிக்கு, விலகிப்போய்விட்டான் என்றும், இதைப் போலவே அவ்வழியே வந்த லேவியன் ஒருவன், உதவியளிப்பதற்கு நேரத்தைச் செலவிட விருப்பம் இல்லாமல் விலகிபோய்விட்டான் என்றும் கர்த்தர் சித்தரித்தார். பின்னர் ஒரு சமாரியன் அவ்வழியாக வந்தான் என்றும், அவன் மனதுருகி, காயமடைந்த மனுஷனுக்கு உதவி, அம்மனுஷனுடைய காயங்களைக் கட்டி, அவனைத் தன்னுடைய சுயவாகனத்தில் ஏற்றிக்கொண்டு, அவனை அருகே உள்ள சத்திரத்தில் கொண்டுபோய், இரவு முழுவதும் அவனைப் பராமரித்து, இன்னுமுள்ள பராமரிப்பிற்காக இன்னும் சில ஏற்பாடுகளைச் சமாரியன் பண்ணுவித்தான் என்று நமது கர்த்தர் சித்தரித்தார்.

ஜனங்களுக்குக் கற்பிப்பதற்காகவும், ஜனங்களை, கர்த்தருடைய வழியில் வார்த்தையினாலும், மாதிரியினாலும் வழிநடத்துவதற்காகவும், கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்திற்கென விசேஷமாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் லேவியர்கள் என்பதும், இதே கோத்திரத்தைச் சேர்ந்த ஆசாரியர்கள் எனப்படுபவர்கள், கர்த்தருக்கென்றும், இஸ்ரயேல் ஜனங்களுக்கென்றும் மிக உன்னதமான ஊழியத்திற்குக் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட விசேஷித்த குடும்பத்தாராய் இருக்கின்றனர் என்பதும் நினைவில் கொள்ளப்படும்போதுதான், நமது கர்த்தருடைய இவ்வுவமையின் அழுத்தத்தைப் பார்க்க முடிகின்றது. இன்னுமாக சமாரியர்கள் கலப்பின ஜனங்கள் என்பதும், சமாரியர்களை யூதர்கள் இழிவாகக் கருதினார்கள் என்பதும், யூதர்களும், சமாரியர்களும் எவ்விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை என்பதும் நினைவில் கொள்ளப்படும்போது, இவ்வுவமையானது மிக உயர்வானதாகத் தோன்றுகின்றது (யோவான் 4:9).

இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, "இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" என ஆண்டவரால் கேட்கப்படும் கேள்வியைக் கவனியுங்கள் (லூக்கா 10:36). நியாயசாஸ்திரி சொல்வதற்கு ஒரே ஒரு பதில் இருந்தது. உவமையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள லேவி வகுப்பாரைச் சேர்ந்தவனாக இந்த நியாயசாஸ்திரி காணப்பட்டார். "அதற்கு அவன்: அவனுக்கு இரக்கம் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படி செய் என்றார்" (லூக்கா 10:37). அதாவது, "போய் இரக்கம் காண்பி; உலகத்திலுள்ள எந்த மனுஷனும், நண்பனோ, சத்துருவோ அவன் உன்னுடைய அயலான் என்றும், அவன் உன்னால் உனக்கு வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் அன்புகூரப்பட வேண்டும் என்றும், ஊழியம் புரியப்பட வேண்டும் என்றும் போய்ப் புரிந்துக்கொள். அவன் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ விரும்புகின்றாயோ, அதை நீயும் அவனுக்குச் செய்; உன்னில் நீ அன்புகூருவது போலும், உனக்கு நீ செய்வது போலும், உனக்கான கஷ்டமான சூழ்நிலையின் கீழ் அவன் உன்னில் அன்புகூர்ந்து, ஊழியம் புரிந்திட நீ விரும்புவது போன்றும், நீ அவனில் அன்புகூர்ந்து, அவனுக்குச் செய்திடுவாயாக."

## "பொன்னான சட்டம்"

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் மேற்கூறப்பட்டுள்ளபடி, நியாயப்பிரமாணத்தின் இந்தக் கோரிக்கையிலும், இதற்கான கர்த்தருடைய உவமையிலுள்ள விளக்கத்திலும் காணப்படும் முக்கியத்துவத்தை/அழுத்தத்தைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்; அதாவது, "காயமடைந்த மனுஷனுக்கு இரக்கம் பாராட்டின சமாரியன், உண்மையில் அம்மனுஷனுக்கு அயலானாய் இருக்கின்றான்; ஆனால் அம்மனுஷனுக்கு இரக்கம் காட்டிட மறுத்த ஆசாரியனும், லேவியனும் அம்மனுஷனுடைய அயலானாகக் கருதப்படக்கூடாது; ஆகவே, அம்மனுஷன் காயம் ஆறின பிற்பாடு, தனக்கு உதவின சமாரியனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். சமாரியனுக்கு ஊழியம் புரிவதில், தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திடவும் விரும்பி காணப்பட்டிட வேண்டும். ஆனால் அயலான் போன்று செயல்படாத மற்ற இருவரையும் அம்மனுஷன் தன் அயலானாகக் கருதக்கூடாது, மற்றும் தன்னில் அன்புகூருவது போன்று அவர்களையும் அன்புகூர முற்படக்கூடாது" என்று கூறி, கர்த்தருடைய ஜனங்களில் சிலர், கர்த்தர் இவ்வுவமையில் விவரிக்கும் விஷயத்தின் அழுத்தத்தை/முக்கியத்துவத்தைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்.

இப்படியாகக் கூறுவது என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் திரித்துக் கூறுவதாக இருக்கும். உண்மையில் யூதர்கள் மத்தியில் பரவலாய் இருந்த இந்த ஓர் எண்ணத்தை/கருத்தை எதிர்க்கவே கர்த்தர் நாடினார். ஏனெனில் அயலார்களுக்கு நேர்மையாய் இருக்க வேண்டும் என்றும், சத்துருக்களிடம் வெறுப்புடன் காணப்பட வேண்டும் என்றும்தான், யூதர்கள் மத்தியில் பழமொழியாகக் காணப்பட்டது. அயலான் என்னும் வார்த்தையானது அருகாமையில் காணப்படுபவர்களைக் குறிப்பதினால் அன்பிலும், உணர்விலும், விசுவாசத்திலும், சமய பிரிவிலும் அருகாமையில் காணப்படுபவர்கள்தான் அயலான் எனப் பொருத்திப் பார்க்கும் பழக்கத்தில் வேதபாரகரும், பரிசேயரும் காணப்பட்டனர். ஆகையால் பரிசேயன் ஒருவன் இன்னொரு பரிசேயனையும், வேதபாரகன் ஒருவன் இன்னொரு வேதபாரகனையும், ஒரே குலம் எனும் சுயநலமான ஆவியில் ஒருவரையொருவர் அயலான் என்று கருதி, மகிழ்ச்சியுடன் ஊழியம் புரிவான்; இன்னுமாக வேறு வகுப்பாரிலுள்ள மற்றவர்களை ஏறக்குறைய எதிரிகளாகக் கருதிக்கொண்டு, ஒன்றில் அவர்களை அன்பு செய்யாமல் கடந்துச் செல்வான், அல்லது ஒருவேளை அவர்கள் தன்னை எதிர்க்கும் பட்சத்தில், அவர்களைப் பகைப்பவனாய்க் காணப்படுவான்.

இதைக் காட்டிலும் மேலான ஒரு கண்ணோட்டத்தைக் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டிருக்க வேண்டும். மேற்கூறிய இக்கருத்தை எதிர்க்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். "உனக்கடுத்தவனை சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:43-45). நண்பர்களிடத்தில் மாத்திரமல்லாமல், சத்துருக்களிடத்திலும் இந்த ஓர் அன்பின் அளவுகோலை/கொள்கையை அடையாத எவரும், தேவனால் அவருடைய பிள்ளைகளெனக் கருதப்பட முடியாது.

நமது கர்த்தருடைய சீஷர்களாய் இருக்கும் அனைவரையும், ஆள வேண்டிய தெய்வீகச் சித்தத்தின் முழு விவரமாகிய பொன்னான சட்டத்தை நமது கர்த்தர் உருவாக்கினார். நமக்கு இரக்கம் பாராட்டி உள்ளவர்களையே நாம் சகோதர சகோதிரிகளென அன்புகூர வேண்டுமெனப் பொன்னான சட்டம் கூறவில்லை. நமது கர்த்தர், "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" என்று கூறினதன் மூலமாக இம்மாதிரியான சுயநலமான அன்பைக் கண்டிக்கின்றார் (லூக்கா 6:32). நமக்காக தங்களுடைய ஜீவியங்களை ஆபத்துக்குள்ளாக்கியவர்களை, நாம் நமது அயலார்களென அன்புகூர வேண்டும் என்று இந்த உவமை போதிப்பதாக விளக்கம் அளிப்பது என்பது, நம்முடைய ஆண்டவருடைய போதனைகளைவிட மிகவும், மதிப்பு இறங்கின விளக்கமாய் இருக்கும், மற்றும் இப்படி எண்ணுவது போன்றே பாவிகளும் எண்ணுகின்றனர் என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

மீட்பருடைய பின்னடியார்களாய் இருக்கும் நாம், மிகவும் உயர்வான (கொள்கை) அளவுகோலைக் கொண்டிருக்க வேண்டும்; கஷ்டமான நிலைமையிலும், நமது உதவி தேவைப்படும் நிலைமையிலும் இருக்கும் ஒவ்வொருவரையும், நம்முடைய அயலானாக நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; அதாவது ஒருவேளை நாம் இப்படியாக ஒரு கஷ்டமான நிலைமையில் காணப்படும்போது அவன்/அவள் நமக்குச் செய்திட, நாம் எதையெல்லாம் விரும்புகின்றோமோ, அவற்றை நாமும் அவனுக்கு/அவளுக்குச் செய்யத்தக்கதாக ஆயத்தமாய் இருக்கும் அளவுக்கு அவன்/அவள் மீது அனுதாபத்துடன்கூடிய/இரக்கத்துடன் கூடிய அன்புகொண்டிருக்க வேண்டும். எந்தளவுக்கு அன்பின், இரக்கத்தின், ஒத்துழைப்பின், பெருந்தன்மையின், இரக்க உணர்வின் இந்த உயர்வான அளவுகோலானது/கொள்கையானது, நமது இருதயங்களைக் கட்டுப்படுத்தி, நம்முடைய நடத்தைகளை ஆளுகின்றதோ, அவ்வளவாய் நாமும் நிச்சயமாய்த் தேவனைப்போன்று அதிகமாயும், கிறிஸ்துவைப்போன்று அதிகமாயும் காணப்படுவோம்; காரணம் நன்றியற்றவர்கள் மீதும் கூடத் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கின்றார் என நமது அருமை மீட்பர் குறிப்பிட்டுள்ளார்.

## "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்"

அயலானை அன்புகூரும் விஷயத்தைக் காட்டிலும், கர்த்தர் தம்முடைய சீஷர்களாகிய நம்மில் எதிர்ப்பார்க்கின்றார். நம்முடைய சத்துருக்கள் மீது நமக்கு அனுதாபத்துடன் கூடிய அன்பாகிலும் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் நாம் அவர்களை வார்த்தையினாலோ, கிரியையினாலோ காயப்படுத்த முற்படாமல் இருப்பதோடு, நம்மால் முடிந்தமட்டும், அவர்களுக்கு உதவிடவும் நாம் ஆயத்தத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட வேண்டும். கர்த்தரை அன்புகூருவது போன்றோ, நமது சகோதர சகோதரிகளை அன்புகூருவது போன்றோ, நாம் நமது சத்துருக்களை அன்புகூர வேண்டும் எனும் அர்த்தத்தையே கர்த்தர் கொடுக்கின்றதாக நாம் எண்ணிவிடக்கூடாது. கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பு என்பது, மிகவும் உயரிய வகை அன்பாகும்; அது நம்முடைய பரம பிதாவின் குணலட்சணத்தில் விளங்குவதும், அதேசமயம் பிதாவுக்குச் சொந்தமானவர்கள் அனைவரும் வளர்த்துவதற்கு நாடுகிறதுமான கொள்கைகளை உணர்ந்துள்ள/புரிந்துள்ள அன்பின் வகையாகும்.

நமது சத்துருக்கள் மீதும், நம்முடைய அயலார்கள் அநேகர் மீதுமுள்ள நம்முடைய அன்பானது, அவர்களுடைய குணலட்சணங்களின் அடிப்படையில் காணப்பட வேண்டும்; இவர்களுடைய நம்பிக்கைகள் மற்றும் இவர்களுடைய திட்டங்கள் என்பது, நாம் புதிதாய்ப் பெற்றுள்ள நம்பிக்கைகள் மற்றும் திட்டங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். நமது கர்த்தர் (இவர்களிடத்தில்) காட்டினதுபோன்று, இவர்களிடத்திலான நம்முடைய அன்பும், அனுதாபத்துடன் கூடிய அன்பாய் இருக்க வேண்டும்; தேவனும் இவர்கள்/உலகத்தின் மீது அனுதாபத்துடன் கூடிய அன்பையே கொண்டிருந்தார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). ஐக்கியத்துடன்/உறவுடன் கூடிய அன்புடன் தேவன் உலகத்தை அன்புகூரவில்லை, நாமும் ஐக்கியத்துடன் கூடிய அன்புடன் உலகத்தை அன்புகூர வேண்டியதில்லை. உலகத்தின் விழுந்துபோன மற்றும் சீரழிந்துபோன நிலைமையை உணர்ந்தவர்களாக, அதனை காப்பாற்றுவதற்கும், நீதி மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் அது ஆறுதல் அடையத்தக்கதாகவும் நம்மால் முடிந்ததைச் செய்வதில் நாம் மகிழ்ச்சிகொள்பவர்களாகக் காணப்பட வேண்டும்.

"உன்னில் நீ அன்புகூருவது போல், பிறனிலும் அன்புகூருவாயாக" என்று நியாயப்பிரமாணம் கட்டளையிடும் அன்பிலும் கூட வரையறை காணப்படுவதாக இருக்கின்றது; அதாவது, "உன்னைக் காட்டிலும் அதிகமாய் அன்புகூர" வேண்டும் என்பதாகச் சொல்லப்படவில்லை. ஆகவே நாம் நமது ஜீவனைத் தியாகம் செய்துதான், நம்முடைய அயலானுக்கு நம்மால் உதவிட முடியும் எனும் அளவுக்கு, அயலான் ஒருவனுடைய ஜீவன் ஆபத்தில் காணப்படும் கட்டம் ஒருவேளை ஏற்படுமாயின், நாம் நமது அயலானுக்காக ஜீவனைத் தியாகம் பண்ணிட வேண்டும் என்று அன்பின் தெய்வீகப் பிரமாணம் கேட்பதில்லை . . . ஒருவேளை அப்படி ஜீவனைத் தியாகம் பண்ணுவது என்பது நம்மில் நாம் அன்புகூருவதைக் காட்டிலும் பிறனில் அன்புகூருவதாகவும், தெய்வீகப் பிரமாணம் கேட்பதைக் காட்டிலும் மிஞ்சினதாகவும் காணப்படும். நம்முடைய அயலானும், அவனில் அவன் அன்புகூருவதைக் காட்டிலும் அதிகமாக நம்மை அன்புகூர வேண்டும் எனவும், நமக்காக அவன் தன்னுடைய ஜீவனைத் தியாகம் பண்ணிட வேண்டும் எனவும், நாமும் எதிர்ப்பார்க்கக்கூடாது. ஒருவேளை நம்முடைய அயலான் இப்படியாக நமக்குச் செய்ய முற்படும் பட்சத்தில், அதைத் தடைப்பண்ணிவிடுவதும், நாம் அவனுக்குச் சம்பவிக்கக் கூடாது என விரும்புபவைகளை, அதாவது அவன் தனக்கு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்த நாம் அவனை அனுமதியாமல் இருப்பதே நமக்கான சரியான மனநிலையாகும். இந்த ஒரு விஷயத்தில்தான், அதாவது நம் பொருட்டு நம்முடைய கர்த்தர் தம்முடைய ஜீவனைத் தியாகம் பண்ணின அவருடைய நடத்தையானது, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததையும் மிஞ்சியதாய் இருந்தது; அநேகருக்காக தம்முடைய ஜீவனையே ஈடுபலியாக அவர் கொடுத்ததின் வாயிலாக, அவர் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததைக் காட்டிலும் அதிகம் செய்தவராகக் காணப்பட்டார். இந்த ஒரு காரணத்தினால்தான் அது பலி/தியாகப் பலி என்று பெயரிடப்பட்டது. நியாயப்பிரமாணம் முழுவதையும் செய்வது அவருடைய கடமையாக இருந்தது, ஆனால் அவர் இதைத் தாண்டிச் சென்று, தம்முடைய ஜீவனை, மனுக்குலத்திற்கான ஈடுபலி விலைக்கிரயமாகக் கொடுத்திட்டார்; இது ஒரு பலி, மேலும் இந்தப் பலியானது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நித்தியஜீவனுக்கும் அதிகமானவைகளால் இயேசு விசேஷமாய்ப் பலனளிக்கப்பட்டார். இதே காரியம் நமக்கும் பொருந்துகின்றது, காரணம் அவரைப் போலவே நாமும் இவ்வுலகில் காணப்படுகின்றோம்; மற்றும் அவருடைய அடிச்சுவடுகளில் நாமும் நடக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். (1 யோவான் 4:17).

நம்முடைய அயலான், நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அதையே நாம் நம்முடைய அயலானுக்குச் செய்ய வேண்டும் என்பதாகவே இன்னமும் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கின்றது. இதைக் காட்டிலும் குறைவாக நாம் யாருக்கும் செய்துவிடக்கூடாது; ஆனால் கர்த்தருடைய பின்னடியார்களாக, அவருடைய பலயின் ஆவியினால் ஊக்குவிக்கப்பட்டுள்ளவர்களாகிய நாம், தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக சகோதர சகோதரிகளுக்கென நம்முடைய ஜீவியங்களை சந்தோஷமாக ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; தெய்வீகத் திட்டமானது, இயேசுவுடன்கூட பலிச் செலுத்துபவர்களாக, பின்னர் அவருடைய இராஜ்யத்திலும், அதன் மாபெரும் வேலையாகிய உலகத்தை ஆசீர்வதித்தல் மற்றும் மீண்டும் பழைய (பூரண) நிலைக்குக்கொண்டுவருதல் வேலையில் அவருடன் உடன்சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக இப்பொழுது சிறு மந்தையை, விசுவாச வீட்டாரைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருகின்றது. பிரமாணம் எதிர்ப்பார்க்கும் விஷயத்தையும், நமது பலி என்னவாக இருக்க வேண்டும் என்பதையும், எந்த ஒரு சிருஷ்டியின் இடத்திலும் நாம் எப்படி நடக்க வேண்டும் என நீதி எதிர்ப்பார்க்கும் விஷயத்தையும் பற்றின தெளிவான பார்வையை நாம் பெற்றிருப்பது அவசியமாய் இருக்கின்றது.

## "நியாயப்பிரமாணம் முழுவதும் நம்மில் நிறைவேறும்படிக்கு"

நம்முடைய இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில், நமது கர்த்தர் நியாயசாஸ்திரிக்குக் கிருபையின் சுவிசேஷத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பதிலாக, நியாயப்பிரமாணத்தையே குறிப்பிடுவதைப் பார்த்தோம். கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுக்கு நியாயப்பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும், இரண்டையுமே பொருத்துவதை இப்பொழுது கவனிப்போம். தேவன் ஓர் அளவுகோலை/நியமத்தை, ஒரு பிரமாணத்தைக்கொண்டிருக்கிறார், அதை அவர் ஒருபோதும் அழிப்பதில்லை. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையானது அதன் நோக்கத்தை நிறைவேற்றின பிற்பாடு, அது நின்று போய்விட்டது என்பது உண்மைதான்; ஆனால் உடன்படிக்கைக்கு அடிப்படையான, தேவனுடைய பிரமாணமானது, ஒரு போதும் இல்லாமல் போகப் போவதில்லை. நாமும் சரி, யூதர்களும் சரி, கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் மற்றும் பலத்தோடும் அன்புகூரவும், மற்றும் நம்மை நாம் அன்புகூருவது போன்று நமக்குப் பிறனை

அன்புகூர வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கின்றோம். இதுவே நமக்கு முன்பும், யூதருக்கு முன்பும் வைக்கப்பட்டுள்ள நியமமாகும். யூதனால் இதைக் கைக்கொள்ள முடியவில்லை; யூதன், தான் தன்னுடைய அயலானைக் கையாளும் விஷயத்தில் குறைவுப்பட்டதோடல்லாமல், தன்னுடைய சிருஷ்டிகர் மீதுள்ள தன்னுடைய அன்பிலும், அதாவது மற்ற அன்புகளைக் காட்டிலும் மேலோங்கி காணப்பட்டு, ஜீவியத்தின் நடத்தைகள் அனைத்திலும் வெளிப்பட வேண்டிய சிருஷ்டிகர் மீதுள்ள தன்னுடைய அன்பின் விஷயத்திலும் தான் குறைவுப்பட்டிருப்பதைக் காண்கின்றான்.

நியாயப்பிரமாணத்தின் எழுத்தின்படியும், ஆவியின்படியும் முழுமையான பூரணத்தில் நமது கர்த்தராகிய இயேசுவினால் மாத்திரமே அந்த அன்பைக் கைக்கொள்ள முடியும் (அ) கைக்கொள்ள முடிந்தது. நமது கர்த்தருடைய காலங்களுக்கு முன்பாக வாழ்ந்த யூதன், நியாயப்பிரமாணம் தொடர்புடைய விஷயத்தில் எவ்வளவுதான் சரியான இருதயத்தின் நிலைமையில் காணப்பட்டிருந்தாலும், நியாயப்பிரமாணம் கூறுபவைகளுக்கு ஏற்ப அவனால் வாழ/செய்ய முடியாத காரணத்தினால், அவனால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நம்முடைய நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். நமது கர்த்தர் இயேசு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டவராக, ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததி அனைவருக்குமாகவும், தம்முடைய ஜீவனைப் பலியாகக்கொடுத்தார்; மேலும் இந்த உண்மைப் பற்றின அறிவிற்குள் இப்பொழுது வந்துள்ள நாம், விசுவாசிப்பதின் மூலம் அதை ஏற்றுக்கொண்டுள்ளப்படியால், கிறிஸ்துவுக்குள்ளாக, தேவனிடத்தில் அங்கீகரிப்பைப் பெற்றிருக்கின்றோம்; இதினிமித்தம் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில் நாம் எடுக்கும் சிறந்த பிரயாசங்களுடன், கிறிஸ்துவினுடைய புண்ணியமுங்கூடக் காணப்படுகின்றது, இவ்வாறாக தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதான நிலைமையில் ஆக்கப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தேவனை நம்முடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும், மனதோடும் பிரதானமாக அன்புகூருவதில் நம்மால் முடிந்ததைச் செய்யும்பொழுதும், நம்மில் நாம் அன்புகூருவதுபோல் பிறனில் நாம் அன்புகூரும் விஷயத்தில் நம்மால் முடிந்ததைச் செய்யும்பொழுதும், தேவன் இந்த நல்ல பிரயாசங்களைப் பூரணமானது போன்று ஏற்றுக்கொண்டு, இதிலுள்ள குறைவுகளை, கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தினால் சரிச்செய்து கொள்கின்றார். ஆகவேதான் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகின்றார், அதாவது, "மாம்சத்தின்படி நடவாமல் (நம்மையும், நம்முடைய விழுந்துபோன பண்புகளையும் பிரியப்படுத்த நாடாமல்), ஆவியின்படி நடக்கிற (தெய்வீகப் பிரமாணத்தினுடைய ஆவிக்கு இசைவாக நடப்பதற்கு முடிந்தமட்டும் செய்கிற) நம்மிடத்தில், நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (ரோமர் 8:4).

## "பொன்னான . . . வசனம்"

"தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்ற வசனம் நம்முடைய நினைவுக்கு வருகின்றது (1 யோவான் 4:20). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நம்முடைய இருதயங்களில் நிரம்பிக்கொண்டிருக்கும் அன்பின் அளவானது, நமது அனுதாபமும், கவனமும் அவசியப்படும் நம்முடைய சக சிருஷ்டியினிடத்தில் வெளிப்படும் அன்பில் அளவிடப்படலாம், மேலும் ஒருவேளை நாம் நம்முடைய சக சிருஷ்யினிடத்தில் குறைவான அன்பை வெளிப்படுத்துகின்றோமெனில், இது நமது சிருஷ்டிகர் மீதான நம்முடைய அன்பிலுள்ள குறைவையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மாறாக ஒருவேளை நாம் மற்றவர்களிடத்தில் இரக்கமாய் இருக்கிறோமென்றால், நம்முடைய சக சிருஷ்டிகளுக்காக, அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரிடத்தில் இரக்கத்துடனும், பெருந்தன்மையுடனும் இருந்து, நம்மால் முடிந்ததைச் செய்வதில் மகிழ்ச்சிக் கொள்வோமென்றால், இது நமது கர்த்தரினால் அங்கீகரிக்கப்படும் ஆவி நம்மில் இருப்பதையும் மற்றும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் அடையப் பெற்றதே இந்த ஆவி என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள இப்படிப்பட்ட இரக்கமுள்ளவர்கள், கர்த்தருடைய கரங்களிலிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர் இவர்களைக் கனிவுடன் கையாளுவார்; மேலும் எந்தளவுக்கு தங்களுக்கு எதிராகத் தவறுகள் பண்ணுகிறவர்கள்மேல் இவர்களுக்குப் பெருந்தன்மையின், மன்னிப்பின் இந்த ஆவி காணப்படுகின்றதோ அவ்வளவாய், இவர்களுடைய பெலவீனங்களையும், குறைவுகளையும் கர்த்தர் இவர்களுக்கு மன்னிப்பார்.

**ஆமென்!**

---

**R 5909(R3820)**

# அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும்

## HARVEST GATHERINGS AND SIFTINGS

**கள்ள சகோதரர்களால் வரும் மோசங்கள் –2கொரிந்தியர் 11:26**

நம் கிறிஸ்தவ அனுபவங்கள் ஒவ்வொருக்குள்ளும் வேறுபட்டவைகளாயுள்ளது. எந்த இரு சகோதரரும் ஒரே துல்லியமான பொருத்தமுடையோராக எவ்விதத்திலும் இருப்பதில்லை. ஏனெனில் நம் இயற்கையான பண்புகளும் தாலந்துகளும் நமது சுற்றுப்புற சூழ்நிலைகளும் வேறுபடுவதே காரணம். பொறுமை, விசுவாசம் மற்றும் அன்பின் சோதனைகள் எந்த ஒரு தேவபுத்திரனுக்கும் அத்தியாவசியமாய் உள்ளது. எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. மாறாக நாம் இவற்றை சார்ந்தேயிருக்கிறோம். குணாதிசயம் எவ்வளவு உறுதியானது என்பதும் அல்லது அவர் எப்படி சாதாரணமான நெருக்குதல்களால் அசையாதிருக்கிறார் என்பவைகள் ஒரு பொருட்டல்ல. மற்றவர்களைப்போலவே சிலுவைகளையும் மாபெரும் சோதனைகளையும்பெற்று அல்லது அதைவிட



அதிகமாகப்பெற்று, அதன்மேல் நம்பிக்கையாயிருந்து, ஒருவேளை அப்படிப்பட்டார் பலவீனமானவர்கள் பணிவோடு முகங்குப்புறவிழும்போது, கர்த்தர் அவர்களது திராணிக்கு அதிகமாக துன்புற அனுமதிக்காமல், நேசிக்கிறார், கிருபையளிக்கிறார் – 1கொரிந் 10:13.

ஆசீர்வதிக்கப்பட்ட நம் கர்த்தராகிய இயேசுவும், பூரணராயிருந்தபோதிலும், பரீட்சையின் மூலம் அனுபவம்பெற்று, தேவசித்தத்துக்கு தம் முழு அர்ப்பணிப்பை நிரூபித்துக்காட்டினார். நம் கர்த்தரின் சோதனையை கவனித்துப்பாருங்கள். பரிசேயரும் வேதபாரகரும் ஏளனச்சொற்களாலோ, கசப்பான வார்த்தைகளாலே பயமுறுத்தினாலும், சிறிதளவும் அசைக்கப்படாமல், உறுதியான குணாதிசயத்தை வெளிப்படுத்தினார். இதில் நாம் சந்தேகப்படமுடியாது. அதுபோலவே, சாத்தானுடைய சோதனைகளை எதிர்கொண்டு, விரைவாயும் ஸ்திரமாயும் எதிர்மறையாக தீர்வுகண்டார். மற்றவர்களுக்கு மாபெரும் சோதனையை ஏற்படுத்தியிருக்கவேண்டிய இக்காரியங்கள், அவருக்குக் கோபத்தைக்கூட வருவிக்கவில்லை. வெளிப்படையாக தாக்குதல் தொடுத்த அவரது எதிரிகளிடத்தில் அவர் அமைதியோடும் சிலேடையாகவும் பதிலளித்தார். அவர்களால் அசைக்கப்படாதவராக தோற்றமளித்தார். ஆனால் அவரோடுகூட அப்பம் புசித்த மனுஷன் அவருக்கெதிராக தன் குதிகாலைத்தூக்கினான்(சங்41:9; மத் 26:23). அவரைவிட்டு விலகிச்சென்றான். அவரது இருதயமோ கலங்கினது; வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட நண்பர்களால் காயப்பட்டார். சோர்வடைந்த உணர்ச்சிகள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவரது ஊழியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, அவரது ஊழியத்தின் முடிவுக்கட்டத்தில் சோதனை மிகமிக கடினமாயிற்று. அவரைப் பின்பற்றின சீஷரில் அநேகர் அவரைவிட்டு விலகினர். அவர்கள் அவரது போதனைகுறித்து, "இது கடினமாயிருக்கிறதே, யாரால் கேட்கக்கூடும் ?'' என்றனர். கடிந்துகொள்ளாத அவரது துக்கமான வார்த்தைகள், "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா ?'' என்று தம் 12 விசேஷித்த மற்றும் உறுதியான அப்போஸ்தலரிடத்தில் இரக்கம் ஏற்படுத்தும்விதமாக வெளிப்பட்டன; அதற்கு பேதுரு, உள்ளுணர்வு பெற்றவராக உடனே கூறியதாவது ; "ஆண்டவரே, நாங்கள் யாரிடத்தில் போவோம் ? நித்திய ஜீவனளிக்கும் வார்த்தைகள் உம்மிடத்திலுண்டே'' என்றார். இவ்வார்த்தைகள் நேர்மையான, நேசமுள்ள இருதயத்தைத் தேற்றும் நறுமண தைலமாக நிச்சயமாக இருந்திருக்கும். பிறருக்கு நன்மைசெய்வதும், பிறரை ஆசீர்வதிப்பதுமே அவரது ஒரே மனத்தூண்டுதலாக இருந்தது.

அவரது ஊழியம் முடியும் தருவாயை நெருங்கினபோது, அவரால் மிகஅதிகமாக நேசிக்கப்பட்டோர் மூலம் அவர் இன்னும் கூடுதலான காயங்களால் துன்பப்பட நேர்ந்தது. அவர் துக்கம் நிறைந்தவராயும், ஆவியில் கலங்கினவராயும் சாட்சியமளித்தார்; மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்''. அவர்களில் ஒருவர் எப்படி முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்க முடிந்தது ? எப்படி அவர் தம் இருதயத்தில் நேசித்திருந்த சீஷர்கள் அனைவரும் அவரை கைவிட்டு, மறுதலிக்கமுடிந்தது ? ஆச்சரியத்துக்கிடமின்றி, அவரது பலியின் ஜீவியம் எப்படி முடிவுறவேண்டியிருந்தது என்பதற்கான தெளிந்த பார்வையை நாம் இங்கு பெறுகிறோம். "நான் சாவிலும் உம்மை மறுதலியேன்'' என்று பேதுரு திடமனதாய் பேசினபோதிலும், அவர்கள் அனைவரும் அவ்வாறே கூறினர். எல்லோரும் சிதறடிக்கப்படுவார்கள், அவரது மிக கடுமையான சோதனைவேளையில் கைவிட்டுவிடுவார்கள் என்பதையும்

இயேசு முன்னரே அறிந்திருந்தார். திடமனதாயிருந்த பேதுரு சாத்தானால் பயங்கரமாக புடைக்கப்பட்டு, ''அவரை ஒருபோதும் அறியேன்'' என்று மிக பலவீனனாக தன்னை நிரூபித்தார். அவரது சோதனைக்காலத்தின்போது இப்படிப்பட்ட பரீட்சைகள் சகோதரர்களிடமிருந்து வந்தன. அவர்களில் சிலர் பலவீனராகவும், ஒருவர் கரை படிந்த இருதயத்தையும் கொண்டிருந்தது, நம் கர்த்தரது சோதனைநேர அனுபவங்களில் கடுந்துயரம் அளித்திருக்கும். ஆயினும் இப்படிப்பட்ட சம்பவங்களால் அவர் வேறொரு வழிமுறையை தெரிவுசெய்யும்படி இயக்கவில்லை, அல்லது வேறெந்த ஆதிக்கமும் அவரை திசைதிருப்பவில்லை. அவர் மகிழ்ச்சியோடு குறுகலான பாதையில் நடந்து, மற்ற எல்லாவற்றையும் தேவனிடத்திற்கு விட்டுவிட்டார். கிறிஸ்துவின் நீதியை வெளிச்சத்தைப்போலவும், அவரது நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் தேவன் ஏற்றவேளையில் விளங்கப் பண்ணுவார்(சங்37:6).

அவர் இவ்வாறு தீய மனிதரது கரங்களில் துன்புற்றதோடு மட்டுமல்லாமல்,அவரது மிகநெருக்கமான நண்பர்கள் தவறாகப் புரிந்துகொண்டதினிமித்தமாகவும் ஆகும். அவர் சத்தியத்துக்கு உண்மையுள்ளவராயிருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். அவர் சீரமைப்பவராகவும் ராஜாவாகவும் வருமுன், முதலாவதாக மீட்பராக வரவேண்டியது எவ்வளவு அத்தியாவசியமானது என்றும் அவர்களால் சூழ்நிலையை தெளிவாக கிரகிக்கக்கூடாதிருந்தது. முழுமையாக சத்தியத்தை கிரகிக்காத போலி சகோதரர்களால் வரும் ஆபத்து பற்றிய அதேபாடம் அப்போஸ்தலர் பவுலின் அனுபவமாயுமிருந்தது.

அவரது செய்தியை உலகம் புறக்கணித்த விதத்தைப்பற்றி அவர் குறைகூறினதாக நாம் ஒருபோதும் கேள்வியுற்றதில்லை. புறஜாதியாரின் தத்துவங்களை விசுவாசித்த உலகஞானிகளால் குருடாக்கப்பட்டிருந்த யூதர்கள், பிரபலமாயிராத கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றின உபதேசத்தை பிரசங்கித்ததை கேட்டு இடறினர். அவர்மேல் தீயனபேசி கொடுமைப்படுத்தினர். மெய்யாகவே கடந்த அனுபவங்களைக்குறித்து மனம் தளர்ந்து, அல்லது சோர்வடைவதற்கு பதிலாக, அல்லது வருங்காலத்தில் கட்டுண்டு சிறையிருப்புக்கு போக எதிர்நோக்க வேண்டும். இவைகளுக்கிடையே அவர் தைரியமாகவும், உத்வேகத்தோடும் கூறுகிறார் ;

''ஆகிலும்; அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்'' – அப் 2:19–24.

கர்த்தராகிய இயேசுவைப்போலவே, பவுலும் கள்ள சகோதரர்களால் கடினமான உபத்திரவத்தை அடைந்திருந்தார். அவர்கள் சிலுவைப்போர் வீரர்களாவும், உண்மையுள்ள உடன்ஊழியராயும், நுகத்தடிக்குட்பட்டோராயும் இருப்பதற்கு பதிலாக, ஆள்வதற்கு விருப்பங்கொண்டு, அகந்தையுள்ளோராயும், தங்களையே உயர்த்திக்கொண்டனர். இவர்கள் பவுல்செய்ததைப்போல் அல்லாமல், இருதயத்தில் நேர்மையின்றி, மனப்பூர்வமாக, சத்தியத்தை முழுமையாகவும் தெளிவாகவும் காணத்தவறினர். பவுலுடன் அவர்கள் பல்வேறு பட்டணங்களுக்குச்சென்று அவரது வைராக்கியம் மற்றும் உழைப்பின் விளைவாக அடைந்தவெற்றியைக் கண்டு அவர்மேல் பொறாமை கொண்டனர். அவர்கள் அவரது போதனைகளையும் அவரது குணாதிசயத்தையும் தவறாகப் புரிந்துகொண்டு விசுவாசவீட்டாரோடு அவரை தாழ்வாக மதிப்பிட முற்பட்டனர். இவ்வாறாக, தந்திரமாக ஏமாற்றும் பல்வேறு கொள்கைகளுக்கு வழிகளைத் திறந்து, போதகர்களாக அவர்களை மேன்மைப்படுத்தினதால், அவைகளை உயர்தரமான சத்தியங்கள்(advanced truths) என்று கூறிக்கொண்டனர். ஆனால், உண்மையில் அக்கொள்கைகள் உண்மை சத்தியத்திலிருந்து அநேகரது மனதை சீர்கேடடையச் செய்தன.

கள்ள சகோதரர்களால் தாம் தவறாக சித்தரிக்கப்பட்டதைக்குறித்த தொல்லையை தம் நிருபங்களில் ஒரேயொருமுறை அப்போஸ்தலர் பவுல் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த கள்ள அப்போஸ்தலர்களது பெயர்களை அவர்கள் இவ்வாறு அறியப்பட்டும் உணரப்பட்டும் இருந்ததை குறிப்பிடுகிறார்(காண்க 1தீமோ1:19,20; 2தீமோ4:10, 14–17; 2கொரி11:2–23). அவர்கள் பெருமை, பொறாமை மற்றும் பெயர், புகழ்அடையவேண்டுமென்ற குறிக்கோள் போன்ற அசுத்தமான நோக்கங்களை உடையவர்களாயிருந்தனர். அவை சத்தியத்துக்கும் சபைக்கும் பேரழிவை ஏற்படுத்தின, அவர்களது மனசாட்சியோ உறுத்தவில்லை. குறிப்பாக ஆளுபவர்களாக தங்களை உயர்த்தமுயற்சிப்போரை, அவர்கள் வேறொரு சுவிசேஷத்தை உருவாக்கியிருப்பதாகவும், மனிதனுக்கு மீட்கும்பொருளின் விலைகொடுத்த கிறிஸ்துவின் மரணமாகிய ஒரே மெய் அஸ்திபாரத்தைக் காட்டிலும், வேறொரு அஸ்திபாரம் இட்டு, அதன்மேல் கட்டுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

பவுல் சத்தியத்தினிமித்தம் வைராக்கியமுள்ளவராய் இருந்தார். அப்படியில்லாவிடில், கள்ள அப்போஸ்தலர்கள் மிருதுவான வார்த்தைகளைப்பேசி, அவரது குணாதிசயங்களையும் தூண்டுகோலாகவைத்து, மனிதரை உண்மை சுவிசேஷத்திலிருந்து தவறாக வழிநடத்தியிருப்பார்கள். பவுல் அந்த போதகர்களைக் குறித்து அவர்களை எச்சரிக்கும்போது, தன்னை அவர்களது இருதயத்தில் மிக உயர்வாகக் கருதாதிருக்கும்படியும், மாறாக அவர்களது பாதுகாப்பாளனாக வைத்துக்கொள்ளவும், கள்ள போதகர்களது போதனைகளால் காயப்படாதபடிக்கும் எச்சரிக்கிறார். நேர்மையும் உண்மையுமான மனிதரும், போதகருமாகிய பவுலைத் தள்ளிவிட்டு, அவரிடத்தில் நம்பிக்கையை இழப்பதன்மூலம் சத்தியமாக இருந்த அவரது போதனைகளை அவர்கள் ஒதுக்கிவிட்டனர். ஆகவே, அவர் தம்மை தற்காத்துக்கொள்வதற்காக அல்ல,

சுயபுகழ்ச்சிக்காகவும் அல்ல, சத்தியத்துக்கு ஆதரவாகவே தம்மைக்குறித்து குறிப்பிடுகிறார். ஒரு உண்மை போதகராக உண்மை செய்தியை அவர்களுக்கு கொடுத்து, தகுதியோடு நடந்துகொண்டு, தம் குணாதிசயத்தையும், தன் ஊழியத்தில் வளர்ச்சிபெற பிரயாசைப்பட்டதை அவர்கள் காணவேண்டும் என்றும் முயற்சி செய்கிறார்.

மேலும் மனிதர்கள், அதே இயேசுவை அதே ஆவியை அதே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாக உரிமை பாராட்டுவர், ஆனாலும் அவர்கள் தவறான போதகர்களாயும், வஞ்சிக்கும் வேலையாட்களாகவும், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக வேஷந்தரித்துக்கொள்வார்கள் என்றும் அவர் பயப்படாமல் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அவர் கூறுகிறார் ; மனிதர்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மாபெரும் ஊழியர்களாக தற்புகழ்ச்சிக்கென தங்களை உயர்த்திக்கொள்வார்கள், இதைக்குறித்து ஆச்சரியப்படவேண்டாம் என்றார். ''அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனது வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே''

பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில், கள்ளச் சகோதரர்கள் தங்களை போலியாக வெளிப்படுத்தி சகோதரர்க்கெதிராக செயல்படுவதை பற்றி வெளியரங்கமாக எழுதியிருக்கிறார்(கலாத்1:6; 3:1). தாம் கொடுத்திருந்த சுவிசேஷ செய்தியின்மேல் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த, தம்முடைய செயல்பாடுகளை அவர்களுக்கு மீண்டும் நினைப்பூட்டுவது அவசியமாயிற்று. அவ்வாறு செய்வதற்கு, கள்ளச் சகோதரர்களை மீண்டும் சுட்டிக்காண்பிப்பது அவசியமாயிற்று(கலாத்2:4). சத்தியத்துக்கு எதிராக இருந்தபோதிலும் அவர்கள் ஒரே சரீரத்தின் அங்கங்கள் என்று உரிமை பாராட்டிக் கொள்வதன்மூலம், ஏற்கனவே தப்பித்திருந்த தேவபிள்ளைகள்மேல் தப்பறையின் அடிமைத்தனத்தை மீண்டும் ஏற்படுத்த முயற்சிப்பதை தடுக்க பவுல் முயற்சித்தார்.

**கோதுமையைப் புடைக்கிறதுபோல :–**

''கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவுபெற்றுக்கொண்டான்''– லூக்கா22:31. இங்கு ஏழாம் சபையின் தூதன் பாஸ்டர் ரஸ்ஸல் தம் அனுபவத்தைக் கூறுகிறார்; சத்தியத்தால் நாங்கள் மாபெரும் ஆசீர்வாதத்தை அடைந்திருந்தோம். ஆனால் எங்களது அன்பு மற்றும் நேர்மை இவற்றில் விசேஷமாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் கிபி1878இல் கர்த்தரது சிலுவை மரணம் நிகழும்நேரத்தில், மேற்கண்ட வசனத்தை பேதுருவுக்கு கூறினதுபோல், புடைத்தல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இது கூடியவிரைவிலோ அல்லது வருங்காலத்திலோ, தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்றவர்கள் அனைவரையும் பரீட்சிக்கும். உங்கள் நடுவில் பற்றி எரிகிற அக்கினி உங்களை சோதிக்கும்போது ஆச்சரியப்படவேண்டாம். அப்பொழுது சில விநோதமான சம்பவங்கள் உங்களுக்கு நேரிடும். இந்த அக்கினி, அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிக்கும். ஒரே அஸ்திபாரமாகிய மீட்கும்பொருளின்மேல் ஒருவன் தேவனது விலையேறப்பெற்ற சத்தியத்தைக்கொண்டு தன் விசுவாசத்தை மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளால் கட்டினால் அதற்கேற்ற கூலியைப் பெறுவான். அந்த கற்பாறையின்மேல் கட்டுபவன் பாதுகாப்பாயிருப்பான். அதேசமயம், மற்றவர்கள், முறையற்ற விசுவாசத்தைக்கொண்டு கட்டினவைகளை அக்கினி சோதிக்கும்போது இந்த நாளின் பரீட்சை அவர்களைக் கவிழ்த்து, அவர்களது விசுவாசம் முற்றிலும் எரிந்து சாம்பலாகும் – லூக் 6:47–49; 1கொரிந் 3:11–15.

இந்த பரீட்சையின் நோக்கமும், புடைத்தலும் எதற்காகவெனில், எவரது இருதய விருப்பங்கள் சுயநலமற்றதாய் உள்ளது என்றும், யாரெல்லாம் முழுமையாக தங்களுக்கென எதையும் வைத்துக்கொள்ளாமல் கர்த்தருக்கென்று அர்ப்பணித்திருக்கிறார்கள் என்றும் நிரூபிப்பதற்காகவே. யாரெல்லாம் கர்த்தரது சித்தம் செய்வதில் மிகவும் வாஞ்சையாய் உள்ளார்களோ, யாரெல்லாம் அவரது ஞானத்தின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அவருடைய வழியையும் அவரது வார்த்தையையும் யார் மகா மேன்மையாய் எண்ணுகிறார்களோ, அவர்களை பிரித்தெடுக்கவே. இவர்கள், மற்றவர்களுடைய தந்திரமான வாக்குவாதங்களுக்கும் அல்லது மற்ற மனுஷருடைய சுய தீர்மானங்களுக்கும் திட்டங்களுக்கும் செவிசாய்த்து, கர்த்தருடைய வார்த்தைகளைவிட்டு விலகி நடக்க மறுக்கிறார்களா என்று பரிசோதிக்கவே, இந்த சோதனையும் புடைத்தலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. கோதுமை மணியைப் புடைக்கும் இந்தக் காலத்தில் இவர்களது இருபக்கங்களிலும் ஆயிரம்பேர் தவறின் பிடிக்குள் விழுவதன்மூலம் இவர்களது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டபோதிலும், கர்த்தரது திட்டங்களைப்பற்றிய அறிவில் பலப்பட்டு, கர்த்தருக்குள் தங்கள் மகிழ்ச்சியை பெருக்கிக்கொள்கிறார்கள்.

சத்தியத்தின் சர்வாயுதவர்க்கம் சிலகாலம்முன்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அணிந்திருக்கிறீர்களா ? அதை உங்கள் கேடகமாகவும், பாதுகாப்புக் கவசமாகவும் ஏற்படுத்தியிருக்கிறீர்களா ? பொல்லாங்கன் எய்யும்அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போட்டிருக்கிறீர்களா ?

சாத்தான் அடிக்கடி உபயோகிக்கும் அவனது ஊழியர்களால் வஞ்சிக்கப்படாதிருங்கள். அதன்மூலமாக சத்தியத்தை தவறாக விளக்கி, வஞ்சிப்பதில் தந்திரமாய் செயல்படுவான். இதில், பலவீனமான சகோதரனைப் பயன்படுத்தி, முழு உண்மையையும் பற்றிய விழிப்போடில்லாதிருக்கும்போது, கள்ள போதனையின்மூலம் காயப்படுத்தி, அநேகரை

இடறிவிழவும், வஞ்சிக்கவும் செய்வான். ஒவ்வொரு தேவபிள்ளையும் ஆவலாய் செவிகொடுக்கும்போது, இடறுதல் ஏற்படாதபடி தடுக்கலாம்.

தீர்க்கதரிசி இதை ஒரு கொள்ளைநோய் என்று பொருத்தமாக உரைக்கிறார்(சங்91:6). கொள்ளைநோய் பரவக்கூடியது. ஏனெனில் தீங்குவிளைவிக்கும் ஜனங்களது சரீரநிலைமையில் எளிதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. சரீரஅமைப்பு நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பவர்கள் எந்த நோயின் அபாயத்திற்கும் விலகியிருக்கிறார்கள் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அவ்வாறே ஆவிக்குரிய நோயும். கிறிஸ்துவின் போதனையை தெளிவாக தங்கள் சிந்தையில் வைத்திராதோரிடத்தில் இது செழிப்பாக விருத்தியடைந்து, அந்த இரகசியத்தை எல்லோருக்கும் அம்பலமாக்குவதுடன், மற்றொரு தீங்கையும் ஏற்படுத்தும். இருதயத்தினின்றே ஜீவஊற்று புறப்படும். எல்லோருக்கும் மிக அத்தியாவசியமானது சரியான இருதயத்தின் நிலைமையே. உங்களது இருதயம் எப்படியுள்ளது ? பெருமை, தன்னை மிகைப்படுத்துதல், தனித்து இயங்குதல் மற்றும் சுயஉணர்வுள்ளதும், சுயசித்தம் கொண்டதுமாக இருக்கிறதா ? அப்படியானால், கவனமாயிருங்கள். நீங்கள் இந்த தொற்றுநோய்க்கு உட்பட்டிருக்கிறீர்கள். எந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல.

சுய உரிமையை விட்டுவிலகும் இருதயம் –
அர்ப்பணிக்கப்பட்டது, சாந்தமுள்ளது
அது மீட்பரது சிம்மாசனத்துக்குரியது
அங்கே கிறிஸ்து மட்டுமே கேட்பார், பேசுவதை
அங்கே இயேசு மட்டுமே ஆள்கிறார்

இப்படிப்பட்ட இருதயமிருந்தால் நீங்கள் பாதுகாப்புடன் இருக்கிறீர்கள். ஆதாமின்மூலமாக சுதந்தரித்துக்கொண்ட சாபத்திலிருந்து, சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ள ஆவியால் உங்களையே மீட்டுக்கொள்ள முடியும் என்று ஒருக்காலும் எண்ணாதீர்கள். மாறாக, சிலுவையினருகே ஓடுங்கள், அங்கே கடந்தகால மற்றும் தற்காலத்து பாவம் மற்றும் அசுத்தங்களை கழுவ, தேவன்தாமே நீர்ச்சுனையை திறந்து வைத்திருக்கிறார்.

**உங்களுக்கு இது காயத்தை ஏற்படுத்துகிறதா ?**

இந்த எச்சரிப்பு யாரையும் திட்டமிட்டு காயப்படுத்தும்படி உண்டாக்கப்படாதபோதிலும், சிலருக்கு காயத்தை ஏற்படுத்தும் என்று அனுமானிக்கிறோம். தீமையின் ஏமாற்றுவாதத்துக்கு எதிராக, சாந்தகுணமுள்ளோருக்கு ஆதரவாக எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் இதோ;

‘‘யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான் ?(இராஜ்யத்தில் வைக்கப்பட்டுள்ள பரிசு) அல்லது யார் அவரது பரிசுத்தஸ்தலத்தில் நிலைத்திருப்பான் ?

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து(ஜாக்கிரதையாய் பரிசுத்தத்தின் கொள்கைகளில் தன் ஜீவியத்தை அமைத்துக்கொண்டவன்) தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும்(பூமிக்குரிய குறிக்கோள்களை அல்லது பெருமையை வளர்த்துக்கொள்ளாமல், தற்கால வாழ்க்கையில் சுயத்தை பலிசெலுத்தி, தன்னை பின்தொடர்கிற மகிமைக்காக பொறுமையோடே காத்திருந்து) கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே(தேவனோடு செய்த தன் உடன்படிக்கையை புறக்கணித்து அல்லது அலட்சியப்படுத்துதல்) அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும்(இராஜ்யத்தின் மகிமை மற்றும் கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரர்), தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும்பெறுவான்(பரிபூரணமடைதல் – தற்கால அக்கிரமங்களிலிருந்து முழு விடுதலை ...போன்றவை)– சங் 24:3–5.

கிறிஸ்துவிடமிருந்த எளிமையினால் உங்கள் சிந்தை கரைப்படாதபடிக்கு, நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள்‘‘ சாந்தகுணமுடையோர் அனைவரும் இவ்வேளைக்கே உரிய சோதனையில் முழு விழிப்பாய் இருப்பர். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ‘‘பாதம்’’ நடக்கும் வழியில் அநேகர் இடறுதலின் தடுக்கல்லை போடுவார்கள். ஆகவே, சிலுவை போர்வீரர் ஒவ்வொருவரும் விழிப்பாயிருப்போம், நாம் நிலைநிற்பதோடுகூட, மற்றவர்களுக்கும் உதவிசெய்து, பாதஅங்கங்களைத் தாங்குவோமாக – சங் 91:11,12.

# ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு

கிட்டத்தட்ட எல்லாக் கேள்விகளுக்குமே இரண்டு பக்கங்கள் காணப்படும் மற்றும் ஸ்திரீ தொடர்பான கேள்வியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஸ்திரீகளுக்கென்று உரிமைகள் இருக்கின்றது மற்றும் புருஷர்களுக்கென்று உரிமைகள் இருக்கின்றது; மேலும் ஒவ்வொரு சிருஷ்டியும், அதன் அறிவிற்கேற்ப சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றது மற்றும் அது மதிக்கப்படுவது நீதியாய் இருக்கும். எனினும் தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழ் வெகு சில புருஷர்களும், ஸ்திரீகளும் அல்லது விலங்குகளும் தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொண்டவர்களாக அல்லது பெற்றுக்கொள்ள முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்பதும் உண்மையே. மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதான ஆதி சாயலினை எந்தளவுக்கு ஒருவர் தக்கவைத்திருக்கின்றாரோ, அவ்வளவாய் அவர்கள் மற்றவர்களுக்கு அவர்களது உரிமைகளை அளிப்பதிலும் மற்றும் தங்கள் சொந்த உரிமைகளை உணர்ந்துகொள்திலும் நிச்சயம் பிரியப்படுகிறவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் அந்தோ பரிதாபம்! அனைவருமே அந்தப் பூரண சாயலிலிருந்து, சிருஷ்டிகருடைய அந்தப் பூரண ரூபத்திலிருந்து விழுந்துபோயுள்ளனர். ஆகையால் சந்ததியினுடைய ஒவ்வொரு அங்கத்தினனிடமும் கொஞ்சம் சுயநலமும், மனதின் பல்வேறு நல்ல மற்றும் கெட்டத் தன்மைகளும், பல்வேறு அளவுகளில் காணப்படுவதினால், இனம் முழுவதுமே தெளிந்த மனமில்லாதவர்கள் என்றும், சீரான நிலைமையில் இல்லாதவர்கள் என்றும், அநீதியானவர்களாய்க் காணப்படுகின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது மற்றும் உலகத்தின் ஆவியானது பொதுவாகவே நீதி, நியாயத்திற்கு முரண்படுகின்றதாகவும் இருக்கின்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, சண்டை, பெருமை, பேராசை முதலானவைகள் தெளிவான பகுத்தறிவிற்கு இடர்பாடுகளாய்க் காணப்படுகின்றன. இவைகளைக் கூறுகின்றதான தேவனுடைய வார்த்தைகளானது, நாம் பரத்திலிருந்து வரும் ஞானத்தினையும், கர்த்தருடைய சிந்தையையும் நாடும்படிக்குப் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது - நம்முடைய சுபாவ மனங்களும், மனவிருப்பங்களும், தன்னம்பிக்கைகளும் அழிக்கப்பட்டு, வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான திவ்விய நிலைப்பாடுகளுக்கு ஏற்ப நம்முடைய கண்ணோட்டங்கள் நெறிமுறைப்படுத்துவதன் மூலம் அடையப்பெறலாம் என்றும் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் நாம் நாடிட வேண்டிய காரியமானது, ஒவ்வொரு விஷயத்திலும் சிந்தையில் உயர்வான கிறிஸ்தவ நிலைப்பாடேயாகும் மற்றும் கர்த்தருடைய பின்னடியார்கள் யாவராலும் கர்த்தருடைய சிந்தையானது, கர்த்தருடைய வார்த்தையானது, அந்தத் தரநிலையாக/நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

நாம் உலகத்தாரை நோக்கிப்பார்க்கையில், யாருமே நடைமுறையில் பார்க்கையில் தனது உரிமைகளைப் பெற்றிருப்பதில்லை - நிச்சயமாகவே யாரும் தனது உரிமைகள், தனக்கு உரியது என்று கருதுபவைகளைப் பெற்றுக்கொள்கிறதில்லை - தேவனுடைய தயவினாலும், இரத்தத்தினாலும் மூழ்க்கடிக்கப்பட்டிருக்கும் மிகவும் தாழ்மையான மனம் கொண்டிருப்பவர்கள், எல்லாவிதத்திலும் தங்கள் தகுதிக்கும் மிக அதிகமாகவே தாங்கள் கர்த்தரிடத்திலிருந்து ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதாகவும், தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறிடுவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றனர். இவர்கள் நன்றியுணர்விலும் மற்றும் இதற்கேற்ப மகிழ்ச்சியாயும் காணப்படுகின்றார்கள். நன்றியற்றவர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களாகவும் காணப்படுகின்ற மற்றவர்களோ, மனுக்குலத்தின் உலக ஜனங்களாகக் காணப்படுகின்றனர் - இவர்களில் பெரும்பாலானவர்கள், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

தம்முடைய பின்னடியார்கள் தங்களது பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் முழுமையாய் "பலிச் செலுத்தும்படி" கர்த்தர் வலியுறுத்தி மற்றும் அது தமக்கும் மற்றும் தாம் முன்வைக்கும் பிரமாணங்களுக்குமான அவர்களது அர்ப்பணிப்புக்குறித்த சாட்சியாக தம்முடைய பார்வைக்குப் பிரியமாய்க் காணப்படும் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தியும், அது அவர்களுக்குத் தற்கால ஜீவியத்திற்கு நலம் பயக்கின்றதாகவும், அவர்களுக்கு நித்தியமும் நன்மைப் பயக்கின்றதாகவும் காணப்படும் என்று உறுதிப்படுத்தியும் காணப்படுகின்றார். ஆகையால் கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும், சுபாவ புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் என்ற

தங்களது உரிமைகளானது தங்களால் கவனிக்கப்படுவதில்லை என்றும், அதற்காக உரிமைப்பாராட்டப்படுவதில்லை என்றும், அதற்காக நாடப்படுவதில்லை என்றும், அதற்காக போராடப்படுவதில்லை என்றும், இதற்குப் பதிலாக புதிய நம்பிக்கைகளும், புதிய குறிக்கோள்களுமுள்ள புதிய சுபாவத்தினை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்றுமுள்ள ஓர் உடன்படிக்கையினைப் பண்ணியுள்ளனர்; இந்தப் புதிய சுபாவத்தின் உரிமைகளும், கனங்களும், சிலாக்கியங்களும், மேன்மைகளும் - முழுமையாக முதலாம் உயிர்த்தெழுதலில் வரும்போது, நிறைவானது வருகையில், குறைவானது ஒழிந்துபோகிறபோது, அவர்கள் தங்கள் கர்த்தரோடுகூட மகிமைப்படும்போது அவர்களுக்குக் கடந்துவருகின்றதாய் இருக்கும்.

## எங்கள் அனுதாபங்களும், ஆலோசனைகளும்

இந்தப் பத்திரிக்கையின் இதழாசிரியர் போன்று வெகு சிலரே, புதுச்சிருஷ்டிகள் மற்றவர்களுடன் தொடர்புக்குள் வருகையில் எதிர்க்கொள்ளும் சிரமங்கள் சிலவற்றை அறிந்துகொள்ளும் நல்வாய்ப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு வரும் ஜீவியத்தின் கடுமையான சோதனைகள் மற்றும் பிரச்சனைகள் எப்படி நன்கு எதிர்க்கொள்ளப்படுவது குறித்து ஆலோசனைகளைக் கேட்டும், சூழ்நிலைகளை விவரித்தும் எழுதப்படும் கடிதங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்கின்றவராக இதழாசிரியர் இருக்கின்றார். மற்றவர்களைக் காட்டிலும் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களுடன் அதிகமான தொடர்பு காணப்படுவதினால், அநேகமாக தவிக்கும் சிருஷ்டியாகிய சுபாவ மனுஷர்களுக்காக மாத்திரமல்லாமல், புதுச்சிருஷ்டிகளுக்காகவும் அனுதாபம் கொள்வதற்குரிய நல்வாய்ப்புப் பெற்றவராய் இருக்கின்றார். ஆகையால் புருஷர்களுக்கு அவர்களது மனைவிகளினால் அநியாயம் எப்போதும் செய்யப்படுகிறதில்லை என்றாலும், மனைவிகளுக்கு, அவர்களது புருஷர்களால் அடிக்கடி அநியாயம் செய்யப்படுவதைக்குறித்து அவர் நன்கு அறிந்தவராகவே இருக்கின்றார். இப்படியாக அநியாயமாய் நடத்தப்படுகிறவர்களுக்கு, வேதவாக்கியங்களின் பாஷையிலான அவரது பொதுவான அறிவுரை என்னவெனில் . . . "இப்படியிருக்க சகோதரரே கர்த்தர் வருமளவும் - அவரது நீதியின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அவரது மகிமையான சாயலுக்கு ஒத்த சாயலுக்கு மாறுவது சமீபித்திருப்பதினால் - நீடிய பொறுமையாயிருங்கள்" என்பதே ஆகும் (யாக்கோபு 5:7).

சாந்தமாய்க் காணப்பட்டும், நட்புமுறையில் அறிவுரைக்கூறியும், அன்பாய்ப் பொறுமையாய் இருந்த பிற்பாடு, நிலவரமானது தாங்கமுடிகிறதாய் இருக்கும் பட்சத்தில், கர்த்தரிடம் ஞானமும், தேவையான கிருபையும் கேட்டுக்கொண்டு, அதைச் சகித்துக்கொள்ளுங்கள். இருளினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவித்திட நாடிடுங்கள்; நம்மிடத்தில் ஐசுவரியமாய் வாசம்செய்யும் கிறிஸ்துவினுடைய ஆவியின் வல்லமையினை, அன்பின், தயவின், பொறுமையின், நீடிய பொறுமையின் மற்றும் சகிப்புத்தன்மையின் வாயிலாக உங்களது துணையாளனுக்கு வெளிப்படுத்திட நாடிடுங்கள்; முடிந்தமட்டும் மற்றவர்களின் வார்த்தை மற்றும் செயல்களினால் அதிருப்திக்கொள்ளாமல், பாரம் சுமக்கும் மாபெரியவராகிய கர்த்தரிடம் போவதற்கு அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளுங்கள். "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3); காலம் குறைவாய்க் காணப்படுகின்றது என்று நினைவில்கொண்டு, தீமைக்குத் தீமைச் செய்யாமலும், உதாசனத்துக்கு உதாசனத்தைச் சரிக்கட்டாமலும், தூற்றுதலுக்குப் பதில் பழித்தூற்றாமலும், பட்டயத்திற்குப் பட்டயம் எடுக்காமலும் இருக்கும்படிக்குக் கூறும் வேதவாக்கியங்களின் புத்திமதிக்குச் செவிக்கொடுத்து, ஜீவியத்தின் பரீட்சைகளின் போது கர்த்தர் பொறுப்பேற்றிருக்கின்றார் என்றும், ஜீவியத்தின் பரீட்சைகளானது நம் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதத்தினை - அதாவது இதைப் பெற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதய நிலைமையில் நாம் காணப்படும் பட்சத்தில், ஆசீர்வாதத்தினை நமக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கும் என்றுமுள்ள உணர்ந்துகொள்ளுதலில், ஜீவியத்தின் பரீட்சைகளில் நம்மை முழுமையாய்க் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க நாடுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும்.

"இவ்வுலகத்தின் அதிபதியின்கீழ்த்" தனக்கான உரிமைகளை விழுந்துபோன மற்றும் குருடாக்கப்பட்டுள்ள தன்னுடைய அயலார்களிடம் நாடிடும் மற்றும் எதிர்ப்பார்த்திடும் ஒவ்வொரு

தேவபிள்ளையும், இது விஷயத்தில் நிச்சயமாகவே இருளிலே நடக்கிறவனாகவே இருப்பான். கர்த்தருடைய ஜனங்கள் "அவரால் கற்பிக்கப்படுகையில்," தங்களது உரிமைகளுக்காக நாடவோ, அவைகளை எதிர்ப்பார்க்கவோ கூடாது என்றும், அநீதி செய்கிறவர்களிடத்தில் பொறுமையோடும், நீடிய பொறுமையோடும் மற்றும் இரக்கத்தோடும் காணப்படுவதற்கும் சீக்கிரமாய்க் கற்றுக்கொள்வார்கள். தாங்கள் கொடுமைப்படுத்தப்படாத மற்றப் பாதைகளை நாடியும் மற்றும் தங்களைத் துன்புறுத்தி மற்றும் அநியாயமாய் நடத்துபவர்களிடமிருந்து தங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப ஓடிப்போகிறதுமாய் இருக்க, அவர்கள் தங்கள் சத்துருக்களை அன்புகூர்ந்திடுவதற்குக் கற்றுக்கொள்வது மாத்திரமல்லாமல், தங்களால் முடிந்த நன்மை யாவற்றையும் அவர்களுக்குச் செய்திடவும் மற்றும் உலகத்தாரிடம் காணப்படுகின்றதான பெரும்பான்மையான சுயநலமும், கீழ்த்தரமான செய்கைகளும் மற்றும் கொடுமைகளும் விழுகையின் விளைவான பாவம் மற்றும் அறியாமையின் விளைவுகளேயாகும் என்று அனுதாபத்தோடுகூட உணர்ந்துகொள்வதற்கும் கற்றுக்கொள்வார்கள். இதற்கேற்ப அவர்கள் "உங்களுடைய இராஜ்யம் வருவதாக, பூமியிலே உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று ஏங்குபவர்களாகவும், ஜெபிப்பவர்களாகவும் காணப்படுவார்கள் மற்றும் இப்படியாக அவர்களது தற்காலத்துச் சோதனைகளும், கஷ்டங்களும், வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் மீது ஆழமான ஆர்வத்தை ஏற்படுத்துகின்றதாயிருக்கும் மற்றும் அவர்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், மிக அதிகமான நித்திய கனமகிமையை அடைவதற்கும் உதவுகின்றதாயிருக்கும்.

## சபையில் ஸ்திரீகள் செயல்படும் எல்லை

சரி எது, தவறு எது என்பது குறித்துக் குரல் எழுப்புவதில் புருஷர்களும், ஸ்திரீகளும் அதிகமதிகம் ஆர்வம் காட்டிடும் இக்காலக்கட்டத்தில் மற்றும் சுதந்தரத்திற்கான ஒவ்வொரு கட்டுப்பாட்டிற்கும் எதிர்ப்புத்தெரிவிக்கப்படுகின்ற இக்காலக்கட்டத்தில், இது விஷயத்தில் கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் நேர்மையாய் இருப்பவர் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவதற்கு - அதாவது சுதந்தரத்திற்கும், உரிமைகளுக்கும் எதிர்ப்பவராகவும், தவறுகளை ஆதரிப்பவராகவும் புரிந்துகொள்ளப்படுவதற்கு மிகுந்த அபாயம் காணப்படுகின்றது. இப்படியாக பொது ஸ்தானங்களில் காணப்படுகின்றதான தேவனுடைய ஊழியக்காரனின் நேர்மைக்கான பரீட்சையானது அவன்மேல் திணிக்கப்படுகின்றது மற்றும் "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்." இம்மாதிரியான ஸ்தானத்தில்தான் இப்பத்திரிக்கையின் இதழாசிரியர்கூடக் காணப்படுகின்றார் மற்றும் இவரும் ஆண்டவருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் முழுமையாய் நேர்மையுடன் காணப்பட விரும்புகின்றார். இப்படிச் செய்வதினால் இவர் ஸ்திரீகளுக்கு எதிரானவர் என்றும், இப்பாலினரை அவமதிப்போர் மற்றும் இழிவுப்படுத்துவோர் பக்கத்தில் காணப்படுபவர் என்றும் சிலரால் கருதப்படுகிறதற்கு ஏதுவாயிற்று. இது மிகவும் உண்மையற்றதும் மற்றும் எல்லா விதத்திலும் அநியாயமானதுமாகும்.

உண்மையுள்ள இருதயமுடைய மற்றும் உயர் சிந்தையுடைய ஒவ்வொரு மனுஷனும், எதிர்ப்பாலினரை, அதுவும் உண்மையான பெண்மைக்குரிய நற்பண்புகளுடன், தாலந்துகளும், வரங்களும் மற்றும் பரந்த மனப்பான்மையும், திறமைகளும் விசேஷமாய்க் காணப்படும் பட்சத்தில், நிச்சயமாகவே உயர்வாய் மதிக்கிறவனாய் இருப்பான். இம்மாதிரியான நிலைமைகளில் உயர்பண்புள்ள மனுஷனானவன், கிறிஸ்துவுக்குள்ளான அச்சகோதரிகளைச் சபையில் மிகவும் முதன்மையான நிலைக்குக் கொண்டுவந்திடுவதற்கு முற்படுவது அவனது இயல்பாய் இருக்கும். மேலும் இதற்கு ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படுகையில், இது - கர்த்தருடைய வார்த்தையிலிருந்து (இதுவிஷயமான) அவரது சத்தம் தெளிவாய்க் கேட்கப்படுவதற்கு முன்பு வரையிலும், மறுப்புத் தெரிவித்தவர்கள் சார்பில் குறுகின மனப்பான்மை காணப்படுகின்றதென சந்தேகங்களானது புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் இருவரின் மத்தியில் எழுப்புகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய சத்தம் கேட்கையில், உண்மையான ஆடுகள் அனைத்தும், மாபெரும் மேய்ப்பனின் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, இவ்விஷயம் தொடர்பான தங்களது சொந்த சித்தங்கள் மற்றும் எண்ணங்களைத் துறந்து, அவரது செய்தியை ஏற்றுக்கொள்கின்றது; "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, எனக்குப் பின்செல்லுகின்றது; அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்கிறதில்லை."

இந்த ஒரு நிலைப்பாட்டினைத்தான் இதழாசிரியர் மில்லேனியேல் டாண், வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் எடுத்துக்கொள்கிறதற்குக் கடமைப்பட்டுக் காணப்பட்டார்.

பொறுமையாயும் மற்றும் குறிப்பாயும் அவர் அதில் தனது சொந்த கருத்துக்களை முன்வைத்திடாமல், மாறாக அவர் அதில் முன்வைத்துள்ளவைகளானது, அநேக விதங்களில் அவரது சொந்த நிலைப்பாட்டிற்கு நேர்மாறானவைகளாகவே காணப்படுகின்றது. இந்த விஷயத்தில் அவர் தனது சித்தத்தினைக் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்து, தேவனுடைய பிரியமான குமாரனால், அவரது விசேஷமாய் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் வாயிலாகச் சபைக்குக் கொடுத்திட்டதான செய்தியினை, அவர் கர்த்தருடைய வாய்க்கருவியெனத் திரும்பக் கூற மாத்திரம் செய்தார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று தம்முடைய குமாரன் குறித்தப் பிதாவின் செய்தியைக்கேட்ட இதழாசிரியர், "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று தம்முடைய அப்போஸ்தலர்கள் குறித்துக் குமாரன் கூறிடும், குமாரனின் சத்தத்திற்கும் இதழாசிரியர் செவிக்கொடுத்தார் (மத்தேயு 18:18). வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில், அப்போஸ்தலர்களின் போதனைகளானது, தேவனுடைய குமாரனால் நேரிடையாய் ஏவப்பட்டுப் பேசப்பட்ட வார்த்தைகளாக - பிதாவின் வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்படிக்கு சபைக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சபையில் ஸ்திரீகளினுடைய ஸ்தானம் குறித்து அப்போஸ்தலன் நம்மிடம் பேசுகையில், அவரது வார்த்தைகளை எதிர்த்து வாதாடுவதற்கோ, அதைக்குறித்து வாக்குவாதம்பண்ணிடுவதற்கோ, அதைப் புறக்கணிப்பதற்கோ நமக்கு அனுமதியில்லை. இப்படிச் செய்கிற எவரும் ஆவியினுடைய சத்தத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்பட்டு, ஏதோ விதத்தில் நிச்சயமாய்ப் பின்விளைவை எதிர்க்கொள்பவர்களாய்க் காணப்படுவார்கள்.

இது விஷயத்தில் எங்களுடைய எந்தச் சொந்த போதனையையும் நாங்கள் முன்வைக்கவில்லை. நாங்கள் கர்த்தருடைய அப்போஸ்தலர்கள் வாயிலாக, அவரது சத்தத்தைக் கேட்டுள்ளபடியால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள சகோதரிகளின் ஸ்தானம் தொடர்பாக அவர்கள் மிகவும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டியுள்ளவைகளை நாங்கள் கவனத்திற்குக் கொண்டுவர மாத்திரமே செய்துள்ளோம். பொதுவில் செய்யப்படும் ஊழியங்களும், போதிக்கும் ஊழியங்களும் சகோதரிகளுக்கு அருளப்படாமல், மாறாக அவைகள் குறிப்பாய் அவர்களுக்குத் தடுத்துவைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கையில், கிறிஸ்துவின் சரீரத்தில் சகோதரிகளின் ஊழியங்களானது முக்கியமில்லாத ஒன்று என்று எந்த விதத்திலும் நாங்கள் சொல்லிடவில்லை. மாறாக அவர்கள் சபையில் மிகவும் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்றும், நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவான மிகவும் பரந்த செல்வாக்கினை - கணக்கிடமுடியாத செல்வாக்கினைத் திறமையாகப் பயன்படுத்த முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்றும், அந்தச் செல்வாக்கானது திவ்விய வார்த்தைகளுக்கு இசைவாகவே ஒழிய, முரணாக பயன்படுத்தப்படாதபடிக்கு, அந்தச் செல்வாக்கிற்குப் பொறுப்பாளிகளாகக் காணப்படுவது, அவர்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது என்றும் நாங்கள் எண்ணுகின்றோம். திவ்விய ஒழுங்கில் சபையிலுள்ள ஆண்கள் தலையாகிய கர்த்தருக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் ஸ்திரீகள் மணவாட்டியாகிய சபைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர்.

இதுவே உண்மையுள்ள கீழ்ப்படிதலுக்கான வழிமுறையாகும்; மற்றும் "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே" - அதாவது கீழ்ப்படியாமல் பொது ஊழியங்களில் கடுமையாய் உழைப்பதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே - தேவனுடைய பார்வையில் மேன்மையாய்க் காணப்பட்டது என்ற வேதவாக்கியத்தையும் நாம் நினைவுகூருகின்றோம். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகிய சகோதரர்களும், சகோதரிகளும், யாவரும் இது விஷயமாக டாண் தொகுதி 6-இல் இடம்பெறும் ஐந்தாம் அத்தியாயத்தை மறுபடியுமாக மிக ஜாக்கிரதையாக வாசிப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். இவ்விஷயமானது இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், அவரது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்குப் பரீட்சையின் ஒரு பாகமாகக் காணப்படத்தக்கதாக கர்த்தர் சித்தம் கொண்டுள்ளார் என்று நாங்கள் நம்புகின்றோம். இவ்விஷயத்தில் நமது சொந்த எண்ணங்களும், இது விஷயமாக மற்றவர்களிடத்திலான நம்முடைய வார்த்தைகளும், செல்வாக்கும், நம்மால் முடிந்தமட்டும் கர்த்தருடைய சிந்தையின்படியாக, அவரது வார்த்தைகள் போதிப்பவைகளுக்கு முழு இசைவாகக் காணப்படும்படிக்குத் தீர்மானித்துக்கொள்வோமாக. "இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20).

## குழப்பமான போலிவாதங்களைத் தெளிவாக்குதல்

பரப்பப்படுகின்ற வஞ்சகமான போலிவாதங்கள் சிலவற்றை நாம் இங்குத் தெளிவுப்படுத்திடுவது தகுதியாய் இருக்கும் - இப்படியாக இது விஷயத்தில் கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் சரியான நிலைப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள நாம் உதவிட முடியும். இந்தப் போலிவாதங்களின் ஓர் அம்சம் என்னவெனில், கொரிந்துவிலுள்ள சபைக்கு அப்போஸ்தலனால் எழுதப்பட்டவைகளானது, அந்தத் தலைமை நகரத்தின் ஸ்திரீகளினுடைய தரக்குறைவின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது என்றும், அவர் மற்றச் சபைகளுக்கு இதே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்க மாட்டார் என்றும், சபைக்கடுத்தப் பொது ஊழியங்களில் இதேபோல சகோதரிகளுக்கான உரிமைகளின் கட்டுப்பாட்டினை மற்றச் சபைகளுக்குச் சொல்லியிருக்கமாட்டார் என்றும், இதனால் அவரது வார்த்தைகளானது, தற்காலத்திற்குப் பொருந்துகிறதில்லை என்றுமாகும். இது போலி வாதமாகும், தவறான நியாயமாகும். கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களானது, அந்நாட்களிலுள்ள ஒழுக்கமில்லாத ஆண்களுக்கோ, பெண்களுக்கோ என்று எழுதப்படாமல், ஆண்களும், பெண்களுமாகக் காணப்பட்ட கொரிந்து பட்டணத்தின் பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டது; மேலும் கொரிந்துவிலுள்ள ஒரு பரிசுத்தவான் என்பவர், எந்த ஓர் இடத்திலும் காணப்படும் ஒரு பரிசுத்தவான் போன்றவரேயாவார்; அதாவது பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குத் திரும்பி, இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவர் என்பவர்தான் பரிசுத்தவான்.

ஸ்திரீகளுக்கான செயல்பாடு எல்லை குறித்ததான அப்போஸ்தலனின் கட்டுப்பாடானது, மறுபக்க தரப்பினராலேயே ஏற்பட்டது என்பதாகத் தெரிகின்றது - அதாவது கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையார், மற்றச் சபையாரைக் காட்டிலும் தங்களை உயர்வானவர்களாக எண்ணி, மற்றச் சபைகள் சிந்தித்துக்கூடப் பார்க்காத உரிமைகளை இவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்குப் பெற்றுக்கொடுக்க விரும்பிட்டார்கள். ஆகையால்தான் பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு கேட்டதாவது, "வேதவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? [நீங்களாக அதை உண்டாக்கினீர்கள்? கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களைச் சுவிசேஷத்தின் விளக்கமளிப்பவர்கள் என்று நாங்கள் பார்க்க வேண்டுமா?] அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? [மற்றவர்கள் பெற்றுக்கொண்டது போல்தானே நீங்களும் சுவிசேஷத்தினைப் பெற்றுக்கொண்டீர்கள்? அதைத் தோற்றுவித்தவர்கள் நீங்களல்ல என்று ஒத்துக்கொள்கின்றீர்களா? அதன் ஒழுங்குகளில், கூடச் சேர்ப்பதற்கோ அல்லது அதை மாற்றிடுவதற்கோ உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இவ்விஷயத்தினை நீங்கள் அதன் சரியான வெளிச்சத்தில் பார்க்கையில் தேவனுடைய கிருபையைப் பற்றின செய்தியினை, அவர் அனுப்பின வழியில் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் உங்கள் நடுவில் காணப்படுகின்றதான முன்னுரிமைப் பற்றி நீங்கள் ஊகித்திடும் சில போதனைகளுக்குப் பொருந்தத்தக்கதாக அச்செய்தியினைத் திருத்தம் செய்யும் எண்ணம் ஏதும் இல்லாமல், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்] (1 கொரிந்தியர் 14:36). "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமானது" மாறுபடும் தன்மையுடையதல்ல, மாற்ற முடியாத ஒன்றாகும். ஆகையாலே "ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலிப்பியர் 3:16) என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார்.

---

R 3831

# "பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட்ட சம்பாஷணைகள்"

## லூக்கா 14:1-14

"தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."

ஓய்வுநாள் என்பது யூதர்கள் மத்தியில் காணப்பட்ட விருந்தின் நாளாக இருந்தது; எனினும் நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டவைகளுக்கு இணங்க, உணவுகள் முந்தின நாளே சமைக்கப்பட்டு, ஓய்வுநாளில் சூடு இல்லாமல் குளிர்ந்துப் போன ஆகாரமாகவே பரிமாறப்படுகின்றது. இப்படியான ஓய்வுநாளின் விருந்து உபசரிப்புகளுக்கு, கர்த்தர் எவ்விதமான மறுப்பும் தெரிவித்ததில்லை, ஏனெனில், அவரே பல தருணங்களில் இப்படியான விருந்துகளில் கலந்துக் கொண்டவராகக் காணப்படுகின்றார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக பெத்தானியாவில் நடைப்பெற்ற விருந்தானது, ஓய்வுநாளில் இடம்பெற்ற ஒன்றாகவே இருந்தது; இப்படியாகவே நம்முடைய இப்பாடத்தில் நாம் பார்க்கின்ற விருந்துங்கூட, ஓய்வுநாளிலேயே நிகழ்ந்த ஒன்றாக இருக்கின்றது. மிக முக்கியமான பரிசேயனும், அதிகாரிகளில் ஒருவரிடமிருந்தே இந்த அழைப்பு வந்தது. இந்த அழைப்பானது இயேசுவுக்கும், அவருடைய சீஷர்களுக்கும், அந்தப் பரிசேயனுடைய மிக முக்கியமான நண்பர்களாகிய அநேக பரிசேயர்களுக்கும், நியாயசாஸ்திரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

இயேசுவைப் பற்றின கீர்த்திப் பரவிக்கிடந்தது, மேலும் அவருடைய குணலட்சணம், போதனைகள் மற்றும் அற்புதங்கள் தொடர்புடைய விஷயத்தில், அவரைத் தங்களுடைய சொந்த கணிப்பின்படி கணிக்கத்தக்கதாக, அவருடன் நெருங்கி வருவதற்கான இந்த வாய்ப்பில் இந்த மனுஷர்கள் (மற்றப் பரிசேயர்களும், நியாயசாஸ்திரிகளும்) ஆர்வமாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை; அதாவது இயேசு மதத்தில் வைராக்கியம் கொண்டவரா அல்லது இல்லையா என்றும், அவர் தம்மைத்தாமே பெருமைப்படுத்திப் பேசுகிறவரா (அ) இல்லையா என்றும், ஏன் அவரிடத்தில் பொதுஜனங்கள் மிகவும் ஈர்க்கப்படுகின்றனர் என்றும், ஏன் அவர் ஐசுவரியவான்கள் மற்றும் செல்வாக்கு மிகுந்தவர்களிடத்திலும் ஐக்கியம் வைத்துக்கொள்ள விசேஷமாய் நாடவில்லை என்றும் கணிக்கத்தக்கதாக, அவருடன் நெருங்கி வருவதற்கான இந்த விருந்தில் கிடைக்கும் இந்த வாய்ப்பில், இந்த மனுஷர்கள் ஆர்வமாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இயேசு ஐசுவரியவான்கள் மற்றும் செல்வாக்கு மிகுந்தவர்களிடம் ஐக்கியம் வைத்தக்கொள்ளவில்லை என்றாலும், நாம் அறிந்தது வரையிலும், இயேசு ஒருபோதும் விருந்திற்கான அழைப்பை மறுக்காமல், இம்மாதிரியான தருணங்களை, சத்தியத்தை முன்வைப்பதற்கும், பரலோகத்தில் உள்ள பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், தம்முடன் தொடர்புக்குள் வருபவர்கள் நன்மை அடைவதற்கும், போதிக்கப்படுவதற்கும், உதவப்படுவதற்கும் என எப்போதும் பயன்படுத்தினார்.

விருந்தாளிகள் அவரை அன்புடன்/அனுதாபத்துடன் பார்ப்பதற்குப் பதிலாக, குற்றம் காணத்தக்கதாக கவனித்தார்கள். நல்லப் பண்புகளைப் பார்ப்பதற்குப் பதிலாக, குற்றம் தேடினார்கள். ஆனால் மற்றவர்களைப் போன்று அவரிடத்தில், இவர்களால் குறை ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அநேகமாக தற்செயலாக, அல்லது அநேகமாக திட்டமிட்டபடி, இவர்களுடன் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் காணப்பட்டான். இம்மனுஷன் அவ்வீட்டாரின் (அ) குடும்பத்தாரின் ஓர் அங்கமாக இருக்கலாம்; வியாதியுள்ள இந்த மனுஷனைச் சொஸ்தப்படுத்தத்தக்கதாக வேண்டிக்கொள்ளும் நோக்கத்தில் கூட நமது கர்த்தர், இங்கு அநேகமாக வரவேற்கப்பட்டிருக்கலாம்.

நமது கர்த்தர் வியாதியஸ்தர் மீது அனுதாபத்தின் உணர்வை விசேஷமாய்க் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது; அவர் உடனடியாக நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷனைக் கண்டார். பரிசேயர்கள் கூட மற்றவர்களைப் போன்று அற்புதத்தைக் காண ஆர்வத்தில் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இன்னுமாக ஓய்வுநாளில் இப்படியாக ஓர் அற்புதம் நிகழ்த்தப்படுவது என்பது, இவர்களுடைய சடங்காச்சாரத்தின்படி தவறான செயலாக இருந்தது. நமது கர்த்தர் இவ்விஷயத்தைக் கையாளுவதற்கு ஆர்வமாய் இருந்தது என்பது, தெளிவாகத் தெரிகின்றது. அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவரிடமும், சூழ்ந்து இருக்கும் விருந்துக்கு அழைக்கப்பட்ட மற்றப்

பரிசேயர்களாகிய கல்விமான்களிடமும், ஓய்வுநாளில் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்துவது நியாயமானதா (அ) இல்லையா என்று முதலாவதாகக் கேள்விக் கேட்டார். இப்படியான கேள்விகள் எந்த நேரத்திலும், ஜனங்களால் கேட்கப்படும்போது, அவைகளுக்குப் பதிலளிக்க நியாயசாஸ்திரிகள் வல்லவர்களாகவும், விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தனர்; எனினும் மாபெரும் போதகருக்கு முன்னதாக இவர்கள் அமைதிக் காத்துக்கொண்டனர்; இவர்கள் பதில் சொல்லவில்லை; அவர் என்ன முடிவு எடுத்து, செயல்படப் போகின்றார் என்பதைப் பார்க்கவேண்டும் என்றிருந்தார்கள். அவரைக் குறுக்கிட, அவர்கள் விரும்பவில்லை; இவ்விஷயத்தில் அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்கள். ஓய்வுநாளில் சொஸ்தப்படுத்தக் கூடாது என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்ட எந்தக் காரியமும் நியாயப்பிரமாணத்தில் இல்லை; நமது கர்த்தர் அற்புதத்தை நிகழ்த்தினார். "அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி அனுப்பிவிட்டார்." இவ்வார்த்தைகளானது, ஏதோ ஒரு விதத்தில் நமது கர்த்தர் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்தினார் என்றும், இவ்விதமாக அவர் மூலமான தெய்வீக வல்லமையினாலேயே அற்புதம் நிகழ்ந்தது என்றும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## "வாய்ப்பேசா விலங்குகளுக்கு உதவி செய்திடுவார்கள்"

அற்புதத்தை நிகழ்த்தின பிற்பாடு, நியாயப்பிரமாணமானது ஓய்வுநாளில் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்த தடைப்பண்ணுவதில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு, நமது கர்த்தர், தாம் செய்ததைக் கூட்டத்தாருக்கு முன்னதாக நியாயப்படுத்தும் வண்ணமாக, "அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ" என்று வினவினார் (லூக்கா 14:5). இக்கேள்விக்குப் பதிலளிக்கப்பட முடியவில்லை. தங்களுடைய சொந்த தேவை/நன்மை/அவசியம் என்றால், ஓய்வுநாளில் உதவி அளிப்பதற்குத் தடைப்பண்ணும் வண்ணமாய், நியாயப்பிரமாணத்தில் ஒன்றும் இல்லை என்ற முடிவுக்குத் தாங்கள் வருவார்கள் என்பது இவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.. இப்படியாக ஓய்வுநாளில் மனுக்குலத்தைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் இவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள்/கருத்துக்கள் தவறானது என்றும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காதது என்றும் தெளிவாக நம்முடைய கர்த்தர் காட்டிக்கொடுத்தார்.

சீனாய் மலையில் நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது முதல் எப்படி ஒவ்வொரு யூதனும் காணப்படுகின்றானோ, அப்படியே நமது கர்த்தரும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்குக் கீழாகக் காணப்பட்டு, நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு காரியத்திற்கும் கட்டுப்பட்டிருந்தார் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்து நியாயப்பிரமாணத்தைச் "சிலுவையின்மேல் ஆணியடிப்பது" வரையிலும் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது முடிந்தும்/கடந்தும் போகவில்லை என்று பார்க்கின்றோம் (கொலோசெயர் 2:14). ஆகவே நமது கர்த்தர் ஓய்வுநாளில் செய்த வியாதியஸ்தர்களின் சுகமாக்குதல், முதலானவைகள் எதுவும் நாலாம் கற்பனையையோ, அல்லது நியாயப்பிரமாணத்தின் வேறு ஏதாகிலும் அம்சத்தையோ மீறினதாகக் கருதப்பட முடியாது.

சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, யூதர்களுக்கு வழங்கப்பட்ட காலத்திற்கு முன்பாக அமலாக்கப்படவில்லை என்றும், இது (யூதர்களையல்லாமல்) வேறு எந்த ஜனங்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்றும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களைப் பொறுத்தமட்டில் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது சிலுவையில் முடிவடைந்தது என்றும் நாம் ஏற்கெனவே வேதாகம பாடங்கள் வெளியீட்டின் (VOLUME) தொகுதி 6-இல், அத்தியாயம் 8-இல் உங்களுக்குக் காண்பித்துள்ளோம். ஆகவே யூதருக்கான ஓய்வுநாளுக்குரிய கடமைகளும் கூட சிலுவையில் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய இயேசுவின் பின்னடியார்களோ மேன்மையான ஓய்வை, நிஜமான ஓய்வாகிய, "தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதலை" அனுபவித்தவர்களாய் இருக்கின்றார்கள்; அதாவது தங்களது சொந்த கிரியைகளிலிருந்துள்ள இளைப்பாறுதலை, பயத்திலிருந்துள்ள இளைப்பாறுதலை, தேவனை அன்புகூருகின்றவர்களுக்குத் தேவன் கிறிஸ்து மூலமாய் ஏற்பாடு பண்ணியுள்ள மகிமையான காரியங்களின் மீதான நம்பிக்கையில் உள்ள இளைப்பாறுதலை, உலகத்தார் ஏற்றக்காலத்தில் கர்த்தருடைய அறிவிற்குள்ளாக வருவார்கள் என்றிருக்கும் உலகத்தாருக்கான நம்பிக்கையில் உள்ள இளைப்பாறுதலை அனுபவித்தவர்களாய் இருக்கின்றார்கள். இந்தச் சமாதானத்தின் நிரந்தரமான இளைப்பாறுதலானது நம்மிடம் ஒவ்வொரு நாளும் காணப்படுகின்றது.

## ‘‘இனி ஒருபோதும் பணிவிடைக்காரர்கள் அல்ல, மாறாக குமாரர்கள் ஆவர்’’

வாரத்தின் முதல்நாளை கிறிஸ்துவனுக்கான ஓய்வுநாளாக அனுசரிப்பதை, நாம் கட்டளை (அ) பிரமாணம் என்று எண்ணாமல், மாறாக அந்த நாளில், நாம் பூமிக்குரிய காரியங்களைவிட்டு, புதுச் சிருஷ்டிக்கான ஆவிக்குரிய காரியங்களை சிந்திப்பதற்கும் மற்றும் ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்வதற்குமான மாபெரும் சிலாக்கியத்தை அடைவதை உணர்ந்துக்கொள்ள வேண்டும்; இன்னுமாக நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்து, புதிய சிருஷ்டியின் வேலையை ஆரம்பித்த நாளாகவும், அந்நாள் நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய ஜனங்களுக்காக, வரும் மகிமையான இளைப்பாறுதலுக்காகவும், நாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, நமது கர்த்தருடைய சாயலில் விழித்தெழும்போது, நாம் எதிர்ப்பார்க்கும் நித்திய காலத்திற்குமுரிய பாக்கியமான பூரணத்திற்காகவும் நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம். இந்தச் சுவிசேஷ யுகத்தில், நம்முடைய பரம பிதா, நம்மைப் பணிவிடை வீட்டாராக அல்லாமல், மாறாக புத்திரர் வீட்டாராகவே, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டியாகவே நம்மிடம் தொடர்புகொள்கின்றார். பணிவிடைக்காரர் வீட்டாராகிய யூதர்களுக்குக் கொடுத்திட்ட நியாயப்பிரமாணங்களை, இந்தப் புதுச் சிருஷ்டியாகிய, அவருடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பது பிதாவுக்கு ஏற்றதாய் இராது.

பத்துக்கட்டளைகளில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு காரியங்களை நினைப்பூட்டுவதன் மூலம் கூட கர்த்தர் புதிய சிருஷ்டிகளைக் குறைவாக நடத்தமாட்டார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் கொலை, விபச்சாரம், விக்கிரக ஆராதனை, பெற்றோர்களைக் கனவீனப்படுத்துதல், பொய்ச்சாட்சி, பொருளாசை, அவிசுவாசத்தின் அமைதியின்மை, தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குதல் முதலியவைகளை விரும்புவதே இல்லை. இவைகளையெல்லாம் நோக்கி இருதயங்களைப் பெற்றிருப்பவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களாகவும், கிறிஸ்துவின் ஆவி இல்லாதவர்களாகவும், அவருடையவர்கள் அல்லாதவர்களாகவுமே காணப்படுகின்றனர். அன்பின் ஆவியினால் நெஜிப்பிக்கப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக இருப்பவர்களுக்கான, கர்த்தருடைய கட்டளை என்பது, அவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்து, தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட தருணத்தில் மரித்ததாகக் கருதப்பட்ட, தங்களுடைய அழியக்கூடிய சரீரங்களின் பெலவீனங்கள் அனைத்தையும் தினந்தோறும் கீழ்ப்படுத்த நாடுவதும் ஆகும். இப்படியாகவே கர்த்தருடைய ஜனங்கள் செய்யவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் வலியுறுத்தும் வண்ணமாக, “சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது” (எபேசியர் 4:31) என்று கூறியுள்ளனர்; இப்படியாக அப்போஸ்தலர்கள் புதுச் சிருஷ்டிக்கு வலியுறுத்துகையில், அவர்கள் இந்தத் தவறான செய்கைகளை விரும்புகின்றது போன்று கூறாமல், மாறாக மரித்ததாக ஏற்கெனவே கருதப்படும் தங்களின் இந்த மாம்சத்தின் கிரியைகளை நீக்கிப்போட, கொன்று போட, அழித்துப்போடவே வலியுறுத்துகின்றார்கள்.

நமது பிதாவின் கையாளுதல்களும், கட்டளைகளும் ஒருபோதும் நம்முடைய மாம்சத்திற்கு இராமல், மாறாக நம்முடைய புதிய சிருஷ்டிக்கே கொடுக்கப்பட்டுள்ளது. “தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல;” “ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.” “இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது” (ரோமர் 8:9; 2 கொரிந்தியர் 5:16; 1 பேதுரு 4:6). நாம் மாம்சத்தின்படி நடவாமல், ஆவிக்கேற்றபடி நடக்கின்றபடியால், நாம் தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் தெய்வீகப் பிரமாணத்தின் உயர்வான கோரிக்கைகளை நிறைவேற்றுபவர்களாகக் கருதப்படுகின்றோம்.

## ‘‘தாழ்த்துகிறவர்கள், உயர்த்தப்படுவார்கள்’’

அநேகமாக ஏதோ ஒரு கேள்விக்குப் பதில் கொடுக்கும் வண்ணமாகவே, கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகள் பற்றின உவமையைப் கூறி, முதன்மையான ஸ்தானங்களை நாடும் வழக்கத்திற்கு எதிராக எச்சரித்து, பிற்பாடு அதிக கனமுள்ள விருந்தாளி

வருகையில், முதன்மையான ஸ்தானங்களில் இருந்தவர்கள், தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதைக் குறித்து நமது கர்த்தர் பேசியிருக்க வேண்டும். இந்த ஒரு சுயநலத்தை, தம்மோடு கூடப் பந்தியமர்ந்தவர்களின் மத்தியில் நமது கர்த்தர் கவனித்தார்; ஆனாலும் இக்காரியம் குறித்து, தாம் பேசத்தக்கதாக எந்தக் கேள்வியும் எழுப்பப்படாமல், தாம் கடிந்துக்கொள்ளத்தக்கதாக, கர்த்தர் இவ்விஷயத்தில் கடுமையாகக் குறுக்கிடவில்லை என்றே நாம் எண்ண வேண்டும்.

இந்த உவமையின் முழுப்பாடமும், தெய்வீகக் கண்ணோட்டத்தின்படியான, மனுஷர்கள் மத்தியிலான சரியான நடந்துக்கொள்ளுதலை விவரிக்கின்றதாகவே இருக்கின்றது, ஆகவே இது நிஜமான கலியாண விருந்தில், தேவன் அழைப்பவர்கள் விஷயத்தில், அவர் கையாளும் விதத்தை அனைவருக்கும் விவரிக்கின்றதாகவும் இருக்கின்றது. மிகுந்த தைரியமுள்ளவர்களுக்கும், அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்கு நாடுபவர்களுக்கும் பிரதானமான இடங்கள் கொடுக்கப்படுவதில்லை; மாறாக தன்னைக் குறித்துச் சிறிதாக எண்ணியும், நன்றியுள்ளவர்களாக இருந்தும், தெய்வீகச் சந்நிதானத்தில் மிகவும் தாழ்ந்த இடத்தை நன்றியுடன் நாடும் தாழ்மையான மனதையுடைய மனுஷனையோ (அ) ஸ்திரீயையோ கர்த்தர் மறந்துவிடுவதில்லை.

பேராசை/புகழ் முதலியவற்றை அடையவேண்டும் என்ற ஆர்வம் மனித மனதிற்கு அவசியமான ஒன்றாகும்; இது இல்லையெனில் உலகம் இன்று இவ்வாறு முன்னேற்றமே அடைந்திருக்காது; எனினும் இது கிறிஸ்தவ குணலட்சணம் உருவாகுதல் தொடர்புடைய விஷயத்தில், மிக ஆபத்தான அம்சமாக இருக்கின்றது. "தன்னைத்தான் தாழ்த்துகிறவன், உயர்த்தப்படுவான், தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்டிருக்கும் விஷயமே, இரரஜ்யத்தின் மகிமைகளையும், கனங்களையும் வழங்குவதில் தேவனால் கையாளப்படும் கொள்கையாகக் காணப்படும் என்று நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் அனைத்தும் நமக்கு நிச்சயமளிக்கின்றது.

## "நன்மை செய்வதற்கு அதிகாரத்தை விரும்புதல்"

மற்றவர்கள் கர்த்தருடைய கரங்களிலிருந்து பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் ஏதோ ஓர் உயர்வான இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் நாம் சுயநலமாய் நாடுவதாகவும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தினுடைய மகிமையைக் குறைவாய் மதிப்பிடுகின்றவர்களாகிய குருடாக்கப்பட்டவர்களால் நாம் அடிக்கடி குற்றம் சாட்டப்படுகின்றோம். இது முற்றிலும் நியாயமற்ற ஒரு குற்றச்சாட்டாகும்; ஏனெனில் "தற்கால சத்தியத்தில்" ஆர்வம் அடைந்துள்ளவர்கள், மாபெரும் கலியாண விருந்தில் ஏதோ இடம்பெற்றுக்கொள்ளவும், மகிமையான மணவாட்டி வகுப்பாரின் ஏதோ அங்கத்துவம் பெற்றுக்கொள்ளவும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் மாபெரும், பிரம்மாண்டமான வேலையில் பரம மணவாளனுடன் பங்கடைவதற்கான ஏதோ வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் நாடத்தக்கதாக, இராஜ்யத்தின் மரியாதைகள் மீது மிகவும் ஆசை கொண்டதாக நமக்குத் தெரியவில்லை. இப்படியான உயர்ந்த கனங்களுடனும், மகிமைகளுடனும், மரியாதைகளுடனும், அழியாமையுடனும் தொடர்புடையவர்களாய் நாங்கள் இருக்கின்றோம் என எங்களைக் குறித்து நாங்கள் எண்ணிக்கொள்ள, இது எங்களுக்குத் தோன்றின காரியமல்ல; இப்படியாக எல்லாம் தெய்வீக வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இவைகளுக்கு நாம் பாத்திரவான்களாகக் கருதப்படுவதை ஏற்றுக்கொள்வதும், இது நம்மில் கர்த்தருடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், நடக்கையையும், உண்டுபண்ணத்தக்கதாக அவர் விரும்பின வண்ணமாக அனுமதிப்பதும், விசுவாசத்தின் கடமையாக இருக்கின்றது.

இராஜ்யத்தின் மகிமை, கனம் மற்றும் ஸ்தானம் தொடர்புடைய விஷயத்தில் பேராசை காணப்படாமல், தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்திலேயே, அதாவது திரைக்கு இந்தப் பக்கத்தில் யார் பெரியவராக இருப்பார்கள் என்பது தொடர்புடைய விஷயத்திலேயே பேராசை காணப்படுகின்றது என்பதே நம்முடைய அனுபவத்தைப் பொறுத்தமட்டில் பிரதான பிரச்சனையாக இருக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள மிகுந்த தாலந்து உடையவர்களிலும், மிகுந்த திறமை மிக்கவர்களிலும், கடமை உணர்ச்சிமிக்கவர்களிலும் சிலர், இந்த அபாயத்தில் காணப்படுகின்றார்கள் என்றும் நாம் கவனிக்கின்றோம்; மேலும் இந்தக் காரியத்தை அனைவரின் கவனத்திற்குக் கொண்டுவருவது, நமது கடமையில் ஒரு பாகமாக இருக்கின்றது என்று நாம் எண்ணுகின்றோம்; அதாவது இப்படியாக தாலந்துகள் உள்ள ஸ்தானத்தில் காணப்படுபவன், தற்காலத்தில் மகிமைக்காகவும், கனத்திற்காகவும், மதிப்பிற்காகவும், ஸ்தானத்திற்காகவும் பேராசையுடன் நாடுவது என்பது, அவன் கர்த்தருடைய தயவை இழந்துப்போவதற்கும், (ஒருவேளை

பெருமையானது, அவனைச் சிறுமந்தையின் அங்கமாக ஏற்றுக்கொள்ளுவதற்கு முற்றிலுமாய்த் தடைப்பண்ணிப்போடாத நிலையில் அவன் காணப்பட்டால்) இராஜ்யத்தில் மிகுந்த தாழ்வான ஸ்தானத்தையாகிலும் இறுதியில் பெற்றுக்கொள்வதையும் இழந்துப்போகப் பண்ணுவதற்கும் ஏதுவாயுள்ளதை அவனுக்கு உணர்த்தும் வண்ணமாக, ஒவ்வொரு கர்த்தருடைய அருமையான ஜனமும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டும். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6).

## "ஏழைகளையும், நண்பர்களற்றவர்களையும் நினைவில் கொள்ளுங்கள்"

அநேகமாக இன்னும் எழுப்பப்பட்ட கேள்விக்கே, நமது கர்த்தர் விருந்து ஏற்பாடு பண்ணப்படுவதும், அதில் யார் அழைக்கப்பட வேண்டும் என்பதும் தொடர்பான விளக்கத்தை கொடுத்திருக்க வேண்டும். அவர் ஒரு புதிய கருத்தை முன்வைத்தார். பதில் விருந்து எவர்களுடைய வீட்டில் அழைத்துக் கொடுக்கப்படுமோ, அவர்களையே விருந்துக்கு அழைக்கப்படும் வழக்கம் இருந்தது. கைம்மாறு என்ற கருத்தானது, இவ்விஷயத்தில் சுயநலமான கருத்தாக இருந்தது. ஆனால் இப்படியாக நம்மையும் வீட்டிற்கு அழைப்பார் என்று எண்ணி, ஒருவரை நாம் அழைப்பது தவறு என்று காண்பிக்கும் வண்ணமாக நமது கர்த்தருடைய கருத்து இருந்தது என நாம் எண்ண வேண்டியதில்லை. இப்படியாக அழைத்துக்கொள்வது நன்மையான கைம்மாறாக இருப்பினும், கர்த்தருடைய பார்வையில் இப்படிச்செய்வதின் மூலம் எந்தப் பலனும் இருப்பதில்லை, ஏனெனில் ஒவ்வொருவனும், தனக்கான பலனை ஒருவருக்கொருவரிடமிருந்து பெற்றாகிவிட்டது.

தம்மையும், தம்முடைய சீஷர்களையும் விருந்துக்கு அழைத்த வீட்டாருக்கு பிரதி விருந்து செய்யமுடியாதவராக தாம் இருக்கையில், தம்மை அழைத்து விருந்துக்கொடுத்தவர், உண்மையில் இரக்கத்துடன் செயல்பட்டிருக்கின்றார் என்றும், இரக்கமான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றார் என்றும், தம்மை விருந்துக்கு அழைத்தவருக்குக் காண்பிக்க அநேகமாக கர்த்தர் விரும்பியிருக்கலாம். ஏழைகளுக்கும், உதவியற்றவர்களுக்கும், ஊரார்களுக்கும், சப்பாணிகளுக்கும், குருடர்களுக்கும், விருந்தளிப்பது என்பது, அவர்களுக்கு இரக்கம் காட்டுவதாகவும், தர்மம் பண்ணுவதாகவும், தற்கால ஜீவியத்தில் எவ்விதமான கைம்மாறு கிடைக்காததாகவும், எதிர்க்கால ஜீவியத்தில் நிச்சயமாய் ஆசீர்வாதம் கிடைக்கின்றதாகவும் காணப்படும். விருப்பத்துடனும், அறிந்தும், சரியான நோக்கத்துடனும் செய்யப்படும், ஒவ்வொரு நல்ல செய்கைகளுக்கும் நிச்சயமாய் ஆசீர்வாதம் உண்டு என்றும், தவறான நோக்கத்துடனும், தீமையான உணர்வுகளுடனும் செய்யப்படும் ஒவ்வொரு தீமையான செய்கைகளும், ஒவ்வொரு பாதகமான காரியங்களும் தற்காலத்திலோ (அ) எதிர்க்காலத்தின் ஜீவியத்திலோ நிச்சயமாய் ஏதோ வகையிலான தண்டனையைக் கொண்டுவரும் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

இப்படிப்பட்டதான நற்கிரியைகளுக்கு, நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பதில் செய்யப்படும் என்று நமது கர்த்தர் கூறியுள்ளார்; ஆனால் இந்த வார்த்தைகளை அவர் தம்முடைய சீஷர்களாகிய நீதிமானாக்கப்பட்டவர்களிடம் கூறாததினால், இப்படியாக தரித்திரர்களுக்கு விருந்து பண்ணுகிறவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில், பரிசுத்தர்களும், பாக்கியவான்களாகவும், தேவனுடைய இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், மணவாளனுடன் மணவாட்டி வகுப்பாராகவும், இராஜரிக வகுப்பாராகவும் இருப்பவர்கள் மத்தியில் உன்னதமான ஸ்தானத்தை அடைவார்கள் என்று புரிந்துக்கொள்ளப்பட முடியாது. இது நியாயமாய் இருக்கமுடியாது, ஏனெனில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கு, பரிந்துப்பேசுபவராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைப்பது மாத்திரம் அல்லாமல், இடுக்கமான வழியில் உண்மையாய் நடப்பதும் அவசியம் என்று மற்ற வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அப்படியானால் இயேசுவினுடைய வார்த்தைகளின் அர்த்தம் என்ன? மகிமையான தலை மற்றும் மணவாளனுடனான மணவாட்டிகளாகிய, பரிசுத்தவான்களை மாத்திரம் உள்ளடக்கும் முதலாம் உயிர்த்தெழுதலானது, நமது கர்த்தரால் பிரசங்கிப்பட்டதும், "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போல, பூமியிலும் செயல்படுவதாக" என நாம் ஜெபிக்கும்படிக் கற்றுக்கொடுக்கப்பட்டதுமான இராஜ்யத்தினுடைய ஆரம்பித்தலைக் குறிக்கின்றதாக இருக்கும் என நாம் பதிலளிக்கின்றோம். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குக்கொள்பவர்கள் உலகத்திற்கு இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருப்பார்கள். (1 கொரிந்தியர் 6:2; வெளிப்படுத்தல் 20:6). முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, உலகத்திற்கான ஆசீர்வாதமும், அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் காலங்கள் ஆரம்பமாகும்! அப்பொழுது முழு உலகமும், உதவி பெறத்தக்கதாக ஆயிர வருடங்கள் இந்த நியாயாதிபதிகள் முன்பு நிற்பார்கள்; ஒருவேளை உலகத்தார் உதவி பெற

விரும்பினால், மனுஷீக பரிபூரணத்தை அடைவார்கள் (அ) ஒருவேளை தங்களுக்கான மகிமையான வாய்ப்புகளுக்கு இணங்க மறுப்பார்களானால், இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

உலகத்தாருடைய நியாயத்தீர்ப்பின் நாளில், ஏழைகளுக்கு இரக்கத்தினால் செய்யப்பட்ட ஒவ்வொரு கிரியைகளும், அவனவன் குணலட்சணத்தின் விஷயத்தில் சில ஆசீர்வாதம் கொண்டு வந்துள்ளதைக் காண்பான், அதாவது அவனவன் எந்த இடத்திலிருந்து பரிசுத்தத்திற்கு நேரான பெரும்பாதையான வழியில் நடக்க ஆரம்பிக்க வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்துள்ளதைக் காண்பான். மிகவும் சீர்க்கெட்டவர்கள், அதாவது குணலட்சனத்தினுடைய வளர்ச்சியின் விஷயத்தில், தற்கால ஜீவியத்தில் எதையுமே செய்யாதவர்கள், பெரும்பாதையான வழியின் ஆரம்ப எல்லையிலிருந்தே நடக்க வேண்டியிருக்கும், இன்னுமாக நெடுந்தொலைவில் இருக்கும் பரிபூரணத்தை நோக்கி, நீண்ட பயணமும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்; ஆனால் தற்காலத்திலேயே நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்து, தங்களுடைய சக மனிதர்களுக்கு உதவியும், ஆறுதலும் அளிக்க நாடியுள்ளவர்கள், இன்னும் விசேஷமாக கர்த்தருடைய சீஷனுக்குக் குடிக்க ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தவர்கள், இராஜ்யத்தில் நன்மை அடைவார்கள். ஆகவே ஊராருக்காக, ஏழைக்காக, குருடனுக்காக ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தவர்கள் (அ) உதவி செய்தவர்கள் நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் ஆயிர வருட யுகத்தில் பலனையும், ஆசீர்வாதத்தையும் அடைவார்கள் என்பதே கர்த்தருடைய வார்த்தைகளின் அர்த்தமாகும்.

## ‘‘பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் பேசப்படும் சம்பாஷணைகளின் முக்கியத்துவம்’’

இப்படியாக பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் பேசப்படும் சம்பாஷணையின் (table-talks) விஷயத்தில் நமது கர்த்தர் முன்வைத்த மாதிரியானது, நம்முடைய பைபிள் ஹவுசில் (bible house) பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு, மிகுந்த நன்மையைக் கொடுத்து வருகின்றது. ஒழுங்குமுறை கடைபிடிக்கப்படும் பொழுது மிகுந்த நன்மை உள்ளதை நாங்கள் கண்டுபிடித்தோம். எல்லா நாள் காலையிலும் சரியாக ஏழு மணிக்கு, துதியும், ஜெபமும் ஏறெடுக்கப்படுகின்றது (ஞாயிறு அன்று எட்டு மணிக்கு ஏறெடுக்கப்படுகின்றது). பின்னர் நாங்கள் மேஜையைச் சுற்றி அமர்ந்துக் கொண்டு, உணவுக்காக நன்றி செலுத்திக்கொண்டு, இந்த எங்களுடைய ஐக்கியத்தின் நிமித்தம் ஆசீர்வாதம் கிடைக்க ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது; பின்னர் எங்களில் ஒருவர் அன்றைய நாளுக்கான பரலோக மன்னாவின் வசனத்தை வாசிக்கின்றார். காலை உணவு நடந்துக்கொண்டிருக்கையில் கேள்விகள் கேட்கப்பட்டு, வசனம் முழுமையாய் விவாதித்து ஆராயப்படுகின்றது. மேஜையிலிருந்து எழும்பும் நேரத்தில், மன்னா வசனத்திற்கான விளக்கவுரை வாசிக்கப்படுகின்றது. இரவு நேரம் உணவு உண்ணப்படும்போதும், அங்கு அமர்ந்து இருக்கும் யார் ஒருவராலும் கேள்வி எழுப்பப்பட்டு, பொதுவாய்க் கருத்துகள் தெரிவிக்க, பொதுவாய் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது; அதாவது யாரேனும் கேள்வி கேட்க, பின்னர் பதில் கூறுவதற்கான வாய்ப்புப் பொதுவாக வைக்கப்படுகின்றது. மேஜையில் தலைமை வகுப்பவர், இறுதியில் கேள்விக்கான இறுதி பதிலைக்கொடுக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இம்மாதிரியான சம்பாஷணைகள், அனைத்து விதமான தேவனுடைய வார்த்தைகள் பற்றியும் இருப்பதினால், இப்பதில்கள் அங்கிருப்பவர்கள் ஏற்கெனவே கற்றுக்கொண்டுள்ளது பற்றின ஞாபகங்களைப் புத்துயிர் பெறச்செய்கின்றது. இந்த ஒரு முறையை நாம் தேவனுடைய அருமையான ஜனங்கள் அனைவருக்கும் பரிந்துரைக்கின்றோம். இம்மாதிரியான நேரங்களில் உட்கொள்ளப்படும் உணவும் நன்றாயிருக்கின்றது, அதேவேளையில் ஆவிக்குரிய புத்துணர்வும் மிகுந்த நன்மைக்கு ஏதுவாய் இருக்கின்றது. இம்மாதிரியான வேளையில் தர்க்கங்கள் எழும்புவதற்கு நாம் ஆதரியாமல், மாறாக ஒவ்வொருவரும் அந்த வசனம் (அ) அந்தக் கேள்வி தொடர்புடைய விஷயத்தில், தான் புரிந்துக்கொண்டுள்ளதை தெரிவிப்பதையே நாம் ஆதரிக்கின்றோம். நம்முடைய சுறுசுறுப்பான மனங்களை, இப்படியான பயனுள்ள திசைகளில் திருப்பி, சுறுசுறுப்பாய் வைத்துக்கொள்வது நன்மைக்கு ஏதுவாய் இருக்கும். நம்முடைய கர்த்தரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த மாதிரி, மிகவும் ஒரு நல்ல மாதிரியாகவே இருக்கின்றது.

**ஆமென்!**

---

R 3841

# "தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்"

**லூக்கா 18:1-14**

"தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்." (வசனம் 13)

பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து ஜெபம் பற்றின ஒரு பாடத்தை நாம் மீண்டுமாக இங்குப் பார்க்கப் போகிறோம். ஜெபம் பற்றின சில பாடங்களைச் சீஷர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; இதைக் கர்த்தர் இரண்டு உவமைகள் மூலம் அருளினார். முதலாவது பாடம் விடாப்பிடியாய் உறுதியாகத் தரித்திருத்தல் பற்றியதாகும்; அதாவது அவர்கள் தொடர்ந்து ஜெபம் பண்ண வேண்டும், மற்றும் பதில் தாமதமாகும்போது, சோர்ந்து, மனம் தளர்ந்துப் போகக்கூடாது என்பது பற்றியே முதலாம் பாடமாகும். அவர்கள் தேவனுடைய உண்மையான குணலட்சணத்திலும், தங்களின் விண்ணப்பங்ளைக் கேட்பதற்கும், தங்களுக்குத் தேவையான நன்மைகளை ஏற்ற விதத்தில், ஏற்றவேளையில் கொடுப்பதற்குமான அவருடைய விருப்பத்திலும் நிச்சயத்துடன் காணப்பட வேண்டும். பதில் தாமதமாகுவது என்பது அவர்களுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பெருக்கும் விதத்தில் ஆசீர்வாதத்தைக்கொண்டுவருகின்றதாக அமையும்.

## "அநீதியுள்ள நியாயாதிபதி"

மேற்கூறியவைகளை அறிவுறுத்தும் உவமையானது, தேவனுக்கோ, மனுஷனுக்கோ மதிப்புக் கொடுக்காத நியாயாதிபதி ஒருவன் கிழக்குத் திசை நாட்டில் இருந்தான் என்றும், அவன் தன்னுடைய சுயநலமான நோக்கங்களை நிறைவேற்றத்தக்கதாக தெய்வீகக் கட்டளைகளை எதிர்ப்பதற்கும், பொதுவாய் நிலவும் கருத்துக்களை மீறுவதற்கும் துணிந்தவனாகக் காணப்பட்டான் என்றும் தெரிவிக்கின்றது. கிறிஸ்தவ தேசங்களில் காணப்படும் நியாயாதிபதிகள் கனமிக்கவர்களாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் இருக்கின்றனர் என நாம் நம்புகின்றோம்; இன்னுமாக நியாயாதிபதிகள் இப்படிதான் இருக்க வேண்டுமென்பது சட்டமாக இருக்கின்றது என்றும், இப்படியாக இல்லாமல் இருப்பது அபூர்வம் என்றும் நாம் நம்புகின்றோம்; ஆனால் கிழக்குத் திசை நாடுகளில் எல்லாவற்றிலும் பணியாளர்கள் இலஞ்சம் வாங்க விரும்புவது வழக்கமாக இருந்தது, மற்றும் பணி புரிகின்றவர்கள் தங்களுடைய தனிப்பட்ட நன்மை மற்றும் ஆதாயத்திற்கே பணிபுரிகிறவர்களாய் இருப்பார்கள். முற்காலங்களில், அதாவது கடந்த நூற்றாண்டிற்கு முன்பு வரையிலும், நியாயாதிபதிகள், சட்டங்களை இயற்றுபவர்களாகவும், சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களாகவும் காணப்பட்டு வந்தனர். இன்றைக்கு நாகரிகமடைந்த தேசங்களில், ஜனங்களுடைய நன்மைக்கு ஏதுவாகவும், நீதி கிடைக்கப் பண்ணுவதற்குமென, சட்டம் இயற்றும் துறையும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையும் தனித்தனியாகச் செயல்பட்டு வருகின்றது.

உவமையில் இடம்பெறும் அநீதியுள்ள நியாயாதிபதிக்கு முன்பாக தனது வாழ்க்கையில் அநீதிகளையும், அவமரியாதைகளையும் அனுபவித்த விதவை ஒருவள் வந்தாள்; இந்தப் பிரச்சனைகளிலிருந்து நியாயாதிபதி தன்னை விடுவிக்கும்படியாக விரும்பினாள். அவள் ஆஸ்தி உள்ளவளாக இராதபடியினால், அவளால் அவனுக்கு இலஞ்சம் கொடுக்க முடியவில்லை; மேலும் அவளுக்குச் செல்வாக்கு எதுவும் இராததினால் நீதிக்கும், குறை தீர்க்கப்படுவதற்குமான அவளுடைய விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டது. நீதியை வழங்க வேண்டும் என்ற விருப்பத்தினால் அல்லாமல், தொந்தரவை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற சுயநலத்தின் காரணமாக, அவளுடைய விஷயத்தைக் கையில் எடுத்து, அவளுக்கு அவசியமான உதவியையும், நீதியையும் அவன் கொடுப்பதற்கு இறுதியாக முடிவெடுப்பது வரையிலும், அவள் விடாப்பிடியாய்த் தொடர்ந்துக் கொண்டிருந்தாள்.

## ‘‘தேவன் தாமதித்தாலும் அவர் அநீதியுள்ளவர் அல்ல’’

உவமையானது இந்த அநீதியுள்ள நியாயாதிபதியை, நம்முடைய பரம பிதாவுடன் ஒப்பிட்டுக் கூறி, இவ்வாறாக நம்முடைய பரம பிதாவானவர், அநீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கின்றார் என்று காண்பிப்பதில்லை. மாறாக இது இருவரையும் வித்தியாசப்படுத்தி, ஒருவேளை அநீதியுள்ள நியாயாதிபதி ஒருவன், சுயநலமான நோக்கங்களுக்காக இறுதியில் விடுதலை கொடுப்பானானால், நீதியுள்ளவராகவும், அன்புள்ளவராகவும், தம்முடைய ஜனங்களின் நன்மைகள் பற்றின அக்கறையுள்ளவராகவும் இருக்கும், நம்முடைய பரம பிதாவானவர், நிச்சயமாய் அவர்களின் ஜெபங்களுக்குச் செவிக்கொடுப்பார் என்ற கருத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் ஒருவேளை நம்முடைய கணிப்பில் மிகவும் விடாப்பிடியாகக் கேட்பதற்கும், நம்முடைய உண்மையான ஜெபங்களும் அவசியப்படுவதற்கும் உரிய ஒரு காரியம் நமக்குக் காணப்பட்டு, ஒருவேளை அதற்கான ஜெபங்களுக்கான பதில் உடனடியாக வரவில்லையெனில், நம்மால் தேவனுக்கு இலஞ்சம் கொடுக்க முடியாத காரணத்தினாலோ (அ) அவருக்கு நம்மால் பிரயோஜனம் இல்லை என்பதினாலோ. தேவன் நம்மிடத்தில் அக்கறைக் காண்பித்திடாத அநீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கின்றார் என்று நாம் முடிவு பண்ண முடியாது; அதேசமயம் நாம் அவரைத் தொந்தரவு பண்ணினாலொழிய, மற்றப்படி அவர் சுயநலத்துடன் அக்கறையற்றவராக இருப்பார் என்றும் நாம் தேவனைப்பற்றி முடிவு பண்ணிவிடக்கூடாது. மாறாக அவரை நம்முடைய அன்புக்குரிய பரம தகப்பன் என்றும், நமக்கு உதவி செய்யமுடியாத அளவுக்கு அவருடைய கரம் குறுகிப்போகவில்லை என்றும், நமக்கான அவருடைய அன்பு குறைவாய் அல்லாமல், பலமாய்க் காணப்படுகின்றது என்றும், தகப்பன் தன்னுடைய பிள்ளைக்கு இரங்குகிறது போன்ற அன்பை உடையவர் என்றும், அவரைக் குறித்து எண்ணி, தேவனுடைய குணலட்சணம் பற்றின நம்முடைய அறிவின் பெலத்திலும், அவருடைய உண்மையின் மீதான நம்பிக்கையிலும், நாம் பொறுமையாய் இருந்து, தேவனை அன்புகூருபவர்களுக்கும், அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று அறிந்து, நம்முடைய விண்ணப்பங்களின் நிறைவேறுதலை அவருடைய ஞானத்திற்கும், அன்பிற்கும், வல்லமைக்கும் ஒப்புக்கொடுத்து விடுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

தேவன் காரியத்தில் விசேஷித்த துரிதம் எதையும் வெளிப்படுத்தவில்லை என்றாலும், "தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" என்று நமது கர்த்தர் கூறுகின்றார் (லூக்கா 18:7). இறுதியில் நீதியானது ஜெயங்கொள்ளும் என்று, நாம் தேவனிடத்திலும், அவருடைய வாக்குத்தத்தங்களிலும் நம்பிக்கைக்கொள்ள வேண்டும் என்பதே பாடமாக உள்ளது. இந்த நம்பிக்கையானது, ஒருபோதும் சந்தேகிக்காமல், மாறாக காத்திருக்க மாத்திரம் செய்யுமளவுக்கு வாக்குத்தத்தங்களை உறுதியாய்ப் பற்றிப் பிடித்திருக்கும் முற்றும் முழுமையான விசுவாசமாகின்றது. இப்படியாக விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் தேவனிடத்தில் வருபவர்கள், மீண்டும் மீண்டுமாக வருவார்கள், மற்றும் இப்படியாக வரும் ஒவ்வொரு முறையும் புத்துயிர் பெறுகின்றனர், ஏனெனில் இவர்கள் சர்வவல்லவரை மனமாற்றுவதற்குரிய நம்பிக்கையிலோ, நீதியானது என்று (தங்களால்) அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள அவருடைய திட்டங்களை/ஏற்பாடுகளை, ஏதேனும் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையிலோ அவரிடத்தில் வருவதில்லை; மாறாக அவருடைய வாக்குத்தத்தங்களை அவர்கள் நம்புவதினாலும், அவருடன் ஐக்கியம் வைத்துக்கொள்வதன் மூலமாக, தங்களின் இருதயங்களை ஆறுதலும், அமைதலும் அடையப் பண்ண விரும்புவதினாலும் அவரிடத்தில் செல்கின்றனர்; இன்னுமாக பிதா தாமே நம்மை அன்புகூருகின்றார் என்றும், அவருடையவர்களை அவர் எதிராளியானவனின் பாவத்தின் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிப்பதற்கு ஏற்றக்காலம் ஒன்றைக்கொண்டுள்ளார் என்றும், தங்களுடைய இருதயங்களுக்கு உறுதிப்படுத்துவதன் மூலமாக, தங்களின் இருதயங்களை ஆறுதலும், அமைதலும் அடையப் பண்ண விரும்புவதினாலும் அவரிடத்தில் செல்கின்றனர். அந்த ஏற்றக்காலம், நீண்ட காலமாய் இருக்கலாம், ஆனால் சரியான விதத்தில் விசுவாசம் செயல்படுத்தப்பட்டால், தாமதத்தின் ஒவ்வொரு அடியிலும், ஈடு இணையற்ற ஆசீர்வாதம் வரும்.

"சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்" என்று கூறி இந்த உவமையைக் கர்த்தர் முடிக்கின்றார். அதாவது தம்முடைய ஜனங்களை விடுவிப்பதற்கான காலம் வரும்போது, அவர் மாபெரும் எதிராளியானவனுடனும், இவ்வுலகத்தின் அதிபதியானவனின் தலைமையின் கீழ் சத்தியத்தையும், நீதியையும் எதிர்த்து, ஜீவியத்தின் காரியங்களில் மிக முக்கிய ஸ்தானங்களைப் பிடித்து வைத்துள்ள அநீதியின் இயக்கங்களுடனுமான, தம்முடைய வேலையைச் சீக்கிரத்தில்

முடித்துவிடுவார் என்று எடுத்துக்கொள்ளப்படலாம். இல்லையேல் கர்த்தர் தம்முடைய நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு நீண்ட தாமதம் பண்ணமாட்டார் என்ற விதத்திலும் புரிந்துக்கொள்ளப்படலாம். மனிதனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படுகையில், நமது கர்த்தர் உலகத்தை மீட்டுக்கொண்டது முதல், அவருடைய இராஜ்யமானது இப்போது ஸ்தாபிக்கப்படுவது வரையிலுமான 18-நூற்றாண்டுகளுக்கு மேலான காலப்பகுதியானது, நீண்ட காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. "சீக்கிரமாய்" என்று எந்த விதத்தில் பேசப்பட்டுள்ளது? "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும்," என்று நாம் தெரிவிக்கின்றோம். ஆகையால் இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, இந்த நீண்ட முழுக்காலப்பகுதியும், இரண்டு நாட்களுக்கும் குறைவானதாகவே இருக்கும். காரியங்களைக் கண்ணோக்குவதில் இங்கு நாம் கர்த்தருடைய கண்ணோட்டத்தையே எடுக்கவேண்டும். இரண்டு கண்ணோட்டங்களையும் வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன; ஆகையால் எந்தக் கண்ணோட்டத்தில் கர்த்தர் பேசியுள்ளார் என்று நாம் விவாதம் செய்ய வேண்டியதில்லை. அநேகமாக நாம் இரண்டு கண்ணோட்டங்களிலும் பார்க்கும் வண்ணமாகவே அவர் பேசியிருந்திருக்க வேண்டும்.

## "அவர் விசுவாசத்தைக் காண்பாரோ?"

உவமையிலிருந்து வேறுபட்டதான வார்த்தைகளை இயேசு இங்குக் குறிப்பிடுகின்றார்; "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கென இரண்டாம் வருகையில் வரும்போது, உண்மையான விசுவாசமானது முதலாம் வருகையில் காணப்பட்டது போன்று, கடுமையாய்க் குறைவுப்பட்டிருக்கும், கிட்டத்தட்ட இல்லாமலலேயே இருக்கும். அவர் முதலாம் வருகையில் வந்தபோது, காணப்பட்ட நிலைமையானது, "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவின்போது, நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக இரண்டாம் வருகையில் வரும்போது, பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும், பரீட்சித்து, சோதிக்கப்படுவார்கள். மீண்டுமாக அவர் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வருவார், அவர்களோ, அவரை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பார்கள்; மற்றும் அவசியமான விசுவாசத்தை பூமியில் அவரால் காணவும் முடியாது. முதலாம் வருகை தொடர்பாக நாம், "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று வாசிக்கின்றோம் (யோவான் 1:12). இதுபோலவே அவருடைய இரண்டாம் வருகையின் போதும், விசுவாசங்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, அவர் விசேஷித்த ஆசீர்வாதத்தை வழங்குவார்.

சுவிசேஷ யுகம் முழுவதிலும் சபையானது, சிறுமந்தையானது, உதவிக்காகவும், விடுதலைக்காகவும் தொடர்ந்து, கர்த்தரை நோக்கிப்பார்க்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டாலும், ஆண்டவர் இரண்டாம் வருகையில் வந்து, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, முதலாம் உயிர்த்தெழுதல் நடைபெறுவது வரையிலும் அவர்கள் உண்மையில/நிஜமாய் உதவி செய்யப்படுவதோ அல்லது விடுவிக்கப்படுவதோ இல்லை என்ற கருத்து உவமையின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. இதற்கு இசைவாகவே அப்போஸ்தலர், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்று கூறியுள்ளார் (ரோமர் 12:19). ஆகவேதான் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையானது, உலகத்திற்கு உபத்திரவத்தின் காலமாகவும், பழிவாங்குதலின் நாளாகவும், ஜனங்களுடைய தவறுகளைச் சரிப்படுத்தும் நாளாகவும் காணப்படும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிப்பதை நாம் பார்க்கின்றோம். "நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது." "அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்" (ஏசாயா 63:4; 34:8).

நாம் பொறுமையாய் இருக்க வேண்டுமென்றும், நம்மை எதிர்ப்பவர்களைப் பழிவாங்க முற்படாமல், மாறாக நம்முடைய சத்துருக்களை நாம் அன்புகூர்ந்து, நம்மை இழிவாய் நடத்தினவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமென்றும், கர்த்தர் கொடுப்பதற்குச் சித்தமாக இருக்கும் விடுதலைகளையே, நாம் கர்த்தரிடத்தில் எதிர்ப்பார்க்க வேண்டுமென்றும், முழுமையான விடுதலை வருவதற்கு நீண்டகாலம் உள்ளது என்பதை நாம் உணர்ந்துக்கொண்டாலும், கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட போவதற்கான காலம் வந்துகொண்டிருக்கின்றது என்ற விசுவாசத்தின் மூலமாக நாம் இளைப்பாறுதலும், புத்துணர்வும் கொண்டவர்களாகக்

காணப்பட வேண்டும் என்றுமுள்ளவைகளே இவ்வுமையின் மூலமான கர்த்தருடைய ஜனங்களுக்கான படிப்பினையாக இருக்கின்றது. ("உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது.")

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைக் கொஞ்சமாய் நம்புகின்றவர்கள், அவரைக் கொஞ்சமாய் விசுவாசிக்கின்றவர்கள், அவரிடத்தில் கொஞ்சமாகவே ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், கொஞ்சமே விசுவாசத்தைச் செயல்படுத்துகின்றவர்களாகவும் இருந்து, இதன் விளைவாகக் கொஞ்சமே சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்கிறவர்களாகவும் இருப்பார்கள். மாறாக விசுவாசத்தைக்கொண்டவர்களாகவும், தொடர்ந்து கிருபையின் சிங்காசனத்திடத்திற்குச் செல்கின்றவர்களாகவும், கர்த்தருக்கு மதிப்புக் கொடுப்பவர்களாகவும், தங்களுடைய ஜெபங்கள் மற்றும் பிரயாசங்களின் மகிமையான விளைவுகளில் நம்பிக்கைகொண்டவர்களாகவும் இருப்பவர்கள், இப்பொழுதும் மகிழ்ச்சியைப் பெற்றிருப்பார்கள், மற்றும் எதிர்க்காலத்தில் முழுமையான மகிழ்ச்சியையும் பெற்றிருப்பார்கள்.

## "சுயநீதி கொண்டவர்களின் ஜெபங்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை"

பரிசேயர்கள், யூதர்கள் மத்தியில் மிகவும் ஒழுக்கமாய் வாழும் வகுப்பாராய்க் காணப்பட்டார்கள்; இவர்கள் மிகவும் பயபக்தியுள்ளவர்களாகவும், வெளிப்புறத்தில் மிகவும் சரியானவர்களாகவும் காணப்பட்டனர்; ஆனால் உள்ளேயோ, கர்த்தர் நமக்குக் கூறியுள்ள பிரகாரம், தூய்மைக்கு மிகவும் தொலைவில் காணப்பட்டனர். இவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப்போல், வெளியில் நன்கு வெள்ளையடிக்கப்பட்டவர்களாகவும், உள்ளே முழுக்க அசுத்தமானவர்களாகவும் காணப்பட்டனர் என்று இவர்களைக் குறித்துக் கடினமான கண்டனம் தெரிவிப்பதற்கு இயேசு மாத்திரமே தகுதியானவராகக் காணப்பட்டார். இதுபோன்ற ஒரு வகுப்பார், இன்று கிறிஸ்தவ மண்டலத்திலும் காணப்படுகின்றனர்; இவர்கள் வெளித்தோற்றத்தில் மிகவும் ஒழுக்கமானவர்களாகவும், சிறு விஷயங்களையும் நன்கு கவனித்துச் செய்பவர்களாகவும், மிகவும் செம்மையானவர்களாகவும் காணப்படுகின்றனர், எனினும் இவர்கள் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை. இவர்கள் தங்களுடைய நீதியினிமித்தம் பெருமைகொண்டவர்களாய் இருந்து, மற்றச் சிலரைக் காட்டிலும் குறைந்தளவு சீரழிந்தவர்களாய் ஒருவேளை இருப்பினும், தாங்கள் உண்மையான பூரணத்திலிருந்து இன்னமும் தொலைத் தூரத்தில் காணப்படுவதினால், தங்களில் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு எதுவும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ள தவறிவிடுகின்றவர்களாய் இருக்கின்றனர். ஓரளவுக்கு ஒழுக்கம் கொண்டிருந்தும், தாழ்மையில்லாமல் காணப்படும் மனிதனை விடவும், மிகவும் சீர்க்கெட்டுப்போயிருந்த போதிலுங்கூட, மிகவும் நேர்மையுள்ளவனாகவும், மிகவும் தாழ்மையுள்ளவனாகவும் காணப்படும் மனிதனையே, தேவன் மிகுந்த அனுதாபத்துடனும், மிகுந்த இரக்கத்துடனும் கண்ணோக்குவார் என்று இந்த உவமை காட்டுகின்றது.

உவமையில், யூதர்களுடைய வழக்கத்தின்படி, இரண்டு மனுஷர்கள் ஜெபம் பண்ணும்படிக்கு ஆலயத்திற்குச் சென்றார்கள்; இதில் ஒருவன் சுயநீதியுள்ள பரிசேயனாக இருந்தான்; இவன் ஒழுக்கமுள்ள மனிதனாகவும், அநேக விதத்தில் நல்ல மனிதனாகவும், அதே வேளையில் தன்னுடைய நீதியின் கிரியைகள் மீது மிகுந்த கவனம் கொண்டவனாகவும், தெய்வீகப் பிரமாணங்களைக் கடமைக்காக கைக்கொண்டு வந்தவனாகவும் இருந்தான். மற்றவன் தாழ்ந்த வகுப்பாரைச் சேர்ந்தவனாகவும், ஒதுக்கப்பட்டவனாகவும், அதிகமான பெலவீனங்களையும், குறைவுகளையும் கொண்டவனாகவும், தனது நிலைமையை உணர்ந்தவனாகவும் இருந்தான். பரிசேயன் அங்குப்போய் நின்று, தனக்குள்ளாக ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது; இவனுடைய ஜெபம் கர்த்தரிடம் ஏறிச் செல்லவில்லை போலும்; இவன் தன்குள்ளாக ஜெபம் பண்ணிக்கொண்டதாகவும், இவன் ஜெபம் பண்ணினதை இவனே கேட்கத் தக்கதாகப் பண்ணினதாகவும், ஜெபத்தில் இவன் தனக்கே பாராட்டுத் தெரிவித்ததாகவும், தன்னுடைய சொந்த மனசாட்சியில் மகிழ்ந்தவனாகவும் கூறப்படுவது சரியே. இவன் பண்ணின ஜெபமானது, பிதா விரும்புகின்ற ஒன்றல்ல, ஏனெனில் பிதா, தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களையே நாடுகின்றார். மேலும் தன்னுடைய சொந்த பெலவீனங்களையும், பூரணமின்மைகளையும், குறைவுகளையும் உணர்ந்துக்கொண்டு, இவைகளை ஒப்புக்கொண்டு, இவைகள் மூடப்படுவதற்கென, தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளை நாடுவதையும் செய்யாதவன், சரியான விதத்தில், கர்த்தருக்கு முன்பாக வருவது என்பது கூடாத காரியமாக இருக்கின்றது.

# “சுயநீதியுள்ளவனின் ஜெபம்”

“தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்” என்று பரிசேயன் கூறினான் (லூக்கா 18:11). இப்படியாக உண்மையாய் ஏறெடுக்கப்படும் ஜெபம் என்பது இருதயத்தினுடைய நன்றியைக் குறிப்பதாக இருக்கின்றது. இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அனைத்துக் கிறிஸ்தவர்களும், தேவனிடத்திலான தங்களின் உறவின் காரணமாகவும், தங்களுடைய பாவம் மூடப்பட்டதின் காரணமாகவும், தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதின் காரணமாகவும், தங்களுடைய இருதயத்தில் நடைபெறும் மறுரூபமாகுதலின் வேலை காரணமாகவும், தாங்கள் தங்கள் சக மனிதர்கள் பெரும்பாலானவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாய் இருப்பதின் காரணமாகவும், கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர். ஆனால் இதனிமித்தம் அவர்கள் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு எதுவும் இல்லை. ஏனெனில், “உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?” என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 4:7). ஆகவே இப்படியாக நமக்கும், மற்றவர்களுக்கும் இடையிலான வித்தியாமானது கர்த்தராலும், அவருடைய கிருபையின் கிரியையினாலும் உண்டானது என்றும், இது நம்மால் உண்டாகவில்லை என்றும் உணர்ந்துக்கொள்வது சரியான இருதய நிலையாகும்; மேலும் இப்படியான உணர்ந்துக்கொள்ளுதலைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் அனைவரும், இப்படியான விதத்தில் அவர் நம்மை மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்தி வைத்திருக்கும் காரணத்தினாலும், அவருடைய கிருபையினால் நாம் இப்படி வித்தியாசப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் காரணத்தினாலும் அவருக்கு நன்றி ஏறெடுக்கலாம்.

உவமையில் இடம்பெறும் பரிசேயனுடைய பிரச்சனை என்னவெனில், அவன் தனக்குள்ளாக ஜெபம் பண்ணினவனாகவும், தன்னையே பாராட்டிக்கொண்டவனாகவும், இந்த வித்தியாசங்கள் அனைத்திற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவதுபோன்று நடித்துக்கொண்டவனாகவும் இருந்ததேயாகும். கர்த்தர் தன்னை வித்தியாசப்படுத்தியுள்ளார் என்பதற்காக இவன் கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், மாறாக இவன் இந்த வித்தியாசங்களை, தானே ஏற்படுத்தினதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தியவனாய்க் காணப்பட்டான்; இவன் தன் மாம்சத்தின் சொந்த கிரியைகளிடத்தில் நம்பிக்கைக்கொண்டவனாக இருந்தான்; இத்தகைய காரியம் ஒருபோதும் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; மேலும் இவன் பரியேசனாக, பாவநிவாரண பலியினால் தரிப்பிக்கப்படும் நீதியைப் புறக்கணிக்கின்றவனாய்க் காணப்பட்டான். இப்படியாகவே, நாமும் ஒருவேளை ஏதாகிலும் விதத்தில் பெருமையடித்துக்கொண்டவர்களாய் இருந்தோமானால், நம்முடைய நிலைமையும் இப்படியாகவே காணப்படும். இப்படிப்பட்ட ஒரு மனுஷன், இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை ஏறெடுக்கும்போது இது தேவனிடத்தில் செல்லாது என்றும், இது தன்னைத்தானே போலி புகழ்ச்சிச் செய்வதாக மாத்திரமே இருக்கும் என்றும், இதனால் அவனுக்கு எந்த நன்மையும் இராது என்றும், அறிந்துக்கொள்ளப்பட வேண்டும். நம்மை மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்தினவரும், நம்மைத் தம்முடைய வல்லமையினால் காத்துக்கொள்பவரும், கிறிஸ்துவின் நீதி எனும் வஸ்திரத்தினால் நம்மை மூடுகிறவரும், அவருடைய படிப்பினைகளுக்கும், வழிநடத்துதல்களுக்கும் கீழ்ப்படிவதில் நாம் உண்மையாய் இருப்போமானால், நமக்கு வாக்களித்துள்ள கனத்திற்கும், மகிமைக்கும், அழியாமைக்கும் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டுவருபவருமான தேவன், நமக்குப் போதுமானவராய் இருக்கின்றார் என்று நாம் உணர்ந்துக்கொள்ளும்போது, நாம் சரியான மனநிலையில் இருக்கின்றவர்களாய் இருப்போம்.

கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும், தாங்கள் கிருபையின் சிங்காசனத்திற்கு முன்னதாக, தாங்கள் பாவிகளைப் போலும், விபச்சாரக்காரர் போலும், ஆயக்காரரைப் போலும் அல்லது மற்ற மனுஷர்களைப் போலும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றவர்களாய் இருக்க வேண்டும். இது, “நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துக் கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது” என்று கர்த்தரால் கூறப்பட்டவைகளுக்கு இசைவாகவே உள்ளது (யோவான் 15:19). இப்படியாக நாம் உலகத்திடமிருந்து பிரிந்திருக்கும் நிலைக்கான ஆதாரங்களை காண்கையில் நாம் சந்தோஷம் அடையலாம், ஆனால் இவைகளைக் குறித்து நாம் பெருமை பாராட்டிக்கொள்ளக்கூடாது; இன்னுமாக இவைகள் நம்மால், அதாவது நம்முடைய முயற்சியினால் உண்டானது என்று உரிமை பாராட்டிக்கொள்ளக்கூடாது. ஏற்கெனவே

சொன்னது போன்று, நாம் கர்த்தருடைய கிருபையினால்தான் இப்படியாகவெல்லாம் வித்தியாசப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றோம்.

பரிசேயன் பெருமையடித்துக்கொள்ளும் விதமாக, தான் வாரத்திற்கு இரண்டு முறை உபவாசம் பண்ணுவதாகவும், எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுப்பதாகவும் கூறினான். இவன் உபவாசம் பண்ணும்போது, நியாயப்பிரமாணம் கோரும் காரியங்களைக் காட்டிலும் அதிகமானவைகளை இவன் செய்து வந்தான், ஆகையால், இதற்காக இவன் விசேஷமாய்ப் பாராட்டப்படுவான் என்று எதிர்ப்பார்த்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்படியாகக் கர்த்தருடைய கண்ணோட்டத்தில் இருப்பதில்லை; கிரியைகள் ஒருபோதும் நம்மை நீதிமானாக்கிவிட முடியாது. ஒருவேளை நாம் உபவாசித்தாலும், மரிக்குமளவுக்கு உபவாசித்தாலும், இவைகளினால் எந்தப் புண்ணியமும்/தகுதியும் இல்லை; நாம் நம்முடைய பூரணமின்மைகளைச் சரியாக உணர்ந்துக்கொண்டும், இப்பொழுது இயேசுவின்மேல் வைக்கப்படுகிற விசுவாசத்தினால் வழங்கப்படுகிறதும், அன்று யூதர்களுக்கு அவர்களுடைய நிழலான பாவநிவாரணநாளின் பலிகளினால், நிழலாய்த் தரிப்பிக்கப்பட்டதுமான தெய்வீக நீதிமானாக்கப்படுதலைச் சரியாக ஏற்றுக்கொண்டும் காணப்படாத வரையிலும், எந்தக் கிரியைகளுக்கும் மதிப்பிராது. இன்று கர்த்தருடைய ஜனங்கள் உபவாசிப்பதற்கு அநேக காரியங்களைப் பெற்றிருக்கின்றனர். உபவாசம் என்பது சுயத்தை வெறுத்தலாகும்; மேலும் உணவின் விஷயத்தில் சுயத்தை வெறுத்தல் என்பது, தேவனுடைய பார்வையில் மிகவும் மதிக்கத்தக்கதான ஒன்றாய் இராது என்பது நிச்சயமே. கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் ஆவிக்குரியவற்றில் போஷிக்கப்படத்தக்கதாகவும், செழிப்படையத்தக்கதாகவும், பலப்படத்தக்கதாகவும், கட்டுப்படுத்துவதற்குரிய, பட்டினிப் போடுவதற்குரிய, குறைப்பதற்குரிய, அநேக மாம்சத்தின் ஆசைகளைக் கொண்டிருக்கின்றனர்.

## ''தசம பாகங்களைக்குறித்துப் பெருமையடித்துக்கொள்ளுதல்''

தசம பாகம் கொடுப்பது என்பது சரியான காரியமாக இருக்கின்றது. தேவனுக்கு மதிப்புக் கொடுக்கத்தக்கதாக, மந்தைகள் மற்றும் வயலின் விளைவுகளில் பத்தில் ஒரு பங்கு, அவருடைய ஊழியத்திற்குக் கொடுக்கும்படியாக தேவன் கட்டளையிட்டார்; மேலும் இந்த ஒரு கட்டளைக்கு/ ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், கர்த்தரே அனைத்து நன்மைகளையும் அருளுபவர் என்று நினைவுக்கூரப்பட்டால், பெருமையடித்துக்கொள்வதற்கு எதுவும் இராது. இப்படியாக தசம பாகம் கொடுப்பதில் பெருமைக்கும், பெருமை அடித்துக்கொள்வதற்கும் இடம் ஏது? இப்படியாகப் பெருமையடித்துக்கொள்வது என்பது, இருயத்தில் சுயதிருப்தியான நிலையையும், புத்திரர் வீட்டாரின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் அனைவரிடத்தில் எதிர்பார்க்கப்படும், மேலான அர்ப்பணிப்பைப் பண்ணுவதற்கு ஆயத்தமற்ற நிலைமையையும் காண்பிக்கின்றது; அதாவது இயேசுவின் பின்னடியார்கள் ஆகுவதற்கென்று தங்களிடத்திலுள்ள யாவற்றையும் அர்ப்பணம் பண்ணுவதற்கும், பிற்பாடு ஒவ்வொரு பணத்தையும், ஒவ்வொரு தாலந்தையும், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தின விதத்தைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்கிற உக்கிராணக்காரர்கள் ஆகுவதற்கும் அவசியமான மேலான அர்ப்பணிப்பைப் பண்ணுவதற்கு ஆயத்தமற்ற நிலைமையைச் சுட்டிக்காண்பிக்கின்றது. பரிசுத்தவான்கள் தங்களுடைய சுயத்தை வெறுத்தல் (அ) ஊழியங்கள் குறித்துப் பெருமையடித்துக் கொள்ளத்தக்கதாகக் காணப்படுகின்றார்களா? பரிசுத்தவான்கள் காரியங்களைக் கவனமாய்க் கவனித்து, மிகவும் ஆற்றல் மிக்கவர்கள்கூட, எவ்வளவு சொற்பமானவைகளைத்தான் நிறைவேற்ற முடிகின்றவர்களாய்க் காணப்படுகின்றார்கள் என்று பார்ப்பார்களாக; இப்படியாகப் பார்க்கும்போது, தாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினவைகளில், எவ்வளவு சொற்பமானவைகளைத்தான் தாங்கள் கர்த்தருக்குச் செய்ய முடிந்தது என்பதை அநேகர் வெட்கத்தோடே ஒப்புக்கொள்வார்கள்.

## ''தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்''

மாபெரும் பயபக்திக்கொண்டிருப்பதாக, தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்ளாதவர்களுக்கு, ஆயக்காரன் எடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றான். தாழ்மையான மனதையுடைய ஜனங்களாகிய இவர்கள், தாங்கள் தேவனுடைய பூரணமான நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ப வாழவில்லை என்பதை உணர்ந்தவர்களாகவும் பரிசேயர்கள் தங்களால் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, பிரமாணத்திற்கு ஏற்றபடி வாழமுடியும் என்று கொடுக்கபட்ட உறுதிமொழிகளினிமித்தம் சோர்ந்துப் போனவர்களாகவும் காணப்படுகின்றனர்; இந்த மிகவும் தாழ்மையான மனங்கொண்ட ஜனங்கள் பெரும்பாலும் சோர்ந்த மனப்பான்மையுடையவர்களாகவே காணப்படுகின்றனர்; மேலும் இதனிமித்தமாக இவர்கள் ஜாக்கிரதையற்றவர்களாகவும், பாவ வழியில்

போகின்றவர்களாகவும் தவறிப்போய்விட்டனர். உவமையில் ஆயக்காரன் தூர நிற்கின்றான்; அவன் ஆலயத்தின் பரிசுத்த பிரகாரங்களின் அருகாமையில் நெருங்கி வரவில்லை; அவன் கொஞ்சம் தொலைவிலேயே நின்றுகொண்டான். அவன் தேவனுடைய பூரணத்திற்கும், தன்னுடைய சொந்த அபாத்திரமான பூரணமற்ற மற்றும் பாவமுள்ள நிலைக்கும் இடையிலான மாபெரும் வித்தியாசத்தை உணர்ந்தவனாய் இருந்தான். அவன் தன் மார்பில், தன் இருதயத்தில் அடித்துக்கொண்டு, அதாவது அவன் மரணமாகிய தெய்வீக தீர்ப்பை ஏற்றுக்கொண்டது போலும், தான் மரணத்திற்குப் பாத்திரவான் போலும், எனினும் இரக்கம் கேட்பது போலும் மார்பில் அடித்துக்கொண்டு, தேவனே என்மேல் கிருபையாய் இரும், நான் ஒரு பாவி! என்று கூறினான். வெளிப்புறத்தில் அவன் மனித கண்ணோட்டத்தின்படி, ஒழுக்கமற்றவனாகவோ (அ) நல்ல மனுஷனாகவோ இல்லாமல் இருப்பினும், அவனுடைய உள்தோற்றமோ, தேவனுடைய கண்ணோட்டத்தில், இருவரிலும் சிறந்ததாக இருந்தது. அவன் தன் மீது நம்பிக்கை வைக்கவில்லை: ஆகவே தாழ்மையுடன் கூடிய விசுவாசம் எனும் ஒரே நிபந்தனையின் கீழ் அருளப்படும், தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கான சிறந்த நிலைமையில் காணப்பட்டான். இவர்கள் இரண்டு பேரில் வெளிப்புறத்தில் ஒழுக்கம் குறைந்தவனாகவும், உட்புறத்தில் பிதாவினால் மிகவும் அங்கீகரிக்கத்தக்கதான நிலைமையில் காணப்பட்டவனே, பரியேசனைப் பார்க்கலும் நீதிமானாக்கப்பட்டான் என்று நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார். இதன் அடிப்படையில் பாடம் கொடுக்கத்தக்கதாக, லூக்கா 18:14-ஆம் வசனத்தினுடைய, பின்பாக வார்த்தைகளைக் கூறினார்.

**"தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்,**
**தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்"**

தாழ்மை இல்லையெனில், நம்முடைய நிலைமையும், நம்முடைய தகுதிகளும் என்னவாக இருப்பினும், நம்மால் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று தாழ்மையினுடைய பெரும் அவசியத்தைக் கர்த்தர் வேதவாக்கியங்கள் எங்கும், அடிக்கடி நம்முடைய கவனத்திற்குக்கொண்டு வருகின்றார். இந்த உவமையில் தாழ்மை எனும் பண்பானது ஆயக்காரனிலும்; இப்பண்பு இல்லாத காரியம், பரிசேயனிடத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாழ்மை மனங்கொண்டுள்ளவர்களால் மாத்திரமே, தாங்கள் பாவி என்றும், தாங்கள் தெய்வீகத் தயவிற்கும், அன்பிற்கும் அபாத்திரர்கள் என்றும், கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளப்பட்டுள்ள நீதிமானாக்கப்படுதலும், மன்னிப்பும் அவசியம் என்றும், ஒப்புக்கொள்வதற்கு ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். இது மாத்திரமல்லாமல் இப்படியாக தாழ்மை கொண்டிருந்து, கர்த்தரிடத்தில் வந்து, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், ஒருவேளை தாழ்மை இல்லாமல் போய்விட்டால், கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கும் நமக்கான கிருபையான தகுதியும், பறிமுதல் செய்யப்படும். பெருமை என்பது, சுயதிருப்திக்கொள்ளுதலையும், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறின நமது மகிமையான தலை நமக்குப் போதுமானவராய் இருக்கின்றார் என்பதைப் பற்றின புறக்கணித்தலையும் குறிக்கிறதாய் இருக்கும் (யோவான் 15:5).

அந்தோ, தேவனைப்பற்றின கொஞ்சம் அறிவையும், அவருடைய இரட்சிப்பின் திட்டம் பற்றின அறிவையும் உடையவர்கள் அநேகர், தாழ்மை இல்லாததினாலும், தங்களுடைய சொந்த தவறுகளைக் காண்பதற்கும், அவைகளை ஒத்துக்கொள்வதற்கும், தெய்வீகக் கிருபை மற்றும் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆயத்தம் இல்லாமையினாலும், சரியானப் பாதையில் தொடர்வதற்குத் தடைப்பண்ணப்படுகின்றனர். விசுவாசம் வைத்து, தங்களுடைய பழைய பாவங்களிலிருந்து கழுவப்பட்ட பிற்பாடு, அநேகர் தாழ்மை இல்லாததினால், இறுமாப்பிற்கும், பெருமைக்கும் நேராய் வழிநடத்தப்பட்டுள்ளனர்; இவைகள் எப்படியாகிலும், புதிய சிருஷ்டியாகிய நமக்குப் பாதகத்தையே உண்டு பண்ணுகின்றது; இவைகள் நிச்சயமாய், "தங்களைத் தாழ்த்திக் கொள்பவர்களை மாத்திரமே உயர்த்தக்கூடிய இராஜ்யத்தில்," பங்கடைவதற்கான வாய்ப்பினை இழக்கச் செய்து விடும்.

**ஆமென்!**

---

# கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர்

## மத்தேயு 21:1-17

***"கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்." மத்தேயு 21:9***

கடந்த பாடத்தில் இயேசுவும், அவருடைய சீஷர்களும், மற்றவர்களும் பஸ்காவை அநுசரிக்கும்படிக்கு எருசலேமை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் ஏற்கெனவே எரிகோவைக் கடந்துவிட்டனர். போகிற வழியில்தான் இயேசு தாலந்துகள் பற்றின உவமையைப் பேசினார்; இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, வெள்ளி இரவு மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் வீடு இருந்த பெத்தானியாவுக்கு வந்தடைந்தார். ஓய்வு நாளன்று அவர் தம்முடைய நண்பர்களுடன் ஓய்ந்திருந்து, அன்றைய சாயங்கால வேளையில் தம்மைக் கனப்படுத்தும் விதமாக ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த பந்தியில் பங்குகொண்டு, மரியாளிடமிருந்து விலையேறப்பெற்ற நளதத்தைலத்தினால் அபிஷேகம் பெற்றுக்கொண்டார்; அடுத்த நாளாகிய வாரத்தின் முதலாம் நாளின் காலை வேளையில், எருசலேமை நோக்கிய தம்முடைய பிரயாணத்தை இயேசு தொடர்ந்தார். அந்த வாரம் முழுவதும் அவர் தினந்தோறும் பட்டணத்திற்குச் சென்று, இரவில் பெத்தானியாவுக்குத் திரும்பி, பெத்தானியாவிலேயே தங்கியிருந்தார். ஆலயத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் பெத்தானியா காணப்பட்டது. இங்கிருந்து நம்முடைய பாடம் ஆரம்பமாகிறது.

கர்த்தருடன்கூட அநேக திரளான ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள்; மேலும் சிலர் அவரைப் பார்க்கும்படியாக எருசலேமிலிருந்து பெத்தானியாவுக்கு வந்திருந்திருந்தார்கள். காரணம் இவர்கள், லாசருவை மரணத்திலிருந்து எழுப்பின நாசரேத்தூர் தீர்க்கத்தரிசி, லாசருவின் வீட்டில் காணப்படுகின்றார் எனக் கேள்விப்பட்டிருந்தனர். இந்தக் கூட்டத்தினர் ஒலிவ மலைகளுக்கு மேலாகக் காணப்படும் சிறிய கிராமமாகிய பெத்பகேயுவை அடைந்தபோது, தமக்கு ஒரு கழுதையையும், அதனோடு அதன் குட்டியையும் கொண்டுவரத்தக்கதாக, தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை, மற்றொரு கிராமத்துக்கு அனுப்பி வைத்தார். இவ்விலங்கினுடைய எஜமான், இயேசுவுக்கு அறிமுகமானவராக இருக்கலாம்; இப்படியிருக்குமாயின் அந்த எஜமான், கர்த்தருடைய சீஷருக்கும்கூட அறிமுகமானவராக இருக்கலாம். எப்படியிருப்பினும் கர்த்தருடைய வேண்டுகோளுக்கு மதிப்புக்கொடுக்கப்பட்டது; மேலும் மாற்கு சுவிசேஷத்தின்படி (revised மொழியாக்கத்தின்படி) கழுதையை இயேசு, எஜமானிடம் திருப்பி அனுப்பி வைப்பார் எனச் சீஷர்கள் வாக்களித்ததாகவும் காணப்படுகின்றது. நமது கர்த்தர், கழுதையின் மீது சவாரி பண்ணுவது என்பது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும்; அந்த வாரம் முழுவதும் அவர் ஒவ்வொரு நாள் காலையிலும், சாயங்காலத்திலும் நீண்ட தூரம் போக்கும் வரத்துமாய் இருந்தாலும், இந்த ஓர் இடத்தில் மாத்திரமே அவர் சவாரி பண்ணினதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சமயத்தில் அவர் சவாரி பண்ணினதற்கான காரணம் களைப்பு அல்ல என்பதில் உறுதியே. முற்காலங்களில் இராஜாக்கள் வெள்ளைக் கழுதைகளின் மீது சவாரி பண்ணி தங்களை அறிமுகப்படுத்துவது போன்று, இயேசு ஜனங்களுக்குத் தம்மை முன்வைத்தார்.

### சவாரியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம்

முன்னிலை வகிக்கும் எழுத்தாளர் ஒருவர் இச்சம்பவம் தொடர்பான விஷயத்தில், நம்முடைய கர்த்தருடைய நடத்தையையும் மற்றும் திட்டத்தையும் மிகவும்தவறான கண்ணோட்டத்தில் பின்வரும் விதத்தில் முன்வைக்கின்றார்: "யூத தேசத்தார் தம்மை மேசியா என்று ஏற்றுக்கொள்வதற்கும், இப்படியாக அழிவிலிருந்து அவர்களை இரட்சிக்கவும் மற்றும் மனுஷர் மத்தியில் பரலோக இராஜ்யத்தைக் கொண்டுவரும் விஷயத்தில், அவர்களை மாபெரும் வல்லமையாக ஆக்கவுந்தக்கதாக, இயேசு இப்பொழுது மூன்று நாட்களாக, தம்முடைய இறுதி பிரயாசங்களை எடுத்தார். தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக இயேசு பல்வேறு விதங்களில் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தார். ஓர் இராஜாவாக அவர்களுக்குத் தம்மை அவர் முன்வைத்தார். தம்முடைய பிதாவின் வீடாகிய ஆலயத்தைச் சுத்திகரித்ததின் மூலமாக அவர் தமது இராஜரிக அதிகாரத்தைக் காட்டினார். வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவர் வல்லமை மற்றும் இரக்கத்தின் இராஜரிகச் செய்கைகளை நிகழ்த்தினார். அவர் விவாதித்தார், அவர் சொற்பொழிவாற்றினார், அவர் வற்புறுத்தினார், அவர் போதித்தார், அவர் மறுப்புகளுக்குப் பதிலளித்தார், அவர் பயமுறுத்தினார், அவர் எச்சரித்தார்."

ஆனால் இவைகள் அனைத்திற்கும் நேர்மாறாக ஜனங்கள் தம்மை, "இராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டு போகாதபடிக்கு" ஜனங்கள் தூண்டப்பட்டுவிடுவதை, கர்த்தர் வேண்டுமென்றே தவிர்த்துவிடுவதை நாம் பார்க்கின்றோம். (யோவான் 6:15) உவமைகளினாலும், மறைப்பொருள்களினாலும் அவர் ஜனங்களுக்குப் போதித்தார், அதுவும் தனிமையிலிருக்கும் போதுதான், "தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது" என்று கூறி தம்முடைய சீஷர்களுக்கு அவைகளை விவரித்துக்கொடுத்தார். (மாற்கு 4:11-12) இந்தச் சவாரி பண்ணுவதற்குக் கொஞ்சம் நாட்களுக்கு முன்னதாகத்தான், தாம் தேசத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தருளுவார் என்று தம்முடைய சீஷர்களுக்குத் தெரிவித்திருந்தார். இவைகளையெல்லாம் அவர்கள் பகுதியளவு புரிந்துகொண்டிருந்ததினால்தான், இப்படிப்பட்ட எண்ணத்தை அவர் மனதிலிருந்து மாற்றிப்போட செய்வதற்கென அவர்கள் முயற்சி எடுத்தனர்; மேலும் தம்முடைய இராஜ்யம் பரலோகத்திற்குரியது என்றும், "மறுஜென்ம" காலங்களில் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்க்கும்படியாக அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்திருப்பார்கள் என்றும் அவர்களுக்குக் கர்த்தர் விவரித்துக்கொடுத்தார்.

தாம் புறக்கணிக்கப்படுவார் என நமது கர்த்தர் அறிந்திருந்தார்; அவர் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், அவர்களைப் பார்த்து, கண்ணீர்வடித்து, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். பூமிக்குரிய ஓர் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கெனத் தமக்கு ஆதரவு அளிக்கத்தக்கதாக ஜனங்களை வசீகரிக்கும் நோக்கம் கொஞ்சமும் அவருக்கு இருக்கவில்லை என்பது உறுதியே. தம்முடைய நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்கென அவர் ஒருவேளை பேசி இருந்திருப்பாரானால், அவருக்கு எத்துணை அதிகாரம் காணப்பட்டிருக்கும் என்பதிலும் உறுதியே. அவர் பிலாத்துவுக்கு முன்பாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும், அவர் தம்மைக் காக்கும்படிக்கும் எதுவும் கூறாததினிமித்தம், உரோம தேசாதிபதியாகிய பிலாத்துக்கூட ஆச்சரியப்பட்டார். இவைகளனைத்துமே, "தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" என்ற தீர்க்கத்தரிசனத்திற்கு இசைவாகக் காணப்பட்டது. (ஏசாயா 53:7)

கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருக்கும் யூதர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தவே இயேசு நாடினார்; தெய்வீக ஞானத்தினுடைய வழிநடத்துதலின் கீழ், தம்முடைய செய்தியானது இந்த வகுப்பாரை மாத்திரமே கவர்ந்து இழுப்பது, பிதாவின் திட்டமாக இருப்பதை இயேசு புரிந்துள்ளார் மற்றும் மற்றவர்கள் கவரப்பட வேண்டுமென இயேசுவும் விரும்பவில்லை. உத்தம இஸ்ரயேலர்கள், பரிசுத்தமானவர்கள் தவிர, அத்தேசத்தின் மீதமானவர்கள், தெய்வீகத் திட்டம் மற்றும் ஏற்பாட்டின்படி நமது கர்த்தரைப் புறக்கணித்து, அவரைச் சிலுவையில் அறைந்துபோட்டு, அவருடைய இரண்டாம் வருகையின் வேளையில் அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்பது நிகழ்வது வரையிலும் 18 - நூற்றாண்டுகளுக்கும் மேலாக குருடான நிலைமையில் காணப்படுவார்கள். (சகரியா 12:10) இதற்கிடையில் திட்டமிட்டபடி, கர்த்தருடைய கிருபையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, உலகெங்கும் கடந்துபோய், இருதயத்தில் உண்மையுள்ளவர்களைச் சீஷர்களாக்கி, அதாவது பரலோக இராஜ்யத்திற்கு உடன்சுதந்தரர்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகப் பல்வேறு ஜாதிகள், ஜனங்கள், கோத்திரங்கள், பாஷைக்காரர்களிலிருந்து ஒரு பக்தி வைராக்கியமுள்ள வகுப்பாரை ஏற்படுத்துகின்றது; இந்தப் பரலோக இராஜ்யமானது, தேவனுடைய ஏற்றவேளை வரையிலும், அதாவது நமது கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் ஒரு பூமிக்குரிய இராஜ்யமாகவோ, ஒரு பரலோகத்திற்குரிய இராஜ்யமாகவோ ஸ்தாபிக்கப்படுவதற்குத் திட்டமிடப்படவில்லை.

## தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்

இரண்டு தீர்க்கத்தரிசனங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, சாட்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது; அதாவது, "இதோ உன் இராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின் மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்." (ஏசாயா 62:11; சகரியா 9:9-ஆம் வசனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்) இப்படியாக உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாக இயேசு கழுதையின் மீது

ஏறி வந்தார். இந்தத் தீர்க்கத்தரிசனத்தை யூதர்கள் நன்கு அறிந்திருந்தனர். மேலும் பல நூற்றாண்டுகளாக இத்தீர்க்கத்தரிசனத்தை மேசியா நிறைவேற்றும்படிக்குக் காத்திருந்தனர். இஸ்ரயேலர்கள் இயேசுவைப் புறக்கணிக்கும் விஷயத்தில் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லாமல் போகத்தக்கதாக, தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதை, தெய்வீகத் திட்டத்தின்படி நமது கர்த்தர் சொல்லர்த்தமாகவே உண்மையில் நிறைவேற்ற வேண்டுவது அவசியமாய் இருந்தது. ஆகவே எதிர்க்காலத்தில் இஸ்ரயேலர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போது, அவர்களுடைய குருட்டுத்தன்மை அப்புறப்படுத்தப்படும்போது, தாங்கள் குத்தினவரை அவர்கள் கண்டு, அவரைப் புறக்கணித்துப் போட்டதற்காகத் துக்கங்கொள்ளும்போது, அவர்கள் தங்களுக்கெனச் சாக்குப்போக்கு எதுவும் சொல்ல முடியாமல் இருப்பதைக் காண்பார்கள்; கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்களாகிய தங்களுக்கு, அவர் தம்முடைய அனைத்து நல் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியுள்ளார் என உணர்ந்துகொள்வார்கள். மேலும் தாங்கள் புறக்கணித்ததில் உள்ள குற்றம் முற்றும் தங்களுடையதே என்று உணர்ந்துகொள்வார்கள்; இன்னுமாகத் தங்களுடைய இராஜாவை ஏற்றுக்கொள்வதற்குரிய இருதய நிலைமையில் தாங்கள் இல்லாமல் இருந்துள்ளார்கள் என்பதையும், தாங்கள் பெருமையுள்ளவர்களாகவும், தற்பெருமையடித்துக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதையும் உணர்ந்துகொள்வார்கள்; இன்னுமாக அவர் தூய்மையானவராகவும், சுயநலமற்றவராகவும் இருந்திருக்க, தாங்கள் தூய்மையற்றும், சுயத்திற்காக நாடுபவர்களாக இருந்துள்ளதையும், தாங்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றுப்போனதையும் உணர்ந்துகொள்வார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், தேவன் தாம் நோக்கம் கொண்டிருந்ததும், வாக்களித்திருந்ததுமாகிய அனைத்தையும் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு நிறைவேற்றினார். ஆகவே புறக்கணித்ததிலுள்ள தவறு முற்றிலும் அவர்களுடையதே என உறுதியானது.

கர்த்தரோடுகூடக் காணப்பட்ட திரளான ஜனக்கூட்டத்தார் சூழ்நிலையைக் கிரகித்துக்கொண்டவர்களாக மேசியாவிற்கு, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று உரக்கக் கூறிக்கொண்டிருந்து, அவர் ஏறிவரும் விலங்கிற்கு இராஜரிகமாக ஒரு வழிப்பாதையை ஏற்படுத்தினார்கள்; சிலர் தங்கள் வஸ்திரங்களை விரித்தனர். வேறுசிலர் மரக்கிளைகளையும் பரப்பினர். இப்படியாக ஜனங்கள் தங்களுடைய கனத்திற்குரிய அதிகாரிகளை நடத்துவது என்பது பல நூற்றாண்டுக்காலமாக, பல்வேறு ஜனங்கள் மத்தியில் இருந்த வழக்கமாயிருந்தது. மலர்கள் அதிகமாய்க் காணப்படும் நாடுகளில், மலர்கள் பயன்படுத்தப்படுவது உண்டு; இன்னும் சில நாடுகளில் மரக்கிளைகள் பயன்படுத்தப்படுவதுண்டு; சில சந்தர்ப்பங்களில் உண்மையுள்ள பிரஜைகள் தங்கள் வஸ்திரங்களை, விரிப்பதற்குப் பயன்படுத்துவதும் உண்டு. இயேசுவுடன்கூடக் காணப்பட்ட இந்தத் திரளான ஜனக்கூட்டத்தார் அநேகர் இயேசுவை விரும்பினவர்களாக இருப்பினும், இவர்கள் அனைவரும் பரிசுத்தவான்கள் அல்ல. இந்த ஊர்வலத்தை அப்போஸ்தலர்கள் தூண்டிவிடவில்லை என்ற உண்மையானது, வேறொரு சுவிசேஷகரின் பதிவு உறுதிப்படுத்துகின்றது. அதாவது குறிப்பிட்ட சில பரிசேயர்களும், வேதபாரகர்களும் சீஷர்களிடத்தில் வந்து, இப்படியான சம்பவங்கள் சரியில்லை எனக் கர்த்தருடைய கவனத்திற்கு அப்போஸ்தலர்கள் கொண்டுவரும்படி கூறினார்கள் என்பதில் உறுதிப்படுகின்றது.

நமது கர்த்தருடைய மேசியாத்துவம் தொடர்புடைய விஷயத்தில் அவரிடம் வெளிப்படும் தன்னடக்கமானது கவனிக்கத்தக்கதாகும். அவர் தம்மை மேசியா என்று அறிவித்த, ஒரு சம்பவத்தைக்கூட நாம் அறியோம். அவர் அதிகபட்சமாய்த் தம்மைக்குறித்து அறிவித்தது, அவர் தேவனுடைய குமாரன் என்பதேயாகும். அதாவது, பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அவருடைய உண்மையுள்ள சீஷர்கள் எவருக்கும் பொருந்தும் பெயரையே இயேசு தமக்கென உரிமைப்பாராட்டிக்கொண்டார். எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே, அவர் மேசியா என்ற கனமானது மற்றவர்களாலேயே குறிப்பிடப்பட்டதே ஒழிய, மாறாக கர்த்தரினால் சொல்லி வாதாடப்படவில்லை. உதாரணத்திற்கு முதலாம் தருணத்தின்போது, இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "ஜனங்கள் என்னைக்குறித்து யார் என்று சொல்கின்றார்கள்?" என்றும், பின்னர் "நீங்கள் என்னை யார் என்று சொல்கின்றீர்கள்" என்றும் கேட்டதற்கு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய மேசியா" என்று பேதுரு பதிலளித்தப்போது, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறி, தம்முடைய ஒப்புக்கொள்ளுதலைச் சுட்டிக்காட்டினார். (மத்தேயு 16:17) (இரண்டாம் தருணத்தின்போது) இப்பொழுது திரளான ஜனங்களே அவரைத் தாவீதின் குமாரன் என்றும், மேசியா என்றும் பறைச் சாற்றினார்கள். அவர் அமைதியைக் காத்துக்கொண்டவராகக் காணப்பட்டார். மறுப்புகள்/எதிர்ப்புகள் வந்தபோது மாத்திரமே, "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" என்ற

தீர்க்கத்தரிசனம் நிறைவேறத்தக்கதாக, ஆர்ப்பரித்து, இப்படியாக சத்தமிடுதல் அவசியம் என்று இயேசு கூறினார். (சகரியா 9:9) மூன்றாம் தருணத்தில், அவருடைய மேசியாத்துவம், "அப்படியானால் நீர் இராஜாவோ?" எனப் பிலாத்து கேள்வி கேட்டபோது குறிப்பிடப்பட்டது; பிலாத்துவின் கேள்விக்கு இயேசு: "நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்" என்று பதிலளித்தார். (யோவான் 18:37)

## உன்னதத்திலே ஓசன்னா

இந்தப் பவனியும், நமது இரட்சகருக்கான, இராஜ கனத்துடனான ஆரவாரமும் யூத தேசத்திற்கு ஒரு சாட்சியாய் இருப்பதைக் காட்டிலும், அதாவது அவர்கள் ஒன்றில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அல்லது புறக்கணிக்கத்தக்கதாக அவர்களுக்கு முன்பாக அவர்களுடைய இராஜா முன்வைக்கப்படுதலைக்காட்டிலும் வேறு ஏதேனும் அர்த்தங்கள் உள்ளனவா? அக்காலக்கட்டத்தில் இச்சம்பவத்திற்கு இதைக்காட்டிலும் வேறே அர்த்தம் இருக்கவில்லை. ஆனால், இதில் இந்த யுகத்தின் முடிவில் காணப்படும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு மறைமுகமாக ஒரு படிப்பினை இருக்கின்றது. ஏனெனில் யாக்கோபின் மரணம் துவங்கி, இச்சம்பவம் வரையிலான மாம்சீக இஸ்ரயேலர்களுடைய வரலாறானது, இயேசுவின் மரணம் துவங்கி, அவர் தம்முடைய மகிமையில் வந்து, தம்முடைய ஜனங்களுக்கு முன் தம்மை முன்வைப்பது வரையிலுமாகக் காரியங்களுக்கு தெய்வீக ஏற்பாட்டின்படி நிழலாக இருக்கின்றது. அவர், "இஸ்ரயேலின் இரு வீட்டாராகிய" ஆவிக்குரிய வீட்டாருக்கும், மாம்சீக வீட்டாருக்கும் முன் தம்மை முன்வைக்க வேண்டும் என்றே தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகள் தெரிவிக்கின்றன. மாம்சீக வீட்டார் மத்தியில் உண்மையுள்ள மற்றும் உண்மையற்ற இஸ்ரயேலர்கள் காணப்பட்டது போலவே, இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான ஆவிக்குரிய வீட்டாராகிய, "கிறிஸ்தவ மண்டலத்திலும்" மேசியாவிற்காகவும், அவருடைய இராஜ்யத்திற்காகவும் காத்துக்கொண்டிருப்பதாக அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் உண்மையுள்ள மற்றும் உண்மையற்ற இஸ்ரயேலர்களும் காணப்படுகின்றனர்.

மாம்சீக இஸ்ரயேலர்கள், கர்த்தர் தங்களுடைய இராஜாவாக வருவதற்கும், பூமியில் நீதியை ஸ்தாபிப்பதற்கும், ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய நிபந்தனைக்கு ஏற்ப மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கெனத் தங்களைக் கருவியாய்ப் பயன்படுத்துவதற்கும் 1845 வருடங்கள் காத்திருந்தார்கள். மேசியா வந்தபோது, அவரை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இராமல், அவருடைய உடன் வேலைக்காரர்களாக இருப்பதற்குத் தகுதியற்றுப் போனார்கள்; ஆனால் சொற்ப உண்மையான இஸ்ரயேலர்களை மாத்திரம் அவர் அந்தத் தேசத்திலிருந்து சேர்த்துக் கொண்டு, அவர்களைப் புதிய ஜாதிக்கான அணுக்களாக்கிவிட்டார். மாம்சீக இஸ்ரயேலர்களாகிய, யூத தேசத்தார் தள்ளப்பட்டு, புறக்கணித்துப் போடப்பட்டபோது, கர்த்தர் முன்னறிந்து, முன்னுரைத்ததுபோன்று அனைத்து ஜாதிகளிலிருந்தும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைத் தெரிந்தெடுக்க ஆரம்பித்தார். இயேசுவின் மரணம் முதல், இயேசு தம்மை இராஜாவாக முன்வைப்பது வரையிலான 1845 வருடங்களாகப் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் காத்துக்கொண்டிருந்தனர்.

நமது மீட்பர் எருசலேமுக்குச் சவாரி செய்து, தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முன்வைத்த இச்சம்பவத்திற்கு இசைவாக கி. பி. 1878-இல் நமது மீட்பர் தம்மை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு முன்வைத்ததற்குச் சாட்சியாக, அநேக வேதவாக்கியங்கள் காணப்படுகின்றன. (இக்காரியம் தொடர்பான தீர்க்கத்தரிசனமான காரியங்களுக்குத் தொகுதி 2 மற்றும் 3 பார்க்கவும்) இக்காலப் பகுதியில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், "பாபிலோன்" – யூத ஜாதியார் புறக்கணிக்கப்பட்டது போலவே – புறக்கணிக்கப்பட்டார்கள் என நாம் நம்புகின்றோம். இந்தப் புறக்கணிக்கப்படுதலை/தள்ளிவிடப்படுதலை, கிறிஸ்தவ மண்டலத்தார் உணர்ந்துகொள்ளவில்லை; மாம்சீக இஸ்ரயேலும், அதன் வீடு பாழாக்கிவிடப்பட்டு, அழிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை உணரவில்லை. மாம்சீக இஸ்ரயேலர்களை நமது கர்த்தர் புறக்கணித்துப்போட்டு, முப்பத்தேழு வருடங்களுக்குப் பின்பாக அவர்களுடைய பட்டணங்களும், ஆட்சி அமைப்பும் அழிந்ததுபோல, 1878-ஆம் வருடத்திலிருந்து (37 - வருடங்களுக்கு) சில வருடங்களுக்குப் பின்னர், தீர்க்கத்தரிசனத்தில் உரைக்கப்பட்டதுபோல, மகா உபத்திரவக் காலத்தில் கிறிஸ்தவ மண்டலம் அழிவிற்குள் செல்லும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

## ஆலயத்தைச் சுத்திகரித்தல்

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவரைத் தங்களது மேசியா என்றும், வந்திருக்கும் தங்களுடைய கர்த்தரும், இராஜாவும் என்று ஏற்றுக்கொள்கின்ற அல்லது அவரைப் புறக்கணிக்கின்ற

விஷயத்தில் தீர்மானம் எடுக்கும் காலக்கட்டத்தில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம்; அதாவது, "கர்த்தருடைய நாமத்தில் வருகிறவராகிய தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று தங்களுடைய இருதயத்தில் ஆர்ப்பரிப்பதற்குரிய அல்லது இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், வெறுப்படைந்தவர்களில் ஒருவராக இருப்பதற்குத் தீர்மானம் எடுக்கும் காலக்கட்டத்தில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம். அவரை ஏற்றுக்கொள்பவர்கள் நிச்சயமாக, பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் மீது வந்த ஆசீர்வாதமான அனுபவங்களுக்கான நிஜத்தை அடைவார்கள். நிஜம், நிழலைக்காட்டிலும் மிகவும் பெரியதாகவும், பிரம்மாண்டமானதாகவும் காணப்படும். அதாவது, அழியக்கூடிய நிலையிலிருந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் அழியாத நிலைக்கு மாற்றப்படுவார்கள். கர்த்தரையும், ஆசீர்வாதங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு இருதயத்தில் ஆயத்தமற்றிருக்கும் மற்றவர்களோ, மகா உபத்திரவக் காலத்தில் பங்கடைவார்கள்; இந்த மகா உபத்திரவக் காலத்துடன் இந்த யுகம் முடிவடைந்து உடனடியாக வரும் நீதியின் மகிமையான ஆயிரவருட ஆளுகைக்கென மனுக்குலத்தை ஆயத்தப்படுத்தும்.

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்றுகூறி, யூத தேசத்திற்கான அழிவு பற்றின தீர்ப்பை இயேசு அறிவித்த உடனே, அந்தத் தேசம் தொடர்புடைய அனைத்துப் பிரயாசங்களையும் அவர் நிறுத்திவிட்டார் (மத்தேயு 23:38-39); தேச அளவிலான அவர்களுக்கான பரீட்சை முடிந்தபோதிலும், சரியான இருதய நிலைமையில் காணப்பட்ட தனி நபர்களை அவர் இன்னமும் நாடித்தேடினார். அவர் ஆலயத்திற்குச் சென்று, அங்கிருந்த விற்கிறவர்களையும், காசுக்காரர்களையும், கயிற்றினாலான சவுக்கைக்கொண்டு துரத்தி, ஆலயத்தைச் சுத்திகரித்தார். வாழ்க்கையின் எந்த மட்டத்திலுமுள்ள யூதனுக்குரிய அதிகாரத்தையும், அவர் கொண்டிருந்தார்; இன்னுமாக அவருடைய இராஜ அதிகாரமும், சரீரப்பிரகாரமாக அவருக்கு ஆதரவு அளிப்பதற்கு ஆயத்தமாய் அவரைச் சூழ்ந்திருந்த ஜனங்கள் மூலமான அதிகாரமும் அவர் கொண்டிருந்தார்; இவைகளுக்கெல்லாம் அப்பால், அவரிடம் பரலோக வல்லமையும் இருந்தது.

## நிஜத்தில் ஆலயம் சுத்திகரிக்கப்படுதல்

நாம் புரிந்திருக்கிறபடி, இச்சம்பவமானது ஒரு நிழலாகும். அதாவது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இப்பொழுது பொருந்தக்கூடிய மாபெரும் ஒரு சத்தியத்திற்கான விளக்கமேயாகும். ஏரோதினால் கட்டப்பட்ட ஆலயம் நிழலேயாகும். உண்மையான ஆலயம் என்பது, ஜீவனுள்ள தேவனுடைய சபையாகும். இந்தச் சபை எனும் ஆலயம் இரண்டு கண்ணோட்டங்களிலிருந்து கருதப்படலாம்: (1) எதிர்காலத்தில், மகிமையின் சபை; இதில், இப்பொழுது அடிக்கப்பட்டு, ஆயத்தப்படுத்தப்படும் தற்காலத்திலுள்ள கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள், ஜீவனுள்ள கற்களாக இருப்பார்கள். (2) தாழ்வான நிலையிலும் பூரணமின்மையிலும் காணப்படும் தற்போது உள்ள சபை, தேவன் வாசம் பண்ணும் கூடாரமாய் இருக்கும். நிழலில் ஆராதனை விஷயத்திலும், ஆராதனை ஏறெடுக்கிறவர்கள் விஷயத்திலும் கடுமையான விதிமுறைகள் காணப்பட்டதுபோல, எதிர்க்காலத்திற்குரிய மகிமையான ஆலயமாக ஸ்தாபிக்கப்படத்தக்கதாக, ஆயத்தமாகுவதற்கு ஏதுவாக தற்காலத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளைச் செய்யும் (ஆவிக்குரிய) லேவியர் மற்றும் ஆசாரியர்களுக்கும், தேவனுடைய வார்த்தைகளில் உறுதியான விதிமுறைகள் காணப்படுகின்றன.

இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில், தேவன் தம்முடைய ஆலயமாகிய, கிறிஸ்தவ மண்டலத்தைச் சுத்திகரிப்பதற்கான நோக்கம்கொண்டிருக்கின்றார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. மகிமையிலுள்ள ஆலயத்தில் சுத்திகரிக்கத்தக்கதாக, தூய்மையற்ற எதுவும் இராது, மற்றும் அசுத்தமான எதுவும் அங்கு நுழைவதுமில்லை; ஆனால் தற்காலத்திலுள்ள சபையின், ஆலயத்தின் விஷயத்தில், அதாவது அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே காணப்பட வேண்டிய சபையின், ஆலயத்தின் விஷயத்தில் கலப்பினம் காணப்படுகின்றபடியால், கிறிஸ்தவர்கள் மற்றும் சபை என்ற பெயரின் கீழ் முற்றிலும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும், சுயநலத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வுலகத்துடன் தொடர்பு கொண்டிருப்பவர்களுமாகிய அநேகரும், அநேக பிரிவினர்களும் காணப்படுகின்றனர். "இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் (வருஷம்) செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" என்று இந்த ஆலயத்தைக் குறித்துத் தீர்க்கத்தரிசியாகிய தானியேலின் மூலம் முன்னுரைக்கப்பட்டப் பிரகாரம், சுத்திகரிப்பதற்குக் கர்த்தர் நோக்கம்கொண்டுள்ளார். (தானியேல் 8:14) நிழலான ஆலயத்தில் நமது கர்த்தரால்

நிறைவேற்றப்பட்டது, வெறும் நிழலான சுத்திகரித்தலேயாகும்; நிஜமான சுத்திகரித்தலே உண்மையான முக்கியத்துவம் உடையதாகும்; மேலும் இந்தச் சுத்திகரிப்பின் காலங்களில்தான் நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். (தொகுதி 3, அத்தியாயம் 4 - பார்க்கவும்)

நிழலானது, சுத்திகரிப்பின் அம்சம் தொடர்பான கருத்தை நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; சுத்திகரிப்பானது பரிசுத்தக் காரியங்களை விற்கிறவர்களைப் பிரதானமாய்ப் பாதிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது சுயநலமான காரணங்களுக்காகத் தங்களைக் கர்த்தருடைய வேலையில் இணைத்துக்கொண்டவர்களைப் பெரிதும் பாதிக்கின்றதாய் இருக்கும்; காரணம் இப்படிப்பட்டவர்கள், தங்கள் சபையுடன் அடையாளப்பட்டுக் காணப்படும்போதுதான், அதிகமாக மனுஷர் மத்தியில் கனத்தையும், ஜீவியத்திற்கான அதிகப்படியான சொகுசையும், சௌகரியங்களையும், நல்ல வியாபாரத்தையும் அடையப்பெற முடிகின்றது. இந்த வகுப்பாரைச் சார்ந்த அனைவரும் வெளியே துரத்தப்பட வேண்டும்; இவ்வேலையைக் கர்த்தர் தாமே பார்த்துக்கொள்வார். கர்த்தருடைய வீடு, விற்கிறவர்களின் வீடாய் இருக்கக்கூடாது. கர்த்தர் தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையே நாடுகிறாரேயொழிய, அப்பத்திற்காகவோ, மீனிற்காகவோ அல்லது ஏதேனும் பூமிக்குரிய ஆதாயத்திற்காகவோ தம்மைத் தேடுகிறவர்களைக் கர்த்தர் நாடுவதில்லை. ஆகவே சரியான வகுப்பாருக்குச் சத்தியம் ஆசீர்வாதமாய் இருப்பதற்கு ஏதுவாகவும், இராஜா மற்றும் அவருடைய உண்மையுள்ளவர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியற்ற வகுப்பார் சத்தியத்தினால் அடையும் வெறுப்பின் காரணமாகப் பிரிக்கப்படுவதற்கு ஏதுவாகவும் உள்ள விதத்தில், கர்த்தர் சத்தியத்தை முன்வைப்பார். தற்காலத்தில் கர்த்தரும், சத்தியமாகிய சவுக்கும் வியாபாரத்திற்காக ஆலயத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரமே பாதிப்பாய் இருக்கின்றதே ஒழிய, மற்றவர்கள் எவருக்கும் பாதிப்பாய் இருப்பதில்லை. பெயரளவிலான ஆலயத்தில் இன்றும் காசுக்காரர்கள் இருக்கின்றனர்; இவர்கள் உணவு அல்லாதவைகளைக் கொடுப்பதற்கு என்று சம்பளங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஜனங்களிடமிருந்து திருடி, கர்த்தருடைய வழியைப் போதிக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, மனுஷர் மத்தியில் கனத்தையும், சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு, உண்மையில் கர்த்தரையும், அவருடைய சத்தியத்தையும் தவறாய்க் காட்டுகின்றவர்களாய் இருக்கின்றார்கள். இப்படியான அனைவரும் உண்மையான ஆலய வகுப்பாரிடமிருந்து பிரிக்கப்படுவார்கள்; இவர்களும், நிழலான ஆலயத்திலுள்ள விற்கிறவர்களும், காசுக்காரர்களும் போதகர் மீதும், அவருடைய பின்னடியார்கள் மீதும் எரிச்சலாய் இருந்ததுபோல கோபமாய் இருப்பார்கள் மற்றும் ஆதரவாளர்களையும் பெற்றிருப்பார்கள்.

## ஆலயம், கள்ளர்குகை

திருடுதல் என்பது மறைமுகமாக, ஏமாற்றும் விதமாக செய்யப்படுகின்றது. திருடன் தன்னை முற்றிலும் வித்தியாசமானவனாக முன்வைப்பான். திருடன் ஒரு கனமிக்க மனுஷன் போன்று காண்பித்துக்கொள்வான்; ஆனால் தந்திரமாய்ப் போர்வையின் கீழ், திருடன் அவனுக்குச் சொந்தமல்லாததை, தனக்கென வஞ்சித்துக்கொள்கின்றான். இப்படியாகவேதான் கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள பல்வேறு திசைகளில் கிறிஸ்தவ ஊழியக்காரர்கள், போதகர்கள், கண்காணிகள் எனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் அநேகர் காணப்படுகின்றார்கள் அல்லவா? கிறிஸ்துவினுடைய சிலுவைக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் ஊழியக்காரர்கள் என தங்களைக் காண்பித்துக்கொள்கின்ற அநேகர் தேவனுடைய வார்த்தைகளை மறுதலிக்கின்றவர்களாகவும், கிறிஸ்துவின் சிலுவை முட்டாள்தனமானது என எண்ணுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள் அல்லவா? இவ்வகுப்பாரில், பரிணாமக்கொள்கைக்காரர்கள் எனத் தங்களை அறிக்கைப் பண்ணுகின்றவர்கள் காணப்படுகின்றனர்; அதாவது மனிதன் தேவனுடைய சாயலிலிருந்து விழுந்துள்ளான் என்றும், சிலுவையின் இரத்தத்தினால் மீட்கப்படுவது அவசியம் என்றும், மனிதன் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு, கர்த்தருடைய இரண்டாம் வருகை அவசியம் என்றும் உள்ள காரியங்களுக்குப் பதிலாக, இவர்கள் கொண்டுள்ள சத்தியம் பற்றின கருத்து முற்றிலும் எதிர்மாறாய்க் காணப்படுகின்றது; அதாவது மனுஷன் விழுந்திருந்தாலும், அவன் மேலான நிலைக்குள்தான் விழுந்திருக்கின்றான் என்றும், அவன் மீட்கப்பட அவசியம் இல்லை என்றும், உலகத்தின் இரட்சிப்பிற்கான கர்த்தருடைய இரண்டாம் வருகையை எதிர்ப்பார்ப்பது என்பது முட்டாள்தனம் என்றுமுள்ள கருத்துக்கள் கொண்டிருக்கின்றனர். போலித்தனத்தின் கீழ் இம்மனுஷர்கள் பணம் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள் அல்லவா? இப்படிப்பட்ட திருட்டு, உலகத்திலேயே மிகவும் மோசமான வகை திருட்டு அல்லவா? இது அப்பட்டமான கொள்ளை/திருட்டு அல்லவா? தேவனுடைய நற்பெயரைக் கெடுக்கும் விஷயத்தில், இவர்கள் தேவனிடமிருந்து திருடுகிறார்கள் அல்லவா? ஜனங்களை ஏமாற்றி, அப்பம் அல்லாததும்,

திருப்திப்படுத்தாததுமாகியவற்றை ஜனங்களுக்கு விற்பதின் மூலம், அவர்களிடமிருந்து பணத்தையும், கனத்தையும் இவர்கள் திருடுகிறார்கள் அல்லவா?

பிதாவின் வீடு, அவருடைய சபை, அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களை மாத்திரமே கொண்டிருக்க வேண்டும். மீதமான மற்றவர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவது சரியானதே மற்றும் கர்த்தர் இப்பொழுது இவைகளைப் பார்த்துக்கொள்வார். காரணம் இதற்கான ஏற்றவேளை இப்பொழுது வந்துள்ளது. பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும், பின்னர் ஏற்றவேளையில் அதனை கர்த்தருடைய மகிமை நிரப்பும்; இராஜரிக ஆசாரியக்கூட்டமானது மறுரூபமடைந்து, மகிமையின் ஆலயமாக, கனத்துடனும், வல்லமையுடனும் உள்ள ஆலயமாக மாறும் மற்றும் அதிலிருந்து மனுக்குலத்தின் உலகத்திற்கான ஆசீர்வாதம் கடந்துவரும்.

இயேசு இப்படியாக எருசலேமுக்குக் கழுதையின் மீது ஏறி வந்ததும், காசுக்காரர்களைச் சவுக்கினால் துரத்தியடித்ததும் ஜனங்கள் மத்தியில் பரபரப்பை எழுப்பினது. யார் இவர்? என்று எழுந்த கேள்விக்கு, "இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கத்தரிசியாகிய இயேசு" என்று பதிலளிக்கப்பட்டது. செய்தி பரவியது, பட்டணத்திலுள்ள ஏழைகளும், முடவர்களும் ஆலயத்தில் குவிந்தனர். இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியைக்குறித்து ஜனங்கள் முன்னமே கேள்விப்பட்டிருந்தபடியால், அவருடைய கரங்களிலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இதுவே என எண்ணியிருக்க வேண்டும். இப்படியாகவே ஆவிக்குரிய ஆலயமானது முழுமையாகச் சுத்திகரிக்கப்பட்டிருக்கும்போது, எதிர்க்காலத்தில் அதாவது கர்த்தருடைய ஆலயமானது அதன் வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் காணப்படும்போது, பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுதலும், சொஸ்தப்படுத்தப்படுதலும் அரங்கேற்றப்பட்டு, நிறைவேறித் தீரும்.

ஜனக்கூட்டத்தாருடைய ஆரவாரம் நின்றிருந்தாலும், ஆலயத்தில் காணப்பட்ட பிள்ளைகள் எவ்விதமான நோக்கமும் இல்லாமல், "ஓசன்னா, ஓசன்னா, தாவீதின் குமாரனுக்கு" எனச் சத்தமிட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இப்படியாகக் கர்த்தரைத் துதிக்கும் துதிகள் ஆலயம் முழுவதும் காணப்பட்டிருக்க வேண்டும்; மேலும் பிள்ளைகளும் இப்படியாக ஆர்ப்பரித்துக்கொண்டிருப்பதைக் கேட்ட பரிசேயர்கள் எரிச்சலடைந்தனர்; தடுத்திடுவதற்கு இவர்கள் ஏறெடுத்த முயற்சித் தோல்வியடைந்ததின் காரணமாகத்தான் போதகரிடம் முறையிட்டனர்; அதாவது போதகருடைய அதிகாரத்திற்கு மதிப்பு இருக்கின்றபடியால், ஜனங்களைக் கடிந்துகொள்ளும்படியாகப் பரிசேயர்கள் போதகரிடம் முறையிட்டனர்; ஆனால் இவைகள் எல்லாம் "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்று எழுதியிருக்கிறபடி தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் என போதகர் அவர்களுக்கு பதிலளித்தார். (சங்கீதம் 8:2; மத்தேயு 21:16) மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியில் அதிக அறிவும், தயவும் பெற்றிருந்தவர்களினால் உணர்ந்துகொள்ளப்படாமல், ஏற்றுக்கொள்வதில் தவறவிட்டதை, கர்த்தர் குழந்தைகளினுடைய வாயினால் நிறைவேற்றினார். பூமிக்குரிய ஞானமானது, தெய்வீக நோக்கங்களைத் தவறாய்ப் புரிந்துகொள்வதை நாம் எங்கும் காண்கின்றோம். ஆகையால் இப்படிப் பூமிக்குரிய ஞானமுடையவர்களைப் பார்க்கிலும் கர்த்தர் பெலவீனர்களையும், ஏழைகளையும், படிப்பறிவில்லாதவர்களையும் பயன்படுத்துகின்றார். அன்பான சகோதர சகோதரிகளே, நமக்கான வாய்ப்புகளும், தாலந்துகளும் எதுவாக இருப்பினும், சிறு பிள்ளைகளென இருக்க நாடி மற்றும் மேசியாவாகிய நமது ஆண்டவரை நாம் இப்பொழுது சரியான விதத்தில் பறைச்சாற்றத்தக்கதாகவும், எல்லா விதத்திலும் நாம் அவருடைய வேலையில் ஒத்துழைக்கத்தக்கதாகவும், இராஜ்யத்தின் மகிமையிலும், அவரோடுகூட உண்மையுள்ளவர்களெனக் கருதப்படத்தக்கதாகவும், நாம் பூமிக்குரிய ஞானத்தினால் மாத்திரம் வழிநடத்தப்படாமல், தேவனாலும் போதிக்கப்பட்டிருப்போமாக.

*****

R 3864

# லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல்

*"ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்." (மல்கியா 3:2, 3)*

முழு மனுக்குலத்தின்மீது - விசேஷமாக கிறிஸ்தவ மண்டலத்தின்மீது வரவிருக்கின்றதான மகா ஆபத்துநாள் குறித்த வேதவாக்கியங்களினுடைய போதனையைப் புரிந்துகொண்டதின் விளைவாக, ஆசீர்வாதங்கள் நமக்குக் கடந்துவந்துள்ளது. யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் இல்லாத ஓர் ஆபத்துக்காலத்தைக் குறித்து வேதவாக்கியங்களானது, உண்மையிலேயே போதிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் அக்காலம் குறித்து இப்பொழுதும், நம்முடைய கர்த்தரால் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டது போல், "பூமியின்மேல் வருபவைகள் குறித்துப் பயந்து எதிர்ப்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகின்றது" (லூக்கா 21:26). உலகத்தின் மீது திருடனைப் போன்றும், கண்ணியைப் போன்றும் கடந்துவருகின்றதான இந்த ஆபத்துக்காலமானது, நம்மீது இப்படியாகக் கடந்துவரவில்லை என்பதினாலும், அதன் விவரங்கள் அநேகவற்றையும், மகிமையான விளைவையும், பரலோகத்தின் கீழ்த் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் நாம் விசுவாசத்தினால் ஏற்கெனவே பார்த்து வருகின்றோம் என்பதினாலும் நாம் களிகூருகின்றோம். உலகத்தின்மீது கடந்துவருகின்றதும், சில விதங்களில் நாம் தப்புவிக்கப்படுவோம் என்று நம்மால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதுமான இந்த மாபெரும் ஆபத்தானது, கர்த்தருடைய ஜனங்கள் சிலரின் மனதின் கவனத்தை ஈர்த்துள்ளப்படியால், இது சபைக்கான விசேஷித்த மற்றொரு வகையான சோதனையினை அவர்களது கவனத்தினின்று மறைத்துள்ளது; சபைக்கான இந்த விசேஷித்த சோதனையானது, உலகத்திற்கான ஆபத்துநாள் வருகிறதற்கு முன்னதாக, நம்மேல் கடந்துவந்து, நம்மைப் பரீட்சித்து, நம்மை நிரூபித்திட வேண்டும். சபையின் மீதான இந்த ஒரு சோதனை நாள்தான், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான இந்த ஒரு விசேஷித்த பரீட்சைத்தான், நம்முடைய ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள்

லேவி வீட்டார், ஆசாரிய கோத்திரமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய விசுவாச வீட்டாருக்கு நிழலாய் இருக்கின்றனர். லேவியர்கள் மத்தியில் ஆசாரியர்கள் என்பவர்கள் உயர் வகுப்பாராய் அல்லது முறைமையானவர்களாய் இருப்பதுபோல, இராஜரிக ஆசாரியக் கூட்டத்தார், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்கள், இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்கள், ஆவிக்குரிய லேவியர்களாகிய, விசுவாச வீட்டார் மத்தியில் உயர் வகுப்பாராய் இருக்கின்றனர். ஆகையால் தீர்க்கத்தரிசி வாயிலாக கர்த்தர் லேவி வீட்டாரின் பரீட்சை மற்றும் சுத்திகரித்தல் குறித்துக் கூறுகையில், அது "விசுவாச வீட்டார்" யாவரையும், "சிறுமந்தையினரை" மற்றும் "திரள் கூட்டத்தாரை" உள்ளடக்குகின்றதாய் இருக்கும். இந்த யுகத்தினுடைய முடிவானது, முழு விசுவாச வீட்டாரையும் கர்த்தர் சோதித்துப்பார்க்கும் காலமாய் இருக்கின்றது; மற்றும் சோதித்துப் பார்த்தலானது வீட்டாரின் மேல்மட்டத்தினின்று துவங்குகின்றது, பரிசுத்தவான்களிடமிருந்து துவங்குகின்றது; ஆனால் ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்டவர்களிடமும் கடந்துவரும். புடமிடுகிறவரின் பற்றி எரிகிற அக்கினிக்கு உட்படுத்தப்படும் இரண்டு வகுப்பார், பொன் மற்றும் வெள்ளியினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதரருக்காகவும் தங்கள் ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடும் தங்களது அன்பிலும், வைராக்கியத்திலும், கர்த்தருக்கான தங்களது நேர்மையினை விசேஷமாய் நிரூபிப்பவர்களைப் பொன் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவர்களே பொன் வகுப்பாராய் இருக்கின்றனர்

மற்றும் இவர்கள் மணவாட்டி வகுப்பாரென, பூமியின் குடிகள் யாவற்றையும் ஆசீர்வதிப்பதற்கென மாபெரும் இராஜாதி இராஜனோடும், கர்த்தாதி கர்த்தனோடும், அவரது உலகளாவிய சாம்ராஜ்யத்தில், அவரோடுகூட உடன்சுதந்தரராய் இருப்பது இவர்களது பங்காய் இருக்கும். நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் வெள்ளியினால் அடையாளப்படுத்தப்படுகின்றதான மற்ற வகுப்பார், அவர் பார்வையில் குறைந்த மதிப்புடைய வகுப்பாராய் இருக்கின்றனர்; வெளிப்படுத்தல் விசேஷத்தினுடைய 7-ஆம் அதிகாரத்தில் பேசப்படுகின்றதான இந்தத் திரள்கூட்டத்தினர், 45-ஆம் சங்கீதத்தில், மகிமையின் இராஜாவினுடைய முன்னிலையில் அழைத்துக் கொண்டுவரப்படுகின்றதான மணவாட்டியின் "பின்னாலே செல்லும், அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்" என்று கூறப்பட்டுள்ளனர்.

"அவர் சோதித்துப் பார்க்கையில் நிலைநிற்பவன் யார்?" என்ற வார்த்தைகளானது, நம்முடைய இருதயத்தை நடுங்கப்பண்ணுகிறதென்றால், பின்வரும் சிந்தனையால் நமக்குத் துயர் தணிகின்றது; அதாவது: சோதித்துப்பார்த்தலானது மிகவும் கடுமையாயும், மிகவும் ஊடுருவி சோதிக்கிறதாயும் இருப்பினும் - அக்கினியின் சோதனையானது களிம்பை முற்றிலுமாய்ப் பிரித்து, பொன்னையும், வெள்ளியையும் சுத்திகரிக்கிறதாய் இருப்பினும் - இப்படியாகச் சோதித்துப் பார்க்கின்றவர், இப்படியாகச் சோதிக்கின்றவர், இப்படியாய்ச் சுத்திகரிக்கின்றவர், இப்படியாகப் புடமிடுகின்றவர், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினவரும், தம்முடைய அன்பையும், பரிவையும் நமக்கு நிச்சயப்படுத்தினவருமான நமது கர்த்தராகவும், ஆண்டவராகவும் இருக்கின்றார்; இவர் நம்முடைய திராணிக்குமேல் நாம் சோதிக்கப்பட நம்மை விடுவதில்லை என்றும், சோதனையோடுகூடத் தப்பித்துக் கொள்ளும் போக்கையும் அருளுவார் என்றும், அப்போஸ்தலனிடத்தில் வாக்களித்துள்ளவராய் இருக்கின்றார்; மற்றும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாகிய நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறபடியால், சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் நடக்கும் என்றும் நமக்கு நிச்சயமளித்தவராய் இருக்கின்றார் (1 கொரிந்தியர் 10:13; உரோமர் 8:28).

## எதிர்ப்பார்க்காத திசைகளிலிருந்து சோதனைகள்

விசுவாசத்திற்கான மற்றும் அன்பிற்கான மற்றும் கொள்கைக்குரிய அர்ப்பணத்திற்கான மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்குமுரிய நேர்மைக்கான ஒவ்வொரு சோதனையும் எப்படி வருமென நாம் முன்கூட்டியே அறிந்திருப்போமானால், அதை எதிர்க்கொள்ள நாம் ஆயத்தமாய்க் காணப்படுவோம் மற்றும் இப்படி இருக்குமானால், சோதனையானது கடுமையற்றதாக இருக்கும் மற்றும் இதற்கேற்ப நம்முடைய தாழ்மையும், பொறுமையும், அன்பும் குறைவாகவே சோதிக்கப்பட்டிருக்கும். ஆனால் கர்த்தர் இவைகள் விஷயத்தில் நம்மைச் சோதித்திட விரும்புகின்றார்; ஆகையால் எதிர்ப்பார்க்காத திசைகளிலிருந்து நமக்கான சோதனைகளானது பொதுவாக கடந்துவருகின்றது. இது சோதனையை மிகவும் கடுமையானதாக்கி, நம்முடைய இருதயங்களினுடைய உண்மையான உணர்வுகளை நன்றாய் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. சுயசித்தம், தனிப்பட்ட குறிக்கோள், பெருமை - போன்ற களிம்புகள் யாவற்றையும் நம்மிடமிருந்து சுத்திகரிக்கக் கர்த்தர் விரும்புகின்றார்; தமக்கும் மற்றும் தம்முடைய குணலட்சணத்தில் வெளிப்படுகின்ற நீதியின் கொள்கைக்குமான நேர்மையினை நம்மிடத்தில் வளர்த்திட அவர் விரும்புகின்றார் மற்றும் தம்முடைய வார்த்தைகள் வாயிலாக நமக்குப் புத்திமதி கூறுகின்றார்.

பொதுவான கிறிஸ்தவ மண்டலத்தினை ஏறெடுத்துப் பார்க்கையில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய பக்கத்தில், "ஆயிரம்பேர் விழுவார்கள்" என்று தீர்க்கத்தரிசி கூறுவது நமக்குக் கேட்கின்றது. நாம் விழுகை நடந்துகொண்டிருப்பதை, மீட்பராகிய கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினின்று விழுந்துகொண்டிருப்பதை மற்றும் பரிணாமம், உயர் விமர்சனம், கிறிஸ்தவ விஞ்ஞானம் முதலானவைகளுக்குள் விழுந்துகொண்டிருப்பதைக் காண்கின்றோம். ஆனால் நாம் இப்பொழுது வீட்டை, சரீரத்தின் அங்கத்தினர்களை, அதாவது இவர்களில் யார் நம்முடைய நாட்களின் சோதனைகளில் நிலைநிற்க முடியும்?" என்று காணும்படிக்கு நாம் உற்றுக் கவனிக்கின்றோம். "யார் நிலைநிற்கக்கூடும்?" என்று அப்போஸ்தலன் கேட்கின்றார் (வெளிபடுத்தல் 6:17). "அவர் சோதித்துப் பார்க்கையில், நிலை நிற்பவன் யார்?" என்று நம்முடைய ஆதார வசனத்தில் தீர்க்கத்தரிசி கேட்கின்றார். பரிசுத்தவான்கள் யாவருக்குமான சோதனை விஷயத்தில், சோதித்துப் பார்த்தலானது - மிகக் கடுஞ்சோதனையாக இருக்கும் என்பதே சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது என்பது உறுதி.

கர்த்தருடைய கிருபையுள்ள ஏற்பாட்டினால், வாட்ச் டவரானது, அறுவடை களத்தின் மீது அத்தகையதொரு பார்வையைக் கொண்டிருப்பதினால், அஞ்சல் வாயிலாக, பயண ஊழியர்கள் வாயிலாக, தொகுதி விநியோகிப்பவர்கள் வாயிலாக கர்த்தருடைய ஜனங்களாகிய சிறுமந்தையினர் யாவரிடத்திலும் அத்தகையதொரு தொடர்பினைக் கொண்டிருப்பதினால், அநேகமாக மற்றவர்களைக் காட்டிலும் எங்களால் மாபெரும் புடமிடுகிறவரின் நெருப்பானது ஏற்கெனவே பற்றி எரிந்து கொண்டிருப்பதையும், பொன்னும், வெள்ளியும் சோதித்துப் பார்க்கப்பட்டுக்கொண்டிருப்பதையும் உய்த்துணர முடிகின்றது. சிலர் இவ்வேளையின் சோதனைகளில் நன்றாய் நிற்கக் கூடாமல் போவதை அவ்வப்போது காண்கையில் ஓ! அது எத்துணை வேதனையை எங்களுக்குத் தருகின்றதாய் இருக்கின்றது! இப்பொழுது சோதனையின் சூளையில் காணப்படும் கர்த்தருடைய அருமையானவர்கள் யாவரையும் நாம் அன்புகூருகின்றோம்; புடமிடுகிறவராகிய கர்த்தர் தாமே அவர்களை அதிகமாய் அன்புகூருகின்றார் என்பதிலும் நமக்கு நிச்சயமே. பெலவீனங்களையும், நோக்கத்திற்கு நேர்மையற்று இருப்பதையும், பெயருக்காகவும், கீர்த்திக்காகவும் அல்லது ஸ்தானத்திற்காகவும் குறிக்கோள் கொண்டிருப்பதையும், பெரியவர்களாகிடுவதற்கான விருப்பம் இருப்பதையும், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டிடுவதற்குரிய மனப்போக்கினைக் கொண்டிருப்பதையும் நாம் கண்டுகொள்கையில், இவைகளைக் கண்டு நாம் மனவேதனை அடைவோமானால், வருந்துவோமானால், சிலரில் ஏமாற்றமடைவோமானால், மாபெரும் புடமிடுகிறவர் அக்கறையற்றவராக இருப்பார் என்று நாம் எண்ணக்கூடுமோ? நிச்சயமாக இல்லை! அவர் தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் என்று அவரைக்குறித்து எழுதப்பட்டுள்ளது; மற்றும் பதிவுகளை வைத்துப் பார்க்கையில், அவர் மிகவும் பொறுமையோடு காணப்பட்டார் மற்றும் சுயநல நாட்டமுள்ள, பேராசையுள்ள, சத்தியத்தினை விற்ற, கர்த்தரை விற்ற யூதாசை தறித்துப்போடுவதில் மெதுவாகவே செயல்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம். எந்தளவுக்கு ஆண்டவருடைய குணலட்சணத்தையும், சாயலையும் அடைகின்றோமோ, அப்போது வழிவிலகிப் போகிறவர்கள் அனைவரிடத்திலும் நாம் மிக அனுதாபம் உடையவர்களாய்க் காணப்படுவோம். இப்படி வழிவிலகிப் போகிறவர்கள், சீர்த்திருந்திவிடவில்லையெனில் இவர்கள் நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலரினாலும்கூடச் சுட்டிக்காண்பிக்கப்பட்டதுபோல் "அக்கினியிலகப்பட்டு தப்புகிற" திரள்கூட்டத்தின் அங்கத்தினர்களாகக் காணப்பட்டாலும், இவர்கள் நிச்சயமாய்ச் சரீரத்தினுடைய அங்கத்துவத்திலிருந்து தள்ளுண்டுபோவார்கள் (1 கொரிந்தியர் 3:15).

## நீடிய சாந்தத்துடனும், பொறுமையுடனும் கடிந்துகொள்ளுங்கள்

இரண்டு காரணங்கள் நிமித்தமாக, ஆபத்தில் காணப்படுவதாக தோன்றும் அனைவருக்கும் நாங்கள் கடிதம் எழுதுவது கூடாத காரியமாய் இருக்கின்றது.

(1) நேரம் போதுமானதாய் இல்லை; இவ்வேளைக்கான மற்றக் கடமைகளும் காணப்படுகின்றன; (2) ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிக்கொடுக்க மாட்டார்களெனில், ஒருவேளை அவர்கள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் மற்றும் மோசேயின் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க மாட்டார்களெனில், அவர்கள் எங்கள் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பார்களென்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது. ஆகையால் நாங்கள் கூறுபவைகள், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாக இருப்பினும் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக இருக்குமென நாம் நம்புகின்றோம் என்றாலும், முன்னே சொல்லப்பட்டது போன்ற எச்சரிப்பின் வார்த்தைகளை அவ்வப்போது கொடுப்பது மிகவும் சரியான வழிமுறையாக இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது.

விநோதமாய்த் தோன்றிடலாம் - எனினும் கடந்த காலங்களிலுள்ள பதிவுகள் யாவற்றுடன் முழு இசைவாய்க் காணப்படுகிறதென்னவெனில் - இந்தப் பற்றியெரிகிற சோதனைகளும், இந்தப் புடைத்தெடுத்தல்களும், அநேகம் சந்தர்ப்பங்களில் மந்தையினை வழிநடத்துபவர்கள் மத்தியிலேயே மிகுந்த களிம்பைக் கண்டுபிடிக்கின்றதாய்த் தெரிகின்றது. இதற்குக் காரணம், அநேகமாக இவர்கள் மிகவும் கவனத்தினை ஈர்க்கும் நிலைமையில் காணப்படுகின்றனர்; இவ்வளவு பெரிதான முதன்மையான நிலைமையில் காணப்படாத அநேகர் உண்மையில் விழுந்து, வெந்துபோய், "நஷ்டமடைந்து" மற்றும் "அக்கினியிலகப்பட்டுத் தப்பினது"

போன்று அநேகமாக இவர்களும் இருப்பார்கள். கர்த்தர் மாத்திரமே இருதயத்தை ஆராய முடியும் மற்றும் எண்ணங்களையும், நோக்கங்களையும் வகையறுக்க முடியும் மற்றும் இப்பொழுது லேவி வீட்டாரின், விசுவாச வீட்டாரின் ஒவ்வொரு அங்கத்தினனையும் தூய்மைப்படுத்துவதும், சுத்திகரிப்பதும், புடமிடுவதும் கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது; மற்றும் நம்முடைய நாட்களிலுள்ள பற்றியெரிகிற சோதனைகளானது, தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாய் வேலையைக் கர்த்தர் நிறைவேற்றத்தக்கதான, அவரது ஏற்பாடுகளாக, அவரது தூற்றுக்கூடைகளாகக் காணப்படுகின்றது.

டாண், 6-ஆம் தொகுதியானது, தொகுதி வரிசையிலுள்ள மற்றத் தொகுதிகள் போன்று, அதன் ஏற்றகாலத்தில் வந்தது என்று நாம் நம்புகின்றோம் மற்றும் அதைச் சிலவிதங்களில் இவ்வேளைக்கான புடமிடும் நெருப்புகளை எரியப்பண்ணிடும், காற்று ஊதும் பூமிக்குரிய துருத்தி குழாயெனக் கர்த்தர் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. மற்றத் தொகுதிகள் போன்று, அந்தத் தொகுதியிலும் (volume) நாம் நம்முடைய சொந்த கருத்துக்களை முன்வைப்பதற்கல்ல, மாறாக வசனத்தினுடைய போதனைகளையே முன்வைத்திட முயற்சித்தோம் மற்றும் இது சில தருணங்களில் - சுத்த இருதயத்தினின்று புறப்படும் அன்பும், சபையினுடைய மகிமையான சுயாதீனங்கள் குறித்த உணர்ந்துகொள்ளுதலும் மாத்திரமே காணப்பட வேண்டிய சில வழிநடத்துபவர்களின் இருதயங்களில் கோபத்தின் ஆவியினை, மனக்கசப்பினை எழுப்பியுள்ளதாகத் தெரிகின்றது. வழிநடத்துபவர்கள் என்பவர்கள் மந்தையினுடைய எஜமான்களல்ல என்றும், இறுமாப்பாய் ஆளும் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும் எந்த வழிநடத்துனனும், கிறிஸ்துவிலுள்ள தன்னுடைய சொந்த உறவு நிலையை அபாயத்திற்குள்ளாக்குவதோடு, கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் மந்தை முன்னேறுவதற்குத் தடைப்பண்ணுகிறவனாய் இருந்துவிடுகின்றான் என்றுமுள்ள உண்மையினைச் சகோதரருடைய கவனத்திற்குக் கொண்டுவரும் கடமையையே நாம் செய்தோம். கர்த்தருடைய மந்தையிலுள்ள யாரேனும், இத்தகைய பேராசையுள்ள வழிநடத்துபவர்களோடு ஒத்துழைப்பார்களெனில், இவர்கள் அவர்களுக்குத் தீங்குபண்ணுபவர்களாகவும் மற்றும் தங்களுக்கும், தங்களோடுகூட வேதவார்த்தைகளின் ஆராய்ச்சியில் இணைந்துள்ள மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றதான அங்கீகரிக்கப்படாத அளவுக்கு மீறின மரியாதையினை அளிக்கின்றவர்களாகவும் இருப்பார்கள்.

## தவறுவது என்பது மனுஷீகம், மன்னிப்பது என்பது தெய்வீகம்

"தவறுவது என்பது மனுஷீகம்" என்று எழுதப்பட்டுள்ளது மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பினும், நாம் அனைவரும் புதிய சுபாவம் எனும் பொக்கிஷத்தினை மண்பாண்டங்களிலே பெற்றிருப்பதினால், நாம் தவறு செய்திடுவதற்கு ஏதுவானவர்களாய் இருக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். இதை உணர்ந்தவர்களாக, சபையினால் நியமிக்கப்படாமல் அல்லது தேவனுடைய சபையில் வழிநடத்தும் ஸ்தானத்தினைத் தங்களுக்கென எடுத்துக்கொள்ளும் மனநிலையிலுள்ள அல்லது தாங்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, மற்றவர்களுடைய உரிமையினை அலட்சியம்பண்ணிடும் மனநிலையிலுள்ள வழிநடத்துனர்களை நாம் கடினமாயும், இரக்கமற்றும் கையாண்டிடக்கூடாது. எனினும் சபையார் அன்பாயும், நிதானமாயும், உறுதியாயும், அதன் காரியங்கள் அனைத்தையும் அதன் கட்டுப்பாட்டில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் சபையாரின் வாக்கானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களின் வாக்காய் இருக்கின்றதென வழிநடத்துபவர்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாகச் சபையார் பார்த்துக்கொள்ள வேண்டும். இது அனைவருக்கும் அனுகூலமாய் இருக்கும்; அதாவது இது வழிநடத்துபவரைத் தாழ்மைக் கொண்டிருக்க செய்யும், தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஓர் அங்கத்தினன் மாத்திரமே என்றும், தான் கர்த்தரின் வழிநடத்துதலின்பேரில் சபைக்கு ஊழியம் புரிகின்றான், காரணம் அவர்களுக்கு தான் ஊழியம் புரிய சபையார் விரும்புகின்றனர் மற்றும் அதைக் கர்த்தருடைய சித்தமென, தான் கருதுகின்றான் என்றும் அவரை நினைவில் கொண்டிருக்கச் செய்திடும். இது இறுமாப்படைவதிலிருந்தும், மனமேட்டிமைக்கொள்வதிலிருந்தும், சபையாரை "என்னுடைய ஜனங்களென," "என்னுடைய சபையென," "என்னுடைய சபையாரென," "என்னுடைய வேலையென" அகங்காரமாய்ப் பேசுவதிலிருந்தும் வழிநடத்துபவரைக் காத்துக்கொள்ள உதவிடும். இது சபையாரை, "கர்த்தருடைய ஜனங்கள்," "கர்த்தருடைய சபை," "கர்த்தருடைய சபையார்," "கர்த்தருடைய வேலை" என்றும், சபையின் ஊழியக்காரனாய் இருப்பது என்பது ஒரு

கனம், ஒரு கிருபை என்றும், அதன் அதிபதியாக, அதன் "அதிகாரியாக" இருப்பது தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல என்றும் அடையாளம் கண்டுகொள்ள அவனுக்கு உதவிடும்.

இப்படிச் செய்வது என்பது சபையாருக்கும்கூட நன்மை பயக்கின்றதாய் இருக்கும்; அதாவது இவர்களது பிரதிநிதியென, சபையாருக்கு ஊழியக்காரனாக அல்லது வழிநடத்துபவராக ஒருவரை இவர்கள் ஆதரித்து, அங்கீகரிப்பதற்கு ஏற்ப, கர்த்தருக்கும் அவரது நோக்கத்திற்குமான இவர்களது பொறுப்பு இருக்கும் என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றதாய் இருக்கும். வழிநடத்துபவரினால் செய்யப்படும் தவறுகள் எல்லாம் அச்சபையாருடைய பெரும்பான்மையானவர்களின் குற்றமாயிருக்கும் மற்றும் தங்கள் பொறுப்பினை இவர்கள் உணர்ந்துகொள்ளுதல் என்பது, இவர்களது குணலட்சணங்கள் பெலப்படுவதையும், இவர்களது மனங்கள் தெளிவாகுவதையும் மற்றும் இங்கும் மற்றும் இனிமேலும் உள்ள கர்த்தருடைய ஊழியத்திற்கு இவர்கள் ஆயத்தப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கும். தேவ செய்தி கொடுக்கையில், சபையாரை முன்னிலை விதிப்படி, உதாரணத்திற்கு "நீங்கள் இதைச் செய்யக் கூடாது" என்று மூப்பர் ஒருவர் சொல்வதைக் கேட்பதே காதிற்கு எரிச்சலூட்டுதலாய் இருந்திட வேண்டும். மூப்பர்கள் யாவரும், சபையில் அங்கீகரிக்கப்பட்டப் போதகர்கள் யாவரும், எவ்விதத்திலும் வழிநடத்துபவர்களாய்க் காணப்படுபவர்கள் யாவரும், பெயர்ச்சபையில் குருமாரை ஒரு வகுப்பாராகவும், மற்றொரு வகுப்பாரைச் சாதாரண வகுப்பாராகவும் அடையாளங்கண்டுகொள்ளும் வழக்கத்தைப் போன்று, சபையாரைத் தங்களிடமிருந்து வேறுபட்ட ஒரு வகுப்பாராகப் பேசிடாதபடிக்குப் பார்த்துக்கொள்வதற்குக் கவனம் செலுத்திட வேண்டும். மாறாக வழிநடத்துபவர் புத்திமதியினைச் சபையாருக்குக் கூறுகையில், தன்னையும் உள்ளடக்கிக் கூறுவதே தாழ்மையான முறைமையாக, சிறந்த முறைமையாகக் காணப்படும்; உதாரணத்திற்கு "நாம் இக்காரியங்களைச் செய்திடக்கூடாது" என்று சொல்லுவதாகும்.

## அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது

நம் அனைவரின் இருதயங்களிலும், அன்பின் ஆவியானது பெரிதும் வளர்ந்திருக்குமானால், இவ்விஷயம் குறித்து எந்த ஒரு கண்ணோட்டத்திலும் நாம் ஆராய்வதற்கு அவசியமிராது; ஆனால் ஆவியின் கனிகளில் நாம் பகுதியளவே வளர்ச்சியடைந்திருக்கின்றோம்; ஆகையால்தான் நமக்குச் சிரமம் காணப்படுகின்றது; மேலும் ஒரே சரீரத்தின் சகஅங்கத்தினர்களென நம்முடைய உறவானது நாம் முடிந்த மட்டும் யாவருக்கும் உதவிகரமாய்க் காணப்படத்தக்கதாக, ஒருவருக்கொருவர் உதவுவது, மகா முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. ஒரு வழிநடத்துனனுடைய நடவடிக்கைத் தொடர்பாக, நம்முடைய இருதயங்களில் ஏதேனும் குறைகுற்றத்தின் எண்ணம் தோன்றுமாயின், பின்வருமாறு நம்மிடத்திலேயே கூறிக்கொள்வது சரியான மற்றும் அன்பான வழிமுறையாய் இருக்கும் - அதாவது, "ஒருவேளை வழிநடத்துபவனின் இடத்தில் நான் இருந்திருப்பேனாகில், சரீரத்தைக் கீழ்ப்படுத்தும் விஷயத்தில் - கர்த்தரோடும், சகோதரரோடும் தாழ்மையாய் நடந்திடும் விஷயத்தில் - தனக்கானவைகளை நாடாத, சினமடையாத, இறுமாப்படையாத, தீங்கு நினையாத பூரண அன்பிற்கு மாதிரியாக இருக்கும் விஷயத்தில் - அவரால் செய்யப்படுகிறதைக்காட்டிலும் அநேகமாக என்னால் அதிகமாய் ஒன்றும் செய்திட முடியாது" (1 கொரிந்தியர் 13:5) என்பதேயாகும்.

பேராசையே சாத்தானுடைய விழுகைக்குக் காரணமாய் இருந்தது என்றும், அதுவே தாயாகிய ஏவாளின் கீழ்ப்படியாமைக்கும் காரணமாய் இருந்தது என்றும், அதுவே கடந்த காலங்களிலுள்ள தேவனுடைய ஜனங்களில் உள்ள சிறந்தவர்களில் அநேகரின் இடறிப்போகுதலுக்கும் காரணமாய் இருந்தது என்றும் நாம் உணர்ந்துகொள்கையில், நாம் எந்த ஒரு நிலைமையில் காணப்பட்டாலும், இந்த ஒரு படிப்பினையின் தாக்கமானது நம்மிடத்தில் குறைந்துபோய் விடக்கூடாது. இது வழிநடத்துபவர்கள் ஆளாகுகின்றதான மாபெரும் பரீட்சைகள் மற்றும் சோதனைகளின் நிமித்தமாக அவர்கள்பால் நமக்கு அனுதாபத்தினை உண்டுபண்ணிட வேண்டும் மற்றும் இது வழிநடத்துபவர்களுக்கு மிகுந்த விழிப்பையும், ஜாக்கிரதைத் தன்மையையும், கவனமாய் இருத்தலையும் கொடுத்திட வேண்டும்; இல்லையேல் கடந்தகாலங்களில் அநேகருக்குத் தீங்குவிளைவித்ததும் மற்றும் கர்த்தர் பெருமையுள்ளவர்களை எதிர்த்து, தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபைப் பாராட்டுவதன் காரணமாக - அவருடைய பார்வையில் மிகவும் விசனத்திற்குரியதுமான, இத்தவற்றினால் இவர்கள் ஏதேனும் விதத்தில் மேற்கொள்ளப்படுவார்கள் (யாக்கோபு 4:6).

நாம் ஒருபோதும் மறந்துபோகக்கூடாத மற்றொரு கருத்தென்னவெனில்: வழிநடத்துபவரினால் முன்வைக்கப்படும் விருப்பம்தான், சபையாருடைய விருப்பமாகவும் இருக்கின்றது என்று தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டால் ஒழிய மற்றப்படி அவரால் முன்வைக்கப்படும் விருப்பங்கள், சபையாருடைய விருப்பமாகவும் இருக்கின்றது என்று முடிவுப்பண்ணப்படக்கூடாது என்பதுபோல், மற்ற எந்த ஓர் அங்கத்தினனுடைய விருப்பம் அல்லது பகுத்தறிதலானது முழுச்சபையாருடைய பகுத்தறிதலென முடிவுப்பண்ணப்பட வேண்டுமென ஒரு கணம்கூட நாம் கருதிடக்கூடாது. ஒருவேளை ஏதேனும் ஒரு சகோதரன், ஒரு கூட்டத்தின் வழிநடத்துனன், ஞானமான அல்லது தேவவாக்கியங்களின் அடிப்படையிலான சிறந்த வழிமுறையின்படி செய்யவில்லை என்று கடமை உணர்ச்சியில் உணருகிறாரெனில், அவர் தனிமையில் அந்த வழிநடத்துனனிடத்தில் சென்று, பரிவோடும், அன்போடும் அவரிடம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திடலாம்; ஆனால் இவரது அபிப்பிராயத்தின்படி அந்த வழிநடத்துனன் கண்டிப்பாய்ச் செய்திட வேண்டுமென்றில்லை. அந்த வழிநடத்துபவன்: "இது ஓர் அபிப்பிராயமாய் இருக்கின்றது மற்றும் என்னுடைய அபிப்பிராயமானது எவ்விதத்திலும் மதிக்கத்தக்க இன்னொன்றாய் இருக்கின்றது" என்று கூறிடலாம் மற்றும் அவர் தனது அபிப்பிராயத்தினைத் தழுவியே தொடர்ந்து காணப்படலாம் அல்லது அதைச் சிறிது மாற்றிப் பெற்றிருக்கலாம். எந்த ஒரு விஷயத்திலும் முழுச்சபையாரின் வாக்கே (vote) நாடப்பட வேண்டும் மற்றும் இதுவே - தேவவசனத்தினின்று அறியப்பட்டுள்ள தெய்வீகச் சித்தம் தொடர்புடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களின் புரிந்துகொள்ளுதலின்படி - சபையில் அனைத்துக் காரியங்களையும் முடிவு செய்கிறதாய் இருக்க வேண்டும்.

## இன்னொரு பக்கத்திலிருந்து வரும் ஓர் அபாயம்

யார் ஒருவரும் காரியங்கள் குறித்த தன்னுடைய கண்ணோட்டமே, வழிநடத்துனரின் கண்ணோட்டத்தைவிடச் சிறந்தது அல்லது ஆரோக்கியமானதென மிகவும் அவசரமாய் முடிவிற்கு வந்துவிடக்கூடாது. மாறாக சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழிநடத்துனர் என்பவர், சபையாருடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனிப்பதற்கென்று அவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நன்கு பொருத்தமான ஒருவராய் இருக்கின்றார் என்ற உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் சில குறிப்பிட்ட விஷயங்களில் தனக்கு வேறுப்பட்ட கருத்துக் காணப்படுவதற்குக் காரணம் இருப்பதாக எண்ணிடும் சகோதரன் அல்லது சகோதரி கொஞ்சம் தயக்கங்கொள்ள வேண்டும்; காரியத்தினைக் குறித்து மறுபரிசீலனைச் செய்திட வேண்டும்; கவனமாய்ச் சீர்த்தூக்கிப் பார்த்திட வேண்டும்; ஒருவேளை அவனால் அல்லது அவளால் காரியத்தினை இப்படியாக வேதவாக்கியங்களில் கண்டுபிடிக்க முடியுமானால், காரியத்தினை வழிநடத்துனனின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்திட முயற்சிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் பிற்பாடும் அவன் அல்லது அவள் இன்னும் உறுதிகொண்டு இருக்கும் பட்சத்தில், சடுதியாக, அவசரமாக, தீவிரமாக அவனது அல்லது அவளது கண்ணோட்டங்களை வற்புறுத்த முயற்சிப்பதன் வாயிலாக முழுச்சபையாரையும் தொல்லைப்படுத்துவது என்பது அவனது (அ) அவளது கடமையாகவோ, அவனது (அ) அவளது சிலாக்கியமாகவோ இருப்பதில்லை. "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்று அப்போஸ்தலன் கூறுவதுபோல், அவனது (அ) அவளது சாந்தகுணமானது வெளிப்படுத்தப்பட வேண்டும் (பிலிப்பியர் 4:5). வழிநடத்துபவரால் அங்கீகரிக்கப்படுபவைகளை அவன் (அ) அவள் அங்கீகரித்திட வேண்டும் மற்றும் அவரது நடவடிக்கையில் சில விஷயங்களுக்கு ஆட்சேபணைத்/மறுப்புத் தெரிவிக்கையில், அது சகல பரிவுடனும், தன்னடக்கத்துடனும், சகோதர அன்புடனும், நிச்சயமாய்ச் சாந்தத்துடனும் தெரிவிக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் மத்தியில் மக்கள் சேவகர்களுடைய செயல்களானது, பொதுமக்களுடைய பரிசீலனைக்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகுவது போன்று, சபையினை வழிநடத்துபவர்களின் வெளிப்படையான போதனைகளும், வெளிப்படையான நடத்தையும், அவர்களது சகோதரரின் விமர்சனத்திற்குள்ளாகுகின்றது; எனினும் அன்பு மற்றும் அனுதாபத்தின் ஆவியானது எப்போதும் நிலவ வேண்டும் மற்றும் எதுவும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யப்படக்கூடாது; மற்றும் தூக்கியெறிய வேண்டும் என்ற திட்டவட்டமான கண்ணோட்டத்தில் மூப்பர் ஒருவரை விமர்சிக்கும் யார் ஒருவனும், மிகவும் ஆபத்தானவனாகக் கருதப்பட வேண்டும் மற்றும் இத்தகைய சுயநலமுள்ள, தன்னல நாட்டமுள்ள ஆவி அபாயகரமானது என்றும், அந்நபருடைய நலனுக்கும், சபையாருடைய நலனுக்கும் இருவருக்குமே தீங்கு விளைவிக்கக்

கூடியது என்றும் அனைவரும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். கர்த்தருடைய தாழ்மையுள்ள பின்னடியார்கள் மத்தியில் வழிநடத்துபவராக இருப்பதற்குரிய சரியான இருதய நிலைமையில் காணப்படும் சகோதரன், வார்த்தையிலும், நடத்தையிலும் - எல்லாவற்றிலும் தாழ்மையினை வெளிப்படுத்திட வேண்டும். இப்படி வெளிப்படுத்திடாத மற்றவர்களைக் காண்கையில் வெறுப்பினால் முகம் சுளிக்கப்படவோ அல்லது வெளிப்படையாக அவர்கள் கடிந்துகொள்ளப்படவோ வேண்டியதில்லை; மாறாக அவர்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது - அதாவது அவர்களுக்கும், அவர்களுடைய செல்வாக்கின்கீழ் வரும் மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படாதபடிக்கு, அவர்கள் சபையில் செல்வாக்குரிய இடங்களில் வைக்கப்படக்கூடாது.

## பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது

சபையினுடைய நலனுக்கடுத்தவைகள் தொடர்புடைய விஷயத்தில் செயல்படுவதற்கு மிகவும் அவசரப்படாதீர்கள். உங்கள் நோக்கங்களானது நன்மையானதாகவும், தூய்மையானதாகவும், நீங்கள் யாரை விமர்சிக்கின்றீர்களோ, அவர்களிடத்தில் அன்பானதாகவும் இருக்கின்றதா என்று முதலாவது உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; புறங்கூறுதலுடன் உங்களுக்கு எந்த உடன்பாடும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; கர்த்தரால் கொடுக்கப்பட்டதான சபைக்கான சுயாதீனங்களை மாத்திரமே நீங்கள் நாடுகின்றீர்கள் என்பதையும், கூட்டத்தினுடைய காலம், இடம், தன்மை மற்றும் வழிநடத்துபவர்கள் தொடர்புடையதான சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களை மாத்திரமே நீங்கள் நாடுகின்றீர்கள் என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்; மற்றும் கருத்தைத் தெரிவித்திடுவதற்கான உங்களது உரிமைகளானது அலட்சியம் பண்ணப்படக்கூடாது அல்லது புறக்கணிக்கப்படக்கூடாது என்று நீங்கள் தொடர்ந்து வேண்டிக்கொள்ளும் அளவிற்கு, மற்றவர்களும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்திடுவதற்கான உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டுமென நீங்கள் அக்கறையோடு இருக்கின்றீர்களா என்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

மிகச் சிறிய எண்ணிக்கையிலுள்ள சபையாராகவோ அல்லது தவிர்க்க முடியாத காரணத்தினாலோ தவிர, மற்றப்படி ஒரே வழிநடத்துபவரை அல்லது மூப்பரை ஒரு சபையார் அடுத்தடுத்து, தொடர்ந்து பல வருடங்களாகப் பெற்றிருப்பது என்பது அனுகூலமற்றதாகவே இருந்துள்ளது. சபையின் ஊழியக்காரர்களாய் இருப்பதற்குரிய வாஞ்சையுடனும், இச்சிலாக்கியத்திற்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்றும், ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றுமுள்ள எண்ணங்களுடனும், வார்த்தைகளுடனும் தாழ்மையோடு துவங்கின சிலர், வருஷா வருஷம் அந்த ஸ்தானத்தில் தொடர்ந்து காணப்பட்டால், பிற்பாடு கடுமையான பரீட்சை மற்றும் சோதனைக்குள்ளாகுகின்றார்கள் மற்றும் போகப் போக, தங்களுக்கு அந்த ஸ்தானம் உரியது என்றும், வேறு யாரையாகிலும் ஊழியத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுவது தங்களுக்கு அவமதிப்பு என்றும் எண்ணிடும் அபாயத்திற்குள்ளாகுகின்றார்கள். இது முற்றிலும் தவறான காரியமாகும்; இது தொடர்பான ஓர் உதாரணத்தையும் நாம் வேதவாக்கியங்களில் பெற்றிருக்கின்றோம். "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாய் இருந்தான்" என்று நாம் வாசிக்கின்றோம் (எண்ணாகமம் 12:3). இதுவே மோசேயை தம்முடைய ஜனங்களுக்கான வழிநடத்துனனாகக் கர்த்தர் தெரிந்துகொண்டதற்கான காரணம் என்பதில் ஐயமில்லை. நாற்பது வருடங்களாக இஸ்ரயேல் தேசத்தார் ஒவ்வொரு நெருக்கடி நிலைமையின்போதும், இவரையே நோக்கிப்பார்த்தனர் மற்றும் கானான் தேசத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத அளவுக்கு அந்த நாற்பது வருடங்களின் இறுதியில், பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவராகக் காணப்பட்ட மனுஷன் மிகவும் அகந்தையடைந்துபோன காரியம் நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறதில்லை. போதுமான அளவுக்குச் சாந்தமாய்க் காணப்படாததினால், மோசே கானானுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தினை இழந்தவரானார்; காரணம் தனது ஆதி சாந்தத்தினை அதிகளவில் அவர் இழந்திருந்தபடியால், "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ" என்று சொல்லி, வனாந்தரத்தில் கன்மலையை அடித்தார் (எண்ணாகமம் 20:10).

## வழிநடத்துபவர்கள் யாவருக்குமான ஒரு படிப்பினை

பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவராகக் காணப்பட்ட மனுஷன் மற்றும் உலகத்தின் சரித்திரத்திலுள்ள மாமனிதர்களில் ஒருவர், இவ்விதமாய் ஜனங்கள் மத்தியிலான தன்னுடைய ஸ்தானத்தின் சூழ்நிலைகளினால் மேற்கொள்ளப்பட்டாரெனில், ஆவிக்குரிய இஸ்ரயேல் மத்தியில் சாந்தமானவர்களாகவும், தாழ்மையானவர்களாகவும் துவங்கின சிலர் ஏறக்குறைய அகந்தையுள்ளவர்களாகி, தாங்கள் செய்பவைகளையும், செய்ய வேண்டியவைகளையும் குறித்துப் பேசுபவர்களாகவும், ஜீவத்தண்ணீருக்காக மற்றவர்கள் தங்களைச் சார்ந்திருப்பதாக எண்ணுபவர்களாகவும் இருப்பதை நாம் காண்போமானால், நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. மோசேயினுடைய இந்த நிழலை நாம் நோக்கும் போதெல்லாம், அது நம் அனைவரிடமும், அதிலும் விசேஷமாக வழிநடத்துபவர்கள் அனைவரிடமும் "என் ஆத்துமாவே விழிப்பாயிரு" என்று சொல்லிட வேண்டும். கர்த்தரை எப்போதும் நோக்கிப்பார்க்கிறதும், இந்த அபாயம் குறித்து உணர்ந்து கொள்ளுகிறதும், அதற்கு எதிராய்த் தொடர்ச்சியாய் எதிர்த்துப் போராடுகிறதும்தான் - நம்மை நமது மீட்பருடைய அருகில் - சாந்தமும், தாழ்மையுமுள்ள இருதயமுடையவரின் அருகில் - தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த மாபெரும் போதகரின் அருகில் - சாந்தத்துடன் தம்முடைய ஜீவனை அன்பின் ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்திட்டவருடைய அருகில் - தன்னலத்தை, கனத்தை நாடாமல் மரணப்பரியந்தம், சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினவரின் அருகில் - நம்மைப் பாதுகாப்பாய் வைத்திடும் (எபிரெயர் 12:3). இதைக் குறித்து அப்போஸ்தலன், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று கூறுகின்றார் (1 பேதுரு 5:6). சபையில் உயர்த்தப்படுதல், செல்வாக்கு, ஸ்தானம், அதிகாரம் என்பவைகள் கூடுதல் சோதனைகளையும், கூடுதல் பலிச்செலுத்துதல்களையும், கூடுதல் அபாயங்களையும் கொண்டுவருகின்றதாயிருக்கும். ஒருவர் எவ்வளவு உயருகிறாரோ, அவ்வளவுக்கு - தன் நிலைமையை இழந்து, விழுந்துபோகாதபடிக்கு - அவர் மிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

சிலசமயம் நற்பண்புகளையும், நல்ல தன்மைகளையும் உடையவராக இருக்கும் மற்றும் சபையினுடைய விருப்பங்களைப் புறக்கணித்தவராக, சபையைத் தன்னுடைய சொந்த கருத்துக்களின் அடிப்படையில் நடத்திடுவதற்கு விடாப்பிடியாய்க் காணப்படும் மூப்பரினால், சபையாரின் பொறுமையானது கடுமையாய்ச் சோதனைக்குள்ளாகுகின்றது. ஒருவேளை மூப்பரை எதிர்க்கின்ற காரணம், நல்லொழுக்கமற்ற விஷயமாக இருக்குமாயின் அல்லது திவ்விய வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதான அடிப்படை சத்தியங்கள் தொடர்பான தவறான உபதேசங்கள் விஷயமாக இருக்குமாயின் - உதாரணத்திற்கு ஈடுபலி தொடர்பான தவறான உபதேசமாக இருக்குமாயின், இது விஷயங்களில் சபையார் தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாகப் பொறுப்பாளியாகக் காணப்படுவதினால், நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். இது விஷயங்களில் கவனக் குறைவு என்பது பொறுத்துக்கொள்ளப்பட முடியாது; காரியமானது சபையாரால் உறுதியாய்க் கையாளப்பட வேண்டும். ஒருவேளை உபதேசத்தில் அல்லது அடிப்படை சத்தியங்களில் வழிநடத்துபவர் கர்த்தருக்கும், அவரது வசனத்திற்கும் மற்றும் அறுவடை செய்திக்கும் நேர்மையாய்க் காணப்படுவாரானால் மற்றும் ஒருவேளை சபையாரில் அவரை நெருக்கமாய் அறிந்திருப்பவர்கள் பார்வையில் அவதூற்றிற்கு இடம்கொடாதவராக இருப்பாரானால் மற்றும் ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள் கேட்டுக்கொண்டுள்ள இடத்திலோ அல்லது வேளையிலோ அல்லது அம்சத்திலோ கூடுகைகளை நடத்திட அவரது விருப்பமின்மை மாத்திரமே அவரது முரண்பாடாய் இருக்குமானால், சமாதானம் கருதி, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்டக் காலமானது, நிறைவு பெறுவது வரையிலும் அவரைத் தொடர அனுமதிப்பது ஞானமான வழிமுறையாய் இருக்கும்.

தேர்ந்தெடுத்தல் (election) வரும்போது, அவரைக்குறித்துக் குறிப்பாய்ச் சொல்லாமல் அல்லது அவரிடத்தில் அன்பற்ற வார்த்தை ஏதும் கூறாமல், சபையார் அவரை முழு அதிகாரமுள்ள எந்த ஊழியத்திற்கும் மறுபடியுமாக தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்குத் தங்களுக்கும், கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆனால் இது அச்சகோதரன் முற்றிலுமாய் வழிநடத்தும் பணியினின்று விலக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பதாகாது; மாறாக அவர் நடத்திட விரும்பிட்டதான அந்தக் குறிப்பிட்டக் கூட்டங்களும், அக்கூட்டங்களின் அம்சங்களும் புரிந்துகொள்ளப்பட்டு, எதிர்க்காலத்தில் மனஸ்தாபங்கள் காணப்படாதபடிக்கு, அக்காரியங்களின் அடிப்படையில் அவரது தேர்ந்தெடுத்தல் காணப்பட

வேண்டும் மற்றும் சபையாருக்கு ஊழியம் புரிவதற்குரிய தகுதிகளையுடைய மற்றவர்களை - அதாவது தம்முடைய பார்வையின் கீழ் முழுச்சூழ்நிலையையும் வைத்திருக்கும் கர்த்தர், பிளவை நிரப்புவதற்கென மற்றவர்களை ஆயத்தம்பண்ணி வைத்திருப்பார் என்ற எதிர்ப்பார்ப்புடன் நாடப்பட வேண்டும்.

## பட்சமாயிருங்கள்

ஒருவேளை அச்சகோதரனுடைய நடத்தையானது இப்படி அன்போடும், கனிவோடும் கடிந்து கொள்ளப்பட்டப் பிற்பாடும், அவர் தொடர்ந்து சொந்த சித்தம் கொண்டவராகவும், அகந்தையுடையவராகவும், சபையாருடைய கருத்துக்களின் அடிப்படையில், அவர்களுக்கு ஊழியம் புரிந்திட விருப்பமற்றவராகவும் காணப்படுவாரானால், அவரை வழிநடத்தும் ஊழியத்தினின்று முற்றிலுமாய்க் கொஞ்சக்காலம் விலக்கி வைப்பது ஞானமான காரியமாயிருக்கும். ஆனாலும் எதுவும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யப்படாமல் இருப்பதாக - எந்த அன்பற்ற வார்த்தைகளும் சொல்லப்படாமல் இருப்பதாக. மாறாக கடந்த காலங்களில் பண்ணப்பட்டதான ஊழியங்களை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்; அவர் [கடந்தகாலங்களில்] செய்திட்ட அந்த ஊழியங்களுக்காக மதிக்கப்பட வேண்டும். அதிகாரமுடைய ஏதோ ஒரு மனிதன் இல்லாமல்போனால், காரியங்கள் அனைத்தும் மோசமான நிலைமைக்குள்ளாகிடும் என்று பயப்பட வேண்டாம். கர்த்தருக்குள்ளான ஒவ்வொரு சகோதரனும், ஊழியக்காரனும், அவர்களது கிரியைகள் மற்றும் குணலட்சணங்களுக்கு ஏற்ப மிகவும் உயர்வாய் மதிக்கப்படும் அதேவேளையில், கர்த்தர்தாமே நம்முடைய ஆயராக, நம்முடைய கண்காணியாக, நம்முடைய மேய்ப்பராக, நம்மை வழிநடத்துபவராக இருக்கின்றார் என்றும், நாம் அவரது ஆடுகளாய் இருக்கின்றோம் என்றும் நாம் எப்போதும் நினைவில் கொள்வோமாக. ஒருவேளை சபையார் தங்கள் ஆவிக்குரிய ஆறுதலுக்காக, புத்துணர்விற்காக மற்றும் பக்திவிருத்திக்காக ஏதோ ஒரு நபர்மேல் மிகவும் சார்ந்திருப்பார்களானால், ஏதோ தவறு உள்ளது மற்றும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் காரியங்களானது, சீக்கிரத்தில் கவலைக்கிடமான நிலைக்குள்ளாகும். சத்தியத்திற்குள் வந்திருப்பவர்கள் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பிடலாம்; ஒருவரையொருவர் பக்திவிருத்தியடையப் பண்ணிடலாம் மற்றும் பல்வேறு வகையான பெரோயா வேதவாக்கிய ஆராய்ச்சிகளில் ஒருவருக்கொருவர் உதவிடலாம் மற்றும் இவைகளைச் செய்வதன் மூலம் அநேகமாக அதிகம் முன்னேற்றம் காணலாம் - அதாவது ஒருவேளை தேவனுடைய சுதந்தரத்தை வழிநடத்துபவர்கள் ஆளுவதற்கும் மற்றும் பெரும்பான்மையானவர்களின் விருப்பங்களுக்கு மாறாக சபையை நிர்வகிப்பதற்கும் சபையார் தொடர்ந்து அனுமதிப்பதினால் ஏற்படும் முன்னேற்றத்தைக் காட்டிலும் அநேகமாக அதிகம் முன்னேற்றம் காணலாம்.

பெரும்பான்மை எனும் வார்த்தைக்கு நாம் அழுத்தம் கொடுக்கின்றோம்; காரணம் அடிக்கடி சிறுபான்மையினர் அதிகாரம் செலுத்த முற்படுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். சரீரத்தினுடைய வெவ்வேறு அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கின்றதான அன்புடன்கூடிய அக்கறையானது - பெரும்பான்மையினர், சிறுபான்மையினருடைய - தனிப்பட்ட நபர்களுடைய - விருப்பங்களையும், விருப்புசார்புகளையும் கொஞ்சம் அங்கீகரித்திடுவதற்கு ஒப்புக்கொள்ள முற்றிலுமாய் விரும்புமளவுக்கு - அவர்களை அனுதாபங்கொள்ளவும், அன்புடன் ஒத்துழைக்கவும் செய்திட வேண்டும் என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், பெரும்பான்மையினர் சுயநலமாய்க் காணப்படக்கூடாது மற்றும் பெரும்பான்மை என்பது அதிகாரத்தினைக் கொடுப்பதினால், அந்த அதிகாரத்தினை - அதாவது கொஞ்சம் வேறுபட்ட கண்ணோட்டங்களை உடைய தங்களது சகோதரரைப் புறக்கணித்து அந்த அதிகாரத்தினைச் செயல்படுத்துவது தகுதியானதே என்று பெரும்பான்மையினர் முடிவெடுக்கக்கூடாது. வேதவசனத்தினுடைய கொள்கைகள் சம்பந்தப்படாத காரியங்களில், ஒவ்வொருவரும் மற்றும் அனைவருமே அவனது அல்லது அவளது சொந்த சுபாவ விருப்பங்கள், விருப்புவெறுப்புகள் சிலவற்றைப் புறக்கணிப்பது என்பது இருதய ஒற்றுமையாகும்.

இந்தக் கட்டுரையிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் - சகோதர அன்பினால் நிறைந்த இருதயத்தினாலும், தனிப்பட்ட விரோதமோ அல்லது வேறெந்த தீமையான ஆசைகளோ, தூண்டுதல்களோ இல்லாமல், மாறாக கர்த்தருடைய அருமையான ஜனங்கள் பக்திவிருத்தி அடைவதற்கான வாஞ்சையினாலும் எழுதப்பட்டுள்ளது என்று பிரியமான உங்களுக்கு நாங்கள்

சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் உங்களுக்கான நன்மையையே நாடுகின்றோம். நாங்கள் யாவரோடும் தொடர்பு வைத்திருப்பதினால், நடந்துகொண்டிருக்கின்றதான புடைத்தெடுத்தல்களையும், சோதனைகளையும் நாங்கள் அறிந்திருப்பதினால் மற்றும் யாருக்கும் தீமை செய்யாமலும், அநேகருக்கு ஆசீர்வாதமாய்க் காணப்படத்தக்கதாகவும் உதவிகரம் நீட்ட விரும்புகின்றோம். இவைகளையெல்லாம் சிந்தித்துப்பாருங்கள் மற்றும் இது தொடர்பான டாண் ஆராய்ச்சிகளின் ஆறாம் தொகுதியில் (volume) நாங்கள் கூடுதலாகக் கொடுத்திருக்கும் யோசனைகளையும் பாருங்கள்.

நம்முடைய ஆதார வசனத்தினை மீண்டும் நினைவுகூருகையில், மாபெரும் புடமிடுகிறவரின் பிரசன்னத்தில் நாம் காணப்படுகின்றோம் எனும் கருத்தானது, லேவி வீட்டார் யாவரும் இப்பொழுது கடந்துபோய்க் கொண்டிருக்கின்றதான கடுமையான சோதனைகளை அவர் மேற்பார்வைப் பண்ணிக்கொண்டிருக்கின்றார் எனும் கருத்தானது, நம்மை உயிர்ப்பித்திட வேண்டும், நம்மை ஊக்குவித்திட வேண்டும், நம்மை விழிப்பாய் இருக்கச்செய்திட வேண்டும் என்று நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். நாம் இப்பொழுது அவரது பரிசோதனையின் கீழ்க் காணப்படுகின்றோம். இது இறுதி சோதனையாக இருக்கின்றது என்றும், தற்கால அனுபவங்களினால் தூய்மையாக்கப்படுபவர்கள் மற்றும் பெருமை, இலட்சியம், சுயநலத்திலிருந்து சுத்திகரிக்கப்படுபவர்கள், இருதயத்தில் சாந்த குணமுள்ளவர்கள், நிச்சயமாய் இராஜ்யத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அங்குத் தாழ்மையுள்ளவர்கள் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் உயர்த்தப்படுவார்கள். இதற்காக நாம் காத்திருக்க வேண்டாமோ? நம்மை நாம் தாழ்த்திடலாமல்லவா? அப்படிச் செய்திடுவதற்கு நாம் விரும்புகின்றோமல்லவா? தாழ்மையாகும் இப்பணியானது நம்முடைய சொந்த இருதயங்களில் நடந்தேறத்தக்கதாகவும் மற்றும் சபையின் எளிமையான ஊழியக்காரர் முதற்கொண்டு, அதன் மிகவும் முதன்மையான ஊழியக்காரர் வரையிலும், முழுச்சபையிலும் தாழ்மையின் ஆவியானது ஊற்றப்பட்டிருக்கத்தக்கதாகவும் - நாம் யாவருடைய இருதயங்களையும், மனங்களையும், ஜெபங்களையும் மற்றும் பிரயாசங்களையும் ஒன்றிணைத்திடலாமல்லவா?

## நீதியாய்க் காணிக்கைச் செலுத்தும்படிக்கும்

நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் "நீதியாய்க் காணிக்கைச் செலுத்தும்படிக்கும்" எனும் வார்த்தைகளானது, இரண்டு வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம்; இரண்டும் உண்மையானவைகளே. (1) அது சரியான ஒரு காணிக்கையை, தகுதியான ஒரு காணிக்கையை, அங்கீகரிக்கப்படத்தக்கதான ஒரு காணிக்கையைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளலாம்; அல்லது (2) நீதிக்காகக் காணிக்கைச் செலுத்தப்படுதலைக் குறிக்கின்றதாக நாம் புரிந்துகொள்ளலாம்; அதாவது இஸ்ரயேலின் பாவநிவாரண பலிகள், பாவ நிவாரண நாளானது, நீதிக்கான பலிகளாக அல்லது நீதியைச் செயல்படுத்துவதற்கான - பாவத்தை இரத்துச் செய்திடுவதற்கான பலிகளாக இருந்தது போன்ற விதத்திலாகும்.

இரண்டு கருத்துகளும் உண்மையே; நம்முடைய சரீரங்களை நாம் ஜீவபலிகளாக ஒப்புக் கொடுத்திருக்கின்றோம் மற்றும் தேவனும் அதைக் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்; அதுவும் நாம் அவரது பிரியமான குமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலை அடைவோம் என்றும், அவரது அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் மற்றும் ஆசீர்வாதம் மற்றும் உதவியின் கீழ்க் கிறிஸ்துவுக்கு ஒத்த குணலட்சணத்தினை அடைவோம் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலுடனாகும். ஆனால் ஒருவேளை இதை அடையத் தவறுவோமானால், ஒருவேளை பெருமையோ அல்லது பேராசையோ அல்லது வேறு ஏதேனும் காரியமோ, கர்த்தருக்கு ஒத்த சாயலிலுள்ள நம்முடைய வளர்ச்சியினைத் தடைப்பண்ணுமானால், நம்முடைய காணிக்கையானது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது மற்றும் நாம் அழைக்கப்பட்டுள்ளதான உன்னத மகிமையில் ஓர் இடத்தினை நாம் பெற்றுக்கொள்ள மாட்டோம். இதுபோலவே கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதைச் சபையானது நிறைவேற்றி வருகின்றது என்றும், பலிச்செலுத்துவதில் தலையானவரால் வழிகாட்டப்படுகின்ற, கிறிஸ்துவின் சரீரமாகிய நாம், பாவநிவாரண நாளினுடைய பலிகளில், நாம் பாவநிவாரண பலியாகிய கர்த்தருடைய ஆட்டினால் அடையாளப்படுத்தப்படுகின்றோம் என்றும் நாம் பார்த்திருக்கின்றோம். நாம் பங்கடைகிறதும், கர்த்தரினால் உலகத்தை நீதிமானாக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படப்போகிறதுமான கர்த்தரினால் ஏறெடுக்கப்பட்டப் பலியானது, அவருடன் இசைவுக்குள் வரும் யாவரையும்

நித்தியமான நீதிக்குள் இறுதியில் கொண்டுவந்திடும். இந்தப் பலிச் செலுத்துதலில் பங்கடைய எதிர்ப்பார்க்கப்படுகின்றதான காலப்பகுதியில்தான் நாம் இன்னமும் காணப்படுகின்றோம் - "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" - இல்லாவிட்டால் அவரோடேகூட ஆளுகைசெய்வதில்லை. மகிமையிலும், பூமியின் குடிகள் யாவற்றையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் வேலையிலும், நமக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்துவம் காணப்படத்தக்கதாக, நிழலில் அடையாளப்படுத்தப்படுகிற அங்கீகரிக்கப்படத்தக்க பலியினை நாம் ஏறெடுக்க முடிகிறவர்களாகக் காணப்படுவதற்கு நாம் மிகவும் வாஞ்சிக்கிறோம். இக்காரியமானது மிகவும் முக்கியமான காரியமாகும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் கருத்தாய் நாம் யாவரும் முடிவிற்கு வரலாமா? கர்த்தர் தம்முடைய வழிநடத்துதல்கள் வாயிலாகவும், தம்முடைய வார்த்தைகள் வாயிலாகவும் களிம்பு அனைத்திலிருந்தும், நம்முடைய இருதயங்களைச் சுத்திகரித்திடுவதற்கும் மற்றும் களிம்பிற்குப் பதிலாக அவரது சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியினால் நம்மை நிரப்பிடுவதற்கும், நாம் யாவரும் புதிய வைராக்கியத்துடன் அவரை அனுமதிக்கலாமா?

---

R 3867

# "புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள்"

## மத்தேயு 25:1-13.

"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்."—வசனம் 13

நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழிய நாட்களின் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று, நமது காத்தர் எருசலேமின் அழிவைக் குறித்தும், தம்முடைய பின்னடியார்கள் சிதறடிக்கப்படுவது குறித்தும், நீண்ட காலப்பகுதியான யுத்தங்கள் குறித்தும், யுத்தங்களின் செய்தி குறித்தும், இறுதியாக, மத்தேயு 25-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும் முன்னறிவித்தார். இந்த ஒரு தகவலானது, அவ்வேளையில் அப்போஸ்தலர்களுக்கு மிகவும் ஏற்றதாய் இருந்தது. ஏனெனில், அப்போஸ்தலர்களுடைய எதிர்ப்பார்ப்பு வேறுவிதமாய்க் காணப்பட்டது; அதாவது, அவர்கள் கர்த்தர் மேசியாவாக உயர்த்தப்படுவார் என்றும், எருசலேம் அவரது சாம்ராஜ்யத்தின் ஸ்தலமாக இருக்கும் என்றும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தவர்களாகக் காணப்பட்டனர். "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்ற கேள்விகளைக் கேட்டனர் (மத்தேயு 24:3). மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் இயேசுவினால் கூறப்பட்ட அவருடைய மாபெரும் தீர்க்கத்தரிசனத்தில், தம்முடைய இரண்டாம் வருகை என்பது விறுவிறுப்பான காலப்பகுதிகளில் நடைபெறும் என்றும், அப்போது கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் கூட வஞ்சிக்கப்பட்டுப் போவார்கள் என்றும், நோவாவின் நாட்களில் எப்படி இருந்ததோ, அப்படியே மனுஷகுமாரனுடைய நாட்களில் இருக்கும் என்றும், ஜனங்கள் புசித்தும், குடித்தும், நட்டும், கட்டியும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் இருப்பார்கள் என்றும், அவருடைய இராஜ்யத்தின் புதிய யுகத்திற்கான ஆரம்பத்திற்கு ஆயத்தப்படுத்தத்தக்கதாக, சீக்கிரம் வரவிருக்கின்ற புயலைக் குறித்து அறியாதவர்களாக உலத்தின் ஜனங்கள் இருப்பார்கள் என்றும் அப்போஸ்தலர்களுக்குச் சுட்டிக்காண்பித்து, அவர்களுக்கு இயேசு காரியங்களை விளக்கினார்.

காரியங்களை அவர்களது மனதில் பதிய வைப்பதற்கென, இயேசு ஐந்து புத்தியுள்ள மற்றும் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளாகிய, பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையை அவர்களுக்குக் கூறினார். உவமையின் காட்சியானது/சம்பவமானது, சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு பகுதியைப் பற்றினது என்பது, "அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்க்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்" என்ற வார்த்தைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது (மத்தேயு 25:1). இந்த உவமை சுவிசேஷ யுகம் முழுவதற்கும் பொருந்துகிறதில்லை. மாறாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி இவ்வுவமையானது, இக்காலத்திற்குப் பொருந்தக் கூடியதாய் இருக்கின்றது. ஏனெனில், நாம் மணவாளன் காணப்படும் காலமாகிய யுகத்தினுடைய முடிவில் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றோம். அதாவது, கலியாணத்திற்குப் புத்தியுள்ள கன்னிகைகள் செல்வதும், புத்தியில்லாத கன்னிகைகளுக்குக் கதவு அடைக்கப்படுவதுமான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தற்காலத்தில் இந்த உவமையைப் புரிந்துக்கொள்வது என்பது, கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் அனைவருக்கும் ஏற்றக்கால சத்தியமாகக் காணப்படும்.

வேதவாக்கியங்கள் எங்கும் சபை, தனது கலியாணத்திற்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கும் மணவாட்டியினால் அடையாளப்படத்தப்பட்டுள்ளது. மணவாளன் கர்த்தர் இயேசு ஆவார்; கர்த்தர் இயேசுவே அனைத்திற்கும் சுதந்தரவாளியாக இருக்கின்றார்; அவருடைய மணவாட்டியாகவும், உடன் சுதந்தரராகவும் ஆகுவதற்கான வாய்ப்புக் கர்த்தருடைய பின்னடியார்களுக்கு அருளப்பட்டுள்ளது. இவர்கள் இராஜாவினுடைய குமாரனுடன் இணைவதாலே அல்லாமல், மற்றப்படி இவர்களுக்கு நித்திய இராஜாவுடன் எவ்விதமான உறவும் இல்லை. இதற்கான நிழல், பழைய ஏற்பாட்டில் மிகவும் அருமையாய் உள்ளது. ஆபிரகாம், மிகவும் ஐசுவரியமுள்ள பரம பிதாவிற்கு நிழலாய் இருக்கின்றார்; ஈசாக், வாக்குத்தத்தத்தின் வித்தாகவும், அனைத்திற்கும் சுதந்தரவாளியான நமது கர்த்தர் இயேசுவுக்கு நிழலாய் இருக்கின்றார்; ஈசாக்கிற்கு மனைவியை அழைத்து வரும்படிக்கு அனுப்பப்பட்ட ஆபிரகாமின் ஊழியக்காரன், பரிசுத்த ஆவிக்கு அருமையான நிழலாய்க் காணப்படுகின்றார்; இந்தப் பரிசுத்த ஆவியானது, இந்தச் சவிசேஷ யுகத்தில் சபையைத் தெரிந்துக்கொண்டு வருகின்றது; இதைக் குறித்து அப்போஸ்தலர், "நான் உங்களைக் கற்புள்ள

கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்" என்று கூறுகின்றார் (2 கொரிந்தியர் 11:2).

சுவிசேஷ யுகம் முழுவதும், இந்தச் சபையானது, பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் மற்றும் பாதுகாப்பின் கீழ், மணவாளனோடு கூட உடன் சுதந்தரத்துவத்தில் வாக்களிக்கப்பட்ட மகிமையான நிலைமையாகிய, பரலோக இராஜ்யமாகிய, பல அறைகளைக்கொண்ட பிதாவின் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றனர். ஒருவேளை நாம் காரியங்களைச் சரியாகப் புரிந்துக்கொண்டவர்களாக இருப்போமானால், நாம் பிரயாணத்தின் முடிவில் இப்பொழுது காணப்படுபவர்களாக இருந்து, ரெபேக்காவினால் அடையாளப்படுத்தப்பட்டபடி, மணவாட்டி வகுப்பாரென முக்காடிட்டுக்கொண்டு, ஒட்டகங்களிலிருந்து இறங்கி, பரலோக மணவாளனால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய்க் காணப்படுவோம். இந்த முழுக் காரியமும், கிட்டத்தட்ட 19 நூற்றாண்டு காலப்பகுதியை உள்ளடக்கியிருப்பதினால், சம்பவிக்கவிருக்கும் அம்சங்கள்கூட, அவைகள் நிறைவேறுவதற்குப் பல வருட காலங்களை எடுத்துக்கொள்ளுகிறதாய் இருக்கும். சீக்கிரத்தில் மணவாட்டி, மணவாளனுடன் கூடக் காணப்படுவாள்; மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையில், மணவாட்டி அவரோடு கூடச் சாராளின் கூடாரத்தில் உடன்சுதந்தரர்களாகக் காணப்படுவாள். இவைகளுக்கு இசைவாகவே, "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலரால் நமக்குக்கொடுக்கப்பட்ட நிச்சயம் காணப்படுகின்றது (கலாத்தியர் 3:29).

கர்த்தருடைய உவமைகளில் அநேக உவமை, இராஜாவினுடைய மகனின் கலியாணம் தொடர்புடையதாக இருக்கின்றது; மேலும் சபைக்கான தம்முடைய கடைசி செய்தியிலுங்கூட, மணவாட்டியாகிய ஆட்டுக்குட்டியானவரின் மனைவியானவள், எப்படி இராஜ்யத்தில் மிகப் பிரகாசமாய்ப் பிரகாசிப்பாள் என்று கூறப்பட்டுள்ளது; அவள் புதிய எருசலேமென அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறாள். இங்கும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணின பின்பு ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து இருப்பதாக அறிவிப்புக்கொடுக்கப்பட்டது என்று பார்க்கின்றோம் (வெளிப்படுத்தல் 19:7-9). யோவான் ஸ்நானன் ஒரு தீர்க்கதரிசியாக, கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையிலான இந்த உறவைக் குறித்துக் கூறும்போது, "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான் இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" என்றார் (யோவான் 3:29). யோவான் ஸ்நானன் தான் மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினன் அல்ல என்றும், தான் மணவாளன் அல்ல என்றும் உணர்ந்திருந்தார். யோவான் ஸ்நானன், இயேசுவை மணவாளன் என்று அடையாளம் கண்டுகொண்டார்; மேலும் மணவாளன் மற்றும் மணவாட்டிக்குப் பணிவிடைக்காரனாக, அவர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் விதத்தில், தேவனால் கனப்படுத்தப்பட்டதில் மகிழச்சியாயிருந்தார். எதிர்க்காலத்தில் யோவான் ஸ்நானன், உண்மையுள்ள தீர்க்கத்தரிசிகளில் ஒருவராக, உயர்ந்த ஸ்தானம் வகிப்பார்; மேலும் நமது கர்த்தர் உறுதியளித்ததுபோல, இவரைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி எவரும் இருப்பதில்லை; எனினும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மணவாட்டி வகுப்பாரில் மிகவும் எளிமையானவனாய், சிறியவனாய் இருப்பவன், அதாவது இந்த இராஜ்ய வகுப்பாரிலேயே சிறியவனாய் இருப்பவன், யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவனாய் இருப்பான். ஏனெனில், இவர்கள் இராஜ்யத்தின் உடன் சுதந்தரர்களாகவும், கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடைபவர்களாகவும் இருப்பார்கள்; ஆனால் யோவான் ஸ்நானனும், முற்காலத்திலுள்ள உண்மையுள்ளவர்களும், பூமிக்குரிய தளத்தில், மனுஷர் மத்தியில் இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும், பிரபுக்களாகவும் இருப்பார்கள். (மத்தேயு 11:11; எபிரெயர் 11:39, 40; சங்கீதம் 45:16).

## "இரண்டு வகுப்பாரான கன்னிகைகள்"

இந்த உவமையானது தற்காலத்திற்குப் பொருந்துகின்றது என்பதை மனதிற்கு முன்பாக நிறுத்திய பிற்பாடு, இவ்வுமையானது கன்னிகைகளை, அதாவது தூய்மையுள்ளவர்களை மாத்திரமே குறிப்பிடுகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவ்வுவமையானது உலகத்தாரையோ, பெயர்க்கிறிஸ்தவ ஜனங்களையோ குறிப்பிடுவதில்லை. இவ்வுவமையில் இடம்பெறும் இரு வகுப்பாரும், கிறிஸ்தவர்களை அதாவது பரலோக இராஜ்ய வகுப்பாரை; அதாவது விசுவாசிகளை, அர்ப்பணம் பண்ணின விசுவாசிகளை, அதாவது இராஜ்யத்தின் சுவிசேஷத்தைக்

கேட்டு, இராஜாவை அவரது இரண்டாம் வருகையில் எதிர்ப்பார்த்து, தங்கள் தீவெட்டிகளிலிருந்து வெளிச்சம், தகவல் மற்றும் போதனைகள்/அறிவுரைகள் பெற்றுக்கொள்ளும் விசுவாசிகளைக் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். தூய்மையானவர்களாகவும், உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாகவும், மணவாளனுடைய வருகை மற்றும் இராஜ்யம் குறித்து அறிவிக்கப்பட்டவர்களாகவும், அதற்காக காத்திருப்பவர்களாகவும் காணப்படும் இந்த இரண்டு வகுப்பார், அர்ப்பணிக்கப்பட்டவர்களில் காணப்படும் இரண்டு வகுப்பாராகிய சிறுமந்தையினரையும், திரள்கூட்டத்தாரையும் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது முற்றிலும் ஜெயங்கொள்பவர்களையும், மிகுந்த உபத்திரவத்தின் வாயிலாக ஜெயங்கொள்பவர்களையும் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். (ரோமர் 8:37; வெளிப்படுத்தல் 7:14). இந்த இரண்டு வகுப்பாரும்தான், ஆசாரிப்புக் கூடாரத்தின் நிழல்களில் இடம்பெறும் இரண்டு ஆடுகள் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; இந்த இரண்டு ஆடுகளில் ஒன்று பலிச் செலுத்தப்படுவதற்கான கர்த்தருடைய ஆடு, மற்றொன்று போக்காடாய் போனது; ஆசாரிப்புக் கூடார நிழல்களில் இந்த ஆடுகளானது, சுவிசேஷ யுகம் முழுவதிலும், அதே சமயம், யுகத்தினுடைய முடிவிலுமான இந்த இரண்டு வகுப்பாருக்கும் அடையாளமாய் இருக்கின்றது; ஆனால் நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் உவமையில் வரும் இரண்டு வகுப்பார், இந்த யுகத்தினுடைய முடிவாகிய, தற்காலத்திலுள்ள சபைக்கு மாத்திரம் அடையாளமாய் இருக்கின்றனர்.

இந்த உவமையைக் கர்த்தர் கொடுப்பதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு; முதலாவதாக அப்போஸ்தலர்களும், இந்தச் சவிசேஷ யுகத்தினுடைய முழுச்சபையும் இராஜ்யத்தில் பங்கடைவதற்கு எப்போதும் ஆயத்தத்துடன் காணப்படத்தக்கதாக, வரவிருக்கின்ற இராஜா மற்றும் அவருடைய இராஜ்யத்திற்காக விழிப்புடனும், ஜாக்கிரதையுடனும், ஜெபத்துடனும், எதிர்ப்பார்ப்புடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டிய அவசியம் குறித்துப் பாடம் புகட்டுவதற்கு ஆகும். இரண்டாவதாக விசேஷமாக இக்காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நமக்காக கொடுக்கப்பட்டுள்ளது; அதாவது இராஜ்யத்தை எதிர்ப்பார்ப்பதும், அதற்காக ஜெபம் பண்ணுவதும், பொதுவான விதத்தில் மணவாளனை எதிர்ப்பார்த்திருப்பதும் (மட்டும்) போதாது, இறுதித் தருணத்தில் நாம் ஏமாற்றம் அடைந்துப் போகாதபடியும், நாம் நம்மை ஞானமாய் ஆயத்தம் பண்ணிக்கொள்ளும்படியும், அத்தருணத்திற்கென நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாகவும், மிகவும் ஊக்கத்துடனும் காணப்பட வேண்டுமென்பதை நாம் காணத்தக்கதாக, இவ்வுவமை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## "உவமையில் இரண்டாம் அட்வெண்டிஸ்டுகள்"
## (இரண்டாம் வருகையினை எதிர்பார்ப்பவர்கள்)

"உவமையின் காட்சியின்படியே, கடந்த நூற்றாண்டில் அனைத்துக் கிறிஸ்தவப் பிரிவுகளிலுள்ள கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில், ஓர் இயக்கம் ஆரம்பித்து, பின்னர் இரண்டாம் வருகை இயக்கம் என்று அழைக்கப்படும் அளவுக்கு உச்சநிலையை எட்டினது. உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரின் மத்தியிலுமுள்ள தூய்மையானவர்களாகிய கன்னிகைகள், மணவாளனுடைய வருகைச் சமீபித்துள்ளது என்ற எண்ணத்தினால் விழித்தெழுந்துள்ளனர்; மற்றும் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தல் எனும், இரண்டாம் வருகை தொடர்புடைய வேதாகமத்தின் மீதான பொதுவான ஆராய்ச்சி நடைப்பெற்றது. உவமையின்படியே, அந்த அருமையான ஜனங்களுடைய எதிர்பார்ப்பு ஏமாற்றம் அடைந்தது. "மணவாளன் வர தாமதித்தார்;" மேலும் அவர் தாமதித்தபோது அவர்களனைவரும், "நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்." விளக்குகள் மீதான கவனம் புறக்கணிக்கப்பட்டது, பின்னர் இவ்வகுப்பார்மேல் ஒரு மந்தத்தன்மை ஏற்பட்டது. கன்னிகைகளில் அநேகர் தூங்கிபோனது மாத்திரமல்லாமல், அநேகர் மிகவும் விநோதமான மற்றும் பகுத்தறிவுக்குட்படாத, கற்பனையான காரியங்களைக் கனவு கண்டார்கள். இப்படியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, "இதோ மணவாளன்!" என்று நடுராத்திரியில் அறிவிக்கப்பட்டது.

இந்த ஒரு சத்தமானது கி.பி. 1874 முதல் போய்க்கொண்டே இருக்கின்றது; மேலும் இதற்குச் செவிச்சாய்த்து, கன்னிகை வகுப்பார் அனைவரும் விழித்தெழுந்து கொண்டிருக்கின்றனர்; மீண்டும் புதிதாய் தெய்வீக வார்த்தைகளின் மீதான ஆராய்ச்சி நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தீவெட்டிகள் ஆயத்தப்படுத்தப்படுகின்றன. இந்த அறிவிப்பை/சத்தத்தைக் கேட்டவர்களில் சிலர், இது தவறான சத்தம்/அறிவிப்பு என்று வலியுறுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் அதிகம் அரைத்தூக்கத்திற்குள்ளாகிவிட்டதினாலும், இவர்கள் இவ்வுலகத்தின் கவலைகளினால் பாரமடைந்து விட்டதினாலும், இவர்கள் நன்கு சௌகரியமாய்க் காணப்படுவதினாலும், இவர்கள்

மணவாளனை அன்புகூர்ந்தபோதிலும், அனைத்துக் காரியங்களைக் காட்டிலும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆயத்தமாய் இருப்பதை விரும்பினபோதிலும், இவர்கள் ஆயத்தமற்றவர்களாகவும், வேத ஆராய்ச்சி செய்ய மறுப்பவர்களாகவும், பின்வருமாறு தங்களுக்குள்ளாக வெறுமனே முறுமுறுக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர்; அதாவது, "ஆம் நாங்கள் மணவாளனை அன்புகூருகிறோம்; அவரைச் சந்திக்க நிச்சயமாய் நாங்கள் ஆயத்தமாய் இருப்போம்; நாங்கள் நீண்டகாலமாய் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம்; ஆனால் அவர் இன்னமும் வரவில்லை, இன்னமும் வரவில்லை. ஆத்துமாவே அமைதலாயிரு; யாருக்கும் எதுவும் தெரியாது; மணவாளன் வந்திருக்கிறார் என்று அறிவிக்கின்றவர்கள் நிச்சயமாய் தவறாகவே சொல்கின்றார்கள்" எனத் தங்களுக்குள்ளாக முறுமுறுக்கிறவர்களாக மாத்திரமே காணப்படுகின்றனர்.

நாட்கள், வாரங்கள் மற்றும் வருடங்கள் தாண்டிச் சென்றுக்கொண்டிருக்கையில், அநேக, அநேக கன்னிகைகள் விழித்தெழுந்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும் இப்படியாக இவர்கள் விழித்தெழும்பும் போது, வேத ஆராய்ச்சியாகிய, தீவட்டிகளை ஆயத்தப்படுத்துதலும் ஆரம்பமாகுகின்றது; இப்படி ஆராயச்சி நடந்துக் கொண்டிருக்கையில், தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கு, தாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றதாக எண்ணிக்கொண்டிருந்த சிலர், பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகின்றதுமான மிக முக்கியமான எண்ணெயில், தாங்கள் குறைவுப்பட்டிருப்பதைக் கண்டுபிடிக்கின்றனர்; இந்தப் பரிசுத்த ஆவியிலிருந்தே இவர்களுக்கான வெளிச்சம்/பிரகாசிப்பித்தல் வருகின்றது. மணவாளனுடைய தாமதமானது, அவரோடு கலியாணத்துக்கு வரும்படிக்கு அழைக்கப்பட்டிருந்த கன்னிகைகளுக்குப் பரீட்சையாக அமைந்தது; இந்தத் தாமதமானது யார் புத்தியுள்ளவர்கள் என்றும், யார் புத்தியில்லாதவர்கள் என்றும் நிரூபிப்பதற்குரிய பரீட்சையாக அமைந்தது. கன்னிகைகளில் ஒருவராக, எந்தச் சபை காலப்பகுதியிலும் கருதப்படுவதற்குக் குறிப்பிட்டளவு எண்ணெய், ஒரு குறிப்பிட்டளவு அர்ப்பணிப்பு, ஒரு குறிப்பிட்டளவு பரிசுத்த ஆவி அவசியமாய் இருந்தது; ஆனால் இவைகளனைத்தும் மணவாளன் உண்மையில் பிரசன்னமாய்க் காணப்படும் இப்பொழுது மற்றும் நிஜமான பவனி நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் இப்பொழுது, அதிகளவில் அவசியப்படுகின்றது; இப்பொழுது அதிக வெளிச்சம், அதிக சத்தியத்திற்கான வேளையாக இருக்கின்றது; மற்றும் இவை, கலியாணத்துக்குப் போகிறவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

கன்னிகைகள், இக்காலத்தில் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களுக்குப் பொதுவாக அடையாளமாய் இருக்கின்றனர்; ஆகவே இவர்கள் மத்தியில் 1844-ஆம் வருடத்தின் இயக்கத்துடன் தொடர்பு இல்லாதவர்கள் கூடக் காணப்படுகின்றனர். எனினும் 1844-ஆம் வருடத்திலிருந்த அதே ஆவிதான், இன்றும் காணப்படுகின்றது; அதாவது மணவாளன் மீது அன்பும், அவருடைய இராஜ்யத்தில் அவருடைய பிரசன்னத்திற்கான எதிர்ப்பார்ப்பும், கதவு அடைக்கப்படுவதற்கு முன்னதாக, அவரோடுகூட உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக ஆயத்தம்படுவதற்கு எல்லாவற்றையும்விட விரும்புவதும், 1844-ஆம் வருடத்தில் காணப்பட்டதுபோல், இன்றும் காணப்படுகின்றது. கதவு அடைப்படுவதற்கு முன்னதாக, மணவாளனுடன் உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக பவனியில் நிற்கும் கன்னிகைகளாக இருப்பதற்கு உதவும், வெளிச்சத்தை அருளுமளவுக்குப் போதுமான எண்ணெயை, வெளிச்சத்தை, பரிசுத்த ஆவியைக்கொண்டிருப்பவர்கள் யார்? என்ற கேள்வி எழும்புகின்றது. இது ஒரு முக்கியமான கேள்வியாகும்; மற்றும் இது தனது தீவட்டியை எரிய பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதாகும். நாம் போதுமானளவுக்கு கர்த்தருடைய ஆவியாகிய சாந்தத்தின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியைக் கொண்டிருக்கின்றோமா என்பதை நாம் பார்த்துக்கொள்வது எவ்வளவு அவசியமானதாய் இருக்கின்றது. இவைகளை நாம் போதுமானளவில் கொண்டிருக்கவில்லையெனில், நம்முடைய தீவட்டிகள் அணைந்து போய்விடும் என்பது உறுதியே.

## "உங்கள் எண்ணெயில் கொஞ்சம் கொடுங்கள்"

தங்களுடைய வெளிச்சத்தையும், மணவாளனிடத்திலான தங்களது தயவைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், மற்றுமாக கலியாணத்திற்குள் போகத்தக்கதான நிலையை அடைவதற்கும், இந்தப் பரிசுத்த ஆவியை, இந்த அர்ப்பணிப்பின் ஆவியைப் புத்தியுள்ள கன்னிகைகள் அனைவரும் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை விவரிப்பதற்காகவே, உவமையில் புத்தியில்லாத கன்னிகைகள், புத்தியுள்ளவர்களுடைய எண்ணெயில் கொஞ்சத்தைக்

கேட்பதாகக் கர்த்தர் காண்பித்து, மற்றவர்களிடமிந்து இப்படியாக எண்ணெய் பெற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றார்; கேட்பதினால் பரிசுத்த ஆவியின் கனிகளும், வரங்களும் பெற்றுக்கொள்ளப்பட முடியாது. இவைகள் அனுபவமெனும் கடையில் வாங்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன; இவைகள் படிப்படியாக வளரக்கூடியவைகளாகவும், கவனமான/ஜாக்கிரதையுடன் கூடிய வார்த்தைகளினாலும், எண்ணங்களினாலும், கிரியைகளினாலும் பெற்றுக்கொள்ளப்படக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆவியின் கனிகள் அடைவதற்கு மிகவும் கஷ்டமானவைகள் என்பதினாலும், சுயத்தை வெறுத்தல் எனும் விலையினால் இந்த ஆவியின் கனிகள் அடையப்படுவதினாலும், இவைகள் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவைகளாக இருக்கின்றன.

எவராலும் இந்தப் பரிசுத்த ஆவியைத் திரளாய்ப் பெற்றுக்கொள்ள முடியாது, மற்றும் தன்னுடைய தேவைக்குப்போக, மற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக அதிக திரளாய் எவரும் இந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியாது. தம்மோடு கூடக் கலியாணத்திற்கு வர அழைக்கப்பட்டவர்கள், வஸ்திரம், தீவட்டிகளால் மாத்திரமல்லாமல், எண்ணெயையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, மணவாளன் முன்கூட்டியே அநேகம் ஏற்பாடுகளைப் பண்ணிவிட்டார்; ஒருவேளை எவரேனும் எண்ணெய் பெற்றுக்கொள்வதில் அஜாக்கிரதையுடன் காணப்பட்டால், அவர்கள் இப்படியாக, கதவு பூட்டப்படுவதற்கு முன்னதாகவே, மணவாளனுடன் பிரவேசிக்கும் வகுப்பாரில் காணப்படுவதற்கான தங்களுடைய தகுதியற்ற நிலையைக் காண்பிக்கிறவர்களாக இருக்கின்றார்கள். இதுவே இந்த உவமையின் மூலமான நம்முடைய கர்த்தருடைய போதனையின் சாரமாக இருக்கின்றது; அதாவது, இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும், அதன் மகிமைகளில் பங்கடைய வேண்டுமென்றும் எதிர்ப்பார்ப்போடு இருப்பவர்கள், முன்கூட்டியே ஆயத்தமாய்க் காணப்பட வேண்டுமென்பதே ஆகும். ஒருவேளை அவர்கள் கதவு அடைக்கப்படும் தருணம் வரையிலும் ஆயத்தம் அடைவதில் தாமதித்துக்கொண்டிருப்பார்களானால், அவர்கள் எவ்வளவுதான் விருப்பம் கொண்டவர்களாகவும், எவ்வளவுதான் வாஞ்சைக் கொண்டவர்களாகவும் இருந்தாலுங்கூட (முடிவில்) அவர்களால் ஆயத்தம் அடையமுடியாது; ஏனெனில், ஆயத்தம் அடைவதற்கு நேரமும், பொறுமையும், கவனமும் அவசியமாய் இருக்கின்றது.

உண்மையான கிறிஸ்தவர்களாகவும், கன்னிகைகளாகவும், தூய்மையான நோக்கம் மற்றும் இருதயம் கொண்டவர்களாகவும், பரலோக மணவாளன் மீது விருப்பம் கொண்டவர்களாகவும், கலியாண விருந்தில் பங்கெடுக்க விருப்பம் கொண்டவர்களாகவும் இருப்பதற்கு சாட்சிப் பகர்ந்து, அதே வேளையில் இவ்விஷயங்களில் குறைவான வெளிச்சம் கொண்டுள்ளவர்களாகிய சிலரை நாம் அடிக்கடிச் சந்திக்கின்றோம். இவாகள் சிலசமயம் நம்மிடம் பின்வருமாறு கூறுவதுண்டு; அதென்னவெனில், "உங்கள் வெளிச்சத்தை எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்; இவைகளையெல்லாம் நீங்கள் எப்படி அறிந்துக்கொண்டீர்கள் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்; மற்றவர்கள் தூங்கிக்கொண்டிருக்க, இவைகளைப்பற்றி நீங்கள் ஏன் இவ்வளவு உறுதியுடன் காணப்படுகின்றீர்கள்? நாங்கள் போதுமானளவுக்கு எழுந்திருக்கின்றோம், ஆனால் எங்கள் தீவட்டிகள் வெளிச்சம் கொடுப்பதில்லை" என்பதாகும். இவ்விஷயங்களில் இவர்களுக்கு இன்னொருவர்/பதிலாள் வாயிலாக விசுவாசம் கொடுப்பது சாத்தியமற்றது என்று நாம் பதிலளிக்கின்றோம்; வெளிச்சத்தை அடைவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது; அது பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, தெய்வீக வார்த்தைகளைப் பொறுமையுடன், தொடர்ந்து/சோர்ந்து போகாமல் ஆராய்வதன் மூலமேயாகும். இந்த எண்ணெயையும், அதன் வெளிச்சத்தையும் பெற்றுக்கெள்வதற்கு, இவர்கள் நற்கிரியைச் செய்வதிலும், வேத ஆராய்ச்சிகளிலும், ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளை வளர்த்துவதிலும் சோர்ந்துப் போகாமல் காணப்பட வேண்டுமென நாம் இவர்களுக்கு அறிவிக்கின்றோம். இவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், தேவ வார்த்தைகளின் ஆராய்ச்சிக்கும் நேரம் கொடுக்க முடியாதளவுக்கு, இவ்வுலகத்தின் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும், ஜீவனத்தின் பெருமையினாலும் அமிழ்த்தப்பட்டுள்ளனர் என்று மனவருத்தம் தெரிவிக்கின்றனர். இப்படிப்பட்டவர்களினிமித்தம் நமக்கு வருத்தம் ஏற்படுகின்றது; நமக்கிருக்கும் எண்ணெய் மற்றும் நமது தீவட்டிகளின் தெளிவான வெளிச்சமாகிய ஆசீர்வாதங்களை, இவர்களும் அனுபவிக்க வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம். எங்கு மற்றும் எப்படி எண்ணெய் மற்றும் வெளிச்சம் அடையப்பெறலாம் என்பதை இவர்களுக்குச் சொல்வதைக் காட்டிலும், வேறெதுவும் எங்களால் செய்ய இயலாது. மணவாளனுக்கு வந்தனம் தெரிவிக்கத்தக்கதாகவும், அவருடைய பிரசன்னம்/வந்திருத்தல் தொடர்புடைய நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கத்தக்கதாகவும், அவரோடு கூடக் கலியாணத்திற்குள் பிரவேசிப்பதற்கான நமது எதிர்ப்பார்ப்பைத் தெரிவிக்கத்தக்கதாகவும்,

நாம் நமது வெளிச்சத்தை உயர்த்திப் பிடித்துக்கொள்பவர்களாகவும், நமது தனிப்பட்ட விதமான ஆயத்தமாகுதலைத் தொடர்ந்து செய்து வருபவர்களாகவும் காணப்பட வேண்டும்.

## ‘‘கதவும் அடைக்கப்பட்டது’’

கி.பி. 1878 முதல், புத்தியுள்ள கன்னிகைகள் நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி கலியாணத்திற்குள் பிரவேசித்துக்கொண்டு வருகின்றனர்; மற்றும் இன்னமும் புத்தியுள்ள கன்னிகைகள் திரையைக் கடந்து, ஒரு இமைப்பொழுதில் மறுரூபமடைந்துக்கொண்டு வருகின்றனர். (1 கொரிந்தியர் 15:51). சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவடைந்து, கடைசி அங்கத்தினர் மறுரூபமடைந்து தீரும்; பின் கதவு அடைக்கப்படும்; பின்னர் ஒருவரும் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இக்காரியங்களானது கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலர், எண்ணிக்கொண்டுள்ள பயங்கரமான காரியங்களைக் குறிப்பதாக இல்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி. கதவு அடைக்கப்படுவது என்பது, வெளியே இருக்கும் புத்தியில்லாத கன்னிகைகளும், உலகத்தாரும், நம்பிக்கையற்ற இரண்டாம் மரணத்திற்குப் போய்விடுவார்கள் என்பதைக்குறிக்கிறதாக இல்லை; மாறாக கதவு அடைக்கப்படுவது என்பது, இனி ஒருபோதும் திறக்கவே மாட்டாத, மாபெரும் பிரம்மாண்டமான வாய்ப்புகளின் நிறைவடைதலைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அதாவது இராஜ்ய வகுப்பாரின், மணவாட்டி வகுப்பாரின் நிறைவடைதலையும், கனம், மகிமை, அழியாமை மற்றும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்துவத்திற்கான இடுக்கமான வழி மூடப்படுவதையும் குறிக்கின்றதாகவே இருக்கின்றது.

புத்தியில்லாத கன்னிகைகள் போய், விலையேறப் பெற்ற எண்ணெயை வாங்கிக்கொண்டு வந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்திக்கொண்டு எரிய வைக்கின்றனர். ஆனால் இவர்கள் கலியாணத்திற்கு வர தாமதித்துவிடுகின்றனர்; ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டி ஆகுவதில் மிகவும் தாமதித்துவிடுகின்றனர். ஆகவேதான் இவர்கள் உவமையில் கதவைத் தட்டும்போது, மணவாளன் இவர்களிடம், "மணவாட்டி வகுப்பாரில் உங்களை நான் அங்கத்தினராக அறியேன்; நீங்கள் உள்ளே வரக்கூடாது" என்று கூறுவதாகக் காணப்படுகின்றது. இவர்கள் கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பதிலாக, கொஞ்சக் காலம், அப்போது உலகம் முழுவதும் நிலவும் மகா உபத்திரவக்காலத்தில் தங்கள் பங்கை அடையும்படி அனுமதிக்கப்படுகின்றனர்; அக்காலத்தில் புத்தியில்லாத கன்னிகைகளுக்கு மாத்திரமல்லாமல், பூமியின் குடிகள் அனைத்திற்கும் கூட அழுகையும், பற்கடிப்பும், துக்கமும், ஏமாற்றமும், மன வருத்தமும் பங்காகக் காணப்படும். சீக்கிரத்தில் வரவிருக்கின்ற ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையான நிலைமைகளுக்காக, மனுக்குலத்தின் உலகத்தை உபத்திரவத்தின் மகா நாளானது, ஆயத்தப்படுத்தும் என்பதை அறிவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நீதியின் சூரியனானது, ஆரோக்கியமுடைய அதன் செட்டைகளுடன் உதிக்கும்போது, "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்;" "சீயோனிலிருந்து (மகிமைப்படுத்தப்பட்ட இராஜ்யம், பரலோக இராஜ்யம்) வேதமும், எருசலேமிலிருந்து (பரலோக இராஜ்யத்தின், பூமிக்குரிய பிரதிநிதிகள்) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3; மல்கியா 4:2).

இந்தப் புத்தியில்லாத கன்னிகைகள், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களிலிருந்து தள்ளப்படுவது மாத்திரமல்லாமல், இவர்கள் எண்ணெயாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு வந்த பிற்பாடும், நித்தியமான சித்திரவதைக்குள் அனுப்பப்படுவார்களெனும் கருத்தானது எவ்வளவு முரண்பாடாக உள்ளது! எவ்வளவு நியாயமற்றதாய் உள்ளது! எவ்வளவு முன்னுக்குப் பின் முரணானதாக உள்ளது! இந்த உவமையனாது தெய்வீகக் குணலட்சணத்திற்கும், திட்டத்திற்கும்/ஏற்பாட்டிற்கும் எவ்வளவு இசைவானதாய்க் காணப்படுகின்றது. நாம் புத்தியில்லாத கன்னிகைகள் மீது அனுதாபம் கொள்கின்றோம்; நாம் இவர்களைப் புகழ முடியாது, ஆனால் இவர்களைக் கடிந்துக்கொள்ள வேண்டும். இவர்கள் திரள்கூட்டத்தினராக, தங்கள் வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் கழுவி, வெண்மையாக்கிக்கொண்டு, கர்த்தர் மற்றும் மணவாட்டியினுடைய முன்னிலையில் காணப்படுவார்கள். வெளிப்படுத்தல் 7 மற்றும் சங்கீதம் 45-ஆம் அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளதுபோல், கன்னிகைகளாக, மணவாட்டியினுடைய தோழிகளாகக் காணப்படுவார்கள்; சிங்காசனத்திற்கு முன்னதாக ஊழியக்காரர்களாய்க் காணப்படுவார்கள்; ஒருவேளை இவர்கள்

தற்காலத்தில் சரியான அன்பும், வைராக்கியமும், அறிவும் கொண்டிருப்பார்களானால், மணவாட்டி வகுப்பின் அங்கத்தினர்களாக, சிங்காசனத்தில் காணப்பட்டிருந்திருப்பார்கள்.

## ''நாளையாவது நாழிகையையாவது அறியாதிருக்கிறபடியால்''

"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" (மத்தேயு 25:13) என்று கூறி நமது கர்த்தர் உவமையை முடிக்கின்றார். பழைய மூல பிரதிகளில், "மனுஷகுமாரன் வரும்" என்ற வார்த்தைகள் காணப்படுவதில்லை. எப்படியாயினும் கருத்து ஒன்றுபோலவே காணப்படுகின்றது. "இந்த உவமை நிறைவேறும் நாளையோ; நாழிகையையோ அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்." விழித்திருத்தல் என்பது, சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு நன்மையாகவே இருந்துள்ளது; மற்றும் இது தற்காலத்திலுள்ள புத்தியுள்ள கன்னிகை வகுப்பாருக்கு இன்னும் அதிக நன்மைக்கு ஏதுவாய்க் காணப்படுகின்றது, ஏனெனில் விழித்திருத்தலானது, இவர்களுக்கு, இவர்களுடைய சூழ்நிலைகளையும், நிலைமைகளையும் விவரிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த உவமையில் கூறப்பட்டுள்ள விழிப்பாய் இருக்கும் மனநிலைமையில், புத்தியுள்ள கன்னிகை வகுப்பார் அனைவரும் காணப்பட வேண்டும்; மணவாளன் வந்துகொண்டிருக்கின்றார் என்ற உண்மைப் பற்றின அறிவு இவர்களுக்குக் காணப்பட வேண்டும்; இவர்களிடம் தீவட்டிகளும், நிரம்ப எண்ணெயும் காணப்பட வேண்டும். இப்படியாக இந்த ஆயத்தமான நிலைமையில் காணப்படுபவர்கள், "இதோ மணவாளன் காணப்படுகின்றார்/பிரசன்னமாயுள்ளார்" என்று கடந்துப் போய்க்கொண்டிருக்கும் செய்தியைக் கேட்கும்போது அச்சமோ, அதிர்ச்சியோ அடையமாட்டார்கள். நாம் மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தில் (parousia) வாழ்ந்துக்கொண்டு வருகின்றோம்; புத்தியுள்ள கன்னிகைகள் ஏற்கெனவே கலியாணத்திற்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கின்றனர்; சபைக்கான முழுமையான எண்ணிக்கைச் சீக்கிரத்தில் நிறைவடையும், கதவும் அடைக்கப்படும். இப்படியான விழிப்பான இருதய நிலைமையில் இருப்பவர்களும், கர்த்தருடைய ஆவியை முழுமையாய்த் தங்கள் இருதயங்களில் பெற்றிருப்பவர்களும், மணவாளன் காணப்படுகின்றார்/வந்திருக்கின்றார் என்ற முதலாம் தகவலிலேயே/அறிவிப்பிலேயே மிகவும் விரைவாக ஈர்க்கப்படுவார்கள். இவர்கள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும்போது, அதாவது வேதவாக்கியங்களை ஆராயும்போது, இந்த அறிவிப்பினுடைய உண்மையை உடனடியாக உணர்ந்துக்கொண்டு, விரைவாக (தங்களை) ஆயத்தம் பண்ணிக்கொண்டு, புத்தியுள்ள கன்னிகைகள் மத்தியில் நிற்பார்கள். இவ்விஷயம் தொடர்புடைய சத்தியமானது, இந்த அறிவிப்பானது ஒரு பரீட்சையாக அமைந்து, கர்த்தருடைய கன்னிகைகள் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களில், எவர்களுடைய பாத்திரத்தில் எண்ணெய் இருக்கின்றது என்றும், தாழ்மையின், பொறுமையின், அன்பின், சரியான ஆவி இருக்கின்றது என்றும், மணவாளனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடும், அக்கறையும் இருக்கின்றது என்றும் நிரூபிக்கின்றதாய் விளங்கும். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே மணவாளனினால் விரும்பப்படுகின்றனர் அல்லது உள்ளே பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இக்கண்ணோட்டத்தின்படிப் பார்க்கையில், தங்காலத்தின் நமது வேலையானது, மணவாளனுடைய வந்திருத்தலை பறைசாற்றுவது/பிரகடனப்படுத்துவது மாத்திரமில்லாமல், பாத்திரத்தில் எண்ணெய் கொண்டிருப்பவர்கள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணுவதற்கும், நாம் உதவ வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். எண்ணெயைப் போய் வாங்கிகொள்வதற்கு இதுவரை காலம் இருக்கிறது என்றாலும், இனிச் சீக்கிரத்தில் அதற்குக் காலம் இராமல் போகும்; ஆகவே, கர்த்தருடைய ஆவியாகிய எண்ணெயைக்கொண்டிருந்தும், இன்னமும் அரைதூக்கத்தில் இருப்பவர்களுக்கே நமது விசேஷித்த அக்கறை காணப்பட வேண்டும்; மேலும் அன்புடனும், பொறுமையுடனும், விடா முயற்சியுடனும் அவருடைய பிரசன்னத்தின் அறிவிப்பானது, இவர்களது கவனத்திற்குக்கொண்டு வரப்பட வேண்டும்.

மணவாளனுடைய வந்திருத்தல் அறிவிக்கப்படும் வேளை வரும்போது, அதைக் கன்னிகைகள் அறியாமல் இருப்பார்கள் என்பது உவமையின் கருத்தல்ல. அவருடைய பிரசன்னத்தில் உறுதியில்லாமல் அவர்களால் எப்படித் தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணிக்கொண்டு அவரைச் சந்திப்பதற்கும், அவரோடு செல்வதற்குமெனப் புறப்பட்டுப்போக முடியும்? பிரசன்னமாகுவதற்கு முன்னான காலப்பகுதித் தொடர்புடைய விஷயத்திலேயே கர்த்தர் விழித்திருக்கச் சொன்னார். மணவாளன் வந்திருப்பதை உணர்ந்துக்கொண்டவர்களும், தங்களுடைய தீவட்டிகளை ஆயத்தம் பண்ணிக்கொண்டவர்களும், அவருக்கான ஊர்வலத்தில் சேர்ந்துக்கொண்டவர்களுமாகிய கன்னிகைகள், அவருடைய வருகைக்காக (எப்போது வருவார் என்பதற்காக) விழித்திருக்கவில்லை, மாறாக அவருடைய பிரசன்னத்தை அறிந்தவர்களாக

இருக்கின்றனர், ஏனெனில் அந்த நாளும், நாழிகையும் வந்தபோது, அவர்கள் ஆயத்தத்துடனும், எண்ணெயுடனும் காணப்பட்டிருந்தார்கள்.

நமக்கு ஏற்கெனவே உரியதாக இருக்கும் ஆசீர்வாதங்களுக்காகவும், இரக்கங்களுக்காகவும், நாம் தேவனுக்குத் துதிச் செலுத்திக்கொண்டு, நமது தீவட்டிகளுடைய வெளிச்சத்திலும், மகிமையான கலியாண விருந்திற்கான எதிர்ப்பார்ப்பிலும், பின்னர் மணவாளனோடு கூடப் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் மகிமையான வேலைபற்றின எதிர்ப்பார்ப்பிலும், களிக்கூர்ந்து, நாம் உண்மையுடன் தொடர்ந்து முன்னேறுவோமாக. இந்த அறிவை உடையவன், இந்த அறிவினிமித்தமாக உலகத்திலிருந்தும், அதன் ஆவியிலிருந்தும் அதிகமதிகமாய்ப் பிரிக்கப்பட்டு, அதிகமதிகமாய் மணவாளனுடைய சாயலுக்குத்தானே, மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுவான்.

**ஆமென்!**

# அவளால் இயன்றதை அவள் செய்தாள்

## மத்தேயு 26:6-13

*"அவள் நற்கிரியைகளைச் செய்தாள்."*

யூதருடைய ஓய்வுநாள் நிறைவுபெற்ற மாலையில், வழக்கத்தின்படியே இயேசுவும், அவருடைய சீஷர்களும், இன்னும் மற்றவர்களும் அந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் எருசலேமில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடும்படிக்கு, எரிகோவிலிருந்து முந்தின நாளின் சாயங்கால வேளையிலேயே வந்துவிட்டார்கள்; மேலும், இந்தப் பஸ்காவைக் குறித்துதான் கர்த்தர் இயேசு, "தாம் பாடுபடுகிறதற்கு முன்னே அவர்களுடன்கூட, இந்தப் பஸ்காவை புசிக்க ஆசையாய் இருந்தார்" என்று தெரிவித்தார் (லூக்கா 22:15). அவர் தாம் எருசலேமுக்குப் போகவேண்டும் என்றும், அங்கு தாம் சிலுவையில் அறையப்படுவார் என்றும், சீஷர்களிடத்தில் கூறியிருந்தபோதிலும், அவர்களால் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், அநேகக் காரியங்களை அவர் அவர்களோடு உவமைகளாகவே பேசியிருந்தார். எடுத்துக்காட்டாக, நானே வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், இன்னுமாக என்னுடைய மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டும் என்றும் கூறியிருந்தார். அநேகமாக, அவர் சிலுவையில் அறையப்படுவது குறித்துக் கூறின காரியங்களையுங்கூட, அவர்கள் உவமைகளாகவே எண்ணியிருந்திருக்கக்கூடும்; சிலுவையில் அறையப்படும் விஷயத்தைப் பொறுத்தமட்டில் பேதுரு அதை ஏற்க மறுத்தபோது, கர்த்தர் பேதுருவைக் கடிந்துகொண்ட பின்னரும்கூட சீஷர்களால் அந்த வார்த்தைகள் உவமைகள் அல்ல என்பதைப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள்.

அந்த விருந்து குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சீமோன் என்பது அக்காலக்கட்டத்தில் மற்றும் அந்த இடங்களில் பொதுவான பெயராக காணப்பட்டது; இந்தச் சீமோனோ குஷ்டரோகியாகிய சீமோன் என்று வேறுபடுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளார் – அநேகமாக ஆண்டவரால் இந்தச் சீமோன் சொஸ்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதுவே இயேசுவுக்கும் லாசருவின் குடும்பத்திற்கும் ஏற்பட்ட நெருக்கமான உறவுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அந்தக் குடும்பத்தில் லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாள் முக்கியமான நபர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். சுவிசேஷகர் ஒருவர், லாசரு அந்தப் பந்தியில் அமர்ந்திருப்பதாகவும், மார்த்தாள் அவருக்குப் பந்தி பரிமாறினதாகவும் தெரிவிக்கின்றார். இந்தப் பாடத்தில், மரியாள் செய்த காரியத்தைக் குறித்து விசேஷமாக நாம் பார்க்கப்போகின்றோம். இந்த மரியாள், கர்த்தர் சாய்ந்த நிலையில் பக்கவாட்டில் படுத்துக்கொண்டிருக்கும்போது அவர் கிட்டே சென்று, விலையேறப்பெற்ற தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியின் முத்திரையை உடைத்தாள் என்று பார்க்கிறோம். பதிவுகளில் ஒன்று, இத்தைலம் மிகவும் விலையேறப்பெற்றது என்றும், மற்றொரு பதிவு, அதன் விலை 300 பணம் என்றும் தெரிவிக்கின்றது. நம்முடைய பண மதிப்பின்படி அது சுமார் 50 டாலர் மதிப்புடையதாய் இருக்கும்.

இப்படிப்பட்ட அபிஷேகத் தைலங்கள் அரிதாயிருந்தது, அதிலும் பொதுவாக இராஜாக்கள் அல்லது இளவரசர்கள் அல்லது பிரபுக்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.யூதாசினுடைய முறுமுறுப்பினால் தாக்கம்பெற்றச் சீஷர்களும் அத்தைலம் விரயம் செய்யப்பட்டதினிமித்தம் நியாயமாக எழும்பும் கோபத்தினால் நிறைந்தவர்கள் ஆனார்கள். பணப்பையைச் சுமந்து திரிந்தவனும், அக்கூட்டத்தாருக்குப் பொருளாளராக இருந்தவனுமாகிய யூதாஸ் திருடனாய் இருந்தான் என்றும், பணத்தைத் தரித்திரருக்குச் செலவுசெய்யலாம் என்று அவனிடமிருந்து வெளிப்பட்ட அக்கறையுடன் கலந்த வார்த்தைகள் மாய்மாலம் என்றும் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார். யூதாசினுடைய வாதத்திற்கு ஆதரவு தெரிவித்த மற்ற அப்போஸ்தலர்கள் மீது நாம் அனுதாபமே கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்கள் அனைவரும் ஏழைகளாய் இருந்தார்கள். மேலும், இப்படிப்பட்ட ஆடம்பரமான செலவுகளுக்கும், வீண் செலவுகளுக்கும்/வரம்பு மீறின செலவுகளுக்கும் பழக்கமற்றவர்களாகவே இருந்தார்கள்; மேலும், இக்கோணத்தில் பார்க்கையில், அப்போஸ்தலர்கள் இன்றைய நாட்களில் காணப்படும் பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களுக்கு அடையாளமாய் இருக்கிறார்கள்; இன்றைய கர்த்தருடைய ஜனங்களும்கூட நறுமணதைலத்திற்கான விலை சீட்டு (bill) 50 டாலருக்குரியது எனப் பார்க்கும்போது விரையமான

வீண்செலவு என்றே கூறுவார்கள். இக்காரியத்தை இயேசு எவ்வாறாகக் கண்ணோக்கினார் என்பதன் மீதே நாம் அதிக கவனமுள்ளவர்களாய் இருக்கின்றோம். இப்படிப்பட்டதான விஷயங்கள் குறித்ததான நம்முடைய கருத்துக்கள் ஏறத்தாழ நம்முடைய சுயநலத்தினாலோ அல்லது வறுமையினாலோ அல்லது பணச்சிக்கனம் காரணமாகவோ தவறாகவே காணப்படுகிறது.

## அந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?

சீஷர்கள் மத்தியில் காணப்பட்ட குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் விமர்சிக்கும் ஆவியை நமது ஆண்டவர் அறிந்து, "அந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று மரியாளின் சார்பில் அவர்களைக் கடிந்து கொண்டார். சரியான காரியத்தை ஏற்ற நேரத்தில் செய்வதற்கு, ஸ்திரீகளுக்குரிய உள்ளுணர்வானது அவளை வழி நடத்தியது. அவள் தன்னால் என்றுமே தீர்க்கமுடியாத அளவுக்கு, தான் போதகருக்குக் கடன் பட்டுள்ளாள் என்றும், இந்த விலையேறப்பெற்ற நறுமணதைலம் தனது நன்றிக்கான சிறிய வெளிப்பாடாகவும், அவரைப் பாராட்டுவதற்குரிய சிறிய மரியாதையுமாகவே இருக்கும் என்றும் உணர்ந்திருந்தாள். இருதயப்பூர்வமான பக்தியைக் கர்த்தர்மேல் வைப்பதற்கு அவர் பாத்திரவானாக இருந்தார் என்று அவள் கண்டுபிடித்தாள். பெண்களின் உரிமைக்காக போராடுபவளாக அவள் இருக்கவில்லை. கர்த்தருடைய பெயரையும், அவருடைய கீர்த்தியையும் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பிரயாணம் பண்ணுவதற்கும், அப்போஸ்தலர்களின் கூட்டத்தில் தன்னையும், மார்த்தாளையும் சேர்க்காமல் இருந்ததற்கும், அவள் கர்த்தர்மேல் குற்றம் சாட்டவில்லை. ஒருவேளை, அவள் இப்படிப்பட்டதான வேலைகளை எல்லாம் செய்யும்படிக்குக் கட்டளை பெற்றிருந்திருப்பாளானால், அதை மகிழ்ச்சியுடன் செய்திருப்பாள் என்பதில் ஐயமில்லை, ஆனால் பெண்களுக்கே உரியதாய் அவளிடத்தில் காணப்பட்ட சுபாவங்கள் இப்படியாக குற்றம் சாட்டிடுவதற்கு அவளைத் தூண்டிவிடவில்லை; மேலுமாக கர்த்தருடைய செய்தியைப் பிரசங்கிக்கும் விஷயத்தில் கர்த்தர் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே பாரபட்சம் பார்க்கின்றார் என்று கர்த்தர்மேல் குற்றம் சாட்டுவதற்கு அவளைத் தூண்டவும் இல்லை.

சத்தியத்தைப் பொதுகூட்டங்களில் அறிவிக்கக்கூடிய கனத்திற்குரிய ஊழியத்தை நடப்பிக்க தடைவிதித்திருந்தபோதிலும், "அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்று நம்முடைய ஆண்டவர் அறிவித்தார். ஆண்டவரைப் பிரியப்படுத்தும் காரியத்தை அவள் செய்தாள். பெண்ணின் இருதயத்திற்குரிய உண்மையான மற்றும் பெருந்தன்மையான சுபாவங்கள் மற்றும் அன்பு மற்றும் பயபக்தி மற்றும் நேர்மை ஆகியவைகளை விவரித்துக்காட்டினவளாக இருந்தாள். வார்த்தைகளினால் அல்லாமல் கிரியைகளின் மூலமாக அவள் பேசிவிட்டாள். கர்த்தர் மீது அவள் கொண்டிருந்த நேசம், இரக்கம் மற்றும் அன்பின் கிரியைகளினுடைய நறுமணம் யுகங்களைக் கடந்து வந்துள்ளது; மேலும் அவள் அவர் தலையின் மீதும், பின்னர் அவர் பாதங்கள் மீதும் ஊற்றின தைலத்தினுடைய இனிமையான சுகந்த வாசனை கிறிஸ்துவின் முழுச் சபையையும் நிரப்பின வண்ணமாகக் காணப்படுகிறது. இந்தக் காரியத்தைக் குறித்தே, "இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இவள் செய்ததும் சொல்லப்படும்" என்றார்.

மரியாளைக் குறித்த எவ்வளவு இனிமையான நினைவுகூருதல்! கர்த்தரை இவ்விதமாய் அபிஷேகம் பண்ணும் விஷயத்தில் அவளுடைய உள்ளுணர்வு, சீஷர்களின் இவ்விஷயம் தொடர்பான எண்ணங்களைக் காட்டிலும் மேலானதாய் இருக்கின்றது, என்ற உண்மையை நாம் உணரும்போது அவளின் மீது நம் அனைவருக்கும் அன்பும், மதிப்பும் ஏற்படுகின்றது; கர்த்தரை அபிஷேகம் பண்ணின விஷயத்தில் அப்போஸ்தலர்கள் மிகவும் அக்கறையற்றவர்களாகவும், கணக்குப் பார்க்கிறவர்களாகவும், மிகவும் இலாப நஷ்டம் பார்க்கிறவர்களாகவும் இருந்தார்கள். சீஷர்களிடம் காணப்பட்ட இந்தக் குறைபாட்டினைத் தன்னுடைய அன்பு கலந்த பக்தியின் மூலம் நிறைவாக்கினவளாய் இருந்தாள். அன்று முதல் இன்றுவரையுள்ள கடந்த நூற்றாண்டுகளில் காணப்பட்டச் சபை சரித்திரத்தில் பெண்கள் சந்தேகத்திற்கிடமின்றி நன்மைப்பயக்கும் பங்கினை மரியாளைப்போல் நிறைவேற்றி வந்திருக்கின்றனர். (மரியாளைப் போன்ற) பெண்களுடைய பாகம் இல்லாமல் இருந்தால், இயேசுவினுடைய மதமானது இன்றிருப்பதைக் காட்டிலும், மிகவும் சடங்காச்சாரமாகவும், கடமைக்குரியதாகவும், ஆர்வம் காட்டுவதற்கு பாத்திரமற்றதாகவும் இருந்திருக்கும்; ஆனால், இந்த உண்மையான பெண்மையின் பரந்த மற்றும் ஆழமான அன்பானது, கிறிஸ்துவினுடைய இருதயத்தையும், கிறிஸ்துவினுடைய அன்பையும் புரிந்துகொள்வதற்கு உதவிசெய்தது; மேலும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாயும் இருந்துள்ளது.

## தரித்திரர் எப்போதும் உங்களோடிருக்கிறார்களே

ஆண்டவரிடம் ஜெபிப்பதற்கும், அவருடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்கும் செலவிடப்படும் தருணங்கள் மற்றும் அவருடைய ஊழியத்தைச் செய்வதற்கும், பெற்றச் சத்தியங்களை அறிவிப்பதற்கும் செலவிடப்படும் பணங்கள், காலங்கள் விரயமாக்கப்படுகின்றது என்று கருதுவதும், மேலும் இவ்விதமாய்ச் செலவிடுவதால், தரித்திரர்களுக்குக் கொஞ்சமே செலவிடப்படுகின்றது என்று அனுமானிப்பதும் தவறாகும். மாறாக, ஒருவர் எவ்வளவாய்க் கர்த்தரிடத்தில் மெய்யான அன்புடன் கலந்த பக்தி கொண்டிருக்கின்றாரோ அவ்வளவாய் அவர் கர்த்தருடைய ஊழியத்திலும், தரித்திரர்களிடத்திலும் அக்கறை உள்ளவராய்க் காணப்படுவார். ஒருவன் தரித்திரரிடத்திலும், தன்னுடைய தான தர்மங்களை அடையத்தக்க நிலையில் இருக்கும் யாவரிடத்திலும் மிகுந்த இரக்கமும், மிகுந்த தாராள மனப்பான்மையும் கொண்டிராமல் அவனால் கர்த்தரை உண்மையாய் அன்புகூர முடியாது. "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு" (நீதிமொழிகள் 11:24) என்று வேதவாக்கியங்கள் கூறுகிறது. கர்த்தருடைய பின்னடியார்கள் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமே தவிர, பிசினித்தனம் பண்ணக்கூடாது. பிசினித்தனமாய் இருந்து சொத்துக்களைத் திரளாய்ச் சேர்த்து வைக்கவும் கூடாது. அவர்கள் தண்ணீர்கள்மேல் தங்கள் ஆகாரத்தைப் போடுகிறவர்களாய் இருக்க வேண்டும்; அவர்கள் நன்மை செய்து கர்த்தரிடத்தில் பலனை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்க வேண்டும்; அவர்களிடம் கர்த்தரால் ஒப்படைக்கப்பட்ட ஐசுவரியங்களை அவர்கள் ஆவிக்குரிய விதத்திலும், பூமிக்குரிய விதத்திலும் இலவசமாய்/தாராளமாய்ப் பயன்படுத்தி அதற்கே உரிய அவர்களுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

பக்தியுள்ள மரியாளுடைய இந்தக் கிரியையும், அதற்காக நம் ஆண்டவருடைய விமர்சனமும், சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள ஆண்டவருடைய ஜனங்களுக்குப் பேருதவியாயிருக்கிறது. ஒரு காலத்தில், கர்த்தருடைய ஜனங்கள் நடத்தின ஒருநாள் ஆவிக்குரிய கூட்டங்களையும், பொது மாநாடுகளையும் நடத்துவதற்கு அதிகமான பணம் செலவழிந்துவிடுகிறது என்றும், அப்பணத்தைக் கொண்டு மற்ற ஊழியங்களைச் செய்யலாம் என்றும் எண்ணினோம். ஆயினும், நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பணம் என்னும் தாலந்தைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஆசீர்வாதம் உண்டென்பதை அறிந்துகொண்டோம். சத்தியத்திற்கடுத்த விஷயங்களில் கொஞ்சம் பணங்களையும், கொஞ்சம் தியாகங்களையும், செய்ய மறுப்பவர்கள் சத்தியத்திற்குச் செலவிடுவதின் காரணமாகக் கர்த்தரிடத்திலிருந்து வரும் திரளான பிரதிபலன்களாகிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும். மாறாக தங்களுடைய பணத்தை மற்றவர்களுக்குச் சத்தியத்தை வழங்கும் விஷயத்திற்கும், தங்களுடைய சொந்த இருதயத்திற்குப் போஷாக்களிக்கும் விஷயத்திற்கும் செலவிட நாடுவார்களானால், அதற்கேற்ற மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுக்கு பூமிக்குரிய தேவைகளைக் கர்த்தர் சந்திப்பார் என்று நாம் சிந்திக்கின்றோம்; ஆனால் ஒருவேளை இப்படியாய்ச் சந்திக்கப்படவில்லை என்றாலும் – அவர்கள் ஆவிக்குரிய விருந்துகளின் காரணமாகப் பூமிக்குரிய விஷயங்களில், தரித்திரர் நிலையில்தான் காணப்படுவார்களென்றாலும் – ஆவிக்குரிய போஷாக்கே, ஆத்துமத்தின் கொழுமையே, கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டிகளெனச் செழித்தோங்குவதே நமக்கு மிகவும் முக்கியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த ஒரு பண்பிலும், அதேசமயம் அறிவிலும், ஆண்டவருக்கு ஒப்பாக அன்பிலும் வளர்ச்சியடைவதே, கிறிஸ்துவின் பள்ளியில் சக அங்கத்தினர்களோடு அங்கத்தினர்களாக இருக்கும் நமக்கான முக்கிய நோக்கமாய் இருக்கின்றது.

## அவரை அடக்கம் செய்வதற்காக அபிஷேகம் செய்தல்

அவரை அடக்கம் செய்வதற்கு எத்தனமாக மரியாளின் கிரியை இருந்ததாக நமது கர்த்தர் கூறுகிறார். அவர் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் என்ற அவரது தீர்க்கத்தரிசனத்தை உணராதவர்களாகவும், மறந்தவர்களாகவும், இயேசுவின் கூட்டத்தில் இருந்த அநேக கனத்திற்குரிய ஸ்திரீகள், கர்த்தரின் அடக்கப்பண்ணப்பட்ட சரீரத்தை அபிஷேகிக்கும்படி, அக்காலத்து வழக்கத்தின்படி கந்தவர்க்கங்களையும், நறுமணதைலத்தையும் வாரத்தின் முதல் நாளில் கொண்டு கல்லறைக்கு வந்தனர். அவர்களின் நோக்கம் சந்தேகத்திற்கிடமின்றி சரியானதாக இருந்தபோதிலும், கர்த்தரின் அடக்கத்திற்கு முன்னதாகவே, மரியாள் அவரை அபிஷேகித்த காரியம் மிக நேர்த்தியாய் இருந்தது மற்றும் கர்த்தரின் பார்வையில் வரவேற்கத்தக்கதுமாயிருந்தது. இதுபோல், நாமும் நம்முடைய நண்பர்கள், சகோதர சகோதரிகளிடம் இப்படிப்பட்ட செயல்களை வெளிப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது, நம்முடைய

அன்பான சகோதர சகோதரிகள் தங்கள் பிரயாணத்தின் முடிவை எட்டுவதற்கு முன்பும், அதாவது அவர்கள் இன்னமும் போராட்டம் என்னும் பள்ளத்தாக்கிலே காணப்படும்போது நாம் அவர்களை அன்பான வார்த்தைகள், கனிவான பேச்சுக்கள், தயவுள்ள செயல்கள் ஆகியவற்றினால் அபிஷேகிக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களில் மிகவும் பலவான்களாய் இருப்பவர்களுக்கும்கூட, சில சமயம் இரக்கம் மற்றும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் எவ்வளவு அவசியமாய் இருக்கும் என்பதை நாம் அறியோம். மேலும், அத்தகைய இரக்கத்தை நாம் அவர்களுக்குக் காட்டும்போது, நாம் நம்முடைய சொந்த இருதயங்களுக்கே நன்மை செய்கின்றவர்களாய் இருக்கின்றோம்.

மிகைப்படுத்திய வார்த்தைகளையும், தேவையற்ற டாம்பீகமான வார்த்தைகளையும் ஒருவர் மீது ஒருவர் பொழிய வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவில்லை. இரக்கம் மற்றும் உற்சாகமான வார்த்தைகளைப் பேசுவதற்கும், மாய்மாலமாகப் பேசக்கூடிய வார்த்தைகளுக்கும் மிகப்பெரிய வேறுபாடுகள் உண்டு. இரக்கமுள்ள இருதயத்தையும், தெய்வீக அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட இருதயத்தையும் உடையவர் நறுமணதைலம் உள்ள வெள்ளைக்கல் பரணியாக இருக்கின்றார். மேலும், தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியாகிய இருதயத்தைத் திறந்து ஆவிக்குரிய சகோதர சகோதரிகள் மேலும், நம்முடன் தொடர்பில் இருக்கும் நம்முடைய பூமிக்குரிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள்மேலும் அத்தைலத்தை ஊற்ற வேண்டும். மேலும், ஊற்றுவதற்கேற்ற ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்வோம்; இதை நாம் மறந்துவிட வேண்டாம்; மற்றவருடைய ஜீவியத்தின் பாதையில் மலர்களைத் தூவுவதற்கென நமக்கு அன்றாடம் வரக்கூடிய வாய்ப்புகளை நாம் பயன்படுத்துவோமாக; நாம் இப்படிச் செய்துக்கொண்டிருக்கும்போது வேறொருவர் நமக்காகவும்கூட மலர்களைத் தூவும்படிக்கு கர்த்தர் ஒருவேளை அனுமதிக்கலாம். மற்றவர்களுக்கு நீர் பாய்ச்சுகிறவனுக்கு நீர் பாய்ச்சப்படும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், மற்றவர்களுக்கு உதவிச் செய்கின்றவன், பசியாய் விடப்படுவதில்லை; மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியவன், ஆறுதல் அளிக்கப்படாமல் விடப்படுவதில்லை. சந்தேகத்திற்கிடமின்றி நாம் எந்தளவுக்கு இரக்கமான, தாராளமான ஆவியைப் பெற்றிருந்து, மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறோமோ, அந்தளவுக்கு நமக்குத் தேவைப்படும் நேரத்தில் ஐசுவரியமுள்ள ஆசீர்வாதங்களில் நம்முடைய பங்கை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

## "அவரோடு ஒருவரும் இருக்கவில்லை" - அவரை முழுமையாகப் புரிந்துக்கொள்ள ஒருவராலும் முடியவில்லை

நமது கர்த்தருடைய ஊழியத்தின் முடிவில், அவருடைய கிருபையுள்ள நற்செய்தியைப் பெரும்பான்மையான யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததினாலும், அவரை நம்பாததினாலும் கர்த்தர் ஏமாற்றத்தின் உணர்வுகளை அடைந்திருப்பார். இந்த உணர்வானது, யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏற்கெனவே திட்டம் தீட்டியுள்ள காரியத்தை அவனுடைய மனதிலிருந்து வாசித்த போது விசேஷமாய்த் தோன்றியிருக்க வேண்டும். மேலும் பதினொரு அப்போஸ்தலர்களிடத்திலும் பயத்தின் ஆவியைத்தான் கர்த்தர் கண்டார்; தம்மை யார் காட்டிக்கொடுப்பார் என்று அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார் மற்றும் தம்முடைய இக்கட்டு வேளையில் மற்ற அப்போஸ்தலர்களும் தம்மைத் தனியே விட்டுவிட்டு பயத்தினிமித்தம் ஓடிப்போய் விடுவார்கள் என்றும் அறிந்திருந்தார். இந்த மனுஷர்களிடத்தில் (அப்போஸ்தலர்களிடத்தில்) இயேசு தமது செய்தியையும், தமது அன்பையும், தமது ஆவியையும் இவ்வளவு தூரம் பரிமாறியிருந்தபோதிலும், அவர்கள் இன்னமும் பல விஷயங்களில் பெலவீனர்களாய் இருப்பார்களேயானால் — தம்முடைய ஊழியத்தில் தாம் கொஞ்சமே சாதித்துள்ளார் என்ற எண்ணங்களும், இந்தப் பன்னிரண்டு பேரைக்காட்டிலும் மற்ற ஐந்நூறு சகோதர சகோதரிகளும்கூடக் குறைவான பக்தியுடனே இருப்பார்கள் என்ற எண்ணமும் கர்த்தருக்குள் உதித்தன.

இப்படிப்பட்டதான எண்ணங்களுடன் காணப்பட்ட கர்த்தரிடத்தில் அவரைப் புரிந்தவண்ணமாய் இருந்த ஓர் அன்பான ஆத்துமா வெள்ளைக்கல் பரணியை எடுத்துக்கொண்டு வந்து அவருடைய அடக்கத்திற்கு முன்பதாக அபிஷேகம் பண்ணின காரியமானது, அவருக்கு எவ்வளவு ஆறுதலாய் இருந்திருக்க வேண்டும். நம்முடைய அருமையான ஆண்டவருடைய இருதயத்திற்குள் கடந்து வந்ததும், வரவிருக்கிற நாட்களில் அவர் கடந்துசெல்ல வேண்டிய அனுபவங்களுக்காக அவரைப் பலப்படுத்துகிறதுமாகிய சந்தோஷமும், ஆறுதலும், ஆசீர்வாதமானதும், முந்நூறு பணத்தைக் காட்டிலும் அதிக விலையேறப்பெற்றதாய் இருந்தது. இந்தச் சம்பவம் மரியாளை நினைவுகூரும்படி சொல்லப்படவேண்டும் என்று மாத்திரம் கர்த்தர்

விரும்பவில்லை; இன்னுமாக நித்திய காலமாய் இருக்கும் எதிர்காலத்தில் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியில் மரியாள் மிக உயர்வான ஸ்தானம் வகிப்பாள் என்று நாம் எண்ணுகின்றோம். அவள் இஸ்ரயேலை ஆட்சி செய்யும் பன்னிரண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அப்போஸ்தலர்களில் ஒருவராக இடம்பெறாவிட்டாலும், அவள் அன்புகூர்ந்தவரும் மற்றும் தன்னுடைய பக்தியை யாருக்காக வெளிப்படுத்தினாளோ, அந்தக் கர்த்தருக்கு அருகாமையில் காணப்படும் ஏதோ ஒரு பிரமாண்டமான, கனமிக்க ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வாள் என்பதில் நமக்கு நிச்சயமே.

அறியப்படாத எழுத்தாளர் ஒருவர் கூறும்போது: "உங்களுடைய நண்பர்கள் மரிப்பது வரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள். உங்களுடைய நண்பர்களுடைய ஜீவியத்தை இனிமையாக்குங்கள். அவர்களுடைய செவிகள் கேட்கும் நிலைமையிலும் மற்றும் அவர்களது இருதயங்களானது உற்சாகமடைவதற்கு ஏதுவான நிலைமையிலும், நீங்கள் சொல்லும் வார்த்தைகளினால் சந்தோஷப்படக்கூடிய நிலைமையிலும் இருக்கும்போதே, உற்சாகமான வார்த்தைகளையும், மகிழ்ச்சியான வார்த்தைகளையும் பேசுங்கள். அவர்கள் மரித்துப்போன பின்னர் நீங்கள் கூறவேண்டுமென்றிருக்கும் அன்பான வார்த்தைகளை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே சொல்லுங்கள். அவர்களது சவப்பெட்டிகளுக்கு நீங்கள் அனுப்ப வேண்டுமென்றிருக்கும் மலர்களை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே அவர்களது இல்லங்களைப் பிரகாசிப்பதற்கும், மணமூட்டுவதற்கும் என்றும் அனுப்பிவையுங்கள். ஒருவேளை என்னுடைய நண்பர்கள் நான் மரித்த பிற்பாடு, என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக, அவர்கள் அதை என்னுடைய சோர்வான மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப் பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன். நம்முடைய நண்பர்கள் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்னதாக, அவர்களை அபிஷேகம்பண்ணிடுவதற்கு நாம் கற்றுக்கொள்வோமாக. இறந்த பின் காட்டுகின்ற அன்பு எவ்விதத்திலும் அவர்களின் பாரத்தைத் தணித்து, அவர்களைச் சந்தோஷப்படுத்துவதில்லை. சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக கடந்துவந்த சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது."

## சுயநலத்திற்கு எதிரான தாராளகுணம்

இச்சம்பவத்திற்குப் பிற்பாடு, யூதாஸ் பிரதான ஆசாரியரிடம் சென்று இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு முப்பது வெள்ளிக்காசுகளுக்கு ஒப்புக்கொண்டு, இயேசுவைத் தனது கரங்களினால் காட்டிக்கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டிருந்தான் என்று பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களை நாம் பார்த்துவிட்டு இப்பாடத்தை முடிவு செய்யலாம். மரியாளின் இரக்கத்திற்கும், அன்பிற்கும் மற்றும் யூதாசின் சுயநலத்திற்கும் எவ்வளவு பெரிய வேறுபாடுகள் உள்ளது! மரியாள் மிகவும் அன்பினால் நிரப்பப்பட்டவளாய் இருந்தபடியினால், தான் உட்காரவேண்டும் என்று விரும்பின பாதங்களை உடைய மாபெரும் போதகருக்கு அதாவது, அநேக ஆசீர்வாதங்களையும், இருதயத்திற்குச் சந்தோஷம் அளிப்பவைகளையும் தான் பெற்றுக்கொண்டதான உதடுகளையுடைய மாபெரும் போதகருக்கு, அதாவது கல்லறையிலிருந்து தனது சகோதரனை வெளியே கொண்டுவந்ததும், தன்னுடைய தகப்பனைக் குஷ்டரோகத்திலிருந்து சொஸ்தப்படுத்தினதுமாகிய வல்லமையைக் கொண்டிருந்த மாபெரும் போதகருக்கு, தான் செய்த காரியம் போதுமானது அல்ல என்று எண்ணினாள். நாமும் அதே போதகருக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம் என்பதையும், அவருடைய அற்புதமான ஜீவனுள்ள வார்த்தைகள் நம்முடைய இருதயத்திற்குள் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுத்திருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவருடைய வார்த்தைகளினால் நாமும் மரண நிலையிலிருந்து அழைக்கப்பட்டுள்ளோம்; அப்போஸ்தலர் அறிவிக்கிற பிரகாரமாக நாம் ஒருகாலத்தில், பாவத்தினாலும், மீறுதலினாலும் மரண நிலையில் இருந்தோம், ஆனால் இப்பொழுதோ கர்த்தருடைய ஆவியினால், அன்பின் ஆவியினால், நாம் உயிர்ப்பிக்கப்பட்டு ஜீவன் பெற்றிருக்கிறோம்.

நாமும்கூட பாவம் என்னும் குஷ்டரோகத்தைப் பெற்றிருந்தோம்; ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டுக் காணப்பட்டோம்; மற்றவர்களைப் போலவே நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாகக் காணப்பட்டோம். ஆனால், நம்முடைய பாவங்கள் கிருபையாக இரட்சகரினால் மூடப்பட்டது; குஷ்டரோகமும் சுத்தமாக்கப்பட்டது. மேலும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாக நமது தேவனுடைய பார்வையில், பனியைக் காட்டிலும் வெண்மையாக்கப்பட்டோம். நாமும் கூட ஆண்டவரின் பாதப்படியில் அமர்ந்து அவருடைய போதனைகளை அனுபவிக்க கற்றுக்கொண்டிருக்கிறோம். மேலும், நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமும் அடைகிறோம். நாம் அவருக்குக் காணிக்கைகள் செலுத்தினாலும், அவைகள் நம்முடைய இருதயத்தின் நன்றிக்கான வெளிப்பாடாக இருக்காது என்று எண்ணுவது ஏற்கத் தகுந்ததல்லவா? ஆண்டவர் விரும்பும் விலையேறப்பெற்ற தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை நாமும் அவருக்குக் கொண்டுவரலாம் அல்லவா! ஆம், தலை மகிமையடைந்துவிட்டது. சரீரத்தின் பல அங்கத்தினர்களும் திரையைக் கடந்துவிட்டனர். ஆனால், கிறிஸ்துவின் இறுதி அங்கத்தினராகிய பாத அங்கத்தினர் மட்டுமே நம் மத்தியில் காணப்படுகின்றார்கள். நம்முடைய முழு வல்லமையோடு ஆவிக்குரிய காரியங்களிலும், பூமிக்குரிய காரியங்களிலும் கிறிஸ்துவின் பாதத்திற்கு உதவிகளைச் செய்ய துரிதப்படுவோம். பாத அங்கங்களிடமிருந்து பூமிக்குரிய கறைகளைச் சுத்தம் பண்ணுவதற்கு எவ்வளவு கண்ணீர்கள் நாம் சிந்தவேண்டியதாயினும், அவைகள் அனைத்தையும் நாம் முழு வல்லமையோடே செய்வோமாக; அவர்களை விலையேறப்பெற்ற நளததைலம் கொண்டு அபிஷேகம் பண்ணுவோமாக. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்கள் மீது, அவர்கள் மத்தியில் மிகவும் தாழ்மையும் எளிமையுமானவர்கள் மீது நாம் செலுத்தும் அன்பும், பாசமும் எவ்வளவு விலையேறப்பெற்றதாய் இருக்குமோ அவ்வளவு நலமாய் இருக்கும்; நம்முடைய இருதயங்களில் அவருக்காகவும், அவருடையவர்களுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பே நம்முடைய அனைத்து விஷயங்களிலும் வெளிப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். காலம் விரைவாகப் போய்கொண்டிருக்கிறது — அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்ற பாராட்டிற்குரிய வார்த்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் நாம் அபிஷேகம் பண்ணுவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுவதற்கு ஏதுவாக சீக்கிரத்தில் கடைசி அங்கங்களும் திரைக்கு அப்பால் போய் விடுவார்கள். ஆகவே, உலகத்தில் இப்பொழுது அவருக்கு அடையாளமாய் இருப்பவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு, அதாவது கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களுக்கு நாம் உண்மையாய் இருப்பதின் மூலம் நமது கர்த்தருடைய அன்பான உதடுகளிலிருந்து, இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்ற பாராட்டைச் சம்பாதித்துக் கொள்வோமாக.

## முப்பது வெள்ளிக்காசுகளுக்காக

நம்முடைய விழுந்துபோன நிலையின் இழிவான கிரியைகளுக்கு அஸ்திபாரமாகச் சுயநலம் காணப்படுகிறது. சுயநலமான பேராசையினிமித்தம் ஏவாள் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தாள். பாவமும், மரணமும் ஆளுகை செய்துகொண்டிருக்கும் கடந்த ஆறாயிரம் வருடங்களாகக் காணப்பட்ட சகல இழிவான, கீழ்த்தரமான காரியங்களும் சுயநலத்தின் அடிப்படையிலேயே இருந்தது. ஆகவே, தெளிந்த புத்தியுள்ள ஆவியையே நாம் ஒவ்வொருவரும் நாட வேண்டும். அதாவது, ஒருபக்கம் நாம் மிகவும் கருமிகளாகவும் இருக்கக்கூடாது, மறுபக்கம் மிகவும் ஊதாரியாகவும் இருக்கக்கூடாது. இரண்டில் ஏதோ ஒரு பக்கத்தில் நாம் ஒருவேளை அஜாக்கிரதையாய் இருப்போமானால், கருமித்தனத்திற்குப் பதிலாக மிகவும் தாராளமாய்ச் செய்யும் பகுதியில் நாம் அஜாக்கிரதையாக இருப்பது பாதுகாப்பானதாயும், நலமானதாயும் இருக்கும் அல்லவா? பொருளாசையே எல்லா தீமைக்கும் ஆணிவேராயிருக்கிறது (திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர் எழுதியிருப்பது சரியே. பொருளாசை என்பது பணத்தை மாத்திரம் குறிப்பிடாமல் பெயர், புகழ், அதிகாரம் அல்லது செல்வாக்கையும் குறிப்பிடுகின்றது. மேலும், "அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து (வழுவி) திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள்மேல் வருவித்துக்கொள்கிறார்கள்" (1 தீமோத்தேயு 6:10) என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார்.

இந்த வகுப்பாருக்கு, தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்றவனாய் இருக்கின்ற யூதாஸ் உதாரணமாக இருக்கின்றான். இயேசு, தாம் சீக்கிரத்தில் மரித்துப்போவதாகவும், இந்தத் தைலம் தம்முடைய அடக்கத்திற்குத் தொடர்புடையதாய் இருக்கின்றது என கூறினதை ஒருவேளை யூதாஸ் புரிந்திருந்தாலும் சரி; இந்த விஷயங்கள் அனைத்தும் கர்த்தருக்கு நிச்சயமாய் சம்பவிக்கும் என ஒருவேளை யூதாஸ் புரிந்துக்கொண்டவனாய் இருந்து, இன்னும் முப்பது வெள்ளிக்காசுகள் தனக்கு இலாபம் என்று எண்ணினாலும் சரி; இவைகள் அவன் குற்றவாளி அல்ல என்று தீர்த்துவிட முடியாது. யூதாசுக்குப் போதகருடன் நெருக்கமான

உறவு இருந்தபோதிலும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தைகள் மற்றும் பலத்தக் கிரியைகள் குறித்த அறிவு அவனுக்கு இருந்தபோதிலும் இப்பொழுது சுயநலமும், கீழ்த்தரமும் யூதாசினுடைய இருதயத்தில் ஆழ்ந்து பதிந்து போனபடியினால் அன்போ, பயபக்தியோ அச்சுயநலத்திற்கு எதிராக எதிர்த்து நிற்கமுடியவில்லை.

யூதாஸ், "அவனுடைய சொந்த இடத்திற்குச் சென்றான்," அதாவது இரண்டாம் மரணத்திற்குச் சென்றான். ஆகவேதான், அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று ஆண்டவர் கூறினார். எவ்விதமான சுயநலமுள்ள இலட்சியங்களை எவன் ஒருவன் தன் இருதயத்தை ஆண்டுகொள்ள அனுமதிக்கின்றானோ, எவன் ஒருவன் கர்த்தருடைய கிருபையும், சத்தியமும், தன் இருதயத்திற்குள் வரவும், இருதயத்தை விரிவாக்கி அதனை அன்பினால் நிரப்புவதற்கு அனுமதிக்காமல் இருக்கின்றானோ, அப்படிப்பட்டவன் தனக்கென்று நியமிக்கப்பட்டுள்ள இரண்டாம் மரணத்திற்குப் போக நேரிடும். தேவனுடைய ஆவியினாலும், பெருந்தன்மையின் ஆவியினாலும், அன்பினாலும் நிரப்பப்படுவதற்கு விரும்புபவர்களுக்கு மட்டுமே தேவனுடைய தெய்வீக ஏற்பாடுகள் காணப்படுகிறது. ஆகவே, நாம் அனைவரும் யூதாசின் ஆவியை, சுயநலமான இருதயத்தை, பண ஆசையை, சுயவிருப்பத்தை, இலட்சியங்களை, அதிகமதிகமாய்த் தவிர்த்து, மரியாளுடைய அன்பான இருதயத்தையும், தாழ்மையையும், அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்ளக்கடவோம். அதாவது, சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கெனத் தனக்குரியவைகளைச் செலவுசெய்ய அவள் சித்தம் கொள்வதற்கு உதவினதோடல்லாமல், கண்ணீர் சிந்தும் அளவிற்கும், ஸ்திரீயின் விலையேறப்பெற்ற ஆபரணமாகிய தலைமயிரைத் தனது போதகருக்கு, தனது கர்த்தருக்கு மற்றும் அவருடைய பாதங்களாகிய எளிய அங்கங்களுக்கு ஊழியம் புரியும் அளவிற்கும், அவள் தன்னைத் தாழ்த்திக்கொள்வதற்கும் அவளுக்கு உதவின தாழ்மையை நாம் அதிகமதிகமாக பெற்றுக்கொள்வோமாக.

*****

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

## மத்தேயு 26:17-30

நமது கர்த்தர் தமது கடைசி பஸ்காவை அனுசரித்த வியாழன் அன்று இரவில், நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவினார் என்றும், அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமையன்று அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றுமுள்ள கருத்தை, பெரும்பான்மையானவர்கள்போல் நாமும் கொண்டிருந்தாலும், இந்த நிகழ்வானது வாரத்தினுடைய மற்ற நாட்களில் சம்பவித்தன என்று எண்ணுபவர்களுடன் நாம் வாதாடுவதில்லை. அங்கு நிறைவேறின காரியங்கள்மீதும் மற்றும் மோசேயினால் நிறுவப்பட்டதான பஸ்காவினுடைய நிஜம் என்ற விதத்திலும் மற்றும் பாவங்களுக்கான, அதாவது முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலியின் நிறைவேறுதல் என்ற விதத்திலுமுள்ள அதன் முக்கியத்துவத்தின் மீதும்தான் நாம் மிகுந்த முக்கியத்துவம் செலுத்துகின்றோம். இந்த முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளுக்காகவே நாம் உண்மையாய்ப் போராட/வாதாட விரும்புகின்றோம்; ஏனெனில் இவைகள் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தினுடைய" ஒரு பாகமாய் இருக்கின்றது; ஆனால் வாரத்தினுடைய எந்தக் குறிப்பிட்ட நாட்களில் இந்நிகழ்வுகள் சம்பவித்தன என்பது தொடர்புடைய விஷயத்தைக் குறித்து நாம் போராடுவதில்லை/வாதாடுவதில்லை; ஏனெனில் எங்களைப் பொறுத்தமட்டில் அவை முக்கியத்துவம் அற்றவைகளாகவும், அற்ப விஷயமாகவும், பின்விளைவுகள் உண்டுபண்ணாத விஷயமாகவும் காணப்படுகின்றன என்பதினால் அவை எந்த விதத்திலும் கர்த்தருடைய ஜனங்களின் மனம் (அ) இருதய ஐக்கியத்தினைக் குலைத்திடக்கூடாது.

நம்முடைய இந்தப் பாடமானது, சீஷர்களுக்கான நமது கர்த்தருடைய கட்டளையுடன் ஆரம்பமாகுகின்றது; கர்த்தராகிய இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டியெனச் சுட்டிக்காட்டின பஸ்காவை, ஒரு விசேஷித்த மற்றும் சிறந்த யூத குடும்பமாகக் காணப்பட்ட இயேசுவும், சீஷர்களும், அந்நிழல் குறித்து நியாயப்பிரமாணம் கூறுவதுபோன்று ஆசரிப்பதற்கென ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணுவதற்கு நமது கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். இந்த ஓர் இராவிருந்தைக் குறித்துதான் நமது கர்த்தர்: "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறினார். அவர் நீசான் மாதம் பதினைந்தாம் தேதி துவங்கி, ஒரு வாரக்காலம் நீடிக்கின்றதான பிரதானப் பண்டிகையைக்குறித்துக் குறிப்பிடவில்லை. பொதுவானப் பண்டிகைக்கு முன்னதாக இடம்பெறுகிறதும், எகிப்திலிருந்துள்ள தங்களது விடுதலையை ஜனங்களுக்கு நினைப்பூட்டுகிறதும், விடுதலையாக்கப்பட்ட ஜனங்களென அவர்களது சந்தோஷத்திற்கு அடிப்படையாய்க் காணப்பட்டதுமான கசப்பான கீரைகளுடனான, சுடப்பட்ட ஆட்டுக்குட்டியுடைய இராப்போஜனத்தையே அவர் குறிப்பிட்டார். மேல்வீட்டறையானது, இந்த இராப் போஜனத்திற்காக ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. அனைத்தும் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது மற்றும் சாயங்காலத்தில், சூரியன் மறைந்து, ஆறு மணிக்குப் பிற்பாடு நமது கர்த்தரும், பன்னிரண்டு பேரும் கூடினார்கள். இராப்போஜனத்தின்போது மிகுந்த கனமிக்க ஸ்தானங்கள் குறித்துச் சீஷர்கள் மத்தியில் வாக்குவாதம் உண்டாயிற்று என்றும், அவர்களது பாதங்களை இயேசு கழுவினதின் மூலமாக, இந்தப் பேராசையினுடைய ஆவியை இயேசு கடிந்துகொண்டு, இப்படியாகத் தம்முடைய தாழ்மையான இருதயத்தையும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றும் அனைவருக்கும் பணிவிடைப் புரிவதற்கான தம்முடைய ஆயத்தத்தையும் விளக்கினார் என்றும்பதிவுகளில் ஒன்று நமக்குத் தெரிவிக்கின்றது. இப்படியாக அவர்கள் மத்தியில் பெரியவராய் மதிக்கப்படுகின்றதான தாம், எவருக்கும் மற்றும் அனைவருக்கும் பணிவிடைப் புரிந்திடுவதற்கு விருப்பமுடையவராகவும், ஆயத்தத்துடன் காணப்படுபவராகவும் இருக்கும் அவர்களுக்கான பிரதானப் பணிவிடைக்காரராய் இருக்கின்றார் என்ற மாதிரியை அவர்களுக்கு முன்வைத்தார்.

## உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்

அவர்கள் புசித்துக்கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசு குறிப்பிட்டார் மற்றும் உடனடியாக அங்கிருந்தவர்கள் மத்தியில் துக்கம் பரவ, இப்படியான ஒரு குற்றச்சாட்டினின்று தன்னைக் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்குக்

கடமைப்பட்டுள்ளதை ஒவ்வொருவரும் உணர்ந்து, ஆண்டவரே, நானோ, நானோ? என்று கேட்டார்கள். மற்றவர்களோடுகூட யூதாசும் இக்கேள்வியைக் கேட்டான்; ஒருவேளை தானும் இப்படியாகக் கேட்கவில்லையெனில், தான்தான் அந்நபர் என்று தான் ஒப்புக்கொள்வதாகிவிடும் என்று உணர்ந்தவராக யூதாஸ் இக்கேள்வியைக் கேட்க, இவரது கேள்விக்கு இயேசு: "நீ சொன்னபடிதான்," அதாவது "ஆம், உன்னைத்தான் நான் குறிப்பிட்டேன்" என்ற விதத்தில் பதிலளித்தார். இயேசுவிடம் கேட்கப்பட்டபோது, தாம் யாருக்குத் துணிக்கையைத் தோய்த்துக் கொடுக்கின்றாரோ, அவன்தான் காட்டிக்கொடுப்பவன் என்று கூறி, (ஒரு துண்டு ஆட்டுக்குட்டியின் மாம்சமும், ஒரு துண்டு புளிப்பில்லாத அப்பமுமாகிய) துணிக்கையைத் தோய்த்து, இயேசு யூதாசுக்குக் கொடுத்து, இப்படியாக நேரடியாய் அவரது பெயரைக் குறிப்பிடாமல், அவரைச் சுட்டிக்காட்டினார் என்று வேறொரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றது. இதுவரையிலும் மற்றச் சீஷர்கள் யூதாசை அறிந்துகொள்ளவில்லை என்றும், பிற்பாடே யூதாஸ் திருடன் என்று கண்டுபிடிக்கின்றனர் என்றும் தோன்றுகின்றது.

யூதர்கள் மற்றும் அரேபியர்கள் மத்தியில் ஏமாற்றுதலும், காட்டிக்கொடுத்தலும் பரிட்சயமற்ற ஒன்றல்ல, ஆனாலும் அவர்களால் அங்கீகரிக்கப்படுகின்றதான கண்ணியத்திற்கான/நேர்மைக்கான சட்டத்தொகுதியின்படி ஒருவன் இன்னொரு நபருக்கு எவ்விதத்திலாகிலும் தீங்கிழைக்கப்போகின்றவனாய் இருந்தால் அவன் அந்த நபருடைய உணவைப் புசிப்பதில்லை. உணவானது உப்பிடப்பட்டிருக்கின்றபடியால், இந்த வழக்கமே அநேகமாக மாறாத/முறிவுறாத உடன்படிக்கை என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். சத்துருவானவனை உங்கள் போஜனப்பந்தியிலிருந்து புசிக்கச் செய்வது அல்லது உப்பிடப்பட்ட உங்கள் உணவை எடுத்துப் புசிக்கச் செய்வது என்பது, அக்காலக்கட்டத்தின் போதான ஜனங்களின் மத்தியில், சத்துருவானவனின் நட்பு நீடிக்கும் என்பதற்கான, அதாவது அவன் இனி ஒருபோதும் உங்களுக்குத் தீங்கு செய்வதில்லை என்பதற்கான உறுதிமொழிக்குச் சமமாய் இருப்பதாகக் கருதப்பட்டது. அக்காலக்கட்டத்தில் காணப்பட்டதான இந்த வழக்கத்திற்கு யூதாஸ் கீழ்ப்படியாமலும், ஒப்புக்கொள்ளாமலும் காணப்படுமளவுக்கு, அதாவது தான் யாருடைய அப்பத்தைப் புசித்தானோ, தான் யாருடைய உப்பில் பங்கெடுத்தானோ, அவருக்கு உண்மையாயும், நேர்மையாயும் இருப்பதை எதிர்ப்பார்க்கும் இந்த வழக்கத்திற்குக் கீழ்ப்படியாமலும், ஒப்புக்கொள்ளாமலும் காணப்படுமளவுக்கு, யூதாஸ் சரியான சிந்தையில்/ஆவியில் மிகவும் குறைவுப்பட்டவனாயிருந்தான். ஆகையால்தான் நமது கர்த்தர், "என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று கூறினார்.

எனினும் தம்முடைய மரணம் என்பது, தம்முடைய சத்துருக்கள் மற்றும் தம்மைக் காட்டிக் கொடுத்தவன் சார்பிலுமான வெற்றியைக் குறிக்கின்றதாயிராமல், மாறாக தம்மைக்குறித்துத் தீர்க்கத்தரிசிகளினால் எழுதப்பட்டவைகளுக்கு இசைவாக நடந்த ஒன்றாகும் என்றும் இயேசு விளக்கினார். இன்னுமாக இந்த விஷயதத்தில் யூதாஸ் தன்னுடைய பொறுப்பிற்கோ, இக்காரியத்தில் தன்னுடைய துணிகரத்திற்கோ பொறுப்பு வகிக்காதவராய் மற்றும் தீர்க்கத்தரிசனத்தை மாத்திரமே நிறைவேற்றினவராய்க் காணப்பட்டார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது; இம்மாதிரியான (அவன் பொறுப்பு வகிக்கவில்லை என்ற) சிந்தையானது, "எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாய் இருக்கும்" என்ற இயேசுவின் வார்த்தைகளினால் மறுக்கப்படுகின்றது. (இயேசுவின்) இவ்வார்த்தைகளானது, சத்தியத்தினைப்பற்றின தெளிவான அறிவிற்குள் வருவதற்கான வாய்ப்புகள் மூலம் யூதாஸ் ஏற்கெனவே மாபெரும் ஒப்புரவாகும் வேலையிலும் மற்றும் இதன் காரணமான பொறுப்புகளிலும் தனக்கான பங்கினை அனுபவித்துள்ளார் என்று நாம் எண்ணுவதற்கு ஏதுவாயிருக்கிறது. யூதாசினுடைய பாவம், மரணத்திற்கு அதாவது இரண்டாம் மரணத்திற்கு ஏதுவான பாவமாய்க் காணப்படுகின்றது என்பது உறுதியே. ஆகையால் அவரது தற்கால ஜீவியத்தைப்பார்க்கும்போது, அவரது வாழ்க்கைப் பயனற்ற, வீணடிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது என்றும், அவர் வாழ்க்கையின் துக்கங்கள், கடுந்துயரங்கள் மற்றும் பின்னர் வந்ததான நம்பிக்கையின்மை மற்றும் தற்கொலை ஆகியவற்றைவிட, அதன் சந்தோஷங்களானது மிகுதியாய்க் காணப்படவில்லை என்றும் நாம் கருத வேண்டியுள்ளது.

## நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது

பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப்பிற்பாடு, அதாவது கசப்பான கீரைகள் மற்றும் புளிப்பில்லாத அப்பம் முதலானவைகளுடன் ஆட்டுக்குட்டியைப் புசித்தப்பிற்பாடு, இயேசுவினால் நிறுவப்பட்டதான நினைவுகூருதலின் இராப்போஜனமானது, அவரது கட்டளையின் பேரில், அவரது பின்னடியார்கள் அனைவருக்கும், யூதர்களுக்கான பஸ்கா இராப்போஜனத்தினுடைய இடத்தை

எடுக்கின்றதாய் இருக்கின்றது. இது ஒரு புதிய காரியமாகும் மற்றும் அவர் புளிப்பில்லாத அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரித்து, பின்னர் அதைப்பிட்டு, துண்டுகளை தம்முடைய சீஷர்கள் ஒவ்வொருவரிடத்திலும் கொடுத்து, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினபோது, அப்போஸ்தலர்கள் அவரது வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். அவர் என்ன அர்த்தத்தில் கூறினார்? அவரோடுகூட அவர்கள் செலவழித்ததான மூன்று வருடக்காலப்பகுதிகளில், அவர் உவமைகளாகவும், மறைப்பொருளாகவும்தான் பேசுவார் என்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள். வேறொரு தருணத்தின்போது அவர்களும் காணப்படுகையில் தம்மை வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றும் பிழைப்பான் என்றும் அவர் கூறியிருந்தார். இப்பொழுதோ அவர் புளிப்பில்லா அப்பம் சிலவற்றை அவர்களிடத்தில் கொடுத்து, அது தம்முடைய சரீரம் என்று கூறுகின்றார். இந்த அப்பமானது, அவருடைய சரீரத்திற்கு அடையாளமாய் இருக்கின்றதென அவர் குறிப்பிடுகின்றார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்; ஏனெனில் இந்த ஒரு தருணத்தின்போது, அவர்கள் இதுமுதல் அவரை நினைவுகூரும்படிக்கு இதைச் செய்ய வேண்டும், அதாவது அவரை அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியென அவர்கள் இதுமுதல் நினைவுகூர்ந்து, அவரது மாம்சத்தை அடையாளப்படுத்துவதற்குப் புளிப்பில்லா அப்பத்தைப் பயன்படுத்தி, முன்பு அவர்கள் புசித்தச் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக, இந்தப் புளிப்பில்லாத அப்பத்தில் பங்கெடுக்க வேண்டுமென்று அவர்களிடத்தில் கூறினார்.

உரோமன் கத்தோலிக்கன்மார்களும், சில புராட்டஸ்டண்டினர்களும் நம்புவது போன்று, அவர் ஸ்தோத்திரித்ததின் காரணமாக, அப்பமானது, அவரது நிஜமான மாம்சமாக மாறியது என்ற அர்த்தத்தில் அவர் கூறவில்லை; ஏனெனில் அவர் அவ்வேளையில் இன்னமும் தமது மாம்சத்தைப் பெற்றவராய் இருந்தார்; சுமார் பதினைந்து மணி நேரங்களாக அவர் கொல்லப்படவில்லை. ஆகையால் இப்படியான வாதங்கள் அனைத்தும் சொற்புரட்டும், அறிவீனமுமாகும். அவர், "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று அவர் சொன்னபோது, அவர் பிற்பாடு "நானே திராட்சச்செடி" என்றும், "நானே வாசல்" என்றும், "நானே நல்ல மேய்ப்பன்" என்றும், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்றும் அவர் கூறினபோது எப்படி அடையாளமான விதத்தில் பேசினாரோ, அப்படியாகவே பேசினார். ஆண்டவருடைய வார்த்தைகளின் சரியான, தெளிந்த கண்ணோட்டமானது வெளிப்படையாய்த் தெரிகின்றது; அவர் இப்படியாய்ப் பல்வேறு விதங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனத்தில், சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அவரது பின்னடியார்கள் அனைவருக்கும் மற்றும் அப்போஸ்தலர்களுக்கும் அப்பமானது — அவரை, அவரது மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்.

அப்பமானது, உணவு அனைத்திற்குமான அடையாளமாய் இருப்பதுபோல (ஆம் கோதுமையில் அனைத்து விதமான ஊட்டச் சத்துக்களும் சரியான விதத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது உண்மையே), இந்த அடையாளம் போதிப்பது என்னவெனில், கிறிஸ்து கொடுக்கப்போகின்றதான ஜீவனை ஒருவன் பெறவேண்டுமெனில், அது அவரது பலியின் விளைவானதென அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். நாம் ஜீவிக்கத்தக்கதாக அவர் மரித்தார். அவர் மனமுவந்து, விரும்பி கையளித்ததான உரிமைகளும், சிலாக்கியங்களும், அவரில் விசுவாசம் வைத்து மற்றும் அவரையும், அவரது போதனைகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவராலும் புசிக்கப்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இப்படியானவர்கள் ஆதாமினால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்துவினால் மீட்கப்பட்டதுமான உரிமைகளுடனும், சிலாக்கியங்களுடனுமுள்ள பரிபூரண மனுஷீகச் சுபாவத்தினால் தரிப்பிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். வானத்திலிருந்திறங்கின இந்த அப்பத்தைப் புசித்தால் மாத்திரமேயொழிய மற்றபடி, எவரும் நித்திய ஜீவன் பெறமுடியாது. இது தற்காலத்தினுடைய விசுவாசிகளுக்கு மாத்திரமல்லாமல், இனிவரும் யுகத்திலுள்ளவர்களுக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. அவர்களுக்கான ஜீவிக்கும் உரிமைகளும், சிலாக்கியங்களும், அவரது பலியின் மூலமாக வந்ததென அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பமானது, அவரது பலியை ஏற்றுக்கொள்வதன் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதலை விளக்குகின்றதாய் இருக்கின்றது.

## நீங்களெல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்

அடுத்து திராட்சப்பழரசமுள்ள பாத்திரத்தைக் கர்த்தர் எடுத்தார். அது புளிப்பேற்றப்பட்ட திராட்சரசம் (wine) என்பதாக நமக்குக் குறிப்பிடப்படவில்லை; ஆகவே அது புளிப்பேற்றப்பட்ட ஒன்றா

(அ) புளிப்பேற்றப்படாத ஒன்றா என்பது கருத்து வேற்றுமைகள்கொண்ட காரியமாகும்; மற்றும் நம்முடைய காலக்கட்டத்தினுடைய சூழ்நிலைகள் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளானது கட்டளையிடுபவைகள் யாவற்றையும் பார்க்கும்போது, புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாறு (அ) உலர்ந்த திராட்சரசமானது, அவரது கட்டளைகளின் காரியங்களை நிறைவேற்றுகின்றதாய் இருக்குமென நாம் நம்புகின்றோம். அது ஒருபோதும் புளிப்பேற்றப்பட்ட திராட்சரசமென (wine) குறிப்பிடப்படாமல், (fruit of the vine) திராட்சப்பழரசமுள்ள பாத்திரம் என்று மாத்திரம் குறிப்பிடப்படுகின்றபடியால், கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் வாக்குவாதத்திற்கு இடமில்லை. எவ்வகையான திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொருவனும் தன் மனசாட்சியின்படி நடந்துகொள்வதற்குச் சுதந்திரம் உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் புளிப்பற்ற இரசமே, கர்த்தருடைய பின்னடியார்களிடத்தில், குடிப்பழக்கம் தொடர்புடைய விஷயத்தில் அடங்கியிருக்கின்றதான விருப்பங்களைத் தட்டியெழுப்பும் அபாயமற்ற ஒன்று என்று நாம் விரும்பித் தேர்ந்தெடுக்கின்றோம்.

பாத்திரம் தொடர்புடைய விஷயத்தில், "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கர்த்தர் கூறினார். (பழமைமிக்க கிரேக்க மூலப் பிரதிகளாகிய Sinaitic மற்றும் Vatican மூலப்பிரதிகளில் "புதிய" எனும் வார்த்தையானது தவிர்க்கப்பட்டுள்ளது) உண்மைதான் புதிய உடன்படிக்கையானது, செயலாக்கத்தில் வருவதற்கு முன்னதாக, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் முத்திரையிடப்பட வேண்டும் மற்றும் ஆயிரவருட யுகம் ஆரம்பிப்பது வரையிலும் அது செயலாக்கத்திலும் வரமுடியாது. ஆனால் நமது கர்த்தருடைய மரணத்தினால் முத்திரையிடப்பட்ட இன்னொரு உடன்படிக்கையும் இருக்கின்றது; அது உடன்படிக்கைகள் அனைத்திற்கும் அஸ்திபார உடன்படிக்கையான பழைய உடன்படிக்கையாகிய, ஆபிரகாமின் உடன்படிக்கையாகும். இப்படியாக இது முத்திரிக்கப்படும் என்பது ஆபிரகாமினுடைய கரங்களினாலான ஈசாக்கின் உருவகமான மரணத்திலும், மரணத்திலிருந்துள்ள ஈசாக்கின் உருவகமான உயிர்த்தெழுதலிலும், நிழலான விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஈசாக்கு நமது கர்த்தராகிய இயேசுவை அடையாளப்படுத்துகின்றார் என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்தி, "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்து - வாக்குத்தத்த உடன்படிக்கையின் - பிள்ளைகளாய் இருக்கிறோம்" என்றும் கூறுகின்றார் (கலாத்தியர் 4:28).

இப்படியாக நமது கர்த்தருடைய வார்த்தைகளை, அவர் முத்திரிக்கின்றதான (அ) உறுதிப்படுத்துகின்றதான ஆபிரகாமின் உடன்படிக்கைக்குப் பொருத்திப் பார்க்கும்போது, அவரது மரணத்தின் மூலமாகவே அவர் அந்த உடன்படிக்கைக்கு, மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கான அதன் மகிமையான ஏற்பாடுகள் அனைத்திற்கும் சுதந்திரவாளியானார் என்று நாம் காண்கின்றோம். இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, தம்முடைய பின்னடியார்களிடத்தில், "இது என்னுடைய பாத்திரமாயிருக்கிறது; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று இயேசு கூறிய வார்த்தைகளுக்கு விசேஷித்த அர்த்தமும், அழுத்தமும் இருப்பதை நாம் காண்கின்றோம். இப்படியாகக் கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கான அழைப்பு என்பது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் தெரிந்துகொள்ளப்பட்டதான சபையானது, பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுதல் என்பதான ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேறுதலுக்குரிய தெய்வீக வழிவகையாகிய இராஜ்யத்தின் வரவிருக்கும் மகிமைகளில் அவரோடுகூடப் பங்கடையத்தக்கதாக, அவரோடுகூட அவரது பாடு மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில் பங்கெடுப்பதற்கு, அவரோடுகூடத் தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கு அவர்களுக்கான அழைப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அப்பம் புசித்தலும், மற்றும் நமது கர்த்தருடைய மரணத்தின் மூலமாகவும், அதை ஏற்றுக்கொள்வதின் மூலமாகவுமுள்ள நீதிமானாக்கப்படுதலில் பங்கெடுத்தலும், முழு உலகத்திற்கும் அவசியமாகக் காணப்பட்டாலும், அதாவது நமது கர்த்தருடைய பலியினால் வாங்கப்பட்டதான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை முழு உலகமும் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாகக் காணப்பட்டாலும், பாத்திரமானது உலகத்திற்கானதாயிராமல், மாறாக சபைக்கு மாத்திரமானதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமானதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" — நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் என்பது மாத்திரமல்லாமல், நீங்களெல்லாரும், முழுவதையும் பானம் பண்ணுங்கள் — மீதி வைக்க வேண்டாம். இனிவரும் யுகத்திற்கென்று கிறிஸ்துவின் பாடுகளில் எதுவும் மீதி வைத்து வைக்கப்பட்டிருப்பதில்லை; நீதியினிமித்தமாகப் பாடுபடுதல்கள் எதுவும் அக்காலத்தில் உலகம் அனுபவிப்பதில்லை; அக்காலத்தில் பொல்லாப்புச் செய்கைக்காரர்கள் மாத்திரமே பாடுபடுவார்கள். இக்காலத்திலேயே தேவபக்தியாய் நடப்பவர்கள் யாவரும் துன்புறுத்தப்படுவார்கள்; மற்றும் இக்காலத்திலேயே கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்களும், அவருடைய இராஜ்யத்தின்

மகிமைகளில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுபவர்களுமாகிய அவரது பின்னடியார்கள், அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஆகையால்தான் இவ்விரு சிந்தனைகளையும் சேர்த்து, "நீங்கள் மனுஷக்குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கர்த்தர் கூறினார். கர்த்தருடைய சீஷர்களெனவும், அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்கெனவும் தற்காலத்தில் அர்ப்பணம் பண்ணுபவர்கள், விசுவாசத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலில் மாத்திரமாகப் பங்கெடுக்காமல், அவரது சீஷர்களாயிருப்பதற்கென அனைத்தையும் விட்டுவிடுபவர்களாகிய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதான நித்திய ஜீவனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், பலியின் மூலமாகப் பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டும்.

## இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம்பண்ணுதல்

"இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை" என்பதினால் நமது கர்த்தர் வேறான சூழ்நிலைகளின் கீழ், நீண்டதொரு காலத்திற்குப் பின்னர் உள்ள ஒரு புதிய திராட்ச ரசத்தைக் குறிப்பிடுகின்றவராய் இருக்கின்றார். இப்படியாக அவர் முன்பு சில வாரங்களாக அவர்களுக்குப் போதித்து வந்தவைகளை, அவர்களது மனங்களில் நிலைநாட்டினார்; அதாவது அவர் தற்போது தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கமாட்டார் என்றும், மாறாக தாம் பாடுபடுவார், சிலுவையில் அறையப்படுவார் என்றும், அவர்களும் தம்மோடு பாடுபடுவார்கள் என்றும், பிற்பாடு இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டு, தாம் மகிமையில் காணப்படுகையில், தம்முடைய சீஷர்களும், தம்மோடுகூடத் தமது சிங்காசனத்தில் காணப்படுவார்கள் என்றும் தாம் போதித்து வந்தவைகளை, அவர்களது மனங்களில் உறுதிப்படுத்தினார். அத்தருணத்தின்போது கொடுக்கப்பட்டதானப் பாடங்கள் மூலமாக, இப்புதிய சிந்தனைகளானது அவர்களது மனங்களில் நன்கு பதியவைக்கப்பட்டது.

தற்காலத்தில் பாத்திரமானது, அவர்களுக்குத் திராட்சப்பழங்களின் நசுக்கப்படுதலை, திராட்சப்பழங்களின் இரசத்தினை, அவர்களது ஆண்டவரின் இரத்தத்தினை, ஜீவன் பலியாக்கப்படுவதை, ஊற்றப்படுவதையும், அவருக்கான ஊழியங்களிலும், அவரது காரணங்களிலும் அவரோடுகூடத் தங்கள் ஜீவியங்களும் பலியாக்கப்படுவதையும்குறித்துப் பேசுகின்றதாய் இருக்கும். ஆனால் பாடுகள், அவமானம் மற்றும் மரணம் எனும் தற்காலத்தினுடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகின்றவர்கள் அனைவரும், இராஜ்யத்தில் கனம், மகிமை, ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷம் எனும் அவரது பாத்திரத்திலும் பானம்பண்ணுவார்கள் என்ற கருத்தின் மூலமாக இந்தத் தற்காலத்தின் பாடுகளானது, பின்வரும் மகிமையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இதே சிந்தனையானது, நம்முடைய மனங்களுக்கு முன்பாகவும் காணப்பட வேண்டும் மற்றும் முற்காலத்திலுள்ள அப்போஸ்தலர்களுக்கு இருந்ததுபோலவே, இந்தச் சிந்தனையானது, இராஜ்யத்தைக் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமான பாடுகளானது நிறைவு பெறுவதற்கான ஒரு காலப்பகுதியாகவும், மகிமைகள் வருவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படுவதற்குமான காலப்பகுதியாகவும் அதிகமதிகமாய் நோக்கிடுவதற்கு நமக்கு உதவுகின்றதாய் இருக்கின்றது. இங்கு நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை, தம்முடைய இரண்டாம் வருகையுடன் தொடர்புபடுத்துகின்றார் மற்றும் இந்த நவமான திராட்சரசத்தைச் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளிலோ, எருசலேமினுடைய அழிவின் காலத்திலோ, பானம்பண்ணுவார்கள் என்று அவர் எந்தவிதத்திலும் குறிப்பிடவில்லை; "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தில், குறிப்பிட்டிருப்பதான காலத்திலேயல்லாமல், வேறெந்த காலத்திலும் பானம் பண்ணுவார்கள் என்று அவர் எவ்விதத்திலும் குறிப்பிடவில்லை.

இந்த ஒரு சிந்தையே நம்முடைய மனங்களுக்கு முன்பாகவும் காணப்பட வேண்டும்; இராஜ்யத்திற்காகக் காத்திருக்கையில், நாம் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காகவும், அவர் வந்து இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவும், அதாவது அவரோடுகூடக் காணப்பட்டு, அவரது மகிமையில் பங்கடைய வேண்டியவர்களாகிய அவரது உண்மையுள்ளவர்களினுடைய உயிர்த்தெழுதலின் மாற்றமடைதலுக்காகவும், மகிமையடைதலுக்காகவும் காத்திருக்கின்றவர்களாய் இருப்போம். "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3) என்று அப்போஸ்தலர் கூறியுள்ளதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இராஜ்யத்தில் நவமானதாய்ப்

பானம்பண்ணுதல்குறித்த இந்த நம்பிக்கையை உடையவன், அதாவது மனுக்குலத்தின் உலகத்தைத் தூக்கிவிடுவதற்கான அந்தப் பாக்கியமான வாய்ப்புகளிலும், கனங்களிலும், மகிமைகளிலும் தன் ஆண்டவருடன் பங்கெடுத்தல்குறித்த இந்த நம்பிக்கையை உடையவன், இந்தத் தற்காலத்தினுடைய பலிகளை/தியாகங்களை, சோதனைகளை, பாடுகளை இலேசானதாக, ஆம் சந்தோஷமாய் எடுத்துக்கொள்வான்; ஆம், தான் ஆண்டவரோடுகூட மகிமையடையத்தக்கதாக, ஆண்டவரோடுகூடப் பாடுபடுவதற்கு மகிழ்ச்சியுடன் காணப்படுவான்.

## பாவமன்னிப்புண்டாகும்படி

தேவன் யாருக்குமே தண்டனை வழங்காமல், பாவங்களை மன்னிப்பார் என்று மனிதர்கள் போதிப்பது என்பது எங்களைப் பொறுத்தமட்டில் வீணானதேயாகும். கிறிஸ்து பாவிகளுக்கான மீட்கும்பொருள் இல்லையென்றும், தேவன் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாகவும் இருக்கும்படிக்கும், நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கும் அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்க் கிறிஸ்து மரிப்பதற்கு அவசியமில்லை என்றும் மனிதர்கள் வலியுறுத்திக் கூறுவதும் வீணானதேயாகும். உலகத்தை இரட்சிப்பதற்கான வார்த்தைகளை உடையவரான இயேசு, ஒரு மாபெரும் போதகராக இருப்பது போதுமானது என்று மனிதர்கள் வலியுறுத்திக் கூறுவதும் வீணானதேயாகும். இவ்விடத்திலும், மற்ற இடங்களிலும் இடம் பெறுகின்றதான ஆண்டவருடைய வார்த்தைகளுக்கும், அப்போஸ்தலர்கள் அனைவரின் சாட்சியங்களுக்கும் இசைவான நம்முடைய பதில் என்னவெனில்: கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிப்பது என்பது அவசியமாகும் மற்றும் தெய்வீக ஏற்பாட்டின் மூலமாக அவர் நம்முடைய தண்டனையை ஏற்றுக்கொண்டதன் வாயிலாகவே அல்லாமல், மற்றபடி தெய்வீக நீதியினால் நம்முடைய பாவங்களானது ஒருபோதும் மன்னிக்கப்பட்டிருந்திருக்காது. ஆகையால் அநேகருக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு நமது கர்த்தருடைய இரத்தம் சிந்தப்பட்டது என்பது நமக்கு மிகவும் விலையேறப்பெற்றக் கருத்தாய் இருக்கிறது. இன்னுமாக அவரோடுகூட அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடு மிகவும் நெருங்கிக் காணப்படுவதற்கான சிலாக்கியம் நம்முடையதாய் இருக்கின்றது என்பதும், அவரது புண்ணியத்தினால் மூடப்படுகின்றதான நம்முடைய சிறு பலிகளானது, தேவனுடைய பார்வையில், உலகத்திற்குரியதான மாபெரும் பாவத்திற்கான பலியின் பாகமாகக் கருதப்படுகின்றது என்பதும், கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுபவர்களென, நாம் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தில் மூழ்குவதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும் நமக்கு விலையேறப்பெற்ற சிந்தனைகளாக இருக்கின்றன.

மனிதன் தேவனுடைய சாயலிலிருந்து, பாவம் மற்றும் மரணத்திற்குள்ளாக விழுந்துவிட்டான் என்று சொல்வதற்குப்பதிலாக, அவன் மிருக நிலையிலிருந்து, இப்போது அவன் காணப்படுகின்றதான நிலைமைக்குப் படிப்படியாய்ப் பரிணாம வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கின்றான் என்று நம்மிடம் பரிணாமக் கொள்கைக்காரர்களும், விமர்சகர்களும் கூறுவதும் வீணானதே. இவர்களை நாம் நம்புவதில்லை. விழுகை சம்பவித்தது என்பதும், இதன் காரணமாக மீட்பின் வேலை அவசியமானது என்பதும், முழு உலகத்திற்கான பாவங்களுக்கான நிவாரணமாகுவதற்குரிய சிலாக்கியம் பெற்றவரும், அதிகாரம் கொடுக்கப்பட்டவருமான தேவனுடைய கனம்பொருந்திய ஊழியக்காரன் கிறிஸ்து ஆவார் என்பதும், தம்மைப் பலிச்செலுத்தினதில் அவர் இந்தப் பாவநிவாரண வேலையை ஆரம்பித்தார் என்பதும், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களுடைய பலிச்செலுத்துதலின் மூலமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் அவ்வேலையை அவர் நடத்தி வருகின்றார் என்பதும், அவர் சீக்கிரமாய் அந்த வேலையை முடித்துவிட்டு, அவரது மகிமைப்படுத்தப்பட்ட அங்கத்தினர்கள் அனைவருடன் ஆயிரவருட யுகத்தின்போது, அந்த மீட்பின் வேலையினுடைய ஆசீர்வாதங்களை உலகத்திற்குப் பகிர்ந்துகொடுத்து, அனைவரும் சத்தியம் மற்றும் தேவனுடைய அன்புகுறித்த அறிவிற்குள் கொண்டுவரப்படுவார்கள் என்பதும், நம்மை அன்புகூர்ந்து, நம்மைத் தம்மடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கினதின் மூலம் நிறைவேற்றப்படுபவைகளின் உயரமும், ஆழமும், நீளமும், அகலமும் அளவிடமுடியாதவைகளாய் இருக்கும் என்பதுமான தெய்வீக ஏவுதலினால் உண்டான சாட்சிகளையே நாம் பற்றிக்கொண்டவர்களாய் இருக்கின்றோம்.

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகையில், அவர் ஆண்டவருடைய வார்த்தைகளாகிய, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதைக் குறிப்பிட்டு, பின்னர் "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்றும் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 11:24-26). நம்மை அன்புகூர்ந்து, நம்மை வாங்கினவரோடுகூட நாம் பங்கடையப் போகின்றதான கனங்கள், மகிமை மற்றும் சந்தோஷம் எனும் நவமான திராட்சரசத்துடன் நாம் கொண்டாடப்போகின்றதான இராஜ்யத்தின் காலம் வருவதுவரையிலும் இந்த மாபெரும் செய்கையை நாம் நினைவுகூர வேண்டும் என்பதே இவ்வசனத்தில் இடம்பெறும் கருத்தாகும். அப்போஸ்தலன் (parousia) பரோஷியாவரை, அதாவது தம்முடைய ஊழியக்காரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், அவர்களுக்குப் பலனளிக்கிறதற்குமெனக் கர்த்தர் பிரசன்னமாகும் காலம்வரை என்ற அர்த்தத்தில் குறிப்பிடாமல், மாறாக அனைவரும் சேர்க்கப்பட்டு, இப்படியாக இராஜ்ய வகுப்பார் அனைவரும் நிறுவப்பட்டு, மகிமைப்படுத்தப்படுவதுவரை என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

அதே அப்போஸ்தலன், அதே நிருபத்தில், சபை ஒருவரோடொருவரும், கர்த்தரோடும் கொண்டிருக்கும் ஐக்கியம், ஒருமைக்குறித்த கருத்தினை வலியுறுத்துகின்றார். அவர் கூறியுள்ளதாவது: " நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம். உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 10:16, 17; 12:12; KJV & திருவிவிலியம்). தேவனுடைய கண்ணோட்டத்தில், தெரிந்துகொள்ளப்பட்ட தலை மற்றும் அவரது சரீரத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட அங்கத்தினர்களை உள்ளடக்கின ஒரு மாபெரும் மேசியா காணப்படுகின்றார் என்பதே கருத்தாய் இருக்கின்றது. இவர்கள் அனைவரும் ஒரே அப்பமென, தேவனுடைய கண்ணோட்டத்தில் உலகம் நித்திய ஜீவன் பெறுவதற்கான அப்பமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இந்த அடையாளம் நிறைவேற வேண்டுமெனில் அவரது மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும் பிட்கப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொருவரும், அனைவரும் கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணம் எனும் அவரது பாத்திரத்தில் பங்கெடுக்க வேண்டும். இந்தப் பாடுகள் அனைத்தும் நிறைவேறின பிற்பாடே உலகத்தின் விஷயத்திலுள்ள புதிய யுகத்திற்கான, புதிய நாளுக்கான, சபிக்கப்படுதலுக்குப் பதிலான ஆசீர்வாதத்தின் நாளுக்கான, மரிப்பதற்குப்பதிலான திரும்பக்கொடுத்தலின் நாளுக்கான, விழுகைக்குப் பதிலான தூக்கிவிடுதலின் நாளுக்கான, காலம்/வேளை வருகின்றதாய் இருக்கும்.

*****

# பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்

## மத்தேயு 26:36-50

*"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."* லூக்கா 22:42

கெத்செமனே தோட்டமானது காட்டு மரங்களையுடைய தோட்டமாகவோ அல்லது பொதுத் தோட்டமாகவோ இராமல் ஒலிவ மரத்தோட்டமாயிருந்தது. இத்தோட்டத்தின் பெயரை வைத்துப் பார்க்கும்போது, இத்தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் ஒலிவ பழங்களிலிருந்து எண்ணெய் எடுப்பதற்குரிய, எண்ணெய் செக்குக் காணப்பட்டதும் புரிகின்றது. இந்தத் தோட்டம் மாற்கினுடைய தாயாருக்குச் சொந்தமானது என்று அநுமானிக்கப்படுகின்றது. இந்தத் தாயார் ஆஸ்தியுள்ள விதவை என்றும், இயேசுவின் நோக்கங்களினிமித்தம் அவருக்கு நண்பராகவும் காணப்பட்டிருந்தாள் என்றும் கூறப்படுகின்றது. இவர்களுடைய வீடு, இந்தத் தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் காணப்பட்டிருக்க வேண்டும். இந்த இடம் இயேசுவினுடைய நண்பர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றது என்பதும், இயேசுவும் அவருடைய சீஷர்களும் அவ்விடத்திற்கு நன்கு அறிமுகமாக இருந்தார்கள் என்பதும் உறுதியே. நினைவுகூருதலின் போஜனம் புசித்த பிற்பாடு, நமது கர்த்தரும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்கே வந்தார்கள். கெத்செமனே தோட்டம் என்று இப்பொழுது சுட்டிக்காட்டப்படுகின்றதான இடமானது, எருசலேம் மதிலினின்று அரை மைல் தொலைவில் காணப்படுகின்றது மற்றும் இதில் குறிப்பிடத்தக்கதான சில பழமைமிக்க ஒலிவ மரங்கள் காணப்படுகின்றன மற்றும் இத்தோட்டமானது அருகாமையில் வசிக்கும் சில துறவிகளின் பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவருடைய பதினொரு சீஷர்களும் தோட்டத்தின் வாசலுக்கு முன்பு வந்தபோது, இயேசு அவர்களில் எட்டுப் பேரை வாசலிலே நின்று வெளியே காவல் காக்கும்படியாக நிறுத்தி, தமது அபிமான சீஷர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தம்முடன் உள்ளே கூட்டிக்கொண்டு சென்றார். இந்த மூன்று பேரும் பல்வேறு தருணங்களில் இயேசுவின் விசேஷ தயவினை இப்படியாகப் பெற்றிருந்தார்கள். உதாரணத்திற்கு யவீருவின் மகளை உயிர்ப்பிக்கும்போது, இம்மூவரும் அவரோடுகூடக் காணப்பட்டார்கள். இன்னுமாக, இம்மூவருந்தான் மறுரூப மலையின் காட்சியைக் காணும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்தார்கள். இயேசு தம்முடைய அனைத்துச் சீஷர்களையும் அன்பு கூர்ந்தாலும், இவர்கள் மூவரிடமும் காணப்பட்ட விசேஷமான வைராக்கியம் மற்றும் தம் மீதான அன்பினிமித்தமே இம்மூவரும் அவருக்கு விசேஷமாக அருமையானவர்களாக, பிரியத்திற்குரியவர்களாகக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதோ அவருக்கு விசேஷமாக அருமையாய் இருந்த இந்த மூன்று சீஷர்களாலும் கூட நமது கர்த்தருடைய இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரத்திற்காக அவருக்கு ஆறுதலளிக்கவோ, உணர்ந்துகொள்ளவோ முடியவில்லை. ஆகவே, கர்த்தர் அவர்களையும் தோட்டத்திற்குள் ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு, பிதாவிடம் ஜெபம் பண்ணும்படியாகக் கொஞ்சம் தொலைவில் போய்விட்டார். இச்சம்பவம் தொடர்பான அனைத்துப் பதிவுகளையும் அப்படியே கிரேக்க பாஷையின் அர்த்தத்தின்படி தத்ரூபமாகப் பார்க்கும்போது, இக்கட்டத்தில் துன்பம் கலந்த தனிமையும், சகித்துக்கொள்ள முடியாத துயரமும், பலமாய்க் கர்த்தருக்கு ஏற்பட்டது என்பது நமக்குத் தெரிய வருகின்றது. சீஷர்களோடு அவர் காணப்பட்டது வரையிலும் அவர்களுடைய நலன் கருதி அவர் மகிழ்ச்சியாய் இருக்க முயற்சித்தார் என்பதிலும், சீஷர்கள் மேல் வரப்போகும் சோதனைகளுக்கு அவர்களை ஆயத்தம் பண்ணும்படிக்குத் தேவையான படிப்பினைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், இவைகளையெல்லாம் தம்முடைய முழுப் பலத்தோடு இப்பொழுது செய்துமுடித்த நிலையிலும், பிதாவினிடத்திற்குத் தனிமையாகச் சென்ற நிலையிலும், இப்பொழுது அவருடைய எண்ணங்கள் அவர் மீதும், அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த உறவின் மீதும், அவர் விசாரணை செய்யப்படப் போவதினிமித்தமும், கலகவாதி என்றும், தேவதூஷணம் சொன்னவர் என்றும், தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டினிமித்தமும், விசாரணையின் போது அவருக்கு நேரிடப்போகும் அவமதிப்பு மற்றும் இகழ்ச்சியினிமித்தமும், இன்னுமாக தாம் இரண்டு கள்வர்கள் மத்தியில் பொது ஜனங்களின் கண்கள் காண கொல்லப்படுவதினிமித்தம் உண்டாகப்போகும் அவமானத்தின் மீதும் திசைத்திருப்பின. இந்த அனைத்து விஷயங்களும் இப்பொழுது அவருடைய மனதிற்கு முன்பு தெளிவாய் வந்து நிற்கும்போது, இவைகளே வியாகுலத்தையும், வலியையும், ஆழமானதும், கடுமையானதுமான வேதனையையும் அவருக்கு அளிப்பதற்குப் போதுமானதாகும்.

## துக்கம் நிறைந்தவரும், பாடநுபவித்தவருமாயிருந்தார்

இச்சம்பவத்தின்போது, நமது கர்த்தருக்கு ஏற்பட்ட பாடுகள் தொடர்பான விஷயங்களை நாம் பார்க்கும்போது, பாவத்தினால் கறைபடுத்தப்படாததும், மரித்துக்கொண்டிருக்கும் செயல்பாடுகளினால் சீரழிக்கப்படாததும், உணர்ச்சிகள் மந்தமாகிப் போகாததுமாகிய பூரணச் சரீரமும், உணர்வுகளும் உடையவராகிய நமது கர்த்தர், இப்படிப்பட்ட துயரங்களினாலும், வேதனைகளினாலும் காணப்பட நேரிடும் விழுந்துபோன மனித இனத்திலுள்ள ஒருவருக்கு ஏற்படும் பாதிப்பைக் காட்டிலும், அதிகமான பாதிப்பிற்குள்ளாவார் என்பதை நினைவில் வைக்க வேண்டும். மன உணர்வுகளும், பண்புகளும் நேர்த்தியாய் இருப்பதற்கு ஏற்ப, பாதகமான சூழ்நிலைகளின்கீழ் வேதனையும் அதிகமாய்க் காணப்படும். கலகத் தலைவனாக இருக்கும் முரடன் ஒருவன் சரக்கு வண்டியில் பயணம் செய்வதைக் கௌரவமாக எண்ணிக்கொள்வான். ஆனால், ஒரு நாகரிகமான மனிதனுக்கு அப்படியானதொரு வண்டியில் பிரயாணம் செய்வது என்பது, அவனுக்குப் பயங்கரமானதாய்த் தோன்றும். வேறொரு உதாரணத்தைக் கூட நாம் பார்க்கலாம்: நன்கு கற்றுத் தேர்ந்த இசை வித்வானுக்கே அதாவது, சுரங்களின் இசைக்கு நன்கு பழகிப்போன செவிகளையுடைய ஒருவருக்கே பாடலிலுள்ள தவறான இசையினிமித்தம் ரசனைக் குலைச்சலும் மற்றும் அத்தவறான இசையினிமித்தம் மனச்சஞ்சலமும் ஏற்படுகின்றது. ஆனால், இசையில் குறைவான திறமை உடையவர்களுக்கு அப்பாடலில் தவறான இசை/சுரம் காணப்பட்டது என்பதுகூடத் தெரியாமல் இருக்கும். நமது கர்த்தருடைய தலைக்கு மேலாக எழுதிப்போடப்பட்டிருந்ததான "யூதருடைய இராஜா" என்ற விலாசமானது ஒருவேளை நமது கர்த்தருக்கு அருகாமையில் காணப்பட்டதான கள்வர்களில் ஒருவனுடைய தலைக்குமேல் போடப்பட்டிருந்ததானால், அவன் தனது மரணமானது ஒரு வெற்றியென மேன்மைப்பாராட்டியிருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை. பூரணத்தைக்குறித்துப் புரிந்துகொள்வது என்பது நமக்குச் சிரமமாகவே உள்ளது. ஏனெனில், நாமும் சரி, நம்முடன் தொடர்புகொண்டிருப்பவர்களில் எவரும் சரி, ஒருவரும் பூரணர்களாக இருந்ததில்லை. ஆகவே, இப்படிப்பட்ட உபத்திரவமான சூழ்நிலையின் கீழ் ஒருவேளை நமது கர்த்தருடைய சீஷர்கள் பாடுபட நேரிடுகையில், அவர்கள் படும் பாடுகளைக் காட்டிலும் அதிகமாகவே நமது கர்த்தர் பூரணமான சரீரமும், உணர்வும் கொண்டிருப்பதினால், பாடுபடுவார் என்ற உண்மையை நாம் மீண்டும் நினைப்பூட்டுகின்றோம்.

இத்தருணத்தில் நமது கர்த்தர் துயரப்படுவதற்கும், அவ்வியாகுலம் மிகவும் கடுமையான நிலைக்குச் சென்று அவருக்கு இரத்த வியர்வை உண்டாகுமளவிற்கு நமது கர்த்தர் பாரப்படுவதற்கும், வேறொரு காரணம் உள்ளது. உண்மையைச் சொல்லப்போனால், இதுவே பிரதானமான காரணமாகவும் உள்ளது. தேவனுக்கு முன்பாக தம்முடைய நிலைமையைக்குறித்தும், தாம் பலி செலுத்துவதற்கென, தாம் பண்ணியிருந்த உடன்படிக்கையின் நிலைமைக்குறித்தும் அவருக்குள் ஏற்பட்ட சிந்தனைகளே அந்தக் காரணமாகும். தேவனுடைய கிருபையினால் ஆதாமை மீட்பதற்கும், ஆதாமை மீட்பதன் மூலம் அவருக்குள் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியை மீட்பதற்குமெனக் காணப்பட்ட பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு, இயேசு பரலோக மகிமைகளைத் துறந்து, தேவதூதர்களுக்கும் குறைவான மனித சுபாவத்திற்கும், ரூபத்திற்கும் இறங்கிவந்தார். இப்படியாக, தம்மையே குறைவாக தாழ்த்தும் விஷயத்தில், இயேசு மகிழ்ச்சிக்கொண்ட காரியமானது,"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்ற வார்த்தைகளில் வெளிப்படுகின்றது (சங்கீதம் 40:8). இந்த உணர்வுதான் இயேசுவை அவருடைய முப்பதாம் வயதின்போது, அவர் தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் முழுமையான அர்ப்பணிப்புக்குள் வழிநடத்திற்று. மேலும், இந்த உணர்வினால்தான் அவர் தம்மைப் பாவநிவாரண பலியாக நேர்த்தியாக ஒப்புக்கொடுக்க முடிந்தது. அதே அன்பும், வைராக்கியமும் அவருடைய ஊழிய நாட்கள் முழுவதிலும் அவரை உண்மையுடன் காணப்படுவதற்கும் உதவிற்று; இன்னுமாக அவருக்கு வாழ்க்கையில் வந்த சகல அனுபவங்களையும், பாவிகளால் வந்த பல்வேறு விபரீதங்களையும் அவர் இலேசான உபத்திரவங்கள் என்று கருதுவதற்கும் உதவிற்று; ஏனெனில் தாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றார் என்பதை அவர் உணர்ந்துகொண்டிருந்தார்.

பின்னர் ஏன் கெத்செமனே தோட்டத்தில் நமது கர்த்தர் இப்படியான கடுந்துயரமடைந்தார்? அதாவது, அவருடைய ஊழியத்தின் முடிவின்போதும், அவருக்கு வரவிருக்கின்ற மரணம் குறித்து, அவர் தமது சீஷர்களிடம் கூறிவிட்டபோதும், தாம் "மூப்பராலும், பிரதான ஆசாரியராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு" (லூக்கா 9:22) சிலுவையில் அறையப்படுவார் என்பது குறித்து அவர்

தமது சீஷர்களுக்கு விவரித்திருந்தபோதும், இவைகள் பற்றிய அனைத்தும் தெரிந்திருந்தபோதும், பிதாவினிடத்தில் அவருக்கு நம்பிக்கை காணப்பட்டிருந்தபோதும், அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் பிதாவினிடத்தில் அவருக்கு இருந்தபோதும், மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணிப்பிற்கு அவர் உண்மையாயிருந்தபோதும், ஏன் நமது கர்த்தர் கெத்செமனே தோட்டத்தில் இப்படியான கடுந்துயரத்தை அடைந்தார்? எதற்கு?

இயேசு, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணியுள்ளார்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் சூழ்நிலையை நமக்கு விவரிக்கின்றன (எபிரெயர் 5:7). ஆனால் அநேகர் மரித்திருக்கின்றார்களே, இதுபோலவும் மற்றும் இதைக்காட்டிலும் கொடூரமான விதத்திலான மரணங்களை அமைதலுடன் அநேகர் சந்தித்திருக்கின்றார்களே. ஏன் நமது கர்த்தர் இப்படியான கடுந்துயரத்தினால் மனமுடைந்தார்? இரத்த வியர்வை வருமளவுக்கு அவர் ஏன் அப்படிப் பலத்த சத்தம் எழுப்பி அழுதார்? நாம் மரணத்தைப் பார்க்கும் விதத்திலிருந்து, அவர் மரணத்தைப் பார்க்கும் விதம் முற்றிலும் மாறுபட்ட காரியமாகும் என்பதே நம்முடைய பதிலாகும். நம்மைப் பொறுத்தவரையில், நம்மில் ஒவ்வொருவருக்கும் பத்தில் ஒன்பது பாகம் மரித்துப் போய்விட்டது. மேலும், பூரணமற்ற தன்மையின் காரணமாகவும், விழுகையில் உள்ள நமக்கான பங்கின் காரணமாகவும் மனம், சரீரம் மற்றும் ஒழுக்க ரீதியிலான சகல உணர்வுகளும் நமக்கு மரத்துப்போய்விட்டன. ஆகவே ஜீவன் என்றால் என்ன என்பதை அதன் மேன்மையான,சிறந்த, உன்னதமான நிலையில் நம்மால் முழுமையாய் உணர்ந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. ஆனால், நம் கர்த்தரின் விஷயத்தில் இப்படியாக இல்லை. "அவருக்குள் ஜீவன் இருந்தது", அதாவது ஜீவன் பூரணமாய் இருந்தது. மூன்றரை வருடக் காலமாக அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருந்ததும், சத்தியத்தைப் பிரசங்கிப்பதற்கு அந்த ஜீவனையே அவர் பயன்படுத்திக்கொண்டிருந்ததும் உண்மைதான். விசேஷமாக, திரளான வியாதியஸ்தர்களுடைய வியாதியைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவரிடமிருந்து இந்த ஜீவனின் சத்துவமே/வல்லமையே புறப்பட்டுப்போய் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கியது. இச்செயல்கள் அவருடைய சரீர பலத்தைப் பலவீனப்படுத்தி/குறைவுபடுத்திக்கொண்டிருந்தது உண்மையாக இருந்தபோதிலும், மனரீதியில் அவர் ஜீவனோடும், முழுச் சக்தியுடனும், பூரணத்துடனுமே ஓடிக்கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை. மரணம் தொடர்பான விஷயங்களில் நாம் இந்நாள் வரைக்கும் வாங்கிக்கொண்டிருக்கும் அனுபவங்கள் காரணமாகவும், மரணத்தை நாம் (வாழ்க்கையில்) எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிற காரணமாகவும், மரணம் இன்றோ அல்லது நாளையோ நிச்சயமாய் வரும் என்றே நம்முடைய எண்ணங்கள் காணப்படுகின்றன. ஆனால், ஜீவன் தொடர்பான விஷயத்தில் நம்முடைய கர்த்தருடைய அனுபவங்கள் முற்றிலும் வேறாக இருந்தது. நமக்கு அறிவிக்கப்படாத பல நூற்றாண்டுகள் காலமாக, நமது கர்த்தர் பிதாவுடனும், பரிசுத்த தூதர்களுடனும் முடிவில்லா ஜீவனைப் பூரணமாக அனுபவித்திருக்கின்றார். மேலும், மரித்துக்கொண்டிருக்கும் மனுஷர்களுடன் அவர் வாழ்ந்த காலமும் கொஞ்சம் வருடங்கள்தான். ஆகவே மரித்துக்கொண்டேயிருக்கும் மனுக்குலம் மரணத்தைக் காணும் பார்வையிலிருந்து அவருடைய பார்வை மிகுந்த வித்தியாசமாய்க் காணப்பட்டது.

இதுமாத்திரமல்ல, இன்னும் சில காரியங்கள் அவர் அப்படித் துயரப்படுவதற்கு இருந்தன, அவை என்னவெனில்: புறஜாதியாரைப் பொறுத்தவரையில் அவர்களுடைய மூதாதையாருடைய பாரம்பரியமான கருத்துக்களின் அடிப்படையில் எதிர்க்கால வாழ்க்கைக்குறித்த நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. தேவனுடைய ஜனங்களைப் பொறுத்தவரையில், தெய்வீக வாக்குத்தத்தத்தின் காரணமாகவும், கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியம் இந்த வாக்குத்தத்தங்களுக்கு நிச்சயம் அளித்ததின் காரணமாகவும், அவர்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருந்தது. ஆனால் இயேசுவுக்கு என்ன நம்பிக்கை இருந்தது? மரித்தவர்கள் உண்மையில் மரித்துப் போகவில்லை என்ற புறஜாதியாருடைய நம்பிக்கையை அவரால் நம்ப முடியாது. ஏனெனில் அது உண்மையல்ல என்பதை அவர் அறிவார். இன்னுமாக, வேறொருவருடைய பலியினால், மீட்படைந்து, உயிர்த்தெழும் நம்பிக்கையும் அவரால் வைக்கமுடியாது; ஆக, அவருக்கு இருந்த ஒரே நம்பிக்கை அவருடைய சொந்த ஓட்டமானது, அவரது அர்ப்பணிப்பின் நாள் துவங்கி முடிவுவரையிலும் முழுக்கப் பூரணமாகவும், நீதியின் பார்வையிலும், பரமபிதாவின் பார்வையிலும் எவ்விதமான குற்றமும் இல்லாததாகவும் இருப்பதிலேயே காணப்பட்டது. அவர் கெத்செமனே தோட்டத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தபோது, இந்தப் பயங்கரமான பயம் அவரை ஆட்கொண்டது: "நான் எல்லா சிந்தனைகளிலும், வார்த்தையிலும், கிரியையிலும் சரியாக/பூரணமாக இருந்துள்ளேனா? நான் பிதாவை முழுமையாகத் திருப்திபடுத்தியுள்ளேனா? என்னுடைய பூரணத்தன்மையின் காரணமாக என்னைக் கூனிக்குறுகிப்போகச் செய்யக்கூடிய நாளை எனக்கு வரப்போகின்றதான அவமானத்தையும், இகழ்ச்சியையும் என்னால் சகிக்கமுடியுமா? எனக்கு

வரப்போகும் இந்த அவமானங்களை கூனிக்குறுகினதினிமித்தமாக (வெட்கத்தினிமித்தமாக) நான் பின்வாங்கிப்போகாமல் என்னால் அவைகளை எதிர்க்கொள்ள முடியுமா? இவைகள் அனைத்தினிமித்தம் நான் பிதாவினால் பாத்திரவானாகக் கருதப்பட்டு, மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவேனா? ஒருவேளை நான் தோல்வியடைந்துவிட்டேன் என்றால் அல்லது ஏதோ ஒரு சிறிய விஷயத்தில் நான் தவறிப்போய்விட்டால், நான் உயிர்த்தெழுவதற்கு அபாத்திரனாகக் கருதப்பட்டு மரணத்திலேயே விட்டுவிடப்படுகின்ற நிலைக்கு ஆளாகிவிடுவேனோ? என்ற பாரமான கேள்விகள் நமது அருமையான மீட்பருடைய இருதயத்தில் எவ்வளவு தாங்கமுடியாத துயரத்தை உண்டுபண்ணியிருக்கும் என்பதில் நமக்கு ஆச்சரியமில்லை. ஆகவே, தம்மை மரணத்தினின்று உயிர்த்தெழுதலின் மூலம் இரட்சிக்க வல்லவரை நோக்கி, இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்.

(மத்தேயு 26:39)“இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று ஜெபம்பண்ணினதாக மத்தேயு கூறுகின்றார்.(மாற்கு 14:36) “அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று ஜெபம்பண்ணினதாக மாற்கு கூறுகின்றார்.(லூக்கா 22:42)“பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று ஜெபம்பண்ணினதாக லூக்கா பதிவு செய்கின்றார். இவைகளனைத்தும் தெரிவிப்பது என்னவெனில், நமது கர்த்தர் தம்மைக்குறித்து மிகவும் பயந்துபோய்விட்டார். அதாவது, தாம் இவ்வளவு தூரம் கீழ்ப்படிதலுடன் கையில் எடுத்துக்கொண்டதும், இவ்வளவு தூரம் உண்மையுடன் நிறைவேற்றிக்கொண்டு வந்திருந்ததுமான தேவனுடைய திட்டமானது, தம்முடைய ஏதாகிலும் ஒரு தவறான அடியெடுத்து வைத்தலின் காரணமாக இல்லாமலாக்கப்பட்டுப் போய்விடுமோ என்று அவர் மிகவும் பயந்து காணப்பட்டார். ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் அவருக்கு உண்டான மரணத் தண்டனைக்கு ஈடுபலி கொடுப்பதற்கென ஏதாகிலும் ஒருவிதமான மரணத்தை இயேசு சந்திப்பதே போதுமானதாகும். ஆனாலும் பிதாவோ, தம்முடைய குமாரனாகிய மீட்பரை உச்சக்கட்டமாய் இருக்கும் அனைத்துப் பரிட்சைக்குள் அனுமதிப்பதற்கும், அவர் மேல் சிலுவையின் அவமானத்தையும், இகழ்ச்சியையும் அனுமதிப்பதற்கும் சித்தம் கொண்டிருந்தார். நமது கர்த்தருடைய கேள்வி: என்னால் அதைச் சந்திக்க/எதிர்க்கொள்ள முடியுமா? அல்லது தெய்வீகத் திட்டத்தில் குறுக்கிடாமல் அல்லது இந்த மாபெரும் வேலை நிறைவேறுவதில் எவ்விதமான தடையும் ஏற்படாதவாறு, அவமானம் மற்றும் இகழ்ச்சியாகிய அம்சங்களைப் பிதாவினால் விலக்கிவிட முடியுமா? என்பதாகவே காணப்பட்டது. ஆயினும், “என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்ற வார்த்தைகளானது அவசியமான கீழ்ப்படிதலைச் சுட்டிக்காட்டியது.

## அவர் பயமடைந்த விஷயம் தொடர்பான அவருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது

நமது கர்த்தருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும், அவர் பயமடைந்த விஷயம் தொடர்பாக அவருக்கு பதிலளிக்கப்பட்டது என்றும், அதாவது சிலுவை பற்றியும், மரணத்திலிருந்து உயிரடையும் காரியம் பற்றியும், அவரடைந்த பயத்திற்குப் பதிலளிக்கப்பட்டது என்றும் அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். இப்படிப்பட்டதான உபத்திரவங்களில் விடுவிக்கப்படுவதற்காக அல்லது உதவி பெற்றுக்கொள்வதற்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் இரண்டு விதங்களில் பதிலளிக்கப்படலாம். எப்படியெனில், ஒன்றில் பிதாவானவர் பிரச்சனைக்குரிய காரணத்தை மாற்றிப்போட்டுவிடுவார், இல்லையேல் அப்பிரச்சனையை எதிர்க்கொள்ளத்தக்கதாக நம்மைப் பிதாவானவர் பெலப்படுத்துகின்றவராய் இருப்பார். ஆனால் நம் விஷயத்திலும் சரி, போதகரின் விஷயத்திலும் சரி, பிதாவானவர் எப்பொழுதும் இரண்டாம் முறையையே கையாளுகின்றவராகக் காணப்பட்டு, தமது வார்தையின் மூலம் உண்டாகும் நிச்சயத்தின் வாயிலாக நமக்குச் சமாதானத்தையும், பலத்தையும் அருளுகின்றவராய் இருக்கின்றார். ஆகவே, நமது போதகரிடம் தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினார் என்று நாம் வாசிக்கின்றோம். அருமையான மீட்பர் தனிமையிலும், தாங்க முடியாத துயரத்திலும் காணப்பட்ட அவ்வேளையில், அவருக்குத் தூதன் என்ன செய்தி கொண்டுவந்தார் என்பது நமக்குத் தெரியவில்லை. நாம் தெரிந்தேயாக வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை. பிதா அவருடைய விண்ணப்பத்தைக் கேட்டார் என்றும், அவர் அச்சம் கொண்ட விஷயம் தொடர்பான விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும், அவருடைய சகல பயமும் மாற்றிப்போடப்பட்டது

என்றும், நமது அருமையான மீட்பருடைய மனதில் சமாதானம்/அமைதி ஆள தொடங்கினது என்றும், அதுமுதல் அந்த இரவிலும், அடுத்த நாளிலும் நடந்த அனைத்துச் சம்பவங்களிலும் அவர் அனைத்து மனுஷர்கள் மத்தியிலும் சாந்தத்துடனும், அமைதியுடனும் காணப்பட்டார் என்றும், நாம் அறிந்துகொள்வது நமக்குப் போதுமானதாகும். குமாரன் மேல் தெய்வீகத் தயவு உள்ளது என்பதையும், அத்தருணம் வரையிலும் குமாரன் உண்மையாகவே இருந்துள்ளார் என்பதையும், பிதாவின் ஆதரவு குமாரனுக்கு இன்னும் காணப்படுகின்றது என்பதையும், குமாரனுக்கான சோதனை வேளை வரும்போது, அவ்வேளைக்கான சகல நெருக்கடிகளையும் குமாரனால் முழுமையாகச் சந்திக்க முடியும் என்பதையும் குறித்ததான பிதாவின் வாக்குறுதிக் குறித்த விஷயங்களையே தூதன் குமாரனிடம் கூறியிருந்திருக்க வேண்டும் என்பதே நம்முடைய அனுமானமாகக் காணப்படுகின்றது. பிதாவின் அங்கீகாரம் தொடர்பான நிச்சயத்தைக் கர்த்தர் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் அவருக்குள் இருந்த துக்கங்கள் திசை தெரியாமலேயே போயிருந்திருக்கும். இன்னுமாக, அவருடைய இருதயத்திற்குள் நம்பிக்கையும், சந்தோஷமும், அன்பும், சமாதானமும் பாய்ந்து வந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. பின்னர்த் தமக்கு இன்னும் சற்று நேரத்தில் சம்பவிக்க இருக்கும் நிகழ்வுகளை அறிந்தவராக, அவைகளை எதிர்க்கொள்ளும்படியாகச் சீஷர்களை விட்டுவந்த இடத்திற்கு நடந்து போனார்.

## நாமும் அச்சம் கொள்வோமாக

கர்த்தருடைய ஜனங்கள் சந்தோஷத்துடன் ஜீவிக்க முயற்சி பண்ண வேண்டும் என்பதும், சகல விஷயங்களுக்காக எப்போதும் பிதாவுக்கு நன்றிச் செலுத்துகிறவர்களாக இருப்பதற்கு நாட வேண்டும் என்பதும், கிறிஸ்துவினிமித்தம் பாடுகள், நிந்தனைகள் முதலியவைகளைத் தாங்கள் அனுபவிப்பதற்குப் பாத்திரவான்களாக எண்ணப்பட்டதினிமித்தமாக களிகூர வேண்டும் என்பதும் நல்ல காரியந்தான். ஆனாலும், அப்போஸ்தலர் நாம் அச்சத்துடன் களிகூர வேண்டும் என்று கூறுகின்றார். இன்னுமாக, நாம் நம்மையே வஞ்சிக்கும் விதத்திலும், சிக்க வைக்கும் விதத்திலும் நம்முடைய முடிவைக்குறித்துக் கவலையற்ற நிலையிலும், சுயதிருப்தியுள்ள நிலையிலும் இருந்து களிகூருகின்றவர்களாகக் காணப்படக்கூடாது என்றும் கூறுகின்றார். இன்னுமாக, நம்மை அன்புகூர்ந்து நம்மை விலைக்கொடுத்து வாங்கினவரும், நம்மோடு என்றென்றும் கூடவே இருப்பவரும், நம்முடைய சிறந்த நண்பராகவும், உண்மையான வழிக்காட்டியாகவும் இருந்தவருமாய் காணப்படுகிறவரிடத்தில் நம்முடைய களிகூருதல் காணப்படுவதாக என்றும் கூறுகின்றார். இன்னுமாக, நமக்கு ஞானம் மற்றும் தைரியம் மற்றும் பலம் இருக்கின்றது என்பதான எண்ணங்களில் களிகூருகிறவர்களாய் இராமல், நமக்கு ஓர் இரட்சகர் இருக்கின்றார் என்பதிலும், அவர் மாபெரியவராக இருக்கின்றார் என்பதிலும், அவர் மூலம் பிதாவினிடத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் முடிவுபரியந்தம் இரட்சிக்க வல்லவராயிருக்கின்றார், என்பதுமான உண்மைகளில் களிகூருகின்றவர்களாய் இருக்கக்கடவோம். இவ்விதமாக, நமது கர்த்தர் நம்முடைய பெலனாகவும், நம்முடைய நம்பிக்கையாகவும், நமது கேடகமாகவும், நமது பரிசையாகவும் இருப்பார்.

நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில், "அவர் ஒருவராய் ஆலையை மிதித்தார், ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருந்ததில்லை" என்று நாம் வாசிக்கின்றோம் (ஏசாயா 63:3). அவருடைய கடுமையான வேளையின்போது அவருக்கு மிகுந்த ஆறுதலும், தேறுதலும் அவசியப்பட்டபோது, அவருடைய பூமிக்குரிய நண்பர்கள் மத்தியில் அவருக்கு நெருக்கமாயும், அன்பாயும் காணப்பட்டவர்களால் கூட அவருடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை, அவருக்கு ஆறுதல் அளிக்கவும் முடியவில்லை. ஆனால், நம்முடைய விஷயம் எவ்வளவு வித்தியாசமாய் உள்ளது! நம்முடைய சந்தோஷங்களிலும், துக்கங்களிலும் நம்முடைய நம்பிக்கைகளிலும் அச்சங்களிலும் நம்மைப்போன்று ஒரே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், ஒரே கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படுகிறவர்களுமாகிய நம்முடைய சகோதர சகோதரிகளும், நம்மிடம் அனுதாபம் காட்டாமல் இருப்பதற்கு நாம் ஒன்றும் அவர்களிலிருந்து (இயேசு பரிபூரணமாய் இருந்ததினால், சீஷர்களிடமிருந்தும் அனைவரிடமிருந்தும் வித்தியாசமானவராய்க் காணப்பட்டதுபோன்று) வித்தியாசமானவர்கள் அல்ல. நம் விஷயத்தில் நமக்கு மனித ஆலோசனையும், ஆறுதலும் அளிக்கப்பட முடியும்; இது தகுந்ததும்கூட. நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் கொடுக்க வேண்டும் என, ஒருவரையொருவர் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களாகக் கட்டி எழுப்ப வேண்டும் எனக் கர்த்தர் விரும்புவதாகவும், இதுவே தெய்வீக ஏற்பாடு என்பதாகவும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது. இப்படியாக ஏற்பாடு இருப்பினும் நாம் பரம கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குப் பிதாவுடனும், மகிமையடைந்த கர்த்தருடனும் தனிப்பட்ட உரையாடல் வைத்துக்கொள்ளும் காரியத்தையும் நாம் ஒருபோதும்

புறக்கணித்துவிடக்கூடாது. என்னதான் மனிதராகிய சகோதர சகோதரிகளின் தோழமை நமக்குக் காணப்பட்டாலும், கர்த்தருடைய தோழமையை நாம் ஒருபோதும் குறைவாக மதிப்பிடவோ அல்லது மறக்கவோ கூடாது. கர்த்தர் சில சமயங்களில் நம்மை ஆறுதல்படுத்துவதற்கும், அவருடைய அன்பு குறித்ததான நிச்சயத்தை நமக்கு அளிப்பதற்கும், நம்முடைய நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்புத் தொடர்பான நிச்சயத்தை நமக்குச் சுட்டிக் காண்பிப்பதற்கும் வேண்டி நமக்கு அவருடைய தூதர்களை அனுப்புவார். கர்த்தருக்கு ஏற்கெனவே பூமியில் மனித தூதர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், சத்திய தூது கொடுப்பவர்கள் இருக்கின்றபடியினால், பரலோகத்தின் தூதர்களைத் தூது கொடுக்கும்படிக்கு அனுப்புவதற்கு இனி அவருக்கு அவசியமிராது. இந்த மனித தூதர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் போதகருடைய ஆவியினாலும், அன்பினாலும் நிரப்பப்பட்டவர்களாகக் காணப்பட்டு அன்பான வார்த்தைகளைப் பேசுவதற்கும், நொறுக்கப்பட்டுள்ள இருதயங்களைக் காயங்கட்டுவதற்கும், போதகரின் பிரதிநிதியாக ஆறுதல் மற்றும் மகிழ்ச்சியின் திராட்சரசம் மற்றும் எண்ணெயையும் ஊற்றுவதற்கும், எப்போதும் ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். இப்படிப்பட்டதான ஊழியங்கள் மூலமாக எவ்வளவு சந்தோஷம் கடந்துவருகின்றது. மேலும், இவ்விதமான ஊழியங்கள் காரணமாக எத்துணை ஆசீர்வாதங்களை நாம் பெற்றிருக்கின்றோம். மேலும், இவ்விதமாக உடன் சகோதர அங்கங்களுக்குச் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆசீர்வாதம் அளிக்கக்கூடிய ஊழியர்களாக நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படும் தருணங்களானது, எத்துணை சிலாக்கியங்களாக இருக்கின்றன! இப்படிப்பட்டதான வாய்ப்புகளை நாம் தவறி விட்டுவிடாதபடிக்கு விழிப்பாய் இருப்போமாக.

ஆகவே,"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" என்ற வார்த்தைகளைத் தெரிவிப்பதன் வாயிலாக இயேசு பயப்பட்ட விஷயத்திற்காக, நாமும் பயப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்( எபிரெயர் 4:1) . புதிய சிருஷ்டிகளாக நாம் புதிய ஜீவனை, பரலோக ஜீவனை ருசி பார்த்துவிட்டோம். இன்னுமாக, பிதாவை அன்புகூருகிறவர்களுக்காக அவர் வைத்துள்ள பரம காரியங்களினுடைய அழகையும், மகத்துவத்தையும் பார்க்கத்தக்கதாக ஓரளவுக்கு நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டுள்ளன. நாம் பண்ணியுள்ள பலியின் உடன்படிக்கைக்கு நாம் உண்மையாய் இருப்பதின் அடிப்படையிலேயே நம்மால் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும், கர்த்தரோடு உடன்சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. நாம் ஒருவேளை உண்மையாய்க் காணப்பட்டுவிட்டோமெனில், நமக்கு வாக்களித்தவர், பலனளிப்பதில் உண்மையுள்ளவர் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை நாம் உண்மையற்றவர்களாய்ப் போய்விட்டோமெனில், நாம் பரிசைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிட்டோம் என்பதும் நமக்குத் தெரியும். இப்படியாக, சூழ்நிலைகள் இருக்கையில் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்? இப்படிப்பட்டதான விலையேறப்பெற்ற மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் இழந்துவிடுவோமோ என்ற அச்சம் கொண்டவர்களாக, நம்முடைய உடன்படிக்கையை நிறைவு செய்வதற்குத் தொடர்ந்து முயற்சிப்பவர்களாகவும், நம்முடைய பிதாவின் அன்பிலும், நம்முடைய மீட்பருடைய தயவிலும், அங்கீகரிப்பிலும் நிலைநிற்பவர்களாகவும் இருப்போமாக. இப்படியாக, கவனமாக நடக்க முயற்சிக்கும் யாவரும், முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும், சூழ்நிலையைப் புரிந்துகொள்வதற்கும், உண்மையாய் இருப்பதற்கும் அவசியமான அச்சத்தை இவர்களுக்குள் வளர்க்கத்தக்கதாகவும், இவர்கள் பரீட்சிக்கப்படத்தக்கதாகவும், இவர்கள் தங்களை நிரூபிக்கத்தக்கதாகவும், இவர்கள் கெத்செமனேயின் தனிமையினுடைய சிறு அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தருணங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

## இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்

உச்சக்கட்டமான மன வியாகுலம் காணப்பட்ட வேளையில், நமது கர்த்தர் மீண்டும் மீண்டுமாக ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். இதற்கிடையில் ஆறுதலடைவதற்கென அவர் தமது சீஷர்களிடத்தில் வந்தார். ஆனால், அவர்களுடைய கண்கள் துக்கத்தின் காரணமாக நித்திரை மயக்கத்தினால் இருப்பதையும், அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதையும் அவர் கண்டார். அப்போது நடுராத்திரி வேளையாய் இருந்தது. அவருடைய துக்கங்களில் அவரோடுகூட இருந்தாலும், அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்களாகக் காணப்பட்டார்கள். அவர் பேதுருவை, "நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடுகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று போதகர் கடிந்துகொண்டார்/கோபித்துக்கொண்டார்

(மத்தேயு 26:40). "உம்மை அனைவரும் கைவிட்டுப்போனாலும், நான் உம்மை கைவிட்டு ஓடமாட்டேன்" என்று கொஞ்ச நேரத்திற்கு முன்பு சூளுரைத்தப் பேதுருவோ, பட்டயத்தைத் தன்னிடத்தில் பெற்றிருந்தவரும், பிற்பாடு அதனை போதகரைக் காக்கும் முயற்சியில் பயன்படுத்தினவருமாகிய பேதுருவோ, அந்நேரத்திற்குரிய முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாதவராகக் காணப்பட்டார். மேலும் தமக்கு வரப்போகும் பரிட்சைகள் எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்றும், அவைகள் எவ்வளவு அண்மையில் இருக்கின்றது என்றும் போதகர் அறிந்திருந்ததுபோன்று பேதுரு அறிந்திருக்கவில்லை. மேலும், "சேவல் கூவுகிறதற்கு முன்னே என்னை நீ மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று பேதுருவிடம் போதகர் பேசின வார்த்தைகள் இன்னும் சிறிது நேரத்தில் நிறைவேறப்போகின்றது என்பதையும் பேதுரு அறியாதவராய் இருந்தார். பேதுருவும், போதகரைப் போன்று பரிட்சைகள் சமீபமாய் இருக்கின்றது என அறிந்திருப்பாரானால், அவர் எவ்வளவு எச்சரிப்பாய்க் காணப்பட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இன்றும் வாழும் நமக்கும் இது பொருந்துகின்றது அல்லவா? கர்த்தருடைய ஜனங்களாகிய நாமும் இந்த அறுவடைக் காலக்கட்டத்தில் சபைக்கான கெத்செமனே வேளையை நெருங்கிக்கொண்டிருக்கின்றோம் அல்லவா? நாம் ஏற்கெனவே கொஞ்சம் அந்தச் சோதனை வேளைக்குள் காணப்படுகின்றவர்களாய் இருக்கின்றோமல்லவா? கிறிஸ்துவின் கடைசி சரீர அங்கம் சீக்கிரத்தில் தலையோடு சேர்ந்து, பலி நிறைவடையப் போகின்றதல்லவா? இவ்வனுபவங்களை எதிர்க்கொள்ளத்தக்கதாக நாம் எவ்விதத்தில் ஆயத்தமாய்க் காணப்படுகின்றோம்? நாம் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிறோமா? அல்லது அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கின்றவர்களாய் இருக்கின்றோமா? அதாவது, தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள் என்றும், இந்தப் பொல்லாத நாளிலும், நம்மீது ஏற்கெனவே மேலோங்கிக் காணப்படும் சோதனையான இந்த நாளிலும், இன்னும் கடுமையாக எதிர்க்காலத்தில் நம்மீது வரப்போகிற சோதனையிலும், நாம் நிற்கத்தக்கதாகப் பகலுக்குரியவர்களாகிய நாம் விழிப்புள்ளவர்களாகவும், தெளிந்தவர்களாகவும், தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்தவர்களாய் இருக்கக்கடவோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கிறவர்களாய் இருக்கின்றோமா? சீஷர்கள் அனைவரும் கர்த்தரைத் தனியே விட்டுவிட்டு ஓடினதுபோன்று, பொதுவான ஒரு சிதறடிக்கப்படுதல் நேரிடும் வேளைக்கு நாம் ஆயத்தமாய் உள்ளோமா? போதகரின் மாதிரியை நாமும் பின்பற்றி, தெய்வீக அங்கீகரிப்பு நம்மீது உள்ளது என்ற உறுதியான நிலைப்பாட்டை/நிச்சயத்தை நாம் முதலாவது பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பதற்கு ஏற்ப, நம்முடைய சோதனை வேளைகளில் நம்முடைய தைரியம் காணப்படும். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி நமக்குக் கெத்செமனே தருணங்கள் ஒருவேளை வருமாயின் அவைகளை நாம் தவிர்த்துவிடாமல், நம்மை மரணத்தினின்று மகிமையான உயிர்த்தெழுதல் மூலம் இரட்சிக்க வல்லவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணுவோமாக. இன்னுமாக, அப்படியான தருணங்களில் நமக்குப் பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கின்றார் என்பதையும், நமக்கு உதவி செய்வதற்கு ஒருவர் இருக்கின்றார் என்பதையும் நினைவில் கொள்வோமாக. பிதாவின் செய்தியை நமக்களிக்கும் நமக்கான தூதனாகக் கர்த்தர் காணப்பட்டு — நாம் அவருடைய அன்பில் நிலைத்து நிற்பவர்களாகக் காணப்பட்டுவிட்டால், முடிவின் தருவாயில் அனைத்தும் நலமாய் நிறைவேறும் என்றும், நம்மை அவருடைய சொந்த புண்ணியத்தின் மூலமாய் ஜெயங்கொண்டவர்களாக, ஆம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக ஆக்குவதற்கு அவர் வல்லமையும், சித்தமும் கொண்டவராகவும் இருக்கின்றார் என்றும் அவர் நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்.

## ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பெலவீனமுள்ளதாய் உள்ளது

இந்த வார்த்தைகளே, நமது அருமையான மீட்பர் அவருடைய சீஷர்களைக்குறித்துக் கூறினவைகளாகும். அவர்கள் இருதயத்தில் தம்மிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள் என்ற உண்மையை அவர் உணர்ந்தவராகவே இருந்தார். அவர்கள் தம்முடைய சீஷர்களாகும்படிக்கு அனைத்தையும் விட்டுவந்த காரியத்தை அவர் பொருட்படுத்தாதவர் அல்ல. அவர் கடினமான/இரக்கமற்ற ஆண்டவருமல்ல. மாறாக அவர்களுடைய மாம்சம், பூரணக் கோட்பாடுகளை நிறைவேற்றும் விஷயத்தில் தோல்வியுற்றாலும்கூட, அவர்களுடைய இருதயத்தின் நோக்கங்களை ஏற்றுக்கொள்வதற்கு என்றென்றும் விருப்பமுள்ளவராகவே காணப்படுகின்றார். ஆகவே, "இனி நித்திரைப் பண்ணி இளைப்பாறுங்கள்" என்ற வார்த்தைகளை அவர் ஏளனத்துடன் சீஷர்களை நோக்கிப் பேசவில்லை என்றும், காலையில் வரப்போகிற காரியங்களினிமித்தம் இரவில் அவர்கள் கொஞ்சம் இளைப்பாறுதலும், புத்துணர்வும் அடையட்டும் என்றே கூறினார். ஆனால், அவர்களால் அதிக நேரம் உறங்கமுடியவில்லை. யூதாஸ் இயேசுவைத் தேடிவந்த திரளான அதிகாரிகளுக்கு வழிகாட்டி அவ்விடத்திற்கு வந்தான். இந்த அதிகாரிகள் உரோம சேவகர்களாய் இராமல், பிரதான

ஆசாரியனுடைய சேவகர்களாகவும், என்ன நடக்கப்போகின்றது எனப் பார்ப்பதற்கும் வந்திருந்த கும்பலுமாய் இருந்தார்கள். பஸ்கா அநுசரிக்கும்படிக்குப் பட்டணத்தில் ஜனங்கள் நிறைந்திருக்கும் வேளையில் காலைப்பொழுது, இயேசுவைக் கைது செய்வது என்பது, பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும் என இவர்கள் கருதி, இவரை இரவோடு இரவாகக் கைது செய்யும்படிக்குக் கெத்செமனே தோட்டத்திற்கு வந்தார்கள். பிரச்சனைகள் வரும் என்று எதிர்ப்பார்த்தபடியால், அப்பிரச்சனைகளைத் தவிர்த்திடுவதற்கு நியாயப்பிரமாணத்தினுடைய அதிகாரிகள் நாடினார்கள்.

கெத்செமனே தோட்டத்திற்கு இயேசுவும், அவருடைய சீஷர்களும் அடிக்கடி போவார்கள் என்று, அல்லது இராப்போஜனத்தின்போது இயேசுவும் அவருடைய சீஷர்களும் இத்தோட்டத்திற்குப் போக இருக்கின்றார்கள் என்று யூதாஸ் அறிந்திருக்கலாம். யூதாசுக்குள் சாத்தான் புகுந்த பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதின் மூலம், முப்பது வெள்ளிக்காசுகளைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்துடன் பஸ்கா போஜனம் புசிக்கும்படிக்குக் கூடியிருந்த சீஷர்களை விட்டுவிட்டு யூதாஸ் புறப்பட்டுபோய், பிரதான ஆசாரியர்களைக் கண்டு அவர்களிடத்தில் பேரம் பேசினான். இந்த உடன்படிக்கையின் காரணமாகவே இயேசுவைச் சந்திக்கும்படியாகவும், சேவகர்கள் அவரைப் பிடிக்கத்தக்கதாக அவர்களுக்கு அடையாளம் காட்டிக்கொடுக்கத்தக்கதாகவும் சேவகர்கள் கூட்டத்திற்கு முன்பாக யூதாஸ் வந்தார். யூதாஸ் இயேசுவின் அருகே வந்து, ரபீ வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். கிரேக்க பதிவுகளின் அர்த்தத்தின்படி பார்க்கையில் யூதாஸ் மீண்டும் மீண்டுமாக முத்தஞ்செய்தான் என்பதாகத் தெரிவிக்கின்றது. அன்பிற்கான பொதுச் சின்னமாய் இருந்த இந்த முத்தத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். மேலும், இது துரோகத்தின் முத்தமாய் இருந்தது என்றும் இயேசு அறிந்திருந்தும் எவ்விதமான கோபத்தின் வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வரவேயில்லை. மாறாக, மிகுந்த அன்புடனும், மரியாதையுடனும், "சிநேகிதனே என்னத்திற்காக வந்திருக்கின்றாய்?" என்றார் (மத்தேயு 26:50). "தோழா, எதற்காக வந்தாய்?" என்று கேட்டார் (திருவிவிலியம்). இங்குத் தோழா, சிநேகிதனே என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான ஆங்கில வார்த்தையான, "friend" அன்பான நண்பனைக் குறிப்பதுமில்லை; இன்னுமாக பிரியமான எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் philos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தும் வரவில்லை; மாறாக உடன்வேலையாள் அல்லது கூட்டாளி என்ற அர்த்தத்தை அளிக்கும் *hetaire* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தே வந்துள்ளது.

## யூதாசின் ஆவியைத் தவிர்த்துவிடுங்கள்

கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனும், கர்த்தருக்கும் அவருடைய நோக்கங்களுக்கும், தான் ஒருபோதும் யூதாசாக மாறிவிடாத ஒரு வாழ்க்கைப் போக்கை வாழ முடிவு செய்ய விரும்புவது அவனவன் கையில்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன் துரோகியாக இருப்பான் என்றும், தேவனுடைய கிருபையை விருதாவாக அவன் பெற்றுக்கொள்வதோடு அல்லாமல், அக்கிருபையை மிகுந்த தீமையான விதத்தில் பயன்படுத்துவான் என்றும், தேவன் முன்னறிந்து வைத்திருந்த காரியமானது, யூதாசின் வீழ்ச்சிக்கான காரணமல்ல. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்றும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்றும்" அப்போஸ்தலன் கூறுகின்றார் (2 தீமோத்தேயு 2:19). தேவனுடைய கிருபையை நாம் எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது குறித்தும், அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்தும் தீர்மானிப்பது நம் கையில்தான் உள்ளது. தேவனுடைய முன்னறிவானது எவ்விதத்திலும் நமக்குள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணியாக இராது.

யூதாஸ் சீஷனாக தனது ஓட்டத்தை ஆரம்பித்தபோது, உண்மையுள்ளவனாகவே இருந்தான் என்பதை அநுமானிப்பதற்கு நமக்குப் பல காரணங்கள் உள்ளது. கடைசி வேளையில், அவனிடத்தில் வெளிப்பட்ட மிகக்கேடான குணலட்சணமும், இருதயத்தின் அவகேடான/தீமையான, கீழ்த்தரமான நோக்கங்கள்மீது வளைதலும் அவனுக்குள் படிப்படியாகவே ஏற்பட்டதென நாம் அநுமானிக்கிறோம். அதாவது இந்த அவக்கேடுகள் அவருக்குள் ஒரு சில சிறு யோசனைகளாக உதித்து, பின்னர் இறுதியில் மிகவும் பயங்கரமான அவல சம்பவமாக முடிந்தது என்று நாம் அநுமானிக்கின்றோம். அவருக்குள் உதித்த அந்த யோசனைகள் அநேகமாக சுயநலத்தின் அடிப்படையிலேயே காணப்பட்டிருக்க வேண்டும். அதாவது, பன்னிரண்டு பேர் மத்தியில் தனக்குப் போதுமான அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற யோசனைகள் அவருக்குள் தோன்றியிருக்கலாம். நமது கர்த்தர் பேதுருவுக்கும், யாக்கோபிற்கும், யோவானுக்கும் முன்னுரிமைக் கொடுத்து வந்த விஷயத்தில் கர்த்தருக்கு அறிவும், திறமையும் இல்லையென்பதை வெளிக்காட்டுகின்றன என்பதான

யோசனைகள் கூட அவருக்குள் தோன்றியிருக்கலாம். இப்படியாக, மற்றவர்களிடத்தில் குறைக்காணும் விதமாக தனக்குள் ஏற்பட்டுள்ள ஆவிக்கு யூதாஸ் உற்சாகமூட்டி வந்தான் என்பதில் ஐயமில்லை. தீர்மானம் எடுக்க வேண்டிய எந்தெந்த விஷயங்களில் இயேசுவும் மற்றச் சீஷர்களும் தவறினார்கள் என்பதையும், எந்தெந்த இடங்களில் வாய்ப்புகளைப் பயன்படுத்த அவர்கள் தவறிவிட்டார்கள் என்பதையும், எந்தெந்த இடத்தில் சரியான வாய்ப்புகள் அமைந்தபோதும், தவறான வார்த்தைகளை அவர்கள் பேசிவிட்டார்கள் என்பதையும், யூதாஸ் தனக்கு மாத்திரமே புரிகின்றதுபோலவும், அதேவேளையில் தான் செய்பவைகள் சரியென்றும், தன்னிறைவு கொண்டவனாகவும் காணப்பட்டான். வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்பு எப்போதும் இப்படிப்பட்ட சுயநலமான ஆவியும், இப்படியான சுயத் திருப்தியின் ஆவியும், மற்றவர் மேல் குற்றம் சாட்டும் இப்படியான ஆவியும் மற்றும் இப்படியான கண்மூடித்தனமான எண்ணங்களும் எப்போதும் காணப்படுகின்றது. இதற்குச் சபையின் வரலாறும், நம்முடைய தனிப்பட்ட அனுபவங்கள்கூடச் சாட்சிபகர்கின்றன.

கிறிஸ்துவின் நோக்கங்கள் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லவில்லை என்று யூதாஸ் உணர்ந்தபோது — அங்குக் கூடியிருந்த திரளான ஜனங்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, இயேசு இராஜாவாகிக் கொள்வதற்குக் கவனம் செலுத்தாமல் இருந்ததோடு, யூதர்களுடைய அதிகாரிகளிடமிருந்து தாம் எதிர்ப்பை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினதின் மூலம் இயேசுவின் மனம் வேறு திசையில் போய்க்கொண்டிருப்பதை யூதாஸ் உணர்ந்தபோது — அந்த உணர்வால் தன்னுடைய சொந்த கூட்டிற்குச் சொகுசான இறகுகள் வைப்பதற்கு ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்ற யோசனைகள் அவனுக்குள் எழும்பின. இதன் மூலமாக பிரச்சனைகளும், பிரிவினைகளும் வெடிக்கும்போது, கூட்டத்தாரிலேயே ஆதாயம் பெற்ற ஒருவனாகவும் மற்றும் சீஷனாக இருந்ததின் காரணமாக இழப்புகள் அடையாத நபராகவும் தான் இருக்க முடியும் என யூதாஸ் சிந்தித்தான். ஆக, அவனுடைய மனதை சுயநலம் ஆளுகை செய்து அவனைத் திருடுவதற்கு வழிநடத்தினபடியினால், "அவன் திருடனும், பணப்பையை உடையவனுமாயிருந்தான்" என்று அவனைக்குறித்து எழுதப்பட்டுள்ளது. அவன் சீஷர்களின் கூட்டத்தாருக்குப் பொருளாளராக இருந்தான். மேலும், அவர்களுக்குரிய பணத்தில் யூதாஸ் தன்னுடைய தனிப்பட்ட சில விஷயங்களுக்காக எடுத்துக்கொண்டவனாகவும் இருந்தான். (கர்த்தருடைய) நோக்கத்திற்காக தன்னுடைய ஈடு இணையற்ற நேரத்தைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்ற எண்ணத்தினாலும், தான் செய்துகொண்டிருக்கும் காரியங்கள் மூலம் உண்டாகும் மதிப்புகள் அவர்களுடைய பணப்பையிலிருந்து, தான் எடுத்துக்கொண்ட பணத்திற்கு ஈடு செய்வதாக உள்ளது என்ற எண்ணத்தினாலும், தான் திருடின விஷயம் ஒரு தவறல்ல என்று அவனுடைய நயவஞ்சகத்தினால் தன்னைக் குற்றமற்றவன் என யூதாஸ் எண்ணியிருக்கக்கூடும் என்றுகூட நாம் அனுமானம் செய்யலாம். இதுவே, சுயநலத்தின் ஆவியாகும். இந்தச் சுயநலத்தின் ஆவி, கர்த்தருடைய ஆவிக்கு அதாவது, பலி செலுத்தும் உணர்வின் ஆவிக்கும், சத்தியத்திற்காக முழு ஆன்மாவோடு செய்யப்படும் ஊழியத்திற்கும் முற்றிலும் எதிர்மாறானதாகும். யாரொருவர் இந்த ஆவியை எந்தளவில் பெற்றிருந்தாலும் சரி, அவர்கள் பெற்றிருக்கும் ஆவிக்கேற்ப அவர்களிடத்தில் யூதாசின் ஆவி இருப்பது மெய்யே. மேலும், இவ்வாவியைக் கொண்டிருப்பதினிமித்தம் உண்டாகும் விளைவுகள், யூதாசின் அளவிற்கு அல்லது அவரைக்காட்டிலும் குறைவாக இருப்பினும் அது நிச்சயமாக தீமையானதாகவே காணப்படும்.

உலகத்தில் காணப்படும் கர்த்தருடைய உண்மையான அங்கங்கள் தம்மை அடையாளப்படுத்துகிறார்கள் என்றும், அவர்களுக்கு எதிராக செய்யப்படும் எக்காரியமும் தமக்கு எதிராகவே செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்றும், நமது கர்த்தர் அறிவித்துள்ளார். ஆகவே, கர்த்தருடைய பின்னடியார்களில் மிகச் சிறியவராகக் காணப்படும் ஒருவரைக் காட்டிக் கொடுப்பதின் மூலமும், காயப்படுத்துவதின் மூலமும், இந்த யூதாசின் சுயநலத்தின் ஆவியானது இன்றும்கூடக் கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு வழிநடத்துகின்றது என்பது உறுதியே. யூதாசினுடைய ஆவிக்குப் பிரதிநிதிகளாகக் காணப்படுகிறவர்கள் முத்தம் கொடுத்துக் காட்டிக் கொடுக்கத்தக்கதான யூதாசின் வழிமுறையைப் பின்பற்றுவார்கள் என்ற விஷயத்தைக்குறித்து நாம் அதிர்ச்சியடைய வேண்டாம். அதாவது, யூதாசின் ஆவியுடையவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்கள் மீது தங்களுக்கு மிகுந்த அன்பும், மதிப்பும், மரியாதையும் இருக்கும் என்று கூறுவார்கள். ஆனால் அதேசமயம் தங்களுடைய தனிப்பட்ட ஆதாயங்களுக்காக அல்லது முக்கிய ஸ்தானம் பெற்றுக்கொள்வதற்கோ, செல்வாக்குப் பெற்றுக்கொள்வதற்கோ, வேறெந்த சுயநலமான ஆதாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கெனக் கிறிஸ்துவின் அங்கங்களை மறைமுகமாக/இரகசியமாகத் தாக்குகிறவர்களாக இருப்பார்கள். கர்த்தருடைய பின்னடியார்களாகிய ஒவ்வொருவரும், "ஆண்டவரே நானோ" என்று யூதாஸ் கேட்ட அதே

வார்த்தைகள் அடங்கின கேள்வியைத் தங்களிடமே கேட்டுக்கொள்வார்களாக. புதுச் சிருஷ்டிகளாகிய நம்மை அழித்துப்போடுவதற்கும், நம்மைக் கண்ணியில் சிக்க வைப்பதற்கென ஏற்றச்சமயத்தைப் பதுங்கியிருந்து நாடுகின்றதான, இந்த யூதாசின் ஆவி நம்மிடத்தில் எவ்விதத்திலாகிலும் ஒளிந்துகொண்டிருக்கின்றதா என நம்மில் ஒவ்வொருவரும் நம்முடைய இருதயங்களை ஆராய்வோமாக.

*****

# அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும்

## மத்தேயு 26:57-68

"அவர் அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாய் இருந்தார்" என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதியுள்ளார்" (ஏசாயா 53:3). கர்த்தரைப் பற்றின அறிவிற்கு வந்தவர்களுக்கும், தெய்வீக வார்த்தையின்படியான கண்ணோட்டத்தின் படி மனிதனைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வந்தவர்களுக்கும், கர்த்தரின் மரணம் தொடர்பான அனைத்துச் சம்பவங்களும் எவ்வளவு விநோதமாகத் தோன்றியிருக்கும். இப்பொழுது நாம் அச்சம்பவங்களைப் பார்க்கப்போகிறோம். அதாவது, நாமும் அச்சூழ்நிலைகளில் காணப்பட்டு, அவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பது போன்று அச்சம்பவங்களை நாம் பின் தொடரப்போகின்றோம். இன்னுமாக நம்முடைய கர்த்தரைச் சூழ்ந்து காணப்பட்ட பிரதான பாத்திரங்களினால் உண்மையான சூழ்நிலை/நிலைமை என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுக்குக் கடினமாக இருந்தது என்றும் நாம் உணர்ந்து கொள்கின்றோம். மேலும், இவர்களிடமிருந்து தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் பக்கமாக நாம் திரும்பிப் பார்க்கும்போது, சில படிப்பினைகளை நாம் எடுத்துக் கொள்ளலாம் மற்றும் தற்போதைய அறுவடை காலம் தொடர்புடைய மாபெரும் மற்றும் முக்கியமான விஷயங்களுடன் நாமும் தொடர்புடையவர்களாய் இருக்கின்றோம் என்றும், உண்மையான நிலை என்ன என்று நம்மால் புரிந்துகொள்ள முடியாததாய் இருக்கும் மாபெரும் நிகழ்வுகளின் அருகாமையில் காணப்படுகின்றோம் என்றும், நாம் மிகவும் கவனமாய் இருந்து சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நாம் ஜெபத்துடனும், விழிப்புடனும் இருக்க வேண்டும் என்றும் உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய நிலையற்ற/இடறல்கள் நிறைந்த நிலையைப் பார்க்கையில், இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிறவர்களுடைய கண்டனத்திற்குரிய நடவடிக்கைகள் மீது நமக்கு அனுதாபமே ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இயேசுவும், சீஷர்களும் கெத்செமனே தோட்டத்தின் வாசலண்டைக்கு வந்தார்கள். இரண்டு பட்டயங்களில் ஒன்றை வைத்திருந்த பேதுரு, தனது ஆண்டவரைப் பாதுகாக்கும்படிக்கு அதனை பயன்படுத்த ஆரம்பித்தார். முதல் வெட்டாக பிரதான ஆசாரியனுடைய அரண்மனை ஊழியர்களில் ஒருவனாகிய மல்குஸ் என்பவனின் காதை வெட்டினார். இயேசு அவர்களிடம் பட்டயம் எடுத்துக்கொள்ளும்படி சொன்னபோது, அவர்களிடத்தில் இரண்டு பட்டயம் ஏற்கெனவே உள்ளது என அவர்கள் பதிலை அளித்தபோது, "இது போதும்" என்று இயேசு கூறினார். பட்டயம் வைத்திருக்கின்றோம் என்ற அவர்களுடைய பதிலானது, சீஷர்கள் கர்த்தரைப் பாதுகாப்பதற்கு எனப் போராட விருப்பத்துடன் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தினது. இவ்வெளிப்படுத்தல், போதுமானதாய் இருந்தது. "பட்டயத்தை உறையிலே போடு" என்ற ஆணை உடனடியாக இயேசுவினிடமிருந்து வந்தது. காது வெட்டப்பட்டதன் மூலமாக வந்த வாய்ப்பை, இயேசு காதை சொஸ்தப்படுத்தி தம்முடைய சத்துருக்களுக்குத் தமது இரக்கத்துடன் கூடிய பெருந்தன்மையை வெளிக்காட்டுவதற்குப் பயன்படுத்தினார். பட்டயத்தை எடுக்கின்றவன் பட்டயத்தினால் மடிவான் என்பதிலுள்ள படிப்பினையைச் சீஷர்கள் முழுமையாகக் கற்றுக் கொண்டார்கள். ஆகவேதான், பிற்பாடு எங்கும் அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் வன்முறையைக் கையாண்டதாகப் பதிவு செய்யப்படவில்லை. கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களும் இப்படிப்பினையைக் கற்றுக்கொண்டு, செயல்முறைப்படுத்தினால் எவ்வளவு நலமாயிருக்கும்.இப்படிப்பினையைச் சில பின்னடியார்கள் புறக்கணித்த காரியமானது, கர்த்தருடைய போதனைகளுக்கு அவமரியாதை உண்டுபண்ணும் விதத்திலும், அவருடைய உண்மையான நோக்கத்திற்குப் பாதிப்பு உண்டுபண்ணும் விதத்திலும், ஆனால் பெயர்க் கிறிஸ்தவ மண்டலம் மற்றும் அதன் திரளான களைகளுக்கு அனுகூலம் உண்டுபண்ணும் விதத்திலும் வரலாற்றின் பக்கங்களைக் களங்கப்படுத்தியுள்ளது. கர்த்தருடைய அனைத்து ஜனங்களும் இப்படிப்பினையைத் தங்கள் இருதயத்திற்குள் கொண்டு செல்கிறவர்களாகக் காணப்பட்டு, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் (மத்தேயு 5:9) . நமது போதகரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் ஒருபோதும் பட்டயத்தையும், பூமிக்குரிய வல்லமைகளையும்

பயன்படுத்துகின்றவர்களாய் இருக்கக்கூடாது. கர்த்தரிடத்தில் போதுமான வல்லமை உள்ளது. மேலும், வல்லமை செயல்படுத்துவதற்கான வேளை வரும்போது, அவரே இந்த மாபெரும் வல்லமையைத் தமது கரத்தில் எடுத்துக் கொள்வார். மேலும், நீதியின் பட்டயம் உறையிலிருந்து எடுக்கப்பட்டுப் பயங்கரமான உபத்திரவக்காலத்தை உண்டுபண்ணும். ஆனால், இவைகளெல்லாம் அதற்குரிய ஏற்றக்காலத்தில் நடைப்பெறும். மேலும், பூமியின் விஷயங்கள் மீதான பொறுப்பைக் கர்த்தர் எடுத்துக்கொள்வார். மேலும், இந்த அனுபவங்கள் வாயிலாக உண்டாகும் படிப்பினைகள் ஜனங்களுக்குப் பாதிப்பை உண்டுபண்ணுகிறதாய் இராமல், நன்மையாகவே காணப்படும். கர்த்தருடைய ஜனங்கள் இப்பொழுது பயன்படுத்த வேண்டிய ஒரே பட்டயம் ஆவியின் பட்டயமாகும். அதாவது, தேவனுடைய வார்த்தையாகிய பட்டயமேயாகும். மேலும், வார்த்தையின் அழுத்தத்தினாலோ அல்லது கடுஞ்சொல்லினாலோ அல்லாமல் அல்லது தேவனுடைய வார்த்தையாகிய பட்டயத்தைப் பயன்படுத்தும் நபரின் கோப வெளிப்படுத்தல்களினாலுமல்லாமல், இப்பட்டயம் அதற்குரிய கூர்மையினாலும், ஊடுருவும் வலிமையினாலும் செயல்படுவதற்கு நாம் விட்டுவிட வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். இப்பட்டயத்தைப் பயன்படுத்துபவர்கள் அன்பில் சத்தியத்தைச் சொல்ல வேண்டும் என்று வழி காட்டப்படுகின்றனர். இவ்விதமாய் அன்பில் சொல்லப்படும்போது, சத்தியத்தினால் அதன் வேலையை அதற்குரிய வழியில் செய்ய முடியும்.

## எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்

கர்த்தர் கைது செய்யப்பட்ட போது, சீஷர்கள் அனைவரும் அவரைத் தனியே விட்டு ஓடிப்போன காரியத்தை நாம் பார்க்கும்போது, சீஷர்கள் மிகவும் கோழைத்தனமாக நடந்து கொண்டதுபோன்று தோன்றலாம். ஆனால், அவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தையின்படியே போனார்கள் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். "என்னை தேடுகிறதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள்" என்று கர்த்தர்தான் அதிகாரிகளிடம் கூறினார் (யோவான் 18:8). தேசத்தின் சட்டத்திற்கும், அரசியல் நீதிமன்றத்திற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதான ஆசாரியனின் கரங்களில் கர்த்தர் சிக்கின பிற்பாடு, சீஷர்கள் தங்களைக் கொண்டு கர்த்தருக்கு எவ்விதமான பிரயோஜனமில்லை என்றும், இந்தப் பிரதான ஆசாரியர்கள் இயேசுவுக்கு எதிராக கெடுதல் விளைவிக்கக்கூடியவர்கள் என்றும் சீஷர்கள் உணர்ந்திருந்தனர். "இவர்களைப் போகவிடுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளைச் சீஷர்கள் கர்த்தரிடமிருந்து வந்த கட்டளை என்றுகூட எடுத்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் குழம்பிப் போயிருந்தார்கள். அவர்கள் இயேசுவோடு ஒட்டிக்கொண்டிருந்தபோது, வித்தியாசமானக் காரியங்களையே அவரிடத்தில் எதிர்ப்பார்த்தவர்களாக இருந்தார்கள். அவர் (இராஜாவாக) உயர்த்தப்படுவார் என அவர்கள் எதிர்ப்பார்த்த நிலையிருந்தபோது, அவரோ தாம் சிலுவையில் அறையப்படுவதைக்குறித்தும் பேசிக்கொண்டிருந்தார், துக்கத்துடன் இருந்தார், வேதனையுடன் இருந்தார். இப்பொழுதோ, அவர் கைதும் செய்யப்பட்டுவிட்டார். அனைத்தும் குழப்பமாகவும், சோர்வை உண்டாக்குவதாகவும் சம்பவித்தது. மேலும், முற்றிலும் ஏமாற்றம் அடைந்தவர்களாக அவர்கள் அநேகமாக தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருக்க வேண்டும். பேதுருவும், யோவானும் மாத்திரம் தொலை தூரத்தில் அவரைப் பின்தொடர்ந்து போனார்கள். பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்கும், முற்றத்திற்கும் அவர்கள் வந்த பிறகு இயேசு முதலாவதாக வயதில் மூத்தவராகக் காணப்பட்ட ஆசாரியனாகிய அன்னாவுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். சிறிது நேரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பின்னர் இவருடைய மருமகனும், அதிகாரப்பூர்வமான ஆசாரியனாகவும் காணப்பட்டவராகிய காய்பாவினுடைய வீட்டு முற்றத்திற்கு இயேசு அனுப்பி வைக்கப்பட்டார். இயேசு அன்னாவுக்கு முன்பு கொண்டு போகப்பட்ட காரியமானது, அன்னாவுக்கு மரியாதையளிக்கும் விதத்தில் மாத்திரமே செய்யப்பட்டது. மற்றபடி காய்பாதான் இயேசு கைது செய்யப்படுவதற்குரிய காரணமாக இருந்தார். மேலும் இந்தக் காய்பா, யூதர்களுடைய மூப்பர்களில் சிலருடன் இயேசுவுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரலாம் என்ற விதத்தில், அவருடைய விசாரணைக்கான ஆயத்தமாக அவரை விசாரிக்கும்படிக்குக் காத்துக்கொண்டிருந்தார். (பிரமாணத்தின்படி அவரைக் காலையிலேயே விசாரணை செய்யலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆகவே, சட்டத்திற்கு எதிராக இரவில் நிகழ்த்தப்பட்ட இந்த விசாரணையே அவர்கள் செய்த உண்மையான விசாரணையாகும். பிலாத்து இயேசுவை 'விசாரணை செய்து', அவருக்கு மரணத்தண்டனை அளித்துவிட வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தாலும், அவர்கள் பிலாத்துவினிடத்தில் தாங்கள் இயேசுவை சட்டப்பூர்வமாக குற்றவாளியென்று தீர்த்துள்ளதாக கூறினார்கள்).

# பொய்ச் சாட்சிகளைத் தேடுதல்

இயேசுவைக் குறித்தும், அவருடைய போதனைகள் குறித்தும், அவருடைய வல்லமையான கிரியைகள் குறித்தும் பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இயேசுவின் கடைசி அற்புதங்களில் ஒன்றாகிய லாசருவை மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பண்ணின சம்பவமானது, எருசலேமுக்குள் சம்பவித்தப்படியினால், இவ்விஷயம் வேதபாரகர் மற்றும் பரிசேயரின் ஆவேசத்தைக் கிளப்பிவிட்டது. ஆகவே, இயேசுவைக் கொன்றுபோட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்திற்குள் வந்தார்கள். ஏனெனில், இப்படிப்பட்ட அற்புதங்களை இன்னும் கொஞ்சம் இயேசு பண்ணினால் ஜனங்கள் முற்றும் முழுமையாக அவர் பக்கம் போய்விடுவார்கள் என்றும், ஜனங்கள் மீதான தங்கள் ஆதிக்கம் தகர்ந்துபோய்விடும் என்றும் அஞ்சினார்கள். இப்பொழுது இயேசு அவர்கள் கைகளுக்கு அகப்பட்டுவிட்டார். ஜனங்களுக்குத் தெரியாமலும், எவ்விதமான தொந்தரவுகள் கிளறிவிடப்படாமலும் இயேசுவைக் கைது செய்துவிட்டனர். அவரைக் கொன்றுபோட்டுவிட வேண்டும் என்ற கொலைப்பாதக எண்ணம் இன்னமும் அவர்களிடத்தில் காணப்பட்டது. அவரை எப்படிக் கொன்று போடலாம் என்ற கேள்விதான் அவர்களிடம் எழும்பினதேயொழிய, நீதியின்படி எப்படிச் சேவை புரியலாம் என்ற கேள்வி அவர்களுக்குள் காணப்படவில்லை. இன்னுமாக, நீதி மற்றும் நியாயப்பிரமாணத்திற்குப் பிரதிநிதிகளாக இருக்கும் அவர்கள், நீதியின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போவது போன்று எப்படிக் காண்பிக்க வேண்டும் என்றும், அதேசமயத்தில் தங்களுடைய இருதயங்களில் காணப்படும் கொலைப்பாதகத்தை எப்படி நிறைவேற்றுவது என்றும்தான் அவர்களுக்குள் கேள்வி காணப்பட்டது. ஆகவேதான், அவர்கள் பொய்ச் சாட்சிகளைத் தேடினார்கள் என்று வாசிக்கின்றோம். போதகரைப் பற்றி அறிந்தவைகளைக் கூறும் உண்மை சாட்சிகளை அவர்கள் தேட விரும்பவில்லை. மாறாக அறியாமையினாலோ, போதகரைத் தவறாகப் புரிந்து கொண்டதினாலோ அல்லது பிரதான ஆசாரியர்களின் ஆதரவை/தயவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பி திட்டவட்டமாக கர்த்தரையும், அவருடைய போதனைகள் முதலானவைகளையும் தவறாய்ப் பேசுகின்ற பொய்ச் சாட்சிகளையே அவர்கள் தேடினார்கள். ஆனால், அவர்களால் ஒருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பிரதான அதிகாரிகள் தவிர மற்றபடி அவ்வதிகாரிகள் தொடர்புடைய எவரும் நமது கர்த்தருடைய போதனைகளைத் தவறாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்பதும், கர்த்தருடைய போதனைகளைத் தவறாய்ச் சாட்சி பகரவும் விரும்பவில்லை என்பதும் பாராட்டத்தகுந்த விஷயமாகும். இறுதியாக, ஒருவேளை ஆலயம் அழிக்கப்பட்டால் அதனை தம்மால் மூன்று நாளுக்குள் எழுப்பிவிட முடியும் என்று இயேசு கூறினதைக் கேட்டோம் என்று சொல்லிய இரண்டு சாட்சிகளைக் கண்டுபிடித்தனர். இது தவறான சாட்சியல்ல, இயேசு பேசின வார்த்தைகளை இந்தச் சாட்சிகள் புரிந்துகொண்ட அர்த்தத்தில்தான் பிரச்சனை; கேட்டவர்களிலும் பெரும்பாலானோர் இப்படியாகவேதான் எடுத்துக்கொண்டிருந்தார்கள். பிற்பாடு பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தினால் இயேசு இங்குத் தமது சரீரத்தைத்தான் ஆலயமாகக் குறிப்பிட்டார் என்று அப்போஸ்தலர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகவே, அறியாமையின் காரணமாக இந்த இரண்டு சாட்சிகள் தாங்கள் இயேசுவுக்கு எதிராக சாட்சிக் கூறினோம் என்றும், தாங்கள் இயேசுவுக்குக் களங்கம் ஏற்படுத்தும் சாட்சியைக் கூறிவிட்டோம் என்றும், இயேசுவினிடத்தில் தற்பெருமை அடித்துக்கொள்ளும் ஆவியும், ஆலயத்தின் மகத்துவத்தையும், மேன்மையையும் அலட்சியப்படுத்தும் தன்மையும் வெளிப்பட்டதற்கானச் சாட்சியைக் கூறுகின்றோம் என்றும் இவர்கள் எண்ணிக் கொண்டாலும், இந்த இரண்டு சாட்சிகளும் பொய்ச் சாட்சிகள் என்று குற்றம் சாட்டப்பட முடியாது. கர்த்தருக்கு எதிராக ஏதாகிலும் சாட்சியைக் கொண்டுவரலாம் என்ற தன்னுடைய எடுத்த பிரயாசம் தோல்வியடைந்து விட்டது என்று பிரதான ஆசாரியன் உணர்ந்துகொண்டான். ஆனாலும், தன்னுடைய இந்தத் தோல்வியை அங்கிருந்த ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்பவில்லை. ஆகவே, இச்சாட்சி மிகவும் இன்னலுக்குரிய சாட்சியாக தனக்குத் தோன்றியதுபோல் காட்டிக்கொண்டு, அநியாயத்தைக் காண்பதினால் உண்டாகும் கோபம் தனக்கும் எழும்பியதுபோன்று இயேசுவை நோக்கி, அவருடைய செவிகளில் இந்தச் சாட்சி விழுந்ததா இல்லையா? என்றும், இச்சாட்சி தவறென நிரூபிக்க அவரிடம் சான்று ஏதேனும் உள்ளதா? அதாவது, சாட்சியை அவரால் தவறு என்று நிரூபித்துக் காட்டமுடியவில்லையோ? என்று கேட்டார். இயேசு ஒன்றும் பேசவில்லை. இரண்டு சாட்சிகளும் அவ்வார்த்தைகளை மீண்டும் மீண்டுமாகக் கூறிக்கொண்டிருந்தாலும்கூட, எந்தப் பிரமாணமும் அவரைக் குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக, அவ்வார்த்தைகளில் ஒன்றும் இருக்கவில்லை.

## "நீர் கிறிஸ்துவா?"

ஆலயம் தொடர்பான கேள்வியில் இயேசுவை விவாதம் பண்ண வைத்து, அப்படியாக அவர் பேசும் வார்த்தைகளில் எதையாகிலும் குற்றம் என்று தீர்த்துவிடலாம் என்று முயற்சித்தப்போது, இயேசுவை விவாதம் பண்ணும் நிலையில் கொண்டுவர முடியாமற் போனதால் குற்றம் சாட்டத்தக்கதான வார்த்தைகள் அடங்கிய பதிலை இயேசு வழங்கத்தக்கதாக ஒரு முன்னணி வகுக்கும் கேள்வியை மிகுந்த பயபக்தியுடன் இயேசுவிடம் கேட்க வேண்டும் என்று பிரதான ஆசாரியன் தனக்குள்ளாகவே எண்ணிக் கொண்டான். "நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவோ (மேசியாவோ)" என்பதை எங்களுக்குச் சொல்லும் என்பதே இயேசுவின் முன்பு வைக்கப்பட்ட கேள்வியாகும். இயேசு, தாம் மேசியா என்று தற்பெருமை அடித்துக் கொண்டிருக்கவில்லை என்றும், அமைதியுடன் தம் வேலையைச் செய்துகொண்டு கடந்துபோய்க் கொண்டிருந்தார் என்றும், நன்மை செய்தும், ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டும் இருந்தார் என்றும், "இம்மனுஷன் பேசினதுபோல் வேறு எவரும் பேசினதில்லையே" என்று சாட்சி பெறத்தக்கதாக இவருடைய கிரியைகள் காணப்பட்டது என்றும், இயேசு தம்மை அனுப்பினவருடைய வேலையைச் செய்து கொண்டிருக்கின்றார் என்றும், ஆகவே இவர் மேசியா என்றும் காய்பாவுக்கு அநேகமாகத் தெரிந்திருக்க வேண்டும். இயேசு, தாம்தான் மேசியா என்று ஒப்புக்கொள்வதன் மூலம் தம்மைத்தாமே குற்றவாளியாக இங்கு ஆக்கிக்கொள்வாரா அல்லது இல்லையா என்பதே கேள்வியாக இருந்தது. ஒருவேளை, தாம்தான் மேசியா என்பதை ஒப்புக்கொள்ள இயேசு மறுத்திருப்பாரானால், அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக் கண்டுபிடிக்க வேறு எந்த வழிதான் காணப்பட்டிருக்கும்? ஆனால், இயேசு இக்கேள்விக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவர் ஒருவேளை அமைதியாக நின்றிருந்திருப்பாரானால் அது அவர் தாம் மேசியா இல்லையென்று மறுதலிப்பதற்கும், சத்தியத்தை மறுதலிப்பதற்கும், அத்தேசத்தின் பிரதான ஆசாரியனுக்கு அறிவையும், அச்சம்பவம் தொடர்பான பொறுப்பையும் வெளிப்படுத்த மறுதலிப்பதற்கும் சமமாகிவிடும். ஆசாரியன் அத்தேசத்திற்கு/ஜனங்களுக்குத் தலைவனாக இருக்கின்றபடியினால், இயேசு மேசியா என்று அவர் அறிந்துகொள்வது எல்லாவிதத்திலும் அவருக்கு அவசியமே. ஆகவே நமது கர்த்தர், "நீர் சொன்னபடியே" என்று பதிலளித்தார். அதாவது, நீர் சொன்னது உண்மை என்று நான் ஒப்புக்கொள்கின்றேன் அல்லது நான் தேவனுடைய குமாரனாகிய மேசியாதான், இன்னுமாக மனுஷக்குமாரன் வல்லமையின் வலது பக்கத்தில் அமர்ந்தவராக மகிமையோடு வானத்தில் வருவதை நீங்கள் இனிமேல் காண்பீர்கள் என்ற விஷயத்தையும் நான் உனக்கு உறுதியளிக்கின்றேன் என்ற விதத்தில் பதிலளித்தார்.

மற்ற இடங்களில் பேசினதுபோல இங்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகள் சுருக்கமாகவே உள்ளது. இச்சமயத்தில் அதிலும் இப்படிப்பட்ட சூழ்நிலையின் போது, அங்கிருந்த ஜனங்களிடம் எதிர்க்காலத்திற்குரிய தெய்வீகத் திட்டத்தை விவரித்துக்கூறுவது, கர்த்தருடைய நோக்கமாகவும் இருக்கவில்லை. மேலும், அப்படிக் கூறுவதும் சரியாக இருந்திருக்காது. "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14). ஆகவே, நமது கர்த்தர் இப்படியாகக் கூறவில்லை: "என்னை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்போகிறீர்கள், இந்த நாளில் நான் இரண்டு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்படுவேன். நான் மூன்றாம் நாளில் உயிரோடு மீண்டுமாக எழுந்திருப்பேன். அதற்குப் பிற்பாடு நாற்பது நாட்கள் கழிந்த பின்னர் நான் பிதாவினிடத்திற்கு ஏறிப்போவேன். பின்னர் என்னுடைய பரிசுத்த ஆவியை நான் பெந்தெகொஸ்தே நாள் அன்று அனுப்புவேன். ஆவிக்குரிய இராஜ்யத்திற்குரிய வேலைகள் ஆரம்பமாகும். முழு உலகிலும் சபை ஜனங்கள் தெரிந்தெடுக்கப்படும் வேலை நடைபெறும். சபையின் எண்ணிக்கையிலுள்ள அங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், நான் வல்லமையிலும், மகா மகிமையிலும் மீண்டும் இரண்டாம் வருகையில் வருவேன். அப்போது உங்களால் நான் விசாரிக்கப்படுகிறவராக வராமல், உங்களுக்கு நீதிபதியாகவும், முழு உலகத்திற்கு இராஜாவாகவும், அதிகாரியாகவும், முழு அறிவு மற்றும் முழு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அடங்கிய ஆயிரம் வருஷம் அரசாட்சியின் ஆசீர்வாதங்களை ஒவ்வொரு சிருஷ்டிகளுக்கும் அருளத்தக்கதாகவும் நான் வருவேன்." இயேசு எதிர்கால தெய்வீகத் திட்டத்தை விவரித்திருக்க வேண்டுமானால் இப்படித்தான் விவரித்திருக்க வேண்டும். ஆனால், இப்படியாக அவர் கூறவில்லை. நமது கர்த்தருக்கே இவ்விஷயங்கள் அனைத்தும் தெரியும். ஆனாலும், இவைகளைச் சொல்வதற்கு அன்று ஏற்றவேளையாக இருக்கவில்லை என்பதை நம்மால் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வுண்மைகள் தொடர்பான எத்தனை படிப்பினைகள் இங்கு நமக்குக் காணப்படுகின்றது. நாம் ஏதாகிலும் ஒரு காரியத்தைக் குறித்துத் தகவல்கள் தேடிக்கொண்டிருந்தால் அவ்விஷயத்தில் நாம் முற்றிலும் நேர்மையுடனும், முற்றிலும் நியாயத்துடனும் இருக்க வேண்டும்; இன்னுமாக, ஒன்றை/ஒருவரை தவறாய்க் காட்டுவதன் மூலம் எவ்வளவுதான் நன்மைகள் உண்டாகும் என்று நமக்குத் தோன்றினாலும் ஒன்றையும்/ஒருவரையும் தவறாகக் காட்டுவதற்கான வாய்ப்புகளை நாம் தேடக்கூடாது. கர்த்தருடைய ஜனங்களாக இருக்கும் அனைவரிடமும் நியாயம் எனும் விஷயம் மேலோங்கிக் காணப்பட வேண்டும். நீதியும், நியாயமும் தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாய்க் காணப்படுகின்றது என நாம் வாசிக்கிறதுபோலவே, கர்த்தருக்கு உரியவர்கள், அதாவது இக்காலக்கட்டத்தில் ஜெயம் கொண்டவர்களாக வரவேண்டுமென எதிர்பார்ப்பவர்களுடைய அனைத்துக் குணலட்சணங்களுக்கு அஸ்திபாரமாக நீதி நியாயம் காணப்பட வேண்டும். நேர்மையுடனும், நியாயத்துடனும் காணப்படுகின்றவர்கள் மாத்திரமே, தற்காலத்தில் கர்த்தருடைய வார்த்தைகளில் வெளிப்படும் செய்தியினால் தாக்கம் பெற்றவர்களாய் இருக்க முடியும். மேலும், யாரெல்லாம் தங்களுடைய நேர்மை, உண்மையை இழந்துவிட்டார்களோ, அவர்கள் சத்தியத்தை இழந்துபோவதும் நிச்சயமே. தேவன் விஷயத்திலும், நம் விஷயத்திலும், நம் நண்பர்கள் விஷயத்திலும், நம் சத்துருக்கள் விஷயத்திலும் நியாயத்தோடு நாம் நடந்துகொள்ள வேண்டிய விஷயத்தில் அஜாக்கிரதை ஏற்படாதவாறு கவனமாய் இருக்கக்கடவோம். நாம் அனைவரிடமும் சராசரியான நியாயத்திற்கும் மேலாகவே செய்பவர்களாகவும், செய்ய வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டியிருந்தாலும், சராசரியான நியாயத்திற்கும் கீழாக நாம் செய்பவர்களாக இருக்கக்கூடாது, இருக்கவும் முடியாது. ஆம், நாம் அன்புடனும், தாராள மனப்பான்மையுடனுமே காணப்பட வேண்டும்.

## அநீதியான காரியத்தைக் கண்டதினிமித்தம் நீதியான கோபம் உண்டானதுபோன்று நடிப்பு

இயேசு தம்மை மேசியா என்று கூறினதைக் கேட்ட பிரதான ஆசாரியன், இதுவே இயேசுவுக்கு எதிராக தீமையான தோற்றம் கொண்டதுபோன்று காணப்படும் பலமான, அதேசமயம் உண்மையைச் சொல்லப்போனால் ஒரே குற்றச்சாட்டாய் இருக்கப்போகின்றது என்று உணர்ந்துகொண்டார். இயேசுவின் வார்த்தைகளில் தீமையில்லை. ஏனெனில், அவர் கூறினது உண்மையாக இருந்தது. ஆனால், மகா பயபக்தியுடன் இருப்பதுபோன்ற நடிப்புடனும், தேவன் மீது மிகுந்த மரியாதை இருப்பதுபோன்ற நடிப்புடனும், மேசியா குறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு மிகுந்த பயபக்தி கொண்டிருப்பதுபோன்ற நடிப்புடனும், இயேசு கூறின இப்படிப்பட்ட வார்த்தைகளினிமித்தம் இடியே விழுந்துவிட்டது போன்ற திகைப்பு ஏற்பட்டுவிட்டதுபோன்ற நடிப்புடனும் காய்பா எழுந்து நின்றார். இப்படிப்பட்ட வார்த்தைகளினிமித்தம் எரிச்சலும் கோபமும் தனக்கு மூண்டுவிட்டது என்ற முழு நடிப்புடன் முகத்தை வைத்துக்கொண்டு இயேசுவின் இப்படிப்பட்ட வார்த்தைகள் தேவனுக்கு அவமரியாதையை உண்டுபண்ணினபடியால், இயேசு தேவதூஷணம் பேசிவிட்டதாக, தான் கண்டுபிடித்துவிட்டது போன்றும், அதினால் தனக்குக் கோபம் மூண்டுவிட்டது போன்றும், தன்னுடைய நாடகமாகிய நீதியின் கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக தனது வஸ்திரத்தைக் கிழித்தார். பின்னர், ஜனங்களை நோக்கி, "இது தேவதூஷணம் . . . . . இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது?" இப்படிப்பட்ட மோசமான குற்றத்திற்கு எது சரியான தண்டனையாக இருக்கும்? இவரைப்போல் வந்து தங்களைத் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று அறிவித்து, ஜனங்களை சொஸ்தப்படுத்தி, மரித்தோரை உயிரோடு எழுப்பியும், ஜனங்களிடமிருந்து பிசாசுகளைத் துரத்தியும், தங்களது வல்லமையை வெளிப்படுத்தின மற்றவர்களை நாம் எப்படி இதற்கு முன்னதாக தடுத்து நிறுத்தினோம்? என்று உரக்கக் கத்தினார். இயேசுவைக் கொன்றுபோட வேண்டும் என்ற நோக்கத்தில் அங்குக் கூடியிருந்த மூப்பர்கள், "இவன் மரணத்துக்குப் பாத்திரனாய் இருக்கிறான்" என்று பதிலளித்து, தங்கள் வாக்குகளை அளித்தார்கள். இயேசு காத்திருக்க வேண்டியிருந்தது. இதற்கிடையில் அவரைத் திட்டித்தீர்த்தார்கள். மூப்பர்களும், அதிகாரிகளும் இயேசுவை இப்படியெல்லாம் செய்யவில்லையென்றாலும், அவர்களுடைய சம்மதத்தின் பேரிலும், அனுமதியின் பேரிலும் சிலர் கர்த்தரை அடித்தார்கள், அவர் மேல் துப்பினார்கள், அவருடைய கண்களைக் கட்டி யார் அவரைக் குட்டித் துன்புறுத்துகின்றார்கள் என்பதை அவர் சொல்லி, தாம் ஒரு மேசியா என்றும், தீர்க்கதரிசி என்றும் நிரூபித்துக் காட்டும்படிக்கு அவரிடம் கூறினார்கள். மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைக் காத்துக்கொள்ளும்படிக்குப் பேசவுமில்லை, அல்லது தமக்குள் காணப்படும் வல்லமையைப் பயன்படுத்தவுமில்லை, அல்லது தம்மை விடுதலை பண்ணும்படிக்குப் பன்னிரண்டு லேகியோன்கள்

ஆயத்தமாக இருப்பார்கள் என்று அவர் ஏற்கெனவே கூறியிருந்த லேகியோன்களையும் அவர் அழைக்கவில்லை. மாறாக, தம்முடைய பலியின் உடன்படிக்கையையே நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக உணர்ந்து கொண்டு தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டார். மேலும், பிதாவின் சித்தம் இதுவாகவோ, அல்லது வேறு எதுவாகவோ இருந்தாலும் சரி, அது தம்மில் நிறைவேற வேண்டும் என்றே விரும்பினவராகக் காணப்பட்டார்.

இதில் நமக்குள்ள படிப்பினை என்ன? அவரைக் குறித்துக் கற்றுக்கொள்வதற்கும், அவருடைய மாதிரியைப் பின்பற்றுவதற்கும் நாம் உடன்படிக்கை பண்ணியுள்ளோம். அப்படியானால், அடிகளையும், சோதனைகளையும், "பாவிகளினால் உண்டான விபரீதங்களையும்" நாம் எப்படி ஏற்றுக்கொள்கின்றோம்? நாமும் அவரைப்போலவே பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் காணப்படுகின்றோமா? பிதாவுக்குத் தெரியாமல் எதுவும் நமக்கு நடக்காது; அதாவது, நம்முடைய நன்மைக்கு ஏதுவல்லாத எதையும் அவர் அனுமதிக்க விரும்பமாட்டார் என்றும், அவரால் அனுமதிக்க முடியாது என்றும் உணர்ந்து கொண்ட நிலையில் இவைகளையெல்லாம் நாம் சகித்து முன்னேறுகின்றோமா? தீமையான அனுபவங்கள் பெறுவதற்கு ஏதுவான நிலையில் (தவறு செய்த நிலையில்) நாம் காணப்படுவோமேயானால், அதையும் நாம் பொறுமையோடு சகிக்க வேண்டுமென்று நாம் சொல்வது சரியல்ல. ஏனெனில் இயேசுவின் விஷயத்தில், "இவரோ, தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவர் அருகே இருந்த கள்வர்களில் ஒருவன் சாட்சிக் கொடுப்பதை நாம் நினைவு கூருகின்றோம். நம்மைத் துன்பப்படுத்துபவர்கள் விஷயத்திலும், நம்மை வெறுக்கிறவர்கள் விஷயத்திலும், நம்முடைய நோக்கங்கள் நல்லவைகளாக இருந்தாலும், நாம் பெற்றுக்கொண்ட தீமைக்குச் சில விதங்களில் நாம் நன்மையையே அவர்களுக்குச் செய்திருந்தாலும், இப்படிப்பட்டவர்களுடனான நம்முடைய எல்லா நடவடிக்கைகளிலும் நாம் மிக நேர்த்தியாக இருந்துள்ளோம் என்று நம்மால் சொல்லமுடியாது. "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:20-23).

அடிகளையும், நிந்தனைகளையும் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் நம்மால் முடிந்தமட்டும் நம்முடைய தவறுகளினிமித்தம், அவைகளைப் பெற்றுக்கொள்ளாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்வதோடுமட்டுமல்லாமல், இவ்வனுபவங்கள் வருகையில் அவைகளைப் பொறுமையுடனும், முறுமுறுப்பில்லாமலும் ஏற்றுக்கொள்வோமாக. மேலும், இவ்விதமாக நமது கர்த்தருடைய சாயலுக்கு ஒத்த குணலட்சணத்தில் அதிகமாய் வளர்ந்து, அக்குணங்களை வெளிப்படுத்துகின்றவர்களாகவும் இருப்போமாக. இப்படியாக செய்பவர்களுக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் இறுதியில் அவர்களுக்கு ஆசீர்வாதமாய் முடியும் என்ற நிச்சயித்தைக் கர்த்தர் அருளுகின்றார். ஆனால், இப்படிச் செய்யாமல், தங்கள் உரிமைகளுக்காக யுத்தம் பண்ணுகிறவர்களாகவும் இருப்பவர்கள், தாங்கள் சிலுவையைச் சுமந்துவருவோம் என்று தாங்கள் பண்ணியுள்ள உடன்படிக்கையின் தன்மையை ஒன்றில் புரிந்துகொள்ள முடியாதவர்களாய்க் காணப்படுகின்றார்கள் இல்லையேல், உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக இவர்களுக்கு விருப்பமில்லை என்பது வெளியாகுகின்றது.

*****

# எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர்

## லூக்கா 23:13-25

***"இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை என்றார் பிலாத்து." லூக்கா 23:14***

"இருள் ஒளியைப் பகைக்கின்றது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, அவருடைய விஷயத்திலும் சரி, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அவரது அடிச்சுவட்டைப் பின்தொடரும் பின்னடியார்களின் விஷயத்திலும் சரி உண்மையென நிரூபணமாகியுள்ளது. இவ்வார்த்தைகளுக்கான உதாரணமாக, நமது கர்த்தர் பிலாத்து மற்றும் ஏரோதின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்பட்டு மற்றும் பல்வேறு விதத்தில் கொடுமைப்படுத்தப்பட்டச் சம்பவங்கள் தொடர்புடைய அனைத்தையும் இப்பாடத்தில் நாம் காணலாம் மற்றும் இதே காரியங்களை அவரது உண்மையான பின்னடியார்களின் விஷயத்திலும் நாம் பொருத்திப்பார்க்கலாம். இச்சமயத்தின்போதான அவரது அனுபவங்களில், "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" என்ற நமது கர்த்தருடைய மற்றொரு வாக்கியத்திற்குக்கூட உதாரணம் காணப்படுகின்றது (மத்தேயு 6:23). "எவ்விதத்திலும் (நன்மை) மிகுதியாயிருக்கிறது" என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளது போன்று, யூத ஜனங்கள் ஓரளவுக்கு வெளிச்சம் உடையவர்களாகக் காணப்பட்டனர் (ரோமர் 3:2). எனினும் நமது கர்த்தருடைய சத்துருக்களின் மத்தியில் மிகவும் வெறித்தனமாக/மூர்க்கத்தனமாகக் காணப்பட்டவர்கள் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் மற்றும் இவர்களால் தூண்டிவிடப்பட்ட யூத ஜனக்கூட்டத்தினரும் ஆவார்கள்; இந்தப் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் தங்களுடைய கல்வி அறிவின் நிமித்தமும், பாசாங்கான பக்தியின் நிமித்தமும், "மோசேயின் ஆசனத்தில் உட்காரும்" அதிகாரப்பூர்வமான ஸ்தானத்தின் நிமித்தமும் சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பை உடையவர்களாகக் காணப்பட்டனர். இவர்களுடைய இருள் எவ்வளவு அதிகமாய் இருக்கின்றது; இவர்களது நீதி எவ்வளவு தவறான அர்த்தம் கொண்டதாய்க் காணப்படுகின்றது; இவர்களிடத்தில் எந்தவிதமான அன்பும் எவ்வளவாய் இல்லாதிருந்தது. இவர்கள் மனுஷர் மத்தியில் தேவனையும், அவரது இராஜ்யத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பாத்திரமற்றவர்கள் என்றும், ஆகையால் இவர்கள் தள்ளிவிடப்படுவார்கள் என்றும், ஆவிக்குரிய இஸ்ரயேல் எனும் ஒரு வகுப்பார் மேசியாவின் பங்காளிகளாக, அவரது மணவாட்டிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றுமுள்ள தெய்வீகத் தீர்மானங்களில் விளங்கும் ஞானத்தை, இவர்கள் எவ்வளவு அருமையாக முழுமையாய் நிரூபித்துக்காட்டிவிட்டார்கள். இன்றும் இப்படியாகவே இருக்கின்றதல்லவா? இவர்களைப்போன்று, இன்றும் இந்த யுகம் முழுவதிலும் ஒரு வகுப்பார் காணப்படுகின்றார்கள் அல்லவா? அதாவது தேவனையும், மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் அங்கங்களில் பிரதிநிதித்துவப்படும் அவரது அபிஷேகம் பண்ணப்பட்டவரையும் எதிர்க்கும் ஒரு வகுப்பார் இன்றும், இந்த யுகம் முழுதிலும் காணப்படுகின்றார்கள் அல்லவா? ஆம் இருக்கின்றார்கள்; ஒட்டுமொத்த உலகமும் எதிராளியானவனுடைய குருடாக்கும் தாக்கத்தின் கீழ்க் காணப்பட்டு, வெளிச்சத்தையும், சத்தியத்தையும், வெளிச்சத்தின் பிள்ளைகளையும், சத்தியம் பிரகடனப்படுவதையும் எதிர்க்கின்றதாய் இருப்பினும், பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரும், அவளது (Doctors of Divinity) வேதசாஸ்திரிகளுந்தான் பிரதானமாய் எதிர்க்கின்றவர்களாகவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் உண்மையான அங்கத்தினர் அனைவருக்கும் எதிராக "சிலுவையில் அறையுங்கள்! சிலுவையில் அறையுங்கள்!" என்று கூக்குரலிடுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படியாகச் செயல்படுகின்றவர்கள் தொடர்புடைய விஷயத்தில், அவர்கள் துணிகரமான குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சொல்லுமளவுக்கு, அவர்கள் போதுமான அளவுக்கு வெளிச்சம் பெற்றிருக்கவில்லை என்று அப்போஸ்தலராகிய பேதுரு வலியுறுத்துவதால், நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இயேசுவைப் பழிதூற்றினவர்களையும், அவரை உண்மையாய்ச் சிலுவையில் அறைந்து போட்டவர்களையும் குறித்து அப்போஸ்தலர், "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்று குறிப்பிடுகின்றார். இந்த யுகம் முழுவதிலும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு எதிரான பெரும்பான்மையான எதிர்ப்புகளானது, குருடான நிலைமையிலும், அறியாமையிலும் செய்யப்பட்டன என்று கர்த்தரினால் கருதப்படும்

என்பது நமக்கு நிச்சயமே. நம்முடைய சத்துருக்களை அன்புகூருவதற்கும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நன்மை செய்வதற்கும், அப்படிப்பட்டவர்களுக்காய் ஜெபம் பண்ணுவதற்குமான இருதய நிலைமையில் நாம் காணப்பட வேண்டும்; மேலும் கர்த்தருடைய ஆசீர்வாதமான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போதும், கர்த்தரைப்பற்றின தெளிவான அறிவு பூமியை நிரப்பிக் காணப்படும்போதும், இந்தக் குருடரான மற்றும் கடுமையான சத்தருக்களில் அநேகர்/அனைவரும் தங்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்று, தேவனுடைய மகிமையை அறிக்கைப்பண்ணும் நாவையும், அவருக்கு முன் முடங்கி பணியும் முழங்கால்களையும் உடையவர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்ற நல் நம்பிக்கையையே நாம் உடையவர்களாய் இருக்கின்றோம்.

## பிலாத்துவின் முன்னிலையில் இயேசு

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நாளினுடைய காலை வேளையில், சுமார் 8 மணி அளவில், நமது கர்த்தர் பிலாத்துவுக்கு முன்பாக அழைத்து வரப்பட்டார். இதற்கும் அதிகாலமே யூத ஆலோசனை சங்கத்தார் கூடிக்கொண்டு, இரவு வேளையில் பிரதான ஆசாரியனுடைய விசாரணையின்போது கண்டுபிடிக்கப்பட்டக் குற்றச்சாட்டுகளை அங்கீகரித்தனர்; அதாவது இயேசு தேவனுக்கும், அவருடைய நாட்டிற்கும் எதிராக தேவதூஷணமும், துரோகமும் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டைக் கூட்டங்கூடி அங்கீகரித்தனர். இந்தக் குற்றச்சாட்டானது, இயேசு பிரதான ஆசாரியன் முன்பு, தாம் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று ஒப்புக்கொண்டதன் வாயிலாக நிரூபணமானதாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இயேசுவின் நிமித்தமாக அவர்கள் வெட்கமடைந்தார்கள் மற்றும் இப்படியான ஓர் இராஜாவை, ஒரு மேசியாவை, ஓர் இரட்சகரை அவர்கள் விரும்பவில்லை. நமது கர்த்தர் கைதுச் செய்யப்பட்டக் காரியமானது/செய்தியானது பட்டணத்தினுடைய ஜனங்களுக்கு எட்டி, மிகப்பெரிய கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பும், இயேசுவின் நண்பர்களில் சிலர் அவரைப் பாதுகாக்க முற்படுவதற்கு முன்பும், இயேசுவைக் கைதுச் செய்தவர்கள் நேரமே, பிலாத்துவினுடைய அரமனைக்குச் சென்றார்கள்.

கைதியைப்பற்றி பிலாத்து சில நொடிகளிலேயே கிரகித்துக்கொண்டார். யூத ஆலோசனைச் சங்கத்தினர் நமது கர்த்தர் இயேசு மீது செலுத்திட்டக் குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றிலும் மாறான குற்றச்சாட்டுகளானது, நமது கர்த்தருக்கு எதிராக பிலாத்துவின் முன்னிலையில் வைக்கப்பட்டது. அவை மூன்றாகும்: (1) கலகவாதியாக இருந்து, கிளர்ச்சியை உண்டுபண்ணி ஜனங்களை, அதிகாரத்தை எதிர்ப்பதற்கு நேராக இயேசு வழிநடத்தியுள்ளார் என்றும், (2) ஜனங்கள் இராயனுக்கு வரி கொடுக்கக்கூடாது என இயேசு போதித்தார் என்றும், (3) தாம்தான் வரிகள் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமான இராஜாவாய் இருக்கின்றார் என இயேசு கூறியுள்ளார் என்றுமுள்ள குற்றச்சாட்டுகளேயாகும். குற்றச்சாட்டுகள் உண்மையற்றவைகளாக இருந்தபடியினால், பிலாத்து உடனடியாக, குற்றச்சாட்டுகளைத் தொகுத்திட்ட யூத அதிகாரிகளுடைய பகைமையைக் கிரகித்துக்கொண்டார். உரோம அரசாங்கத்தினுடைய அரசியல் அதிகாரத்திற்குப்பதிலாக, யூத அதிகாரிகளுடைய மத அதிகாரமே அபாயத்தில் இருப்பதைப் பிலாத்துக் கண்டுகொண்டார். வாசலுக்கு வெளியே காணப்பட்ட ஜனக்கூட்டத்தினர், அவர்கள் மதப்போதகர்களுடைய தூண்டுதலினால், கட்டுப்பாடற்றவிதத்தில் குற்றச்சாட்டுகளைக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். இயேசு எதுவும் கூறாமல் காணப்பட்டார்; ஆகவே இயேசு தமக்காக வாதிட திறமிக்கவர்போன்று வெளிப்படையாகத் தென்பட்டபோதிலும், அவர் அமைதலுடனும், மனதை/தம்மை அடக்கின நிலையிலும், எதிர்க்காமலும், பழியினின்று விடுவித்து தம்மைத் தற்காத்துக்கொள்ள முயலாமலும் இருப்பதைக் கண்டு, பிலாத்து ஆச்சரியமடைந்தார். இயேசுவை விடுவிப்பதற்கு அல்லது ஜனங்களுடைய விருப்பத்தின்படி அவரைத் தண்டிப்பதற்குத் தன்னிடத்தில் அதிகாரம் இருக்கின்றது என்பதை இயேசு அறிந்திருக்கவில்லையா என்று கூடப் பிலாத்து இயேசுவிடம் வினவினார். நமது கர்த்தருடைய பதிலானது சாந்தமான ஒன்றாகும்; அதாவது பரம பிதாவினால் அனுமதிக்கப்பட்டால் ஒழிய, மற்றப்படி பிலாத்துவுக்குத் தம்மேல் எவ்விதமான அதிகாரமும் இருப்பதில்லை என்று இயேசுவின் பதில் காணப்பட்டது. ஆ! இதுவே நமது கர்த்தருடைய மன அமைதிக்கான இரகசியமாகும். இயேசு தம்முடைய ஜீவியத்தையும், தம்முடைய அனைத்தையும் ஒப்புக்கொடுத்துள்ளார்; தம்முடைய அனைத்துக் காரியங்களையும் அவர் பிதாவினிடத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்; அவருக்குப் பிதாவினுடைய அன்பிலும், ஞானத்திலும் நம்பிக்கை இருந்தது, ஆகையால் அவர் பிதா தமக்கு ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ண விருப்பமுள்ளவராகவும், தம்மை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலும், அந்த வேலையை நிறைவேற்றுவதிலும் களிக்கூருகிறவராகவும் காணப்பட்டார். இப்படியாகவே இந்த யுகம் முழுவதிலுமுள்ள கர்த்தருடைய

பின்னடியார்களும் காணப்பட வேண்டும்; அதாவது அவர்கள் எந்தளவுக்கு தங்களது அர்ப்பணிப்பைப்பற்றி முழுமையாய் உணர்ந்துக்கொள்கின்றார்களோ மற்றும் இருதயத்தில் அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு மற்றும் பிதாவின் சித்தத்திற்கு அன்புடன்கூட ஒப்புக்கொடுக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் மிகவும் கடுமையான மற்றும் சோதனையான வேளைகளில் அமைதல் உள்ளவர்களாகக் காணப்படுவார்கள்; மேலும் இதினிமித்தமாக அவர்களது மன அமைதியையும், அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதையும், எல்லாப்புத்திக்கும் எட்டாத மேலான தேவ சமாதானம் அவர்களது இருதயத்தை ஆளுவதையும் உலகத்தார் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

இயேசுவுடனான தனது சுருக்கமான சம்பாஷணையை முடித்துவிட்டு, பிலாத்து ஜனங்கள் கூடிக்காணப்படும் தனது அரமனையினுடைய முற்றத்து வாசலுக்கு வந்து, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று வெளிப்படையாகவே அறிக்கையிட்டார். யூத அதிகாரிகளோ ஏமாற்றமடைந்தவர்களாக, எங்கே தங்களது கைதி (இயேசு) தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்வாரோ என்ற அச்சத்தினால் மிகவும் ஆத்திரமடைந்தவர்களாக, தீர்ப்பில் அதிருப்தியடைந்ததைத் தெரியப்படுத்தும்படிக்கு, ஜனக்கூட்டத்தாரைத் தூண்டிவிட்டார்கள். பிலாத்து தனது தீர்ப்பை வழங்கிவிட்டார் மற்றும் அதனை மாற்றுவதற்கும் அவருக்கு மனதில்லை; எனினும் பொதுஜனங்கள் மற்றும் செல்வாக்குமிக்க அதிகாரிகளுடைய கோபத்தின் முன்னிலையில் இயேசுவை விடுதலைப்பண்ணிட பிலாத்துத் தயங்கினார். கலிலேயா பற்றின ஏதோ சில வார்த்தைகள் பேசப்பட்டதைத் தற்செயலாக பிலாத்துக் கேட்க, இயேசு கலிலேயனா என்று பிலாத்து விசாரித்தார் மற்றும் அதை உறுதிபடுத்தின பிற்பாடு, "இம்மனுஷன் கலிலேயனாக இருக்கின்றபடியால் நான் இவரை, எருசலேமிலே வந்திருக்கின்ற ஏரோதுவினிடத்திற்கு அனுப்புகின்றேன்" என்றார். பின்னர் நமது கர்த்தர் உரோம போர்வீரர்களுடைய குழுமத்துடன் பகிரங்கமாக, ஏரோதுவினிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்; இந்த ஏரோது நமது கர்த்தரைச் சந்திக்க ஆவலாய்க் காணப்பட்டார்; இயேசுவைக் குறித்து அநேகம் காரியங்களைக் கேள்விப்பட்டிருந்த ஏரோது, ஒருவேளை தன்னால் சிரைச்சேதம் பண்ணப்பட்ட யோவான் ஸ்நானன்தான், மரணத்திலிருந்து உயிரோடு எழுந்து இயேசுவாக வந்துள்ளாரோ அல்லது இல்லையோ என்று யோசனைப் பண்ணிக்கொண்டு காணப்பட்டார். ஆனால் ஏரோது இயேசுவிடம் கேள்விகள் கேட்டப்போது, இயேசு ஒரு பதிலும் கொடுக்கவில்லை. பேச வேண்டிய தருணங்களும் உள்ளன மற்றும் அமைதிக் காக்க வேண்டிய தருணங்களும் உள்ளன மற்றும் நமது கர்த்தர் இயேசு தமது சூழ்நிலைகளைத் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தார். ஏரோதினிடத்தில் அவர் ஒருவேளை ஏதாகிலும் கூறியிருப்பதைக்காட்டிலும், அவர் அமைதலுடன் காணப்பட்டதே மிகவும் ஆற்றல்மிக்க காரியமாய் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இயேசுவின் இந்த அமைதியின் நிமித்தம் ஏரோது சினமடைந்திருப்பார் என்பது உறுதி என்றாலும், ஏரோது அதை வெளிப்படுத்தி, தன்னை அவமானப்படுத்திக்கொள்ளத் துணியவில்லை. ஆகவே தன்னுடைய போர்ச்சேவகர்களில் சிலரைக் கொண்டு, இயேசுவுக்கு மினுக்கான வஸ்திரம் உடுத்தவும், கேலியாக அவரை வணங்கவும் அனுமதிப்பதன் மூலம், ஏரோது திருப்தியடைந்தான். இயேசு ஒரு போலி என்றே ஏரோது கருதினார் மற்றும் தாம் இராஜா என்று இயேசுவினால் உரிமை பாராட்டிக்கொள்ளப்படும் விஷயங்கள் கேலிக்கு இடமானவைகள் என்று ஏரோது கருதினார் என்பதிலும் ஐயமில்லை. இயேசு குற்றமற்றவர் என்றே ஏரோதினுடைய தீர்ப்புக் காணப்பட்டது. மரணத் தண்டனைக்கு ஏதுவான குற்றம் எதுவும் கைதியினிடத்தில் தன்னால் காணமுடியவில்லை என்று அறிவித்துக் கைதியைப் பிலாத்து ஏரோதிடத்திற்கு ஒப்படைத்தது போன்று, ஏரோதும் கைதியை பிலாத்துவினிடத்திற்கு மீண்டும் (விசாரித்துவிட்டு, தீர்ப்புக் கூறி) அனுப்பி வைத்தார். பிலாத்துத் தன்னிடத்திலேயே மீண்டும் இயேசுவின் வழக்கு வந்துள்ளதைக் கண்டு, பிரதான ஆசாரியர்களையும், ஜனங்களுடைய அதிகாரிகளையும் அழைப்பித்து, "அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்" (லூக்கா 23:14-16).

## பிலாத்துவினுடைய தவறுக்காகக் காரணம் காட்டுகின்றோம்

அநேகர் பிலாத்துவினுடைய கொடூரத்தன்மையின் நிமித்தம், அவரைப் பழித்துரைப்பதுண்டு; பிலாத்து ஒரு பொல்லாத மனிதன் என்றும், தன்னுடைய தீர்ப்புகளுக்கு ஏற்ப

செயல்பட விருப்பமற்றவர் என்றும் அநேகர் கூறுகின்றனர்; இன்னுமாக இயேசுவைத் தண்டிக்கும்படியான இவருடைய கருத்தானது மேற்கூறிய இந்தப் பெலவீனங்களுடைய வெளிப்படுத்தலே என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்; இன்னுமாக இயேசுவில் குற்றம் எதுவும் இல்லையெனில், நீதியானது இயேசுவுக்கான மரணத் தண்டனையை மாத்திரமல்லாமல், இயேசு சவுக்கினால் அடிக்கப்படுவதையும் தடைப்பண்ணியிருக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பிலாத்துவுக்கு அநீதியே இழைக்கப்பட்டுள்ளது. பிலாத்து ஒரு புறஜாதி ஆவார்; மேசியாவுக்கான யூதருடைய எதிர்ப்பார்ப்பின் மீது எவ்விதமான நம்பிக்கையும் அற்றவர் மற்றும் யூதர்களுக்கு மதிப்பும் கொடுக்காதவர் ஆவார்; யூதர்களைக் கலகம்பண்ணுகிற ஜனங்களாகவே கருதினார்; இவர்களை ஒழுங்குமுறையுடன் உரோம பேரரசினுடைய ஆளுகையின் கீழ் வைப்பதற்கென்று பிலாத்து அங்குப் பணி அமர்த்தப்பட்டார். கண்ணுக்குத் தெரியாத அநேக தெய்வங்கள் இருப்பினும், உரோம சக்கரவர்த்தியே, அதாவது இராயனே தெய்வங்களின், கண்ணுக்குத் தெரிகின்ற பிரதிநிதி என்றும், இராயனுடைய கனமும், அதிகாரமும், மதிப்பும் எவ்விதத்திலும் தக்கவைக்கப்பட வேண்டும் என்றும் பிலாத்துக் கருதிக்கொள்ளத்தக்கதாகவே, அவருக்கான ஜீவியத்தின் பயிற்சிகள் காணப்பட்டன. நீதி செய்வதற்காக அல்லாமல், மாறாக ஒழுங்கை தக்கவைத்துக்கொள்வதற்கும், தெய்வீகத் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கோ, அதனை நடந்தேற்றுவதற்கோ அல்லாமல், மாறாக உரோம சாம்ராஜ்யத்தினுடைய அதிகாரத்தினுடைய பிரதிநிதியாக இருந்து, அந்த அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்குத்தான் எருசலேமில் உரோமினுடைய பிரதிநிதியாக பணி அமர்த்தப்பட்டுள்ளார் என்று பிலாத்து நன்கு அறிந்திருந்தார். உரோமுக்கான மரியாதை தக்க வைக்கப்படுவதற்கும் உரோமுக்கான மதிப்பு அடையப்பெறுவதற்குமென ஒவ்வொரு வருடமும் ஒருவேளை பல ஆயிரம் நிரபராதிகள் கஷ்டம் அனுபவித்தால், இதனால் உரோமுக்கு என்ன கஷ்டம்? ஒருவேளை யூதர்கள் மத்தியிலான ஏதேனும் அநீதியான காரியமானது, அவர்களை உரோமுக்கு உண்மையற்றவர்களாக இருப்பதற்குத் தூண்டுமாயின், உரோமின் அதிகாரம் உறுதியாய் நிலைநாட்டப்பட்டிருக்கத்தக்கதாக அந்த அநீதி சரிச்செய்யப்படும்; ஆனால் யூத அதிகாரிகளும், ஜனங்களும் யாருக்கேனும் அல்லது ஏதேனும் காரியத்திற்கு எதிராக கைக்கோர்த்துக்கொண்டு, உரோமுக்கான தங்களது உண்மையை மெய்ப்பித்துக் காட்டுவார்களானால், உரோமுக்குப் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருக்கும் பிலாத்து, ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கி, ஒழுங்கையும், அமைதியையும் தக்கவைக்க வேண்டுமென்றே உரோம சக்கரவர்த்தியும், அவரது அவை உறுப்பினர்களும் எதிர்ப்பார்ப்பார்கள். நமது கர்த்தருடைய தனிச்சிறப்பைப் பிலாத்து உணர்ந்து அதினிமித்தம் கொண்டிருந்த மதிப்பினால் அல்லது முந்தின இரவில் பிலாத்துவின் மனைவி கண்ட சொப்பனத்தினுடைய தாக்கத்தினால்தான், இயேசுவை விடுவிப்பதற்கு, பிலாத்து யூத அதிகாரிகளுடன் போராடினார். பிலாத்துவின் ஸ்தானத்தில் காணப்படும் அநேக நபர்கள், அநேகமாக தங்களது கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுபவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாய்ப்பைப் பயன்படுத்தி, அவர்களைப் பிரியப்படுத்துவதற்கென இயேசுவை மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்திருப்பார்கள்; அதாவது, "யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்த" சம்பவத்தில் ஏரோது நடந்துகொண்டது போன்று நடந்துகொண்டிருந்திருப்பார்கள். (அப்போஸ்தலர் 12:2, 3)

சவுக்கினால்/வாரினால் அடிக்கப்பட்டச் சம்பவம் பின்வரும் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்பட வேண்டும்; அதாவது பிலாத்து தனது அரமனையின் வாசலில் காணப்பட்ட கும்பலின் கலக ஆவியைத் தணித்திடவே விரும்பினார்; ஒருவேளை இயேசு தண்டிக்கப்படாமல் விடுவிக்கப்படுவதைக் காட்டிலும் வாரினால் அடிக்கப்பட்டு இப்படியாக அவமானப்படுத்தப்பட்டாலே ஜனங்கள் அநேகமாக நன்கு திருப்தியடைந்து, காரியத்தை விட்டுவிடுவார்கள் என்றே பிலாத்துக் கருதினார். ஆகவே கெட்ட நோக்கத்தினால் அல்லாமல், மாறாக பிலாத்து நல்ல நோக்கத்துடனே இயேசு வாரினால் அடிக்கப்படும்படிக்குச் செய்தார் என்று பிலாத்துவைக் குறித்து உயர்வாகவே நாம் கருதுகின்றோம்.

## பொது மக்களினுடைய கருத்தின்படி, பரபாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டான்

வருடத்தினுடைய அந்தத் தருணத்தின்போது, பெருந்தன்மையின் வெளிப்படுத்துதலாகவும், அத்தருணத்தில் நிலவும் மகிழ்ச்சியுடன்கூட, இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி காணப்படத்தக்கதாகவும்,

ஒரு கைதியை விடுதலைச் செய்வது உரோம அரசாங்கத்தினுடைய வழக்கமாக இருந்தது. பிலாத்து இதனை அவர்களுக்கு நினைவுப்படுத்திக்கொண்டு, இயேசுவை வாரினால் அடித்தப் பிற்பாடு, தான் விடுதலைப் பண்ணப்போகும் கைதி இயேசு ஆவார் என்று குறிப்பாகச் சொன்னார்; ஆனால் பிலாத்துவினுடைய இந்தக் கருத்துக்கு எதிராக, ஜனக்கூட்டத்தினர் ஒரே குரலாக, "இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று சத்தமிட்டார்கள். ஜனங்கள் இப்படிச் சத்தமிடுவதற்குப் பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் காரணம் என்பதில் நமக்கு ஐயமில்லை; ஜனங்களை இவர்கள் இயேசுவுக்கு எதிராக தூண்டிவிட்டுக்கொண்டே இருந்தார்கள். யூதர்களைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்கும்போது, அவர்கள் வெளிப்படுத்தும் இருதயத்தின் நிலைமை நம்மைத் திகைக்கவே வைக்கின்றது. பரபாஸ் என்பவன் உண்மையில் கலகவாதியாவான் மற்றும் கொலைபாதகத்தின் நிமித்தம் அவன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான்; இவனையே ஜனங்கள், இயேசுவுக்கு எதிராக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்! உண்மையில் இவர்கள் தங்களுடைய இருதயத்தின் கொலை பாதக நிலைமையை வெளிப்படுத்தினார்கள்; வெளித்தோற்றத்தில் இவர்கள் ஒழுக்கமுள்ள ஜனங்களாகவும், நியாயப்பிரமாணத்தை மதிக்கிறவர்களாகவும் இருந்திட்டாலும், உள்ளிலோ எதிராளியானவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாகவும், வெளிச்சத்தையும், வெளிச்சத்தைச் சுமந்து வந்த மா பெரியவரையும் பகைக்கிறவர்களாகவும் காணப்பட்டனர். இதுபோலவே இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும், எப்போதும் கலகவாதிகளும், கொலைபாதகர்களும் உயர் ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்றாலும், பரிசுத்தவான்கள் அபூர்வமாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுமார் 19 நூற்றாண்டுகள் கடந்து சென்றுள்ள இன்றைய காலங்களிலும் கூட மற்றும் உலகத்தின் பெரும்பான்மையான நாகரிகமான பாகங்கள் கிறிஸ்தவமண்டலம் என்று அழைக்கப்பட்டாலும்கூட, இப்பொழுது ஒருவேளை நமது கர்த்தர் தம்மை இராஜாவென முன்வைப்பாரெனில், அவர் புறக்கணிக்கப்படுவார் என்பதிலும், இன்னுமாக அவருக்குப் பதிலாக ஒரு கொலைபாதகன் தேர்ந்தெடுக்கப்படமாட்டான் என்றாலும், கொலைபாதக ஆவியும், உலகத்தின் ஆவியும், எதிராளியானவனின் ஆவியும், அதாவது அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதுபோல மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளாகிய பகைமையிலும், துர்க்குணத்திலும், பொறாமையிலும், சண்டைச் சச்சரவுகளிலும் அடிக்கடி வெளிப்படும் எதிராளியானவனுடைய ஆவியும் கொண்டுள்ளவரே நிச்சயமாய்த் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதிலும் நமக்கு உறுதியே. சீஷன் தனது ஆண்டவரிலும் பெரியவன் அல்ல; மேலும் சீஷன் எந்தளவுக்குத் தன்னுடைய ஆண்டவருக்கு இருதயத்தில் ஒத்திருக்கின்றானோ, அவ்வளவாய் அவன் தற்காலத்தில் எவ்விதமான மிகுந்த கனம் மற்றும் மதிப்பு மிக்க ஸ்தானங்களுக்குள் தான் தள்ளப்படாதபடிக்கு பார்த்துக்கொள்கின்றவனாய் இருப்பான். நாம் எந்த விதத்திலும் கனமிக்க ஸ்தானங்களில் அமர்ந்திருப்பவர்களைப் பழித்துக் கூறுவதில்லை. பொதுமக்களின் விருப்பத்திற்கு இணங்க நல்ல மற்றும் தலைச்சிறந்த நபர்கள் சிலர் உயர் கனமிக்க ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று நாம் நம்புகின்றோம், ஆனாலும் இப்படியாக அபூர்வமாகவே காணப்படுகின்றது. எனினும் ஒரு நல்ல குடிமகனுக்கும், நல்ல அதிகாரிக்கும், நல்ல மனுஷனுக்கும் மற்றும் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியானாகிய பரிசுத்தவானுக்கும் மிகுந்த வித்தியாசம் உள்ளது என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய கிருபையினால், நாம் ஆண்டவருடனே காணப்பட வேண்டும் என்று தீர்மானிப்போமாக; இப்படியாக காணப்படும்போது நாம் பிரபலமற்றவர்கள் ஆகுவோம் என்றும், அவமானப்படுத்தப்படுவோம் என்றும், இகழ்ச்சிக்குள்ளாகுவோம் என்றும், தீமை அனுபவிப்போம் என்றும் எதிர்பார்ப்போமாக மற்றும் இதுவே அவருடைய சிலுவையில், நமக்கான பங்காகக் காணப்படும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்; சிலுவையைச் சுமப்பவர்கள் மாத்திரமே, கிரீடத்தை அணியமுடியும் என்பதையும் நாம் நினைவில்கொள்வோமாக.

"ஒவ்வொரு மனிதனுக்கும், ஜாதிக்கும் தீர்மானம் எடுக்கும் தருணம் வந்திடுமே ஓர்நாள்,
சத்தியத்திற்கும், தப்பறைக்கும் இடையிலான வாக்குவாதத்தின்போதே,
நன்மையின் அல்லது தீமையின் பக்கமாய் நின்றிடவே.
மாபெரும் காரணத்திற்காய், தேவனின் புதிய மேசியா
ஒவ்வொருவருக்கும் அளிக்கின்றாரே மலர்ச்சியை (அ) அழிவினையே.
இடதுபக்கம் சென்றிடுதே வெள்ளாடுகள்
வலதுபக்கம் சென்றிடுதே செம்மறி ஆடுகள்:
அந்த இரவிற்கும், வெளிச்சத்திற்கும் இடையிலேயே — அவர்கள்
தெரிந்தெடுக்கும் முடிவானது என்றென்றும் நிலைநிற்குமே!"

## பிலாத்துவினுடைய மனைவியின் சொப்பனம்

எடர்செய்ம் (Edersheim) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "இயேசுவுக்குப் பதிலாக பரபாசை தேர்ந்தெடுக்கலாம் என்று ஜனங்கள் முடிவெடுத்துக் கொண்டிருக்கையில், பிலாத்துத் தன்னுடைய நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், பிலாத்துவினுடைய மனைவி, அவருக்கு ஆளனுப்பி: நீர் இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுக்க வேண்டாம்; இன்றைக்குச் சொப்பனத்தில் அவர் நிமித்தம், நான் வெகுவாகப் பாடுபடுத்தப்பட்டேன் என்று கூறி எச்சரித்தாள்". பாரம்பரியமானது, அவளுடைய பெயரைப் புரோக்குல்லா (Procula) என்று வழங்குகின்றது. முந்தின உரோம தேசாதிபதியின் (Saturninus) மனைவியைப் போன்று புரோக்குல்லாவும் யூதமார்க்கத்தமைந்தவளாக மாத்திரம் இராமல், இயேசுவைப்பற்றி அறிந்தவளாகவும் இருந்து, இயேசுவைக் குறித்துப் பிலாத்துவிடம் அன்று மாலையில் பேசினவளாகவும் இருந்திருக்கலாம் அல்லவா? இவைகள் அனைத்தும் இயேசுவைத் தண்டிக்கும் விஷயத்தில் பிலாத்துக் கொண்டிருந்த விருப்பமின்மையும், இயேசுவைக் குறித்த புரோக்குல்லாளின் சொப்பனத்திற்கும் விளக்கம் அளிக்கின்றதாய் இருக்கின்றது.

## ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?

பிலாத்து இரண்டாம் முறையாக ஜனங்களிடத்தில் தாக்கம் ஏற்படுத்திட முற்பட்டார்; ஆனால் அவர்கள் மீண்டுமாக "அவரைச் சிலுவையில் அறையும், அவரைச் சிலுவையில் அறையும்" என்றே கூக்குரலிட்டார்கள்; பிலாத்து மூன்றாந்தரமாக ஜனங்களை நோக்கி: ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவரிடத்தில், தான் காணவில்லை என்றும், தான் இவரைத் தண்டித்து விடுதலையாக்கப் போவதாகக் கூறினார். ஆனாலும் கலகக் கூட்டத்தாரோ அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டத்தாரும், பிரதான ஆசாரியரும் இட்டச் சத்தம் மேற்கொண்டது.

இச்சம்பவத்தைக் குறித்து ஸ்டால்கர் (Stalker) அவர்கள் பின்வருமாறு விமர்சிக்கின்றார்: "இந்த ஒரு காட்சியானது, அடிக்கடி மக்களாட்சி அதற்கே எதிராகக் கண்டனம் தெரிவிக்கும் காட்சியாக இருக்கின்றது எனக் கருதப்படுகின்றது. Vox populi, Vox Dei — ஜனங்களின் சப்தமே தேவனின் சப்தம் — என்று இதன் போலிப்புகழ்ச்சியாளர்கள் கூறியுள்ளனர் — ஆனால் இங்கே நடந்ததைப் பாருங்கள். ஜனங்கள் இயேசு மற்றும் பரபாசுக்கிடையில் தேர்வு செய்ய வேண்டியிருந்தபோது, அவர்கள் பரபாசைத் தேர்ந்தெடுத்தார்கள்! மக்கள் விஷயமே இப்படி இருக்குமாயின், இந்தக் காட்சியானது, பிரபுக்கள் ஆட்சிக்கும் எதிராகவே தீர்ப்பு அளிக்கின்றதாய் இருக்கின்றது. ஜனங்களைக் காட்டிலும், ஆசாரியர்களும், வேதபாரர்களும், பிரபுக்களும் மேம்பட்டு நடந்துகொண்டார்களா என்ன? இவர்களுடைய ஆலோசனையின்படியே, மக்கள் கூட்டத்தினர் தேர்வுச் செய்தனர்."

ஆசாரியர்கள் மற்றும் யூத அதிகாரிகளுடைய வாக்குவாதமும் பதிவு செய்யப்பட்டுள்ளது; சம்பவம் உரோமில் தெரிவிக்கப்படும் என்றும், உரோம அதிகாரத்தினுடைய பிரதிநிதியாகிய பிலாத்துவினுடைய எச்சரிக்கையற்றத் தன்மை வெட்ட வெளிச்சமாக்கப்படும் என்றும் அவர்கள் தெளிவாகப் பிலாத்துவிடம் தெரிவித்தார்கள்; அதாவது இஸ்ரயேலின் ஆட்சியில் பாசாங்கு/போலித்தனம் பண்ணும் ஒரு நபர் காணப்பட்டார் என்றும், உரோமுக்குத் தாங்கள் உண்மையாக இருந்ததினால் தாங்களே அந்நபரைக் கைதுச்செய்து, அந்நபரை உரோம தேசாதிபதியினிடத்தில் கொண்டு வந்திருக்க, அந்தத் தேசாதிபதி அந்நபரைச் சிலுவையில் அறைவதற்குப்பதிலாக, விடுதலைப் பண்ணினதன் மூலம் தனது கடமையின் விஷயத்தில் அக்கறையற்றுக் காணப்பட்டார் என உரோமில் விவரம் சொல்லப்படும் என்றும் அவர்கள் தெளிவாகப் பிலாத்துவிடம் தெரிவித்தார்கள். பாவம் பிலாத்துவின் குணத்திற்கும், ஸ்தானத்திற்கும், படிப்பிற்கும் இவ்விடம் மிக கடுமையான இடமாக காணப்பட்டது. இறுதியாக நிர்பந்தத்தின் நிமித்தம் எதிர்க்கும் முயற்சியைக் கைவிட்டார்; ஒருவேளை இவருடைய ஸ்தானத்தில் வேறொரு மனிதன் காணப்பட்டிருப்பானானால், இம்மாதிரியான ஒரு விஷயத்தில் ஜனங்களுடைய விருப்பத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்று எண்ணியிருந்திருக்கக்கூடமாட்டான். பின் ஜனங்களுடைய விருப்பப்படியே நடக்கட்டும் என்று இறுதியாகப் பிலாத்துத் தீர்ப்பு வழங்கினார். இதுதான் பூமிக்குரிய சட்டங்களினாலும், நீதி நியாயத்தினாலும் அடையப்பெற்ற உச்சக்கட்டமான நிலை அல்லவா? ஜனங்களுடைய விருப்பத்திற்கு எதிராக, எந்த மனுஷ சட்டங்களால் எதிர்த்து நிற்கமுடியும்? இன்றும் நம்முடைய விஷயத்திலும் இப்படியாகத்தான் காணப்படுகின்றது அல்லவா? ஜனங்களே

சட்டங்களைத் தொகுக்கின்றனர் மற்றும் ஜனங்களே அதை நிறைவேற்றவும் செய்கின்றனர் மற்றும் பிலாத்து, இயேசுவினுடைய சொந்த நாட்டினுடைய ஜனங்களின் விருப்பத்திற்குச் செவிக்கொடுக்க மாத்திரமே செய்தார். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்றே வேதவாக்கியங்கள் குற்றம் சுமத்துகின்றன. இங்கு அப்போஸ்தலன் பிலாத்துவின் மீது இல்லாமல், மாறாக யூதர்கள் மீதும், அவர்களின் அதிகாரிகளின் மீதுந்தான் குற்றம் சுமத்துகின்றார்.

## பிலாத்துக் கைகளைக் கழுவிக்கொண்டார்

பிலாத்து தனது மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், பொறுப்பாளியாகுவதிலிருந்து அனைவரின் பார்வைக்கு முன்பாகத் தன்னை விலக்கிக்கொள்ளும் வண்ணமாகவும், தண்ணீர் கொண்டுவரும்படிக்குக் கூறி, ஜனங்களின் முன்னிலையில் தண்ணீரினால் தனது கைகளைக் கழுவிக்கொண்டார். இப்படியாகத் தனது கைகளைக் கழுவிக்கொள்ளுவதின் மூலமாக, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்பதை அடையாளத்தின் வாயிலாகவும், வார்த்தைகளின் வாயிலாகவும் தெரிவித்தார் (உபாகமம் 21:6-9). தனிப்பட்ட விதத்திலும் சரி, மத ரீதியிலும் சரி எவ்விதமான வரையறைகளையும் கொண்டிராத இந்தப் புறஜாதி அதிகாரியான பிலாத்து நீதியை உணர்ந்திருந்த அளவுக்குக்கூட, நீதியை உணர்ந்துகொள்ள முடியாத அளவுக்கு யூதர்கள் எவ்வளவாய்க் குருடர்களாகக் காணப்பட்டனர்; ஒருவேளை பிலாத்துப் பொதுஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கியிருந்திருப்பாரானால், அவருக்கு எல்லா விஷயங்களிலும் சிறப்புகள் கிடைத்திருக்கும். இவர்களது இந்த இருதய கடினமானது, "இவரது இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரக்கடவது" என்று கூறிப் பொறுப்பை ஆசாரியர்களும், அதிகாரிகளும் மற்றும் ஜனக்கூட்டத்தினரும் ஏற்றுக்கொள்வதில் காண்பித்த விருப்பத்தில் வெளிப்படுகின்றது. முழுப்பொறுப்பும் யூதர்கள் மீதே கடந்து வந்தது.

## தாங்கள் குத்தினவரை

யூதர்கள் மீது பொறுப்பு வந்தது என்றபோதிலும், குருடாக்கப்பட்ட கண்கள் திறக்கப்படும் காலம் வரும் என்றும், அப்போது யூதர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, அவருக்காகப் புலம்புவார்கள் என்றும் தேவன் தீர்க்கத்தரிசி மூலம் ஏற்கெனவே அறிவித்துள்ளார் (சகரியா 12:10). அப்படியான ஒரு காலம் வருகின்றபடியாலும், ஜெபம் மற்றும் விண்ணப்பத்தின் ஆவியை அவர்கள்மேல் ஊற்றி, அவர்கள் பாவங்களை அகற்றிப்போடுவாரெனக் கர்த்தர் வாக்களித்துள்ளபடியாலும், தேவனுக்கு நன்றி. யூத ஜனங்கள் பல நூற்றாண்டு காலமாகக் கடுமையான அனுபவங்களைப் பெற்றுவிட்டார்கள்; இன்னுமாக அவர்கள் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதைக் கிறிஸ்துவினுடைய ஆவியையுடைய அனைவரும் அறிய வரும்போது களிக்கூருவார்கள்; இதுமாத்திரமல்லாமல் யூதர்களிடத்தில் முதலாவதாக ஆரம்பமாகும் ஆசீர்வாதமானது, மகிமையிலுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலாகிய கிறிஸ்துவினுடைய தெய்வீக வழிக்காட்டுதலின் கீழ் ஆசீர்வாதமானது, யூதர்கள் வாயிலாகக் கிறிஸ்துவின் ஆயிர வருட ஆளுகையின்போது, பூமியின் குடிகளிடத்தில் கடந்துபோகும் என்பதை அறியும்போதும் களிக்கூருவார்கள்.

## எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும்

அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளானது (2 கொரிந்தியர் 6:8), இயேசுவின் உண்மையான பின்னடியார்கள் அனைவரும், இயேசுவைப்போன்றே ஏறக்குறைய அனுபவங்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று ஆண்டவரினால் வலியுறுத்தப்பட்டக் கருத்துக்கு ஒத்ததாகவே காணப்படுகின்றது. இயேசு சத்தியமும், வழியும் மற்றும் ஜீவனுமானார்; அவர் உண்மையுள்ளவர்; ஆயினும் அவர் எத்தரெனச் சிலுவையில் அறையப்பட்டார்; அவர் பாவத்தினால் குருடாக்கப்பட்ட உலகத்தினாலும், அவர் காலத்தில் வாழ்ந்து வந்த மிகவும் வெளிச்சமுள்ள ஜனங்களினாலும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டார். சீஷன் தன் போதகரிலும் பெரியவனல்ல, மாறாக சீஷன் தான் போதகரோடு துணைவனாக இருக்கும் சிலாக்கியத்தில் மேன்மை பாராட்டிக்கொள்ள வேண்டும். ஆகவே நாம் சட்டப்பூர்வமாகவும், அநியாயமாகவும் தவறாய்க் காட்டப்படும் சூழல்கள் மத்தியிலும், போலியாளாக காட்டப்படும் சூழல்கள் மத்தியிலும், குத்தப்பட்டு, வாரினால் அடிக்கப்படும் சூழல்கள்

மத்தியிலும், களிகூரக் கற்றுக்கொள்வோமாக. இப்படியாக, நமது அருமை இரட்சகருடன் பங்காளியாக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதை நாம் மகிழ்ச்சியாய்க் கருதிக்கொள்வோமாக; நன்மைச் செய்வதில் நீடிய பொறுமையுடன், தளர்ந்துபோகாமல் காணப்பட்டால் ஏற்றகாலத்தில் அவருடைய இராஜ்யத்தில் அவரோடுகூட உடன் சுதந்திரத்துவம் எனும் மகிமையான பலனை அறுப்போம் எனும் பாடத்தையும் நாம் கற்றுக்கொள்வோமாக!

*****

# கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்

## லூக்கா 23:33-46

*"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே."*
**லூக்கா 23:34**

சிலுவையின் இரத்தத்தினால் உண்டாகும் இரட்சிப்பைப் பற்றின சுவிசேஷமானது, மிகமிகப் பிரபலமற்ற நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது. தெய்வீக நீதியானது, "ஜீவனுக்கு ஜீவனை" கேட்டது. மேலும் ஆதாமின் ஜீவனுக்காகவும், அவர் மூலம் ஜீவனை இழந்துபோன அவருடைய சந்ததியின் ஜீவனுக்காவும், இயேசுவின் ஜீவனை தெய்வீக நீதி, ஈடுபலியாக ஏற்றுக்கொண்டது. ஆனால் அந்தோ! இந்த ஈடுபலியின் விஷயங்கள், மாம்சமான மனுஷனுடைய மனதிற்கு ஒப்புக்கொள்ள முடியாததாகவும் இருக்கின்றது. மேலும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறவர்களின் எண்ணிக்கைகூட மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. உலக ஞானமானது, வீழ்ச்சி குறித்த வேதாகமத்தின் பதிவுகளை நிராகரித்து, அதற்குப் பதிலாக பரிணாம வளர்ச்சி பற்றின கூற்றை முன்வைக்கையில், அதாவது மனுஷன் தன்னைத்தானே படிப்படியாக மிருகம் போன்ற நிலையிலிருந்து, பகுத்தறியும் நிலைக்கு வளர்த்தி முன்னேறுகின்றான் என்ற பரிணாம வளர்ச்சி கூற்றை முன்வைக்கையில், மீட்பின் முழுக் கதையையும் கூட நிராகரிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. ஆம், ஒருவேளை பரிபூரண நிலையிலிருந்து எவ்விதமான வீழ்ச்சியும் சம்பவிக்கவில்லையெனில், எவ்விதமான பாவமும், ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படுதலும் இருப்பதில்லை. மேலும் ஆதாமும் அவருடைய சந்ததியாரும் சபிக்கப்படாமல், ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படாமல், மரணத்தீர்ப்பு அளிக்கப்படவில்லையெனில், இப்படிப்பட்ட (மரண) தீர்ப்பிலிருந்து ஒரு மீட்பு அவசியமாய் இராது. (கல்லூரிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும், உரோம கத்தோலிக்க சமய குருமார் பயிற்சி கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கப்படும்) இவ்வுலக ஞானத்தின் கண்ணோட்டத்தின்படி சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் உண்டான மீட்பைக்குறித்த முழு வேதாகம நிகழ்வானது முட்டாள்தனமானதாகக் கருதப்படுகின்றது.

இரத்தத்தின் மூலம் உண்டான மீட்பு குறித்த வேதாகம சாட்சியின் மீதான விசுவாசத்தை வலுவற்றதாக்க "கிறிஸ்துவ விஞ்ஞானம்" என்ற தவறான கோட்பாட்டினாலும், உதவியளிக்கப்படுகின்றது. இதன் கூற்று என்னவெனில்: பாவம் என்ற ஒன்று இல்லை, எவ்விதமான தீமையோ, பாவமோ ஒருபோதும் இருந்ததில்லை; இவைகள் அனைத்தும் உண்மையில் மனபிரம்மைகளும், ஏமாற்றுதல்களுமேயாகும் –ஆகையால் ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியார்களுக்கு, பாவிகள் என்ற எவ்விதமான தெய்வீகத் தீர்ப்பும் அளிக்கப்படவில்லை என்றும், மரணம் என்பது தெய்வீகத் தீர்ப்பல்ல என்றும் கூறுகின்றது. இவ்விதமான கூற்றின் மூலம், இது "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என்று அப்போஸ்தலர் கூறியுள்ள வார்த்தைகளை எதிர்க்கின்றதாய் இருக்கின்றது (ரோமர் 5:12). இந்தத் தவறான நம்பிக்கைகளானது, சத்திய வார்த்தைகளை நன்கு பகுத்து ஆராயக் கற்றுக்கொண்டவர்களுக்கு தரம் குறைந்தவைகளாகவும், அர்த்தமற்றவைகளாகவும் தோன்றும். ஆனால் தெய்வீக வார்த்தைகள் மீது மேலோட்டமான அறிவு கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் தவறான நம்பிக்கைகள், வேதவாக்கியங்கள் அறிவிக்கிற பிரகாரம் "கொடிய வஞ்சகமாக" அமைகின்றது. இவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களில் காணும் உண்மைகளை மறுதலிக்கக் கற்றுக்கொண்டு, சகல வலிகளையும் மறுதலிக்க இவர்கள் பயிற்சி செய்து கொள்கையில், படிப்படியாக இவர்களுடைய மனங்கள் மிகவும் தவறான வழியில் செல்வதினால், இவர்களால் எவ்விஷயத்தையும் சரியாகவும், உண்மையுடனும் யோசிக்கவோ, பகுத்தறியவோ முடியாமல் போய்விடுகின்றது. இவர்கள் மனதளவில் குருடாக்கப்பட்டதால், இவர்களின் கைகளும், பாதங்களும் கட்டப்படும் விதத்தில் வேதவாக்கியங்கள் இவர்களுக்கு உருமாறிக் காணப்பட்டு, சத்தியம் இவர்களுக்குள் பிரவேசிக்க முடியாத நிலைக்கு இவர்களை ஆளாக்கிவிடுகின்றது.

## தப்பறைகள் இன்னும் அதிகமான தப்பறைகளை விளைவிக்கின்றது

சிலுவை பற்றின மூன்றாவது கண்ணோட்டமே, தற்போது காணப்படும் இரண்டு வஞ்சனைகளின் தோற்றத்திற்கான காரணமாகக் காணப்படுகின்றது: இக்கண்ணோட்டமானது, வேதவாக்கியங்களையும், கிறிஸ்துவின் சிலுவையையும் ஏற்றுக்கொள்கின்றது. மேலும் சிலுவையில் மனுக்குலத்திற்காக ஏதோ ஒரு வேலை நிறைவேறியுள்ளது என்றும் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் குழப்பமும், குருட்டுதன்மையும் இருப்பதினால் என்ன வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெளிவாகக் காணும் தன்மை இல்லாமல் போயிற்று. இக்கண்ணோட்டத்தின் குருட்டுத் தன்மையினிமித்தம், கிறிஸ்து தம்முடைய பின்னடியார்களுக்கு மாதிரியை விட்டுச்சென்றார் என்ற வசனத்தை ஏற்றுக்கொள்கின்றது, ஆனால் அவருடைய பாடுகள், மீட்பின் வேலைக்காக அல்லாமல், அவருடைய பின்னடியார்களுக்குப் போதிப்பவைகளாக,வழிகாட்டுபவைகளாக மாத்திரம் இருக்கின்றது என்று காண்பிக்கின்றது. எப்படிப் பாடுபட வேண்டும் என்பதை நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே இயேசு பாடுபட்டார் என்றும், எப்படி மரிக்க வேண்டும் என்பதை நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே இயேசு மரித்தார் என்றும், பிதாவின் சித்தத்திற்கு எப்படி அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்று நமக்குக் காண்பிக்கவுமே என்றும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் அநேக வேதவாக்கியங்கள் மூலம் முன்வைக்கப்படும் நமது கர்த்தருடைய மரணத்தைப் பற்றின உண்மையான கண்ணோட்டத்தை முழுமையாகக் காணத் தவறி, புறக்கணித்து விடுகின்றனர்; அதாவது கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, தம்மையே எல்லோருக்குமான ஈடுபலியாக ஒப்புக்கொடுத்தார் என்றும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் மீட்டுக்கொள்ளப்படத்தக்கதாக அவர் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினார் என்றதுமான வேதவாக்கியங்களின் கருத்தைப் புறக்கணித்து விடுகின்றனர்.

சிலுவையைப் பற்றின உண்மையான கண்ணோட்டமானது, இயேசுவைச் சபையின் போதகராகவும், சபைக்குத் தலையாகவும், சபையாகிய மணவாட்டிக்கு மணவாளனாகவும் அடையாளங்கண்டு கொள்கின்றதாயிருப்பினும் –அது கர்த்தர் நம்முடைய போதகராக இருப்பதற்கும், பின்னர் உலகத்திற்கு இராஜாவாக இருப்பதற்கும் உள்ள அதிகாரத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளாமல், அதே பலியின் மூலம், அதே ஈடுபலி என்னும் விலைக்கிரயம் மூலம் சபையையும், உலகத்தையும் கூட வாங்கினார் என்றும், சாபமாகிய மரணத்தீர்ப்பிலிருந்து, சகல மனுக்குலத்திற்கான விடுதலையையும்கூடப் பெற்றுக்கொண்டார் என்றும், இவ்விதமாக தேவன் நீதியுள்ளவராகவும், அதேசமயம் இயேசுவை விசுவாசிக்கிறவர்களை நீதிமானாக்குகிறவராகவும் இருப்பதற்கு ஏதுவாக்கிற்று என்றும் அடையாளங்கண்டு கொள்கின்றதாயிருக்கும். கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமுக்கும், இவருடைய கீழ்ப்படியாமையினிமித்தம் அனைத்தையும் இழந்துபோன இவர் சந்ததியாருக்கும் ஈடுபலி விலைக்கிரயம் எனக் கருதப்படும் போதுதான் அவருடைய மரணத்தின் உண்மையான முக்கியத்துவத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். மேலும் தெய்வீக ஏற்பாட்டின்படியாக மரணத்திற்குள்ளான ஞானஸ்நானமானது, நமது கர்த்தரால் தவிர்க்கப்பட முடியாது என்பதையும் புரிந்துகொள்ளலாம். அதேசமயம், அவருடைய மகிமையான மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாக இருக்கும் அனைவரும் அவரோடுகூட இந்த மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திலும் கண்டிப்பாக பங்கடைய வேண்டும் என்பதையும், அவருடைய இரத்தம் சிந்தப்படாமல் பாவமன்னிப்போ, தேவனுடன் ஒப்புரவாக்கப்படுதலோ, மரணத்தினின்று உயிர்த்தெழுதலோ, நித்தியகாலமாய் ஜீவன் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்போ இருப்பதில்லை என்பதையும் நம்மால் காணமுடிகின்றது. இப்படிப்பட்ட சரியான கண்ணோட்டத்தை நமக்கு முன் கொண்டிருப்போமானால், இப்பாடத்தில் சித்தரிக்கப்படப்போகும் கல்வாரியில் நடைபெற்றதான நமது அருமையான மீட்பருடைய பாடுகளினிமித்தம் நாம் அனுதாப உணர்வு கொள்வதோடு, அவர் (கடைசி வரையிலும்) உண்மையாய் இருந்ததினிமித்தம் சந்தோஷமும் அடைகின்றோம். ஏனெனில், அவர் உண்மையாய் இருந்தார் என்பது நமது மீட்பையும், இறுதியில் அவர் மூலம் உயிர்த்தெழுதலில் பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து நாம் விடுவிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

## கல்வாரிக்குப் போகிற பாதையில்

பிலாத்து எதிர்ப்புகளினிமித்தம் இயேசுவுக்கு மரண ஆணை விடுத்தான். மேலும் அவன் தனது கைகளைக் கழுவினது என்பது, அவன் இவ்வழக்கானது, நீதிக்குப் புறம்பானது எனத் தான் கருதுகின்றார் என்றும், ஆனால் ஜனங்கள், "சிலுவையில் அவரை அறையும்" என்று விரும்பி

கூக்குரலிட்டபடியினால், அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக செயல்படும்பட்சத்தில் வன்முறை எழும்பும் என்பதினால், உதவி செய்ய முடியாத நிலையில், தான் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது. சவுக்கினால் அடிக்கப்பட்ட இயேசு, முடிவை முன்கூட்டியே அறிந்தவராகக் கூட்டத்தார் மத்தியில் மிகுந்த அமைதலுடனும், மனதைக் கட்டுப்படுத்தின நிலையிலும் காணப்பட்டு, பிதா தமக்கென ஆயத்தமாக்கப்படுவதற்கு அனுமதித்த பாத்திரத்தின் அடிமண்டி வரையிலும் குடித்துத்தீர முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார். மேலும் பிதாவின் அன்பும், பராமரிப்பும் எதையும் தவறாக செய்யாது என்றும், இறுதியில் அனைத்தையும் தமது நன்மைக்கேதுவாக செய்துமுடிக்கும் என்றுமுள்ள உணர்வோடு குடிக்க முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார். உடனடியாக எல்லாம் ஆயத்தமாக்கப்பட்டது. சிறு ஊர்வலம் ஒன்றுசேர்ந்து பிலாத்துவின் அரண்மனையிலிருந்து தமஸ்குவின் வாசலண்டைக்கு எருசலேமின் ஒடுங்கிய தெருக்கள் வழியாக மெல்ல நடந்து சென்றது. வரிசையில் முதலாவதாக, ஒரு வெண்மையான நிறத்திலான மரப்பலகையைச் சுமந்தவனாக ஒரு சேவகன் சென்றான். அப்பலகையில் குற்றவாளியின் குற்றம் பற்றின வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தது. இவனுக்குப் பின்னாக, நூற்றுக்கு அதிபதியின் கட்டளைபடி, நான்கு சேவகர்கள் ஆணிகள் மற்றும் சுத்தியலுடன் தம் சிலுவையைச் சுமந்துவரும் இயேசுவைக் காவல் காக்க நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னாக, இரண்டு திருடர்கள் தங்கள் தங்கள் சிலுவையைச் சுமந்து வருபவர்களாக, ஒவ்வொருவரும் நான்கு சேவகர்களால் காவல் காக்கப்பட்டு நடந்துவந்தார்கள். திரளான மக்கள் கூட்டம் வழியில் நெருக்கிக் கொண்டுவந்தார்கள். திரளான மக்கள் கூட்டத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தவர்களும், மகிழ்ச்சியுடன் காணப்படும் சத்துருக்களும், கர்த்தருடைய நண்பர்களில் சிலரும் காணப்பட்டார்கள். "திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக்கா 23:27). Antonio எனும் அரமனையிலிருந்து கல்வாரி என்று அழைக்கப்படும் மலை உச்சிக்கு இடையில் ஒரு மைல் தூரத்தில், நான்கில் மூன்று பங்கு தூரம் இருந்தது. கல்வாரி என்பது இலத்தீன் வார்த்தையாகும் மற்றும் இதன் அர்த்தம் மண்டையோடாகும்; மத்தேயுவினால் பயன்படுத்தப்படும் கொல்கொதா எனும் வார்த்தையினுடைய அர்த்தமும் மண்டையோடாகும்; இது பாலஸ்தீனிலுள்ள யூதர்களுடைய மூல பாஷையாகிய - அராமிக் (Aramic) வார்த்தையாகும். இந்த இடமானது, கொஞ்சம் தொலைவிலிருந்து பார்க்கப்படும்போது, மண்டையோடு போன்ற தோற்றத்தினைக் கொண்டிருப்பதினாலேயே அநேகமாக இப்பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எழுத்தாளர் ஒருவர் அதைப் பின்வருமாறு விவரிக்கின்றார்:

"எருசலேமினுடைய தமஸ்கு வாயிலிருந்து 200 கெஜம் அளவுக்கு (yard) வெளியே, 60 அடி உயரமும், மண்டையோடுபோன்ற வடிவில், வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லினாலான குன்று தனியே காணப்படுகின்றது. அதன் செங்குத்தான கோணத்தில், அது அப்படியே மண்டையோட்டைப் போன்றே காணப்படுகின்றது. இரண்டு கண் குழிகள், மேலே நெற்றியும், மூக்கு, வாய் மற்றும் நாடியின் வரம்புக்கோட்டையும் தெளிவாய்ப் பார்க்கலாம். அது உட்குழிவானதாகவும், மண்டை ஓட்டினுடைய நிறத்திலும் காணப்படுகின்றது. கொல்கொதாவினுடைய உச்சியில், கற்களால் குவிக்கப்பட்டதான பெரிய குழி காணப்படுகின்றது . . . இந்தக் குழியானது சிலுவையில் அறையப்பட்ட மற்றும் கல்லெறியப்பட்ட பழங்கால குற்றவாளிகளுடைய எலும்புகளினால் நிரப்பப்பட்டுக் காணப்படுகின்றது. இதே குழிக்குள் குற்றவாளிகளினுடைய சரீரங்களும் தூக்கி வீசப்படுகின்றது. பயங்கரமான நிலநடுக்கம் ஒன்று, நில மட்டத்தை உயர்த்தி, இந்தப் பாறையைப் பகுதி பகுதியாக பிளந்துபோட்டது. மண்டையோட்டினுடைய வலதுபக்கத்தில், செங்குத்தான பாறையானது, விநோதமாய்ப் பிளந்து காணப்படுகின்றது . . . மேற்குச் செங்குத்தான பாறையினுடைய அடிவாரத்தில், மிகவும் பழமைவாய்ந்த கிணறு ஒன்றுடன், ஒரு பெரிய தோட்டமும் காணப்படுகின்றது. செங்குத்தான பாறையின் அடிவாரத்தில் பாறைக்குள் குடைந்து உருவாக்கப்பட்ட கல்லறை காணப்படுகின்றது மற்றும் இதிலே நமது கர்த்தருடைய சரீரம் வைக்கப்பட்டுள்ளது. இதுதான் உண்மையான கல்வாரி என்று ஒருமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது."

போகிற வழியில் அநேகமாக தமஸ்குவின் வாசலண்டையில் மரணத் தண்டனை பெறப்போகிறவர்களின் பாடுகளின் கடுமையினைத் தணிக்க உதவும் ஸ்திரீகளின் கூட்டம் இந்த ஊர்வலத்தில் வந்தவர்களைச் சந்தித்தனர். இவர்கள், சிலுவையில் அறையப்படுவதினால் உண்டாகும் வலிகளை, அவர்களின் உணர்வுகளை மரத்துப்போகச் செய்வதன் மூலம் தணிக்கத்தக்கதாக திராட்சரசமும், வெள்ளைப்போளமும் கலந்த வலியை நீக்கும் பானங்களைக் கொடுப்பது வழக்கம். மேலும் இவர்களுடைய அனுதாபமானது, இவர்கள் சிந்தும் கண்ணீரின் மூலமும் வெளிப்பட்டது. பதிவுகள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில், அவர்களுடைய இரக்கத்தை தாம் ஏற்றுக்கொள்வதைக் காண்பிக்கும் பொருட்டு, அப்பானத்தை அவர் மரியாதை செலுத்தும்விதமாக ருசிபார்த்தாரே ஒழிய, அவர் அதைக் குடிக்க மறுத்துவிட்டார். பிதா பிரியம்

கொண்டு தம் மேல் வர அனுமதித்த யாவற்றையும் இறுதி வரையிலும் சகிக்க இயேசு விருப்பம் கொண்டவராக இருந்தார். "முற்றிலும் ஜெயம் கொண்டவராக" நாம் அவரைக் காண்கின்றோம். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய அவருடைய ஒவ்வொரு செயல்பாடுகளிலும், அவரை இயக்கிய கொள்கைகளைக்குறித்து நாம் மேன்மை பாராட்டுகின்றோம். உறுதியுடன் அவர் தொடந்து முன்னேறினதான அவருடைய மாதிரி நம்மை உற்சாகப்படுத்துகின்றது. மேலும், "நமக்கு எதிராய் இருக்கும் எல்லாவற்றைக் காட்டிலும் அவர் நமக்குப் பெரியவராய் இருக்கின்றார்" என்றும், நம்முடைய நன்மைக்கு மாறுபட்ட எவ்விதமான அனுபவங்களையும், அவர் நமக்கு அனுமதிப்பதில்லை என்றும், நாம் அவரால் வாக்களிக்கப்பட்டிருக்கின்றோம்.

## அவருக்குப் பின்னாக சிலுவையைச் சுமந்து செல்லுதல்

வேறொரு சம்பவமும் இத்தருணத்தில் நடந்தது: நாட்டிலிருந்து வந்த சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவர், பாரம்பரியத்தின்படி இயேசு வலுவிழந்து போனபோது அவ்வூர்வலத்தைச் சந்தித்தார்; இரவு நேரம் நடந்த விஷயங்களின் அனுபவங்களினாலும், முன் நாட்களில் திரளான வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினதினிமித்தம் அவரிடமிருந்து சக்தி/சத்துவம் வெளியே சென்றபடியினாலும் பலவீனமடைந்த இயேசு, சிலுவையின் பாரப்பளுவினால் வலுவிழந்து போனார். இயேசுவுக்குப் பின்னே சிலுவையைச் சுமந்து வரும்படிக்குச் சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆனால் இயேசு முன்னே செல்ல, சீமோன் பிறகே சிலுவைச் சுமந்து வந்தாரா அல்லது இயேசு சிலுவை சுமந்து செல்ல தரையில் இழுத்துக்கொண்டுவரப்பட்ட சிலுவையின் நுனிபாகத்தை சீமோன் சுமந்து அவர் பிறகே வந்தாரா என்பது நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. ஒருவேளை சீமோன் சிலுவையின் நுனிப் பகுதியைச் சுமந்து கொண்டு இயேசுவின் பிறகே சென்றிருப்பாரானால் இக்காட்சியானது, எப்படிக் கர்த்தருடைய பின்னடியார்கள் இன்று அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து, சொல்லர்த்தமான சிலுவையை அல்ல, அடையாளமான சிலுவையை அவரோடு கூடச் சுமந்து செல்ல வேண்டும் என்பதற்கான மிக அருமையான விளக்கமாக அமைகின்றது.

பேதுருவும், யோவானும், யாக்கோபும் மற்ற அப்போஸ்தலர்களும் போதகருக்கு உதவி கரம் வழங்குவதற்குப் பதிலாக, எங்கே போனார்கள் என்று நம் எண்ணங்கள் எழலாம். அவர்கள், "பொதுவான ஜனங்கள்" என்றும், கலிலேயர்கள் என இழிவாகக் கருதப்பட்டவர்கள் என்றும், இயேசுவுக்கு எதிரான அதிகாரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் கோபம் தங்கள் மீதும் தாவும் என அஞ்சினார்கள் என்றும், இப்படியாக அவர்கள் எண்ணி அஞ்சினதால், பின் வாங்கினார்கள் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். தங்களுடைய போதகர் கடந்து சென்று கொண்டிருக்கும் அனுபவங்கள் குறித்த மாபெரும் குழப்பத்தில் அவர்கள் காணப்பட்டார்கள். மேலும் நமது கர்த்தர் உயிர்த்தெழுந்து இவ்விஷயங்கள் தொடர்பான வேதவாக்கியங்களின் விளக்கத்தை கொடுக்கும் வரையிலும், அவர்கள் எதையும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே, (உதவிக்கரம் அளிப்பதற்கான) இப்படிப்பட்ட வாய்ப்புகள் நமக்குக் கிடைக்கும்பொழுது, நாம் எப்படியாக மகிழ்ச்சி கொள்வோம் என யோசித்துக்கொண்டு, பயங்கரமான தைரியத்துடன் காணப்படுவோம் என யோசித்து நாம் வீண் பெருமை அடையக்கூடாது/கனவில் மிதக்க வேண்டாம். நம்மிடத்தில் இப்பொழுது இருக்கும் வெளிச்சமும், அறிவும், பரிசுத்த ஆவியும் அத்தருணத்தில் அவர்களுக்கு இல்லை என்றும், எல்லாவிதத்திலும் அவர்களைக் காட்டிலும் நமக்கு மிகுந்த அனுகூலங்கள் இருக்கின்றது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனினும், எப்படிப் பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களும் உண்மையுடன் கர்த்தருடைய வேலைகளை நிறைவேற்றினார்கள் என்றும், எப்படி அவருடைய அப்போஸ்தலர்களாகவும், ஊழியர்களாகவும் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை மேலான விதத்தில் சுமந்து சென்றார்கள் என்றும் எண்ணிப்பார்க்கையில் அவர்களில் மகிழ்ச்சி கொள்ளவும், அவர்களைக் கனப்படுத்துவதற்கும் சகல காரணங்களும் காணப்படுகின்றது. இப்பொழுதோ சிலுவை நமக்கு உள்ளது. நமது கர்த்தரிடத்திலும், அவருடைய போதனைகளிலும், அவருடைய பலியிலும் வெளிப்படும் சத்தியமாவது இன்னமும் மனுஷர்களால் புறக்கணிக்கப்பட்டும், இழிவாகக் கருதப்பட்டும் காணப்படுகின்றது. உலகத்தால் மாத்திரம் அல்லாமல், பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களாலும் கூடப் புறக்கணிக்கப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களும், மகிமை, கனம் மற்றும் அழியாமை மற்றும் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கப்போகிறதான அவர்களது நம்பிக்கைகளும் இன்றும் ஏளனத்துடன் நகைக்கப்படுகின்றது. மேலும், நம்மை அன்புகூர்ந்து நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தவரின் பிரதிநிதிகளாக இருந்து, நம்முடைய மாம்சம்

சிலுவையில் அறையப்படும் அனுபவங்களுக்கும், சிலுவை சுமப்பதற்கும் இன்னும் வாய்ப்பு உள்ளது. இவ்விஷயத்தில், கடந்த காலங்களில் நாம் எந்த அளவுக்கு உண்மையாய் இருந்துள்ளோம்? எதிர்காலத்தில் நாம் எந்தளவுக்கு உண்மையாய் இருப்போம்? இதுவே அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதில் உண்மையாய் இருப்பதன் மூலம், நாமும் ஜெயங்கொண்டவர்களாக வருவதற்கான நமது வாய்ப்பாகும்.

## பிதாவே, இவர்களை மன்னியும்

கொல்கொதாவில், கல்வாரியில் வந்து சேர்ந்தவுடன் மரத்தினால் உண்டாக்கப்பட்ட சிலுவைகள் தரையில் வைக்கப்பட்டன. குற்றவாளிகள் அதன் மேல் கிடத்தப்பட்டுக் கைகளிலும், பாதங்களிலும் ஆணி அறையப்பட்டனர். பின்னர், சேவகர்கள் சிலுவையை நிமிர்த்தி ஏற்கெனவே தோண்டி வைக்கப்பட்ட குழிகளில் நிலைநிறுத்தி வைத்தார்கள். இப்படிச் செய்யப்படுவதன் காரணமாக ஏற்படும் சித்திரவதைகள் சொல்லி விளக்குவதைப் பார்க்கிலும், கற்பனை செய்து பார்த்தாலேயே நன்கு விளங்கும். இது மிகவும் கொடுமையான மரணமாகும் என்றாலும், கர்த்தருடைய பின்னடியார்களும், மற்றவர்களும் மரிக்கையில் கடந்துசென்ற மற்றச் சில கொடுமையான முறைகளின் அளவுக்கு அதிகம் கொடுமையானதாக இல்லாமல் கூட இருக்கலாம். இயேசுவின் பலியோ, பாடுகளோ நமக்கான ஈடுபலி விலைக்கிரயமாக இராமல், மரணமே விலைக்கிரயமாகக் காணப்பட்டது. ஆதித் தகப்பனாகிய ஆதாமின் மீது வந்த தண்டனையானது, அவர் அனுபவிக்க வேண்டிய வலியின் அளவாக இருக்கவில்லை. உண்மை என்னவெனில், அவர் ஜீவனை இழப்பதே தண்டனையாக இருந்தது. ஆகவேதான், ஆதாமின் சில பிள்ளைகள் மிகுந்த வலி அனுபவித்து மரித்திருக்கின்றார்கள்; இன்னும் சிலர் வலிகள் அவ்வளவாய் இல்லாமலேயே மரித்திருக்கின்றார்கள். ஆனால், "நீ சாகவே சாவாய்" என்ற தீர்ப்பும் எங்கும் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றது. சில கோணங்களில் பார்க்கையில், கர்த்தர் மரித்துபோவது, போதுமானதாய்க் காணப்படுகின்றது. ஆனால், வேறு சில கோணங்களில் பார்க்கையில் இது போதுமானதல்ல. "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று மோசேயின் பிரமாணத்தில் காணப்படுகின்றது (கலாத்தியர் 3:13). நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவிகளாக இருப்பவர்களுக்கான சாபத்தை அல்லது வெறுக்கத்தக்கதான தண்டனை தீர்ப்பை இயேசு ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவர் பொதுவான உலகத்தின் மீட்பராக இருப்பதோடல்லாமல், யூதர்களின் மீட்பராகவும் கூட இருந்தார். "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலாத்தியர் 3:13).

தோண்டி வைக்கப்பட்ட குழிகளுக்குள் சிலுவை நிறுத்தப்பட்டபோது ஏற்றபட்ட வலியானது, கடந்து சென்ற அனுபவங்களில் மிகவும் வேதனையான ஒன்றாகும் என்று அனுமானிக்கப்படுகின்றது. மேலும் இத்தகைய வலியின் மத்தியில்தான் நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்காக, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கின்றார்கள்" என்று ஜெபம் பண்ணுகின்றார். இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை நமது அருமையான போதகரால்தான் ஏறெடுத்திருக்க முடியும். மேலும் இந்த ஜெபத்தின் வார்த்தைகள் கர்த்தருடைய இருதயத்தின் உணர்வுகளுக்கு ஒத்ததாக இருக்கின்றது என்பதிலும் நமக்கு நிச்சயமே. இதேபோன்ற வார்த்தைகளையுடைய ஜெபத்தைத்தான் முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவானும், மரிக்கும் தருணத்தில் பயன்படுத்தினார் – "அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்போஸ்தலர் 7:60). எனினும் இயேசு ஏறெடுத்த இந்த ஜெபத்தின் வார்த்தைகள் பழமைமிக்க பிரதிகளில் ஒன்றாகிய Vatican Manuscripts/மூலப்பிரதிகளில் இல்லை. மேலும் இது Sinaitic-இல் இடம்பெற்றாலும், பின்னர்ச் சந்தேகத்திற்குரியதாகவே கருதப்பட்டும் வருகின்றது. எனினும், சத்துருக்கள்பால் உள்ள கர்த்தருடைய மனநிலையை வெளிப்படுத்தும் இவ்வார்த்தைகள் மீது நமக்கு ஐயமில்லை. ஏனெனில் இவைகள், "உங்கள் சத்துருக்களை அன்பு செய்யுங்கள், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக நன்மை செய்யுங்கள், அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" என்று போதகர் தம்முடைய பின்னடியார்களுக்குப் போதித்தவைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது.

## அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள்

இயேசுவுக்குக் காவலாய் இருந்த நான்கு சேவகர்கள் சிலுவையை நிறுத்தின பிற்பாடு, அவருக்குச் சொந்தமான வஸ்திரத்தை நோட்டமிட்டுத் தங்களுக்கென எடுத்துக் கொண்டார்கள். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்குபோட்டு, விலையேறப் பெற்றதாய், தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டிருந்த அவருடைய அங்கியின் மீது சீட்டுப் போட்டபோது, அவர்கள் சங்கீதம் 22:18-ஆம் வசனத்தின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றினார்கள் எனக் கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை. இப்படியாகவே, முழு உலகமும் காணப்படுகின்றது. பல காரியங்கள் நாளுக்கு நாள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. மேலும் இதில் நம்மில் அநேகர் பங்குபெறவும் செய்கின்றோம். ஆனால், வெகு சிலரே அவைகளைக் காணவும், புரிந்துகொள்ளவும் செய்கின்றனர். ஏனெனில், சிலருக்கு மாத்திரமே பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் உள்ளது. "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்…… அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்" என்ற தீர்க்கத்தரிசனங்கள் நம்முடைய நாட்களில் நிறைவேறியுள்ளது (தானியேல் 12:1-4). எனினும், சொற்பமானவர்களே, தாங்கள் விசேஷமான மற்றும் அருமையான காலப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், இவைகள் அனைத்தும் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்கள் என்பதையும் கண்டு ஒப்புக்கொள்கிறார்கள்.

## வஞ்சகன் என்று அவர் நிரூபிக்கப்படுவதற்கான போலி நிரூபணங்கள்

மக்கள் கூட்டம் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. மேலும் சமீபகாலத்தில் கழுதையின் மேல் யூதர்களின் இராஜாவாக வந்தவரை அதிகாரிகள், மக்கள் கூட்டத்தாரோடு சேர்ந்து ஏளனம் செய்து சிரித்தார்கள். அவர் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தின அற்புதங்களையும், மரணத்தினின்று உயிர்ப்பெறச் செய்த அற்புதங்களையும் முன்வைத்து, "இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மேசியாவானால் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளட்டும்" என்று கூறினார்கள். இவர்கள் எவ்வளவு வஞ்சிக்கப்பட்டுள்ளனர். மேலும் இது மனிதனின் நியாயத்தீர்ப்புக் குறித்த விஷயத்தில் அவன் எவ்வளவாக தவறு இழைக்கக்கூடியவன் என்றும், தேவன் மற்றும் அவர் வார்த்தைகள் தொடர்பான விஷயங்களில் விசேஷமாக, ஆழமாகப் பார்க்க வேண்டியதன் அவசியம் எவ்வளவாய் இருக்கின்றது என்றும், நமக்குக் கற்றுத்தரக்கூடியதாக இருக்கின்றது. சற்று முன்பு வரையிலும் அதிகாரிகள் தங்களின் நடவடிக்கைக் குறித்து ஏதேனும் மனசாட்சியில் உள்ளுறுத்தல் கொண்டிருந்தாலும் கூட, இப்பொழுது அவர்கள் அதை வெளிப்படுத்தவில்லை. ஏனெனில், நமது கர்த்தர் ஓர் ஏமாற்று பேர்வழி, வஞ்சகன் என அவர்கள் இப்பொழுது முழுதும் நம்பினவர்களாயிருந்தார்கள்/தங்கள் இருதயத்தில் தங்களையே நம்ப வைத்துக்கொண்டார்கள். ஆகவேதான், "அவருடைய இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரக்கடவது" என்று துணிந்து கூறினார்கள். இவர்களுடைய மனசாட்சி கண நேரம் குத்தப்பட்டிருப்பினும், இவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையப்பட்டவராக, உதவியின்றி மரித்துக்கொண்டிருப்பவராக பார்த்த மாத்திரத்தில் குத்தல்கள் அனைத்தும் மறைந்துபோயிற்று/சாந்தியடைந்துவிட்டது. இது ஒரு பரீட்சையே என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள்; ஒருவேளை அவர் மேசியாவாக இருப்பாரானால் சந்தேகத்திற்கு இடமின்றி அவர் இவ்விதமான அவமானத்திற்குரிய நிலையில் பாடுபடமாட்டார். மாறாக, அவர் சிலுவையை விட்டு உடனடியாக இறங்கி வந்துவிடுவார் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆகவேதான், தங்கள் ஜனங்கள் மீது அதிகாரமும், ஆளுகையும் செலுத்திக் கொண்டிருக்கும் ஆசாரியருக்குரிய அதிகாரத்தைக் கவிழ்த்திப்போடும் போதகம் உடையவரும், தேசத்தின் சமாதானத்தைக் குலைப்பவருமானவரை அப்புறப்படுத்தும் விஷயத்தில், தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையானது ஞானமுள்ளதாகவும், சரியானதாகவும் இருக்கின்றது என்பதற்கான நிரூபணம் தங்களிடத்தில் உள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த யுகத்தின் அறுவடையின் போதும், நிஜமான பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேல் மத்தியில் முன்பு இருந்தது போன்று சத்தியமானது கட்டுக்கதைகளைக் காட்டிலும் அந்நியமானவைகளாகக் காணப்படுகின்றது. மேலும் கர்த்தருடைய ஆவியினால் வழிநடத்தப்படாமலும், தவறான இருதய நிலை உடையவர்களுமாகிய திரளான ஜனங்களும், அவர்களின் அதிகாரிகளாகிய (Doctors of Divinity) வேதசாஸ்திரிகளும், சத்தியத்திற்குக் குருடாக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு காலம் வரவிருக்கின்றது. அப்போது,

கர்த்தருக்கும், அவருடைய சத்தியத்திற்கும் உண்மையாய் நிற்கப்போகிற அனைவருக்கும் எதிராக வல்லமைகள் செயல்படுத்தப்படும். இவர்கள் மரித்தால் நன்மை உண்டாகும் என்ற பெயரில் இவர்களுக்குத் துன்பம் வரும். அதாவது, இப்படிப்பட்டவர்களின் செல்வாக்கானது அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் மத அமைப்புகளுக்கு எதிராக செயல்பட அனுமதிப்பதைப் பார்க்கிலும், சொற்பமான இப்படிப்பட்டவர்களுக்கு அநீதி செய்யப்படுவது நலமாயிருக்கும் என்று சொல்லப்படப்போகும் வேளை வரவிருக்கின்றது.

யூத அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் உரோம சேவகர்களும், யூதர்களின் இராஜாவாகச் சிலுவையில் அறையப்பட்டிருந்த அவரை ஏளனம் பண்ணி சிரித்தார்கள். அவருடைய தலைக்கு மேல், "இவர் யூதர்களின் இராஜா" என்று முழு மக்கள் கூட்டமும் வாசிக்கத்தக்கதாக இலக்கிய மொழியாக கிரேக்கத்திலும், ஆளுகை செய்பவர்களாகிய உரோமர்கள் வாசிக்கத்தக்கதாக இலத்தீன் பாஷையிலும், அந்தத் தேசத்து ஜனங்கள் வாசிக்கத்தக்கதாக எபிரெய பாஷையிலும் எழுதப்பட்ட பலகையின் வார்த்தைகளை வாசிப்பவர்களுக்கு, அங்கு நிலவின சூழ்நிலைகள் அர்த்தமற்றதாகக் காணப்பட்டது. ஒரு தேசத்தின்/ஜாதியாரின் இராஜா இவ்விதமாக அவருக்குச் சொந்தமான ஜனங்களினால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார், தாக்கப்பட்டுள்ளார், குற்றவாளியாகக் கண்டனம் செய்யப்பட்டுள்ளார்! அவருடைய பலத்தை அவர்கள் எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுள்ளார்கள்! அவரால் சிலுவையிலிருந்து இறங்கி வந்திருக்க முடியும், மரிக்க மறுத்திருக்க முடியும், அவர்களுடைய கேலி பேச்சுக்களை எதிர்த்திருக்கவும் முடியும். தம்மைக் காத்துக்கொள்வதற்குப் பன்னிரண்டு லேகியோன்களுக்கு அதிகமான தூதர்களையும் அப்போது பெற்றுக்கொண்டிருந்திருக்கவும் முடியும். ஆனால், இப்படி நடந்துகொள்வது அவருடைய அர்ப்பணிப்புக்கு எதிரானதாகவும், பிதாவின் சித்தத்திற்கு இசைவில்லாததாகவும் ஆகிவிடும். மேலும் எதிர்கால வாழ்க்கைக்குரிய நம்பிக்கையில்லாமல் ஆதாமின் சந்ததியாராகிய நாம் மரணத்தீர்ப்பின் கீழேயே விடப்பட்டவர்களாகிவிடுவோம்; அதாவது மிருகஜீவன்கள் மரிப்பதுபோன்று எவ்வித எதிர்கால நம்பிக்கையுமில்லாமல் மரித்துப் போயிருப்போம்.

நமது அருமையான மீட்பர் அவர் வையப்படும்போது பதில் வையாமலும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேல் சினம் கொள்ளாமலும், தம்மைத் தண்டிக்கிறவர்களைத் தாக்காமலும் இருந்தபடியினால் நாம் எவ்வளவாய்ச் சந்தோஷமடைய முடிகின்றது. நம் சார்பாக, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பலியை ஒப்புக்கொடுக்க காரணமாயிருந்த அவருடைய அன்பு மற்றும் அவருடைய உண்மையினிமித்தம் நாம் எவ்வளவாய்ச் சந்தோஷமடைய முடிகின்றது. கர்த்தருக்குப் பரிசாகவும், பிதாவின் அங்கீகரிப்பிற்கான அடையாளமாகவும், அவருக்குக் கிடைத்த மகா கனம், மகிமை, ஆளுகை மற்றும் முடிவில்லாத/எல்லையற்ற வல்லமையில் நாம் எவ்வளவாய்ப் பேரானந்தம் கொள்ள முடிகின்றது. மேலும் இது, அவருடைய கிருபையினாலும், உதவியினாலும் அவருடன் கூட அவருடைய இராஜ்யத்தில் நாம் உடன் சுதந்தரர்கள் நிலையை அடைய முடியும் என்ற எத்துணை நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

## என்னோடுகூடப் பரதீசில்

அவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் சிலர் அனுதாபப்படுகிறவர்களாகவும், சிலர் ஏளனம் பண்ணுகிறவர்களாகவும் காணப்பட்டது போன்று, இயேசுவோடு கூடச் சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களின் மனதிலும் கூட, இப்படிப்பட்ட உணர்வுகள் எழுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இயேசுவோடு கூட இவர்கள் இருவரும் வந்தபடியினால், அவருடைய சாந்தத்திற்கும், பெருந்தன்மைக்கும், பொறுமைக்கும், தேவன் மீதான விசுவாசத்திற்கும் இவர்கள் இருவரும் சாட்சிகளாய் இருந்தும், இவர்களில் ஒருவனே இவைகளை உணர்ந்துகொள்ளத்தக்கதான புரிந்துகொள்ளுதலின் கண்களைப் பெற்றிருந்தான். மற்றவனோ, அதிகாரிகளைப் போன்றும், ஜனங்கள் போன்றும் குருடனாக இருந்தபடியினால், அவர்களோடு கூடக் கர்த்தரை வஞ்சகன் என்றும், மாய்மாலக்காரன் என்றும் வைய ஆரம்பித்தான். முதலாவது கள்வன் குறிப்பிடத்தக்கதான விசுவாசத்தை வெளிப்படுத்தினவனாக, மற்றவனை நோக்கி, "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்" (லூக்கா 23:40, 41). நம் கர்த்தருடைய வெளிச்சம் இருளில் பிரகாசித்தது. ஆனால், இருளின் பிள்ளைகளோ அதைப் புரிந்துகொள்ளவில்லை. மாறாக அவருடைய சீஷர்களோ, அதனை புரிந்து கொண்டார்கள். ஆகவே

இந்தப் பாவப்பட்ட கள்வனும் கூட நமது கர்த்தர் அநீதியாக துன்பப்படுத்தப்படுகின்றார் என்றும், அடிக்கப்படுகின்றார் என்றும், அதேசமயம் இவைகள் அனைத்தையும் அவர் பொறுமையுடன் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் உணர்ந்து கொண்டான்.

இக்கள்வன் இயேசுவைக் குறித்தும், அவர் மேசியா எனச் சிலரால் உயர்வாகக் கருதப்படுகின்றார் என்பதைக்குறித்தும் கேள்விப்பட்டிருப்பான் என்பதில் ஐயமில்லை. மேலும் முரண்பாடான சூழ்நிலைகள் நிலவிக்கொண்டிருப்பது அவனுக்குத் தென்பட்டிருந்த போதிலும், நமது மீட்பரிடத்தில் இராஜாவுக்குரிய அந்தஸ்து/தோற்றம் காணப்படுவதை அவனால் உணரமுடிந்தது. மேலும் இவ்வுணர்வு அவனுக்குள்ளே பெருகிக்கொண்டிருந்தது என்பதிலும் ஐயமில்லை. இவர் ஆவிக்குரிய உலகத்தைச் சார்ந்த பெரியவர்களில் ஒருவராக ஒருவேளை இருப்பாரோ? இவர் சொல்வதுபோன்று ஒருவேளை வேறு ஒரு காலத்தில் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துவிட்டால் என்ன செய்வது? இந்த அதிகாரிகள் ஒருவேளை சுயநலம் மற்றும் பொறாமை காரணமாகத்தான் இவருடைய போதனைகளுக்குக் குருடாய்ப் போயிருப்பார்களானால் என்ன செய்வது? என்ற எண்ணங்கள் அவனுக்குள் அலைபாய்ந்தன. மேலும் தன்னோடிருந்த மற்றக் கள்வன் அவரை ஏளனம் செய்ய முற்பட்டபோது, இக்கள்வன் இரட்சகரின் சார்பாக அவரைப் பாதுகாக்கும் வண்ணம் தன்னுடைய வாயைத் திறந்தான். இக்கள்வன் தனது அபாத்திரமான நிலையை ஒப்புக்கொண்டவனாக, "சர்வவல்லவரின் கரங்களில் நம்முடைய எதிர்க்காலம் எப்படியாக இருக்குமோ என்று நம் மரண நேரத்தில் பயம் கொள்வதற்கு எனக்கும், மற்றக் கள்வனாகிய உனக்கும் காரணங்கள் இருக்கின்றது. ஆனால் இங்குப் பழித் தூற்றப்பட்டு, அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டுக் காணப்படும், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்பதற்கு நாமும் சாட்சியாக இருக்கின்றோமே" எனக் கூறி, நியாயத்தை எடுத்துக் கூறினவனாகக் காணப்படுகின்றான்.

## ஆண்டவரே, அடியேனை நினைத்தருளும்

இக்கள்வன் மற்றக் கள்வனைக் கடிந்து கொண்டு நமது கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் பண்ணினான் (லூக்கா 23:42). அதாவது "நீர் உம்முடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும் போது, அது எங்குக் காணப்பட்டாலும் சரி, என்ன சூழ்நிலைகளின் கீழ்க் காணப்பட்டாலும் சரி, இராஜ்யம் உம்முடைய வல்லமைக்குள் இருக்குமாயின் அடியேனை நினைத்தருளும். என்னைவிட நீர் மிகவும் அப்பாற்பட்டவராகவும், எங்கள் அனைவரைக்காட்டிலும் மிகவும் உயர்ந்தவராகவும் நான் காண்கின்றேன். உம்முடைய பிரஜைகளில் உள்ள சிலரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்ட வல்லமையுள்ள இராஜாவாய் இருக்கின்றீர் என்று எனக்குத் தோன்றுகின்றது. இவ்விண்ணப்பத்தை நான் உம்மிடத்தில் வேண்டிக்கொள்கின்றேன். நான் கேட்பது மற்றவர்களின் பார்வைக்கு முட்டாள்தனமாக இருந்தாலும் பரவாயில்லை. நீர் ஓர் இராஜாவாகும் பொழுது, "அடியேனை நினைத்தருளும்"; ஏனெனில் ஏதோ ஒருவிதத்தில், ஏதோ ஒரு காலக்கட்டத்தில், எங்கோ ஓர் இடத்தில் நீர் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டிருப்பீர் என்று நான் மெய்யாகவே விசுவாசிக்கின்றேன். ஏனெனில் நீர் அதற்கு நிச்சயமாகப் பாத்திரவானாயும் இருக்கின்றீர்" என்ற விதத்தில் கூறினான்.

இதற்கு நமது கர்த்தர் பதிலளித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ள வார்த்தைகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகுந்த விவாதம் எழக் காரணமாய் இருக்கின்றது. ஆங்கிலத்தில் இவ்வசனமானது, கர்த்தர் அந்நாளிலேயே பரதீசில் இருக்கப்போவதாகவும், அன்றைய தினமே கள்வனும் பரதீசில் வந்து, அவர் கரத்தில் இருந்து ஆசீர்வாதத்தையும், தயவையும் பெற்றுக்கொள்வான் என்பதுபோன்று கருத்தைக் கொடுக்கின்றதாக தோன்றுகின்றது. பரதீஸ் என்பது பரலோகம் எனப் புரிந்துகொள்ளப்படுமாயின், இதில் சில சிக்கல்கள் ஏற்படும் என்பதை நாம் அறிவோம். ஏனெனில், நமது கர்த்தர் அந்நாளில் பரலோகம் செல்லவில்லை. அப்போஸ்தலர் தீர்க்கதரிசியான தாவீதின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி, அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுதல் அடையும் வரையிலும் அவர் ஷியோலில் (SHEOL), கிரேக்க வார்த்தையில் - ஹேடிசில் இருந்தார் என்று கூறுகின்றார் (அப்போஸ்தலர் 2:31; சங்கீதம் 16:10). நமது கர்த்தரும் கூட அவர் உயிர்த்தெழுந்த காலையில் அவர் இன்னமும் அவருடைய பிதாவிடத்திலும், சீஷர்களின் பிதாவிடத்திலும், தம்முடைய தேவனிடத்திலும், சீஷர்களின் தேவனிடத்திலும் ஏறிப்போகவில்லை எனத் தம் சீஷர்களிடம் சொல்லும்படிக்கு மரியாளிடம் கூறினார். "அவர் அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில்

உயிர்த்தெழுந்து," (1 கொரிந்தியர் 15:4) என்ற வசனத்தில் இடம்பெறும் பவுலின் வார்த்தைகளையும் கவனியுங்கள்.

## இழந்துபோகப்பட்ட பரதீஸ் மீண்டும் கொண்டுவரப்படும்

வேதவாக்கியங்களில் குறிப்பிடப்படும் பரதீஸ் என்கின்ற வார்த்தையானது, ஆதாமும், ஏவாளும் துரத்தப்பட்டதுமான ஏதேன் தோட்டத்தையே குறிக்கின்றது. மேலும் நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்து, தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, முழு உலகமும் பரதீசாக மாற்றப்படும். இயேசுவின் கள்வனோடு கூட நடந்த இச்சம்பாஷணையானது, நடப்பதற்கு பல காலங்களுக்கு முன்னதாகவே, ஏதேன் தோட்டம் அழிந்துவிட்டது. ஆகவே கர்த்தர் குறிப்பிட்டது, இராஜ்யத்தின் பரதீசாகத்தான் இருக்க முடியும். கர்த்தர் பேசின வார்த்தைகளில் இடம்பெறும் "இன்று" என்ற வார்த்தையின் அடிப்படையிலேயே முழுக் கேள்விகளும் எழும்புகின்றது. ஆனால், இன்றைய ஆங்கில வேதாகமங்களில் (இன்று) Today என்ற வார்த்தைக்கு முன்பு போடப்பட்டிருக்கும் காற்புள்ளியை, Today என்ற வார்த்தைக்குப் பின்பு போட்டுப் பார்க்கும்பொழுது, அர்த்தம் தெளிவாகின்றது. இப்பொழுது வசனம் இப்படியாக வாசிக்கப்பட வேண்டும்: "மெய்யாகவே, நான் உன்னிடம் இன்று (எல்லாம் சாதகமற்றதாய்த் தென்படுகையில், நான் வஞ்சகனாகக் கருதப்படுகின்ற நிலையில், என்னுடைய சத்துருக்களின் அவமதிப்புகளுக்கும், பழித் தூற்றுதலுக்கும் நான் ஆளாகிக் காணப்படும் போதிலும், இன்று) சொல்லுகின்றேன், நீ என்னுடன் கூட பரதீசில் இருப்பாய்." அன்றைய தினம் கர்த்தரும், அக்கள்வனும், ஹேடிசுக்கு, கல்லறைக்கு, மரணநிலைக்குள் போனார்கள். கர்த்தர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆனால், கள்வனோ மீதமான/மற்ற எல்லா உலக ஜனங்களுடன் உணர்வற்ற நிலையில் மாபெரும் மரணம் எனும் சிறைச்சாலையில் கைதியாகவே காணப்படுகின்றான்.

கர்த்தர் தமது இரண்டாம் வருகையின்போது, ஏற்றக்காலத்தில் கல்லறையிலிருந்து கள்வனை அழைப்பார். அப்பொழுது, அவன் பரதீசுக்கு வருவான். காரணம், அப்பொழுது முழு உலகமும் கர்த்தருடைய மகிமையினாலும் நிரப்பப்பட்டுக் காணப்படும். மேலும், நீதியின் சூரியன் தெய்வீகச் சத்தியத்தின் ஒளியினால் பூமியை நிரப்புவார். அப்பொழுது, குறிப்பிடத்தக்க அளவில் விசுவாசம் கொண்டிருந்த கள்வன் நினைவுகூரப்படுவான். மேலும், அவன் காட்டின விசுவாசத்திற்கு ஏற்ப ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்வான். இன்னுமாக, மீட்பர் இறந்துபோகும் தருவாயில், அவன் அவருக்குப் புரிந்த ஊழியத்திற்கு (அவரை மற்றக் கள்வன் பழிதூற்றினபோது, அவருக்காக இக்கள்வன் நியாயத்தை எடுத்துக்கூறினதே இவன் இயேசுவுக்குப் புரிந்த ஊழியமாகும்) ஏற்ப ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்வான். அக்கள்வனின் வேண்டுகோளானது, மேசியா அவருடைய இராஜ்யத்தில் வரும்போது, நினைவுகூரப்படும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோன்று பூமியிலும் செய்யப்படுவதாக" என்று நாம் இன்னமும் ஜெபம் பண்ணுகிறவர்களாக இருக்கின்றோம். அவருடைய இராஜ்யம் வராததுவரையிலும் எவ்விதமான பரதீசும் இருப்பதில்லை. நமது கர்த்தருடைய பதில் வார்த்தைகளின், "மெய்யாகவே, மெய்யாகவே"என்ற பதம் "அப்படியே ஆகக்கடவது" என்பதை குறிக்கின்றதாய் உள்ளது. அதாவது, நீ கேட்பதுபோல் நீ என்னோடுகூடப் பரதீசில் இருப்பாய், இருளின் வல்லமையும் மற்றும் பாவிகளின் முரண்பாடுகளும் செயல்படும் சூழ்நிலைகளின் மத்தியில் இன்று நான் உனக்கு இதைக் கூறுகின்றேன் என்ற விதத்தில் கூறினார்.

## பரதீசில் கொஞ்சம் அல்லது அதிகமான அடிகள்

தற்காலங்களில் தேவனுடைய கிருபையைக் கண்டு ருசிபார்த்துவிட்டு, வேண்டும் என்றே அவர் கிருபையை மறுத்துப்போனவர்கள் தவிர, மற்ற மனுக்குலம் முழுவதும் பரதீசின் பாக்கியமான வாய்ப்புகளை, ஆயிரம் வருஷம் அரசாட்சியின் கீழ்ப் பெற்றுக்கொள்வார்களா? ஆம், என்று நாம் பதிலளிக்கின்றோம். குருடாய் இருந்த மற்றக் கள்வனும் அங்கு இருப்பான். கர்த்தரை வசைக்கூறி, இகழ்ந்து அவரை "சிலுவையிலறையும்" என்று கூக்குரலிட்டவர்களும், அவரைக் குத்தினவர்களும், "இவருடைய இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் வரட்டும்" என்று கூறினவர்களுமான இந்த அனைத்துக் குருடர்களும் அங்கு வருவார்கள். "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும் . . . . . . . எழுந்திருக்கிறவர்களாகவும்

புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29). ஆனால், இவர்களை விட கர்த்தருக்கு நண்பர்களாய் இருந்தவர்களுக்கு எவ்விதமான அனுகூலங்கள் காணப்படும்? எல்லாவிதத்திலும் கர்த்தருடைய நண்பர்களாய் இருந்தவர்களுக்கு மிகுந்த அனுகூலம் காணப்படும் என்பதே நமது பதிலாகும். முதலாவதாக, விசுவாசிப்பதன் மூலம் தற்காலத்திலேயே அவர்கள் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள். கர்த்தருடைய அனைத்துச் சீஷர்களும் இதை அறிவார்கள். மேலும் விசுவாசம் வைத்த கள்வனும் கூட இவ்விசுவாசத்தின் மூலம் ஆசீர்வாதத்தை உணர்ந்து கொண்டான் என்பது உறுதியே. மேலும் அக்கள்வன் மகிழ்ச்சியுடன் மரித்தான். விசுவாசம் வைக்காதவர்களின் மனமானது இப்பிரபஞ்சத்தின் அதிபதியினால் குருடாக்கப்பட்டிருக்கின்றது என்று வேதவாக்கியங்கள் கூறுவதினால், குருடாய் இருப்பவர்கள் தங்கள் குருட்டுத் தன்மைக்கு முழுப் பொறுப்பாளிகளாக இராவிட்டாலும், எதிர்கால வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், சிலவற்றிற்கு அவர்கள் பொறுப்பாளிகளாக கூட இருப்பார்கள் மற்றும் தற்காலத்தில் அவர்களின் துணிகரமான பாவத்தின் அளவிற்கு ஏற்ப, எதிர்காலத்தில் அவர்கள் சிலவற்றில் ஊனராய்க் காணப்படுவார்கள்.

விசுவாசித்த கள்வன் பரலோகத்திற்கென நிச்சயமாக ஆயத்தமாக்கப்படவில்லை. அவன் ஆவியில் ஜெநிப்பிக்கப்படவும் இல்லை. ஆதலால் உயிர்த்தெழுதலின் மூலம் அவனால் ஆவியில் பிறக்கவும் முடியாது. அவன் ஆவிக்குரிய கனிகளையும், கிருபைகளையும் வளர்த்துக் கொள்ளாததால் அவன் ஜெயம்கொண்டவனாகவும், பரிசுத்தவான்களுடன் உடன் சுதந்தரமுள்ளவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாது. ஆனால் அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகளில் அவனுக்குள் ஏற்பட்ட/வளர்ந்த விசுவாசமானது கர்த்தரைக் காக்குமளவு செயல் புரிந்த காரியங்களானது, அவனிடத்தில் நீதியின் மீதான அன்பு மற்றும் கொள்கை இருதயத்தில் அதிகமாகவே காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் சூழ்நிலைகளின் கீழ் விசுவாசமுள்ள அந்தக் கள்வன், கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் கீழ் மிகவும் வேகமாக வளர்ச்சியில் முன்னேறி, ஆதாமுக்குள் இழக்கப்பட்டு, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட அனைத்திற்குமான முழுப் பூரணத்திற்கு முன்னேறுவான் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் அல்புரோட் அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார்: "அவமானம், வலி மற்றும் ஏளனம் மத்தியிலும் கூடச் சிலுவையில் அறையப்பட்டவரை இராஜா என்று புரிந்துகொள்ள துணிந்த அந்தக் கள்வனுடைய விசுவாசத்தின் வலிமையும், பலமுமே உண்மையில் ஆச்சரியத்திற்குள் ஆழ்த்துகின்றது. எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசமுள்ள வீரர்கள் போன்று, இக்கள்வன் பிரசித்தமான இடத்தைப் பெற்றுக்கொள்வான்."

## பூமியை இருள் மூடினது

மதிய வேளையளவு இயேசு தமது தாயும், யோவானும் தம் அருகே நிற்கிறதைக் கண்டு, "தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்" (யோவான் 19:26, 27). நமது கர்த்தருடைய வேதனையின் உச்சக்கட்டத்திலும் கூட அவர் தம்மைப் பற்றி எண்ணுவதைப் பார்க்கிலும், தம்முடைய சீஷர்கள் மற்றும் தமக்கு அருமையாய் இருப்பவர்கள் குறித்தும் எண்ணினவராகக் காணப்படுகின்றார். இச்சமயத்தில்தான் இருள் பூமியைச் சுமார் மூன்று மணி நேரம் மூடிக்கொண்டது. சந்தேகத்திற்கு இடமின்றி இருளின் நிழலானது, சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு சூரிய ஒளியைக் காட்டிலும், இதமாக இருந்திருக்க வேண்டும். உண்மைதான், இத்தகைய (சிலுவையின்) காட்சியின் மீது இயற்கையானது தனது திரைச்சீலையைப் போர்த்தினது. மேலும் இது உலகத்தின் ஒளியாக இருக்கும் அவர் மேல் இருளின் வல்லமையானது, தற்காலிகமாக ஜெயம் கொள்வதைக் கூடச் சித்தரிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. தேவனுக்கும், நமது கர்த்தருக்கும் நன்றி. பாவத்திற்கான அவருடைய ஆசீர்வாதமான பலியின் மூலம், சகல நிழல்கள் வெகு சீக்கிரத்தில் கடந்து போய்விடும். ஏனெனில், பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்கென நீதியின் சூரியனானது, சுகமளிக்கும் செட்டைகளுடன் எழும்பிப் பிரகாசிக்கும்.

# ஆவியை ஒப்புக்கொடுத்தார்

நமது பாடத்தின் கடைசி வசனமானது, நமது கர்த்தருடைய கடைசி வியாகுலத்துடன் கலந்த உரத்த கூக்குரலாய் இருக்கின்றது; அதாவது எஞ்சியிருந்த பலத்தைப் பயன்படுத்தி உரக்கக் கத்தினார். "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அவருடைய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கெத்செமனே தோட்டத்தில் தூதன் வந்து, இதுவரையிலும் அவரது நடத்தைகள் பிதாவின் பார்வையில் பிரியமாயும், அங்கீகரிக்கப்படக் கூடியதாகவுமே இருந்துள்ளது என்று நிச்சயம் கொடுத்து அவரைப் பெலப்படுத்தின நேரம் முதல், நமது அருமையான எஜமானிடம் மிகுந்த அமைதியை நம்மால் காணமுடிந்தது. ஆனால், பாவிக்குரிய கசப்பான அனுபவமும் பெற்றுக்கொண்டு, பிதாவுடன் கொண்டிருக்கும் ஐக்கியம் துண்டிக்கப்படும் அளவிற்கு அனுபவங்களுக்குள் அவர் செல்ல வேண்டியது அவசியமாயிருந்தது. தேவனுடைய ஏற்பாட்டின்படி இந்த நிலை அதிக நேரம் நீடிக்கப்படவில்லை. மாறாக, "ஒரு கணம்" மாத்திரமே அனுமதிக்கப்பட்டது. பிதா தம்முடைய அருமையான/பிரியமான குமாரனிடமிருந்து தம் முகத்தை மறைத்துக் கொண்டது என்பது, சகல ஆவிக்குரிய ஐக்கியத்தையும், உறவையும் எடுத்துப் போடுவதைக் குறிக்கின்றது. ஒரு கணப்பொழுது நம்முடைய மீட்பர் இருளின் ஆழத்திற்குள்ளாக விடப்பட்டு விட்டார். மேலும் அவருடைய வேதனை நிறைந்த கதறல்கள், அவர் இருதயத்தில் தனிமைப்படுத்தப்பட்டதைக் காட்டுகின்றது. ஜனங்கள் மாத்திரம் அவரைத் தனித்து விட்டுவிடுவது போதாது. பிதாவும் தற்காலிகமாக அவரைத் (இயேசுவை) தக்க வைக்கும் வலிமையையும், உதவியையும் எடுத்துவிட வேண்டியிருந்தது.

எனினும், நமது கர்த்தர் ஜெயங்கொண்டார். மேலும், அவருடைய இறுதி வார்த்தைகள், "பிதாவே. உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கின்றேன்" என்பதேயாகும். மேலும் இப்படிக் கூறி தம்முடைய ஜீவனை (ghost) விட்டார் என்று பார்க்கின்றோம். இங்கு ஆங்கில வேதாகமத்தில் வரும் ghost என்ற வார்த்தையானது, ஆவி எனும் பொருளைக் கொடுக்கின்றது. அதாவது, கர்த்தர் தமது ஆவியை, ஜீவ சுவாசத்தை விட்டார் என்று பொருள்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர் தமது கடைசி மூச்சைவிட்டார், தமது ஜீவனைப் போக விட்டார் என்பதாகும்.

"உம்முடைய கரங்களில் என்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கின்றேன்." அதாவது, என் சுவாசத்தை, என் ஜீவனை ஒப்புக்கொடுக்கின்றேன் என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன? நம்முடைய பதில் என்னவெனில்! தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தபோது, முதலாவது, ஆதாமை உண்டுபண்ணி, அவருக்கு ஜீவனாகிய அன்பளிப்பைக் கொடுத்தார். ஆனால் இந்த அன்பளிப்பை வைத்திருப்பதற்கான உரிமையைக் கீழ்ப்படியாமையினிமித்தம் இழந்துபோனார். ஆதாம் தன்னுடைய சந்ததிக்கு ஜீவனின் ஒரு துகளைக் கொடுக்க முடிந்ததே ஒழிய, பூரணமான ஜீவனைக் கொடுக்க முடியவில்லை. காரணம், அதற்கான சகல உரிமைகளையும் அவர் இழந்து போய்விட்டார். ஆகவே, ஆதாமும், அவருடைய சந்ததியின் ஒவ்வொரு அங்கமும் மரிக்கையில் அவர்கள் ஜீவனுக்கு அபாத்திரர்கள் மற்றும் ஜீவனை அவர்கள் வைத்துக்கொள்ளவோ அல்லது அதைக் கேட்கவோ என்றென்றும் அதிகாரமில்லை எனும் தெய்வீகத் தீர்ப்பின் பிரகாரம் தங்களது ஜீவனைத் தேவனிடத்தில் ஒப்படைத்துவிடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், நமது கர்த்தர் இயேசுவின் விஷயமோ வேறுபட்டதாகும். ஆதாமிடமிருந்து பெற்றுக்கொள்ளாத ஜீவனை அவர் பெற்றிருந்தார்; பரலோகத்தின் நிலையிலிருந்து மாற்றப்பட்ட ஜீவனை உடையவராக இருந்தார். அவரிடம் ஜீவனுக்கான உரிமை இருந்தது. மேலும், அவருக்கு உரிமையான இந்த ஜீவனைத்தான் அவர் ஆதாம் மற்றும் அவர் சந்ததிக்குரிய ஈடுபலியின் விலைக்கிரயமாக ஒப்புக்கொடுத்தார். இந்த ஜீவன் மீதான தமது பிடியை அவர் விடுகையில் அதை அவர் பிதாவினிடத்தில் ஒப்படைத்தார். பிதாவாகிய தேவன், குமாரன் இப்படியாக ஒப்படைக்கும் ஜீவனானது, அவர் மேலான ஒரு ஜீவனை அதிகமான அனுகூலங்களுடன் பெற்றுக்கொள்வதற்கு உரிமைகொடுக்கும்/வழிவகுக்கும் என ஏற்கெனவே வாக்களித்திருந்தார். நமது கர்த்தரும் வாக்களிக்கப்பட்டிருந்த இந்த மேலான ஜீவனை, மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுகையில் பெற்றுக்கொண்டார். "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18).

*****

# பயண சகோதரர்களின் ஊழியங்கள்

இந்த வகை ஊழியங்களானது, மிகவும் பிரயோஜனமான ஒன்று என்றும், கடந்த காலங்களில் கர்த்தருடைய அருமையான மந்தைக்கு மிகவும் பிரயோஜனமாய் இருந்துள்ள ஒன்று என்றும் நாம் நம்புகின்றோம். "பயண சகோதரர்கள்"/Pilgrims என்ற சகோதரர்கள் சத்தியத்தினைப் பற்றின தெளிவான அறிவுடையவர்களாய் மாத்திரம் இராமல், கூடவே சத்தியத்தினை முன்வைப்பதற்கு சராசரிக்கு மேலான திறமையை உடையவர்களாயும் இருப்பார்கள். சொசைட்டியினுடைய செலவில் இவர்கள் ஓரிடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்குச் சென்று, ஒவ்வொரு முறையும் அருமையான நண்பர்களை வழக்கமாக இரண்டு நாட்கள் காலம் சந்திக்கின்றனர். இவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் பண்ணப்படும்பட்சத்தில், இவர்கள் ஒருநாளில் இரண்டுமுறை பேசுவதற்கு ஆயத்தத்துடன் காணப்படுவார்கள். எந்த இடத்திலும் ஒழுங்குபண்ணப்படும் கூட்டங்களில் பாதிப் பொதுவிற்கும், மீதி பாதி விசேஷமாய்ச் சத்தியத்தின் மீது ஆர்வமுள்ளவர்களுக்கும் செலவிடப்படுவதாக என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம் மற்றும் வரக்கூடிய வருஷத்தில் பயண ஊழியக்காரர்களுடைய வருகையின்போது, அவர்கள் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை எப்படிச் சிறப்பாய் நடத்துவது என்பதற்கு மாதிரிகளை விசேஷமாய்க் கொடுத்திடும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம்.

இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நாங்கள் நடத்தி வருகின்றோம்; காரணம் அவைகளைச் சரியாய் நடத்திடுவதற்குக் கற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த ஆராய்ச்சி வகுப்புகளானது எத்தனை பிரயோஜனமானவைகளாக இருக்கும் என்பதையும், அவைகளின் உண்மையான ஆவியானது அதை வழிநடத்துபவராலும், சபையாராலும் புரிந்துகொள்ளப்படாத பட்சத்தில், அவை எவ்வளவு சுவாரஸ்யமற்று இருக்கும் என்பதையும் நாம் அறிவோம். எந்தச் சபைகளில் இந்த ஆராய்ச்சி வகுப்புகளானது மிகவும் கவனமாயும், கருத்தாயும் கையாளப்படுகின்றதோ மற்றும் எங்குத் திறமையான வழிநடத்துபவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்களோ - அதாவது வழிநடத்துபவரே பதிலைக் கொடுத்துக்கொண்டிருக்காமல், சபையாரிடமிருந்து கேள்விக்கான பதிலை வரவழைத்து மற்றும் இறுதியில் பதில்களைச் சுருக்கிக்கூறும் வழிநடத்துபவர் எங்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றாரோ - அங்குப் பலன்கள் மிகவும் சிறப்பாய்க் காணப்படும். அருமையான நண்பர்கள் யாவரும் இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளை நடத்துவார்கள் என்று நாம் நம்புகின்றோம். பெரும்பான்மையான ஜனங்கள் எப்படி ஆராய வேண்டுமென்றோ, எப்படிப் போதிக்க வேண்டுமென்றோ அறியாதிருப்பதினால், தாங்கள் கேட்பவற்றிலிருந்து, வாசிப்பவைகளிலிருந்து உண்மையான உணவை, போஷாக்கைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். வருகிற வருஷத்தில் இந்த விஷயத்தில் உங்களுக்கு உதவிடும்படிக்குப் "பயண ஊழியர்களை" அனுமதித்திடுங்கள்.

திட்டவட்டமான வேண்டுகோள் நமக்கு விடுக்கப்படும்போது மாத்திரமே "பயண ஊழியர்களின்" சந்திப்புத் திட்டம் திட்டமிடப்படுகின்றது மற்றும் ஒவ்வொரு மே மாதமும் நாம் தகவல் அறிந்துகொள்வதற்கான கேள்விகளை வெளியிட்டு, "பயண ஊழியக்காரர்களின்" வருகையினை விரும்புகிறவர்கள் பதிலளிக்கும்படிக்கு வேண்டிக்கொள்கின்றோம்; இதனால் பொது மற்றும் தனிப்பட்ட கூடுகைகளுக்கான அவசியம் மற்றும் சாத்தியக் கூறுகளை நன்கு எங்களால் பகுத்துணர முடிகின்றது. இவற்றை அருமையான நண்பர்கள் எவரிடமிருந்தும் நாம் பெற்றுக்கொள்வதற்கு எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கின்றோம் மற்றும் Tract-வைப்பு நிதிக்கான உங்களது நன்கொடைகள் நன்றியுடன் மதிக்கப்பட்டாலும், அவைகள் இக்காரியத்தில் அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்படுகிறதில்லை. தேவைப்படும் இடங்களிலெல்லாம் "பயண ஊழியர்களை" அனுப்பிவைக்க நாம் நாடுகின்றோம் மற்றும் இதற்கான செலவுகளுக்குரிய வழிவகைகளைப் பார்த்துக்கொள்ளும் காரியத்தினைக் கர்த்தரிடமே விட்டுவிடுகின்றோம். நீங்கள் மிகத் தொலைத்தூரத்தில் காணப்படுகிற காரியமானது, எங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலிருந்து உங்களைத் தடைப்பண்ணிட வேண்டாம் மற்றும் எங்களால் உங்களது வேண்டுகோளின்படி செய்யமுடிகிற அளவுக்குத்தக்கதாகவும், எங்கள் வசத்தில் சகோதரரும், செலவுகளும், பணங்களும் காணப்படும் அளவுக்குத்தக்கதாகவும், நாங்கள் இணங்கிடுவோம் என்றும் நீங்கள் உறுதிக்கொள்ளலாம். "பயண ஊழியக்காரர்" ஒருவர் உங்கள் வழியே வந்துகொண்டிருக்கிறதை கவனித்து, வேண்டுகோள் விடுப்பது என்பது மிகவும் தாமதமாய் வேண்டுகோள் விடுப்பதாய் இருக்கும்; ஏனெனில் அவர்களது பிரயாண பாதைகளானது முன்கூட்டியே பல மாதங்களுக்கு முன்னதாக திட்டமிடப்படுகின்றது மற்றும் அவர்கள் பொதுவாகவே தொடர்ச்சியாய்ப் பிரயாணம் பண்ணிடுவார்கள்; இதனால் பெருமளவில் பிரயாணச் செலவுகள் மிச்சமாகுகின்றது.

**--1336--**

[R3932]

# "சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள்"

[1 பேதுரு 3:8]

சகோதர, சகோதரிகளின் மீதான அன்பே நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்துவம் அடைவதற்கான மறுக்க முடியாத நிரூபனம் என வேதவாக்கியங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. இந்த அன்பு பல்வேறு விதங்களில் காணப்பட்டாலும், நாம் கர்த்தருடையவர்களானால், இந்த அன்பு எவ்வகையிலும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும்; காரணம், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" (ரோமர் 8:9). ஆனால், நம்முடைய இருதயங்களுக்குள் எரிய ஆரம்பித்துள்ள சகோதர, சகோதரிகள் மீதான புனிதமான அன்பாகிய தீ போதுமானதல்ல. இது நம்மில் மனமார்ந்த அன்பை ஏற்படுத்துவதோடல்லாமல், பட்சிக்கிற அன்பை ஏற்படுத்தத்தக்கதாக கொழுந்துவிட்டு எரிய வேண்டும். இந்த பட்சிக்கிற அன்பு, சகோதர, சகோதிரிகளிடத்தில் வெளிப்படும் பல்வேறு பெலவீனங்கள் மற்றும் குறைகளைப் பார்க்காமல் இருப்பதோடு, அவர்களிடத்தில் காணப்படும் ஒவ்வொரு நற்பண்புகளையும் மிக கவனமாகக் கண்ணோக்குகின்றதாக இருக்கும். மேலும், சகோதர, சகோதரிகள் பாவம் மற்றும் பெலவீனங்களுக்கு எதிராக எவ்வளவுதான் போரட வேண்டியவர்களாக இருப்பினும், அவர்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களானபடியினாலும், அவருக்கென்று தங்களை அர்ப்பணித்தவர்களானபடியினாலும், அவர்கள் பொருட்டாக நாம் நம்முடைய ஜீவனையே ஒப்புக் கொடுக்கத்தக்கதாக ஆயத்தமான அன்பும் ஏற்பட வேண்டும்.

நற்பண்புகள் உடையவர்களிலும், விழுகையின் தாக்கம் குறைவாகக் காணப்படும் நபர்களிலும் உள்ள அநேகரை சுவிசேஷ செய்தியானது கவர்ந்து கொள்ள தவறி உள்ளது. ஏனெனில், இவர்களிடம் சுயதிருப்தியின் உணர்வுகள் காணப்படுகிறது. மேலும், இவர்கள் தங்களுக்கு இரட்சகர் தேவை என்று உணராமல், மிகவும் சீர்க்கெட்டு போயிருப்பவர்களுக்கே அவர் தேவைப்படுகின்றார் என்றும் அவரை குறித்து எண்ணுகின்றனர். இவர்களுக்கு நேர்மாறாக, மிகவும் சீர்கெட்ட நிலையில் காணப்படுபவர்கள், தங்களுக்குரிய கவலைக்கிடமான நிலையை ஓரளவு உணர்ந்து கொண்டு, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்ற அழைப்பிற்கு மற்றவர்களைக் காட்டிலும் நன்கு செவிசாய்க்கிறவர்களாகக் காணப்படுகின்றனர் (மத்தேயு 11:28). பாவத்தினால் வாடினவர்களும், பாரஞ்சுமக்கிறவர்களுமே, உண்மையான விசுவாசிகளாக மாறியுள்ளனர். இதற்கு இசைவாக வேதவாக்கியங்களும் காணப்படுகின்றன. அதாவது, தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய தேவனுடைய சபையாவதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றவர்களில் அநேகர் மாம்சத்தின்படி ஞானிகள் இல்லையென்றும், வல்லவர்கள் இல்லையென்றும், பிரபுக்கள் இல்லையென்றும் பார்க்கின்றோம். அதிக நற்பண்புகள் உடையவர்களிடத்திலோ அல்லது சிறந்த கல்வி கற்றவர்களிடத்திலோ அல்லது அதிக தாலந்து உள்ளவர்களிடத்திலிருந்து ஒருவர் கர்த்தருடைய கிருபையை ஏற்றுக் கொள்வாரானால் அப்படிப்பட்டவர்கள் தாங்கள் மாம்ச பார்வையில் ஏளனமாய் பார்க்கும் நபர்களை, (கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் காரணமாகவும், மேலானவைகளை நாடும் காரணமாகவும்) சகோதர, சகோதரிகளாக ஏற்றுக் கொண்டு, ஐக்கியம் கொள்வது ஒருவித பரீட்சையாகக்கூட அமையலாம். இதுவே ஞானிகளும், கல்விமான்களும், வல்லவர்களும், பிரபுக்களும் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்தக் கூடாமற் போகுவதற்கான மற்றொரு காரணமாக அமைகிறது. இத்தகையவர்கள் தங்களின் மாம்சீக உணர்வுகளுக்கு இடம் கொடுத்து கிறிஸ்துவின் சரீர அங்கத்தில் உள்ள எளிமையான அங்கங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கிறவர்களாகி, அந்த எளிமையான அங்கங்களை ஏற்றுக் கொண்டுள்ள தலையையும் மறுக்கின்றவர்களாகி விடுகின்றனர். தலையாகிய கர்த்தர் இயேசு தாம்

தம்முடைய அங்கங்களை அன்பு கூர்ந்தது போன்று, தம்முடைய அனைத்து அங்கங்களும், ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.

அனைத்து சகோதர, சகோதரிகளையும் நாம் ஒரே அளவில் அன்புகூர வேண்டும் என்று கர்த்தர் கூறவில்லை. மாறாக, அவர் தமது சொந்த நடக்கையின் மூலம், யார்யார் அவருடைய ஆவியை அதிகமாகக் கொண்டிருக்கிறார்களோ, மேலும், யாருடைய இருதயங்கள் தெய்வீக சித்தத்திற்கு இசைவாகக் காணப்படுகிறதோ, அத்தகையவர்களிடம் நாம் அதிகம் மதிப்பு கொள்ளலாம் என்று காட்டியுள்ளார். ஆகவேதான், நமது கர்த்தர், தமது அனைத்து சீஷர்களிடம் அன்புகூர்ந்தாலும், அவருக்கு மிகவும் அபிமானவர்களான பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் போன்ற சிலர் காணப்பட்டார்கள். இவர்கள் மீது அவர் கொண்டிருந்த விசேஷித்த அன்பிற்கான காரணம், இவர்கள் தமக்காகவும், தாம் ஊழியம் புரியும் காரணத்தின் மேலும் கொண்டிருந்த விசேஷமான அக்கறை மற்றும் வைராக்கியமே ஆகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் விசேஷமான வைராக்கியமும், உண்மையான இருதயம் கொண்டுள்ள யாவர் மேலும் விசேஷமான அன்பு கொள்வோமாக. ஆனால், இவ்விதமான அன்போ, கல்வியையும், அந்தஸ்தையும், தவிர்த்து விடுகின்றது. மேலும், இந்த அன்பானது, மாம்சத்தைப் பார்க்காமல், இருதயத்தின் விருப்பத்தையே கவனிக்கின்றது.

சகோதரர் பேரிலான இந்த அன்பில் பரீட்சிக்கப்பட்டதினால், கர்த்தரை தங்கள் மீட்பராக அன்பு கூர்ந்த அநேகர், தாங்களாகவே தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை தடைபண்ணியுள்ளனர். மேலும், பரிசை பெறுவதற்கான தங்களுடைய ஓட்டத்தில் பின் வாங்கியுள்ளனர். மேலும், "சகோதரரை அன்பு கூர வேண்டும்" என்ற தெய்வீக தகுதியை பூர்த்தி செய்ய முடியாமல், மாபெரும் பலனை இழந்து போகும் அபாயத்தில் காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் அனைவரும், வேதவாக்கியங்களின் கண்ணோட்டத்தில் இவ்விஷயத்தை நிதானித்துக் கொண்டு, உயரிய பண்புகள் இயல்பாகவே குறைவாகக் காணப்படுபவர்களில் சிலரை ஏற்றுக் கொள்வதற்கு, தாழ்மை தங்களுக்கு அவசியம் என்றும், தாங்கள் அப்பண்பில் வளர்வது அவசியமானது என்றும், தீர்மானித்துக் கொள்வது ஏற்றக் காரியமாயிருக்கும். அப்போஸ்தலர் குறிப்பிடும் ஆவியின் கனிகளில் ஒன்று சாந்தமாகும். சாந்தம் இல்லாமலும், பெருமை கொண்டவர்களுமானவர்கள் இராஜ்யத்திற்கேற்ற சரியான இருதய நிலையைப் பெற்றிராதவர்கள் ஆவர். சாந்தகுணமுள்ளவர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும் மற்றவர்களுடைய பெலவீனங்கள் மற்றும் குறைவுகள் குறித்தும் நீண்ட பொறுமையுடன் காணப்படுகிறவர்களுக்கு, சமுதாயத்தின் ரீதியிலும், நீதிநெறி ரீதியிலும், அறிவு ரீதியிலும் உயர்தர வாழ்கை என்பது, சாதகமற்ற ஒன்றாகும். பெலவீனமான சகோதர, சகோதரிகள் இயல்பாகவே மிகவும் பெலவீனமாக இருப்பதினால், இவர்கள் ஜெயம்கொள்வதற்கென அதிகமதிகமாய் போராட வேண்டியுள்ளது. மேலும், மேல்மட்டத்தில் பிறந்தவர்கள், அதிகம் தாலந்து உள்ளவர்கள், மிகக் கடினமாக போராட வேண்டியுள்ளது. இரண்டு வகுப்பாரும் உற்சாகமடைவார்களாக. ஏனெனில், இவர்கள் இருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் மிகக் கடினமாக இருந்தாலும், இவர்கள் இருவரும் இறுதியில் அடையப்போகின்ற பலன் ஒன்றே. மேலும் இவர்களுக்குப் போதிக்கின்ற மாபெரும் போதகரும் ஒருவரே. மிகவும் இழிவான நிலையில் உள்ளவர்களை, தங்களுடைய சுபாவத்தின் இழிவுகளிலிருந்தும், ஒழுக்கக்கேடுகளிலிருந்தும், படிப்படியாக ஜெயம் கொள்ளுவதற்கும், கர்த்தருடைய நாமத்தினாலும் அவருடைய உதவியினாலும் நல்லதொரு போராட்டம் பண்ண அதிகமதிகமாய் முயற்சிக்க, இவர்களுக்கு, அவர் உதவி புரிந்திட வல்லவராக இருக்கின்றார். இதைப்போலவே, உயரிய மனம் உடையவர்கள் கனம் குறைந்தவர்களிடத்தில் பொறுமையும், அனுதாபமும் கொள்ளும்படியாகவும் இவர்களுக்கு கர்த்தர் உதவி செய்ய வல்லவராக இருக்கின்றார். அவர்களுக்கான மாதிரி, கர்த்தரிடத்திலேயே காணப்படுகின்றது. எல்லாவற்றிலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஐசுவரியமுள்ளவராக காணப்பட்ட கர்த்தர், ஒவ்வொரு குணலட்சணத்திலும் பூரணமாய் இருந்த கர்த்தர், தாலந்துகளில் பூரணமாய் இருந்த கர்த்தர், நம் பொருட்டு தரித்திரர் ஆனார். அவர் நம் பொருட்டு தம்மையே தாழ்த்தி, அடிமையின் ஸ்தானத்தை எடுத்து, நமக்கு பதிலாக அவர் பாடுகள் பட்டு, அநீதிமான்களுக்காக நீதிமானாகிய அவர் மரித்தார்;

இவ்விதமாக நாம் பின்பற்றுவதற்குரிய மாதிரியை ஏற்படுத்தியுள்ளார். நாம் அதிகம் உயர்பண்புகள் உடையவராய் இருப்பின், இவைகளைச் செய்யவும் நாம் மிகவும் ஆயத்தமாகவும் இருப்போம். ஆவியின் கனிகளை உணர்ந்து கொண்டு செயல்படுத்துவதிலும் ஆயத்தமாகவும் இருப்போம். மேலும், அவருக்கு ஒத்த சாயலில் வளர்வதிலும் அதிகமதிகமாகவும் காணப்படுவோம்.

## "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்"

சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் என்பதற்கும், சகோதரர்களுக்காக நம்முடைய ஜீவனையே ஒப்புக் கொடுப்பது என்பதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. கிறிஸ்துவின் சரீர அங்கத்தில் எவருக்கேனும், அதாவது, அர்ப்பணிக்கப்பட்டுள்ள விசுவாசி ஒருவருக்கு நாம் எதை செய்தாலும், அதை கர்த்தர் நாம் அவருக்கென்றே செய்தோம் என கருதுவதாக நமக்கு கூறியுள்ளார். கர்த்தருடைய ஊழியத்திற்கென்று நம்முடைய ஜீவனை ஒப்புக் கொடுப்பது என்பது நம்முடைய கடமையும், நம்முடைய சிலாக்கியமும், நம்முடைய சந்தோஷமுமாகவும் காணப்படுகின்றது. சகோதர, சகோதரிகள், கர்த்தருடையவர்களானபடியால், அவர்கள் மீதான இத்தகைய அன்பை நாம் அடைய வேண்டும். கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், நாம் கர்த்தரிடத்தில் கொண்டுள்ள உண்மையை விவரிக்கும் வண்ணமாக, நாம் நம்முடைய ஜீவியத்தை ஒப்புக் கொடுக்கத்தக்கதாக சந்தோஷம் கொள்ள வேண்டும். இது சரீர பிரகாரமான வேலைகளுக்கும் சகோதரர்களுக்குமான சரீரபிரகாரமான வேலைகளுக்குமென சரீர பெலத்தையோ, ஆரோக்கியத்தையோ, ஜீவனையோ ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதை குறிக்கவில்லை. இப்படியாக சரீரபிரகாரமான ஒப்புக் கொடுத்தல்களும் சில நேரம் அநுகூலமாகத்தான் காணப்படுகிறது. கர்த்தருடைய பின்னடியானவர்கள் சரீரபிரகாரமாக, சகோதரர்களாய் இராமல், ஆவியின்படியே சகோதரர்களாய் இருக்கின்றார்கள். ஆகவே நாம், சகோதரருக்காக நமது ஜீவனை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையானது, கர்த்தருடைய ஜனங்களின் ஆவிக்குரிய நலன் கருதி, அவர்களுக்காக ஊழியத்தில் நமது சரீர ஆரோக்கியத்தையோ அல்லது பலத்தையோ மற்றும் அறிவையும், தாலந்துகளையும் மற்றும் நம்மிடத்தில் இருப்பவைகளையும் ஒப்புக் கொடுப்பதையே குறிக்கின்றதாகக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு, சத்தியத்தைப் பிரசங்கிக்கும் போது, இவ்வூழியத்துக்காக பலிகளோ அல்லது சுயம் மறுக்கப்படுவதோ அல்லது பலம் இழந்து போகும் நிலையோ…எவையேனும் ஏற்படுமாயின், இது கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உடன் அங்கங்களுக்காக ஒருவரின் ஜீவனை ஒப்புக் கொடுப்பதாகும்.

நாம் நம்முடைய ஜீவனை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ள சகோதர சகோதரிகள், நம்முடன் ஒரே ஆவியின் ஐக்கியத்தில் காணப்படுபவர்கள், அதாவது, தற்கால சத்தியத்தின் சந்தோஷத்தை அனுபவிக்கிறவர்களை மாத்திரம் குறிப்பவர்கள் அல்ல. மற்ற சகோதரர்களைக் காட்டிலும் இவர்களுக்கு நமது ஜீவனை ஒப்புக் கொடுப்பதற்கு சில சமயம் குறைவான வாய்ப்புகள் கூட இருக்கலாம். உதாரணமாக சில சகோதரர்கள் இருப்பார்கள், அவர்கள் கர்த்தருடைய உண்மையான விசுவாசிகளும், அவருக்கென தங்களை உண்மையாய் அர்ப்பணித்தவர்களுமாய் இருப்பார்கள். ஆனாலும், பாபிலோனின் அடிமைத்தனத்திற்குள், இருளுக்குள் காணப்படுவார்கள். இத்தகைய சகோதரர்கள் விடுவிக்கப்படுவதற்கென நாம் நம்முடைய நேரத்தில் அல்லது செல்வாக்கிலோ கொஞ்சம் செலவிட வேண்டிய அவசியமுள்ளது. உண்மையில், கர்த்தரே இவர்களை விடுவித்திருக்கலாம். ஏனெனில், அனைத்தும், அதாவது அனைத்து பொன்னும், வெள்ளியும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய் திரிகிற மிருகங்களும் அவருடைய அதிகாரத்திற்குள் காணப்படுகின்றன. ஆனால், அவருடைய பணிகளுக்கென்று நாம் அர்ப்பணித்தவைகளையும், நம்முடைய கட்டுப்பாட்டில் கொடுக்கப்பட்டவைகளுமான நேரத்தையும், தாலந்துகளையும் நாம் பயன்படுத்துவதற்கு ஏதுவாக கிருபையாக சில வாய்ப்புகளை அவர் நமக்கு விட்டுக் கொடுத்திருக்கின்றார். நம்முடைய இராஜாவுக்கு ஊழியம் புரிவதற்கென இந்த தாலந்துகளைப் பயன்படுத்துவதற்கு நமக்கு வாய்ப்புகள் இல்லையெனில், எவ்வளவு அநுகூலமற்ற

நிலையில் காணப்படுவோம். வாய்ப்புகள் இல்லையேல் ஊழியம் மற்றும் பலி செலுத்துவதின் காரணமாக உண்டாகும் எத்தனை சந்தோஷங்களை நாம் இழந்திருப்போம். மேலும், எத்தனை ஆவிக்குரிய வளர்ச்சிகளையும் இழந்திருப்போம். ஆகவே, சகோதரருக்காக ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளாகிய கதவுகளை தேவன் நமக்கு முன்பாக திறந்து வைத்துள்ளார். மேலும், சகோதரர் மீது நாம் கொண்டுள்ள அன்பின் அளவானது, நம்முடைய கட்டுப்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளைப் பயன்படுத்த முயற்சிப்பதற்கு நாம் கொண்டுள்ள வைராக்கியத்தின் அடிப்டையில், அவருடைய பார்வையின் கீழ் அளக்கப்படுகின்றது. கர்த்தர் பேரில் நாம் கொண்டுள்ள அன்பிற்கும், வைராக்கியத்திற்கும் சாட்சி பகர்கின்ற விஷயமான, சகோதரர் மீது நாம் கொண்டிருபக்கும் அன்பு மற்றும் வைராக்கியம் குறித்ததான இக்கருத்தானது, அவருடைய ஊழியத்தில் நாம் அதிகம் உண்மையாய் இருப்பதற்கும், அதிக ஆற்றல் கொடுக்கின்றதாகவும் இருக்கட்டும்.

சகோதர சிநேகமுள்ளவர்களாய் நாம் இருப்பது என்பது, வேறுவிஷயம் என நாம் முந்தைய பகுதிகளில் குறிப்பிட்டுள்ளோம். நாம் கிருபையிலும் அறிவிலும் வளரும்போது, தேவனுடைய அன்பானது, அவருடைய ஆவியினால் நம்முடைய இருதயங்களில் வளர்ந்து, நம்மை நிரப்பும்போது, அதாவது, "நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கும்" (ரோமர் 5:5). நாம் விசுவாச வீட்டார் மீது காட்டும் அன்பிற்கு அப்பாற்பட்ட விரிவான அன்பிற்கும் வழிநடத்தப்படுகின்றோம். அதாவது, நாம் நமது ஜீவனையே ஒப்புக் கொடுப்பதில் மகிழ்ச்சி கொள்கின்ற விசுவாச வீட்டார் மீது வைக்கும் அன்பையும் தாண்டி செல்லும் அளவிற்கு வழிநடத்தப்படுவோம். நாம் சகல மனுக்குலத்தையும் அன்பு செய்ய கற்றுக் கொள்வோம். ஆம், நம்மை தவறாய் புரிந்து கொண்டவர்களையும், அதாவது, நமது சத்துருக்கள் போல் காணப்படும் அனைவரையும் கூட சகோதரர் போல் அன்புகூர கற்றுக் கொள்வோம். மனுக்குலத்தை நாம் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர் போல் கருதுவதில்லை. ஏனெனில், கிறிஸ்துவுக்குள்ளான அந்த உறவு மிக அருமையானதும், மிக விசேஷமானதுமாக உள்ளது. மாறாக, அவைகளை ஆதாமின் குடும்பத்தின் கீழ் ஒரே சகோதரராகக் கருதுகின்றோம்.

நாம் கிருபையிலும், அறிவிலும் வளரும் போது, நாட்கள் செல்ல செல்ல, வருடங்கள் செல்ல செல்ல, முழு உலகமும் பாவத்தின் கீழ் இருக்கின்றார்கள் எனவும், கோபாக்கின் பிள்ளைகளாக இருக்கின்றார்கள் எனவும், அறியாமையினாலும், மூட நம்பிக்கையினாலும் குருடாக்கப்பட்டுள்ளார்கள் எனவும், விழுகையின் காரணமாக மனரீதியாகவும், சரீரப்பிரகாரமாகவும் சீராக இல்லை எனவும், அப்போஸ்தலர் "தவிக்கும் சிருஷ்டி" என்று கூறுவதற்கு இசைவாக, உண்மையில் பரிதாபமான சூழ்நிலையில் காணப்படுகின்றார்கள் என்று அதிக தெளிவுடன் நாம் புரிந்து கொள்ள முடியும். விழுந்துபோன நிலையில், காணப்படும் பாவப்பட்ட மனுக்குலத்தை தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து நாம் எந்த அளவுக்குப் பார்க்கின்றோமோ, அந்த அளவிற்கு அவர்கள் மேல் அனுதாபம் கொள்பவர்களாய் இருப்போம். சங்கீதம் 102:19, 20-ம் வசனங்களில், தேவன் மனுக்குலத்தை கண்ணோக்குவதைக் குறித்துப் பார்க்கின்றோம். அவர்கள் பாவத்தில் பிறந்துள்ளார்கள் என்றும், அக்கிரமத்தில் வனையப்பட்டுள்ளார்கள் என்றும், அவர்களின் தாயார்கள் அவர்களை பாவத்தில் கர்ப்பம் தரித்துள்ளனர் என்றும், இதனோடு கூட அவர்கள் தொடர்பு கொண்டிருக்கும் தீமைகளும் அவர்களை கீழாக நடத்துகின்றது என்றும் இன்னுமாக நம்முடைய இனத்தாரின் மாபெரும் எதிராளியானவனான சாத்தானும் கூட அவர்கள் தெய்வீக குணலட்சணங்களையும், திட்டத்தையும் தவறயாய் புரிந்து கொள்ளத்தக்கதாக அவர்களின் மனதை குருடாக்கும் வண்ணமாக தனது வல்லமையை பிரயோகித்துக் கொண்டிருக்கின்றான் என்றும் நாம் உணர்ந்து கொள்வான்.

இவைகள் அனைத்தும் நம் மனங்களுக்கு முன்பாகக் காணப்படும்போது, பாவியாகவும், அந்நியர்களாகவும், ஆயிரவருட அரசாட்சியின் போது, தேவனுடைய கிருபையான திட்டத்தின் வாயிலாக எதிர்காலத்தில் மீட்கப்படப்போகின்ற மாம்சத்தில் காணப்படும் நம்முடைய இந்த சகோதரர்கள் மீது எத்துணை அனுதாபம் நமக்கு ஏற்படுகின்றது. தேவன் இவர்களை அன்புகூர்ந்தால், கிறிஸ்து இவர்களுக்காகவும், நமக்காகவும் மரித்தாரானால் ஏன் நாம் அவர்கள் மேல் மிகுந்த இரக்கமும், மிகுந்த கனிவும் காட்டி, அவர்கள் இருளிலிருந்து தேவனுடைய

ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும் பாவத்தின் வழியிலிருந்து, நீதியின் வழியினிடத்திற்கும், சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து, தேவன் சகல ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும், கோத்திரத்தாருக்கும் வாக்களித்துள்ள தேவனுடைய புத்திரகளுக்குரிய சுயாதீனத்தினிடத்திற்கும் வழி நடத்தப்பட, நம்மால் முடிந்த உதவிகளை நாம் ஏன் செய்யக்கூடாது என்று நாம் நமக்குள்ளாக சொல்லிக் கொள்ள வேண்டும். ஆமென்!

---

# பொருளாசையின் அபாயம்

**ஆதியாகமம் 13:1-13**

*"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்." (KJV)*

*"கவனமாக இருங்கள், எல்லா வகையான சுயநலமிக்க செயல்களுக்கும் எதிராக உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்." (லூக்கா 12:15; ERV - தமிழ்)*

## *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாதேயும்*

பெரும்பாலும் சுயநலம் மற்றும் பொருளாசை (பேராசை) காரணமாகவே குடும்பத்திலும், சபையிலும் சண்டைகள் எழுகின்றது; மேலும் கர்த்தருக்கு அருகாமையிலும், அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த சாயலில் அதிகமாக வளர்ந்துள்ள நிலையிலும் காணப்படுபவர்கள் எல்லாவிதமான சண்டையிலும் மிகவும் பெருந்தன்மையுடன் காணப்படுவது என்பது இத்தகையவர்களுக்கான சிலாக்கியமாகும். பெரும்பான்மையான சண்டைகள் விட்டுக்கொடுக்கப்படாத அற்ப அல்லது முக்கியத்துவமற்ற விஷயங்கள் நிமித்தமே காணப்படுகின்றது; கொள்கைகள் விஷயங்களில் மாத்திரமே கர்த்தருடைய ஜனங்கள் உண்மையாகப் போராடலாம். கொள்கை விஷயத்திலான போராட்டத்திலும்கூட அன்பு மற்றும் பரந்த மனப்பான்மையுடனே காணப்பட வேண்டும்; அதாவது தனிப்பட்ட விருப்பங்கள் தொடர்புடைய விஷயத்தில், முடிந்தமட்டும் மற்றவருக்கு விட்டுக்கொடுக்கும் விருப்பத்தின் சிந்தை காணப்பட வேண்டும், ஆனால் கர்த்தருடைய வார்த்தை மற்றும் நீதியின் கொள்கையைப் பொறுத்தவரையில், உறுதியாகவே காணப்பட வேண்டும். சபையில் சண்டை எழும்பும் போது, பொதுவாக தவறான புரிந்துகொள்ளுதல் அல்லது சுயநலம், பேராசை, பிரதானமாக பெரியவராய் இருப்பதற்கான ஆசை ஆகியவைகளே அடிப்படையாகக் காணப்படுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் எதிர்மாறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள தன்னுடைய சகோதரனுக்கு உதவிசெய்ய முற்படுவதற்கு முன்னதாக, தனது சொந்த இருதயத்தை நன்கு பரிசோதித்துக்கொள்ள வேண்டும், மற்றும் தனது சொந்த கண்கள் நலமாய் இருக்கின்றதா எனப் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். இப்படியாக ஒருவர் விட்டுக்கொடுக்கும் அளவுக்கு நோக்கமும், விருப்பமும், சொந்த இருதயத்தில் பெருந்தன்மையும் கொண்டிருப்பதையும், மற்றவர்களிடத்தில் நலமானதைக் காணவும், ரசிக்கவும், அங்கீகரிக்கவும் தன்னால் முடியும் என்பதையும் தனக்குள் நிச்சயம் பண்ணினவர், மற்றவர்களோடு கலந்துபேசவும், சூழ்நிலைப் பற்றிய சரியான, பரந்த மற்றும் பெருந்தன்மையுமான கண்ணோட்டத்தை மற்றவர்களும் எடுக்கத்தக்கதாக, உதவவும் ஆயத்தமாய்க் காணப்படுவார்.

வீட்டிலும், சபையிலும் "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது" செய்யக்கூடாது என அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார். மரணத்தினின்று ஜீவனுக்குள் பிரவேசித்தவர்களாகிய, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் மத்தியில் அன்பு மாத்திரமே ஊக்குவிக்கும் வல்லமையாகக் காணப்பட வேண்டும். இப்படியாக அனைத்துப் பிரச்சனைகளைச் சமாதானமான விதத்தில் சரிசெய்துகொள்வதற்கான வழி உள்ளது, மேலும் இதை நம் கர்த்தர் தாமே முன்வைத்துள்ளார்; மேலும் இதை விரிவாக நாம் டாண் வெளியீட்டில் தொகுதி - VI, அதிகாரம் VI-இல் கொடுத்துள்ளோம். ஆனால் எங்கு அனைத்து வழிகளும் தோல்வியடைகையில், அங்குச் சகோதரத்துவத்தின் ஆவியை அணையச்செய்து, பகைமை (அ) கோபத்தின் ஆவியை நிலவச்செய்வதற்குப் பதிலாக, தங்களால் அன்பில் ஒன்றாக ஐக்கியம் வைத்துக்கொள்ள முடியாது என்று கண்டுகொள்பவர்கள், ஆபிரகாம் மற்றும் லோத் சூழ்நிலைபோன்று, பிரிந்துசெல்வதின் மூலம் ஆவியில் ஐக்கியத்தைத் தக்கவைத்துக்கொள்ள நாட வேண்டும். இப்படிச் செய்வது என்பது, உள்ளுக்குள்ளே சண்டைகள் கொண்டிருப்பதைவிட, கடைசி தீர்வு என அங்கீகரிக்கப்பட்டாலும், இப்படியான நடவடிக்கை என்பது நிச்சயமாக கவலைக்குரிய ஒன்றாகும்; மற்றும் இது அக்கூட்டத்தாரில் அனைவரும் இல்லை என்றாலும், சிலராகிலும் புதிய சுபாவம் தொடர்பான விஷயங்களில் மிகவும் வளர்ச்சியற்ற நிலையில் காணப்படுகின்றார்கள் என்பதையும், சமாதானம்பண்ணுகிறவர்களுக்குரிய வல்லமையில் மிகவும் குறைவுபட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதையும், திரளான பாவங்களை மூடிப்போடுகிறதும், நீடிய பொறுமையுடனும், அன்புடனும், பொறுமையுடனும், இரக்கத்துடனும் சகிக்கும் சகோதர சிநேகத்தில் மிகவும் குறைவுபட்டிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

R 3943

# உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

"ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28) எனும் பரிசுத்த பவுலடிகளின் வார்த்தைகளானது, முன்பில்லாதளவுக்கு இப்பொழுது நாம் கவனம் செலுத்திடுவதற்கு மிகவும் பாத்திரமானவைகளாய்க் காணப்படுகின்றது. சீயோன் காவல் கோபுரத்திலிருந்து பார்க்கையில், சத்தியமானது அனைத்துத் திசைகளிலும் பிரம்மாண்டமாய் முன்னேறிக்கொண்டிருக்கையில், "தீங்குநாளும்" - ஏற்கெனவே ஆசீர்வதிக்கப்பட்டு, பிரகாசிக்கப்பட்டவர்களாய்க் காணப்படுபவர்களைச் சோதிக்கும் காலமும் நம்மீது காணப்படுகின்றது என்பதை நாம் தெளிவாய்ப் பார்க்கின்றோம். ஆகையால் தற்கால சத்தியத்தினுடைய செய்தியினைக் கேட்பதற்குரிய செவிகளினால் யார் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது மாத்திரம் கேள்வியாயிராமல், இன்னுமாக யார் "தீங்குநாளிலே எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கும் திராணியுள்ளவர்களாயும் மற்றும் நம்மில் அன்புகூர்ந்தவரும் மற்றும் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை வாங்கிகொண்டவருமானவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக" மகிமைப்படுத்தப்படுபவர்களாயும் இருப்பார்கள் என்பதும் கேள்வியாய்க் காணப்படுகின்றது (எபேசியர் 6:13; உரோமர் 8:37).

நம்முடைய தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதான எதிராளியானவனின் தாக்குதலை அனைத்துத் திசைகளிலும் நம்மால் கவனிக்க முடிகின்றது - நம் மத்தியில் தப்பறை மற்றும் பேராசை எனும் துன்புறுத்தும் ஓநாய்களை நம்மால் கவனிக்க முடிகின்றது. நாங்கள் அபாய அறிவிப்பை விடுத்து, "சோதனை காலமானது" - அதாவது கடந்த முப்பது வருடக்காலமாக நாம் எதிர்க்கொள்வதற்கென ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றதான அந்தச் சோதனை காலமானது வந்துள்ளது என்று நாங்கள் உங்களுக்குக் கூறவேண்டியுள்ளது. நமக்கருளப்பட்டிருக்கும் அறிவின் காரணமாக, இந்த அபாயகரமானத் தருணத்தில் தூங்கிப்போய்விடாமல் இருப்போமாக; இச்சூழ்நிலையினைத் தெரிந்த நிலையிலும், ஜெபத்துடனும், உண்மையுடனும் எதிர்க்கொள்வோமாக.

நம்முடைய அறிவு என்பது பொறுப்புக் கூட்டப்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்றும், அறிவானது - பூரணத்தின் நிறைவாகவும், திவ்விய பிரமாணத்தினுடைய அல்லது திவ்விய எதிர்ப்பார்ப்பினுடைய நிறைவேறுதலாகவும் காணப்படுகின்றதான அன்புடன் இணைந்து, செயல்படவில்லையெனில், அறிவினால் நமக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லையென்றும் நாம் நினைவில் கொள்வோமாக. எத்தனை ஆசீர்வாதங்களை நமக்குக் கர்த்தர் அருளியிருக்கின்றார் மற்றும் நம்மீது இப்பொழுது கடந்து வந்துள்ளதான சோதனையை எதிர்த்து நிற்க நமக்கு உதவுகின்றதான தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக்கொள்வதற்குக் கர்த்தர் எத்தனை வாய்ப்புகளை அருளியிருக்கின்றார் !

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று முதலாவது அப்போஸ்தலன் ஞானமாகவே கூறியிருக்கின்றார். இது நம்முடைய முதலாம் பொறுப்பாய் உள்ளது. நாம் பொறாமையினாலோ அல்லது பேராசையினாலோ அல்லது ஏதேனும் சுயநலமான நோக்கங்களினாலோ எவ்வளவேனும் இயக்கப்பட்டிருக்கின்றோமா என்று நம்முடைய சொந்த இதயங்களை நாம் ஒவ்வொருவரும் முதலாவதாக ஆராய்ந்திட வேண்டும். இதை நாம் நன்கு செய்ய வேண்டுமெனில், நாம் நம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டோ அல்லது நம்முடைய அபூரண நிலையுடன்/அளவுகோலுடன் ஒப்பிட்டோ ஆராய்ந்திடாமல், கர்த்தருடைய தரநிலையுடன்/அளவுகோலுடன் - பூரண அன்புடன் ஒப்பிட்டு ஆராய்ந்திட வேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பெலத்தோடும் அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் (விசேஷமாக கர்த்தருக்குள்ளான உன் சகோதரனிடத்திலும்) அன்புகூருவாயாக." ஓ! இது - எத்துணைச் சகோதர சிநேகத்தையும், எத்துணை உருக்கமான வார்த்தையையும், கிரியையும், ஒவ்வொருவருடைய பெலவீனங்களில் ஒருவர் இன்னொருவர் மீது எத்துணை அனுதாபத்தையும், ஒருவர் இன்னொருவருடைய சிறந்தப் பண்புகளை எவ்வளவாய்ப் பாராட்டுதலையும், எத்துணை நீடிய பொறுமையுடன்கூடிய

இரக்கத்தையும், அன்பில் பொறுமையுடன் சகித்தலையும், தன்னுடையது போன்று ஒருவர் இன்னொருவருடைய நலன்களுக்காக, உரிமைகளுக்காக, மற்றும் சுயாதீனங்களுக்காக எத்துணை அக்கறைகொண்டிடச் செய்திடும் மற்றும் இப்படிக் குறிக்கின்றதாய் இருக்கும்!

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்" என்று இதே அப்போஸ்தலன்தான் எழுதியுள்ளார் (2 கொரிந்தியர் 13:5). உபதேசத்தில் தெளிவாயிருப்பது மிகவும் அவசியமானதாகும்; ஆனால் இதுமாத்திரம் போதாது; ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் மற்றும் விசேஷமாகக் கர்த்தருடைய சபையின் காரியங்கள் அனைத்திலும் - கர்த்தரிடத்தில் விசுவாசம் கொள்ளும் விதத்திலும்கூட - நாம் "விசுவாசமுள்ளவர்களாக" காணப்பட வேண்டும். சூழ்நிலைகளானது சபையின் காரியங்களிலுள்ள வேதவாக்கியங்களின்படியான ஏற்பாடுகளினின்று நம்மைத் திசைமாற்றிட, நாம் எப்போதேனும் அனுமதிப்போமாகில், அது நாம் தேவன் திட்டமிட்டுள்ளபடியான "விசுவாசத்தில்" இல்லையென்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஏனெனில் தேவனிடத்திலும் மற்றும் நன்மைக்கேதுவாய் மாற்றிப்போடும் அவருடைய ஞானம் மற்றும் வல்லமை மீதான நம்பிக்கையானது ஒருபோதும் சூழ்நிலையினிமித்தம், "நன்மை உண்டாகத்தக்கதாக நாம் தீமையைச் செய்வோமாக" - "கர்த்தருடைய நோக்கங்களின் விஷயங்களில் சிறந்த நன்மை உண்டாகத்தக்கதாக, வேதவாக்கியம் அங்கீகரியாதக் காரியங்களை நாம் செய்வோமாக" என்று சொல்லிடுவதற்கு அனுமதித்திடாது. பலியைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உத்தமம் என்றும், அவரை அன்புகூருகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கும், அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாய்ச் செய்ய வல்லவர் என்றும் விசுவாசமானது உத்தரவிடுகின்றதாய் இருக்கின்றது.

அன்பான சகோதர சகோதரிகளே, இதுவே நமக்கானச் சோதனை என்றும், இப்பொழுது நம்முடைய சோதனை காலமாய் இருக்கின்றது என்றும் நாம் நினைவில் கொள்வோமாக; மற்றும் கர்த்தருக்காகவும், அவரது சகோதர சகோதரிகளுக்காகவும் மற்றும் அவரது வார்த்தைகளுக்காகவுமான அன்பானது, நம்முடைய உதடுகளுக்கும், நம்முடைய நடத்தைக்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய இருதயங்களுக்கும் எப்போதும் கட்டளையிடுகின்றதாய் இருப்பதாக. "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10, 11). இவைகள் அனைவருக்கும் பொருந்துவதுபோல, சபையில் விசேஷமான உக்கிராணத்துவம் எனும் சிலாக்கியம் பெற்றுக்கொண்டவர்களாகிய - மூப்பர்களுக்கு - முழு உலகத்தின் மீதும் மற்றும் குறிப்பாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீதும் காணப்படுகின்றதான இந்தச் சோதனையான வேளையில் - விசேஷித்த விதத்தில் உண்மையாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 3:10).

---

R 3971

# "சகோதரர்களால் பகைக்கப்பட்டவர்"

## ஆதியாகமம் 37:5-28

"வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கைகளுமுண்டு."—யாக்கோபு 3:16

யோசேப்பு பற்றின வேதாகமக் கதையானது எந்த ஒரு காலப்பகுதியிலும், எந்த ஒரு மொழியிலும், இலக்கியத்தினால் அறியப்பட்டிருக்கும் மிகவும் சுவாரசியமானவைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கயிருக்கின்ற பகுதியானது, (tragedy) துன்பியல்/சோக நிகழ்ச்சி என்று எளிதில் பெயரிடப்படக்கூடியதாகும். இது நல்ல மற்றும் கெட்ட மனித சுபாவத்தை விளக்குகின்றது மற்றும் அதன் பல்வேறு நிழல்களிலும், சம்பவங்களிலும் விலையேறப் பெற்ற பாடங்கள் காணப்படுகின்றது; மற்றும் அப்பபடிப்பினைகளில் முதன்மையானது பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது மற்றும் ஆதார வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது பொறாமை என்பது சீரழிந்த மனுஷீகத்தின், அதாவது சுயநலத்தின் பிரதானமான வேர்களில் ஒன்று என்பதும் மற்றும் இந்த வேரிலிருந்தே மனிதன் அறிந்திருக்கும் மிகப்பாதகமான சில தாக்கங்களும், அனுபவங்களும் அதாவது, "சகல துர்ச்செய்கைகளும்" தோன்றியுள்ளது என்பதுமாகும். இந்தக் கருத்தை நாம் தற்போது இப்பாடத்தைக் கற்கும்போது, நம் மனதில் கொண்டிருந்து, நாம் ஒவ்வொருவரும், நம்மில் நன்நெறியைச் செயல்படுத்துவோமாக. நம்முடைய விழுந்துபோன நிலைமையில் பொறாமையானது, இப்படிக் கொடூரமான பலனை உண்டுபண்ணக் கூடுமானால், கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள் ஒவ்வொருவரும், இதற்கு எதிராக எவ்வளவாய் ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். இந்த வேரிலிருந்து சிறு முளைகளைக்கூட அனுதின ஜீவியத்தில் வளருவதற்கு அனுமதிப்பது என்பது, புதுச் சிருஷ்டியாகிய தன்னை மிகவும் விபரீதமான, பின்விளைவுகளுக்கு நேராக வழிநடத்திவிடும் என்பதை ஒவ்வொருவரும் எவ்வளவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதை உணர்ந்தவர்களாக, ஒவ்வொருவரும் இந்தக் களையைத் தங்களது சொந்த இருதயமாகிய தோட்டத்திலிருந்து வேரோடே அழிப்பதற்கு விழிப்பாய் இருந்திட வேண்டும். ஓர் எழுத்தாளர் பின்வருமாறு கூறியுள்ளார். . . . **"பொறாமை தன்னிடம் இல்லை என்று நம்புகிற ஒரு மனிதன் உண்டு; அவன் தன்னுடைய சொந்த இருதயத்தை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காதவன் ஆவான்.**" சுயநலத்தின் இந்தத் தீமையான வேர், ஆதாமின் பூரணமற்ற ஒவ்வொரு மகனிடத்திலும் மற்றும் மகளிடத்திலும் ஒருவேளை சாதகமான சூழ்நிலைகளில் தழைத்தோங்குகிறதாகவோ அல்லது சாதகமான சூழ்நிலை இல்லாமையினால் செயலில் அடங்கியிருக்கும் நிலையிலோ அல்லது கிருபையினுடைய வல்லமையினால் அடக்கப்பட்டதாகவோ காணப்படலாம், ஆனால் எப்படியாக இருப்பினும் சந்தேகத்திற்கிடமின்றி அது காணப்படும். தேவனுக்காக பிரதான அன்பினாலும், தன்னை அன்புகூருவது போன்று தன்னுடைய அயலானிடத்திலான அன்பினாலும் சுடர்விட்டெரியும் இருதயம் மாத்திரமே, பொறாமை தொடர்புடைய விஷயத்தில் மிகவும் வளமற்ற நிலையில் காணப்படுகின்றது மற்றும் இம்மாதிரியான இருதயத்தில் பொறாமையானது, வளருவதற்கு வாய்ப்பில்லை. தேவன் மற்றும் மனிதனிடத்திலான நம்முடைய அன்பு தணியும்போது, பொறாமையின் இந்த வேரும், மற்றும் இதனோடு இணைந்துவரும் கோபம், பகைமை, சண்டை மற்றும் சகல பொல்லாப்புகள், ஆம் கொலைப்பாதகம், அதாவது அப்போஸ்தலனால் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்றும், ஆண்டவருடைய அங்கீகரிப்பை இப்போதும், எப்போதும் பெற்றுக்கொள்ள விருப்பமுடையவர்கள் அனைவராலும் விட்டொழிக்கப்பட வேண்டுமென்றும் நமக்குக் கூறப்படுகின்றவைகள் அனைத்தும் வளர்வதற்குரிய சாதகமான சூழ்நிலையை அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய மாம்சத்தின் இயல்புகள் என்னவாக இருப்பினும், கர்த்தருடைய பரிசுத்த ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான புதிய சுபாவமானது, ஆதிக்கம் செலுத்துவதையும், தேவனுடைய பிள்ளைகளென அவர் அடையாளங்கண்டுகொள்பவர்கள் மீது பொறாமை கொள்வதற்குரிய விஷயத்தில் நாம் பொறாமையை வளர்த்துவதற்கு செயலற்றவர்களாய்/வளமற்றவர்களாய்க் காணப்படுவதையும் பிதா எதிர்பார்க்கின்றார். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

## ‘‘நேச குமாரனாகிய யோசேப்பு’’

நம்முடைய பாடத்தினுடைய சம்பவத்தின்போது, யோசேப்பு சுமார் 17-வயதை உடையவராகவும், யாக்கோபினுடைய குமாரர்களில் இளையவராகவும், தன்னுடைய தகப்பனாருக்குப் பிரியமானவராகவும் காணப்பட்டார். யோசேப்பு நற்குணமுள்ள/சாந்தமுள்ள மற்றும் யாக்கோபினால் விசேஷமாய் அன்புகூரப்பட்ட மனைவியுமான ராகேலின் குமாரனாவார். யோசேப்பின் சரித்திரமானது காண்பிப்பது போன்று, அவர் தனது தாயாருடைய நற்குணங்களையும், தனது தகப்பனாருடைய தைரியத்தையும் மற்றும் விசுவாசத்தையும் பெருமளவில் கொண்டவராகக் காணப்பட்டார். யோசேப்பினுடைய மூத்த சகோதரர்கள் கரடுமுரடானவர்கள் ஆவர்; ஆகையால் சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் அனைத்துமே, யோசேப்பிற்கு முன்னுரிமை கொடுக்கும் விஷயத்திலும், யோசேப்பைத் தனது பிரியமான குமாரன் என்று விசேஷமாய்க் கருதிக்கொள்ளும் விஷயத்திலும் யாக்கோபை நியாயப்படுத்தினதாகவே காணப்பட்டது. யோசேப்பிற்கு அவரது தகப்பனார் பலவருணமான அங்கியை முயன்று பெற்றுக் கொடுத்தார்; இது சில மொழிப்பெயர்ப்புகளில் பலவருணமான அங்கியென்றும், சில மொழிப்பெயர்ப்புகளில் நீளமான அங்கி (Revised Version) என்றும் வழங்கப்பெற்றுள்ளது. நீளமான அங்கிகள் என்று சொல்லும்போது, இது பல வருணங்கள் கொண்டதாக இராமல், மாறாக நீளமான கைப் பகுதியை உடைய, நீளமான அங்கியாகவும், வேலைபுரியும் ஜனங்கள் உடுத்திக்கொள்ளும் சாதாரணமான அங்கியிலிருந்து வேறுபட்டதாகவும், பிரபுக்கள் உடுத்திக்கொள்ளும் அங்கி போன்றதாகவும் கருதப்படுகின்றது. எனினும் இந்த அங்கிகள் பல வருணங்களைக் கூடப் பெற்றிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது; ஏனெனில் எகிப்திலுள்ள சில முற்காலத்துக் கல்லறைகளில் இத்தகைய நீளமான அங்கிகளானது, பளபளக்கும் நிறங்களுள்ள பாகங்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டு உண்டாக்கப்பட்டத் தோற்றத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; இவ்வாறாக இரண்டு மொழிப்பெயர்ப்புகளுமே சரியாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

எப்படியாக இருப்பினும் அந்த அங்கியானது தனிச்சிறப்புடையதேயாகும் மற்றும் யோசேப்பிற்கான யாக்கோபினுடைய அங்கீகாரமுடைய முன்னுரிமை தொடர்புடைய விஷயத்தில், இந்த அங்கியானது, அவரது சகோதரர்களின் பொறாமையையும் மற்றும் கசப்பையும் திடப்படுத்திட உதவினது; அவரது சகோதரர்களோ அந்த அங்கியின் மூலமாக, யோசேப்பு இறுதியில் தன்னுடைய சகோதரர்கள் மீது அதிகாரியாகவும், தனது தகப்பனாருக்குப்பின் வீட்டாரின், சந்ததியின் தலைவராகவும் காணப்படுவார் என்ற தங்களது தகப்பனாருடைய தீர்மானம் தெரிவிக்கப்படுவதை உணர்ந்தார்கள். இவ்வளவாக தெளிவாய் ஒருதலைப் பட்சத்தை வெளிப்படுத்தின இந்தத் தகப்பன் சார்பிலான ஞானமற்றக் காரியத்தை விமர்சிப்பதற்கென்று நாம் இங்குக் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டாம். இப்படியாக யோசேப்பின் பட்சம் செயல்பட்டதையும், அவர் விசேஷமாய் அன்புகூரப்பட்டதையும் நியாயப்படுத்துவதற்கு ஏதுவாக, அவரிடம் அப்பேர்பட்டதான சிறந்த பண்புகள் காணப்பட்டதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இந்த விஷயத்திலும், இன்னும் மற்ற விஷயங்களிலும், யோசேப்பு இயேசுவுக்கான நிழலாய் இருக்கின்றார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. இயேசு பரம பிதாவின் நேச குமாரனாகக் காணப்பட்டார் மற்றும் இயேசுவும் கூடத் தம்முடைய சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்டார் மற்றும் இயேசுவுங்கூட வெள்ளிக்காசுகளுக்காக விற்கப்பட்டார் மற்றும் இயேசுவுங்கூட விடுவிக்கப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம்; அவர்மேல் பொறாமை கொள்ளப்பட்டது என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 27:18; மாற்கு 15:10). இன்னுமாக யோசேப்பு, கிறிஸ்துவின் ஒட்டுமொத்த சரீரத்திற்கும் நிழலாய்க் காணப்படுகின்றார்; கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும், யோசேப்பின் அனுபவங்களில் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; மற்றும் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பொருந்துகின்றதாய் இருக்கின்றது (யோவான் 16:27).

## ‘‘சொப்பனங்களின் முக்கியத்துவம்’’

கர்த்தரினால் அருளப்பட்டதாகவும், தீர்க்கத்தரிசனமானவைகளாகவும் காணப்பட்ட யோசேப்பு கண்ட சொப்பனங்களானது, அவருடைய சகோதரர்களை இன்னும் கசப்பிற்குள்ளாக்கிற்று மற்றும் அவர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட பொறாமை மற்றும் கசப்பின் வேர்களுக்கு உரமாகப் பயன்பட்டது. இந்தச் சொப்பனங்களில் ஒன்றில், ஒரு கோதுமை வயலில், 12 அரிக்கட்டுகள் காணப்பட்டது; அதிலொன்று நிமிர்ந்து நிற்க, அதனை சுற்றி மற்றக் கட்டுகள் மரியாதை செலுத்துவது போன்று, வணங்கி நின்றன. யோசேப்பு எவ்விதமான தீமையான

எண்ணம் இல்லாமல், வெளிப்படையாகத் தன்னுடைய சகோதரர்களிடத்தில் சொப்பனத்தைக் கூறினார் மற்றும் அவர்களோ கர்த்தரிடத்தில் விசுவாசமற்றவர்களாகவும், தெய்வீகச் சித்தத்திற்கான கீழ்ப்படிதல் இல்லாதவர்களாகவும், தங்களது இளைய சகோதரன் தங்களுக்கு அதிகாரியாவது பற்றின கருத்துத் தெரிவிக்கப்பட்டதினிமித்தம் கோபமடைந்தார்கள்; "அவனை அவன் சொப்பனங்களினிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்." இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் "அவன் வார்த்தைகளினிமித்தம்" என்பது, யோசேப்பினுடைய சகோதரர்களில் சிலருடைய தவறான செய்கைகள் குறித்த, யோசேப்பினுடைய புகாரைக் குறிக்கின்றதாயிருக்கின்றது. நீதி, நியாயம் என்பவைகள் யோசேப்பினுடைய இயல்பான குணநலன்களில் முழுப்பங்கு வகிக்கின்றதாய்த் தோன்றுகின்றது மற்றும் அவர் தன்னுடைய சகோதரர்கள் குறித்துக் கொடுத்தப் புகாரானது, பழித்தூற்றுதலல்ல, மாறாக தன்னுடைய தகப்பனார் அவரது தொழில் இன்னவிதத்தில் நடைப்பெறுகின்றது என்பதைத் தெரிந்துகொள்வது ஏற்றக் காரியம் என்று கருதி மாத்திரம் யோசேப்பு புகார்க் கொடுத்தார் (ஆதியாகமம் 37:2).

யோசேப்பினுடைய மற்றொரு சொப்பனமானது, அவரது சகோதரர்களின் கோபத்தைத் தூண்டினது மற்றும் ஏதோ யோசேப்பினுடைய சொப்பனங்களின் பின்னாக, அவரது பேராசைக் காணப்படுவது போன்று, அவரது தகப்பனாரிடமிருந்தும் கூடக் கடிந்து கொள்ளுதலைக் கொண்டுவந்தது. எனினும் யாக்கோபு இந்தக் காரியங்களையெல்லாம் தன்னுடைய இருதயத்தில் சிந்தித்துக்கொண்டு, எதிர்க்காலத்தில் தன்னுடைய நேச குமாரன் எவ்வளவு மாபெரியவனாய் இருக்கப் போகின்றான் என்று வியந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இந்த இரண்டாம் சொப்பனத்திலோ சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், ஒரு நட்சத்திரத்திற்கு வணங்கினது மற்றும் ஒருநாளில் முழுக்குடும்பமுமே யோசேப்பைத் தங்களுடைய அதிகாரியாக ஒப்புக்கொள்வார்கள் என்பதாக இந்தச் சொப்பனம் புரிந்துகொள்ளப்பட்டது. இக்காரியமானது அனைவருக்கும் மற்றும் யோசேப்பிற்கும் எவ்வளவு ஒவ்வாத (இயற்கைக்கு மாறான) காரியமாகத் தோன்றியிருந்திருக்கும். பாவம் அந்த வாலிபன்! யோசேப்பினுடைய வாழ்க்கையில் பின்னர் அவருக்குக் கிடைத்திட்டப் படிப்பினைகளானது, இரகசியங்களை மறைத்துக்கொள்பவராக இருப்பதற்கும், அனைத்துச் சொப்பனங்களையும், நம்பிக்கைகளையும் சொல்லாமல் இருப்பதற்கும், தன்னுடைய முத்துக்களைக் குறித்துப் புரிந்துகொள்ள முடியாதவர்களும், அதினால் கோபமடைபவர்களுமானவர்கள் முன் தன் முத்துக்களைப் போடாமல் இருப்பதற்கும் அவருக்குக் கற்பித்துக் கொடுத்தது. இரகசியங்களை மறைவாய் வைத்துக்கொள்ளுதல் தொடர்புடைய விஷயத்திலுள்ள ஞானம் பற்றின படிப்பினையானது, நம் அனைவருக்கும் எத்துணை அவசியமானதாகக் காணப்படுகின்றது. இதற்கான உதாரணமாக, "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கூறின நமது கர்த்தர் காணப்படுகின்றார் (யோவான் 16:12). பேசுவதற்கு ஒரு காலமுண்டு மற்றும் பேசாமல் அடக்கிக்கொள்வதற்கு ஒரு காலமுண்டு; ஆகையால் நாம் அனைவரும் விழித்திருந்து, "கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்று ஜெபம் பண்ணுவது அவசியமாகும் (சங்கீதம் 141:3).

## "சொப்பனங்களிலும் மேன்மையான தேவனுடைய வார்த்தைகள்"

தெய்வீக ஏவுதலினாலான சொப்பனங்கள் பற்றின வேத வாக்கியங்களின் பதிவுகளானது நம் முன் இருக்க, சொப்பனங்களைத் தாக்கிப் பேசுவதும், அவைகள் கவனம் செலுத்தப்படுவதற்குப் பாத்திரமற்றவைகள் என்று தெரிவிப்பதும் அறிவீனமான காரியமாக இருக்கும். யோசேப்பினால் அர்த்தங்கள் விவரிக்கப்பட்ட மற்ற அற்புதகரமான சொப்பனங்களையும், யாக்கோபு, பேதுரு, பவுல் முதலானவர்களின் சொப்பனங்களையும் நாம் நினைவுகூருகின்றோம். ஆனாலும் சொப்பனங்களுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுத்துவிடாதபடிக்கும் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். முற்காலங்களில் சொப்பனங்களுக்கான தேவை இருந்தது என்றும், அவ்விதமான தேவை தற்காலத்தில் இல்லையென்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; அவ்விதமான தேவை தற்காலத்தில் இல்லாததற்கான காரணம் சுவிசேஷ யுக சபையானது, தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படிக்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்; அதாவது நீதியின் பாதை சுட்டிக்காட்டப்படுவதற்கென ஓர் அற்புதத்தையோ (அ) சொப்பனத்தையோ அவர்கள் எதிர்ப்பார்க்காமல், தங்களுக்குப் பின்னாலே "வழி இதுவே" என்று சொல்லும் சத்தத்திற்குக் கவனமாய்க் கேட்பதே அவர்களிடம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. நமக்கான பாதையானது, தெய்வீக வார்த்தைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது மற்றும் நாம் சரியான வழிகாட்டுதலைப் பெற்றிருக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களுடைய கவனிக்கும் தன்மையை நாம் வளர்த்திட

வேண்டும். இதற்கு இசைவாகவே வேதவாக்கியங்களானது, "சொப்பனங்கண்ட தீர்க்கத்தரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக" என்று கூறுகின்றது (எரேமியா 23:28). சொல்வதற்கென்று மேலானதாய் நமக்கு வேறு எதுவும் இல்லையெனில், அதாவது நேரடியானதாகவும், அதிகாரப் பூர்வமானதாகவும் சொல்வதற்கு எதுவும் இல்லையெனில், சொப்பனமானது தெரிவிக்கப்படலாம்; ஆனாலும் நம்முடையதும், மற்றவர்களுடையதுமான சொப்பனங்கள் அனைத்திற்கும் மேலாக கர்த்தருடைய வார்த்தைகள், அவருடைய வெளிப்படுத்தல்கள், அவருடைய ஏவுதலின் பேரிலான சாட்சியங்களும் வைக்கப்பட வேண்டுமென்று மேற்கூறப்பட்ட வசனத்தில் கர்த்தர் தெரிவிக்கின்றார். ஒருவேளை ஒரு சொப்பனமானது தேவனுடைய வார்த்தைகளின் தெளிவான காரியங்கள் எதையேனும் வலியுறுத்துகின்றதானால், அது ஒரு நிழல் பார்க்கப்படுவது போன்று, பார்க்கப்படலாம் மற்றும் பயன்படுத்தப்படலாம், அதாவது உபதேசத்தையோ அல்லது கடமையையோ போதிப்பதற்காக அல்லாமல், மாறாக வேதவாக்கியங்கள் மீது கவனத்தைத் திருப்புவதற்கும் மற்றும் தெளிவாக்குவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

## "இவனைக் கொல்லுவோம் வாருங்கள்"

உண்மைகள் பற்றின விவரம்/புகார் தெரிவித்ததிலுள்ள யோசேப்பினுடைய உண்மைத் தன்மையானது, அவரை யாக்கோபு மேற்பார்வையாளராக ஏற்படுத்துவதற்கு ஏதுவாக வழிநடத்தினது மற்றும் இதன் காரணமாகவே யோசேப்பு, மூன்று நாள் பயணமாக, தன்னுடைய சகோதரர்களுக்கு சில வீட்டு உணவுகளை எடுத்துச் செல்வதற்கும், அவர்களது நிலவரங்களைப் பற்றியும், மந்தைகளினுடைய வளமை பற்றியும், மேய்ச்சல் நிலவரங்கள் முதலியவைகள் பற்றியுமான மறு செய்தியினை யாக்கோபினிடத்திற்குக் கொண்டுவருவதற்குமெனச் சீகேமுக்கு யாக்கோபினால் அனுப்பி வைக்கப்பட்டார். சீகேமிலே தன்னுடைய சகோதரர்களைக் காணமுடியாததினாலே, யோசேப்பு தோத்தானுக்குப் போனார்; மற்றும் இவைகள் அனைத்திலும் யோசேப்பு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் உடையவராகவும், அக்கால வழக்கத்தின்படி இரவு வேளைகளில் திறந்த வெளியில் உறங்கினவராகவும், வழியிலுள்ள அபாயங்களை மனத்துணிவுடன் சந்தித்தவராகவும் காணப்பட்டது வெளிப்படுகின்றது. இதுவுங்கூட, யாக்கோபு தன்னுடைய நேசகுமாரனிடத்தில் கொண்டிருந்த அன்பானது, அவர் யோசேப்பை முற்றிலுமாகச் சீரழித்துப்போடுவதற்கு வழிநடத்தவில்லை என்பதையும், யோசேப்பு தன்னைத்தான் பராமரித்துக்கொள்ள முடிகின்றவராக யாக்கோபினால் நம்பப்பட்டார் என்பதையும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இன்றைய காலங்களில் அநேகமாக பெற்றோர்கள் ஞானமற்றவர்களாக நடந்துகொண்டு, தங்களின் அதிகப் பிரியத்திற்குரிய பிள்ளைகளிடத்தில் தைரியத்தையும், உறுதியையும் வளர்த்திவிடுவதற்குத் தவறிப்போய்விடுகின்றனர் மற்றும் பிற்காலங்களில் பிள்ளைகளுக்கு மிகவும் பாதகமாய்க் காணப்படத்தக்கதாக, சில சமயங்களில் பிள்ளைகளைச் சில சிரமங்களிலிருந்து மூடி மறைத்துக் காத்துவிடுகின்றனர்.

மேய்ப்பர்களாய் இருந்த சகோதரர்கள், மந்தைகளைத் தாக்குவதற்குரிய துஷ்டமிருகங்கள் வருகின்றதா என மிகவும் கவனமாய்ச் சுற்றி நோக்கும் பழக்கமுடையவர்களாய் இருந்தார்கள் மற்றும் தங்களது சகோதரனைத் தொலைவில் வரும்போதே அடையாளங்கண்டு கொண்டார்கள். உடனடியாக அங்கிருந்த சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அவர்களது பொறாமை மற்றும் கசப்பினுடைய வேரினை வேகமாய் முளைப்பதற்குப் பண்ணிற்று மற்றும் சில நொடிகளுக்குள்ளாக அது முளைவிட்டு அவர்களது இருதயங்களில் கொலைப் பாதகத்தின் ஆவியைக் கொண்டுவந்தது. பத்தில் ஒன்பது பேர், தங்கள் சகோதரனைக் கொல்வதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டார்கள். மறுப்புத் தெரிவித்தவரும் அதுவும் மறைமுகமாகத் தெரிவித்தவருமான ஒரே நபர் ரூபன் ஆவார் மற்றும் இவர் தன்னுடைய சகோதரர்களின் கசப்பினை நன்கு அறிந்தவராக இருந்தபடியால், அவர்களை எதிர்ப்பதற்குத் துணிந்தார் மற்றும் அவர்கள் யோசேப்பைக் கொல்லாமல், அப்பகுதிகளில் காணப்பட்ட வறண்ட குழிகளுள் ஒன்றில் போடும்படிக்கான மாற்று யோசனையையும் இவர் வலியுறுத்தினார்; இவர் பிற்பாடு வந்து இரகசியமாய் யோசேப்பை விடுவிக்கலாம் என்று தன் இருதயத்தில் திட்டம் பண்ணினவராகக் காணப்பட்டார்.

இந்தச் சகோதரர்களில், சுபாவ மனிதனுடைய இருதயம் விவரிக்கப்படுவதைக் காணமுடிகின்றது, அதாவது ஒரு சமயம் நீதிக்காகப் போராடுவதையும் மற்றும் கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு நீதியின் அனைத்துக் கொள்கைகளையும் மீறுவதையும் காணமுடிகின்றது. சகோதர சிநேகம் அனைத்தையும் இத்தருணத்தில் மீறி, தங்களது சகோதரனைக் கொன்று போடுவதற்குத் திட்டம் பண்ணின இதே மனிதர்கள்தானே, கொஞ்ச காலத்திற்கு முன்னதாக ஒரு

முழு ஊரின் ஜனங்களைக் கொன்றுபோட்டதன் மூலம் தங்கள் சகோதரி அவமானப்படுத்தப்பட்டக் காரியத்துக்குப் பழித் தீர்த்தார்கள்? இப்படி அந்த ஊர் ஜனங்களைக் கொன்றுபோடுவதானது பாவத்திற்கு எதிரான நீதியான கோபம் என்று இதே மனிதர்கள்தானே கொஞ்சங்காலத்திற்கு முன்னதாக எண்ணினார்கள்? விழுந்துபோன மாம்சத்தினுடைய இம்மாதிரியான மூர்க்கத்தனமான நடவடிக்கைகளைச் சரிசெய்துகொள்வதற்குப் பரிசுத்த ஆவியினுடைய மறுரூபப்படுத்தும் ஏவுதல்/தாக்கம் அவசியமாய் உள்ளது; ஆகவேதான் பரிசுத்த ஆவியினால் மீண்டுமாக ஜெநிக்கப்பட்டவர்கள் மாத்திரமே "தெளிந்த புத்தியுள்ள ஆவியை" உடையவர்களாய் இருப்பார்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன (2 தீமோத்தேயு 1:7). உண்மையில் சுபாவபடியான மனுஷனிடத்தில் பெருமையானது முக்கியமானக் காரணியாகத் திகழ்கின்றது; நீதியைப் பாதுகாத்தல் எனும் வேடத்தில், ஆனால் உண்மையில் சுயநலத்தினுடைய ஓர் அம்சத்தைத் திருப்திப்படுத்துவதற்காகக் கொலைகள் புரிந்திடுவதற்குப் பெரும்பாலும் வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் சுயநலத்தினுடைய வேர்களில் ஒன்றாகிய பெருமையானது, சகோதரர்களை முந்தின தருணத்தின் விஷயத்தில் கொலைச் செய்திட வழிநடத்தினது. சுயநலத்தினுடைய மற்றும் ஒரு வேராகிய பொறாமையானது யோசேப்பை அவரது சகோதரர்கள் கொன்று போடுவதற்கு முயற்சிக்க இப்பொழுது வழிநடத்தினதாய் இருந்தது.

## "பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்"

ரூபனுடைய பரிந்துபேசுதல் வெற்றிக் கண்டது. யோசேப்பு குழிக்குள் போடப்பட்டார் மற்றும் பரிதாபமான நிலையிலுள்ள யோசேப்பினுடைய கதறல்களும், கெஞ்சுதல்களும், மன்றாடுதல்களும் அச்சகோதரர்களுடைய செவிகளில் விழுந்துகொண்டிருக்கவே, அவர்கள் அப்பம் புசிப்பதற்கும், யோசேப்பு அவர்களுக்காக வீட்டிலிருந்து கொண்டுவந்த உணவுகளைப் புசிப்பதற்குமென்று கீழே உட்கார்ந்தார்கள். அவர்கள் கல் இருதயம் கொண்டவர்களாகவும், இரக்கமற்றவர்களாகவும், அநீதியுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள்; உண்மையில் சுபாவத்தின்படியான (விழுந்துபோன) இருதயமானது, பொதுவாக இரக்கமற்றதாகவே காணப்படுகின்றது. உலக ஜனங்கள் மத்தியில் வெட்கத்தின் காரணமாகவோ (அ) பயத்தின் காரணமாகவோ (அ) ஏதோ ஒரு திட்டத்தின் காரணமாகவோ, பொதுவாக இரக்கம் காணப்பிக்கப்படுகின்றது; ஆனால் அன்பின் அம்சமாக விளங்கும் இரக்கமானது, ஆதியில் மனித சுபாவத்திற்குச் சொந்தமானதாகக் காணப்பட்டிருந்தபோதிலும், மிகவும் பரவலாய்த் தொலைந்து போனதாகவும் மற்றும் தங்கள் கர்த்தரின் இருதயத்திற்கு ஒத்த சாயலில் மீண்டுமாக ஜெநிக்கப்பட்டவர்கள் மத்தியில் பிரதானமான ஆதாரமாகவும் காணப்படுகின்றது.

(குழிக்குள்) சிறைவைக்கப்பட்ட யோசேப்பினுடைய கதறல்கள், கெஞ்சுதல்கள் மற்றும் மன்றாட்டுகள் குறித்து நம்முடைய பாடம் குறிப்பிடுகிறதில்லை; ஆனால் மற்றொரு வேதவாக்கியமானது இதைத் தெரிவிக்கின்றது, அதாவது பிற்காலங்களில் "இந்தச் சகோதரர்கள்" பஞ்சத்தின் காரணமாகத் தானியங்கள் வாங்கும்படிக்குக் கானானிலிருந்து எகிப்துக்குப் போகும் நிலைக்கு ஆளானார்கள். எகிப்தில் அவர்களது சகோதரனாகிய யோசேப்பு அதிகாரியாக இருந்தார் மற்றும் அவர் அவர்களை வேவுக்காரர்கள் என்று கருதுவது போன்று நடித்து, அவர்களை மூன்று நாட்கள் சிறையிலடைத்தார். அவர்கள் அங்குக் காணப்பட்டபோது, தாங்கள் முன்பு செய்த தவறுகளினால் நினைப்பூட்டப்பட்டவர்களாகி, "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்" (ஆதியாகமம் 42:21, 22). யோசேப்பு குழிக்குள் சிறைவைக்கப்பட்ட பிற்பாடு, அவரைப் பின்னர் வந்து விடுவிக்கலாம் என்ற நோக்கத்தில், ரூபன் அவ்விடத்தை விட்டுக் கடந்துபோயுள்ளதாக தெரிகின்றது; ஆனால் ரூபன் திரும்பிவந்தபோதோ, தன்னுடைய சகோதரர்கள் யோசேப்பை வணிகக் கூட்டத்தாரிடம் விற்றுப்போட்டுள்ளதையும், அந்த வணிகர்கள் யோசேப்பை அடிமையாக எகிப்துக்குக் கொண்டுபோயுள்ளதையும் அறிந்துகொண்டார்.

**R 3972**

# "துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல்"

## ஆதியாகமம் 39:20-23; 40:1-15

"ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்."—வெளிப்படுத்தல் 2:10

யோசேப்பினுடைய சோதனைகள் மற்றும் சிரமங்கள் பற்றின கதையானது, பரிதாபத்தை மிகவும் தூண்டக்கூடிய ஒன்றாக இருக்கின்றது; எனினும் அனைத்துக் காரியங்களிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமானது, யோசேப்போடு கூடவே இருந்தது என்பதையும், யோசேப்பு உண்மையாய் அவ்வனுபவங்களுக்கு இணங்கினார் என்பதையும், யோசேப்பினுடைய அனுபவங்களானது, அவருக்குப் பாதகத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மாறாக மிகுந்த அளவில் அவருக்கு அனுகூலமாகவே காணப்பட்டது என்பதையும் நாம் காண்கின்றோம். நாம் அனுபவிக்கும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நெடுங்காலத்திற்கு முன்னதாகவும் மற்றும் பரம சுபாவத்திலும், இராஜ்யத்தின் மகிமையிலும் பங்குகொள்ளத்தக்கதாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான அழைப்புக்குரிய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னதாகவும் யோசேப்பு வாழ்ந்தவராக இருந்தபோதிலும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட மாபெரும் வாக்குத்தத்த உடன்படிக்கையிலுள்ள தேவனுடைய இரக்கம் பற்றின மங்கலான வெளிப்படுத்துதலை உடையவராக மாத்திரம் யோசேப்பு காணப்பட்டப்போதிலும், அவருடைய உண்மை தன்மையும், அவருடைய பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மையையும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகிய தேவனுடைய புத்திரர் வீட்டாருக்கு அருமையான படிப்பினையாக திகழ்கின்றது. யோசேப்பினால் இவ்வளவு பொறுமையுடனும், உண்மையுடனும் சகித்துக்கொள்ள முடிந்தது என்றால், மிகவும் அதிகமாய்க் கிருபைப் பெற்றவர்களாகிய நம்மால் சகித்துக்கொள்ள முடியாது என்று சொல்லலாகுமா? யோசேப்பினுடைய வெற்றிக்கான இரகசியமானது, நம்முடைய வெற்றிக்கான இரகசியமாகவும் இருக்கின்றது, அதாவது "நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" என்று அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும் ஆபிரகாமின் உடன்படிக்கையை, விசுவாசத்தின் மூலமாக தளரா உறுதியுடன் பிடித்துக்கொள்வதே வெற்றிக்கான அந்த இரகசியமாகும் (எபிரெயர் 6:19). இப்பாடத்தைப் பார்ப்பது என்பது, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கென்று, அவர் அனுமதிக்கும் சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ், அவர்கள் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய்ப் பொறுமையாகச் சகித்துக்கொள்ளத்தக்கதாகவும், உண்மையுள்ளவர்களாய்க் காணப்படத்தக்கதாகவும், உற்சாகமூட்டுகிறதாகவும், தூண்டுகிறதாகவும் காணப்படும்.

## "யோசேப்பு எகிப்தில் ஓர் அடிமையாக"

இருபது வெள்ளிக்காசுகளுக்கு யோசேப்பின் சகோதரர்கள் அவரை விற்றுப்போட்டதான, இஸ்மயேலர்களான வியாபாரிகளோ, அவரை எகிப்துக்குக் கொண்டுபோனார்கள்; அங்கு அவர் அக்காலத்தினுடைய வழக்கத்தின்படி, திறந்த வெளிச் சந்தையில் விற்பனைக்காக நிறுத்தப்படப்போகின்றார். பரிதாபத்திற்குரிய அந்த வாலிபனின் வேதனையை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. தான் மரித்துப்போகும்படிக்குத் தனது சகோதரர்கள் தன்னைப் போட்ட குழியினின்று யோசேப்பு விடுவிக்கப்பட்ட கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, அவர்கள் உண்மையில் இருதயத்தில் மனம் வருத்தம் கொள்ளாமல், மாறாக தங்களது கொலைப் பாதகமான பொறாமையின் வடிவத்தை மாத்திரமே மாற்றியுள்ளனர் என்று உணர்ந்து கொண்டார். யோசேப்பு தன்னுடைய தகப்பனுடைய குடியிருப்புகளிலிருந்து, வெகுத்தொலை தூரங்களுக்குச் செல்லும் பழக்கமற்றவராகக் காணப்பட்டபடியால், (இம்மாதிரியான தருணங்களில்) 17-வயது வாலிபனுக்கு ஏற்பட்டிருக்கும் அதைரியத்தை/சோர்வை நாம் விவரித்துக் காட்டுவதைக் காட்டிலும், நன்கு கற்பனை செய்து நாம் புரிந்துகொள்ளலாம்; மேலும் யோசேப்பு அக்காலக்கட்டங்களில் நாகரிகத்திற்கு மையமான, எகிப்து நகரத்திற்கு வந்து, மேய்ப்பனின் குமாரனாகிய தனக்கு முற்றிலும் புதியதாகக் காணப்பட்ட வியத்தகு காரியங்களைக் கண்டபோது, தன்னை யார் விலைக்கு வாங்கப் போகிறார் மற்றும் தன்னுடைய எதிர்கால ஜீவியம் என்னவாக இருக்கும் என்பவைகள் பற்றின கவலைகள் மற்றும் சந்தேகங்களினால் அவருடைய இருதயம் நிரம்பிக் காணப்பட்டது. யோசேப்பு தேவனிடத்திலான

விசுவாசத்தை இழந்துபோகத்தக்கதாகவும், அதாவது ஏன் தனது இரக்கமற்ற சகோதரர்களிடம், தான் இரக்கத்திற்காக கெஞ்சும்படிக்கு விடப்பட வேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகவும், ஏன் தான் அடிமையாக்கப்பட்டு, தன்னுடைய தகப்பன் வீட்டினின்று பிரிக்கப்பட வேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகவும், யோசேப்பு அப்போது கடந்துவந்த அனுபவங்களில் அநேகம் வாய்ப்புகள் இருந்தது. எனினும் தேவன் மீதான விசுவாசத்தை யோசேப்பு கைவிட்டதாக நமக்கு ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவர் எகிப்திலுள்ள ஐசுவரியமான பிரதானியாகிய போத்திபார் என்பவரால் விலைக்கு வாங்கப்பட்டார். இந்த மனிதனுடைய வீட்டில், ஊழியக்காரனாகக் காணப்பட்ட யோசேப்பு, சிறியதும், பெரியதுமான தன்னுடைய பொறுப்புகளில் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார் மற்றும் தன்னுடைய எஜமானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையிலும், உயர் கணிப்பிலும் அதிகமாய் வளர்ந்தார் மற்றும் அவரது 22-ஆம் வயதில், அவரது எஜமானுடைய வீட்டின் காரியங்கள் எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கப்பட்டார். யோசேப்பு எகிப்துக்கு வந்து பத்து வருடங்களானபோது, அதாவது 27 வயதானவராய் இருக்கையில், அதாவது வாலிப வயதில் காணப்பட்டபோது, அவர் தனது எஜமானுடைய மனைவியின் அன்பை, வேண்டுமென்றே இல்லாமல், தன்பால் ஈர்த்துக்கொண்டவரானார்; ஆனால் எஜமானின் மனைவி தனது அன்பை வெளிப்படுத்தினபோது, யோசேப்பு தேவனுக்கான உண்மையின் காரணமாகவும், தனது எஜமானுக்கான உண்மையின் காரணமாகவும், விடாப்பிடியாய் எதிர்த்தவராய்க் காணப்பட்டார்.

## “யோசேப்பினுடைய ஒழுக்கத்திற்கான சோதனை”

யோசேப்பினுடைய ஒழுக்கத்திற்கான சோதனை குறித்து **முனைவர் பிலேக்கி** அவர்கள் குறிப்பாய்க் கூறியுள்ளது பின்வருமாறு: **“ஒவ்வொரு நாளும் தொடர்ந்து காதல் கலைகளில் வல்லவளாகிய வீட்டு எஜமானி, அவளது திறமையினாலும், காம உணர்வுகளினாலும் செய்ய முடிந்த சகல கவர்ச்சிகளுடன், வலைவீச வந்து கொண்டிருந்தபோது, அது சாதாரணமான சோதனையாக இருந்திருக்காது என்று நாம் நம்புகின்றோம். அடிமையாகிய தான், இத்தகைய உயர் ஸ்தானத்தில் காணப்படும் ஸ்திரீயின் அன்பைத் தன்பால் ஈர்த்துள்ளதைக் குறித்த எண்ணத்தினால், யோசேப்புகூட எப்படித் தாக்கத்திற்குள்ளாயிருக்க வேண்டும் என்றும், மற்றும் அவளது செல்வாக்கின் மூலமாகச் சுதந்திரத்தைத் தன்னால் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் கிடைக்கப்பெறும் பிரகாசமான எதிர்காலத்தில், தன்னுடைய சொப்பனங்கள் நிறைவேறும் என்பதான காட்சிகள் எவ்வாறு அவர் முன் நிழலிட்டிருக்கும் என்றும் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.”**

போத்திபாருடைய மனைவியின் நடக்கையானது, அன்பு எவ்வாறு கசப்பான பகையாக மாறும் என்பதற்கான உதாரணமாக விளங்குகின்றது. அவள் தனது உறுதியினிமித்தமாக, யோசேப்பை அவரது வஸ்திரத்தைப் பிடிப்பதன் மூலம் பிடித்தாள், ஆனால் அவரோ வஸ்திரத்தை விட்டுவிட்டு நழுவிப் போய்விட்டார் மற்றும் அப்போது அவளது சீற்றமும், சினமும் கசப்பானது. அவளோ அந்த வஸ்திரத்தைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன்னுடைய கணவனிடம், அவரது அபிமான வேலைக்காரன் தன்னைத் தவறு செய்வதற்கு இணங்க வைத்திட முயற்சித்தான் என்றும், தான் சத்தமிட்டுக் கூப்பிட்டபோது, அவன் தன்னுடைய வஸ்திரத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டான் என்றும் கூறினாள். யோசேப்பின் விஷயத்தில் இக்காரியமானது எத்தகைய ஒரு திருப்பத்தைக் கொண்டு வந்தது! யோசேப்பு தன்னுடைய எஜமானுடைய கண்களுக்கு முன்பாக மாத்திரமல்லாமல், தான் 10-வருடங்களாக தங்கியிருந்த வீட்டில் பழகினவர்கள் அனைவருக்கும் முன்பாகவும், இப்படியாக அவமதிப்பிற்கு உள்ளாகத்தக்கதாக ஏன் கர்த்தர் அனுமதித்தார்? யோசேப்பினுடைய நல்லொழுக்கமானது, இவ்வளவுக்குப் பொல்லாப்பாய்ப் பேசப்படுவதற்கு ஏதுவாகக் கர்த்தர் அனுமதித்தது ஏன்?

இது அநேகமாக யோசேப்பிற்கு மர்மமான தெய்வீகச் செயல்பாடாகவே தோன்றியிருக்கும், எனினும் தெய்வீக வழிநடத்துதலானது எப்படி அவரைக் கைவிடவில்லை என்றும், மாறாக இந்த அனுபவத்தின் மூலம் நீதி, பொறுமை, அனுபவங்கள், உண்மைத் தொடர்பாக யோசேப்பிற்கு இன்னமும் போதனைகள் கொடுப்பதற்கும், யோசேப்பு அரியணையில் பெற்றுக்கொள்ளப்போகின்ற இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களுக்கு அவரை ஆயத்தப்படுத்துவதற்கும் என்று கர்த்தருடைய வழிநடத்துதல்கள் ஆயத்தமாய் இருந்தது என்றுமுள்ளவைகளை நாம் பின் நடைபெறும் சம்பவங்களின் வெளிச்சத்தில் காணமுடிகின்றது. இந்த ஆவிக்குரிய யுகத்தினுடையவர்களாகிய நமக்கான பாடம் தெளிவானதாகவும், மிகவும் கவனத்தை ஈர்க்கின்றதாகவும் காணப்படுகின்றது;

யோசேப்பினுடைய உண்மையற்ற தன்மையின் காரணமாக, கர்த்தர் இந்தச் சோதனையை அவர்மேல் வரப்பண்ணவில்லை. இதுபோன்று நம்மீது ஒருவேளை சோதனைகளும், சிரமங்களும் வருவதற்கு அனுமதிக்கப்படும்போது, இதற்கான காரணம் நம் சார்பிலான உண்மையற்ற தன்மையும், கர்த்தரிடமிருந்து வருவதான தண்டனையும் ஆகும் என்பதாகாது. அவருடைய வழிநடத்துதலின்போது, அவரை நம்மால் காணமுடியாத போதும், வழியினுடைய முடிவை நம்மால் காணமுடியாதபோதும், நாம் கர்த்தரை விசுவாசிப்பதற்கென்று ஒவ்வொரு நாளும் அதிகமதிகமாய்க் கற்றுக்கொண்டிருக்கின்றோமல்லவா? நம்மால் வழியினுடைய முடிவைக் காணமுடியுமானால், அங்கு விசுவாசத்திற்கு இடமிருக்குமா? எதிர்காலத்தினைப் பற்றின அறிவு நமக்கு இல்லாத காரியமே, தற்காலத்தில் விசுவாசத்திற்கான பலமாய் இருக்கின்றதல்லவா?

## ''சோதனையில் எங்களைக் கைவிடாதிரும்''

**மகா ஸ்பர்ஜன்** அவர்கள் ஒருமுறை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், **"சில குறிப்பிட்டப் பாவங்களோடு போராடும் விஷயத்தில், விலகியோடுவதைக் காட்டிலும் வெற்றிக்கொள்வதற்கு வேறு எந்த வழியும் இருப்பதில்லை. முற்காலத்தில் இயற்கையை வழிபடுபவர்கள், பேஸிலிஸ்க் எனும் பாம்பைக் குறித்து அதிகம் எழுதியுள்ளனர்; இந்தப் பாம்பானது, தனது கண்களின் பார்வையினால் நபர்களை/விலங்குகளை அசைய முடியாதபடிக்கு நிறுத்தி, சுலபமாகக் கொன்று போடுகின்றது; இதுபோலவே பொல்லாப்பினுடைய ஒரு பார்வையே நம்மைக் கவலைக்கிடமான அபாயத்திற்குள்ளாக்குகின்றது**;**"** இந்தக் கருத்திற்கு இசைவாகவே அப்போஸ்தலன், "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு" என்று தீமோத்தேயுவுக்கு எழுதியுள்ளார். இயேசுவின் மாதிரியானது, பூமிக்குரிய வகை சார்ந்த பிரகாசமான நம்பிக்கைகளையும், வாய்ப்புகளையும் விட்டுவிடுமளவுக்கு நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாய் இருத்தல் தொடர்புடையக் காரியத்தில், நம் அனைவருக்கும் அருமையானப் பாடமாகக் காணப்படுகின்றது. சோதனையிலிருந்து விலகியோடுதல் குறித்த இந்தப் பாடத்தை நாம் கற்றுக்கொள்கையில், நாம் மற்றுமொரு பாடத்தையும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது, ஏனெனில் யோசேப்பினுடைய எஜமானாகிய போத்திபார் யோசேப்பின் மீது மிகவும் கோபமடைந்தபோது, நடந்தக் காரியங்களை விவரிப்பதன் மூலம் போத்திபாரின் மனைவியை அவமானப்படுத்துவதற்கு முயற்சிக்காமல், குற்றச்சாட்டை மாத்திரமே மறுதலித்தவராக யோசேப்பு காணப்பட்டது பதிவுகளிலிருந்து தெரிகிறது. பேசும் காரியம் உண்மையாக இருப்பினும், தீமை பேசுதலைத் தவிர்ப்பதற்காக, நமக்கு எத்தகைய சிறந்த மாதிரி/உதாரணம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது!

அந்த ஸ்திரீயினுடைய பொல்லாப்பை வெளிப்படுத்துவது என்பது நீதியான காரியமாகவே இருந்தாலும், அப்படிச் செய்வது என்பது அவளைப் பாதிப்பிற்குள்ளாக்குவது மாத்திரமல்லாமல், அவள் மீதான போத்திபாருடைய பாசத்தின் விஷயத்தில், அது சரி பண்ணமுடியாத பலமான அடியாகக் காணப்பட்டு, இப்படியாக அவள் மீதான எஜமானின் நம்பிக்கைக் குலைந்துபோய், அவரது குடும்பத்தைப் பிரித்துவிடும் என்று யோசேப்பினுடைய பெருந்தன்மையான இருதயம் அநேகமாக யோசித்திருக்க வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலைகளின் கீழ்ப் பொறுமையாய்ச் சகிப்பதற்கான விருப்பம் என்பது, உயர்தரமான மற்றும் தலைச் சிறந்த குணலட்சணத்திற்குரிய வியக்கத்தக்க ஓர் உதாரணமாகும்/விளக்கமாகும். இப்படிப்பட்ட ஒரு மனுஷன் நிச்சயமாய் அரியணைக்குத் தகுதியானவனே; ஆனால் இன்னும் இல்லை. காரணம் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட உயர்த்தப்படுதலுக்கு ஆயத்தமாகுவதற்கு முன்னதாக, அவருக்குத் தேவன் இன்னும் வேறே அனுபவங்களை வைத்திருந்தார். இப்படியாகவே நம் விஷயத்திலுங்கூடக் காணப்படும்; அதாவது நமது கர்த்தரும், மீட்பருமானவருடன் அவரது மாபெரும் வேலையில் பங்கடையத்தக்கதாக, ஆயிர வருட இராஜ்யத்தினுடைய சிங்காசனத்திற்கு, நம்மைத் தேவன் அழைத்திருக்கின்றார்; ஆனால் முதலாவதாக நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாக்கப்பட வேண்டும் மற்றும் கர்த்தர் நாடும் அப்பேர்பட்ட பாத்திரங்களின் வளர்ச்சிக்குப் பொறுமையுடன் கூடிய சகிப்புத்தன்மைக்கான பரீட்சைகளும், அடிகளும், சோதனைகளும் அவசியப்படுகின்றது.

## ''குணலட்சணங்கள் பலப்படுத்தப்படுதல்''

ஒரு பாறை கட்டி (Rock candy) என்பது முழுக்க நிலக்கரியாக இருக்கின்றது மற்றும் ஒரு வைரம் என்பது முழுக்க நிலக்கரியாக இருக்கின்றது, எனினும் இவைகளுக்கிடையே வித்தியாசமுள்ளது, அதுவும் வைரமானது அதிகளவில் கெட்டியாகவும், திடமாகவும்,

திண்ணமாகவும், படிகமாகியுமுள்ள காரியத்திலேயே முக்கியமாய் வித்தியாசமுள்ளது. இதுபோலவே கிறிஸ்துவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளுடைய நிலைகளுக்கிடையே வித்தியாசம் உள்ளது. ஒரு காலத்தில் நாம் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக" மாத்திரமே இருந்தோம், ஆனால் நாம் பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மையின் வாயிலாகவும், கர்த்தருடைய அறிவுரைகள் மற்றும் தேவனிடமிருந்துவரும் ஒழுங்குபடுத்துதல்கள் வாயிலாகவும் நாம் உண்மையாய்க் காணப்படுவோமானால் நாம் கர்த்தரிலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்பட்டிருக்க வேண்டும்; "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" என்பது பாறை கட்டி (Rock candy) வடிவில் காணப்படும் நிலக்கரிக்கு ஒத்த நிலையாகும், ஆனால் உபத்திரவம் எனும் சூளையில் வளர்ந்துள்ள முதிர்ந்த கிறிஸ்தவனோ, வைரத்திற்கு ஒத்த நிலையில் காணப்படுகின்றான். இங்குக் கர்த்தர் நம்முடைய பரீட்சை காலத்தின் நிறைவாகிய சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில், தம்முடைய இரண்டாம் வருகையின்போது, தம்முடைய "சம்பத்தை" சேர்ப்பதுபற்றிக் குறிப்பிட்டுள்ள அவருடைய வாக்குறுதியை நாம் நினைவுகூருகின்றோம்.

இப்படியான ஒரு குற்றச்சாட்டின் கீழ்க் காணப்படும் தன்னுடைய அடிமையை, போத்திபாரின் ஸ்தானத்தில் காணப்படும் எந்த ஓர் அதிகாரியும் அக்காலகட்டத்தில், மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுத்திருந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இப்படியாகச் செய்யப்படுவதற்குப் பதிலாக, யோசேப்பு சிறையில் கைதியாக வைக்கப்பட்டக் காரியமானது, தனக்கு உண்மையாய்ப் பத்து வருடங்கள் வேலை புரிந்திட்ட மனிதன், தனக்கு நம்பிக்கைத் துரோகம் புரிந்துள்ளதான குற்றச்சாட்டை போத்திபார் முழுவதும் நம்பாதது தெரிகின்றது. முற்காலங்களில் காணப்பட்ட சிறைச்சாலை என்பது, நாகரிகமான தேசங்களில் காணப்படும் நவீன/நாகரிகமான சிறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்பட்டது. இந்தச் சிறையைக் குறிப்பிடுகையில், யோசேப்பு இதைக் "கிடங்கு" என்று குறிப்பிடுகின்றார் (ஆதியாகமம் 40:15); இது எபிரெயத்தில் "குழி" என்று அழைக்கப்படுகின்றது மற்றும் கிழக்கத்திய தேசங்களிலுள்ள சிறைகளைப்பற்றி **ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:-**

**"நாங்கள் லீவண்டில் அநேகம் சிறைச்சாலைகளைப் போய்ப் பார்த்தோம்; நாங்கள் அங்குச் சகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு அசுத்தங்களையும், காற்றோட்டமற்ற நிலைமையையும், அதிகளவிலான எலிகளையும், பூச்சிகளையும், புழுக்களையும், கைதிகளுடைய பாதங்கள் கட்டப்படுகின்ற இரக்கமற்ற தொழுவங்களையும் பார்த்தோம். நல்லொழுக்கமுள்ள யோசேப்பிற்காக நாம் அனுதாபம் கொள்கின்றோம்; யோசேப்பு காய்ரோ என்று தற்போது காணப்படும் பட்டணத்திலுள்ள காவல் கிடங்கில் போடப்பட்டதாகப் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது; இந்தக் கிடங்கின் இருளும், அருவருப்புகளும், தொற்று நோய்களும் நிறைந்த நடைப்பாதைகளின் சுவர்களில் கைதிகள் விலங்கிடப்பட்டிருப்பார்கள்."**

சிறையிலுள்ள யோசேப்பின் அனுபவங்களானது, சங்கீதக்காரனால் குறிப்பிடப்படுகின்றது; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது" சங்கீதம் 105:18.

இந்தப் புதிய அனுபவமானது, யோசேப்பினிடத்தில் எத்தகைய ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தினது? யோசேப்பு சோர்வடைந்துவிட்டாரா, தளர்ந்துபோய்விட்டாரா, மனங்கசந்து போனாரா? இதுதான் நல்லொழுக்கத்திற்கான பலன் என்றால், நான் தீயொழுக்கமுள்ளவனாக மாறிவிடுகின்றேன் என்று யோசேப்பு தனக்குள்ளோ (அ) மற்றவர்களிடத்திலோ கூறிக் கொண்டாரா? இந்த அனுபவத்தை அனுமதிப்பதற்காக, அவர் கர்த்தருடைய செயல்பாடுகளுக்கு எதிராக அதிருப்திக்கொண்டாரா? அல்லது அவர் பொறுமையுடன் ஒப்புக்கொடுத்தவராகவும், கர்த்தரை நம்பினவராகவும் காணப்பட்டாரா? இந்த அனுபவங்கள் அனைத்திலும் யோசேப்பு, உண்மை கிறிஸ்தவனுக்கும், பரிசுத்தவானுக்குமான சரியான நடக்கைக்கான தலைச்சிறந்த மாதிரியாகக் காணப்படுகின்றார். இந்தத் தீமையைக் கர்த்தர் அனுமதித்ததற்கான காரணம் தொடர்புடைய விஷயத்திலுள்ள குறைவான வெளிச்சத்திலேயே யோசேப்பு உண்மையுள்ளவராகக் காணப்பட்டாரானால், மிகவும் பெரிதான வெளிச்சத்தினாலும், அறிவுரைகளினாலும், வேதவாக்கியங்களிலுள்ள யோசேப்பு மற்றும் மற்றவர்களுடைய சிறந்த மாதிரிகளினாலும், நம்முடைய சொந்த அனுபவங்களின் பாடங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள நம்மிடம், நியாயமாய்க் கர்த்தர் எவ்வளவாக எதிர்ப்பார்ப்பார்; நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்?

மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுள்ளவர்களும், நமக்கான பரீட்சைகளும், சிரமங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளது ஏன் என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் இவைகள் எப்படி நம்மை இராஜ்யத்திற்காகவும் மற்றும் அதன் மகிமையான வேலைகளுக்காகவும் ஆயத்தமாக்குகின்றன என்பது பற்றின விளக்கத்தையும் பெற்றுள்ளவர்களுமாகிய நாம் வெட்கத்தின் நிமித்தமாவது, யோசேப்பினுடைய அளவுக்காகிலும் காணப்படுவதற்கு முயற்சிக்க வேண்டும். யோசேப்பின் பரீட்சைகளும், சிரமங்களும் அவருக்குள் எப்படிக் குணலட்சணத்தை வளர்த்தினது என்பதையும், அவர் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு தருணங்களிலும் மேற்கொண்டுவந்தபோது, அவர் எப்படிப் பலமடைந்துகொண்டு வந்தார், அதாவது அவரது குணங்கள் உறுதியடைந்தது என்பதையும் நம்மால் உடனடியாகக் கண்டுகொள்ள முடிகிறதல்லவா? ஆ! இவர் "முற்பிதாக்களில்" ஒருவராகக் காணப்பட்டு, சபை மகிமையடைந்தப் பிற்பாடு, தலையும், சரீரமும் அடங்கின கிறிஸ்துவின் வழிநடத்துதல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஒட்டுமொத்த மனித குடும்பத்தை ஆளுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் தூக்கிவிடுவதற்குமென, பூமியெங்கும் பிரபுக்களாக வைக்கப்படுபவர்களில் ஒருவராகக் காணப்படுவார். தம்முடைய ஊழியங்களுக்காக அருமையானப் பாத்திரங்களைத் தெரிந்தெடுப்பது எப்படி என்பதை மாத்திரமல்லாமல், இன்னுமாக இந்தப் பாத்திரங்களை வளர்த்துவதும், நிரூபிப்பதும் மற்றும் பரீட்சிப்பதும் மற்றும் தம்முடைய ஊழியத்திற்காகவும், அவர்களது ஆசீர்வாதங்களுக்காகவும் அவர்களைப் பலப்படுத்துவதும் எப்படி என்பதையும் கர்த்தர் நன்கு அறிவார்.

## "கர்த்தர் அவனோடே இருக்கிறார்"

தொழுவங்களில் கால்கள் கட்டப்பட்டிருந்ததான யோசேப்பின் அனுபவங்களானது, கொஞ்சங்காலமே நீடித்தது. யோசேப்பிற்கு எதிராக என்ன குற்றச்சாட்டுக் காணப்பட்டாலும், இவர் சாதாரணமான பண்புகளும், திறமைகளும் உடையவரல்ல என்று சிறைக்காப்பாளன் உணர்ந்து கொண்டான். யோசேப்பு தேவனுக்குக் கொண்டிருந்த பயபக்தியும் மற்றும் கடமையின் விஷயத்தில் அவர் கொண்டிருந்த உண்மையும், அவரை மதிப்புமிக்க மனிதனாக்கிற்று மற்றும் யோசேப்பின் கரங்களில் ஒன்றன்பின் ஒன்றாக சில பொறுப்புகளை ஒப்புவிப்பதில் சிறைக்காப்பாளன் திருப்தியடைந்தான். பதிவுகளின்படி யோசேப்பின் சொந்த அனுபவங்களானது, அவர் மற்றக் கைதிகளினிடத்தில் இரக்கம் கொண்டவராக இருக்கச் செய்திற்று; தன்னுடைய சொந்த அனுபவங்களின் காரணமாக, அவரால் மற்றக் கைதிகளினுடைய துக்கங்களையும், அவமானங்களையும் உணர்வுப்பூர்வமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. எகிப்தின் அதிகாரியென யோசேப்பு அதிகமாய்ப் பயனுள்ளவராகக் காணப்படத்தக்கதாக, அவரைத் தகுதிப்படுத்துவதற்குரிய சிறந்த படிப்பினைகளை யோசேப்பு கற்றுக்கொண்டுவந்தார். இந்தக் காரியங்கள் அனைத்திற்குமான இரகசியமானது, "கர்த்தர் அவனோடே இருக்கிறார் மற்றும் அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார்" என்ற சுருக்கமான சில வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளது (ஆதியாகமம் 39:3).

கர்த்தருக்காக எவ்வளவேனும் பயபக்திக்கொண்டிருப்பவர்கள், அதற்கேற்ப ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்; அதிகப்படியான விசுவாசம், அதிகப்படியான பயபக்தி, அதிகப்படியான கீழ்ப்படிதல் என்பவைகள், இருதயத்திலும், ஜீவியத்திலும் அதிகப்படியான ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகின்றதாகவும், குணலட்சணங்கள் இயல்பாக எப்படியிருப்பினும், அதற்கு அதிகப்படியான வலிமையூட்டுதலையும், உறுதியடைதலையும் கொண்டு வருகின்றதாகவும், இயல்பாகவே அந்த நபர் எவ்வளவு ஒழுங்கில்லாதவராகக் காணப்பட்டாலும், அவருக்கு அதிகப்படியான தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொண்டுவருகின்றதாகவும் காணப்படும். இந்த அனைத்து விஷயங்களிலும் கர்த்தருடைய வார்த்தைகளின் அறிவுரைகளை (அ) அவரது வாக்குத்தத்தங்களின் உற்சாக மூட்டுதலையும், தெளிந்த புத்தியுள்ள ஆவியின் வழிநடத்துதலையும் கொண்டிருப்பவர்களாகிய நாம் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். நாம் எந்தளவிற்கு இவைகளைப் பயன்படுத்தி, சரியான குணலட்சணங்களை வளர்த்திக் கொள்கின்றோமோ, அவ்வளவாய் நாம் இறுதியில் பலனை அடைந்து, "போதும், மேலே வா; நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்லும் ஆண்டவருடைய குரலை நாம் கேட்போம்.

“கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளாகிய” நாம் கர்த்தருக்கு உண்மையாய் (அதாவது சகோதர சகோதரிகளுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் எல்லாவிதத்திலும் உண்மையாய் இருத்தலை உள்ளடக்கின விதத்தில் கர்த்தருக்கு உண்மையாய்) இருக்க வேண்டும் என்பதாக ஆதார வசனத்தில் இடம்பெறும் புத்திமதியை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த உண்மையாயிருத்தல் என்பது பரீட்சிக்கப்பட வேண்டும், சோதிக்கப்பட வேண்டும், நிரூபிக்கப்பட வேண்டும், அதுவும் ஜீவியத்தின் முடிவுவரையிலும், நாம் மரணம் என்னும் சிறைச்சாலைக்குள் கடந்துபோவது வரையிலுமாகும். “மரணப்பரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவக்கிரீடத்தை உனக்குத் தருவேன்.” நாம் சேவிக்கின்ற கர்த்தரானவர் சிறையின் கதவுகளைத் திறக்கவும், அவரது இராஜ்யத்தின் மகிமையிலும், கனத்திலும் மற்றும் அழியாமையிலும் பங்கடையத்தக்கதாக, நம்மை முதலாம் உயிர்த்தெழுதலில் கொண்டுவருவதற்கும் வல்லமைக் கொண்டவராகவும் மற்றும் சித்தமும் உள்ளவராகவும் இருக்கின்றார். அல்லேலூயா, எத்துணை ஓர் இரட்சகர்! எத்தகைய ஓர் இரட்சிப்பு! எத்தகைய ஒரு ஜனங்களுக்கு இவைகள் திட்டமிடப்பட்டுள்ளன! இத்தகைய கருத்துக்களானது, நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நாடும்படிக்கு நம்மை ஏவுகின்றது; இதுவே தெய்வீக நோக்கமாகவும் காணப்படுகின்றது.

## “சிறைச்சாலையில் தழைத்தோங்குதல்”

சிறைச்சாலையின் தலைவனோ சிறைச்சாலையின் பராமரிப்பை யோசேப்பினுடைய கரங்களில் விடுவதில் மனநிறைவுடன் காணப்பட்டார். யோசேப்பின் தலைமையின் கீழ்க் கிடங்குச் சுத்திகரிக்கப்பட்டிருக்கும் மற்றும் அந்தக் கிடங்கில் முன்பு நிலவிவந்த பைத்தியக்காரரின் விடுதிக்கொத்த நிலைமைக்கு நேர்மாறாக, அந்த இருள் மூடியிருந்த சுவர்களின் மத்தியில், கொஞ்சம் சமாதானம் நிலவியிருக்கும் என்பதையும் நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஞானம், இரக்கம், பொறுமை, கனிவு ஆகிய அனைத்தும் தேவைப்பட்டிருக்கும் மற்றும் செயல்படுத்தப்பட்டிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே. மேலும் இப்படியாக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதான சிறைச்சாலையானது, சிறையிலுள்ள கைதிகளுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்ததோடுகூட, யோசேப்பினுடைய சொந்த இருதயத்திலும் ஆசீர்வாதத்தை, அதாவது வளர்ச்சியைக் கொண்டுவந்தது; நாம் மற்றவர்களுடைய வருத்தங்களை ஆற்றுவதற்கு முயற்சிக்கும்போது, நமக்குச் சந்தோஷமும், சமாதானமும் எப்போதும் கடந்துவருகின்றது.

யோசேப்பு எப்படிச் சிறையிலுள்ள கைதிகளுடன் நடந்துகொண்டார் என்பதுபற்றின ஒரு காட்சி, இப்பாடத்தில் கொடுக்கப்படுகிறது; கைதிகளைக் கொடூரமாகவும், முரட்டுத்தனமாகவும் நடத்துவதற்குப் பதிலாக, அவர் ஒருநாள் காலை அன்று, கைதிகளில் இருவர் வழக்கத்திற்கு மாறாக துக்கமுகத்தோடே இருப்பதைக் கவனிக்குமளவுக்கு, அவர் கைதிகளுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்தவராய் இருந்தார்; அவர் அவர்களை நோக்கி கனிவோடே, “உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன?” என்று கேட்டார். அவர்கள் சொப்பனங்கண்டிருந்தார்கள் மற்றும் தங்களது சொப்பனங்களானது, இனி வரவிருக்கின்ற துன்பத்தை முன்னறிவிக்கின்றது என்ற பயத்தினால் கலங்கிப்போயிருந்தனர். யோசேப்போ: “சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்” (ஆதியாகமம் 40:8). யோசேப்பினுடைய உண்மைக்கும், குணலட்சணத்தினுடைய உறுதிக்குமான இரகசியமானது, அவர் தேவனிடத்தில் விசுவாசங்கொண்டிருந்தார், அதாவது தேவன் யோசேப்பினுடைய கொள்ளுத்தாத்தாவாகிய ஆபிரகாமிடத்தில் பண்ணினதும், அவரது தாத்தாவாகிய ஈசாக்கிடத்தில் உறுதிபண்ணினதும், மீண்டுமாக அவரது தகப்பனாகிய யாக்கோபிடத்தில் உறுதிபடுத்தப்பட்டதும், தான் சுதந்தரவாளியாகக் காணப்படுகின்றதுமான மகா வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையில் விசுவாசங்கொண்டிருந்தார் என்ற உண்மையில் அடங்கி உள்ளது. ஜீவியத்தில் ஒவ்வொரு புயலின்போதும், மந்தாரமான மேகம் ஆளும்போதும், ஜீவியத்தைச் சீராக வைத்துக்கொள்ளுவதற்கு, விசுவாசத்திற்கு எத்தகைய ஆற்றல் காணப்படுகின்றது!

சொப்பனங்களில் ஒன்றுக்கு மிகவும் நன்மையான அர்த்தம் காணப்பட்டது மற்றும் சீக்கிரத்தில் விடுதலைப் பெற்று இராஜாவின் தயவிற்கு மீண்டுமாகக் கடந்துவரப்போகிறவரை நோக்கி யோசேப்பு, தன்னையும், அவர் சிறையில் காணப்படும்போது தான் அவரைப் பரிவாய் நடத்தினதையும் அவர் நினைவுகூரவும், தன் சார்பாக, தான் கிடங்கிலிருந்து விடுவிக்கப்படத்தக்கதாக இராஜாவிடம் நல் வார்த்தைகளைப் பேசும்படிக்கு வேண்டிக்கொண்டார். இந்தக் காரியத்தை நாம் விவரிக்கையில், யோசேப்பு தன்னுடைய சகோதரர்களையோ அல்லது

போத்திபாரின் மனைவியையோ குறைக்கூறாமல், தான் சிறையில் இருப்பதற்கான காரணத்தை, "நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" என்று மாத்திரம் கூறினதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. யோசேப்பினுடைய நோக்கங்களுக்கு ஆதரவு கிடைக்கத்தக்கதாக, அவர் எவரையும் பற்றிப் பழிதூற்றுவதற்கு அவசியமில்லை, மற்றும் அதை அவர் தவிர்த்துவிட்டார். நம்முடைய சந்ததி மூவாயிரம் வருடங்களுக்கு முன்னதாக குரங்குகளாகவோ (அ) காட்டுமிராண்டிகளாகவோ இல்லையென்பதற்கு இங்கு நாம் எத்தகைய ஓர் ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றோம். குரங்காகவோ (அ) காட்டுமிராண்டியாகவோ இருப்பதற்குப் பதிலாக, (பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக . . . சுவிசேஷ யுகத்திற்கு முன்னதாக எவர்மேலும் வராத) பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பிக்கப்படுதலை அடைந்திராத இந்தச் சுபாவ மனுஷன் (யோசேப்பு) எழுத்தின் வடிவிலோ (அ) வாய்மொழியாகவோ எந்த அறிவுரைகளையும் பெற்றிராமல் இருந்தபோதிலும், தீமைப்பேசத்தக்கதாகக் கடுமையாய்ச் சோதனைக்குள்ளாக்காத விதத்தில் காணப்படும் அளவிற்கு, வியக்கத்தக்க விதத்தில் பெருந்தன்மையையும், அன்பையும் வளர்த்தியுள்ளவராகக் காணப்படுகின்றார்.

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களும், பாவத்தினின்றும், தீமையான கிரியைகள் அனைத்தினின்றும் திரும்பியுள்ளதாக அறிக்கைப் பண்ணியுள்ளவர்களும், தீமைப் பேசுதல் என்பது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளுக்குச் சம்பந்தப்பட்டது என்று நன்கு அறிந்துள்ளவர்களுமான அநேகரை, யோசேப்புப்பற்றின இந்தச் கதையானது வெட்கத்திற்குள்ளாக்குகின்றது. அன்பே பிரதானமானது என்றும், அன்பு தீங்கு நினையாது என்றும், நீடிய சாந்தமும், தயவும் உள்ளது என்றும், எளிதில் சினமடையாது என்றும், கர்த்தர் நம்மை அன்புகூர்ந்தது போன்று, ஒருவரையொருவர் நாம் அன்புகூர வேண்டிய கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில் மாத்திரம் இந்த அன்பு காண்பிக்கப்படாமல், இன்னும் நம்முடைய அயலார்களிடத்திலுங்கூடக் காண்பிக்கப்பட வேண்டும், அதாவது நாம் நம்மை அன்புகூருவது போன்று, நம்முடைய அயலார்களை அன்புகூர வேண்டும் என்றும், இதையும் தாண்டி நம்முடைய சத்துருக்களிடமும் அன்புகூர்ந்து, அவர்களுக்கு நம் உதவித் தேவைப்படும் பட்சத்தில், அவர்களை உடுத்துவிக்கவும், போஷிக்கவும் வேண்டும் என்றும் உள்ள அறிவுரைகளை நம்முடைய கர்த்தரிடமிருந்தும், அப்போஸ்தலர்களிடமிருந்தும் யோசேப்பு பெற்றிருக்கவில்லை. உபத்திரவத்தில் பொறுமையுடன் சகித்திருத்தல், இன்னுமாக விசுவாசமும், இரக்கமும், கனிவும், பொறுமையும், பரிவும் நிறைந்த நிலையில் காணப்படுதல் என்ற படிப்பினையை யோசேப்பிடமிருந்து பெற்றுக்கொண்டதற்காக, தேவனுக்கு நன்றி. இந்தக் குணலட்சணங்கள் அனைத்தையும் வளர்த்தும் விஷயத்தில், மனதிற்கு எத்தகைய பங்குள்ளது. ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களினால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கைகள் ஒருவேளை யோசேப்பிற்கு இல்லாதிருந்தால் அவரும் பெரும்பான்மையான மனுக்குலத்தாரைப்போன்று நற்குணங்கள் அற்றவராகவும், சோர்வடைந்தவராகவுமே காணப்பட்டிருந்திருப்பார். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளது போன்று, நாமும் அதே வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாக இருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்வோமாக (கலாத்தியர் 3:16, 29).

---

R 3978

# "என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்"

## ஆதியாகமம் 41:38-49

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், தேவனிடத்தில் கேட்கக்கடவன்."—யாக்கோபு 1:5

ஒரு கைதியாகவும், சிறைச்சாலையின் கண்காணியாகவும் யோசேப்பு மூன்று வருடங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, பொறுமை மற்றும் அனுதாபம் தொடர்பாக, அதிகமான அனுபவங்களைக் கொண்டுவந்து, அவருடைய பிள்ளைப்பருவத்தில் அவரிடத்தில் வெளிப்பட்டதான குணலட்சணத்தினுடைய அந்த அருமையான அம்சங்களை உறுதிப்படுத்திற்று மற்றும் ஆழமாக்கிற்று என்பதில் ஐயமில்லை. கர்த்தர் அவரை ஒரு மாபெரும் வேலைக்கெனப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கின்றார்; அவரது குணலட்சணம் வளரவேண்டியது மாத்திரமல்லாமல், அவரது விசுவாசம் பரீட்சிக்கப்படுவதும், மிகவும் பலப்படுத்தப்படுவதும்கூட ஏற்றதாயிருந்தது. யோசேப்பு கர்த்தரை முழுமையாக விசுவாசித்திருந்தபோதிலும், இந்த விசுவாசமானது அவர் பானபாத்திரக்காரனிடம் வேண்டிக்கொள்வதைத் தடைப்பண்ணவில்லை, அதாவது யோசேப்பு பானபாத்திரக்காரனின் சொப்பனத்தினுடைய அர்த்தத்தை விவரித்து, பானபாத்திரக்காரன் இராஜாவினுடைய தயவிற்குள் மீண்டும் திரும்பும்போது, கைதியாக அவர் இருந்தபோது, தான் பாராட்டின பரிவை நினைவுகூர்ந்து, தன்னை விடுதலைப்பண்ணத்தக்கதாகப் பேசும்படிக்கு வேண்டிக்கொண்டதைத் தடைப்பண்ணவில்லை என்பதை நாம் பார்த்திருக்கின்றோம். தன்னுடைய இரக்கத்திற்குக் கைமாறு செய்வதற்குரிய வாய்ப்புகள் அநேகவற்றைப் பெற்றிருந்த இந்தப் பானபாத்திரக்காரனிடத்தில், யோசேப்பு அதிகமாய் எதிர்ப்பார்த்துள்ளதாகத் தோன்றுகின்றது, எனினும் விடுதலை இல்லாமல் இரண்டு வருடங்கள் கடந்துபோய்விட்டது; இந்த இரண்டு வருடங்களில், யோசேப்பு கர்த்தரிடத்திலான தன்னுடைய விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொண்டு, கர்த்தருடைய திட்டங்களின் நிறைவேறுதல்களுக்காகப் பொறுமையுடன் காத்திருந்தார்.

இதைக் காட்டிலும் புதுச் சிருஷ்டிகளாக இருக்கும் அனைவருக்குமானச் சரியான நடத்தைக்குச் சிறந்த உதாரணம் இருக்காது. நம்முடைய காரியங்கள் அனைத்தும் கர்த்தருடையது, ஏனெனில் நாம் நம்மை முற்றும் முழுமையாக அவரிடத்தில் கையளித்துள்ளோம் மற்றும் நாமும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம். இப்படிப்பட்டவர்களே ஆண்டவருடைய பின்வரும் வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும்: "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"; "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்"; "அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது"; "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (மத்தேயு 6:8; யோவான் 16:27; யோவான் 10:29; ரோமர் 8:28). நம்முடைய மேலான நன்மைக்கு ஏதுவானவைகள் என்று நாம் கருதுபவைகளை அடையத்தக்கதாக, எந்த மற்றும் அனைத்து நியாயமான வழிவகைகளை நாம் பயன்படுத்துவது சரியான காரியமாக இருந்திட்டாலும், நாம் அவைகள் மீது சார்ந்திராமல், மாறாக கர்த்தர் மீது சார்ந்திருந்து, ஒவ்வொரு கேடான சூழ்நிலைமையிலிருந்தும் நம்மை மீட்பதற்கான அவருடைய வழிக்காகவும், அவரது நேரத்திற்காகவும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

## "அவருக்காகப் பொறுமையுடன் காத்திருங்கள்"

சிறையிலிருந்து யோசேப்பை விடுவிப்பதற்கான கர்த்தருடைய நேரமும், வழிமுறையும், யோசேப்பினுடைய அனைத்து எதிர்ப்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது; யோசேப்பு சிறைச்சாலையிலிருந்து, அக்காலக்கட்டத்தில் மாபெரியதாய் விளங்கின தேசத்தினுடைய அரமனைக்கு உயர்த்தப்பட்டார். இறுதியில் இவைகள் பானபாத்திரக்காரன் நடுவராக

(மத்தியஸ்தராக) இருந்து செயல்பட்டதின் மூலம் நடைப்பெற்றது; பானபாத்திரக்காரன் யோசேப்பின் காரியத்தை மறந்து போனதற்காக வெட்கமடைந்தார். பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டார் மற்றும் அவைகளை அவருடைய மனதில் ஆழமாய்ப் பதியப்பெற்றிருந்தார் மற்றும் அவைகளுக்கான அர்த்தத்தை அவர் வாஞ்சையுடன் நாடித்தேடினார். அவர் ஏழு புஷ்டியுள்ள பசுக்கள் நைல் நதியிலிருந்து ஏறிவந்து, நதியின் கரையோரமாய்க் காணப்படும் செழிப்பான புற்களை மேய்ந்துகொண்டிருந்ததாகவும் மற்றும், அடுத்ததாக நதியிலிருந்து அவலட்சணமும், கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்து, புஷ்டியான ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டதாகவும், பட்சித்துப்போட்ட பின்னரும் அவைகள் புஷ்டியாகாமல் இருந்ததாகவும் சொப்பனம் கண்டார். இந்தச் சொப்பனத்திற்குப் பின்னர் இராஜா, கூட்டுக் கோதுமை என்று அழைக்கப்படும் எகிப்திய கோதுமையின் ஒரு காம்பை/தாளைக் கண்டார்; அதன் தலைப்பாகமானது மிகவும் பெரியதாகவும், ஏழு தானியக் கதிர்களாகப் பிரிந்ததாகவும் இருந்து, மிகவும் ஏராளமான பலனைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது; இதனை தொடர்ந்து பஞ்சக் காலங்களில் தெற்குக் கீழ்க்காற்றினாலும், ஈரப்பதம் இல்லாததினாலும், பாதிப்படைந்தும், பயன்படாமல் போவதுமான பயிர் போன்றதொரு, வேறொரு காம்பு/தாள் வந்தது; இதில் சாவியானதும், நலிந்ததுமான ஏழு கதிர்கள் காணப்பட்டது. பிந்தி வந்த இந்தச் சாவியான ஏழு கதிர்களும், செழுமையான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது.

முற்காலங்களில் கர்த்தர் தம்முடைய சொந்த ஜனமாக இருப்பவர்களில் சிலருக்கு மாத்திரம், உதாரணத்திற்கு யோசேப்பு, தானியேல் முதலானவர்களுக்கு மாத்திரம் முக்கியமான சொப்பனங்களை அருளாமல், சில சமயங்களில் புறஜாதியார்களுக்கும்கூட அருளியுள்ளார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்; உதாரணத்திற்கு நேபுகாத்நேச்சார் பொற்சிலைக் குறித்தும், இன்னுமாக விருட்சம் குறித்தும் சொப்பனங்கள் கண்டார் மற்றும் இங்கு வரும் பார்வோனும் சொப்பனங்கள் கண்டார். எகிப்தின் இராஜா தன்னுடைய சொப்பனத்திற்கான விளக்கத்தை அறிந்துகொள்வதில் உதவியை விரும்பினதிலும், இதற்காக தனது அரச சபை ஞானிகளை அழைத்ததிலும், அவர்களால் திருப்திகரமான விளக்கத்தைக் கொடுக்க முடியாததிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. யோசேப்பு விளக்கம் கொடுக்க, காரியம் எளிமையானதாக தோன்றுகின்றது மற்றும் இவ்வளவு எளிமையான விளக்கத்தைப் பார்வோனின் ஞானிகளாலும், ஆசாரியர்களாலும் கொடுக்க முடியவில்லையே என்றுதான் நாம் ஆச்சரியமடைகின்றோம்; இப்படியாகவே நம்முடைய ஞானத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாம் புரிந்துகொண்ட பிற்பாடு, உணர்ந்துகொண்ட பிற்பாடு எளிமையானதாகத் தோன்றும். இப்படியாகவே நம் நாட்களுடைய கண்டுபிடிப்புகளின் விஷயத்திலுங்கூடக் காணப்படுகின்றது. இந்தக் கண்டுபிடிப்புகள் பற்றி ஏன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே எண்ணம் வரவில்லை என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம்.

இரகசியங்களை வெளிப்படுத்தும் மகாபெரியவரின் ஞானத்திற்கு, உலகமானது சரியான புகழைச் சாற்றுவதில்லை என்பதில் நமக்கு நிச்சயமே; இன்னுமாகப் பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்களுங்கூட, இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தேவனுக்குக் கனத்தைச் சாற்றுவதில் அதிகம் விருப்பம் காண்பிப்பதில்லை. தற்காலத்தின் கண்டுபிடிப்புகள் சார்ந்த விஷயங்கள் அனைத்தும், ஆயிரவருட இராஜ்யத்திற்கான, "தேவனுடைய ஆயத்தம் பண்ணும் நாளின்," தெய்வீக முன்னேற்பாடுகளாய் இருக்கின்றதென, நாம் வேதவாக்கியங்களில் காணும் காரியங்களை, ஒருவேளை உலகத்தாரால் உணர்ந்துகொள்ள முடியுமானால், இது எவ்வளவாய் நம்முடைய அறிவு பெருத்த நாட்களில், உலகத்தினுடைய பெருமை எனும் நீர்க்குமிழியைக் (bubble) உடைப்பதாக இருக்கும்; அனைத்து ஞானமும் பரத்திலிருந்துதான் வருகின்றது என்றும், இன்னுமாக இராஜ்யத்திற்கான ஆயத்தத்திற்காக மாத்திரமல்லாமல், இராஜ்யத்தை அறிமுகப்படுத்தும் மகா உபத்திரவத்தின் நாளுக்குரிய ஆயத்தத்திற்குமென, இயற்கையின் சக்திகளை உருவாக்கும் விஷயத்தில் நமக்கு உதவுவதற்கும் மற்றும் (அறியாமை) மூடல் அகற்றப்படுவதற்குமான கர்த்தருடைய ஏற்றவேளை வரவில்லையெனில், நாமும் நம்முடைய மூதாதையர்கள் போன்று, குருடர்களெனத் தடவித்தேடுபவர்களாக இருந்திருப்போம் என்றும் நாம் அறிந்துகொள்கின்றோம்.

## "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்"

எகிப்தின் ஞானிகள் பார்வோனுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைக் கொடுக்க முடியாமலிருந்தபோது, பார்வோனின் பானபாத்திரக்காரனோ, தன்னுடைய சொப்பனத்தையும், இரக்கமும், பரிவுமுள்ள யோசேப்பு எவ்வளவு துல்லியமாய்த் தனது சொப்பனத்திற்கு அர்த்தம்

தெரிவித்தார் என்பதையும், அர்த்தத்தைத் தெரிவித்த யோசேப்பிற்கு, ஏதாகிலும் செய்வதாக தான் வாக்களித்ததையும், இதுவரையிலும் அதை, தான் செய்யவில்லை என்பதையும் நினைவுகூர்ந்தான். பானப்பாத்திரக்காரன்மேல் முழுக்கக் குற்றம் சுமத்திட முடியாது; யோசேப்பிற்கு அநுக்கிரகம் காட்டுவதற்குரிய தேவனுடைய ஏற்றவேளை வரும்போதுதான், பானப்பாத்திரக்காரன் யோசேப்பிற்கு உபயோகமாக இருக்க முடியும். பார்வோன் தன்னுடைய பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியினுடைய சொப்பனங்களுக்குக் கொடுக்கப்பட்ட அருமையான விளக்கம் பற்றின சம்பவத்தைக் கேட்டபோது, தன்னுடைய சொப்பனங்களுக்கான அர்த்தத்தை அறியும்படிக்கு, விரைவாகச் சிறைச்சாலைக்கு ஆள் அனுப்பினார். இங்கும் யோசேப்பினுடைய குணலட்சணத்திற்கான மற்றுமொரு பரீட்சையைப் பார்க்கின்றோம். இராஜாவின் முந்நிலையில் யோசேப்பு எவ்வாறு தன்னைத் தாழ்த்திக்கொண்டார் என்று நாம் கவனமாய்க் கவனிக்கலாம். யோசேப்பு கர்வம் கொண்டவராக, தற்பெருமையடித்துக் கொண்டவராக, தன்னை நிலைநாட்டுபவராகக் காணப்பட்டாரா? தன்னை விசித்திரமானவராகவும், தன்னுடைய மனதின் மறைவிடங்களிலிருந்து சில ஆழமான ஞானத்தை வெளிக்கொணர்பவராகவும் தன்னைக் காண்பித்துக் கொண்டாரா? இப்படியாக எதுவும் யோசேப்பு செய்யவில்லை. யோசேப்பு தன்னடக்கத்திற்கான உருவமாக இருந்தார்; மேலும் யோசேப்பினால் தன்னுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைக் கொடுக்கமுடியும் என்று இராஜா தனது நம்பிக்கையைத் தெரியப்படுத்தினபோது, யோசேப்பு பிரதியுத்தரமாக: "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார்" என்றார்.

இங்கு யோசேப்பினுடைய மகத்துவத்திற்கான இரகசியங்களில் ஒன்றை நாம் காண்கின்றோம்; யோசேப்பு தேவனைக் கனப்படுத்தினார் மற்றும் இதன் காரணமாக இறுதியில் இவரும், தேவனால் கனப்படுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் பிரியப்படும் ஒரு நபரானார். வேதவாக்கியங்கள் இக்கருத்தினை எவ்வளவாய் முன்வைக்கின்றது! "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று இடம்பெறும் ஆண்டவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (லூக்கா 14:11). "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள் (1 பேதுரு 5:6). "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என்ற அறிவுரைக்கேற்ப யோசேப்பின் விஷயத்தில் இப்படிப்பினையானது உண்மையானதாக இருந்ததுபோல, நம் விஷயத்திலும் உண்மையாக இருக்கத்தக்கதாக ஓ! இந்த ஒரு படிப்பினையை நாம் அனைவரும் நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் ஆழமாய்ப் பதியப் பெற்றுக்கொள்வோமாக (நீதிமொழிகள் 3:6).

ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் கர்த்தரை நினைத்துக்கொள்ளுவது சரியான காரியமாக இருந்திட்டாலுங்கூட, தெய்வீக வார்த்தைகளினுடைய ஆராய்ச்சியைச் செய்வதும், தெய்வீக வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுப்பதுமாகிய விஷயங்களில் கர்த்தரை நினைத்துக்கொள்வதும் இன்னும் ஏற்றக்காரியமாகக் காணப்படுகின்றது. நம்மில் எவரும் நம்மைக் குறித்தோ அல்லது ஞானம் நம்முடையது என்றோ சொல்லாமல் இருப்போமாக; மாறாக பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காகக் கர்த்தருக்கு நன்றியுள்ள உணர்வினால் நிரப்பப்பட்ட இருதயங்களுடன், அவருடைய சத்தியம் தொடர்புடைய விஷயத்தில் அவரையும், அவரது வார்த்தைகளையும், அவரது ஏற்பாடுகளையும் நினைத்துக்கொள்வோமாக. இக்காரியமானது, சபையில் பொறுப்பு வகிக்கும் ஸ்தானங்களில் காணப்படுபவர்களுக்கு, அதாவது பரிசுத்த ஆவியினாலே, கிறிஸ்துவினுடைய மந்தையை மேய்ப்பதற்கெனக் கண்காணிகளாக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. எந்தளவுக்குச் சுயநல நாட்டம் காணப்படுகின்றதோ, எந்தளவுக்கு மனுஷர் மத்தியில் கனம் பெறுவதற்கு விருப்பம் இருக்கின்றதோ மற்றும் ஞானத்திற்கான ஊற்றாகிய கர்த்தரும், தமது சத்தியத்தை வழங்குவதற்கென அவர் பயன்படுத்தும் கருவிகளும் யார் ஒருவரால் புறக்கணிக்கப்படுகின்றார்களோ (அ) மதிப்புக்குறைத்து நடத்தப்படுகின்றார்களோ, அந்த ஒரு நபர் ஆபத்தான சூழ்நிலையில் காணப்படுகின்றார் என்பதும், சரியான பாதையை நோக்கி உண்மையாய் முன்னேறவில்லை என்பதும் நமக்கு உறுதியே.

## “அனுகூலமான வாய்ப்புகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுதல்”

பார்வோன் தனது சொப்பனத்தை எடுத்துக் கூறினார் மற்றும் அதைக் கேட்ட உடனே யோசேப்பு அதற்கான அர்த்தத்தைக்கூறி, அந்த இரண்டு சொப்பனங்களுமே ஒன்றுதான் என்று விவரித்தார், அதாவது இரண்டுமே ஒரே பாடத்தைத்தான் புகட்டுகின்றது என்று விவரித்தார்; மிகவும் செழிப்பான அறுவடைகள் உள்ள ஏழு வருடங்கள் காணப்படும் என்றும், அதைத் தொடர்ந்து பஞ்சமும், வறட்சியுமுள்ள ஏழு வருடங்கள் காணப்படும் என்றும், இந்த ஏழு வருட பஞ்ச காலத்தில், ஜனங்களுடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்கு, முதல் வரும் செழிப்பான ஏழு வருடங்களில் விளையும் தேவைக்கும் அதிகமான விளைச்சல்கள் அவசியப்படும் என்றும் கர்த்தர் பார்வோனுக்குச் சுட்டிக்காண்பித்துள்ளதாக யோசேப்பு விவரித்தார். யோசேப்பைக் காட்டிலும் செருக்குக்கொண்ட மனிதன் ஒருவன் யோசேப்பின் இடத்தில் காணப்பட்டிருப்பானானால், சொப்பனங்களின் அர்த்தத்தைத் தெரிவித்ததின் காரணமாக, தான் எகிப்தின் ஞானிகளைக் காட்டிலும் மிகச்சிறந்தவன் ஆகியுள்ளான் என்றும், தான் ஆச்சரியமான ஒரு காரியத்தைச் செய்துள்ளான் என்றும் எண்ணிக்கொள்ளும் மாத்திரத்தில், தன்னுடைய முக்கியத்துவம் பற்றின உணர்வினால் மிகவும் மூழ்கிப்போனவனாகி, அங்கு நின்றுகொண்டிருந்து, இராஜாவினுடைய நன்றிகளையும் பெற்றுக்கொண்டு, ஜனங்கள் அவனை ஞானி என்று கண்டுகொள்ளத்தக்கதாக, ஒரு சுதந்தர மனிதனாக வெளியேறி இருப்பான் என்பதில் சந்தேகமில்லை.

யோசேப்பினுடைய தாழ்மை ஒரு நடிப்பல்ல; ஞானம் கர்த்தருடையது என்று அவர் சாற்றும் காரியமே அவரது இருதயத்தின் உண்மையான உணர்வாக இருந்தபடியால், அவர் கர்த்தருடைய செய்தியை ஒப்படைத்தபோது பெருமை கொள்ளவில்லை, மாறாக சொப்பனம் ஆசீர்வாதமாக அமையத்தக்கதாக எடுக்கப்பட வேண்டிய சரியான நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்று யோசேப்பு அமைதியுடனும், தன்னடக்கத்துடனும் இராஜாவுக்கு யோசனை அளிக்கத் தொடங்கினார். “ஆகையால், விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக. இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்வாராக. அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைத்துவைப்பார்களாக. தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு, அந்தத் தானியம் இனி எகிப்துதேசத்தில் உண்டாகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காக தேசத்திற்கு வைப்பாயிருப்பதாக என்றான்” (ஆதியாகமம் 41:33-36). இந்த வேலைக்கு தான்தான் நியமிக்கப்படப்போகின்றார் என்று யோசேப்பு கொஞ்சமும் எண்ணியிருந்திருக்க மாட்டார். (எகிப்தியன் அல்லாத) அந்நிய பிறப்புடைய ஒருவனை, பார்வோன் சிறைச்சாலையிலிருந்து எடுத்து, தன்னுடைய சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளுக்கும் மேலான ஸ்தானத்திற்கு உயர்த்துவது என்பது எதிர்ப்பார்ப்பதற்கு இயலாத ஒன்றாகும். எனினும் இப்படியாகத்தான் பார்வோன் செய்தார் மற்றும் இங்கிருந்துதான் நம்முடைய பாடம் ஆரம்பிக்கின்றது.

## “தேவனைக்காட்டிலும் நம்மால் மிகவும் ஞானமாய்த் தெரிவு செய்யக்கூடுமா?”

பார்வோன் தனது அரசபையின் ஊழியக்காரரை நோக்கி, “தேவன் நமக்கு முன்னெச்சரிப்பு வழங்கியுள்ள பஞ்சக் காலத்திற்கான ஆயத்தங்களைப் பண்ணும் இந்த மாபெரும் வேலைக்குத் தலைவனாக இருக்கும்படிக்கு, தேவ ஆவியைப் பெற்ற இந்த யோசேப்பைப்போல வேறொருவன் உண்டோ?” என்று கூறினார். பார்வோன் தனது அரசபையின் ஊழியக்காரர்களுடைய சம்மதத்திற்குக் காத்திருக்காமலும், அக்காலத்தினுடைய ஏகாதிபதி ஆட்சி (தன் விருப்பம்போல் ஆளுகிற) முறைமையின் விதத்தில், கேள்விக்கானப் பதிலை முடிவு பண்ணி, யோசேப்பை நோக்கி, “தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு (இராஜ்யத்திற்கு) அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன்” என்றார் (ஆதியாகமம் 41:39-41).

மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும் புனைக்கதைகளில்/நாவல்களில் காணப்படும் கதைகளையும் மிஞ்சும் அளவுக்கு, யோசேப்பு அடிமைத்தனத்தினின்றும், காவல் கிடங்கிலிருந்தும், இராஜாவுக்கடுத்த நிலையிலுள்ள வல்லமைக்கும், கனத்திற்கும், மதிப்பிற்கும், உலகத்திலுள்ள மிகப்பெரிய தேசத்தினுடைய அதிபதியின் பதவிக்கும் மாற்றப்பட்ட காரியமானது, மிகவும் சிலிர்க்க வைக்கின்றதாய் இருக்கின்றது. இது உண்மையென்று நம்புவதற்குச் சிரமமாய் இருக்குமளவுக்கு, இது மிகவும் ஆச்சரியமானக் காரியமாக இருக்கின்றது. நம்முடைய நாட்களிலும் மற்றும் நாடுகளிலும் நிலவும் ஜனநாயகத்தின் கீழ், இப்படியாக ஒருநிலையிலிருந்து, இன்னொரு நிலைக்கு மாற்றப்படுவது என்பது சாத்தியமற்றதாக இருப்பினும், முற்காலங்களில் இது சாத்தியமற்றக்காரியமல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்குத் தானியேல் எபிரெய அடிமையாக சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்டார் என்பதையும் நாம் அறிவோம், எனினும் தானியேல் நேபுகாத்நேச்சரால், பாபிலோன் சாம்ராஜ்யத்தின் ஆளுநர்களில் ஒருவராக இருக்கும்படிக்குத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் யோசேப்பைப்போலவே, தானியேலும் சொப்பனங்களுக்கான அர்த்தம் கொடுப்பவர் என்ற விதத்திலேயே, இராஜாவின் முன்பு கொண்டு வரப்பட்டார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். **பேராசிரியர் சாய்சி** அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார், **"சீரியன் ஒருவன் இப்படியாக எகிப்தினுடைய மாநிலங்களின் உயர் ஸ்தானங்களுக்கு உயர்த்தப்படுவது என்பது ஒருபோதும் நடந்திராத காரியமல்ல மற்றும் இக்காரியம் சிங்காசனத்தில், எகிப்து இராஜ வசம்சத்தில் பிறந்த ஒருவர் காணப்படும் நாட்களில் சம்பவிப்பதைக் காட்டிலும், ஹிக்சாஸ்** (Hyksos; ஆட்டு இடையர்களின்) **ஆளுகையினுடைய நாட்களில் சுலபமாய்ச் சம்பவிக்கிற காரியமாகும். . . . பல நூற்றாண்டுகளாக முகமதியன்** (Mohammedan Age) **காலங்களில், எகிப்தை ஓர் அடிமை அல்லாமல், வேறு எவராலும் ஆளமுடியாது."** 1852-ஆம் ஆண்டில் பெர்சியாவின் பிரதம மந்திரியாகவும், இராஜ்யத்தில் இரண்டாம் நிலையிலும், ஆனால் அதிகாரத்தில் முதலாவதாகவும் இருந்தவர், கழுதை ஓட்டுனரின் மகனாவார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்; இன்னுமாக வலியிலிருந்து ஓர் ஏழை பல்மருத்துவரினால் விடுவிக்கப்பட்ட துருக்கியின் சுல்தான், கைமாறாக மருத்துவரை ஆட்சி எல்லையில் பிரபுவாக்கினார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

யோசேப்பு அடிமை நிலைமையிலிருந்தும், காவல் கிடங்கிலிருந்தும், உலகத்திலுள்ள வல்லமையில் இரண்டாம் நபராக உயர்த்தப்பட்டக் காரியமானது, இன்னுமாக அவரது வாழ்க்கை, ஒருவருக்கு நிழலாக இருக்கின்றது என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் இயேசு அடிமையின் ரூபம் எடுத்தார் அல்லவா? அவர் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலைக்குள் கடந்துபோனார் அல்லவா? அவர் திடீரென அண்டசராசரத்தை ஆளுபவராகிய பிதாவுக்கு அடுத்த ஸ்தானத்தில், சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார் அல்லவா? மேலும் தேவனுடைய ஏற்பாடுகளின் கீழ் இயேசு பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, எதிர்க்காலத்தில் முழுஉலகத்தையும் ஆசீர்வதிக்கக்கூடிய அவரது மாபெரும் வேலைக்கு அவரை ஆயத்தப்படுத்தினதல்லவா? யோசேப்பு எகிப்து ஜனங்களுடைய ஜீவியங்களை இரட்சித்ததுபோன்று, நிஜமான யோசேப்பும், உலகத்தாரின் ஜீவனை இரட்சிப்பார் அல்லவா? இவைகளை எண்ணிப்பார்க்கையில் நாம் எவ்வாறு கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்கள் ஆகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதையுங்கூட நாம் நினைவில்கொள்வோமாக; "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17). இந்த ஓர் எண்ணத்தை நம்முடைய மனங்களில் கொண்டிருப்போமானால், சோதனைகளும், சிரமங்களும், இந்தத் தற்காலத்தின் பாடுகளும், உபத்திரவங்களும், ஏமாற்றங்களுமாகிய அனைத்தும் நாம் சரியான விசுவாசம் கொண்டிருக்கும் பட்சத்தில், அதாவது அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற விசுவாசம் கொண்டிருக்கும் பட்சத்தில், மகிழ்ச்சியுடன் நம்மால் சகிக்கப்படும்.

## "முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும்"

சாம்ராஜ்யத்தின் புதிய அதிபதியை (அ) பிரதம மந்திரியை இராஜாவாகிய பார்வோன், ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்கான வேளை வந்தபோது, முதலாவதாக யோசேப்பினுடைய அந்தஸ்தைச் சுட்டிக்காட்டத்தக்கதாக, அவருக்குப் பொருத்தமான வஸ்திரத்தை அணிவிப்பதற்கும், இரண்டாவதாக யோசேப்பை இரண்டாம் இரதத்தின்மேல் ஏற்றுவதற்கும், மூன்றாவதாக யோசேப்பு, ஜனங்கள் முன்னிலையில், தண்டோராப்போடுபவர்களால் ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்படுவதற்கும், இவர்கள் யோசேப்பினுடைய அந்தஸ்தை அறிவிப்பதற்கும், ஜனங்களைத் தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று யோசேப்புக்கு முன்பாகக் கூறுவதற்கும், ஜனங்கள் யோசேப்பை இராஜாவினுடைய பிரதிநிதியென ஒப்புக்கொள்ளும்படிக்குக் கூறுவதற்கும், பார்வோன் ஏற்பாடு பண்ணினார். இது நமது கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும், அவருடைய

சோதனைகள் முடிவடைந்த பிற்பாடு அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டது குறித்தும் அப்போஸ்தலர் கூறியுள்ள வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது; "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்" செய்தருளினார் என்று பவுல் குறிப்பிடுகின்றார் (பிலிப்பியர் 2:9,10). ஆண்டவருடைய இந்த உயர்வான உயர்த்தப்படுதலைக் குறித்து நாம் ஆராய்கையில், அவருடைய மணவாட்டியானவள் அவரோடுகூட, அவரது மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் உடன்சுதந்தரவாளியாக இருக்கப்போகின்றாள் என்றும், மணவாட்டி வகுப்பாரில் அங்கங்கள் ஆகுவதற்குரிய சிலாக்கியமானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களுக்கே உரியதாகும் என்றும் உள்ளவைகளை நாம் மறந்துவிட வேண்டாம்.

இவைகளை நாம் எப்போதும் மனதில் கொண்டவர்களாக இருப்போமானால், நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருப்போம்; மேலும் பூமிக்குரிய இன்பங்களும், துன்பங்களும், ஐசுவரியங்களும், தரித்திரமும், பெலவீனங்களும் மற்றும் கீழானவைகளுமாகிய அனைத்தும் எத்துணை அற்ப காரியமாக நமக்குத் தோன்றும்! மேலும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களுக்குரிய நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கான நம்முடைய வாஞ்சையில், நாம் மிகவும் தீவிரமாய் இருப்போம். பார்வோன் யோசேப்பிற்கு ஒரு புதிய பெயரைச் சூட்டினார்; இதன் அர்த்தமானது, "ஜீவ அப்பம் மூலம், மரணத்திலிருந்து விடுவிப்பவர்" என்பதாகும். நமது அருமை மீட்பர் தம்மைக் குறித்து, "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" என்று கூறினதை நாம் நினைவுகூருகின்றோம். முழு உலகமும் தெய்வீக வார்த்தைகளைப் புசித்து, அதன் பாடங்களையும், அனுபவங்களையும், மாபெரும் மீட்பரின் மகிமையான இராஜ்யத்தில் அவருடைய ஊழியம் மற்றும் ஒழுங்குபடுத்துதலின் கீழ், தங்களுடையதாக்கிக்கொள்வார்களானால், இறுதியில் அனைவரையும் ஆதாமின் மரணத்தினின்று விடுவிக்கத்தக்கதாக, தேவன் இயேசுவில் ஜீவ அப்பத்தை அருளியுள்ளார். இவைகள் அனைத்துமே எகிப்தின் அதிகாரியென யோசேப்பு நடந்துகொண்ட காரியங்களில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

## "யோசேப்பு எகிப்தியர்களை அடிமைப்படுத்தினாரா?"

ஜனங்களுடனான யோசேப்பின் வியாபார நடவடிக்கையைச் சிலர் கடினமாய்க் குற்றம் சாட்டியுள்ளனர், ஆனால் இதைக் குறித்த எந்த ஒரு குற்றச்சாட்டும் வேதவாக்கியங்களில் இல்லை. யோசேப்பினுடைய முதல் வேலை, எகிப்து தேசம் எங்கும் சுற்றிப்பார்த்து, களஞ்சியங்களுக்கான பொருத்தமான இடங்களைத் தெரிந்துகொண்டு, களஞ்சியங்களைக் கட்டியெழுப்புவதற்கான ஒப்பந்தங்களை (contracts) போடுவதாக இருந்தது. அடுத்ததாக திரளான அறுவடைகள் உள்ள ஏழு வருடங்கள் முழுவதும், யோசேப்பு ஜனங்களிடமிருந்து முதலாவதாக அவர்கள் இராஜாவுக்கு வழக்கமாய்ச் செலுத்தும் வரியாகிய, ஐந்தில் ஒரு பங்கை வசூலித்தார். இதனோடுகூட இராஜாவினுடைய பணத்தைக்கொண்டு, ஜனங்களிடமிருந்து, அவர்களால் கொடுக்க முடிந்த அளவிலான தானியங்களை வாங்கி, இப்படியாக திரளான தானியங்களைச் சேகரித்து வைத்தார். பஞ்சமும், வறட்சியுமான வருடங்கள் வந்தபோது, ஜனங்கள் தாங்கள் முன்பு அரசாங்கத்திடம் விற்ற அதே தானியங்களை, அரசாங்கத்திடமிருந்து திரும்பவும் விலைக்கொடுத்து வாங்குவதில் மகிழ்ச்சியாய் இருந்தார்கள். கோதுமைக்கு மிக அதிகமான விலைக் கேட்கப்பட்டதாகவும், ஜனங்கள் ஏமாற்றப்பட்டதாகவும் நமக்கு எந்தக் குறிப்பும் இல்லை.

ஜனங்கள் தங்களுடைய பணம் யாவற்றையும் செலவழித்து முடித்தப் பிற்பாடுங்கூடப் பஞ்சம் நிலவினது; மேலும் அதிபதியான யோசேப்பு ஜனங்களிடமிருந்து அவர்களது கால்நடைகளையும், அவர்களுடைய யாவற்றையும் விலைக்கு வாங்கினார் மற்றும் இவ்வாறாக இவைகள் இராஜாவினுடைய சொத்தாயின. இது கடைப்பிடிக்கத்தக்கதான காரியமாக நமக்குத் தோன்றுவதில்லை, ஏனெனில் இக்காரியமானது, வல்லமையையும், அதிகாரத்தையும் மிக அதிகமாய் ஓர் ஏகாதிபதியின் கரங்களில் குவிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை தெய்வீக நியமனத்தின்படியும், தெய்வீக வழிநடத்துதலின்படியும், தெய்வீகச் சித்தத்தின்படியுமான இராஜாக்களும், ஆசாரியர்களும் உலகத்தில் காணப்படுவார்களானால், இத்தகையதொரு ஏகாதிபதி ஆட்சியானது சிந்தித்துப்பார்க்க முடியாத அளவுக்குச் சகல ஜனங்களுக்கும் மகா பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருக்கும். இதுவே ஆயிரவருட யுகத்தின்போது நடைமுறையில் காணப்படும் என்று நாம் வேதவாக்கியங்கள் மூலம் அறிந்திருக்கின்றோம்; உலகமானது, அவர்களின்

அதிகாரிகளுக்கு வாக்களிப்பதற்கும், அவர்களுக்கான சட்டங்களை இயற்றுவதற்கும் அழைக்கப்படுவதில்லை, மாறாக சகல முழங்கால்களும் யாருக்கு முடக்கப்பட வேண்டுமோ, தேவனுடைய மகிமைக்கென்று சகல நாவுகளும் யாரை அறிக்கைப் பண்ணிட வேண்டுமோ, அப்படியான தெய்வீக நியமித்தலை உடைய அந்த மாபெரும் அதிபதிக்குக் கீழ்ப்படிவது மாத்திரமே கட்டளையிடப்படும்.

மகிமையிலுள்ள கிறிஸ்துவுக்கும், அவர் உலகத்தை ஆசீர்வதிக்கும் விதத்திற்குமான மற்றுமொரு நிழலை நாம் யோசேப்பில் காண்கின்றோம். நம்முடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் போதுமான அளவுக்கு ஜீவ அப்பத்திற்கான முழு ஏற்பாட்டையும் நம்முடைய மீட்பர் ஏற்கெனவே பண்ணிவிட்டார். அவருக்குள் ஜீவன் இருந்தது மற்றும் அந்த ஜீவனை அவர் நம் பொருட்டாகக் கொடுத்தார். இப்பொழுது அவருடைய அங்கத்தினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும், அவரை ஏற்றுக்கொண்டபோது இந்த ஜீவனை விசுவாசத்தினால் உடனடியாகப் பெற்றுக் கொண்டவர்களுமாகிய நாம், அந்த ஜீவனை நிஜமாக முதலாம் உயிர்த்தெழுதலின் போது பெற்றுக்கொள்வோம் மற்றும் இந்த ஆசீர்வாதங்கள் பெற்றுக்கொள்வது தொடர்புடைய விஷயத்தில், நாம் வரிசையில் உலகத்தைக் காட்டிலும் முந்தினவர்களாகக் காணப்படுகின்றோம். சிறு மந்தையினர் மாத்திரமே இப்பொழுது உருவாகிக்கொண்டிருக்கின்றனர், இப்பொழுது போஷிக்கப்படுகின்றனர், வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாக மரணத்திலிருந்து ஜீவனுக்கு இப்பொழுது கடந்துவருபவர்களாக இருக்கின்றனர்; மணவாட்டியும், அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் மாத்திரமே இப்பொழுது மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்துவருபவர்களாக இருக்கின்றனர். தேவன் மனதில் கொண்டிருக்கின்றதும், நம்முடைய மீட்பரை அவர் நியமித்ததுமான மாபெரும் வேலையானது, உலகத்தை இரட்சிக்கும் வேலையாகும் மற்றும் உலகத்திற்கான இந்த இரட்சிப்பிற்குரிய வழிவகை மற்றும் வேளை, ஆயிர வருட யுகமாகிய, மனுஷர்கள் மத்தியிலான பரலோக இராஜ்யத்தினுடைய ஆளுகையின் போதேயாகும்.

## ‘‘வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம்’’

ஆயிரவருட யுகத்தின்போது, ஜீவ அப்பத்தை அளிக்கும் மாபெரியவரும், அவருடைய உடன் பங்காளியாகிய மணவாட்டியும், ஜீவ அப்பத்தை உலகத்திற்கு, முற்பிதாக்கள் வழியாகக் கொடுப்பார்கள், ஏனெனில் உலகத்திற்கு அப்போது ஜீவ அப்பம் தேவையாக இருக்கும் மற்றும் அதன் மதிப்பையும் உலகம் சரியாக உணர்ந்திருக்கும். நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம், அக்காலங்கள் அனைத்திலும், உலகமானது தேவனுடைய பிரதிநிதியும், மாபெரும் அதிகாரியுமானவருக்கு முழங்கால்களை முடக்கிட வேண்டும். இன்னுமாக அக்காலம் முழுவதிலும் அவர்கள் நித்திய ஜீவனை அடையத்தக்கதாக, ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுத்துக்கொண்டிருப்பது/ஒப்புக்கொடுத்துக்கொண்டிருப்பது அவசியமாய் இருக்கும் மற்றும் இறுதியில் ஆயிரவருட யுகத்தின் முடிவுவரைக் காணப்படுபவர்கள், அதாவது இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போகாமல் காணப்படுபவர்கள், மனுஷன் புசித்தால் மரியாமல் இருக்கும் வானத்திலிருந்து இறங்கிவந்த இந்த ஜீவ அப்பம் அடையாளப்படுத்தும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தங்கள் சொத்தை, தங்களுடைய அனைத்தையும், தங்களையும் சேர்த்து மாற்றாக (exchange) கொடுத்துவிட்டவர்களாக இருப்பார்கள்.

யோசேப்பினால் சேகரிக்கப்பட்டத் திரளான தானியங்களானது, முழுமையாய் ஒப்புக்கொடுக்கும் அளவுக்குள்ள அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் கீழ், குமாரனிடத்திலிருந்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் மனித இனத்தின், ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் நித்திய ஜீவனை அருளுவதற்குரிய தேவனுடைய திரளான ஏற்பாட்டை நமக்கு நிழலில் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சித்தத்தையும் மற்றும் நம்முடைய அனைத்தையும் அழியக்கூடிய சக மனிதனிடத்தில் ஒப்புக்கொடுப்பது என்பது மிகவும் அபாயகரமான காரியமாகவும், நாம் இதைச் செய்துவிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டிய காரியமாகவும் இருந்தாலும், இப்படியாகக் கர்த்தர் தொடர்புடைய விஷயத்தில் காணப்படுவதில்லை. கர்த்தர் இம்மாதிரியான அபாயங்கள் விஷயங்களில் பிரம்மாண்டமான விதிவிலக்காவார். அவரிடத்தில் நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுத்துவிடுதல் என்பது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அவரது ஆசீர்வாதம் மூலம் நம் ஒவ்வொருவருக்கும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது மற்றும் நம்முடைய மேலான நன்மையைக் கருதியும், அவரது மகிமைக்காகவும், நம்முடைய குணலட்சணங்களை, நமது ஜீவியத்தின் சகல காரியங்களுடன் அவர் வனைந்து, நெறிப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

உலகத்திற்கு எத்தகைய ஓர் ஆசீர்வாதமான எதிர்க்கால வாய்ப்புள்ளது! இன்னுமாக இந்த அப்பத்தை (உலகத்தைவிட) முன்கூட்டியே விசுவாசத்தின் மூலம் புசிக்கிறவர்களும், நிஜமான யோசேப்போடுகூட, நீதியின் நிமித்தமான அவரது பாடுகளிலும், சோதனைகளிலும் பங்குகொள்பவர்களுமாகிய நாம் எவ்வளவாய் நம்முடைய இச்சிலாக்கியத்தில் களிக்கூருகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

## "ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், அவன் கேட்கக்கடவன்"

இங்கு நம்முடைய ஆதார வசனம் மறக்கப்படக்கூடாது. நிச்சயமாக நாம் அனைவரும் ஞானத்தில் குறைவுள்ளவர்களாய் இருக்கின்றோம் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளாக, தேவன் நமக்குப் பண்ணியுள்ள அன்புடன்கூடிய ஏற்பாடுகளின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை நாம் மிக மிகத்தெளிவாக உணர்ந்துகொள்ளும்போது, ஞானம் தொடர்புடைய நம்முடைய குறைச்சலை நாம் அதிகமாய் உணர்ந்துகொள்கின்றவர்களாய் இருப்போம்.

ஒருகாலத்தில் உலகத்தாருக்கு இருக்கின்றதுபோல, நமக்கும் வாழ்க்கை சிக்கலான வழிப்பாதையாகத்தான் இருந்தது; அநேகம் கடமைகளும், பொறுப்புகளும் இருந்தது, ஆனால் இவைகளுக்குப் போதுமானளவு பலனையோ (அ) விளைவையோ நம்மால் காணவும் முடியவில்லை. நாம் பிறந்தோம், நாம் சாப்பிட்டோம், நாம் பானம் பண்ணினோம், நாம் உறங்கினோம், பள்ளியில் போய் நாம் கற்றோம், நாம் வேலை பார்த்தோம் மற்றும் கொஞ்சமோ, நிறையவோ பாடுகளும், வேதனைகளும், இன்பங்களும் கலந்து காணப்பட்ட நம்முடைய வாழ்க்கையை அனுபவித்தோம், ஆனால் இவைகளின் நோக்கம் என்னவென்று உணர்ந்துகொள்ளாமலேயே காணப்பட்டிருந்தோம். இப்பொழுதோ பரத்திலிருந்து வரும் ஞானம் பெருகியுள்ளதினால், நம்மில் சிலர் நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களினால், யுகங்களுக்கடுத்த மாபெரும் தெய்வீகத் திட்டத்தையும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நம்மிடத்திலான அன்புடன்கூடிய இரக்கத்தையும், தெய்வீக நோக்கத்தையும் காண்கின்றோம் மற்றும் நாம் நம்முடைய மீட்பரோடுகூடப் பாடுபடுவோமானால், நாம் அவருடன் உடன்சுதந்தரர்களாகவும், தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும் காணப்படுவோம் என்றும் காண்கின்றோம்.

இதை நாம் கண்டபடியால், நம்முடைய ஜீவியத்தின் முழுத்திசையும் மாற்றப்பட்டுள்ளது. இப்பொழுதோ ஜீவித்தல் என்பது மேம்பட்டதாகிவிட்டது; ஜீவித்தல் என்பது முழுக்க முக்கியத்துவம் நிறைந்ததாகவும், முழுக்க சுவாரஸ்யமாகவும் இருக்கின்றது. நாட்கள், மணி நேரங்கள் விரைவாகக் கடந்துபோய்க்கொண்டிருக்கின்றது மற்றும் இந்த நாட்களும், மணி நேரங்களும் தேவன் நம்மிலும், நமக்காகவும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறதும், நாம் முழு இசைவுடன் காணப்பட்டுவருகிறதுமான பிரம்மாண்டமான நோக்கங்களுக்குப் போதுமானவைகளாக இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம். இன்னமும் நாம் ஞானத்தில் குறைவுப்பட்டவர்களாய் இருக்கின்றோம் மற்றும் நாம் அதிகமாய் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு வரவர, நாம் இன்னமும் குறைவுப்பட்டவர்களாய் இருக்கின்றோம் என்பதை அதிகமாய்க் காணமுடிகின்றது. ஆகையால் நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவரும், நம்மை அன்புகூர்ந்தவருமானவர் மூலம், நாம் இறுதியில் ஜெயங்கொண்டவர்களாக, முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக ஆகும் நோக்கத்திற்காக, நமக்கு வரும் ஜீவியத்தின் ஒவ்வொரு அனுபவங்களையும் நாம் நன்மைக்கேதுவாகப் பயன்படுத்தத்தக்கதாக, நாம் தொடர்ந்து, சகல கிருபையும், ஞானமும், சத்தியமும் உள்ள ஊற்றண்டைக்குச் செல்வது அவசியமாகும் (ரோமர் 8:37).

ஆமென்!

---

# "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

## ஆதியாகமம் 45:1-15; 50:15-21

"ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."
—எபேசியர் 4:32

யோசேப்பினுடைய சரித்திரத்தின் உச்சக்கட்டத்தை இப்பாடத்தில் நாம் பார்க்க இருக்கின்றோம். வேதாகமத்தின் எளிமையான பதிவுகளை வாசித்து, அதினால் ஆசீர்வதிக்கப்படாமல் எவரும் காணப்பட முடியாது. யோசேப்பு அடிமையாக எகிப்திற்கு வந்து, 22-வருடங்களுக்குப் பின்னாக நடந்த சம்பவத்தை இந்தப் பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம். திரளான அறுவடைகளுள்ள ஏழு வருடங்கள் முடிந்து மற்றும் ஏழு வருட பஞ்சக் காலத்தின், இரண்டாம் வருடமாக அப்போது இருந்தது. யோசேப்பு எகிப்தின் அதிபதியானபோது, தனது வயதான தந்தையைத் தொடர்புகொள்வதற்கான அநேகம் வாய்ப்புகள் அவருக்கு இருந்தது என்பதை விசேஷமாய் நாம் நினைவுகூர்ந்து, அவர் ஏன் அந்த 22-வருடங்கள் முழுவதிலும் தொடர்புகொள்ளவில்லை என்று யோசிக்க முற்படுவோமானால், யோசேப்பின் காரியங்கள் அனைத்தும் எப்படிக் குறிப்பாகக் கர்த்தரினால் வழிநடத்தப்படுகின்றது என்பதையும், இந்த விஷயத்திலும் அவர் தெய்வீக வழிகாட்டுதலின்படியே செயல்பட்டுக்கொண்டிருந்தார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். வறட்சியும், அதன் விளைவான பஞ்சமும் பாலஸ்தீனியாவிலும், அநேக நாடுகளிலும் பரவிக் காணப்படும் என்பதை அறிந்திருந்த யோசேப்பு, தனது சகோதரர்கள் (எகிப்துக்கு) வருவார்கள் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார். பஞ்சமானது எபிரெயர்களை, ஆகாரம் வாங்கும்படிக்கு எகிப்துக்கு வரச்செய்யும் என்ற எதிர்ப்பார்ப்பில், நம்பிக்கைக்குப் பாத்திரமான சில ஊழியக்காரர்கள் மூலமாக, எபிரெயர்கள் வருகிறார்களா என்று பார்த்துக்கொள்வதற்குக் கண்காணிக்க அமர்த்தப்பட்டிருப்பார்கள் என்பது உறுதியே. ஆகவேதான் யாக்கோபின் பத்துக் குமாரர்கள் வந்தபோது, யோசேப்பு உடனடியாக அதைத் தெரிந்துகொண்டார். அவர்கள் கைது செய்யப்பட்டு, யோசேப்பிற்கு முன்பு கொண்டுவரப்பட்டார்கள் மற்றும் சந்தேகத்தோடு அவர்கள் பார்க்கப்பட்டு, வேவுகாரர்கள் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டு, மூன்று நாட்கள் சிறையில் போடப்பட்டார்கள்.

அதிபதியான யோசேப்பு தன்னை முற்றும் முழுமையாக மறைத்துக்கொள்ளத்தக்கதாகவும், தனது சகோதரர்கள் தனது முன்னிலையில் தங்கள் பேச்சில்/சம்பாஷணையில் ஒளிவு மறைவு இல்லாமல் காணப்படத்தக்கதாகவும், துபாசியின் மூலமாகவே அவர்களிடத்தில் பேசினார். அவர்கள் சிறையில் மூன்று நாட்கள் கழித்த பிற்பாடு, யோசேப்பு அவர்களை நேருக்கு நேர் சந்தித்துப் பேசினார் மற்றும் அவர்கள் தங்களுக்கு இவ்விஷயத்தில் வந்துள்ளதான துன்பமானது, அவர்கள் 22-வருடங்களுக்கு முன்னதாக தங்கள் சகோதரனுக்குச் செய்த தவற்றின் நிமித்தமான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாக இருக்கின்றது என்று தாங்கள் உணர்ந்து கொண்டதை ஒருவரோடொருவர் ஒப்புக்கொண்டதையும் யோசேப்பு கேட்டார். சாகும்படிக்குத் தன்னைக் குழியில் போட்டபோது, தான் கதறின கதறல்களை அவர்கள் இன்னமும் நினைவில் கொண்டிருப்பதை யோசேப்பு கவனித்தார்; மற்றும் இந்தக் காரியமானது அவர்களது மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதையும், அவர்கள் இப்பொழுது மாற்றமான இருதய நிலைமையில் காணப்படுவதையும் யோசேப்பு உணர்ந்துகொண்டார். அவர்களில் ஒருவரைப் பிணைக்கைதியாக வைத்துக்கொண்டு, மற்றவர்களுக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுத்து, அவர்கள் இனித் திரும்பி வருகையில் தாங்கள் சொல்லியவைகள் உண்மையானவைகள் என்று நிரூபிக்கத்தக்கதாக, தாங்கள் குறிப்பிட்ட இளைய சகோதரனைக்கொண்டுவர வேண்டும் என்றும், இப்படியாக அவர்கள் தங்கள் நேர்மையை நிரூபிப்பார்களானால், பிற்பாடு அவர்கள் (ஆகாரம் பெற்றுக்கொள்வதற்கென எகிப்துக்கு) வந்துபோவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் உறுதியளித்து, அவர்களை அனுப்பி வைத்தார்.

அவரது சகோதரர்கள் காவல் கிடங்கில் (சிறையில்) காணப்படுகையில், தங்களது இந்த அனுபவங்களை யோசேப்போடு தொடர்புபடுத்திப் பார்த்தார்கள் மற்றும் இருதயத்தில் தங்கள் தவறான நடத்தைக்கான படிப்பினையை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். வேறு ஒரு பாடத்தில் இந்த மனிதர்களில் ஒருவரைத்தவிர, மற்றவர்கள் அனைவரும் தங்கள் இருதயத்தில் கொலைப்பாதகர்களாக இருந்ததாக நாம் பார்த்திட்டாலும், இன்றைய பாடத்தில் அவர்களது குணலட்சணங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருப்பதை நாம் காண்போம். இந்த மாற்றம் அநேகமாக அவர்களது தந்தை, யோசேப்பின் மரணத்தின் நிமித்தம் அடைந்த துயரத்தின் காரணமாகவும், இன்னுமாக சந்தேகத்திற்கிடமின்றி தங்கள் சொந்த தவறான செய்கையின்

நிமித்தமான மனவுளைச்சலின் காரணமாகவும் ஏற்பட்டது. ஆகையால் ஒரு தீமையான செய்கை என்பது எப்போதும் இன்னும் தீமை செய்வதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்காது, மாறாக சில சமயங்களில் குணலட்சணத்திற்கான திருப்புமுனையாகக்கூட அமைகின்றது. இம்மாதிரியான விதத்தில் எந்தக் கிறிஸ்தவன்தான் அனுபவம் பெற்றிராதவனாக இருப்பான்? அவன் குறிப்பிட்ட சில குணலட்சணத்தில் பெலவீனமாய் இருப்பதை அவனுக்கு வெளிப்படுத்துகின்றதான, அவன் தவறும் கட்டங்களானது, அவனுக்கு உண்மையில் விலையேறப்பெற்றப் படிப்பினையாக இருந்து, அவனை அந்தக் குறிப்பிட்ட குணலட்சணத்தில் பலப்படுத்தி, அதே விஷயத்தில் எதிர்க்காலத்தில் வருகின்றதான பரீட்சைகளிலும், சோதனைகளிலும் நன்றாய் நிற்க உதவி செய்கின்றது. "இப்படியாக நம்முடைய ஜீவியத்தின் அனுபவங்கள் அனைத்தும் (ஜீவியத்தின் தவறுகள்கூட) சரியாகப் பயன்படுத்தப்படும்போது, மேலான காரியங்களுக்குரிய படிக்கற்களாக அமைகின்றது."

## ''மிகவும் மாற்றமடைந்துள்ள பத்து மனிதர்கள்''

வீட்டிற்குத் திரும்பின பின் அவர்கள், நடந்த சம்பவத்தைத் தங்கள் தந்தையாகிய யாக்கோபினிடத்தில் விவரித்தார்கள்; பிணைக்கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டதின் நிமித்தம், சிமியோனையும் இழந்துபோனபடியால், யாக்கோபு இப்பொழுது துக்கம் அடைந்திருந்தார், ஆனாலும் பென்யமீனை தன்னிடமிருந்து பிரித்து அனுப்பிவைப்பதற்கு அவர் முற்றிலும் மறுப்புத் தெரிவித்துவிட்டார். இங்குத் தனது தகப்பனுடைய துயரத்தைக் கண்ட ரூபன், பென்யமீனை பாதுகாப்பாய்க்கொண்டுவரும் விஷயத்திற்கு, தன்னையும், தனது பிள்ளைகளையும் பிணைக்கைதிகளாக ஒப்புவித்தார். பஞ்சம் அவர்களைக் கடுமையாய் வாட்டினபோது, பட்டினி அவர்களைப் பயமுறுத்தினபோது யாக்கோபு, பென்யமீனை அவரது சகோதரர்களோடுகூட எகிப்துக்குச் செல்லுவதற்கு அனுமதித்தார், அதுவும் ஏதாகிலும் பென்யமீனுக்குச் சம்பவித்தால், அதற்குப் பொறுப்பு தான் என்று வாக்களித்த யூதாவின் நிச்சயத்தின் பேரில் யாக்கோபு சம்மதித்தார். கடந்த 22-வருடங்களாக இந்த மனிதர்கள் தங்கள் தகப்பனாரிடமிருந்து, அனுதாபம் பற்றின படிப்பினைகளைக் கற்றுக்கொண்டுள்ளனர். ஒரு காலத்தில் தகப்பனிடத்தில் மிகவும் அக்கறையற்றவர்களாக இருந்து, தகப்பனுக்குப் உபத்திரவத்தைக்கொண்டு வந்தவர்கள், இப்பொழுதோ அவருடைய ஆறுதலுக்கெனத் தங்கள் சொந்த ஜீவியங்களையும் கையளிப்பதற்குங்கூட விருப்பம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இம்மனிதர்கள் இஸ்ரயேலினுடைய கோத்திரத்தலைவர்களாக இருந்தார்கள் என்பதையும், இவர்களுடைய பிள்ளைகளில் சிலர் வரலாற்றில் மிகவும் சிறப்பு மிக்கவர்களாக இருந்தனர் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; உதாரணத்திற்கு மோசே மற்றும் ஆரோனையும் உள்ளடக்கின ஒட்டுமொத்த ஆசாரிய கோத்திரத்திற்கு லேவி பிதாவாகக் காணப்பட்டார்; யூதா வம்சாவழியில் தாவீதும், சாலொமோனும் மற்றும் நமது கர்த்தராகிய இயேசுவும் வந்தார்கள். இந்த மனிதர்களுக்கு, அவர்களது தகப்பனார் மற்றும் பஞ்சம் முதலியவை தொடர்பாக மாபெரும் படிப்பினைகளைக் கொடுப்பது தெய்வீக நோக்கத்தின் ஒரு பாகமாகக் காணப்பட்டது என்பது நிச்சயமே; இப்படிப்பினைகளானது அவர்களுக்கு நன்மையாய் இருப்பது மாத்திரமல்லாமல், எதிர்க்காலம் முழுவதிலும் தாக்கம் ஏற்படுத்துகின்றதாயும் இருக்கும்.

தங்கள் தகப்பன் வீட்டிலிருந்து, எகிப்துக்கு வந்த பத்துச் சகோதரர்களும், தாங்கள் அதிபதியினுடைய அரமனைக்குள் பிரவேசிப்பதற்கென வழிகாட்டப்பட்டபோது, ஆச்சரியமடைந்தார்கள். அவர்கள் முன்பு வந்து தானியங்களை வாங்கினபோது, விலையாகக் கொடுத்திருந்த பணமானது, அவர்கள் சாக்கினைத் திறந்தபோது காணப்பட்டது மற்றும் அந்தப் பணத்தையும், இன்னும் அதிகம் கோதுமை வாங்குவதற்கான பணத்தையும் தாங்கள் கொண்டு வந்திருப்பதாகக்கூறி, யோசேப்பின் விசாரணைக்காரனிடம் விவரித்தார்கள். தாங்கள் பணத்தைத் திருடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுவார்களோ என்று அவர்கள் நடுங்கினார்கள்; எகிப்திய சட்டத்தின்படி திருடியதற்கான தண்டனை, அடிமையாக்கப்படுவதாகும். யோசேப்பின் விசாரணைக்காரன் தனது எஜமானுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும், எஜமானுடைய மதம் பற்றின அறிவு கொஞ்சம் கொண்டிருப்பவராகவும் தென்படுகின்றார், ஏனெனில் அவர் அவர்களிடத்தில் இரக்கத்துடன் கூறினதாவது, "உங்களுக்குச் சமாதானம்; பயப்பட வேண்டாம்; உங்கள் தேவனும், உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்." சிமியோனை விடுதலைப் பண்ணி, அவர்களிடத்தில் கொண்டுவந்து விட்டதன்மூலம், இன்னுமாக அவர்களுக்கு விசாரணைக்காரன் நம்பிக்கையூட்டினார். அவர்களுக்குச் சொல்லப்பட்டப்படியே அவர்கள் தங்களைக் கழுவிக்கொண்டு, அதிபதியினுடைய வீட்டில் போஜனம் பண்ணும்படிக்கு ஆயத்தமானார்கள். இதற்கெல்லாம் அர்த்தமென்ன?

விவசாயிகளாகக் காணப்பட்ட அவர்களுக்கு அரமனையின் சூழ்நிலைகள் புதிதாய் இருந்தது மற்றும் தங்களை முன்பு வேவுகாரர்களென நடத்தின அதிபதி, ஏன் இப்பொழுது தங்களை இவ்வளவுக்குப் பெருந்தன்மையுடன் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சூழ்நிலைகளினுடைய விநோதங்களை அவர்கள் கவனித்தபோது, அவர்களது ஆச்சரியம் உடனுக்குடன் அதிகரித்துக்கொண்டே போனது; அவர்களது பிறப்பினுடைய வரிசையின்படி அவர்கள் அமர்த்தப்பட்டனர் மற்றும் யோசேப்பின் தனி மேஜையிலிருந்து/பந்தியிலிருந்து போஜன பங்கு தங்களுக்கு வந்தபோது, பென்யமீன் மீது அதிபதி விசேஷித்த தயவு கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணம் பென்யமீனுக்கு ஐந்து பங்குகள் அனுப்பப்பட்டதை அவர்கள் கவனித்தார்கள். தங்கள் மொழியை அதிபதி புரிந்துகொள்ள முடியும் என்பதையும், தாங்கள் இன்னமும் பொறாமைக் கொண்டிருக்கின்றனரா அல்லது இல்லையா என்பதை அறிந்துகொள்ளத்தக்கதாக, தங்களது வார்த்தைகளை அதிபதி கவனித்துக்கொண்டிருக்கின்றார் என்பதையும் அல்லது இளைய சகோதரனுக்குக் கிடைத்திட்ட விசேஷித்த தயவினுடைய இந்த வெளிப்படுத்தலை தாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதை அதிபதி கவனித்துக்கொண்டிருக்கின்றார் என்பதையும் அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர்கள் பரீட்சையில் ஜெயித்தார்கள். தங்கள் பொறாமையானது செத்துப்போய்விட்டது என்பதையும், தங்களது இளைய சகோதரனுக்குக் கிடைத்திட்ட தயவில் தாங்கள் களிக்கூருகின்றார்கள் என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இன்னும் அடுத்தப்படியான பரீட்சை நிகழ்த்தப்பட வேண்டியிருந்தது; அந்த மனிதர்கள் பெற்றுக் கொண்ட ஆகாரத்துடன் புறப்பட்டுப்போகும்படிக்கு அனுமதிக்கப்பட்டார்கள், ஆனால் பென்யமீனுடைய கழுதையின் மீது ஏற்றப்பட்டிருந்த சாக்குகளில், ஒன்றில் விசாரணைக்காரன் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடி அதிபதியினுடைய வெள்ளிப்பாத்திரத்தை வைத்தான்; அவர்கள் பட்டணத்தைத் தாண்டி செல்கையில், அவர்கள் அரமனையின் காவலர்களால் தொடர்ந்து பிடிக்கப்பட்டு, அவர்கள் அவமரியாதையாய் நடந்துகொண்டுள்ளதாகவும், அதிபதியினுடைய "புனிதமான பாத்திரத்தை" திருடினதின் மூலமாக, அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைக்கு, தீமையைச் செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் அனைவரும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, ஒருவேளை தங்களிடத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டால், யாரிடத்தில் கண்டுபிடிக்கப்படுகின்றதோ, அவர் மாத்திரமல்லாமல், தாங்கள் அனைவருமே அடிமையாகிக்கொள்வதாகக் கூறினார்கள். பாத்திரத்திற்கான தேடுதலானது மூத்தவன் துவங்கி, இளையவன் மட்டும் நிகழ்த்தப்பட்டது; பென்யமீனிடத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தச் சகோதரர்கள் எவ்வளவு கலக்கம் அடைந்திருந்திருப்பார்கள் என்று நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; குற்றவாளி மாத்திரம் தனக்கு அடிமையாக வந்திட வேண்டும் என்று விசாரணைக்காரன் சொன்ன போதிலும், அவர்கள் அனைவரும் எகிப்துக்குத் திரும்பினார்கள். தங்கள் தகப்பனாகிய யாக்கோபின் முகத்தை அவர்களால் எப்படிப் பார்த்து, இந்தப் பெருந்துன்பத்தை விவரித்திட முடியும்? அரமனைக்குத் திரும்பியபோது, அங்கு அதிபதியாகிய யோசேப்பு காணப்பட்டார். யோசேப்பிற்கு முன்னதாக விழுந்து வணங்கினார்கள் மற்றும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று மறுப்புத் தெரிவிப்பது பயனற்றது என்று அறிந்தவர்களாக, இந்தக் காரியத்தைப் பெருந்துன்பமெனக் கூறி, தங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுத்தார்கள்.

அதிபதியோ, **"இல்லை! எகிப்தியர்களாகிய நாங்கள் ஒரு மனிதன் செய்த தவறுக்காக, உங்கள் அனைவரையும் அடிமையாக்கும் அநியாயமான காரியத்தைச் செய்வதில்லை. குற்றவாளி மாத்திரம் அடிமையாய்ச் சேவை புரியட்டும், மீதமானவர்கள் போகலாம். உங்கள் வீடுகளுக்கும், உங்கள் குடும்பங்களிடத்திற்கும் திரும்புங்கள்; உங்கள் கோதுமையை எடுத்துச்செல்லுங்கள்"** என்று பதிலளித்தார். ஒருகாலத்தில் தனது சகோதரனாகிய யோசேப்பு மற்றும் தனது தந்தையாகிய யாக்கோபின் விஷயத்தில் கடின இருதயத்துடன் காணப்பட்ட யூதா, இத்தருணத்தில் மிகவும் உருக்கமான வேண்டுதலை அதிபதியினிடத்தில் ஏறெடுத்தார்; இந்த வேண்டுதலின் எளிமையும், வெளிப்படையான தன்மையும், அனுதாபமும், சரித்திரத்தின் பதிவுகளிலேயே இந்த வேண்டுதலை தலைச்சிறந்த ஒன்றாக்கிற்று. பென்யமீனைக்கொண்டு வந்தது தொடர்புடைய சம்பவங்களையும், பென்யமீனைப் பிரிகையில் தனது தந்தை அடைந்திட்ட துயரத்தையும், பென்யமீனுக்கு ஏதாகிலும் சம்பவித்தால், அது தனது தகப்பனுடைய மரணத்தைத் துரிதப்படுத்திடும் என்பதையும், தான் எவ்வாறு தனது சகோதரனாகிய பென்யமீனுக்கு உத்தரவாதமாய்க் காணப்படுகின்றார் என்பதையும் யூதா அதிபதியினிடத்தில் விளக்கிக்கூறி, "இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:18- 34).

## ''துன்பகாலத்தில் நம்பிக்கையூட்டும் ஓர் அம்சம்''

அந்தச் சகோதரர்கள் மீது கர்த்தரும், யோசேப்பும் வைத்த இறுதிப் பரீட்சையில் அவர்கள் வெற்றியடைந்தார்கள். இந்தப் பரீட்சையானது அவர்கள் மாற்றம் அடைந்துள்ள மனிதர்களாக இருக்கின்றனர் என்பதையும், இரக்கமின்மைக்கும், கல்நெஞ்சத்திற்கும், கொடூரமான மிருகத்தனத்திற்கும் பதிலாக அவர்கள் இப்பொழுது மனவுருக்கம் உடையவர்களாகவும், இரக்கம் உடையவர்களாகவும், ஒருவருக்காக இன்னொருவர் பாடுபடுவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதையும் நிரூபித்தது. அவர்கள் மீது கொஞ்ச காலம் நிழலிட்டிருந்த மேகங்களும், நிழல்களும் கலைந்து போவதற்கான வேளை வந்தது. அதிபதியாகிய யோசேப்பினால் இனியும் தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. யோசேப்பு தனது சகோதரர்களுடன் தனிமையில் காணப்படத்தக்கதாக, யோசேப்பு மற்றவர்களை வெளியேறும்படிக்குக் கட்டளையிட்டார்; அங்கு நிகழப்போகிறவைகள், மற்றவர்கள் பார்க்கக்கூடாது எனும் அளவுக்கு முக்கியமானதாக இருந்தது. தனது மௌனத்தைக் கலைப்பதற்கும், தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்குமான நேரம் யோசேப்பிற்கு வந்தது. அவர்கள் மாத்திரமே அங்கு நிற்க, யோசேப்பு அழுதார், மற்றும் தான் யார் என்பதையும், தனக்கு விரோதமாக அவர்கள் 22-வருடங்களுக்கு முன்பாகச் செய்த காரியங்கள், எப்படித் தேவனுடைய வழிநடத்துதலின் கீழ்த் தன்னுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்டது என்பதையும் யோசேப்பு அவர்களிடத்தில் கூறினபோது, உணர்வுகளினால் அவரது குரல் நடுங்கியது. குற்றம் புரிந்திருந்த அந்த மனிதர்கள் முன்பில்லாத அளவுக்கு இப்பொழுது அச்சத்தால் நடுங்கினார்கள். தங்களுக்கு எதிராக தங்கள் சகோதரன் எப்படிக் கோபம் கொள்ளப்போகிறார்? எப்படித் தாங்கள் செய்திட்ட தீமைக்கு, தீமையைச் சரிகட்டிப் பழிவாங்கப்போகிறார்? மற்றும் தங்களை அடிமையாக்கப்போகிறாரா (அ) கிடங்கில் தள்ளப்போகிறாரா? என்று எண்ணி நடுங்கினார்கள்.

ஆனால் சந்தோஷத்தின் கண்ணீர்களை யோசேப்பு சிந்துகையில், தனது சகோதரர்களிடம் இரக்கமாய்ப் பேசினார்; யோசேப்பைவிட்டு விலகி ஓடுவதற்குரிய நிலைமையில் ஆரம்பத்தில் காணப்பட்ட அவர்கள், யோசேப்பின் பக்கத்தில் போனார்கள் மற்றும் யோசேப்போ, ''என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார். நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம்'' என்றார் (ஆதியாகமம் 45:5-9). இக்காட்சியைக் காட்டிலும் அதிகம் விறுவிறுப்பான சம்பவங்கள் அடங்கின நாடகக் காட்சியைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது; இக்காட்சியில் எளிமையும், நேர்மையும் காணப்படுகின்றது மற்றும் இவைகளுக்கு மேலாக ஒரே மாபெரும் போதகராகிய தேவனிடமிருந்து மாத்திரமே வெளிப்படுகின்றதும் மற்றும் அவருடன் நெருக்கமாய்க் காணப்படுகின்றவர்களாலும், அவரிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டவர்களாலும் மாத்திரமே, மாதிரிபடுத்துகின்றதுமான அன்பு மற்றும் இரக்கத்தின் ஆவியும் காணப்படுகின்றது.

## ''மனவுருக்கம், ஒருவருக்கொருவர் மன்னித்தல்''

ஒருவேளை யோசேப்பு இந்த யுகத்தின் பரிசுத்தவானாய்க் காணப்பட்டிருந்திருப்பாரானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்திருப்பாரானால், வேதாகமத்தில் நாம் பெற்றிருக்கிறதான தெய்வீக நோக்கம் மற்றும் தேவன் பற்றின பல்வேறு வெளிப்படுத்தல்களினால் வெளிச்ச மூட்டப்பட்டிருப்பாரானால், அவரது நடத்தையானது கிறிஸ்தவ வளர்ச்சியினுடைய மிக உயர்ந்த வகையாகக் கருதப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால் அவரது குணலட்சணமானது வளர்க்கப்பட்டதான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் நாம் பார்க்கும்போது, அதாவது புறஜாதி தேசத்தில், தேவன் மற்றும் அவரது திட்டம் பற்றின சிறிய வெளிப்படுத்தல்கள் மாத்திரமே உள்ள சூழ்நிலையில், அவரது குணலட்சணம் வளர்க்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கையில், நாம் வியந்து நிற்கின்றோம். இந்தப் பாடத்தைப் படிக்கையில் நாம் நம்மிடமே கேட்க வேண்டியதாவது, ''எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலமுள்ளவர்களாய் நாம் இருக்கையில், நாம் எப்படிப்பட்டவர்களாய்

இருக்க வேண்டும்? யோசேப்பைப்போன்றதான அதே சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நாம் காணப்படுவோமானால், நாம் யோசேப்பைப்போன்று பெருந்தன்மையுடன் நடந்திருப்போமா? பெருந்தன்மையுடன் நடக்கவில்லையெனில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நமக்கு அளிக்கப்பட்டதான படிப்பினைகளை நாம் சரியான விதத்தில் பயன்படுத்தவில்லை என்று ஒப்புக்கொள்ளலாமே. இந்தப் பாடங்களை நாம் கற்றுக்கொண்டு, இருதயத்தில் இரக்கத்தின் மற்றும் பெருந்தன்மையின் பண்புகளை நாம் வளர்த்திக்கொள்ளாதது வரையிலும், நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியடைய முடியாது என்பதையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய, மணவாட்டி வகுப்பாருடைய அங்கங்களாகக் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாது என்பதையும் நாம் அறிவோம்.

யோசேப்பு அவர்களை வீட்டிற்கு அனுப்பிவைத்திடும்போது, தனது சகோதரனாகிய பென்யமீனை முத்தமிட்டார் மற்றும் அவரோடுகூடக் கொஞ்சம் நேரம் செலவழித்துக்கொண்டிருந்தார்; இருவரும் ஒருவரையொருவர் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார்கள். மீதி பத்துச் சகோதரர்களை வழியனுப்பும் தருணம் வந்தது. எப்படி யோசேப்பு அவர்களிடத்தில் நடந்துகொள்ளப் போகின்றார்? கிழக்கத்திய நாடுகளினுடைய வழக்கத்தின்படி அவர்களை முத்தம் செய்வதின் மூலம் அன்பை/ பாசத்தை நிச்சயமாய் அவர் வெளிப்படுத்தப் போகிறதில்லை, ஏனெனில் அவர்களிடத்தில் அவரால் பூரணமான அன்பையும், நல்லெண்ணத்தையும் நிச்சயமாய்க் கொண்டிருக்க முடியாது என்று நாம் நினைக்கலாம். ஆனால் யோசேப்பு அவர்கள் ஒவ்வொருவரையும் முத்தமிட்டார்; மேலும் நிர்ப்பந்தம் காரணமாகவோ (அ) பயனை முன்னிட்டோ, யோசேப்பு முத்தமிடாததினால், அவர் முத்தமிட்டதான காரியமானது, அவரது இருதயம் முழுக்க பெருந்தன்மையினாலும், அன்புடன்கூடிய இரக்கத்தினாலும் நிறைந்திருந்ததை உறுதிபடுத்துகின்றது. "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்," இப்படிப்பட்டவர்களுக்கே பரம பிதாவானவர் தமது இரக்கத்தையும், தயவையும் காட்டிடுவதற்குப் பிரியமுள்ளவராய் இருக்கின்றார். இவர்கள் மாத்திரமே இராஜ்யத்தின் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய சரியான மனநிலையில் இருப்பவர்கள் ஆவர்; இந்த இரக்கம் எனும் பண்பினை வளர்த்துக்கொள்ளாதவர்கள், உயர்வாய் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரமற்றவர்களாய் இருப்பார்கள்.

## "நான் தேவனா?"

இராஜாவாகிய பார்வோனுடைய முழுச்சம்மதத்தின் பேரில், எகிப்தின் அதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்ட வண்டிகளில், யாக்கோபும், அவரது குடும்பத்தாரும் எகிப்துக்கு வருதல் பற்றின காரியங்களையும் மற்றும் அவர்கள் எப்படிக் கோசேனில் குடியேறி, அங்குச் செழித்தோங்கினார்கள் என்பதையும் பற்றி இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிறதில்லை. வருடங்கள் கடந்து வயதான யாக்கோபு எகிப்து தேசத்தில் மரித்தார், ஆனால் அடக்கம் பண்ணும்படிக்குப் பாலஸ்தீனியாவுக்குக்கொண்டு செல்லப்பட்டார். அடக்கம் பண்ணுதல் முடிந்தது; யோசேப்பின் சகோதரர்கள் மனக்கலக்கம் அடைந்திருந்தார்கள். யோசேப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட இத்தனை பெரும் தீமைக்கு, அவர் பதிலாக இவ்வளவு பெரும் நன்மையைச் செய்யும் காரியமானது, அவர்களுக்கு மிகவும் வழக்கத்திற்கு மாறான காரியமாக தோன்றியபடியால், தங்கள் தகப்பன் நிமித்தமாக யோசேப்பு இப்படித் தற்காலிகமாக நடந்துகொள்கின்றார் என்றும், தந்தை இப்பொழுது மரித்துப்போயிருக்க, தங்களுக்கு இனிமேல் அதிபதியினிடத்திலிருந்து முற்றிலுமாய்த் தயவு கிடைக்கப்போவதில்லை என்றும் அஞ்சினார்கள். அவர்கள் மீண்டுமாய் யோசேப்பினிடத்தில் வந்து, முன்பு செய்தவைகளுக்காக வருத்தம் தெரிவித்து, அவரது மன்னிப்பிற்கான வாக்குறுதியைக் கேட்டுக்கொண்டார்கள்; இன்னுமாக தாங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள் என்றும், தாங்கள் யோசேப்பினுடைய ஊழியக்காரர்களாகவும் கூட இருப்பதற்கு விரும்புகின்றார்கள் என்றும் கூறினார்கள். "யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்" (ஆதியாகமம் 50:19-21).

பெருந்தன்மையுள்ள யோசேப்பு! குற்றஞ்சாட்டும் வண்ணமான ஒரு வார்த்தையையோ, துயர்க்கொடுக்கும் ஒரு வார்த்தையையோ பேசாமல், மாறாக அவர்களது பாதகச் செயலின் பழியினின்று, அவர்களை விலக்கிடுவதற்கான காரணங்களை மாத்திரமே கூறினவராக இருந்தார். அவர்கள் செய்திட்ட காரியங்களானது, நன்மையைக்கொண்டுவந்துள்ளபடியால், தேவனால் அனுமதிக்கப்பட்டவர்களும், பயன்படுத்தப்பட்டவர்களுமான கருவிகளுக்கு எதிராக யோசேப்பு ஏன் தீமையாய்ச் சிந்தித்திட வேண்டும்? "நான் தேவனா?" என்ற யோசேப்பின் வார்த்தைகளானது குறிப்பது என்னவெனில், "உங்களை நியாயந்தீர்ப்பதோ அல்லது உங்களை எவ்விதத்திலாகிலும்

தண்டிக்க முயற்சிப்பதோ எனக்கடுத்தக் காரியமா? இந்த விஷயத்தில் நீங்கள் தேவனிடத்தில் மாத்திரம் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றீர்களல்லவா? நீங்கள் தேவனிடத்திலேயே ஒப்புரவாகிக்கொண்டு விட்டீர்களானால், என்னிடத்திலும் ஏற்கெனவே ஆகிவிட்டதல்லவா?" ஏனெனில் பழிவாங்குதல் என்பது கர்த்தருக்கே உரியதே ஒழிய, ஏதோ ஒருவிதத்தில் ஏறக்குறைய பூரணமற்றவர்களாகவே காணப்படுகின்றதான அவரது சிருஷ்டிகளுக்குரியதல்ல.

இந்த ஒரு பாடத்தை நாம் ஒவ்வொருவரும், தேவனுடைய சபையிலுள்ள சகோதர சகோதரிகளினுடைய விஷயத்தில் மாத்திரமல்லாமல், மாம்சத்திலுள்ள நம்முடைய சகோதர சகோதரிகளின் விஷயத்திலும் மற்றும் அயலார்களின் விஷயத்திலும் செயல்படுத்திடுவோமாக. அவர்கள் நமக்குத் தீமை செய்தாலோ (அ) நன்மை செய்தாலோ நமக்கென்ன, தேவனை அன்புகூருகின்றவர்களுக்கும், அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும் எனும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கின்றோம் அல்லவா? இப்படி வாக்குத்தத்தம் பெற்றவர்களாய் இருக்க, நம்முடைய காரியங்களில் கர்த்தரினால் பயன்படுத்தப்படுகின்றதான நபர்கள் (அ) கருவிகளுக்கு எதிராக நாம் ஏன் மனக்கசப்பையோ (அ) கொஞ்சமேனும் கோபத்தையோ கொண்டிருக்க வேண்டும்? இப்படியாகக் கர்த்தரில் நம்பிக்கைக் கொள்பவர்கள் மாத்திரமே ஜீவியத்தின் காரியங்களைச் சரியாய்க் கண்ணோக்கவும், சிந்திக்கவும் முடிகின்றவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் இவர்களால் மாத்திரமே உபத்திரவத்திலும், துன்புறுத்துதல்களிலும், நீதியின் நிமித்தமாய்ப் பாடுபடுகிற விஷயத்திலும் களிக்கூர முடியும், ஏனெனில் இவர்கள் அனைத்துக் காரியங்களும் தங்களுக்கு மிகவும் அதிகமான நித்திய கனமகிமையைக் கொண்டுவருகின்றது என்றும், தற்காலத்துச் சிரமங்களும், சோதனைகளும், நாம் நமது அருமை மீட்பருடன் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக, பூமியின் சிங்காசனத்தில் உட்காருகையிலுள்ள மகிமைகளுக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்றும் அப்போஸ்தலர் உறுதிப்படுத்துபவைகளை அறிவார்கள்.

## "ஜெபத்தின் மற்றும் விண்ணப்பத்தின் ஆவி"

யோசேப்பின் சம்பவமும், அவரது பாடுகளும், அவர் இராஜாவுக்கு அடுத்த நிலையில் எகிப்தினுடைய அதிபதியென அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டதும், இயேசுவையும், பாடுகள் மற்றும் சுயத்தைப் பலி செலுத்துதல் எனும் இடுக்கமான வழியில், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் பின்னடியார்கள் அனைவரையும் மற்றும் அவர்கள் வானத்தின் கீழ், தேவனுடைய இராஜ்யத்தில் வல்லமைக்கு உயர்த்தப்படுவதையும் ஒருவேளை குறிக்கின்றதாய் இருக்கிறதென்றால் மற்றும் அனைவரின் ஜீவியங்களை இரட்சிக்கத்தக்கதாய் எகிப்தின் ஆகாரமாகிய கோதுமை சேகரிக்கப்பட்டதும், பின் விநியோகிக்கப்பட்டதுமான காரியங்களானது, மகிமையடைந்த மீட்பர் மூலம் ஆயிர வருட யுகத்தின்போது, மனுக்குலம் முழுவதின்மேலும் வரவிருக்கின்ற ஆசீர்வாதங்களையும், மகிமையான வாய்ப்புகளையும் குறிக்கின்றதாய் ஒருவேளை இருக்கிறதென்றால், யோசேப்பின் பதினொரு சகோதரர்களும் கூட நிழலாய்ச் சிலருக்கு இருப்பார்கள் என்று கருதுவது தவறாய் இருக்காது. இயேசுவுக்குச் சொந்தமானவர்களே அவரை ஏற்றுக்கொண்டார்களே ஒழிய, "இவரைச் சிலுவையில் அறையும், இவரது இரத்தப்பழி எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் இருப்பதாக" என்று கூறினவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அந்த ஜனங்கள் அதுமுதல் கடுமையான அனுபவங்கள் மற்றும் சோதனைக்குள்ளாகக் கடந்து சென்றார்கள் என்பதை நாம் பார்த்துள்ளோம். இந்த அனுபவங்கள் நன்மையாய்க் காணப்பட்டிருக்கும் என்றும், கர்த்தருடைய வார்த்தைக்கான பஞ்சம் அவர்களுக்கு ஏற்பட்டு, அவர்களை ஜீவனுக்கான அப்பத்திற்காக மாபெரும் அதிபதியினிடத்திற்கு வரச்செய்திடும் என்றும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம். அந்தக் காலக்கட்டத்தை வேதவாக்கியங்கள் "யாக்கோபின் இக்கட்டுக்காலம்" என்று குறிப்பிடுகின்றது; இன்னுமாக தேவன் அவர்களை விடுவிப்பார் என்றும் குறிப்பிடுகின்றது (எரேமியா 30:7). இக்காரியத்தையே, "ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" என்று கூறி அப்போஸ்தலன் உறுதிப்படுத்துகின்றார் (ரோமர் 11:30, 31). இதே காரியத்தைக் குறித்துத் தீர்க்கத்தரிசி பேசுகையில், அவர்கள் எப்படித் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்றும், யோசேப்பின் சகோதரர்கள் துக்கித்ததுபோன்று, எப்படி அவர்கள் துக்கிப்பார்கள் என்றும், பின்னர் எப்படிக் கர்த்தர் அவர்கள் மீது ஜெபம் மற்றும் விண்ணப்பத்தின் ஆவியை ஊற்றுவார் என்றும், அவர்கள் மனம் வருந்துதலை வெளிப்படுத்துகையில் எப்படி

மன்னிப்பை அருளுவார் என்றும், எப்படி இறுதியில் கர்த்தர் அவர்களது அக்கிரமங்களையும், பாவங்களையும் பிற்பாடு நினைவில்கொள்ளப்போகிறதில்லை என்றும், பாவத்தை நினைவில் கொள்கிறதற்குப்பதிலாகக் கர்த்தர் எப்படி மிகவும் கிருபையாய் அவர்களிடத்தில் காணப்படப்போகிறார் மற்றும் அவர்களை முத்தஞ்செய்யப்போகிறார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றார் (சகரியா 12:10).

இந்தப் பாடத்தை, நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய புத்திமதியைப் பார்த்து நிறைவு செய்கின்றோம்; "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32). நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட விஷயத்திலும், நாம் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகச் சேர்க்கப்பட்ட விஷயத்திலும், தேவனுடைய குமாரர்களென நமக்கு வந்திட்ட ஆசீர்வாதங்களுடைய விஷயத்திலும், நாம் தேவனுக்குக் கடன்பட்டிருப்பதை அதிகமாய் உணர்ந்துகொள்ளுகையில், நாம் அவரது மகிமையான குணலட்சணத்தின் சாயலையும், நமது அருமை மீட்பருடைய சாயலையும் (அனைவருக்கும் நீதி செய்வதே அவரது ஒட்டுமொத்த குணலட்சணத்தின் சாரமாகும்) மற்றும் நம்மால் அதிகப்பட்சமாய் வளர்க்க/அடைய முடிகின்ற அன்பையும், இரக்கத்தையும் அடைவதற்கு அதிகமாய் நாடுகின்றவர்களாய் நாம் காணப்பட வேண்டும். நாம் தேவனுக்கொத்த இந்தப் பண்பில் அதிகமாய் வளர்ந்து காணப்படும்போது நாம் பிதாவின் பார்வையில் மிகவும் பிரியமாய்க் காணப்படுவோம் மற்றும் பரலோக இராஜ்யத்திற்கான உடன்சுதந்தரத்துவத்திற்கும், மனுக்குலத்தின் உலகம் அனைத்திற்கும் ஜீவ அப்பத்தை விநியோகிப்பதற்கும் நாம் நன்கு பாத்திரமானவர்களாய்க் காணப்படுவோம்.

இவைகளைக் கண்டுகொள்ளாதவனும், அப்போஸ்தலனுடைய வார்த்தையின்படியான இந்தப் போக்கைப் பின்பற்றாதவனும் குருடனாகவும், மேலாகப் பார்க்க முடியாதவனாகவும் காணப்படுகின்றான்; அதாவது தேவனுக்கொத்த சாயலை உத்தமமாய் அடைகின்றவர்களுக்கு, அவர் வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களைப் பார்க்கவும், உணர்ந்துகொள்ளவும் முடியாமல் இருப்பான். காண்கின்றவர்களோ நாளுக்குநாள் தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்களானது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ அன்பினுடைய நீளம், ஆழம், அகலம் மற்றும் உயரத்திற்கு மிக அகலமாய்த் திறந்துக்கொண்டிருப்பதைக் காண்பார்கள். இன்னுமாக நமது உபகாரியான கர்த்தரைச் சந்தோஷத்துடன் போற்றிக்கொண்டு, மேற்சொன்னபடி முன்னேறுகையில் நாம் மற்றவர்களிடத்திலான அன்பிலும், பரிவிலும், இரக்கத்திலும், கனிவிலும் வளருவோம் என்றும் கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். இவைகளை விசேஷமாக நாம் விசுவாச வீட்டாரிடத்தில் காண்பிக்க வேண்டுமென்றாலும், நாம் இவைகளை நம்முடைய மாம்ச சொந்தங்களிடத்திலும், நம்முடைய அயலார்களிடத்திலும், நண்பர்களிடத்திலும், சத்துருக்களிடத்திலும், விலங்குகளிடத்திலும் கூடக் காண்பித்திட வேண்டும். இவர்கள் அனைவரும் நம்முடைய குணலட்சணங்கள் மற்றும் பண்புகளின் மாறுதலை அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வார்கள் மற்றும் இப்படி இவர்கள் உணர்ந்துகொள்வது இவர்களுக்கு ஆசீர்வாதமாயும், நமக்குச் சந்தோஷமாயும் காணப்படும்.

---

# அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி

*"தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது." (1 தீமோத்தேயு 3:14, 15)*

கர்த்தருக்கென்றும், அவருடையவர்களாய் இருப்பதற்கென்றும் மற்றும் மரணப்பரியந்தம் அவருக்கு ஊழியம் புரிவதற்கென்றும் நம்மை அர்ப்பணம் பண்ணுவது என்பது ஒரு காரியமாகவும், அந்த ஊழியத்தினை ஜீவியத்தின் அனைத்துச் சிறுசிறு காரியங்களிலும் ஒவ்வொரு நாளும் நிறைவேற்றுவது என்பது வேறு ஒரு காரியமாகவும் காணப்படுகின்றது. "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கின்றான்" எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பின்வரும் உண்மையினால் நன்கு விளக்கப்படுகின்றது - அதாவது நம்முடைய பலியை, தற்கொலைச் செய்துகொள்வதன் மூலமாகவோ அல்லது கழுமரத்தில் எரிக்கப்படுவதற்குச் செல்வதன் மூலமாகவோ முடித்திடுவது சுலபம்தான்; ஜீவியத்தின் சிறுசிறு காரியங்கள் அனைத்திலும், ஒவ்வொரு நாளிலும் நம்முடைய பலியைப் பலிப்பீடத்தில் - சுயத்தை வெறுத்தலுடன், பொறுமையுடன், விடாமுயற்சியுடன், சகோதர சிநேகத்துடன், சாந்தத்துடன் தக்கவைத்திடுவதும் மற்றும் வையப்படுவதை ஏற்றுக்கொண்டு, ஆனால் பதிலுக்கு வையாமல் இருப்பதும், மனதிலோ (அ) சரீரத்திலோ அடிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு, ஆனால் பதிலுக்குப் பழிவாங்காமல் இருப்பதும் மிகவும் கடினமான காரியமாகும்; மெல்ல மெல்ல சம்பவிக்கும் சிலுவை மரணத்தைச் சகிப்பது மிகவும் கடினமான காரியமாகும். அர்ப்பணிப்பானது சரியான ஆவியை (அ) சிந்தையை (அ) நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்க, படிப்படியாக அர்ப்பணிப்பை நடந்தேற்றுவது என்பது நமது கர்த்தருக்கொத்த குணலட்சணத்தை நம்மில் அதிகமதிகமாய் வளர்த்திடும் என்ற விதத்தில், கர்த்தருடைய திட்டமானது பெரிதும், நம்முடைய நன்மைக்கேதுவானதாகவே இருக்கின்றது என்பதை நம்மால் எளிதில் கண்டுகொள்ள முடிகின்றது. ஆகையால்தான் உபத்திரவங்களை - நாம் சரியான இருதய நிலையில் ஏற்றுக்கொண்டு, அவைகள் போதிக்கும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள நாடுகையில், அவைகள் கர்த்தருடைய ஆவியின் பல்வேறு கனிகளையும், கிருபைகளையும் நம்மில் உண்டுபண்ணிடும் என்று அறிந்து, அவைகளிலும்கூடக் களிகூருவதற்கு நாம் கற்றுக்கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார்.

## சபையில் நல்நடக்கை

நாம் அனைவருமே மாம்சத்தின்படி குறைவுபட்டவர்கள் என்றும், நம்மில் எவராலும் பூரணத்திற்கான திவ்விய தரத்தினை எட்டமுடியாது என்றும், நம்முடைய ஒரே பூரணம், இருதயத்தினுடையது, சித்தத்தினுடையது மாத்திரம்தான் என்றும் அடையாளங்கண்டுகொண்டு - ஒவ்வொருவரின் சித்தமானது, விருப்பமானது, நோக்கமானது, அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் ஏவ வேண்டியதாகவும், கோபத்திற்கும், பகைமைக்கும், துர்க்கிரியைகளுக்கும் ஏவக்கூடாது என்றதாகவும் இருந்தபோதிலும், அவ்வப்போது ஒருவர் இன்னொருவரிடமிருந்து சோதனைகளையும் மற்றும் பரீட்சைகளையும் மற்றும் கோபமூட்டுதல்களையும் பெற்றுக்கொள்கையில் நாம் ஆச்சரியப்படக்கூடாது (எபிரெயர் 10:24). நம் விஷயத்தில் தேவனுக்கொத்த சாயலை அடைய வேண்டியதே மிக உயர்ந்த நிலையென நாம் வைத்திருக்க வேண்டும் மற்றும் சரீரத்திலுள்ள மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுக்கான மற்றும் கர்த்தருக்கான நம்முடைய அன்பானது, நம்முன் தோன்றும் அவர்களின் திரளான குறைபாடுகளை/பிழைகளை மூடிட அனுமதிப்பதற்கு நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். ஒருவன் (அ) ஒருவள் எந்தளவுக்கு இந்தப் போக்கைக்கொண்டிருப்பானோ, அந்தளவுக்கு அவன் கர்த்தருக்குப் பிரியமாயிருப்பான், இருதயத்தில் சுத்தமுள்ளவனாயிருப்பான் - தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாயிருப்பான் மற்றும் மீட்பருடைய புண்ணியத்தின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கும் அவன், பூரணமற்ற அவனது மாம்சத்தின்படியாக இல்லாமல், மாறாக அவனது பூரண நோக்கமுள்ள இருதயம் அல்லது சித்தத்தின்படியாக, தேவனால்

பார்க்கப்படுகின்றான். துணைத்தலைப்பில் இடம்பெறும் "சபையில்" என்ற வார்த்தையானது நமக்கு - கூடுகிற இடத்தில் என்று பொருள்படாமல், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் என்று பொருள்படுகின்றதாய் இருக்கின்றது. நாம் ஒன்றுகூடியிருக்கும்போது என்று மாத்திரம் பொருள்படாமல், ஒவ்வொரு நாளும் மற்றும் எல்லா நேரங்களிலுமுள்ள அவர்களுடனான நம்முடைய நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மனுஷர் மத்தியிலான பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாகிய கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் மத்தியிலான நம்முடைய நடக்கை எவ்வாறு காணப்பட வேண்டுமென்ற பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு நாம் அனைவரும் வாஞ்சித்திட வேண்டும்.

வேதாகமம் எங்கும் கர்த்தர் நம்முன் பூரண அன்பையே அடைய வேண்டிய நிலையாக/தரநிலையாக வைத்துள்ளார் மற்றும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் எனும் நிலையைக் கடந்துள்ளவர்களும், கர்த்தருடைய வார்த்தை மற்றும் ஆவி மூலமாய் அவரைப் பற்றி ஓரளவான அறிவிற்குள்ளாகக் கடந்து வந்துள்ளவர்களுமானவர்கள் - அடைய வேண்டிய நிலையாகிய இந்த அன்பு குறித்து அடையாளங்கண்டுகொண்டு, அதற்கு ஒத்திருக்கத்தக்கதாக நாடுகின்றனர் என்று நாம் எண்ணுகின்றோம். ஆகையால் இத்தகையவர்கள் மத்தியில் அவ்வப்போது எழும்புகின்றதான பிரச்சனைகள் என்பது, மாம்சத்தின் அபூரணம் காரணமாகவும், அன்பு எனும் நெறிமுறையைச் செயல்படுத்தும் விஷயத்தில் பூரணமற்ற அறிவு வளர்ச்சி மற்றும் அனுபவம் காரணமாகவும் எழும்புபவைகளாக இருக்கின்றன என்றே நாம் எண்ண வேண்டும். ஆகையால்தான் நாம் கிருபையிலும், அறிவிலும் வளர வேண்டும் என்றும், நாம் கர்த்தருடைய ஆவியினால், அன்பின் ஆவியினால், தெளிந்த புத்தியுள்ள ஆவியினால், சகோதர சிநேகத்தின் ஆவியினால், சாந்தத்தின் ஆவியினால், பொறுமையின் ஆவியினால் - பரிசுத்த ஆவியினால் அதிகமதிகமாய் நிரம்பிட வேண்டும் என்றும் வேதவாக்கியங்களின் புத்திமதி காணப்படுகின்றது.

## வாதாடி போராடுதல் அவசியமா?

சிலசமயம் அவசியம், ஆனால் மிகவும் அடிக்கடியல்ல என்று நாம் பதிலளிக்கின்றோம். ஒரே ஒரு காரணத்திற்காகப் போராடுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இது குறித்து, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்" என்ற வார்த்தைகளில் நாம் பார்க்கின்றோம் (யூதா 3). ஆனால் எதிர்த்துப் போராடுகின்ற ஆவியானது வேதாகமம் எங்கும் கண்டிக்கப்பட்டுள்ளப்படியால், நம்முடைய விசுவாசம் பற்றியதான முக்கியமான காரியங்களுக்காக மாத்திரமே போராட வேண்டுமென்ற அர்த்தத்திலேயே அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளாரென நாம் புரிந்துகொள்ள வேண்டும். பரம பிதாவினுடைய ஆள்தத்துவத்தை மறுதலிக்கின்றவருக்கும், தேவன் என்ற மாபெரியவர் எவரும் இல்லை, தேவன் என்பது நல்ல கொள்கை மாத்திரமே என்றும், இரும்பிலோ, மரத்திலோ, கல்லிலோ அல்லது வேறு ஏதாகிலும் பொருளிலோ பயனுள்ள விதத்தில் நன்மை இருக்குமானால், அதில் கடவுள் இருக்கின்றார் என்றும் சபையில் போதிக்கக் கூடியவருக்கும் நாம் இடம் கொடுத்திடக்கூடாது. இம்மாதிரியான வீணான தத்துவங்களானது - பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு அந்நியமாய் மாத்திரமல்லாமல், அந்த விசுவாசத்திற்கு முற்றிலும் முரண்பாடாய் இருக்கின்றது என்று கவனமாய் எதிர்த்துப் போராடப்பட வேண்டும். நாம் மீட்கும் பொருளுக்காகவும் போராட வேண்டும்; ஏனெனில் இதுவே - வேதவாக்கியங்களில் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் மற்றும் நாம் நீதிமான்களாக்கப்படத்தக்கதாக அவர் உயிர்த்தெழுந்தார் என்பதே - பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதான விசுவாசத்திற்கான அஸ்திபாரமாக இருக்கின்றது. இது பின்வரும் பல்வேறு தவறான வலியுறுத்தல்களுக்கு எதிராக போராட வேண்டும்; அதாவது நமது கர்த்தர் மாம்சமாக்கப்படவில்லை என்றும், அவர் ஆவியின் ஜீவியாகவே தொடர்ந்து காணப்பட்டார் என்றும், அவருக்கு மரணம் வருவது என்பது சாத்தியமற்ற ஒன்று என்றும், அவர் கொஞ்சம் காலம் மனித சரீரத்தில் பாவனையாகத் தோற்றமளித்தார்; அது தாம்தான் என்பதுபோல காண்பித்துக்கொண்டிருந்தார் மற்றும் அந்தச் சரீரம் மரித்தபோது, தாம் மரித்ததுபோல் காண்பித்துக்கொண்டார் என்றுமுள்ள தவறான வலியுறுத்தல்களுக்கு எதிராக போராட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

உலகத்திற்குள் வருவதற்கு முன்னதாகப் பிதாவோடு தமக்கிருந்த மகிமையை நமது கர்த்தர் துறந்தார் என்றும், அவர் தம்மைத்தாம் தாழ்த்தினார் மற்றும் மாம்சமாக்கப்பட்டார் என்றும், இதை அவர் மாதிரியாக இருக்கும்படிக்குச் செய்யாமல், மாறாக தேவனுடைய

கிருபையினால் "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கும்," நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிக்கும்படிக்கும் செய்தார் என்றும் - பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதான விசுவாசத்தினை நாம் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். இது இன்னுமாக பின்வரும் காரியத்திற்கும் நாம் போராட வேண்டும் என்பதைக் குறிக்கின்றது; அவரது மரணம் அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் மரித்திட்டதான நிஜமான மரணமாகும், இல்லையேல் அவர் இரட்சகர் மற்றும் மீட்பர் என்று அவரிடத்திலுள்ள நமது விசுவாசம் இல்லாமல் போய்விடும். இன்னுமாக அவர் உண்மையாக மரித்தார் என்றும், தம்மையே தகப்பனாகிய ஆதாமுக்கான சரிநிகர்சமான விலையாக உண்மையில் கொடுத்து, இப்படியாக ஆதாமையும், அவருடைய சந்ததியையும் விலைக்கு வாங்கிகொண்டார் என்றும் நாம் விசுவாசிக்கவில்லையெனில், மரித்தோரிலிருந்துள்ள அவரது உயிர்த்தெழுதலை நாம் எப்படி விசுவாசிக்கக்கூடும்? மரணத்திற்குள்ளாகச் செல்லாத ஒருவரால், எப்படி மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட முடியும்? இந்தச் சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்துவின் மணவாட்டியை - முதற்பேறானவர்களின் சபையைத் தெரிந்துகொள்ளுவது தேவனுடைய வேலையாக இருக்கின்றது என்றும், நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது இந்தத் தெரிந்துகொள்ளுதல் நிறைவு பெறவே, இவ்வேலையானது - சிறுமந்தையினர், தங்கள் இராஜரிக தலையும், பிரதான ஆசாரியனுமான கிறிஸ்துவின் கீழ் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினரென, மற்றும் அவர்கள் "உன் சந்ததிக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" எனும் ஆபிரகாமின் உடன்படிக்கையை நிறைவேற்றத்தக்கதாக ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாரென இராஜ்யத்தில் மகிமைக்கும், கனத்திற்கும் மற்றும் அழியாமைக்கும் உயிர்த்தெழும்போது இவ்வேலையானது - முழு நிறைவடைவதாயிருக்கும் என்றுமுள்ள மாபெரும் உண்மையை நாம் பற்றிக்கொண்டும், அதற்காகப் போராடியும் நாம் காணப்பட வேண்டும். நம்முடைய மார்க்கத்தினுடைய இந்த அடிப்படைகள் அனைத்திற்காகவும், அதுவும் ஆதாமினுடைய மீறுதல் காரணமாகப் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது என்றும், அவருடைய பாவம் மற்றும் அதற்கான தண்டனையை நாம் அனைவரும் சுதந்தரித்துக்கொண்டுள்ளோம் மற்றும் அனைவருக்கும் மீட்பு அவசியம் என்றுமுள்ளவைகளுக்காகவும் - விசுவாசத்தினுடைய இந்த முதலாம் கொள்கைகள் அனைத்திற்காகவும் நாம் நிற்க வேண்டும் மற்றும் போராட வேண்டும். இவைகள் விஷயத்தில் அலட்சியமாய் இருத்தல் மற்றும் தப்பறையானது உள்ளே நுழைவதற்கும் மற்றும் பிரகடனப்படுத்துவதற்கும், சபையில் போதிக்கப்படுவதற்கும் அனுமதித்தல் என்பது, கடுமையான பாவமாகும் மற்றும் சிலுவையின் போர்வீரர்களென, அதனை ஆதரிப்பவர்களென பாதுகாவலர்களென இருப்போமென்று வாக்களித்துள்ளவர்கள் சார்பிலான உண்மையின்மையை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

ஆனால் இப்படிப்பட்ட அடிப்படை விஷயங்கள் தவிர மற்றப்படி தெளிவாய்த் தெரிவிக்கப்படாத ஏதேனும் உபதேசத்தின் கருத்துகள் விஷயத்தில் - வேதவாக்கியங்களிலேயே விவரிக்கப்படாத ஏதேனும் உவமையினுடைய அர்த்தம் தொடர்புடைய விஷயத்தில் - கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மத்தியில் மிகுந்த சாந்தத்தைக் கொண்டிருக்க வேண்டும். சகோதரர் ரசல் தொடர்பாகவோ அல்லது வேறு ஏதேனும் சகோதரன் தொடர்பாகவோ எந்தப் பிரிவினையோ அல்லது வாக்குவாதமோ காணப்படக்கூடாது. தேவனுடைய வார்த்தைகளில் குறிப்பாய்/தெளிவாய்த் தெரிவிக்கப்படாத விஷயங்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வொருவனும் தன் சொந்த பகுத்தறிவைச் செயல்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும். வேதவாக்கியங்களில் குறிப்பாகவும் மற்றும் தெளிவாகவும் போதிக்கப்படாத எந்த ஒரு காரியத்தையோ அல்லது உபதேசத்தையோ பிரகடனப்படுத்த முற்படும் விஷயத்தில் ஒவ்வொருவனும் தயக்கம் அல்லது கவனம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அனைத்திற்கும் மேலாக ஓர் ஊகம்/சிந்தனை குறித்து அவனே முற்றிலுமாக நம்பிக்கை அடையாமல் இருக்கும் நிலையில், அந்த ஊகத்தை/சிந்தனையைப் போதிக்கவோ அல்லது போதிக்க முற்படவோ கூடாது என்பதில் அவன் உறுதியாய் இருக்க வேண்டும். தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை என்று ஒத்துக்கொண்டிருக்கும் காரியங்களை ஒருவர் ஒப்புவிக்கிறதினால்/விளக்க முற்படுகிறதினால் ஏற்படும் கூடுதல் சிரமங்கள் தவிர, மற்றபடி ஒவ்வொருவனுக்குமே அவனவனுடைய சொந்த கணிப்பின் விஷயத்திலிருக்கும் குழப்பங்களோடும், வஞ்சனைகளோடும் எதிர்த்துப்போராடுவதற்கே போதுமான போராட்டங்கள் உள்ளன. நாம் பேசிடுவதற்கும், சிந்தித்திடுவதற்கும் ஊகங்கள் என்று தவிர்க்க முடியாத அளவுக்கும் தேவனுடைய வார்த்தைகளில் அநேகம் காரியங்கள் எளிமையாகவும், தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் காணப்படுகின்றன. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்;

வெளிப்படுத்தப்பட்டவைகளோ நமக்கு உரியவைகள்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (உபாகமம் 29:29).

## பொறுமையும், சகிப்புத்தன்மையும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

ஏதேனும் ஓர் அன்பு சகோதரன் ஒரு விநோதமான கருத்தையோ (அ) வேலையையோ பெற்றிருந்து அதை அவன் சபையாருக்கு முன்வைப்பது வரையிலும் தனக்கு அமைதி வருவதில்லை என்று எண்ணுவானானால், அவனது இந்தக் கற்பனைகளே சபையாருடைய பொதுவான கருத்தாயும் உள்ளது என்று சபைக்கு வருகை தந்திருப்பவர்கள் (Visitors) முடிவுசெய்துவிடாதபடிக்கு, அவன் அதைப் பொதுவில் பேசி சபையார் கேட்டறிந்துகொள்வது தகுதியாயிராது என்றாலும் - அவன் அவற்றைச் சொல்லிடுவதற்குச் சில வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஏதோ தருணங்கள் கொடுக்கப்பட்டு, அவன் பேசுவது கேட்கப்பட்டப் பிற்பாடு, மற்றும் அவனது கூற்றுகள் நியாயமற்றது என்றும், வேதவாக்கியங்கள் ஆதரிக்காதவைகள் என்றுமாகச் சபையினுடைய கணிப்புக் காணப்படுமானால், தனது கண்ணோட்டத்தை அவன் முன்வைத்ததில் அவன் திருப்தியடைந்துவிட வேண்டும்; ஆனால் அவன் திருப்தியடையாமல், மற்றவர்களுக்குத் தொந்தரவாகவும், ஆராதனையின் பொதுவான ஆவியையும், வேத ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைக் குறுக்கிடும் விதத்திலும் தனது கருத்தினை முன்னிறுத்துவதைத் தனது பொழுது போக்கு வேலையாகத் தொடர விரும்புவானானால், இது விஷயம் குறித்து அவனது கவனத்திற்குக் கொண்டுவருவதும், அவன் பேசுவது கேட்கப்பட்டுள்ளது என்பதை நினைப்பூட்டுவதும், அவன் அக்காரியத்தை வலியுறுத்திக்கொண்டே இருப்பது, அடிப்படை சத்தியத்திற்காக இல்லாமல், ஒரு கருத்திற்காகச் சண்டையிடுவது போன்றிருக்கின்றது என்றும், இம்மாதிரியாகச் சண்டையிடுவது என்பது கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய ஜனங்கள் மற்றும் அவனுக்கான நன்மைக்கும் எதிர்மாறானது என வேதவாக்கியங்கள் எங்கும் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது என்றும், இதை அவன் தொடர்வதற்குத் தங்களால் அனுமதிக்க முடியாது என்று தெரிவிப்பதும் மூப்பர்களுடைய கடமையாக இருக்கின்றது (தீத்து 3:9).

"சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல்" இருப்பவர்களைக்குறித்து அப்போஸ்தலன் பேசுகின்றார் (உரோமர் 2:8). தாங்கள் ஏற்கெனவே அடையாளம் கண்டுகொண்டுள்ளதான சத்தியத்தின் ஆவிக்கேற்றப்படி ஜீவிக்காதவர்கள் மத்தியிலேயே சண்டையிடுகிற/ எதிர்த்துப்போராடுகிற ஆவி (அ) தன்மை பொதுவாய்க் காணப்படுகின்றது என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் கிருபையில் வளராமல் அன்பில், இரக்கத்தில், சாந்தத்தில், தயவில், பொறுமை முதலானவைகளில் வளராமல் - அறிவில் வளர்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர் மற்றும் இருதயத்தில் சரியாய்க் காணப்படுபவர்கள், இதுவே தங்கள் பிரச்சனை என்று கண்டுகொள்வதற்கும் மற்றும் இதைச் சரிச்செய்துகொள்வதற்கும் பிரியமாய் இருப்பார்கள்; காரணம் நம்முடைய கருத்துகளுக்காகச் சண்டையிட்டு, தேவனுடைய சபையில் குழப்பத்தை ஏற்படுத்தி, இறுதியில் கர்த்தரினால் கடிந்துகொள்ளப்படுவதினாலும் மற்றும் பூரண அன்பிற்கும், கிறிஸ்துவுக்கொத்த சாயலுக்குமான பரீட்சையில் ஜெயமடைய முடியாமல், மணவாட்டி வகுப்பாரில் இடம்பெறுவதற்குப் பாத்திரமற்றவர்களாகக் கருதப்பட்டுப்போவதினாலும், நமக்கு என்ன இலாபம்! நிச்சயமாய் இத்தகைய சண்டைகள்/போராடுதல்கள், கற்பனையான கருத்துக்களை உண்டுபண்ணுதல்களையே அப்போஸ்தலன் கடிந்துகொள்கின்றார் மற்றும் இந்தக் கடிந்துகொள்ளுதலானது நம் அனைவராலும் செவிசாய்க்கப்பட வேண்டும்.

இது தொடர்புடைய மற்றுமொரு கருத்தினை, "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல்" எனும் அப்போஸ்தலனுடைய புத்திமதியானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது, அதென்னவெனில்: சிலர் இயல்பாகவே சண்டைப்பண்ணுகிறதின் ஆவியை உடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் இதனால் இது விஷயத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் ஜெயங்கொள்ள வேண்டியிருக்கும். தங்களையும் மற்றவர்களையும் பிரச்சனைக்குள்ளாக்கும் வீண் பெருமையின் ஆவியை, அகந்தை மற்றும் பேராசையின் ஆவியைச் சிலர் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இயல்பாகவே சண்டைப் பண்ணுகிறவர்களாகவும்/ எதிர்க்கிறவர்களாகவும், இயல்பாகவே பேராசைக் கொண்டவர்களாகவும் காணப்படுபவர்களை நாம் நிராகரிக்க வேண்டுமா? அவர்கள் சரீரத்தில் அங்கத்தினர்கள் இல்லை என்று அவர்களை விலக்கிட வேண்டுமா? இல்லவே இல்லை; இப்படிப்பட்டவர்களுக்கும் மற்றும் நம்முடன்

தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் படிப்பினையைப் பதிய வைக்கத்தக்கதாக நம்முடைய நடத்தையில் சரியான நடக்கையினை மாதிரித்துவப்படுத்திட நாம் நாடிட வேண்டும். மற்றவரிடத்தில் நாம் தவறான ஆவியைப் பார்க்கும்போதெல்லாம், "அந்த ஆவியில்/பண்பில் எதுவாகிலும் என்னிடத்தில் காணப்படுகின்றதா?" என்பதே நம்முடைய முதலாவது எண்ணமாக இருக்க வேண்டும் மற்றும் நாம் முதலாவதாகத் திருத்தத்தை நம்முடைய சொந்த இருதயத்திலும், நடத்தையிலும் செய்ய வேண்டும். இப்படியாக நம்முடைய சொந்த கண்களில் காணப்படும் உத்திரத்தை எடுத்துப்போடுகையில், நாம் நம்முடைய சகோதரனை இரக்கத்துடனும், சாந்தத்துடனும் அணுகிடுவதற்கு நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருப்போம் மற்றும் தன் சிரமங்களிலிருந்து எழும்பிடுவதற்கு சகோதரனுக்கு உதவிடும் விஷயத்தில் தகாதமுறையில் நாம் செயல்படாமலும் இருக்கச் செய்யும்.

## முடிப்பதற்காகப் போராடும் பெரோயா பட்டணத்தார்

அருமையான இருதயமும், தலைச்சிறந்த நோக்கமும் கொண்டுள்ள கர்த்தருடைய அன்பார்ந்த சகோதரர்களில் சிலர் (Berean Studies) பெரோயரின் ஆராய்ச்சி வகுப்புத் தொடர்புடைய விஷயத்தில் சரியற்ற கருத்துகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களுக்குள் கூறிக்கொள்வதாவது: "(பெரோயரின் ஆராய்ச்சியில்) கலந்தாராயப்படும் கேள்வித் தொடர்புடைய விஷயத்தில் ஒரே ஒரு சரியான கருத்துதான் இருக்க முடியும் மற்றும் அந்த ஒன்றுதான் சத்தியமுமாகும் மற்றும் இங்குள்ள அனைவருக்கும் சத்தியம் வேண்டும் மற்றும் அக்கேள்விக் குறித்து நாம் போராடி வாக்குவாதம் பண்ண வேண்டும். அங்குக் கூடியுள்ளவர்களில் ஒருவன் தன் கருத்தைக் கைவிட்டு, தான் தவறாய்ச் சொல்லியுள்ளான் என்று காணும்வரைத் தேவைப்படும்பட்சத்தில் இராமுழுவதும் கூடியிருந்து போராடியாக வேண்டும் என்பதே ஆகும்." இது முற்றிலுமாகப் பொல்லாத சிந்தையாகும் மற்றும் இது பல்வேறு வகுப்புகளில் ஆவிக்குரிய தன்மைக்கு இடையூறையும், மகா அசௌகரியத்தையும், சாதகமின்மையையும் விளைவிக்கின்றதாய் இருக்கும். ஒரு பாடத்தின்/ஆராய்ச்சி செய்யும் தலைப்பின் விஷயத்தில், எவ்விதமான சிந்தனை செய்யாமலும் மற்றும் மற்றவர்களால் முன்வைக்கப்படும் வார்த்தைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்பவர்களாகவும் / விழுங்கிக்கொள்பவர்களாகவும் மாத்திரம் காணப்படுபவர்களைப் பார்க்கிலும், கொஞ்சம் சிந்தனை செய்பவர்களை நாம் மிகவும் மதித்திட வேண்டும். ஆனாலும் சரியான வரையறைக் கைக்கொள்ளப்பட வேண்டும், அதென்னவெனில்: நாம் மெதுவாய்க் கற்றுக்கொள்கிற விஷயத்தில் கர்த்தர் நம் அனைவரிடத்திலும் மிகுதியான பொறுமை கொண்டிருந்தார் மற்றும் நாமும் ஒருவர் இன்னொருவரிடத்தில் பொறுமையாய் இருக்க வேண்டும். அவர் கற்பனையின்மேல் கற்பனையையும், பிரமாணத்தின்மேல் பிரமாணத்தையும் வைக்கின்றார் மற்றும் நீடிய சாந்தமுடையவராகவும்/ பொறுமையுடையவராகவும், மிகுந்த கிருபையுள்ளவராகவும் மற்றும் தம்முடைய சித்தம் செய்ய விரும்புவதற்கான சான்றுகளை வெளிப்படுத்துகின்றவர்கள் அனைவரிடத்திலும் மிகவும் பெருந்தன்மையுடையவராகவும் காணப்படுகின்றார்.

அவருடைய நாமத்திலும், அவருடைய பிரதிநிதிகளெனவும் நாம் மேற்கூறியவைகளுக்குக் குறைவாக எதையும் செய்திடுவதற்கு நமக்கு நிச்சயமாய் அதிகாரம் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் நம்மிடத்தில் காணப்பட்டதான வேகக்குறைவைக் குறித்த நம்முடைய உணர்ந்துகொள்ளுதலானது, பார்ப்பதில் மெதுவாகவும், கேட்பதில் மெதுவாகவும், புரிந்துகொள்வதில் மெதுவாகவும் காணப்படும் மற்றவர்களிடத்தில் நம்மை மிகவும் அனுதாபங்கொள்ளச் செய்யும். ஆகையால் எந்த ஒரு கேள்வித் தொடர்புடைய விஷயத்திலும், தன்னுடைய கண்ணோட்டம் குறித்து முன்வைப்பதற்கான நியாயமான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டால், அதில் ஒவ்வொருவனும் திருப்திக்கொள்ள வேண்டும் மற்றும் அதை மற்றவர்களிடத்தில் வற்புறுத்தவும், திணிக்கவும் முயற்சிக்கக்கூடாது. ஒருவேளை இதழாசிரியர் (சகோ. ரசல்) ஒரு கேள்வியின் விஷயத்தில் தன்னுடைய கண்ணோட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறாரெனில் மற்றும் ஒருவர் (அ) அதிகமானவர்கள் அக்கேள்வியை இதழாசிரியரின் கண்ணோட்டத்தின்படியாகப் பார்க்கவில்லையெனில் மற்றும் அக்கேள்வியானது அடிப்படை கொள்கைகள் பற்றினது இல்லை எனும் பட்சத்தில், அக்காரியத்தின் விஷயத்தில் அமைதி காப்பதும், மாபெரும் ஆசிரியராகிய கர்த்தர் தம்முடைய வழிநடத்துதல்கள் மூலம், நாம் முழுமையாய்க் கண்ணார காணத்தக்கதான நிலைக்கு நம்மைப் படிப்படியாகக் கொண்டுவந்திடுவதற்கு அவரை அனுமதிப்பதும் ஏற்றகாரியமாய் இருக்கும் என்று இதழாசிரியர்

கருதுவார். இதில் பொறுமைக்கான, சகிப்பிற்கான, சகோதர சிநேகத்திற்கான, சாந்தத்திற்கான, காருணியத்திற்கான, அன்பிற்கான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்கின்றோம்.

## ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக / ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து

சண்டைப்பண்ணுகிற மனநிலையை உடையவன் ஒருவன் சண்டைப்பண்ணுவானானால், அவன் மற்றவர்களிடத்தில் கோபத்தையும் மற்றும் துர்க்கிரியைகளையும் ஏவுவதில் எவ்வித சிரமமும் கொண்டிருப்பதில்லை; ஆனால் அன்பின் பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் பெற்றிருப்பவர்களாகிய நாம் - "அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்புவதற்குக் கருத்தாயிருப்போமாக" என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். அனுதாபத்தின் கண்ணோட்டத்தில், சிரமங்களிலும், பெலவீனங்களிலும் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டுமெனும் கண்ணோட்டத்தில், நாம் ஒருவர் இன்னொருவருடைய இயல்பான பண்புகளைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இது எவ்வளவாய்ச் செய்ய இயலுகின்ற விஷயமாய் இருக்கின்றது! அனுதாபத்துடனும், அன்புடனும், சாந்தத்துடனும் அன்பான வார்த்தைகள் பேசுவதன் மூலமாக ஏதோ ஓர் அருமையான சகோதரனோ அல்லது சகோதரியோ சீரான நிலையில் இருப்பதற்கு நாம் உதவிட முடியும் - ஒருவேளை வெளிப்பட்டால் அவனுக்கும், சபைக்கும் (அ) மற்றவர்களுக்கோ பாதகமாய்க் காணப்பட வாய்ப்புள்ள அவனது (அ) அவளது பெலவீனங்களை ஜெயம்கொள்ளச் செய்திட முடியும். இந்த உதவும் சிந்தையை நாம் அனைவருமே எவ்வளவாய்க் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அதை அன்பின் ஆவியென, கர்த்தருடைய ஆவியென அடையாளங்கண்டுகொள்ள வேண்டும்! அமைதியான/ மெதுவான பதில், அன்பான, கனிவான வார்த்தையானது உதவிகரமாயிருந்து, கோபத்தை மாற்றிப்போடும் என்றும், கடுஞ்சொற்களும், வாக்குவாதமான சொற்களும், குத்தும்விதமான சொற்களும், ஏளனமான சொற்களும் நிச்சயமாய்க் கோபத்தை எழச்செய்யும் என்றும் நாம் நினைவில்கொள்வோமாக (நீதிமொழிகள் 15:1). ஆகையால் அனைவரிடத்திலும் கனிவுடன் இருப்பதற்கும், ஒருவருக்கொருவர் இரக்கத்துடனும், அன்புடனும் காணப்படுவதற்கும், தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மை மன்னித்துள்ளதுபோல ஒருவரையொருவர் மன்னிக்கவும் அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்வோமாக (எபேசியர் 4:32).

பொறுமையும், கவனமும் மிகவும் அவசியப்படும் மற்றுமொரு விஷயம், வழிநடத்துபவர்களைத் தெரிந்து கொள்ளும் விஷயத்திலாகும். அர்ப்பணிப்புமிக்க சில சகோதர சகோதரிகள் - அனைத்துக் காரியங்களிலுமே தங்களால் அங்கீகரிக்க முடியாத ஒருவரை மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தங்களுக்கு எந்தப் பங்கும் இருந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். எவ்விதமான பரிவை முன்னிட்டும், எந்த ஓர் ஒழுங்கீனமானவனும் மூப்பராய்த் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. மூப்பர் ஒருவர் நல்லொழுக்கம் அற்றவராய்க் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் பொறுப்பினின்று விலகும்படிக்கு உடனடியாகக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் பொதுவாய் இது வேறுபட்ட கருத்துகள் வருவதற்குக் காரணமாய் இருப்பதில்லை; ஏனெனில் நல்லொழுக்கமற்ற ஒருவனைக் கர்த்தருடைய ஜனங்கள் ஆவிக்குரிய விஷயங்களில் வழிநடத்துபவரென அல்லது நீதிநெறிகளைத் தாங்கிச் சுமப்பவரென வேண்டுமென்றே தேர்ந்தெடுக்க மாட்டார்கள். ஒருவேளை சபையில் பெரும்பான்மையானவர்களால் - மற்றவர்கள் அனைவரையும் காட்டிலும் ஒரு நபர், தங்கள் மூப்பர் (அ) வழிநடத்துபவர் ஆகுவதற்கு எல்லாவிதத்திலும் மிகவும் மேம்பட்டவராகவும், நன்கு தகுதியுடையவராகவும் இருக்கின்றார் என்று கருதப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் சபையில் ஒரு சிறுபான்மையானவர்கள் இன்னொரு சகோதரனுடைய அறிமுகத்தை அல்லது இவரது நடத்தை அல்லது இன்னும் வேறு சில விஷயங்கள்மீது விருப்பம்கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் இன்னுமொரு சிறுபான்மையானவர்கள் வேறொரு சகோதரனுக்காக விருப்பம் கொண்டவர்களாக அல்லது கர்த்தருடைய மகிமைக்காகப் பயன்படக்கூடிய தாலந்துகளை அச்சகோதரன் பெற்றிருக்கின்றான் என்ற நம்பிக்கையில், அவன் சபைக்கான பொது ஊழியங்களில் கொண்டுவரப்படுவதைப் பார்ப்பதற்கான விருப்பம் கொண்டிருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவினரும் என்ன செய்ய வேண்டும்? - கட்சி மனப்பான்மையின் அடிப்படையில் போராடி, எங்களிடம் வல்லமை இருக்கின்றது, ஆகையால்

நாங்கள் விரும்பும் மனுஷனைத் தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரம் எங்களுடையதாகும் மற்றும் ஒன்றில் நீங்கள் இதில் இணைந்திட வேண்டும் அல்லது சபையைவிட்டுப் பிரிந்துபோய்விட வேண்டும் என்று சொல்லலாமா? இல்லவேயில்லை!

இது உலகத்தின் பார்வையில் "நல்ல அரசியலாக" இருக்கும்; ஆனால் இது சபையில் ஆள வேண்டியதான அன்பின் ஆவிக்கு முற்றிலும் இசைவற்றதாகும். இப்படிப்பட்டதான (அரசியல்) வெற்றியை அடைவோமானால், அதில் நாம் கர்த்தருடைய சகோதர சகோதரிகளில் ஒருவரையோ அல்லது அநேகரையோ காயப்படுத்துபவர்களாக இருப்போம்; நமது கர்த்தரைக் கோபமூட்டுகிறவர்களாக இருப்போம்; மாபெரும் பரிசிற்கான நம்முடைய ஓட்டத்தின் விஷயத்தில் நமக்கே கணக்கிடவே முடியாத அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றவர்களாய் இருப்போம். இப்படிப்பட்டதான "வெற்றி" என்பது, நம்முடைய உண்மையான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் விஷயத்தில் தோல்வியையும், நம்முடைய மாபெரும் எதிராளியானவனுடைய வெற்றியையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். நாம் ஒருவரையொருவர் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாமோ? அவனவன் தன்னுடைய சொந்த விருப்பங்களையல்ல, ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பிடுவதற்கு நோக்க வேண்டாமோ? ஆகையால் அன்பின் ஆவியானது, இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஒன்றிற்கு மேற்பட்ட மூப்பர்களை தேர்ந்தெடுக்க ஏவிடும் - கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள பொதுவான கட்டளைகளை மீறாத நிலையில், சபையாரின் விருப்பங்களை நியாயமாய்க் கிரகித்து, இரண்டுபேரை அல்லது மூன்றுபேரை அல்லது அதிகமானவர்களைத் தேர்ந்தெடுக்க ஏவிடும். சகோதரரின் எண்ணிக்கைக்குத்தக்கதான ஒரு நியாயமான மற்றும் திருப்திகரமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். சிலர் விசேஷமாக ஒருவகையான கூட்டத்தினை நடத்துவதற்குப் பொருத்தமாய்க் காணப்படுவார்கள் மற்றும் மற்றவர்கள் வேறுவகையானதொன்றை நடத்துவதற்குப் பொருத்தமானவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தினுடைய அவசியம் நமக்கிருப்பதினால், கண்ணானது கையையோ அல்லது பாதத்தைப் பார்த்து, நீ எனக்கு தேவையில்லை என்று சொல்ல முடியாதென அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் ஊழியஞ்செய்வதற்குத் திரளான வாய்ப்புகள் உள்ளன எனும் கருத்தினை நாம் மனதில்கொண்டிருக்க வேண்டும்.

மூப்பருக்கான தகுதிகளை அப்போஸ்தலன் நமக்குச் சுட்டிக்காட்டுகையில், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப்போன்று இருக்கக்கடவீர்கள்" என்று கூறி, நாம் அனைவரும் அடைய வேண்டிய நிலையை நமது கர்த்தர் குறிப்பிட்டதுபோலவே, அப்போஸ்தலனும் அடைய வேண்டிய நிலையைக் குறிப்பிட்டுள்ளார். நாம் பரம பிதாவைப்போன்று முற்றும் முழுமையாக இருக்க முடியாது; எனினும் நாம் அடைவதற்கு நாடுகின்றதான நமக்கான மாதிரியாக அல்லது அடைய வேண்டிய நிலையாக/தரமாக அவரை நாம் வைத்திருக்கலாம். இதுபோலவே சில மூப்பர்களால் மாத்திரமே அப்போஸ்தலனால் குறிப்பிடப்பட்டுள்ளதான தகுதியின் நிலையினை எட்டிட முடியும்; ஆனாலும் இவ்விஷயத்தில் கர்த்தருடைய தேர்வாக இருக்குமெனத் தாங்கள் நம்புவதை வெளிப்படுத்துகையில், இத்தகுதிகளானது யார் ஒருவராலும் மறக்கப்படக்கூடாது. "அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒருவருக்கொருவர் தாங்கிக்கொள்வதும், ஒருவருக்கொருவர் விருப்பங்களை, கண்ணோட்டங்களை, ரசனைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்வதும் எவ்வளவாய் நம் அனைவரையும் மகிமையின் கர்த்தர் போன்று அதிகமதிகமாய் இருக்கச் செய்திடும்! மற்றும் எவ்வளவாய்ச் சிரமங்கள் மற்றும் சுருக்கங்கள் அநேகவற்றை அகற்றி, கர்த்தருடைய ஜனங்களுள்ள ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தார் மத்தியிலும் சமாதானம் கொண்டுவந்திடும்! கல்லறையிலோ அல்லது நித்திரை அறையிலோ நிலவுவதுபோன்ற சமாதானம் மற்றும் அமைதி வகையினை நாடுவதற்காக நாம் எண்ணம்கொள்ளவில்லை, மாறாக விழித்திருப்பவர்கள் மற்றும் ஜீவனுள்ளவர்கள் மற்றும் முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மற்றும் தலைமீதான தங்கள் அன்பின் காரணமாகவும் மற்றும் அவரது அடிச்சுவடுகளில் நடக்க நாடுபவர்கள் அனைவர்மீதான அன்பின் காரணமாகவும் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்பவர்கள் மற்றும் தாங்கிக் கொள்பவர்கள் மத்தியில் கர்த்தர் அங்கீகரிக்கக் கூடியதான சமாதானம் மற்றும் அமைதியின் வகையையே நாடிடுவதற்கு நாம் எண்ணம் கொண்டவர்களாய் இருக்கின்றோம்.

## அன்பானது தன்னலம் நாடாது

தன்னலம் நாடும் ஆவியைக்குறித்தும், பண்பைக்குறித்தும் அதிகமதிகமாய் வெட்கம் அடைகிறவர்களாகவும் மற்றும் தன்னலம் கருதாமல், மற்றவருடைய அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருடைய நலனுக்காகச் சிந்திக்கின்றதான அன்பின் ஆவியை அதிகமதிகமாய் உணர்ந்துகொள்பவர்களாகவும், கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் படிப்படியாக வந்தாக வேண்டும். ஒரு சகோதரன் சபையில் கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்குப் பிரியம்கொண்டிடும் சில தாலந்துகளை, தான் பெற்றிருப்பதாக எண்ணுவானானால், அவைகளைப் பயன்படுத்திடுவதற்கான வாய்ப்புகளுக்கு அவன் விழிப்பாய் இருப்பது ஏற்றகாரியமாகும்; அதேசமயம் தன்னையோ அல்லது தன்னுடைய ஊழியங்களையோ சபைமீது கட்டாயப்படுத்துவதை அவன் தவிர்த்துக்கொள்வதும் அவனுக்கு ஏற்றதாயிருக்கும். பணம் வாங்காமல் சபைக்கு இலவசமாய் ஊழியஞ்செய்வதில் அவன் மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பினும், சத்தியத்தின் ஊழியத்திற்காக நேரத்தையும், பலத்தையும், சக்தியையும் மற்றும் அனைத்துத் தாலந்துகளையும் கொடுப்பதில் அவன் மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பினும், சாந்தத்தின் ஆவியும் மற்றும் ஞானத்தின் ஆவியும் - சபையாரால் புரிந்துகொள்ளப்படும் அளவுக்கு மிஞ்சி சபையின்மீது அவனது ஊழியங்களை அவன் குவிப்பதிலிருந்தும் - அவனைத் தவிர்த்திட வேண்டும். நிதானத்துடன் செல்வதும், யார் சபைக்கு ஊழியம் புரியலாம் மற்றும் எந்தளவுக்கு மற்றும் எவ்வளவு காலம் அவர்கள் ஊழியம் புரியலாம் எனும் விஷயத்தில் கர்த்தர் வழிகாட்டி, இறுதியில் சுட்டிக்காண்பிப்பார் என்று அவரை விசுவாசிப்பதும் நல்லது. இதுவே கர்த்தருடைய வழியாகும்; வேத வாக்கியங்களின் அடிப்படையிலான வழியாகும் மற்றும் ஞானமுள்ள வழியாகும் - மற்ற எந்த வழிகளும் சீக்கிரமாகவோ, தாமதமாகவோ, அதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கும் பிரச்சனைகளைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

## குமாரன் எவனை விடுதலையாக்குவாரோ…

நம்முடைய தனிப்பட்ட சுயாதீனங்கள் தொடர்புடைய விஷயத்தில் சமநிலையில் காணப்படுவதில் நம்மில் அநேகருக்குச் சிரமங்கள் காணப்படுகின்றன. நம்மைச் சுற்றியிருக்கும் வழக்கங்களினாலும், நடைமுறை பழக்கங்களினாலும் நாம் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகுகின்றோம் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள அவருடைய குரலுக்கு நாம் தொடர்ச்சியாய்ச் செவிசாய்ப்பது அவசியமாகும். பாபிலோனில் எதுவுமே நியமனம் இல்லாமல் செய்யப்படக் கூடாது எனும் வழக்கம் காணப்படுவதினால், இதற்கொத்த எண்ணங்கள் கிருபையிலும், சத்தியத்திலும் குறைவான வளர்ச்சியுள்ளவர்கள் மத்தியில் சிலசமயம் மெதுவாய் உள்ளே வருகின்றது; உதாரணத்திற்குச் சபையாரால் நியமிக்கப்படும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில் ஒருவரால் நடத்தப்படும் கூடுகைகளே ஒழிய மற்றப்படி எந்தக் கூட்டங்களும் நடத்தப்படக்கூடாது என்ற எண்ணங்களாகும். சபையாருடைய ஒருமைப்பாடானது அடையாளங்கண்டு கொள்ளப்படுவதினாலும் மற்றும் எங்கு, எப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கூட்டங்களை நியமிப்பதினாலும் மற்றும் மேலான தகுதிகள் பெற்றுள்ளவர்கள் என்று மதிக்கப்படுபவர்களால் அக்கூட்டங்கள் நடத்தப்படுவதினாலும் நன்மைகள் இருக்கின்றன. எனினும் கர்த்தரும் சரி, அப்போஸ்தலர்களும் சரி தனிப்பட்ட நபர்களுடைய சுயாதீனங்களின் விஷயத்தில் எந்தக் கட்டுப்பாடுகளும் வைக்கவில்லை மற்றும் இதனால் நாமும் வைக்கக்கூடாது என்ற விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. "இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (மத்தேயு 18:20). இந்த வாக்குத்தத்தமானது அன்றுபோல் இன்றும் உண்மையாகவே இருக்கின்றது மற்றும் இது கர்த்தருடைய ஜனங்களில் எவர்மேலும், எவ்விதமான கட்டுப்பாட்டையும் வைக்கிறதில்லை.

சபையால் ஏற்கெனவே ஏற்பாடுபண்ணப்பட்டதான ஏற்பாடுகளானது தங்களது சிறந்த ஆவிக்குரிய நலன்களைச் சந்திக்கவில்லை என்று கர்த்தருடைய மந்தையில் யாராகிலும் உணர்வார்களானால், அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் கூட்டத்தை - வேதவாக்கியங்களின் ஏற்பாடுகளுக்கு முரண்படாத வகை கூட்டத்தை ஆரம்பிப்பதற்கான முழுச்சுயாதீனத்தை உடையவர்களாய் இருக்கின்றார்கள். இப்படியான தேவை எவருக்கேனும் இருக்குமானால், இவர்கள் பொதுவான சபையாரால் முன்னமே நியமிக்கப்பட்டுள்ள கூட்டத்திற்கு இடையூறற்ற விதத்திலுள்ள நேரத்திலும், இடத்திலும் இத்தகைய கூட்டங்களை

நியமிக்கும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். சபை இப்படிப்பட்டதான காரியங்களைப் பொதுவாய் மேற்பார்வையிட வேண்டும் மற்றும் சபை அதன் பொறுப்பினை உணர்ந்துகொண்டு, போதுமான கூட்டங்களையும் மற்றும் விரும்பப்பட்ட வகையிலான கூட்டங்களையும் மற்றும் அன்பார்ந்த ஜனங்களின் தேவைகளைச் சந்திக்கக்கூடிய வழிநடத்துபவரின் கீழ் - அனைவரும் போஷிக்கப்படத்தக்கதாகவும், அனைவரும் பலப்படுத்தப்படத்தக்கதாகவும், அனைவரும் வளரத்தக்கதாகவும் மற்றும் அனைவரும் இருதய ஒருமைப்பாட்டிலும், அன்பிலும், ஐக்கியத்திலும், ஒத்துழைப்பிலும் காத்துக்கொள்ளப்படத்தக்கதாகவும் - கூட்டங்களை ஏற்படுத்திக்கொடுத்திட/நியமித்திட வேண்டும்.

டாண் ஆராய்ச்சி தொகுதி - VI - இல் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவற்றை மறுபடியும் இங்குக் குறிப்பிடுவதற்கு இது பொருத்தமான தருணமாகும்; அதாவது கர்த்தருடைய எந்த மந்தைகளினுடைய கூடுகைகளில், சாட்சிக்கூட்டங்களுக்கும், பெரோயா வகுப்புகளுக்கும் மற்றும் டாண் ஆராய்ச்சிகளுக்கும் முக்கியமான இடமளிக்கப்படுகின்றதோ, அந்த அருமையான மந்தையினர் கிருபையிலும், பலத்திலும் அதிகமாய் வளருகின்றவர்களாய் இருப்பார்கள் என்பது நம் அபிப்பிராயமாக இருக்கின்றது. இம்மாதிரியான உரையாடல் கூடுகைகளில், அதிலும் விசேஷமாகச் சாட்சிக்கும், ஜெபத்திற்கும், துதி ஏறெடுத்தலுக்குமான கூட்டங்களில், அன்பான நண்பர்கள் ஒருவருக்கொருவர் அனுதாபத்துடன்கூடிய தொடர்புக்குள்ளாக வருவதற்கான வாய்ப்புகளைப் பெற்றிருக்கின்றனர் இது மிகவும் உதவிகரமானதாகும் மற்றும் இது அவர்களை மற்றக் கூட்டங்களைக் காட்டிலும் கிறிஸ்தவ அன்பிற்கான கட்டுகளில் ஒன்றாய்ப் பிணைக்கின்றதாய் இருக்கின்றது. அலிகெனியிலுள்ள சபையில் இந்தக் கூட்டங்களானது ஒவ்வொரு புதன்கிழமை மாலையிலும் நடைபெறுகின்றது மற்றும் பிட்ஸ்பர்க்கிலும் (Pittsburg), புறநகர்களிலுமுள்ள பல்வேறு பகுதிகளில் எட்டு இடங்களில் நடைபெறுகின்றது. இந்த இடங்களில் 150 பேருக்குமேல் கலந்துகொள்கின்றனர் மற்றும் இந்தக் கூடுகைகளினின்று கடந்துவரும் தாக்கமானது, மிகச் சிறந்ததாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். முடிகின்ற அன்புக்குரியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு, அக்கூட்டங்களினுடைய புத்துயிரளிக்கும் தாக்கங்களில் பங்கெடுப்பார்களானால், நாம் எவ்வளவாய் மகிழ்வோம். ஒருவகைக் கூட்டத்தைத் தெரிந்துகொள்ளும் கடமைக்குள்ளானால், அநேகர் சாட்சிக் கூட்டத்திற்கே வாக்குகள் அளிப்பார்கள் அல்லது சாட்சி எனும் இவ்வம்சமானது ஒரு கூட்டத்தின் முக்கியமான பாகமாக ஆக்கப்படும் என்பதில் நமக்கு நிச்சயமே. இந்தக் கூட்டமே, "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது" என்று ஆதி திருச்சபையாரைக்குறித்து அப்போஸ்தலனால் விவரிக்கப்பட்டுள்ளதான கூடுகை வகை போன்றதாகும் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக (1 கொரிந்தியர் 14:26).

---

R 4021 [Page 203] (Poem)

## உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார்
Your father knowth what things you need of

நம் பிதா அறிவாரே நமக்கென்ன தேவையென்று,
வாழ்க்கைதனின் அசைவுகளின்
ஒவ்வொரு நொடிப்பொழுதினிலும் ..
கனப்பொழுதும் அயர்வதில்லை; கண்கூட துஞ்சுவதில்லை
அவரன்பு கண்கொண்டு நமை நாளும் காக்கின்றார்
கண்மூடி தூங்க மாட்டார்; துயிலறியார் இரவு பகல்
முற்றிவிட்ட கதிர்களுக்கு வெப்பம் மிகத் தேவை என்று,
சில நேரம் கொடுத்திடுவார் அதிகமான வெப்பக்கற்றை
அதன்பின்னே அனுப்பிடுவார் சமாதானம் கொடுத்திடுவார்
சமாதானம் வந்துவிடும், இரவுதனின் நிழல்களுடன்
நமில் சுருட்டிடாமல் விட்டுவிட்ட பெருமைகூட
சில சமயம் வீறாப்பு காட்டிவிடும்;
மகிழ்ச்சி கொள்ள வைத்துவிடும் அவர் மட்டும் அறிந்திடுவார்;
நாமறிவோம் என்னவென்று ; நமக்கதனை சுட்டிக்காட்ட அவமான
பள்ளத்தாக்கில் நடக்கக்கூட அனுமதிப்பார் வீண்பெருமை
ஒதுக்கிடுவோம் ஆர்வம் கொண்டே நம் கரங்கள் அலைகின்ற
போதினிலே அமைதியோடு கரம் மடக்கி மார்போடு சேர்த்து
வைப்பார் நமக்கெப்போ ஓய்வு வேண்டும், அவருக்குத்
தெரிந்துவிடும்,
ஓய்வுகொள்ளஅனுமதிப்பார்;வருத்தம்வேண்டாம்ஊக்கம்கொள்
உற்ற துணை தேவைப்படும், வனாந்தரமும் வந்துசேரும்;
நமை படைத்த தேவனுக்கே இது எல்லாம் தெரிந்துவிடும் ;
தெரிந்தவுடன் கொடுக்கின்றார் அளவில்லா ஆசீர்வாதம்;
அத்தனையும் அனுபவிப்போம்;
அளவு இல்லா இன்பம் கொள்வோம்
என்னதான் நேரிடினும் நானுள்ளேன் உன்னுடனே;
என்ற வார்த்தை நமக்குண்டு; வீண் கலக்கம் நமக்கெதற்கு?
விட்டிடுவோம் அவரிடமே; யாத்திரையின் வழிநெடுக
நமக்கென்ன தேவையென்று
நம் தந்தை அறிந்திடுவார் நமக்கெதற்கு வீண் கவலை 1381--
விட்டிடுவோம் அவர் சமூகம்,
அவர் கரத்தைப் பற்றிக்கொள்வோம்

## உன்னுடனே பேசுகின்ற நானே அவர். ___ யோவான்4:26, 9/37

தாகம் தீர்க்கவேண்டியே சமாரிய தாரகை ஒருத்திதண்ணீர் மொள்ளவே கிணற்றண்டையில் வந்தாள்,
கிணற்றின்சுவற்றின்மீதே முன்பின் அறியா மாற்றான் ஒருவர் அமர்ந்தே இருக்கக் கண்டாள்,
ஸ்திரீயே, எனகுத்தாகத்திற்குத்தா என்றவர்கேட்க, தாகம் தீர்க்கத் தந்தாள்,
மாற்றாக அவரோ விலைமதிப்பில்லா ஜீவத்தண்ணீரை இலவசமாகவேஅளித்தார்,
தன் வாழ்க்கை வரலாற்றினைவெளிப்படுத்தியதைக்கண்டே மாதோ மிகவும் வியந்தாள்,(மாது-பெண்)
மேசியா மட்டுமே இதனை மிகவும் ஆழமாகவேகண்டுணர்த்திடுவார்என்றே அவளும்
விசுவாசம்கொண்டாள்,அவள் விசுவாசம்தன்னை அவரும் கண்டேமிகவும் பாராட்டி," உன்னுடனே
பேசுகின்ற நானே அவர்".என்றார்,
நாங்கள்கூட எஜமானே, வெறுமையாகவே நீர்வீழ்ச்சியிடம் வந்தே,குடித்தோம், குடித்தோம்,இதற்கு
முன்னேவீணாகவே குடித்தோம், தாகம் தீரவில்லையே,எம்மை திருப்தியாக்கும் நீரும்
நீர்தானே,(நீங்கள்தான்),
எங்களைதிருப்தியாக்கும் தண்ணீரும் உம்மிடம் காத்திருக்குதே,
அதனைத்தாரும், நாங்கள் குடிப்போம், மீண்டும் தாகம் கொள்ளவே மாட்டோம்,
உம்மில்விசுவாசம்கொள்ள, துணிவற்ற நிலையினில்நிர்ப்பந்த நிலையில்உள்ளோம் என்றடங்கிஉண்மையை
எங்கள்கட்டுக்கடங்காஅலைபாயும் உள்ளமோமீண்டும் உள்ளே உள்ளதை வெளிப்படுத்திடுதே,
" உன்னுடனே பேசுகின்ற நானே அவர்"என்றஇரக்கமிகு வார்த்தைகளை மீண்டும்
கேட்கவேஏங்குகிறோம்,கண்களை சொஸ்தமாக்கி திறந்துவைத்த கருணையாளர் கவனிப்பினால்
கண்பார்வை பெற்றமனிதனையேஉள்ளே கனன்றெரியும் பகைமையோடே வெளியில் விரட்டினாலும்
மீண்டும் அவர் பாதைதனை கண்டுபிடித்தேவந்து சேர்ந்தார்,அவருக்காதரவு அளித்திட்டகர்த்தரையே
மெசியா என்றே கண்டுகெண்டார்,ஒளிவீசும் முகத்துடனே சொல்லிவிட்டார்,"உன்னுடனே பேசுகின்ற
நானே அவர்."
எனவே தான் எம் ஆண்டவரே, மங்கிய எம்  கண்கள்திறக்கும்போதில்,உம் குணமாக்கும் வல்லமை தனை
நண்பர்கள் இழிவாய்கருதி பேசும்போதில்,ஆறுதலும் தேறுதலும் கொடுக்கும் நல்வார்த்தையோடே
எம்அண்டை வீற்றிருப்பீர்,எம்துக்கமிகுநேரமெல்லாம் மகிழ்வும் களிப்புமாய்மாற்றிடவே,வாழ்க்கையின்
திறமைவாய்ந்த புதிர் நிறைந்த வேளைகள் எம்மைத்தடுமாறச்செய்யும்போதில்,விசுவாசத்தின் தவறாத சாவி
கொண்டு ரகசியத்தைத்திறந்து தாரும்.பெரும் நுழைவாயில்தனில்நாங்கள்கேட்க வேண்டும்,
"உன்னுடனேபேசுகின்ற நானே அவர் என்றே.
இறுமாப்பும் செறுக்கும் கொண்டோர் இன்னும் அடையாளம் ஒன்று வேண்டியே அடிவானத்தையும்
உச்சிவானையும் நோக்குகின்றார்,  அவர்களோடுமேற்போர்வைதனை இறுகக்கட்டிநடக்கும்
ஒருவர்அவர்கள்மாசகற்றிதூய்மை படுத்தி
திறமையாகக்கையாள்கிறார்,தேவன்காட்டியவழிதனிலேகண்கள்திறக்கப்பட்ட ஒருவர்உன்னுடன்பேசுகின்ற
நானே அவர்என்ற விடுதலை கொடுத்த வேந்தரைக்காண்பார்.-

ஆர்.பி.ஹென்னிங்ஸ்

[R4030]

# அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள்

**லேவியராகமம் 10:1-11.**

"திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" - நீதிமொழிகள் 20:1.

இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்து ஒரு வருடம் கடந்திருந்தது. ஊழியக்காரனாகிய மோசே மூலம் கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் இவர்கள் பயிற்சியளிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டது. அது இஸ்ரயேல் ஜனங்கள் மீது இருந்த தெய்வீக இரக்கம் மற்றும் தயவிற்கான விஷேமான அடையாளமாக காணப்பட்ட வருடமாகும். அவர்களுடைய முதற்பேறானவர்கள் அற்புதவிதமாக பத்தாவது வாதையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கர்த்தருக்கு ஊழியம் புரியும் ஆசாரிய கோத்திரமாகவும், அவருடைய ஜனங்களுக்கு அவருடைய பிரதிநிதிகள் போன்று இருந்து ஊழியம் புரிவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். சீனாய் மலையில் அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டாயிற்று. ஆசரிப்புக்கூடாரமும், அதன் நிழலான மூடுதிரைகளும், தூண்களும், பணிமுட்டுகளும் செய்யப்பட்டாயிற்று. மேலும், கர்த்தர் தமது ஜனங்களின் சகல விஷயங்களிலும் அவர்களை வழிநடத்துவதற்கு ஏதுவாகவும், அவர்களை வாக்களித்த தேசத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஏதுவாகவும், அவர், அவர்களோடு இருக்கின்றார் என்பதைக் காட்டும் விதமாக கர்த்தருடைய மகிமை, கூடாரத்தின் மீது காணப்பட்டது. ஆசாரியர்கள் பணிக்கென நியமிக்கப்பட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியங்களும் ஆரம்பித்த நிலையில் காணப்பட்டது.

இஸ்ரயேலர்கள், தங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தெய்வீக மத ஒழுங்குகளிலும், ஆசாரியர்கள் இந்த தெய்வீக அமைப்பில் உள்ள தங்களுக்குரிய விசேஷமான உறவிலும் களிக்கூர்ந்து காணப்பட்ட சமயத்தில், தெய்வீக விஷயங்களில் பயப்பக்தியையும், பயமும் ஏற்படுத்தும் விதமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஆசாரியர்களுக்கு கொடுக்கப்பட்ட போதனைகளில் ஒரு சிறிய விஷயத்திற்குக் கீழ்ப்படியாத காரணத்தினால், ஆரோனின் மூத்த குமாரர்களுக்கு தண்டனையாக மரணம் வந்தது. பயமும், திகிலும் அடைந்த ஆரோனும் அவருடைய மற்ற குமாரர்களும், தாங்கள் தெய்வீக கட்டளைக்கு ஏதோ ஒன்றில் மீறி, மரித்து போகாதபடிக்கு, ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியங்களை தொடராமல், விட்டுச் சென்றிருக்கலாம்.

ஆனால், தேவனுடைய நேரடி பிரதிநிதியாகவும், மத்தியஸ்தராகவும் காணப்பட்ட மோசே, அவர்கள் இப்படி செய்யக்கூடாது, அதாவது, அவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தை விட்டுவிடக்கூடாது என்று கட்டளையிட்டார். மேலும் அவர்கள் மீது பரிசுத்தமான அபிஷேகத்தைலம் ஊற்றப்பட்டதையும், அவர்கள் ஊழியத்தை நிறுத்தினால் ஆபத்து இருப்பதையும், அவர்கள் தெய்வீக கட்டுப்பாடுகளுக்கு கவனமாக செவிசாய்த்து காணப்படும் வரையிலும் அவர்கள் பாதுகாப்பாய் இருப்பார்கள் என்பதையும் மோசே சுட்டிக்காட்டினார். மரித்து போனவர்களின் மரணம், தெய்வீகத் தீர்ப்பு என்பதினாலும், இவர்களுக்காக புலம்புவது என்பது, இவர்களை நீதியோடு நியாயந்தீர்த்த அவர்களின் மாபெரும் இராஜாவிற்கு எதிராக கலகம் செய்துவிடுவதாகிவிடும் என்பதினாலும், ஆரோன் மற்றும் அவர் குமாரர்கள், மரித்துப்போன குமாரர்களுக்காக புலம்பக்கூடாது என்று மோசே கட்டளையிட்டார். இவ்விதமாக, மதரீதியான பணிவிடைகளின் ஆரம்பத்திலேயே, இஸ்ரயேல் ஜனங்கள், கர்த்தரை பயபக்தியுடன் அணுக வேண்டும் என்றும், பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே மேலானது என்றும் பாடம் புகட்டப்பட்டார்கள்.

## "நீதியும், இரக்கமும் சந்திக்கும் போது"

இதே போன்ற பாடம், சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டதை நாம் நினைவு கூறுகின்றோம். அதாவது, அனனியா மற்றும் சப்பீராள், கர்த்தரிடத்தில் பொய் பேசி, மரணம் அடைந்த சம்பவமாகும். இந்த இரண்டு தீர்ப்புகளுமே கடுமையானதாகக் காணப்படுகின்றது. இரண்டு தருணங்களிலும் இரக்கம் இல்லாததுபோல் காணப்படுகின்றது. ஆரோனின் குமாரர்களிடத்தில், தேவன் ஏன் இரக்கம் கொண்டு, அவர்களை கடிந்துகொண்டு, மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கவில்லை என்று நாம் கேள்வி கேட்கலாம். ஆனால் மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்படுவதன் மூலம் வரும் படிப்பினையைக் காட்டிலும், இந்த தீர்ப்பின் மூலம் வந்த படிப்பினையே அதிகம் தாக்கம் கொடுக்கக் கூடியதாக விளங்கினது என்பதே நமது பதிலாகும். ஆனாலும் இரண்டு பேரின் விஷயத்திலும், மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்படும். அனனியா மற்றும் சபீராள் விஷயத்தில், ஒருவேளை அவர்கள் முழுமையான அர்ப்பணிப்பு இருதயத்தோடு காணப்பட்டால் அல்லது சத்தியத்தைப்பற்றின முழுமையான அறிவு காணப்பட்டால் அவர்கள் பண்ணின காரியத்திற்கு அவர்கள் பொறுப்பாளிகளாகவும் காணப்பட்டிருப்பார்கள், மேலும் இரண்டாம் மரணத்திற்கும் பாத்திரமாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் நல்ல நோக்கம் கொண்டிருந்தாலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படவில்லை என்று நாம் அனுமானிக்கின்றோம். கர்த்தர் அவர்களுக்கு விசேஷமான பாதிப்பை ஏற்படுத்தாமல், அந்த காலக்கட்டத்திலும், என்றென்றும் உள்ள அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் நன்மைக்காக, அவர்களை மாதிரியாக பயன்படுத்தினார். அதாவது, கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்றும், அவருடைய பார்வைக்கு எதுவும் மறைவாகக் காணப்படுவதில்லை என்றும், அவரை வஞ்சிக்க முயற்சிப்பது கூடாத காரியம் என்ற ஒரு படிப்பினைகளை அவர்கள் மூலம் கர்த்தர் விவரித்துக் காட்டினார்.

ஆரோனுடைய இரண்டு குமாரர்களும் கூட இரண்டாம் மரணம் அடைந்து விட்டார்கள் என்ற கருத்து நமக்கில்லை. அவர்கள் நிழலான ஆசாரியத்துவத்திற்கென்று, நிழலாய் அபிஷேகிக்கப்பட்டுள்ளதால், அவர்களுடைய மரணமும் நிழல் என்றும், அவர்களது மரணமானது, தெய்வீக வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படியாத காரணத்தினால், ஆசாரியத்துவத்திலிருந்து மாய்ந்து போகும், நிஜமான ஆசாரியர்களில் உள்ள சிலருக்கு நிழலாய் இருக்கின்றது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாதாப் மற்றும் அபியூ விஷயத்தில் அவர்கள் உயிர்த்தெழுதலின் விடியலில், உயிர்த்தெழுந்து வரும் மாபெரும் உலகத்தின் மனுக்குலத்தோடு காணப்படுவார்கள் என்று நாம் அனுமானிக்கின்றோம். கீழ்ப்படியாமையின் நிமித்தம் இவர்கள் தற்கால ஜீவியத்தை இழந்து போனார்கள். மேலும் தேவன் அந்த சம்பவத்தை பயன்படுத்தி, அக்காலகட்டத்தில் வாழ்ந்த ஜனங்களுக்குப் படிப்பினைகளைக் கொடுத்தார். இந்த படிப்பினைகள், பரிசுத்தமான விஷயங்களை கையாளும் விஷயங்களில் ஏற்படும் அலட்சியங்களைக் தவிர்த்தது. மேலும் அவர்களுடைய யுகத்திற்குரிய நிழல்கள், இராஜரீக ஆசாரியக் கூட்டத்தினராகிய நமக்கு நிழலாக விளங்குகின்றது. இந்த இரண்டு ஆசாரியர்களும், நம் மத்தியில் காணப்படும் இரண்டு வகுப்பாருக்கு அடையாளமாக இருக்கின்றார்கள்.

## "நாதாப் மற்றும் அபியூ அடையாளப்படுத்தும் இரண்டு வகுப்பார்"

ஆசாரியர்களும், ஆசரிப்புக்கூடாரமும், அதனுடைய அனைத்து பணிகளும், மேலான காரியங்களுக்குரிய நிழலாக இருக்கிறபடியால், ஆரோனுடைய இரண்டு குமாரர்களின் மரணமும் கூட நிழலாய் இருக்கின்றது. இவர்கள் நிஜமான ஆசாரிய கூட்டத்தில், தங்கள் நிலையைத் தவற விடுகின்றவர்களுக்கு, அதாவது தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தாதவர்களுக்கு நிழலாய் இருக்கின்றார்கள். அதாவது மாபெரும் பிரதான ஆசாரியனின் சரீர அங்கங்களாக அபிஷேகம் பண்ணப்பட்டு, பின்னர் தெய்வீக வழிநடத்துதல்களைப் பின்பற்ற தவறுவதின் காரணமாக தங்கள் மகிமையான நிலையை இழந்து போகிறவர்களுக்கு இவர்கள் நிழலாய்

இருக்கின்றார்கள். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளவர்கள் மத்தியில் மூன்று பிரிவினர் இருக்கின்றனர் என்று வேத வாக்கியங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

(1) உண்மையுள்ளவர்களாகிய முற்றிலும் ஜெயம் கொண்டவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவும், ஆயிரவருட யுகத்தின் இராஜரீக ஆசாரியக் கூட்டத்தின் அங்கங்களாகவும் காணப்படுவார்கள்.

(2) எந்த மனுஷனும் அறியாத எண்ணிக்கை உள்ள திரள் கூட்டத்தினர், இவர்கள் சிறுமந்தையாவதிலிருந்து தவறிப்போனவர்கள் ஆவர். இவர்கள் ஆசாரியப் பணியிலிருந்து தள்ளப்பட்டவர்கள் ஆவர். என்றாலும், இவர்கள் கர்த்தரை மறுதலிக்கும் வகுப்பாரல்ல. இவர்கள் மகிமையில் உள்ள கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்களாக, அதாவது நிஜமான லேவியர்களாகக் காணப்படுகின்றார்கள்.

(3) அர்ப்பணிக்கப்பட்டவர்களில் மற்றொரு வகுப்பார், கர்த்தருடைய கிருபையை உணர்வதில் தவறியும், பயன்படுத்துவதில் சரியாகக் காணப்படாமலும், பரீட்சைகளில் தோற்றும், நித்திய ஜீவனைப் பெற தகுதியற்றவர்களாகி, இரண்டாம் மரணமாகிய முழுமையான அழிவை அடைவதற்கு ஏதுவாக, ஜீவனுள்ள தேவனுடைய கரத்திற்குள் விழுவார்கள்.

ஆரோனுடைய புத்திரர்களில் எத்தனை பேர் இந்த மூன்று வகுப்பாரை அடையாளப்படுத்துவார்கள் என்று விகிதம் பார்க்க முற்பட்டால், அதாவது, அவர்களில் ஒருவன் சிறுமந்தையை அடையாளப்படுத்துகின்றார் எனவும், அவர்களில் இருவர் திரள்கூட்டத்தை அடையாளப்படுத்துகின்றார் எனவும், அவர்களில் ஒருவர் இரண்டாம் மரணத்திற்குப் போகிறவர்களை அடையாளப்படுத்துகின்றார் என்றும் விகிதம் போட முற்படுவது சரியாக இருக்காது. எத்தனை பேர் இரண்டாம் மரணத்திற்குள் போவார்கள் என்றோ, எத்தனை பேர் ஆசாரியத்துவத்திலிருந்து தள்ளப்பட்டு திரள்கூட்டத்தினர்களாகப் போவார்கள் என்றோ விகிதம் காட்டுவதற்கு, இந்த நிழலின் விளக்கம் கொடுக்கப்படவில்லை. இன்னுமாக மரித்த இரண்டு ஆசாரியர்களும், இரண்டாம் மரணம் செல்லும் வகுப்பாருக்கு அடையாளமாக இருக்கின்றார்கள் என்று கருதினால், அர்ப்பணிக்கப்பட்டவர்களில் ஐந்தில் இரண்டு பங்கு, இரண்டாம் மரணத்தில் போய்விடுவார்கள் என்றாகிவிடும். மேலும் நிழலில், திரள் கூட்டத்தை சுட்டிக்காட்டவும் முடியாது. அதாவது, அர்ப்பணிக்கப்பட்டு, ஆசாரியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆனாலும் இறுதியில் உண்மையற்றவர்களாகவும், இராஜ்யத்தில் உள்ள இராஜரீக ஆசாரியக்கூட்டத்தின் அங்கமாக தவறுகிறவர்களாகவும் காணப்படும் திரள்கூட்டத்தைச் சுட்டிக் காட்ட முடியாது.

இந்த காரணங்களினாலேயே, மகிமையில் உள்ள மாபெரும் பிரதான ஆசாரியனின், சரீர அங்கங்களாகவும், தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறும் இரண்டு வகுப்பாரையும், இந்த இரண்டு ஆசாரியர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள் என்று நாம் புரிந்திருக்கின்றோம். ஆசாரியத்துவ ஊழியத்திலிருந்து தள்ளப்பட்டு, லேவியர்களாக, திரள் கூட்டத்தாரின் அங்கங்களாக காணப்படுபவர்களுக்கு, நாதாப் அடையாளமாக இருக்கின்றார் என்று நாம் புரிந்திருக்கின்றோம். ஒரு ஆசாரியன் ஒரு வகுப்பாரையும், மற்ற ஆசாரியன் மற்ற வகுப்பாரையும் அடையாளப்படுத்துகின்றார்கள் என்று நாம் பார்க்கும்போது, அவர்களின் விகிதம் குறித்து பார்க்கப்படாமல், மாறாக இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கமாகும்படிக்கு, பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் அபிஷேகிக்கப்பட்ட பின்னர், தேவனுடைய கிருபையை இழந்து போகும் இரண்டு வகுப்பார் காணப்படுவார்கள் என்ற உண்மை மாத்திரமே பார்க்கப்படுகின்றது.

இவ்வகுப்பாரின் விகிதம் கொடுக்கப்படாததால், இந்த ஆசாரியர்களில் ஒவ்வொருவரும், இவ்வகுப்பாரின் ஒவ்வொருவரையும் அடையாளப்படுத்துகின்றார்கள் என்று எடுத்துக்கொள்வதில் எவ்வித முரண்பாடும் இல்லையென நாம் கருதுகின்றோம். இந்த ஆசாரியர்கள் தங்கள் ஆசீர்வாதங்களையும், வாய்ப்புகளையும் சரியான விதத்தில் பயன்படுத்த தவறினவர்களை

உள்ளடக்கினவர்களாகக் காணப்படுகின்றார்கள். மரித்துப்போன இந்த இரண்டு குமாரர்களின் பெயர்களுடைய அர்த்தம், மேற்கூறிய கருத்துகளுக்கு இசைவாக உள்ளது. நாதாப் என்ற பெயரின் அர்த்தம் சுயத்தின்படி செய்வதாகும். அதாவது, சுய சித்தத்தின் காரணமாக, தலையைப் பற்றிக்கொள்ளாமல், இரண்டாம் மரணத்திற்கு கடந்து செல்லும் வகுப்பாரை நமக்கு நினைவுபடுத்துகின்றது. திரள்கூட்டத்திற்கு அடையாளமாக இருக்கின்றார் என நாம் நம்பும் அபியூ எனும் பெயரின் அர்த்தம், தேவனுடைய குமாரனாகும். இதுவும் கூட மிகவும் பொருத்தமாக உள்ளது. சிறுமந்தையினர் போன்று திரள்கூட்டத்தினரும், பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, தெய்வீக தளத்தில் இல்லை என்றாலும், ஆவிக்குரிய தளத்தில், தேவனுடைய புத்திரர்களாக பிறப்பார்கள். திரள்கூட்டத்தினரும், சிறுமந்தையினரும், கிறிஸ்துவின் புத்திரர்களாகக் கருதப்படும் மீதமுள்ள மனுக்குலத்திடமிருந்து இவ்விதமாக வேறு பிரிக்கப்படுகின்றனர். இந்த மனுக்குலமானது, கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டு, திரும்பக்கொடுத்தலின் மூலம் அவரிடமிருந்து ஜீவன் பெற்றுக் கொள்வார்கள்.

## "அந்நிய அக்கினி செலுத்தக் கட்டளையிடப்படவில்லை"

மரித்துப்போன, ஆரோனின் குமாரர்கள் புரிந்த குற்றம் குறிப்பிட்டு கூறப்படவில்லை. அவர்கள் வேறு ஏதாவது தூபவர்க்கம் எடுத்துச் சென்றார்களா அல்லது பலிபீடத்திலிருந்து அக்கினி எடுக்காமல் வந்தார்களா அல்லது தூபவர்கத்தை தவறான இடத்தில் செலுத்தினார்களா என்று அவர்களுடைய மீறுதல் நமக்கு தெரியவில்லை. மேலும் பரிசுத்த ஸ்தலத்தில் செலுத்துவதற்குப் பதிலாக, பிரகாரத்தில் செலுத்தினார்களா அல்லது சரியான தூபவர்க்கத்தை சரியான அக்கினியோடு சரியான இடத்தில் ஆனால் தவறான நேரத்தில் செலுத்தினார்களா அல்லது இரண்டு ஆசாரியர்களும் ஒரு விஷயத்தை செய்தார்களா என்று நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை.

பாவநிவாரண நாள் அன்று, பாவநிவாரண இரத்தத்தோடு பிரதான ஆசாரியன் மாத்திரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் செல்ல வேண்டியிருக்க, இந்த இரண்டு ஆசாரியர்களும், மகா பரிசுத்த ஸ்தலத்தில் சென்றிருக்க வேண்டும் என்று சிலர் அனுமானிக்கின்றனர். மீதமிருந்த ஆசாரியர்களுக்கு, அவர்கள் அதிகம் கவனத்தோடும், கர்த்தர் பேரில் மிகுந்த பயப்பக்தியும், அவருடைய ஊழியக்காரனாய் இருப்பதற்குரிய விசேஷமான கட்டளைகளையும், அவருடைய சமுகத்தில் வருவதையும், ஜனங்களுக்கான அவருடைய ஊழியக்காராக இருப்பதையும் குறித்து பாடங்கள் இச்சம்பவத்தின் மூலம் கிடைத்தது. நிஜமான ஆசாரியத்துவத்தில் உள்ளவர்களாகிய நமக்கும் இதேவிதமான பாடங்களே உள்ளன. அதாவது, பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே மேலானது என்றும், அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நாம் செலுத்தும் பலிகள் தெய்வீக சித்தத்திற்கு இசைவாக இருக்க வேண்டும் என்றும், நம் சார்பில் ஏற்படும் எந்த தவறுகளும், இராஜரீக ஆசாரியத்துவத்தில் உள்ள நமது அங்கத்துவத்தை இழக்கச் செய்திடும் என்றதுமான படிப்பினைகளை நமக்கு கொடுக்கின்றது.

திரள்கூட்டத்தின் அங்கங்கள் செய்யும் தவறுகளுக்கும், அர்ப்பணிக்கப்பட்டும், பின்னர் இரண்டாம் மரணத்திற்குள் கடந்து போகுபவர்களின் தவறுகளுக்கும் இடையே வித்தியாசங்களும், ஒற்றுமைகளும் இருக்கின்றது. தெய்வீக ஒழுங்குகளின் நிபந்தனைகளுக்குப் போதுமான கனம் கொடுக்க தவறுகிற விஷயத்தில், இவர்களுடைய தவறு ஒத்து போகின்றது. இந்த இரண்டு வகுப்பாரும் கர்த்தர் கூறும் தூபவர்க்கமாகிய சுயத்தைப் பலி செலுத்தல், அவருக்கு துதி செலுத்தல் ஆகியவைகளை செலுத்த தவறுகின்றனர். அதாவது தேவன் பிரியப்படும் பலிகளைச் செலுத்த தவறுகின்றனர் (எபிரேயர்.13:15, 16). திரள்கூட்டத்தாருக்கும் இரண்டாம் மரணம் செல்லும் வகுப்பாருக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவெனில், இரண்டாம் மரணம் செல்லும் வகுப்பார் கிறிஸ்துவை மறுதலித்து, தங்கள் பொருட்டாக செலுத்தப்பட்ட அவருடைய பலியின் புண்ணியத்தையும் மறுதலித்து, அவருடைய இரக்கத்தை சாதாரணமாக எண்ணி, தங்களிடத்தில் வந்த தயவை/கிருபையை வெறுத்தவர்கள் ஆவர். மற்ற வகுப்பார், இரண்டாம் மரணத்திலிருந்து தப்பி,

திரள்கூட்டம் ஆகுவதற்கான காரணம் அவர்கள் சரியான தூபவர்க்கத்தை கர்த்தருக்குச் செலுத்தினதாக இராமல், அவர்கள் தங்கள் பொருட்டாக செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலியின் மீதுள்ள விசுவாசத்தின் அஸ்திபாரத்தின் மீதுள்ள பிடியை காத்துக்கொள்வதினாலும், அதை மறுதலிக்காமலும், தள்ளிவிடாமலும் இருப்பதினாலேயே ஆகும்.

## "எல்லா ஜாதிகளையும் அவள் குடிக்க வைத்தாள்"

நாதாப் மற்றும் அபியூவின் மரணத்தை தொடர்ந்து, ஆரோனும், அவனுடைய குமாரர்களும், திராட்சரசம் குடிக்கக்கூடாது என்று கட்டளையிடப்படும் விஷயம், மரித்துப்போன அந்த இரண்டு குமாரர்களும் அதேவிதத்தில் போதையில் காணப்பட்டுள்ளனர் அல்லது மதுபானத்தினால் மயக்கம் கொண்டவர்களாக, தூபவர்க்கம் செலுத்தும் விஷயத்திற்கடுத்த கர்த்தருடைய கட்டளைகளில் குழம்பி போவதற்கு ஏதுவாக தன்நிலையை இழந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்று அனுமானிப்பதற்கு வழிவகுக்கின்றது. வெறியூட்டும் விஷயங்களைத் தவிர்ப்பது என்பது, பரிசுத்தத்திற்கும், பொதுவானதற்கும் வித்தியாசம் காண்பதாகும். அதாவது, சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் இடையே வித்தியாசம் காண்பதாகும்.

இந்த கட்டளையில் நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்ட மதுவெறி எதை அர்த்தப்படுத்துகிறதாக இருந்தாலும், இதை நிஜத்தின் விஷயத்தில் நாம் பொருத்திப் பார்க்கும்போது, நிஜமான ஆசாரியர்களை பாதிக்கும் பல்வேறுவிதமான வெறியூட்டும் விஷயங்களும் இருக்கின்றது என நாம் பார்க்கின்றோம். "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபானவெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்திருங்கள்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் இராஜரீக ஆசாரியத்துவத்தில் உள்ள யாவருக்கும் பொருந்தும் என நாம் ஒத்துக்கொள்கின்றோம். (எபேசியர் 5:18) என்றாலும் இவ்விஷயத்தை இராஜரீக ஆசாரிய கூட்டத்தார்களிடத்தில் நாம் சொல்லர்த்தமாகப் பொருத்திப் பார்த்து நிஜமான ஆசரிப்புக் கூடாரத்துடனும், அதன் ஊழியத்துடனும் தொடர்புடைய யாவரும் திராட்சரசம் பருகுவது, தெய்வீக பிரமாணத்தை மீறுவதாகும் என்று நாம் சொல்லக்கூடாது. காரணம், நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியன் தாமே திராட்சரசம் பருகியுள்ளார். திராட்சரசத்தையோ அல்லது மதுவையோ பருகக்கூடாது என்ற கட்டளைக்குரிய நிஜம், வெளிப்படுத்தலில் அறிவிக்கப்பட்ட விஷயங்களில் கண்டுபிடிக்கின்றோம். மகா பாபிலோன் சகல ஜாதிகளையும் தனது தவறான உபதேசங்கள் மற்றும் ஆவிக்குரிய அரசியல் தொடர்பான குழப்பங்கள்ஆகிய திராட்சரசத்தை குடிக்கச் செய்துள்ளாள்.

திரள்கூட்டத்தினர் ஏற்றுக்கொள்ளத்தக்கதான பலிகளை செலுத்துவதில் தவறும் விஷயத்தில் உபதேசம் பற்றின குழப்பம் கூட ஒரு குறிப்பிட்ட அளவில் காரணமாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. அப்போஸ்தலர்கள் விவரிக்கும் பேய்களின் உபதேசமாகிய, இருண்ட யுகத்தின் தவறான உபதேசங்கள் காரணமாக உருவான மனதின் குழப்பங்களை நாம் வெளியேற்றும் போது, நம்முடைய சிந்தைகள் தெளிவடைகையில் எவ்விதமான பலிகள் அல்லது தூபவர்க்கங்கள் நமது கர்த்தராகிய தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும், பிரியமானதாகவும் இருக்கும் என நாம் தெளிவாக/சரியாக புரிந்து கொள்ள முடியும். கடந்துபோன காலத்தின் தப்பறைகளினால் மயக்கம் அடைந்துள்ள நம்மில் அநேகர் கர்த்தர் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அந்நிய தூபவர்க்கத்தை செலுத்துகின்றாம் என்பதில் ஐயமில்லை. இப்படியாக நாம் தொடர்வோமானால், நாமும் மகிமையான ஆசாரியத்துவத்தின் அங்கமாக மாற தவறி போகிறவர்களாக இருப்போம். நாம் தெளிவடைவதாலும் , அவருடைய வார்த்தையின் போஷாக்கினால் தெளிந்த புத்தியுள்ள ஆவி நமக்குள் வருவதினாலும், சகல பரிசுத்தவான்களோடு சேர்ந்து நாமும் அவருடைய அவருடைய அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை அதிகமதிகமாக புரிந்து கொள்ள முடிகிறதினாலும் இவ்விதமாக நன்மையானவைகளையும், தேவனுடைய பரிபூரணமான சித்தத்தையும், அவர் அங்கீகரிக்கும் விஷயங்களையும் அறிந்து கொள்வதிலும் இதற்கு இசைவாக நம்முடைய பலிகளை செலுத்துவதிலும்

நாளுக்கு நாள் நாம் தகுதியடைவதினாலும், இருதய பூர்வமான நன்றிகளை கர்த்தருக்கு செலுத்துகின்றோம்.

## "திராட்சரசத்தினால் வஞ்சிக்கப்படுபவர்கள் ஞானவான்கள் அல்ல"

சொல்லர்த்தமான திராட்சரசத்திடமிருந்து வருவதைக் காட்டிலும் அடையாளமான திராட்சரசத்திடமிருந்து இராஜரீக ஆசாரியர்களுக்கு அதிக ஆபத்து வரவிருப்பதினால், இதற்கு எதிராக நாம் நம்மை அதிகம் காத்துக்கொள்ள வேண்டும். என்றாலும், சொல்லர்த்தமான திராட்சரசத்தினால் வரும் அபாயத்தை நினைப்பூட்டுவதும் பாதுகாப்பானதேயாகும். இந்த நிழலின் மாதிரி, வாலிபர்களுக்கு விசேஷமாக உரியது என்றும் நாம் காண்கின்றோம். எந்த கிறிஸ்தவனுக்கு தேவனுடைய வார்த்தைகள் பற்றின அறிவு அதிகம் காணப்படுகின்றதோ, அந்த அளவுக்கு நன்மை அல்லது தீமையின் மீதான அவனுடைய செல்வாக்கும் அதிகமாகக் காணப்படும். ஆகையால் தான், "நீங்கள் எப்படிபட்டவர்கள்?" என்று அப்போஸ்தலரின் வார்த்தையில் உள்ள தாக்கம் காணப்படுகின்றது. (2 பேதுரு 3:11) இதை குறித்த சில எழுத்தாளர்களின் வரிகள்:-

கல்லூரி உடற்பயிற்சியாளராகிய பேராசிரியர் மால்கஸ் டோட்ஸ் அவர்கள் இப்படியாக கூறுகின்றார்:- விளையாட்டுகளுக்காக பயிற்சி செய்கிறவர்கள் பரிசுத்தவானாகிய பவுலின் விதிமுறைப்படி செய்கிறார்கள். அதாவது, "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்." (1 கொரிந்தியர் 9:25) போட்டியின் போது மாத்திரமாக அல்லாமல், அதற்கு முன்பு எடுக்கும் நீண்ட பயிற்சியின் காலத்திலும் இச்சையடக்கத்துடன் காணப்பட வேண்டும். பயிற்சியில் இருப்பவர் மதுவோ, புகை பிடித்தலோ தொடக்கூடாது. தன்னை திருப்திப்படுத்தும் விஷயங்களையும் அவன் விட்டுவிட வேண்டும். பயிற்சியாளர் அளிக்கும் ஒவ்வொரு நிபந்தனைகளையும் ஒருமுறை கூட மீற மாட்டான். காரணம், தன்னோடு போட்டியிடுகிறவன் அந்த ஒரு கணம் கூட வீணாக்காமல் பலம் அடைந்து கொண்டிருப்பான். மேலும், தான் மீறினால் தனக்கு இழப்பாகவும் இருக்கும் என்பதையும் அறிந்திருப்பான். அவன் தன்னுடைய சிறு கஷ்டங்களில், அயர்வுகளில் அடிப்படை தேவைகள் இழந்த சூழ்நிலைகளில் பெருமை கொண்டு தன்னுடைய வெற்றிக்கு சிறிதளவாகக்கூட தடையாகக் காணப்படும் எதையும் விட்டுவிடுவதில் பெருமை கொள்கிறவனாக இருப்பான்."

கோலிமேன் என்பவர் இப்படியாக கூறுகின்றார்:- "நியூயார்க் என்னும் மாநிலத்தில் அநேக பெருந்தன்மை மிக்க நபர்கள், விலைக்கு வைக்கப்பட்ட சில இடங்களின் மதிப்பை இடுவதற்கு ஒன்று கூடினார்கள். அவர்கள் அனைவரும் நிலத்தின் மதிப்பை ஏகமனதாய் நிர்ணயித்தார்கள். ஆனால் விற்பனையின் நாள் வந்தபோது, நிலத்தின் உரிமைக்காரர் தந்திரமாக அவர்களை மது பருக வைத்தான். மது அருந்தியதில் ஒருவன் தன் நிலையில் காணப்படும் ஒரு மனிதன் அந்த நிலத்திற்குக் கொடுக்கும் பணத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு கொடுத்துவிட்டார். ஓர் இச்சையடக்கமுள்ள நபர் ஒருவர் தன்னிடத்தில் உள்ள மரத்தை விற்க முற்பட்டபோது, அக்காலக் கட்டத்தில் நிலவிய பழக்கமாகிய அதாவது, வாங்க வருபவர்களுக்கு மது குடிக்கக் கொடுத்து காரியம் நடத்தும் முறையை செய்ய மாட்டேன் என்று முடிவெடுத்தார். இதற்கு ஏல விற்பனையாளர் கூறின வார்த்தைகள் என்னவெனில், நீங்கள் அதிகம் பணம் இழக்கப் போகிறீர்களே என்று நான் உங்கள் மீது அனுதாபம் கொள்கின்றேன். மேலும் மதுபானம் என்ன செய்யும் என்று எனக்குத் தெரியும். வாங்க வருபவர்கள், மது அருந்தின பின்பு, அவர்களுடைய பார்வைக்கு மரம் அதிகம் பருமனாக தோன்றும் என்றும் கூறினார். ஒருவர் இப்படியாக கூறுகின்றார்:- நான் இப்படி கையாளுவதன்மூலம் நாம் வாங்கின மதுவுக்கு செலவழிந்ததைக் காட்டிலும் பத்து மடங்குக்கு மேலாக எனக்கு பணம் கிடைத்துள்ளது." கள்வர்கள், மொத்த வியாபாரிகள், சூதாட்டம் பண்ணுபவர்கள், குதிரை பந்தயம் வைப்பவர்கள் மற்றும் வாணிக பிரயாணிகள் இதே நோக்கத்திற்காக மதுவை பயன்படுத்துவதுண்டு."

ஸ்காச் பிரசங்கியாளராகிய பிரபலமிக்க டாக்டர் அர்நாட் அவர்கள் கூறினதாவது:- "நான் என்னை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நான் என் சுயாதீனத்தை இழக்க வேண்டும் என்ற கடமை எனக்கு இல்லை" என்று அநேக ஆண்களும், ஸ்திரீகளும் பெருமையாக பேசுவதுண்டு. இத்தகையவர்களுக்கு டாக்டர் அர்நாட் அவர்களின் பதில் என்னவெனில்:- "நீங்கள் கடமை படவில்லை என்பது உண்மைதான். ஆனாலும், நாம் கடக்க வேண்டிய ஒரு ஆறு உள்ளது. அது அகலமும், ஆழமும், சீற்றமுமாகவும் உள்ளது. ஆதில் விழுகிறவன் எவனும் நிச்சயமாக மூழ்கிப் போவான். அதனை கடந்து செல்வதற்கு ஒரு மரத்தினால் ஆன குறுகிய மரப்பாலம் காணப்படுகின்றது. யார் ஒருவன் வளையக்கூடிய காலகளையும், சீரான மூளையையும், நரம்பையும் கொண்டிருக்கிறானோ அவனால் பாதுகாப்பாக அதில் கடந்துபோகக்கூடும். கண்ணுக்கு எட்டிய தொலைவில் ஒரு பலமான, அகலமான பாலம் காணப்படுகின்றது. அதன் அஸ்திபாரம் உறுதியான பாறையினாலும், அதன் வழி விரிவாயும் காணப்படுகின்றது. அனைவராலும் இந்த பாலத்தில் பாதுகாப்பாய் கடந்து செல்ல முடியும். அதாவது, வயதானவர்களும், பலவீனர்களும், வாலிபர்களும், பலவான்களும், குட்டையானவர்களும் கடந்து செல்ல முடியும். இதில் எவ்வித ஆபத்தும் இருப்பதில்லை. இப்பொழுது நான் பலமான பாலத்தில் போக கடமைபடவில்லை. அந்த ஒற்றை மரப்பாலத்தின் மேல் போக முடியாதவர்கள் அதில் செல்லட்டும் என்று கூறு. மெய்யாகவே, மெய்யாகவே நீங்கள் கடமைப்படவில்லை தான், ஆனாலும், நாம் பாதுகாப்பாய் ஒற்றை மரப்பாலத்தில் கடந்து போக முடிந்தாலும், நம்மை பின்பற்ற முற்படும் அநேகர் உண்மையில் மாய்ந்துவிடுவார்கள். ஆகவே, பலமான பாலத்தில் செல்வதையே நாம் சிறந்தது என உணர்வோம். இடுக்கமான ஒற்றையடி பாலத்தில் சீறுகின்ற தண்ணீர்கள் கீழே ஓடும் சூழ்நிலையில், அதில் நடப்பது ஆபத்துதான். ஆனாலும், இது மதுபானத்தில் சிக்கிக் கொள்வதோடு ஒப்பிடும்போது, பாதுகாப்பானதேயாகும். ஆமென்!

---

# தேவனோடே போர்ப்புரிதல்

ஆலோசனை சங்கத்தாரிலுள்ள தனது யூத நண்பர்கள் ஆதிகால சீஷர்களைக் கடினமாய்க் கையாண்டிட முற்பட்டபோது, அவர்களுக்குக் கமாலியேல் கூறின அறிவுரையில், இவரது ஞானம் விளங்குகின்றது. இவரது ஞானமுள்ள வார்த்தைகள் பின்வருமாறு: "இஸ்ரயேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்" (அப்போஸ்தலர் 5:35-39). அந்தோ பரிதாபம்! கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களும் மற்றும் பரிசுத்த ஆவியில் கொஞ்சம் பங்கடைந்துள்ளவர்களும் மற்றும் ஓரளவுக்குக் கிறிஸ்துவின் பள்ளியில் போதிக்கப்பட்டிருப்பவர்களும் மற்றும் ஓரளவுக்குப் பரத்திலிருந்து வரும் ஞானத்தினைப் பெற்றிருப்பவர்களுமானவர்களில் மிக அதிகமான பேர்கள் - அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்டவர்களில் மிக அதிகமான பேர்கள் மேலே மேற்கோளிடப்பட்டுள்ளதான கமாலியேலின் வார்த்தைகளில் வெளிப்பட்டுள்ளதான ஞானத்தைப் பார்க்கிலும் குறைவான ஞானத்தை உடையவர்களாய் இருக்கின்றனர்.

சில ஜனங்கள் சுபாவப்படி எதிர்த்துப் போராடும் மனப்பான்மையை மிகவும் குறைவாய்க் கொண்டிருப்பதினால், இவர்கள் குணலட்சணத்தினுடைய பலத்தின் விஷயத்தில் குறைவு உடையவர்களாகவும், எளிதில் வசப்படுகிறவர்களாகவும், "பலமில்லாதவர்களாகவும்" காணப்படுகின்றனர்; இவர்கள் ஜெயங்கொள்வதற்கான தன்மைகளில் குறைவுபட்டவர்களாகவும், சத்தியம் மற்றும் நீதிக்கு ஆதரவாய்த் தாங்கள் நிற்கத்தக்கதாகப் பரத்திலிருந்து வரும் கிருபையையும், உதவியையும் தொடர்ந்து நாடவேண்டியதன் அவசியம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இப்படிச் செய்யவில்லை என்றால் இவர்கள் முற்றிலும் ஜெயங்கொள்பவர்களாகுவதற்கு நிச்சயமாய் எதிர்ப்பார்த்திட முடியாது. குணலட்சணத்தையும், உறுதியையும், பலத்தையும், அதோடுகூடச் சாந்தத்தையும், நிதானத்தையும், பொறுமையையும், அன்பையும் கொண்டிருப்பவர்களை, தம்முடைய சிறு மந்தைக்காக கர்த்தர் நாடித்தேடுகின்றார். எனினும் கர்த்தர் நாடுகின்றதான இத்தகைய இன்பகரமான கலவை எங்குமே காணப்படுவதில்லை. அவரிடத்திற்கு வருபவர்கள் யாவரும், தாங்கள் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக சிலவிதங்களில் நெறிப்படுத்தப்படுவது/மாற்றப்படுவது அவசியமாய் இருக்கின்றது. ஆகையால் வலுவான குணலட்சணங்களை உடைய சிலர் இயல்பாகவே மிகவும் பலமாய் எதிர்த்துப் போராடும் தன்மையினை உடையவர்களாய் இருப்பதினால், இது இவர்களைத் தொடர்ந்து பிரச்சனைக்குள்ளாக்குகின்றது மற்றும் இது கட்டுப்படுத்தப்படுவதும், வரைமுறைக்குள் வைக்கப்படுவதும் அவசியமாகுகின்றது.

இரண்டு வகுப்பாரில், யாருக்கு மற்றவரைக்காட்டிலும் அநுகூலம் உள்ளது என்று சொல்வது சிரமமே. ஒரு வகுப்பார் கட்டுப்படுத்திட வேண்டியதை, மற்ற வகுப்பார் வளர்த்திக்கொள்ள வேண்டும் மற்றும் அநேகமாக அனைத்துக் காரியங்களையும் கருத்தில் எடுத்துப் பார்க்கையில், ஓட்டத்தில் ஜெயம் அடையும் விஷயத்தில் வாய்ப்புகள் இருவகுப்பாருக்குமே சமமாகவே உள்ளது. எனினும் அதிகமாகப் போராடும் மனப்பான்மை உடையவர்கள், ஆவேசமானவர்கள், பலவந்தம்பண்ணுகிறவர்கள் பொதுவாகவே இத்தன்மைகளின் நிமித்தம் சபையில் பெரிதும் கவனத்திற்குள்ளாவார்கள் மற்றும் ஒருவரையொருவர் அன்புகூருகின்றவர்கள் மத்தியில் இவர்களுக்குச் சத்துருக்கள் உண்டாவதில்லை என்றாலும், இவர்கள் பொதுவாகவே மிகுதியான எதிர்ப்பினை அடைபவர்களாய் இருப்பார்கள். மிகவும் வளைந்துகொடுப்பவர்களும் மற்றும்

பணிவுடையவர்களும் - தங்களைக்குறித்துத் தாங்களே நல்லெண்ணம் கொண்டிருப்பதற்கும் மற்றும் இராஜ்யத்திற்கான இவர்களது தகுதிகள் தொடர்புடைய விஷயத்தில் மற்றவர்களாலும் மிகவும் அன்போடு/நல்லெண்ணத்தோடு கருதப்படுவதற்கும் வாய்ப்புள்ளது. வலுவானவர்களும், பலவந்தமானவர்களும் மற்றவர்களினால் மிகவும் கடுமையாகக் கண்டிக்கப்படுவதற்கும் மற்றும் இதுகுறித்து, அவர்கள் ஒன்றுமே தெரியாதவர்களாகவும் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஓ! நாம் அனைவரும் தெளிந்த புத்தியுள்ள மனங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்! ஆனால் இது கூடாத காரியம் என்பதினால், ஓ! நாம் அனைவரும் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினையும் மற்றும் தெய்வீக அளவுகோலுடன் நம்மை ஒப்பிட்டுப்பார்க்க முடியும் ஆற்றலையும் அதிக அளவில் பெற்றுக்கொள்வோமாக!

இந்த வார்த்தைகளானது, அதிகளவிலான போராடும் மனப்பான்மையினால் சிரமப்படும், மிகவும் ஆவேசம்கொள்வதற்கு ஏதுவாய்க் காணப்படும் அன்புக்குரிய சகோதரருக்கும் மற்றும் சகோதரிகளுக்கும் உதவும் வண்ணமாக விசேஷித்த நோக்கத்துடனே சொல்லப்பட்டுள்ளது. பன்னிரண்டு பேர்கள் மத்தியிலிருந்து கர்த்தர் சில விதங்களில் தமக்கு அபிமானமானவர்கள் என்று அப்போஸ்தலர்களிலேயே மிகவும் ஆவேசமிக்க மற்றும் தீவிரமான மூன்று பேர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தேர்ந்தெடுத்தப்போது, அவர் வலுவான பாத்திரங்களுக்கான தம்முடைய பிரியத்தினைத் தெளிவாகவும், குறிப்பாகவும் வெளிப்படுத்தினவராய் இருந்தார். ஆகையால் சுபாவத்தின்படி ஆவேசமிக்க தன்மையுடையவர்கள், இத்தன்மையானது - "நல்லது" என்ற கர்த்தருடைய வார்த்தையினைத் தாங்கள் அடைவதற்குத் தடையாக உள்ளது என்று எண்ணிடக்கூடாது; மாறாக இத்தன்மையானது - கட்டுப்படுத்தப்பட்டு, சரியான வரைமுறைக்குள்ளாகக் கொண்டுவரப்பட்டால் - நல்ல தன்மையாய்க் காணப்படும். இவர்கள் கமாலியேல் போன்று, தங்கள் போராடும் மனப்பான்மையினையும் மற்றும் ஆவேசமான தன்மையையும் கர்த்தருக்கு எதிராகவும், சத்தியத்திற்கு எதிராகவும், சகோதரருக்கு எதிராகவும் பயன்படுத்திடுவதற்கு ஏதுவாய் இருக்கும் அபாயத்தினைக் கண்டுகொள்ள வேண்டும்.

"யாருக்கு ஊழியம் புரிகின்றீர்களோ அவருக்கு நீங்கள் ஊழியக்காரர்கள்" என்று நமது கர்த்தர் கூறுகின்றார் (உரோமர் 6:16). யாருக்கு ஊழியம் புரிவதாக நாம் அறிக்கைப்பண்ணுகின்றோம் என்பதோ, யாருக்கு நாம் ஊழியம் புரிவதாக நாம் எண்ணிக்கொள்கின்றோம் என்பதோ கேள்வியாய் இராமல், மாறாக யாருடைய காரணங்களுக்காக நாம் உண்மையில் ஊழியம் புரிகின்றோம் என்பதே கேள்வியாய் இருக்கின்றது. இக்கண்ணோட்டத்திலிருந்து, இன்றுள்ள கிறிஸ்தவ மண்டலத்தை ஏறெடுத்துப் பார்த்து, நாம் நம்மிடமே கேட்டுக்கொள்ள வேண்டியதாவது: எத்தனை பேர் தேவனுக்கு ஊழியம் புரிகின்றார்கள்? மேலும் எத்தனைபேர் உண்மையில் எதிராளியானவனுக்கு ஊழியம் புரிந்துகொண்டிருக்க - தேவனோடே போர் செய்து, கிறிஸ்தவ மண்டலத்துக்கு ஊழியம் புரிந்து கொண்டிருக்க, தாங்கள் தேவனுக்கு ஊழியம் புரிவதாகக் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கின்றனர்? சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளும் பல்லாயிரம் பேர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளும் பலகோடி பேர்கள் மெத்தேடிஸ்ட், பேப்டிஸ்ட், கத்தோலிக்கர் முதலான பல்வேறு கொடிகளின் கீழ்ப் போராடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால் இவர்கள் யாரோடு போர்ப் புரிந்து கொண்டிருக்கின்றனர்? சாத்தானோடா? தப்பறையோடா? இவர்களில் அநேகர் தர்சு பட்டணத்துச் சவுலைப் போன்று, சீக்கிரத்தில் பின்வரும் உண்மைக்கு - அதாவது சிலுவையின் போர்ச் சேவகர்களாய் இருப்பதற்குப் பதிலாக, தாங்கள் தேவனுக்கு எதிராயும், சிலுவையின் உண்மையான போர்ச் சேவகர்களாகிய, ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்களுக்கு எதிராகவும் போர்ப் புரிபவர்களாக இருந்துள்ள உண்மைக்குத் தங்களது கண்களைத் திறக்கப் பெற்றிருப்பார்கள். அப்போது இவர்களுக்கு இது எத்தகைய கசப்பான ஏமாற்றமாயிருக்கும்! இவர்கள் மாபெரும் பிரதான அதிபதியின் கட்டளைகள் மற்றும் வழிநடத்துதலின்படி போர்ச் செய்யாமல், கிரியை புரியாமல் "இருண்ட யுகங்களில்" மரித்து, அடக்கம்பண்ணப்பட்டதான சிலரை உள்ளடக்கின மனித தலைவர்கள் மற்றும் அதிபதிகளின் கட்டளைகள் மற்றும் வழிநடத்துதல்களின்படியே செய்கின்றார்கள் என்று கண்டுணரத்தக்கதாக, மாபெரும் பிரதான அதிபதியினுடைய கட்டளைகளை, இப்பொழுது அவர்கள் கண்நோக்கும்படிக்கு அவர்களை விழிக்கப்பண்ணுவதற்கு நாம் எவ்வளவாய் விரும்புகின்றோம்.

பரலோகத்திலிருந்து ஒருவேளை சத்தியமானது, திடீரெனப் பிரகாசிக்கப்பண்ண முடிந்ததானால், சபை பிரிவுணர்ச்சிக்காக இப்பொழுது போராடிக்கொண்டிருப்பவர்களும் மற்றும்

அந்திக்கிறிஸ்துவுக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்களுமான இந்தப் பலமான பாத்திரங்களில் அநேகர் அதிர்ச்சியடைந்து, அவமானமடைந்து, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கதறி ஆண்டவரின் பாதத்தில் விழுவார்கள் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்றுள்ள அப்போஸ்தலன் வாயிலான கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவில்கொள்வோமாக (1 பேதுரு 5:5, 6). இந்த வார்த்தைகளானது நாம் சுட்டிக் காண்பித்துள்ளதான தவறுகளுக்கான விடையாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கொஞ்சம் பெருமையினால் தாக்கத்திற்குள்ளான வலுவான ஒருவர், தன்னால் திரும்பிட கிட்டத்தட்ட முடியாத தவறான நடக்கையினைக் கொண்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் ஒருவேளை தாழ்மை காணப்பட்டால், இதற்கேற்ப போராடும் மனப்பான்மையும், வலுவான தன்மையும் கட்டுப்பாட்டிற்குள் காணப்படும் மற்றும் அந்நபருக்குக் கர்த்தரிடமிருந்து சரியான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதும் மற்றும் அதைப் பின்பற்றுவதும் மற்றும் இராஜ்யத்தில் ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வதற்கெனத் தகுதியாகிடுவதும், மெருகூட்டப்படுவதும், ஆயத்தமாக்கப்படுவதும் அதிகம் சுலபமானதாயிருக்கும். இதே கொள்கையானது, தற்கால சத்தியத்தினுடைய வெளிச்சத்தினைக் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதமாக ஏற்கெனவே பெற்றுக்கொண்டவர்கள் மத்தியிலும் பொருந்துகின்றதாய் இருக்கும். நாம் குணலட்சணத்திலும், பலத்திலும் மிகவும் குறைவுபட்டிருந்தோமானால், அதை ஒப்புக்கொண்டு, அதைக் கர்த்தரிடமிருந்து நாடிப் பெற்றுக்கொள்வதற்கு உதவும் தாழ்மையானது நமக்கு இன்னமும் அவசியமாயுள்ளது. கர்த்தருக்கு எதிராகவோ அல்லது சத்தியத்திற்கு எதிராகவோ அல்லது சகோதரருக்கு எதிராகவோ போர்ப் புரிபவர்களாக நாம் காணப்படாதபடிக்கு, வார்த்தை, கிரியை, சிந்தை அனைத்தும் கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்திலும்கூட ஒவ்வொரு வார்த்தையையும், கிரியையையும், சிந்தையையும் கவனமாய்க் கவனித்துக்கொள்ளும் தாழ்மையானது நமக்கு இன்னமும் அவசியமாயுள்ளது. நம்முடைய சொந்த அனுபவங்களில் மாத்திரமல்லாமல், மற்றவர்களுடைய வார்த்தைகளிலும், அனுபவங்களிலும்கூடக் கர்த்தருடைய வழிநடத்துதல்களுக்காக நாம் கவனித்திருப்பதற்கும் மற்றும் குறிப்பாக அனைத்தையும் நம்முடைய சொந்த கருத்துக்கள், விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் அல்லாமல், தெய்வீக நிலைபாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்திடுவதற்கும் நாம் எத்துணைக் கவனத்துடன் காணப்பட வேண்டும்!

---

# ராஜாவின் பிரசன்னத்தினுள்ளே

ராஜாவின் பிரசன்னத்தினுள்ளே நாமுள்ளோம் என்றே எண்ணம்கொள்ளல்வேண்டும்,
ஒவ்வொரு நொடிப்பொழுதிலும்,ஒவ்வொருசிறு செயல்களிலும் ராஜாவின் பிரசன்ன
எண்ணம் உள்ள போதில், எத்தனை மதிப்புறும்,எத்தனை கனம்பெறும்?
எண்ணத்தில் நாம் கொள்ளும் சிந்தை ராஜாவுக்குத்தெரியுமென்கின்ற போதில்
எவ்வளவு கவனம்கொண்டே யோசிப்போம்?
எத்தனை ஆசீர்வாதம் அதில்தானேவந்து சேரும்?
நம் விசுவாச சோதனைக்கு ஒரு சிறுவார்த்தை போதுமன்றோ?
மனக்காயத்தை உண்டாக்கி விசுவாசத்தை சோதிக்கும்: இராஜ்ஜியத்தின் உள்ளே,நாம்
இருக்கிறோம் எனும் சிந்தை எத்தனை வேகமாய் மனக்காயத்தை ஆற்றிவிடும்?
வாழ்க்கையின் பாடலைப்பாடுதலே மிகக்கடினம் என்றே மனம் தடுமாறி நிற்கின்ற
போதினில் பாதை இருளாய் தோன்றிடும்பொழுதும்,ராஜாவின் அருகினில் இன்னும்
கிட்டச்சேர்க்கும், இரவோ,
பகலாய்வேகமாய் மாறும், ராஜ்ஜியம் மலரும், ஆசீர்வாதம் தங்கும்.

# இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே

தேவனே உமது சத்தியம்தன்னை உலகம் முழுதும் நான்சொல்லவேண்டும்,
ஏன்றேஏங்கி நின்றேன் நானே.
பதிலுக்காகக்காத்து நிற்கின்றேன், எனக்கொரு பதிலைச் சொல்வீரோ?
தேவனின் பதிலை நான் பெற்றுக்கொண்டேன்,
அவரது குரலோ மிகமிக மெதுவாய், மிருதுவாய் அன்பாய், எனக்கு வந்ததே,
இப்போது வேண்டாம், எனதன்புக்குழந்தாய்.

மகிழ்வுடனே இந்த வனாந்தரம்தன்னை நான் கடந்து சென்றே,
உலகம்முழுமைக்கும் பயணம் செய்தே, பெருமூச்சுவிட்டே,
கதருவோர்தன்னைஆசீர்வதிக்கவேண்டும்என்றே எந்தனுள்ளம் ஏங்கிடுதே,
கலைமான்கள் நீரோடைக்காக வாஞ்சித்துக்கதருமாப்போல்
எந்தன் உள்ளம் உமக்காகவே வாஞ்சித்தே கதறிடுதே.
அவரதுகுரலோ எத்துணை இனிமை, எத்துணை இன்பம்,எத்துணை இளமை,
மிகமிகமெதுவாக, இப்போதும் வேண்டாம், எனதன்புக்குழந்தாய்,
தேவனே உமது சித்தம் செய்யவே, என்னை முழுதும் ஒப்பளித்தேனே,
ஏற்றுக்கொள்ளும் எம் அன்புத்தந்தாய்,
ஏனக்குளது நல்லதென்று, நீர்தாமே அறிந்துள்ளீர்,இப்போதும் மிக மெல்லியதாய்,
அழைத்தாரே என்னையவர்,
ஹா. இப்போது வா, என் அன்பு மகனே, உன்னை நானே ஏற்றுக்கொண்டேனே.

-G.W. செய்பர்ட்.

R 4112

# "கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல்"

## யோவான் 1:19-34

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (வசனம் 29).

நமது கர்த்தர் தம்முடைய முன்னோடியைக் குறித்து, "யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை" என்று கூறுகின்றார் (லூக்கா 4:28). தீர்க்கத்தரிசி என்ற வார்த்தையின் அர்த்தமாவது, "அதிகாரப்பூர்வமாய் அறிவிப்பவர்/பிரகடனம் செய்பவர்" ஆகும். எனினும் எதிர்க்காலத்தில் சம்பவிக்கும் விஷயங்களை மாத்திரம் அறிவிப்பவர்தான் தீர்க்கத்தரிசி என்று எடுத்துக்கொள்ளவுங்கூடாது. தரிசனங்கள் அறிந்துக்கொள்வதும் மற்றும் எதிர்க்காலத்திற்குரிய விஷயங்களை முன்னறிந்துகொள்வதுமாகிய தன்மைகளை உடையவர்களான ஞானதிருஷ்டிக்காரர் குறித்தும், தீர்க்கத்தரிசிகள் குறித்தும் வேதவாக்கியங்களில் நாம் பார்க்கின்றோம். தீர்க்கத்தரிசி என்பவர் போதிப்பவர் அல்லது பிரகடனம் செய்பவர்/அறிவிப்பவர் ஆகும். எனினும், அநேக உதாரணங்களில், இந்த இரண்டு பண்புகளும் சேர்ந்து ஒரே நபரிடத்தில் காணப்படுவதை நாம் பார்க்கலாம். யோவான் ஸ்நானனின் விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது. இவர் ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்கான முக்கியமான செய்தியைக் கூறினதோடு, வரவிருக்கின்ற காரியங்களையும் கூறின தீர்க்கத்தரிசியாக இருந்தார். உதாரணமாக, இவர் நமது கர்த்தர்தான், உலகத்தின் பாவத்தை எடுத்துப் போடுகின்ற தேவ ஆட்டுக்குட்டி என்று முன்னறிவித்தார் என நாம் பார்க்கின்றோம். இன்னுமாக, கர்த்தர் தம்முடைய ஜனங்களைப் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியாலும் ஞானஸ்நானம் பண்ணுவார் என்றும் இவர் அறிவித்தார் என்று நாம் பார்க்கின்றோம். யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி எவனும் இல்லை. காரணம், இவரைப்போன்று வேறு எவரிடத்திலும் கர்த்தருக்கான இப்படிப்பட்ட முக்கியமான பணி கொடுக்கப்படவில்லை. அநேகர் மேசியாவின் வருகைக் குறித்தும், அவர் கன்னிகையிடம் பிறப்பார் என்பது குறித்தும், கொல்லப்படபோகின்ற ஆட்டைப்போல் அவரும் நடத்தப்படுவதைக் குறித்தும், அவர் சிலுவையில் அறையப்படுவதைக் குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதல் முதலியவைகள் குறித்தும் முன்னறிவித்திருந்தாலும், தேவனுடைய குமாரனாகிய, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவைக் குறித்து நேரடியாக முதலாவது அறிவிக்கும் மிகக் கனம் வாய்ந்த ஊழியம் யோவானுக்கே கொடுக்கப்பட்டது.

யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இந்தக் கனம் வாய்ந்த ஸ்தானத்தைக் குறித்து நாம் எண்ணும் அதேசமயத்தில், இக்காரியத்தைக் குறித்த ஆண்டவரின் வார்த்தையையும் நாம் நினைவுகூர வேண்டும்; "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்தேயு 11:11). இவ்வசனத்தில், அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் இவர்களின் வார்த்தைகளின் மூலம் கர்த்தரை நம்பி, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் வாயிலாக கர்த்தரோடு முக்கியமான உறவை ஏற்படுத்திக் கொண்ட அனைவருக்குமுள்ள கனம் விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ஸ்தானாபதிகளாக இருக்கும் இக்கனத்தைக் குறித்து நாம் எந்தளவுக்கு உணர்கின்றோமோ, அந்தளவுக்கு நமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களைப் பயன்படுத்துவதில் உண்மையாய் இருப்போமாக. மாம்சத்தில் வந்த கர்த்தரைப் பிரகடனப்படுவத்துவது யோவானுக்குக் கிடைத்த கனமாகும். மனுஷகுமாரனுடைய வந்திருத்தல் குறித்தும், பூமியிலுள்ள சகல குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக ஸ்தாபிக்கப்படவிருக்கும் அவருடைய மகிமையான ஆளுகையைக் குறித்தும் பிரகடனம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பது, நமக்கான மேன்மையாகும். சிறையில் அடைக்கப்படுவதும், மரிப்பதும், சிரச்சேதம் பண்ணப்படுவதும் தேவனுடைய அனுமதியாய் இருக்கும் பட்சத்தில் அதிலும் உண்மையாய் இருப்போமாக.

"பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறபடியால் மனந்திரும்புங்கள்" என்று யோவான் அறிவித்தார்; அதாவது, பரலோக இராஜ்யத்திற்காக ஆயத்தமாகுங்கள், சீர்ப்பொருந்துங்கள் என்று அறிவித்தார். நமது கர்த்தர் இஸ்ரயேல் ஜனத்தாருக்கு அறுவடையாளராக இருந்து, கோதுமையைப் புடைத்து, பதரை அக்கினியில் போட்டுவிடுவார் என யோவான் முன்னறிவித்தார். "அவர் (உங்களில்

சிலரை) பரிசுத்த ஆவியினாலும் (உங்களில் மற்றவர்களை) அக்கினியினாலும் ஞானஸ்நானம் அருளுவார்" என்ற வார்த்தைகளையும், மேற்கூறிய கருத்தின் அடிப்படையிலேயே கூறினார். அந்தத் தேசத்தார் மத்தியில் நமது கர்த்தர் ஓர் அறுவடை வேலையைப் பண்ணினார், இதைக் குறித்து, "நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்" என்று தம் சீஷர்களிடத்தில் கூறினார் (யோவான் 4:38). இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் அப்படியே நிறைவேறியது. யோவான் 4:38- ஆம் வசனத்தின் வார்த்தைகளை நமது கர்த்தர் கூறின பிரகாரமே, அவர் இஸ்ரயேல் தேசத்திடத்தில் ஓர் அறுவடை வேலையை நிகழ்த்தினார். மூன்றரை வருடங்களாக அந்தத் தேசத்தாரிலுள்ள முதற்பலன்களைத் தமது சீஷர்களாக அறுத்து, சேகரித்தார். மேலும், இவர்கள் மீதே பெந்தெகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. பிற்பாடு பதர் சுட்டெரிக்கப்படுவதற்கு முன்பு அதாவது, அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்படும் காரியமாகிய எருசலேம் பட்டணமும், அதன் ஆலயமும், அதன் அனைத்தும் முற்றிலும் அழிக்கப்பட்டு கி.பி. 70-ஆம் ஆண்டில் தேசம் சிதறடிக்கப்படுவதற்கு முன்பு அப்போஸ்தலர்கள், மீதமானவர்களைச் சேர்த்துக் கொண்டார்கள். இதுபோலவே, இந்த யுகத்தின் அறுவடை காலத்தில் வாழ்ந்து கொண்டு, மனுஷ குமாரனின் வந்திருத்தலைக் குறித்து, அறிவிக்கிறவர்களுமாகிய நாமும் கூடப் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய கிறிஸ்தவ மண்டலத்தில் தற்போது அறுப்பு பணி நடந்து கொண்டிருக்கின்றது என்றும், கோதுமை மணிகள் அனைத்தும் திரைக்கு அப்பால் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், உலகத்தின் மீது, அதிலும் விசேஷமாகக் களை வகுப்பார் மீது, ஒரு ஜாதியார் மீதும் வந்திராத மகா உபத்திரவக் காலம் ஒன்று வரும் என்றும் அறிந்திருக்கின்றோம். அதாவது, பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்குரிய மேசியாவின் இராஜ்யமானது வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்படுவதற்கான தெய்வீக ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று நாம் அறிந்திருக்கின்றோம்.

## "நாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள்"

இராஜ்யத்தில் பங்கடைவதற்குப் பாவம் தடையாக இருக்கும் என்றும், ஆகையால் அனைவரும் மனந்திரும்பி, தேவனோடு ஒப்புரவாக நாட வேண்டும் என்றும் யோவான் அறிவித்த விஷயம், தேவனுடைய பரிசுத்தமான ஜனங்கள் என்று தங்களையே கருதிக் கொண்டிருந்த சிலராகிய பரிசேயர், சதுசேயர், அவிசுவாசிகள் மற்றும் விமர்சகர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவர்களில் சிலர் செவிசாய்த்து, தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, சீர்ப்பொருந்தி வந்தாலும், வேறு சிலர் யோவானுடைய போதனைகள், அத்துமீறினவைகளாகவும், ஏற்றுக்கொள்ள முடியாதவைகளுமாகவும் இருக்கின்றது என மறுத்தார்கள். ஆபிரகாமின் சந்ததியாருக்கு, தேவன் இராஜ்யத்தை வாக்களித்துள்ளார் என்று அவர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள். தங்களையல்லாமல் வேறெவரும் ஆபிரகாமின் சந்ததி இல்லை என்றும், தங்களையல்லாமல் வேறெவரும் பரிசுத்தமானவர்கள் இல்லை என்றும், தங்களையல்லாமல் வேறெவரும் தகுதியானவர்கள் இல்லை என்றும், யூதர்களாகிய தாங்கள் பரிசுத்தமாய் இருக்கிறார்களோ, இல்லையோ, தங்களுக்கே இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் சொந்தமானவைகள் என்றும் வாக்குவாதம் பண்ணினார்கள். ஏழைகளும், பாவிகள் என்று தங்களைக் குறித்து ஒத்துக்கொண்டவர்களும் மாத்திரமே யோவானின் சாட்சியை உண்மையில் ஏற்றுக்கொண்டார்கள். ஒருவேளை அந்தத் தேசத்தார் அனைவரும் யோவானின் செய்திக்குச் செவிசாய்த்து, அதை ஏற்றுக் கொண்டிருப்பார்களானால், அவர்களனைவரும் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்திருந்திருப்பார்கள். ஆகவே, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, நமது கர்த்தரின் சீஷர்களாகி, அவருடைய உயிர்த்தெழுதலின் பிற்பாடு, அவரைக் காணும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்த சுமார் 500 சகோதர சகோதரிகளில், பெரும்பாலானோர் யோவானின் செய்தியைக் கேட்டு, செவிசாய்த்து வந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென நாம் அனுமானிக்கின்றோம். மேலும், பெந்தெகோஸ்தே நாளன்று நடந்த சம்பவங்களினால் விசுவாசம் வைத்தவர்களிலும் கூட, பெரும்பாலானோர் யோவானின் செய்தியைக் கேட்டு, மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தை அவரிடம் பெற்றுக்கொண்டு, ஜீவியத்தில் சீர்ப்பொருந்தினவர்களே என்றும் நாம் அனுமானிக்கின்றோம். இவ்வாறாக உண்மையுள்ள இருதயம் உடையவர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகவோ அல்லது குறைந்தவர்களாகவோ இருப்பினும், ஏழைகளாகவோ அல்லது ஐசுவரியவான்களாகவோ இருப்பினும், இவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகத் தெய்வீக ஏற்பாடுகளும்,பிரதிநிதிகளும் இணைந்து செயல்பட்டனர்.

## “நமது கர்த்தருடைய முன்னோடி”

யோவான் ஸ்நானன், மாம்சத்தில் வந்த நமது கர்த்தருக்கு முன்னோடி ஆவார். அதாவது, நமது கர்த்தர் சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, அவரைக் குறித்து அறிவிப்பதற்கும், வழியைச் செவ்வைப்படுத்துவதற்குமே யோவான் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், மேசியாவின் இராஜ்யத்திற்குரிய ஆயத்த வேலையை, வழியைச் செம்மைப்படுத்தும் வேலையைக் குறித்த தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப்பட்ட அனைத்தையும் யோவான் நிறைவேற்றவில்லை. "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைச் சமமாக்கப்படும்” (ஏசாயா 40:3-4).

## “நிஜமான எலியா”

வேதாகமப் பாடங்களில் இரண்டாம் தொகுதியிலுள்ள (2nd Volume) 8-ஆம் அத்தியாயத்தில், நாம் சில விஷயங்களை முன்வைத்ததைக் குறித்து, நம் வாசகர்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். அதென்னவெனில், மாம்சத்தில் வந்த இயேசுவை மாம்சத்தில் இருந்த யோவான் அறிமுகப்படுத்தி, முன்னோடிக்குரிய பணியை இவ்விதமாக நிறைவேற்றினதுபோல, இந்தச் சுவிசேஷ யுகத்தில் மாம்சத்தில் இருக்கும் சபையானது நிஜமான எலியாவாக இருக்கின்றார்கள். இவர்களது பணி, மகிமையின் இராஜாவாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அறிவித்து, அவருடைய ஆயிரம் வருஷம் அரசாட்சிக்கு வழியைச் செம்மைப்படுத்துவதாகும். இதைக் குறித்த செய்திகளை நீங்கள் அனைவரும் இரண்டாம் தொகுதியில் பெற்றிருப்பதினால், இதைக் குறித்த விளக்கத்திற்குள் நாம் போவதில்லை.

நடந்து கொண்டிருக்கின்ற தீர்க்கத்தரிசனத்தை நாம் பார்ப்போம்:-

யோவானுடைய ஊழியம், சொற்ப காரியங்களையே நிறைவேற்றியுள்ளது. அவருடைய ஊழியம் இரண்டு வருடங்களுக்கும் குறைவாகவே நீடித்தது. மேலும், அவருடைய ஊழியம் ஒரு தேசத்தில் சொற்பமான ஜனங்களிடத்திற்கே சென்று சேர்ந்தது. ஆனால், அதே செய்தியைதான் நிஜமான யோவானும், நிஜமான எலியாவுமாகிய மாம்சத்தில் இருக்கும் கிறிஸ்துவின் சபையானது உலகத்திற்குச் சாட்சி பகிர்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். உலகம், வனாந்தரமான நிலையிலுள்ளது என்பதும், இதன் குழப்பத்தை மாற்றி ஒழுங்கிற்குக் கொண்டு வருவதற்கு மாபெரும் இராஜா அவசியம் என்பதே அந்தச் செய்தியாகும். இச்செய்தியைக் கேட்பவர்கள், விருத்தசேதனம் உள்ளவர்களாக நடந்து, வனாந்தரத்தில் ஒரு நேரான வழியை வரவிருக்கிற இராஜாவுக்கு ஒரு பெரிய வழியை உண்டாக்க வேண்டும் என்பதே இச்செய்தியின் சாராம்சமாகும். இன்னுமாக ஆயிரம் வருஷம் அரசாட்சியில் இயேசுவும், சபையும் செய்யப் போகின்ற ஆளுகையின் முழு நோக்கமும், பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்கு உலகத்தை ஆயத்தப்படுத்துவதேயாகும். மேலும், உலகம்/பூமி பிதாவினால் பாவத்தினிமித்தம் தண்டிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட வனாந்தரமாக இருப்பதற்குப் பதிலாக, மீண்டும் அவருடைய பசுமையான பாதப்படி ஆகிவிடும் என்று தீர்க்கத்தரிசனம் விளக்குகின்றது.

இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் மாம்சத்திலுள்ள சபையின் வேலை மாத்திரம் குறிப்பிடப்படாமல், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் மகிமையிலிருக்கும் சபை மற்றும் கிறிஸ்துவின் வேலை கூடச் சுட்டிக்காட்டப்படுகின்றது/முன்னறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு” (ஏசாயா 40:4); அதாவது, தாழ்த்தப்பட்டவர்கள் சீர்க்கேட்டிலிருந்து தூக்கி எடுக்கப்படுவதைக் குறிக்கின்றது. பாவத்தின் ஆளுகை காலத்தின் கீழ் உன்னதமான செல்வாக்கை உடையவர்களாக வாழ்ந்தவர்கள், நீதியின் இராஜ்யத்தில் தாழ்த்தப்படுவார்கள் எனும் விஷயம் அடையாள மொழியில், "சகல மலையும், குன்றும் தாழ்த்தப்படும்” என்று இடம்பெறுகின்றது. பாவம் மற்றும் பூரணமற்ற தன்மையின் தற்காலத்திலுள்ள மாபெரும் விஷயங்கள் நேராக்கப்படும்/சரிச் செய்யப்படும்; மேலும், கரடுமுரடானவைகள் சமமாக்கப்படும்; இப்படியாக, சகலமும் திரும்பக் கொடுக்கப்படும் காலங்களின் வேலையினுடைய விளைவாக, இறுதியில் உலகத்தின் மனுக்குலமானது, தெய்வீகச் சித்தத்திற்கும்,

அன்பின் தெய்வீகப் பிரமாணத்திற்கும் இசைவாக வந்து, தெய்வீகப் பிரசன்னத்திற்கு நேராக திரும்புவதற்கு ஆயத்தமாய் இருப்பார்கள். இக்காரியங்களை, "என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்" என்ற வார்த்தைகள் அடையாளப்படுத்துகின்றது (ஏசாயா 60:13).

## "பின்னே நீ யார்?"

யோவான் ஸ்நானனிடம் கேட்கப்பட்டக் கேள்விகள் பின்வருமாறு: "நீர்தான் மேசியாவோ?" இல்லையேல்; "நீர் எலியாவோ?" இல்லையேல்; மோசேயினால் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசி நீர்தானோ? இல்லையேல் (அப்போஸ்தலர் 3:21, 23). "பின்னே நீர் யார்?" ஏன் நீர் இப்படியாக வந்து, அதிகாரத்துடன் பேசுகின்றீர்?" இக்கேள்விகளுக்கான யோவானின் பதில், "நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமே;" "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்" என்பதாகும் (லூக்கா 3:5,16). இவ்விதமாக, மேசியாவின் மகத்துவத்தைக் கூறி, அவரோடு தன்னை ஒப்பிடுகையில் தான் எவ்வளவு முக்கியத்துவம் அற்றவன் என்றும் யோவான் கூறுகின்றார். யோவான் அடையாளப்படுத்தும் நாமும் மகிமையான இராஜ்யம் குறித்து அறிவித்தல் தொடர்புடைய நமக்கான சிலாக்கியத்தின் விஷயத்தில், தாழ்மை சிந்தைக்கொள்ள வேண்டும். நம்மிடம் வேறு சிந்தை காணப்படுமாயின், இது நம்மை அவருடைய பிரதிநிதி மற்றும் ஸ்தானாபதிக்குரிய நிலைக்கு அபாத்திரராக்கிவிடும்.

இயேசு தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக மாம்சத்தில் காணப்பட்டார். இப்பொழுதுதோ அவர் ஆவிக்குரிய ஜீவியாக நிற்கின்றார். எனினும், அன்று போல் இன்றும் அவர் அடையாளம் கண்டுக்கொள்ளப்படவில்லை. அன்று கபடற்ற இஸ்ரயேலர்கள் மாத்திரம் அவரை அடையாளம் கண்டுக் கொண்டார்கள். இன்றும் அறுவடை முடிவடைவதற்கு முன்னதாக அனைத்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் அவருடைய வந்திருத்தல், பரோசியா அடையாளம் கண்டுகொள்ளப்படும். விலையேறப் பெற்ற சத்தியத்தின் இந்த முத்துக்கள் உலகத்திற்கு முன்பாகவோ, அர்ப்பணம் பண்ணாதவர்கள் முன்னதாகவோ போடுவது நல்லதல்ல. கர்த்தருடைய வந்திருத்தல், தற்போது நடந்து கொண்டிருக்கும் அறுவடை வேலைகள், கோதுமைகள் விரைவில் களஞ்சியத்தில் சேர்க்கப்படும் மற்றும் களைகள் மீது விரைவில் உபத்திரவத்தின் நெருப்புக் கொளுத்தி விடப்படும் என்பது போன்றதான சத்தியங்கள் நீதியின் மீது பசிதாகம் உள்ள கபடற்ற இஸ்ரயேலர்களுக்கே உரியதாகும். ஆனால், இந்தச் சத்தியங்கள் அனைத்துப் புத்தியுள்ள கன்னிகைகளுக்கு ஏற்ற கால சத்தியங்களாகவும் அமைகின்றது.

## "இதோ தேவ ஆட்டுக்குட்டி"

நமது கர்த்தரின் வல்லமையும்/பலமும், மகத்துவமும், "யூத கோத்திரத்து இராஜ சிங்கம்" என்ற அடையாள வார்த்தையினால் காட்டப்படுகின்றது. இவ்வடையாளம் ஆயிரம் வருஷம் அரசாட்சியில் இருக்கும் அவருடைய வல்லமையை எடுத்துக்காட்டுகின்றது. ஆனால், ஆட்டுக்குட்டி என்ற அடையாளம் அவருடைய பூமிக்குரிய ஊழியத்தையும், நமது பாவங்களுக்கான அவருடைய பலியையும் எடுத்துக்காட்டுகின்றது. அவர் ஒவ்வொரு விஷயங்களிலும், இறுதியில் மரணம்வரை,அதாவது சிலுவையின் மரணப் பரியந்தம், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தக் காரியங்களானது, ஆட்டுக்குட்டியின் அம்சங்களுக்கு ஒப்பாகக் காணப்படுகின்றது. நமது பாவங்களுக்காக அவர் தம்மை ஒப்புக்கொடுத்த காரியம் தெய்வீக ஏற்பாட்டின்படி, பிதாவின் திட்டப்படி நடந்த காரணத்தினால் அவர் தேவ ஆட்டுக்குட்டியாகிறார். மனுஷனுடைய மீட்பராகும்படி, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார் என்றும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற குமாரன் மகிழ்ச்சியாயிருந்தார் என்றும் வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த அனைத்து அருமையான கருத்துக்களும் "தேவ ஆட்டுக்குட்டி" என்ற இந்த வார்த்தைக்குள் அடங்குகின்றது. மேலும், இவ்வடையாளம் நம்முடைய பாவங்களுக்காக பலிச் செலுத்தப்படுவதின் அவசியம் குறித்ததான கருத்துக்களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. மேலும், பலிச் செலுத்தப்படாமல் வேறு எந்த விதத்திலும் ஆட்டுக்குட்டியினால், உலகத்தின் பாவத்தைச் சுமக்கவோ, எடுத்துப் போடவோ முடியாது. தேவனுடைய கிருபையால் அவரை நம்முடைய மாபெரும் போதகராகவும், மேய்ப்பனாகவும் காண்பதோடு அவர் நம்பொருட்டு நம் பாவங்கள், தண்டனைகள் நீக்கம்/ரத்து செய்யப்படுவதற்காகப் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்ததின் வாயிலாக தேவனுடைய

ஆட்டுக்குட்டியாகவும் இருந்தார் என்பதையும் காணத்தக்கதாக நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டிருப்பதினால் மகிழ்ச்சியடைகின்றோம். இயேசுவை, தேவ ஆட்டுக்குட்டி என்றும், பாவம் சுமப்பவர் என்றும் அடையாளம் கண்டு கொள்கின்றவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகளுக்கு அருளப்படும் விசுவாசத்தினாலுண்டாகும் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் பெற்றுக்கொண்ட நீதியின் வஸ்திரத்தை யாரொருவர் இழந்து விடுகின்றரோ, அவர் அனைத்தையும் இழந்து விடுவார் என்ற உண்மையையும் நாம் மறந்துவிட வேண்டாம்.

## "உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுதல்"

தெய்வீக வார்த்தைகள் எவ்வளவு அருமையாகவும், துல்லியமாகவும் காணப்படுகின்றது. யோவான் ஒரு யூதனாக இருந்தபடியால் தன்னுடைய வார்த்தைகளின் முழு விவரத்தையும் புரிந்துக் கொண்டிருப்பார் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது; காரணம், யூதர்கள் மேசியா முதலில் யூதர்களுடைய பாவங்களை எடுத்துப் போடுவார் என்றும், பின்னர் தாங்கள் தேவனுடைய இராஜரிக ஆசாரியக் கூட்டமாக இருந்து, உலகத்தை நீதியில் சீர்த்திருத்துவார்கள் என்றுமே விசேஷமாக எதிர்ப்பார்த்தார்கள். ஆனால், யோவான் உரைத்த வார்த்தைகள் யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பையும் மிஞ்சி விட்டது; அதாவது, புறஜாதியாரும் இவ்வார்த்தைகளில் உள்ளடங்குகின்றனர். இப்படிப்பட்ட தீர்க்கத்தரிசனமான வார்த்தையை உரைக்கும்படி நடத்தின பரத்திலிருந்து உண்டான ஞானத்தை இன்றைய காலத்து ஜனங்களும் கூடப் புரிந்துக்கொள்வதற்கு அரிதாக இருக்கின்றது. உலகத்தின் பாவங்கள் ஒருபோதும் எடுத்துப் போடப்படவில்லை என்றும், ஆதாமின் மீறுதல் காரணமாகவும், தனிப்பட்டப் பாவத்தின் காரணமாகவும் வந்த பாவ பாரத்தின் கீழ் உலகம் நித்திய சித்திரவதைக்குள் மூழ்கிவிடும் என்றுமுள்ள பொதுவான கருத்துக்கள் இன்று நிலவுகின்றது. உலத்தின் பாவத்தை எடுத்துப் போட்ட தேவ ஆட்டுக்குட்டியான இரட்சகரைக் குறித்து இன்றைய பெயர்க் கிறிஸ்தவ மண்டலமும், அதன் சபைகளும் எதுவும் அறிந்திருக்கவில்லை. அந்தோ! பாவப்பட்ட குருடான கிறிஸ்தவ மண்டலம்! இவர்கள் இவ்வசனத்தையும், இதற்கு ஒத்த மற்ற வசனங்களையும் வாசித்திருந்தாலும், அவைகளுக்குள் காணப்படும் உண்மையான ஆசீர்வாதங்களை அடையவேயில்லை/புரிந்துகொள்ளவில்லை. "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோத்தேயு 2:6). "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2) என்ற அப்போஸ்தலர்களின் வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" என்று கர்த்தர் சொன்னது உண்மையே (ஏசாயா 55:9). தேவன் பழிவாங்குகிறவராக இராமல், மனுஷனுடைய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட அருமையான திட்டத்தையுடைய மாபெரும் தேவனாய் இருக்கிறபடியால் நாம் மகிழ்கின்றோம். "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு.......................சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துக்கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபேசியர் 3:14, 15, 18-19); நாம் புரிந்துக்கொள்ளுதலின் கண்களோடு பார்க்கையில் மேற்கூறிய அப்போஸ்தலரின் ஜெபத்தினுடைய நிறைவேறுதலைக் கண்டுக்கொள்ளலாம்.

## "அவருடைய வேலையின் பிரதிபலன் அவர் முன்பாக வருகின்றது"

ஆட்டுக்குட்டி வந்திருந்தாக யோவான் ஸ்நானன் கூறியிருந்தபோதிலும், உலகத்தின் பாவத்தைப் போக்கும் வேலையானது எதிர்க்காலத்திற்குரிய வேலையாக இருக்கின்றது. இந்த வேலை இன்னும் நிறைவேறி முடியவில்லை. நமது கர்த்தர் ஆட்டுக்குட்டியாக மரித்தார். அவருடைய பலியும் பிதாவுக்குத் திருப்தியாய் இருந்தது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, மகிமைக்கும், வல்லமைக்கும் உயர்த்தப்பட்ட விஷயங்கள், பிதா இயேசுவின் பலியில் திருப்தியடைந்ததற்கான நிரூபணங்களாக இருந்தது. ஆனால், தெய்வீகத் திட்டத்தின்படி,

உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடும் வேலையானது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1) தேவனுடன் ஒப்புரவாகும்படியும், மன்னிப்பை அடையும்படியும், உண்மையும் நீதியுமான விஷயங்களோடு இசைவுக்குள் வருவதையும் விரும்பும் இருதயங்களிலிருந்து பாவத்தை எடுத்துப்போடுதல் ஆகும். இவர்கள் விசுவாசிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மேலும், இவர்களுடைய பாவங்கள் எடுத்துப்போடப்பட்டதாகவும் **கருதப்படுகின்றது**; அதாவது, அப்போஸ்தலரும், தீர்க்கத்தரிசியும் கூறுகிறப் பிரகாரம் கிறிஸ்துவின் நீதியினிமித்தம் உண்டான வஸ்திரத்தினால், தேவனுடைய பார்வைக்கு முன்பு இவர்களுடைய பாவங்கள் **மூடப்பட்டுள்ளது**. மேலும், இவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிக்கும்போது அதாவது, நித்தியத்திற்குரிய ஜீவனுக்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ள உண்மையானவர்கள் என்ற நிலை வரும்போதே இவர்களுடைய பாவம் **முற்றிலும் அகற்றப்படுகின்றது**. இவர்களுக்கு அருளப்படும் புதிய சரீரத்தில் கறைகள் இருப்பதில்லை. மூடுவதற்குப் பாவமும் இருப்பதில்லை, அனைத்துமே அகற்றப்பட்டிருக்கும். பின்னர் உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக, கிறிஸ்துவும், அவருடைய மணவாட்டியாகிய மகிமையடைந்த சபையின் ஆளுகை, ஆயிரம் வருஷம் அரசாட்சியில் ஆரம்பிக்கும். அதாவது, பரலோகத்தின் இராஜ்யம், நீதியின் ஆளுகை ஆரம்பிக்கும். 2) ஆனால், இந்த ஆளுகை ஆரம்பிப்பதற்கு முன்பு...18-நூற்றாண்டுகளுக்கு முன்பாக உலகத்தை மீட்டுக்கொண்ட தேவ ஆட்டுக்குட்டியானவர், தமது பலியின் புண்ணியத்தையும், தம்முடைய சரீர அங்கமாகிய சபையின் பலியையும் சேர்த்துப் பிதாவுக்கு முன்பு, சகல ஜனங்களுக்குரிய மாபெரும் பாவநிவாரண நாளின் இரண்டாம் பலியாகச் செலுத்துவார் (லேவி. 16-ஆம் அதிகாரம்).

கர்த்தர் பரலோகத்திற்குச் சென்று தம்முடைய பலியை ஒப்படைத்து, அதைப் பிதா ஏற்றுக்கொண்டு, விசுவாச வீட்டாராகிய சபையின் மீது ஆசீர்வாதம் வந்திறங்கினது போன்று, இந்த யுகத்தின் முடிவில் மாபெரும் பிரதான ஆசாரியனால் செலுத்தப்படும் இரண்டாம் பலியும், சகல ஜனங்களுக்கான பாவங்களுக்காகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படும். பின்னர் தெய்வீக மன்னிப்பும், ஆதாமின் பாவம் மற்றும் பெலவீனங்கள் விலக்கப்படுதலும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அருளப்படும். துணிகரமான தவறுகளுக்கே சிட்சைகள் வழங்கப்படும் (லூக்கா 12:47-48). ஆசீர்வதிப்பதற்காகவும், தூக்கிவிடுவதற்காகவும், கர்த்தர் மற்றும் அவருடைய கிருபையான திட்டங்கள் குறித்ததான அறிவிற்குள் கொண்டு வரப்படுகிற யாவருக்கும் உதவுவதற்காகவுமே ஆயிர வருஷம் அரசாட்சியின் சகல செல்வாக்குகளும் செயல்படுத்தப்படும். அடிகள், சிட்சைகள் கூட, நீதியின் விஷயங்களில் உலகத்தைத் திருத்துவதற்கும், உதவுவதற்குமேயாகும். இப்படியாக, ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில், உலகத்தின் பாவத்தை எடுத்துப் போட்ட தேவ ஆட்டுக்குட்டி மூலம், மனுக்குலத்திற்கான அருமையான, கிருபையான ஆசீர்வாதங்களும் நிறைவுபெறும். பொல்லாதவர்கள், ஜனத்தின் மத்தியில் இராதபடிக்கு அழிக்கப்படுவது தவிர, மற்ற யாவரும் மனித பூரணத்தை அடைவார்கள் (அப்போஸ்தலர் 3:23).

## "யோவானுடைய உண்மையுள்ள சாட்சி"

யோவானின் செய்தியில் எவ்வித சுயநலமும் இல்லை. சுயநலமே, அநேக கர்த்தருடைய ஜனங்கள் முன்னேற முடியாமலும், மற்றவருக்கு ஆசீர்வாதமாயும், சத்தியத்திற்குச் சாட்சியுமாய் கர்த்தரால் பயன்படுத்த முடியாத வண்ணம் இடறிவிழுதலின் கல்லாகக் காணப்படுகின்றது. இயேசு தன்னிலும் பெரியவர், தன்னைக்காட்டிலும் அவரே முக்கியமானவர், காரணம், இயேசு (தன்னிலும் முதன்மையானவராக) தனக்கு முன்பாகவே காணப்பட்டார் என்று யோவான் அறிவித்தார். இயேசு யோவானைக்காட்டிலும் (முதன்மையானவராக) முன்னதாக இருந்ததற்கான காரணம், இயேசு பிதாவோடு மனுஷனாக வருவதற்கு முன்னதாகவே இருந்தார் என்பது மாத்திரமல்லாமல் அவர் பரிபூரணமாயும் இருந்தார்; ஆனால் யோவானோ மற்ற மனுஷரைப் போன்று பூரணமற்ற மாம்சமானவராகவே காணப்பட்டார்.

"நானும் அவரை அறியாதிருந்தேன்" (யோவான் 1:31) என்று யோவான் கூறின வார்த்தைகளிலிருந்து, யோவானுக்கு, இயேசுவோடு பழக்கமில்லை என்று நாம் தவறாய்ப் புரிந்துக்கொள்ளக்கூடாது; காரணம், அவர்கள் உடன் உறவினர்கள் என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. மாறாக, இயேசுதான் மேசியா என்று அவர் அறிந்திருக்கவில்லை. யோவான் இயேசுவைத் தனது உறவினராகவும், அருமையான சிறுவனாகவும், அருமையான புருஷனாகவும் அறிந்திருந்தார். மேலும், அவர் பாவமில்லாதபடியால், தான் கொடுக்கும் ஞானஸ்நானத்தை எடுக்கக்கூடாது என்றளவில்தான் இயேசுவைக் குறித்து அறிந்திருந்தார். ஆனால், தமது

ஞானஸ்நானத்தின் மூலமே, தம்மால் பிதாவின் சித்தம் நிறைவேற்ற முடியும் என்றும், எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டும் என்று கூறி வற்புறுத்தினதாலேயே, யோவான் அவரைத் தண்ணீரினால் ஞானஸ்நானம் பண்ணினார். அத்தருணத்தில்தான், இயேசுவே மேசியா என்று யோவான் தேவனிடத்திலிருந்து அடையாளம் பெற்றுக்கொண்டார். யோவான், தான் மேசியாவையும், அவருடைய இராஜ்யத்தையும் அறிவிக்க வேண்டும் எனவும், யார் மேல் பரிசுத்த ஆவி புறா போல் இறங்குகின்றதோ, அவரே மேசியா என்று அறிந்துக்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தார். ஆனாலும், தான் ஞானஸ்நானம் கொடுக்கும் ஒருவரிடத்தில்தான் இவ்வடையாளம் வெளிப்படும் என்று யோவான் எதிர்ப்பார்க்கவில்லை. கர்த்தர் மேல் ஆவி இறங்கின போது, யோவான் பிரமிப்படைந்து, இயேசுதான் மேசியா, தேவ ஆட்டுக்குட்டி, தேவனுடைய குமாரன் என்று ஜனங்களுக்கு அறிவித்தார். இயேசுவே பிதா என்று அறிவிக்காமல், அவரைத் தேவனுடைய குமாரன் என்றே யோவான் அறிவித்தார். இப்படியே இயேசுவும், அப்போஸ்தலர்களும் அறிவித்தார்கள். மேலும், இதற்கு இசைவாக நம்முடைய சாட்சியும் காணப்பட வேண்டும். இயேசு சபைக்காக ஜெபம் பண்ணினபோது அதாவது, பிதாவும், தாமும் ஒன்றாய் இருப்பதுபோல, சபையும் ஒன்றாய் இருப்பார்களாக என்று ஜெபம் பண்ணினதின் வாயிலாக விவரித்தவைகளை அதாவது, பிதா யாரென்றும், குமாரன் யாரென்றும், அவர்களுக்கிடையே நிலவின உறவையும், ஒற்றுமையையும், நாம் புறக்கணித்து விடக்கூடாது. அவர்கள் இருவரும் ஒருவரல்ல. மாறாக, இருதயத்திலும், நோக்கத்திலுமே ஒன்றுபட்டிருந்தார்கள்.

**ஆமென்!**

---

# "கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல்"

## யோவான் 1:35-51

"நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் எழுதியிருக்கின்றவரைக் கண்டோம்…அவர் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே." யோவான் 1:45

"இயேசு தம்மை அர்ப்பணிக்கும் விதமாக, ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளத்தில் வெளிக்காட்டினபோது, அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட காரியமானது யோவான் ஸ்நானனுக்கு, இவர்தான் மேசியா என்று அடையாளங்காட்டின விஷயங்களைக் குறித்து நாம் கடந்த பாடத்தில் பார்த்தோம். இதற்குப் பின்னரே இயேசு தாம் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் வெளிச்சமூட்டுதலால் தெய்வீகத் திட்டத்தையும், அதில் விசேஷமாக தமது பங்கைக் குறித்துக் கற்றுக்கொள்ளும்படி, வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் தனிமையில் காணப்பட்டார். இதனோடு கூட எதிராளியானவனிடமிருந்து பரீட்சைகளும், சோதனைகளும் வந்தது. மேலும், கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டியதும், பரிசுத்த ஆவி இப்போது அவருக்குக் காட்டின வழியிலிருந்தும், வேறுபட்ட வழிகள் குறித்ததான ஆலோசனைகளும் எதிராளியானவனிடமிருந்து இயேசுவுக்கு வந்தது. நமது கர்த்தர் இச்சோதனைகளை வெற்றிகரமாக ஜெயங்கொண்டு, மரணம் வரையிலான சுயத்தைப் பலிச்செலுத்தும் 3½ வருட ஊழியத்தை ஆரம்பித்தார். பின்னர் யோவான், ஞானஸ்நானம் கொடுத்தும், பிரசங்கித்தும் கொண்டிருக்கும் பகுதிகளுக்குப் போனார். இயேசு யோவானிடம் எவ்வளவு ஐக்கியம் பின்னர் கொண்டிருந்தார் என்பது பற்றியோ, எவ்வளவு காலம் அவ்விடங்களில் தங்கியிருந்தார் என்பது பற்றியோ நமக்குப் பதிவுகள் இல்லை. சில விஷயங்கள்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயேசு வனாந்தரத்திற்குப் போவதற்கு முன்பு, பரிசேயரும், வேதபாரகரும், யோவானிடம் நீர்தான் மேசியாவோ, இல்லையோ என்று கேள்வி கேட்டு, அவரிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டார்கள். யோவான், தான் மேசியா அல்ல என்றும், தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றப் போகின்ற மாபெரும் மேசியாவின் கீழான வேலைக்காரனாக இருப்பதற்குக் கூடத் தான் பாத்திரமற்றவன் என்றும் தைரியமாய்ச் சாட்சிப் பகர்ந்தார். இயேசு வனாந்தரத்திலிருந்து திரும்பி வந்த பின்னர், யோவான் பிரசங்கித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் மத்தியில் சஞ்சரித்தார். இத்தருணத்தில்தான், "இவரே உலகத்தின் பாவத்தைப் போக்குகின்ற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் வெளிப்படையாக அறிக்கையிட்டார். இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, அவர் மேல் பரிசுத்த ஆவியானது புறாவைப்போல் இறங்கின சாட்சியையும், யோவான் பெற்றிருந்தார். அந்நாளில்தான் யோவான் தன்னுடைய இரண்டு சீஷர்களோடு நின்று கொண்டிருக்கையில், சற்றுத் தொலைவில் நடந்துச் சென்றுக் கொண்டிருந்த இயேசுவைச் சுட்டிக்காட்டி, "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினார்.

### "எனக்குப் பின் ஒருவர் வருகின்றார்"

யோவான் ஸ்நானனிடத்தில் காணப்பட்ட எளிமையும், நேர்மையும் குறிப்பிடத்தக்கதாகும்; காரணம் இத்தகைய தன்மைகள் அரிதானவைகளாகும். உயர் பண்புகளுடையவர்கள் மத்தியிலும் கூடப் பெரும்பான்மையானவர்கள், யோவானிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலைக்குப் பாத்திரமற்றுப் போகும் வண்ணமாக சுயநலமும், பேராசையும் கொண்டுள்ளனர். பெரும்பான்மையானவர்களுக்குத் தங்களுடைய ஸ்தானம், வேலை மற்றும் மதிப்புக் குறித்த விஷயங்களை உயர்வாகப் பாராட்டிப் பேசுவதைத் தவிர்ப்பது என்பது கூடாத காரியமாகும். ஆனால், யோவான் தன்னைப்பற்றி முற்றிலும் நினைக்காமல், மேசியாவை அறிவிக்கும் வனாந்தரத்தின் கூக்குரல் பற்றின தனது பொறுப்பை மாத்திரமே நினைவில் கொண்டிருந்தார். தனக்கென்று கனத்தையும், தனிச்சிறப்புகளையும் நாடாமல் தவிர்த்து, சகல இருதயங்களுடைய பயபக்தியைக் கர்த்தருக்கு நேராகத் திருப்பினார். இதுவே கர்த்தருடைய கனம் வாய்ந்த அனைத்து ஊழியர்களின் சரியான மனப்பான்மை என்று ஒவ்வொருவனும் தன்னுடைய இருயத்தில் நிலைநிறுத்தக்கடவன். நாம் எந்தளவுக்கு இந்த ஊழியத்தில் உண்மையாயிருந்து, நமக்காக அல்லாமல் நமது ஆண்டவருக்குத் துதியையும், கனத்தையும் சேர்க்கவும் நாடி, தெய்வீகத் திட்டமானது மையம் கொண்டுள்ள அவரைச் சுட்டிக்காட்டுகின்றோமோ, அவ்வளவாய் நாம் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டு, பரலோக இராஜ்யம் மற்றும் மகிமையில் பங்கடையும் பலனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதான ஆவியையும், குணலட்சணங்களை வெளிப்படுத்துகிறவர்களாயும் இருப்போம். ஒருவேளை நாம் இந்த ஆவியை

விருத்திச் செய்து நம்முடைய இருதயங்களில் அவைகளைக் கொண்டிராவிட்டால், நாம் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாகிவிடுவோம். மகா வல்லமையும், கனமும், மகிமையும், அழியாமையும் நம்பிக்கையுடன் நமக்கு அளிக்கப்படுவதற்கும், நாம் தகுதியற்றவர்களாகி விடுவோம். "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" (யோவான் 5:23). "என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார். தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்கா 9:26; 14:11).

## "சகல ஜனங்களும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்"

"அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மேசியாவாக இருப்பாரோ என்று எல்லோரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள்" (லூக்கா 3:15, திருவிவிலியம்). அந்தக் காலக்கட்டத்தில் ஒட்டுமொத்த யூத தேசமும் மேசியாவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதற்குத் தொடர்பாகவே, நமது கர்த்தருடைய பிறப்பின் காலக்கட்டத்தில், பெத்லகேமில் குழந்தைகள் கொல்லப்படுதல் சம்பவமும், சாஸ்திரிகளினுடைய வருகை சம்பவமும் நிகழ்ந்தது.

**டாக்டர் பரார் அவர்களின் கட்டுரையில் இடம்பெறும் வரிகள்:-**

**டேக்டியஸ், சுயடோனிஸ்** மற்றும் **ஜோசபஸ்** என்பவர்கள் மூலம் நாம் அறிந்துக்கொள்வது என்னவெனில், அந்தக் குறிப்பிட்ட காலத்தில், யூதேயாவில் ஒரு வல்லமையுள்ள முடியரசு தோன்றி உலகம் முழுவதிலும் ஆளுகை செலுத்தும் என்ற முற்காலத்துத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் குறித்த பேச்சு, கிழக்குப் பகுதி முழுவதிலும் காணப்பட்டது.

இந்தப் பொதுவான/பரவலான எதிர்ப்பார்ப்பிற்கு இசைவாகவே, யோவான் மேசியாவின் இராஜ்யம் சமீபித்துள்ளது என்றும், அதில் பங்கடைய ஆயத்தமாய் இருக்கும் யாவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவைகளுக்காக மனம் வருந்தி, சீர்ப்பொருந்த வேண்டும் என்றும், இதை அடையாளத்தில் தெரிவிக்கும் வண்ணமாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்றும் பிரசங்கித்தப்போது, திரளான ஜனக்கூட்டம் கவரப்பட்டார்கள். இந்தப் பாவ மன்னிப்பின் விஷயம் யூதருக்கு மாத்திரம் பொருந்துகிறதாய் உள்ளது. மேலும், இது வருடந்தோறும் செலுத்தப்படும் காளை மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தினால் ஈடு செய்யப்பட்டது. அவர்களுடைய நிஜமான/ஆதி பாவத்திற்குரிய மனந்திரும்புதலைக் குறிக்கின்றதாய் இராமல், மாறாக நியாயப்பிரமாணத்துக்கு எதிராக செய்யப்பட்ட சகல தனிப்பட்ட மீறுதல்கள் குறித்த மனந்திரும்புதலாக இருக்கின்றது. ஜனங்கள் எந்தளவுக்கு யோவானின் செய்தியை விசுவாசித்து, அதன்படிச் செயல்பட்டார்களோ, அவ்வளவாய் அவர்கள் இயேசுவின் ஊழியத்திற்கும், இன்னுமாக சுவிசேஷத்தின் சத்தியத்திற்கும் ஆயத்தமாய் இருந்தார்கள். ஆகவேதான், கர்த்தருடைய சீஷர்கள் ஏதோ விதத்தில் யோவானுக்கும், அவருடைய பிரசங்கத்திற்கும் அங்கீகரிப்புக் கொடுத்தவர்களாக இருந்தார்கள். இப்படியாக யோவான் ஸ்நானனுடைய சீஷர்களுக்கு மேசியா யார் என்று முதலாவதாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டது. மேலும், இயேசுவின் சீஷர்களாகுவதற்கான கதவும் அவர்களுக்கு முன்பாகத் திறக்கப்பட்டது.

## "இயேசுவோடு ஐக்கியம் வைக்க நாடுதல்"

"இதோ தேவ ஆட்டுக்குட்டி" என யோவான் ஸ்நானனால் உணர்த்தப்பட்ட இரண்டு சீஷர்களும் தாங்கள் யோவானால் சுட்டிக்காட்டப்பட்ட மேசியாவைக் கண்டுபிடித்துவிட்டபடியால், உடனே அவருடன் ஐக்கியங்கொள்ள நாட வேண்டிய நேரம் வந்துவிட்டது எனவும், கூடுமானமட்டும் விரைவில் அவருடைய ஊழியத்திலும் சேர வேண்டுமெனவும் முடிவு பண்ணினார்கள். அந்த இரண்டு சீஷர்களும் தன்னை விட்டுப் பிரிந்து போவதைக் குறித்து, யோவான் ஸ்நானனும் எவ்வித கண்டனமும் தெரிவிக்கவில்லை. அந்த இரண்டு சீஷர்களில் ஒருவருடைய பெயர் அந்திரேயா என்று பதிவு செய்யப்பட்டுள்ளது; மற்றவர் யோவான் என்று அனுமானிக்கப்படுகின்றது. சுவிசேஷ புஸ்தகத்தை எழுதின இந்த யோவான், தன்னுடைய பெயரைக் குறிப்பிடாமல் தன்னை அறிவிப்பதில் தன்னடக்கமுடையவராகக் காணப்பட்டார். வேறு ஓர் இடத்திலும் கூட யோவான் தன்னை, "இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த சீஷன்" என்று குறிப்பிடுகின்றார். இந்தத் தன்னடக்கம் எவ்வளவு அருமையாக இருக்கின்றது. மேலும், இத்தன்மையானது அவரது (யோவானின்) குணலட்சணங்கள் மீது அனைவரையும் எவ்வளவாய்க் கவருகின்றது. யோவான் ஒருவேளை

தாழ்மையில்லாத மனுஷனாக இருந்திருப்பாரானால், இயேசுவைச் சந்தித்த விஷயத்தைக் குறித்து எழுதும்போது, தான் முதலாவதாக இயேசுவைப் பின்தொடர எண்ணம் கொண்டிருந்ததாகவும், தன்னோடுகூட அந்திரேயா வரும்படிக்கு அழைத்ததாகவும் குறிப்பிட்டிருந்திருப்பார். யோவானுடைய இந்தத் தன்னடக்கமான குணலட்சணம் நம்மை அவர்பால் கவருவதோடல்லாமல், அவர் எழுதியிருப்பவைகளின் மேல் நம்பிக்கைக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.

அந்த இரண்டு சீஷர்களும் கர்த்தரைத் தைரியமாய் அணுகி, "ஐயா நாங்கள் யோவான் ஸ்நானனின் சீஷராய் இருக்கும் மதிப்புடையோர்" என்று தங்களை அவரிடம் அறிமுகம் செய்வதற்குப் பதிலாக, அவர்கள் காட்டின தன்னடக்கம் இன்னும் அதிகமாக முன்மாதிரியாக அமைகின்றது. இவர்கள் இருவரும் அமைதலுடன் அவரைப் பின்பற்றி, கர்த்தர் எங்கே தங்கியிருக்கிறார் என்றும், அவருடன் பழகுவதற்குத் தாங்களே தடையாக இருக்காத வண்ணம், தொடர்புகொள்ளும் வாய்ப்பு எப்படிக் கிடைக்கும் எனச் சிந்தித்தவர்களாக இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களுக்கு அவர் மேல் இருந்த பயபக்தியும், தங்களைக் குறித்துக் கொண்டிருந்த தன்னடக்கமான எண்ணமும் அவர்களைத் தவறு செய்வதிலிருந்து தவிர்த்தது. இப்படியாக அவர்கள் இயேசுவைப் பின்தொடர்ந்தபோது, தாம் தங்கியிருந்த இடத்தை நோக்கிப் பிரயாணித்த இயேசு அவர்களிடத்தில் திரும்பி, "என்ன தேடுகிறீர்கள்" என்று கேட்டார். இதை இன்றைய நடைமொழியில் சொல்ல வேண்டுமெனில் ... நான் ஏதேனும் உதவி உங்களுக்குச் செய்ய வேண்டுமா?" என்பதாகும். பரவசத்தில் "ரபீ நீர் எங்கே தங்கியிருக்கின்றீர்" என்று மாத்திரமே அவரிடம் கேட்டார்கள். "வந்து பாருங்கள்" என்பது நமது கர்த்தரின் பதிலாக இருந்தது. அவர்களும் அவருடன் சென்று, மீதமான நாள் முழுவதும் அவர்கள் என்ன கேட்டிருப்பார்கள் என்றும், அவைகளுக்கு நமது கர்த்தருடைய பதில் என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் கற்பனை செய்துகொள்ளலாம். காரணம், இது குறித்து எவ்விதமான பதிவுகளும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இயேசுவைக் குறித்து யோவான் ஸ்நானனிடம் கேட்ட விஷயங்களைக் கர்த்தரிடம் கூறி, அவருடைய எதிர்க்கால வேலை மற்றும் இராஜ்யம் குறித்து அவரிடம் கேட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. நிச்சயமாக கொஞ்சங் காரியங்களையே அவர்களிடம் கூறியிருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. காரணம், நமது கர்த்தர், "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கூறியுள்ளார் (யோவான் 16:12).

## "புதிய சிருஷ்டிக்கான படிப்பினைகள்"

இங்கு நமக்கு அநேக படிப்பினைகள் உள்ளது. (1) சீஷர்கள் அவரை அணுகின விதத்தில் வெளிப்பட்ட தாழ்மை, (2) தேவன் தங்களுக்கு அருளியுள்ள யாவற்றையும் பெற்றுக்கொண்டு, தங்களுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என்றதான அவர்களுடைய சரியான இலட்சியம். யோவானின் சீஷர்களாய் இருப்பதிலிருந்து, இயேசுவின் சீஷர்களாக முன்னேறுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்தினார்கள். (3) கர்த்தருடன் ஐக்கியங்கொள்வதற்கும், நன்கு பழக்கம்கொள்வதற்கும் இடையூறற்ற விதத்தை அவர்கள் கையாண்ட முறை. (4) நமது கர்த்தர் அவர்களைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு அவர்களை விருந்தோம்பல் பண்புடன் தமது வீட்டிற்கு அழைத்த விஷயம். (5) முழுச் சத்தியத்தையும் அவர்களிடம் சொல்லாதபடிக்கு அவர் கொண்டிருந்த ஞானமான நடக்கை. அவர் பரலோக விஷயங்களையோ, பூமிக்குரிய சோதனைகளையோ, பாடுகளையோ அவர்களிடம் உடனடியாக அப்போது கூறவில்லை. குழந்தைகளுக்குப் பால் ஆகாரமும், நன்கு வளர்ந்தவர்களுக்குக் கனமான ஆகாரமும் என்று அப்போஸ்தலர் பரிந்துரைத்துள்ள வேதவாக்கியங்களின் வரிசைப்படி இயேசு செயல்பட்டார்.

இந்தப் பல்வேறு படிப்பினைகளைக் கர்த்தருடைய அனைத்து அருமையான பின்னடியார்களும் ஏற்றுக்கொள்வதும், இவைகளை அனுபவிப்பதும், இவைகளைச் செயல்படுத்துவதும் எவ்வளவு அவசியமாய் உள்ளது! நம்மில் எத்தனை பேர் ஞானமில்லாமல், வைராக்கியம் கொண்டவர்களாகக் காணப்பட்டு, புதிதாய்ச் சத்தியத்திற்குள் வந்தவர்களுக்குப் பலமான ஆகாரம் கொடுத்துள்ளோம். மேலும், இப்படியாகச் செய்யப்பட்ட காரியங்கள் பின்வாங்கிப்போகச் செய்யவில்லை என்றாலும், எத்தனை பேருக்கு இடையூறாக இருந்தது. நாம் அனைவரும் மாணவர்களே, நாம் சர்ப்பத்தைப் போல் ஞானமுள்ளவர்களாகவும், புறாவைப் போல் கபடற்றவர்களாகவும் இருக்கக் கற்றுக்கொள்வோமாக. சத்தியத்திற்கு ஆயத்தமாய் இருப்பவர்களைத் தவிர, ஆயத்தமற்ற நிலையில் இருப்பவர்கள் முன்பு முத்துக்களைக் காட்டாதிருப்போமாக!

## ‘‘என்ன தேடுகிறீர்கள்?’’

இந்தக் கேள்வியில் விசேஷித்த அழுத்தம் உள்ளது. அவருடைய தோழமையை முதலாவதாக நாடின அந்த இருவரின் எண்ணங்களை விழித்தெழப்பண்ணவே இந்தக் கேள்வியை நமது கர்த்தர் கேட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இது நம்மில் ஒவ்வொருவரும், நம்மையே கேட்க வேண்டிய கேள்வியாகும். மேலும், தற்கால சத்தியத்தின் மீது நாட்டம் காண்பிக்கும் சகலரிடமும் இது கேட்கப்பட வேண்டிய முக்கியமான நல்ல கேள்வியாகும். நாம் என்ன தேடுகின்றோம், நாம் எதற்காக நாடிச் செல்கின்றோம்? உலகம் எதைத் தேடுகின்றது என நாம் அறிவோம்; அதாவது, உலகமானது ஆஸ்தி, மேன்மை, புகழ், சௌகரியம் முதலியவைகளை நாடுகின்றது. கர்த்தரிடம் திரும்பின அநேகரிடமும் கூட இன்னமும் உலகத்தின் ஆவி இருப்பதை நாம் அறிவோம். இத்தகையவர்கள் கர்த்தருடைய சீஷர்களாகவும் இருக்க விரும்புவார்கள், அதேசமயம் உலகப் பிரகாரமான இலட்சியங்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளையும் கொண்டிருக்க விரும்புவார்கள். ஆண்டவர் அன்று அவர்களிடம் கேட்ட கேள்வி நம் ஒவ்வொருவரிடமும் கேட்கப்பட்டதுபோல் நாம் செவிசாய்க்க வேண்டும். நீங்கள் என்ன தேடுகின்றீர்கள்? நம்முடைய ஆண்டவருக்கு நமது பதிலை இருதயத்திலும், ஜெபத்திலும் தெரிவிப்போமாக. மேலும், நாம் பதிலளிப்பதற்கு முன்னதாக, நம்முடைய பதில் உண்மையுள்ளதா என்று நிதானிப்போமாக. ஏனெனில், நாம் நம்மையே ஏமாற்றிக்கொள்ளலாம். ஆனால், நாம் பதிலளிக்கப்போகும் அவரை ஏமாற்ற முடியாது. நாம் தேவனுடைய இராஜ்யத்தையும் தேட வேண்டும் என்பது சரியே; அந்த இராஜ்யத்துடன் கூட, மாபெரும் கனமும், மகிமையும் தெய்வீக ஏற்பாட்டினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்திருந்து, மகிமை, கனம் மற்றும் அழியாமையை நாடுவதும் சரியே. ஆனாலும், தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவது சம்பந்தமாக நமது ஆண்டவர் வேறொரு இடத்தில் பேசின விஷயங்களையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். அதென்னவெனில், நாம் முதலாவதாகத் தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேட வேண்டும் என்பதேயாகும்.

அநீதியான பாதையின் வழியாக இராஜ்யத்தை அடையமுடியாது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அநீதி, அக்கிரமம், நியாயமற்ற நிலைமை, சுயநலம், சுயதிருப்தி ஆகிய வழிகள் வேறு திசைகளுக்கே வழிநடத்துகின்றது. மேலும், கர்த்தருக்கு துன்பங்கள் வந்ததுபோல, தற்காலத்தில் தேவபக்தியாய் நடக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று ஆண்டவர் தமது வார்த்தையின் மூலமும், முன்மாதிரியின் மூலமும் நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். ஊழியக்காரனும் தனது கர்த்தரைக்காட்டிலும், உலகத்தின் தயவை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது. ஆகவே, நாம் இராஜ்யத்தைத் தேடுவது என்பது, சுயத்தை வெறுக்கும் இடுக்கமான வழியைத் தெரிந்தெடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அதாவது, பாவத்திற்கு எதிராக சிலுவையின் நற்போர் சேவகராக நாம் போராடும் விஷயத்தில், அவரிடத்திலான நமது உண்மையினிமித்தம், உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனிடமிருந்து எதிர்ப்பு வருமென்ற முழுமையான அறிவுடன், கர்த்தரின் கீழ் நம்மை ஒப்புவித்துவிடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். யாரெல்லாம் கர்த்தரை உண்மையாய், நேர்மையாய், சுயநலமில்லாமல், தந்திரமில்லாமல் தேடுகிறார்களோ, அவர்களே அவரைக் கண்டடைந்து, அவருடன் ஐக்கியங்கொண்டு, அவருடைய உண்மை சீஷர்களாகி, இறுதியில் அவருடைய இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்திரரும் ஆவார்கள்.

## ‘‘முதலாவது தனது சகோதரனைக் கண்டு’’

யோவான் ஸ்நானன் சொன்னதைக் கேட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தவர்களில் ஒருவர் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா ஆவார். ஒரு வேதாகம மொழியாக்கத்தில் இரண்டு சீஷர்களுமே தங்களது சகோதரர்களைச் சந்திக்க தேடினார்கள் என்றும், அந்திரேயாதான் முதலாவதாக தனது சகோதரனைக் கண்டடைந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது, அதென்னவெனில், சத்தியத்தின் சேவையை ஆரம்பித்த ஆரம்பக்கட்டத்தில், இந்தச் சீஷர்கள் தங்களுடைய சொந்த சகோதரரிடத்திற்கு முதலாவது சென்றார்கள். இது அவர்களுடைய இருதயத்தில் சகோதர சிநேகம் இருந்ததைக் காட்டுகின்றது. மேலும், இயேசுவின் சீஷர்களாக இருப்பதற்குப் பாத்திரவானாக இருக்கும் யாவரிடமும் இது காணப்பட வேண்டும். மேலும், இது மத ரீதியிலான விஷயங்களில் அவர்களுடைய சகோதரர்கள் மீது அவர்களுக்கு இருந்த செல்வாக்கையும் காட்டுகின்றது. ஆகவே, நாமும் முதலாவது நமக்குச் செல்வாக்கு இருக்கும் சொந்தமானவர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவிப்போமாக. ஒருவேளை சாதகமான நிலைகள் ஏற்படாவிட்டாலும் நாம் சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் தம்முடைய சீஷர்களாகத் தெரிந்துக்கொண்டவர்களில் அநேகர் கனமும், செல்வாக்கும் உடையவர்களாயிராமல், இழிவானவர்களாகவே இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் உறுதியளித்துள்ளதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

கர்த்தரோடு ஐக்கியங்கொள்வதற்கான சிலாக்கியத்தை அவர் நமக்கு அருளியுள்ளதான காரியமோ, அவர் நம்மில் வெறுக்க முடியாத ஏதோ ஒன்றை நாம் பெற்றிருக்கின்றோம் என்றும், அதை அவர் தமது சத்தியம் மற்றும் கிருபையினால் வனைய விரும்பினதால், நம்மை எடுத்துக் கொண்டார் என்றும், இறுதியில் அதை முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தின் மூலம், பிதாவின் முன்பு அருமையானதாகவும், குற்றமற்றதாகவும் ஒப்புவிப்பார் என்றதுமான நிச்சயத்தை அருளுகின்றது. மீண்டுமாக நமக்குச் சொந்தமானவர்கள் மத்தியில் அன்பு செலுத்தி, நம்மால் முடிந்த மட்டும் அவர்கள் சத்தியத்திற்குள் நடத்தப்பட உதவுவதற்குரிய கடமையை நாம் நினைப்பூட்டுகின்றோம். இது சகோதர சகோதரிகள் மத்தியில் காணப்படுகின்ற ஒழுங்காய் இருக்கிறதுபோல, கணவன் மனைவிக்கு இடையேயும், பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் காணப்பட வேண்டும். ஒருவேளை மனைவியானவள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், கூடுமானமட்டும் அதைத் தனது கணவனின் கவனத்திற்குக் கொண்டுவருவதே அவளுடைய முதல் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். ஒருவேளை கணவனானவன் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், அதை அவன் தனது மனைவியின் கவனத்திற்குக் கொண்டு வருவதையே அவன் தனது முதல் சந்தோஷமாகவும், சிலாக்கியமாகவும் கருத வேண்டும். இப்படியே பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் இருக்க வேண்டும். ஆனால், தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் வந்தவர்கள் மத்தியிலும் கூட நேர்த்தியான, இயல்பான இவ்வழிமுறை கடைபிடிக்கப்படாததைக் குறித்து நாம் ஆச்சரியமடைந்ததை தெரிவிக்கின்றோம்.

கணவனானவன் மனைவியின் நலன் கருதி, அவளுக்குச் சத்தியம் கற்றுக்கொள்ள நேரம் கிடைக்கத்தக்கதாக, வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதில் அவளுக்கு உதவி செய்வானாக. சத்தியத்திற்குள் மனைவி வந்திருந்தால், அவளது கணவனும் கூட சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும் சிலாக்கியம் மற்றும் ஆசீர்வாதங்கள் முதலியவைகளில் பங்கடையத்தக்கதாக, கணவனுக்குச் சாதகமாய் அமையத்தக்கதாகக் காரியங்களை ஒழுங்கு செய்வதில் மிகவும் கவனம் செலுத்துவாளாக. "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்." அதாவது, அவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, அதிலும் விசேஷமாக அவர்களின் மேலான ஆவிக்குரிய நலன் கருதி, எல்லாவற்றிற்கும் மேலான சந்தோஷத்திற்குள் அவர்களும் கொண்டு வரப்படத்தக்கதாக, உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். "மனைவிகளே உங்கள் புருஷர்களைக் கனம் பண்ணுங்கள்." அதாவது, அவர்களைப் புரிந்துக்கொண்டவர்களாக இருந்து, அவர்களுக்கும் அனைத்து நன்மையானவைகளும் கிடைக்க வேண்டும் என்று விரும்பி, அவர்களுக்கு உதவி செய்வதற்காக உங்கள் சிறப்பான செல்வாக்கைப் பயன்படுத்துங்கள்.

## "நாங்கள் மேசியாவைக் கண்டோம்"

இந்தச் செய்தியை அவர்களுடைய சகோதரருக்கு அறிவித்தார்கள். மேசியா என்ற எபிரெய வார்த்தைக்குரிய கிரேக்க வார்த்தை கிறிஸ்துவாகும். அவர்கள் நெடுங்காலத்திற்கு முன்னதாகவே மேசியா வாக்களிக்கப்பட்டிருந்தார் என்பதை அறிந்திருந்தார்கள். மேலும், பல்வேறு போராட்டங்களின் மத்தியிலும் அவர்களுடைய முழுத் தேசமும் அவருடைய வருகைக்கும், அவர்களுடைய இராஜாவாக வந்து, அவர் அவர்களுக்கு அளிக்கப் போகும் ஆசீர்வாதங்களுக்கும் ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், நம்பிக்கையுள்ளவர்களாகவும், எதிர்ப்பார்த்திருந்தவர்களாகவும் இருந்தார்கள். மேலும், அவர் அவர்களைச் சகல தீமைகளிலிருந்தும் விடுவித்து, தேவனுடைய வல்லமையினால் அவர்களை உலகத்தின் ஒளியாக உயர்த்துவார் என்றும், இவ்விதமாக அவர்கள் மூலம் சகல தேசங்கள் மீதும் ஆசீர்வாதங்கள் பொழியப்படும் என்றும் அவர்கள் எதிர்ப்பார்த்திருந்தார்கள். சாயங்கால வேளையை இயேசுவோடு செவழித்த அந்த இருவரும் இயேசுவே, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் ஸ்நானனால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் மெய் என்று உறுதியடைந்தார்கள்.

பேதுரு (இவர்களின்) இச்செய்தியை எப்படி ஏற்றுக்கொண்டார் என்று விவரிக்கப்படவில்லை. எனினும், பேதுரு இவ்விஷயத்தைக் குறித்துக் காணவும், அறிந்துக்கொள்ளவும், முடிவெடுக்கவும் வேண்டி துரிதமாய்ப் புறப்பட்டு வந்திருப்பார் என்று நம்மால் அவருடைய நடத்தைகள் வைத்து யூகிக்க முடிகின்றது. இயேசு எவ்விதமான நிரூபணத்தை அவருக்குக் கொடுத்தார் என்பது பற்றி விவரிக்கப்படவில்லை. எனினும், அவர் இயேசுவை விசுவாசித்து அவருடைய சீஷராகி, ஒரு புதிய நாமத்தையும் பெற்றுக்கொண்டார். அவருக்கு யோனாவின் குமாரனாகிய சீமோன் என்பது நாமமாயிருந்தது. ஆயினும், அவர் சீஷராக சீமோன் பேதுரு என்று அழைக்கப்பட்டார். அதன் அர்த்தமாவது கல் ஆகும். இவ்வாறாக இயேசு இந்த மனுஷனாகிய பேதுரு, எதிர்க்காலத்திலுள்ள மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களில் ஒன்றாக தாம் அடையாளங்கண்டு கொண்டதைச் சுட்டிக்காட்டினார். இவ்வாலயத்தைக் குறித்துதான், பேதுரு பிற்பாடு 1 பேதுரு 2:4, 5-ஆம் வசனங்களில் விவரிக்கின்றார்.

## "கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து"

அடுத்த நாளில் இயேசு கலிலேயாவுக்குப்போக மனதாயிருந்து, போகிற வழியில் பிலிப்புவைக் கண்டு, தம்முடைய பின்னடியாராக வரும்படி அவரைத் தனிப்பட்ட விதத்தில் அழைத்தார். பின்னர் பிலிப்பு, நாத்தான்யேலை கண்டடைகின்றார். இந்த நாத்தான்யேல் வேதவாக்கியங்களில் பர்த்தொலொமேயு என்றும் அழைக்கப்படுகின்றார்.

சீஷர்களைக் கண்டுபிடிக்கும் இச்சம்பவமானது பெத்தாபராவிலே நடந்தது (யோவான் 1:28). மேலும், இங்குதான் இயேசு தங்கியிருந்தார் என்று நாம் பார்க்கின்றோம். ஆய்வாளர்கள் இந்தப் பெத்தாபராவை, பெத்தானியா என்று அழைப்பதினால், நமது கர்த்தர் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் குடும்பத்தோடு பழக்கம் கொண்டிருந்தார் என்ற அனுமானம் காணப்படுகின்றது. மேலும், சீஷர்கள், யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து, இந்தப் பெத்தாபராவிற்கு/பெத்தானியாவிற்கு யோர்தான் நதியைக் கடந்து சென்றிருக்க வேண்டும் என்ற அனுமானமும் காணப்படுகின்றது. நமது கர்த்தர், யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தினால் கூட்டிச் சேர்க்கப்பட்டுள்ள மிகுந்த உண்மையுள்ளவர்களில் சிலரைக் கண்டுபிடிக்கும்படி, யோவான் சஞ்சரித்துக் கொண்டிருந்த இடங்களில் தங்கியிருந்தார் என்பது உறுதியான காரியமாகும்.

யோவான், யாக்கோபு, அந்திரேயா, சீமோன் பேதுரு, பிலிப்பு மற்றும் நாத்தான்யேலாகிய சீஷர்கள் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கக் காரியமாகும். (யூதாஸ் மாத்திரம் யூதேயாவிலிருந்து வந்தவராக இருக்கின்றார்). இந்த மனுஷர்கள் தங்கள் வீடுகளிலிருந்து, இத்தனை தொலைதூரத்தில் வந்து, என்ன பண்ணிக்கொண்டிருந்தார்கள்? இவர்கள் யோவானுடைய பிரசங்கத்தை கேட்ட திரளான ஜனங்களில் சிலராகக் காணப்பட்டவர்கள் என்றும், இவர்கள் வரவிருக்கிற மேசியாவின் மீது ஆழமான விருப்பம் கொண்டவர்களானபடியால், நீண்ட பிரயாணம் மேற்கொண்டு, யோவான் என்ன சொல்கின்றார் என்பதைக் கேட்பதற்கும், மேசியாவின் வழியை ஆயத்தம் பண்ணுவதற்காக யோவானோடு, அவரின் சீஷராகச் சேர்ந்துகொள்ளவும் தங்கள் வியாபாரங்களை/வேலைகளை விட்டு வந்தவர்கள் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். ஒருவகையான சத்தியத்தின் ஊழியத்தைக் கொண்டு, பிற்காலத்தின் முழுமையான இன்னொரு ஊழியத்திற்காக எத்துணை அருமையாக நமது கர்த்தர் நமது இருயத்தை ஆயத்தப்படுத்துகின்றார். "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" (யோவான் 17:6). இவ்வசனம், இந்தச் சீஷர்கள் இயேசுவிடம் வருவதற்கு முன்னதாகவே, தேவனுக்குப் பயப்படுகின்ற, அர்ப்பணிக்கப்பட்ட மனுஷர்களாய் இருந்தார்கள் என்பதற்கு இசைவாய் உள்ளது. இதிலுள்ள நமக்கானப் படிப்பினை என்னவென்றால், ஒருவேளை நமக்கு வரும் ஒவ்வொரு சத்தியத்திற்கும் நாம் உண்மையுடனும், வைராக்கியத்துடனும் இருந்து அதன்படிக் கிரியைக் காட்டுவோமானால், நாம் இன்னும் அதிகமான வேறு சத்தியங்களுக்கு ஆயத்தமாக்கப்படுவோம். இந்த மனுஷர்களிடம் அர்ப்பணிப்பு ஆவி இல்லையெனில், இவர்கள் ஒருவரும் யோவானோடு, அவருடைய ஊழியத்தில் சேரும்படித் தங்கள் வேலைகள் அனைத்தையும் விட்டுவந்தும் இருக்கமாட்டார்கள், இயேசுவின் மதிப்பிற்குரிய அப்போஸ்தலர்களாகுவதற்குத் தயாராகவும் இருந்திருக்க மாட்டார்கள்.

## "நீர் என்னை எப்படி அறிவீர்?"

நாத்தான்யேலுடைய அழைப்புப் பற்றின சம்பவம் மிகவும் சுவாரசியமானதாகும். பிலிப்புவும் நமது கர்த்தரின் செல்வாக்கின் கீழ் வந்து, அவருடைய சீஷராயிருப்பது பாக்கியமான சிலாக்கியம் என்றும், இயேசுதான் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவென்றும் உணர்ந்துகொண்டார். இந்த முழுமையான நம்பிக்கையுடன் பிலிப்பு தனது நண்பனாகிய நாத்தான்யேலைச் தேடிச்சென்றார். தன்னைப்போல் இந்த நாத்தான்யேல் கர்த்தரைச் சேவிப்பதற்கும், மேசியாவின் இராஜ்யத்திற்கென ஆயத்தமாய் இருப்பதற்குமான விருப்பத்தில் ஒரே சிந்தைக் கொண்டுள்ளவர் என்று பிலிப்பு அறிந்திருந்தார். பிலிப்பு, நாத்தான்யேலைக் கண்டவுடன், "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கத்தரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவான் 1:45). நாத்தான்யேல் ஆழமாய் யோசிக்கும் அறிவாற்றல் கொண்ட மனுஷன் ஆவார். அவர் தனது நண்பனாகிய பிலிப்பு ஏதோ ஒரு காரியத்தை எதுவும் யோசிக்காமல் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும், ஒரு மாயத்தோற்றத்தினால்/ஏமாற்றுக்காரனால் வஞ்சிக்கப்பட்டுள்ளார் என்றும் எண்ணி,

"நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?" என்று தனது மறுப்பைத் தெரிவித்தார். அதாவது, "அந்தப் பட்டணமே ஓர் இழிவான பட்டணமாக இருக்க, அவ்விடத்திலிருந்து எவ்வித கனம் நிறைந்த மாபெரும் மனுஷர்கள் வர முடியாது. இதுவரையிலும் நாம் அறிந்திருக்கிறபடி அப்பட்டணத்தைக் குறித்து எவ்விதத் தீர்க்கத்தரிசனங்களும் தெரிவிக்கவில்லை. பிலிப்புவே நீர் கூறும் (இயேசு எனும்) மேசியாவைக் குறித்து எனக்குத் தவறான அபிப்பிராயமே ஏற்பட்டுள்ளது" என்ற விதத்தில் நாத்தான்யேல் கூறினார்.

இப்படியே கர்த்தர் மகிமைப் பொருந்தின இராஜாவாக தமது இரண்டாம் வருகையில் வருவதை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்ற கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியிலும் சிலர் காணப்படுகின்றார்கள். இந்த இரண்டாம் வருகையைக் குறித்த சத்தியங்களை நாம் கண்டுபிடித்துள்ளோம் என்றும், நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசிகளும் நாம், அறுவடையின் காலத்தில் அதாவது, மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தின் நாட்களில் (Parousia) இருக்கிறோம் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது என்றும், நாம் அவர்களிடம் எடுத்துரைக்கும்போது, நமது வைராக்கியத்தையும், உற்சாகத்தையும் பார்த்து ஏளனஞ்செய்து, நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நமக்கு ஆலோசனை வழங்குவதுண்டு. மேலும், பிரசன்னத்தைக் குறித்த (Parousia) செய்தி எங்கிருந்து வருகின்றது? என்று கேள்வி கேட்கின்றார்கள். மேலும், இக்கேள்விக்குப் பதிலாக, நாம் இச்செய்தி மகான்களிடமிருந்தோ, ஞானிகளிடமிருந்தோ, தற்காலத்திலுள்ள வல்லவர்களிடமிருந்தோ, சாஸ்திரிகளிடமிருந்தோ வராமல், எளிமையானவர்களிடமே இருந்து வருகின்றது என அறிவிக்கும்போது, அவர்களுடைய மறுகேள்வி, "இத்தகைய எளிமையானவர்களிடமிருந்து என்னத்தை எதிர்ப்பார்க்க முடியும்?" என்பதாகக் காணப்படுகின்றது; அதாவது, நாம் பரிசேயர், வேதபாரகர் மற்றும் நியாயப்பிரமாணிக்கர்களின் செய்தியைக் கேட்க வேண்டும் என்று அறிவுறுத்துவதுபோல் கூறுவதுண்டு.

அத்தகைய சந்தேகப்படும் சகோதரர்களுக்கு, பிலிப்பு நாத்தான்யேலுக்குக் கொடுத்த பதிலாகிய, "வந்து பார்" என்பதையே நாமும் தெரிவிப்போமாக. அதாவது, வந்து தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, சோதித்து, ஆராய்ந்துப் பாருங்கள். பிலிப்போடு நாத்தான்யேல் உடனடியாகச் செல்லவில்லை. பிலிப்பு சோர்வடைந்து, தனது வழியில் போயிருக்க வேண்டும். காரணம், தான் தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனாக உயர்வாகக் கருதிய ஒருவர், செவிசாய்க்கவும், ஆராய்ந்துப்பார்க்கவும் விருப்பமற்றவராகக் காணப்படுகின்றார் என்பதினாலேயே ஆகும். பிலிப்புவின் இவ்வழைப்புக்கு உடனடியாகச் சம்மதம் அளிக்காததற்கு, சில காரணங்கள் நாத்தான்யேல் கொண்டிருந்தார். நாத்தான்யேல் இவ்விஷயத்தை மிக முக்கியமாகக் கருதினார். காரணம் இவ்விஷயம் தனது நலனை மாத்திரம், பாதிப்பதோடல்லாமல், தனது நண்பர்களின் நலனையும், கர்த்தருடைய நோக்கத்தைப் பொதுவாக பாதிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது என்றும், தானும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்றும் எண்ணினார். நாத்தான்யேலிடம், பிலிப்பு வந்து இவைகளைக் குறித்துக் கூறுவதற்கு முன்பே, அவர் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டும், இவைகளைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டும், ஜெபம் பண்ணிக்கொண்டும் இருந்தார். மேலும், தான் கண்ணிகள் மற்றும் வஞ்சனைகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், தனது தீர்மானங்கள்/தீர்ப்புகள் கர்த்தரால் வழிநடத்தப்பட வேண்டுமென்றும், தான் எந்த ஏமாற்றுக்காரனாலும் வஞ்சிக்கப்படக்கூடாது என்றும் நாத்தான்யேல் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். நாத்தான்யேல், தான் நாடின கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்மேல் சார்ந்தவராக, இவ்விஷயத்திலுள்ள நன்மை, தீமைகளை அறிந்திட முயற்சித்து, தனது தவறான அபிப்பிராயங்கள் அனைத்தும் நீங்கின பிற்பாடு, கொஞ்சம் காலந்தாமதமாகப் பின்பற்றிச் செல்லலாம் என்றிருந்தார்.

இப்படியாக, நம்முடைய அனைத்து அருமையான நண்பர்களும் காணப்பட்டால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். கர்த்தருடைய உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரர்களாகிய நாமும் நாத்தினியேல் செய்ததுபோல, கர்த்தரையும், அவருடைய பாதுகாப்பையும், வழிநடத்துதலையும் நாடி, பின்னர் தேவனுடைய வார்த்தையைக்கொண்டு அனைத்தையும் ஆராய்வோமாக! சிலர் நாத்தான்யேலின் இந்த வழிமுறையை உடனடியாக கைக்கொள்ள மாட்டார்கள் என்றாலும், உண்மையாய் ஜெயங்கொள்பவர்களின் வகுப்பாரிலுள்ள அனைவரும் இறுதியில் இவ்வழிமுறையைக் கையாண்டு, வழிநடத்தப்பட்டு, தற்கால சத்தியத்தின் தொடர்புக்குள் வந்து, நமது கர்த்தருடைய பிரசன்னத்தையும் (Parousia), உணர்ந்துக்கொள்வார்கள், இன்னுமாக அவர் செய்துகொண்டிருக்கும் (சபையின்) அறுவடை வேலையையும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென இராஜ்யத்தில் மகிமையில் தம்மோடு பிரகாசிக்கத்தக்கதாக முதிர்ந்த மணிகளைக் களஞ்சியத்தில் அவர் சேர்த்துக் கொண்டிருக்கும் வேலையையும் உணர்ந்துகொள்வார்கள். (மத்தேயு 13:43).

## "உங்கள் கண்களும், காதுகளும் பாக்கியமுள்ளவைகள்"

நமது கர்த்தர், நாத்தான்யேலை வரவேற்ற காரியத்தை, குற்றங்கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அவரை அணுகின வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாணிக்கர்கள் சிலரைக் கர்த்தர் வரவேற்றதோடு நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இத்தகையவர்களோடு அவர் உவமைகளிலேயே பேசினார். மேலும், அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றோ, புரிந்துக்கொள்வார்கள் என்றோ கர்த்தர் எதிர்ப்பார்க்கவில்லை; ஆனால், நாத்தான்யேல் போன்றவர்களிடம், அவர்களுடைய இருதயங்களைத் தமது ஞானத்தினால் அறிந்துக்கொண்டவராக மிகவும் கிருபையாக இருந்தார். நம்மால், இருதயங்களை அறிந்துக்கொள்ள முடியாத காரணத்தினால், நாம் (இயேசுவைப்போல்) இப்படியாகச் செயல்படக்கூடாது. உத்தம இஸ்ரயேலர்களே நன்கு செவிசாய்த்து, அழைப்பை ஏற்றுக்கொண்டு பரிசைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற போதிலும், நாம் அனைவரிடமும் பொறுமையாயும், மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும்; சத்தியத்திற்குச் செவிசாய்த்தாலும், சாய்க்காவிட்டாலும் அவர்கள் சத்தியத்தைப் புரிந்துக்கொள்வதற்காக நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

இயேசு மற்றும் அவர் அருகே நின்றவர்கள் அருகில் நாத்தான்யேல் வருவதற்கு முன்னமே, நாத்தான்யேல் கேட்கத்தக்கதாக, "இதோ கபடற்ற உத்தம இஸ்ரயேலன்" என்று ஆண்டவர் கூறினார். எத்துணை அருமையான பாராட்டு! சிறுமந்தையில் ஒருவராகவும், அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் இருப்பதற்கு நாத்தான்யேல் பாத்திரமாக இருந்ததில் ஆச்சரியமல்லவே! பிலிப்பும், நாத்தான்யேலோடு போராடியிருக்க வேண்டும்; வந்து பார்க்கும்படி வேண்டியும் இருந்திருக்க வேண்டும். நாத்தான்யேலுடைய தேசத்தார் அபாத்திரமாய்ப் போய்விட்ட ஆசீர்வாதங்களுக்கு, இவருடைய இருதயத்தின் உத்தமமானது, இவரை அதற்குப் பாத்திரமாக்கிற்று. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைப்பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:11-12). கர்த்தர் தம்மை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான மனநிலையில் இருந்தவர்களுக்கு உதவினார். மேலும், அவர்கள் விசுவாசங்கொள்ளவும் உதவினார்; அவர்களின் நம்பிக்கையை உற்சாகமூட்டும் வண்ணமாக, அவர்களில் ஒருவரிடம் (ஒருமுறை), "அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றும் கூறினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம் (யோவான் 20:27).

தான் உண்மையும், உத்தமுமுள்ள இஸ்ரயேலன் என்றும், தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வைத்துள்ள யாவற்றையும் தான் நாடுகிறவன் என்றும், நாத்தான்யேல், தன்னைப்பற்றி உணர்ந்துகொண்டாலும், (இயேசுவின்) இந்தச் சாட்சியில் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஏனெனில், இவ்வார்த்தைகள் முகஸ்துதிக்காகவும் பேசப்பட்டிருக்கலாம் என்று கருதினார். ஆகவே, கர்த்தரைக் குறுக்கிடும் வண்ணமாகவே, "நீர் என்னை எப்படி அறிவீர்?" என்று கேட்டார். அதாவது, "நீர் பேசின இந்த வார்த்தைகளை எந்த அதிகாரத்தில் பேசினீர்? நாம் இதற்கு முன்பாக சந்தித்ததுப்போல் எனக்கு ஞாபகமில்லையே" என்ற விதத்தில் கூறினார். அதற்கு "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" என்பதே, இயேசுவின் பதிலாக இருந்தது (யோவான் 1:48). அத்திமரத்தின் தாழ்வான கிளைகளுக்குக் கீழாக, தான் எவ்வாறு தவழ்ந்து சென்று, மறைவில் பரம பிதாவை நோக்கி ஞானத்திற்காகவும், மேசியாவைக் குறித்த சரியான நிரூபணத்திற்காகவும் ஜெபம் பண்ணினதை நாத்தான்யேல் நினைவுகூர்ந்தார். யாரொருவர் தன்னுடைய அந்த ஜெபத்தை அறிந்திருந்தாரோ, அவரால் அதற்குப்பதிலும் கொடுக்க முடியும், தம்மை வெளிப்படுத்தவும் முடியும். மேலும், அத்தகையவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மேசியாவாக இருக்க வேண்டுமென்று நாத்தான்யேல் உணர்ந்தார். நாத்தான்யேலின் விசுவாசம் செயல்பட ஆரம்பித்தது, உடனே, "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரயேலின் ராஜா என்றார்" (வசனம் 49).

நமது கர்த்தர் இன்றும் இப்படியாகத்தானே செய்கின்றார். இன்று காலங்கள் மற்றும் வேளைகளைக் குறித்தும், தெய்வீகத் திட்டத்தின் அம்சங்கள் குறித்தும், அறுவடை வேலைகள் தொடர்பான காரியங்கள் குறித்ததுமான வெளிச்சத்திற்கு, விசுவாசத்திலும், ஜெபத்திலும் நடத்தப்படுவது உண்மைதான் அல்லவா? மேலும் இத்தகையவர்கள் கர்த்தரால் விசேஷித்த விதமாக உதவி பெறப்படுவதும் உண்மைதான் அல்லவா? மேலும், சத்தியம் இவர்களுடைய மனங்களில் விசேஷித்த விதமான தெளிவில் காட்டப்படுவதும் உண்மைதான் அல்லவா? அதேசமயம் அறிவு பெற்றுக்கொள்ள வேண்டும் (curiosity) அதாவது, சத்தியம் கேட்டும் அதிலிருந்து விலக விருப்பம்

கொண்டுள்ளவர்கள் இருளில் விடப்படுவதையும் நாம் பார்க்கின்றோமே. கர்த்தர் தமது முதலாம் வருகையின்போது சீஷர்களாகத் தெரிந்துக்கொண்டவர்கள் மத்தியில், இத்தகைய அருமையான பண்புகளை நாம் உணர்ந்துக்கொள்ளும்போது, இதே பண்புகளை நம்மில் விருத்திச் செய்வதற்கும், தேவனிடத்தில் உண்மையும், விசுவாசமும், சாந்தமும் கொண்டுள்ளவர்களாகக் காணப்படுபவர்களின் கவனத்திற்குச் சத்தியத்தைக் கொண்டு செல்வதற்கு நமது விசேஷித்த முயற்சிகளைச் செலுத்துவதற்கும் நாட வேண்டும்.

## "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்"

நாத்தான்யேல் தனது விசுவாசத்தை அறிக்கைச் செய்த மாத்திரத்தில், நமது கர்த்தர் அவரிடம் இதுவரை நாத்தான்யேல் அறிந்துக்கொண்ட விஷயங்கள், அவர் தமது சீஷராக இருந்து படிப்படியாக அறிந்து, புரிந்துக்கொள்ளப் போகின்ற இன்னும் மேலான காரியங்களுக்கு முன்பாக ஒன்றுமில்லை எனக் கூறினார். இது இன்று நம்முடைய விஷயத்திலும் உண்மையாய் இருக்கின்றதல்லவா? கர்த்தரையும், தெய்வீகத் திட்டத்தையும் நாம் அறிய ஆரம்பித்த ஆரம்பக் காலங்களில் நமது இருதயத்தை நிரப்பின சந்தோஷம், நம்பிக்கை, எதிர்ப்பார்ப்புகள் ஆகியவை, போகப் போக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கு வெளிப்படுத்தபடுகின்ற ஐசுவரியமான கிருபை, அன்பு மற்றும் இரக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறியதாகவே காணப்படுகின்றது. நமது ஆவிக்குரிய பார்வை விரிவடையும்போது, நமது புத்திக்கு எட்டாத தேவ அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை விரிவாகப் பார்க்க முடிகின்றது (எபேசியர் 3:18-19).

நாத்தான்யேலிடம் நமது கர்த்தர் கூறின நிஜமான யாக்கோபின் ஏணியாக, இயேசுவை விசுவாசத்தினால், நம்மால் பார்க்க முடிகின்றது. யாக்கோபு தனது தரிசனத்தில் பூமியிலிருந்து, வானத்துக்கு ஓர் ஏணி இருப்பதையும், தொடர்பு பரிமாற்றங்கள் காணப்படுவதையும் பார்த்தார். வெளியாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தெய்வீகத் திட்டத்தின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது, நமது கர்த்தரும், அவரோடுகூடச் சபையும், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் தேவனுக்கும், மனுக்குலத்திற்குமிடையே தொடர்பு ஏணியாக இருந்து, பூமியின் குடிகளனைத்தும் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகக் கிருபையின் பரிமாற்றங்களாக இருப்பார்கள். மேலும், இவர்கள் மூலமாக கர்த்தருடைய ஆசீர்வாதமும், மகிமையும் பூமிக்குக் கொண்டுவரப்படும். இப்பொழுதும் தேவனுடைய மனித சிருஷ்டிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்பட்ட முதற்பலனானவர்கள், சேர்க்கப்பட்டு, தேவனுடைய சுதந்திரர்களாகவும், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்களாகவும், கண் இமைக்கும் முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மறுரூபத்தின் வாயிலாகத் தேவனிடத்தில் ஏறிப்போவார்கள்.

**ஆமென்!**

---

# போதித்தல் என்றால் என்ன?

## *சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நான் விஷயத்திற்குள் கடந்துபோவதற்கு முன்னதாக, இப்படி எழுதுவதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய இந்தக் கேள்வியானது, அநேக வாரங்களாக, மிகவும் விடாப்பிடியாய் மனதை அழுத்திக்கொண்டிருந்தது மற்றும் அடக்கிப்போடப்படவும் முடியவில்லை. அதை நான் அடக்கவும், மறக்கவும், என் காரியமல்ல என்று விவாதித்து, அதை அசட்டைப்பண்ணவும் முயன்றேன்; "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்பதானது என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது மற்றும் அது என்னைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது மற்றும் அதை என்னால் மாற்றிப்போடவும் முடியவில்லை. அதை நான் கர்த்தரிடத்தில் எடுத்துச் சென்று, என்னுடைய பேனா எழுத்துக்களுக்குக் வழிக்காட்டும்படிக்கு அவரிடம் ஜெபித்துக்கொண்டேன்.

முதலாவது காரியம் - மனைவியின் கீழ்ப்படுத்தப்படுதல் குறித்தும், புருஷனுடைய தலைமைத்துவம் குறித்தும் அடிக்கடி குறிப்பிடுவதும், இவ்விஷயங்களை மிகவும் மிகைப்படுத்திக் கூறுவதும் சிலர் மத்தியிலான வழக்கமாய் இருக்கின்றது (ஐயத்திற்கிடமின்றி தங்களையும் அறியாமல்தான் இப்படிக் கூறுகின்றனர்); ஆனால் இவர்கள் (என் காதுகளுக்கு எட்டினது வரையிலும்) புருஷனுக்குரிய தலைமைத்துவம் தவிர, மற்றப்படி புருஷனுக்குரிய கடமைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முற்றிலுமாகத் தவறிவிடுகின்றனர்; "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்தார்" என்றும், "உங்கள் மனைவியர் வலுகுறைந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு மதிப்புக்கொடுங்கள்" எனும் கட்டளைகளைச் சுட்டிக்காட்டாமல் விட்டுவிடுகின்றனர் (எபேசியர் 5:25; 1 பேதுரு 3:7 திருவிவிலியம்). வேதவாக்கியங்களை இப்படி ஒரு சார்பாகச் செயல்படுத்துதல் என்பது ஒரு குறிப்பிட்ட வகை புருஷனை, துரதிருஷ்டவசமாக அரிதான வகையாய் இராதபுருஷனை, குறுகிய மனப்பான்மையுடைய கொடுங்கோலனாக்கி/அடக்குமுறையாளனாக்கி, மனைவி தனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எப்போதும் அவளை நினைவுப்படுத்துகிறவனாக்கி, தான் யார் மீதோ எஜமானாக இருப்பதுபோன்ற எண்ணத்தினால் அவனைப் பெருமிதம்கொள்ளச் செய்கின்றது மற்றும் தன் சார்பிலான அவனது கடமையினை அவன் புறக்கணித்துவிடச்செய்கின்றது மற்றும் ஒருவேளை அவள் தாழ்வுபடுகிறவளாக இருப்பாளானால், அவளை அடிமை நிலைக்குத் தாழ்வுப்படுத்துகின்றான். இப்படியாக அவளை அவன் வற்புறுத்துகையில், அவளை மதிப்பதை அவன் நிறுத்திவிடுகின்றான். இம்மாதிரியான போதித்தல்களானது சில குறிப்பிட்ட மனப்பண்பாற்றலுடைய புருஷர்களை (இத்தகைய அநேகரை), டெனிசீ அவர்களால் வாட்ச் டவர் நவம்பர்-15-ஆம் வெளியீட்டில் இடம்பெற்ற அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பாத்திரங்களாக்கிவிடுகின்றது.

இப்படியான ஒரு துன்பம் எனக்கு இருக்கின்றதெனக் கற்பனைப்பண்ணப்படாதபடிக்கு, எனக்கு இப்படி ஒரு துன்பம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனது கணவர் சிறந்த கிறிஸ்தவ கண்ணியவான்களில் ஒருவராவார் மற்றும் என்னைப் பொறுத்தவரையில் அவர் விழுந்துபோன மனுஷீகத்தில் முடிந்தமட்டிலும் குடும்பத்தலைவருக்குரியவைகளை நிறைவேற்றுபவராகக் காணப்பட்டு, என்னுடைய ஜீவியத்தைப் பாசத்தினாலும், பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும் அழகுபடுத்தியுள்ளார்.

இரண்டாவது காரியம் கல்வி கற்பிப்பவர்கள் அனைவரும், பொதுத் திறமைகளின் கல்வி கற்பிப்பவர்கள்கூட, மாணவர்களிடம் கேள்வி கேட்பதின் முக்கியத்துவத்தைக்குறித்துத் தெரிந்திருக்கின்றனர் மற்றும் புரிந்திருக்கின்றனர் (என் கணவரும், நானும் இப்படிப்பட்ட பணியினை 20-வருடங்களுக்கு மேலாகச் செய்துவருகின்றோம்; அவர் மருத்துவக் கல்லூரிகளிலும், நான் பொதுப் பள்ளிக்கூடங்களிலும் செய்துவருகின்றோம்); ஆனாலும் டாண் புத்தகங்களோடு அல்லது ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகத்தோடு வேதாகம ஆராய்ச்சி

பண்ணிடுவதற்காகக் கூடிக்கொள்ளும் எளிய வகுப்பில், ஒரு கேள்விகூடச் சகோதரிகள் ஒருவரிடம்கூடக் கேட்கப்படுகிறதில்லை. அவள் கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறாள்; வாரம் முழுக்கக்கூட உழைத்திருந்திருக்கலாம்; ஞாயிற்றுக்கிழமையிலுங்கூட அவள் உழைத்திருந்திருக்கலாம்; ஆண்களைத் திகைக்கப்பண்ணும் சுமையான வேலைகளை அவள் செய்கிறாள் - துணிகளைத் துவைக்கிறாள், துணிகளைச் சலவைச் செய்கிறாள், துப்புரவுச் செய்கிறாள், ரொட்டி சுடுகிறாள், துணி தைக்கிறாள், கணவனுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் சமைக்கிறாள், இப்படியாக வீட்டுவேலையோடு சம்பந்தப்பட்ட ஆயிரமாயிரமான வேலைகளைச் செய்கிறாள் - இதனால் வாசிப்பதற்கோ அல்லது கற்பதற்கோ நேரமில்லாமல் காணப்படுகிறாள்; ஆனாலும் அவள் வேதாகம வகுப்பில் கலந்துகொள்கையில், இந்த முக்கியமான உதவியானது அவளுக்கு மறுக்கப்படுகின்றது. அவளைச் சிந்திப்பதற்கு வழிநடத்துகிற, அவளது ஆவலைத் தூண்டுகிற அல்லது அவளது மனதைக் கவர்ந்து, அவளது கவனத்தை ஈர்க்கிற ஒரு கேள்விக்கூட அவளிடம் கேட்கப்படுகிறதில்லை. இதைக்குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்! கூட்டம் சுவாரசியமற்றுக் காணப்படுகிறதில் ஆச்சரியப்படுவதற்கில்லையே.

பாஸ்டர் ரசல் அவர்களே, இப்படியாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (ஒரு பகுதியினரிடமிருந்து) அங்கத்தினர்களிடமிருந்து, அறிவைப் பெறுவதற்கு ஏதுவான விலையேறப்பெற்றதாய் இருக்கும் இந்த உதவியானது பிடுங்கப்படுவதைத் தாங்கள் அங்கீகரிக்கின்றீர்கள் என்பதை, தங்களது கையெழுத்துடன் பார்த்தாலொழிய, மற்றப்படி நான் நம்பமாட்டேன். தனிப்பட்ட விதத்தில் சொல்ல வேண்டுமானால், என்னிடம் கேள்விக் கேட்கப்பட்டாலும் அல்லது கேள்விக் கேட்கப்படாமல் இருந்தாலும், அதினால் எனக்கு ஒன்றுமில்லை. சிந்திப்பதற்கும், வாசிப்பதற்கும், கற்பதற்கும், ஜெபிப்பதற்கும் எனக்கு நேரம் இருக்கின்றது மற்றும் இப்படி எனக்கு எப்போதும் இருக்கின்றபடியால் தேவனை ஸ்தோத்திரிக்கின்றேன்; ஆனால் நேரம் இல்லாதவர்களுக்காகவும் மற்றும் உள்ளடங்கும் கொள்கைகளுக்காகவும் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

எங்களுடைய கூடுகைகளில் முதன்மையடைய வேண்டும் என்று அல்லது என்னுடைய பிரயாசங்களினால் நான் அடையப்பெற்றவைகளை விளம்பரப்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறதன் காரணத்தால் இப்படி மேலே நான் எழுதியுள்ளதாக எண்ணம் ஏற்படாதபடிக்கு, நான் மறுபடியுமாகத் தெரிவிக்க விரும்புகிறதென்னவெனில் . . . ஒருவேளை இவைகளை நான் விரும்புகின்றேன் என்றால், இவைகள் எனக்கு எட்டின தொலைவிலேயே காணப்படுகின்றது; இவற்றை நான் எங்கள் சிறு சபையார் மத்தியில் தேட வேண்டிய அவசியமுமில்லை. வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவைகளுக்கு மேலாக, சபையில் எந்த ஒரு சிலாக்கியத்தினையும் அடைந்திட நான் ஒருபோதும் விரும்பினதில்லை. ஒரு ஸ்திரீ கண்காணியாகவோ அல்லது உதவிக்காரராகவோ காணப்பட வேண்டுமென்று நான் ஒருபோதும் எண்ணினதில்லை; 1 தீமோத்தேயு 1:13-ஆம் வசனமானது, அவளையும், அநேகம் புருஷர்களையும் விலக்கிவைக்கின்றது. பெண்ணின் சுபாவத்திலுள்ள ஏதோ ஒன்றானது, இத்தகைய அதிகாரம் செலுத்துதலை அவளுக்கு மறுத்திடுவதற்கு ஏதுவாக்கி இருக்கின்றது. கடந்தகாலங்களில் சபையில் என்னுடைய பணியானது ஜெபக்கூட்டங்கள் அல்லது சுவிசேஷக் கூட்டங்களில் (இதை ஜெபம்பண்ணுதல் மற்றும் தீர்க்கத்தரிசனமுரைத்தல் என்று நான் காண்கின்றேன்) பங்கெடுப்பதும், ஞாயிறு பள்ளிகளில் போதிப்பதுமாக இருந்தது மற்றும் இவைகளில் நான் உற்சாகத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டதை நான் அறிவேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீமைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று நான் நம்புகின்றேன்.

கிறிஸ்துவுக்குள்ளான தங்கள்,
M. E.

* * * * * * *

## மேற்கூறப்பட்டவைகளுக்குப் பதில்

விழுகையின் காரணமாகச் சில புருஷர்களிடத்தில் புருஷனுக்குரிய தன்மையினுடைய குறைப்பாடும் மற்றும் கொடுங்கோன்மையும், சில ஸ்திரீகளிடத்தில் ஸ்திரீக்குரிய தன்மையினுடைய குறைப்பாடும் மற்றும் கொடுங்கோன்மையும் அதிகமாய்க் காணப்படுகின்றது என்று நாம் ஒப்புக்கொள்கின்றோம். பரம அழைப்பினால் அழைக்கப்பட்டவர்கள் மத்தியில்கூட,

இந்த இழிவான பண்புகளானது வெளிப்படுகின்றது; காரணம் தேவன் சிறந்தவர்களைப் பிரதானமாய் அழைக்காமல், இழிவானவர்களையே அழைத்துக்கொண்டிருக்கின்றார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் ஐசுவரியவான்கள் அநேகரில்லை, ஞானவான்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை; முதன்மையாய் உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பலவீனமானவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 1:26-28). இதற்குக் காரணம் பிரபுக்களும், மேன்மையானவர்களும் தங்கள் மீதே அதிகம் நம்பிக்கைக்கொள்பவர்களாகவும், கொடுக்கப்பட்டுள்ள ஒரே நாமத்தின் வாயிலாக மன்னிப்பையும், உதவியையும் மன்றாடிக் கேட்டுக்கொள்வதற்கும் மற்றும் ஏற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமற்றிருப்பவர்களாகவும் இருப்பார்கள் என்று நாம் காண்கின்றோம். ஆகையால் புருஷனுக்குரிய தன்மையினுடைய குறைபாட்டையும், ஸ்திரீக்குரிய தன்மையினுடைய குறைபாட்டையும் நாம் காண்கையில், அது நம்மைக் கோபங்கொள்ளவோ, கர்த்தரினால் அழைக்கப்பட்டவர்கள் யாவருக்குமான - சகோதரருக்கான நமது அன்பினைத் தடைப்பண்ணிடவோ கூடாது.

ஆனால் இன்னொரு பக்கத்தில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைவரும், போதகர்களிலேயே மகா பெரிய போதகரைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இவர்கள் தங்கள் மனோபாவத்தில் சிறந்தவர்களிலேயே தலைச்சிறந்தவர்களாகிட வேண்டும்; ஏனெனில் "அவர்கள் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. வசனத்தின் வாயிலாக மனதில் பதியவைக்கப்படுகின்றதான ஆவியின் இந்தப் படிப்பினைகளானது, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யாவரிடத்திலும் பரிசுத்த ஆவியின் கிருபைகளாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகியவற்றை வளர்க்கின்றதாய் இருக்கின்றது. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் ஆவியின் இந்தக் கனிகளை மிகச் சீக்கிரமாயும், மிக ஏராளமாயும் வளர்த்துக்கொள்கின்றனர்; ஆனால் இவர்கள் இராஜ்யத்தில் சுதந்தரர்களென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு அனைவரும் இவைகளை இருதயத்தில் அடையப்பெற்றிருக்க வேண்டும் (மற்றும் நிச்சயமாய்க் கொஞ்சம் வெளிப்புறத்திலும் பெற்றிருக்க வேண்டும்). எழுதப்பட்டிருக்கிறது போன்று, இவர்கள் அனைவரும் தேவனுடைய பிரியமான குமாரனும், நம்முடைய மீட்பருமானவருடைய சாயலாகிட வேண்டும்.

ஆனால் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளவர்கள் மத்தியில், இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சிலருக்கு அடக்குமுறையாகத் தோன்றும் செயல்பாடுகள் சிலசமயங்களில் எப்படி நடைபெறுகின்றது? உதாரணத்திற்கு, பெரோயா வேதாகமக் கேள்விகளைக் கேட்கையில், சகோதரிகளிடம் கேள்விக் கேட்பதைத் தவிர்த்து கடந்து செல்லுதலாகும். இச்செய்கைக்கு ஒரு நல்லக் காரணம் இருக்குமென நம்மால் கருதிக்கொள்ள முடிவதுவரையிலும், இச்செய்கைக்குக் கெட்டக் காரணத்தினை/ நோக்கத்தினைச் சாற்றிட வேண்டாம் என்று நாம் யோசனை தெரிவிக்கின்றோம். உதாரணத்திற்குக் கூட்டத்தினை வழிநடத்துபவர், "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவுக் கொடுக்கிறதில்லை" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை, தேவன் கொடுத்துள்ள பிரமாணமெனத் தன் மனதில்கொண்டிருக்கலாம். ஒருவேளை ஒரு சகோதரியிடம் கேள்விக் கேட்பது என்பது, அவளை உபதேசம்பண்ண வரவேற்பதாய் இருக்கும் என்றும், இப்படிச் செய்வது என்பது, தான் அப்போஸ்தலனுடைய கட்டளையை மீறுகிற காரியமாய் இருக்கும் என்றும் அவர் யோசித்திருக்கலாம். ஒருவேளை "யாரேனும் பதில் சொல்கிறீர்களா?" என்று கூறி சகோதரிகளுக்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்திடுவதன் வாயிலாக, அவர் தனது மனசாட்சி அனுமதிக்கும் அளவுக்குச் செயல்பட்டு - ஒவ்வொரு சகோதரியும் தனது மனசாட்சியின்படி இது விஷயமாகத் தீர்மானம் எடுத்து, அதன்படி செயல்படுவதற்கு விட்டுவிடலாம் என்று எண்ணியிருக்கலாம். இத்திட்டமானது பொறுப்பினைப் பிரிக்கின்றதாய் இருக்கின்றது. மிகவும் முதன்மை வகிக்கும் சகோதரர்களுடைய கணிப்பில், பதிலளிக்கும் சகோதரிகளிடத்தில் நிதானமின்மைக் காணப்படுமெனக் கருதப்படுவதே இந்த விஷயத்திலுள்ள பிரதான சிரமமாக தோன்றுகின்றது.

சகோதரிகள் எந்த நற்கருத்துகளையும் பெற்றிருக்க மாட்டார்கள் மற்றும் அவைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் திறமையற்றவர்கள் என்றும், சகோதரிகளால் தங்கள் சொந்த குமாரர்களுக்கும், குமாரத்திகளுக்கும் நன்கு போதிக்க முடியாது என்றுமுள்ள கண்ணோட்டத்தினைச் சகோதரர்களில் யாரும் பெற்றிருக்கமாட்டார்கள் என்று நாம் விசுவாசிக்கின்றோம். போதிக்கும் விஷயத்திலும், சிந்திக்கும் விஷயத்திலும், நிர்வகிக்கும்

விஷயத்திலும் ஸ்திரீகள் ஆச்சரியப்படத்தக்கதான ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அனைவருமே ஒப்புக்கொள்ள வேண்டும். அனைத்து உயர் பண்புள்ள புருஷர்களும், விசேஷமாக வளர்ச்சியடைந்துள்ள சகோதரர்கள் யாவரும் "கனம்பண்ண வேண்டியவர்களைக் கனம்பண்ணிட" விரும்பிட வேண்டும் மற்றும் உயர்ப்பண்புள்ள தாய்மார்களையும், சகோதரிகளையும், மனைவிகளையும், மகள்களையும், பொதுவாயுள்ள பெண் இனத்தையும், அவர்களது அநேகம் உயர்ப்பண்புகள் மற்றும் நற்பண்புகளின் நிமித்தம் மிகவும் கனம்பண்ணிட வேண்டும். நிச்சயமாக இதுவே என்னுடைய இருதயத்தின் அணுகுதலாய்க் காணப்படுகின்றது.

உயர்ப் பண்புள்ள அப்போஸ்தலனாகிய பவுலை, ஸ்திரீகளை வெறுப்பவராகவோ அல்லது ஸ்திரீகளை அவமதிப்பவராகவோ நாம் எண்ணிடமுடியாது. நிச்சயமாகவே அவரது நிருபங்களானது, அவரும் உண்மையான பெண்ணின் தன்மைகளைக் கனப்படுத்தியுள்ளதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்" (எபேசியர் 5:25, 28) என்று அப்போஸ்தலன் எழுதினபோது, அவரைவிட இவ்வளவுக்குக் குறிப்பாய் ஸ்திரீகளுக்கான மதிப்பினை வேறுயாராகிலும் வெளிப்படுத்தினதுண்டோ? சபையில் ஸ்திரீகளுடைய செயல்பாடு எல்லைத்தொடர்பாக அவர் எழுதிடுவதற்கான காரணம், சந்தேகத்திற்கிடமின்றி தேவனுக்கு - கடமைக்கு, அவரது நேர்மையே ஆகும். நமது கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களைக்குறித்து, "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 16:19). நிச்சயமாகவே மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் பரிசுத்த பவுலடிகளாரையே - நியாயப்பிரமாணத்தினின்று கட்டவிழ்க்கப்படுகிறதைக்குறித்தும் மற்றும் "புதுச்சிருஷ்டிகள்" மீது கட்டப்படுகின்றதான கடமைகள் மற்றும் பொறுப்புகளைக்குறித்தும் தெரிவித்திட நமது கர்த்தர் பயன்படுத்திட்டார்.

## மிகவும் சிறந்த ஒரு வழி

இது விஷயம் குறித்து அதிக ஜெபமும், தியானமும் செய்தப் பிற்பாடு, "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" எனும் வார்த்தைகளுக்கு மிகுந்த நியாயமான ஒரு கண்ணோட்டத்தினைப் பொருத்திடலாம் என்று நாம் எண்ணுகின்றோம். அது பின்வருமாறு:

போதித்தல் என்பது சகோதரர் யாவருக்கும் அடுத்த காரியமல்ல; மாறாக தெய்வீக ஏற்பாட்டினால் விசேஷமாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரிய காரியமாகும். இது பல்வேறு வேதவாக்கியங்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, எபேசு சபையின் மூப்பர்களிடம் பரிசுத்த பவுலடிகளார், "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் (சபைக்குப் போதிப்பதற்கு) பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக (மூப்பர்களாக, மேய்ப்பர்களாக, கண்காணிகளாக) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார் (அப்போஸ்தலர் 20:28). மறுபடியுமாக "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள் மற்றும் இவர்கள் மத்தியில் "போதகர்கள்" காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 12:18, 28). மீண்டுமாக யாக்கோபின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1). இன்னுமாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கையில், கவனிக்கப்பட வேண்டிய தகுதிகளில் ஒன்று, அவர்கள் "போதகசமர்த்தனாய்" இருக்க வேண்டியது என்பதாகும் (1 தீமோத்தேயு 3:2). இன்னுமாக ஆசாரிய அல்லது போதக ஊழியம் தொடர்புடைய விஷயத்தில், "ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" என்று நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 5:4). தம்முடைய (புருஷர்களையும், ஸ்திரீகளையும், அடிமையையும், சுயாதீனனையும் உள்ளடக்குகின்ற - இவர்கள் யாவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்ற) சரீரமாகிய சபை வாயிலாகப் பேசுகிற கர்த்தர் மூப்பர் ஊழியத்திற்கு, "போதகசமர்த்தனாய்"

காணப்படும் குறிப்பிட்ட சகோதரரைத் தேர்ந்தெடுக்கின்றார் மற்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, கர்த்தருடைய மந்தையை மேய்ப்பது தொடர்புடைய விஷயத்தில் இவர்கள் மீது விசேஷித்த பொறுப்புக் காணப்படுகின்றது. "எல்லாரும் போதகர்களா?" என்று அவர் கேட்கின்றார் (1 கொரிந்தியர் 12:29).

ஆகையால் "உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" எனும் அப்போஸ்தனின் வார்த்தைகளானது, "சபையில் ஒரு பெண்-மூப்பர் காணப்படுகிறதற்கு நான் அங்கீகாரம் அளிக்கிறதில்லை" என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறதாக நாம் விளக்கலாமல்லவா. இப்படியாக ஒரு சிரமம் மாற்றப்படுகின்றது மற்றும் இந்தக் கண்ணோட்டத்திற்கு இசைவாய் நாம் பின்வருமாறு வாசிப்பது சரியாய் இருக்கும், அதாவது "சபையில் ஒரு ஸ்திரீ ஜெபமோ அல்லது தீர்க்கதரிசனமோ உரைக்கிறாள் (கூடுகைகளில் பேசுகிறாள்) என்றால் . . . அவள் தன் தலையை மூடிக்கொள்வாளாக;" ஏனெனில் சபையில் ஸ்திரீயானவள் சபைக்கு அடையாளமாகவும், புருஷன் சபையின் தலையாகிய கர்த்தருக்கு அடையாளமாகவும் காணப்படுகின்றனர்.

இது மேலே வெளியிடப்பட்டுள்ளதான கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காரியத்திற்குத் தீர்வாய் இருக்கும். ஆகையால் சகோதரர்களிடம் கேட்கப்படுவதுபோலவே சகோதரிகளிடமும் பெரோயா கேள்விகள் கேட்கப்படுவது நிச்சயமாகவே சரியான காரியமாய் இருக்கும்; ஏனெனில் காரியத்தினைக் குறித்த இந்தக் கண்ணோட்டத்தின்படி, பெரோயா கேள்விக்குப் பதில்கொடுப்பவர்கள் யாரும் போதகராக இருப்பதில்லை, இது போதிப்பதாகவும் இராது; மாறாக கற்றுக்கொண்டிருக்கும் ஒருவர் அவன் அல்லது அவள் கற்றுக்கொண்டவைகளை அல்லது கர்த்தருடைய பாத்திரங்கள் அல்லது போதகர்கள் வாயிலாக தனக்குக் கற்பிக்கப்பட்டவைகளென்று தன்னால் கருதப்படுபவைகளை ஒப்புவிக்கின்றனர்/எடுத்துரைக்கின்றனர்.

இதழாசிரியருக்கு இக்கண்ணோட்டம் மிகவும் திருப்திகரமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்படியாகவே வாட்ச் டவர் வாசகர்கள் யாவருக்கும் காணப்படும் என்று அவர் நம்புகின்றார். ஒருவேளை கடந்தகாலங்களில் வசனமானது மிகவும் கடுமையாய்க் கைக்கொள்ளப்பட்டதன் காரணமாக அருமையான சகோதரிகளில் சிலர் காயமடைந்துள்ளார்களெனில், அவர்கள் குறுகிய சிற்றுணர்ச்சிகளைக் கடந்தவர்களாகக் காணப்பட்டு, இந்தக் கடுமைக்குக் காரணம் ஸ்திரீகளுக்கான அன்பின்மை என்று எண்ணாமல், மாறாக கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்குமான பெரிதான அன்பேயாகும் என்று எண்ணிடுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். கடுமையான/கண்டிப்பான கண்ணோட்டத்தினால் சரியாய்ப் பயிற்றுவிக்கப்படுபவர்கள் எவரும், இதற்கேற்ப ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள்; ஏனெனில் நமது கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்கள் யாவருக்கும் மற்றும் ஒவ்வொருவருக்கும், அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிட வல்லவராயிருக்கின்றார்.

"மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்" (கலாத்தியர் 6:6).

---

R 4124

# "மறுஜென்மகாலமும் இராஜ்யமும்"

## யோவான் 3:1-21

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" - யோவான் 3:16.

கிறிஸ்தவ மண்டலமெங்கும் பொதுவாக நிலவி வரும் தவறான மற்றும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டிராத கருத்துக்களையும், வேத விளக்கங்களையும் இப்பாடமானது சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது. ஆச்சரியமென்னவெனில் (தேவ வார்த்தை அல்லாத) மற்றக் காரியங்களில் நன்கு பகுத்தறியும் ஆற்றல்கொண்டிருக்கும் ஜனங்கள், தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் வெளிப்படும் நியாயங்களை/அறிவைப் புறக்கணித்துவிடுகின்றனர். இவ்விஷயத்தைக் குறித்து நிலவிவரும் விளக்கம் என்னவெனில், இயேசு ஒரு சபையை ஸ்தாபிக்க இருந்ததாகவும், அதை அவர் தேவனுடைய இராஜ்யம் என்று அழைப்பதாகவும், எவ்விதத்திலேயும் அது உலக இராஜ்யத்தின் சாயலையோ அல்லது எவ்வித உலகத்தின் ஆளுகையோடு தொடர்போ பெற்றிருக்கவில்லை என்று நிக்கொதேமுவுக்குக் கற்பித்தார் என்பதும் ஆகும். மேலும், அவருடைய சபையை நிக்கொதேமு, இராஜ்யமாகக் கருதும் விதத்தில் நமது கர்த்தர் பேசினார் என்றும் கருதப்படுகின்றது, காரணம், தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்பட்டிருப்பதுபோல, பூமியிலேயும் செய்யப்படும்படியாக, இறுதியில் அந்த இராஜ்யம் பூமியெங்கும் பரம்பி இருக்கும்/ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் என்பதினாலாகும். இவர்களுடைய இந்தக் கருப்பொருளை இன்னும் அதிக அர்த்தமற்றதாக்குவதற்கு இவர்கள், ஒருவர் முதலாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாவிட்டால் இந்த இராஜ்யத்தைப் புரிந்துக்கொள்ளவோ அல்லது அதற்குள் பிரவேசிக்கவோ கூடாது என்று நமது ஆண்டவர் இங்கு அறிக்கையிட்டதாகத் தெரிவிக்கின்றனர். இதைப் பற்றின அர்த்தமற்றக் காரியங்கள் அனைத்தையும் இப்பொழுது கவனியுங்கள்.

ஏறத்தாழ பத்தொன்பது நூற்றாண்டுகளாக, உலகத்திலுள்ள கத்தோலிக்கர், புராட்டஸ்டண்டு ஆகிய இருவருடைய மொத்த எண்ணிக்கைக் கிட்டதட்ட 400-மில்லியன் ஆகும். இவர்களுக்குள் கிறிஸ்தவ மண்டலத்தார் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்களாகிய சகல நாகரிகமான தேசங்களிலுள்ள தரைமட்டமானவர்களும், முரட்டுத்தனமானவர்களும், கடினமானவர்களும் அதாவது கெட்டவர்களும், கீழான சூதாட்டப்பழக்கம் உள்ளவர்களும், மாசுடையவர்களும் (கிறிஸ்தவர்கள் என்ற பெயரைத் தரித்துக்கொண்டு) உள்ளடங்குகின்றனர். மீதியானோர் அதாவது, கர்த்தர் இயேசுவைக் குறித்து ஒருபோதும் கேள்விப்பட்டிராதவர்களோ அல்லது கேள்விப்பட்டும் அவரை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களோ பன்னிரண்டாயிரம் மில்லியன் கணக்கானவர்கள். இன்று புறஜாதிகளின் எண்ணிக்கையோ, அநேகமாக, கர்த்தர் நிக்கொதேமுவோடு பேசிக்கொண்டிருந்த காலகட்டத்தில் இருந்த ஒட்டுமொத்த பூமியின் ஜனத்தொகையைப் பார்க்கிலும் பலமடங்கு அதிகரித்துள்ளது. உலகம்தான்/உலகத்தார்தான் இராஜ்யமா? நிச்சயமாக இல்லை! ஆனால் இன்று நாம், "கிறிஸ்தவ மண்டலம்" என்று அழைக்கப்படக்கூடிய 400 மில்லியன் மக்களை உற்று நோக்கி, நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அவர்கள் தங்களைக் குறித்து அறிக்கை செய்துக்கொண்டிருக்கும் திரைக்குப் பின்னாகக் காணப்படும் அவர்களின் உண்மையான தோற்றம் என்ன என்று நாம் முடிந்தளவு நன்றாக நிதானித்துப் பார்ப்போமாக. அவர்களில் எத்தனைபேர் மறுபடியும் பிறந்ததாகவும், மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டதாகவும், பரத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலைப் பெற்றுக்கொண்டதாகவும் அறிக்கை செய்துள்ளனர். உண்மையைச் சொல்லப்போனால், ஒருவரும் இல்லை; சந்தேகமின்றி, நமது கர்த்தருடைய நாளில் இருந்ததுபோலவே ஒரு "சிறு மந்தை" மட்டுமே.

இப்பாடத்தைக் குறித்து எவருக்கேனும் சந்தேகம் இருப்பின் அவர், புதுப் பிறப்பு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்தல் என்பதைக் குறித்து தனது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் அயலகத்தார் மத்தியில் விசாரிக்கக்கடவர்கள். பின்னர் அவர்கள் ஒரு முழு அர்ப்பணிப்பு அல்லது தேவனுக்கென்றும், அவருடைய பணிக்கென்றும் நம்முடைய நேரம், பெலன் மற்றும் நமக்குண்டான அனைத்தையும் தத்தம்செய்தல் குறித்தும், ஜெநிப்பித்தல் மற்றும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்

பண்ணப்படுதலின் மூலம் அடையாளப்படுத்தப்படும் இருதயத்தின் மாற்றம் குறித்தும், நீங்கள் விளக்கிக் காண்பித்த பிறகு உங்களுடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தார்களில் எத்தனைபேர் முழு ஈடுபாட்டோடு அர்ப்பணித்துள்ளனர் அல்லது பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளனர் என்று வினவுங்கள். இராஜ்யத்தைக் குறித்த இந்தப் பொதுவான (கிறிஸ்தவமண்டல) கண்ணோட்டத்தில் மாபெரும் தவறு இருக்கின்றது என்றும், இந்தப் பொதுவான (கிறிஸ்தவமண்டல) கருத்தின்படி நமது கர்த்தர் பேசவில்லை என்றும், இது ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கம் என்றும் நீங்கள் தெளிவுடன் காணப்படுவீர்களானால், உங்களுக்கு நமது விளக்கத்தின் மீது இவ்வளவு கேள்விகள்/சந்தேகங்கள் எழும்ப வாய்ப்பில்லை.

இவ்விஷயத்தைக் குறித்த பொதுவான (கிறிஸ்தவ மண்டலத்தாரின்) கருத்து முற்றிலும் தவறு என்ற முழு நிச்சயத்துடன் நாம் சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், மூடநம்பிக்கைகளிலிருந்து சத்தியம் நம்மை விடுவிப்பதற்கு ஏதுவாகவும், சத்தியம் நமக்கு வெளிச்சத்தையும், சந்தோஷத்தையும், உதவியையும் கொண்டு வருவதற்கு ஏதுவாகவும் இப்பொழுது தெளிந்த சிந்தையுடன் நம்முடைய இந்தப் பாடத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் ஜெபத்துடனும், கவனத்துடனும் கவனிப்போமாக.

## “நிக்கொதேமுவும், பிரதான போதகரும்”

யூதர்களுக்குள்ளே செல்வாக்குமிக்க மனிதனாகவும், ஆலோசனை சங்கத்தில் ஓர் அங்கத்தினராகவும், பரிசுத்தத்தின் மாதிரியாக அதாவது, தேவனுக்கான அர்ப்பணிப்பில் மாதிரியாக பரவலாக அறியப்பட்டிருந்த பரிசேயனாகிய நிக்கொதேமு, இயேசுவைச் சந்திக்க இரவில் வந்தார். இவர் இராக்காலங்களில் வந்ததற்கான காரணம் இவருடைய பயமாயிராமல், இவர் மற்றவர்கள் மற்றும் தனக்கான நலன்/நன்மைக் குறித்து, கொண்டிருந்த முன்யோசனையினாலேயே இரவில் வந்தார். அவர் இராக்காலத்தில் வந்ததன் காரணம், அநேகமாக, போதகருடன் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஆகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர் மிகுந்த பயபக்தியும், நற்பண்புள்ளவராகவும் காணப்பட்டார். இவர் நமது ஆண்டவரை ரபீ அல்லது ஆண்டவர் என்று அழைத்து இயேசு தேவனிடத்திலிருந்து வந்த ஆண்டவர் என்றும், தேவனுடைய ஊழியக்காரர் என்றும், இயேசுவின் அற்புதங்கள் வாயிலாக இயேசுவின் மீதான, தேவனுடைய பிரியம் வெளிப்படுத்தப்பட்டது என்றுமுள்ளவைகளின் மீதான தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இராக்கால உரையாடலின் ஒரு சிறிய பகுதியே கொடுக்கப்பட்டுள்ளது. யோவானும், அவருடைய சீஷரும், அதைத்தொடர்ந்து இயேசுவும் அவருடைய சீஷரும் போதித்து வந்த தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து அறிந்த நிக்கொதேமு, அதைக் குறித்தே கேள்வி கேட்க வந்திருக்கவேண்டும் என நாம் நியாயமாக ஊகிக்கலாம். வேத வாக்கியங்களின் மாணவராக இருந்த நிக்கொதேமு, தேவனுடைய இராஜ்யத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்பதையும், அது இஸ்ரயேலின் ஆசீர்வாதம் மற்றும் எடுப்பித்துக் கட்டுதலுக்குமான தேவனுடைய ஏற்பாடு என்பதையும், இறுதியாக, “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகவும் காணப்படும் என்பதையும் அறிந்திருந்தார். இயேசுவின் மீது நம்பிக்கைக்கொண்டிருந்த இவர், இந்த இராஜ்யத்தைக் குறித்த விவரங்களைக் கற்றுக்கொள்ள விரும்புவதற்கான காரணம், யோவான் ஸ்நானனோ அல்லது இயேசுவோ, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படப்போகிற விதம் குறித்த எவ்விஷயத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பதாகும்; அதாவது, (இராஜ்யத்திற்கு) போர் வீரர்கள் எங்கிருந்து ஆயத்தம் பண்ணப்படப்போகிறார்கள் என்றும், எவ்விதம் அவர்கள் பயிற்சியளிக்கப்படப்போகிறார்கள் என்றும், எங்கிருந்து போராயுதங்கள் கொண்டுவரப்பட்டு, அதற்குத் தேவையான சாதனங்கள் வாங்குவதற்குப் பெருந்தொகை திரட்டப்படும் என்றுமுள்ள எவ்விஷயத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பதாகும். இக்கேள்விக்கான நமது கர்த்தருடைய பதில், "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்பதாக இருந்தது.

ஓர் இராஜாவையும், ஒரு மகிமையான பரிவாரத்தையும், முன்பிருந்த எந்த இராஜாவைப் பார்க்கிலும் அதிக பிரமாண்டமான இராஜாவாக, மனுஷர் மத்தியில் பரலோக அதிகாரம் மற்றும் வல்லமையைப் பெற்றிருக்கும் மேசியாவை இராஜாவாக எதிர்ப்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த நிக்கொதேமுவுக்கு, (இயேசுவின் பதிலால்) ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை நம்மால் உணரமுடிகின்றது. ஒருவர் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண இயலாது என்று சொல்லப்பட்டபடியினால், அவருக்கு ஏற்பட்ட குழப்பத்தை இப்பொழுது நிதானித்துப்பார்ப்போம். அவருடைய ஆழ்ந்த சிந்தையில் பெருங்குழப்பம் ஏற்பட்டிருப்பதை, "ஒரு மனுஷன்

முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்?" என்ற அவருடைய மறுமொழியின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. "இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்ற நமது கர்த்தருடைய பதிலைக்கொண்டு இக்கருப்பொருள் மீது அவர் ஒரு சிறிய வெளிச்சத்தைப்பெற ஆரம்பித்தார்.

மிகச் சொற்பமான வார்த்தைகளிலிருந்து, நிக்கொதேமு சில "பலமான ஆகாரத்தைப்" பெற்றுக்கொண்டார். இவ்வறிக்கையிலிருந்து, அந்த இராஜ்யம் மாம்சத்துக்குரிய (அ) பூமிக்குரிய இராஜ்யமாக இராமல், ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாக, ஒரு பரலோக இராஜ்யமாக இருக்கும் என்பதை அவர் புரிந்திருக்க வேண்டும். மாம்சத்தின்படியான இயற்கையான பிறப்பு என்பது, ஒரு புதிய பிறப்பை, ஓர் ஆவிக்குரிய பிறப்பை விளக்கிக்கூறும் அடையாளமே என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கக்கூடும். மேலும் தேவனுடைய இராஜ்யம், எந்தப் பூமிக்குரிய இராஜ்யத்தைப் பார்க்கிலும் உயர்ந்த தளத்திலிருக்கும் என்றும், அது பொதுவான மனுக்குலத்தால் காணக்கூடாததும், நுழையமுடியாததும், அதன் அங்கத்தினராக முடியாததுமான ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்கும் என்றும் கர்த்தர் குறிப்பிடுவதாக நிக்கொதேமு புரிந்துக்கொண்டிருக்க வேண்டும். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவியினால் பிறக்கக்கூடியவர்கள் மட்டுமே உண்மையில் அந்த ஆவிக்குரிய இராஜ்யத்தைப் பார்க்கவும், அதற்குள் நுழையவும்கூடும். ஆனால் நமது கர்த்தர், "ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால்" என்றும் கூறுகிறார். தண்ணீர் என்றதும், பாவங்களுக்கான மன்னிப்பாகவும், மனந்திரும்புதலுக்கான அடையாளமாகவும் யோவான் ஸ்நானனும், அவருடைய சீஷர்களும் பிரசங்கித்துக்கொண்டிருந்த தண்ணீர் ஞானஸ்நானம் குறித்து அநேகமாக நிக்கொதேமுவின் சிந்தைக்கு வந்திருக்கும். பெந்தெகொஸ்தே நாள்முதல் இன்றுவரை வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கோ, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மற்றும் போதனையின் கீழ்த் தேவனுடைய ஆழங்களின் மீதான புரிந்துக்கொள்ளுதல் கொடுக்கப்பட்டுள்ளது; அதாவது, நமது கர்த்தர் குறிப்பிட்டுள்ள தண்ணீருக்கு இன்னும் ஆழமான அர்த்தமுள்ளது என்று புரிந்திருக்கின்றோம். அடையாளமான தண்ணீர், "சத்தியத்தை" அடையாளப்படுத்துவதாகவும், பரிசுத்த ஆவியினாலே நம்முடைய ஜெநிப்பித்தல் என்பது, அப்போஸ்தலர் கூறுகிறபடி, "சத்திய வசனத்தினாலே" ஜெநிப்பிக்கப்படுதலை அடையாளப்படுத்துவதாகவும் நாம் காண்கிறோம் (யாக்கோபு 1:18). அப்போஸ்தலனாகிய பவுலும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் அறிக்கையிடும்போது, "தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என்றார். இக்காரியங்கள் அனைத்தையும் ஒன்றுசேர்க்கும்போது, நாம் பெறும் கருத்து என்னவெனில், நம்முடைய மறுஜென்மம் (அ) பரிசுத்த ஆவியினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் பரிசுத்த ஆவியினாலே புதிதாக்கப்படுதலாகிய இரண்டும், தெய்வீகச் செய்தியாகிய சத்தியத்தின் செயல்பாட்டினால் விளையும் சுத்திகரிப்பினால் வருகின்றது. இக்காரியம், இஸ்ரயேலரின் ஆசரிப்புக்கூடார ஊழியத்தில் அழகாக அடையாளப்படுத்தப்படுகிறது. எப்படியெனில், ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, தண்ணீர் தொட்டியில் தங்களைச் சுத்திகரித்துக்கொள்வது போன்று, புதுச் சிருஷ்டிகள் ஆகுவதற்கு முன்பு தண்ணீர் அடையாளப்படுத்தும் தேவனுடைய வார்த்தையினால், சத்தியத்தினால் அதாவது, புதிதாக்கும் தண்ணீரினால் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். இப்படியாகவே, நாம் கர்த்தரிடத்திலான ஓர் அர்ப்பணிப்பிற்குள்ளாகக் கடந்து வருகின்றோம். இவ்வர்ப்பணிப்பின் காரணமாக நம்மை ஏற்றுக்கொள்வதில் கர்த்தர் பிரியம் கொண்டு, தமது பரலோக அல்லது ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஏதுவான புத்திரசுவிகாரத்தின் ஆவியை நமக்கு அருளுகின்றார்.

## "பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்"

நிக்கொதேமு, இராஜ்யத்தையும், அந்த இராஜ்யத்தைக் காண்பதற்கும், அதற்குள் பிரவேசிக்கிறதற்குமான வழிமுறைகளையும், நிபந்தனைகளையும் குறித்து இயேசு கூறியவைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்" என்று நமது கர்த்தர் பதிலளித்தார். பின்னர் ஆவியில் பிறக்கிற ஒருவன் எப்படி இருப்பான் என்பதற்கான விளக்கத்தை இயேசு நிக்கொதேமுக்குக் கூறினார். ஆவிக்குரிய ஜீவிகள் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பினும், அவைகள் உண்மையாய் இருக்கின்றது என்ற விஷயத்தின் மீது நிக்கொதேமுவின் கவனத்தைத் திருப்பினார்; கண்களுக்குப் புலப்படாத காற்றை, இயேசு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டார்.

காற்றானது எங்கிருந்து வருகின்றது? என்றோ, எவ்விடத்திற்குப் போகிறது? என்றோ நாம் அறியோம்; ஆனாலும், அதன் ஆற்றலை நாம் அறிவோம்; அதன் சத்தத்தைக் கேட்கவும், அது உண்டுபண்ணும் விளைவுகளைக் காணவும் நம்மால் முடிகின்றது. இதையே ஆவியில் பிறந்தவர்களுக்கான எடுத்துக்காட்டாக நமது கர்த்தர் நிக்கொதேமுவுக்கு எடுத்துரைத்தார்; அதாவது ஆவியில் பிறந்தவர்கள், பிரசன்னமாய் இருந்தாலும், ஆற்றல் உள்ளவர்களாய் (Powerful) இருந்தாலும், அவர்கள் கண்களுக்குப் புலப்படாமலும், தொட்டு உணரப்படாமலும் இருப்பார்கள். இவர்களே இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, இராஜ்யமாக இருப்பார்கள். நமது கர்த்தருடைய பேச்சை/கருத்தை மிகக் கவனமாய்க் கவனிக்க வேண்டும், இல்லையேல் தவறான சில கருத்துக்கள் நம்மையும் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். யாரையும் வேதவாக்கியங்களைப் புரட்டி, கர்த்தர் இவ்விடத்தில் பேசாதக் கருத்தைக் கர்த்தர் பேசினதாகக் கூற நாம் அனுமதிக்கக்கூடாது. நம்மை ஜெநிப்பிக்கும் (begotten) கண்களுக்குப் புலப்படாத ஆவியைக் குறித்துதான் கர்த்தர் இவ்விடத்தில் பேசியுள்ளார் என்பதான யோசனைகளை நாம் ஏற்க மறுத்துவிட வேண்டும். நம்மை ஜெநிப்பித்த ஆவி கண்களுக்குப் புலப்படாதது என்பது உண்மையாக இருப்பினும், இவ்வசனப் பகுதியில் நமது கர்த்தர் இதைக் குறித்துப் பேசவில்லை. பரிசுத்த ஆவி உலகத்தில் இங்கும், அங்குமாய்ச் சென்று கொண்டிருக்கும் என்றும், சிலரை ஜெநிப்பித்தும் (begotten), சிலரை கண்டுகொள்ளாமல் விலகிச் செல்வதால், யார் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார்கள்? (begotten) யார் ஜெநிப்பிக்கப்படவில்லை? என்று நம்மால் அறிந்துக்கொள்ள முடியாது என்றுமுள்ள அனுமானங்களுக்குள் நமது மனதை தவறாய் நடத்தவும் நாம் விடக்கூடாது. இவைகளனைத்தும் குழப்பமான அனுமானங்களாகவும், வேதத்தில் எழுதப்பட்டுள்ளக் காரியங்களுக்கு முற்றிலும் எதிர்மாறாகவும் உள்ளது. யாருக்கெல்லாம் ஆண்டவரின் போதனைகளைக் குறித்துச் சரியான மற்றும் தெளிவான புரிந்துக்கொள்ளுதல் காணப்படுகின்றதோ, அவர்கள் சகல தேவ வார்த்தைகளுக்குக் கண்டிப்பாய்ச் செவிசாய்க்க வேண்டும். நம்முடைய கவனமின்மையின் காரணமாகவும், தேவனுடைய வார்த்தைகளுக்கு எவ்வளவேனும் இசைவில்லாத கருத்துக்களை (வேதத்தை வைத்துக்கொண்டு) விளக்குவதற்கு மற்ற மனிதர்களை நாம் அனுமதித்திருந்த காரணத்தினாலுமே நாம் இத்தனை நீண்ட காலங்கள் இருளில் இருந்துள்ளோம். தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது; மேலும் யாரெல்லாம் இப்படிச் செய்கிறார்களோ, அவர்கள் சத்தியத்திற்கு உண்மையற்ற ஊழியக்காரராகவும், கர்த்தருக்கு (எதிரான) உண்மையற்ற ஸ்தானாதிபதியாகவும் ஆகிவிடுவார்கள்.

ஆச்சரியமடைந்த நிக்கொதேமு, "இவைகள் எப்படி ஆகும்?" என்று பிரமிப்புடன் கேட்டார் (யோவான் 3:9); அதாவது "நியாயப்பிரமாணங்களையும், தீர்க்கத்தரிசனங்களையும் நூற்றாண்டுகள் காலமாக கற்றுக்கொண்டிருந்தவர்கள், இப்படித் தவறிழைப்பது சாத்தியமாகுமா?" என்ற விதத்தில் நிக்கொதேமு கேட்டார். இஸ்ரயேலில் ஒரு போதகனாக நிக்கொதேமு இருக்கும்பட்சத்தில், அவருடைய கவனத்திற்கு (இராஜ்யம் தொடர்பான தவறான) இக்காரியங்கள் கொண்டுவரப்பட்டபோது, அவர் இவைகளைப் பகுத்தறிந்திருக்க வேண்டுமென்று நமது கர்த்தர் அவருக்குப் பதிலளித்தார். தேவனுடைய இராஜ்யமானது பூமிக்குரியதாக இருக்கும் என நிலவிக் கொண்டிருக்கும் (தவறான) கருத்துக்களில் காணப்படும் சமாளிக்க முடியாத எதிர், புதிர்களை, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்களைக் கற்றறிந்த கவனமுள்ள மாணவரான நிக்கொதேமு கண்டுபிடித்திருக்க வேண்டும். பின்னர் தேவனுடைய இராஜ்யமானது ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்று வரும் அறிவிப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்திருக்க வேண்டும். இந்த இராஜ்யமானது ஆவிக்குரியதாய் இருக்கும் என்பதை விளக்கும் விதமாகத்தான், "தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது, இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது," மாறாக தேவனுடைய இராஜ்யமானது, மனுக்குலத்தின் மத்தியில் கண்களுக்குப் புலப்படாமல், அதேசமயம் சகல வல்லமையுடன் காணப்படும் என்று கர்த்தர் வேறொரு தருணத்தில் விளக்கிக் கூறினார் (லூக்கா 17:20, 21).

மேற்கூறிய விஷயங்களுக்கும், கர்த்தர் பேசின வார்த்தைகளான, "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்பதற்கும் இங்குத் தொடர்பு இருப்பதைக் குறித்து வேதபாட ஆராய்ச்சி புத்தகம் 5-ஆம் தொகுதியில் பக்கம் (English Page No 189, 192-இல்) நாம் ஏற்கெனவே காட்டியிருக்கின்றோம் (யோவான் 3:6). மாம்சத்தின் ஜெநிப்பித்தல் முதலாவது சம்பவியாமல், மாம்சத்தின் எவ்வித பிறப்பும் சம்பவியாதது போன்று, ஆவியின் ஜெநிப்பித்தல் முதலாவது சம்பவியாமல், ஆவியின் எவ்விதமான பிறப்பும் சம்பவியாது. ஆவியில் ஜெநிப்பித்தல் என்பது தேவவார்த்தையின் மூலம் ஏற்படும் மறுஜென்ம முழுக்குத் தொடர்புடைய காரணத்தினால் வருகின்ற விஷயமாகும், மேலும், ஆவியில் ஜெநிப்பித்தல் என்பது தற்கால

ஜீவியத்திற்குத் தொடர்புடையதாகும். புதுச் சிருஷ்டிகளாக, நாம் கர்த்தருடைய ஊழியத்திலுள்ள செயல்பாடுகளில் உயிர்ப்பிக்கும் படிநிலையை அடையும்வரையிலும், நாம் ஆவிக்குரியவைகளில் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். மேலும், யாரெல்லாம் இவ்விதமாக ஜெநிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கப்படுகின்றார்களோ அதாவது, யாரிடத்தில் புதிய சித்தம் மரணம் வரையிலும் உண்மையுடன் காணப்படுகின்றதோ, இவர்கள் இவர்களுடைய உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறந்தவர்களாக இருப்பார்கள். இவ்விதமாகவே, நமது கர்த்தரும் தமது ஞானஸ்நானத்தின்போது, பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டார்; மேலும், அவருடைய உயிர்த்தெழுதலில் அவர் ஆவியில் பிறந்தவரானார்; அதாவது, மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானார்; அதாவது, அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர் ஆனார். கர்த்தரைப்போன்று அவருடைய சகோதரரும், அதாவது இராஜ்யத்தில் அவருடைய உடன்சுதந்தரர்களுமாய் இருப்பவர்கள், அவர்களின் மறுஜென்ம முழுக்கின்போது, பரிசுத்த ஆவியினால் இப்பொழுது ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், அவர்கள் ஒருவேளை உண்மையாயிருக்கும் பட்சத்தில், அவர்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தில் அவர்களின் பிறப்புச் சம்பவிக்கும். "பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" (1 கொரிந்தியர் 15:43, 44). இவர்கள் நமது கர்த்தருடைய முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, ஆவிக்குரிய சுபாவத்தையும், மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்வார்கள். அநேகர் இவ்விஷயத்தில் குழப்பமடைவதற்கான காரணம், 'Gennao' எனும் ஒரே கிரேக்க வார்த்தையானது, ஜெநிப்பித்தல் மற்றும் பிறப்பு எனும் இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் கவனிக்கத் தவறினதாலேயே என்று நாம் இங்குக் குறிப்பிடுவது நலமாயிருக்கும்.

## "நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லுகிறோம்"

நிக்கொதேமுவின் சந்தேகங்களுக்கு விடையளிக்கும் விதத்தில், நமது கர்த்தர், இராஜ்யமானது ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்கும் என்றதான இந்தச் சாட்சியானது எவ்வித கற்பனையான கதை அல்ல என்று பதிலளித்தார். அதாவது, தாம் (இயேசு) கூறின சாட்சி மெய் என்று நிக்கொதேமுவுக்குத் தெரியும் என்றும், நிக்கொதேமுவின் பிரச்சனை, அவர் (நிக்கொதேமு) கற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பதேயாகும் என்றுமுள்ள விதத்தில் நமது கர்த்தர் பதிலளித்தார். நிக்கொதேமு நமது கர்த்தரை ரபீ, போதகர் என்று அழைத்தார்; இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று, தான் நம்புவதாகவும் நிக்கொதேமு அறிக்கையிட்டார்; எனினும், இவர் முழு விவரமும் அறியாமல் முன்கூட்டியே தன்னிடத்தில் கொண்டிருந்த அபிப்பிராயங்களினால் கட்டுண்டவராக இருந்தபடியினால், இவருக்குப் போதனை வழங்க ஆற்றல் கொண்டிருந்த ஒரே நபரின் சாட்சியை ஏற்றுக்கொள்வதற்கு இவர் தயாராக இருக்க முடியவில்லை. பரலோக இராஜ்யத்தைக் குறித்து இன்னும் அதிகமாக தம்மால் கூற முடியும்; ஆனால் தம்மைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள், ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவதால், தாம் ஆவிக்குரியவைகளைக் குறித்து இப்பொழுது பேசுவதும் ஏற்றதாக இருக்காது என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார். "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (யோவான் 3:12). நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகள் கடிந்துகொள்ளுதலாக இராமல், யதார்த்தங்களைப் பேசுகிறதாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளிலிருந்து நாம் புரிந்துக்கொள்கின்றோம்; சுபாவத்தின்படியான மனுஷன், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததால், அவனால் ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியாது என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். பெந்தெகோஸ்தே நாளன்று தமது பின்னடியார்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரியவைகளையும், பரலோக/பரம காரியங்களையும் புரிந்துக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகவும், பாத்திரவான்களாகவும் அடையும் நிலையை எட்டும் வரை தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களைக் குறித்த விளக்கங்கள் கொடுப்பதை நிறுத்தி வைத்திருந்தார். "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14).

சந்தேகத்திற்கிடமின்றி, இன்றும் இக்காரணங்களே பெரும்பாலான ஜனங்களுக்கு இடையூறாக/பிரச்சனையாகக் காணப்படுகின்றது; அதாவது, பெரும்பான்மையானவர்கள் பரிசுத்த

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகையால், அவர்களால் ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, நாம் பரிந்துரைப்பதென்னவெனில், சத்தியத்திற்குச் செவிசாய்க்க முடியாத செவிகளையுடைய யாரையாகிலும் நீங்கள் கண்டீர்களானால், சத்தியத்தை அவர்களுக்குள் திணிக்க முற்படாதீர்கள். மாறாக, வேறுவிதத்தைக் கையாண்டு, அவர்கள் அர்ப்பணிப்புச் செய்யத்தக்கதாக நாடுங்கள். . . . அதாவது கர்த்தருக்கும், அவருடைய ஊழியத்திற்குமான அர்ப்பணிப்பின் விஷயத்தில் அவர்கள் ஏற்கெனவே புரிந்து, கிரகித்து வைத்திருந்த கண்ணோட்டங்களோடு, முழு அர்ப்பணிப்பின் விளக்கங்களை ஒப்பிட்டு, முழு அர்ப்பணிப்புக் குறித்ததான நியாயமான கண்ணோட்டங்களை அவர்கள் முன் வையுங்கள். ஒருவேளை அவர்கள் தங்களை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்தலைப் பெற்றுக்கொண்டால், பின்னர் கர்த்தருடைய ஆழமான காரியங்கள் அவர்களுக்கு உரியதாகும்; அவைகளை அவர்களால் அப்போது புரிந்துக்கொள்ளவும் முடியும். இப்படிச் செய்வதே, ஜெநிப்பிக்கப்படாதவர்கள் முன்பு, ஆவிக்குரிய ஆழமான விஷயங்களாகிய தெய்வீகச் சத்தியம் எனும் முத்துகளைப் போட்டுவிடாத ஞானமாக இருக்கும். அதாவது, யுகங்களைக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தை மேலோட்டமாக, உலகத்தாரிடம் பொதுவாக கூறுவதும், தேவனுடைய கிருபையை விருதாவாக பெற்றுக்கொள்ளக்கூடாது என்று புத்திமதிக் கூறுவதும், புதுச் சிருஷ்டிகளாக, தேவனுடைய குமாரர்களாகிய ஆவிக்குரிய உடன்படிக்கையின் உறவிற்குள் வருபவர்களுக்கு மாத்திரம் ஆழமான காரியங்கள் கொடுக்கப்படும் என்றும், இவ்வுடன்படிக்கையின் உறவிற்குள் வருகிறவர்கள் மாத்திரமே ஆழமான காரியங்களைப் புரிந்துக்கொள்ளும் நிலையை அடைய முடியும் என்றும், பரத்திலிருந்து வரும் ஞானம், இவ்வுடன்படிக்கையின் உறவிற்குள் வருகிறவர்களுக்குக் கிடைக்கும் என்று அவர்களுக்கு உறுதி கூறுவதுமே ஞானமாகும்.

## ‘‘பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை’’

நமது கர்த்தரின் இவ்வார்த்தைகள், நிக்கொதேமுவுக்கு எவ்வித ஆச்சரியத்தையும் எழுப்பவில்லை, ஏனெனில் மரித்தவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள்; அதாவது, முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகம் ஜீவனுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று அந்நிய தெய்வங்களை வணங்கி வரும் ஜனங்கள் மத்தியில் நிலவி வரும் கருத்தானது, நியாயப்பிரமாணத்திலோ அல்லது தீர்க்கதரிசிகள் கூறின வார்த்தைகளிலோ அல்லது பாரம்பரியமான யூத மார்க்கத்தின் போதனைகளிலோ காணப்படவே இல்லை. மரித்தவர்கள், மரித்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்றும், மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்றும், மேசியா வந்து சாபத்தை மாற்றிப் போட்டு, மனுஷர்களைச் சீர்த்தூக்கவும், தேவனிடத்தில் மீண்டும் ஒப்புரவாக்கவுமெனப் பரலோக இராஜ்யத்தை மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கும்போது, உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் என்றும் இஸ்ரயேலர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் இன்று, அந்நிய தெய்வங்களை வணங்கும் ஜனங்களின் தப்பறையான கருத்துக்களும், "மரித்தவர்கள், மரணத்திற்குப் பின்பு ஜீவனோடு இருந்த நாட்களில் இருந்ததைக் காட்டிலும் அதிக ஜீவனுள்ளவர்களாக இருப்பார்கள்" என்ற பிளாட்டோவின் (Plato’s Philisophy) தத்துவங்களும், சகல குழப்படியான உபதேசங்களும் கிறிஸ்தவ மண்டலத்தையும் ஆட்டிப்படைக்கின்றது. யதார்த்தமான, அறிவுள்ள சில ஜனங்கள் . . . நம்மிடம் தாங்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புவதாகவும், அதேசமயம் மரித்தவர்கள் மரிக்கவில்லை என்றும் ஒரே மூச்சில் கூறிவிடுகின்றனர். ஒருவேளை மரித்தவர்கள் மரிக்கவில்லையென்றால், எப்படி மரித்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படக்கூடும் என்ற கேள்விக்கும், அவர்களால் பதில் அளிக்க முடியவில்லை. ஆண்டவருக்குப் போதிக்க விரும்புவதைக்காட்டிலும், ஆண்டவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் இப்பாடத்தைப் படிக்கின்ற அனைவரும், அவருடைய இவ்வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்க்கக்கடவோம். அதாவது, "பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (இவ்வசனப் பகுதியில் இடம்பெறும் வார்த்தையான "பரலோகத்திலிருக்கிறவருமான" என்பது பழைய கிரேக்கப் பகுதிகளில் காணப்படுவதில்லை என்பதையும் இங்குக் குறிப்பிடுகின்றோம்) என்ற அவருடைய இவ்வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்க்கக்கடவோம்..

## ‘‘வனாந்தரத்தின் சர்ப்பம்’’

இப்பாகத்திலிருந்து தொடரும் பிந்தைய வசனப் பகுதிகள் நிக்கொதேமுவிடம் பேசப்பட்டதில்லை. மாறாக, நம்முடைய கர்த்தருடைய பல்வேறு போதனைகளை அச்சுவிசேஷப்

புஸ்தகத்தின் ஆசிரியர் அவ்விடத்தில் ஒன்றாகத் தொகுத்து எழுதியுள்ளார் என்று நாம் எண்ணுகின்றோம்.

வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்ட காரியமானது 14-ஆம் வசனத்தில் கூறப்பட்டதற்கான காரணம், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கான அந்த நிழல் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்கேயாகும். பாவத்தின் காரணமாக இஸ்ரயேலர்கள் எப்படிப் பயங்கரமான சர்ப்பங்களால் தீண்டப்பட்டார்கள் என்றும், எத்தனை கொடிதான வலியை இதன் காரணமாக அனுபவித்தார்கள் என்றும், மோசே தெய்வீக நடத்துதலினால் வெண்கல சர்ப்பத்தைச் செய்து உயர்த்தி நாட்டினதுவரையிலும் எத்தனை திரளானோர் மரித்துப் போனார்கள் என்றுமுள்ள சம்பவத்தை நாம் நினைவுகூருகின்றோம். விசுவாசத்தினால் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த ஒவ்வொரு இஸ்ரயேலனும் சொஸ்தமாக்கப்பட்டான். இதன் நிஜத்தை நாம் பார்க்கலாம். முழு உலகமும், பாவத்தினால் தீண்டப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (ரோமர் 8:22). 18 நூற்றாண்டுகளுக்கு முன்பாக மனுஷகுமாரனாகிய இயேசு கல்வாரியில் உயர்த்தப்பட்டார், அவர் பாவியாகக் கருதப்பட்டார். இயேசுவின் நீதியை விரும்பும் யாவருக்கும் அதை, இயேசு வழங்கும் உரிமையை அவர் பெற்றுக்கொள்ளவும், அவர்களைச் சொஸ்தமாக்கி, நித்தியத்திற்குரிய ஜீவனைக் கொடுக்கவும் ஏதுவாக நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டது.

"தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்" (யோவான் 3:15). இதுவரையிலும் சிலர் மாத்திரமே அவரை விசுவாசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்; நம்முடைய கர்த்தருடைய நாட்களிலும், இன்றைய நாட்களிலும், காணப்படும் திரளான ஜனங்கள் மீட்பரைக் குறித்தும், அவருடைய பலி மற்றும் அவரை நோக்கிப்பார்ப்பதின் மூலமாக வரும் ஆசீர்வாதங்கள் குறித்தும் முழுமையான அறியாமையில் காணப்படுகின்றார்கள். இவர்கள் ஒருபோதும் நோக்கிப் பார்க்க மாட்டார்களா? இவர்கள் ஒருபோதும் இவைகளையெல்லாம் அறிந்துக்கொள்ள மாட்டார்களா? இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்ள மாட்டார்களா? சுவிசேஷ யுகத்தில் விசேஷமான தயவைப் பெற்றுக்கொண்டவர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை மாத்திரம்தான் இந்த மாபெரும் வாய்ப்பைப் பெறுவார்களா? ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய கிருபை/இரக்கத்தைக் குறித்ததான அறிவு மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் சென்றடையத்தக்கதாக செய்வார். இதுவே 16-ஆம் வசனத்திலுள்ள நம்முடைய ஆண்டவரின் வார்த்தைக்கான முக்கியத்துமாகும். ஆ! ஆம்! இது ஆசீர்வாதமான வாக்குறுதியாகும். தேவனுடைய இரக்கத்தினால் இயேசு எல்லா மனுஷருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என்றாலும், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்;" "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்ற வசனத்தின் காரியங்களினாலும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் (எபிரெயர் 2:9; 1 யோவான் 2:2). இறுதியில் முழு உலகமும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களைப் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவும், பார்க்கத்தக்கதாகவும் தங்களுடைய கண்களும், காதுகளும் திறக்கப் பெற்றிருக்கும் சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் பெற்றுக்கொள்வார்கள்.

17-ஆம் வசனத்தை நாம் எத்துணை மகிழ்ச்சியோடு வாசிக்க வேண்டும். உலகமானது ஏற்கெனவே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளது. காரணம் உலகம், ஆதாமின் சந்ததியாய் இருப்பதினால், ஆதாமுக்குள் ஆக்கினைத் தீர்ப்பில் பங்கடைந்துள்ளது. உலகம் மீண்டும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட அவசியமில்லை. மாறாக, அதன்மேல் காணப்படும் ஆதாமினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து, அதற்கு இரட்சிப்பே அவசியமாய் உள்ளது. உலகமானது சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் பெற்றிருக்கும் அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும். மேலும், இதைச் செய்து முடிக்கவே இயேசு வந்தார். விசுவாசப் பிரமாணங்களும், ஆண்டவரின் போதனைகளும் முற்றிலும் எதிர்மாறாக உள்ளது. தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையல்லாத அனைவரும் நித்திய சித்திரவதைக்குள் போகும்படிக்குத் தீர்க்கப்படுவார்கள் என்று "இருண்ட யுகத்தில்" கூறப்பட்டது. மேலும், சபையல்லாத மீதமான மனுக்குலம் முழுவதும் அறியாமை, மூடநம்பிக்கை, குருடாக்கப்பட்ட நிலையின் காரணமாக இதுவரையிலும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், வாய்ப்பும்

இவர்களுக்கு இல்லை என்றும் இருண்ட யுகத்தில் கூறப்பட்டது; மேலும், உலகம் ஒருபோதும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளாது என்றும், உலகத்தை இரட்சிக்க தேவன் சித்தங்கொள்ளவில்லை என்றும், கிறிஸ்து உலகத்திற்காக அல்லாமல், தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்காக மரித்தார் என்றும் இருண்ட யுகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த அறுவடையின் காலக்கட்டத்தில் தெய்வீக வார்த்தைகள் மூலம், தெய்வீக ஞானம் மற்றும் அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரம் மகிமையாய் வெளிச்சமாக்கப்பட்டுள்ளது! அதாவது, சபையின் தெரிந்துக்கொள்ளுதல் என்பது உலகத்தை ஆசீர்வதிக்கும், வெளிச்சமூட்டும், சீர்த்தூக்கும் மாபெரும் வேலைகளுக்கு முன்பு சம்பவிக்க வேண்டிய செயல்/திட்டம் மாத்திரமே என்பது எவ்வளவு அழகாக நமக்கு வெளிச்சமாக்கப்பட்டுள்ளது. "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது" (யோவான் 3:19). ஒளியானது, எவ்வளவாக ஒருவரால் பார்க்கப்பட்டு, புறக்கணிக்கப்படுகின்றதோ, அவ்வளவாய் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப்படுவார்கள் என்று நமது கர்த்தர் இங்குக் குறிப்பிடுகின்றார். நமது கர்த்தருடைய முதலாம் வருகையின் நோக்கமானது, ஆதாமினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பைக் கூட்டுவதற்காக இராமல் மாறாக, இந்த ஆக்கினைத் தீர்ப்பை முற்றிலும் ரத்து செய்துவிடும் பலியைச் செலுத்துவதற்கேயாகும். எனினும், அவர் அப்போது உலகத்திற்கு வந்ததையும், அப்போது பிரகாசித்த வெளிச்சத்தையும், இன்றளவும் அவருடைய பின்னடியார்கள் மூலம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெளிச்சத்தையும், நிராகரித்த அனைவர் மேலும் ஆக்கினைத்தீர்ப்பு உண்டு.

இந்த ஆக்கினைத்தீர்ப்பானது, ஆதாமிடமிருந்து சுதந்தரிக்கப்பட்டுள்ள ஆதாமின் நிமித்தமான ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஆதாமின் நிமித்தமாக உண்டான ஆக்கினைத்தீர்ப்பானது நமது பாவத்திற்கான கிறிஸ்துவின் பலியினால் இறுதியில் முற்றிலும் ரத்து செய்யப்படும்; ஆனால், ஒளியை/வெளிச்சத்தை நன்கு அறிந்துக்கொண்டு நிராகரிப்பதின் காரணமாக உண்டாகும் ஆக்கினைத்தீர்ப்பானது, தனிப்பட்ட விதத்தில் அந்தந்த நபருக்குத் தண்டனையைக் (Individual Penalty) கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது. இவ்வகை ஆக்கினைத்தீர்ப்பானது, உண்மையற்றவர்கள் மீது தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் கசையடிகளைக் கொண்டுவரக் கூடியதாய் இருக்கும். கசையடிகள்/சிட்சைகள் என்பது அந்தந்த நபர்களின் பிடிவாதத்தனமான தவறானப் போக்கை மாத்திரமே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; கசையடிகள்/சிட்சைகள் கொடுக்கப்படும் விஷயத்தில், சுபாவத்தின்படியான பெலவீனங்கள், சோதனைகள் முழுமையாய்ச் சலுகை செய்யப்படும் என்று நமக்கு உறுதியளிக்கப்படுகின்றது. அதாவது, ஆதாமின் விழுகைக் காரணமாகச் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்கள் கிறிஸ்துவின் பலியினால் உண்டான புண்ணியத்தினிமித்தம் ரத்து செய்துவிடப்படுவதை உறுதியளிக்கின்றது. இச்சலுகைகளைத் தாண்டியும் சத்தியத்தின் வெளிச்சத்திற்கு எதிரான எதிர்ப்புகள் முழுவீச்சில் காணப்படுமாயின், தண்டனை இரண்டாம் மரணமாகவே காணப்படும்.

## "தெரிந்தெடுக்கும் நடைமுறை"

எங்கெல்லாம் சுவிசேஷத்தின் ஒளியானது பிரகாசிக்கின்றதோ, இதற்கேற்ப பொறுப்பும் ஏற்படுகின்றது, மற்றும் தெரிந்தெடுப்பதற்கான சூழ்நிலைகளும் அமைகின்றது என்பதை நாம் கடந்து வந்த காலங்களில் உணருகின்றோம். "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், இவர்கள் தங்களுடைய தவறுகள், பாவங்கள், தாங்கள் விரும்பும் பாவங்கள் கண்டிக்கப்படாதபடிக்கு, வெளிப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறார்கள்" என்று நமது கர்த்தர் கூறுகின்றார்; இவர்களுக்கு எதிர்மாறாக, "சத்தியத்தின்படி தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்" (யோவான் 3:21). இவர்கள் கர்த்தருடைய சித்தத்தைத் தங்களால் முடிந்தமட்டும் நிறைவேற்ற நாடுகின்றார்கள் என்பது தங்களுடைய ஜீவியத்தில் விளங்க வேண்டுமென விரும்புகின்றார்கள். மேலும் தற்செயலாக, தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவைகள் ஏதோ ஒன்று தங்கள் ஜீவியத்திலோ அல்லது கோட்பாடுகளிலோ வெளிப்பட இவர்கள் கண்டால், அவைகளைத் திருத்தம் செய்து கொள்வதற்கான வாய்ப்புத் தங்களுக்குக் கிடைத்தபடியால் மகிழ்ச்சிக் கொள்வார்கள்.

இந்தத் தெரிந்தெடுக்கும், பிரித்தெடுக்கும் வேலையானது அந்நிய தெய்வங்களை வணங்குபவர்கள் மத்தியில் நடைபெறாமல் கிறிஸ்தவ மண்டலத்தார் மத்தியிலேயே நடைபெறுகின்றது; கிறிஸ்தவ மண்டலத்தாரின் திரளான ஜனக்கூட்டத்தாரின் மத்தியில் நடைபெறாமல், விசேஷமாகத் தேவனுடைய ஜனங்கள் என்றும், நமது கர்த்தரின் நாட்களில் யூதர்கள் செய்ததுபோன்று, இருளிலிருந்து ஒளியினிடத்திற்கு வந்துள்ளோம் என்றும் அறிக்கைப் பண்ணியுள்ள ஜனங்கள் மத்தியிலேயே நடைபெறுகின்றது. உண்மை சூழ்நிலையை உணர்ந்தவர்களாக, தெய்வீகத் திட்டம் மீது அல்லது நம்முடைய சொந்த இருதயங்கள் மற்றும் ஜீவியங்களின் மீதும் பிரகாசிக்கும் ஒளியின் ஒவ்வொரு, கதிர்களுக்காகவும் மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருக்கக்கடவோம். சத்தியமானது நம்மை ஒவ்வொரு அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கத்தக்கதாகவும், நம்மைக் கிறிஸ்துவுக்குள், தேவனுடைய சித்தத்திற்கு அதிகமதிகமாகக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்கதாகவும், சத்தியத்தை அதிகமதிகமாக அறிந்துக்கொள்ள விரும்புவோமாக. ஒளியின் பிள்ளைகளாகிய நாம் இருளின் கிரியைகளோடும், உபதேசங்களோடும், எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள முடியாது! தெய்வீக வார்த்தையானது நம்முடைய பார்வைத் திறனை அதிகமதிகமாகப் பெருகச் செய்யும்போதும், இருள் மற்றும் ஒளிக்கும்,சத்தியம் மற்றும் தப்பறைக்கும், நீதி மற்றும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் அதிகமதிகமாகத் தெளிவாகக் காணச் செய்யும்போதும் நாம் அதிகமதிகமாய் நேர்மை/உண்மையுள்ளவர்களாக இருப்போமாக!

**ஆமென்!**

# முதலாம் மாதத்தில் பஸ்கா

சந்திர காலம் மற்றும் சூரிய காலத்தின் அடிப்படையிலான யூதருடைய ஆண்டுக்குறிப்பேட்டுடன், சூரிய காலத்தின் அடிப்படையிலான நம்முடைய ஆண்டுக்குறிப்பேட்டை இசைவுப்படுத்திடுவதில் அநேகர் அதிகமாகவே சிரமத்திற்குள்ளாகுகின்றனர். இப்படியானவர்களுக்கு ஸ்மித் வேதாகம அகராதியில் இவ்விஷயம் குறித்து இடம்பெறும் பாதகத்தையும் மற்றும் எபிரெய காலகணக்கு நிபுணர் லிண்டோ அவர்கள் இவ்விஷயம் குறித்து எழுதியுள்ள பாதகத்தையும் மேற்கோளிட்டு, அன்பாய் உதவிட விரும்புகின்றோம்.

*ஸ்மித் வேதாகம அகராதியானது முன்வைப்பது என்னவெனில்:*

"யாத்திராகமம் புத்தகத்தில் நிறுவப்பட்டதான ஆண்டினுடைய அம்சங்களைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடிந்தாலும், அவைகளை நம்மால் ஒரு குறிப்பிட்ட வருடத்திற்கு அப்படியே பொருத்திட முடியாது. எனினும் அது tropical / நிலவுலக வெப்ப மண்டலத்தைச் சார்ந்தது என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில் தேசத்தின் விளைச்சல் சம்பந்தமான சில குறிப்பிட்ட அனுசரிப்புகளானது, குறிப்பிட்ட தியதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக மாதங்களானது, சந்திர மாதங்கள் என்பதும் தெளிவாய்க் காணப்படுகின்றது; ஒவ்வொரு மாதமும் அமாவாசையுடன் துவங்கியது. ஆகையால் சில விதங்களில் சரிப்படுத்திக்கொள்ளும் ஏற்பாடுகள் (adjustments) காணப்பட வேண்டும் என்பதுபோல் தோன்றுகின்றது. என்ன ஏற்பாடுகள் பண்ணவேண்டுமென்று தீர்மானிப்பதற்கு முன்னதாக, முதலாவதாக வருஷம் எப்போது துவங்குகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆபீப் மாதம் 16-ஆம் தேதியன்று முதிர்ந்த கதிர்களானது, அறுப்பின் முதற்பலன்களாகச் செலுத்தப்பட வேண்டும். (லேவியராகமம் 2:14; 23:10, 11) வாற்கோதுமையின் அறுப்புடன் அறுப்புத் துவங்குகின்றது (2 சாமுயேல் 21:9) மற்றும் பின்னர் கோதுமையின் அறுப்புத் தொடர்கின்றது. (ரூத் 2:23) ஆகையால் பாலஸ்தீனியாவில் வாற்கோதுமை எப்போது முதிர்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட வேண்டியுள்ளது அவசியமாயிருக்கின்றது. பிரயாணிகள் தாங்கள் பார்த்ததாகத் தெரிவிக்கும் கருத்துப்படி வாற்கோதுமையானது தேசத்தினுடைய வெப்பமுள்ள பகுதிகளில் ஏப்ரல் மாதத்தின் துவக்க நாட்களில் முதிர்கின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னர், மாதத்தின் பாதியில் வாற்கோதுமையின் அறுப்புத் துவங்குகின்றது; ஆகையால் வருஷம் சந்திர மாதங்களாக பிரிக்கப்படாத நிலவுலக வெப்ப மண்டலத்தின் அந்தக் கட்டத்தில், வருஷமானது துவங்குகின்றதாய் இருக்கின்றது. சம இரவு பகல் நாளின் போதான (அ) இதற்குப் பின்வரும் (ஆனால் இதற்கு மிகவும் முன்பல்ல) அமாவாசையானது, வருஷத்தினுடைய துவக்கமாக நிர்ணயிக்கப்படுகின்றது. மிகை மாதம் சேர்க்கும் முறைமையானது சிறைப்பிடிப்பிற்குப் பிற்பாடு வந்த முறைமையாக இருக்க வேண்டும்; மிகை மாதத்தைச் சேர்க்கும் முறைமை என்பது சமஇரவு பகல் நாளுக்கு, நெடுநாளுக்கு முன்னதாக பன்னிரண்டாம் மாதமானது நிறைவடையும் பட்சத்தில், பதிமூன்றாம் மாதத்தைச் சேர்க்கும் முறைமையாகும் – ஏனெனில் அறுப்பின் முதற்பலன்களானது அடுத்துவரும் மாதத்தின் பாதியில் செலுத்தப்பட வேண்டும் மற்றும் இதுபோன்றதான காணிக்கைகளும் நியமிக்கப்பட்ட காலங்களில் செலுத்தப்பட வேண்டும்."

*லிண்டோ அவர்களின் சில பதிவுகள்:*

"யூதருடைய வருடமானது சந்திரனுக்கும், சூரியனுக்கும் ஒருங்கே தொடர்பானதாகும் (luni-solar). ஏனெனில் மாதங்களானது சந்திர மாதங்களாகக் காணப்பட்டாலுங்கூட, சந்திரனுடைய சுழற்சியின் (lunar cycle) அடிப்படையில்எங்களுடைய கணக்கிடுதல் காணப்பட்டாலுங்கூட, ஒவ்வொரு 19-ஆம் வருடத்திலும், நாமும் சூரிய வருடத்திற்கு ஒத்த தேதிகளுக்கு வருகின்றோம். சந்திர சுழற்சிக்கு (lunar cycle) 235 சந்திர மாதங்கள் (lunations) காணப்படுகின்றது; இதை நாம் வருடத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் என்றுள்ள பன்னிரண்டு வருஷங்கள் (சாதாரண வருடங்கள்) என்றும், வருடத்திற்குப் பதிமூன்று மாதங்கள் என்றுள்ள ஏழு வருஷங்கள் என்றும் பிரிக்கின்றோம். வருடத்திற்கு 13 மாதங்கள்கொண்ட வருடமானது எம்போலிஸ்மிக் /Embolismic வருடம் என்று அழைக்கப்படுகின்றது.

"கி. மு. 432-ஆம் வருடத்தில், அதாவது சிதேக்கியாவின் ஆளுகையின்போது பெயர்ப்பெற்று காணப்பட்டவரான அத்தேனே பட்டணத்தின் பிரபலமான கணித நூல் வல்லுநராகிய மெடென் (Meton) அவர்களும் கூட இதைப்போலவே காலத்தைப் பிரித்துள்ளார், ஆனால் ஒவ்வொரு மூன்றாம் வருடத்தையும் எம்போலிஸ்மிக் (Embolismic) வருடமாகப் பிரித்துள்ளார்; (சந்திர சூழற்சியின்) 19 வருடங்களில், 18-ஆம் வருடத்தையும், 19-ஆம் வருடத்தையும் 13 மாதங்கள் கொண்டவைகளாகப்

பிரித்துள்ளார்; நம்முடைய ஏற்பாடுகளின்படி, சந்திர வருடங்களும், சூரிய வருடங்களும் சமப்படுத்தப்படுகின்றது.

| | நாட்கள் | மணிநேரங்கள் | நிமிடங்கள் | விநாடி |
|---|---|---|---|---|
| **ராப் அடாவின் அடிப்படையிலான 19 வருடங்கள்** | **6939** | **16** | **33** | **3 1/3** |
| **235 சந்திர மாதங்கள்** | **6939** | **16** | **33** | **3 1/3** |

"வருஷமானது மூன்று வகைகளில் காணப்படுகின்றது, அதாவது பூரண வருஷம், சாதாரண வருஷம், அபூரண வருஷம். பூரண வருஷத்திற்கு 355 நாட்கள் காணப்படுகின்றது மற்றும் இது Hesvan மாதத்திற்கு 30 நாட்களும், kislev மாதத்திற்கு 30 நாட்களும் காணப்படும்போதேயாகும். சாதாரண வருடத்திற்கு 354 நாட்கள் காணப்படுகின்றது மற்றும் இது Hesvan மாதத்திற்கு 29-நாட்களும், kislev மாதத்திற்கு 30 நாட்களும் காணப்படும்போதேயாகும். அபூரண வருஷத்திற்கு 353 நாட்கள் காணப்படுகின்றது மற்றும் இது Hesvan மாதத்திற்கு 29 நாட்களும், kislev மாதத்திற்கு 29 நாட்களும் காணப்படும்போதேயாகும். Embolismic வருடமானது Adar மாதத்திற்கு அடுத்ததாக, Ve-adar (அ) இரண்டாம் Adar மாதம் என்று அழைக்கப்படுகின்றதான ஒரு மாதம் இடையிணைக்கப்படும்போது உண்டாகுகின்றது; அப்படியான வருடத்திற்கு 385, 384, அல்லது 383 நாட்கள் மேற்கூறப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் காணப்படுகின்றது. இப்படியாக மாதம் இணைக்கப்படுவதற்கான காரணம் - பஸ்காவை அதற்கேயுரிய ஏற்றக்காலத்தில் கைக்கொள்வதற்கேயாகும்; பஸ்காவானது இளவேனிற்/வசந்த காலத்தின் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்து வரும் பௌர்ணமியின்போது அல்லது (சூரியனானது, மேஷ ராசி நட்சத்திர கூட்டத்திற்குள் காணப்படும்போது) மேஷத்தில் சூரியன் காணப்படுகையில் கைகொள்ளப்படுகின்றது; எத்தருணத்தில் பௌர்ணமி நிகழும் என்பது தெரியாது, ஆனால் சூரியனானது ராசி நட்சத்திர கூட்டத்தில் காணப்படுகையில் அது கைக்கொள்ளப்படவேண்டும். அதன் ஆசரிப்பிற்கான வேளை நிர்ணயிக்கப்பட்டது என்பது எண்ணாகமம் 9:2-ஆம் வசனத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது; "இஸ்ரயேல் மக்கள் குறிக்கப்பட்ட காலத்தில் பஸ்காவைக் கொண்டாடட்டும்." (திருவிவிலியம்)

"நம்முடைய மாதங்களானது எப்போதும் சந்திர மாதங்களாக இருந்துள்ளது என்பது 1 இராஜாக்கள் 6:38-ஆம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது; "பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுவதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒருபங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது; அவன் அதைக் கட்டிமுடிக்க ஏழு வருஷம் சென்றது." இங்கு மாதம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள இரண்டு எபிரெய வார்த்தைகளும் வெவ்வேறானவைகளாகும்; முதலாவது (சந்திரன்) 'Moon' எனும் வார்த்தையினின்று மொழிப்பெயர்க்கப்பட்டதாகும் மற்றும் இரண்டாவது 'innovation' (புதிய) எனும் வார்த்தையினின்று மொழிப்பெயர்க்கப்பட்டதாகும். **நம்முடைய மாதங்கள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| **Tisri, 30 நாட்கள்** | **Nisan (நீசான்), 30 நாட்கள்** |
| **Hesvan, 29 (அ) 30 நாட்கள்** | **Yiar, 29 நாட்கள்** |
| **Kislev, 29 (அ) 30 நாட்கள்** | **Sivan, 30 நாட்கள்** |
| **Tebet, 29 நாட்கள்** | **Tamuz, 29 நாட்கள்** |
| **Sebat, 30 நாட்கள்** | **Ab, 30 நாட்கள்** |
| **Adar, 29 நாட்கள்** | **Elul, 29 நாட்கள்** |

"Embolismic (13 - மாதங்கள் உடைய) வருடங்களில் Adar மாதத்திற்கு 30 நாட்களும், இடையில் இணைக்கப்பட்டதான மிகை மாதமாகிய Ve-adar மாதத்திற்கு 29 நாட்களும் காணப்படுகின்றது.

"இரண்டு அமாவாசைகளுக்கு இடையிலான காலப்பகுதியாகிய Synodical மாதம் என்று அழைக்கப்படுகின்றதான சந்திர மாதத்திற்கு 29:12:44:3 1/3, அதாவது 29 ½ நாட்களும், ¾ மணி நேரமும் கொண்டிருக்கிறபடியால், ஒரு மாதத்திற்கு 29 நாட்கள் என்றும், அடுத்து வரும் மாதத்திற்கு 30 நாட்கள் என்றும் காணப்படத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்படுகின்றது. ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் காணப்படும்போது, பாதி நாளானது விடுமுறையாகக் காணப்படமுடியாது எனும்

கோட்பாட்டின் அடிப்படையில், மாதத்தினுடைய கடைசி நாளும், அடுத்த நாளும், அமாவாசை எனக் கடைப்பிடிக்கப்படுகின்றது. முப்பதாம் நாளானது பாதி முந்தின மாதத்தின் நாளாகவும், பாதி அமாவாசையாகவும் காணப்படுவதினால், அந்த முழு நாளும் விடுமுறையாகக் காணப்படுகின்றது மற்றும் அடுத்த நாளும் அமாவாசையினுடைய முதலாம் முழு நாளாக இருக்கின்றபடியால், இதுவும் விடுமுறையாகக் காணப்படுகின்றது. இந்தக் கோட்பாடானது முற்காலங்களிலேயே கைக்கொள்ளப்படுகின்றது என்பது 1 சாமுயேல் 20:5, 27-ஆம் வசனங்களில் பார்க்கப்படலாம்.

"இந்த ஏற்பாட்டிலும்கூட, இன்னமும் ஒவ்வொரு மாதமும் 44 நிமிடங்களும், 3 1/3 விநாடிகளும் குறைவுபடுகின்றது மற்றும் 12 மாதமுள்ள வருடத்திற்குக் கிட்டத்தட்ட 9 மணி நேரங்கள் காணப்படுகின்றது. இந்தக் குறைவினை நிறைவுபடுத்தும் வண்ணமாக, ஒவ்வொரு இரண்டாம் அல்லது மூன்றாம் வருடத்தில் Hesvan மாதத்துடன், ஒருநாள் சேர்க்கப்பட்டு அதனால், இந்த மாதத்திற்கு 30 நாட்கள் காணப்படுகின்றது. Hesvan மாதத்திற்கு 30 நாட்கள் காணப்படும்போது, kislev மாதத்திற்கு 30 நாட்கள் காணப்படுகின்றது. Hesvan மாதத்திற்கு 30 நாட்கள் இல்லாமலேயே, kislev மாதமானது சிலசமயம் 30 நாட்கள் உடையதாக்கப்படுகின்றது; இது பஸ்காவானது திங்கட்கிழமையோ (அ) புதன்கிழமையோ (அ) வெள்ளிக்கிழமையோ இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படுகின்றது; ஏனெனில் இந்தப் பண்டிகையானது, மற்ற விடுமுறைகளை ஒழுங்குப்படுத்துவதினால், எந்தப் பண்டிகையும் அவைகள் ஆசரிக்கப்படுவதற்குப் பாத்திரமற்ற நாட்களில் இடம்பெறாதபடிக்கு ஏற்பாடு பண்ணப்படுகின்றது. (அந்தந்த மாதத்தில்) வாரத்தினுடைய அதே நாளில் ...

பஸ்காவின் முதலாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் Tamuz மற்றும் Ab உடைய உபவாசங்களும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் இரண்டாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் Sebuot மற்றும் Hosana Raba-வின் முதலாம் நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் மூன்றாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் வருடப்பிறப்பின் மற்றும் கூடாரப்பண்டிகையின் முதல் நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் நான்காம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் நியாயப்பிரமாணத்தினுடைய களிகூருதலுக்கான நாளும் இடம்பெறுகின்றது.

பஸ்காவின் ஐந்தாம் நாள்போலவே, வாரத்தின் அதே நாளில் Kippur, பாவநிவாரண நாளும் இடம்பெறுகின்றது.

"ஆகையால் முதலாம் நாளானது திங்கட்கிழமையாக இருக்குமானால், (Purim) பூரிம் சனிக்கிழமை வருகிறதாகவும், Kippur வெள்ளிக்கிழமை வருகிறதாகவும் காணப்படும் மற்றும் இந்த இரண்டு கிழமைகளிலும் இவைகள் கைக்கொள்ளப்பட முடியாது. அந்நாளானது புதன்கிழமையாக இருக்குமானால், Kippur ஞாயிற்றுக்கிழமை வருகிறதாகக் காணப்படும்; ஞாயிற்றுக்கிழமையில் இது கைக்கொள்ளப்பட முடியாது; காரணம் ஓய்வுநாளைப்போலவே, Kippur கூடக் கண்டிப்பான கட்டளையை உடையவைகளாக இருப்பதினால், இது ஓய்வுநாளுக்கு முந்தியோ, பிந்தியோ கைக்கொள்ளப்பட முடியாது. ஒருவேளை அந்நாளானது, வெள்ளிக்கிழமையாக இருக்குமானால், Hosana Raba – சனிக்கிழமை வருகிறதாக இருக்கும்; இந்தச் சனிக்கிழமையில் இந்தப் பண்டிகையின் ஆசரிப்புகள் கைக்கொள்ளப்பட முடியாது. மேற்கூறப்பட்டுள்ள விதிமுறைமையின்படி Rosh Ashana (Tisri/மதச்சார்ப்பற்ற/Civil வருடபிறப்பு) விடுமுறையானது ஞாயிற்றுக்கிழமையிலோ, புதன்கிழமையிலோ (அ) வெள்ளிக்கிழமையிலோ ஒருபோதும் வராதபடிக்குப் பார்த்துக்கொள்ளப்படுகின்றது.

"இந்த விடுமுறையானது அமாவாசையின் நாளன்று பின்வரும் விதிவிலக்குகளுக்கு ஏற்ப கைக்கொள்ளப்படுகின்றது:

(1) அமாவாசை ஞாயிற்றுக்கிழமையிலோ, புதன்கிழமையிலோ (அ) வெள்ளிக்கிழமையிலோ நிகழும் பட்சத்தில் விடுமுறையானது 5604-படி அடுத்தநாளில் கைக்கொள்ளப்பட வேண்டும்.

(2) அமாவாசையானது பிற்பகலில் நிகழும்போது, அடுத்த நாளில் கைக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அது ஞாயிறு (அ) புதன் (அ) வெள்ளி நிகழும் பட்சத்தில் 5601-படி அடுத்த நாளில் கைக்கொள்ளப்படுகின்றது.

(3) அமாவாசையானது சாதாரண விருஷத்தில் செவ்வாய்க் கிழமையன்று 9 மணி நேரம், 11 நிமிடங்கள், 20 வினாடிகள் காலை வேளையிலோ (அ) இதற்குப் பிற்பாடு நிகழுமானால், அது அந்நாளில் கைக்கொள்ளப்படக்கூடாது மற்றும் அது புதன்கிழமையன்றும் கைக்கொள்ளப்பட முடியாததினால், 5616-படி வியாழன் அன்று கைக்கொள்ளப்படுகின்றது. இதற்கு புதிய வருஷப்பிறப்பானது அமாவாசையன்றல்லவா கைக்கொள்ளப்பட வேண்டும் என்று மறுப்புத் தெரிவிக்கப்படலாம்; ஆனால் இப்படியாக அமாவாசை அன்று கைக்கொள்ளப்பட வேண்டுமெனில்,

இதற்கு முந்தின மாதமாகிய Elul-க்கு 27 (அ) 28 நாட்கள் மாத்திரமே காணப்பட வேண்டும் மற்றும் ஒரு மாதமானது 29 நாட்களுக்குக் குறைவான நாட்களைப் பெற்றிருக்க முடியாது.

(4) அமாவாசையானது திங்கட்கிழமையன்று 3 மணி: 30 நிமிடங்கள்: 52 விநாடிகள் மாலைப் பொழுதோ அல்லது இதற்குப் பின்னரோ Embolismic வருடத்திற்கு (இடையிணைக்கப்பட்ட மிகை மாதமுடைய வருடத்திற்கு) பின்வரும் வருடத்தில் நிகழும் பட்சத்தில், விடுமுறையானது 5617-படி செவ்வாய் அன்று காணப்படுகின்றது. இது அபூர்வமாகவே நிகழ்கின்றது.

"நம்முடைய Embolismic வருடங்களானது (மிகை மாதமுடைய வருடங்களானது) ஒவ்வொரு சந்திர சுழற்சியின் போதும் (19 வருடங்களுள்ள சந்திர சுழற்சியின் போதும்/lunar cycle) வருட எண்கள்: 3, 6, 8, 11, 14, 17, 19-ஆகக் காணப்படுகின்றது.

"மிகுந்த துல்லியத்துடன் கிரகோரியன்/Gregorian (ஆண்டுக்குறிப்பேட்டின்) கணக்கிடுதல்கள் காணப்பட்டாலும்கூட, அது இன்னும் குறைப்பாடுகளுடன்தான் காணப்படுகின்றது மற்றும் எதிர்க்காலங்களில் சில திருத்தங்களும் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு நிரூபணமாக நைஸ் மாநாட்டில் ஈஸ்டரானது, பஸ்காவின் முதல் நாளன்று — அதே நாளில் கைக்கொள்ளப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது மற்றும் இதன் மூலம் அது யூத மார்க்கம் சம்பந்தப்பட்டதல்ல என்று காண்பிக்கப்பட்டது. ஆகையால் ஈஸ்டரானது பௌர்ணமிக்குப் பின்புள்ள ஞாயிறன்று கைக்கொள்ளும்படிக்குக் கட்டளையிடப்பட்டது; பஸ்காவானது எப்போதும் பௌர்ணமியன்றே கைக்கொள்ளப்படுகின்றது; எனினும் 1825-ஆம் வருடத்தில் இரண்டுமே ஒரேநாளில் கைக்கொள்ளப்பட்டது."

* * *

மேற்கூறப்பட்டவைகளைப் பார்க்கும்போது, பஸ்காவின் விஷயத்தில் யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தேதியினை அடைந்திடுவதற்கு எடுத்திட்ட ஒவ்வொரு பிரயாசங்களிலும் சிரமங்கள் காணப்பட்டன மற்றும் அடிக்கடி பொருத்தமான இரு நாட்களில் ஒன்றினைத் தெரிவு செய்வதற்கான அவசியம் காணப்பட்டது. எனினும் இந்த விஷயத்தில் அவர்கள் தங்கள் தலைவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றினவர்களாய் இருந்து, ஒவ்வொருவனும் தனிப்பட்ட அறிவிற்கும், சௌகரியத்திற்கும் (அ) விருப்பத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு தேதியை நிர்ணயித்து, ஆசரிப்பதற்குப்பதிலாக, ஒன்றுபோல் தேதியினைப் பெற்றிருக்கின்றனர். (மத) தலைவர்களுக்கு இப்படியாகக் கீழ்ப்பட்டிருப்பதற்கு நமது கர்த்தரினாலும் கூடச் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது: "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்." (மத்தேயு 23:3) இதே விதமான நடக்கையை அப்போஸ்தலனும் சுவிசேஷ யுக சபைக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (எபிரெயர் 13:17) பஸ்காவின் ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்திலுள்ள இரண்டு முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: (1) ஒன்றுபோல் தேதி மற்றும் (2) முடிந்தமட்டும் துல்லியமாகப் பௌர்ணமியின்போது துவக்கம் கொண்டிருத்தல் – பௌர்ணமியானது இஸ்ரயேலுக்கான தயவின் முழுமையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனம், 1908

ஆதித் திருச்சபையினரின் வழக்கத்தினைப் பின்பற்றினவர்களாக, நாம் "கடைசி இராப்போஜனத்தை" நமது சக கிறிஸ்தவர்களைப்போல வாரந்தோறுமாக (அ) மாதந்தோறுமாக, காலாண்டுதோறுமாக ஆசரியாமல், வருடந்தோறுமாக ஆசரிக்கின்றோம். நாம் அதை முற்பகலில் ஆசரியாமல், இராப்போஜனமென ஆசரிக்கின்றோம். நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்ப இப்படியாக "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற நமது ஆண்டவருடைய வேண்டுகோளை எழுத்தின்படியும், ஆவியின்படியும் நாம் கைக்கொள்கின்றோம்.

"புனித வெள்ளி" என்று ஆசரிக்கப்படுகின்றதான நமது கர்த்தருடைய மரணநாளுக்கு, கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்னமும் ஒரு பரிசுத்தமான மதிப்புப் பொதுவாகக் காணவேபடுகின்றது; ஆனால் இதற்கு முந்தின மாலையில் இடம்பெற்றதான விலையேறப்பெற்ற நினைவுகூருதல் இராப்போஜனத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இதற்கான காரணமும் தெளிவாய்த் தெரிகின்றது. உலகளாவ செல்வாக்குடையதாகக் காணப்பட்டதான கத்தோலிக்க மார்க்கமானது நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப்பதிலாக "பூசைபலியை/திருப்பலியை" அறிமுகப்படுத்தினது மற்றும் சீர்த்திருத்தவாதிகளானவர்கள் பூசைபலியை, பாவங்களுக்கான பலி இல்லையென்று அதை மறுத்து, "திருவிருந்து" என்று அழைக்கப்படுகின்றதான ஆசரிப்பை எடுத்துக்கொண்டார்கள்.

எனினும் ஆதியில் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசித்தலுக்கான, நிஜத்தின் நிறைவேறுதலை ஆசரிப்பதற்காய் நிறுவப்பட்டதாய் இருந்தது மற்றும் இதன் ஆற்றலும், அருமையும், இதை இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதற்குப்பதிலாக, அடிக்கடி ஆசரிப்பதன் மூலமாக மங்கியுள்ளது.

இக்கட்டுரையின் ஆசிரியரும், மற்ற அநேகரும் நினைவுகூருதல் இராப்போஜனத்தை வருடந்தோறுமாக, பல காரணங்களினிமித்தம் ஆதி ஆசரிப்பிற்கு மிகவும் ஏற்றாற்போல, வியாழக்கிழமை இரவில் ஆசரித்திடுவதற்கு விரும்பிடுவார்கள்; அந்தக் காரணங்கள் பின்வருமாறு: (1) இப்படி ஆசரிப்பது என்பது இவ்வாசரிப்பை, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலான ஞாயிற்றுக்கிழமையுடன் உள்ள அதன் தொடர்புக்குள் கொண்டுவந்துவிடும். (2) அந்த ஒரு காலப்பகுதியில் ஈஸ்டர் ஞாயிறானது நமது கர்த்தருக்கான உயிர்த்தெழுதலுக்கான விசேஷித்த நினைவுகூருதலாகப் பொதுவாய்க் கொண்டாடப்படுகின்றது. (3) இன்று அநேகரால் "புனித வியாழன்/பெரிய வியாழன்" என்று அழைக்கப்படுகின்றதான நாளின் மாலையில், நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரிப்பது என்பது, நம்மை "விநோதமானவர்கள்" (அ) "யூதருடைய வழக்கத்தினைப் பின்பற்றுகிறவர்கள்" என்று அழைக்கின்ற நம்முடைய அருமை கிறிஸ்தவ நண்பர்கள் அநேகருக்கு ஆற்றல் மிக்க பாடமாகக் காணப்படும்; இவர்கள் ஆராய்ந்து பார்க்காததினால், இவர்களால் நம்முடைய நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினாலேயே, இவர்கள் நம்மை மேற்கூறிய வண்ணம் அழைக்கின்றனர். (4) "பாபிலோன் மயமான" எதையும் பின்பற்றிடுவதற்குப்பதிலாக, பாபிலோனுக்குள் தொலைந்துபோன ஒன்றின்மீது கவனத்தைத் திருப்புகின்றவர்களாய் இருப்போம். இதைத் (இச்சத்தியத்தை) தேடுவது என்பது, மனித பாரம்பரியங்களின் கீழாக தொலைந்துபோன (அ) புதைந்துபோன மற்றச் சத்தியங்களையும் ஆராய்வதற்கும், உணர்ந்துகொள்வதற்கும் ஏதுவாய் இருக்கும்.

ஆனால் இந்த அனுகூலங்களைச் சிலர் உணர்ந்து/புரிந்துகொள்ள மாட்டார்கள் மற்றும் புரிந்துகொள்ள முடியாததினால் பிரிவினை உண்டாகும் என்று அஞ்சினவர்களாக நாம் இந்த அனுகூலங்கள் அனைத்தையும் தவிர்த்து, தள்ளிச் செல்கின்றோம். பிரிவினைகள் காணப்படக்கூடாது என்றும், "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு" நாம் நாட வேண்டும் என்றுமுள்ள அப்போஸ்தலனின் வார்த்தைகளை நினைவில்கொள்வதற்கே நாம் விரும்புகின்றோம். ஆகையால் வசந்த காலத்தின்/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்த முதல் பௌர்ணமிக்கு அருகாமையிலுள்ள வியாழன் இரவை, நினைவுகூருதலுக்கான தேதி என்று நாங்கள் அறிவிக்கிறதில்லை. ஆகையால் நினைவுகூருதலுக்கான தேதியை – நீசான் 14-ஆம் தேதியின் (முந்தின) மாலை என்று – யூதருடைய பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய துவக்கத்திற்கு முந்தின நாள் என்று அறிவிக்கின்றோம்; அதாவது 1908 (இப்பாடம் எழுதப்பட்ட) வருடத்தில் ஏப்ரல் 14-ஆம் தேதி, மாலை 6 மணிக்குப் பின்னர் ஆகும். யூதருடைய பஸ்காவானது (பண்டிகையானது) ஏப்ரல் 16-ஆம் தேதி (நீசான் – 15-ஆம் தேதி) வியாழன் அன்று துவங்குகின்றது; ஆனால் யூத கணக்கீட்டின்படி ஏப்ரல் 15-ஆம் தேதியின் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் துவங்குகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் ஏப்ரல் 15-ஆம் தேதியாகிய புதன்கிழமையானது நீசான் 14-ஆம் தேதியாக இருக்கின்றது மற்றும் ஏப்ரல் 14-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பாகத் துவங்குகின்றதாய் இருக்கின்றது.

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" – 1 கொரிந்தியர் 5:7, 8

இவ்வார்த்தைகளானது நினைவுகூருதல் இராப்போஜனத்தை, யூதருடைய பஸ்காவின் நினைவுகூருதலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, எத்துணை அர்த்தங்கள் இவ்வார்த்தைகளில் காணப்படுகின்றதாய் இருக்கும். நிழலினுடைய வெளிச்சமானது, எவ்வளவாய் நிஜத்தைப் பிரகாசிப்பிக்கின்றதாய் இருக்கின்றது. இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்தின் அபாயத்திற்குள்ளானதுபோல, "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையும்கூட" நித்தியமான மரணம் (அ) ஜீவனுக்கான பரீட்சையில் இப்பொழுது காணப்படுகின்றனர். (எபிரெயர் 12:23) நிழலான முதற்பேறானவர்கள் வீட்டிற்குள்ளாகவே காணப்பட்டு, ஆட்டுக்குட்டியினைப் புசித்து, அதாவது ஆட்டுக்குட்டியினுடைய இரத்தம் தெளிக்கப்பட்டதான நிலைக்கால்களையும், மேற்சட்டங்களையும் உடையதான வீட்டிற்குள் காணப்படுவது வரையிலும் பாதுகாப்பாய் இருப்பதுபோலவே, தெளிக்கப்பட்ட மேலான இரத்தத்தின்கீழாக, விசுவாச வீட்டிற்குள்ளாகவே தரித்திருக்கிறவர்களும், நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுவைப் புசிக்கிறவர்களும் ஆனவர்களாகிய நாம் மரணத்தினின்று பாதுகாக்கப்பட்டவர்களாக – தேவ ஏற்பாட்டின்கீழ் நித்தியமான ஜீவனுக்கான நிச்சயத்துடன் காணப்படுகின்றோம்.

நாம் நிழலான ஆட்டுக்குட்டியை அல்ல, இதற்குப்பதிலாக இயேசுவையே, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்றதான தேவ ஆட்டுக்குட்டியையே இப்பொழுது அடையாளம் கண்டுகொள்கின்றோம். அவரை நாம் புசிக்கின்றோம்; அவரது மாம்சத்தைச் சொல்லர்த்தமாய்ப் புசியாமல், விசுவாசத்தினால் அவரது பலியின் புண்ணியத்தில் பங்கெடுத்து, அதை நம்முடையதாக்கிக் கொள்கின்றோம். சுவிசேஷ யுகமாகிய இந்த இரவு முழுவதும், நாம் இப்படியாகவே நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றோம் – ஆயிரவருட யுகத்தின் காலைவரை புசிக்கின்றோம் – காலையில் நாம் விடுதலை அடைந்திருப்போம். வருடாந்தர நினைவுகூருதல் இராப்போஜனமானது நம்முடைய பண்டிகையாய் இராமல், மாறாக அதற்கான விளக்கமாக (அ) உயர்தரமான நிழலாக – நினைவூட்டுதலாக – மிகவும் அருமையான, மிகவும் பயபக்திக்குரியதாக, உதவுகிறதாகக் காணப்படுகின்றது. நாம் விசுவாசப் பண்டிகையையும், இன்னுமாக நினைவுகூருதல் இராப்போஜனத்தையும் ஆசரிப்போமாக. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 11:26)

நம்முடைய வழக்கமான வழக்கத்தின்படியே ஏப்ரல் 14-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமை, இரவு 7:30 மணிக்கு ஒன்றுகூடி, மாபெரும் மீட்பருடைய மரணத்தையும், மரணத்திற்கு ஏதுவான ஆக்கினைத்தீர்ப்பினின்று நம்முடைய விடுதலையையும் நினைவுகூருவோமாக. இன்னுமாக நாம் புளிப்பில்லாத அப்பத்தைப் பிட்கையில், இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் அனைவரும் அவரோடுகூட ஒரே அப்பமாக பிதாவினால் கருதப்படுகின்றார்கள் என்றும், அனைவரும் நமக்கான நமது கர்த்தருடைய பலியில் (அ) பிட்கப்படுதலில் பங்கெடுப்பது மாத்திரமல்லாமல், அவரோடுகூட "அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென," முதற்பேறானவர்களின் சபையெனப் பிட்கப்படுகின்றனர் என்றுமுள்ள அப்போஸ்தலனின் கருத்துக்களையும் நினைவுகூருவோமாக. (1 கொரிந்தியர் 10:17) "திராட்சப்பழரசமுள்ள" "பாத்திரத்தில்" நாம் பங்கெடுக்கையில், அது நமக்காகப் பலிச்செலுத்தப்பட்டதான நமது கர்த்தருடைய இரத்தத்தை, அவரது ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் மாத்திரமல்லாமல், அதை நாமும் பங்கெடுக்கும் பாத்திரமாக - அப்போஸ்தலன் விவரிப்பது போன்று கிறிஸ்துவின் பாடுகளிலுள்ள நம்முடைய ஐக்கியத்தையும் அடையாளப்படுத்துகின்றதாயும் நாம் அதை அடையாளம் கண்டுகொள்வோமாக. (1 கொரிந்தியர் 10:16) இன்னுமாக "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக (ஊழியத்தில்) நிறைவேற்றுகிறேன்" என்றும், இப்படியாக "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்க – நம்முடைய தருணங்களை, மணி நேரங்களை, தாலந்துகளை, பலத்தை மற்றும் சௌகரியங்களைக் கொடுக்கக் – கடனாளிகளாயிருக்கிறோம்" என்றுமுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளையும் நினைவுகூருவோமாக. (கொலோசெயர் 1:24; 1 யோவான் 3:16)

புளிப்பில்லாத அப்பங்கள் பயன்படுத்தப்படும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம். யூதருடைய பஸ்கா அப்பமானது (ரொட்டிகளானது) பல்வேறு பட்டணங்களில் வாங்கப்படலாம்; இல்லையேல் "யுநீடா" பிஸ்கோத்து அல்லது சோடா பிஸ்கோத்து/ரொட்டி (Uneeda Biscuit or Soda Biscuit) பயன்படுத்தப்படலாம். "திராட்சப்பழரசத்தை" (fruit of the vine) பொறுத்த விஷயத்தில் அனைவருக்கும் சம்மதமானால் திராட்சப்பழச்சாறு (grape juice) அல்லது உலர் திராட்சச்சாறு (Raisin juice) பயன்படுத்திடுவதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம்; ஆனால் எவரேனும் (wine) திராட்சரசத்தை விரும்பினால், அப்படியானவர்களுக்கு அதை ஏற்பாடு பண்ணிடுவதற்கு அறிவுரைக் கூறுகின்றோம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆராதனைக்கென்று கூடிக்கொள்வது போன்றே அந்தந்த சபையார் கூடிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம்; இந்த ஒரு தருணத்தின்போது, (1) அதிக எண்ணிக்கையிலுள்ள சபையார்களோடு கூடிக்கொள்வதற்கென எவரும் சிறிய எண்ணிக்கையிலான கூடுகைகளை விட்டுச் செல்ல வேண்டாம். "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளை மறந்துவிடாதீர்கள். (மத்தேயு 18:20) ஒருவரோடாகிலும் கூடிக்கொள்ளமுடியாத அளவுக்குச் சகோதரரோ, சகோதரிகளோ வியாதியஸ்தர்களாகவோ (அ) தனிமையிலோ காணப்பட்டால், அவர்கள் கர்த்தருடன் தனிமையில் ஆசரிப்பார்களாக. நினைவுகூருதலுக்கான அடையாளச் சின்னங்களை ஏற்பாடு பண்ணிடுவதற்குப் பணவசதி இல்லாதவர்கள் ஏப்ரல் 1-ஆம் தேதிக்குள்ளாக எங்களுக்குத் தெரிவித்தால், அவைகள் இலவசமாய் வழங்கப்படும்.

சிறந்த முறைமைகள் ஏதும் தெரியாதவர்கள் 6-ஆம் தொகுதியின் குறிப்பிட்டப் பகுதிகளை, ஜெபித்து, ஸ்தோத்திரித்து வாசிப்பதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம். இத்தருணத்திற்கான ஊழியக்காரர்களின் விஷயத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள் சபையாரின் வாக்குகளினால்,

கரங்களை நீட்டுவதன் மூலம் நியமிக்கப்படுகின்ற – மூப்பர்களாய் இருத்தல் வேண்டும். ஒருவேளை சபையின் எண்ணிக்கை குறைவாகவும் மற்றும் மூப்பர் இன்னமும் தேர்ந்தெடுக்கப்படாத பட்சத்தில், அங்குள்ள அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் பெரும்பான்மையானவர்களுடைய ஒப்புதலின் பேரில், அத்தருணத்திற்காக ஓர் ஊழியக்காரன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆசரிப்புப்பற்றியும் மற்றும் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கைப்பற்றியுமான தகவல்களைச் சுருக்கமாக நமக்கு அஞ்சல் அட்டை வாயிலாகத் தெரியப்படுத்தத்தக்கதாக, எவரையாகிலும் நியமித்துக்கொள்வதற்குக் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கர்த்தருக்கும், அவரது சகோதரர்களுக்கும், அவரது நோக்கங்களுக்கான/காரணங்களுக்கான தங்களது உண்மைக்கும், பயபக்திக்குமான வாக்குறுதியை அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கர்த்தருக்கு முன்பாகப் புதுப்பித்துக்கொள்ளும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம். இப்படிச் செய்வதினால் ஓர் ஆசீர்வாதம் காணப்படுகின்றது மற்றும் இவ்வாசீர்வாதமானது ஒவ்வொருவருக்கும் அவசியமாய் இருக்கின்றது. கர்த்தரும், அப்போஸ்தலரும் சுட்டிக்காட்டுவதுபோல, இப்படியாகப் பங்குகொள்பவர்கள் பலப்படுத்தப்படுவார்கள் மற்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அனைத்து அஞ்சல் அட்டைகளையும் (வெளிநாடுகளிலிருந்து எழுதப்படும் அஞ்சல் அட்டைகளையும்) Allegheny, Pa., U. S. A.-வில் உள்ள Society என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

*****

# "தாகத்துக்குத் தா"

## யோவான் 4:19-29

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்."- யோவான் 7:37

"அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்று இயேசுவைக் குறித்து யோவான் ஸ்நானன் சாட்சியளித்தார் (யோவான் 3:30). இதற்கிசைவாகவே, இயேசு (தம்முடைய சீஷர்களின் கைகளின் மூலம்) யோவான் மற்றும் யோவானுடைய சீஷர்களைக்காட்டிலும் அநேகம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று வாசிக்கின்றோம் (யோவான் 4:1). இயேசுவைக் குறித்த பிரபலம் பெருகினபோது, இது பரிசேயர் மற்றும் வேதபாரகர் மத்தியில் கசப்பையும், எதிர்ப்பையும் உண்டுபண்ணினதினிமித்தம், அவரைக் கொன்றுபோட அவர்கள் வகைத்தேடினார்கள். இதன் காரணமாகவே அதாவது, "யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகைத்தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல், கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்" என்று நாம் வாசிக்கின்றோம் (யோவான் 7:1). மதத்தலைவர்கள் யோவானைப் பார்க்கிலும் இயேசுவிடமே அதிகம் வன்மமும், விரோதமும் கொண்டிருந்தனர். காரணம், அவர் தங்களிலும் அதிகமாய் மேம்பட்டிருப்பதைக் கண்டார்கள். மேலும், கல்வியறிவு இல்லாத பொது ஜனங்கள் அவர் (இயேசு) கூறுவதை மகிச்சியுடன் கேட்டு, "இந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்றார்கள். ஆகவே, விசேஷித்தப் பண்டிகைகளில் நியாயப்பிரமாணத்தின்படி திரளான ஜனங்கள் எருசலேமில் கூடியிருக்கும் நாட்கள் தவிர மற்றபடி இயேசு எருசலேமில் இருந்ததாக நாம் அதிகம் வாசித்ததில்லை.

அவருடைய அப்போஸ்தலர்களில் பெரும்பாலானவர்களின் சொந்த ஊராகிய கலிலேயாவுக்குப்போக வேண்டுமெனில், சமாரியரின் பட்டணங்கள் வாயிலாகவே பிரயாணம் பண்ண வேண்டியிருந்தது. இந்தச் சமாரியர்களைக் குறித்துத்தான் நமது கர்த்தர் இட்டக் கட்டளையானது, "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" என்பதாக இருந்தது (மத்தேயு 10:5, 6). சமாரியர்கள், இஸ்ரயேலர்களின் காணியாட்சிக்குப் புறம்பான அந்நியர்களாகவும், புறஜாதியாராகவும் கருதப்பட்டனர். சமாரியர்களின் வரலாறு குறித்து நாம் சற்றுப்பார்க்கலாம். பாபிலோனியர்களின் இராஜா, இஸ்ரயேலர்களைப் பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுபோன காலகட்டத்தில் அவர் சில புறஜாதிகளை இஸ்ரயேல் தேசத்தில் குடியேற்றினார். இந்தப் புறஜாதியினர் தங்களுடைய கடந்த கால விக்கிரக அனுபவங்களிலிருந்து துண்டிக்கப்பட்டதால், இவர்கள் தங்களின் புதிய நாடாகிய இஸ்ரயேலின் மீதும், அதன் மத நம்பிக்கைகள், கோட்பாடுகள் மற்றும் ஆச்சாரங்கள் மீதும் விருப்பங்கொள்ள ஆரம்பித்தனர். இப்படியாக இருக்கையில், யூதர்கள் மத்தியில் காணப்பட்ட சில கவனமற்ற, அறிவற்ற, ஒழுக்கக்கேடான யூதர்கள், தங்களின் தெய்வீக நியாயப்பிரமாணங்களையும், கலப்பின திருமணம் பற்றின அதன் பிரமாணங்களையும் புறக்கணித்தவர்களாக, சமாரியர்களோடு திருமண உறவை வைத்துக்கொண்டார்கள். இவ்விதமாக, அவர்கள் (அந்தப் புறஜாதிகள்) மத்தியில் கொஞ்சம் யூதர் இரத்தம் கலந்தது. இவர்கள் தங்களைத் தாங்களே யாக்கோபின் பிள்ளைகள் என்று அழைத்துக்கொண்டனர். மேலும், இப்படி அழைப்பதினால் தங்களுக்குச் சில ஆசீர்வாதங்கள் சேரும் என்ற நம்பிக்கைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இந்தச் சமாரியர்களுக்கும் மற்றும் யாக்கோபின் வம்சம் வழியாக வந்த யூதர்களுக்கும் இடையில் மத சம்பந்தமான வேற்றுமைகள் காணப்பட்டது. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுகிறவர்களாகிய யூதர்கள், எருசலேமையும், ஆலயத்தையுமே தேவனை வழிபடுவதற்கான, ஏற்கத்தக்க மையம் என்று புரிந்துக்கொண்டிருந்தனர். ஆனால், சமாரியர்களோ தங்களிடத்தில் மேன்மையான ஒன்று இருப்பதாகக் கூறிக்கொண்டனர்; அதாவது, தங்களுடைய சொந்த நாட்டிற்குள்ளாகவே, யாக்கோபு தேவனைத் தொழுது கொண்ட மலையைப்பெற்றிருந்தனர். ஆகவே, அவர்கள் அம்மலையை மாபெரும் ஆலயம் என்றும், பூமியிலுள்ள யாவற்றைக்காட்டிலும் அம்மலை மேன்மையானது என்றும் உயர்வாக எண்ணி,

அம்மலைக்குச் சென்று தேவனைத் தொழுதுகொண்டிருந்தனர். மேற்கூறியவைகள்தான், இராஜ்யத்திற்கான அழைப்பை விசேஷமாக யூதர்களுக்குக் கொடுக்கையில், நமது கர்த்தர் புறஜாதிகளையும், சமாரியர்களையும் தவிர்த்ததற்கான காரணங்களை நமக்குக் காட்டுகின்றது. யூதர்கள் தங்களுடைய வாய்ப்பை நிராகரித்துபோட்டு, பிற்பாடு இராஜ்யத்திற்கான விசேஷித்த சிலாக்கியங்கள் அவர்களிடமிருந்து எடுக்கப்படும்போதே, பூமியின் சகல பாஷைக்காரர், ஜாதிகள், தேசங்கள், ஜனங்கள், கோத்திரங்கள் மற்றும் சமாரியர்கள் உட்பட இவர்கள் மத்தியில், கேட்கும் செவியுடையவர்களுக்கு வாய்ப்பானது கடந்து வரும்.

## ''தாகத்துக்குத் தா''

கலிலேயாவுக்குப்போகும் சாலையானது, யாக்கோபின் கிணறு இருக்கும் ஸ்தலத்தில் பிரிந்தது; உணவு வாங்கும்படி சீஷர்கள் அருகாமையிலிருந்த சமாரியாவின் கிராமமாகிய சீகாருக்குப் போயிருக்க, இயேசு கிணற்றண்டையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்; அந்தக் கிணறு 75 அடி ஆழமும், அதன் வாய்ப்பகுதியில் வட்ட இருக்கை வடிவில் சுவர் எழுப்பப்பட்டதாயும் காணப்பட்டது. அருகாமையிலுள்ள வயலில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு சமாரிய ஸ்திரீ, தண்ணீர் மொண்டுக்கொள்ளும்படிக்கு (கிணற்றண்டையில்) வந்தபோது, இயேசு தண்ணீர் தந்து உதவும்படிக் கேட்ட காரியமானது அவளை அதிகமான ஆச்சரியத்திற்குள்ளாக ஆழ்த்தியது. ஒரு யூதனானவர், சமாரியரிடம் எவ்விதமான உதவியும், அதிலும் விசேஷமாகக் குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கேட்கக்கூடாது என்று, கடுமையாக (யூதர்) சமுதாய விதிமுறைகள்/கட்டுபாடுகள் காணப்பட்டது. அந்நாட்களில் உணவு அல்லது தண்ணீர் கொடுக்கப்படுவதோ அல்லது வாங்கப்படுவதோ, ஐக்கியம்கொள்வதையும், உடன்படிக்கைப் பண்ணுவதையும் அடையாளப் படுத்துகின்றதாகக் காணப்பட்டது. இப்படிப்பட்டச் சூழ்நிலையில், இப்படி விநோதமாக நமது கர்த்தர் நடந்து கொண்டதற்கான காரணத்தை அவள் கேட்டபோது, அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. முழுச் சுவிசேஷப் புத்தகப்பதிவுகளிலுமே நமது கர்த்தரின் தாழ்மையை நம்மால் காணமுடிகின்றது; அதாவது, எந்த வகுப்பாருடனும் பழக அவர் விருப்பமுடனும், தயக்கமில்லாமலும் இருப்பதை நம்மால் காண முடிகின்றது; அதாவது, எவ்வகுப்பாராய் இருப்பினும், அது ஆயக்காரரோ அல்லது பாவிகளோ, எவராய் இருப்பினும், அவர்களுக்கு நன்மை செய்வதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைக்கும் போதெல்லாம், அவர் ஒரு வாய்ப்பையும் தவறவிட்டதில்லை என்பதை நம்மால் காண முடிகின்றது; மேலும், வேதபாரகர் மற்றும் பரிசேயரின், **பாவிகளை/பிறரை ஒதுக்கி வைக்கும் தன்மையை** அவர் கடிந்து கொண்டதையும் நம்மால் காண முடிகின்றது. வெளிப்புறமாக மிகுந்த சீர்க்கேட்டுடன் காணப்பட்ட ஒருவரின் வஸ்திரத்தைக்கூடத் தொட அஞ்சும், சுயநீதி தொடர்பான எண்ணங்களைக் குறித்து அவருடைய உவமைகளில் ஒன்றில் அவர் பேசியுள்ளார். நமது கர்த்தர் வெளிப்புறமான சீர்க்கேட்டை அங்கீகரிக்கவில்லை. அதேசமயம் தேவன் இருதயத்தைப் பார்க்கின்றார் என்றும், மனுஷரால் இழிவாகக் கருதப்படும் சிலரைப் பார்க்கிலும், மனுஷரால் மிக உயர்வாக அங்கீகரிக்கப்படும் சிலர், தேவனுடைய பார்வையில் மிகத் தீட்டானவர்களாக இருக்கின்றார்கள் என்றும் எடுத்துக்காட்டினார்.

## ''திறமை/சாமார்த்தியம் பயன்படுத்துவதற்கான மாதிரி''

நமது கர்த்தர் மாபெரும் திறமையை இவ்விடத்தில் காட்டுகின்றார். அந்த ஸ்திரீயின் கேள்விக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, ஓர் ஆழமான சத்தியத்தின் மீது அவளது கவனத்தைத் திசை திருப்புகின்றார். இந்தத் திறமை குறித்ததான பாடத்தை அநேக கர்த்தருடைய ஜனங்கள் கற்க வேண்டியது அவசியமாயுள்ளது. திறமையைப் பயன்படுத்தக்கூடாது என்றும், அப்படிப் பயன்படுத்துவது நேர்மையற்ற காரியம் என்றும் சிலர் தவறாகப் புரிந்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம். இவ்விதம் தவறான எண்ணம் கொண்டிருப்பதினால் இவர்கள் மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்துமளவு மடத்தனமாக (அறிவு மழுங்கிய) தவறிழைத்து விடுகின்றனர். மேலும், தாங்கள் பயன்படக்கூடியதற்கான வாய்ப்புகளைத் தாங்களாகவே தடுத்தும் விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் நமது கர்த்தருடைய சாமார்த்தியம் குறித்ததான இந்தப் பாடத்தைக் கவனிக்க வேண்டும். அந்த ஸ்தீரியின் கேள்விக்குத் தாம், பதிலளிக்க வேண்டியது அவசியம் என்று கர்த்தருக்குத் தோன்றவில்லை. மாறாக, அவர் ''நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்'' என்றார் (யோவான் 4:10). இவ்வாறே, நாமும் வாழ்க்கையின் சகல விஷயங்களிலும், நாம்

தொடர்புகொள்ளுகிறவர்களின் கவனத்தை பரத்திற்கும், ஆவிக்குரிய காரியங்களுக்கும் நேராக திசை திருப்ப முயற்சிப்போமாக. ஆனால், அதற்கென்று அனைத்துத் தருணங்களிலும், மத ரீதியான விஷயங்களைக் குறித்தே பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்றில்லை; நமது கர்த்தரும் இப்படியாக எல்லாவற்றிலும் செய்திருப்பார் என்று நாமும் எண்ணிக்கொள்கிறதில்லை. நமது கர்த்தர், தாம் பேசின ஸ்திரீயிடம் ஏதோ சில நேர்மையின் பண்புகளை அநேகமாகக் கண்டிருந்திருக்க வேண்டும்; இல்லையேல் அவளிடத்தில் அவர் பேசியிருந்திருக்கமாட்டார். நாமும் மற்றவர்களுக்கு உதவுவதற்கும், கர்த்தரைக் கனப்படுத்துவதற்கும் ஏதுவாக ஏற்றவேளையில் வார்த்தைகளைப் பேசுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் கண்ணோக்கினவர்களாக இருக்க வேண்டும்.

"ஜீவத்தண்ணீர்" என்பது புதிய தண்ணீர் என்றும், அது தேங்கி நிற்கும் தண்ணீரிலிருந்து வேறுபட்டது என்றும் ஸ்திரீயானவள் புரிந்துக்கொண்டாள். நமது கர்த்தரிடம் தண்ணீர் மொண்டு கொள்வதற்கான பாத்திரமும், ஒட்டக மையிரினால் உண்டான கயிறும் இல்லை என்று ஸ்திரீ அறிந்துக்கொண்டு, எனக்குத் தண்ணீர் கொடுக்க நீர் ஒருவேளை மிகவும் விருப்பம் கொண்டிருந்தாலும் கூட, இந்தக் கிணறு மிகவும் ஆழமாக இருப்பதாலும், உம்மிடத்தில் மொண்டெடுப்பதற்கு எதுவுமில்லாமல் இருப்பதாலும், இக்கிணற்றில் இருக்கும் தண்ணீரைக்காட்டிலும் வேறெங்கும் உம்மால் நல்ல தண்ணீர் கிடைக்கும் என நீர் எதிர்ப்பார்க்க முடியாததாலும், தண்ணீர் தாருங்கள் என்று நான் உம்மிடத்தில் கேட்பதினால் எனக்குப் பிரயோஜனமில்லை என்றாள். "பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும், அவர் பிள்ளைகளும், அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்" (யோவான் 4:11, 12). ஸ்திரீயை ஏமாற்றுவதற்காக அல்லாமலும், தாம் (இயேசு) தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லாமலும் மாறாக, ஸ்திரீயினுடைய நலம் கருதி, மீண்டுமாக நமது கர்த்தர் சாமார்த்தியமாக அவளுடைய கேள்விக்குப் பதில் கொடுக்கவில்லை. அவர், அவளுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். மேலும், அவர் அவளது மனதை இயற்கையான (சொல்லர்த்தமான) தண்ணீரிலிருந்து, ஆவிக்குரிய தண்ணீருக்கு நேராகவும், இயற்கையான ஊற்றிலிருந்து, ஆவிக்குரிய ஊற்றிற்கு நேராகவும் வழிநடத்திக் கொண்டிருந்தார். "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவான் 4:14).

நமது கர்த்தர் சாதாரணமான ஸ்திரீயிடம் பேசவில்லை என்பது, அவள் உடனடியாக கர்த்தரின் வார்த்தைகளைப் புரிந்துக்கொண்டதிலும், அவர் கூறின ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கென அவள் வெளிகாட்டின உண்மையான விருப்பத்திலும் நம்மால் காணமுடிகின்றது. "அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்" (யோவான் 4:15). மீண்டுமாக, நமது கர்த்தர் சாமார்த்தியத்தைப் பயன்படுத்துவதைப் நாம் பார்க்கலாம். ஸ்திரீயானவள், தான் ஒரு பாவி என்பதையும், தான் மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றாள் என்பதையும், தேவனால் மாத்திரமே அளிக்கப்படும் ஜீவத்தண்ணீரை, தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும், அந்த ஜீவத்தண்ணீரானது ஊற்றாகிய இயேசுவினிடத்திலேயே தேவன் அளித்துள்ளார் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாய் இருந்தது. "போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா" என்று கூறி, நமது கர்த்தர் உடனடியாக அவளுடைய எண்ணங்களை, அவளுடைய இருதயத்திற்குள்ளாகத் திருப்பினார். "எனக்கு புருஷன் இல்லை" என்று அவள் பதிலளித்தபோது, அவளுக்குள் எண்ணங்கள் வெள்ளம்போல எழும்ப, நமது கர்த்தர் அவைகளை அவளுக்கு ஒருமுகப்படுத்தி, "எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்று கூறினார். இப்பொழுது ஸ்திரீ உணர்வடைந்தாள். தன்னுடைய இருதயத்தின் ஆழமான இரகசியங்களை அறிந்த ஒருவரின் முன்னிலையில் தான் இருப்பதாக ஸ்திரீ உணர்ந்துகொண்டாள். எனினும், அவரைக் கண்டு அவள் பயப்படவில்லை. அவரை விட்டு அவள் விலகி ஓடவுமில்லை. அவருடைய இரக்கம், அவருடைய கனிவு மற்றும் ஒரு சமாரியா ஸ்திரீயிடம் பேச அவர் கொண்டிருந்த விருப்பம் ஆகியவைகள் எல்லாம், அவளுக்கு, தான் ஒரு நண்பனைக் கண்டடைந்ததைக் காட்டினது. "ஆண்டவரே, நீர் தீர்க்கத்தரிசி என்று காண்கிறேன்" என்றாள் (வசனம் 19).

தனக்கு மிகவும் இரகசியமாய் இருந்தவைகளையும், விவாதித்தால்/பேசினால் தனக்கு மிகவும் கவலைக்கொடுக்கக்கூடியதும், தன்னை மிகவும் புண்படுத்தக் கூடியதுமான காரியங்களை சம்பாஷணைப்பண்ணுவதிலிருந்து ஸ்திரீ, விவேகத்துடன் பேச்சை மாற்றிவிட்டாள். மேலும், நமது கர்த்தரும் அக்காரியத்தைக் குறித்து மீண்டும் பேசாமல் அப்படியே விட்டுவிட்டார். இப்படிப்பினையை, அவருடைய அனைத்துப் பின்னடியார்களும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது, ஒருவரிடம் பேசும்போது, முதலாவது பாவத்தைக் குறித்த உணர்வை அவர்களுடைய மனதில் உணர்த்திவிட்டு, பின்னர் அவர்களே அவர்களுக்குரிய நேரங்களில் (பாவங்களைக் குறித்து) கவலைக்கொண்டு, மனம்வருந்தி, சீர்த்திருத்தம் பண்ணிக்கொள்ளத்தக்கதாக அவர்களை விட்டுவிட வேண்டும். நம்மைச் சுற்றியிருப்பவர்களின் இருதயங்களை நொறுக்குவது நமது வேலையாயிராமல், நொறுங்குண்ட இருதயம் உடையவர்களைக் கண்டுபிடிப்பதே நமது வேலையாகும். "நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுங்கள்" என்பதே நமக்கான கட்டளையாகும். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்" (ஏசாயா 61:1). இந்தச் சம்பவத்தைப் போன்றே அநேக சந்தர்ப்பங்களில், நொறுங்குண்டவர்களின் இருதயமானது, சத்தியம் மற்றும் கிருபை எனும் சுகமாக்கும் தைலத்தினால் கட்டப்பட வேண்டும். ஆனால், நொறுங்குண்ட இருதயங்களைக் கட்டுவதற்கு நாம் தொடும்பொழுது, நம்முடைய தொடுதல் **மென்மையாக/கனிவாக** இருக்க வேண்டும். **இருதயத்தை இன்னும் நொறுக்க வேண்டுவது அவசியப்படுமாயின் அதைச் செய்வது நமக்கான வேலை அல்ல.**

## ''யூதர்களின் இரட்சிப்பு''

அந்த ஸ்திரீயானவள், தன்னுடைய தனிப்பட்ட குணங்கள் மற்றும் குடும்ப காரியங்கள் குறித்ததான சம்பாஷணையிலிருந்து விலகி கொண்டதோடல்லாமல், மாபெரும் தீர்க்கத்தரிசியாக அவள் கண்டவரிடம், தன்னுடைய இருதயத்தில் நீண்ட காலமாய்க் காணப்பட்ட கேள்விக்கு விடையை அவருடைய உதவியினால் கேட்டறிந்துகொள்ளத்தக்கதாக அந்த வாய்ப்பைப் பயன்படுத்தினவளாகவும் இருந்தாள். மதம் மற்றும் (தேவனை) தொழுதுகொள்ளும் விஷயத்தில் யூதர்களின் முறைமைகளா அல்லது சமாரியர்களின் முறைமைகளா சரி? என்ற கேள்வியே அவளுக்குள் காணப்பட்டது. அவர் தீர்க்கத்தரிசி என்று அவள் உறுதியடைந்ததினிமித்தமாகவும், அவருடைய வார்த்தைகளின் பேரில் அவளுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தபடியாலுமே, அவளுடைய கேள்வி . . . எங்கள் பிதாக்கள் இந்த மலையே தொழுதுகொள்வதற்கான இடம் என்கிறார்களே, ஆனால் யூதர்களாகிய நீங்களோ, எருசலேம் மாத்திரமே தேவனைத் தொழுதுகொள்ளுவதற்கான இடம் என்கிறீர்களே, இதில் யார் சரியாகப் பின்பற்றுகிறார்கள்? என்று கேட்டாள். அவளை யூதமார்க்கத்தமைந்தவளாக (யூதர் மதத்திற்குள் மதம் மாற்ற) மாற்றுவது நமது கர்த்தரின் நோக்கமாக இல்லை; ஏனெனில் அதற்கான காலம் கடந்து போய்விட்டது. அறுவடை காலமும் வந்துவிட்டது. அவளுக்கு நன்மையாக இருக்கப்போகும் ஒரு காரியத்தையே அவளிடம் கூறுபவராக இயேசு காணப்பட்டார். மேலும், தேவனுடைய தயவு குறித்த விஷயத்தில், யூதர்களை மற்றவர்களிடமிருந்தெல்லாம் பிரித்து வைத்திருந்த தடையாகிய மதிற்சுவர் உடைக்கப்படும்போது, எதிர்க்காலத்தில் இந்த ஸ்திரீ மூலம் மற்றவர்களுக்கும் நன்மையாக இருக்கப்போகும் ஒரு காரியத்தையே அவளிடம் கூறுபவராக இயேசு காணப்பட்டார். சுவிசேஷ யுகத்தைக் குறித்த பொதுவான விளக்கமே, அவருடைய பதிலாகக் காணப்பட்டது. இந்தச் சுவிசேஷ யுகமானது சில யூதர்கள் பொருட்டு ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் சமாரியர்களையும், சகல புறஜாதிகளையும் சென்றடையக்கூடியதாய் இருக்கும். "அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலுமாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது" (யோவான் 4:21).

புதிய யுகமானது ஆரம்பித்த பிற்பாடு, யூதர்களின் குடியிருப்புப் பாழாகிப்போன பிற்பாடு, அந்த வேளையானது ஆரம்பித்தது. மேலும், அது நீடித்துக்கொண்டிருக்கின்றது. விசுவாசிக்கிறவர்கள், ஒரு குறிப்பிட்ட மலைக்கோ, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கோ செல்ல வேண்டிய அவசியமில்லை. மாறாக, எவ்விடத்திலேயும், மாபெரும் மீட்பர் மூலம் ஜீவனுள்ள தேவனை அணுகலாம், கண்டடையலாம். "காலம் வருகிறது" என்று சொன்ன காலமானது, ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. நமது கர்த்தர் தாமே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் முதலாவது ஆவார். மேலும், அவருடைய சீஷர்கள் அவர் மூலமாகப்

பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். மேலும், இவர்கள் ஜெபிக்கவும், தேடவும், தட்டவும், கண்டடையவும் கற்பிக்கப்பட்டார்கள். இந்த ஆவிக்குரிய யுகத்தின் கீழ்த் தேவனைத் தொழுதுகொள்பவர்கள், முந்தின தொழுகை முறையின் அடிப்படையில் (அ) ஜாதியாரின்/தேசத்தாரின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் தனித்தனி நபர்களாகவே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இவர்கள் பிதாவினால் நியமிக்கப்பட்ட வழியாகிய, மீட்பர் மூலமாய், "ஆவியோடும், உண்மையோடும்" பிதாவை அணுகுகின்றார்கள். மேலும், இவர்கள் இவ்விதத்திலேயே தம்மைத் தொழுதுகொள்ள வேண்டுமெனப் பிதாவும் விரும்புகின்றார். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவான் 4:23). முற்காலங்களில் தேவன், சில வழிபாடு முறைமைகளையும், நேரங்களையும், இடங்களையும் உத்தரவிட்டிருந்தார். ஆனால், இப்பொழுதோ கிறிஸ்துவின் வழியாக" ஆவியோடும், உண்மையோடும்" பிதாவினிடத்தில் வருபவர்களே ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

சம்பிரதாயங்களும், சடங்குகளும் கட்டளையிடப்படாமல், இருதயப்பூர்வமான உண்மையான தொழுதுகொள்ளுதலே கட்டளையிடப்பட்டுள்ளது என்பது முற்றிலும் உண்மையாக இருப்பினும், சிலர் இன்னமும் சம்பிரதாயம் மற்றும் சடங்குகள் மீது அதிகம் கவனம் செலுத்தி, ஈடுபடுகிறவர்களாக இருப்பதை நம்மால் காண/உணர்ந்துகொள்ள முடிகின்றது. மேலும், இப்படிப்பட்டவர்கள், ஜெபம் மற்றும் ஐக்கியத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அதிகம் இழந்து போகிறவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், வேறொரு விதத்திலும் கர்த்தருடைய அன்பார்ந்த சில ஜனங்கள் விழுந்துபோவதற்கான அபாயத்தையும் நம்மால் காண முடிகின்றது. அதாவது, ஜெபத்திற்கான **சகல** ஒழுக்கமுறைகளையும் புறக்கணித்துவிடுவதும், சில சமயம் பரலோக இரக்கத்தின் சிங்காசனத்தை அணுகும்போது, **சிறிதளவே** ஒழுக்கமுறைகள் நம்மில் இருப்பதும், நம்மை அவருடைய சந்நிதானத்தில் ஏற்றுக்கொண்டு, நம்முடைய விண்ணப்பங்களுக்குச் செவிசாய்க்கும் மாபெரும் தயவை வழங்கினவரை அணுகும்போது, சில சமயம் அவருக்கென்று, **போதுமானளவு** பயபக்தியும், தாழ்மையும் நம்மிடத்தில் இல்லாமலிருப்பதுமே அந்த அபாயமாகும். எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் நாம் கர்த்தரை அழைக்க முடியும் என்பதற்கு நாம் நன்றியுணர்வு தேவனிடம் கொண்டிருந்தாலும், அதே சமயம், அவருடைய பிரகாரங்களுக்குள் நாம் பயபக்தியுடனும், அவருடைய உயர்வான ஸ்தானத்திற்கு முன்பு, நமக்கு இருக்கவேண்டிய தாழ்மையான உணர்வு கொண்ட இருதயத்துடனும் பிரவேசிப்போமாக. இவ்விதமாக, சர்வவல்லமையுள்ளவரின் மகத்துவம் மற்றும் அவர் மீது நாம் முற்றிலும் சார்ந்திருக்கும் உணர்வுடன் கூடிய, ஜெபத்தின் உண்மையான ஆவிக்குள்/அனுபவத்திற்குள் பிரவேசிக்கிறவர்களாக இருப்போம்.

## "நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்"

"நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால், இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்ற உண்மையை/சத்தியத்தை ஸ்திரீயிடம் அறிவித்த நமது கர்த்தருடைய விதத்தில் எவ்விதமான முரட்டுத்தனமும் இல்லை என்பதில் நமக்கு உறுதியே (வசனம் 22). சமாரியர்கள், இஸ்ரயேலர்களாக இராதபடியினால், இவர்கள் எவ்விதத்திலும் ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய சுதந்தரவாளிகளல்ல. இந்த அடிப்படையான சத்தியத்தை, அதற்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் சமாரியர்கள் பார்க்காததினால், இவர்கள் தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் தெளிவற்றவர்களாக/குழப்பமடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். மாறாக யூதர்களோ, தாங்கள்தான் ஆபிரகாமின் மாம்சீகத்தின்படியான சந்ததி என்றும், மாபெரும் மேசியாவானவர் தங்கள் வழியாகவே வர வேண்டும் என்றும், இறுதியில் அவர் மூலமும், தங்கள் தேசத்தாரிலுள்ள சிலர் மூலமும், பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் அறிந்திருந்தார்கள். "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்று நமது கர்த்தர் சொன்னாரேயொழிய இரட்சிப்பு யூதர்களுக்காக என்று அவர் கூறவில்லை. யூதர்கள் வழியாய் என்று சொல்வதற்கான காரணம், ஆண்டவர், மாம்சத்தின்படி அந்தத் தேசத்தைச் சார்ந்தவராய் இருக்கிறபடியினாலே ஆகும். மேலும், யூதர்கள் வழியாய் என்று சொல்வதற்கான காரணம், வாக்குத்தத்தங்களானது விசேஷமாக இந்தத் தேசத்தாருக்கு உரியதாய் இருந்தபடியால், மேசியாவானவர் வேறெந்த தேசத்திலும் பிறந்து அந்த வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. இந்தத் தேசத்திலிருந்தே அதாவது, இந்த ஜனங்கள் மத்தியிலிருந்தே நமது கர்த்தர், தமது சரீரமாகிய சபையின் ஆதி அங்கங்களைத் தெரிந்துக்கொண்டார். மேலும், இவர்கள் மூலமே அந்தச்

சரீரத்தின் அங்கமாகுவதற்கான அழைப்பானது சகல தேசம், ஜனம், கோத்திரத்தார் மற்றும் பாஷைக்காரர் மத்தியில் கொண்டுப்போகப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்கு, சமாரியர்கள் இங்கு நிழலாக/அடையாளமாக இருக்கின்றார்கள் என்று நாம் கூறுவதில்லை. இங்கு நிழல் என்பது மிகக் பலமான வார்த்தையாகிவிடும். எனினும் நாம் பார்க்கலாம். நிழலில், உண்மையான (மாம்சீக) இஸ்ரயேலர்களும் இருந்தார்கள்; அதேசமயம் இஸ்ரயேலுக்குக் கொஞ்சம் ஒப்பாகவும் ஆனால், இஸ்ரயேலுடையவர்கள் அல்லாததுமான ஒரு வகுப்பாரும் (சமாரியரும்) காணப்பட்டதுபோன்று, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியிலும், ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லாதபடியினால், உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தங்களுக்கு அந்நியரான சமாரியர்கள் போன்றவர்களை நம்மாலும் காணமுடிகின்றது; அதாவது, பரிசுத்த ஆவியினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்படாதவர்களை நம்மால் காணமுடிகின்றது. இப்படிப்பட்டவர்களில் சிலர் கனம் பொருந்தினவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டும், அதை மறுதலிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர். உண்மையான இஸ்ரயேலர்கள் மத்தியிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சகலர் மத்தியிலும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்குத் தொடர்புடையவர்கள் மத்தியிலும், இரண்டு வகுப்பார் காணப்படுகின்றனர்: உத்தம இஸ்ரயேலர்களாகிய சிறுமந்தையினர்; இவர்களுடைய அன்பையும், வைராக்கியத்தையும் கர்த்தர் அங்கீகரிக்கின்றார்; மற்றும் திரள்கூட்டத்தார் மற்றும் இவர்கள் ஜெயங்கொண்டவர்களாகிய உடன் சுதந்திரர்கள் என்ற நிலையை அடைவதற்குப்போதுமான அன்பிலும், வைராக்கியத்திலும் குறைவுப்பட்டவர்கள்.

சமாரியர்கள் போன்றவர்களிடத்திலான நம்முடைய மத ரீதியிலான சம்பாஷணையின்போது, "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்கின்றீர்கள்" என்பதான வார்த்தைகள் உண்மையாக இருப்பினும், இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது சர்ப்பத்தினுடைய ஞானமாக இருக்காது. எனினும், இவ்வகுப்பார் சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கான விருப்பத்தைக் காட்டுவார்களெனில் அவர்களுக்கு அன்பாக விளக்க முற்படுங்கள், அதாவது அவர்கள் அதுவரையிலும் அறிந்ததும், எண்ணிக்கொண்டிருந்ததுமான காரியங்களிலிருந்து, ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்குப் பொருந்தக்கூடிய வாக்குத்தத்தங்கள், நம்பிக்கைகள் மற்றும் நோக்கங்கள் எவ்வளவு வேறுபட்டதாக இருக்கின்றதென அன்பாக எடுத்துக்காட்ட முற்படுங்கள். இஸ்ரயேலர்களிடமும் சரி, மற்றவர்களிடமும் சரி, நம்முடைய சகல கையாளுதல்களிலும், "பாம்புகளைக் போல் முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப்போல கபடு அற்றவர்களாகவும் இருங்கள்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூருவோமாக (மத்தேயு 10:16; திருவிவிலியம்).

## "மேசியா வரும்போது"

சமாரியா ஸ்திரீயின் மனதில் எண்ணங்கள் அலைமோதின. அவள் தன்னுடைய ஜனங்கள் மற்றும் யூதர்களின் எதிர்ப்பார்ப்பாகிய தேவன் அனுப்பும் மாபெரும் மேசியா குறித்து அதாவது, அபிஷேகம் பண்ணப்பட்டவர் குறித்து, அதாவது, சகல குழப்பங்களையும் முடிவிற்குக் கொண்டுவருவதற்கும், சகல இடர்பாடுகளையும் மாற்றிப்போடுவதற்கும், சகல வல்லமைகளையும் கொண்டுள்ள மாபெரும் மேசியா குறித்து நினைவுகூர்ந்தாள். தான் பேசிக்கொண்டிருக்கும் தீர்க்கத்தரிசியைக்காட்டிலும், மேசியாவானவர் ஆச்சரியப்படும் விதத்தில் மிகுந்த ஞானமுடையவராக இருப்பாரோ என்று ஸ்திரீ (தனக்குள்) எண்ணினாள். இக்கேள்வியை அவள் நேரடியாகக் கேட்க விரும்பாமல் மறைமுகமாக, "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்ற வார்த்தைகளின் பின்னாக மறைத்துக் கேட்டாள் (யோவான் 4:25). அவளுடைய மனதின் ஆயத்தத்தைக் கண்ட நமது கர்த்தர், தமது ஊழிய நாட்களில் மற்ற எவரிடமும் வெளிப்படுத்தியதைக் காட்டிலும் மிகத் தெளிவாக, "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று வெளிப்படுத்தினார் (வசனம் 26).

அத்தருணத்தில் திரும்பி வந்த சீஷர்கள் இயேசு, ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். எனினும், அவர்மேல் அவர்கள் கொண்டிருந்த மிகுந்த மரியாதையினிமித்தமாக, அவரிடம் அவர்கள் கேள்வி கேட்கவில்லை. இச்சம்பவத்தைக் குறித்து, வாசித்த சுவிசேஷ யுகத்திலுள்ள பலர், ஆண்டவரிடம் (இவ்விடத்தில்) வெளிப்பட்டுள்ள

தாழ்மையைக் குறித்து ஆச்சரியப்பட்டுள்ளனர். இது கர்த்தருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையைக் கொடுக்கின்றதாய்க் காணப்படுகின்றது. அதென்னவெனில், பின்னடியார்களானவர்கள் தாங்கள் பிரசங்கிப்பதைக் கேட்க ஒரு நபர்தான் இருக்கிறார் என்றாலும், சத்தியம் பிரசங்கம் பண்ணுதல் மற்றும் ஊழியம் புரிவதற்கான வாய்ப்பைக் குறைவாக எண்ணிவிடக்கூடாது என்பதேயாகும். ஆயிரமாயிரமான செவிக் கொடாத ஜனங்கள் கூட்டத்திற்கு (சத்தியத்தின்) ஊழியம் புரிவதைப்பார்க்கிலும், உண்மையாய்ச் செவிக் கொடுத்துக்கேட்கும் ஒரு நபருக்குச் சத்தியம் பேசுவதற்கான வாய்ப்பானது மிக மிக மேன்மையானதாகும். நமது கர்த்தர் ஸ்திரீயினிடத்தில் செலவிட்ட நேரம் மற்றும் ஆற்றலானது, (energy) அவளிடம் நேரத்தைச் செலவழிக்கத்தக்கதான ஏதோ சிலவற்றை அவர் அவளிடத்தில் கண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

எனினும் வேறு கோணத்தில் பார்க்கும்போது அவளிடத்தில் என்ன தகுதி காணப்பட்டது? மாம்சத்தில் நமக்கு என்ன தகுதி உள்ளது? விழுந்துபோனவர்களும், பூரணமற்றவர்களுமாகிய நம்மிடத்தில், கர்த்தருக்குப் பிரியமானதென்று சொல்லத்தக்கதாக மீதி காணப்படக்கூடிய ஒரே காரியம் நமது இருதயத்தின் உண்மையாகும். இந்த ஸ்திரீயினிடத்தில் உண்மை காணப்பட்டது என்பது உறுதியே. ஆகவே, அவள் தயவு பெற்றவளானாள் என்று நாம் நம்புகின்றோம். மேலும், இவ்வுண்மை தன்மையினாலேயே இன்றளவும் அநேக கர்த்தருடைய அருமையான ஜனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இங்கு மீண்டுமாக, நமக்குவரும் ஒவ்வொரு வாய்ப்பைப் பயன்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் மாதிரியைக் காண்கின்றோம். இச்சம்பவத்தைப் போன்று, தகுதியுள்ள எவருக்கேனும் உதவியாகச் செலவிடப்படும் நேரம் மற்றும் சக்தி/ஆற்றல்/பெலனானது, அநேகரிடத்தில் தாக்கத்தை உண்டாக்கத்தக்கதாகப் பயன்படுகின்றது. (பின்னாட்களிலே) நித்திய காலங்களில் மாத்திரமே இந்தச் சிறு சிறு காரியங்களின் முக்கியத்துவமும், கர்த்தரின் நாமத்தில் ஏறெடுக்கப்பட்ட எளிமையான/குறைவான/சிறிய பிரயாசங்களின் முக்கியத்துவமும் வெளியரங்கமாகும். மேலும், இது நம்முடைய பெரிய சாதனைகளைப் பார்க்கிலும், சிறு வாய்ப்புகள் மற்றும் சிறு காரியங்களில் நாம் காட்டும் உண்மையின் அடிப்படையிலேயே நமது கர்த்தர் நம்மை நியாயந்தீர்க்கின்றார் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றது. "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்" (லூக்கா 16:10). இவைகளை நாம் நினைவில் கொண்டவர்களாக, கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும் நம்முடைய வைராக்கியத்தைக் காண்பிப்பதற்கு ஏதுவாகவும், இதன்விளைவாக அவரிடத்திலிருந்து தற்கால ஆசீர்வாதங்களையும், இறுதியில் அவருடைய அங்கீகரிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும், நாம் சிறு காரியங்களிலும், சிறு வாய்ப்புகளிலும், கண நேரங்களிலும், மணி நேரங்களிலும் (hours) கவனமாய் இருக்கக்கடவோம்.

## "ஊழியச் சிந்தை" (Missionary Spirit)

இந்தச் சமாரியா ஸ்திரீயானவள் தனது தண்ணீர் குடத்தை விட்டுவிட்டு, தன்னுடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம், தான் ஒரு மாபெரும் போதகரைக் கண்டதாகவும், அவர்தான் மேசியா என்று அறிவிக்கவும், அவரிடத்தில் வந்து அவர் பேசுவதைக் கேட்கும் சிலாக்கியத்தை அடையத்தக்கதாக அவர்களை வரச் சொல்லவும் கருதி, அவள் ஊருக்குள் துரிதமாகச் சென்ற காரியமானது, இன்னுமாக அவளுடைய குணலட்சணங்களைப் படம் பிடித்துக்காட்டுகின்றது. இயேசுவுடன் ஏற்பட்ட சம்பாஷணையைக் குறித்த விஷயத்தை, அவள் சுயநல ஆவியுடன் தனக்குள் மறைத்து வைத்திருப்பாளானால் அல்லது அவள் தனக்குள் . . . என்னுடைய நண்பர்கள் இவைகளையெல்லாம் அறிந்தார்களானால், நான் மகிழ்ச்சியடைவேன். ஆயினும், நானாக எவ்வித முயற்சியும் எடுக்கமாட்டேன் என்று சொல்லத்தக்கதாக, அவளுக்குள் சோம்பல் மற்றும் அஜாக்கிரதையின் ஆவிக் காணப்படுமாயின், இவைகள் இரண்டில் எவையேனும் அவளிடத்தில் காணப்பட்டிருந்திருக்குமாயின், அவள் கர்த்தருடைய தயவைப்பெறத் தகுதியற்றவள் என்பதைக் காட்டியிருக்கும்; மேலும், இப்படியான (சுயநலம் மற்றும் சோம்பல்) பண்புகள் அவளிடத்தில் காணப்பட்டிருக்குமாயின் இப்படிப்பட்ட ஸ்திரீயிடம் கர்த்தர் ஒருவேளை பேச முற்பட்டிருக்கமாட்டார் என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியாகவே, ஏற்றக்கால சத்தியத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் காணப்பட வேண்டும். அதாவது, நாம் உண்மையும், நேர்மையுடனும் இருப்பதோடு, பரந்த மனப்பான்மையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அதாவது, நம்முடைய அயலார்களுக்கு நற்செய்தியை வழங்குவதில் பிரியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்; அதாவது, மனுஷகுமாரனுடைய இரண்டாம் வருகை குறித்தும், ஸ்தாபிக்கப்படபோகும் இராஜ்யத்தைக்

குறித்தும், இப்பொழுது கேள்விப்படுகிறவர்களும், முன்பில்லாதளவு இன்று தெய்வீகத் திட்டத்தின் சத்தியம் குறித்த தெளிவான அறிவிற்கும் வருகிறவர்களாகிய நாம், சத்தியத்தின் ஊழியத்திற்காகவும் அதாவது, சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக்கொடுக்கும் நற்செய்தியைப் பலர் அறிய செய்வதற்காகவும், நம்முடைய ஜீவனைக்கொடுப்பதில் களிகூர வேண்டும். இதுவே உண்மையான ஊழியனின் ஆவியாகும். மேலும் (சொந்த) வீட்டிற்குள்ளான (home) ஊழியமே வரிசையில் முதலாவதாக இடம் பெறுகின்றது.

## "என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்"

ஒருவன் கர்த்தரிடத்தில் வருவதற்கு முன்னதாக, அவன் தாகங்கொள்ள வேண்டும்; கர்த்தர் கொடுக்கப் போகிறதான ஜீவத்தண்ணீரைக் குறித்ததான, ஜீவனைக் குறித்ததான புரிந்துக்கொள்ளுதலும் அவனிடம் காணப்பட வேண்டும். அதாவது அவன், தான் ஒரு பாவி என்றும், தான் மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றான் என்றும், கிறிஸ்து மூலம் அல்லாமல், எதிர்க்காலத்தைக் குறித்ததான எவ்விதமான நம்பிக்கை தனக்கு இல்லை என்றும் அவன் அறிந்துக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்தில் வருவது என்பது விசுவாசத்தில் அணுகுவதாகும். நம்முடைய தாகமே நம்முடைய வாஞ்சை/விருப்பமாகும். நாம் நமக்குள்ளாக தெய்வீகச் செய்தியை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக அல்லது பானம் பண்ணுகிறவர்களாக இருக்கின்றோம். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). தண்ணீர், சத்தியத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. இதற்கு இசைவாகவே, "நீதியின்பால் பசிதாகம் உள்ளவர்களுக்கான" ஆசீர்வாதம் தொடர்புடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. "அவர்கள் திருப்தியடைவார்கள்" என்பதே அந்த வாக்குத்தத்தமாக இருக்கின்றது (மத்தேயு 5:6). இதுவும், நம் பாடத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாகவே காணப்படுகின்றது. அதாவது, "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது" என்பதே (யோவான் 4:14).

தற்காலத்திலுங்கூட ஒரு கோணத்தில் பார்க்கையில், நம்முடைய தாகமானது தணிக்கப்பட முடியாததாகும். அதாவது, தற்காலத்தில் நாம் ஒருபோதும் திருப்திபடுத்தப்பட முடியாது. அதாவது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் மகா பெரியவைகளும், மகா நன்மையானவைகளுமாய் இருக்கிறபடியினால், நம்மால் தற்காலத்திலும், தற்கால சூழ்நிலைகளிலும் அவைகளைப் (ஆசீர்வாதங்களை) போதுமானளவு பெற்றுக்கொள்ள முடியாது. நாம் அவருக்கு ஒப்பான சாயலில் விழிக்கையிலேயே நாம் முழுமையாய்த் திருப்தியடைவோம். "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன் நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங்கீதம் 17:15). அதாவது, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகத்தக்கதாக, நம்முடைய புதுச்சிருஷ்டியானது மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிற காரியமானது, முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவடையும்போது நாம் முழுமையாய்த் திருப்தியடைவோம். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரிந்தியர் 3:18). எனினும், தற்காலத்திலும் பானம்பண்ணுகிற நமக்கும் கூட ஓரளவு திருப்திக் காணப்படுகின்றது. அதாவது, தண்ணீர் ஊற்றண்டையில் தாகமுடன் காணப்படுகின்ற ஒருவன் மகிழ்ச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும், திருப்தியுடனும் அதிகமதிகமாகவே பானம் பண்ணுகின்றான். இப்படியாகவே, கர்த்தருடைய ஜனங்கள் விஷயத்திலும் காணப்படுகின்றது. அவர் அவர்களுடைய பாத்திரத்தில் ஐஸ்வரியமும், திருப்தியளிக்கிறதுமான ஆசீர்வாதங்களை ஊற்றுகின்றார். மேலும், அவர்கள் இந்தத் தற்கால கூடாரத்தில் காணப்பட்டாலும், அவர் அவர்களின் பாத்திரத்தை மீண்டும் மீண்டுமாக நிரப்புகின்றார். சத்தியத்தை, ஜீவத்தண்ணீரை நாம் அதிகமதிகமாக ஏற்றுக்கொள்வோமாக; மேலும், தூய்மையான தண்ணீரின் ஊற்றிலிருந்துதான், தண்ணீரைச் (சத்தியத்தைப்) பெற்றுக்கொள்கின்றோமா என்றும் பார்க்கக்கடவோம். மேலும், கர்த்தர் இயேசு அல்லாத எந்த நீரூற்றையும் நாம் ஏற்றுக்கொள்ளாதிருப்போமாக; அதாவது, மற்றக் கால்வாய்கள் (channels) எவ்வளவு அதிகமாக நமக்குத் தண்ணீர் தருகின்றதாய் இருக்கின்றது என நாம் கண்டாலும், நாம் அவைகளை ஏற்காமல், கர்த்தர் இயேசுவிடமிருந்து வருவதையே ஏற்றுக்கொள்வோமாக.

**ஆமென்!**

---

# ஜீவ அப்பம் நானே

## யோவான் 6:26-37

*"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே என்றார்."*

அற்புதக்கரமாக அருளப்பட்டதான போஜனத்தைப் புசித்தப் பிற்பாடு ஜனக்கூட்டத்தார், தங்களுடைய வழக்கத்தின்படியே, தங்களது வெளி வஸ்திரங்களினால் தங்களைப் போர்த்திக்கொண்டு, புல்வெளியில் படுத்துக்கொண்டார்கள். இன்றும்கூடப் பாலஸ்தீனியாவிலுள்ள ஏழை மக்கள் பிரயாணம் பண்ணுகையில் இப்படியாகப் படுத்துக்கொள்வது வழக்கமாய்க் காணப்பட்டு வருகின்றது. காலையில் அவர்கள் தங்கள் உபகாரியைத் தேடினார்கள்; இயேசு அதே பகுதிகளில்தான் காணப்படுவார் என்பதை எதிர்ப்பார்த்தவர்களாகவும், அவர் தங்களுக்கு அற்புதகரமாய்க் காலை உணவையும் கொடுப்பார் என்று சந்தேகத்திற்கிடமின்றி எதிர்ப்பார்த்தவர்களாகவும் அவரைத் தேடினார்கள். ஆனால் அவரையோ (அ) சீஷர்கள் வந்ததான படகையோ காணமுடியாததினால், அவர்கள் எருசலேமை நோக்கி பிரயாணித்தவர்களானார்கள்; ஆனாலும் இன்னும் பிரபலமிக்க மேசியாவைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டே பிரயாணித்தவர்களாய்க் காணப்பட்டனர். இறுதியில் கர்த்தரையும், அவரோடுகூட இருந்தவர்களையும் கண்டடைந்தபோது, தாங்கள் அவரைத் தேடினது குறித்துக் கூறினார்கள்; மற்றும் இங்கு நமது கர்த்தர் கொடுத்த பதிலோடுதான் நம்முடைய இன்றைய பாடம் ஆரம்பமாகுகின்றது . . . "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் இலவசமாய் இரா உணவு புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" என்பதாக இயேசுவின் பதில் காணப்பட்டது. இங்குக் காரியங்களை மிகவும் அழுத்தித் தெரிவிக்காததிலுள்ள கர்த்தருடைய ஞானத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. அவர் அற்புதம் செய்தபோது, எந்தப் பிரசங்கமும் பண்ணவில்லை, மாறாக அற்புதம் அதன் தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு அனுமதித்தார்; ஆனால் இப்பொழுதோ மற்றுமொரு அற்புதத்தை நிகழ்த்துவதற்குப் பதிலாக, தமது அற்புதத்தை ஆதாரமாகக்கொண்டு ஒரு பிரசங்கம் பண்ணினார்.

அவரது கண்டனமானது, கடுமையானதாக இல்லை, எனினும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது; அதாவது "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல; நித்திய ஜீவன் கொடுக்கும் போஜன வகைக்காகவே நாடுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் ஆசீர்வாதத்திற்கான அவரது நியமிக்கப்பட்ட கருவியாகக் குறித்திருக்கின்றார், சுட்டிக்காட்டியிருக்கின்றார், முத்திரித்திருக்கின்றார்" என்று இயேசு கூறினார். இவ்வார்த்தைகளுக்குள் அடங்கியுள்ளதான படிப்பினையானது தெளிவானதாகவும், அன்றுபோல் இன்றும் பொருந்தக்கூடியதாகவே காணப்படுகின்றது. ஒட்டுமொத்த உலகத்திற்கான பிரச்சனை என்னவெனில், அவர்கள் ஒன்றில் பூமிக்கடுத்த இலட்சியம் உடையவர்களாகவோ (அ) இலட்சியம் ஏதும் இல்லாதவர்களாகவோ காணப்படுகின்றனர் மற்றும் இவை இரண்டிலும், இலட்சியம் ஏதும் இல்லாத நிலைமையே மோசமான நிலைமையாகக் காணப்படுகின்றது. இலட்சியம் உடையவர்களும், வாழ்க்கைக்கென்று நோக்கம் உடையவர்களுமான ஜனங்கள்தான் எதையாகிலும் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் நிறைவேற்றுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் உலக ஞானிகளாக இருந்து, ஒருகாலத்தில் கொஞ்சம் புல் முளைத்த இடத்தில், அதிகம் புற்கள் முளைக்கப்பண்ணினவர்களாகவும், தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்கூடங்கள் கட்டினவர்களாகவும், பெரிய வியாபார நிறுவனங்களை நடத்தினவர்களாகவும் காணப்படுகின்றனர் மற்றும் சமுதாயப் பண்பாட்டினுடையஉயர்வுக்கு இவர்களுடைய பங்களிப்பு மிகவும் பெரியதாய் இருக்கின்றது. இவர்கள் ஐசுவரியவான்களாக வேண்டும் என்று (அ) ஞானவான்களாக வேண்டும் என்று (அ) புகழ்மிக்கவர்கள்/பிரபலமிக்கவர்களாக வேண்டும் என்று இலட்சியம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் இந்த இலட்சியங்களானது, இவர்களைக் கிரியைச் செய்திட தூண்டுகின்றது.

ஆனால், அந்தோ பரிதாபம்! பெரும்பான்மையான மனுக்குலமானது, மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுகின்றனர்; காரணம் இவர்கள் இலட்சியம் ஏதும் அற்றவர்களாக, ஜீவிப்பதற்கெனப் புசிப்பவர்களாகவும், புசிப்பதற்கென ஜீவிப்பவர்களாகவும் மாத்திரம் காணப்படுகின்றனர்; அதாவது உயர் அறிவுள்ள விலங்குகளாக மாத்திரமே ஜீவிக்கின்றனர். அழிந்துபோகின்றதான உணவிற்காக இவர்கள் உழைக்கின்றனர்; இதுவே இவர்களது இலட்சியமாகவும், குறிக்கோளாகவும் காணப்படுகின்றது. மேலும் சிலசமயம் குடிப்பதற்காகவே உழைக்கின்றனர்; இது இவர்களிடமுள்ள அனைத்தையும் திருடிப்போட்டுவிடுகின்றதாய் இருக்கின்றது. இந்த யுகம் முழுவதுமுள்ள தம்முடைய பின்னடியார்களை உள்ளடக்கி, தாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள், தமது வாயின் வார்த்தைகளிலுள்ள செய்தியைக்

கவனிக்கும்படிக்குக் கர்த்தர் விரும்புகின்றார்; அதென்னவெனில்: தற்காலத்தினுடைய சூழ்நிலைகளின்கீழ், அழிந்துபோகக்கூடிய உணவு என்பது அவசியமாய்க் காணப்பட்டாலுங்கூட, தம்முடைய பின்னடியார்களாகக் காணப்படுகின்றவர்கள், தங்கள் பரம பிதா தங்களது தேவை இன்னது என்று அறிவார் என்பதையும், கவலைக்கிடமான தேவையான நிலைக்குள் அனுமதிக்கமாட்டார் என்பதையும் நினைவுகூருவார்கள். இப்படியாக அழிந்துபோகிற உணவுக்காகக் கவலைக்கொள்ளாததினால், அவர்கள் தங்களது கவனத்தைப் பூமிக்குரியவைகள்மீது இல்லாமல், பரலோக இலட்சியங்களிடத்திற்குத் திருப்பிட முடியும்; இந்தப் பரலோக இலட்சியங்கள் என்பது, அவர்களால் விரும்பப்படுகின்றதான சிறந்தவைகளாகவும், பிரம்மாண்டமானவைகளாகவும் இருக்கின்றன; ஏனெனில் இப்படிப்பட்டதான பாக்கியமான ஜனங்கள், நித்தியமான ஜீவனுக்குரிய தெய்வீக ஆசீர்வாதத்தின் எல்லைக்குள் கடந்துவருகின்றவர்களாக இருக்கின்றனர். எந்த ஆகாரமானது, உணவானது இத்தகையதோர் (பரலோக) இலட்சியங்களை அவர்களிடத்தில் உருவாக்குகின்றதோ, மற்றும் அதன் திருப்திக்கு நேராக வழிநடத்துகின்றதோ, அதுவே உண்மையான ஆகாரமாகவும், அடையத்தக்கதாக அனைத்து முயற்சிகளை எடுப்பதற்குப் பாத்திரமான ஆகாரமாகவும் உள்ளது.

## நாங்கள் என்ன செய்ய வேண்டும்

பிரசங்கமானது அதன் பலனைக்கொணர்ந்தது; தாங்கள் இலட்சியமற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் (அ) தங்களது இலட்சியங்களானது பூமிக்கடுத்தவைகளாகவும் மற்றும் இதனால் தாங்கள் மரிக்கையில், தங்கள் இலட்சியமும் அழிந்துபோவதாகக் காணப்படுகின்றது என்பதை ஜனங்கள் உணர்ந்தவர்களாக, தெய்வீகத் தயவைக் கொண்டுவருகிறதும், தங்களுக்கு நித்திய ஜீவனை அருளுகின்றதுமான உணவைப் பெற்றுக்கொள்வதற்குத் தாங்கள் எந்தவகை கிரியையை நடப்பிக்கும்படிக்கு அவர் குறிப்பிடுகின்றார் என்று கர்த்தரிடம் கேட்டார்கள். தேவனுக்கேற்ற கிரியை என்று நீர் குறிப்பிடுகிறீரே அதென்ன? என்று அவரிடம் கேட்டார்கள். இக்காரியத்தையே அவர்கள் கேட்க வேண்டுமென்றும், மற்றும் இதற்கே பதிலளிக்க வேண்டுமென்றும் இயேசு விரும்பினார். தாம் தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று தம்மேல் அவர்கள் உடனடியாக விசுவாசம் வைப்பதே அவர்களுக்கான கிரியையாய் இருக்கின்றது என்று அவர் பதிலளித்தார். ஆனால் அவர்களோ: "உம்மை மேசியா என்று நாங்கள் எண்ணுவதற்கு, எங்களுக்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? நீர் மேசியா என்பதை நிரூபிக்கிறதான தீர்க்கமான அடையாளம் எதையாகிலும் எங்களுக்கு நடப்பியும், அப்போது நாங்கள் விசுவாசிப்போம். நீர் நேற்று சாயங்காலம் ஐந்து அப்பம் மற்றும் இரண்டு சிறு மீன்களைக்கொண்டு ஐயாயிரம் பேராயிருந்த எங்களுக்குப் போஷித்தக் காரியமானது, உம்முடைய மேசியாத்துவத்தை ஒன்றும் நிரூபிப்பதில்லை. மேசியா மோசேபோன்று காணப்படுவார்; மோசேயைப்பார்க்கிலும் பெரியவராய் மாத்திரம் காணப்படுவார் மற்றும் நீர் பண்ணின அற்புதமானது, மோசேயினால் நிறைவேற்றப்பட்டதான சில அற்புதங்களைக்காட்டிலும் பெரியதாய் ஒன்றும் இல்லை. ஐயாயிரம் பேருக்கு ஒருநேர உணவுக் கொடுப்பதற்கு, உம்மிடத்தில் (5) அப்பங்களும், (2) மீன்களும் இருந்தன; ஆனால் மோசேயோ, எந்த உணவையும் கையில் பெற்றிருக்காமலேயே எங்கள் பிதாக்களை வருடக்கணக்காக வனாந்தரத்தில் போஷித்தார். "வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார்" என்று எழுதியிருக்கிறபடி மோசே அருளியதான மன்னாவானது, வானத்திலிருந்து வந்ததாய் இருந்தது" என்றார்கள். சில விதங்களில் பார்க்கையில் அவர்கள் நன்கு சிந்தனை செய்கிறவர்களாகத் தெரிகின்றனர்; அவர்கள் மிகவும் எளிதாய் ஒன்றும் மனம் மாற்றப்பட முடியாது; இயேசுதான் மேசியா என்று விசுவாசம் வைப்பதற்கு முன்னதாக, தங்களுக்கு நன்கு நம்பிக்கை உண்டாக வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள்; போலி மேசியாக்களினால் ஏமாற்றப்பட்ட மற்றவர்களைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்; வேதவாக்கிய பதிவுகளை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கவும், மற்றும் தங்கள் மேசியாவென ஏற்றுக்கொள்ளப்படுவர் மோசேயைக்காட்டிலும் பெரியவராக இருந்து, தங்களையும், அனைத்து ஜனங்களையும் போஷிக்க முடிகிறவராகவும், அதுவும் மோசேயினால் வனாந்தரத்தில் கொடுக்கப்பட்டதைக்காட்டிலும் மேன்மையான அப்பத்தினால் போஷிக்க முடிகிறவராகவும் இருக்கின்றாரா என்று பார்க்கவேண்டுமென மனதில் எண்ணிக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இப்பொழுது தம்முடைய போதனையை விளக்குவதற்கும், தமக்கும், மோசேக்கும் இடையிலான ஒப்புமை என்பது, யார் மிகச் சிறந்த வகையான பூமிக்கடுத்த உணவையும் மற்றும் அதை அதிகமாகவும் கொடுக்கப்போகிறார்கள் என்பதாக இல்லாமல், மாறாக தாம் பரலோக ஜீவனை அவர்களுக்குப் பெற்றுத் தருகின்றதான ஒரு பரலோக உணவை, ஓர் ஆவிக்குரிய உணவை அருளுவார் என்பதைக் காண்பித்துக் கொடுப்பதற்குமான இயேசுவின் வேளைவந்தது. ஆகையால் மன்னாவை மோசே கொடுத்தார் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருந்ததிலுள்ள தவறினை, முதலாவதாக அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரும் விதமாக, வானத்திலிருந்து வந்த அப்பத்தை, மோசே கொடுக்கவில்லை, மாறாக என் பிதாவே கொடுத்தார்; தவறுதலாய்

இன்னொருவருக்குக் கீர்த்தியைச் சாற்றாதீர்கள். இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணிக்கன் எனும் விதத்தில் மோசே உண்மையில், கர்த்தருடைய கனமிக்க ஊழியக்காரன்தான், ஆனாலும் அவர் மன்னாவை வழங்கவோ (அ) அனுப்பி வைக்கவோ இல்லை. வனாந்தரத்தில் காணப்படுகையில் மன்னாவை அனுப்பி வைத்ததான என் பிதா, இப்பொழுது வேறொரு வகையான அப்பத்தை, வேறொரு வகையான உணவை, வேறொரு வகையான வானத்திலிருந்து வந்த - சொல்லர்த்தமானதாய்க் காணப்படாமல், மாறாக அடையாளமாய்க் காணப்படுகின்றதான - மன்னாவை அனுப்பியுள்ளார். தம்முடைய ஜனங்களுக்குத் தேவன் இப்பொழுது அனுப்பவிருக்கும் மன்னாவும், வானத்திலிருந்து இறங்கி வந்ததாகக் காணப்படுகின்றது மற்றும் அது சில நாட்களுக்கென்று மாத்திரமல்லாமல், சில வருடங்களுக்கென்றில்லாமல், மாறாக நித்திய காலமும், முழு மனுக்குலத்திற்குமான ஜீவ அப்பமாக இருக்கும்படிக்கு நோக்கம் கொண்டிருக்கப் பெற்றுள்ளது என்றார்.

## இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்

"இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தர வேண்டும்" என்பதான அவர்களது பதிலை வைத்துப்பார்க்கும்போது, பாடங்கள் அவர்களுடைய இருதயங்களைத் தொட்டுள்ளது என்று நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைக்கும், ஜீவத்தண்ணீர் எனும் அடையாள வார்த்தையினால் ஜீவன் எனும் அன்பளிப்பை/ஈவைக் குறித்துக் கர்த்தர் சமாரியா ஸ்திரீயிடம் சொன்னபோது, அவள்: "அந்தத் தண்ணீரை எனக்குத் தர வேண்டும்" என்று கூறின வார்த்தைகளுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதை நாம் கவனிக்கின்றோம். இரண்டு தருணங்களின்போதான பதிலானது, அக்காலக்கட்டத்தில் யூதர்களுக்கும் மற்றும் சமாரியர்களுக்கும், தங்களுக்கு இருப்பதைக்காட்டிலும் மேலான ஏதோ ஒன்றிற்கான ஏக்கம் இருந்துள்ளதை நமக்குக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. "மனித மனங்களில் எல்லையில்லாத ஏக்கங்கள் உள்ளன" — நித்தியமான ஜீவனுக்கான ஏக்கங்கள் உள்ளன என்று ஒரு கவிஞன் குறிப்பிட்டிருக்கின்றார். நெடுங்காலத்திற்கு முன்புள்ள சரித்திரங்களானது, எவ்வாறு அனைத்துத் தேசங்களிலுமுள்ள ஜனங்கள், தற்கால ஜீவியத்தை நீடிக்கத்தக்கதாகவும், கூடுமானால் மரணத்தை முற்றிலுமாக ஒழித்துப்போடத்தக்கதாகவும் ஆரோக்கியம் தரும் உணவுகளையும், ஆரோக்கியம் தரும் ஊற்றுகளையும் நாடினார்கள் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. இது இன்னமும் அடையப்பெறவில்லை என்பதை அனைவருமே உணர்ந்துள்ளனர் மற்றும் இதற்கான போராட்டம் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. ஜீவன் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்பதான இத்தகைய ஏக்கங்களினுடைய தாக்கத்தினாலேயே மருந்து மாத்திரைகள் உண்டாக்கப்படுகின்றன. ஜீவனை நீடிக்கப்பண்ணுவதற்கான மனித மனதினுடைய இத்தகைய ஏக்கங்களுக்காக நாம் மனமகிழ்வுறுகிறோம்; இந்த ஏக்கமே இப்பாடத்தில் இடம்பெறும் சம்பவத்திலும், சமாரியா ஸ்திரீயின் சம்பவத்திலும், கர்த்தர் வழங்கும் நித்திய ஜீவன்பற்றி, அதிகமாய் விசாரிப்பதற்கு அடிப்படையாய் அமைகின்றது.

"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவான் 6:35) என்றார். மீண்டுமாக நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு, ஜனங்களுடைய புரிந்துகொள்ளுதலின் ஆழத்தைக்காட்டிலும், ஆழம் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஜனங்களுடைய திகைப்பை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; அப்போது பெந்தெகொஸ்தே நாள் வராததினாலும், "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்பதினாலும், அவர்கள் அப்பொழுது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதை நாம் நினைவுகூருகையில், அவர்கள்மேல் நமக்கு அனுதாபம் ஏற்படுகின்றது (யோவான் 7:39). இந்தக் கேள்வியானது, இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அநேகருக்கு மிகவும் புரியாத ஒன்றாக உள்ளது மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு எவரும் இதைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளுவதில்லை. நம்மால் முடிந்தமட்டும், அவ்வசனப்பகுதியை ஆராய்வதன்மூலமாக, காரியத்தைத் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். இங்கு இயேசு தாம் பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கின்றார், அதாவது மேகத்திலிருந்து/வானத்திலிருந்து இறங்கி வந்ததான மன்னாவைப்போன்று மாத்திரம் இல்லாமல், மாறாக உலகம் உண்டாவதற்கு முன்னதாக, பிதாவோடு தமக்கு இருந்த மகிமையைத் துறந்த நிலையிலும், தமது முந்தைய ஆவியின் சுபாவத்திலிருந்து, இப்போது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக, தாம் அவர்களுக்கு முன்பாக நின்று, பேசிக்கொண்டிருக்கின்றதான பூமிக்குரிய சுபாவத்திற்குத் தாழ்த்தப்பட்ட நிலையிலும் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்திருக்கின்றார் என்று விவரித்தார். ஆனால் தாம் உயிரோடிருக்கையில், அவர்களால் அவரைப் புசிக்க முடியாது; "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" என்று

அவர் கூறினபோதும், அவர்களால் அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல், "இந்த மனுஷன் தன்னுடைய மாம்சத்தைப் புசிப்பதற்கு நமக்குக் கொடுப்பாரோ? இப்படியான அர்த்தத்தில்தான் இவர் பேசினாரோ? என்று யோசித்தவர்களானார்கள். பாடம் அவர்கள் கிரகிக்க முடியாதளவுக்கு மிகவும் ஆழமாய்க் காணப்பட்டது; ஆனால் இது நமக்கு மிகவும் ஆழமாய்க் காணப்படாததற்குத் தேவனுக்கு நன்றி. "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்று கூறிச் சீஷர்களில் சிலர் அவரைவிட்டுப் பிரிந்து, அவருடனேகூட நடவாமல் போய்விட்டது போலவே, இன்றும்கூடக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் அடிப்படையாக விளங்கும் இவ்வுபதேசத்தை, ஏற்றுக்கொள்ள முடியாமல் சிலர் காணப்படுகின்றனர். இந்த ஒரு பாடத்தினை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், இதன்மீது கட்டியெழுப்பிக் காணப்படுகின்றதான மற்றப் பாடங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாய்க் காணப்படுவார்கள். "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று நமது கர்த்தர் இன்னும் விவரித்துக் கொடுத்தார். அவர் தமது மாம்சத்தைக் கொடுத்துக்கொண்டே இருந்தபோதிலும், அவர்களுக்கென்று ஊழியம் புரிவதில் அந்த மாம்சத்தின் சத்துவத்தை, அதன் பலத்தை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருந்தபோதிலும், அவரது மாம்சத்தை (இச்சம்பவத் தருணத்தின்போது) அவர் இன்னமும் கொடுக்கவில்லை; மரணத்தில், அதாவது சிலுவையின் மரணத்தில், அவர் தம்முடைய யாவையும் ஒப்படைப்பதன் மூலம், தமது பலியின் வேலையை அவர் நிறைவேற்றுவார். இதை அவர் கொஞ்சங்காலம் கழித்துச் செய்து முடித்தார்.

## நாம் அவரது மாம்சத்தைப் புசிக்கின்றோம்

நாம் சொல்லர்த்தமாய், இயேசுவின் மாம்சத்தைப் புசிப்பதில்லை; அதை விசுவாசத்தினாலே புசிக்கின்றோம்; அதாவது நமக்காக மரணத்தில் அவர் ஒப்படைத்ததான, அவரது மாம்சத்தினுடைய புண்ணியத்தினை, பயனை, விசுவாசத்தின் வாயிலாக நாம் நமதாக்கிக்கொள்கின்றோம். ஏன் இப்படியாக? மற்றும் அவர் எதை ஒப்படைத்தார்? மற்றும் அதில் நாம் எவ்வாறு பங்கடைவது? நம்முடைய பதில் என்னவெனில் . . . மனுக்குலத்தின் தலையாகிய ஆதாம், கீழ்ப்படியாமையின் காரணமாக, தனது ஜீவனை இழந்துபோனபடியால், தேவனுடன் இசைவாய்க் காணப்படுகின்றதான ஒரு பரிபூரணமான சந்ததியை இனப்பெருக்கம் பண்ணிடுவதற்கும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய சிலாக்கியமுடையவராய் அவர் இருப்பதற்கும் பதிலாக, அவரது சந்ததியும் அவரைப் போலவே மரிக்கின்றவர்களாகவும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரமற்றவர்களாகவும் காணப்பட்டனர். தேவனுடைய ஏற்பாட்டில், மீட்பிற்கான ஒரு பலி அவசியமாயிருந்தது; அதாவது ஆதாமின் ஸ்தானத்தை ஒருவர் எடுத்துக்கொண்டு, ஆதாம் விடுதலையடையத்தக்கதாகவும், ஆதித் தண்டனைத் தீர்ப்பிலிருந்து அவரது சந்ததியை விடுவிக்கத்தக்கதாகவும், அவருக்காக மரிப்பதும் அவசியமாயிருந்தது. பரிபூரணமான நிலையிலும், நீதிக்கு முன்பாக தனது சகோதரனுக்காக ஒரு மீட்கும்பொருளைக் கொடுக்க முடிந்த நிலையிலும் எந்த ஒரு மனுஷனும் காணப்படவில்லை . . . ஏனெனில் அனைவரும் பாவிகளாகவும், நித்திய ஜீவனுக்கு அவசியமெனத் தேவன் அங்கீகரிக்கின்றதான பரிபூரணத்திற்கும், மகிமைக்கும் குறைவுப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தேவைகளைச் சந்திப்பதற்கெனத் தேவன் தம்முடைய குமாரனை ஏற்பாடு பண்ணினார்; குமாரன் தம் முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு, நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு, தாமாய் முன்வந்து, மகிழ்ச்சியுடன், அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக, நீதியுள்ளவராய் மரித்தார் (1 பேதுரு 3:18). ஆகையால் நமது கர்த்தருடைய மாம்சம் (அ) மனித சுபாவமானது, ஆதாமுக்காகவும், அவரது சந்ததிக்காகவும் கொடுக்கப்பட்டது மற்றும் மனுக்குலத்தின் உலகமானது, மரணத்தண்டனைத் தீர்ப்பின் கீழிலிருந்து மீட்கப்படத்தக்கதாக, அவரது மாம்சம், உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதாயிருந்தது. இப்படியாக இயேசு, தேவனுடைய கிருபையினால், ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தவராயிருந்தார் மற்றும் நாம் அனைவரும் அழிவுக்குரிய வஸ்துக்களாகிய பொன் மற்றும் வெள்ளியினால் மீட்கப்படாமல், மாறாகக் குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே (ஜீவனாலே) மீட்கப்பட்டிருக்கின்றோம் (1 பேதுரு 1:18, 19).

கிறிஸ்து மாம்சமாக்கப்படுவதின் அவசியம் என்ன என்றும், மரணத்திற்குள்ளாகக் கடந்து செல்வதின் மூலமாக, உலகத்தின் ஜீவனுக்காக, கிறிஸ்து தம்முடைய மாம்சத்தைக் கொடுக்க வேண்டியது, அவருக்கு எப்படி அவசியமாயிருந்தது என்றும் நாங்கள் இங்கு அறிந்துகொண்டோம், எனினும் அவரது மாம்சத்தை நாங்கள் எவ்வாறு புசிப்பது? என்று எவரேனும் கேள்வி எழுப்புகின்றீர்களா? ஆ! அடையாளமான வார்த்தைகளில் கொடுக்கப்பட்டதான இக்காரியத்தை, நாம் புரிந்துகொள்ளும்போது, இது அருமையாயும், எளிமையாயும், அர்த்தமுள்ளதாயும் தோன்றும் என்று நாம் பதிலளிக்கின்றோம். கர்த்தருடைய மாம்சத்தைப் புசிக்கும் காரியமானது, அவரது பலியினாலான நன்மையை அடையும் அனைவரின் விஷயத்திலும், தனிப்பட்ட காரியமாய்க் காணப்படுகின்றது. புசித்தல் என்பது, விசுவாசத்தின் மூலம் சொந்தமாக்கிக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் மீட்பு குறித்த புரிந்துகொள்ளுதலுக்குள் ஒருவன் வந்து,

அதை விசுவாசித்த நிலையில், ஜெபத்தில் தேவனிடத்தில் கடந்துபோய், விசுவாசத்தின்மூலமாக தனது பாவங்களுக்கான மன்னிப்பையும், தேவனோடு ஒப்புரவாகுதலையும் ஏற்றுக்கொள்கையில், அவன் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கின்றவனாகுகின்றான்; அவன் நமது கர்த்தருடைய மாம்சம் (அ) பலியானது பெற்றுத்தந்ததான அந்த நன்மைகளில் (அ) அனுகூலங்களில் பங்கடைபவனாகுகின்றான்.

## நாம் 'புசிப்பதன்' மூலம் நீதிமானாக்கப்படுதல்

இப்படியாக விசுவாசத்தின் வாயிலாகப் புசிப்பதன் விளைவாக, நமது கர்த்தர் பரிபூரண மனிதனாகப் பெற்றிருந்ததான சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஒருவன் தனதாக்கிக்கொள்கின்றான்; இது மனித தளத்திலான நம்முடைய நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் நமது பாவங்கள் கிருபையாக மூடப்பட்ட நிலையில், நமக்குத் தேவனுடன் உறவு காணப்படுகின்றது மற்றும் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால், நாம் தேவனிடத்தில் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஐக்கியம் பெற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றோம். நாம் பலம்மேல் பலமடையத்தக்கதாகவும், நமது கர்த்தருக்குச் சொந்தமானதும், ஆனால் அவர் நமக்காகவும், ஆதாமின் சந்ததியார் அனைவருக்காகவும் ஒப்படைத்துவிட்டதான அருமையான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள், உறவுகள் மற்றும் தெய்வீகத் தயவுகளை அதிகமதிகமாய் நாம் நமதாக்கிக்கொள்ளத்தக்கதாகவும், நாம் தொடர்ந்து புசிக்க வேண்டும். இன்னுமாகப் புசித்தலினாலான சரியான தாக்கத்திற்குள்ளானவர்கள் . . . கர்த்தருக்கு அருகாமையில் ஈர்க்கப்பட்டு, தங்களுடைய அனைத்தையும் அவருக்கென்று முழுமையாய் அர்ப்பணிக்கத்தக்கதாக வழிநடத்தப்படுபவர்கள், அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்கான இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய விசேஷித்த அழைப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர். வேதவாக்கிய மொழிநடையில், இரத்தம் என்பது ஜீவனாய் இருக்கின்றது; ஆகையால் யூதர்கள், பொதுவாய் இரத்தத்தைப் பானம் பண்ண தடைப்பண்ணப்பட்டவர்களாய் இருந்தனர்; அப்படிப் பானம்பண்ணுவது என்பது ஒரு நபர் (அ) ஜீவராசியினுடைய மரணத்திற்கு அவர்களைப் பொறுப்பாளி (அ) குற்றவாளியாக்குகின்றது. ஆகையால்தான் யூதர்கள் நமது கர்த்தரைக் குறித்து, "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேல் இருப்பதாக" . . . "இவரது மரணத்திற்கான பொறுப்பினை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்" என்றார்கள்.

ஆகையால்தான், இராப்போஜனத்தின் பாத்திரத்தில் அடையாளமான விதத்தில் கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் பங்குகொள்பவர்கள், அதன் உட்பொருளைச் சரியாய்ப் புரிந்து பங்குகொள்ளவில்லையெனில், அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின் விஷயத்தில் குற்றவாளிகளாக இருக்கின்றார்கள் என்றும், கிறிஸ்துவினுடைய மரணத்தின் விஷயத்தில் குற்றவாளிகளாக இருக்கின்றார்கள் என்றும் அடையாளமாய்த் தெரிவிப்பவர்களாய் இருப்பார்களென அப்போஸ்தலனும் விவரித்துள்ளார். அதன் உட்பொருள் என்ன? நமது பதில் என்னவெனில், இது குறித்து கர்த்தர் கடைசி இராப்போஜனத்தின்போது, தம்முடைய சீஷர்களிடத்தில் பின்வருமாறு கூறியதில் குறிப்பிட்டுள்ளார்: "இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" . . . "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." "இந்தத் திராட்சப்பழரச (fruit of the vine) பாத்திரமானது, என்னுடைய இரத்தத்தை, என்னுடைய மரணத்தைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதனாலேயே புதிய உடன்படிக்கையானது, இறுதியில் முத்திரிக்கப்படும் மற்றும் என்மேல் விசுவாசமாயிருக்கிற நீங்கள், என்னோடுகூட இதில் பங்குகொள்ளும்படிக்கு, உங்களை நான் அழைக்கின்றேன்; அதுவும் என்னுடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள்போல், நீங்கள் இதில் பங்குகொள்ளாமல், மாறாக தங்கள் ஜீவனை தானாய் முன்வந்து ஒப்புக்கொடுத்து, இந்த மரணத்தில், இந்தச் சுயத்தைப் பலிச்செலுத்துதலில் என்னோடுகூட வந்து இணைந்து கொண்டவர்களைப்போன்று பங்குகொள்பவர்களாய் இருங்கள். இந்தப் பாத்திரத்தில் நீங்கள் என்னோடுகூடப் பங்குகொள்ளும் போது — அது நான் என் ஜீவனை ஒப்புக்கொடுத்ததுபோன்று, நீங்களும் உங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும் மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகின்றதான புதிய உடன்படிக்கையினை நிறுவுகின்றதும், மாபெரும் பலி, மாபெரும் ஜீவியம் ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறிக்கின்றதுமான இந்தப் பாத்திரத்தில் நீங்கள் என்னோடுகூடப் பங்காளிகளாகுவதையும் குறிக்கின்றதாய் இருக்கும்."

ஆகையால் பரிசுத்த ஆவியினுடைய வழிக்காட்டுதலின் கீழ், அப்போஸ்தலனுடைய வார்த்தைகள்மூலமாக, நமது கர்த்தர் (இப்பாடத்தின் சம்பவத்தில்) அந்த ஜனங்களிடம் பேசின மற்றும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாத அந்த வார்த்தைகளுக்கான அர்த்தத்தின் ஆழத்தை நம்மால் காண முடிகின்றது. நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை யூதர்களிடம் பேசியிருந்தபோதிலும், அவர்களிடமிருந்து அவ்வார்த்தைகளானது கடந்துவந்த நமக்கே, மற்றும் அவ்வார்த்தைகளை முழுமையாய்ப் புரிந்துகொள்கின்றதான நமக்கே அவர் குறிப்பாய் அவ்வார்த்தைகளைப் பேசினார்

என்று நாம் நம்புகின்றோம். அவரது மாம்சத்தில் பங்கெடுப்பதன் (புசிப்பதன்) வாயிலாக நாம் அடைந்துள்ளதான நீதிமானாக்கப்படுதலில் நாம் களிகூருகின்றோம்; அவரது மனுஷீகம் பலிசெலுத்தப்பட்டதின் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்டதில் நாம் களிகூருகின்றோம்; மனுஷீக நீதிமானாக்கப்படுதலிலுள்ள நமது பங்கை நமதாக்கிக்கொண்டதில் நாம் களிகூருகின்றோம். இறுதியில் முழு உலகமும்கூட, அந்த மாம்சத்தைப் புசிப்பதற்கும், தங்கள் மனுஷீக பாவங்கள் மற்றும் பெலவீனங்கள் இரத்துச் செய்யப்படுவதற்கான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்து தங்கள் பாவங்களுக்காக மரித்துள்ளதினாலும், அவர் தமது மாம்சத்தைப் புசிக்கக்கொடுத்ததினாலும், ஆயிரவருட அரசாட்சியின் ஆசீர்வாதங்களும், திரும்பக்கொடுத்தல் காலங்களினுடைய ஆசீர்வாதங்களுமாகிய அனைத்தும் தங்களுக்கு வருவதை உணர்ந்துகொள்வதற்குமுரிய சிலாக்கியம் பெறுவார்கள் என்பதில் நாம் களிகூருகின்றோம். முழு உலகமும் அந்த அப்பத்தைப் புசிக்கப்போகின்றார்கள் மற்றும் அப்போஸ்தலர் குறிப்பிட்டிருப்பதுபோல, பிட்கப்படும் அப்பத்தில் கர்த்தரோடு பங்கடைவதற்கும், பிதா அவருக்கு ஊற்றியுள்ளதும், நாமும் அவரோடுகூடப் பங்குகொள்ளத்தக்கதாக பிதா நமக்கு அனுமதித்துள்ளதுமான அவமானம்/நிந்தனை மற்றும் சுயத்தைப் பலிசெலுத்துதல் எனும் பாத்திரத்தில் பங்கடைவதற்கும் சபை இப்பொழுது சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர்; ஏனெனில் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; நாம் அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவோமானால், வரவிருக்கின்றதான இராஜ்யத்தில், அவரது சந்தோஷங்களில் நாமும் பங்கடைபவர்களாக இருப்போம் (2 தீமோத்தேயு 2:12).

## பிதாவானவர் கொடுக்கிற யாவரும் வருவார்கள்

முந்தின இரவின்போது அப்பம் புசித்தவர்களும், இப்பொழுதும் நித்திய ஜீவனுக்கு அவசியமான மேலான உணவு குறித்த விளக்கத்தைப் பெற்றுக்கொண்டவர்களுமான ஜனக்கூட்டத்தார், இயேசு மிகவும் அற்புதகரமான மனிதர் என்று அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்று மற்றவர்கள்போன்று சொல்வதற்கு ஆயத்தமாய் அநேகமாகக் காணப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை. வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாகிய ஆயிரக்கணக்கான இந்த இஸ்ரயேலர்கள் தம்மை ஏற்றுக்கொள்ளாமலும், தம்முடைய செய்திக்குச் செவிசாய்க்காமலும் போனதற்காக நமது கர்த்தர் குழப்பமும், நம்பிக்கை இழந்தும் போனாரா? நிச்சயமாய் இல்லை! இந்த அறுவடையின் காலத்திலுங்கூடத் தெய்வீகச் செய்தியானது, நம்முடைய நாட்களிலுள்ள விசுவாச வீட்டாரிலுள்ள பெரும்பான்மையானவர்களால் புரிந்துகொள்ளப்படாமல் காணப்படுவதைக்கண்டு, அவரது பின்னடியார்களும் ஆச்சரியமடையக்கூடாது. நமது கர்த்தர் ஆவேசம் அடைந்ததாகவும், தம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அவர்கள் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்து போகப்போகிறார்கள் என்று அவர் ஜனங்களுக்குப் போதித்ததாகவும் மற்றும் இப்படியாக பேசி ஜனங்களுடைய மனதை இளகச் செய்ததாகவும் நாம் பதிவுகளில் எதுவும் வாசிக்கவில்லை. ஜனங்கள் மத்தியில் அப்போஸ்தலர்கள் கடந்துசென்றதாகவோ, ஜனங்கள் மனம்வருந்தி, மீண்டும் திரும்பத்தக்கதாக வலியுறுத்தினதாகவோ நாம் பதிவுகளில் எதுவும் வாசிக்கவில்லை. இப்படியாகவெல்லாம் செய்வதற்கு முற்றிலும் நேர்மாறாகவே விஷயங்கள் நடந்தது. வெகு சொற்பமானவர்களே விசுவாசிப்பார்கள் என்று இயேசு நம்பினவராய்க் காணப்பட்டார்; அவர் தம்முடைய சீஷர்களிடத்திலும்கூடத் திரும்பி, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்றார். அவர்களோ பிரதியுத்தரமாக: "இல்லை; யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. ஆண்டவரே நாங்கள் உம்மோடேக்கூடக் காணப்படுவோம்; இதை அல்லாமல் நாங்கள் வேறு எதுவும் செய்கிறதில்லை; உம்முடைய வாயிலிருந்து நாங்கள் கேட்டதான இந்த மகிமையான செய்தியின் மீதே, எங்களது காரியங்கள்/ஜீவியம் முழுவதும் சார்ந்துள்ளது. உம்மோடுகூட மரிப்பதற்கும், உம்முடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும் நாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றோம்" என்றார்கள்.

கவலையை வெளிப்படுத்துவதற்குப்பதிலாக நமது கர்த்தர் ஜனக்கூட்டத்தாரை நோக்கி: "நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்று உங்களுக்கு நான் முன்னமே சொல்லியிருந்தேன். (நீங்கள் என்னை விசுவாசியாமலிருப்பதற்கான) காரணம் என்ன? காரணம் என்னவெனில், நீங்கள் தற்காலத்தில் நான் வழிநடத்தத்தக்கதாக என் பிதாவினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தொழுவத்திலுள்ள ஆடுகளல்ல. இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; மற்றும் அவைகளையும் நான் அடுத்துவரும் காலப்பகுதியில் பராமரித்துக்கொள்வேன். ஆனால் இப்பொழுதோ, பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை, அதாவது புறக்கணிப்பதில்லை" என்றார். இது தெரிந்துகொள்ளுதல் இல்லையெனில் வேறு என்ன என்று சொல்வோம்? இது எவ்வளவாய், நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின

இரவில் ஏறெடுத்த ஜெபத்தில் "நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் . . . அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் (பிற்பாடு) விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல் அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ள வார்த்தைகளுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது (யோவான் 17:9, 21). தம்மிடத்தில் வருவதற்கும், தாம் அளிக்கவிருக்கிறதான கிருபையான காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், தம் மூலமான தேவனுடைய கிருபையான ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கும் மற்றும் இப்படியாகத் தம்முடைய மாம்சத்தைப் புசிப்பதன்மூலம் நீதிமானாக்கப்படுவதற்கும், நமது கர்த்தர் அனைவரையும் எதிர்ப்பார்க்காததினால், அநேகர் இன்னும் முன்வருவார்கள் என்றோ, இடுக்கமான பாதையில் தம்முடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கென அர்ப்பணம்பண்ணுவார்கள் என்றோ மற்றும் இப்படியாக தமது பாத்திரத்தில் பங்கடைபவர்களாகவும், வருங்காலத்தில் தம்முடன் உடன்சுதந்திரர்கள் ஆகுவதற்கான வாய்ப்பினை உடையவர்களாகவும் காணப்படுவார்கள் என்றோ அவரால் எதிர்ப்பார்த்திட முடியாது. ஓ! இல்லை. தொடக்கம் முதல் இறுதிவரையிலும் சிறு மந்தையினராகக் காணப்பட்டவர்களும், மற்றும் மிகவும் பாக்கியவான்கள் ஆனவர்களுமாகிய இந்தச் சிறு மந்தையினரிடமே "பிதா இராஜ்யத்தைக் கொடுப்பார்" என்று ஆண்டவர் குறிப்பிட்டார் (லூக்கா 12:32). இவர்கள் மறுரூபமடைந்து, தங்கள் ஆண்டவருக்கு ஒப்பாகக் காணப்பட்டு, இராஜ்யத்தின் வல்லமையையும், மகிமையையும் மற்றும் ஆளுகையையும் பெற்றுக்கொள்ளும்போது, அந்த இராஜ்யத்தின் வாயிலாகவே, இருளின் அதிபதியும், இவ்வுலகத்தின் அதிபதியும் வீழ்த்தப்படுவான்; பாவம் வீழ்த்தப்படும் மற்றும் இப்பொழுது பிதாவினால் அழைக்கப்படாதவர்களும், இழுத்துக்கொள்ளப்படாதவர்களுமாகிய பரிதாபத்திற்குரிய மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதித்தல் மற்றும் வெளிச்சமூட்டுதல் மற்றும் சீர்த்தூக்கிவிடுதல் வேலை நடைப்பெறும்!

இது தொடர்புடையதாக, "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள் (யோவான் 6:44). இதில் ஒரு தடைவிதிப்புத் தெரிகின்றது; அதாவது வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்டுள்ளபடி, விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்வதற்கான காலம் இன்னும் வரவில்லை (வெளிப்படுத்தல் 22:17). அந்த மகிமையான காலமானது, ஆயிரவருட இராஜ்யத்திற்குரியதே ஒழிய, பிதா இப்பொழுது இழுத்துக்கொள்கிறதும், அழைக்கிறதும், முத்திரையிடுகிறதுமான உடன்சுதந்திரர்களாகிய மணவாட்டி வகுப்பாரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதான தற்காலத்திற்குரியதல்ல. தற்காலத்தில் பிதாவினால் உண்டாகும் இந்த இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும் மற்றும் ஆயிரவருட யுகத்தின்போது பிதாவினால் இல்லாமல், மாறாக குமாரனால் உண்டாகும் இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும், அதுவும் எவரையும் நீக்கிவைக்காமல், அனைவரையும் உள்ளடக்கின நிலையிலுள்ள இழுத்துக்கொள்ளப்படுதலுக்கும் இடையிலான தெளிவான வித்தியாசத்தைக் கவனிக்கவும். இது தொடர்பான நமது ஆண்டவருடைய வார்த்தைகளாகிய, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்பதைக் கவனிக்கவும் (யோவான் 12:32). இன்னமும் அனைத்து மனிதர்களும் கர்த்தரிடத்தில் இழுத்துக்கொள்ளப்படவில்லை. ஏன்? ஏனெனில் உயர்த்தப்படுதல் இன்னமும் நிறைவடையவில்லை. தலையானவர் கல்வாரியில் மாத்திரம் உயர்த்தப்படாமல், இன்னுமாகப் பலனளிக்கப்பட்டவராக உயர்வாகவும் உயர்த்தப்பட்டார் மற்றும் உயர்த்தப்படுதல் காரியம் நிறைவடைவதற்கு முன்னதாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றின மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினர்கள், அதாவது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களும் தங்கள் ஓட்டத்தினை முடித்து, அவரது உடன்சுதந்திரர்களென உயர்வாய் உயர்த்தப்பட வேண்டும்.

முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய அந்த மகிமையான "மறுரூபமடைதலோடு," ஆயிர வருட இராஜ்யமானது கடந்துவரும் மற்றும் அருமையாய் நீதி ஆளுகைச் செய்யும் அக்காலத்தில், உலகத்தின் ஆசீர்வாதத்திற்கெனச் சூரிய ஒளியும், சத்தியமும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதான அக்காலத்தில், மனுக்குலம் முழுவதும் பாவம் மற்றும் சுயநலத்தினின்றும், வியாதி, வலி மற்றும் துக்கத்தினின்றும், தீமையான அனைத்தினின்றும், கர்த்தர்பால் இழுக்கப்படுவார்கள், அதாவது அவரது மாம்சத்தை உண்மையில் புசிப்பதற்கென்றும், மாபெரும் மீட்பர் மூலம் தேவன் அருளியுள்ளதான நித்திய ஜீவனையும், அதனோடுகூடத் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கென்றும் கர்த்தர்பால் இழுக்கப்படுவார்கள். இப்படியாக நாம் சொல்லுகையில் நாம் (மக்கள் அனைவரும் முடிவில் மீட்கப்படுவார்கள் என்னும் இறைமைக் கோட்பாட்டை) universalism கோட்பாட்டைப் போதிக்கவில்லை; ஏனெனில் இப்பொழுது மணவாட்டி வகுப்பாராகும்படிக்கு அழைக்கப்படுபவர்களிலும், இழுக்கப்படுபவர்களிலும், இந்த இழுத்துக்கொள்ளுதலை எதிர்ப்பவர்களாய் அல்லது அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "தேவனுடைய கிருபையை விருதாவாய்ப் பெற்றுக்கொள்கின்றவர்களாய்" இருப்பதற்கும் வாய்ப்புண்டு. இதுபோலவே ஆயிரவருட யுகத்தின்போதான இழுத்துக்கொள்ளுதலையும் எதிர்ப்பதற்கு வாய்ப்புள்ளது; இது

குறித்துப்போதுமான அளவுக்கு வேதவாக்கியங்களில், பல்வேறு வார்த்தைகளினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; "அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ (கீழ்ப்படியாதவனெவனோ), அவன் ஜனத்திலிராதபடிக்கு — இரண்டாம் மரணத்தில் — மீட்கப்படுவதற்கான எந்த நம்பிக்கை இல்லாமல் — நிர்மூலமாக்கப்படுவான்." பிதாவினால் இப்பொழுது இழுக்கப்பட்டவர்களும், இப்பொழுது வந்து நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தும், அவரது பாத்திரத்தில், அவரது இரத்தத்தில் பானம் பண்ணியும், அவருடைய பலியில் அவருடன் பங்குகொண்டும் காணப்படுபவர்களுமான இந்தத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைக் கவனிக்கவும். இவர்களுக்கான நம்பிக்கையானது, "நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்" என்பதான வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசி நாள், மகா ஏழாம்நாள், ஆயிரவருட நாள். ஆ, ஆம்! மணவாட்டி வகுப்பாராகிய சபையைக் குறித்து, அந்த ஆயிரவருட நாளினுடைய காலையில் — "அதிகாலையிலே தேவன் அவளுக்குச் சகாயம்பண்ணுவார்" (சங்கீதம் 46:5) என்று எழுதப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகின்றோம். ஆதாம் முதலான ஆறு நாட்கள் கடந்து போய்விட்டது மற்றும் ஏழாம்நாள் ஏற்கெனவே விடிந்து கொண்டிருக்கின்றது மற்றும் மணவாட்டியானவள் சகல மகிமையோடும் மாபெரும் இராஜாவாகிய பிதா முன்னிலையில், அவரது குமாரனும், மகாராஜனுமான நமது கர்த்தரினால் கொண்டுவரப்படுவதற்கான காலம் அண்மையில் உள்ளது. "அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, இராஜ அரண்மனைக்குள் பிரவேசிப்பார்கள்." (சங்கீதம் 45:15).

## நான் புறம்பே தள்ளுவதில்லை

நமது அருமை ஆண்டவர் இவ்வார்த்தைகளையும் கூடக்கூறினதற்காக நாம் எவ்வளவாய் மகிழ்கின்றோம். இவ்வார்த்தை இல்லையெனில், நாம் பெற்றுக்கொண்டதான அழைப்பு மற்றும் இழுத்துக்கொள்ளுதலின் உறுதிபாட்டினைக் குறித்து நாம் சந்தேகிக்கிறவர்களாக இருந்திருப்போம் மற்றும் சிலர் பின்வருமாறு கூடச் சொல்வதற்கு வாய்ப்புண்டு: "ஆம், நான் இழுக்கப்பட்டது உண்மைத்தான், ஆனால் கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் ஒருவராகுவதற்கு என்னை இயேசு பாத்திரவானாய்க் கருதவில்லை என்பதும் உறுதியே." பிதாவினால் இழுக்கப்பட்டு, தம்முடைய சீஷர்களாகுவதற்கான விருப்பத்தில், தம்மிடம் கடந்து வருபவர்களுக்கு, இங்கு (இவ்வார்த்தைகள் மூலமாக) அவர் தம்முடைய உதவியையும், துன்பமான வேளையின்போதான தம்முடைய உதவியையும், தம்முடைய துணையையும்/ ஆதரவையும், தம்முடைய ஏற்றுக்கொள்ளுதலையும் நமக்கு உறுதிப்படுத்துகின்றார். ஆகையால் இப்பொழுது இந்தப் பரமஅழைப்பில், அளிக்கப்பட்டதான தேவ கிருபையை நாம் பயன்படுத்தத் தவறிப்போவோமானால், அது நம்முடைய தவறினாலேயே இருக்கும் என்று நாம் அறிந்துகொள்ளலாம்; ஏனெனில் நாம் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்கவும், அவரது அடிச்சுவட்டில் நடப்பதற்கும் தவறிவிடுவதே காரணமாகும்.

*****

# "நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்"
## யோவான் 9:1-41

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்" - ( வசனம் 5)

நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, தம்முடைய ஊழியத்தின் மூன்றாம் வருடத்தில், நிகழ்ந்த கூடாரப்பண்டிகையின் போது, எருசலேமில் காணப்பட்டார். இப்பொழுதும் காணப்படுவதுபோல, அன்றும் வழி ஓரங்களில் அநேக குருடர்கள் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்; அதிலும் விசேஷமாக வருடத்தின் இந்தக் காலகட்டத்தில், தொழுதுகொள்வதற்கெனத் திரளான ஜனக்கூட்டத்தார் கூடியிருக்க, அதுவும் இரக்க உணர்வுடன் காணப்படும் காலகட்டத்தில் அநேக குருடர்கள் வழி ஓரங்களில் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். நமது கர்த்தர் இந்த அனைத்துக் குருடர்களையும் சொஸ்தப்படுத்தவில்லை; ஆறுமுறை மாத்திரமே சொஸ்தப்படுத்தினதாகப் பதிவுகள் காணப்படுகின்றது. அவருடைய வேலை, வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதாய்க் காணப்படாமல், மாறாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும், சுவிசேஷச் செய்தியைச் சுட்டிக்காண்பிப்பதற்கும் மாத்திரமே சொஸ்தப்படுத்துவதற்குரிய வல்லமை அவரால் செயல்படுத்தப்பட்டது.

நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் இந்தக் குருடர்களில் ஒருவரைக் கடந்துப்போகையில், ஒருவன் பிறந்தது முதல் குருடனாக இருந்தது கவனிக்கப்பட்டது. அந்தக் குருடன் பிச்சைக் கேட்ட காரியமானது அநேகமாக மிக முக்கியமான கேள்வி ஒன்றைப்பற்றின விவாதத்திற்குள் வழி நடத்தியிருக்க வேண்டும்; அப்போஸ்தலர்களால் எழுப்பப்பட்ட கேள்வி, "ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ?" என்பதாகும் (வசனம் 2). அப்போஸ்தலர்கள் இந்தத் தங்களுடைய வாதத்தைக் குறித்த விஷயத்தில், பொதுவாய்க் காணப்படுவதைக் காட்டிலும், இத்தருணத்தில் மிகவும் தெளிவில்லாமல் காணப்பட்டனர்; இல்லையேல் அந்த மனுஷன் பிறப்பதற்கு முன்னதாகவே பாவம் செய்ய முடியாது என்ற விஷயத்தை அறிந்திருப்பார்கள்; ஆத்துமாக்கள் கூடுவிட்டுக் கூடுச் செல்லும் என்பதான அந்நியர்களின் கருத்துக்கள் சீஷர்களுடைய கவனத்திற்கு வந்திருப்பதற்குக் குறைவான வாய்ப்புகளே உள்ளன. அந்நிய மதத்தினர், தாங்கள் முன்பு ஏதோ ஒருவிதத்தில் அல்லது சூழ்நிலையில் வாழ்ந்ததாகவும், உலகில் தாங்கள் பிறந்துள்ளபடியால், முன்பைக் காட்டிலும் ஒன்றில் மேலான (அ) கீழானதுமான மாறுபட்ட சூழ்நிலைகளில் புதுப்பிக்கப்பட்டுள்ள ஜீவியத்தைப் பெற்றுள்ளதாகவும் அனுமானித்துக்கொள்ளத்தக்கதாக, சாத்தான் அந்நிய மார்க்கத்தினர் அனைவரையும் வஞ்சித்துள்ளான். இதே கருத்து, மில்லியன் கணக்கிலான புத்தர்களினாலும், மோர்மோனியர்களினாலும் நம்பப்படுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார் என்றும், மனுக்குலம் முழுவதும் இயல்பான பிறப்பின் முறை மூலமாக ஆதாமிடமிருந்து தோன்றினது என்றும் வேதவாக்கியங்கள் போதிக்கின்றன.

அது இம்மனுஷன் செய்த பாவமும் இல்லை, இவனுடைய பெற்றோர் செய்த பாவமும் இல்லை என்ற நம்முடைய கர்த்தருடைய பதிலானது, அம்மனுஷனும், அவனுடைய பெற்றோர்களும் பாவம் இல்லாதவர்கள் என்றும், தகப்பனாகிய ஆதாமின் மீது வந்ததும், அவர் மூலமாய் அவருடைய சந்ததி முழுவதின் மீது வந்ததுமான குற்றத் தீர்ப்பில் இவர்கள் பங்கடையவில்லை என்றும் புரிந்துக்கொள்ளபடக்கூடாது. ஆதாமின் குற்றத்தீர்ப்பைக் குறித்து, "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என அப்போஸ்தலர் கூறுகின்றார் (ரோமர் 5:12). நம்மையும், மற்றவர்களையும் போல இந்தக் குருடான மனுஷனும், அவனுடைய பெற்றோர்களும், ஆதாமின் சந்ததியினுடைய அங்கங்களாக மரணத் தீர்ப்பின் கீழ்க் காணவேபடுகின்றனர். இம்மனுஷனால் செய்யப்பட்ட ஏதேனும் விசேஷித்த பாவத்தினாலோ, இவனுடைய பெற்றோரினால் செய்யப்பட்ட ஏதேனும் விசேஷித்த பாவத்தினாலோ, இம்மனுஷன் குருடனாய்ப் பிறக்கவில்லை என்ற விதத்திலேயே நமது கர்த்தருடைய வார்த்தைகள் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். இதேபோல் வேறொரு தருணத்தில் சீலோவாமிலே கோபுரம் விழுந்து செத்தவர்களைக் குறித்துப் பேசுகையில், "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள்

குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ?" என்று கர்த்தர் பேசினார் (லூக்கா 13:4), அதாவது இதே விதத்தில் அனைவரும் கெட்டுப்போவதில்லை, மாறாக அனைவரும் மரித்துப்போவார்கள்; அனைவர் மீதும் மரணத்தீர்ப்பு உள்ளது. ஜீவன் அளிப்பவருடன் உறவிற்குள் வரும் போதுதான், இதனின்று தப்பித்துக்கொள்வதற்குரிய நம்பிக்கை காணப்படும்.

## "துன்பங்கள் என்பது தேவனுடைய உக்கிரத்திற்கான ஆதாரம் அல்ல"

இக்கட்டுகள் என்பது கண்டிப்பாக, தெய்வீக நிராகரிப்பிற்கான குறிப்பாக எப்போதும் இருக்க வேண்டும் என்பது இல்லை என்பதே இப்பாடத்தினுடைய முக்கியமான கருத்தாகும். இச்சம்பவத்தில் இடம்பெறும் இந்த மனுஷனுடைய விஷயத்திலும், தெய்வீக நிராகரிப்பு எதுவும் இல்லை; இப்படியாக யோபுவின் சூழ்நிலையிலும், சீலோவாம் கோபுரம் விழுந்து இறந்துப் போனவர்களின் விஷயத்திலும் இல்லை. யூதர்களுடைய விஷயத்தில், அவர்களுக்கு விசேஷித்த விதமாய் வரும் வியாதிகள் என்பது, தனிப்பட்ட பாவத்திற்கான தண்டனைகளை (அ) அடிகளைப் பெரும்பாலும் குறிக்கின்றது என நமது கர்த்தர் குறிப்பிட்டும் இருக்கின்றார்; ஆகவேதான் பெதஸ்தா குளத்தண்டையில் காணப்பட்ட வியாதியாய் இருந்த மனுஷனை நமது கர்த்தர் சொஸ்தப்படுத்தின தருணத்தில், "நீ போ, அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்." மனுக்குலத்தைத் தாக்கும் பெரும்பாலான வியாதிகளுக்கு, அவர்கள் சார்பில் அல்லது அவர்களுடைய முன்னோர்களின் சார்பில் சரியற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்ததே காரணம் என்பதில் ஐயமில்லை. தைராய்டு வீக்கம் அடைதல் எனும் நோயானது, பல்வேறு தலைமுறைகள் தொடர்கிற நோயாக இருக்கின்றது; இப்படியாகவே முடக்குவாதமும் காணப்படுகின்றது. ஆகவே நாம் வியாதிப்பட்டிருக்கும்போது, அதிகமாக புசித்ததன் மூலமாக அல்லது அதிகமாக பானம் பண்ணினதன் மூலமாக அல்லது நம்முடைய நிலைக்குப் பொருந்தாத உணவுகளைப் பயன்படுத்தினதன் மூலமாக, அஜாக்கிரதையாய் வாழ்ந்ததன் காரணமாக, நாம் எந்தளவுக்கு வியாதிப்பட்டதற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றோம் என்பதைக் கவனமாய் ஆராய்ந்துப் பார்ப்பது சரியானக் காரியமாய் இருக்கும். இக்காரணத்தினால்தான் ஒருவேளை நாம் வியாதிப்பட்டிருப்போமானால், நாம் மனந்திரும்பி, நம்மால் முடிந்தமட்டும் முன்பைவிட மாறான விதத்தில் அடிகள் எடுத்து வைப்பது சரியானதாக காணப்படும்; இன்னுமாக எதிர்க்காலத்தில் நாம் அதிக உறுதியாய் இருப்போம் என்றும், அவருடைய மகிமைக்காகவும், நாம் அவருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணியுள்ள அழியக்கூடிய சரீரத்தைப் பாதுகாப்பதற்காகவும் சரீரத்திற்குரிய பிரயோஜனத்திற்காகவும் மட்டும்தான், நம்முடைய புசித்தலும், பானம் பண்ணுதலும் காணப்படும் என்றும், ஜெபத்துடன் தீர்மானம் எடுத்துக்கொள்வதும் சரியானதாகக் காணப்படும்.

ஆனால் ஒருவேளை நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும், வியாதியும், சுயத்தைத் திருப்திப்படுத்தினதன் காரணமாக அல்லது நம்முடைய கட்டுப்பாட்டிற்கு மிஞ்சி பரம்பரை வழியாக வந்த நோயாக இல்லை என நாம் ஆராய்ந்துப் பார்த்ததில் கண்டுப்பிடிப்போமானால், கர்த்தருடைய ஊழியங்களிலுள்ள நம்முடைய ஈடுபாட்டின் காரணமாக, நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள் வந்துள்ளனவா எனக் கவனமாய் ஆராய்ந்துப் பார்ப்பது சரியானதாக இருக்கும். ஒருவேளை கர்த்தருடைய ஊழியங்களில் ஈடுபட்ட காரணத்தினால்தான் இவ்விளைவுகள் நேர்ந்துள்ளதெனில் நாம் அவைகளில் மேன்மை பாராட்டிக்கொள்ள வேண்டும்; நமக்கு மாபெரும் காரியங்களைச் செய்தவருக்கான ஊழியத்தில் ஜீவனிலும், ஆரோக்கியத்திலும் கொஞ்சத்தை ஒப்புக்கொடுக்க நம்மால் முடிந்ததற்கு நாம் களிகூர வேண்டும். எனினும் விவேகமுள்ள ஊழியக்காரர்களென, நாம் இதே நற்பலன்களை அல்லது இதைக் காட்டிலும் மேலான பலன்களை, வேறுவழியின் மூலம், அதாவது குறைவான உடல் சோர்வையும், குறைவான தளர்வையும்/பலவீனத்தையும் கொடுக்கக்கூடிய வேறு வழியின் மூலம் அடையலாமோ என்றும் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இதிலுங்கூட நம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய மனங்களுக்கு முன்பாகக் காணப்படக்கூடாது. ஏனெனில் அதிகப்படியான அளவில் தன்னுடைய ஜீவனைச் சிநேகிக்கிறவன், அதை இழந்து போவான். அவருடைய பார்வையில் மிகவும் பிரியமாகவும், அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் இருப்பவைகளை, நம்முடைய சரீரங்களில், உக்கிராணக்காரர்களாக நாம் நிறைவேற்றுவதற்குரிய நமக்கான பொறுப்பைப் பற்றியே நம்முடைய எண்ணங்கள் காணப்பட வேண்டும். ஒருவேளை இந்தக் கருத்துக்களில் எதுவும், நம்முடைய சூழ்நிலைக்குப் பொருந்தவில்லையெனில், நாம் ஆராய்வதற்கு இன்னும் இரண்டு காரியங்கள் காணப்படுகின்றது:-

(1) நம்முடைய வியாதி, ஒருவேளை, கர்த்தருக்குப் பிரியமற்ற நடத்தைக்கான சிட்சையா? நம்முடைய வியாதி, அடிகள் போன்று இருக்கின்றதா? ஒருவேளை நம்முடைய மனங்களில்,

நம்முடைய இருதயத்தின் வாசலில் பாவம் கிடப்பதை, அதாவது ஜீவியத்தின் தவறான நடத்தையை நாம் கண்டுபிடிப்போமானால், நமக்கு வந்திருக்கும் அனுபவத்தைப் சிட்சை என ஏற்றுக்கொண்டு, அதில் நன்மையை அடைய நாடுவதே சரியானக் காரியமாக இருக்கும்.

(2) ஆனால் ஒருவேளை இவைகளில் எதுவும் நம்முடைய நிலைமைக்குப் பொருந்தவில்லையெனில், இப்பாடத்தில் இடம்பெறும் நபரின் நிலைமை போன்று, நமக்கு வந்துள்ள துன்பமும், நம்முடைய நன்மைக்கு என்றும், சில விலையேறப் பெற்ற ஆவிக்குரிய படிப்பினைகளை நாம் கற்று, செயல்படுத்துவதில் நமக்கு உதவுவதற்கு என்றும், இல்லையேல் இப்பாடத்தில் நமது கர்த்தர் குறிப்பிட்டிருக்கின்றது போல, தேவனுடைய கிரியைகள் வெளிப்படுத்துவதற்கு என்றும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கென்று நாம் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக அல்லது மற்றவர்களுக்கு நல்ல படிப்பினைகளைச் சுட்டிக்காண்பிப்பதன் மூலமாக, அவருக்குச் சொந்தமான நம்முடைய ஆவிகளிலும் (மனங்களிலும்), நம்முடைய சரீரங்களிலும் தேவனை மகிமைப்படுத்துவது நமக்கான பாக்கியமாகும். இப்படியாகவே குருடான மனுஷனுடைய அனுபவமும் காணப்பட்டது; குருடான மனுஷனுடைய சந்தர்ப்பமானது அவனுக்கு ஆசீர்வாதமாகவும், கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்களுக்கும், மற்றவர்களுக்கும் கர்த்தர் இயேசுவையும், அவருடைய வல்லமையையும் வெளிப்படுத்துகிறதாகவும், பரீட்சையாகவும், அந்நாள் முதல் தற்காலம் வரையிலுமான கர்த்தருடைய ஜனங்களுக்கு விலையேறப்பெற்ற அறிவுரையாகவும் அமைந்தது.

## ''தேவனுடைய கிரியைகள்''

தேவனுடைய கிரியைகள் என்பது, ஆயிரக்கணக்கிலான வியாதியஸ்தர்கள் மற்றும் குருடர்களில் ஒருவரைச் சொஸ்தப்படுத்துவதாக மாத்திரம் இல்லாமல், மாறாக இயேசுவை உலகத்தின் ஒளியாக வெளிப்படுத்துவதும், இதனால் யூத ஜனங்களுக்கு ஏற்படும் தாக்கமும், பரிட்சையுமே தேவனுடைய கிரியையாக இருக்கின்றது; அதாவது அவர்கள் மத்தியில் சில உத்தம இஸ்ரயேலர்கள், மணவாட்டி வகுப்பாரில் அங்கத்துவத்திற்குச் சேர்க்கப்பட்டனர் மற்றும் அந்தத் தேசத்தின் திரளானவர்கள் பரலோக இராஜ்யத்தில் பங்கடைவதற்கு அபாத்திரர்கள் எனப் புறக்கணிக்கப்பட்டனர். இந்தக் கிரியையை/வேலையை நமது கர்த்தர், "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" என்று கூறி இந்தக் குருடனான மனுஷனைச் சொஸ்தப்படுத்தினதில் செய்யத் தொடங்கினார் (யோவான் 9:4). (கிரியை புரிவதற்கான பகற்காலமாகிய) நமது கர்த்தருடைய நாட்களானது, சீக்கிரமாய் நிறைவை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த அற்புதமும், மற்றவைகளும், அதில் விசேஷமாக லாசருவை எழுப்பினதும், ஜனங்களுடைய கண்களின் கவனத்திற்கு அவரை வெகுவாய் ஈர்த்தது; இதினிமித்தம் ஜனங்கள் மத்தியில் பிரிவினையும் ஏற்பட்டது, சிலர் அவரை ஏற்றுக்கொண்டவர்களாகவும், சிலர் அவரை புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்டனர் மற்றும் இந்தப் பிரிவு முழுத் தேசத்திலும் தொடர்வது அவசியமாய் இருந்தது. அது ஒரு பரீட்சையாக இருந்தது மற்றும் அது, இஸ்ரயேலர்களுக்கு முன்பாக, பிலாத்துவுக்கு முன்பாக, கல்வாரியில், உலகத்தின் ஒளியாகிய இயேசு, ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் முற்றிலுமாய் அணைந்துப்போகக் கூடிய இரவு வேளையின் உச்ச நிலையை அடைய வேண்டும். இப்படியாகவே கர்த்தருடைய பின்னடியார்கள் ஒவ்வொருவரின் விஷயத்திலுங்கூட அனைவருடைய நேரமும், தாலந்தும், வைராக்கியமும் கர்த்தருக்குத் துதிச் சேர்க்கும் வண்ணமான பலன்களை கொணர்வதற்கான வாய்ப்புகளுள்ள பகற்காலம் உள்ளது; மற்றும் இந்தப் பகற்காலத்தில் கொடுக்கப்படும் வாய்ப்புகள் முழுமையாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவனுக்கும், அவன் மரணத்திற்குள் கடந்துச் செல்கையில், அவனிடமிருந்து வாய்ப்புகள் கடந்துப் போகக்கூடிய இராக்காலம் வரும்.

இதற்கு இசைவாகவே "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:10) என்று காணப்படுகின்றன. ஒட்டு மொத்த சபையும் பல்வேறு அனுபவங்களைக் கொண்டிருக்கின்றது என்பதும் மறந்துவிடப்படக்கூடாது. பெந்தெகொஸ்தேயில் ஆரம்பித்த ஆதி சபையின் மீது, குறைவில்லாமல் வெளிச்சம் காணப்பட்டது; எனினும் அப்பொழுது காலை வேளையாய் இராமல், சாயங்கால வேளையாய் இருந்தது. அஸ்தமனமாகும் சூரியனிடமிருந்த ஒளியே அவர்கள் மீது வீசியது; படிப்படியாக இருள் வந்தது, மற்றும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நீண்டகால பகுதியில், கடினமான இருள் நிலவினது; மற்றும் இதில் கர்த்தருடைய ஜனங்களால், "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று

எழுதியிருக்கிறபடி, ஒரு குறிப்பிட்ட காலம்வரையிலும், நடைப்பாதையில் கொஞ்சத்தையே பார்க்க முடிந்தது (சங்கீதம் 119:105). அந்தக் காலபகுதி "இருண்ட யுகம்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது, மற்றும் இப்பொழுது நாம் காலையின் விடியலை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் மற்றும் பாதையும் அதிகமதிகமாய்ப் பிரகாசம் அடைந்து வருகின்றது.

இப்பொழுது அதிகமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதான வெளிச்சமானது, கிட்டதட்ட, ஆதிகால திருச்சபையின் மீது பிரகாசித்த வெளிச்சத்தைப் போன்றே காணப்படுகின்றது; மேலும் இரண்டு காலங்களிலும் மனுஷ குமாரனுடைய பிரசன்னத்தின் (parousia) ஒளிதான் காணப்பட்டது. ஆனால் விடியற்காலையின் இந்த வெளிச்சத்திலும் கூட, நாம் இன்னொரு ஆழ்ந்த இருளின் காலத்தை எதிர்ப்பார்த்து இருக்கின்றோம்; இந்த இராக்காலம் என்பது, தீர்க்கத்தரிசியினால், "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கின்றபடி, வானங்களில் இருள் பரவுகின்ற விதத்திலும், காலை வேளையின் கடுமையான புயல் என்ற விதத்திலும் உள்புகுவதாகக் காணப்படும் (ஏசாயா 21:12). காலைவேளை இப்பொழுது காணப்படுகின்றது, எனினும் இது ஆயிரவருட அரசாட்சிக்குரிய முழுமையான பிரகாசத்துடன் வருவதற்கு முன்னதாக, உபத்திரவக் காலத்தின் மாபெரும் புயல், அதாவது, "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்து காலம்" வரும் (தானியேல் 12:1). ஆகவே தனிப்பட்ட விதத்திலும், கிறிஸ்துவின் சரீரமென ஒட்டுமொத்தமாகவும் நாம் நமக்கே சொல்ல வேண்டியது என்னவெனில், "நாம், நம்மை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்;" அதாவது பகற்காலமாய் இருக்கும்பொழுதே, நம்மீது சூரியனுடைய ஒளி வீசும்பொழுதே, நம்மிடம் பணியை ஒப்படைத்தவருடைய கிரியைகளை நாம் செய்ய வேண்டும், ஏனெனில் எந்த மனுஷனும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் வருகின்றது, அப்பொழுது அவருடைய நோக்கத்திற்கும், சகோதர சகோதரிகளுக்கும், சத்தியத்தை பொது ஜனங்கள் மத்தியில் பரப்புவதற்குரிய ஊழியங்களுக்கான நம்முடைய வாய்ப்புகள், நிலவிக்கொண்டிருக்கும் சக்திகளினால்/அதிகாரங்களினால் வலுக்கட்டாயமாக நெருக்கப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

## "உலகத்தின் ஒளி"

"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 9:5) என்று நமது கர்த்தர் கூறினார். இவ்வார்த்தைகளைக் கூறினதிலிருந்து இன்னும் ஓர் ஆறு மாத காலங்கள், அதாவது நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவது வரையிலும் தீமையைக் கண்டிக்கத்தக்கதாகவும், நல்லவற்றை ஊக்குவிக்கத்தக்கதாகவும், உலகத்தின் மீது இந்த ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது; ஆனால் அவர் போன பின்னர், ஒளி மற்றும் தம்முடைய ஆவியின் செல்வாக்கினை/ஆதிக்கத்தை ஏற்கவல்ல கூடிய சிலரை விட்டுச் சென்றார்; இவர்கள் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தினால் பிரகாசிக்கப்பட்டனர். இவர்களைக் குறித்துக் கர்த்தர், "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும், "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றும் கூறினார் (மத்தேயு 5:14, 16). ஆகவேதான் அப்போஸ்தலனும், "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என்று குறிப்பிடுகின்றார்; அதாவது இருளில் பிரகாசிக்கும் வெளிச்சங்களாக நாம் இவ்வுலகத்தில் காணப்படுகின்றோம்; அதேசமயம் திரளான ஜனங்களினாலும், தேவனுடைய ஜனங்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக்கொள்கின்றவர்களினாலும், அதாவது பரிசுத்த ஆவியினுடைய பிரகாசிப்பித்தலை அடையத்தக்கதாக, வெளிச்சத்தைத் தங்களுக்குள் அனுமதிக்க இருதயத்தில் விருப்பமற்று தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக் குறித்து அறிக்கை செய்து கொள்பவர்களினாலும் நாம் உணர்ந்துக்கொள்ளப்படாதவர்களாக, புரிந்துக்கொள்ளப்படாதவர்களாக, ஏற்றுக்கொள்ளப் படாதவர்களாக, மறுக்கப்படுபவர்களாக, தாக்கித் துரத்தப்படுபவர்களாக, இவ்வுலகத்தில் காணப்படுகின்றோம் (1 யோவான் 4:17). நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்து, நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கப் பண்ணத்தக்கதாக, நாம் அந்தப் பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பிக்கப்படுதலுக்கும், இப்படியான வெளிச்சமானது, வீசி விழும் நபர்களில் ஒருவராக நாம் இருப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். நமது கர்த்தர் அநேகர் மீது தம்முடைய ஒளியைப் பிரகாசிக்கச் செய்தார், இப்படியே நாமும் நம்முடைய வெளிச்சத்தை அநேகர் மீது பிரகாசிக்கப் பண்ணுவதற்குரிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம். எனினும் ஒருவன் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லையெனில், அவனுக்குள் வெளிச்சமிராது (எபிரெயர் 10:32).

## "குருடனுடைய கண்களில் சேறு பூசப்படுதல்''

இந்தச் சிறு சம்பாஷணையானது, அநேகமாக குருடான மனுஷன் கேட்கத்தக்க தொலைவில்தான் நடந்து கொண்டிருந்தது; இன்னுமாக இச்சம்பாஷணையானது, அந்தக் குருடான மனுஷனுக்கு மாத்திரமல்லாமல், சீஷர்களுக்கும், கர்த்தருடைய வார்த்தைகள் மூலமாக அவரை விசுவாசித்த அனைவருக்கும் கூட கொடுக்கப்பட்டது. பின்னர் நமது கர்த்தர் மண்ணில் உமிழ்ந்து, புழுதி மற்றும் உமிழ் நீரினால் ஒரு களிம்பை/சேற்றை உண்டாக்கி, அதை வைத்து குருடான மனுஷனுடைய கண்களில் பூசினார். இவையனைத்தும் அந்தக் குருடான மனிதனுடைய சார்பிலிருந்து கொஞ்சம் ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. சீலோவாம் குளத்தின் தண்ணீரிலே போய்க் கழுவும்படியான நமது கர்த்தருடைய கட்டளைக்குக் குருடான மனுஷன் புறப்பட்டுப்போனது என்பதில், அம்மனுஷனுடைய சம்மதமும் தெரிகின்றது. விசுவாசமானது, முதலாவதாகக் கிரியைகளினால் பின்தொடரப்படுகின்றது, மேலும் இது ஓரளவுக்கு வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. ஒருவேளை அம்மனுஷன் நம்பிக்கைக்கொண்டிருக்கவில்லையெனில், அம்மனுஷன் தன் கண்களில் சேறு பூசுவதற்கும் அனுமதித்திருக்கமாட்டான், இன்னமும் பிச்சைக்கேட்டுக்கொண்டிருந்த அவனுடைய இடத்தையும் விட்டுவிட்டு, கழுவும்படிக்கு எழுந்து போயிருந்திருக்கமாட்டான். நமது கர்த்தர் உண்டுபண்ணி பயன்படுத்தின சேற்றின் விஷயத்தில், சேற்றிலும், தண்ணீரிலும் எவ்விதமான குறிப்பிட்ட நன்மையும் இல்லை என்று நாம் கூறுகின்றோம்; மேலும் இப்படியாக இல்லை என்பது, முழுச் சம்பவத்தைப் பார்க்கும்பொழுது அடையாளம் கண்டுகொள்ளப்படலாம்; மாறாக அந்தச் சேறானது குருடான மனுஷனுடைய விசுவாசத்திற்கு உதவுவதாக மாத்திரமே இருந்ததே ஒழிய, மாறாக அம்மனுஷனுடைய மனதில் குணமாக்குதலை ஏற்படுத்தவில்லை; பரிசேயர்கள் போன்று, அம்மனுஷனும் அதை அற்புதம் என்றே எடுத்துக்கொண்டான். இம்மனுஷன் பிறவியிலேயே குருடாய் இருந்த காரியமே, இந்த அற்புதத்திற்கு அதிக முக்கியத்துவத்தைச் சேர்த்தது, இன்னுமாக அம்மனுஷன் கூறின பிரகாரமாக, பிறவிக்குருடனாய்ப் பிறந்த எவனுடைய கண்களும் திறக்கப்பட்டதாக, அதுவரையிலும் எவரும் கேட்டதில்லை. உண்மையில், அறிவியல் துறையில் உள்ள இவ்வளவு முன்னேற்றத்திற்குப் பிற்பாடும் கூட, பிறவியிலேயே குருடாய்ப் பிறந்தவர்களுக்கு எதுவும் சரிச் செய்திட முடியாது என்றும், கண் படலம் (cataract) நோய்க்கு மாத்திரமே விடுதலை இருக்கின்றது என்றும், இன்றுள்ள கண் மருத்துவர்கள் நமக்குத் தெரிவிக்கின்றனர். அதுவும் கண்படலம் விஷயத்திலும் சிகிச்சையும் பகுதியாகவே இருக்கின்றது, அதுவும் அறுவை சிகிச்சை மூலமாக லென்ஸ் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக செயற்கை லென்ஸ் வைக்கப்படுகின்றது.

அம்மனுஷனுடைய வீடு காணப்பட்ட இடத்திலுள்ள அனைவர் மத்தியிலும், இந்த அற்புதம் பற்றின பேச்சே போய்க்கொண்டிருந்திருக்க வேண்டும்; அயலார்களும், நண்பர்களும் அம்மனுஷனுக்கு வாழ்த்துதல் தெரிவித்தார்கள்; ஆனால் சிலரால், இம்மனுஷன்தான் குருடாய் இருந்த மனுஷன் என்பதை நம்ப முடியாமலும், பிறவியிலேயே குருடாய்ப் பிறந்த ஒருவர் பார்வையடைதல் என்பதை நம்ப முடியாமலும் காணப்பட்டனர். இது இயேசுவுக்கு நல்லதொரு விளம்பரமானது; ஏனெனில், எப்படிப் பார்வையடைந்தான் என்று அம்மனுஷனிடத்தில் கேட்கப்பட்ட போது, இயேசு என்னும் பெயர்க்கொண்ட ஒரு மனுஷன் இந்த அற்புதத்தைச் செய்தார் என்று தெரிவித்தார். நமது கர்த்தர் மீது ஏற்கெனவே பொறாமைக்கொண்டிருந்து, அவரைக் கொன்றுப் போடுவதற்கு வகை தேடின பரிசேயர்கள், ஒருவேளை எவரேனும் இயேசுவை மேசியா என்று கூறும் பட்சத்தில், அவர்களைத் தேவாலயங்களிலிருந்தும், அதன் சிலாக்கியங்களிலிருந்தும், அதாவது உண்மை யூதனுக்குரிய கனம், சுயாதீனம் மற்றும் சிலாக்கியங்களிலிருந்தும், பாத்திரமற்றவன் என ஒதுக்கி வைக்க வேண்டும் என்று முடிவு பண்ணியிருந்தனர். அற்புதம் பற்றின சங்கதி பரவி விடும் என்ற பயத்தினால், விஷயத்தை மடக்கி, ஒன்றுமில்லாமல் ஆக்கிப்போடுவதற்கென, அவர்கள் (பரிசேயர்கள்) விசாரணை நடத்தினார்கள். பரிசேயர்கள் குருடான மனுஷனுடைய தகப்பனிடத்திற்கும், தாயினிடத்திற்கும் சென்றபோது, பெற்றோர்கள் சுருக்கமாக உண்மையைத் தெரிவித்துவிட்டு, விலகிவிட்டனர்; அதாவது அம்மனுஷன் தங்களுடைய குமாரன்தான் என்றும், அம்மனுஷன் பிறவியிலேயே குருடாய்ப் பிறந்தான் என்றும், இப்பொழுது பார்வையடைந்துள்ளான் என்றும், தாங்கள் நடந்ததைப் பார்க்காத காரணத்தினால் எப்படிப் பார்வை வந்தது பற்றித் தங்களுக்கு எதுவும் சொல்ல இயலாது என்றும், அம்மனுஷன் வயதுள்ளவனாய் இருக்கிறபடியால் அம்மனுஷனே தனக்காகப் பேசிக்கொள்ள முடியும் என்றும் பெற்றோர்கள் கூறி விலகிவிட்டனர். மீண்டுமாக, குருடாய் முன்பு காணப்பட்டிருந்த அந்த மனுஷனிடத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன; எப்படி? எப்பொழுது? எங்கே? என்று அம்மனுஷன் பொய்ச் சொன்னதாக அவரை மடக்கி, சிக்க வைப்பதற்கெனக் கேள்விகள் கேட்கப்பட்டன. இருதயத்தில் உண்மைக்கொண்டிருந்த அம்மனுஷனோ, பரிசுத்தமானவர்களெனத் தங்களைக் குறித்துக் கூறிக்கொள்ளும்

பரிசேயர்களாகிய இந்த மனிதர்கள், இயேசுவை எதிர்ப்பவர்கள் என்றும், நடந்த அற்புதத்தை மறுப்பதற்கு அல்லது இழிவாய்ப் பேசுவதற்கென அனைத்து விதத்திலும் முயற்சி எடுக்கின்றவர்கள் என்றும் உணர்ந்துக்கொண்டார்.

சொஸ்தப்பட்ட மனுஷனை நோக்கிப் பரிசேயர்கள் பின்வரும் விதத்தில் பேசினார்கள், . . . "உனக்குத் தவறான வழியின் மூலமாகப் பார்வைக் கிடைத்திருந்தாலும், உனக்குப் பார்வைக் கிடைத்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்; ஏனெனில் உன்னைச் சொஸ்தப்படுத்தின மனுஷனாகிய இயேசு ஒரு பாவி என்பதையும், மாய்மாலக்காரன் என்பதையும், மேசியா எனத் தன்னை அறிக்கைப் பண்ணும் மோசடியாளர் என்பதையும் நாங்கள் அறிவோம்; இயேசு ஒரு மோசமான மனுஷன்." இவைகளை முன்பு குருடாய் இருந்து, இப்பொழுது சுகமடைந்துள்ள அம்மனுஷனால் சகிக்க முடியாமல் இருந்தது; தன்னுடைய அருமை நண்பன் (இயேசுவினுடைய) குணலட்சணங்கள் திரித்துக் கூறப்படுவதை, எதிர்த்துப் பேசாமல் அம்மனுஷனால் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை; ஆகவே பின்வருமாறு கூறினார் . . . "இதுவரையிலும் நிகழ்ந்ததாக, கேட்டிராத இப்படிப்பட்டதொரு அற்புதம் நிகழ்த்தப்பட்டிருப்பது வியக்கத்தக்கதாக இருக்கின்றது; இன்னமும் தேவனால் தொடர்பு வைக்கப்படாத ஒரு பாவியினால் இந்த அற்புதம் செய்யப்பட்டிருப்பது, வழக்கத்திற்கு மாறாக இருக்கின்றது; உண்மையில் வியக்கத்தக்கதாகவே இருக்கின்றது. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக்கூட கேட்பதில்லை என்ற போதனை யூதர்களாகிய நம் மத்தியில் காணப்படுகின்றதே; அப்படியானால் (உங்களால்) பாவியென்று சொல்லப்படும் இந்த மனுஷனால் (இயேசுவினால்) எப்படி, இப்படியொரு வியக்கத்தக்க அற்புதத்தைச் செய்ய முடியும்?" பின்னர் மீண்டுமாக, எப்படி, எங்கு, எப்பொழுது எனப் பரிசேயர்கள் அம்மனுஷனிடத்தில் குறுக்குக் கேள்விகள் எழுப்பினார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தின் உண்மையற்ற தன்மையை அம்மனுஷன் உணர்ந்தவராக, "ஏன் மீண்டும் மீண்டுமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? நான் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இல்லையா? நீங்கள் அவருடைய சீஷர்களாக ஆக ஆவல் கொண்டிருப்பதினாலா, என்னை இன்னும் விவரித்துக்கூற சொல்கின்றீர்கள், இல்லையேல் உங்கள் நோக்கம்தான் என்ன?" என்று கேட்டார். தங்களுடைய மாய்மாலமான திட்டங்கள் வெளியாகிவிட்டன என்று உணர்ந்தவர்களாக, "நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்" என்றும், மோசேயுடனே தேவன் பேசினார் என்றும் அறிவோம், இவரைக் குறித்து யார் அறிந்துள்ளார்கள்? இவர் நாசரேத்திலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றார்; இவருடைய பெற்றோர்கள் அரண்மனையிலுள்ளவர்களுமல்ல மற்றும் நம்முடைய நாட்டை ரோமர்களின் கரங்களிலிருந்து விடுவிப்பதற்குரிய வல்லமையையும், மகா மகிமையையும், திறமையும் கொண்டவராக நாம் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கும் மேசியா போன்றவர் இவரல்ல. நீ வேண்டுமானால் இவரைப் பின்பற்று; உன்னோடும், இயேசுவோடும் எங்களுக்கு சம்பந்தம் இல்லை; மீண்டுமாக இனி எங்களுடைய தேவாலயத்திற்கு நீ வராதே, உன்னுடைய சொந்த தேசத்திலுள்ள பக்தியுள்ள ஜனங்களிடமிருந்து நீ விலக்கப்படுவதைக் கொஞ்சம் யோசித்துக்கொள்" என்றும் அம்மனுஷனை வைதார்கள்.

இம்மனுஷன் புறம்பாக்கப்பட்டான் என்பதை இயேசு கேள்விப்பட்டு, அம்மனுஷனைக் கண்டு, "தேவனுடைய குமாரனை நீ விசுவாசிக்கிறாயா?" என்று கேட்டார். கர்த்தரைக் குறித்து அதிகம் அறிந்துக்கொள்வதற்கான அம்மனுஷனுடைய வாஞ்சைக்குப் பதிலளிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் தம்மை மேசியா என்று அம்மனுஷனுக்கு வெளிப்படுத்தினார். அம்மனுஷன் கர்த்தரைத் தொழுதுகொண்டான். இம்மனுஷன் மீதும், இவனுடைய நலனுக்கடுத்த விஷயங்கள் மீதும், விவேகமான பராமரிப்பைக் கர்த்தர் செயல்படுத்துவதைக் கவனியுங்கள். அம்மனுஷன் தேவலாயத்திலிருந்து தள்ளப்படுவதிலிருந்து, கர்த்தர் இவனைக் காக்கவில்லை, ஆனால் அந்தத் தள்ளப்படுதலை, அம்மனுஷனுக்கு அனைத்து விஷயத்திலும் நன்மைக்கு ஏதுவான போதனை அருளப்படுவதற்குரிய விசேஷித்த ஆசீர்வாதமாக மாற்றிப்போட்டார்.

இந்தச் சம்பவத்தில் நமக்கு மேன்மையான படிப்பினைகள் காணப்படுகின்றது. நம்மில் சிலர் குருடர்களாகவே பிறந்திருக்கின்றோம், அதாவது கர்த்தருக்கும், அவருடைய உண்மையான குணலட்சணத்திற்கும், தெய்வீக வார்த்தையினுடைய சத்தியத்திற்கும் குருடர்களாகவே பிறந்திருக்கிறோம். இந்த நம்முடைய குருட்டுத்தன்மையானது, நம்முடைய சொந்த தவறினாலும் அல்ல, நம்முடைய பெற்றோர்களுடைய தவறினாலும் அல்ல; நம்முடைய பெற்றோர்களும், நாமும் கர்த்தரிடத்தில் உத்தம இருதயத்துடனே காணப்பட்டிருந்தோம். ஆனால் இந்த நம்முடைய குருட்டுத்தன்மையானது, பாவங்களுக்கான சிட்சைகள் அல்ல. கிறிஸ்தவ மண்டலத்தில் பரவிக் கிடக்கும் இருளும், குருட்டுத்தன்மையும், நம்மையும், மற்றவர்களையும் சிக்க வைத்திருந்தது, ஆனால் கர்த்தர் நம்மீது இரக்கங்கொண்டு, நம் பக்கமாகக் கடந்துவந்து, நமக்காக கலிக்கத்தையும்,

களிம்பையும் உண்டு பண்ணினார். மனித பிரதிநிதியாகிய மண்ணை எடுத்து, அதில் தம்முடைய உதடுகளின் கனியாகிய தம்முடைய வார்த்தைகளைச் சேர்த்து, அதை புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கான களிம்பாக நமக்குக்கொடுத்து, சத்தியம் மற்றும் கிருபை எனும் தம்முடைய வார்த்தையாகிய சீலோவாம் குளத்தின் தண்ணீரில் நாம் கழுவிக்கொள்ளும்படிக்கு நமக்குக் கட்டளையிட்டார். அவர் சொன்னதை நாம் பின்பற்றினோம், இப்பொழுது நாம் காண்கின்றோம். நமக்கு முன்பு ஒரு புதிய உலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது; "வேதாகமத்தின் ஆச்சரியமானக் காரியங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்!" நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர்களும், வேதபாரகர்களும், நமக்கு வந்துள்ள ஆசீர்வாதத்தைக் குறித்து வியக்கின்றனர், விமர்சிக்கின்றனர், காரணம் காட்டுவதற்கும்/பதில் சொல்லுவதற்கும் முயற்சிக்கின்றனர்; இன்னுமாக நம்முடைய ஆசீர்வாதம் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தரால் பயன்படுத்தப்படும் அனைத்துப் பிரதிநிதிகளிலும்/கருவிகளிலும் குற்றம் கண்டுபிடிப்பார்கள், காரணம் தேவனுடைய கிருபையின் வெளிச்சத்தைப் புரிந்துக்கொள்வதற்குரிய சரியான நிலையில் அவர்களுடைய இருதயம் இல்லை என்பதேயாகும்.

சத்தியத்தை ஒப்புக்கொள்வதிலும், வெளிச்சத்தை ஒப்புக்கொள்வதிலும், நாம் நம்முடைய இருதயங்களைக் கர்த்தருக்குக் கொடுப்பதிலும், நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களிடத்தில் கர்த்தர் பண்ணிட்ட அற்புதத்தை ஒப்புக்கொள்வதிலும், நாம் இப்பொழுது அந்தக் குருடான மனுஷன்போல் செயல்படுகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும். இன்னுமாக இப்படியெல்லாம் செய்வது என்பது, நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர் மற்றும் வேதபாரகரரின் வன்மத்தையும், கோபத்தையும், எரிச்சலையும், நமக்கு எதிராக கொண்டுவரும் என்பதையும் நாம் பார்க்கிறவர்களாய் இருப்போம். இது நம்மை இன்றைய வேதபாரகர் மற்றும் பரிசேயரின் கூட்டத்திலிருந்து பிரித்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களிலிருந்து நம்மை விலக்கி வைக்கத்தக்கதாக வழிநடத்துகின்றதாய் இருக்கும் என்பதையும் நாம் பார்க்கின்றவர்களாய் இருப்போம். இதைத் தீர்க்கத்தரிசி மூலம் கர்த்தர் முன்னுரைத்துள்ளார், அதாவது, "என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகின்ற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே (நாங்கள் கர்த்தரை மகிமைப்படுத்தத்தக்கதாக, கர்த்தருடைய நோக்கத்திற்கு நன்மையாக விளங்கும்படிக்கு நாங்கள் இந்த அப்புறப்படுத்தல்களைப் பண்ணுகின்றோம்); அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 66:5). கர்த்தருடைய ஜனங்களில் எத்தனை பேர், தாங்கள் சத்தியத்தை ஒப்புக்கொண்ட பிற்பாடு, சத்தியத்திற்காக நின்ற பிற்பாடு, மற்றும் சத்தியத்தினிமித்தம் சில துன்பங்களை அனுபவித்தப் பிற்பாடுதான், தங்களுக்கான ஆசீர்வாதத்தின் பெரும்பான்மையான பகுதி தங்களுக்கு வந்ததைக் கண்டிருக்கின்றனர்! இப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் கண்டுப்பிடிக்கின்றார், இவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதையும், இவர்களைப் பற்றின அனைத்தையும், எப்பொழுதும் அறிந்திருக்கிறார்; பின்னர் இவர்கள் தம்மைப்பற்றி அறிந்துக்கொள்வதற்கு என்றும், இவர்கள் தம்முடன் ஐக்கியம்கொள்வதற்கு என்றும், இந்தக் குருடான மனுஷனின் விஷயம் போலவே இவர்களும் தம்மிடத்திலிருந்து ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு என்றும், தம்மைப் பற்றி இவர்களுக்கு விசேஷித்தவிதமாய் வெளிப்படுத்துகின்றார்.

## "நாங்களும் குருடரோ?"

நம்முடைய பாடத்திற்கு ஆதாரமான வேதபகுதியின் அதிகாரத்திலுள்ள கடைசி இரண்டு வசனங்கள், பரிசேயர்களுடைய வேதசாஸ்திரங்கள் தொடர்பான பெருமையை நம்முடைய கவனத்திற்குக்கொண்டு வருகின்றது. இவர்கள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில், ஆவியில் பெருமையுள்ளவர்களாகிய இவர்களுடைய வாரிசுக்குச் சரியான அடையாளமாய் இருக்கின்றனர். நமது கர்த்தர் தாம் உலகத்திற்கு வந்தது என்பது, குருடரான சிலர் பார்வையடையத்தக்கதாகவும், பார்வைகொண்டிருந்தவர்களில் சிலர் குருடாய்ப் போகத்தக்கதாகவும் பரீட்சையாக (அ) நியாயத்தீர்ப்பாக அமையும் என்று தெரிவித்தார். அதாவது, சத்தியம் அநேகரைப் பரீட்சிக்கின்றதாய் காணப்படும், சிலர் இருளிலிருந்தும், அறியாமையிலிருந்தும், குருட்டுத் தன்மையிலிருந்தும், மூட நம்பிக்கையிலிருந்தும், வெளியே வந்து, தேவனுடைய பிரம்மாண்டமான ஆசீர்வாதங்களை உணர்ந்துக்கொள்கின்றவர்களாய் ஆவார்கள், மற்றும் முன்பு அதிக அளவிலான கிருபைகளைப் பெற்றிருந்த மற்றவர்களோ, குருடான நிலைக்குள் போய்விடுபவர்களாக ஆகிவிடுவார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள், பெந்தெகொஸ்தே நாளில் பிரகாசிப்பித்தலை அடைவார்கள்; மீதமானவர்கள் குருடர்களாகி, இந்தச் சுவிசேஷ யுகத்தின் நிறைவு காலம் வரையிலும் குருடர்களாகவே காணப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இப்படிக் குருடர்கள் பார்வையடைவார்கள் என்றும், பார்வையுள்ளவர்கள் குருடர்கள் ஆவார்கள் என்றும் கர்த்தர் குறிப்பிடுவதைக் கேட்ட பரிசேயர்கள், கர்த்தரை நோக்கி, "எங்களை எந்தப் பட்டியலின் கீழ் வைக்கின்றாய்? குருடர்களின் பட்டியலில் இல்லை என நாங்கள் எதிர்ப்பார்க்கலாமா?" என்று கேட்டார்கள். இதற்குப் பிரதியுத்தரமாக, இயேசு அவர்களை நோக்கி, "முழுமையான அறியாமையின் காரணமாக, ஒருவேளை இவர்களுடைய பாதைகள் நடத்தப்பட்டதினிமித்தம் இவர்கள் குருடர்களாய் இருந்திருப்பார்களானால், இவர்களுக்கு நலமாயிருந்திருக்கும், ஆனால் இவர்களது சூழ்நிலையே வேறு. இவர்களுக்குப் போதுமானளவு பிரகாசிப்பித்தல்/வெளிச்சம் இருந்துள்ளபடியால், இதற்கேற்ப இவர்களுக்குப் பொறுப்பும் உள்ளது; ஆனால் பெருமையும், சுய திருப்தியும் இவர்களிடத்தில் மேலோங்கியிருப்பதினாலும், கர்த்தருடைய உண்மையான செய்தியை இவர்கள் புறக்கணிப்பதினாலும், இவர்கள் வெளிச்சத்திற்கும், சத்தியத்திற்கும் எதிராக தங்களையே கடினப்படுத்திக்கொள்பவர்களாகவும், இருந்து, தங்களுடைய பாவம், தங்களைக்கட்டிப் போடுவதற்கும், ஏற்றகாலத்தில் வந்த வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு இவர்களை ஆக்கத்தக்கதாகவும், இவர்களை விலங்கிடுவதற்கும் அனுமதித்துவிட்டனர்; இவர்கள் வந்த ஒளியையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதே நிலையில் இன்று எத்தனை பேர்கள் காணப்படுகின்றனர்; முன்னிலை வகிக்கும் கிறிஸ்தவ ஜனங்கள் தாங்கள் பிரகாசிக்கப்பட்டுள்ளதாகப் பெருமையடித்துக்கொள்கின்றனர், ஆனால் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தைக் குறித்து அச்சமடைகின்றனர்; மற்றும் ஒன்றில் தங்களுடைய சொந்த அறியாமையைக் குறித்து அல்லது கர்த்தருடைய பிரசன்னத்தின் நாட்களில், இக்காலத்திற்குரிய வெளிச்சத்தைப் பரப்புவதற்கென அவர் பயன்படுத்திக்கொண்டிருக்கும் கருவிகளையும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெளிச்சத்தையும் குறித்து ஒப்புக்கொள்வதற்கு வெட்கப்படுகின்றனர். நமக்கு எவ்விதமான சொந்தமான வெளிச்சமோ, ஞானமோ இல்லை என்பதை உடனடியாக ஒப்புக்கொள்பவர்களாக இருப்போமாக, மற்றும் பரத்திலிருந்து வரும் மெய்யான ஞானத்தை, மெய்யான பிரகாசிப்பித்தலைக் கர்த்தருடைய கரங்களினின்று பெற்றுக்கொள்வோமாக. இப்படியான நிலையில் அனைவரும் வருவார்களானால், சத்தியம் வேகமாகப் பரவி விடும். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கூறியும், உண்மையில் எதையுமே தெரிந்திராதவர்களிடமிருந்தே மாபெரும் எதிர்ப்பு வருகின்றது; இப்படிப்பட்டவர்களுடைய பெருமையும், பெருமையடித்துக்கொள்ளுதலும் இவர்கள் வெளிச்சத்துக்குள் பிரவேசிக்காதபடிக்கு இவர்களை மாத்திரம் தடைப்பண்ணுகிறதாய் இராமல், மற்றவர்கள் வெளிச்சத்தை உணர்ந்துக்கொள்வதை இவர்கள் தடைப்பண்ணுவதற்கும் ஏதுவாக இவர்களை வழிநடத்துகின்றதாயும் இருக்கும்.

**ஆமென்!**

---

# நினைவுகூருதல், ஏப்ரல் 14

செவ்வாய்க்கிழமை, மாலை ஆறு மணிக்குமேல், ஏப்ரல் 14-ஆம் தேதியன்று, இந்த வெளியீட்டினுடைய வாசகர்கள், உலகமெங்கும் கிறிஸ்துவினுடைய பிரித்தெடுக்கப்பட்டவர்களென (Ecclesia), அவரது மரணத்தினை, அவரது பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளங்களாகிய "புளிப்பில்லாத அப்பம்" மற்றும் "திராட்சப்பழரசத்துடன்" (fruit of the vine) நினைவுகூர்ந்திடுவதற்கென்று ஒன்று கூடிடுவார்கள். இந்தப் பிரித்தெடுக்கப்பட்டவர்களில் பெரிய எண்ணிக்கையில் இங்குக் காணப்படுகின்றவர்கள், இங்குள்ள அலிகெனி கார்நிஜீ ஹாலில் (Allegheny Carnegie Hall) கூடிக்கொள்வார்கள்; சிறு எண்ணிக்கையிலான பிரித்தெடுக்கப்பட்டவர்கள் (Ecclesias) பலர் காணப்படுவதினால், பெரும் திரளானவர்கள்/எல்லாரும் எங்கோ (ஓர் இடத்தில்) கூடுகின்றார்கள் என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது; ஏனெனில் ஆண்டவர் கூறியுள்ளதுபோல, "ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." (மத்தேயு 18:20)

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப்படுதலைக் குறித்துப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக் குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள். அடுத்து "இந்தப் பாத்திரத்தில்" நீங்கள் பானம்பண்ணுகையில், அது நம் சார்பிலான நமது கர்த்தருடைய பாடுகளையும், ஒவ்வொரு மனுஷனுக்காகவும் அவர் மரணத்தை ருசிப்பார்த்ததையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை நினைவுகூருங்கள். இன்னுமாக அது "நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதற்கான" நமக்கான பெரிதான அழைப்பையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதையும் நினைவுகூருங்கள். இதுவே "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற அவரது வார்த்தைகளுக்கான அர்த்தமாய் இருக்கின்றது. மேலும் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறதுபோல, அது அவருடைய பாடுகளில் பங்கெடுத்தலை/ஐக்கியங்கொள்ளுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. (1 கொரிந்தியர் 10:16)

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவு கூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைசெய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் — ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றகாலத்தில்" ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக் கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும். (1 கொரிந்தியர் 5:7, 8)

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப் போடப்பட முடியாது என்பதையும், அன்பு அதாவது பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில்கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப்போட்டுவிடும்.

இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப்போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## "உங்கள் எதிராளியான பிசாசு"

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் "கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி", வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப்பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானஅளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம் பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்பு கொண்டிராததாலேயே, ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்பட்டுவருகின்றான்.

"பூமியின் கடையாந்தரங்களிலுள்ள" வாசகர்களின் நன்மைக்காக, முடிந்தமட்டும் சீக்கரமாகவே நமது பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதி வெளியீட்டில், இந்த நினைவுகூருதல் பாடம் குறித்தக் கட்டுரையை (R4127), வெளியிட்டோம். மீண்டுமாக நமது மார்ச் 1-ஆம் தேதி வெளியீட்டில் ஜீவ அப்பம் குறித்தும் (R4146) கட்டுரையை வெளியிட்டோம். அந்த வெளியீடுகளையும், நினைவுகூருதல் தொடர்பாக தொகுதி 6-இல், பக்கம்: 607-இல் இடம் பெறுபவைகளையும் நீங்கள் மீண்டுமாக ஆராய்ந்து பார்த்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

*****

R 4157

# "மேய்ப்பன், வாசல், மந்தைகள்"

## யோவான் 10:1-18

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்." (வசனம் 10:1)

நமது கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களிடம் கொண்டிருக்கும் உறவுமுறையை விவரிக்கும் வண்ணத்தில், வேதவாக்கியங்களானது அநேக மிக அருமையான மற்றும் அர்த்தமுள்ள பெயர்களை அவருக்கு அளிக்கின்றது. இப்படிப்பட்ட மிக அருமையான மற்றும் கவரும் பெயர்களில் ஒன்று நல்ல மேய்ப்பன் ஆகும்; இதைப் பெரிய மேய்ப்பன், தலை மேய்ப்பன் என்றும் வழங்கலாம். இதுபோலவே நமது கர்த்தருடைய பின்னடியார்களுக்குப் பொருந்தும் பல்வேறு பெயர்களில், "ஆடு" என்பது மிகவும் பரிச்சயமானதாகவும், மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கின்றது. இப்படியான ஓர் உதாரணத்தைப் பயன்படுத்துவது என்பது, சுபாவத்தின்படியான மனுஷனுக்குத் தோன்றியிருக்காது. உதாரணத்திற்கு இங்கிலாந்தின் சீமான்களும், பிரபுக்களும் கொண்டுள்ள பல்வேறு முத்திரைகளிலும், மரபுரிமை சின்னம் உடைய மேல் சட்டைகளிலும், மிருகங்கள் (அ) மிருகங்களின் தலைகள் இடம்பெறுகின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றில் ஆட்டின் தலை இடம்பெறுகின்றதா? இப்படியாக இல்லை. அதுவும் ஒருவேளை ஏதோ ஒரு பூமிக்குரிய பிரபுவானவன் ஆட்டின் சின்னத்தை தேர்ந்தெடுத்துக்கொண்டாலும் அது முரட்டுத்தனமான கொம்பைக் கொண்டுள்ள செம்மறியாட்டுக்கடாவாகவே இருக்கும். சிங்கத்தின் தலைகள், புலியின் தலைகள், கழுகின் தலைகள், வலுசர்ப்பம் முதலிய கொடிய மிருகங்களின் தலைகள் பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இது பலமுள்ளவனாகவும், கொடியவனாகவும், மற்றவர்களை அச்சுறுத்தபவனாகவும் காட்சியளிப்பதற்கான மாம்ச சுபவாத்தின்படியான மனுஷனுடைய ஆசையையும், மனதையும் வெளிப்படுத்துகின்றது. தம்மை நல்ல மேய்ப்பன் என்றும், தம்முடைய பின்னடியார்கள் ஆடுகள் என்றும் கூறுபவர் மேற்கூறப்பட்ட விஷயங்களில் சுபாத்தின்படியான மனுஷனிடத்திலிருந்து முற்றிலுமாய் வேறுபட்ட கருத்தைக்கொண்டிருப்பவர் ஆவர்; மேலும் இதை அவருடைய பின்னடியார்களானவர்களாகிய நாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, உணர்ந்துக்கொண்டு, மேய்ப்பனாகிய அவரிடத்தில் நமக்கிருக்கும் உறவில், ஆட்டினுடைய சுபாவத்தை அதிகமதிகமாய் வளர்த்திக்கொள்ள வேண்டும்.

## "ஆட்டுத்தொழுவத்தின் வாசல்"

நம்முடைய பாடத்தின் உவமையானது, இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது; முதலாவதாக இயேசு ஆட்டுத்தொழுவத்தின் வாசலாய் இருக்கின்றார் என்றும், இரண்டாவதாக இயேசு மேய்ப்பனாக இருக்கின்றார் என்றும் காட்டப்படுகின்றது. உவமையில் விவரிக்கப்பட்டுள்ள தொழுவம் என்பது, பின்வரும் விளக்கத்தில்/உவமையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அது கள்வர்களிடமிருந்தும், இரைத்தேடித்திரியும் காட்டு விலங்குகளிடமிருந்தும் பாதுகாப்பான இடமாகவும், இளைப்பாறுவதற்குரிய இடமாகவும் இருக்கின்றது. இந்தத் தொழுவங்களுக்கு ஒரே வாசல் இருந்தது; மேலும் உண்மையான மேய்ப்பனை அறிந்தவராகவும், உண்மையான மேய்ப்பனை மாத்திரம் உள்ளே அனுமதித்து, வேறு எவரையும் உள் அனுமதிக்காதவராகவும் இருக்கும் காவல்காரர் ஒருவர், வாசலைக் காவல் காத்துக்கொண்டிருப்பார். நமது கர்த்தர் தம்மைத் தேவனுடைய மந்தைகளுக்கான உண்மையான மேய்ப்பனாகவும், காவல்காரன் உள்ளே அனுமதிக்கக்கூடிய ஒரே நபராகவும், ஆடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய உரிமை உடையவராகவும், ஆடுகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறவராகவும் கூறுகின்றார். நல்ல மேய்ப்பன் மற்றும் கெட்ட மேய்ப்பனை வித்தியாசம் காண முடிந்த காவல்காரன், நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் குறிக்கின்றார். நியாயப்பிரமாணத்திற்குப் பதில் கொடுக்க முடியாதவர்களுக்கு, நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவர்களுக்கு, மேய்ப்பன் என்றும், மேசியா என்றுமுள்ள உரிமையை உறுதிப்படுத்த/மெய்ப்பிக்க முடியாது. ஆனால் நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை, முற்றும் முழுமையாக நிறைவேற்றினார் . . . "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேதுரு 2:22). அவர் ஏற்கெனவே பரிசுத்தமானவராகவும், கபடில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார். இப்படியாகவே, அவரே உரிமையுள்ள மேய்ப்பன் என்று நமக்கு அடையாளம் காட்டப்படுகின்றார்; மற்றவர்கள் அவருடைய நாமத்தில் வந்து, மேசியா என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொண்டார்கள்; இவர்கள் பொய் மேசியாக்கள் ஆவர்; இவர்கள் ஆடுகளைக் கவருவதற்கு

முயற்சித்தனர்; ஆனால் இவர்கள் வஞ்சகர்கள் என்றும், "கள்ளரும், கொள்ளைக்காரரும்" என்றும், இவர்கள் ஆடுகளைத் திருடுவதற்கே உதவுகின்றனர் என்றும், ஆடுகளின் நன்மைக்காக அல்லாமல், தங்களுடைய தனிப்பட்ட, சுயநலமான இலட்சியங்களினால் தூண்டப்பட்டவர்கள் என்றும், நமது கர்த்தர் கூறுகின்றார்.

ஆண்டவருடைய ஆடுகளுக்கான உண்மையான மேய்ப்பனாகுவதற்கும், ஆடுகளைச் சத்தியம் மற்றும் கிருபை எனும் புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீரண்டைகளிலும் நடத்த வெளியே கொண்டு வருவதற்கும், பின்னர் தொழுவத்திலுள்ள இளைப்பாறுதலுக்குள்ளும், பாதுகாப்பிற்குள்ளும் கொண்டு வந்துவிடுவதற்குமான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரே ஒரு வழி உள்ளது. அந்த வழி, சிலுவையின் வழியாகும் . . . அதாவது அனைவருக்குமான ஈடுபலியாக தம்மையே ஒப்புக்கொடுத்து விடுவதாகும். இதை நமது கர்த்தர் செய்து, இப்படியாக ஆட்டுத்தொழுவத்தினுடைய வாசலாகி, ஜீவனுக்கான புதிய பாதையைத் திறந்து வைத்தார். ஆனால் தொழுவத்திற்குப் புதிய வாசலை உண்டு பண்ணுவதாக இராமல், மாறாக முன்பு பூட்டப்பட்டிருந்த வாசலே திறக்கப்படுகின்றது என்று புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். வாசல் நியாயப்பிரமாணமாய் இருந்தது; நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதது வரையிலும் இந்த வாசல் திறக்கப்பட முடியாது. இப்பொழுதோ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்ட நமது கர்த்தர் இயேசு, தம்முடைய உண்மையான ஆடுகளானது, நியாயப்பிரமாணத்தின் ஆவியைக் கைக்கொள்வதின் மூலமாய், இதே வாசல் வழியாய் உட்பிரவேசிப்பதற்கு ஏற்பாடு பண்ணியுள்ளார்; நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்களைக் கைக்கொள்வது என்பது கூடாத காரியம், ஆனால் அதன் ஆவியைக் கைக்கொள்வதன் மூலமாய் உட்பிரவேசிக்க ஏற்பாடு பண்ணியுள்ளார். தொழுவத்திற்குள் உண்மையான ஆடு பிரவேசிப்பது குறித்து, அப்போஸ்தலர் "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (ரோமர் 8:4) என்று கூறுகின்றார்; ஏனெனில் நமது மேய்ப்பன், நாம் குறைவுப்பட்டிருப்பதை நிறைவுபடுத்தத்தக்கதாக, நம் சார்பிலான அவருடைய கிருபையை, (நமக்கான) தகுதியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். நாம் எதுவரைக்கும் அவருடையவர்களாக காணப்பட்டு, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு முயற்சிக்கின்றோமோ, அவ்வளவாய் நம்முடைய ஒவ்வொரு குறைவும் அவருடைய (திரளான கிருபைகளினால்) திரளானவைகளால் ஈடுகட்டப்படும். அவருக்குக் காவல்காரன் திறப்பான்; அவரைக்குறித்தே நியாயப்பிரமாணங்களும், தீர்க்கத்தரிசனங்களும் சாட்சிப்பகர்கின்றன.

## "அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை"

பிறவிக் குருடனாக இருந்தவனும், ஜெப ஆலயத்திலிருந்து தள்ளப்பட்டவனுமான மனுஷன் கேட்பதற்காகவும், அம்மனுஷனைப் புறம்பாக்கிப் போட்ட பரிசேயர்கள் கேட்பதற்காகவுமே இந்த உவமை உரைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கர்த்தருடைய ஜனங்களின் தொழுவம் என்று எண்ணப்படுவதிலிருந்து, அம்மனுஷன் புறம்பாக்கிப் போடப்பட்டதினிமித்தம், அம்மனுஷன் சோர்வடைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அம்மனுஷன் உண்மையிலேயே கர்த்தருடைய தொழுவத்திலிருந்து புறம்பாக்கித் தள்ளப்படாமல், மாறாக இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் எவ்விதமான வல்லமையையும் கொண்டிராதவர்களால், மனித அமைப்பிலிருந்து மாத்திரமே தள்ளப்பட்டிருக்கின்றான் எனும் உண்மையை விவரிக்கும் வண்ணமாகவே, கர்த்தர் இந்த உவமையைக் கொடுத்தார் என்று கருதப்படுகின்றது. கர்த்தரை வழிநடத்துனராகவும், மேய்ப்பனாகவும் கொண்டிருக்கும் மந்தையையே கர்த்தர் கொண்டிருக்கின்றார் என்பதையும், தம்மூலம் அல்லாமல், தம்முடைய பலியில் தம்மால் நிறைவேற்றப்போகும் வேலையின் மூலம் அல்லாமல், இந்தப் பலியை, விசுவாசத்தின் வாயிலாய் நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம் அல்லாமல், அந்த மந்தைக்குள் வருவதற்கு வேறு வழி இல்லை என்பதையும் அம்மனுஷனும், பரிசேயர்களும், அவருடைய சீஷர்களும், நாமும் காண்பதற்குக் கர்த்தர் விரும்பினார். ஆனால் 6-ஆம் வசனமானது, கேட்டுக்கொண்டிருந்தவர்கள் உவமையின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவிக்கின்றது; ஆகவே கொஞ்சம் வித்தியாசமான வார்த்தைகளில் உவமையைத் திரும்பவும் கூறி, ஒருவன் கர்த்தருடைய மந்தைக்கான அங்கத்தினர் ஆகுவதற்கான தெய்வீகக் கிருபையில் பிரவேசிப்பதற்கான வாசலாக, தாம் காணப்படுவதைக் கூறினார். இப்படியாக ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கப்பட்ட மனுஷன், தான் உண்மையில் எதையும் இழக்கவில்லை, மாறாக இளைப்பாறுதல் கிடைக்கும் உண்மையான தொழுவத்திற்கான சரியான வாசலினிடத்திற்கே வழிநடத்தப்படுகின்றான் என்பதைப் புரிந்துக்கொள்ள ஏதுவாயிற்று. இப்பொழுது அம்மனுஷன்,

கர்த்தர் மாத்திரமே இளைப்பாறுதலுக்கும், இரட்சிப்பிற்கும், தெய்வீக அறிவுரையின் ஆவிக்குரிய புத்துணர்வுக்கும் வழியாக இருக்கின்றார் என்பதைக் காண்பதற்கு வரவேற்கப்படுகின்றான். மற்றவர்களோ தங்களுடைய தனிப்பட்ட நன்மைகளுக்காக ஆடுகளைக் கொள்ளையிடுவதற்கு அல்லது ஆடுகளை அழிப்பதற்குச் சுயநலமாய் நாடினார்கள்; ஆனால் கர்த்தர் உண்மையான மேய்ப்பனாக, தமக்கென சொந்த ஆதாயங்களை நாடுவதற்குப் பதிலாக, ஆடுகள் ஜீவனையும், மற்றும் ஜீவனை அதிகளவில் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ஆடுகளின் நன்மையையும், ஆதாயத்தையும் நாடினவராகக் காணப்பட்டார்.

நமக்கு எத்தகைய ஒரு பாடம் காணப்படுகின்றது! நித்தியமான சித்திரவதையிலிருந்து ஆடுகளை மீட்க வந்ததாகக் கூறாமல், மாறாக, மரணத்திலிருந்து ஆடுகளை மீட்க வந்ததாகவே ஆண்டவர் கூறினார். சந்தோஷத்திலோ (அ) துயரத்திலோ செலவிடத்தக்கதாக ஆடுகள் ஏற்கெனவே ஜீவனைக் கொண்டிருப்பதாகவும், துயரத்தில் கழித்துவிடாதபடிக்கு, ஆடுகளுக்கு வழிகாட்டுவதற்கே தாம் வந்துள்ளதாகவும் கர்த்தர் சொல்லவில்லை; மாறாக ஜீவன் அளிப்பவராகிய தம்மையல்லாமல், ஆடுகள் ஜீவன் பெற்றுக்கொள்ள முடியாது என்றும், ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாய் இழக்கப்பட்ட மனித ஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு அளிக்கத்தக்கதாக ஏற்றகாலத்தில் சீர்த்திருத்தல் வாயிலாக கொடுப்பதற்கே தாம் வந்துள்ளார் என்றும்தான் அவர் போதித்துள்ளார். ஆம் இழந்ததைக் காட்டிலும், அதிகமான ஜீவனைக் கொடுக்க அவர் நோக்கம் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளது உண்மைத்தான். இது எப்படிக் கூடும்? பிதாவாகிய ஆதாம் பரிபூரணமாய் இருந்தாரானால், தெய்வீக ஏற்பாட்டின்படி அவர் நித்திய ஜீவனைத்தானே அடைய வேண்டும்? இந்தச் சுவிசேஷ யுகத்தில் அவருடைய ஆடுகளாய் இருப்பவர்களுக்கு, அதாவது இந்தச் சிறு மந்தையினருக்கு, அவர் இன்னும் உயர்வான ஜீவனின் நிலையை, அதாவது அழியாமையைக்கொடுக்க சித்தமுள்ளவராய் இருக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். இவர்களை, தம்முடைய உயிர்த்தெழுதலாகிய, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையச் செய்வதின் மூலம், திவ்விய சுபாவத்தில் பங்கடைய அழைக்கின்றார் (பிலிப்பியர் 3:10).

## ''அவர் நமக்காய் ஜீவன் தந்தார்''

இதுவே நம்முடைய பாடத்தின் மையக் கருத்தாகும். நல்ல மேய்ப்பன் சுயத்திற்காக நாடாமல், ஆடுகளுக்காக தம்முடைய ஜீவனைச் சந்தோஷமாய் ஒப்புக்கொடுத்தார்; மேலும் இப்படியாக அவர் தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால், ஆடுகளை விலைக்கு வாங்கினபடியினாலேயே, ஆடுகளுக்கான நித்தியத்திற்குரிய ஜீவன் உறுதியாயிற்று; அவர் விலைக்கு வாங்கவில்லையெனில், மந்தையும் இருக்க முடியாது, மேலும், இப்படி மந்தையை விலைக்கு வாங்கினபடியினாலேயே, அவர் மந்தையின் மேய்ப்பனானார். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்" என்பது எவ்வளவு தெளிவாகவும், அருமையாகவும் காணப்படுகின்றது! (1 கொரிந்தியர் 6:20). இந்த ஈடுபலியை வேறு எவராலும் நமக்காகக்கொடுக்க முடியாது, வேறு எவராலும் நம்மை வாங்கவும் முடியாது, நமக்கு நித்தியத்திற்குரிய ஜீவனை அளிக்கவும் முடியாது; வேறு எவராலும் சட்டப்பூர்வமாக நம்முடைய மேய்ப்பனாகவும் முடியாது; அல்லது நம்மைத் தேவனிடத்திலான சமாதானத்திற்குள்ளும், இளைப்பாறுதலுக்குள்ளும், சத்தியத்தின் அறிவிற்குள்ளும், இறுதியில் பரலோக தொழுவத்தினிடத்திற்கும், தேவனுடைய ஜனங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் இளைப்பாறுதலுக்குள்ளும் வேறு எவராலும் வழிநடத்தவும் முடியாது. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் மகிமைக்கும், கனத்திற்கும், ஆளுகைக்கும், வல்லமைக்கும் பாத்திரமானவர்!

## ''ஆடுகள் அவன் சத்தத்துக்குச் செவிக்கொடுக்கிறது''

கிழக்கத்திய நாடுகளின் மேய்ப்பர்களையும், அவர்களுடைய மந்தைகள் குறித்தும் கூறப்படும் கதைகள் குறிப்பிடத்தக்கவைகளாகவும், இந்த உவமையில் கர்த்தர் கூறியுள்ளவைகளுக்கு நல்ல உதாரணமாகவும் அமைகின்றது. கர்த்தருடைய வார்த்தைகளின் ஆவிக்கு இசைவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, இக்கதைகளில் சிலவற்றை நாம் ஆராயலாம். கர்த்தரால் போதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உண்மைகள் பரிச்சயமே. ஒரு எழுத்தாளர் இப்படியாகக் கூறுகின்றார்.

"தண்ணீர் ஊற்றண்டையில் தண்ணீர் தாகமுள்ள ஆடுகளின் திரளான மந்தையைப் பார்ப்பது சுவாரசியமான காட்சிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மந்தையும், அதனதின் மேய்ப்பனுடைய அழைப்புக்குரல் வருவது வரையிலும், கீழ்ப்படிதலுடன் அதன் தருணம் வரை அமர்ந்துக் காத்திருக்கும். ஒரு மந்தையினுடைய மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளைப் பிரிவு பிரிவாக

அழைப்பான்; மேலும் ஒரு பிரிவு ஆடுகள் வந்து தண்ணீர் பருகி முடிந்த பிற்பாடு அவை போகும்படிக்குச் சத்தம் கொடுக்கின்றான்; இந்தச் சத்தத்தை ஆடுகள் நன்கு அறிந்திருக்கும்; பின்னர் அடுத்த பிரிவை வரும்படி அழைக்கின்றான். யார் தங்களை அழைக்கின்றார்கள் என்ற விஷயத்தில், ஆடுகள் ஒருபோதும் தவறாய்ப் புரிந்துக்கொள்ளுவதில்லை. நூறு (அ) ஆயிரம் ஆடுகளைக் கொண்டிருக்கும் மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆட்டிற்கும் பெயர் உள்ளது; அதன் பெயரை அதுவும் அறிந்திருக்கும், மேய்ப்பனும் அதை அறிவான். கிரேக்கர்களுக்கும் இதைப் போன்ற வழக்கம் உண்டு. ஆட்டிற்குக் காணப்படும் சில குறைபாடுகளின் அடிப்படையிலேயே, பெரும்பாலும் பெயர்க் காணப்படும்; உதாரணத்திற்கு, "உடைந்த கால்", "ஒற்றைக் கண்", "வளைந்த கொம்பு", "வழுக்கைத்தலை" என்ற பெயர்கள் ஆடுகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஆட்டுக்குட்டிளும்கூட, அதன் பெயர்கள் கூப்பிடப்படுகையில் கீழ்ப்படிவதற்குப் பொறுமையாய்ப் பயிற்சியளிக்கப்படுகின்றன; இன்னுமாக மந்தையிலிருந்து வெளியேயும், உள்ளேயும் அழைத்துச் செல்லப்படுகின்றன; மேலும் அழைப்புக்குச் சரியாய் ஆட்டுக்குட்டிகள் செவிசாய்ப்பது வரையிலும், உணவுக்காக அதன் தாயினிடத்திற்குப் போக அனுமதிக்கப்படுவதுமில்லை. மேய்ப்பன் ஒருபோதும் தன்னுடைய ஆடுகளைக் கிழக்குத் திசையில் ஓட்டிச்செல்வதில்லை; அவைகளுக்கு முன்னாக மேய்ப்பன் செல்கின்றான்; அவைகள் அவனைப் பின்தொடர்கின்றன; அவைகளின் கண்களுக்கு மேய்ப்பன் மறைவது போல தோன்றினால், அவன் பின் அவைகள் ஓடிச் செல்கின்றன; அவன் காணாமல் போய்விட்டாலோ அல்லது அவனுக்குப் பதிலாக அந்நியன் ஒருவன் வந்து நின்றாலோ, அவைகள் பயந்து விடுகின்றன. மேய்ப்பன், தான் அருகில்தான் காணப்படுகின்றான் என்பதை அவைகளுக்கு தெரிவிக்கும்படியாக, அடிக்கடி சத்தம் கொடுக்கின்றான்; இச்சத்தத்தைக் கேட்டு, அவைகள் மேய்வதைத் தொடர்கின்றன; மாறாக ஒருவேளை வேறு யாராவது இதே சத்தத்தைக் கொடுக்க முற்பட்டால், அவைகள் சுற்றிச் சுற்றிப் பார்த்து, திகைத்துப்போய், சிதறிச் செல்ல ஆரம்பித்துவிடும். ஸ்காட்ச் நாட்டைச் சார்ந்த பிரயாணி ஒருவர் மேய்ப்பன் போலவும், மேய்ப்பன் பிரயாணியைப் போலவும் உடைமாற்றிக் கொண்டனர்; பிரயாணி ஆடுகளை அழைத்தார்; அவைகள் அசையாமல் அப்படியே நின்றுவிட்டன; பின்னர் உண்மையான மேய்ப்பன் உரத்தச் சத்தத்தில் கூப்பிட்ட போதோ, மேய்ப்பன் வேறே ஆடைகள் அணிந்திருந்த போதிலும், அவனிடத்தில் வந்தது."

## "அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்ச்சொல்லிக் கூப்பிட்டு"

முன் பார்த்திட்ட உதாரணங்கள், மேற்கூறப்பட்ட (தலைப்பிலுள்ள) வார்த்தைகளைப் புரிந்துக்கொள்வதற்கும், இவ்வார்த்தைகளைக் கர்த்தருடைய சிறுமந்தையாகிய உண்மையான ஆடுகளுக்குப் பொருத்திப் பார்ப்பதற்கும் நமக்கு உதவியாய் இருக்கின்றது. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்;" மேலும் அவருடையவராய் இருக்கிறவர்களும் அவரை அறிந்திருப்பார்கள் என்பதும் உண்மையே. "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துப்போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோவான் 10:4-5). கர்த்தருடைய சத்தம் என்பது நீதியின், சத்தியத்தின் மற்றும் அன்பின் சத்தமாக இருக்கின்றது; மேலும் அவருடைய ஆடுகளாய் இருப்பவர்கள் அனைவரும், அவருடைய செய்திக்கும், மந்தையைத் தவறாய் வழிநடத்துவதற்கென, மனித கருவிகளைப் பயன்படுத்தும் எதிராளியானவனுடைய தவறான செய்திகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை வித்தியாசப்படுத்திக் கண்டுணரத் தக்கவர்களாய்க் காணப்பட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். உண்மையான ஆடுகளிலுள்ள எவரும் தவறான சுவிசேஷத்தில் திருப்தியடையமாட்டார்கள் என்றும், அந்தத் தவறான சுவிசேஷங்கள் அவர்களுடைய இருதயங்களைக் கவருவதில்லை என்றுமுள்ள கர்த்தருடைய நிச்சயத்தை நாம் பெற்றிருக்கின்றோம்; இன்னுமாக உண்மையான ஆடுகள் உண்மையான சுவிசேஷத்தில் திருப்தியடைவார்கள் என்ற நிச்சயத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம், காரணம் மற்றவைகள் அனைத்தையும்விட உண்மையான சுவிசேஷமே அவர்களது ஏக்கங்கள் அனைத்தையும் திருப்திச் செய்யும். இது நமது மனதில் நாம் நிறுத்த வேண்டிய முக்கியமான கருத்தாகும். இது முற்றும் முழுமையாகக் கர்த்தருடைய ஆடுகளாக வேண்டியதற்கான முக்கியத்துவத்தையும், அவருடன் உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பதற்கான முக்கியத்துவத்தையும், இப்படியாக அவருடைய பாதுகாப்பிற்குரிய பராமரிப்பையும், அறிவுரையையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முக்கியத்துவத்தையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

## “என்னுடைய ஆடுகளை அறிவேன்”

நாம் எப்படி மற்றும் எப்பொழுது கர்த்தருடைய மந்தையாகிறோம் என்ற கேள்வியை இப்பொழுது எழுப்புகின்றோம். ஞானிகள், கல்விமான்கள், ஐசுவரியவான்கள் மற்றும் வல்லவர்கள் அனைவரும் கர்த்தருடைய மந்தையாகுகின்றார்களா? இல்லை என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; இன்னுமாக ஆடுகளில் அநேகர் வல்லவர்களாகவும், ஐசுவரியவான்களாகவும், பிரபுக்களாகவும், கல்விமான்களாகவும் இல்லாமல், பிரதானமாக இவ்வுலகத்தில் தரித்திரராய் இருப்பவர்கள் மாத்திரமே, விசுவாசத்தில் ஐசுவரியமாய் இருக்கின்றார்கள் என்றே அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 1:26-28; யாக்கோபு 2:5). அப்பொழுது தரித்திரர்கள் அனைவரும் கர்த்தருடைய ஆடுகளாக இருக்கின்றார்களா? இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். பல்வேறு மந்தைகள், கிறிஸ்துவின் நாமத்தையே பொதுவாய்க்கொண்டுள்ளன. ஆனால் இவர்களில் அநேகர், அவருடைய சீஷர்களாக, அவருடைய பின்னடியார்களாய் இருப்பதற்கான எவ்வித சான்றுகளையும் காண்பிப்பதில்லை. இவர்களில் அநேகர் அவருடைய வார்த்தைகளையும், அவருடைய சத்தத்தையும் அறியவே இல்லை; இவர்களில் அநேகர், அவர் தெய்வீகச் சத்தியம் மற்றும் கிருபை எனும் புல்வெளிகளிலும், அமர்ந்த தண்ணீரண்டைகளிலும் வழிநடத்துவதை அறிந்துக்கொள்ளவே இல்லை. இவர்களில் அநேகர் உண்மையான தொழுவத்தையும், அதன் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், பாதுகாப்பான பராமரிப்பையும் அறிந்துக்கொள்ளவே இல்லை. இவர்கள் இவைகளையெல்லாம் அறியாமல் இருப்பது என்பது, இவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்படும் உண்மையான மந்தையில் இல்லாதவர்கள் என்பதைக் காட்டுகின்றது; அதாவது இம்மாதிரியான ஒவ்வொரு சபை பிரிவுகளிலும் கர்த்தருடைய உண்மையான ஆடுகள் காணப்பட்டாலுங்கூட, இப்பிரிவுகளிலுள்ள மற்றவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்படும் உண்மையான மந்தையில் இல்லாதவர்கள் என்பதைக் காட்டுகின்றது. உண்மையான ஆடுகள் எங்குக் காணப்பட்டாலும் சரி, அவர்கள் அவருடையவர்களாய் இருந்தால், அவர்கள் அவரால் வழிநடத்தப்பட்டு, போஷிக்கப்பட்டு, இருப்பார்கள்; அவரை அறிந்திருப்பார்கள்; அவருடைய சத்தத்தை, அவருடைய வார்த்தைகளை அறிந்திருப்பார்கள் மற்றும், செவிக்கு இனிமையற்ற/உமி போன்ற மனித பாரம்பரியங்களில் அதிருப்தியடைந்தவர்களாகவே இருப்பார்கள்.

## “கூலியாள் ஓடிப்போகிறான்”

அநேகர் மேய்ப்பனாக, அதாவது கர்த்தருடைய ஆடுகளுக்கு மேற்பார்வையாளராக இருக்கும் கனத்தினிமித்தம் மகிழ்ச்சியடைவார்கள்; ஆயினும் இதற்குரிய பரீட்சையும், விலையும்/இழப்பும் இவர்களுக்கு மிக அதிகமானதாகவும் இருக்கும். தேவதூதர்களில் அநேகர் இந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்கள் என்று நாம் எண்ணலாம்; ஆனால் இந்த ஸ்தானத்திற்குரிய விலையைக்கொடுத்து, இழப்பைச் சந்தித்து, இந்த ஸ்தானத்தை எடுக்க விரும்புவார்களா? நமது கர்த்தருடைய நாட்களுக்கு முன்னதாகவும், பின்பும் மனுஷர்கள் மத்தியில் அநேகர், மேய்ப்பனுக்குரிய வேலைக்காக ஆசைப்பட்டனர்; ஆனால் மனுஷர்கள் அனைவரும் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்பட்டிருக்க, மனுஷர்களில் எவரும் ஆடுகளை வாங்க முடியாது என்பதினால், எவனும், தனக்குள்ள அனைத்தையும் இழந்து, ஆடுகளை விலைக்கு வாங்க விரும்புவான் என்று நாம் எண்ணுவதில்லை. இதனை கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. உண்மையான மேய்ப்பன் மாத்திரமே பலிச் செலுத்துவதற்கும், ஆடுகளுக்காக தன்னுடைய ஜீவனையே ஒப்புக்கொடுப்பதற்கும் விரும்புவான். கர்த்தருடைய மந்தைக்கு ஒரு மேய்ப்பன் இருக்கின்ற போதிலும், அவர் இல்லாமல் இருக்கும் காலங்களில், அவர் தம்முடைய மந்தைக்கு ஓர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், தேவனுடைய மந்தையைப் போஷிப்பதற்கும், அவர்களுடைய ஆத்துமாக்களுக்காகவும், அவர்களுடைய ஜீவியங்களுக்காகவும், அவர்களுடைய நலன்கடுத்தவைகளைப் பராமரிப்பதற்கும், போதகர்களையும், ஆயர்களையும் (Pastor) மந்தைகளுக்கு ஏற்பாடு பண்ணிக்கொடுத்துள்ளார் என்றும் நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

இந்த மந்தையைப் போஷிப்பதற்கும், மேய்ப்பதற்குமான இந்த ஸ்தானத்திற்குரிய தகுதியாய் இருப்பவர்கள் அனைவரும், அவருடைய ஆவியையும், ஆடுகளுக்காக தங்களின் ஜீவனைக்கொடுப்பதற்கான விருப்பத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கின்றார்; இன்னுமாக அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, எதிராளியானவனிடமிருந்து, அவனுடைய பல்வேறு கண்ணிகள், தந்திரங்களிலிருந்தும், ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்களிடமிருந்தும் மந்தையைக்காக்க விருப்பத்தைக்கொண்டிருக்க வேண்டுமென்றும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். இந்த ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்கள், உண்மையான மேய்ப்பனினால் திறந்து வைக்கப்பட்ட உண்மையான தொழுவத்திலிருந்து ஆடுகளை

விலக்கி, அடிமைத்தனத்திற்கும், மனித எழுத்துக்களுக்கும் கீழாகக்கொண்டு வந்து, "ஏற்றகால சத்தியமாகிய" புல்வெளியில் ஆடுகளை வழிநடத்துவதற்குப் பதிலாக இனிமையற்ற, உமி போன்ற மனித பாரம்பரியத்தினிடத்திற்கு வழிநடத்தி, வியாபாரம் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள். உண்மையான ஆடுகள், உண்மையான மேய்ப்பனை அறிந்தும், அவரும் அவைகளை அறிந்திருப்பது போலும், உண்மையான மேய்ப்பன் உண்மையான கீழ்/உடன் மேய்ப்பர்களை அறிந்திருப்பார்; இந்த உடன் மேய்ப்பர்களும் ஆடுகளை நெருக்கமாய் அறிந்திருப்பார்கள். தங்களுடைய சொந்தமான குரலில் சத்தமிடுபவர்கள்/ அழைப்பவர்கள், உண்மையான மேய்ப்பனினாலோ அல்லது உண்மையான ஆடுகளினாலோ அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவதில்லை/அங்கீகரிக்கப்படுவதில்லை; உண்மையான உடன் மேய்ப்பனானவன், உண்மையான மேய்ப்பனுடைய சத்தத்தையும், வார்த்தைகளையுந்தான் பேசுவான்.

"நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக்கொடுக்கிறேன்" என்ற வார்த்தைகள் எவ்வளவு ஆறுதலாய்க் காணப்படுகின்றது! (14, 15-ஆம் வசனங்களுக்கான திருவிவிலிய மொழிப்பெயர்ப்பே, சரியான மொழிப்பெயர்ப்பாய் இருக்கின்றது). இங்குக் கர்த்தருக்கும், தம்முடையவர்களுக்கும் இடையேயுள்ள, விலையேறப்பெற்ற உறவு எத்துணை அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது! பிதாவை அறியாதவன் தம்மை அறியவில்லை என்று கர்த்தர் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இங்குத் தம்முடைய அறிந்துக்கொள்ளுதலையும், பிதாவின் அறிந்துக்கொள்ளுதலையும் ஒப்பிட்டு ஆண்டவர் கூறுவது அழுத்தம் நிறைந்ததாய் இருக்கின்றது. இந்த அறிவு, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது; இது தலையில் காணப்படும் அறிவாக மாத்திரமிராமல், இருதயம் சார்ந்த அறிவாக இருக்கின்றது; அதாவது கர்த்தருடனும், அவருடைய மகிமையான திட்டத்துடனும் நெருக்கமான பழக்கமாகும்!

## "ஒரே மந்தை மற்றும் ஒரே மேய்ப்பன்"

16-ஆம் வசனத்தில் முக்கியமான சத்தியமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய ஆடுகளுக்கென இப்பொழுது ஒரேயொரு தொழுவம் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது; மேலும் இந்தத் தொழுவத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள அவருக்கு உண்மையானவர்கள் அனைவரும், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் வாயிலாக சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் கண்டடைவார்கள். இது சிறுமந்தையாகும்; இவர்களுக்கே இராஜ்யத்தைக் கொடுப்பது, பிதாவினுடைய திருவுளமாய் இருக்கின்றது. இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்ளும் இந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறுமந்தை மாத்திரமே, கர்த்தரால் தம்முடைய ஆடுகள் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மற்றவர்கள் அனைவரும் உத்தரிக்கும் ஸ்தலத்திற்கு (அ) நித்தியமான சித்திரவதைக்கு அனுப்பப்படுவார்கள் என்று முன்னர் வாழ்ந்த அநேகரினால் யூகிக்கப்பட்டது. ஆனால் இக்கண்ணோட்டத்தினுடைய தவறுகளானது, இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல், வேறே ஆடுகளும் தமக்கு உண்டு என்றும், நாம் இராஜ்யத்தின் மகிமைகளை எதிர்ப்பார்த்தவர்களாக, தொழுவத்தினுடைய விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தது போன்று, பிரவேசிக்காத வேறே ஆடுகள் தமக்கு உண்டு என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தெய்வீக அன்பு மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான ஏற்பாடுகளின் ஆழம், அகலம், உயரம் மற்றும் நீளம் பற்றின சரியான கண்ணோட்டத்தைக் கொண்டிருப்போமாக; ஆதாமின் கீழ்ப்படியாமை வாயிலாக முழு உலகமும் பாவத்திலும், மரணத்திலும் தொலைந்துப் போயிருக்க, கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் முழு உலகமும் மீட்கப்பட்டுள்ளது! கர்த்தருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும், தற்கால ஆட்டுத்தொழுவத்தில் இருக்கும் நிலையை அடைவதற்கான சிலாக்கியத்திற்கும் இன்று ஒரு விசேஷித்த வகுப்பார் மாத்திரமே இருளினின்று அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்துக்கொள்வோமாக! மீதமான திரளான மனுக்குலமானது தேவனற்றவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், உலகத்தாருக்கு உலகில் எவ்விதமான நம்பிக்கை இல்லை என்றும், காரணம் அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டு, செவிகள் கேட்கும் திறனை இழந்துள்ளபடியால், அவர்கள் தேவனுடைய கிருபையை அறிந்துக்கொள்ளவும் இல்லை, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் இல்லை என்றும் அறிந்துக்கொள்வோமாக!

இன்னுமாக ஏற்ற காலத்தில் குருடானவர்கள் அனைவரின் கண்களும் திறக்கப்படும் என்றும், செவிடானவர்கள் அனைவரின் செவிகளும் கேட்கும் என்றும் கர்த்தர் கூறியுள்ள வார்த்தைகளையும் கவனித்துக் கேட்போமாக! இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சிறுமந்தையினர், இராஜ்யத்தில் அவருடைய மணவாட்டிகளாகவும், உடன் சுதந்தரர்களாகவும் இருக்கப் போகிறார்கள் என்றும், அப்பொழுது அவர் மூலமாயும், அவருடைய மகிமையடைந்த மணவாட்டி மூலமாயும் தேவனுடைய ஆசீர்வாதங்கள், மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் அளிக்கப்படும் என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையும் கவனித்துக் கேட்போமாக! நீதியின் சூரியன் உதிக்கும், அதன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; அனைத்து முழங்கால்களும் முடங்கி, அனைத்து நாவுகளும் அவரை அறிக்கைப்பண்ணும். பின்னர் மற்ற மந்தையின்ஆடுகள், யோவான் 10:16-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கூட்டிச் சேர்க்கப்படும். அப்போது, இக்காலத்திலுள்ள மந்தையானது, திரையைக் கடந்து, இராஜ்யத்திற்குள்ளும், அதன் மகிமைகளுக்குள்ளும் கடந்துப் போயிருக்கும். அப்பொழுது இக்காலத்தின் தொழுவம் முடிவிற்கு வரும்; மேலும் இத்தகைய தொழுவம் எதிர்க்காலத்தில் பயன்படாது, காரணம் எதிர்க்காலத்தில் கள்வர்களும், திருடர்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9). அப்பொழுது மாபெரும் எதிராளியானவன், ஆயிரம் வருஷம் முடிவது வரையிலும் ஆடுகளை வஞ்சிக்காதபடிக்கு, ஆயிரம் வருஷங்கள் கட்டிப்போடப்படுவான். இதற்கிடையில் ஒட்டுமொத்த மனுக்குலமும், கர்த்தர் மற்றும் அவருடைய மணவாட்டி வகுப்பாருடைய அறிவுரையின் கீழ்க் காணப்படும்; அப்பொழுது தேவனை அறிகிற அறிவால் முழுப்பூமியும் நிரம்பியிருக்கும் (ஆபகூக் 2:14). இந்த அறிவிற்கான பலன், மனுக்குலத்திற்கான பரீட்சையாக இருக்கும்; மேலும் சிலர் கர்த்தருடைய ஆடுகள் போல், அவருடன் இசைவிற்குள் மகிழ்ச்சியுடனும், விருப்பத்துடனும் வருவார்கள்; மேலும் இவர்கள் அவர் நித்தியத்திற்குரிய ஜீவனை அளிப்பதற்குப் பிரியப்படும் அவருடைய வலது கரத்தினிடத்திற்கும், அவருடைய கிருபையினிடத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதே சாதகமான சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் சிலர் வெள்ளாட்டின் பண்பை, மூர்க்கத்தனமான பண்பை வெளிப்படுத்தி, கர்த்தர் தயவு பண்ண விரும்பிடாத, எதிராளியானவனின் ஆவியை உடையவர்களுக்கான, அவருடைய இடது கரத்தினிடத்திற்குச் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் இறுதியில், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவில் சாத்தானுடன் கூட, இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுப் போவார்கள். இவர்களுக்கான தண்டனை நித்திய காலத்திற்குமுரியதாகும், ஏனெனில் இவர்களுடைய மரணம் நித்திய காலத்திற்குமானதாகும்; இவர்கள் ஒருபோதும் உயிர்த்தெழுவதில்லை; இவர்கள் கெஹன்னா வார்த்தையை அடையாளப்படுத்தும் அழிவாகிய இரண்டாம் மரணத்தை அடைவார்கள்.

சுவிசேஷ யுகம் முழுவதிலும், இரட்சிக்கப்படுவதற்கென வானத்தின் கீழ்க் கொடுக்கப்பட்ட ஒரே நாமத்தை ஒருபோதும் கேட்டிராத பெரியதொரு வகுப்பார் இருக்கின்றார்கள் என்றும், இப்படிக் கேள்விப்படாததினால், கர்த்தருடைய மந்தையின் அங்கமாகுவதற்கான வாய்ப்பினை ஒருபோதும் பெற்றிராமல் இருக்கும் பெரியதொரு வகுப்பார் இருக்கின்றார்கள் என்றும் எவராலும் மறுக்க முடியாது. அந்த ஒரேயொரு நாமத்தை அறிந்துக்கொள்ளாமலேயே இவர்கள் பரலோகம் போய்விட்டார்கள் என்ற கூற்றை வேதவாக்கியம் அங்கீகரியாதது மாத்திரமல்லாமல், நியாயமாயும் காணப்படாது; அதேசமயம் இவர்கள் இரட்சிப்படைவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாமலேயே நித்தியமான சித்திரவதைக்குள் போய்விட்டார்கள் என்பதும்கூட வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததாகவும், நியாயமற்றதாகவும் காணப்படும். கர்த்தர் நித்தியத்திற்குரிய ஜீவனையளிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டுள்ள மனுக்குலத்திற்கு, ஆயிர வருட யுகத்தில், மனித மந்தையில் அங்கமாகுவதற்கான வாய்ப்பையும், தமது இரக்கத்தையும், கிருபையையும் எடுத்துச் செல்வதற்கென இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமந்தையினரை, ஆயிரவருட யுகத்தில் தம்முடைய இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆக்குவதற்கு நோக்கம் கொண்டுள்ளார் என்பது, வேதவாக்கியங்கள் அங்கீகரிக்கின்றதாகவும் நியாயமானதாகவும் காணப்படுகின்றது.

## "ஒரே மந்தை, ஆனால் ஒரே தொழுவம் அல்ல"

ஆங்கிலத்தில், "one **fold** (தொழுவம்) and one shepherd" என்று மொழிப்பெயர்ப்பு இடம் பெறுகின்றது**;** ஆனால் கிரேக்க வார்த்தையானது சரியாக மொழிப்பெயர்க்கப்படுகையில், "one **flock** (மந்தை) and one shepherd" என்று இடம்பெற வேண்டும் (நமது KJV மொழிப்பெயர்ப்பு சரியாக உள்ளது; யோவான் 14:16). இது அப்போஸ்தலன் எபேசியர் 1:9-ஆம் வசனத்தில் கூறியுள்ள வார்த்தைகளுக்கு முழு இசைவாகவே உள்ளது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்." இறுதியில் தேவனுடைய சிருஷ்டிகளிலுள்ள அனைத்தும், இப்பொழுது சிறுமந்தையாகிய சபைக்குத் தலையாக இருக்கும் இந்த மாபெரும் மேய்ப்பனுடைய தலைமையின் கீழ்க்கொண்டு வரப்படும்; இந்த மாபெரும் மேய்ப்பன் எதிர்க்காலத்தில் தூதர்கள் மீதும், சீர்ப்பொருந்தப்பட்ட மனுக்குலத்தின் மீதும், தலையாகக் காணப்படுவார். மந்தை ஒரேயொரு மந்தையாகக் காணப்படும், ஆனால் ஆடுகள் பல்வேறு ஜீவதளங்களில், பல்வேறு சுபாவங்களில் காணப்படும்; ஆகவேதான், "என் பிதாவின் வீட்டில் அநேகம் வாசஸ்தலங்கள்" அநேகம் நிலைகள், அநேகம் தளங்கள் உண்டு என்று எழுதப்பட்டுள்ளது; ஆனால் அனைத்தும் இசைவாய் ஒன்றிக் காணப்படும். ஆனால் இந்தத் தளங்களிலேயே உயர்வான, மகிமையின் தளத்திற்கு, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மணவாட்டி வகுப்பாராகிய, சிறுமந்தையினர் கர்த்தரால் வரவேற்கப்படுகின்றனர். அவருடைய சத்தத்தைக் கேட்போமாக; அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமாக; நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வோமாக.

**ஆமென்!**

R 4160

# "நான் அவனை எழுப்பப்போகிறேன்"
# யோவான் 11:1-57

"நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்" (வசனம் 25).

நமது கர்த்தருடைய ஊழியக்காலங்களுடைய இறுதி பகுதிகளில், யூதர்களுடைய ஆலயத்தின் அதிகாரிகளுடைய எதிர்ப்பானது மிகவும் கசப்பாய்ப் போனபடியினால், இயேசு, யூதேயாவை விட்டு, பெரோயாவுக்குப் போக நேரிட்டது. இயேசு தாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது, யோவான் ஸ்நானனால் பிரசங்கம் பண்ணி வந்த இடங்களுக்கு அருகாமையிலான இடங்களில், கொஞ்சக் காலம் இயேசு காணப்பட்டார். இப்படியாக இயேசு அங்குக் காணப்படும் போதுதான், "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்று மார்த்தாள் மற்றும் மரியாளிடமிருந்து, இயேசுவுக்கு செய்தி வந்தது. இதிலிருந்து, மார்த்தாள் மற்றும் மரியாளுடைய இளைய சகோதரனாகிய லாசரு, இயேசுவின் மிக நெருங்கிய நண்பனாக இருந்ததை நாம் அறிகின்றோம். தூது செய்தி மிகச் சுருக்கமாய் இருந்தது; இயேசு வரவேண்டும் என்றோ, ஏதாகிலும் அற்புதம் செய்யவேண்டும் என்றோ, வற்புறுத்தும் வண்ணமாக எதுவும் தூது செய்தியில் சொல்லிவிடப்படவில்லை; லாசரு வியாதியாய் இருக்கின்றான் என்பது மாத்திரமே சொல்லி அனுப்பப்பட்டது. ஒரு சில விஷயங்களில், இது கிறிஸ்தவனுடைய ஜெபத்திற்கான சிறந்த மாதிரியாகக் கூட விளங்குகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய தங்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கர்த்தர் இரக்கத்துடனும், அன்புடன் கூடிய அக்கறையுடனும் காணப்படுகின்றார் என்ற முழு நிச்சயத்துடன் எப்போதும், கர்த்தரிடத்தில் செல்லலாம். பரலோகத்தில் இல்லை என்றாலும், பூமியிலாகிலும் தங்களுடைய சொந்த சித்தம் நடைபெறத்தக்கதாக வேண்டிக்கொள்ளும் நிலையில் கர்த்தருடைய ஜனங்கள் ஆரம்பக்காலங்களில் காணப்படுவார்கள்; ஆனால் பிற்பாடு, அவர்களுடைய அர்ப்பணிப்பின் ஆவியானது, கிருபையில் வளர ஆரம்பிக்கையில், அவர்கள் மார்த்தாள் மற்றும் மரியாள் போன்று தங்களுடைய பிரச்சனைகளைக் கர்த்தரிடத்தில் தெரிவிப்பதிலும், கர்த்தருக்காய்க் காத்திருப்பதிலும், அவர் அருளுவதற்குச் சிறந்தது என்றும், ஞானமானதென்றும் விரும்பும் எதையும் பெற்றுக்கொள்வதில் நன்றியுள்ளவர்களாக இருப்பதிலும் திருப்தியாய் இருப்பார்கள்.

நமது கர்த்தர் இயேசு தூது அனுப்பப்பட்டு வந்தவர்களிடம், "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது" என்று கூறினார் (யோவான் 11:4). லாசரு மரிக்க மாட்டார் என்று நமது கர்த்தர் தவறாய்க் கணக்குப் போட்டுவிட்டார் என்று நாம் அனுமானித்துவிடக்கூடாது, மாறாக லாசரு மரித்தாலும், தாம் அவரை எழுப்பப்போவதினால், அது நிரந்தரமான மரணமாய் இருக்காது என்பதை இயேசு அறிந்திருந்தபடியினாலே, இப்படிக் கூறினார் என்று பார்க்கின்றோம். இரண்டு நாளுக்குப் பிற்பாடு, இயேசு யூதேயாவிலுள்ள பெத்தானியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று கூறினபோது, சீஷர்கள் பயப்பட்டார்கள், ஆனால் எந்த ஆபத்தும் நிகழாது என்று நமது கர்த்தர் அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்தார். இயேசு சூழ்நிலைகள் அனைத்தையும் முன்கூட்டியே அறிந்தவராக இருந்தபடியால், தாம் நிகழ்த்த சித்தமாயிருக்கும் அற்புதமானது, தாம் யூதேயாவிலிருந்து, கொஞ்சம் காலத்திற்குப் பின்னர் மீண்டுமாகப் பெரோயாவுக்குத் திரும்பி வருவதை அனுமதிக்கத்தக்கதாக, தம்முடைய சத்துருக்கள் குழப்பத்தில் அலங்கோலப்படுவார்கள் என்று இயேசு கிரகித்துக் கொண்டார். இப்படிச் செல்வதற்கு, அதாவது பெத்தானியாவிற்குச் செல்வதற்கான காரணத்தை, "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்ற வார்த்தைகள் மூலம், இயேசு சீஷர்களுக்கு விவரித்துக் கொடுத்தார். இப்படியாக தாம் 11-ஆம் வசனத்தில் குறிப்பிட்ட வார்த்தைகளைச் சீஷர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, "லாசரு மரித்துப்போனான்" என்று இயேசு வெளிப்படையாகக் கூறினார்.

ஒவ்வொரு காரியத்திற்கும் அநேகம் கண்ணோட்டங்கள் காணப்படுகின்றது. இரக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய தெய்வீக நோக்கத்தைத் தள்ளி, யதார்த்தத்தின்/உண்மையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, ஒரு மிருகம் மரித்துப்போய்விட்டது என்று சொல்லும் அதே விதத்தில், லாசரு மரித்துப்போனதைக் கூறுவது சரியே. ஆனால் தேவன் மீதும், ஆபிரகாமிடம் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமாகிய, அவருடைய சந்ததிக்குள் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்பதின் மீதுமான விசுவாசத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், லாசரு,

ஒரு விலங்கு மரித்தது போன்று மரித்துப்போகவில்லை, மாறாக லாசரு ஒரு குறிப்பிட்ட காலம்வரை உயிரற்றவனாகவும், கர்த்தருடைய ஏற்றவேளையில், அவரால் அழைக்கப்படுவதற்கும், உயிர் மீண்டும் பெறுவதற்கும், மரணமாகிய நித்திரையினின்று விழித்தெழும்பப் பண்ணுவதற்கும் எனக் காத்திருப்பவனாகவுந்தான் இருக்கின்றான். சதுசேயர்கள் எதிர்கால வாழ்க்கையையும், உயிர்த்தெழுதலையும் மறுத்துப் பேசின வேறொரு தருணத்தில் மேற்கூறியக் கண்ணோட்டத்தை இயேசு கொண்டவராக, "அன்றியும் மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார். எப்படியெனில், கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்" என்றார் (லூக்கா 20:37). ஒருவேளை ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும், விலங்கு மரித்துப்போவது போன்று, உயிர்த்தெழும்புவதற்கும், விழித்தெழுவதற்குரிய நம்பிக்கை எதுவும் இல்லாமல் மரித்துப்போனவர்களாக இருந்திருப்பார்களானால், இவர்களுடைய தேவனாக, தாம் இருப்பதாக தேவன் சொல்லியிருந்திருக்க மாட்டார் என்பதே நமது கர்த்தருடைய வாதமாய் இருந்தது. தேவனுடைய கண்ணோட்டத்தின்படி, "எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே" அதாவது ,அனைவரும் அவருக்குள் பிழைத்தவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறி நமது கர்த்தர் தம்முடைய வாதத்தை நிறைவு செய்ததை நாம் பார்க்கின்றோம் (லூக்கா 20:38).

நம்முடைய கண்ணோட்டமானது, தெய்வீகக் கண்ணோட்டமாகவே இருக்க வேண்டும்; இந்தத் தெய்வீகச் சாட்சிக்கு இசைவாகவே நாம் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே கிறிஸ்தவர்களுக்காக, அதாவது கிறிஸ்துவுக்குள் மரித்திருக்கும் பரிசுத்தவான்களுக்காக, மாத்திரம் அல்லாமல், இயேசுவுக்குள் நித்திரையாய் இருக்கும் உலக மனுக்குலத்திற்கும், நமக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தேவன், இயேசுவில் மனுக்குலத்திற்கான உயிர்த்தெழுதலின் ஏற்பாடு பண்ணியிருக்கவில்லையென்றால், மனுக்குலத்தின் மரணமானது, மிருகங்களின் மரணம் போன்று உண்மையான மரணமாகவே இருந்திருக்கும். ஆனால் இப்படியான ஏற்பாட்டைப் பண்ணப்பட்டுள்ளபடியால், மனுக்குலத்தின் உலகமானது முற்றிலும் அழிந்துப்போகாமல், மாறாக நித்திரையில் மாத்திரமே காணப்படுகின்றனர் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் தெய்வீக வார்த்தைகளினுடைய போதனைகளை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், "நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கிக்கக்கூடாது; காரணம் நாம் இயேசு மரித்து, உயிரோடே மீண்டும் எழுந்துள்ளார் என்று விசுவாசித்தோமானால், இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் (அவருடைய பலியின் பலனுக்குள் அடங்குபவர்களும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டுள்ள ஆதாமின் சந்ததியார் அனைவரும்) தேவன் அவரோடுக் கூடக் கொண்டு வருவார்" (1 தெசலோனிக்கேயர் 4:13, 14). சபையானது, அவருடைய உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில், பிரதான உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாகவும், அவருடைய மகிமை, கனம் மற்றும் அழியாமையிலும் பங்கடையத்தக்கதாகவும் அவரால் முதலாவது உயிர்த்தெழுப்பப்படுகின்றனர். பின்னர் ஆயிர வருட யுகத்தில் அவர் மூலமாய்ப் பூமியின் குடிகள் அனைத்தும் விழித்தெழுப்பப்பட்டு, ஷீயோலிலிருந்து, ஹேடிசிலிருந்து, சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டு வரப்படுவார்கள்; ஒருவேளை அவர்கள் சத்தியத்தின் செய்தியை நல்லதும், உண்மையுமான இருதயத்திற்குள்ளாக ஏற்றுக்கொண்டால், அவர்கள் அவர் மூலமாய்ப் பாவம் மற்றும் மரணத்தின் நிலையினின்று முழுமையாய்த் தூக்கியெடுக்கப்பட்டு, நித்திய ஜீவனுக்கும், முழுமையான பூரணத்திற்கு நேராகவும் கொண்டுவரப்படுவார்கள். இயேசுவில் விசுவாசம் வைக்கிற யாவரும் அவருக்குள் களிக்கூர்ந்து, மற்றவர்களைப்போல, மரணத்தைக்கண்டு துக்கியாதிருப்பார்களாக.

## "நண்பர்கள் துக்கிக்க, இயேசு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்"

பிரசித்திப்பெற்ற சார்லஸ் ஸ்பர்ஜியன் (Charles Spurgeon) அவர்கள் இப்பாடத்தைக் குறித்துப் பிரசங்கிக்கையில், "நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்ற வசனத்திலிருந்து, (யோவான் 11:15) தன்னுடைய சத்திய உரைக்கு, "நண்பர்கள் துக்கிக்க, இயேசு மகிழ்ச்சியுடன் கணப்பட்டார்" என்ற தலைப்பை வழங்கினார். கர்த்தருடைய ஜனங்கள் துக்கத்தின், வேதனையின், வியாதியின், வலியின் தருணங்களில், தங்களுடைய கண்ணீர்களும், உபத்திரவங்களும், கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ் மாபெரும் ஆசீர்வாதமாய்த் தங்களுக்கு அமையும் என்று நினைவுகூர்ந்து, விசுவாசத்துடன் கர்த்தரை நோக்கிப்பார்ப்பது நலமான காரியமாகும். இப்பாடத்தில் நாம் ஓர் உதாரணத்தைக் காணலாம்: தங்களுடைய வியாதிப்பட்டிருந்த சகோதரனுக்குப் பணிவிடை புரிந்துக்கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும், தங்கள் சகோதரனைக் கர்த்தர் எவ்வளவு சிநேகித்தார் என்பதை எண்ணினவர்களாக, லாசருவின்

நிலைமையைக் குறித்த செய்தியைக் கர்த்தருக்கு அனுப்பி வைத்து, அவருடைய ஞானத்தையும், கிருபையையும் நம்பினவர்களாக, காரியத்தை கர்த்தர் கரத்தில் விட்டுவிட்டார்கள்; எனினும் அவர்கள் இருளான சூழ்நிலைகளுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். லாசரு மரித்துப்போய், அடக்கம் பண்ணப்பட்டார். அவர்கள் மேசியா என்று நம்பியிருந்த ஆண்டவராகிய இயேசு, வியாதியை நிவர்த்திப் பண்ணவும் இல்லை; லாசரு மரிப்பதிலிருந்து தடுக்கவும் இல்லை; இன்னும் அவர்களுக்கு ஒரு செய்திகூட இயேசு சொல்லி அனுப்பவும் இல்லை; நாட்களும் கடந்துச் சென்றன. இயேசு இவைகளையெல்லாம் குறித்துச் சொல்லுகையில், "நான் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறியுள்ளார். இவைகளை நாம் எப்படிப் புரிந்துக்கொள்வது? "உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்பதே பதிலாகும். இப்படியாகவே நம் நிமித்தமாக, நமக்குச் சோதனைகளையும், துக்கங்களையும், கண்ணீர்களையும், இன்னல்களையும் அனுமதிப்பதிலும், இதன் மூலமாய் நாம் வேறு வழிகள் மூலமாய்க் கற்றுக்கொள்ள முடியாத முக்கியமான சில படிப்பினைகளை அடைவதிலும் கர்த்தர் சந்தோஷப்படுவது உண்மையே. அவருடைய தடையங்களை நம்மால் பார்க்க முடியாதபோது, அவரை நாம் விசுவாசிக்க வேண்டும் என்பதும், "அவரை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்ற அவரது வாக்குத்தத்தத்தை நினைவுகூர வேண்டும் என்பதும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளில் ஒன்றாய் இருக்கின்றது. மார்த்தாள், மரியாள் சம்பவத்தில், அவர்களுடைய சகோதரனுடைய வியாதியும், மரணமும், அந்த இரண்டு சகோதரிகளுக்கு மர்மமான வழிநடத்துதல்களாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும் இந்த அனுபவங்களானது, விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள உதவியாக இருந்தது என்பதிலும், கர்த்தருடன் நெருக்கமான ஐக்கியத்திற்கும், நித்தியத்திற்குரிய காரியங்களுக்கும் ஆயத்தமாக்குதலாய் இருந்தது என்பதிலும் ஐயமில்லை.

அப்போஸ்தலர்கள் மத்தியில் ஒருவரான தோமாவின் வார்த்தையானது, கர்த்தருடைய அப்போஸ்தலர்களிடம் இருந்த பயபக்தியை விவரிக்கின்றது; தாங்கள் ஆண்டவரைத் தனித்துவிடக்கூடாது என்றும், அவர் ஒருவேளை யூதேயாவிற்குப் போக விரும்பினாரானால், தாங்களும் அவரோடு கூடச் செல்ல வேண்டும் என்றும் தோமா, தன்னுடைய உடன் சீஷர்களிடம் வலியுறுத்திக் கூறுகின்றார். அதாவது, "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்." (யோவான் 11:16) இந்த ஒரு தைரியத்தின் ஆவியையே, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், கர்த்தரோடு கூடச் சென்றபோது கொண்டிருந்தார்கள். மேலும் கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்போஸ்தலர்களிடம் வெளிப்பட்ட கோழைத்தனமானது, உதவியை ஏற்க மறுத்த நமது கர்த்தருடைய வார்த்தைகளினாலேயே, அவர்களுக்குக் உண்டானது என்று புரிந்துக்கொள்ள நமக்கு உதவுகின்றது. ஜனங்களின் ஆதரவற்ற தீர்க்கத்தரிசியாகிய இயேசுவைப் பின்பற்றுவதில் தங்கள் ஜீவனை மரணம் வரையிலும் பணயம் வைத்த இவர்கள்தான், பிற்பாடு அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். கர்த்தருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும் தைரியமாகச் செயல்படுவோம் என்று எண்ணுகிறவர்களும், அவருக்காக மரிக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்களுமான நம்மில் சிலர், இந்த ஒரு பண்பை நாம் தக்க வைத்துக்கொள்வதற்கும், சோதனையான வேளைகளில், ஆற்றல் இழந்து, தணிந்து போகாதபடிபடிக்கும், விழித்திருந்து, ஜெபம் பண்ணவேண்டும் என்பதே இதிலுள்ள நமக்கான படிப்பினையாக இருக்கின்றது.

## "யூதர்கள் அழுது புலம்பினார்கள், இயேசு கண்ணீர் விட்டார்"

அன்றைய நாட்களில், ஏழு நாட்கள் துக்கம் அநுசரிக்கும் வழக்கம் காணப்பட்டது. அநேகமாக மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு ஐசுவரியவான்களாகவும், செல்வாக்கு மிக்க குடும்பத்தினராகவும் காணப்பட்டிருக்க வேண்டும்; மேலும் அவர்களது இழப்பில், அவர்களோடு துக்கம் அநுசரிப்பதற்காக அநேக நண்பர்கள் வந்திருந்தார்கள். துக்கிக்கிறவர்களால் நிரம்பி இருக்கும் அவர்களது வீட்டிற்குச் சென்றுவிட்டு, பிற்பாடு கல்லறைக்குச் செல்வது ஞானமாய் இருக்காது என்று எண்ணின இயேசு, பெத்தானியாவுக்கு முன்பாக கொஞ்சம் தொலைவில் நின்று கொண்டு, செய்தி அனுப்பினார். இயேசு அருகாமையில் வந்துகொண்டிருப்பதாகச் செய்தி வந்தவுடன், அவரைச் சந்திப்பதற்கு மார்த்தாள் வெளியே வந்தாள்; ஆனால் மரியாளோ துக்கத்தினால் துவண்டுப் போனவளாகவும், அநேகமாக, "இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாக இராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கிறது" என்ற ஆண்டவரின் வார்த்தை நிறைவேறாமல் போனதால் ஏமாற்றமடைந்தவளாகவும், வீட்டிலேயே அமர்ந்து விட்டாள், அவரைச் சந்திக்க மரியாள் போகவில்லை; அதாவது, "ஆண்டவரே கடைசிவரை உம்மை எதிர்ப்பார்த்தோம்; ஆனால் இப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது. நீர் வாய்ப்பைத் தவற விட்டுவிட்டீர். நாங்கள் எங்கள் துக்கத்தின் மத்தியில் காணப்படுகின்றோம். இப்பொழுது எங்களுக்கு என்ன இலாபம்? லாசரு

மரித்துவிட்டான்" என்று தன்னுடைய நடவடிக்கைகள் மூலமாய் மரியாள் சொல்லுகிறவளாய் இருந்தாள். மார்த்தாள், கர்த்தரைச் சந்தித்தப்போது, "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்." (யோவான் 11:21, 22) இப்படியாக அவள் கூறிய வார்த்தைகளுக்குள்ளாக, அவளுடைய கோபமும் மறைந்திருந்தது; அதாவது, "ஏன் நீர் வரவில்லை? ஆனால் இன்னமும் எனக்கு உம்மிடத்தில் விசுவாசம் இருக்கின்றது. நீர் மேசியா என்று உணர்கின்றேன்" என்ற விதத்தில் மார்த்தாள் கூறினாள். இயேசுவினுடைய பதில், "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்பதாக இருந்தது.

## "உன் சகோதரன் மீண்டும் உயிர்வாழ்வான்"

நமது கர்த்தர், "உன் சகோதரன் நித்தரைப்பண்ணிக்கொண்டிருக்கவில்லை," "உன் சகோதரன் மரிக்கவில்லை" என்று கூறாததைக் கவனிப்போமாக; மாறாக அவளுடைய மனதை அவர் உயிர்த்தெழுதலுக்கு நேராக திருப்பினார். நாம் அவரைக் காட்டிலும் ஞானிகளா? அவர் கூறினவைகளுக்கு, நேர்மாறானவைகளை நாம் அவருடைய சீஷர்களாகப் போதிக்கலாமா? மார்த்தாளுடைய பதிலானது, அவள் இயேசு கூறினதை நன்கு புரிந்துக்கொண்டிருந்ததையும், அந்நாட்களில் காணப்பட்ட யூதர்கள் அனைவரும், விசுவாசித்தவைகள் பற்றின பொதுவான கண்ணோட்டத்தை மார்த்தாள் கொண்டிருந்ததையும், யுகத்தின் முடிவில், மகா கடைசி நாளாகிய, மகா ஏழாவது ஆயிர வருடத்தின்போது, மரித்தவர்களாகிய நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்கும் உயிர்த்தெழுதல் எனும் காரியம் உள்ளது என்று மார்த்தாள் உணர்ந்திருப்பதையும் வெளிப்படுத்துகின்றது. நமது கர்த்தர் அவளுடைய கருத்தை மறுக்காமல், அத்தருணத்தில் தாம் செய்ய விரும்புவதைப் பற்றின உணர்ந்துக்கொள்ளுதலுக்கு நேராக அவளைப் படிப்படியாகக்கொண்டுவர விரும்பி, ஏற்றகாலத்தில் அனைவரும் விழித்தெழுப்பப் பண்ணும் உயிர்த்தெழுதலின் வல்லமையானது தம்மிடத்தில் இருக்கின்றது என்று விளக்கி, "நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கின்றேன்" என்று கூறினார், மற்றும் தம்மை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றும், உயிரோடிருந்து தம்மை விசுவாசிக்கிறனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றும் கூறினார். இப்படியான தம்முடைய வல்லமை மற்றும் எதிர்க்கால வேலை பற்றின கண்ணோட்டத்தை மார்த்தாள் விசுவாசிக்கின்றாளா? என்று நமது கர்த்தர் அவளிடம் கேட்டார். அதற்கு மார்த்தாள், "ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று பதில் கூறினள் (யோவான் 11:27). "இவைகளைச் சொன்னபின்பு, அவள்போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்" (யோவான் 11:28).

தங்களுடைய விஷயத்தில் கர்த்தரிடமிருந்த அக்கறையற்ற தன்மை மற்றும் அலட்சியம் பற்றி என்னதான் மரியாள் கோபங்கொண்டிருந்தாலும், தன்னை ஆண்டவர் அழைக்கின்றார் என்று மரியாளுக்குச் சொல்லப்பட்டபோது, இந்தக் கோபங்கள் அனைத்தும் பறந்து போய்விட்டது. கல்லறைக்குப் போகிற வழியில் கர்த்தர் இருந்த இடத்திற்கு மரியாள் போனபோது, வீட்டில், அவளோடு துக்கங்கொண்டாடிக்கொண்டிருந்த யூதர்கள், "மரியாள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்." பின்னர், "ஆண்டவர் அவனை எங்கே வைத்தீர்கள்" என்று கேட்டதிநிமித்தம் கர்த்தருக்கு, லாசரு வைக்கப்பட்ட இடம் தெரியவில்லை என்பது அர்த்தமாக இராமல், மாறாக அவர் மரியாதையான விதத்திலேயே, "நாம் இப்பொழுது கல்லறைக்குப் போகலாமா?" என்று கேட்டதாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்திமரத்தின் கீழ் நாத்தான்யேல் இருந்ததை அறிந்திருந்த கர்த்தர், லாசரு மரித்துப் போய் நான்கு நாட்கள் ஆகின்றது என்பதை மாத்திரமல்ல, லாசரு எங்கே வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறிந்திருப்பது உண்மையே. "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை" என்பதினால், அவர் முக்கியத்துவமற்ற காரியங்களை எளிதில் அறிந்துக்கொள்வார் என்பது நிச்சயமே" (யோவான் 2:25).

மரியாள் கர்த்தரைக் கண்டபோது கோபங்கள் அனைத்தும் பறந்துப் போயின. அவள் அவருடைய பாதங்களில் விழுந்து, பாதங்களை அணைத்துக்கொண்டு, கண்ணீருடன், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்று மாத்திரம் கூறினாள். அது உணர்ச்சிகளைத் தூண்டுகிற தருணமாய் இருந்தது. நமது கர்த்தருடைய பிரியமான தோழி கண்ணீரில், பாதத்தில் விழுந்துகிடந்தாள், அநேகம் யூதர்களும் அவளோடுகூட அழுது,

புலம்பிக்கொண்டிருந்தனர். இவைகள் என்ன தாக்கத்தை நமது கர்த்தரிடத்தில் ஏற்படுத்தியது? அவர் இரக்கமற்று நின்றாரா? இல்லை. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல்" என்ற வசனத்தின்படி அவர் காணப்பட்டார் (எபிரெயர் 4:15). அவர் அனுதாபத்தினால் முழுக்க நிரம்பினவராக இருந்தார்; அவர் மரணத்தின் உண்மையான அர்த்தத்தையும் அது ஒரு சாபம் என்றும், மனுக்குலத்தின் மீது காணப்படும் பயங்கரமான சாபம் என்றும், அவர் முழுமையாய் உணர்ந்துக்கொண்டார். லாசரு பரலோகத்தில் காணப்படுகின்றார் என்று மரியாளை ஆறுதல்படுத்தும் வண்ணமாக இயேசு எதுவும் கூறவில்லை, காரணம், அவர் உண்மையையே பேசுகிறவராய் இருந்தார். வேறொரு தருணத்தின்போது அவர் "பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று கூறியுள்ளார் (யோவான் 3:13).

மாறாக நம்முடைய சந்ததியின் மீது காணப்படுவதும், சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவிக்கிறதுமான, துன்பத்தை ஆழமாய் அனுபவித்தவராக, இயேசு கண்ணீர் விட்டார். வேதாகமத்தில் மிகச் சிறிய வசனமாகிய, "இயேசு கண்ணீர் விட்டார்" என்பதானது, நமது கர்த்தர் அனுதாபம், இரக்கம் மிக்கவர் என்றும், அவர் நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்திருக்கிறார் என்றும், நாம் மண் என அவர் நினைவுகூருகின்றார் என்றுமுள்ள ஐசுவரியமான நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நாம் அவருடையவர்களாய் இருந்து, நம்முடைய சோதனைகளின் கீழ்ச் சரியாய்க் காணப்படுவோமானால், நமக்கான சோதனைகள் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நடைப்பெறும் என்பதாக அவர் வாக்களித்து, அறிவித்துள்ளவைகளாகிய அனைத்தையும் அவர் உணர்ந்தவராகவே இருக்கின்றார் என்பதே சிறந்த நிச்சயங்களில் ஒன்றாக இருக்கின்றது. இங்கு மற்றவர்களாகிய யூதர்கள் அழுததற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, அழுது புலம்புதல் எனும் அர்த்தத்தைக் கொடுத்தாலும், நமது கர்த்தர் கண்ணீர் விட்டார் என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, அழுது புலம்புதல் எனும் அர்த்தத்தைக் கொடுக்கிறதாக இல்லை; அவர் கண்ணீர் விட்டார்; ஆனால் துக்கத்தில் தம்முடைய சத்தத்தை உயர்த்தி அவர் அழவில்லை, அவர் ஆவியில் கலக்கமடைந்தார், தவித்தார், பெருமூச்சுவிட்டார், மற்றும் தம்முடைய நண்பர்களுடைய துக்கத்திற்குள்ளாக முழுமையாய்ப் பிரவேசித்தார். இது அழுவாரோடு அழுவதற்கும், சந்தோஷப்படுவாரோடு சந்தோஷப்படுவதற்கும் அவருடைய பின்னடியார்களுக்குப் படிப்பினையாக இருக்கின்றதல்லவா?

இயேசுவுடன் காணப்பட்ட யூதர்கள் அவருடைய அனுதாபத்தைக் கவனித்து, "இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்" என்று பாராட்டினார்கள், ஆனால் மற்றவர்களோ, "இவர் அற்புதம் பண்ணுகிறவராயிற்றே. இவர் இவருடைய நண்பனை உண்மையாய் சிநேகித்திருந்தாரனால், இவர் அவருக்கு உதவியிருக்கலாமல்லவா?" என்று குறை கூறினார்கள்.

இன்றும் கர்த்தர் வியாதியையும், துக்கத்தையும், மரணத்தையும் அனுமதிப்பதற்காக, சிலர் அவரைக் குறை கூறிக்கொண்டிருக்கின்றனர்; இன்னுமாக இவைகளையெல்லாம், அதாவது மனித குடும்பத்தைப் பாடுபடுத்தும், எதிரான காரியங்களை/தீமைகளை அவர் அப்புறப்படுத்தாததற்கான காரணம், தேவன் வல்லமையில் குறைவுப்பட்டிருப்பதினாலோ அல்லது தேவன் விருப்பமற்று இருப்பதினாலோ என்று இவர்கள் கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். விசுவாசத்தினுடைய அர்த்தம் பின்வருமாறு:-

"தெளிவின்மையுடன் கர்த்தரை நியாயம் தீர்த்திடாதே
ஆனால் அவருடைய கிருபைக்கென அவரை நம்பிடு;
கடுமையான ஏற்பாட்டின் பின்தனிலே (பின்னால்)
அவர் மறைத்துள்ளார் அவர்தம் புன்னகைக்கும் முகத்தை."

கல்லறை என்பது, வாயிலில் பெரிய கல்லினால் அடைக்கப்பெற்ற கல்லறையாகும். இந்தக் கல்லை அகற்றும்படிக்கு இயேசு கட்டளைக்கொடுத்தார். மரித்தவரை உயிரோடு விழிக்க செய்வதற்கான அதே வல்லமையானது, கல்லைப் புரட்டித் தள்ளுவதற்கும் வல்லமையுள்ளதுதான். ஆனால் மனிதனால் செய்ய முடிகின்ற எதையும், அற்புத வல்லமையினால் செய்யக்கூடாது என்ற வரையறையைக் கர்த்தர் கொண்டிருந்தார். இந்த ஒரு படிப்பினையை, நம்முடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் நாம் பொருத்துவதும் நன்மைக்கு ஏதுவாய் இருக்கும். மேலும் இதற்கு இசைவாகவே நாம் நம்முடைய துக்கங்களுடனும், பிரச்சனைகளுடனும், வேதனைகளுடனும் கர்த்தரிடத்தில் வந்து, அவருடைய ஆசீர்வாதங்களையும், நன்மைக்கு ஏதுவாய் மாற்றும் அவருடைய வழிநடத்துதல்களையும் கேட்கும்போது, நம்மால் செய்யச் சாத்தியமான காரியங்களில் நாம்,

விசேஷித்த குறுக்கீடுகளை எதிர்ப்பார்க்கக்கூடாது. இப்படி ஒருவேளை எதிர்ப்பார்த்தோமானால், நாம் சந்தேகத்திற்கிடமின்றி ஓர் ஆசீர்வாதத்தை இழக்கின்றவர்களாய் இருப்போம். கல்லறையின் வாயிலினின்று கல்லைப் புரட்டிப்போட்ட மனிதர்கள், அற்புதத்திற்குப் பிற்பாடு, இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கையிலும், மற்றவர்களிடத்தில் சொல்லும்போதும், தாங்கள்தான் கல்லைப் புரட்டிப் போட்டார்கள் எனச் சொல்வது தொடர்புடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள் என்பதில், யாருக்குத்தான் சந்தேகம் வரும். இவ்விஷயமானது, அற்புதத்தின் முக்கியத்துவத்தை இவர்களுடைய மனதில் பதிய வைத்திட உதவியிருக்கும் என்பதில் யாருக்குத்தான் சந்தேகம் வரும். நம்மால் முடிந்த யாவற்றையும் நம்முடைய முழுப் பலத்தினால் செய்துவிட்டு, நமது கரம் நிகழ்த்துவதற்கு வலுவற்றதாய் இருக்கும் காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருப்போமாக.

## "அவன் மரித்து நாலு நாளாயிற்றே"

"இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" (யோவான் 11:22) என்று கூறின அதே மார்த்தாள், இப்பொழுது கல்லறையினின்று கல்லைப் புரட்டிப்போடும் விஷயத்தில், "ஆண்டவரே இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே" என்று மறுப்புத் தெரிவித்தாள். யவீருவின் மகளையும், நாயீன் ஊர் விதவையின் மகனையும் இயேசு உயிரோடு எழுப்பியிருந்ததை மார்த்தாள் அறிந்திருக்க வேண்டும்; ஆனால் இந்த இரண்டு சம்பவங்களிலும், மரித்தவர்கள், மரித்துப்போன கொஞ்சம் நேரத்திற்குள்ளாகவே உயிரோடே எழுப்பப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஆனால் லாசருவின் விஷயத்திலோ, அழுகிப்போக ஆரம்பித்த பிற்பாடு, மரித்தவனை உயிரோடு கொண்டுவருவதற்கான வல்லமை சாத்தியமற்றதாக மார்த்தாளுக்கும், மற்றவர்களுக்கும் தோன்றியது. இதன் காரணமாகவே நமது கர்ததர் முன்னமே, "நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறினார். இச்சம்பவமானது அவருடைய அன்புக்குரிய நண்பிகளாகிய மார்த்தாளுக்கும், மரியாளுக்கும் மட்டுமல்லாமல், அவருடைய அருமை சீஷர்களுக்கும், ஓர் அருமையானப் படிப்பினையாக இருக்கப் போகின்றது; இன்னுமாக அவருடைய வார்த்தைகள் மூலம் விசுவாசிக்கப் போகிற அனைவருக்குங்கூட, அருமையான படிப்பினையாக இருக்கப்போகின்றது. இது மிகவும் பிரம்மிக்க வைக்கின்றதான அற்புதமாகும்.

லாசருவை வெளியே வரும்படிக்கு அழைப்பதற்கு முன்னதாக, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்கள் முன்னிலையிலும், துக்கிக்கிறவர்களாகிய திரளான ஜனங்கள் முன்னிலையிலும் சத்தமாய் ஜெபம் பண்ணினார். பொருத்தமற்ற இடங்களிலும், நேரங்களிலும் ஜெபம் செய்யப்படுவதின் காரணமாக கர்த்தர், தெருச்சந்திகளில் பரிசேயர்கள் ஏறெடுக்கும் ஜெபத்தைக் கண்டித்தாலும், இங்கு அவர் பொது இடங்களில் ஜெபம் பண்ணுவதற்கு ஒப்புதல் கொடுக்கின்றார். பரிசேயர்கள் தங்கள் ஜெபம் பண்ணுவது, மனுஷர்களால் பார்க்கப்பட வேண்டுமென்றும், கேட்கப்பட வேண்டுமென்றும் ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருந்தார்கள். ஆனால் இயேசுவின் விஷயத்திலோ, தம்முடைய வல்லமையினால் அல்லாமல், பிதாவின் வல்லமையினால், தேவனின் விரல்களினாலேயே, தாம் இந்த அற்புதங்களை நிகழ்த்தியதாகச் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் அறிந்துக்கொள்ளத்தக்கதாக, பிதாவை வெளிப்படுத்தினவராக இருந்தார்.

"பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்." இயேசு முணுமுணுக்கவோ, மந்திரங்கள் ஓதவோ, மாயமந்திரமோ செய்யாமல், உரக்க சத்தத்தில் கூப்பிட்டார். இந்த அற்புதத்தினுடைய அநேக அம்சங்களை வைத்துப்பார்க்கும்போது, கர்த்தர் அவருடைய மகிமையடைந்த சபையுடன் கூடச் செய்யவிருக்கும் மகிமையான வேலைக்கு நிழலாய் இருக்கின்றது; அப்போது கல்லறைகளில் இருப்பவர்கள் அனைவரிடத்திற்கும், "வெளியே வாருங்கள்" என்ற செய்தி உன்னதத்திலிருந்து வரும் (யோவான் 5:28). லாசரு கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்டவராகவும், சீலைகளினால் கட்டப்பட்டவராகவும் வெளியே வந்தார். அங்கிருந்தவர்கள் ஆச்சரியமடைந்ததைக் குறித்து விளக்குவதைக் காட்டிலும், நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடியும். இயேசு அவர்களை நோக்கி, "இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" என்று சொல்ல வேண்டிய அளவுக்கு, சுற்றியிருந்தவர்களைச் சுயநினைவுக்குக்கொண்டு வர வேண்டியிருந்தது. லாசரு மரித்தபோது, அவருடைய தாடைகள்,

கைக்கால்கள் அனைத்தும் சீலையினால் கட்டப்பட்டிருந்ததினால், இயேசு கட்டவிழ்க்கக் கூறினார். அற்புதமானது சரியான சந்தர்ப்பத்தில் நடைபெற்றது; இது துக்கித்திருந்த சகோதரிகளுக்கு மாத்திரமல்லாமல், சுற்றி நின்ற அச்சகோதரிகளின் யூத நண்பர்களுடைய நன்மைக்கும் ஏதுவாய் இருந்தது; சுற்றி நின்ற இந்த யூத நண்பர்களில் அநேகர், இந்த அற்புதத்தைக் கண்டதினால், அவரை விசுவாசித்தார்கள்; இந்த அற்புதம் அப்போஸ்தலர்களுக்குக்கூட நன்மைக்கு ஏதுவாய் இருந்தது; இது இன்னும் கொஞ்சம் நாட்களுக்குப் பின்பாகக் கர்த்தர் சிலுவையில் அறையப்படுதல் தொடர்புடையதாய், அப்போஸ்தலர்களுக்கு வரவிருக்கின்ற பரீட்சைகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறதாயும் இருந்தது.

இதற்கிடையில் அற்புதத்தைக் கண்ட சிலர், தங்கள் வழிகளில் போகையில், காரியங்களைப் பரிசேயர்களுக்கும் அறிவித்தார்கள்; இதினிமித்தம் நமது கர்த்தர் மரிக்க வேண்டும் என்று பரிசேயர்கள் மிகுந்த தீர்மானத்துடன் காணப்பட்டார்கள்; இயேசு தீமையான கிரியைகளைச் செய்திட்டார் என்பதினால் அல்லாமல், அவர் ஒரு மோசமான மனுஷன் என்று பரிசேயர்கள் நம்பினதாலும் அல்லாமல், மாறாக பரிசேயர்கள் தங்கள் ஜனங்கள் தொடர்புடைய விஷயத்தில், தங்களுடைய சொந்த நோக்கங்களுக்குள்ளும், சொந்த திட்டங்களுக்குள்ளும் மிகவும் மூழ்கி இருந்தபடியால், கர்த்தர் மரிக்க வேண்டும் என்று தீர்மானமாய் இருந்தார்கள். ஒருவேளை இயேசு இப்படியாகவே தம்முடைய வேலையைச் செய்துகொண்டிருப்பாரானால், சீக்கிரத்தில் ஜனங்கள் அனைவரும் இயேசுவுக்குப் பின்னாகப் போய்விடுவார்கள் என்பதும், தங்களுடைய தேசம் மற்றும் மத விஷயங்களில், தங்களுக்கு அதிகமான சுதந்திரத்தைக் கொடுத்துள்ள உரோம அரசாங்கமானது அதிகாரங்கள் அனைத்தையும் தங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் என்பதும், இப்படியாகத் தங்களுடைய ஆட்சி முற்றிலுமாய்க் கவிழ்ந்துப் போய்விடும் என்பதும்தான் பரிசேயர்களுடைய வாதமாக இருக்கின்றது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆபத்தான கட்டம் வந்துள்ளது எனப் பரிசேயர்கள் எண்ணினார்கள். இப்படியாகவே இந்தத் தற்கால அறுவடையின் காலத்தில், இன்னும் கொஞ்சம் காலத்திற்குள்ளாக, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய கடைசி அங்கத்தாரிடத்தில், கிறிஸ்தவ மண்டலத்தாருடைய மனப்பான்மை காணப்படும். அன்று இயேசுவை எதிர்க்க வேண்டும் என்று ஆலோசனை சங்கம் தீர்மானித்தது போன்று, இன்று சபை கூட்டமைப்பானது (FEDERATIONS) முற்றிலும் ஒழுங்குப்படுத்தப்பட்டு, உயிரடையும்போது, சபைகளின் கூட்டமைப்பானது, "தற்கால சத்தியத்தை/ஏற்றக்கால சத்தியத்தை" எதிர்ப்பதற்குத் தீர்மானம் எடுக்கும். (வெளிப்படுத்தல் 13:15). இவைகளையெல்லாம் நன்மை கருதி செய்யவேண்டும் என்று வாதமும் காணப்படும். பரலோக இராஜ்யமானது எப்படியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பது, தொடர்புடைய தங்கள் சொந்த கூற்றுகளின் மீதான அதிகப்படியான சார்ந்திருத்தலும், அதிகப்படியான சுயநம்பிக்கையுந்தான் கிறிஸ்தவ மண்டலத்தின் தவறாய் இருக்கின்றது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று பல நூற்றாண்டுகள் காலமாக இவர்கள் ஜெபம் ஏறெடுத்தும், இவர்கள் இவ்வார்த்தைகளினுடைய அர்த்தத்தை முற்றிலுமாக தவறாய்ப் புரிந்துக்கொண்டபடியால், இவர்களுக்கு இராஜ்யத்திற்கான சம்பவங்கள் அனைத்தும் இசைவற்றதாகவும், அழிவிற்குக் காரணமானதாகவும் தோன்றுகின்றது.

## "லாசரு எங்கே இருந்தார்?"

லாசரு பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதற்கு, நமது கர்த்தருடைய வார்த்தைகள் ஆதாரமாய் உள்ளது; ஏனெனில், "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று கர்த்தரே கூறியுள்ளார்; இதற்கு இசைவாகவே அப்போஸ்தலனாகிய பேதுருவின் சாட்சி மறைமுகமாகக் காணப்படுகின்றது; "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே" (அப்போஸ்தலர் 2:34). லாசரு எங்கே இருந்தார்? இதைக் குறித்து லாசரு என்ன கூறியுள்ளார்? இது குறித்து லாசரு எதுவும் சொல்லவில்லை. லாசரு சொல்வதற்கு எதுவும் இல்லை, ஏனெனில் அவர் எங்கேயும் செல்லவில்லை, அவர் மரித்துப்போயிருந்தார். நமது கர்த்தர் பரலோகத்தில் உள்ள பிதாவிடம் தமது கண்களை ஏறெடுத்து, ஜெபம் பண்ணி, பின்னர் லாசருவை அழைக்கும்போது அவர் கல்லறையை நோக்கிப் பார்த்தே, "லாசருவே வெளியே வா" என்று கூறினார் மற்றும் மரித்தவன் கல்லறையினின்று வெளியே வந்தான். இது இறுதியில் முழு உலகத்திற்குமான உயிர்த்தெழுதலின் வல்லமையாக எவ்வாறு அவர் இருக்கப் போகின்றார் என்பதை முன்கூட்டியே காட்டுவதற்கான, கர்த்தருடைய வல்லமையின் காட்சி என்று நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" (யோவான் 5:28). சிலர் முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமையான பூரணத்திற்கும், மீதியானவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று முழுமையான பூரண மனுஷீக சுபாவத்திற்கு வருவதற்கான வாய்ப்பிற்கும் உயிர்த்தெழுந்து வருவார்கள்; நியாயத்தீர்ப்பின்

(அ) ஒழுங்குப்படுத்துதல்களின் மூலமாக, பலன்கள் மற்றும் அடிகள் வாயிலாக, உயிர்த்தெழுதலில் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று, முழுமையான பூரண மனுஷீக சுபாவத்திற்கு, மீதமான மனுக்குலம் கொண்டுவரப்படுவார்கள்.

இயேசுவின் விசேஷித்த நண்பனும், அவரால் நேசிக்கப்பட்டவனுமான லாசரு, உத்தரிக்கும் ஸ்தலத்திற்கோ, அல்லது நரகத்திற்கோ செல்லாமல், பரலோகத்திற்குதான் போயிருக்க வேண்டும் என்ற தப்பறையான கண்ணோட்டம், கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பிரபலமாய்க் கிடக்கின்றது. ஆனால் ஒருவேளை லாசரு பரலோகத்தில் சில நாட்கள் காணப்பட்டிருந்திருப்பாரானால், அவரை இயேசு மீண்டுமாக பூமிக்குரிய ஜீவியாக வாழ அழைப்பது என்பது இயேசு அவரிடம் அன்பற்ற விதத்தில் நடந்துக் கொள்வதாக அல்லவா இருக்கும்; மேலும் லாசரு கிரீடத்தை (அ) குருத்தோலையை (அ) இசைக் கருவியைப் போட்டுவிட்டு, எவ்வளவு அவசர அவசரமாய்ப் பூமியில் வந்திருக்க வேண்டும்! இல்லை! இல்லை! இவை அனைத்தும் முட்டாள்தனமான கற்பனைகளாகும், மற்றும் இவை நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தினுடைய விலையேறப்பெற்ற படிப்பினைக்கு, முற்றிலும் இசைவற்றும் காணப்படுகின்றது. இயேசு தம்முடைய மரணத்தின் மூலமாக ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததியாருக்காகவும், மீண்டும் வாழ்வதற்கான உரிமையைப் பெற்று வைத்திருக்கின்றார்; மேலும் உயிர்த்தெழுதலுடைய வல்லமையின் மூலமாகவே அவர் மனுக்குலத்தை, மரணத்தின் பிடியிலிருந்து கொண்டுவருவார். லாசரு தன்னுடைய மரணத் தருவாயில் தன்னுடைய சுயநினைவை இழந்துபோனார், மேலும் அவர் விழித்தெழுந்த தருணத்தில் மீண்டுமாக சுயநினைவைப் பெற்றுக்கொண்டு விட்டார். இடைப்பட்ட நான்கு நாட்களில், அவர் மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருந்தார்; "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்று இயேசு கூறியபடியே, லாசரு நித்திரையாய் இருந்தார். லாசரு விழித்திருக்கவில்லை, ஆகவேதான், இயேசு, "நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்று கூறினார்; இப்படியாகவே வேதவாக்கியங்கள் எங்கும் காணப்படுகின்றது. "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:5, 10).

முழு உலகமும் எழுந்திருப்பதைக் கற்பனைப் பண்ணிப்பாருங்கள், அது எத்துணை மகிழ்ச்சியான தருணமாக இருக்கும்; ஒருவர் பின் ஒருவராக, மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலையிலினின்று வெளியே வருவதும், அவரவர்களுடைய நண்பர்களினால் வரவேற்கப்படுவதும், எத்துணை மகிழ்ச்சிகரமான தருணங்களாக இருக்கும்; இன்னுமாக பூமியானது திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதையும், படிப்படியாக ஏதேனில் காணப்பட்ட முழுமையான பூரணத்தை நோக்கி முன்னேறுவதையும், இராஜ்யம் அளிக்கும் ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளால் சூழப்பட்டுள்ள மனுக்குலமானது பூமி முழுவதும் நிரம்பிக் காணப்படும் தேவனைப் பற்றின அறிவாகிய வெளிச்சத்தினால், பூரணத்தை நோக்கி முன்னேறுவதையும் காண்பது எத்துணை மகிழ்ச்சிகரமாய் இருக்கும். ஓ! இவைகளெல்லாம், புறமதத்தார் போதித்தவைகளுக்கும் மற்றும் விலங்குகளாக மறுஜென்மத்தில் அவதாரம் எடுப்பது தொடர்பாக கற்பனை பண்ணியுள்ளவைகளுக்கும், எவ்வளவு மாறுபட்டதாய் இராஜ்யத்தில் மனுக்குலத்தாருக்குத் தோன்றும்! ஓ இவைகளெல்லாம், நித்திய சித்திரவதை (அ) உத்தரிக்கும் ஸ்தலத்தின் வேதனைக் குறித்த தவறான உபதேசங்களைக் கேட்டவர்களாகவும், இப்படியான சித்திரவதைக்குள் போகக்கூடாது என்று பயத்தோடே மரித்தவர்களாகவும் காணப்பட்ட மனுக்குலத்திற்கு, இராஜ்யத்தில் எவ்வளவு மாறுபட்டதாய்த் தோன்றும்! மனுக்குலத்தார் எவ்வளவு நன்றியுள்ள இருதயத்தை இராஜ்யத்தில் கொண்டிருப்பார்கள்! அநேகமாகச் சாத்தானுடைய பொய்யானது, இறுதியில் தேவன் மகிமைப்படவே உதவும்; மேலும் அநேகமாக இந்தக் காரணத்தினால்தான், தேவன் இவ்வளவு காலம் அமைதியாய் இருந்து, தம்முடைய பரிசுத்த நாமம், தீமையாய்ப் பேசப்படுவதற்கும், குற்றமாய்ப் பேசப்படுவதற்கும், தம்முடைய குணலட்சணங்கள் பழிதூற்றப்படுவதற்கும் அனுமதித்திருக்க வேண்டும்!

## "உயிர்த்தெழுதலும், ஜீவனும்"

நம்முடைய ஆதார வசனம் குறித்து, இன்னும் ஆழமான கருத்துக்களும் காணப்படுகின்றது; அதை நாம் பார்க்காமல் விட்டுவிடக்கூடாது. அதென்னவெனில்:- கர்த்தரில் இப்பொழுது விசுவாசம் கொண்டு, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்குமான அழைப்பைக் கேட்டு, கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணம் பண்ணுவதின் மூலமாக, அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டவர்களாகிய நாம், சிலசமயம், ஏற்கெனவே புதிய ஜீவனை, உயிர்த்தெழுந்த ஜீவனைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், ஏற்கெனவே மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்து வந்தவர்களாகவும் பேசப்படுகின்றோம். இவை உயிர்த்தெழுதலுக்கும், ஜீவனுக்குமான அடையாள வார்த்தைகளாகும். பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தல் மூலமாக, நாம் பழைய சுபாவத்தைக் களைந்துப் போட்டவர்களாகவும், கர்த்தரிடத்திலிருந்து புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றோம்; மேலும் இந்தப் புதிய சுபாவமே, முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணமடைய போகின்றதாய் இருக்கின்றது. நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட மாத்திரத்தில், நம்முடைய மனுஷீக சுபாவம் மரித்துப்போனதாகக் கருதப்படுகின்றபடியால், நம்முடைய தற்போதைய நிலைமையை, உயிர்த்தெழுப்பப்பட்ட நிலைமையாக வேதவாக்கியங்கள் தெரிவிப்பது நியாயமாகவும், சரியானதாகவும் இருக்கின்றது; இன்னுமாக நாம் ஜீவனுக்கான புதிய வழியில் ஆரம்பித்துவிட்டோம் என்றும், தற்போதைய அனுபவங்கள் மறுரூபமடைதல் என்றும், இந்த மறுரூபமாகுதலின் முடிவில், பெலவீனத்திலிருந்து வல்லமைக்கும், மாம்ச சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கும், கனவீனத்திலிருந்து மகிமைக்குமான நிஜமான மாறுதல் நடைபெறும். அப்போது நாம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் மகிமையான மாறுதலில், நிஜமாகப் பங்கெடுக்கின்றவர்களாய் இருப்போம்.

இந்த இளைப்பாறுதலுக்குள், இந்த ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்க முயற்சிப்போமாக! இப்படியான ஓர் உயர்வான ஸ்தானத்திற்கும், சிலாக்கியத்திற்கும் நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்; மேலும் நாம் கேட்பதற்கும், எண்ணிப்பார்ப்பதற்கும் மேலாக அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி, நமக்கு மேன்மையாகவும், அதிகமாகவும் அவர் செய்வார். "எல்லாம் உங்களுடையதே; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரிந்தியர் 3:21, 23). இதற்கிடையில் இந்த அடையாளமான உயிர்த்தெழுந்த ஜீவியத்தை ஜீவிக்கும் நமக்கும், அப்போஸ்தலருடைய வார்த்தைகள் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, அதாவது "நான் ஜீவிப்பது என்பது கிறிஸ்து ஜீவிப்பதாகும்." ஏனெனில் நாம் அவரை அடையாளப்படுத்துகின்றோம்; நாம் அவருடைய ஸ்தானாதிபதிகளாக இருக்கின்றோம். இதற்கிடையில் நம்முடைய (நிஜமான) உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கை அவருக்குள் காணப்படுகின்றது என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோசெயர் 3:3, 4).

**ஆமென்!**

---

கர்த்தருடைய பின்னடியார்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்க் கவனித்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது (யோவான் 13: 16, 17).

தாலந்துகளோ அல்லது திறமைகளோ உடையவர்களும் அல்லது வாழ்க்கையில் கனம் வாய்ந்த ஸ்தானங்கள் வகிப்பவர்களும் மற்றும் சபையில் செல்வாக்கு நிறைந்த ஸ்தானங்களில் விசேஷமாகக் காணப்படுகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், விசேஷமாக போட்டி மனப்பான்மை, வாக்குவாதம் பண்ணும் மனப்பான்மை, வீண் செருக்குக்கொள்ளும் தன்மை முதலியவைகளினால் ஆட்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆகவே மாம்சத்தின் இந்த விஷயங்களுக்கு எதிராக விசேஷ வண்ணமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும் என்றபோதிலும், "பொறாமையுடன் ஏறெடுத்துப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமை உண்டு மற்றும் ஏளனத்துடன் கீழாய்ப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமையும் உண்டு" என்ற வாசகமானது மறக்கப்படக் கூடாது. எவ்விஷயத்தைக் குறித்தாகிலும் பெருமை காணப்படுமாகில் அது தேவனுடைய பார்வையில் குற்றத்திற்குரியதாகவும், அவருக்குப் பிரியமற்றதாகவும் காணப்படும். "பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்." ஆகவே, கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் தாழ்மையாய் இருக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அதாவது, மிகவும் தாழ்மையாக, நடத்தையில் மிகவும் தாழ்மையாக, எளிமையாக, குறிப்பாக மனதில் தாழ்மையாக இருப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5).

---

# வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி

## யோவான் 16:4-15

**"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்." யோவான் 14:16**

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவர் கெத்செமனேக்குப் போகின்ற வழியில், நாம் இப்பாடத்தில் பார்க்கவிருக்கிற காரியங்களை, தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார். தம்முடைய சீஷர்களாக அவர்கள் எதையெல்லாம் எதிர்ப்பார்க்கலாம் என்றும், தமக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் காண்பிக்கும் உண்மையினிமித்தம் அவர்கள் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, நிந்திக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் அவர்களுக்குக் கூறினார். "அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை" (யோவான் 16:4). "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கர்த்தர் கூறி அவர்கள் எதிர்ப்பார்த்திருக்க வேண்டியவைகள் அனைத்தையும் குறித்து, தாம் அவர்களுக்குக் கூறவில்லையென்று தெரிவித்தார் (12-ஆம் வசனம்). இப்படியாகவே, கர்த்தருடைய சீஷர்களாகும் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அந்தந்த நேரத்தில் ஓர் அடி எடுத்துவைப்பதற்குப் போதுமான வெளிச்சத்தைப் பார்க்கின்றனர். ஆனால் எதிர்க்காலத்தில் வரும் சோதனைகள் மற்றும் சிரமங்களானது, இவைகளினிமித்தம் அவர்கள் அமிழ்த்தப்பட்டுப் போகாதபடிக்கு கிருபையாக மறைத்து வைக்கப்படுகின்றது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." இப்படிச் செய்வதென்பது, சீஷர்களுடைய சித்தங்களுக்கு எதிராக, சீஷர்களை ஏதோ ஒன்றைச் செய்ய வைப்பதற்கென அவர்களை வசீகரிப்பதாகவும், ஏமாற்று, சதி பண்ணுவதற்காகவும் இல்லை. ஆரம்பத்திலேயே நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றி வரவில்லையெனில், நாம் அவருடைய சீஷர்களாய் இருக்கமுடியாது என்று நமக்கு உறுதியாய்த் தெரிவித்துள்ளார். இந்த ஓர் அடியை நாம் உண்மையுடனும், நேர்மையுடனும் எடுத்து வைத்திருந்திருப்போமானால், இது தொடர்பாக வரப்போகின்ற உபத்திரங்களுடைய விவரம் தெரியாமல் இருந்தாலும், பல சிரமங்கள் இருப்பதை நாம் காண்போம். ஒருவேளை நமக்கு எதிர்க்காலத்தில் வரும் சோதனைகளை நாம் அறிந்துக்கொள்வோமானால், நாம் மிகவும் அமிழ்த்தப்பட்டு விடுவோம். காரணம் ஆரம்பத்தில், "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" மற்றும் "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் வாக்குத்தத்தங்களின் அர்த்தத்தை நாம் குறைவாகவே புரிந்துக்கொண்டிருப்பவர்களாகவே காணப்படுவோம் (2 கொரிந்தியர் 12:9 மற்றும் 1 கொரிந்தியர் 10:13). கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, ஒவ்வொரு அடியை எடுத்துவைக்கும்போது, இந்த வாக்குத்தத்தங்கள் உண்மையாய் இருப்பதைக் காண்பார்கள், தாங்கள் நிலைநிறுத்தப்படுவதை உணர்வார்கள். தங்களால் தாங்கிக்கொள்ள முடிகின்றவைகளே தங்களுக்கு இருக்கின்றது என்பதைஉணர்வார்கள்; மற்றும் கடந்துவந்த பாதையில், முன் காலங்களில் வந்ததைக் காட்டிலும், (இப்பொழுது வரும்) தங்களுடைய சோதனைகள் கடுமையானதாக இருப்பினும், இவைகள் கிருபையிலும், அறிவிலும் உள்ள வளர்ச்சியின் காரணமாக, ஜெயங்கொள்ளப்படலாம் என்றும் உணர்வார்கள்.

கர்த்தர் தம்முடைய சொல்லர்த்தமான, கூட இருத்தல் இல்லாத நாட்களில், தம்முடைய துன்புறுத்தப்படும் பின்னடியார்களுக்கு ஒரு வல்லமையின் மூலம் தம்முடைய உதவியை அளிக்கக்கூடிய காரியமானது, அவர்கள் புரிந்துக்கொள்வதற்குக் கடினமாக இருந்தது. அவர்கள் பொருட்டு, ஆண்டவர் தாம் செயல்படுத்தும் வல்லமையை, செல்வாக்கை, பரிசுத்த ஆவி என்று, தேவனுடைய ஆவி என்று, கிறிஸ்துவினுடைய ஆவி என்று அழைப்பதன் மூலம் விஷயத்தைத் தெளிவுபடுத்துகின்றார். சீஷர்கள் மீது செயல்படுத்தப்படப்போகிறதான செல்வாக்கானது,

ஆறுதல்படுத்துகின்றதாயும், தாங்கி நிலைநிறுத்துகின்றதாயும் இருக்கப்போவதினால், இந்த வல்லமையை அல்லது ஆவியைக் கர்த்தர், ஒரு தேற்றரவாளனாக, தாங்கி நிறுத்துபவராக, ஓர் உதவியாளராகக் கூறினார். அவர்களை நடத்துவதற்கென்று வேறொரு நபரை அனுப்புவதாகக் கர்த்தர் கூறவில்லை. அவரைக் காட்டிலும் வேறெந்த ஒரு நபராலும், அவர்களைச் சிறப்பாக நடத்த முடியாது. அவர் அனுப்பப்போவது ஓர் ஆவி, ஒரு செல்வாக்கு, ஒரு வல்லமையே ஆகும். மேலும் இந்த ஆவி பிதாவையும், தம்மையும் முழுமையாக அடையாளப்படுத்துகின்றதாயிருக்கின்றது. ஆகவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதன் வாயிலாக, அவர்கள் பிதாவுடன் உறவையும், குமாரனுடன் உறவையும் பெற்றிருப்பார்கள். பிதாவும், குமாரனும் ஆண்பாலில் கூறப்படுகிறது போன்று, இந்தப் பரிசுத்த ஆவியும் கூட ஆண் பாலில் பேசப்படுகின்றது.

## பரிசுத்த திரித்துவம்

"இருண்ட யுகங்களினுடைய" காலப்பகுதியில், அநேக குழப்பமான கருத்துக்கள் நிலவியிருந்தது மற்றும் வேதவாக்கியங்களுடைய தெளிவான போதனைகளும் மறைந்துபோயிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும், வேதாகமம் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது (பயன்படுத்தப்படவில்லை). "அப்போஸ்தலர் மரபு வம்சாவழி," எனும் உபதேசத்தின் கீழ், கண்காணிகள் அப்போஸ்தலர்களுக்குச் சமமானவர்களாகக் கருதப்பட்டனர். ஆகவே இவர்கள் ஆலோசனை குழுவில் கூடும்போது, ஓர் உபதேசம் பற்றின விஷயத்தில் இவர்களது முடிவு அல்லது வாக்களிப்பானது, அப்போஸ்தலர்களுடைய முடிவு என, அதிகாரப்பூர்வமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. நமது கர்த்தர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத்தான் தெரிந்தெடுத்தார் என்பதும், அந்த 12-பேருக்குப் பின்னர் வருபவர்கள் எவர்களையும் குறித்தும் கர்த்தர் பேசவில்லை என்பதும், வெளிப்படுத்தின விசேஷத்தில் பன்னிரண்டு அஸ்திபாரங்களை மாத்திரம் கொண்டுள்ள புதிய எருசலேமைக் குறித்தும், அந்தப் பன்னிரண்டு அஸ்திபாரங்களில், ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய நாமங்கள் காணப்படுவதைக் குறித்தும் கூறினதின் வாயிலாக, இந்தப் பன்னிரண்டு பேருக்குப் பின் வேறு அப்போஸ்தலர்கள் இல்லையெனத் தெரிவித்துள்ளார் என்பதும், கவனிக்கத் தவறப்பட்டது (வெளிப்படுத்தல் 21:14).

இரண்டாம் நூற்றாண்டினுடைய ஆரம்பக்கட்டத்தில், சபை மீதான கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கானது, குறிப்பிடத்தக்க நிலையில் காணப்பட்டது; மற்றும் பல்வேறு தப்பறைகளும் பிரபலமாய்க் காணப்பட்டது. இவைகளில் ஒன்று, விசேஷமாக நமது கர்த்தரைக் கிரேக்க தத்துவ ஞானிகளுடனும், சாக்ரடீஸ் உடனும், பிளோட்டோவுடனும் சரிசமமாக வைத்துவிட்டு, நமது கர்த்தருடைய விசேஷித்த பிறப்பையும், அவர் மனிதனாக வருவதற்கு முன்னதாகவே காணப்பட்டார் என்பதையும் மறுப்பதாகவும் இருந்தது. இந்தத் தப்பறைகளுக்கு எதிர்த்துப் போராடும் வண்ணமாக, கர்த்தருக்கு உண்மையாய்க் காணப்பட்ட சிலர் எதிர்முனைக்குச் சென்று இயேசுவினுடைய சொந்த வார்த்தைகளுக்கு எதிராக அவரைப் பிதாவுக்குச் சரிசமமாக்கினார்கள் (யோவான் 10:29; 14:28). அடுத்ததாகப் பரிசுத்த ஆவி தொடர்பாக வாக்குவாதம் எழும்பிற்று. பின்னர் இயேசுவின் விஷயத்தில் எதிர்முனைக்குச் சென்றவர்கள், மூன்று கடவுட்கள் இருக்கின்றார்கள் என்றும், அவர்கள் பிதா மற்றும் குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்றும், இவர்கள் மூவரும் "வல்லமையிலும், மகிமையிலும் சரிசமமானவர்கள்" என்றும் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் சரிசமமான ஆற்றல் உள்ள, வெவ்வேறு நபர்களாய் இருக்கின்றார்கள் என்று விநோதமாய்க் கூறிக்கொண்டிருக்கும்போதே, அடுத்ததாக இவர்கள் நபரிலும் ஒன்றாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது. இப்படிப்பட்ட வேதவாக்கியங்கள் தெரிவிக்காததும், காரணகாரியத்துக்கு உட்படாததுமான கருத்தானது, அதற்கே ஆதரவு அளித்திட முடியாது. ஆகவே இக்கருத்தையுடையவர்கள் பல்வேறு விதமான திருக்குமறுக்கான வாதங்களுக்குள் வழிநடத்தப்பட்டுள்ளனர். சில சமயம் இவர்களில் சிலர், ஒரு நபரில் உண்மையில் மூன்று கடவுள்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இன்னும் சிலர் ஒரு கடவுளில் மூன்று நபர்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இந்தப் பொருளற்ற சொற்களுக்கு இவர்கள் விளக்கம் கொடுக்க முடியாததினால், தவறையும், மூட நம்பிக்கையையும் மூடி மறைப்பதற்கு, வழக்கமாக பயன்படும் "இரகசியம்" எனும் வார்த்தையை கூறிவிடுகின்றனர். திருத்துவம் பற்றின காரியமானது, அவர்களும் சரி, மற்றவர்களும் சரி புரிந்துக்கொள்வதற்கு மிகவும் இரகசியமானதாக, மறைப்பொருளாக இருக்கின்றது என்று நம்மிடம் கூறுகின்றனர். ஒருவேளை இது அவர்களுக்குப் புரியவில்லை என்றால், அவர்கள் அதை விவாதிக்கக்கூடாது என்பது உண்மைதான். ஆனால் அதற்கென்று இதைப் புரிந்துக்கொள்பவர்கள், அதாவது திரித்துவம் பற்றின முழு இரகசியமும், சொந்த கற்பனை

என்பதை மிகத் தெளிவாய்க் காண்பவர்கள், அதாவது இவ்விஷயம் தொடர்பான வேதாகமத்தின் போதனையானது மிகத் தெளிவாயும், எளிமையாயும், இசைவாயும், திருப்திகரமாயும் இருப்பதைக் காண்பவர்கள் விவாதிப்பதிலிருந்து தடுக்கப்படக்கூடாது.

தேவனைப் பற்றி அப்போஸ்தலர் கூறும்போது, ஒரே ஒரு ஜீவனுள்ள, உண்மையான தேவன் இருக்கின்றார் என்று கூறுகின்றாரே ஒழிய, மூன்று என்று கூறவில்லை! இந்த ஜீவனுள்ள மற்றும் உண்மையுள்ள ஒரே தேவனைப் பிதா என்றும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் இருக்கிறார் என்றும், அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 8:6). மேலும் கர்த்தர் இயேசுவைப் பிதா உயர்வாக உயர்த்தினார் என்றும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார் என்றும், பிதாவைக் கனம் பண்ணுவது போன்று, அனைவரும் குமாரனையும் கனம் பண்ணும்படிச் செய்தருளினார் என்றும் இதே அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார் (பிலிப்பியர் 2:9-10; யோவான் 5:23). அப்படியென்றால், இரண்டு நபர்கள் இருக்கின்றார்கள்; இல்லையேல் வேறெந்த விதத்திலும் ஒருவர் மற்றொருவரை உயர்த்தி, கனப்படுத்த முடியாது. பிதாவைப் போன்று குமாரன் கனப்படுத்தப்பட்டதானது, வேறு வேதவாக்கியங்களினால் காட்டப்படுகின்றது. அதாவது இப்பொழுது இயேசு திவ்வியச் சுபாவத்தில் பங்கடைந்தவராக இருக்கின்றார்; மற்றும் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவருடைய சொந்த ஜீவனை ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தை மீட்கும்படிக்கு, உலகத்திற்கு வந்ததின் வாயிலாக, பிதாவின் சித்தத்திற்கு அவர் காட்டின கீழ்ப்படிதலுக்குப் பரிசாக அவர் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது. நாம் ஏற்கெனவே யோவான் 1:1-ஆம் வசனத்தில் பார்த்திருக்கின்றபடி, நமது கர்த்தர் உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக மற்றும் பிதாவின் பிரதிநிதியாகிய அவரால் உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னதாக, அவர் லோகோஸாக, வார்த்தையாக, யேகோவா தேவனின் செய்தியாளராக இருந்தார் மற்றும் ஒரு தேவனாகவும், வல்லமையுள்ளவராகவும், தேவத்தூதர்களுக்கு மேலானவராகவும், இருந்தார் மற்றும்... "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."

பிதாவையும், குமாரனையும் பற்றிக் கூறுகையில், அவர்கள் இருவரையும் தனித்தனி நபர்கள் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கையில், அவர் பரிசுத்த ஆவியை இன்னொரு தேவன் என்றோ அல்லது தேவனுடைய மூன்றாவது பாகமென்றோ குறிப்பிடாதது கவனிக்கப்பட வேண்டும். இன்னுமாக, அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப் புறக்கணிக்கவுமில்லை. அவருடைய நிரூபங்கள் எங்கும் இந்தப் பரிசுத்த ஆவியை, பிதாவினுடைய ஆவி என்றும், குமாரனுடைய ஆவி என்றும், சபைக்குப் பிதாவையும், குமாரனையும் அடையாளப்படுத்துகின்றதாய்க் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். "தேவன் ஆவியாயிருக்கின்றார்" என்பதை வைத்துக்கொண்டு, பரிசுத்த ஆவி ஓர் ஆவிக்குரிய ஜீவி என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. மாறாக ஆவி என்னும் வார்த்தையானது, ஓர் ஜீவியின் ஆவியை, அதாவது ஒரு நபரிடத்திலிருந்து வெளிப்படும் வல்லமையை, செல்வாக்கை, சித்தத்தை, நோக்கத்தை, பலத்தைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. பரிசுத்த ஆவி என்பது, பிதா மற்றும் குமாரனிடத்திலிருந்து வெளிப்படும் செல்வாக்கு அல்லது வல்லமையாகும். மேலும் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் அடங்கிய சபையிடத்திலான இந்தச் செல்வாக்கு அல்லது வல்லமையானது, இவர்களுடன் ஒன்று சேர்பவர்களிடத்திலும் செயல்படுகின்றதாய் இருக்கின்றது. இது எப்பொழுதும் நல்லதும், பரிசுத்தமானதுமான ஆவி அல்லது செல்வாக்காக இருக்கின்றது. ஆகவே இது உலகத்தின் ஆவியிலிருந்தும், உலகத்தின் மனப்பான்மையிலிருந்தும், உலகத்தின் செல்வாக்கிலுமிருந்தும், பாவத்தின் ஆவியிலிருந்தும், அந்தி கிறிஸ்து முதலானவைகளின் ஆவியிலிருந்தும் வேறுபட்டதாயிருக்கின்றது.

## பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை

துக்கத்துடனும், திகைப்புடனும், குழப்பத்துடனும் காணப்பட்டிருந்த தம்முடைய சீஷர்களிடம் நமது கர்த்தர் கனிவுடன், நிதானமாய், தம்மை அனுப்பிவைத்த பிதாவினிடத்திற்குத் தாம் திரும்பச் செல்வதைக் குறித்துக் கூறினார். எங்கே போகிறார் என்று அவர்கள் கேட்கவில்லை, காரணம் அவர் பிதாவினிடத்திலிருந்து வந்தார் என்பதும், தம்மை அனுப்பின பிதாவினிடத்தில் அவர் திரும்பப் போவார் என்பதுமான அவருடைய வார்த்தைகளை அவர்கள் நம்பினார்கள். ஆனால் துக்கம் அவர்களுடைய இருதயங்களை நிரப்பிற்று. தங்களுடன் கூடக் கர்த்தர் இல்லாமல், அவர்கள் என்ன செய்வார்கள்! ஒருவேளை கர்த்தர் போய்விடுவாரானால், இராஜ்யம் குறித்த வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறும்! மூன்று வருடங்களாக அவர்கள் மாய்மாலத்தைத்தான்

பின்தொடர்ந்திருக்கின்றார்களா? அவர்கள் கர்த்தரைச் சந்தேகிக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் குழம்பிப்போய் இருந்தார்கள். ஆகவே காரியத்தைச் சரியாக அவர்கள் புரிந்துக்கொண்டார்களானால், அவர்கள் கலக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதையும், உண்மையில் அவர்களுடைய நன்மைக்காகவும், அவர்களுடைய அனுகூலத்திற்காகவும், தாம் கடந்துப்போக வேண்டியுள்ளது என்பதையும் நமது கர்த்தர் அவர்களுக்கு விவரித்தார். தாம் போகவில்லையெனில், பிதா அவர்களை ஆவியில் ஜெநிப்பிப்பதும், அவர்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று அங்கீகரிப்பதும் கூடாததாய் இருக்கும். இவைகள் கூடாது என்றால், அவர்கள் மனிதர்களைவிட மேலானவர்கள் ஆகுவதும், ஆவிக்குரிய ஜீவிகள் அல்லது திவ்விய சுபாவத்தையும், அதனோடு கூட அதன் மகிமைகளிலும், கனங்களிலும் பங்காளிகளாகுவதும் கூடாததாக இருக்கும். நமது கர்த்தர் பிதாவினிடத்திற்குப் போகவில்லையெனில், அவர்களால் மனிதர்களுக்குரிய திரும்பக்கொடுத்தலைக் கூட அடைய முடியாது. காரணம் சபைக்கும், உலகத்திற்குமான இரட்சிப்பின் முழு வேலையும், நமது கர்த்தர் நீதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைச் சார்ந்துள்ளது. அடுத்த நாள் ஆதாமின் சந்ததி மேல் காணப்பட்ட ஆதாமின் பாவத்திற்காக கர்த்தர் தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரித்தார் மற்றும் மூன்றாம் நாளில், பிதா தம்முடைய சொந்த வல்லமையினால் அவரை உயிர்த்தெழுப்பினார். நம்முடைய சார்பில் நிகழ்த்திய இந்த மாபெரும் நிகழ்வில், மிகவும் முக்கியமான வேலை ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த வேலையின் பலனானது, முதலில் நமது கர்த்தர் பரத்திற்கு ஏறி, பிதாவின் முன்னிலையில் தோன்றி, தம்முடைய ஜனங்களின் சார்பாகத் தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது வரையிலும், சபைக்கும் மற்றும் உலகத்திற்கும் வரமுடியாது. (இயேசு 40 நாட்கள் சீஷர்களுடன் காணப்பட்டதுபோல) இயேசு ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, இந்த யுகம் முழுவதும் அவருடைய பின்னடியார்களுடன் கூடவே காணப்பட்டிருந்தால், ஒருவரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட முடியாது. நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திரச் சுவிகாரம் அடைவதற்கு முன்னதாக, நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, கிறிஸ்து பரத்துக்கு ஏறி, தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது அவசியமாயிருந்தது.

பெந்தெகொஸ்தே அன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட போது, அவர்கள், "இதுவே தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்டது," அதாவது "தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப்போஸ்தலர் 2:16) என்று கூறினார்களே ஒழிய, "இவரைப் பற்றியே தீர்க்கத்தரிசியாகிய யோயேலினால் உரைக்கப்பட்டது" என்று கூறவில்லை. இதை அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அழைத்தனர்! ஒரு நபரினால் ஞானஸ்நானம் என்பது எண்ணிப்பார்க்க முடியாத ஒரு கருத்தாக உள்ளது. பரிசுத்த ஆவி எனும் நபர், ஒவ்வொரு விசுவாசியினுடைய இருதயத்திலும், தனிப்பட்ட விதத்தில் தங்குகின்றார் என்பதும் சரியான கருத்தல்ல! ஆனால் பரிசுத்த ஆவியை நாம் தனி நபராக, பிதா மற்றும் குமாரனிடமிருந்து தனி நபராகப் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியானது வேதவாக்கியங்களில் தேவனுடைய ஆவியாக, தேவனுக்குரிய ஆவியாக, தேவனிடமிருந்து வருவதாகவும், கிறிஸ்துவிடமிருந்து வரும் கிறிஸ்துவின் ஆவியாகவும், அனைத்து இடங்களிலும் ஊடுருவக் கூடியதும், எந்த இடத்திலும், எத்தனை இடங்களிலும், எந்த நேரத்திலும், எவ்விதமான வேலையையும் செய்யக்கூடிய ஓர் ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமை என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த உண்மையான கருத்தானது, வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததும், அர்த்தமற்றதுமான கருத்துக்களைக்காட்டிலும் எத்துணை திருப்தியை அளிக்கின்றதாய் இருக்கின்றது. யோவான் 16:7-ஆம் வசனத்தில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "him" (அவரை) என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது it (அதை) என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம். அதாவது "அதை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." எனினும் அவரை என்ற வார்த்தை இடம்பெறுவதற்கும் நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரணம் இந்தப் பரிசுத்த ஆவி அல்லது செல்வாக்கானது பிதாவிடமிருந்தே வருகின்றது. இதுபோலவே 8-ஆம் வசனத்தில் இடம்பெறும் அவர் என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது (it) அது என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம்.

## உலகத்தின் ஆவி அல்ல

பரிசுத்த ஆவியின் செயல்பாடு குறித்த பல்வேறு தவறான கருத்துக்களில் ஒன்று, அந்தப் பரிசுத்த ஆவி என்னும் நபர், பாவத்தில் இருக்கும் ஜனங்களை நம்ப வைப்பதிலும், அவர்களை நீதியினிடத்திற்கு மாற்றுவதிலும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இங்குமங்குமாகச் செல்லும் வேலையில் காணப்படுகின்றார் என்பதாகும். இதையும் தாண்டிச் சிலர் நம்மிடம் தெரிவிப்பது என்னவெனில், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அற்புதகரமான விதத்தில் பாவியின் மேல்

செயல்படாதது வரையிலும், எவனும் மனம்மாற்றம் அடையான் என்பதாகும். இவைகள் உண்மை என்றால், உலகம் இன்று மனம்மாற்றம் அடையாமல் இருப்பதற்குத் தேவனே பொறுப்பாளியாக இருப்பார்; காரணம் பரிசுத்த ஆவியானது மனமாற்றுவதும், கண்டித்துத் திருத்துவதுமாகிய அதன் பாகத்தைச் செய்யத் தவறிவிட்டதாக இருக்கும். ஆனால் இவை அனைத்தும் கடுமையான தப்பறைகள் ஆகும்.

பரிசுத்த ஆவி உலகத்தாருடைய இருதயங்களில் செயல்படுவதில்லை. மாறாக நமது கர்த்தர் கூறுகின்றபடி, அந்தப் பரிசுத்த ஆவியானது, பிதாவின் ஆவியானது, குமாரனுடைய ஆவியானது, சத்தியத்தின் ஆவியானது, தெளிந்த புத்தியின் ஆவியானது, கர்த்தருடைய பரிசுத்தத்தின் ஆவியானது, அவருடைய சீஷர்களாகிய உங்களிடத்திலே காணப்படும். பரிசுத்த ஆவியினுடைய இந்தத் தன்மைகள் எதுவும் பாவமுள்ள உலகத்தாரிடம் காணப்படுவதில்லை. பரிசுத்த ஆவியின் இத்தன்மைகளானது, "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு" மாத்திரமே உரியதாகும் மற்றும் இவர்களுக்கே திட்டமிடப்பட்டுள்ளது. தேவனுக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய வல்லமையானது செயல்பட்டு, அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை உலகத்தின் ஆவியிடமிருந்து பிரித்து, அவர்களைத் தெய்வீக ஊழியங்களில் பயன்படுத்துகின்றது. உலகத்தின் ஆவி என்பது, பாவம் மற்றும் சுயநலத்தின் ஆவியாக இருக்கின்றது. கர்த்தருடைய ஆவி என்பது, தெய்வீகச் சித்தத்திற்கு என அர்ப்பணம் பண்ணும் ஆவியாகவும், பரிசுத்தத்தின் ஆவியாகவும் இருக்கின்றது.

## அவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்

நம்மிடத்தில் இருக்கும் பரிசுத்த ஆவியானது எப்படி உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்? உலகத்தைக் கண்டித்து உணர்த்தத்தக்கதாக, சபை அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு வெளிச்சமூட்டப்பட்ட அனைவரும், மனுஷர்கள் முன்பு தங்களது வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ண வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பது நமது பதிலாகும். சபையினுடைய பரிசுத்தமே, உலகத்தைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய ஆவியும், கர்த்தருடைய ஜனங்களிலுள்ள அவருடைய பண்புகளும், பாவத்தில் ஜீவிப்பவர்களைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். நம்முடைய கர்த்தருடைய விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது. நமது கர்த்தருடைய ஞானஸ்நானத்தின்போது, பிதாவின் ஆவி அவருக்கு அளிக்கப்பட்டது. அவர்மேல் பரிசுத்த ஆவியானது இறங்கி தங்கினதை, யோவான் சாட்சிக் கொடுக்கின்றார். அவர் பிதாவின் ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார். காரணம் அவர் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமானவராய் இருந்தபடியினால், அவர் பரிசுத்த ஆவியை முழுமையாய்ப் பெற்றுக் கொள்ள முடிந்தது. விழுகையின் காரணமாக பூரணமில்லாமல், குறைப்பாடுடன் காணப்படும் நாம், நம்முடைய குறைப்பாடுகளின் காரணமாகக் குறிப்பிட்ட அளவிலேயே, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் அதிகமதிகமாய் நிரப்பப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாக இருக்கின்றபடியினால் தேவனுக்கு நன்றி. மனுஷர் முன்பு கர்த்தரினால், பிரகாசிக்கப்பட்ட அவருடைய ஒளியானது மாபெரும் ஒளியாக இருந்தது. அதற்கு ஒப்பிடுகையில் நம்முடைய ஒளிகளானது மங்கலானதாகத்தான் காணப்படுகின்றது. எனினும் நமது கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றுகின்றவர்களாக நாம் காணப்பட வேண்டும்; மற்றும் அதிகமதிகமாகச் சத்தியத்தின் ஆவியினால், சத்தியத்தின் ஒளியினால் நிரப்பப்பட வேண்டும்; மற்றும் நம்முடைய செல்வாக்கின் கீழ் வருகின்றவர்கள் அனைவர் மீதும் ஞானத்துடன் அவ்வொளியைப் பிரகாசிக்கப்பண்ணுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும்.

வசனங்கள் 8-11-இல் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் மூன்று விதமான பலன்கள் காணப்படும்:

(1) "அது பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்," அதாவது உலகத்திற்கு அதன் பாவநிலையைக் குறித்து உணர்த்தும். பாவத்தினுடைய, மிகுதியான பாவத்தன்மையை அதிகமதிகமாய் உலகத்திற்குக் காண்பிக்கும். நேர்மைக்கும் நேர்மையின்மைக்கும், உண்மைக்கும் போலித்தனத்திற்கும், நீதிக்கும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திப்பார்க்க முடியாத அளவுக்கு, உலகத்திலுள்ள அநேகர் தேவனுடைய சாயலை மிகவும் இழந்துள்ளனர்; மற்றும் மனசாட்சியையும் மிகவும் இழந்துள்ளனர். உலகமானது, அதனை கொண்டே அதனை நிதானிக்கின்ற பழக்கத்தைக்கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவிலும்,

அவருடைய சபையிலும் இன்று உலகத்திற்கெனத் தேவன் புதிய கொள்கையை/நியமத்தை/அளவுகோலை நிறுவியுள்ளார். நீதி மற்றும் அன்பு தொடர்புடைய தேவனுடைய வார்த்தைகளாகிய மகிமையான நியமத்தை/அளவுகோலை/ கொள்கையை சபையானது அதன் வார்த்தைகளினால் மாத்திரமல்லாமல், அதன் கிரியைகளினாலும் உயர்த்திப்பிடிக்க வேண்டும்.

(2) பாவம் விஷயத்தில் உலகமானது குற்றவாளி எனத் தீர்க்கப்படுவது மாத்திரம் போதுமானதாகாது. உலகம் பாவத்திற்கு எதிரான நீதியைக் குறித்துக் கொஞ்சம் புரிந்துக்கொள்வதும் அவசியமாகும். ஓரளவுக்கு நீதியை நிறைவேற்றுவது கூடுகிற காரியம் என்றும், நீதியை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிரமம் என்பது விழுந்துபோன சுபாவத்தினாலேயே என்றும் உலகம் புரிந்துக்கொள்வது அவசியமாகும். நீதிதான் சரியான கொள்கை என்றும், நீதியை மாத்திரமே தேவன் அங்கீகரிப்பார் என்றும், தேவனுடைய அருமையான திட்டத்தில், நீதியாய் நடப்பவர்களுக்கு மாத்திரமே நித்தியஜீவன் அருளப்படுவதற்கு அவர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், உலகமானது நம்ப வைக்கப்பட வேண்டும். இது தொடர்புடைய விஷயத்ததில் போதிப்பவர்களாகிய ஆவியில் வெளிச்சமூட்டப்பட்டவர்கள் என்பவர்கள், ஒருவனும் தன்னுடைய சொந்த நீதியின் கிரியைகளினால் பிதாவுக்கு இசைவாய் வர முடியாது என்றும், கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் அருளுகின்ற, பாவங்களுக்கான மன்னிப்பும், பாவங்கள் மூடப்படுதலும் அவசியம் என்றும் தெளிவுப்படுத்திக் கூற வேண்டும்.

(3) கர்த்தருடைய ஜனங்களின் செய்திக்கும், வெளிச்சத்திற்கும், தொடர்புக்குள் வரும் அயலார்களை, கர்த்தருடைய ஜனங்களிடத்திலிருக்கும் கர்த்தருடைய ஆவியானது, தற்கால ஜீவியத்துடன் அனைத்தும் முடிவடைவதில்லை என்றும், முழு மனுக்குலத்திற்குமான ஒரு நியாயத்தீர்ப்பு, ஒரு பரீட்சையானது தேவனுடைய ஏற்பாட்டில் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளது என்றும் நம்பவைத்திடும். இந்தச் செய்தியைக் கேட்கின்ற எவனும், இதிலுள்ள நியாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் இப்படி ஒப்புக்கொள்வது என்பது நித்தியஜீவனை வாஞ்சிப்பவர்கள் அனைவரின் சந்தோஷத்திற்கும், நம்பிக்கைக்கும் அடித்தளமாய் இருக்கும். இப்படியான நம்பிக்கைகளால் சரியாகவும், ஆழமாகவும் செயல்படுத்தப்படுபவர்கள், தாங்களும் சபையுடன் கூடத் தங்களுடைய நியாயத்தீர்ப்பையும், பரீட்சையையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தரை நாடித்தேடி, தற்காலத்திலுள்ள கிருபைக்கான பல்வேறு வழியைத் தேடுகிறவர்களாகவும் காணப்படுவார்கள். ஆனால் இப்படியான நம்பிக்கையினால் தாக்கம் அடையாதவர்கள், சபை மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும்; அதாவது எந்தளவுக்கு அவர்கள் ஒளியை அல்லது அறிவைப் பெற்றிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்களுக்குப் பொறுப்பு உள்ளது என்று அறிவுறுத்தப்பட வேண்டும். தேவனுடைய திட்டத்தில், கர்த்தரிடத்திலான உண்மைக்கு ஏற்ப, பரீட்சிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்படத்தக்கதாக அனைவருக்கும் முழுமையான வாய்ப்பு அளிக்கப்படும் விதத்தில், உலகத்திற்கு எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாளை தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். தற்காலத்திலுள்ள உலகத்தாரின் நடக்கையானது, எதிர்க்காலத்திலுள்ள அவர்களுக்கான நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சையுடன் தொடர்பு பெற்றிருக்கின்றது. தற்காலத்தில் உலகத்தார் எந்தளவுக்குத் தங்களுடைய மனசாட்சிக்குக் கீழ்ப்படிய தவறி, சத்தியத்தின் வழிநடத்துதலைப் பின்பற்றுவதற்குத் தவறுகின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் எதிர்க்காலத்தில் ஜெயங்கொள்வதற்கு சிரமம் உண்டு; மற்றும் அடிகளும் அடிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் எந்தளவுக்குத் தற்காலத்திலேயே நீதிக்கு ஏற்ப வாழ்வதற்கு நாடுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளில் தங்களுக்கு உதவிடும் வண்ணமாக தங்களுக்கென ஓர் ஆசீர்வாதத்தைச் சேர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்.

## ஏனெனில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை

கிறிஸ்துவையும், பாவத்திற்கான அவருடைய கிருபாதார பலியையும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாததினாலேயே உலகத்தார் இன்னமும் பாவிகளினுடைய தன்மையிலேயே, கோபாக்கினையின் பிள்ளைகளாகத் தொடர்ந்து காணப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பதைச் சபையிலுள்ள சத்தியத்தின் பரிசுத்த ஆவியானது, உலகத்தாருக்கு அறியச்செய்திடும். இயேசு தம்முடைய பலியை, பிதாவிடம் ஒப்படைத்தபோது, நமது கர்த்தர் இயேசுவால் பெற்றுத்தரப்பட்ட நீதி ஒன்று, அதாவது தரிபிக்கப்படும் நீதி ஒன்று உள்ளது என்று உலகத்தாருக்குச் சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது அறியச் செய்திடும். தற்காலத்தின் ஏற்பாடுகள்/ஒழுங்குகள் தொடராது என்றும், நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, புதிய ஒழுங்குகள்/ஏற்பாடுகள் கொண்டுவரப்படும், காரணம் கர்த்தர் உலகத்தை ஏற்கெனவே மீட்டுக்கொண்டதன் வாயிலாக, தீமையின் தற்போதைய ஏற்பாட்டிற்கு அதிபதியாக இருக்கும் சாத்தானைப்

புறம்பாக்கிப்போடுவதற்குரிய உரிமையைச் சுதந்தரித்துள்ளார் என்றும், சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது உலகத்திற்கு அறிவுறுத்தும்.

## அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்

நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுடன் கூடக் காணப்பட்ட சமயத்தைக் காட்டிலும், அவர் பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடே, இன்னும் அதிகமான அறிவுரைகளைக்கொடுத்து, தம்முடைய பின்னடியார்களை ஆயத்தப்படுத்தினார். இதற்குக் காரணம் பரத்திலிருந்து ஆவி வருவதுவரையிலும், அவர்கள் ஆயத்தமற்றே காணப்பட்டார்கள் என்பதே ஆகும். அதுவரையிலும் அவர்கள் சுபாவத்தின்படியான மனிதனைப்போன்றே காணப்பட்டனர். மேலும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டினது போன்று "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). இதன் காரணமாகவே, பிற்காலங்களில் ஆவிக்குரிய விஷயம் தொடர்புடைய ஆழமான போதனைகளைச் சில அப்போஸ்தலர்கள் கொடுத்ததுப் போன்று, இயேசு (சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்) கொடுக்கவில்லை என்று பார்க்கின்றோம். இப்படியாக ஆழமானப் போதனைகளை இயேசு கொடுக்காதது, அவருடைய சார்பிலான இயலாமையாக இராமல், மாறாக அந்தச் சத்தியங்கள் அப்பொழுது அவருடைய சீஷர்களுக்கு ஏற்றக் கால உணவாய் இராமல், அவர்களைத் திணறச்செய்து, அவர்களைப் பாதித்திருக்கும் என்பதினாலேயே ஆகும். ஆகவேதான் நம்முடைய கர்த்தருடைய போதனைகளிலுள்ள ஆழமான விஷயங்கள் உவமை பாணியில் முன்வைக்கப்பட்டது. இப்படி உவமை பாணியில் முன்வைக்கப்பட்டதின் காரணமாக, அது சீஷர்களுக்கு அச்சமயத்தில் பாதிப்பையும் ஏற்படுத்தாது மற்றும் பிற்பாடு அதன் காரியங்களை உணர்ந்து, புரிந்துக்கொள்ளப்பட முடியும். ஆகவேதான் அவர், "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லை (உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை) பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்றார் (யோவான் 3:12).

"சத்தியத்தின் ஆவி வரும்போது, அது உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும். எனினும் அது ஒரு கால்வாயாக மாத்திரமே இருக்குமே ஒழிய அதிகாரி போன்று இருப்பதில்லை. காரணம் அது உங்களுக்குத் தெய்வீகத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்களைத் தெரியப்படுத்தும். அதாவது உங்களுக்கு இன்னமும் வெளிப்படுத்தப்படாதவைகள் ஏற்றவேளையில் வசனத்தின் வாயிலாகவும், பரிசுத்த ஆவியினுடைய செல்வாக்கின் வாயிலாகவும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும். இந்தப் பரிசுத்த ஆவியின் மூலம் (இயேசு) நான் மகிமைப்படுத்தப்படுவேன். ஏனெனில் இந்தப் பரிசுத்த ஆவியானது, உங்களுக்குக் காண்பிப்பவைகள் என்னுடையவைகளாய் இருக்கின்றது. காரணம் பிதாவினுடையவைகள் அனைத்தும் என்னுடையவைகளாய் இருக்கின்றது. ஆகவேதான் (இயேசு) நான், 'அவர்/அது என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பார்/அறிவிக்கும்' என்று கூறினேன்" என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (15-ஆம் வசனம்). இவ்வசனத்தில் பிதாவுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்; அனைத்தும் பிதாவினுடையவைகள். ஆனால் பிதா, குமாரனைத் தம்முடன் உடன்சுதந்திரராக, தம்முடைய உடன்பங்காளியாக ஆக்கியுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பரிசுத்த ஆவிக்கு எதுவும் சொந்தமெனச் சொல்லப்படவில்லை. காரணம் பரிசுத்த ஆவி என்பது தொடர்பு வைத்துக்கொள்வதற்குரிய, ஆசீர்வாதங்கள், அறிவுரைகள் வழங்கிடுவதற்குரிய, தெய்வீகக் கால்வாயாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல, மாறாக சர்வ வல்லமையுள்ள தேவன் மற்றும் அவருடைய நித்திய குமாரனுடைய ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமையாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி பற்றின விரிவான விளக்கங்களுக்கு வேதாகம ஆராய்ச்சி பாடங்களின் 5-ஆம் தொகுதியில்/volume-இல், 8-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## வேறொரு தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது அருமையானதாகவும், உதவிகரமானதாகவும் காணப்படுகின்றது. இடுக்கமான பாதையிலுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குத் தேற்றும் ஆவியாக, வழிக்காட்டியாக, போதிப்பவராக, உதவியாளராகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானது, பிதாவிடமிருந்ததான அன்பளிப்பு என்று நமது கர்த்தர் விவரிக்கின்றார். இது பெந்தெகொஸ்தே

ஆசீர்வாதம் குறித்த பதிவிலுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு இசைவாகவே இருக்கின்றது. இவ்விஷயம் குறித்து, தெய்வீக வல்லமையின் வலது கரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள நமது கர்த்தர் இந்தப் பரிசுத்த ஆவியை/வல்லமையை பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டு, பெந்தெகொஸ்தே நாளன்று தம்முடைய பின்னடியார்கள் மீது பொழியப்பண்ணினார் என்று அப்போஸ்தலர் பேதுரு விவரிக்கின்றார். இவைகள் அனைத்தும் பரிசுத்த ஆவி தொடர்புடைய சரியான கண்ணோட்டத்திற்குப் பொருந்துகின்றது. ஆனால் பரிசுத்த ஆவி ஒரு நபர் எனும் தவறான கண்ணோட்டத்திற்கு மிகவும் பொருத்தமற்றதாய் இருக்கின்றது. எப்படி ஒரு நபரைப் பொழியப்பண்ண முடியும்! அதிகாரத்தில் சரிசமமாய் இருக்கும் இருவரில் ஒருவர் மற்றொருவரை நோக்கி, இவர்கள் இருவருக்கும் சரிசமமாக இருக்கும் மூன்றாவது ஒரு நபரை, ஓர் அன்பளிப்பாக/வரமாகப் பொழியப்பண்ணுவதற்கென ஜெபம் பண்ணிட முடியும்! இந்தத் தப்பறைக்கு நம்முடைய கண்கள் திறக்கப்படும்போது, இதிலுள்ள முரண்பாடுகள் நமக்கு அருமையாய் வெளிப்படுகின்றது. ஆனால் நமது கர்த்தர் இயேசு நம்பொருட்டு, பிதாவின் முன் தோன்றி, நம் பொருட்டான அவருடைய பலியின் புண்ணியத்தைக் கிருபாசனம் மீது வைத்தவுடன், பிதா தம்முடைய பரிசுத்த ஆவியை, தம்முடைய பரிசுத்தமான செல்வாக்கை நம்மீது அனுப்பி, நம்மை அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுத்து, நம்மை அவருடைய பிள்ளைகளென நடத்த பிரியப்பட்டதான உண்மையான கருத்து எத்துணை அருமையானதாய் இருக்கின்றது!

பெந்தெகொஸ்தே நாளன்று வந்த ஆசீர்வாதங்கள் அன்று பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளது போல முழுச்சபைக்கும் உரியது என்ற கருத்து எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! முற்காலங்களில் இராஜாக்களும், ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டு, விசேஷமான ஊழியத்திற்கெனப் பிரித்து வைக்கப்படுகின்றனர். கிறிஸ்துவும், அவருடைய சபையும், மெல்கிசெதேக்கின் முறைமையின் கீழ் உண்மையான இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கின்றனர்; மற்றும் இவர்களுடைய ஊழியங்களின் கீழ்ப் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். நமது கர்த்தர் தலையாக இருக்கின்றார்; மற்றும் நாம் அவருடைய அங்கங்களாக இருக்கின்றோம். கர்த்தரை இராஜாவாக ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் மற்றும் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி அவரை ஆசாரியர் ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்குமென அவர் மீது பரிசுத்த ஆவி வருவதானது, எண்ணெயினால் அபிஷேகித்தல் எனும் நிழலினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆகவேதான் அவருடைய அபிஷேகத்தைக் குறித்து, அது ஆரோனின் தலையில் ஊற்றப்படுகிறதும், அவருடைய தாடியில் வழிந்தோடி, அவருடைய அங்கிகளின்மேல் இறங்கியிருக்கிறதான தைலமெனத் தீர்க்கத்தரிசி கூறுகின்றார். இது நமது தலையாகிய கர்த்தர் இயேசுவின் ஞானஸ்தானத்தின் போது, அவர்மீது பரிசுத்த ஆவி வந்ததையும், அவருடைய அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கென ஆயத்தத்துடன், காத்திருந்தவர்கள் அனைவர் மீதும் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி பொழியப்பட்டதையும், அதுமுதல் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலம் அவரை நம்பி, அதே சரீரத்தின் அங்கத்துவத்திற்குள் வந்துள்ள நாமும், அதே அபிஷேகத்தைப் பெற்றுள்ளதையும் அடையாளப்படுத்துகின்றது. "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்ததிருக்கிறது" (1 யோவான் 2:27). இந்த அபிஷேகித்தல் என்பது, ஒரு நபரைக்குறிக்காமல், மாறாக செல்வாக்கையும், ஆசீர்வாதத்தையும் குறிக்கின்றது.

நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதும், பரிசுத்த ஆவியின் ஜெநிபித்தல் மூலமாக அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படுவதுமாகிய சிலாக்கியத்தின் மூலமாக, எத்துணை திருப்தியும், எத்துணை ஆறுதலும் கர்த்தருடைய ஜனங்களுக்குக் கடந்துவந்துள்ளது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், பிதா மற்றும் குமாரனுடைய பரிசுத்தமான செல்வாக்கும், ஆசீர்வாதமும், நம்முடைய கணிப்புகளையும், நம்முடைய இருதயங்களையும் வழிநடத்தி, வேதவாக்கியங்களை நமக்குத் திறந்துகாட்டி, பூமியின் சகல குடிகளுக்குமான நமது பிதாவின் இரட்சிப்புக்கு அடுத்த மகிமையான திட்டத்தினுடைய ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் அதிகமாய் உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு நம்மைக்கொண்டு வந்து, நம்முடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்கின்றது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிலைத்திருப்பது என்பது தற்காலிகமானதல்ல. ஒரு நாளுக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு நிலைத்திருக்கக்கூடியதாய் அல்லாமல், யுகத்தின் முடிவுவரையிலும் காணப்படும். இப்படியாக இருப்பதின் நிமித்தம் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம்! நாம் அனுபவிக்கும் போதனைகளும்/அறிவுரைகளும் மற்றும் வழிநடத்துதல்களும் எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கின்றது! நமது கர்த்தர் சொன்னதுபோல, உண்மையில் பரிசுத்த ஆவியானது, நமக்கு வரப்போகும் காரியங்களைக்காட்டி, நடந்து முடிந்தவைகளை நமக்கு விவரிக்கின்றதாய்க் காணப்படும். நம்முடைய எத்தனை ஆசீர்வாதங்கள்,

வரப்போகின்ற காரியங்களின் உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது. அதாவது ஆயிரவருட இராஜ்யம், பூமியின் குடும்பங்களைச் சீர்ப்பொருத்தி, தூக்கிவிட்டு, பலப்படுத்துவதற்குரிய காலங்களாகிய, வரப்போகின்ற காரியங்ளைப்பற்றின உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது.

*****

# நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார்

## யோவான் 18:1-27

***"இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்." மத்தேயு 17:22***

இன்றைய பாடமானது சரித்திரத்திலேயே துயரம் மிகுந்த அதிகாரங்களெனக் காணப்படுபவைகளில் ஒன்றைப் பற்றினதாகும். இப்பாடமானது, மனிதனுடைய நன்றியற்ற தன்மை, சுயநலம், பெலவீனம், பயம் ஆகியவற்றின் ஆழத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் நமக்கு வெளிப்படுத்துகின்றதாக இருக்கும். எனினும் இப்பாடத்தை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதயத்தின் நிலைமையில் காணப்படுபவர்களுக்கு இது மிகவும் உதவிகரமாய் இருக்கும். காரணம் இப்பாடமானது ஏறக்குறைய அனைவருக்கும் பொதுவாய் இருக்கும் பெலவீனங்களுக்கு எதிராகவும், அனைவரும் ஆளாகக்கூடிய ஆபத்துக்களுக்கு எதிராகவும் எச்சரிக்கின்றதாயும் இருக்கின்றது. நமது கர்த்தர் தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குக் கூறினதும், தம்முடைய பின்னடியார்கள் அனைவருக்குங்கூடப் பொருந்துகின்றதாய்க் கூறினதுமான வார்த்தைகளாகிய, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்பதையே இப்பாடமானது முக்கியத்துவப்படுத்துகின்றது. இன்னுமாக அப்போஸ்தலர் பேதுருவின் அனுபவம் மற்றும் அவரைக் கையாண்ட விதத்தில் வெளிப்பட்ட கர்த்தருடைய பெருந்தன்மை தொடர்புடைய விஷயத்திலும்கூட இப்பாடமானது, விவேகமற்றுச் சரியானப் பாதையைவிட்டு அலைந்து திரியும் பேதுருவைப் போன்றவர்களுக்கு உற்சாகத்தையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

இப்பாடத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், பஸ்கா போஜனத்தைப் புசிக்கும்படிக்கு கர்த்தரும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு பேரும் ஒன்று கூடியிருந்த சாயங்கால வேளைக்கு முன்பான வேளைகளுக்கு நாம் செல்ல வேண்டும். மூன்று வருடங்களாக நமது கர்த்தர் இந்தப் பன்னிரண்டு மனுஷர்களைப் பயிற்றுவித்து, இவர்கள் உலகில் தம்முடைய பிரதிநிதிகளாகவும், சபைக்கான தம்முடைய வாயாகவும் இருக்கத்தக்கதாக இவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டும் இருந்தார். இவர்கள் அவருடைய வல்லமையைக் கண்டிருக்கின்றனர். அவருடைய போதனைகளை அறிந்திருக்கின்றனர் மற்றும் இவர்களுங்கூடத் தங்கள் மூலமாய்ச் செயல்படும், அவருடைய வல்லமையைச் சொஸ்தப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் செயல்படுத்தியிருக்கின்றனர். தாழ்மை அவசியம் என்பதை இவர்களுக்குப் போதித்திட விழிப்புள்ளவராக இருந்தார். தம்மோடுகூடப் பங்கடையும்படிக்கு இவர்கள் அழைக்கப்பட்டுள்ள இராஜ்யத்திற்கு இவர்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்பொருட்டு, இவர்கள் சிறுபிள்ளைகளென, எளிமையானவர்களாயும், நேர்மையுள்ளவர்களாயும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாயும் மாற வேண்டியதன் அவசியத்தைப் போதித்திட கர்த்தர் விழிப்புள்ளவராக இருந்தார். இவர்கள் மத்தியில் போட்டிமனப்பான்மை மற்றும் அதிகாரத்தின் ஆவி இருப்பதை உணர்ந்துள்ள கர்த்தர், தாழ்மை மற்றும் சாந்தத்தின் அவசியம் குறித்து இவர்களுடைய கவனத்திற்குக்கொண்டுவருவதற்குரிய கடமையில் அநேக சந்தர்ப்பங்களில் காணப்பட்டார். மாம்சத்தில் இவர்களோடு அவர் செலவழிக்க இருந்த அந்தக் கடைசியான சாயங்கால வேளையில் அனைவரும் பஸ்கா போஜனத்திற்கெனக் கூடியிருக்க, இவர்கள் அக்காலக்கட்டத்தில் காணப்பட்ட விருந்தோம்பல் வழக்கத்தை ஒருவருக்கொருவர் செய்யாமல் விட்டுவிட்டதோடு, தங்கள் கர்த்தருக்கு, தங்கள் தலைவருக்கு, தங்கள் போதகருக்கு, மேசியாவென்றும், தேவனுடைய விசேஷித்த குமாரன் என்றும் அவரை விசுவாசிப்பதாக தாங்கள் அறிக்கைப் பண்ணினவருக்கும்கூட, அதைச் செய்யாமல் இவர்கள் விட்டுவிட்டதைக் கர்த்தர் வருத்தத்துடன் கவனித்தார். இவர்கள் ஒருவருக்கொருவரின் பாதங்களையும் மற்றும் அவருடைய பாதங்களையும் கழுவும் வழக்கத்தைச் செய்யாமல் விட்டுவிட்டனர். இந்த வழக்கமானது, காலணிகளுக்குப் (shoes) பதிலாகப் பாதரட்சைகள் (sandals) அணிந்து புழுதி நிறைந்த தேசத்தில் நடந்துவரும் பாதங்களுக்கு ஆறுதலாய்ச்செய்யும் வழக்கமாயிருந்தது.

### உங்கள் கர்த்தராகிய நான் — எல்லோருக்கும் ஊழியக்காரன்

இயேசு தம்முடைய துக்கம் மற்றும் துயரத்தின் பாரத்தை மறந்தவராக, தம்முடைய பின்னடியார்களின் நலன்களில் அக்கறைக்கொண்டவராக, அனைவருக்கும் தாழ்மையின் ஒரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்கென வாய்ப்பைப் பயன்படுத்தினார். அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், சீலையையும் எடுத்து பாதங்களைக் கழுவினார். சீஷர்களோ வெட்கப்பட்டு, குழம்பிப்போய், இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் என்ன சொல்ல வேண்டும் என்றோ அல்லது என்ன செய்ய வேண்டும் என்றோ தெரியாமல் காணப்பட்டனர். பேதுரு மாத்திரம் போதகர் தன்னுடைய பணிவிடைக்காரன் போன்று நடந்துகொள்வதற்குத் தன்னால் அனுமதிக்க முடியாது என்று மறுப்பைத் தெரிவித்தார். ஆனால் இவ்விஷயத்திற்கு ஓர் அடையாள அர்த்தம் இருக்கின்றது என இயேசு விவரித்தப்போது, பேதுரு கழுவப்படுவதற்கு ஆவலாய்க் காணப்பட்டார். பாடத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடக்கூடாது என்பதற்காக, அனைத்தையும் செய்து முடித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் பின்வருமாறு

விளக்கினார் . . ." உங்கள் கர்த்தரும், போதகருமாகிய நானே உங்கள் பாதங்களைக் கழுவி, மிகவும் கனம் குறைந்த வேலையையும் உங்களுக்குப் புரிவதில் வாஞ்சையையும், தாழ்மையையும் வெளிப்படுத்தியிருக்க, நீங்களும் இதே உதாரணத்தை ஒருவரிலொருவர் பின்பற்றுவதற்கும், ஒருவருக்கொருவர் மிகவும் கனம் குறைந்த வேலையைச் செய்வதற்கும், அதுவும் ஒருவேளை வாய்ப்பு அனுமதிக்கும் பட்சத்தில் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவுமளவுக்கு உள்ள வேலையைச் செய்வதற்கும் வாஞ்சையுடன் காணப்பட வேண்டும்."

இவைகளை இயேசு அப்போஸ்தலர்களுக்குப் பேசிக்கொண்டிருக்கும் கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, தாம் அதிகாரிகளிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், சீஷர்கள் அனைவரும் தம்மைத் தனியே விட்டுப்போய்விடுவார்கள் என்றும் அவர்களிடம் தெளிவாக இயேசு கூறினார். இவை, அப்போஸ்தலர்களுக்குக் கடுமையான வார்த்தைகளெனத் தோன்றியது. இயேசுவுக்குத் தங்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதைத் தெரிவிப்பதுபோன்று அவர்களுக்குத் தோன்றியது. உணர்ச்சிவசப்பட்டுப் பேதுரு பேசினார்; இன்னுமாக அனைவரும் கர்த்தரை மறுதலித்து, அவரைக் கைவிட்டுப்போனாலும், தான் இப்படியாக ஒருபோதும் செய்வதில்லை எனப் பேதுரு அறிக்கையிட்டார். அப்பொழுதுதான் சேவல் இரண்டுமுறை கூவுவதற்கு முன்னதாக, தம்மைப் பேதுரு, தம்முடைய போதகர் அல்ல என்று மறுதலிப்பார் என நமது கர்த்தர் தீர்க்கத்தரிசனமாய்ப் பேதுருவிடம் கூறி, சாத்தான் பேதுருவை ஜெயிக்க விரும்புகின்றான் என்றும், பேதுருவினுடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, தாம் பேதுருவுக்காக ஜெபம் பண்ணுகின்றார் என்றும், பேதுருவுக்குக் கர்த்தர் உறுதிப்படுத்தினார். உண்மையில் இந்த வார்த்தைகள் அனைத்தும், அப்போஸ்தலனுக்கு (பேதுருவுக்கு) அவருடைய சோதனையான வேளையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. உண்மையில் இந்த வார்த்தைகள் அனைத்தும், என்ன சம்பவிக்கப்போகின்றது என எதிர்பார்க்கத்தக்கதாகவும், அவைகளுக்கு எதிராக அனைத்து அப்போஸ்தலர்களும் எச்சரிக்கையாய்க் காணப்படத்தக்கதாகவும் உதவும் வண்ணமாகக் காணப்பட்டது.

## ஆண்டவரே நானோ? ஆண்டவரே நானோ?

தம்முடைய எச்சரிப்பை இன்னும் தொடர்ந்தவராக நமது கர்த்தர், "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்! அங்கு எத்தகைய ஒரு பீதி காணப்பட்டிருக்க வேண்டும்! கர்த்தரிடமிருந்து அதிகமான அனுகூலத்தை அடைந்தவர்களிலும், அவருடன் நீண்ட காலமாய்ப் பழகி இருப்பவர்கள் மத்தியிலும், தன்னுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுக்கும் அளவுக்கு இழிவாக நடந்துகொள்ளும் ஒருவர் இருக்கக்கூடுமோ?

இப்பாடத்தின் முக்கியத்துவத்தை நாம் இழந்துவிடக்கூடாது. சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள கர்த்தருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேரைக்குறித்து, "உங்களைப்போன்று நாங்களும் பாடுள்ள மனுஷர் தான்!" அதாவது, மனித பூரணமின்மைக்குரிய அளவுகோலுக்கு மேலானவர்களாகவோ அல்லது கீழானவர்களாகவோ இல்லாமல், வாழ்க்கையின் சாதாரண தரப்பினர்களையே சார்ந்தவர்கள்! என்று அப்போஸ்தலன் கூறுவது போன்றுதான் உள்ளவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. அந்தப் பன்னிரண்டு பேர்கள் மீது வரவிருக்கின்ற சோதனைகள் தொடர்பான விஷயத்தில் அவர்களை எச்சரித்த அதே கர்த்தர் இன்னமும் தம்முடைய சபை, தம்முடைய மந்தைக்குறித்துக் கவனமுள்ளவராகவே இருக்கின்றார் என்பதையும் நாம் நினைவில்கொள்வோமாக. அதிலும் விசேஷமாகச் சகோதரர்கள் மத்தியில் பொறுப்பின் விஷயத்தில் எவ்விதமான முக்கிய பங்கை வகித்துக்கொண்டிருக்கும் அனைவர் குறித்து விசேஷித்த அக்கறையுடன் இருக்கின்றார் என நாம் எண்ணுகின்றோம். நாம் எதிராளியானவனுடைய வல்லமையின் கீழ் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்வதற்கு நாடுகின்றவராகவும், நம்மை எச்சரிக்கின்றவராகவும், நம்மைப் பாதுகாக்கின்றவராகவும் இன்னமும் காணப்படுகின்றார். இருதயத்தில் தம்பால் நேர்மைக் கொண்டிருந்தும், அதேசமயம் சோதனைகளைக் கடுமையானதாய் இருக்கச் செய்யும் அளவுக்கு உள்ள மாம்சத்தின் பலவீனங்களைக்கொண்டிருக்கும் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் இன்னமும் ஜெபம் ஏறெடுக்கின்றார். அப்போஸ்தலர்கள் அவர்களுக்கான சோதனையின் விசேஷித்த காலப் பகுதியை நெருங்கினபோது, அவர்களுக்கான நமது கர்த்தருடைய அக்கறையும், பிரயாசங்களும் பெருகினதுபோலவே, இன்றுள்ள அவருடைய சபையின் விஷயத்திலும், அவருடைய சரீரத்தின் கடைசி அங்கங்களாகிய, "அவருடைய பாதங்கள்" "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலமாகிய" நெருக்கடியான வேளையை நெருங்கும்போதும் காணப்படும் என்பது உறுதியே (வெளிப்படுத்தல் 3:10).

ஆண்டவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசினதுபோல, நம்மிடத்திலும் காதுகளுக்குக்கேட்கும் சொல்லர்த்தமான விதத்தில் பேசுவதில்லை. ஆனாலும் அப்போஸ்தலர்களுடன் பேசின அதே அழுத்தத்துடனும், அதே ஊக்கத்துடனும் அவர் நம்முடன் பேசுகின்றார் அல்லவா? அந்தச் சீஷர்களுக்கான கர்த்தருடைய வார்த்தைகளும், கிரியைகளும் அதே படிப்பினையுடனும், அவர்களுக்கு இருந்த அதே அழுத்தத்துடனும் இன்று நம்மிடத்திற்கும் கடந்து வருகின்றதல்லவா? இந்த உதாரணங்கள் மற்றும் எச்சரிப்புகளுடன்கூட, யுகத்தின் முடிவு தொடர்பான வேதவாக்கியங்களின் விசேஷித்த அறிவிப்பும் நமக்குக் கூடுதலாகக் வழங்கப்பட்டுள்ளதல்லவா? சரியான மீன் மற்றும் சரியற்ற/ஆகாத மீன்கள் பற்றின உவமையில், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் சுவிசேஷ வலையில் காணப்படுபவர்களில் ஒரு பிரித்தெடுத்தல் நடைபெறும் என நமது கர்த்தர் நமக்கு விவரித்துள்ளார் அல்லவா? கோதுமை மற்றும் களைகள் பற்றின உவமையிலுங்கூட, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையின் காலபகுதியில், பிரித்தெடுத்தல் நடந்து, உண்மையும், முதிர்ச்சி அடைந்ததுமான

கோதுமைத்தான் களஞ்சியத்தில் சேர்க்கப்படும் எனக் கர்த்தர் மீண்டுமாகக் கூறினார் அல்லவா? "மனுஷர்கள் தற்பிரியராயும் - தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்- இருப்பார்கள்" என்ற காரணங்களினால், யுகத்தின் முடிவில் கொடிதான காலங்கள் வரும் என்று அப்போஸ்தலன் மூலமாகக் கர்த்தர் நமக்கு முன் எச்சரிப்புக்கொடுத்துள்ளார் அல்லவா? (2 தீமோத்தேயு 3:1-3). இன்னுமாக தெய்வீகத் திட்டத்தின்படி அக்காலத்தில், சத்தியத்தை அதிலுள்ள அன்பின் பிரகாரமாகவும், பக்தி வைராக்கியத்துடனும் ஏற்றுக்கொண்டிராத அனைவரும் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்புவார் என்றும் கர்த்தர் நமக்குத் தெரிவித்திருக்கின்றார் அல்லவா? (2 தெசலோனிக்கேயர் 2:11).

## சோதிப்பதற்கான சோதனைக்காலம்

இக்காலத்திற்குரிய சோதனைகளானது, கூடுமானால், "தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும்" வஞ்சிப்பதற்குக் காணப்படும் என்றும், அதுவும் அவர்களுடைய விஷயத்தில் அது கூடாமல் போகும்; காரணம் அவர்களுடைய அன்பு, அவர்களுடைய பக்திவைராக்கியம் மற்றும் இவைகளின் பலனாக தெய்வீகக் கிருபையானது அவர்களுக்கு அருளும் ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்கள் ஆகும் என்றும் கர்த்தர் நமக்குக் கூறியுள்ளார் அல்லவா? ஒருவேளை பேதுருவுக்கு விசேஷித்த ஊக்கமளிக்கப்பட்டுள்ளதெனில், அதாவது "உன்னுடைய விசுவாசம் ஒழிந்து போகாதப்படிக்கு நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று ஊக்கமளிக்கப்பட்டுள்ளதெனில், இதற்குச் சரிசமமானது, "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்" என்றும், "என் கிருபை உனக்குப் போதும்; உன்னுடைய பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றுமுள்ள வேதவாக்கியங்களின் வாக்குத்தத்தங்களில் நமக்குக் காணப்படுகின்றது அல்லவா? (மத்தேயு 28:30; 2 கொரிந்தியர் 12:9). உண்மையில் அப்போஸ்தலர்களுக்கு அவர்களுடைய சோதனை வேளையில் இருந்ததைக் காட்டிலும் நமக்கு எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலங்கள் காணப்படுகின்றன. இந்த நமக்கான அனுகூலத்திற்கான காரணம், அப்போஸ்தலர்களுடைய அச்சோதனையானது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படுவதற்கு முன்பு வந்தது; ஆனால் நமக்கான சோதனைகள் என்பது நாம் அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தில் காணப்பட்ட காலத்தில்தான் வந்தது என்ற உண்மையில் விளங்குகின்றது. ஆகவே நாம் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கையில், "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது" என்ற செய்தியை நாம் கேட்கும்பொழுது, உலகத்திற்குப் பரவலாய் வருவதற்கு முன்னதாக அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களைப் பாதிக்கும் இந்தச் சிறிய இராக்காலத்தின் வேளையில் என்னவெல்லாம் வருமென எதிர்பார்க்கலாம் என்பது குறித்து நாம் முன்னெச்சரிக்கப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றோம் (ஏசாயா 21:12). இந்தச் சோதனை காலத்தில்தான்,"உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது" என்ற வார்த்தைகளினுடைய சம்பவித்தலை நாம் எதிர்பார்க்கலாம் (சங்கீதம் 91:7, 9). எனினும் இவ்வசனத்தில் இடம்பெறும் வாக்குத்தத்தமானது, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே உரியது; அதாவது கர்த்தரையும், உன்னதமானவரையும் தங்களுடைய அடைக்கலமாகவும், தாபரமாகவும் கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரமே உரியது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28).

ஒன்றாய்ச் சேர்ந்து, கூடிப் போஜனம் புசிப்பது என்பது, உண்மைக்கான வாக்குறுதியாக இருப்பதினால், ஆண்டவர் விசேஷமான துணிக்கையைத் தோய்த்துக்கொடுப்பது என்பது அன்பிற்கான விசேஷித்த அடையாளமாக இருக்க வேண்டும். மேலும் அது, யார் கர்த்தரைக் காட்டிக்கொடுக்கப்போகின்றான் என்பதைக் காண்பிக்கும் வண்ணமாக, இராப்போஜனத்தின்போது, யூதாசுக்குக்கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பல்வேறு குரல்களில் கர்த்தரை நோக்கி நானோ? என்பதை எப்படிக் கேட்டிருப்பார்கள் என்பதையும், இதே கேள்வியை யூதாசும் எப்படிக் கேட்டிருந்திருப்பார் என்பதையும் நாம் விவரிப்பதைப் பார்க்கிலும் நாம் நன்கு கற்பனைப் பண்ணிப்பார்த்துக்கொள்ளலாம். துணிக்கையை யூதாசிடம் கொடுத்தபோது, நமது கர்த்தருடைய கண்ணின் பார்வையையும் நாம் கற்பனை பண்ணிப் பார்த்துக்கொள்ளலாம். அதாவது, "யூதாஸ் நான் உன்னிடத்தில் காண்பிக்கும் அன்புடன் கூடிய இரக்கத்தை ஏன் நீ ஏற்க மறுத்துக்கொண்டிருக்கின்றாய்? நீ என்னுடைய நண்பன் என்றும், சீஷன் என்றும் உன்னைக் குறித்து அறிக்கை செய்திருக்கின்றாய். ஒரு நண்பனாக உனக்கு நான் என்னுடைய பங்கை செய்துள்ளேன்" என்ற விதத்தில் நமது கர்த்தர் பார்வையின் மூலமாகவும், செய்கையின் மூலமாகவும் பேசினதை நாம் கற்பனை பண்ணிப் பார்த்துக்கொள்ளலாம். இந்தக் கண் பார்வையும், இந்தத் துணிக்கையும், சுயநலமான யூதாசைத் திணற வைத்திருக்க வேண்டும். ஆனாலும் பார்வோனின் விஷயத்தில், வாதைகளை எடுத்துப்போடுவதன் மூலமாகக் கர்த்தர் இரக்கத்தைக் காட்டும்போதெல்லாம் பார்வோனுடைய இருதயம் அதிகமதிகமாகக் கடினப்பட்டதுபோலவே, நமது கர்த்தருடைய தாழ்மை மற்றும் அன்பிற்கான/இரக்கத்திற்கான ஒவ்வொரு வெளிப்படுத்தலும், யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. நமது கர்த்தருடைய கண் பார்வைக்கும், துணிக்கைக்கும் பிரதியுத்தரமாக, யூதாஸ் மனம் திரும்புவதற்குப்பதிலாக மிகவும் கசப்பு/வெறுப்புக்கொண்டு, தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிக தீர்மானமாய்க் காணப்பட்டான். இது யூதாசின் கண்களில் ஜொலித்தது. நமது கர்த்தர் யூதாசினுடைய எண்ணங்களை வாசித்தவராக, "நீ செய்கிறதைச் சீக்கிரமாய் செய்" என்று கூறினார்.

இதிலுள்ள படிப்பினையையும், அது இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குப் பொருந்துவதையும் பார்க்கத் தவறிடாமல் இருப்போமாக. அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களில் எவரேனும் சுயநலத்தையும், பேராசையையும்/தனிப்பட்ட இலட்சியத்தையும் வளர்த்திக்கொண்டு வருவார்களெனில், அவர்கள் யூதாசின் முடிவைப்போன்ற முடிவை அடைவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்களுக்குள் வளர்த்துக்கொண்டிருக்கும் ஆவியினுடைய செல்வாக்கானது, இவர்கள் யூதாசைப்போன்று தனிப்பட்ட சிறு ஆதாயங்களுக்கெனச் சத்தியத்தை விற்றுப்போடுவதற்கு ஆயத்தப்படும் நிலைக்கு வருமளவுக்கு, கர்த்தருடைய நோக்கங்கள் மற்றும் உண்மையுள்ள சகோதரர்களுக்கான பரிவிரக்கத்திலிருந்து இவர்கள் வெகு தொலைவிற்கு வழிநடத்தப்படுவார்கள். இப்படியான இருதய நிலைக்கு, முன்பொரு காலத்தில் பிரகாசிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளையும், இனிவரப்போகும் பலன்களையும் ருசி பார்த்திருந்தவர்கள் வந்துவிடுவார்களானால், இவர்கள் தங்களுடைய பொல்லாத நடத்தைக்கான எல்லைக்குப் போவதை எந்த வல்லமையும் தடைப்பண்ணுவதில்லை. இப்படிப்பட்டவர்களுடைய மனங்கள் சத்தியத்திற்கு எதிராக மிகவும் விஷமாகியுள்ளபடியால் இரக்கத்தின் துணிக்கைகளானது, இப்படிப்பட்டவர்களைத் தீமைக்கு/பொல்லாப்பிற்கு நேராக அதிகம் தூண்டுகின்றதாகக் காணப்படும். சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான் என்று நாம் வாசிக்கின்றதுபோல, யூதாஸ் வகுப்பாரின் விஷயத்திலும் இப்படியாகவே காணப்படும். இவர்கள் மீது எதிராளியானவன் முழு வல்லமைக்கொண்டு, இவர்களை அடக்கி ஆளுவதை நாம் எதிர்பார்க்கலாம்.

## கெத்செமனேயின் பாடங்கள்

அந்த இரவிற்குரிய, ஆழமாய் மனதில் பதியக்கூடிய படிப்பினைகள், அப்போஸ்தலர்களுடைய மனங்களை முழுமையாய் நிரப்பி இருந்திருக்கும் என்றும், அவர்கள் கண்களுக்கு நித்திரை/உறக்கம் தூரமாய் இருக்குமளவுக்கு அவர்களை விழிப்பாய் இருக்கச் செய்திருக்கும் என்றும் ஒருவர் எண்ணக்கூடும். ஆனால், இப்படியாக இருக்கவில்லை. ஆண்டவருடைய வார்த்தைகளை எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையே அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மேசியாவாக இருப்பதற்கும், ஆளுகை செய்வதற்குமென வந்தவர் காட்டிக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படுவார் என்பதும், அவரோடுகூட அவருடைய சிங்காசனத்தில் இருப்பார்கள் என்று அவரால் வாக்களிக்கப்பட்டவர்களாகிய தாங்கள் அனைவரும் அவரைக் கைவிட்டு, ஓடுவது என்பதும் மிகவும் புரிந்துகொள்ள முடியாததாய் அவர்களுக்கு இருந்தது. அவர்களால் புரிந்துகொள்ள முடியாத அநேக உயர்வான காரியங்களை அவர்களிடம் அவர் கூறியிருந்தார். ஆகவேதான் அவர்கள் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்படியாக அவர் திரும்பத்திரும்ப அறிவுறுத்தினது, அவர்களுக்குப் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லை. இயேசுவின் விசேஷித்த மூன்று நண்பர்களும்கூட, அதாவது அவரது நம்பிக்கைக்கு விசேஷித்த பாத்திரமானவர்களாகக் காணப்பட்டவர்களும், வேறு ஒரு தருணத்தின்போது மறுரூப மலைக்கு அவரால் அழைத்துச்செல்லப்பட்டவர்களுமான மூன்று பேரும்கூடத் தூங்கிவிட்டனர். அவ்வப்போது கர்த்தர் இவர்களிடத்தில் வந்து, இவர்களை விழிக்கப்பண்ணின போது, இவர்கள் கவனித்த குறிப்பிட்ட சம்பவங்களையே/நிகழ்வுகளையே இவர்கள் நமக்குப் பதிவு செய்துள்ளனர்.

## யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி...

இப்பொழுது எப்படியாகக் காணப்படுகின்றது? உபத்திரவமாகிய இரவு நெருங்கிக்கொண்டிருக்க பூச்சக்கரத்துக்குடிகள் அனைத்தையும் சோதிக்கும்படியான சோதனை வேளை அண்மையில் இருக்க, மற்றும் நாம் சோதனையில் விழுந்துவிடாதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டுமென வசனங்கள் வாயிலாக ஆண்டவருடைய அநேக எச்சரிப்புகள் இருக்க — நாம் எப்படிக் காணப்படுகின்றோம்? அந்தோ பரிதாபம்! பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் போன்று கர்த்தரிடத்திலிருந்து விசேஷித்த அனுகூலங்கள் பெற்றுக்கொண்டு, அவருக்கு நெருக்கமாய் இருப்பவர்களில் அநேகர், தாங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கும் காலத்தின் முக்கியத்துவத்தை உணரத் தவறியும், தங்கள் மீது வரும் என முன்னுரைக்கப்பட்டுள்ள சோதனைகளை உணரத் தவறியும்போய், பேதுருவை போன்று கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் மத்தியிலிருந்து பிரித்துப்போடப்படும் மாபெரும் அபாயத்திற்குள்ளாகுகின்றவர்களாக இருக்கின்றனர்.

நமது கர்த்தருடைய நிலைமையை, நம்மால் ஓரளவுக்குக் கற்பனை செய்துகொள்ள முடிகின்றது. அவருக்கான மாபெரும் சோதனை வேளை அவர்மேல் கடந்துவந்தது. அதைக் கர்த்தர் முழுவதுமாக உணர்ந்திருந்தார். கடந்த காலங்களிலும், தற்போதும், அடுத்துவரும் நாளிலும் உள்ள அவருடைய உண்மையானது, பிதாவுக்கான அவருடைய உண்மையையும், மேலான பலனாகிய கனம், மகிமை மற்றும் அழியாமையை அடைவதற்கான அவருடைய உரிமையையும் தீர்மானிப்பதாய் மாத்திரம் இல்லாமல், அது ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நலம் தொடர்பானதை தீர்மானிக்கின்றதையும் இச்சோதனையானது குறிக்கின்றதாய் இருக்கின்றது. சோதனையில் ஜெயம் என்பது பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்தினின்று அனைத்துக் கைதிகளையும் முடிவில் விடுவிப்பதைக் குறிக்கின்றதாகும். இதில் தோல்வி என்பது அனைத்தையும் இழந்துவிடுவதாகும்! ஆகவே அவருடைய ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கம் கொண்டிருந்ததிலும், அவருடைய உணர்வுகளின் உச்சக்கட்டத்தில் அவருடைய வியர்வை நுண்துளைகளிலிருந்து இரத்தம் வந்ததிலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை அல்லவா? ஆ, அன்பான ஆண்டவரைக்குறித்து, "ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" என்று சரியாகவே எழுதப்பட்டிருக்கின்றது. அவருக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும், மிகவும்

அன்பிற்குரியவர்களாகவும் இருந்த சீஷர்கள் கூட, நிலைமையை உணர தவறி, அவர் ஏங்கின/விரும்பின அனுதாபத்தின் சகாயத்தை அவருக்கு அளித்திட தவறிவிட்டனர். இந்த சீஷர்கள் தங்களுடைய கர்த்தருக்கு அவருடைய சோதனை வேளையில் ஊழியம் புரிவதற்குரிய வாய்ப்பை மீண்டுமாகப் பெற்றுக்கொள்ளதக்கதாக பிற்காலங்களிலும் எதையும் செய்வதற்குக்கூடத் தயாராய் இருந்திருப்பார்கள் அல்லவா? எத்தகைய ஒரு சிலாக்கியத்தை அவர்கள் தவற விட்டுவிட்டனர்! இங்கு நமக்கும் ஒரு படிப்பினை உள்ளது. ஏனெனில், ஆண்டவர் மாம்சத்தில் இல்லாமலும், இனிப் பாடுபடுவதில்லை என்றாலும், அவருடைய அங்கங்களில் சிலர் இன்னமும் மாம்சத்தில்தான் காணப்படுகின்றனர் மற்றும் அவருடன் ஆளுகை செய்வதற்கென இப்பொழுது அவருடன் பாடுபட்டுக்கொண்டிருக்கும் சிலர் இருக்கின்றனர். நம்முடைய பாடுகள் ஆண்டவருடைய அந்தப் பாடுகள் போன்றதல்ல. அதேசமயம் நம் அனைவருக்கும் கூட ஒரே பாடுகள் இல்லை. ஒவ்வொருவனுக்கும் தான் ஆண்டவருடைய பயன்பாட்டிற்குத் தகுதியடையத்தக்கதாக, நிரூபிக்கப்படுவதற்கும், பரீட்சிக்கப்படுவதற்கும் தகுதியடைவதற்கும்/பொருந்துவதற்கும், மெருகூட்டப்படுவதற்கும் தனக்கேற்ற அனுபவங்களைப் பெறுகின்றவனாகக் காணப்படுகின்றான். நாம் ஒருவருக்கொருவர் அந்த அனுதாபத்தை/பரிவிரக்கத்தைக்கொண்டிருக்கின்றோமா? ஒருவருக்கொருவர் உதவவும், ஒருவருக்கொருவர் பாரங்களைச் சுமக்கவும், இவ்விதமாக கிறிஸ்துவின் பிரமாணத்தை, அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு நம்மை வழிநடத்தக்கூடிய அந்த இரக்கத்துடன்/பேராவலுடன்கூடிய அன்பைக்கொண்டிருக்கின்றோமா? இல்லையேல் காயப்படுத்தும் யூதாசின் ஆவியைக் கொண்டிருக்கின்றோமா? இல்லையேல் சரீரத்திலுள்ள மற்றவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கும்போது, சகோதர சகோதரிகள் பாடுபடும்போது, சோதனையில் காணப்படும்போது, நம்மைத் தூங்கிபோகச் செய்யும் அளவிற்கு உணர்ந்துகொள்ளுதலை இழந்தவர்களாகவும், சோம்பலுடன் கூடிய அக்கறையின்மையின் ஆவியைக்கொண்டவர்களாக இருக்கின்றோமா? இக்கேள்விக்கான நடைமுறை பதில்களையே கர்த்தர் எதிர்பார்க்கின்றார் மற்றும் தம்முடைய ஆவியை அதிகமாய் வெளிப்படுத்துகிறவர்களின் மீது கர்த்தருடைய அன்பும், கிருபையும் காணப்படும். நமக்கு அதிகமான காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பிற்பாடே இங்குப் பேசப்படும் சோதனை வேளை நம்மீது கடந்துவருகின்றது. நமக்கு அதிகமாய்க்கொடுக்கப்பட்டுள்ளபடியினால், நம்மிடத்தில் அதிகமாய் எதிர்பார்க்கப்படும் — நாம் சகோதரர்களுக்கென நம்முடைய ஜீவனையும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

## தேவதூதர் அவருக்கு ஊழியஞ்செய்தார்

நமது கர்த்தர் தம்முடைய வியாகுலத்தில், "இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று பிதாவிடம் ஜெபம் பண்ணினதில் அவர் மரணத்தின் பாத்திரத்தைக் குறிப்பிட்டார் என்று எண்ணிவிடக்கூடாது. காரணம், இந்த மரணம் அவசியமானது என்றும், இந்தக் காரணத்திற்காகவே தாம் உலகத்திற்கு வந்துள்ளார் என்றும் அவர் ஏற்கெனவே தம்முடைய சீஷர்களிடம் எடுத்துக் கூறியிருக்கின்றார். அப்படியானால் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் குறிப்பிட்ட பாத்திரம்தான் என்ன? இது அநேகமாக அவர் சிலுவையில் அறையப்படுதலுடன் கூட வரும் அவமானத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும் என நாம் பதிலளிக்கின்றோம். அதாவது, தேவனுக்கு எதிராக தேவ தூஷணம் உரைத்ததாக இரண்டு கள்வர்களின் நடுவில் சிலுவையில் அறையப்படுதலிலுள்ள அவமானம் ஆகும். தம்முடைய உயிர்த்தெழுதல் சார்ந்துள்ள தம்முடைய சொந்த உண்மைத்தன்மை தொடர்பாகவே நமது கர்த்தருக்குக் கடுமையான துயரம் காணப்பட்டது என்று வேறொரு வேதவாக்கியம் நமக்குத் தெரிவிக்கின்றது. ஒரு சிறு விஷயத்திலோ, ஒரு சிறு பிரமாணத்திலோ ஒருவேளை அவர் தவறியிருப்பாரானால் ஆதாமை போன்று அவரும் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டு, ஜீவனை இழக்க நேரிடும் மற்றும் இதன் விளைவாக அவருக்கு உயிர்த்தெழுதலும், எவ்விதமான எதிர்கால ஜீவியமும் இருந்திருக்காது மற்றும் அவர் நிறைவேற்றும்படியாக உலகத்திற்கு வந்து செய்த முழு வேலையும் தோல்வியடைந்திருக்கும். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" என்று வேதவாக்கியமானது நமக்குத் தெரிவிக்கின்றது (எபிரெயர் 5:7). அவருடைய சீஷர்கள் அவரைச் சூழ்ந்து நின்று, அவருடைய வாழ்க்கையில் கறைதிறை எதுவும் இல்லாமல், முற்றும் முழுமையாகத் தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகவே இருந்தது என அவருக்கு உறுதியளிக்கவில்லை என்றாலும், ஒரு தேவதூதனை விசேஷித்தவிதமாய் அனுப்பி வைத்து, அவர் பயப்பட்ட விஷயத்தில் அவருக்கு உற்சாகம் கொடுத்து, தேவன் அதிகமாகவே செய்துவிட்டார். இயேசு உண்மையுள்ளவராக இருக்கின்றார் என்றும், அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என்றும் பிதாவினிடத்திலுள்ள வாக்குறுதியைத் தேவதூதன் இயேசுவுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

அந்த வாக்குறுதியின் பலத்தினால் நமது கர்த்தர் அந்த இரவிலும், அடுத்தநாள் அதாவது அவரது மரணத்தின் தருணம் வரையில் வரவிருக்கின்ற அனைத்து நிகழ்வுகளையும் சந்திப்பதற்கு உறுதியுடனும், அமைதியுடனும், பலத்துடன் எழுந்து நின்றார். இப்படியாகவே நம் விஷயத்திலும் காணப்பட வேண்டும். எதிர்க்காலத்தைக்குறித்த கொஞ்சம் கவலைக் காணப்பட வேண்டும். நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் நாம் ஒருவேளை ஜாக்கிரதையற்று/அக்கறையற்று இருப்போமானால், கர்த்தர் பிரியமாய் இரார். நாம் ஜீவனை மதிப்பிட்டு உணர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். அதுவும் நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள மேலான ஜீவனை விசேஷமாக நாம் மதிப்பிட்டு உணர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். நாம் இன்னமும் அவருடையவர்களாகத்தான் இருக்கின்றோம் என்றும், மகிமையான நம்பிக்கைகளும்,

வாக்குத்தத்தங்களும் இன்னமும் நம்முடையவைகளாகத்தான் இருக்கின்றது என்றுமுள்ள நிச்சயத்தைக் கொடுக்கக்கூடிய அவருடைய அன்பு மற்றும் கிருபையின் நமக்கான ஊழியங்களை/உற்சாகப்படுத்தல்களை, நமது கண்கள் கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்க்கும் அளவுக்கு நாம் ஜீவனை மதிப்பிட்டு உணர்ந்திருக்க வேண்டும். மேலும் இந்த வாக்குறுதி/நிச்சயம் அல்லது ஆறுதல் என்பது பூமிக்குரிய ஊழியங்கள் மூலமாக வருவதில்லை. இவ்விஷயத்தில் மிகுந்த உண்மையுடனும், பேராவலுடனும் காணப்படும் தம்முடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கங்களும் ஆவியின் சரியான சாட்சியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதாவது அவனுடைய ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் உண்மை பற்றி அவனுடைய இருதயத்திற்குச் சரியான சாட்சியை அருளத்தக்கதாக கர்த்தர் தாமே பார்த்துக்கொள்வார்.

## இயேசு முத்தத்தினால் காட்டிக்கொடுக்கப்பட்டார்

துரோகம் என்பது உலகளவில் இழிவாகப் பார்க்கப்படுவதினால், தேவனுக்குத் துரோகியாகிய சாத்தானும், நமது கர்த்தர் இயேசுவுக்குத் துரோகியான யூதாசும், அனைவராலும் தவிர்க்கப்பட வேண்டிய இம்மாதிரியான மனநிலைமைக்கும், இருதய நிலைமைக்கும் பிரதிநிதிகளாகக் காணப்படுகின்றனர். இந்த இருதய நிலைமையை உடையவர்கள் இரண்டாம் மரணத்தை அதாவது நித்தியத்திற்குமான அழிவை அடைவார்கள் என்று கர்த்தர் அறிவிக்கின்றார். பல்வேறு சுவிசேஷப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்பொழுது, கர்த்தரையும், பதினொரு அப்போஸ்தலர்களையும்விட்டு, யூதாஸ் புறப்பட்டுப்போன பிற்பாடு, யூதாஸ் தான் ஏற்கெனவே பேசியிருந்த பிரதான ஆசாரியர்களிடத்திற்கு மீண்டும் சென்றதாகக் காண்கின்றோம். பேரத்தை முடிவு கட்டிவிட்டு, ஆலயத்தின் போர்ச்சேவர்களுக்கு யூதாஸ் வழிக்காட்டியாக ஆனான். அன்று பௌர்ணமியாக இருந்த போதிலும் செடிகள் மத்தியில் தேடுவதற்கு அவசியப்படும் விளக்குகளுடனும், தடிகளுடனும் சேவகர்கள் வந்தார்கள். அதிகாரிகளின் கண்ணோட்டத்தின்படி நடுராத்திரி வேளை என்பது மிகவும் சாதகமான வேளையாகக் காணப்பட்டது; காரணம் இயேசுவை அறிந்தவர்களும் அவருடைய அற்புதங்களுக்குச் சாட்சியாய் இருப்பவர்களுமான திரளான ஜனங்கள் பஸ்கா பண்டிகைக்கென எருசலேமில் காணப்பட்டப்படியால், காலை வேளையில் இயேசுவைக் கைது செய்வது என்பது கலகத்தைத் தூண்டிவிடுவதாகிவிடும். நமது கர்த்தர் கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றதற்கான காரணம், அத்தோட்டம் அவருடைய ஒரு நண்பனுக்குச் சொந்தமானதாகும் மற்றும் வெளியிடத்தில் காணப்படும் பட்சத்தில் கைது செய்யப்படுவதிலிருந்து தம்முடைய சீஷர்கள் தப்பித்துக்கொள்வதற்கான நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதினாலேயே ஆகும். மாற்கு பதிவு செய்துள்ளபடி ஒரு வாலிபன், இயேசு கூட்டிக்கொண்டு சென்ற கூட்டத்தாரைத் தொடர்ந்து போனான் என்றும், அந்த வாலிபன் நீண்டதும் தளர்ந்ததுமான அங்கிபோட்டிருந்தான் என்றும், சேவகர்கள் அவன்மேல் கைப்போட்டபோது, அவன் அங்கி கழன்று போய் நிர்வாணமாய்த் தப்பி ஓடிப்போய்விட்டானே ஒழிய, மற்றபடி சீஷர்களைக் கைது செய்வதற்கான எந்த விசேஷித்த முயற்சிகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த வாலிபன், மாற்கு சுவிசேஷத்தை எழுதின யோவான் மாற்காக இருக்கும் என்று அனுமானிக்கப்படுகின்றது. மேலும் இந்த யோவான் மாற்கு வாழ்ந்த இடத்தின் ஒரு பகுதியில்தான், கெத்செமனே தோட்டம் காணப்பட்டது.

நமது கர்த்தர் வியாகுலம் அடைந்து ஜெபம் பண்ணி, இறுதியில் ஆறுதல்படுத்தப்பட்ட பின்னர், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் மீண்டுமாக வந்து, "இனி நித்திரைப்பண்ணி இளைப்பாறுங்கள்" என்று கூறினார். அதாவது, "என்னோடுகூட விழித்திருப்பதற்கு அல்லது எனக்கு ஆறுதலின் வார்த்தையைப் பேசுவதற்குரிய உங்களுக்கான வாய்ப்பு முடிந்துவிட்டது. வரவிருக்கின்ற பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்கு எதிராக பாதுகாப்பாக, உங்களது இருதயங்களையும், மனங்களையும் ஜெபத்தில் விழிக்கப்பண்ணுவதற்குரிய உங்களுக்கான வாய்ப்புக் கடந்துபோய்விட்டது. இதோ என்னைக் கைது பண்ணுவதற்குரியவர்கள் வருகின்றார்கள்!" என்ற விதத்தில் கூறினார். சேவகர் கூட்டத்தாருக்கும் கொஞ்சம் முன்னதாக வந்து காணப்பட்ட யூதாஸ் துரோகத்தனமான முத்தத்தினால், இயேசுவை அடையாளம் காட்டிக்கொடுத்ததை அவமானத்தின் காரணமாக யோவான் பதிவு செய்யவில்லை. "மனுஷகுமாரனை முத்தத்தினாலா காட்டிக்கொடுக்கிறாய்?" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளின் நிமித்தம் தன்னுடைய ஏமாற்று வேலை வெளியாகிவிட்டது என்பதை உணர்ந்த யூதாஸ் அவரிடமிருந்து விலகி அவரைக் கைது செய்யும்படியாக வந்திருந்த கூட்டத்தாருடன்கூடச் சேர்ந்து நின்றான். மறைவிலிருந்து இயேசு வெளியே வந்து, "யாரைத் தேடுகின்றீர்கள்?" என்றார். அவர்களுடைய கேள்விக்குப் பிரதியுத்தரமாக: "நான் தான் அவர்; என்னுடைய நண்பர்களாகிய இவர்களைப் போகவிடுங்கள்" என்று கூறினார். மேலும் அவர்கள் பின்னிட்டுபோய் விழுந்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். சந்தேகத்திற்கிடமின்றி இது அவர்கள் மீது நமது கர்த்தரால் செயல்படுத்தப்பட்ட வல்லமையினாலேயே ஆகும். அதாவது அவர் ஒருவேளை விரும்பினால் அவர்களை முற்றிலுமாய் எதிர்ப்பதற்கு அவரால் பயன்படுத்தப்படக்கூடிய வல்லமையாகும். வேறுவழியின்றி கட்டாயத்திற்காக அல்லாமல், மாறாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கே தாம் தம்மைக் கையளிக்கின்றார் என்பதைச் சேவகர்களுக்கும், தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும் காட்டுவதற்கு, இந்த வல்லமை அவரால் செயல்படுத்தப்பட்டது போதுமானதாய் இருந்தது.

இவைகள் நடப்பதற்குக் கொஞ்சம் நேரத்திற்கு முன்னதாக, அப்போஸ்தலர்கள் சில பட்டயங்கள் எடுத்துகொள்ள வேண்டும் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, அவைகள் போதுமென்றும் கர்த்தர் கூறினார். இரண்டு பட்டயங்களில் ஒன்றை, அப்போஸ்தலர் பேதுருதான் வைத்திருந்ததுபோன்று தெரிகிறது. மேலும் ஆயுதங்களைக் கொண்டிருந்த மனிதர்கள் கர்த்தரை நெருங்கின போது, பேதுரு பட்டயத்தைப் பயன்படுத்த, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்குஸ் என்பவனின் காதை

வெட்டினார். தாம் சரணடைந்ததற்கான காரணம், தமது அல்லது சீஷர்களின் கோழைத்தனம் அல்ல என்பதைக் காட்டுவதற்கே இச்சம்பவம் நிகழ்வதற்கான கர்த்தருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் உறுதியே. இன்னுமாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கர்த்தர் பேதுருவிடம்: "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள் என்று கூறினார்" (மத்தேயு 26:52); அதாவது வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், "என்னுடைய பின்னடியார்கள், பூமிக்குரிய ஆயுதங்களைக் கொண்டு யுத்தம் பண்ணக்கூடாது; என்னுடைய இராஜ்யம் இப்படியான விதத்தில் ஸ்தாபிக்கப்படப் போவதில்லை" என்றார்.

அன்னா பல வருடங்களாக பிரதான ஆசாரியனாக இருந்துள்ளார் மற்றும் இவருக்குப் பின்பு இவருடைய குமாரர்களில் பலர் இந்த ஸ்தானத்திற்கு வந்துள்ளனர். மேலும் இப்பொழுது இவருடைய மருமகனாகிய காய்பா இந்த ஸ்தானத்தில் காணப்பட்டார். எனினும், அன்னாவுக்கு ஒரு குறிப்பிட்ட விதத்தில் அங்கீகாரம் இருந்தது. ஆகவேதான் நமது கர்த்தர் முதலாவதாக இவரிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். அன்னா இயேசுவிடம் கேள்வி கேட்டார். ஆனால் சட்டரீதியிலான விசாரணையைச் செய்யவில்லை. இந்த விசாரணை பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் இன்னொரு இடத்தில் காய்பாவிற்கு முன்னிலையில் நடைபெற்றது.

அன்னாவினால் நமது கர்த்தர் கேள்வி கேட்கப்பட்டுக்கொண்டிருக்கும் போதுதான், நெருப்பின் முன் குளிர் காய்ந்துக்கொண்டிருந்த பேதுரு, மூன்று முறை கர்த்தருடைய பின்னடியார்களில் ஒருவராக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுக் கேள்வி கேட்கப்பட்டார் மற்றும் மூன்று முறை மறுதலிக்க, சேவலும் கூவிற்று. சேவல் கூவுவதைப் பேதுருவும் கேட்டார். நமது கர்த்தர் அன்னாவின் முன்னிலையில் நின்று காய்பாவின் நியாயஸ்தனத்திற்கு முன்பாக அழைத்துச் செல்லப்பட்டபோது, பேதுருவைப் பார்த்தார். பேதுருவைப் பார்த்த அந்தப் பார்வையில் எத்தகைய ஒரு பிரசங்கம் இருந்திருக்கும்! கர்த்தரை ஒருபோதும் மறுதலிக்கமாட்டேன் என்று தன்னுடைய தைரியத்தைக்குறித்துப் பெருமையடித்துக் கொண்டவர் தோற்றுப்போனார். பேதுரு தன்னைப் பற்றி எண்ணியிருந்ததைக் காட்டிலும் எவ்வளவு பெலவீனமாய்க் காணப்பட்டார்! "சேவல் இரண்டு தரம் கூவுவதற்கு முன்னே, நீ மூன்று தரம் என்னை மறுதலிப்பாய்" என்ற கர்த்தருடைய தீர்க்கத்தரிசனம் நிறைவேறினது. பேதுரு வெளியேறி, மிகவும் மனங்கசந்து அழுது, இருதயத்தில் நொந்துபோய், தன்னைக்குறித்து வெட்கம் அடைந்து, இனி எதிர்க்காலத்தில் தற்பெருமையடித்துக்கொள்வதுமில்லை என்றும், ஆண்டவர் சொன்னதுபோல அதிகமாய் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும் என்றும், தீர்மானம் எடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இந்த அனுபவங்களில் சில, இன்றுள்ள கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலருக்கு அப்படியே இணையாகக் காணப்படும் என்பதை நாம் அறியோம். நம்மில் எவரேனும் இப்படியான குறைவுள்ள நிலைமைக்குள் காணப்படுவோமேயானால், ஆண்டவர் பேதுருவுக்கு ஜெபம் பண்ணினதுபோன்று, நமக்கும் ஜெபம் பண்ணுவதோடுகூட, அவருடைய சிட்சையின், கண்டிப்பின் பார்வையைக்கூட நம்மேல் விழப்பண்ணுவார். மேலும் நாம் நமது பெலவீனத்தினிமித்தமும், அவமானத்தினிமித்தமும் மூழ்க்கடிக்கப்பட்டுவிடாமல், யூதாஸைப் போன்று இல்லாமல், நம்முடைய மனம்திரும்புதல் பேதுருவைப் போன்று கர்த்தருக்கு உண்மையானதாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவும் காணப்படத்தக்கதாக அவருடைய பரிவிரக்கத்தையும், அன்பையும் நமக்கு நினைப்பூட்டக்கூடிய அவருடைய பார்வைகளையும் நம்மீது விழப்பண்ணுவார் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்.

*****

# ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்?

## யோவான் 19:17-42

***"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்."***
**1 கொரிந்தியர் 15:3**

வரலாறுகளின் மிகுந்த குறிப்பிடத்தக்க உண்மைகளில் ஒன்று, உலகத்திலேயே மிகுந்த அறிவுடையவர்களும், மிகவும் நாகரிகமடைந்தவர்களுமான ஜனங்கள், கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்படும் ஒருவரை, தங்களது தலைவராக, தங்களது ஆசாரியனாக, தீர்க்கதரிசியாக மற்றும் இராஜாவாக அங்கீகரித்திருக்கும் காரியமே ஆகும்! இன்னுமாக இவருடைய நாமத்தில், இவருடையப் பின்னடியார்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உபதேசங்களான: இவர் சிலுவையில் அறையப்பட்டக் காரியமானது, தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகம் என்றும், இன்னுமாக இவர் சிலுவையில் அறையப்படுவது அவசியம் என்றும், சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தினால், அதாவது சிலுவையில் அறையப்பட்டவரின் மரணத்தினால் சபை மற்றும் உலகத்திற்கான பாவங்களுக்குரிய பாவநிவாரணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வலியுறுத்தும் உண்மையும்கூட மிகவும் குறிப்பிடத்தக்கதாய் உள்ளது; "நம்முடைய பாவங்களை (சபையின் பாவங்களை) நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). தெய்வீக வழிநடத்துதலின்படி பார்க்கும்போது, கிறிஸ்துவின் சிலுவையே, (மரமல்ல, மாறாக சிலுவையினால் அடையாளப்படுத்தப்படும் பலியே) பாவம் உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே, அது பிரவேசிக்கும் என்பதை முன்னறிந்திருந்த தேவன், நம்முடைய இனத்திற்காக ஆயத்தம்பண்ணியுள்ள மகா இரட்சிப்பிற்கான மையமாக உள்ளது என்பதை நாம் காண்கின்றோம். தெய்வீகத் தீர்ப்பானது, மரணமாக இருந்தது மற்றும் இந்தத் தீர்ப்பானது ஆதாம் மற்றும் அவருடையச் சந்ததியார் மீது காணப்பட்டது. தண்டனைத் தீர்ப்பின் கீழ்க் காணப்பட்ட எவனாலும் தன்னையோ அல்லது தன்னுடைய சகோதரனையோ மீட்டுக்கொள்ள முடியாது, ஆகவே மனிதனை மீட்கத்தக்கதாக லோகோஸ் தமது பரலோக நிலைமையை விட்டு, மனிதனாக வேண்டும் என்ற விதத்தில் தெய்வீக ஏற்பாடு காணப்பட்டது.

ஏதோ ஒரு விதத்தில் மனிதனாகிய கிறிஸ்து மரிப்பது என்பது, ஆதி தண்டனைத் தீர்ப்பை ஈடு செய்வதற்குப் போதுமானதாய் இருந்திருக்கும்; ஆனால் இயேசுவின் உண்மையானது தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் குறிப்பாய் நிரூபிக்கப்படுவதற்கும் மற்றும் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாகவும், எல்லா நாமங்களுக்கு மேலாகவும் இயேசுவைப் பிதா உயர்த்தும் காரியத்திலும், இன்னுமாக அனைவரும் பிதாவைக் கனப்படுத்துவது போன்று, குமாரனையும் கனப்படுத்தும் நிலைக்கு இயேசுவைப் பிதா உயர்த்தும் காரியத்திலும், பிதா நியாயமாய்ச் செயல்பட்டுள்ளார் என்பது நிரூபிக்கப்படுவதற்கும் என்று சோதிக்கின்ற விதத்திலும், அவமானமான விதத்திலும் மரணத்தை ஏற்பாடு பண்ணுவதன் மூலம், நமது அருமை மீட்பர், தம்மிடத்தில் கொண்டிருக்கும் உண்மையைப் பரீட்சித்திட தேவன் பிரியமாய் இருந்தார். இதன் காரணமாகவே, சிலுவை மரணம் என்பது வேதவாக்கியங்களில் மிகவும் அவமானமான மரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது; "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" (கலாத்தியர் 3:13). கூடுதலாக வழங்கப்பட்ட சிலுவையின் அவமானத்தைக் குறித்து அப்போஸ்தலன், இயேசுவுக்குப் பிதாவோடு இருந்திட்ட மகிமையை அவர் துறந்து, தம்மைத்தாம் தாழ்த்தி, அடிமையின் ரூபம் எடுத்து வந்தது குறித்துப் பேசுகையில், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்" (பிலிப்பியர் 2:8-11) என்று குறிப்பிடுகின்றார். எந்த ஓர் உயர் குடிமகனுக்கும் மிகக் கடினமானதாகக் காணப்படுகின்ற, அதிலும் குறிப்பாகப் பூரண மனுஷனுக்கு மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்ற சிலுவையின் இந்த அவமானமானது, நமது அருமை மீட்பருடைய விஷயத்தில், அவருக்கு மகிமைக்கும், கனத்திற்கும் மற்றும் திவ்வியச் சுபாவமாகிய அழியாமைக்கும் ஏறிச் செல்வதற்கான படிக்கல்லாயிற்று. இந்த அவமானமான சிலுவையினிமித்தமாக, நமது அருமை மீட்பர், அவருக்கு உண்மையாய்ச் சொந்தமானவர்களும்,

கர்த்தருடைய வார்த்தைகளினால் வழிகாட்டப்பட்டவர்களுமாகிய நம் அனைவரின் கணிப்பிலும்கூட, ஏற்கெனவே உயர்வான நிலையில் காணப்படுகின்றார். நாம் இப்படியாகச் சிலுவையின் மரணபரியந்தமாக நிரூபிக்கப்பட்டுள்ள நமது எஜமானின் உண்மையிலும், கீழ்ப்படிதலிலும் மேன்மைப்பாராட்டுகின்றோம். எனினும் இப்படியான கருத்திற்கு உயர் விமர்சகர்களும், பரிணாமக் கொள்கைவாதிகளும் ஆதரவு தெரிவிப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். இவர்கள் தங்களையே ஞானிகள் என்று எண்ணிக்கொண்டு, பரத்திலிருந்து வருகிறதும், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக ஆதாமினாலும், அவருடைய சந்ததியாராலும் இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கான ஈடுபலி விலைக்கிரயமானது நமது அருமை மீட்பர் தம்மையே பலியாக்கி, பிதாவிடம் ஒப்படைத்ததின் மூலம் மாத்திரமே உண்டானது என்றும், இந்த ஈடுபலியின் மூலமாக மாத்திரமே மனுக்குலம் உயிர்த்தெழுதலையும், தேவனுடன் இசைவிற்குள் வந்து, நித்தியஜீவன் பெறுவதற்கான வாய்ப்பையும் அடைய முடியும் என்றும் நமக்குப் போதிக்கிறதுமான ஞானத்தைப் புறக்கணித்து விடுகின்றனர்.

## நீதிமானை அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள்

நம்முடைய இந்தப் பாடத்தில் நாம் பிரதான ஆசாரியனாலும், ஆலோசனை சங்கத்தாராலும் நமது கர்த்தர் விசாரணை பண்ணப்பட்டதையோ அல்லது நமது கர்த்தர் பிலாத்துவின் விசாரணை ஸ்தலத்தினிடத்திற்கும், பிற்பாடு ஏரோதினிடத்திற்கும், பின்னர் மீண்டும் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டுவரப்பட்டதையோ மற்றும் இன்னுமாக கர்த்தரை விடுவிப்பதற்கென உரோம தேசாதிபதியான பிலாத்து எடுக்கும் முயற்சிகளையோ பார்க்கப்போவதில்லை. கலவரம் எழும்பிவிடும் என்ற அச்சத்தினாலேயே, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு, பிலாத்துச் சம்மதித்துக் கட்டளையிட்டார் மற்றும் அதேவேளையில், தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்" என்று கூறினார். அதற்கு ஜனங்கள், "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூறினார்கள் மற்றும் இயேசு சிலுவையில் அறையப்படும்படிக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அதுமுதற்கொண்டு எருசலேம் பல முறை இடித்தும், மீண்டுமாய்க் கட்டி எழுப்பப்பட்டும் இருக்கின்றது மற்றும் சில தெருக்களின் தளமட்டமானது முன்பிருந்த மட்டத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கின்றது; எனினும் வயா டோலோர்சா (via Dolorosa) அல்லது "துக்க பாதையானது" இன்னமும் சுட்டிக்காட்டப்படுகின்றது மற்றும் ஆர்ச் ஆப் எக்கிஹோமோ (Arch of Ecce Homo) என்று அழைக்கப்படுகின்றதான வளைவு பாதையின் ஒரு பகுதியும் இன்னமும் காணப்படுகின்றது! இவ்விடத்தில் தான் பிலாத்து நின்று, நமது கர்த்தரை விடுதலைபண்ணும்படிக்கு வேண்டிடும் வண்ணமாக மூர்க்கமாய்க் காணப்பட்ட ஜனங்களை நோக்கி, "இதோ இந்த மனுஷன்!" அதாவது, மனுக்குலத்திலேயே, உங்கள் இனத்திலேயே சிறந்தவராய்க் காணப்படும் இவரை நான் சிலுவையில் அறைந்திட வேண்டுமென்று விரும்புகின்றீர்களா? இவரைப் பாருங்கள்! இவ்விஷயம் குறித்து இறுதியாய் முடிவு செய்யுங்கள்! என்று கூறுவதுபோன்ற அர்த்தத்தில் கூறினார் என்பதில் இவ்விடத்திற்குக் கீர்த்தியுள்ளது. இந்தப் பாரம்பரியங்களானது பின்வரும் கண்டுபிடிப்பினால் ஆதாரம் அடைந்துள்ளது; அதாவது சமீபக் காலங்களில் பிலாத்துவின் அரண்மனை இருந்த இடமென்று அனுமானிக்கப்படுகின்ற இடத்தில் வீட்டின் அஸ்திபாரத்திற்காக தோண்டி/அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டபோது, ஒரு குறிப்பிட்ட ஆழம் தோண்டினதில், விசாலமான மற்றும் வேலைபாடுள்ள மொசைக் (Mosaic) தளவரிசைப்படுத்தின மேடை பாகம் வெளிப்பட்ட காரியத்தினால் ஆதாரம் அடைந்துள்ளது; இந்தத் தளவரிசைப்படுத்தின மேடையானது அரண்மனை சம்பந்தப்பட்டதாகும்; இது யோவான் 19:13-ஆம் வசனத்தில் இடம்பெறும் தளவரிசைப்படுத்தின மேடையென்ற நியாயாசனத்திற்கு ஒத்திருக்கின்றது; "பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்." நமது கர்த்தரும், அவரைச் சிலுவையில் அறைந்திடுவதற்காக வந்திட்டதான உரோம வீரர்களும், எபிரெய பாஷையில் கொல்கொதா என்றும், இலத்தீனில் கல்வாரி என்றும் அழைக்கப்படுகின்றதான "மண்டையோட்டு ஸ்தலத்திற்குப்" போகையில், அவர்கள் எடுத்துக்கொண்ட பாதையை அடையாளங்கண்டுகொள்ளத்தக்கதாக, பட்டணத்தினுடைய சிறு வரைபடம் ஒன்றை நாம் இவ்வெளியீடோடுகூட வெளியிடுகின்றோம். கல்வாரி என்று அனுமானிக்கப்படுகின்ற இடமானது, எருசலேமுக்கு அருகாமையிலுள்ள மலையாகும் மற்றும் இது தொலைவிலிருந்து பார்க்கப்படும்போது, மண்டை ஓட்டினுடைய தோற்றத்தினைக்

கொண்டிருக்கின்றது; இதன் பள்ளங்களானது, கண் குழிகளினுடைய தோற்றத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நவீன கால கல்விமான்கள், இந்த இடமே, சுவிசேஷ பதிவில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அம்சங்களுள்ள இடத்திற்கு ஒத்திருக்கின்றது என்று ஒத்துக்கொள்கின்றனர்; அதாவது பட்டணத்துச் சுவர்களுக்கு வெளியே, பட்டணத்திற்கு அருகே, எளிதில் பார்க்கக்கூடிய இடம், அடிக்கடி நடமாடப்படும் நடைபாதையின் அருகாமையில் எனும் அம்சங்களுக்கு ஒத்திருக்கிறது; மற்றும் இவ்விடமானது இன்னமும் யூதர்களால் "கல்லெறியும் ஸ்தலமென" அழைக்கப்படுகின்றது. ஐந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு கிறிஸ்தவ பாரம்பரியமானது, இவ்விடத்திலேயேதான் ஸ்தேவான் கல்லெறியப்பட்டதாக முடிவுசெய்துள்ளது.

"இயேசு மாத்திரம் தனிமையில் சிலுவை சுமந்திட,
உலகம் அனைத்தும் சுதந்திரமடைந்து போய்விட வேண்டுமோ?"

சிலுவையில் அறையப்படுபவர்களின் விஷயத்தில், குற்றவாளி தன்னுடைய சொந்த சிலுவையைச் சுமந்து செல்ல வேண்டும் என்பது வழக்கமாய் இருந்தது; ஆகையால்தான் இயேசு தமது சிலுவையைச் சுமந்து சென்றார் என்று வாசிக்கின்றோம்; அதாவது கடந்த 24 மணி நேரங்களில் நடந்திட்ட காரியங்களினால் உண்டான சோர்வின் காரணமாகவும், தூக்கமின்மையினாலும், உணவு உட்கொள்ளாததினாலும், அடிக்கப்பட்டதின் காரணமாக ஏற்பட்ட மிகுந்த களைப்பினாலும், சோர்வினாலும், கர்த்தர் சிலுவையினுடைய பாரபளுவின் கீழ் பலம் குன்றி, மயக்கமடைவது வரையிலும், இயேசு தமது சிலுவையைச் சுமந்துச் சென்றார் என்று பார்க்கின்றோம். அவர் பரிபூரணமானவராகக் காணப்பட்டார் என்ற உண்மையை நாம் நினைவுகூருகையில், அவருக்கு அதிக பலம் இருந்திருக்கும் என்று நாம் எண்ணக்கூடும்; ஆனால் பரிபூரணமான ஒரு மனிதன் கண்டிப்பாக தோற்றத்தில் இராட்சசன் அல்லது பலத்தில் ஹெர்க்குலஸ் போன்றோ இருப்பதில்லை எனும் விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இப்படியாக இயல்புக்கு மாறுப்பட்ட பலம், தோற்றம் காணப்படுவது என்பது பூரணமின்மையினுடைய விளைவுகளேயாகும். ஆணிலும், பெண்ணிலும் காணப்படும் மனம் மற்றும் சரீரத்தின் சிறந்த இயல்புகளை ஒன்றுசேர பெற்றிருக்கும் நிலையிலேயே நமது இனத்தினுடைய பரிபூரண மாதிரி (specimen) காணப்படும் என்றும், மிதமான பலத்துடனும், மென்மையுடனும், கம்பீரத்துடனும், நாகரிகத்துடனும் காணப்படுவதே பரிபூரணம் பற்றின ஓரளவுக்கான நம்முடைய புரிந்துகொள்ளுதல் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். இப்படியாகவே கனிகள் மற்றும் காய்கறிகளுடைய விஷயத்திலும் காணப்படுகின்றது; பெரிய கனிகள் எப்போதும் கரடுமுரடானவைகளாக இருக்கின்றது; பூரணமான கனிகள் பெரிய பருமன் அளவிலோ, கரடுமுரடாகவோ அல்லது மிகச் சிறுபருமன் அளவிலோ இருப்பதில்லை. நம்முடைய இனத்தாரில் பெரும்பான்மையானவர்கள் ஒன்றில் மிகவும் மென்மையானவர்களாக அல்லது மிகவும் கரடுமுரடானவர்களாகக் காணப்படுமளவுக்கு, நம்முடைய இனமானது, பரிபூரணத்திலிருந்து மிகவும் தொலைத் தூரத்தில் போய்விட்டது. நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில் இன்னுமாக அவர் தம்முடைய ஜீவனை மூன்றரை வருடங்களாகப் பலிச் செலுத்திக் கொண்டு வந்தார் என்றும், அனைத்து விதமான வியாதிகளைச் சொஸ்தப்படுத்தினதின் மூலம், அவரிடமிருந்து சத்துவம் கடந்துபோய்க் கொண்டே இருந்தது என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இந்த இழப்புகளும்கூட அவரைப் பலவீனமாக்கினது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர் மூன்றரை வருடங்களாக மரித்துக்கொண்டிருந்தார் மற்றும் பிதாவின் சித்தத்திற்கு இசைவாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் காரியத்தை நிறைவேற்றி முடிக்கத்தக்கதாக, இப்பொழுது அவர் கல்வாரி நோக்கி போய்க் கொண்டிருந்தார்.

நமது கர்த்தருடைய சீஷர்களில் சிலர் காரியங்களைப் பார்வையாளராக நின்று பார்த்துக் கொண்டிருந்தனர் (யோவான் மாத்திரமே அங்கே காணப்பட்டார்) மற்றும் கர்த்தருக்காக சிலுவையைச் சுமப்பதற்குச் சீஷர்கள் மகிழ்ச்சியாய் இருந்திருப்பார்கள் என்பது உண்மையே. தாங்கள் சட்டத்தின் அதிகாரிகள் காரியத்தில் குறிக்கிடுபவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற அச்சமே, சீஷர்கள் கர்த்தருக்காக சிலுவைச் சுமக்கும் பணியைச் செய்வதற்குத் தடையாக இருந்தது என நாம் அனுமானிக்கின்றோம். எனினும் தேவையை உணர்ந்துகொண்ட போர்ச்சேவகர்கள், போகிற வழியில் ஒருவரைக் கண்டு, இயேசுவின் பின்னே சிலுவையைச் சுமந்து வரும்படிக்கு வற்புறுத்தினார்கள். "சிலுவையை அவர் பின்னே சுமந்துக்கொண்டு வரும்படி" எனும் வார்த்தைகளானது, கொஞ்சம் சிலுவையைத் தாங்கி, இயேசுவைக் கொஞ்சம் பாரப்பளுவிலிருந்து விடுவிப்பதையோ அல்லது இயேசு முன்னே நடக்க, சீமோன் சிலுவையின் பின்னே அனைத்துப் பாரப்பளுவையும் சுமந்து வருவதையோ குறிக்கின்றதாக இருக்கலாம். சீமோன் மீது திணிக்கப்பட்ட இந்த வேலையானது, மிகவும் விலையேறப்பெற்ற ஒரு சிலாக்கியமாகும். சீமோனுக்குக் கிடைத்திட்ட இந்த வாய்ப்பின் நிமித்தமாக, கர்த்தருடைய பின்னடியார்களில் எத்தனைபேர், சீமோன் மீது

பொறாமை அடைந்துள்ளனர்! சீமோன் பிற்பாடு கிறிஸ்தவனானார் என்றும், இதனால் இவரைக்குறித்தும், இவருடைய ஊரின் பெயரைக்குறித்தும் அப்போஸ்தலனாகிய யோவான் அறிந்திருந்தார் என்றும் பாரம்பரியமானது தெரிவிக்கின்றது. பாரம்பரியம் தெரிவிக்கும் இக்காரியத்திற்கு, இந்தச் சீமோனுடைய குமாரர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படுகின்ற காரியமானது பலமான ஆதாரமாகக் காணப்படுகின்றது; (மாற்கு 15:21).

நம்முடைய கர்த்தருக்காக நாம் அனுதாபம் கொண்டு, அவருக்குச் சிலுவைச் சுமப்பதில் உதவி செய்திடுவதற்கு நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய்க் காணப்பட்டிருந்திருப்போம் என்று சிந்தித்துப் பார்க்கும் அதே வேளையில், இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தர் நமக்கு இரண்டு சிலாக்கியங்களை அருளி உள்ளார் என்பதையும் நாம் மறந்து போய்விடக்கூடாது. முதலாவதாக அவர் நம்மிடத்தில் கூறுவது என்னவெனில், நாம் அவருடைய சீஷர்களென அவரைப் பின்பற்றி வந்தோமானால், நாம் தற்காலத்தில் சிலுவையைச் சுமக்கும் விஷயத்தில் அவருடன் பங்கடைபவர்களாய் இருப்போம்; "என்னுடைய சீஷனாகும் எவனும் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்;" நாம் கர்த்தரை விசுவாசித்து, விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்டு, தேவனிடத்தில் சமாதானம் பெற்ற பிற்பாடு மற்றும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளதை உணர்ந்துகொண்ட பிற்பாடு, நாம் நம்மை முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதற்கு, நம்முடைய சிலுவையைச் சுமப்பதற்கு, நம்முடைய சொந்த சித்தங்களைத் தள்ளி, கர்த்தருடைய சித்தத்தை, அதாவது கர்த்தரை அனுப்பிவைத்தவராகிய பிதாவினுடைய சித்தமாகிய கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றோம். நம்முடைய சிலுவையை அன்றாடம் சுமந்துச் செல்லத்தக்கதாக, போதுமான அளவுக்கு இந்தச் சிலாக்கியத்தை மதிக்கின்றோமா? நாம் இன்னமும் சிலுவையைச் சுமந்துகொண்டிருக்கின்றோமா? அவர் "முடிந்தது" என்று சொன்னதுபோன்று, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியாகிய — வார்த்தைகளின் மூலமும், அன்றாட நடத்தையின் மூலமும் சத்தியத்திற்குச் சாட்சிப்பகரும் சிலாக்கியத்தின் விஷயத்திலும் "முடிந்தது" என்று சொல்லும் நிலையை நாம் அடையும் ஓட்டத்தின் இறுதிவரை, நாம் கர்த்தருடைய கிருபையினால் தொடர்ந்து சிலுவையைச் சுமப்போம் என்பதாக நம்முடையத் தீர்மானம் காணப்படுகின்றதா?

சிலுவைச் சுமத்தலுக்குரிய இரண்டாம் வழி, உலகில் நம்மைச் சுற்றி, கிறிஸ்துவினுடைய பிரதிநிதிகளெனக் காணப்படும், கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய மற்றவர்களுக்கு உதவிச் செய்வதாகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களில் எவரேனும், சுமப்பதற்கு மிகவும் பாரமுள்ள சிலுவைகளைச் சுமப்பதையோ, பாரப்பளுவினால் அமிழ்ந்துபோகத்தக்கதான நிலையிலோ அல்லது ஏற்கெனவே அமிழ்ந்துப் போய்விட்ட நிலையிலோ காணப்படுவதை நாம் பார்ப்போமானால், நாம் நமது எஜமானையும் மற்றும் அவருடைய பாரங்களை, அவர் சுமப்பதற்கு உதவிட நாம் எவ்வளவு ஆசைப்பட்டோம் என்பதையும் நினைவுக்குக் கொண்டுவருவோமாக; மேலும் அவருடைய நாமத்தில், அவருடையச் சீஷர்களாகிய இந்தச் சிறியவர்களுக்குச் செய்யப்படும் எதுவும், அவருக்கே செய்யப்பட்டதாகும் என்று நமக்கு உறுதியளிக்கும் அவருடையச் சத்தத்திற்கு நாம் செவிக்கொடுப்போமாக. ஓ! சிலுவை சுமப்பது என்பது, கர்த்தருடைய சிறுமந்தையிலுள்ள அநேக பாரமடைந்துள்ள மற்றும் பெலவீனப்பட்டுள்ள மந்தையினருக்கு உதவிகரமான அநேக வார்த்தைகள் பேசுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்! இன்னுமாக அது அநேகம் இரக்கம் பாராட்டுதல்களையும் குறிக்கின்றதாய் இருக்கும்! இப்படியான உதவிகரமான வார்த்தைகளும், இரக்கம்பாராட்டுதல்களும், கர்த்தரால் தம்முடைய சரீரத்தின் அவயங்கள் என்று அங்கீகரிக்கப்படுபவர்களில் சிலருக்கு எத்தகைய ஆறுதலையும், மகிழ்ச்சியையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும்! துயரத்தின்போது எப்படி நம்முடைய சரீரத்தினுடைய ஓர் அவயம், மற்றொரு அவயத்திற்கு உதவிபுரிகின்றதோ, அப்படியே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அனைத்து அங்கத்தினர்களும் ஒருவருக்கொருவர் தாங்கியும், ஒருவரையொருவர் பலப்படுத்தியும், ஒருவரையொருவர் ஆறுதல்படுத்தியும், ஒருவரையொருவர் புத்துயிர்பெறச் செய்தும் மற்றும் இராஜ்யம் தொடர்புடைய நம்முடைய நம்பிக்கைகளின் மகிமையான நிறைவேறுதலுக்காக பொதுவாய் ஒருவரையொருவர் ஆயத்தம்பண்ணியும் காணப்பட வேண்டும்.

## சிலுவையில் அறையப்பட்டவர் மீது ஒரு பார்வை

சிலுவையில் அறையப்படுதல் பற்றின அநேக விவரங்கள் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்கின் பதிவின்படி சிலுவையில் இயேசு அறையப்பட்டக் காலமானது மூன்றாம் மணி வேளை, அதாவது ஒன்பது மணியளவாகும், ஆனால் யோவானோ ஆறாம் மணி வேளை (அ) மதியம் என்று குறிப்பிடுகின்றார். சிலுவையில் அறையப்படுவதற்கான கட்டளை

பிறப்பிக்கப்பட்ட மூன்றாம் மணி வேளையை மாற்கு குறிப்பிட்டிருக்கலாம் மற்றும் யோவானோ நமது கர்த்தர் சிலுவையின்மேல் காணப்பட்ட வேளையைக் குறிப்பிட்டிருக்கலாம்; அதாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது முதல் மெதுவாய்க் கல்வாரி நோக்கிப் பிரயாணம் பண்ணுவதற்கும், இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கும், "இவர் யூதருடைய இராஜாவாகிய, நாசரேத்தூர் இயேசு" எனும் நமது கர்த்தருக்கு எதிரான குற்றச்சாட்டு எழுதப்பட்டப் பலகையை உண்டுபண்ணி, அதைச் சிலுவையில் தொங்கவிடுவதற்கும், பிற்பாடு இயேசு அறையப்பட்டிருந்த சிலுவையை உயர்த்தி நிறுத்துவதற்கும் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் எடுத்திருக்கும்; இவையெல்லாம் முடிந்த பிற்பாடு இயேசு சிலுவையின்மேல் காணப்பட்ட ஆறாம் மணி வேளையைத்தான் யோவான் குறிப்பிடுகின்றார்.

குற்றவாளி மரணத்தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதற்குரிய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் வண்ணமாகச் சிலுவையின் மீது போடப்பட்டிருந்த மேல்விலாசத்தின் காரணமாக யூத தலைவர்கள் அதிருப்தி அடைந்தார்கள். அதைக்குறித்து அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் மற்றும் இயேசு, யூதருடைய இராஜா எனும் காரியத்தை மறுதலிக்கவும் செய்தார்கள். ஆனால் அதை மாற்றுவதற்குப் பிலாத்து மறுத்துவிட்டார்; பொறாமை மற்றும் துர்க்குணம் காரணமாகவே யூத அதிகாரிகள், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார்கள் என்பதை உணர்ந்துகொண்ட பிலாத்து, விசேஷமாக அவர்களுக்குக் கடிந்துகொள்ளுதலாய் இருக்கத்தக்கதாகவே, இப்படி எழுதிப்போட்டார். இப்படியாக அவர்களைப் பிலாத்து இப்பொழுது அவமானத்திற்குள்ளாக்கினார். ஜனக்கூட்டத்தார் அனைவராலும், அந்த மேல்விலாசத்தைப் படிக்க முடிந்தது; ஏனெனில் பொது ஜனங்களுடைய எபிரெய மொழியிலும், உரோம அரசாங்கத்தினுடைய இலத்தீன் மொழியிலும், அக்காலக்கட்டத்தின் கல்விமான்களுடைய கிரேக்க மொழியிலும், அதாவது மூன்று மொழிகளிலும் மேல்விலாசம் எழுதப்படுவது வழக்கமாய் இருந்தது. இயேசுவினுடைய சத்துருக்கள் அங்குக் காணப்பட்டபோதிலும், சிலுவையில் அறையப்பட்ட இயேசு, மேசியாவெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். எனினும் இது எவ்வளவு விநோதமாய் உள்ளது! சிலுவையில் அறையப்பட்ட ஒரு மேசியா! மனிதனுடைய வழிகளிலிருந்து, தேவனுடைய வழிகளும், தம்முடைய காரியங்களை நிறைவேற்றுகிற அவரது வழிவகைகளும் எவ்வளவு வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது! உண்மையில் வானங்கள் எவ்வளவாகப் பூமியிலிருந்து உயரமானதாக இருக்கின்றதோ, அப்படியே நம்முடைய வழிகளிலிருந்து, அவருடைய வழிகளானது மேன்மையானதாகக் காணப்படுகின்றது. ஒருவேளை இயேசு மரிக்கவில்லை என்றால், ஒருவேளை நம்மை அவர் பாவத்திலிருந்து மீட்டுக்கொள்ளவில்லை என்றால், அவரால் மனிதனைக் கொஞ்சம் சிறந்த விதத்தில் வாழ்ந்திட, மனிதனுக்கு உதவியிருக்க முடியுமே ஒழிய, மற்றபடி ஆதாமின் காரணமாக இழந்துபோகப்பட்டதும், மீட்பின் வாயிலாக அல்லாமல் மற்றப்படித் திரும்பப்பெற்றுக்கொள்ள முடியாததுமான நித்திய ஜீவனுக்கு அவரால் மனிதனை நடத்தியிருக்க முடியாது. தெய்வீகத் திட்டத்தின் கீழ், உலகத்தை மீட்டுக்கொள்ளத்தக்கதாகத் தம்மையே தாழ்த்தினவர், இப்பொழுது பிதாவினால் வல்லமை மற்றும் கனத்தினுடைய தமது வலதுபாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார் மற்றும் இன்னும் சீக்கிரத்தில் வாக்குத்தத்தத்தின்படி பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாகப் பொல்லாப்பை வீழ்த்துவதற்கும், நீதியை மேம்படுத்துவதற்கும், பெலவீனர்களுக்கும், ஏழைகளுக்கும், அறியாமையில் காணப்படுகிறவர்களுக்கும் உதவிடுவதற்குமென, கர்த்தர் தம்மை இஸ்ரயேலின் இராஜாவாகவும், முழு உலகத்தின் இராஜாவாகவும் வெளிப்படுத்துவார் (ஆதியாகமம் 12:3).

நமது கர்த்தர் கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார். இயேசுவின் இருபக்கங்களிலும் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரண்டு கள்வர்களும், அநேகமாகப் பரபாசினுடைய கூட்டத்தின் அங்கத்தினர்களாகவும், ஜனங்களால் ஏறக்குறைய வீரர்களாகக் கருதப்பட்டவர்களாய் இருந்தனர். எனினும் இவர்களை ஜனங்கள் இகழ்ந்து பேசினதாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இப்படியாகவே கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்தில் இன்றுவரை காணப்படுகின்றது. நம்முடைய எஜமானும், அவருடைய நோக்கங்களும் மக்களின் ஆதரவைப் பெறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இன்னுமாக உலகத்தினுடைய கல்விமான்களும், செல்வாக்குமிக்கவர்களும் கர்த்தருக்கு எதிராய்க் காணப்பட்டதுபோலவே, நமக்கும் எதிராய்க் காணப்படுவார்கள் என்பதையும், இவை அனைத்தும், அவரோடுகூடப் பாடுபட்டோமானால், அவரோடுகூட ஆளுகைச் செய்வோம் என்னும் அவருடைய வார்த்தை மற்றும் கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் தெய்வீகத் திட்டத்தின்படியே நடந்தேறுகின்றது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிலுவையில் அறையப்பட்டதின் விவரங்கள் விவரமாகக் கொடுக்கப்படவில்லை மற்றும் இப்படியாகக் கொடுக்கப்படாமல் இருந்ததற்காகவும் நாம் மகிழ்ச்சிக்கொள்ளுகின்றோம், ஏனெனில் விவரமான விவரங்கள் கொடுக்கப்படாமலேயே, சிலுவையில் அறையப்படும் காட்சியானது, மனங்களுக்குக் கோரமானதாகக் காணப்படுகின்றது; மேலும் தண்டனைத் தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் பற்றின

விவரங்களைப் பதிவுசெய்துள்ள நான்கு சுவிசேஷகர்களும், சிலுவையில் அறையப்படுதல் பற்றின விவரமான விவரங்களைக்குறித்து எதுவும் பதிவு செய்திடாத உண்மையானது, இப்படிப்பட்டதானக் காரியங்களின் விஷயத்தில் வேதாகமம் பொதுவாய்க் கைக்கொள்ளும் முறைமைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது; இம்முறைமையானது பொதுவாய்ச் சம்பவங்களைப் பதிவுசெய்யும் எழுத்தாளருடைய முறைமையிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது.

அயன் மேக்லாரென் அவர்கள் சிலுவையில் அறையப்படுதலின் விவரங்களைப் பின்வருமாறு பதிவு செய்கின்றார்:

"சிலுவையில் அறையப்படுதலைப் போன்றதொரு கொடூரமான/கொடுமையான மரணம் இருப்பதில்லை; இது கொடுமையாய் இருப்பதற்கான காரணம், கைதி இரத்த இழப்பினாலோ (அ) சிறு கால பகுதிக்குள்ளாகவோ மரிப்பதினால் இராமல், மாறாக மூடப்பெறாத புண்களினுடைய வலியும், கை கால்களுக்கு இரத்த ஓட்டம் தடைப்பட்டதும், நரம்பு மண்டலத்தின் பதற்ற நிலையும், இதயம் மற்றும் மூளையின் அழுத்தமுமேயாகும். ஐந்து மணி நேரம் இயேசு கிழிப்பட்ட நரம்புகளினால் ஏற்பட்ட வலியையும், கடுமையான தாகத்தினுடைய துயரத்தையும், சரீரம் அடைந்த சித்திரவதையினாலான வலியையும், வேகமாய் அதிர்வுறும் மூளையின் வலியையும் சகித்துக்கொண்டிருந்தார்!"

## சிலுவையிலிருந்து பேசப்பட்ட ஏழு வார்த்தைகள்

இப்படியாகச் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் சூழ்நிலையில் காணப்படும் ஒருவர், அதிகம் பேசுவாரென நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே நமது கர்த்தர் சிலுவையில் தொங்குகையில் பேசினதாக பதிவுபண்ணப்பட்டுள்ள வார்த்தைகளை (அ) செய்திகளை மாத்திரமே பேசினாரே ஒழிய, மற்றப்படி எதுவும் பேசவில்லை. இந்த வார்த்தைகளானது, நமது கர்த்தருடைய குணலட்சணம் மற்றும் போதனைகளுடைய மிக முக்கியமான அம்சங்களில் சிலவற்றை உண்மையாய்ப் பிரதிபலிக்கின்றதாய் இருக்கின்றது.

சிலுவையிலிருந்து பேசப்பட்ட இந்த வார்த்தைகளில், முதலாவதாகப் பேசப்பட்டதாகப் பொதுவாய் அறியப்பட்டிருக்கும் வார்த்தைகளானது லூக்கா 23:34-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே." நமது கர்த்தருடைய இருதயமானது, மன்னிப்பின் ஆவியினால் நிரம்பியிருந்தது என்பதில் நமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை, எனினும் அநேக காரணங்களின் நிமித்தமாக, இது கர்த்தர் பேசின வார்த்தைகளாக இருக்குமோவென நாம் சந்தேகிக்கின்றோம்; காரணங்கள் பின்வருமாறு: (1) இவ்வார்த்தைகளானது, கிரேக்க மூலப்பிரதிகளிலும், (4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த) எண்: 1209 கோடெக்ஸ் வாற்றிக்கானசிலும், (5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த) கோடெக்ஸ் அலெக்ஸ்சாண்டிரினசிலும் காணப்படுகிறதில்லை; (2) இந்த வார்த்தைகள் பொருத்தமானதாய் இல்லை, ஏனெனில் நமது கர்த்தருடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள் மனம் வருத்தம்கொள்ளவே இல்லை மற்றும் மனம் வருத்தம்கொள்ளும் காரியமானது, மன்னிப்பு வழங்குவதற்கு அவசியமாய் இருக்கின்றது என வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன என்பதாக நமது புரிந்துகொள்ளுதல் காணப்படுகின்றது; (3) நமது கர்த்தருடைய மரணத்துக்குக் காரணமாய் இருந்தவர்கள் அவரில் நம்பிக்கையோ அல்லது அவரது மரணத்தினுடைய புண்ணியத்தின் பலன்மீது விசுவாசத்தையோ கொண்டிருக்கவில்லை மற்றும் ஒருவன் மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, விசுவாசம் வைக்கவேண்டும் என்பதே வேதவாக்கியங்களின் தெளிவான போதனையாக இருக்கின்றது; (4) நமது கர்த்தருடைய மரணத்திற்குக் காரணமாய் இருந்தவர்கள், பாவத்தை நினைத்து மனம் வருந்தின இருதயங்களைக் கொண்டிருந்ததாகவோ மற்றும் பாவத்திலிருந்து விலகினதாகவோ எவ்விதமான பதிவுகளும் இல்லை மற்றும் இப்படியான மனம்வருந்தும் நிலையில் காணப்படாதது வரையிலும், எவராலும் மன்னிக்கப்பட முடியாது என்பதே வேதவாக்கியங்களின் தெளிவான போதனையாக இருக்கின்றது; (5) நமது கர்த்தர் இன்னும் தம்முடைய பலியின் வேலையை நிறைவேற்றி முடிக்ககவில்லை மற்றும் இன்னும் அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்று, விசுவாசிகளின் சார்பாக அந்தப் பலியை ஒப்படைக்கவில்லை. ஆகையால் பாவத்தை மன்னிக்க, பிதா ஆயத்தமாய் இருக்கமாட்டார்; (6) அவர்கள் புரிந்திட்டப் பாவம் மன்னிக்கப்பட்டதற்கும் நமக்கு எந்தச் சாட்சிகளும் இல்லை மாறாக, "இயேசுவினுடைய இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் வரக்கடவது" என்று யூதர்கள் வேண்டிக்கொண்டதற்கான பதிலானது அத்தேசத்தார் மீது வந்த

உபத்திரவக்காலத்தின்போது கொடுக்கப்பட்டதற்குரிய சாட்சிகளையே நாம் பெற்றிருக்கின்றோம்; இந்த உபத்திரவத்தைக்குறித்தே அப்போஸ்தலன், "அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 2:16) என்று குறிப்பிடுகின்றார்.

சிலுவையிலிருந்து பேசப்பட்டப் பிரசித்திப்பெற்ற இரண்டாம் வார்த்தையான, "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிப்பாய்" என்பது அதிகாரப்பூர்வமான வார்த்தையாகும். இந்த வார்த்தைகளானது, தனது பாவங்களை ஒப்புக்கொண்டு, கர்த்தருடைய இராஜ்யத்தில் கர்த்தர் வரும்போது, கர்த்தருடையத் தயவையும், கருணையையும் பெறுவதற்கு விரும்பின கள்வனிடம் பேசப்பட்டது. நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தில் இன்னும் முழுமையாய் வரவில்லை; ஆகவே தன்னை நினைவுகூரும்படிக்கு கள்வன் விரும்பின காலப்பகுதி இன்னமும் வரவில்லை. நமது கர்த்தருடைய ஜீவியம் மற்றும் நம்பிக்கைகள் அந்தகாரத்திற்குள் காணப்படுவதுபோன்று தோன்றியபோதிலும், மனம்வருந்திய கள்வனின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்க தம்மால் முடியும் என்றும், வேண்டிக்கொண்டபடியே தாம் செய்வார் என்றும் நமது கர்த்தர் மனம்வருந்தின கள்வனுக்கு உறுதியளித்தார். அந்த விண்ணப்பத்தினுடைய நிறைவேறுதலானது, வேதவாக்கியங்கள் தெரிவிக்கிற பிரகாரம், நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையின்போது, தமது மகா வல்லமையைக் கையில் எடுத்துக்கொண்டு, பாவத்தின் காரணமாக இழந்துப்போகப்பட்டதும், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதுமான பரதீசை பூமியில் திரும்பவும் நிறுவும்போது, நிறைவேற்றப்படும். அப்போது மனம்வருந்தின கள்வனும் வருவான்; ஆம், பிரேத குழிகளில் இருக்கும் அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தம் கேட்கும் காலம் வருமென்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன; இப்படியாகச் சத்தம் கேட்பவர்களில், மற்றக் கள்வனுங்கூட ஒருவனாகக் காணப்படுவான். அனைவரும் ஆயிரவருட இராஜ்யத்தினுடைய அனுகூலமான சூழ்நிலைகளுக்குள் கொண்டுவரப்படுவார்கள்; எனினும் மற்றவர்களிலும் மேலாக இந்த மனம்வருந்தின கள்வன் அனுகூலம் பெற்றிருப்பான் என்பதிலும், நமது மீட்பருடைய மரணத் தருவாயில், ஆறுதலான வார்த்தைகளைப் பேசி ஊழியம் பண்ணிட்டதற்காக, விசேஷமான பலனை அடைவான் என்பதிலும் நமக்கு நிச்சயமே.

## "அதோ உன் மகன்!" "அதோ உன் தாய்!"

நமது கர்த்தருடைய தாயாகிய மரியாளும், அவரது அன்புக்குரிய சீஷனாகிய யோவானும் சிலுவையின் அருகாமையில் நின்றுகொண்டிருந்தார்கள்; மேலும் அவர்கள் அழுதும், துக்கித்துக்கொண்டும் இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் நமது கர்த்தரோ தம்மைக்குறித்தும், தம்முடைய கடும் வேதனை குறித்தும் எண்ணுவதற்குப் பதிலாக, மற்றவர்களைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவர் தம்முடைய ஊழியத்தின் நாட்களில், நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்ததுபோலவே, தம்முடைய மரண வேளையிலுங்கூட மற்றவர்களுக்கான நன்மையையும், நலனையுமே சிந்தித்தவராகக் காணப்பட்டார்; "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய்" (யோவான் 19:26, 27) என்று கூறி, தம்முடைய தாயாரை, தம்முடைய அன்புக்குரிய சீஷனுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைத்தார். அருமையானதொரு பாடம்! இது நம்முடைய கர்த்தரின் இருதயத்தினுடைய இரக்கத்தையும், அனுதாபத்தையும் எவ்வளவாய் நமக்குக் காண்பித்துத் தருகின்றது மற்றும் இது — நாம் நம்முடைய சிறியதும், பெரியதுமான சொந்தப் பிரச்சனைகளிலும், சிரமங்களிலும் நாம் முழுமையாய் மூழ்கிப்போய்விடக்கூடாது, மாறாக மற்றவர்களுடைய பாரம் சுமப்பவர்களாக நாம் காணப்பட வேண்டும் என்றும், பூமிக்குரிய (அ) ஆவிக்குரிய விஷயங்களில் நம்முடையப் பராமரிப்பின் கீழ்க் காணப்படுபவர்கள் அனைவரின் ஆசீர்வாதத்திற்காகக் நமது அனுதாபங்களையும், நமது எண்ணங்களையும், நமது திட்டங்களையும் நாம் செயலாக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும் நமக்கு எவ்வளவாய்ப் படிப்பித்துத் தருகின்றது!

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" இந்த வார்த்தைகளானது, சிலுவையிலிருந்து இயேசுவினால் பேசப்பட்ட நான்காம் வார்த்தைகளாகும். இவ்வார்த்தைகளானது, நமது கர்த்தருடைய கடுந்துயரத்தின் ஆழத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நீதியுள்ளவராகவும், இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை, நீதிமானாக்குகிறவருமாய்த் தேவன் விளங்கும்படிக்கும் மற்றும் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு, ஆதாமுக்குள் இழந்துபோகப்பட்ட பிதாவின் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திரும்பிவருவதற்கான ஒரு வாய்ப்பையும், மரணத்திலிருந்து ஓர் உயிர்த்தெழுதலையும் ஏற்றவேளையில் பிதா

அருளும்படிக்கும், கர்த்தர் பாவிக்கான ஈடுபலி விலைக்கிரயமாக, பதிலாளாக/மாற்றாளாக மரித்துக்கொண்டிருந்தார். அவர் நமக்கான பதிலாளாக இருக்க வேண்டுமெனில், நாம் பாவிகளென அனுபவிக்கும்படிக்கு விதிக்கப்பட்ட அனைத்தையும் அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆகவே அவர் தம்முடைய ஜீவனை இழப்பது மாத்திரம் அல்லாமல், அவர் பிதாவுடன் கொண்டிருந்த சகல ஐக்கியத்திலிருந்தும் துண்டிக்கப்பட வேண்டியிருந்தது. கணநேரம் ஐக்கியம் துண்டிக்கப்படுதலே போதும்; ஆனால் இருளான, தனிமைப்படுத்தப்பட்டதான அந்தக் கணப்பொழுது கண்டிப்பாய் வரவேண்டும். ஆகவே இதுவே நமது கர்த்தருடைய அனுபவங்களிலேயே மிகவும் இருளான தருணமாகவும், (இந்தத் துண்டிக்கப்படுதலின் அனுபவத்திற்கு நிழலாக மாத்திரமே காணப்பட்ட) கெத்செமனேயின் இருளைக்காட்டிலும் இருளான தருணமாகவும் இருந்ததென நம்மால் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த அனுபவம் ஏன் நமது கர்த்தருக்கு வந்தது என்பதற்கான காரணத்தை, ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றபடியால் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம்! மேலும் இந்தக் காரணத்தை நாம் உணர்ந்துகொள்கையில், இது கிறிஸ்து மூலமான நமக்குரியதான ஆசீர்வாதங்கள் பற்றியதான உணர்ந்துகொள்ளுதலினால் நம்முடைய இருதயங்களை அதிகமதிகமாய் நிரப்புவதாக; அதாவது "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்ற நமது ஆண்டவருடைய வார்த்தைகளை நமக்குப் பொருத்த முடியத்தக்கதாகப் பிதாவினுடைய ஐக்கியம் மற்றும் அன்புக்கு மீண்டும் திரும்புவதற்குரிய சிலாக்கியமாகிய ஆசீர்வாதங்கள் பற்றியதான உணர்ந்துகொள்ளுதலினால் நம்முடைய இருதயங்களை அதிகமதிகமாய் நிரப்புவதாக (யோவான் 16:27). "நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." நமது கர்த்தருடைய மரணத் தருவாயின்போது பேசப்பட்ட இந்த வார்த்தைகளானது, அவரிடத்தில் உண்மையற்ற தன்மை இருந்ததெனத் தெரிவிப்பதில்லை மற்றும் இது திரித்துவ உபதேசம் தொடர்ந்த கருத்தையும் தெரிவிப்பதில்லை! இவ்வார்த்தைகளானது, . . . தமக்குப் பிதாவிடம் இருக்கும் உறவைக்குறித்து அவர் பேசியிருந்தவைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது.

இயேசு ஐந்தாவதாக, "தாகமாய் இருக்கிறேன்" என்றார். இந்த வார்த்தைகளானது, அநேகம் உண்மைகளை மனதிற்கு முன்பாய் அழுத்தத்துடன் கொண்டுவருகின்றது; அவை பின்வருமாறு: (1) சூரியனின் வெப்பத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட நிலையிலும், நரம்புகளின் எரிச்சல் மற்றும் வலியின் கீழ், தாகம் என்பது சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நபருக்கான முக்கியமான சித்திரவதைகளில் ஒன்றாகும்; (2) தண்ணீர் உட்பட அனைத்தையும் சிருஷ்டிக்கும் மாபெரும் வேலையில், நமது கர்த்தர் தேவனுடைய பிரதிநிதியாகக் காணப்பட்டிருந்தார் எனும் உண்மையை நாம் எண்ணிப்பார்க்கையில், கர்த்தர் தாகம் கொள்வதற்கென விரும்பித் தாழ்ந்ததும், பணிந்ததும், ஆம் மனுக்குலத்திற்காக மரிப்பதற்கென அவர் விரும்பி தாழ்த்தினதும், பணிந்துகொண்டதுமான காரியங்கள், மனுக்குலத்திற்காக அவர் கொண்டிருந்த அன்பிற்கான குறிப்பிடத்தக்க விளக்கமாகும். தாகத்திற்கான இந்த வார்த்தைகளானது அனைத்தும் அதாவது தாம் நிறைவேற்றும்படிக்குத் தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அவர் அறிந்த பின்னரே உரைக்கப்பட்டதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகளானது சங்கீதம் 69:21-ஆம் வசனத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது. "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்." உணர்வை மழுங்கச் செய்யும் பானத்தை வாங்க மறுத்த நமது கர்த்தர், இப்பொழுது காடியில் தோய்க்கப்பட்டு, அநேகமாக இரண்டு அல்லது மூன்று அடி நீளமுள்ள கோலில் மாட்டி வழங்கப்பட்டக் கடற்காளானை ஏற்றுக்கொண்டார். இந்தக் காரியங்களை நாம் எண்ணிப்பார்க்கையில், நம் அனைவருக்காகவும் மரித்திட்ட நமது கர்த்தர், நாம் ஜீவத்தண்ணீரையும், ஜீவ அப்பத்தையும், அதாவது நாம் அனைவரும் நித்தியமான ஜீவனை அடையத்தக்கதாக பசித் தாகம் கொண்டிட்டார் என்பதை நினைவில் கொள்வோமாக!

## முடிந்தது

இந்த ஆறாம் வார்த்தையானது, ஜெயத்தினுடைய ஒரு வார்த்தையாகக் காணப்படுகின்றது. தாம் செய்யும்படிக்குத் தமக்குப் பிதா கொடுத்திருந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றியுள்ளார்; ஆரம்பம் துவங்கி முடிவுவரை கர்த்தர் உண்மையாய் இருந்துள்ளார் மற்றும் தம்மையே பலியாக்கி உள்ளார். அவர் தம்முடைய பூமிக்குரிய ஓட்டம் முடிவடைந்ததில் மகிழ்ச்சிக்கொண்டார்; அது ஜெயத்துடன் முடிவடைந்ததினாலும், இந்த முடிவு என்பது இறுதியில் மனுக்குலத்தின் உலகம் ஆசீர்வதிக்கப்படப் போவதையும், மனுக்குலம் பாவம் மற்றும் மரணம் மற்றும் எதிராளியானவனுடைய வல்லமையினின்று விடுவிக்கப்படப் போவதையும் குறிக்கின்றதாய் இருக்கும் என்பதினாலும் அவர்

மகிழ்ச்சிக்கொண்டார். இப்படியாகப் பார்க்கப்படும்போது, நமது கர்த்தர் பரலோக வாசஸ்தலத்தைத் துறந்து, மனித சுபாவம் எடுக்கத்தக்கதாக தம்மைத் தாழ்த்தினப்போதே, தம்முடைய வேலையை ஆரம்பித்தவரானார்; பின் அது அவர் முப்பதாம் வயதை அடைவது வரையிலும் தொடர்ந்தது என்றும் சொல்லப்படலாம்; எனினும் வேத வாக்கியங்களின்படி பார்க்கப்படும்போது நிறைவேற்றப்பட்ட வேலையான பலியின் வேலையானது, அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டபோது, தம்மை மரணம் வரைக்கும் அர்ப்பணம் பண்ணினபோது ஆரம்பித்த ஒன்றாக இருக்கின்றது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்குக் கொஞ்சக் காலம் முன்னதாக, "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" (லூக்கா 12:50) என்று கூறினார். மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தின் காலமானது மூன்றரை வருடங்களாக இருந்தது மற்றும் இப்பொழுது இறுதியான தருணம் வந்துள்ளது . . . "முடிந்தது."

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." இது கர்த்தருடைய இறுதி வார்த்தைகளாகவும், நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதிச்செய்கையாகவும், இறுதி வடிவம் கொடுத்தலாகவும் (finishing touch) கருதப்படுகின்றது. எதை இழந்தும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிடுவதற்கு நாடினவர், தாம் மரிக்கும்போது, தம்முடைய ஜீவனுக்கான ஆவி, பிதாவின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் காணப்படும் என்று முழுமையான நம்பிக்கைக் கொண்டிருப்பதும், அவர் இவ்விதமாய் அதை வெளிப்படுத்துவதும் எத்துணை பொருத்தமானதாயுள்ளது! இப்படியாகவே அவருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். நம்முடைய அனைத்தையும் கர்த்தரிடத்தில் ஒப்புவித்திருக்கிற நாமும், மரணத்திற்குள் செல்லும்போது பயமற்றுக் காணப்படத்தக்கதாக, அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை முழுமையாய்ச் சொந்தமாக்கிக் கொண்டிருக்க வேண்டும். நமது கர்த்தருடைய விஷயத்தில் அவருக்கு மரணம் என்பது, நமக்கு மரணம் காணப்படுவதைக் காட்டிலும், அதிகமானதாய்க் காணப்பட்டிருக்க வேண்டும். உயிர்த்தெழுதல் பற்றின கர்த்தருடைய வாக்குறுதியை மாத்திரமல்லாமல், நமது கர்த்தருடைய விஷயத்தில் தெய்வீக வல்லமைக்கான ஓர் உதாரணத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம். மரணத்திலிருந்து நமது கர்த்தர் இயேசுவை எழுப்பினவருடைய வல்லமையானது, இயேசு மூலமாய் நம்மை மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் கொண்டுவந்திட செயல்படுத்தப்படும். நமது கர்த்தர் ஒரு முன்னோடியாவார்; அவருக்கு முன்னதாக எவருமே மரணத்திலிருந்து மனுஷீக ஜீவனுடைய பூரணத்தினிடத்திற்கோ (அ) திவ்விய சுபாவத்தினுடைய பூரணத்தினிடத்திற்கோ எழுப்பப்படவில்லை.

## சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்தது

தேவன் மீதும், உயிர்த்தெழுதலின் மீதுமான, தமது நம்பிக்கையைத் தம்மைச் சுற்றி நின்ற அனைவரும் கேட்கத்தக்கதான விதத்தில் மகா சத்தமாய்க் கூறினதாகப் பரிசுத்தவானாகிய லூக்கா அவர்கள் நமக்குத் தெரிவிக்கின்றார். சொல்லர்த்தமாய் இருதயம் உடையப்பெற்ற ஒருவரால் தொனிக்கப்படும் கூக்குரலாகவே, இயேசுவின் இந்தக் கூக்குரல் இருக்குமென நவீன எழுத்தாளர்கள் சிலரால் கருதப்படுகின்றது மற்றும் இப்படியாக இருதயம் உடைந்துபோனதே நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்ததற்கான காரணம் என்னும் யூகம் காணப்படுகின்றது. சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்து போகும் வாய்ப்புள்ளது என்பது ஒத்துக்கொள்ளப்படுகின்றது. இருதயம் இப்படிச் சொல்லர்த்தமாக உடைந்து போவதற்கானக் காரணம் நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டதிலும், கர்த்தர் மறுதலிக்கப்பட்டதிலும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதிலும், சவுக்கினால் அடிக்கப்பட்டதிலும் மற்றும் சிலுவையில் அறையப்பட்டதிலுமுள்ள அவமானமானச் சூழ்நிலைகளேயாகும் என நாம் சொல்ல முற்படலாம்; மற்றும் இவைகள் அனைத்தும் ஆவியில் நமது கர்த்தருக்கு அழுத்தம் கொடுத்ததாய் இருந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் நம்முடைய கணிப்பின் படி, தெய்வீக ஐக்கியம்/உறவு துண்டிக்கப்பட்டதின் காரணமாகவும், அவரது ஜீவியத்தின் கடைசி நேரங்களில் அவருக்கு ஏற்பட்டத் தனிமையின் காரணமாகவும் அவரது நான்காம் வார்த்தையில் வெளிப்பட்டத் துயரமே, அவரது இருதயம் உடைந்து போவதற்கான முதன்மையான காரணமாக இருக்கின்றது.

நமது கர்த்தர் இருதயம் உடைந்து/வெடித்து மரித்தார் என்று அனுமானிப்பதற்கான காரணங்களுக்குரிய அறிவியல் சார்ந்த விளக்கங்கள் பின்வருமாறு:

"இதற்குச் சாட்சியாக, போர்ச்சேவகனுடைய ஈட்டியினால் இயேசு குத்தப்பட்டப்போது, வெளிவந்த இரத்தமயமான தண்ணீர் காணப்படுகின்றது. இருதயத்திலிருந்து, இருதயத்தை

மூடியிருக்கும் சவ்வுப்பகுதிக்குள் கசிந்த இரத்தமானது, நிண நீராகவும் (serum), உறைந்த இரத்தமாகவும் பிரிந்தது. சொல்லர்த்தமாகவே இருதயம் உடைந்துபோனபடியாலே இயேசு மரித்தார்.”

தெய்வீக ஏற்பாட்டின்படி, இயேசு சிலுவையில் தொங்கின வேளையில், முழுவதும் விநோதமான இருளினால் பூமி மூடப்படுவதின் மூலமாக, இயற்கையானது நமது கர்த்தருக்கான அனுதாபத்தை வெளிப்படுத்தும்படிக்கு ஏற்பாடு பண்ணப்பட்டக் காரியத்தில் நமக்கு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இக்காரியம் குறித்து ஒரு பழைய மூலப்பிரதி பின்வருமாறு தெரிவிக்கின்றது: “அநேகர் போக்கிலும், வரத்திலும் விளக்குடன், சென்றவர்களாய்க் காணப்பட்டார்கள் மற்றும் இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்படுவது வரையிலும் இருள் நிலவினது.” ஒரு மாபெரும் பூமியதிர்ச்சி அவ்வேளையில் ஏற்பட்டது என்றும், இதனால் பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்திட்ட ஆலயத்தின் கனமான திரைச்சீலையானது, மேல் துவங்கி, கீழ் வரையிலும் கிழிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; திரைச்சீலைக் கிழிந்தக் காரியமானது, அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று, இப்பொழுது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும் பிரவேசம் வெளியாக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்தப் பிரவேசமானது கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மரணம் மூலம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மாற்கு சுவிசேஷத்தின்படி, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவர், பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டதாகப் பார்க்கின்றோம். அனைத்துப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, இந்த யோசேப்பு என்பவர் சிறந்த ஒரு நபராக இருந்திருக்கின்றார். இவரைக்குறித்து மத்தேயு அவர்கள் “ஐசுவரியவான்” என்றும், லூக்கா அவர்கள் இவரைக் குறித்து, “உத்தமனும் நீதிமானுமானவர்” மற்றும் தேவனுடைய இராஜ்யத்திற்குக் காத்திருக்கிறவர் என்றும், மாற்கு அவர்கள் இவரைக்குறித்து, “கனம் பொருந்திய ஆலோசனைக்காரனும்,” மற்றும் ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர் என்றும் குறிப்பிடுகின்றனர். “ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது” என்று இயேசு கூறியுள்ளார். ஐசுவரியவான்களுக்குக் கடினமாய் இருக்கும், காரணம் ஒருவேளை அவர்கள் ஏழைகளாய் இருந்திருந்தால், அவர்கள் மேற்கொள்ள வேண்டியவைகளைக் காட்டிலும், அவர்கள் ஐசுவரியவான்களாய் இருப்பதினிமித்தம் அதிகமாய் மேற்கொள்ள வேண்டியதிருக்கும். ஒருவேளை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஐசுவரியவானாய் இருக்கவில்லையெனில், அவர் முழுமையாய் இயேசுவினுடைய பின்னடியாராகியிருந்திருப்பார். எனினும் அவரைக்குறித்து அநேகம் நல்லக் காரியங்கள் சொல்லப்படவிருப்பதினாலும், சோதனையின் கீழ் அவரது தைரியமும், துணிவும் குறைந்துபோவதற்குப் பதிலாக, பெருகினதினாலும் நாம் மகிழ்கின்றோம். அவர் இறுதியில் முழுமையாக ஒரு சீஷனாகவும், அடிச்சுவட்டைப் பின்தொடரும் பின்னடியாராகவுமானார் என்று நாம் நம்பலாம். இவரைக் குறித்துக் கெய்கீ அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“யோசேப்புச் செய்த காரியம் சாதாரணமான ஒரு காரியமல்ல; ஏனெனில் எந்த ஒரு காலக்கட்டத்திலும் மரித்தவரை அடக்கம்பண்ணும் காரியத்தில் ஈடுபடுபவர் ஏழு நாட்கள் தீட்டுப்பட்டவராகக் காணப்படுவார் மற்றும் அந்நபர் தொடும் அனைத்தும் தீட்டுப்பட்டதாய் இருக்கும் (எண்ணாகமம் 19:11); மேலும் பஸ்கா காலக்கட்டத்தின்போது யோசேப்பு அடக்கம்பண்ணும் காரியத்தில் ஈடுபட்டது என்பது அவரை, முழுப் பஸ்கா வாரம் முழுவதிலும் பரிசுத்தமான அனுசரிப்புகள் மற்றும் களிக்கூருதல்களிலிருந்து ஒதுக்கிவைத்துவிடும்.”

கன்மலையில் இயற்கையாகவே வெட்டப்பட்டிருந்த யோசேப்பினுடைய கல்லறையானது, ஆண்டவர் அங்கே அடக்கம் பண்ணப்பட்டதின் மூலம் எவ்வளவாய்க் கனப்படுத்தப்பட்டது!

யூதர்களின் மத்தியில் ஐசுவரியவானும், செல்வாக்குமிக்கவருமான நிக்கொதேமு என்பவர் நமது கர்த்தருடைய சரீரத்திற்கான அடக்கம் பண்ணுவதற்குரிய பராமரிப்பில், யோசேப்புடன் இணைந்து செயல்பட்டதைப் பார்த்து நாம் மகிழ்கின்றோம். இத்தருணத்தின்போது இம்மனுஷர்கள் வெளிப்படுத்தின தைரியம் மற்றும் வைராக்கியத்தின் காரணமாக, இவர்கள் கர்த்தருடைய கரத்தினின்று விசேஷித்த ஆசீர்வாதம் பெற்றிருப்பார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் வரும்போது, பயத்தின் காரணமாக பின்வாங்கிவிடுபவர்கள் ஆண்டவரினால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதிலும், இப்பொழுது அவர் ஜெயங்கொள்பவர்களுக்கு அருளும் மாபெரும் பலனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டவரினால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதிலும் நமக்கு நிச்சயமே. இதில் நமக்குள்ளப் படிப்பினை என்னவெனில், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும், கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் எதையும் இழந்து துணிவுடன் நிற்க வேண்டுமென்பதேயாகும். கிடைத்திட்ட வாய்ப்புகளுக்கும், சிலாக்கியங்களுக்கும் நாம் துணிவுடனும், உண்மையுடனும் இருப்பதினிமித்தம்

இழப்புகள் அநேகம் இருப்பின் தற்கால ஜீவியத்திலும் சரி மற்றும் இனிவரும் ஜீவியத்திலும் சரி, நமக்கான பலனும் அதிகமாக இருக்கும். இயேசுவின் ஊழியக்காலம் தொடர்புடைய விஷயத்தில், இங்கு/இத்தருணத்தில் நிக்கொதேமு மூன்றாம் முறையாகக் குறிப்பிடப்படுகின்றார். முதலாம் முறையின்போது, இவர் இயேசுவை இரவு வேளையில் சந்திக்கின்றார் (யோவான் 3). இரண்டாம் முறையின்போது, கர்த்தரைக் கைது செய்திட முயற்சி எடுக்கப்பட்ட போது, இவர் ஜாக்கிரதையுடன், இயேசு சார்பில் குறுக்கிட்டுப் பேசுகின்றார்.(யோவான் 7:44-52). ஆனால் இப்பொழுதோ இவர் சிலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று "தன்னால் அதிகமானவைகளைச் செய்ய முடிந்திருக்கும் முந்தைய வாய்ப்புகளைத் தவறவிட்டுவிட்டோம் என்ற துயரத்தைத் தேற்றத்தக்கதாக, ஊழியம் புரிவதற்கான கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார்." இவர் ஐசுவரியவானாக இருந்தார் மற்றும் யூதர்கள் மரித்தவர்களை அடக்கம்பண்ணப்படுவதற்குப் பயன்படுத்தும் வெள்ளைப்போளத்தையும், கரிய போளத்தையும் கலந்து, ஏறக்குறைய நூறு இராத்தல் அளவு நிக்கொதேமு கொண்டுவந்தார். சத்தியம் மற்றும் அதற்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் நடுநிலையில் காணப்படுவதில் திருப்திக் கொண்டிருக்க கூடாது என்றுள்ள படிப்பினை நமக்குக் காணப்படுகின்றது. நாம் முடிந்தமட்டும் உறுதியுடன் காணப்பட வேண்டும்; நாம் நீதியின் பக்கமாய் நின்று, நம்முடைய முழுப் பலத்துடன் கர்த்தருடைய நோக்கங்கள் மற்றும் கர்த்தருடைய சகோதரர்கள் சார்பில் செய்ய வேண்டியதைச் செய்திட வேண்டும்; ஞானத்தையும், பகுத்தறிவையும் பயன்படுத்தும் அதேவேளையில் நாம் துணிவுடனும் காணப்பட வேண்டும். ஜீவியத்தில் மகிழ்ச்சியையும், ஆறுதலையும் கொண்டுவருவதற்குரிய நம்முடைய மலர்களை நாம் கொண்டுவந்திட வேண்டும் மற்றும் இந்த மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அனுபவிப்பதை மரணம் தடுத்துப்போடுவது வரையிலும் நாம் காத்திருக்கக்கூடாது.

நியூமேன் ஹால் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"கொல்கொதா! இது பூமியினுடைய மேற்பரப்பினுடைய மையப்பகுதி என்றும், குடியிருப்பிற்குரிய பூமி கோளத்தினுடைய நடுமையம் என்றும் ஒரு புராணக் கதை உண்டு. அந்தப் புராணக் கதையை நாம் எடுத்துக்கொள்வதில்லை, மாறாக அது முன் வைக்கும் உண்மையையே நாம் எடுத்துக்கொள்கின்றோம்; ஏனெனில் கிறிஸ்துவின் சிலுவை என்பது சகல கோத்திரங்கள் மற்றும் ஜாதிகளிடமிருந்து சகல விசுவாசிகளும் ஒன்று சேரும் சபையினுடைய உண்மையான மையமாகக் காணப்படுகின்றது."

இன்னொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"சிலுவை நம் முன் இருக்க, நம்முடைய ஜீவியங்களை நம்முடைய சொந்த ஆசீர்வாதத்திற்கும் மற்றும் நம்மையே திருப்திப்படுத்துவதற்கென ஒப்புக்கொடுப்பதற்கு நம்மால் எப்படித் துணியமுடியும்? கிறிஸ்துவின் பாடுகளில் பங்குக்கொள்ளாமலும், இன்பங்களை எப்போதும் தெரிந்துகொண்டு, ஒருபோதும் உபவாசித்தலைத் தெரிந்துகொள்ளாமலும் இருந்து, இந்த உலகத்தின் காரியங்களையும், அதன் ஆஸ்திகளையும் (அ) அதன் தயவுகளை (அ) அதன் உயர் ஸ்தானங்களை நம்முடைய ஜீவியத்தின் முக்கிய இலக்காக எப்படி நம்மால் கொண்டிருக்க முடியும்?"

பிலிப்பிஸ் புரூக்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"என்னுடைய நண்பனே, நீ உன்னுடைய சிலுவையை வைத்திருக்கின்றாய். நீ செய்யும் வேலையில், வலி உள்ளது. ஆனால் உன்னுடைய அனைத்து வலிகளிலும், தேவனுடைய அன்பானது உனக்கு அதிகமாகியும், தெளிவாகியும் கொண்டிருக்கின்றது என்பதை நீ அறிந்துகொள்வாயானால், அப்பொழுது ஒவ்வொரு பலியிலும் உன்னால் வெற்றிச் சிறக்க முடியும். உன்னுடைய சிலுவையானது கர்த்தருடைய மகிமையிலும், அழகிலும் சிலவற்றை உனக்குப் பெற்றுத்தந்துள்ளது. களிக்கூரு, சந்தோஷப்படு, ஏனெனில் நீ கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றாய்."

## நம்முடைய ஆதார வசனம்

இந்தப் பாடத்தை நாம் நிறைவு செய்கையில், நாம் இப்பாடத்தின் ஆதார வசனத்தினுடைய முக்கியமான சத்தியங்களை நினைவுகூருவோமாக; "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்துள்ளார்." இயல்பாகவே மரணம் என்ற ஒன்று சம்பவிக்கும் என்பதினாலோ அல்லது மற்ற மனிதர்களைப் போலவே இயேசுவும் பாவி என்பதினாலோ அல்லது எப்படி மரிக்க வேண்டுமென்று நமக்குக் காண்பிக்க வேண்டும் என்பதினாலோ இயேசு

மரிக்கவில்லை; அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். அவர் மரித்ததற்கானக் காரணம் நம்முடைய பாவங்கள் ஆகும்; நம்முடைய பாவங்களுக்கான தண்டனை, மரணத்தண்டனையாக இருந்தபடியாலும், நாம் ஏதேனும் ஒரு தளத்தில், ஏதேனும் எதிர்க்கால ஜீவியத்தை அடைவதற்கு நாம் மீட்கப்பட வேண்டியிருந்தபடியாலும் அவர் மரித்தார்.

"காலாக் காலங்களாக நிகழ்ந்துவந்த மரணங்கள் அனைத்திலும், மேலோங்கி நிற்கும்
கிறிஸ்துவின் சிலுவைதனிலே நான் மேன்மைப்பாராட்டுகின்றேனே;
இதன் உயர் கருத்துகளிலேயே,
புனித கதையின் அனைத்து விளக்கமும் மையம் கொண்டுள்ளதே."

*****

# வரவேற்பு

அந்நிய தேச வீட்டிலிருந்தே,
என்சொந்த தேச வீட்டிற்கே மீண்டும் வந்தேன், மீண்டும் வந்தேன்.
உங்கள் யாவரையும்மீண்டும் பார்க்க வீட்டிற்குள்ளே வந்துவிட்டேனே,

எனது நண்பர்களை விட்டுவந்தேனே,நுரைகளால் அலைகளால்
நிரம்பிய கடலில் நீந்தியே வந்திட
இப்போது என்னை அன்புடனே,இன்முகத்துடனும் மகிழ்வுடனே
வீட்டிற்குள்ளே வரவேற்கும் அன்புச்சோதரருடன் கலந்துவிட்டேனே.

வருக,வருக, வீட்டிற்குள் வருக, மீண்டுவந்தோரே,வீட்டிற்குள்வருக.
உங்களை யாமே அன்புடனே,வீட்டிற்குள்ளே வரவேற்கின்றோமே.
இதுதானே நம் உடலுழைப்பு,மிகைப்பிரயாசத்தாலே அழைத்துவந்தோமே,

அன்பான தேவன் இவற்றை மேற்கொண்டே,நம்மையாவரையும் மீட்டுவந்தாரே,
ஒவ்வொருநாளும் நாம் ஆர்வமாய்ஏறெடுத்த நம் ஜெபங்கள்
இந்தக்கடலின்மீதே வெற்றிகொண்டதே,

வானத்திலிருந்தே தேவன் அவரே, அவரது ஆசீர்வதிக்கும் பணியினைக்கொடுத்தே,
உம்மை அவர்தம் கரங்களில் ஏந்திக்கொள்வாரே, மகிழ்ந்த இதயதே, மகிழ்த்த இதயமே,
பெருந்துதிகளிலே கலந்து கொள்வீரே,

பூமியில் வாழும் காலங்கள் முழுதும்
காப்பாளர் அவரே, நடத்துனர் அவரே,அவரது துதியிலே கலந்திடுவோமே.

இதயமென்னும் வீணைதன்னிலே,
அன்பு என்னும் நரம்பதனாலே கட்டப்பட்டே மீட்டப்பட்டோம்

இனிமையான அன்புக்கென்றும் வெற்றியைத்தவிர தோல்வியே இல்லை,
பூமியின் வாழ்க்கைதனில்
அவை நம்மை
ஒருவருக்கொருவர் கட்டுக்களாகவே கட்டியே விடுமே,
மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே திரையைத்தாண்டி நமைக் கொண்டு சேர்க்குமே.

# இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா?

## சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா?

நமது கர்த்தர் பேதுருவை ஏறெடுத்துப்பார்த்து, பேதுருவை பாறை என்று அழைக்காமல், சீமோன் என்று அழைத்து "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா?" என்று கேட்டபோது, பரிதாபத்திற்குரிய பேதுரு கர்த்தரை தான் மறுதலித்த விஷயத்தில் ஏதேனும் பிராயச்சித்தம் செய்வதற்குரிய அநுகூலமான வாய்ப்புக் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன்தான் காணப்பட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இந்த வலைகள், படவுகள் மற்றும் இந்த மீன் பிடிக்கும் தொழிலைக் காட்டிலும் அதிகமாய் நீ என்னை அன்புகூருகிறாயா? என்ற அர்த்தத்தில் அவர் கேட்டிருக்கலாம் அல்லது மற்றச் சீஷர்களைக் காட்டிலும் அதிகமாய் நீ என்னை அன்புகூருகிறாயா? என்ற அர்த்தத்தில் அவர் கேட்டிருக்கலாம். பேதுரு கர்த்தரை மறுதலித்த அதே இரவில், கர்த்தருக்கான தனது அன்பைக் குறித்துத் தான் பெருமையாய்ப் பேசினவைகளை அவர் மனதின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஏதுவான வாய்ப்பாக இத்தருணம் இருந்தது. "எல்லோரும் உம்மைவிட்டுப் போனாலும், நான் உம்மைவிட்டுப் போகிறதில்லை" என்று பேதுரு சொல்லியிருந்தார். பேதுரு தன்னை மற்றவர்களுடனோ அல்லது மீன்பிடிப்பதற்குரிய உபகரணங்களுடனோ ஒப்பிடாமல், "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று பதிலுரைத்தார். நமது கர்த்தர் அன்பிற்கு *'agapao'* வார்த்தையினைப் பயன்படுத்தினார், ஆனால் பேதுருவோ உளங்கனிந்த, தனிப்பட்ட பாசம்/அன்பு எனும் அர்த்தம் கொடுக்கும் 'phileo' எனும் வேறு வார்த்தையினைப் பயன்படுத்தினார். இதைக் கூறின மாத்திரத்தில், "என் ஆட்டுக்குட்டிகளை, என் *சிறு ஆடுகளைப் பேணி வளர்ப்பாயாக*" (திருவிவிலியம்) என்று நமது கர்த்தர் பதிலளித்தார். இதில் ஊழியத்தின் விஷயத்தில் பேதுரு பகுதியளவு சீர்ப்பொருத்தப்பட்டுள்ளார் எனும் கருத்து வெளிப்படுகின்றது. மூன்று வருடங்களுக்கு முன்னதாக பேதுருவின் படகிலிருந்து, நமது கர்த்தர் திரளான ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்; பிற்பாடு, வலை கிழிந்துபோகும் அளவுக்கு, திரளான மீன்களை அருளின அற்புதத்தினைச் சீஷர்களுக்குப் பண்ணினார். இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, நமது கர்த்தர் பேதுருவையும், யாக்கோபையும் மற்றும் யோவானையும் நோக்கி: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார். இப்பொழுதும் அதே போன்றதொரு அற்புதத்தினை அவர் பண்ணினார் மற்றும் 153 - பெரிய மீன்கள் பிடிப்பட்டபோதிலும், வலைக் கிழியவில்லை மற்றும் இப்படி மீன் பிடித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் மறுபடியுமாக அப்போஸ்தலர்கள், பெந்தெகொஸ்தே நாளில், உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டது முதற்கொண்டு துவங்கும் சுவிசேஷ யுகத்தின் கீழ் அவர்கள் மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குவதற்கு விரும்பிட்டார். நமது கர்த்தர் பேதுருவை நேரடியாகக் கண்டிக்கவில்லை. அவரது தவற்றின் மற்றும் அவரது மறுதலிப்பின் மோசமான நிலையினை அவர் மனதில் பதியப்பண்ணினார் மற்றும் அச்செய்கையினால் அப்போஸ்தலர்களில் ஒருவர் என்றுள்ள பேதுருவின் ஸ்தானத்தை அவர் இழந்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார். பேதுரு மந்தையினுடைய ஆட்டுக்குட்டிகளை மேய்த்திடலாம் என்பதான இந்தப் புதிய கடமையானது, பேதுரு ஆடுகள் மத்தியில் முழுமையான மேய்ப்பனாக இருப்பதில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் நமது கர்த்தர் மீண்டுமாக அதே கேள்வியினை, அதே வார்த்தைகளைக் கொண்டே கேட்டார் மற்றும் பேதுருவும் அதே வார்த்தைகளைக் கொண்டே பதிலளித்தார். பின்னர் இயேசு பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டதான கடமையினை, "என் *ஆடுகளை மேய்ப்பாயாக*" (திருவிவிலியம்) ஆடுகளைப் பராமரித்துக்கொள், ஆடுகளுக்கு ஊழியம் புரிவாயாக என்று கூறி விரிவாக்கினார். இந்த இரண்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட விஷயத்தில் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்ப்பதற்கு அதிகாரம் பெற்றுக்கொண்டவராகவும், ஆடுகளை மேய்க்க மாத்திரம் அதிகாரம் கொண்டவராகவும், மேய்ப்பனுக்குரிய சுயாதீனங்கள் முழுவதையும் இன்னும் பெற்றுக்கொள்ளாதவராகவும் பேதுரு காணப்பட்டார். பேதுரு மூன்று தரம் கர்த்தரை மறுதலித்துள்ளப்படியால், நமது கர்த்தரும் அவரை மூன்றாம் முறை கேள்விகேட்டார்; எனினும் இம்முறை phileo எனும் வார்த்தையை அன்பிற்குப் பயன்படுத்திக் கேட்டார். இதை அநேகமாக

பேதுரு அடையாளங்கண்டுகொண்டிருக்க வேண்டும்; எப்படி இருப்பினும் தன்னுடைய அன்பு குறித்த இந்த மூன்றாம் கேள்வியினிமித்தமும் மற்றும் இம்முறை நமது கர்த்தர் phileo - வார்த்தைப் பயன்படுத்தினதினிமித்தமும், அவர் மிகுந்த ஆழ்ந்த துயரமடைந்தார். "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர், என்ற பேதுருவின் பதிலானது பரிதாபகரமானதாகும். இந்த மூன்றாம் ஒப்புக்கொள்ளுதலுக்குப் பிற்பாடு, நமது கர்த்தர் "என் *ஆடுகளைப் பேணிவளர்ப்பாயாக*" என்று கூறி, அவரைக் கண்காணியாக (அ) மேய்ப்பனாக முழுமையாகச் சீர்ப்பொருத்தினார். அவர் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்ப்பதற்கும், ஆடுகளை மேய்ப்பதற்கும் மாத்திரம் அதிகாரம் வழங்கப்படாமல், இறுதியில் ஆடுகளைப் பேணிவளர்ப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டார். பேதுருவுக்காக நாம் சந்தோஷப்படுகின்றோம் மற்றும் கண்டிக்கும் விஷயத்தில் இத்தகைய சாதுரியமான வழிமுறையைக் கையாண்டதையும், மிகவும் கடுமையாய்க் கண்டிக்காததிலுள்ள நமது கர்த்தரின் பெருந்தன்மையையும் நாம் கண்டு வியக்கின்றோம். இந்த மாபெரும் மாதிரியானவரிடமிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்வோமாக! நமது கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து நாம் கற்கத்தக்கதாக, வேறு பாடங்கள் உள்ளனவா? கர்த்தருக்காக உளங்கனிந்த, ஆழமான, உண்மையான அன்புகொண்டிருக்கின்றோமா அல்லது இல்லையா? அல்லது நமது அன்பு பொதுவான ஓர் அன்பாகவும், பாசமாகவும் மாத்திரம் காணப்படுகின்றதா? என்று நாம் ஒவ்வொருவரும் நம்நம் சொந்த இருதயங்களிடத்தில் கேட்டுக்கொள்வது நலமாய் இருக்குமல்லவா? இந்தக் கேள்விகளுக்கு நாம் உறுதியாய்ப் பதில் கூறமுடிகிறவர்களாகவும் மற்றும் நிலங்கள் அல்லது வீடுகள், படவுகள் அல்லது வலைகள், பெற்றோர்கள் அல்லது பிள்ளைகள், கணவன் அல்லது மனைவி அல்லது நம்மைக்காட்டிலும், நாம் அவரையே அதிகமாய் அன்புகூருகின்றோம் என்று அவருக்கு உறுதியளிக்கமுடிகிறவர்களாகவும் இருப்பதற்கு உதவுகிற ஆண்டவருடனான அத்தகையதோர் தனிப்பட்ட ஐக்கியத்தினைப் பேணி வளர்த்திட நாம் நாடிட வேண்டும். நமது பரம மணவாளன், நாம் அன்புகூருவதற்குப் பாத்திரமாய்க் காணப்படுவதினால் மற்றும் இத்தகைய அன்பினை நாம் அவரிடத்தில் கொண்டிருக்க முடியவில்லையெனில், நாம் இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாய் இருப்பதில்லை, மணவாட்டியின் அங்கத்தினர்களாகுவதற்கு, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகுவதற்கு நாம் பாத்திரவான்களாய் இருப்பதில்லை. கர்த்தருக்கான நம்முடைய அன்பின் அளவு தொடர்புடைய விஷயத்தில், அதை நாம் எப்படி அறிந்துகொள்ளலாம், எப்படி நம்முடைய சொந்த இருதயத்தினை இது தொடர்புடைய விஷயத்தில் பரிசோதித்திடலாம்? சோதனைகள், பிரச்சனைகள், எதிர்ப்புகள் முதலானவைகள் நம்மை மேலோங்க அனுமதிப்பதின் மூலமேயல்லாமல், வேறு எப்படிக் கர்த்தர் நம்மைப் பரீட்சித்துப்பார்ப்பார். நமது கர்த்தர் தம்மை அப்போஸ்தலர்களிடமிருந்து மூன்று வாரங்கள் மறைத்துக்கொண்டதுபோன்று, எனினும் அவர்கள் சமீபமாய்க் காணப்பட்டு, அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்து, தேவையான பாடங்களைப் புகட்டிடுவதற்கான மிகுந்த சாதகமான தருணத்தினைப் பயன்படுத்திடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டதுபோன்று - தேவையான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நமக்குக் கொடுக்கத்தக்கதாக, நம்முடைய நலனுக்கடுத்த தேவைகளை அவர் கவனிக்கிறார் என்று நாம் உறுதியடையலாம்; ஒருவேளை சிலசமயங்களில், அவர் தமது முகத்தினைக் கடுமையான சூழ்நிலைகளுக்குப் பின்பாக மறைத்து வைத்திருக்கிறாரெனில், அது சிங்காசனத்தின் ஒரு ஸ்தானத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும் விஷயத்தில் நமக்கு உதவியாயிருக்கும் சில விலையேறப்பெற்றப் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும், நம்மைப் பலப்படுத்த, ஆசீர்வதிக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தின் காரணத்தினாலேயே ஆகும். ஆகையால் உபத்திரவங்கள் என்ன உண்டுபண்ணுகின்றது என்று அறிந்து, உபத்திரவத்தில் களிகூருவோமாக மற்றும் அம்மாதிரியான உபத்திரவத்தில், நான் கர்த்தரைப் பிரதானமாய் அன்புகூருகின்றேன் என்பதை நான் எப்படிக் காண்பிக்கின்றேன்? என்று நாம் நம்மிடமே கேள்வி கேட்டுக்கொள்வோமாக.

பேதுரு தன்னுடைய அன்பினை அறிக்கைப்பண்ணினதால், அவர் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்த்து, ஆடுகளை மேய்த்து, பேணிவளர்த்திட வேண்டும் என்று நமது கர்த்தர் கூறினதுபோலவே, அவரது பின்னடியார்கள் யாவரிடமும் அவர் கூறுகின்றார். கர்த்தருடைய பிரியமான மந்தை தொடர்புடைய விஷயத்தில், நம்மால் அப்போஸ்தலருக்குரிய கனமிக்க ஸ்தானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறவில்லை, மாறாக நாம் ஒவ்வொருவருமே தேவனுடைய மந்தையினை மேய்ப்பதற்கு/பராமரிப்பதற்கு மற்றும் உதவுவதற்கு, போஷிப்பிப்பதற்கு வாய்ப்புகளைக் கண்டடையலாம், அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய ஏற்பாட்டின்பேரில் சபையில் மூப்பர்களாக ஏற்படுத்தப்பட்டுள்ள யாவரும்

கண்டடையலாம் என்று அவர் கூறினார்; ஆகையால்தான் பரிசுத்த ஆவியால் மேற்பார்வையாளர்களாக, கண்காணிகளாக, மேய்ப்பர்களாக வைக்கப்பட்டவர்கள், தேவனுடைய மந்தையை மேய்க்கும்படிக்கு அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு பட்டணத்தின் மூப்பர்களிடம் கூறினார் (அப்போஸ்தலர் 20:28). எனினும் ஒவ்வொருவனும் தன் விஷயத்தில், பூலோகக் கடமைகள் விஷயத்தில் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடிட வேண்டும்; ஒவ்வொரு உடன் மேய்ப்பனும், தன்னுடைய சொந்த ஆவிக்குரிய போஷிப்பு மற்றும் புத்துணர்வு அடைதல் விஷயத்தில் கவனம் செலுத்துவது அவசியமானதாகவும் மற்றும் ஏற்றதாகவும் காணப்படுகின்றது; எனினும் மந்தை தொடர்பாக ஆண்டவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதான பணியானது நம் இருதயங்களில் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பதும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் அவருடைய பின்னடியார்களைப் போஷிப்பது, மேய்ப்பது மற்றும் முடிந்தமட்டும் ஆண்டவருடைய சுயத்தை வெறுத்தலின், சுயத்தைப் பலிச்செலுத்துதலின் ஆவியில், அன்பின் ஊழியத்தில், அவர் செய்ததுபோன்று, ஆடுகளுக்காக நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது மாபெரும் சிலாக்கியமென நாம் சரியாய் மதிப்பதும் மிகவும் முக்கியமான காரியமாகும். ஆடுகள் மீது கவனமற்ற ஒருவர், எந்த விதத்திலும் மூப்பராகவோ, வழிநடத்துபவராகவோ அங்கீகரிக்கப்படக்கூடாது மற்றும் சுயநலமான அல்லது உலகப்பிரகாரமான காரணங்களுக்காக இல்லாமல், மாறாக மாபெரும் மேய்ப்பனுக்கடுத்த நோக்கங்களிடத்திலும், மந்தையினிடத்திலுமுள்ள அன்புடன்கூடிய பக்திவைராக்கியம் மற்றும் அர்ப்பணிப்பிற்குச் சான்று பகிர்ந்துள்ள காரணத்திற்காகவே, ஒருவர் அவரது சகோதர சகோதரிகளால் மதிக்கப்பட வேண்டும் மற்றும் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சபையில் மூப்பருக்கான, உடன் மேய்ப்பனுக்கான முதன்மையான தகுதி, கர்த்தருக்காகக் கொண்டிருக்கும் அன்பாகத்தான் கண்டிப்பாய் இருத்தல் வேண்டும். கிரியை புரிவதற்கு முக்கிய தூண்டுதலாயுள்ள மாபெரும் மேய்ப்பனுக்கான அன்பைத் தவிர மற்றப்படியுள்ள பேச்சுத்திறமை யாவும் மற்றும் பக்திவைராக்கியம் யாவும் மந்தையினுடைய நலனுக்கடுத்த விஷயங்களுக்கு இடையூறாகவும், பாதகமாகவுமே காணப்படும். யார் கர்த்தருக்காக அன்புகொண்டிருக்கின்றார்கள் என்றும், அதன் அளவு என்ன என்றும் நாம் எப்படி அறிந்துகொள்வது? நாம் காண்கின்ற சகோதர சகோதரிகளை அன்புகூரவில்லையெனில், காணமுடியாத தேவனை அன்புகூருவதாக நாம் கூறிக்கொள்ளும் விஷயத்தில் நாம் நம்மையே வஞ்சிக்கின்றவர்களாய் இருப்போம் என்று அப்போஸ்தலன் மூலமாக நமது கர்த்தர் நமக்குக் கூறுகின்றார். ஆகையால் கர்த்தருக்கான அன்பானது, அதனை சகோதர சகோதரிகளுக்கான அன்பில் வெளிப்படுத்திடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது மற்றும் பிரியமான மந்தைக்காக மிகுந்த அன்பினையும், பரிவையும், பரந்த மனப்பான்மையையும், பொறுமையையும், சாந்தத்தையும், சகோதர சிநேகத்தையும் வெளிப்படுத்துகிறவர்கள் மாத்திரமே உண்மையுள்ள மேய்ப்பர்களென அல்லது மூப்பராயிருப்பதற்குத் தகுதியானவர்களெனக் கருதப்பட வேண்டும். சுயத்திற்கான நாட்டம்கொண்டவர்களையும், பேராசைக்கொண்டவர்களையும் குறித்து அச்சம் கொள்ளப்பட வேண்டும் மற்றும் இத்தகையவர்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது.

## இவன் காரியம் என்ன?

நமது கர்த்தர் அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் கேள்வி கேட்டதைத் தொடர்ந்து, பேதுரு வயதான மனுஷனாகும் வரை ஜீவிப்பார் என்றும், வயதாகும்போது பேதுரு தன் இஷ்டப்படி செய்ய முடியாமல் இருப்பார் என்றும், அவரைக் குறித்துத் தீர்க்கதரிசனம் ஒன்றினைக் கூறினார். இது பேதுருவின் எதிர்காலம் மிகவும் பிரகாசமானதாக இருக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டது; இது அவரது உண்மை குறித்துள்ள இன்னும் அதிகமான பரீட்சையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருந்தது. அப்போஸ்தலன் சோர்ந்துபோய்விடவில்லை என்றும், அவர் மரணம்வரை உண்மையுள்ளவராய் இருந்தார் என்றும் நாம் அறிந்து மகிழ்கின்றோம். இந்தத் தீர்க்கதரிசனமானது - பேதுருவுக்கும், அங்குக் காணப்பட்டதான மற்ற அப்போஸ்தலர்களுக்கும், தாங்கள் புதிதாக ஈடுபடப்போகின்றதான பணியில், தாங்கள் இராஜ்யத்தின் கனங்களையும், ஆசீர்வாதங்களையும் எதிர்ப்பார்க்கக்கூடாது என்றும், 'ஊழியக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல எனவும், மனுஷர்கள் எஜமானை நிந்தித்ததையே தவிர மற்றப்படி, வேறு எதையும் ஊழியக்காரன் எதிர்ப்பார்க்கக்கூடாது எனவும்' முன்னொரு தருணத்தில் கர்த்தர் உரைத்திட்டவைகளையே தாங்கள் நினைவுகூர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினதாய் இருந்தது. இந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்கள், தங்கள் மீது வைக்கப்பட்டதான பல்வேறு பரீட்சைகளையும், நிபந்தனைகளையும் எத்துணைக் கம்பீரமாய்

எதிர்க்கொண்டவர்களானார்கள்! இது தொடர்புடைய விஷயத்தில் நமக்கும் ஒரு படிப்பினை உள்ளது, அதாவது நம் ஆண்டவருக்கு நாம் கொண்டிருக்கும் உண்மை என்பது ஏதோ ஒருவகையான உபத்திரவங்களை நமக்குக் கொண்டு வரும் என்பதேயாகும். ஆகையால் நாம் நமது சொந்த சித்தங்களை அல்லது நம் சொந்த வழிகளை நாடாமல், மாறாக நம்முடைய நலனுக்கடுத்த விஷயங்களில் கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலுக்காக எதிர்ப்பார்த்திட வேண்டும் மற்றும் அதையே ஏற்றுக்கொண்டிட வேண்டும் மற்றும் இதற்கே, அதாவது புதுச்சிருஷ்டிகளென நம்முடைய நன்மைக்கு ஏதுவாய்ச் சகலத்தையும் அவர் மாற்ற வல்லவர் என்பதை அறிந்து, இதற்கே முன்னுரிமை கொடுத்திட வேண்டும். பேதுரு கொடுமையானதொரு மரணம் அடைவார் என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் குறிப்பதாகவும், இறுதியில் "என்னைப் பின்பற்றிவா," என் மாதிரியினைக் கவனித்து, அதைப் பின்பற்றிவா என்று இயேசு கூறினதாகவும் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார்.

உரையாடல் தன்னைப் பற்றியே அதிகமாய்க் காணப்படுகின்றது என்று பேதுரு உணர்ந்துகொண்டார் மற்றும் கொஞ்சம் உரையாடலை மாற்றிட நாடினவராக, கர்த்தருடைய அபிமான சீஷன் என்று தான் அறிந்திருந்த யோவானைக்குறித்து, "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" யோவானைக் குறித்த உம்முடைய தீர்க்கதரிசனமென்ன மற்றும் அவர் விஷயத்தில் உம்முடைய ஏற்பாடென்ன? என்ற விதத்தில் கேட்டார். நமது கர்த்தருடைய பதிலானது கிட்டத்தட்டச் சுருக்கென்றும், வெடுக்கென்றும் காணப்பட்டது; "உன் சொந்தக் காரியத்தினைப் பார்; நீ செய்ய வேண்டியது அநேகம் உள்ளது" என்று சொல்வதற்குச் சமமாக, ஆனால் மிகுந்த மரியாதையான விதத்தில் காணப்பட்டது. அதற்கு இயேசு கூறினதாவது: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால்...

## உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா

இது கர்த்தருடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்வதற்கு இருப்பதிலேயே கடினமான பாடமாகவும், அதே சமயம் மிகவும் முக்கியமான பாடமாகவும் காணப்படுகின்றது. நாம் சுற்றிப்பார்க்கவும், நமக்குத் கர்த்தரால் அனுமதிக்கப்படுகின்றதான அதே அளவிலான சிட்சைகள் அல்லது சோதனைகள் அல்லது பிரச்சனைகள் அல்லது பாரங்கள் ஏன் சகசீஷன் ஒருவருக்கு அனுமதிக்கப்படவில்லை என்று சிந்திக்கவும் முற்படுவோமானால் மற்றும் கர்த்தர் குறித்தும், அவரது ஞானம் குறித்தும், அவரது செய்கைகள் குறித்துமுள்ள விஷயத்தில் நியாயந்தீர்க்கிறவர்களாகுவதற்கு நாம் நம்மை அனுமதிப்போமானால், விளைவு நமக்கே பாதகமாய்க் காணப்படும். இது நம்முடைய சமாதானத்தை அழித்துப்போடும் மற்றும் நம்முடைய விசுவாசத்தினை வலுவற்றதாக்கிவிடும் மற்றும் இராஜ்யத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திடுவதற்கு அவசியமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்குத் தடையாகக் காணப்படும். தெய்வீக வழிநடத்துதல்கள்/செய்கைகள் குறித்து இத்தகைய விமர்சனங்கள்/குறைக்கூறுதல்கள் நம்முடைய மனங்களில் தோன்றுமானால், பேதுருவிடத்தில் நமது கர்த்தர் கூறின பதிலைப்போலவே நாமும் நம்மிடம், "உனக்கென்ன, நீ பின்பற்றிவா. இந்தக் காரியங்களை எல்லாம் ஒழுங்குப்படுத்துவதற்கு நீ திராணியற்றவன்; இன்னும் ஆண்டவர் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் அனைத்தையுமே உனக்கு விவரித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை, அது தகுதியாயும் இராது. விசுவாசத்தையும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தலையும் மற்றும் நம்பிக்கையையும் கற்றுக்கொள்வது உனக்கு நலமானதாய் இருக்கும்" என்று உடனடியாகக் கூறிட வேண்டும். நம்மில் எந்த இரண்டுபேரும் ஒரே மாம்ச சுபாவத்தினைக் கொண்டிருப்பவர்கள் அல்ல, ஆகையால் கர்த்தருடைய கரத்தினின்று ஒரே மாதிரியான பயிற்சியினை அவசியமாய்ப் பெற்றிருப்பவர்களாக எந்த இரண்டு பேரும் காணப்படுவதில்லை. நாம் அவரது ஞானம் மற்றும் அன்பின் மீது நம்பிக்கைக் கொண்டிருக்கின்றோம்; நமக்கான சோதனைகள் அதிகமாய் இருக்குமானால், அதற்கேற்ப நம்முடைய ஆசீர்வாதங்களும் அதிகமாய் இருக்கும் என்றும், "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்று கர்த்தர் பவுல் அடிகளாரிடம் கூறினதுபோன்று, நம் ஒவ்வொருவரிடமும் கூறுவார் என்றும் உணர்ந்து, நமது நம்பிக்கையினை வெளிப்படுத்திடுவோமாக (2 கொரிந்தியர் 12:9). ஆகையால் நமது சோதனைகளுக்கேற்ப கர்த்தருடைய கிருபை காணப்படுமானால், நாம் அவரது கிருபையினை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அவர் அனுப்பிடும் சோதனைகள் யாவற்றையும் களிகூர்ந்து ஏற்றுக்கொள்வோமாக! என்று அப்போஸ்தலனோடுகூட நாமும் கூறிடுவோமாக. மேய்ப்பனை அறிந்துகொள்வதும், அவரைப் பின்பற்றுவதும், முடிந்தமட்டும் தன் பாதங்களுக்கு வழியினைச்

செம்மையாக்கிக்கொள்வதும், மந்தை மற்றும் அதன் தேவைகள் விஷயத்திலுள்ள பொதுவான கண்காணிப்பினை மேய்ப்பனிடத்தில் விட்டுவிடுவதும், மேய்க்கும் வேலையிலும் மற்றும் கர்த்தருடைய நாமத்தில் அவரது பிரியமான மந்தைக்கு ஆலோசனை வழங்குவதிலும் அல்லது உதவிபுரியும் விஷயத்திலும் உதவி செய்யத்தக்கதான வாய்ப்புகளைச் சகோதர சகோதரிகள் வாயிலாகக் கர்த்தர் அருளும் அளவுக்கு ஏற்ப, அவைகளில் கவனம் செலுத்திடுவதும் ஒவ்வொரு ஆட்டிற்கடுத்தக் காரியமாய் இருக்கின்றது.

---

# ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல்

**1 சாமுயேல் 10:1-27**

*"மானிடரை ஆளுபவன், நீதியோடு, இறை அச்சத்துடன் ஆள்பவன்." (2 சாமுயேல் 23:3; திருவிவிலியம்)*

## சவுலைத் தேவன் தேர்ந்தெடுத்தது தெரிவிக்கப்பட்டது

கர்த்தர் ஏற்படுத்திய ஒழுங்கின் கீழ்க் காணப்படுவதற்குப் பதிலாக, ஓர் இராஜா வேண்டும் என்று ஜனங்கள் கேட்டுக்கொண்ட விஷயத்தில், அவர்கள் ஞானமாய் நடந்துகொள்ளவில்லை என்றும், ஜனங்கள் விரும்பிக் கேட்டுக்கொண்ட விஷயத்தின் அடிப்படையிலேயே அவர்களுக்கு ஓர் அனுபவம் வழங்கிட கர்த்தர் விரும்புகின்றார் என்றும், இஸ்ரயேலின் ஜனங்களின் மத்தியிலிருந்து யார் இந்த இராஜாவிற்குரிய முக்கிய ஸ்தானத்திற்கு வரப்போகிறார் என்று கர்த்தரிடத்தில் விசாரித்து அறிந்துகொள்ளும்படிக்கு ஜனங்களாகிய அவர்கள் ஒன்று கூட்டப்பட்டுள்ளனர் என்றும், குறிப்பிட்ட ஏற்றத் தருணத்தின்போது சாமுயேல் எழுந்து நின்று, ஜனங்களுக்கு விளக்கினார். கர்த்தர் தேர்ந்தெடுக்கும் நபர் எக்கோத்திரத்தைச் சேர்ந்தவர் என ஜனங்கள் முதலாவதாக கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள். பன்னிரண்டு கோத்திரங்களை அடையாளப்படுத்தும் பன்னிரண்டு கோல்கள் பேரில் போடப்பட்ட சீட்டில், இராஜா பென்யமீன் கோத்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற பதில் கிடைத்தது. அடுத்ததாக பென்யமீன் கோத்திரத்திலுள்ள பல்வேறு குடும்பங்களின் பேரிலும், பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பத்தின் அங்கங்கள் பேரிலும் சீட்டுப் போடப்பட்டு, சாமுயேல் ஏற்கெனவே அறிந்திருந்ததுபோல சீட்டு, கீசின் குமாரனாகிய சவுல் பேரில் விழுந்தது; சாமுயேலுடைய வார்த்தைகளின் நிமித்தமாகவும், அவர் அபிஷேக தைலத்தினால் தன்னை அபிஷேகம்பண்ணியிருந்ததின் நிமித்தமாகவும், சீட்டு தன் பேரிலேயே விழும் எனச் சவுலும் அறிந்திருந்தார். இவ்விதமாக, ஜனங்களுக்கு கர்த்தர் தம்முடைய தேர்ந்தெடுத்தலைக் காட்டுவதற்கும், அவர்களுடைய பல்வேறு விஷயங்களில் அவர்கள் தெய்வீக வழிநடத்துதலை நோக்குவதற்கு கற்றுக்கொடுப்பதற்கும் கர்த்தர் செயல்பட்டார்.

பல்வேறு சபைகளில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்கும் இங்கு ஒரு படிப்பினை உள்ளது. அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும், தேர்ந்தெடுத்தல் (election) விஷயத்தில் தன்னுடைய பங்கை நிறைவேற்றும் போது, தான் கர்த்தருடைய கருவியாக மாத்திரமே செயல்பட வேண்டும் என்பதையும், கர்த்தருடைய சித்தமே முற்றும் முழுமையாகச் செய்யப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தவராகக் காணப்பட வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் புறக்கணிக்கப்பட வேண்டும்; மேலும் குணலட்சணம் தொடர்பான விஷயத்தில் வேத வாக்கியங்களுக்கு இசைவாக மாத்திரமே வாக்கு (vote) செலுத்துபவர்களுடைய மனதில் தாக்கம் ஏற்படுத்துவதற்கு முற்படுதலும், செல்வாக்கைப் பயன்படுத்த முற்படுதலும் இருக்க வேண்டும் மற்றும் சண்டையிடுவதற்காகவோ அல்லது வீண்பெருமையினாலாவது எதுவும் செய்யப்படாமல், மாறாக அனைத்தும் தேவ மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும். பரிசுத்த ஆவி மற்றும் பரிசுத்தமான வார்த்தைகளுடைய வழிநடத்துதலின்படி, தேர்ந்தெடுக்கும் காரியம் தங்களுடைய கரங்களில் இருக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக தேவனுடைய ஜனங்களென, தேவ வாக்கை (oracles of god) அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றபடியால், இந்தத் தேர்ந்தெடுத்தல் விஷயத்தில், பூமிக்குரிய உறவுகள் எவ்விதமான செல்வாக்கையும் செலுத்தக்கூடாது.

கீசின் குமாரனாகிய சவுல், இராஜாவாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட பொழுது, அவர் தேடப்பட்டார் என்றும், அவர் எங்கு இருக்கின்றார் என்பது தெரியாமல் இருந்தது என்றும் பதிவுகள் தெரிவிக்கின்றன. கர்த்தரிடத்தில் விசாரித்தப்போது, சவுல் தளவாடங்கள் இருக்கிற இடத்தில் ஒளிந்துக் கொண்டிருக்கின்றார் என்ற உண்மையைக் கர்த்தர் வெளிப்படுத்தினார். சவுலின் தன்னடக்கம் பாராட்டத்தகுந்ததாகும். கர்த்தர் தன்னை அபிஷேகம்பண்ணினதால், ஜனங்கள் ஒன்று கூடியிருக்கின்ற தருணத்தில் தான்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை சவுல் அறிந்திருந்தபோதிலும், அவர் தன்னடக்கத்துடன்

மறைந்து போய்விட்டார். இருதயத்தின் மிகுதியான தன்னடக்கமானது, (சவுல் சொல்லர்த்தமாக ஒளிந்துகொண்டு தனது தன்னடக்கத்தை வெளிப்படுத்தின விதத்திலிருந்து வேறுபட்ட விதத்தில் வெளிப்படுத்தப்படும் நிலைமை) கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரின் மத்தியிலும் காணப்பட வேண்டும், அதிலும் விசேஷமாக கர்த்தருடைய மந்தைக்கு எந்த விதத்திலாகிலும் ஊழியம் புரிவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மத்தியில் காணப்பட வேண்டும். ஒரு மனுஷன் கர்த்தருக்கும், அவருடைய மந்தைக்கும் ஊழியக்காரனாய் இருப்பதினால் இருக்கும் கனத்தை எவ்வளவுதான் உணர்ந்துகொண்டவனாக இருப்பினும், ஊழியம் செய்வதற்கான ஸ்தானத்தினை அடைவதற்கு ஆசைப்படுவதற்குப் பதிலாக தன்னை மறைத்துக்கொண்டிருப்பவனாக இருக்க வேண்டும்.

சவுல் இராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர் அதிகாரமாய் ஆணையிடும் ஆவியையும், அதிகாரத்தையும் செலுத்தாமல், கர்த்தர் தனக்கு இராஜ்யபாரத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பது வரையிலும் -- தன் சார்பில் தான் எதையாகிலும் செய்ய வேண்டும் என்று கர்த்தர் சுட்டிக்காட்டும் காலம் வரும் வரையிலும், தன்னுடைய சொந்த நிலத்தில் பணிகள் செய்வதற்கெனக் கடந்துபோன விஷயத்தில் சவுலினுடைய தன்னடக்கம் இன்னும் அதிகமாக வெளிப்படுகின்றது. இப்படியே நம்முடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும்; "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்" என்று அப்போஸ்தலன் கூறுகிற பிரகாரமாக நாமும் செய்ய வேண்டும் (1 கொரிந்தியர் 7:20). ["தேவன் அழைத்தபோது இருந்தபடியே ஒவ்வொருவனும் இருக்கட்டும்" - ERV] இப்படியாக என்றென்றும் இருக்க வேண்டிய அவசியமில்லை, மாறாக கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் ஊழியம் செய்வதற்கெனக் கர்த்தருடைய வழிநடத்துதல், கதவைத் திறந்து ஒருவனை அழைக்கும் காலம் வரும்வரையிலும் இருக்க வேண்டும். ஒருவேளை ஓர் ஊழியம் கர்த்தருடைய ஊழியமாக இருக்குமானால், கர்த்தர் வாய்ப்பையும், வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான ஞானத்தையும் அருளுவார். ஒருவேளை ஊழியம் கர்த்தருடையதாய் இராமல் இருக்கும் பட்சத்தில், அத்தகைய ஊழியங்களுக்குள் எவ்வளவேனும் ஈடுபடாமல் இருப்பது நலமாகும்.

## தேவனால் ஏவப்பட்ட இருதயங்களை உடையவர்கள்

இராணுவத்தில், தேவனால் மனதில் ஏவப்பட்டவர்கள், சவுலோடேகூடப் போனார்கள் என்று 26-ஆம் வசனம் நமக்குத் தெரிவிக்கின்றது. 27-ஆம் வசனமோ, மற்றவர்களாகிய "பேலியாளின் மக்கள்," சவுலை அசட்டைப்பண்ணி, சவுலுக்கு அன்பளிப்புகளையும் கொண்டுவராமல், "இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன்" என்று கூறினார்கள். அநேகமாக சவுலோடுகூடச் சென்ற மனுஷர்களைக்காட்டிலும் இந்தப் பேலியாளின் மக்கள் திரளாய் இருந்திருக்க வேண்டும். சவுலைப் பற்றின இச்சம்பவமானது, நமது கர்த்தர் அபிஷேகம் அடைந்த மாத்திரத்தில், அவரிடத்தில் "தேவனால் ஏவப்பட்ட இருதயங்களை உடையவர்கள்" ஈர்க்கப்பட்டார்கள் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றது; இவர்கள் அவருடைய சீஷர்களாகவும், பின்னடியார்களாகவும் ஆனார்கள், மேலும் இவர்கள் சுமார் 500 பேராக இருந்தார்கள் என அப்போஸ்தலர் நமக்குத் தெரிவிக்கின்றார். இயேசுவை எதிர்த்த பேலியாளின் சில குமாரர்களும் இருந்தார்கள்; இவர்களைக் குறித்துத் தீர்க்கத்தரிசி, "அவரைப் பார்க்கும் போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது, அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்" என இவர்கள் கூறுவதைக் குறிப்பிட்டுள்ளார். "இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன்?" என்று இவர்களும் எண்ணினார்கள்; மேலும் இவர்களுடைய கணிப்பில் அவரிடத்தில் விரும்பத்தக்கதான எதுவும் காணப்படவில்லை.

அன்றுமுதல் இன்றுவரையிலும் கர்த்தருடைய நோக்கம் மற்றும் உண்மையான ஜனங்களுடைய விஷயத்தில், அதிலும் குறிப்பாக அவருக்கான ஊழியத்தில் முதன்மையான ஸ்தானங்களில் காணப்படுபவர்களின் விஷயத்தில் மேற்கூறிய விஷயங்கள் உண்மையாக நிகழ்ந்துள்ளது. சிலர் தேவனுடைய கையாளும் விதங்களை அங்கீகரித்து, அவருடைய வழிநடத்துதல்களை அடையாளம் கண்டுகொண்டு, அதற்கு இசைவாக தங்களுடைய விசுவாசத்தின் மூலம் செயல்படுகின்றனர். இவர்களே தேவனால் ஏவப்பட்ட இருதயங்களைக்கொண்டவர்கள் ஆவார்கள். "உம்முடைய வசனமே சத்தியம்" எனும் சத்தியத்தின் வாயிலாகவே தற்காலத்தில் தேவனுடைய வழிநடத்துதல்களும், ஏவுதல்களும் முக்கியமாகக் காணப்படுகின்றது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்." பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய வழிநடத்துதலை நோக்கிப் பார்க்கின்றவர்களாய் இருக்கின்றார்கள், மேலும் வழிநடத்துதல்களைப் புரிந்துகொள்வதற்கும் இவர்கள்

உதவப்படுகின்றனர். மற்றொரு பக்கத்தில், சவுலின் நாட்களிலும், நம்முடைய கர்த்தருடைய நாட்களிலும் இருந்ததுபோன்று, அன்றுமுதல் இன்றுவரை தேவனுடைய வழிநடத்துதல்களினாலும், அவருடைய தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளினாலும் வழிநடத்தப்படுவதற்கு விருப்பம் இல்லாதவர்களும், சண்டையிடுகிறவர்களுமாகிய பேலியாளின் மக்கள் காணப்படவே செய்கின்றனர். சண்டையிடும் இந்த மக்கள், ஒழுக்கம் குறைந்தவர்கள் மத்தியில் உள்ளவர்களாகவும் எப்போதும் இருப்பதுமில்லை; உதாரணத்திற்கு நம்முடைய கர்த்தருடைய காலக்கட்டத்தில் பொறாமையினால் ஏவப்பட்ட சதுசேயரும், பரிசேயரும், வேதபாரகரும் (ஒழுக்கமுள்ள மக்கள்) இந்தப் பேலியாளின் மக்களாகக் காணப்பட்டார்கள்; ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் மிகவும் வாதிக்கும் சாத்தானுடைய பண்பாகிய பொறாமை இந்தப் பரிசேயர், சதுசேயரிடமும் காணப்பட்டது. நம்முடைய தனிப்பட்ட காரியங்களில் மற்றும் விசேஷமாக கர்த்தருடைய இராஜ்யத்தின் விஷயங்களில் நாம் ஒருபோதும் கர்த்தரை மறந்துவிடக்கூடாது என்பதே நமக்கான படிப்பினையாகும். "தேவனோடே போர்செய்கிறவர்களாய்" நாம் காணப்படாதப்படிக்கு நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் நம்மை மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கச்செய்யத்தக்கதாக, மேற்கூறின படிப்பினையை நாம் உள்வாங்கினவர்களாகக் காணப்பட வேண்டும் (அப்போஸ்தலர் 5:39).

## வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் தாமதமின்மை

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, சவுலுக்கு வாய்ப்பு வந்தது. மேலும் அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதில் அவரிடத்தில் காணப்பட்ட துரிதமானது, பெரும்பான்மையான ஜனங்களுடைய அன்பை அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. சத்துருவாகிய மோவாபியர்கள் யாபேசை தாக்கி, அதற்கு முற்றுகைப்போட்டார்கள்; யாபேஸ் பட்டணத்தாரைக்காட்டிலும், சத்துரு வலிமைக்கொண்டவர்களாகவும் இருந்தார்கள். யாபேஸ் பட்டணத்தின் ஜனங்கள் தங்களுடைய கண்களைப் பிடுங்கக் கொடுக்கும் நிபந்தனையின் பேரில் அவர்கள் ஜீவன் உயிரோடேவிடப்படும் எனும் செய்தி யாபேஸ் பட்டணத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. சவுல் உடனடியாக அனைத்துக் கோத்திரத்தாரும் தங்களுடைய சகோதரராகிய யாபேஸ் பட்டணத்தாருக்கு உதவ வரும்படி, அனைத்துக் கோத்திரங்களுக்கும் செய்தி அனுப்புகின்றார். மேலும் இப்படியாக கூட்டிச் சேர்க்கப்பட்ட நபர்களைக் கொண்டு சவுல் சத்துருவைத் துரத்தியடித்து, ஜனங்களை விடுவித்தார். இதிலிருந்து தேவனால் பரிசுத்த ஆவியைக்கொண்டு அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள், இறுதியில் இராஜ்யத்தில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாக ஆகும் விஷயம் தொடர்பான கண்ணோட்டத்தில் நாம் ஒரு விளக்கத்தை எடுத்துக் கொள்ளலாம். நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்ட பிற்பாடு, தெய்வீக ஊழியம் செய்வதற்கான சில வாய்ப்புகளுக்காக நாம் எதிர்ப்பார்த்துக் காணப்பட வேண்டும், மேலும் அப்போஸ்தலர் வலியுறுத்தியுள்ளதுபோல, நாம் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே நிலைத்திருக்கும் போதும்கூட நாம் வாய்ப்புகளுக்காக எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்களில் சிலரைக் குருடாக்கியுள்ள மற்றும் மற்றவர்களைக் குருடாக்குவதற்கு அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு சத்துருவை நாம் அறிவோம். இம்மாதிரியான சூழ்நிலை, ஊழியம் புரிவதற்கான அழைப்பாக நமக்கு மாறுகின்றது; கர்த்தருடைய நாமத்தினாலும், பலத்தினாலும் மற்றும் நம்முடைய சகோதரரை குருடாக்கும் வல்லமையினின்று விடுவிப்பதற்குக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ள அனைத்துக் காரியங்களுடைய உதவியினாலும் நாம் கடந்துசெல்ல வேண்டும். யார் ஒருவன் இப்படியான வாய்ப்பைக் கண்டும், அதைப் பயன்படுத்த தவறுகின்றானோ அவனுக்கு, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில் ஒருவனாகுவதற்குரிய சரியான இருதய நிலைமை இல்லை என்பதையும், கர்த்தர் பேரிலும், அவருடைய ஜனங்கள் பேரிலும், அவனுக்கு அதிக அன்பு வளர வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

# இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்

சீமோனின் வீட்டிலே விருந்து பரிமாறப்படவே, அவர்கள் புசிப்பதற்கென அங்கு அமர்ந்திருக்கவே.
திறந்த வாயிலில் மாது ஒருத்தி வந்து, அமைதியாய் நின்றாளே -
பதட்டத்துடன் காணப்பட்ட அவளது இருதயத்துடன், அணைத்து வைத்திருந்தாளே
தூயதும், விலையேறப்பெற்றதும், அரிதானதுமான நளததைலமுள்ள பரணியை.
அங்கிருந்த ஆர்வமுள்ள கண்கள் தன்மீது திரும்பிட கூடாதே என்ற அச்சத்தில் அவள்
காணப்பட்டாளே. அவரது பிரியமான நண்பரும், அவளது எஜமானரும்,
ஆண்டவருமானவர் அங்குக் காணப்பட்டார்.

தன் அன்பினை வெளிப்படுத்திடுவதற்கு இதுவே தனது கடைசி மற்றும் ஒரே வாய்ப்பு என்றே
அவள் உள்ளுணர்வினால் உணர்ந்துகொண்டவளாய் இருந்தாளே.
அவர் தனக்குச் செய்திட்ட அனைத்தையும், அவள் எண்ணிப்பார்த்தாள்;
எதையும் பொருட்படுத்தாமல் அந்தச் சத்திய வார்த்தைகளை, அந்த ஜீவ வார்த்தைகளைக்
கேட்கவேண்டுமென்று அவர் பாதம் அருகே செலவழிக்கப்பட்டதான அந்தப் பரிசுத்தமான
மணிநேரங்களையும் அவள் மனம் எண்ணிப்பார்த்தது.
லாசரு கல்லறையில் கிடத்தப்பட்டிருந்த அந்த இருளான நாள்தனையும்,
எப்படி அவர் தன் இரவை, பகலாகவும், தன்னுடைய கண்ணீரைச் சந்தோஷமாகவும்
மாற்றிப்போட்டார் என்று அவள் மனம் எண்ணிப்பார்த்தது.
நன்றியறிதல் ஆழமாய் அவள் கண்களில் பிரகாசித்திடவே, அவள் அழகு முகம் சிவந்ததே.

வேகமாய், சத்தமில்லாமல் அடிகள் எடுத்து வைத்து, ஆட்கள் நிரம்பியிருந்த அந்த அறையைக்
கடந்தாள் அவள். கேள்விகளுடன் அவளைப் பார்த்திட்ட கண்களை, தைரியமாய்
எதிர்க்கொண்டாள் அவள் (சிங்கம் நடமாட பயப்படும் இடங்களில்கூட,
அன்பினால் முன்னேற முடியுமே).

நடுங்கும் கைகளினால், முத்திரையை உடைத்து, பரணியின் தைலத்தைத் தன் இரட்சகரின்
பாதங்களின்மேல் ஊற்றினாள் அவள். வீடு முழுவதும் அருமையானதும்,
இனிமையானதுமான நறுமணத்தினால் நிறைந்ததே.
அவளால் பேசிட முடியாத அளவுக்கு, அவளது இருதயத்தின் அன்பு மிகவும் ஆழமாய்
இருந்ததே; அவள் தன் பிரதான அலங்காரமாகிய, தனது நீளமான, பட்டுப்போன்ற
கூந்தலைக்கொண்டு அவர் புனிதமான பாதங்களைத் துடைத்திட்டப்போது,
கண்ணீர்கள் அவள் கன்னத்தில் வடிந்ததே.

திடீரென, அந்தப் பொன்னான அமைதியினைக் கடுங்குரல் ஒன்று தகர்த்ததே.
எத்தகைய வீண் இது! வீண் இது!
இது எவ்வளவு பணத்திற்கு விற்கப்பட்டிருக்கலாமே!
தரித்திரருக்கு உதவியிருக்கலாமே! எனும் கடுங்குரல் தொனித்ததே!
அவள் தலையை இன்னும் குனிந்திட்டாளே - பெரிதான அன்பிற்கு
அது அற்பமான அர்ப்பணிப்பு என எண்ணினாள்.
மீண்டும் ஒரு குரல், ஆனால் இது அவள் ஆண்டவர் குரல்,
ஆம், அவள் அன்பின் ஆண்டவருடைய குரல் அறையில் தொனித்ததே.
(அவர் கொஞ்சம் எழும்பினவராக, தம் கரத்தை மென்மையாய் அவள் கூந்தல்மேல் வைத்தார்)
"இவளைக் கடிந்துகொள்ளாதிருங்கள், என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்;
இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்.
என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமாய் இதைச் செய்திருக்கின்றாள்.
இவளது அன்பின் கிரியையானது, யுகங்கள் முழுவதும் பேசப்படுமே!" - என்றவர் கூறிடவே,
அது அவளது சோர்ந்துபோன இருதயத்திற்கு எவ்வளவாய் எழுச்சியைக் கொடுத்திருக்குமே!

**--1514--**

பழங்காலத்து இப்பரிசுத்தவாட்டியினுடைய கதையை நான் கேட்கும் போதெல்லாம்
எத்தனைதரம் என் பாவப்பட்ட இருதயமானது கொழுந்துவிட்டு எரிந்து,
ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே, தாகித்துள்ளதே,
நானும் இப்படியாய் என் ஆண்டவருக்கு, இராஜாவுக்கு ஊழியம் புரிந்திட வேண்டும் என்று
என் பாவப்பட்ட இருதயமானது ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே.
"பதினாயிரங்களில் சிறந்தவரும், முற்றிலும் அழகுள்ளவருமானவருக்கு" ஊழியம் புரிந்திட
வேண்டும் என்று என் பாவப்பட்ட இருதயமானது ஏங்கியுள்ளதே, வாஞ்சித்துள்ளதே!

ஆனால் இப்பொழுது அறிந்துகொண்டுள்ளேனே -
ஓ! விலையேறப்பெற்ற கருத்தை அறிந்துகொண்டுள்ளேனே.
"இன்னும் காலம் கடந்துச் செல்லவில்லை."
இன்னும் என்னால் அவரது பாத அங்கங்களுக்கு எந்தன் விலையேறப்பெற்ற அன்பினால்
அபிஷேகம் பண்ணிட முடியும் என்ற விலையேறப்பெற்றக் கருத்தை அறிந்துகொண்டுள்ளேனே!

அருமை ஆண்டவரே, உம்மிடம் நான் வேண்டிக்கொள்கின்றேனே,
பலியின் கரத்தைக்கொண்டு, சுயம் எனும் முத்திரையை நான் உடைத்திடுவதற்கும்,
என் இருதயத்திற்குள் அடக்கி வைக்கப்பட்ட நறுமணங்களை ஊற்றிடுவதற்கும்,
ஓ! எனக்கு நீர் உதவிட, நான் வேண்டிக்கொள்கின்றேனே.
ஓ! என் ஆண்டவரே உம் பாத அங்கங்கள் தேவையற்ற சஞ்சலத்திலிருந்து
தப்புவிக்கப்படுவதற்கும், வெளிச்சத்திற்கும், ஜீவனுக்குமான இடுக்கமான
பாதையில் அவர்கள் செல்ல உதவிடுவதற்குமான பிரயாசத்திலேயே
என் இரவும், பகலும் கழிவதாக!

------------------------

**--1515--**

# சபை என்றால் என்ன?

"மெய்யான ஒரே சபை" என்ற கட்டுரை வெளிவந்தது முதற்கொண்டு, சபையாரில் ஒரு பகுதியினர் பிரிந்துபோய்விடுவது மற்றும் தனிச் சபையென அதுவே அதன் கூடுகைகளை நடத்திடுவது தொடர்புடைய உரிமை அல்லது சிலாக்கியம் குறித்து எங்களிடம் விசாரிப்பதற்கு அநேகர் தொடர்பு கொண்டிருக்கின்றனர். அக்கட்டுரையில் ஏற்கெனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது போன்று, நமது கர்த்தருடைய வார்த்தைகளானது - உண்மையுள்ள, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் தம்முடைய நாமத்தில் கூடிக்கொள்கையில், அதை அங்கீகரித்திட அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்றும், அத்தகைய அங்கத்தினர்களுடன் தலையானவரின் பிரசன்னமானது காணப்படுகையில், அது வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு சபையாக இருக்கின்றது என்றும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இது உண்மையாக இருப்பினும், நமது கர்த்தருடைய மற்றும் அவரது அப்போஸ்தலர்களுடைய போதனைகளும் மற்றும் ஆதிசபையினரின் நடைமுறைகளும் - "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்ற" புதிய கற்பனையானது, கர்த்தருடைய அருமையான ஜனங்கள் சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்துபோவதற்குப் பதிலாக, அவர்கள் ஒன்றுகூடிடுவதற்கு அவர்களை ஆவல்கொள்ள வழிநடத்துகின்றதான, அத்தகைய ஓர் ஆவியின் நெருக்கமான ஐக்கியத்தினைச் சுட்டிக்காட்டும் கருத்திற்கு இசைவாகவே உள்ளது என்பதும்கூட உண்மையாய் இருக்கின்றது. "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல" எனும் வார்த்தைகளானது, மிகவும் ஆழமான, உள்ளார்ந்த அன்பையே சுட்டிக்காட்டுகின்றதே ஒழிய, வெறும் சகித்தலை அல்ல என்று நாம் கவனமாய்க் கவனித்திட வேண்டும். தம்முடைய ஜீவனை நமக்குக் கொடுத்திடும் அளவுக்குக் கர்த்தர் நம்மை அன்புகூர்ந்தார் மற்றும் அவரை அப்போஸ்தலன் நமக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டி, "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்" என்று கூறுகின்றார். இப்படியாகவே அவர் நம்மில் அன்புகூர்ந்தார். இது சபையார் மத்தியில் ஒரு பிரிவினருக்கான பிரிவுணர்ச்சியினால் உள்ள அன்பு அல்ல, மாறாக அனைவருக்குமான அன்பாகும்; காரணம் அவர்கள் அவருடையவர்களாய் இருக்கின்றனர் என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். உண்மைதான் அனைவரையும் ஒரே அளவில் அன்புகூர முடியாதுதான், ஆனாலும் நம்முடைய ஜீவன்களை அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு விரும்புகிற அளவுக்கு, அனைவரையும் அன்புகூர்ந்திடலாம்; ஏனெனில் கர்த்தருடைய சிறியவர்களிலேயே எளியவர்கள்கூட நம்முடைய சிறந்த அன்பினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவானவர்களாய் இருக்கின்றனர், காரணம் அவனும் மீட்கப்பட்டு, பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் இம்மானுயேலாகிய தளபதியின் கீழ் இணைந்து கொண்டவனாக, அவரது ஊழியத்திற்கெனத் தனது ஜீவனை ஒப்புக்கொடுத்துவிடுவதாக தனது ஆண்டவருடன் உடன்படிக்கையின் ஒப்பந்தத்தை மேற்கொண்டவனாய் இருக்கிறானல்லவா? நாம் ஊழியம்புரிகின்றதான அதே ஆண்டவருக்குத் தங்களுடைய அனைத்தையும் அர்ப்பணித்துள்ளவர்களையும் நாம் அன்புகூர வேண்டுமல்லவா; மேலும் அத்தகையவர்களை ஆண்டவர் ஏற்றுக்கொள்கின்றார் மற்றும் அவர்களைத் தமது சகோதரரென அழைத்திடுவதற்கு அவர் வெட்கப்படுகிறதில்லை எனும் உண்மைகளானது - நாமும் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்களைக் குறித்து வெட்கப்படாமல், மாறாக அவர்களை அன்புகூர்ந்து, அவர்களுக்கு ஊழியம் புரிய, அதுவும் அவர்களுக்கு உதவுவதற்கென ஜீவியத்தின் மணி நேரங்களை அல்லது நாட்களை ஒப்புக்கொடுத்துவிடும் அளவுக்கு ஊழியம்புரிய மகிழ்கிறவர்களாக நாம் காணப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களாய் இருக்கின்றன.

கர்த்தருடைய ஆவியோடும், அவரது வார்த்தைகளினுடைய அறிவுரைகளோடும் சம்பந்தமுள்ள எல்லாமே, அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் மத்தியில் பிரிவினை எனும் கருத்தினை எதிர்ப்பதாகவே உள்ளது. இதற்கான அருமையான உதாரணமானது, எங்குமுள்ள அருமையான நண்பர்கள் கிருபையிலும், அறிவிலும் வளருகையில், அவர்கள் ஒருநாள் மாநாடுகளுக்கும் மற்றும் இன்னும் அதிகமாய்ப் பொது மாநாடுகளுக்கும் ஒன்றுகூடி வருவதற்குரிய வாஞ்சையினால் அதிகமதிகமாய் ஊறிக் காணப்படுகிறதில் விளங்குகின்றது;

மற்றும் இப்படிக் கூடுகையில் ஒருவரோடொருவருக்கான ஏக்கங்களும், ஐக்கியங்களும், நாம் நமது கர்த்தரோடும், "பரலோகத்தில் தங்கள் பேரெழுதப்பட்டவர்களாகிய" முதற்பேறானவர்களின் சர்வசங்கத்தினுடைய அவரது உண்மையானவர்கள் அனைவரோடும் கூடிடுவது வரையிலும் முழுத்திருப்தியினை அடைகிறதில்லை எனும் கருத்தும் எப்போதும் வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது.

மார்க்கப் பேதத்தை அப்போஸ்தலன் கண்டனம்பண்ணினது நம் அனைவருக்கும் நினைவில் இருக்கின்றது மற்றும் அதை அவர் பட்சபாதத்தின் ஆவி என்று அடைமொழியில் குறிப்பிடுகின்றார் மற்றும் அதற்கு அவரது ஆதரவு காணப்படுகிறதில்லை மற்றும் அது மாம்ச மனப்பான்மை காணப்படுவதற்கான சான்று என்றும், ஆவிக்குரிய காரியங்களில் குறைவான வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். "ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா?" (1 கொரிந்தியர் 3:3,4). "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" என்று அவர் கேட்கின்றார். இன்னுமாக இவர்கள் நம்மை மீட்கவில்லை, கிறிஸ்து மாத்திரமே மீட்டார் என்றும், நாம் அனைவரும் அவரது சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கின்றோம் என்றும், இதனால் ஒருவரோடொருவர் உறவுகொண்டிருக்கின்றோம், காரணம் நாம் நமது தலையானவராகிய அவரோடு உறவு உடையவர்களாய் இருக்கின்றோம் என்றும் கூறுகின்றார் மற்றும் இன்னுமாகத் தொடர்ந்து அவர் சரீரத்தில் பிரிவினையுண்டாயிரக்கூடாது, அதாவது பேதமோ, பிரிவோ காணப்படக்கூடாது என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 12:25; 1:13).

அருமையான நண்பர்களே நாம் இதைக்குறித்து உணர்கின்றோமோ அல்லது இல்லையோ, ஆனால் ஓரிடத்தில் சரியாய்க் கூடிடுவதற்குத் தொலைத் தூரமானது தடையாய் இருக்கும் காரணத்தினால் உண்டாகும் பிரிதலாய் இல்லாமல், வேறே காரணங்களினால் உண்டாகும் சபையாரின் பிரிவினையை ஆதரிக்கும் ஆவியானது, சபை பிரிவுணர்ச்சியின் அல்லது பாரபட்சத்தின் ஆவியாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை. சிலசமயங்களில் இது வழிநடத்துபவராகிட விரும்பியும், தனது தாலந்துகளைச் சபையின் ஊழியக்காரரெனப் பயன்படுத்திடுவதற்குரிய முழுமையான வாய்ப்பை விரும்பியும் காணப்படும் சகோதரன் ஒருவரால் ஏற்படுகின்றது. சிலசமயங்களில், அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளதுபோன்று, சபையாரில் ஒரு சாராரின் பாரபட்சத்தினால், பரிசுத்த பவுல் அவர்களின் விஷயத்தில் காணப்பட்டதுபோல, வழிநடத்துபவர்களே விரும்பிடாமல் இருக்கையில், வழிநடத்துபவர்களைப் பின்பற்றிட வேண்டும் எனும் விருப்பத்தினால் உண்டாகுகின்றது. இது விஷயத்தில் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்குப் பதிலாக, தனிப்பட்ட விதத்தில் நம்முடைய சொந்த இருதயங்களைக் கூர்ந்து ஆராய்வது எப்பொழுதுமே நமக்கு நன்மைப் பயக்கின்றதாய் இருக்கும். சில இடங்களில் பிரிவதற்கும், தனித்துக் கூட்டங்களை நடத்திடுவதற்கும் சிலரின் சார்பில் காணப்படுகின்றதான மனப்பான்மைக்கு, சில உண்மையான காரணம் இருக்க வாய்ப்புள்ளது; ஆனால் அந்த இடர்ப்பாட்டினைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒன்றாய்க் காணப்படுவதே சிறந்த வழியாய் இருக்கும். சில சமயங்களில் கர்த்தருடைய ஜனங்கள் உணர்வற்றவர்களாய் மிகவும் குறுகிய மனதுடன் காணப்பட்டு, ஓர் ஏற்பாடானது முடிந்த மட்டும் அனைவரையும் திருப்திப்படுத்த, சந்தோஷப்படுத்த மற்றும் அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கத்தக்கதாக பிரயாசம் எடுப்பதற்குப் பதிலாக, பெரும்பான்மையானவர்களுடைய சித்தத்தின்படி, சபையின் ஏற்பாடுகளை மிகவும் அதிகமாய்க் கட்டுப்படுத்திவிடுகின்றனர்.

"அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போமாக" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார் (எபிரெயர் 10:24). இது நன்கு கல்வியறிவு உடையவர்களாக அல்லது இயல்பாகவே சிறந்தவர்களாக அல்லது ஐசுவரியவான்களாக அல்லது நாகரிகமாகக் காணப்படுபவர்களின் விருப்பங்களை மற்றும் இஷ்டங்களை நாம் கவனிக்க வேண்டும் என்று மாத்திரமல்ல, மாறாக சரீரத்தினுடைய அருமையான அங்கத்தினர்கள் அனைவரையும் கவனிப்பதற்கு நாம் நாடிட வேண்டும் என்று குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாகரிகமானவர்களை, கல்வியறிவுடையவர்களை, ஆவிக்குரியவற்றில் நன்கு வளர்ச்சி அடைந்திருப்பவர்களை அன்புகூருவது என்பது சுலபமானதே மற்றும் இவர்களை அன்புகூருவது என்பது, "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும், ஆயக்காரரும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" என்று புறஜாதியாரால்கூடச் செய்யப்படுகின்றதென நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்டவைகளுக்கு ஒத்ததாகக் காணப்படுகின்றது (லூக்கா 6:32). "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி

ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று” அப்போஸ்தலனால் குறிப்பிடப்படுகின்றதான சகோதர அன்பானது - இந்த அன்பானது நாகரிகமானவர்களை மற்றும் நேர்த்தியானவர்களை மற்றும் திறமிக்கவர்களை மற்றும் உயர்பண்புடையவர்களை அன்புகூருவதை மாத்திரம் குறிக்கிறதில்லை. மரணத்தைவிட்டு ஜீவனுக்குக் கடந்துபோகாதவர்களை, அநேகம் ஜனங்கள் அன்புகூருகின்றனர். நாம் சகோதரரை அன்புகூருவதாவது, நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்பதற்குச் சாட்சியமாகக் காணப்படுகின்றது; இச்சகோதரரில் அநேகர் இழிவானவர்கள் என்றும், “தேவன் உலகத்தில் அற்பமானவர்களைத் தெரிந்துகொண்டார்” என்றும் அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார். சகோதரரில் இயல்பாகவே அற்பமானவர்களாய்க் காணப்படுபவர்களை நாம் அன்புக்கூரும் நிலைமைக்கு வருகையிலேயே, இது புதிய சுபாவமானது மனதைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கின்றது என்பதற்குச் சான்றாய் இருக்கின்றதென நாம் கருதிடலாம். நாம் அவர்களது அற்பமான தன்மைக்காகவோ, அவர்களது அறியாமைக்காகவோ, அவர்களது அறிவீனத்திற்காகவோ, அவர்களது வறுமைக்காகவோ, அவர்களை நாம் அன்புகூராமல், மாறாக அவர்கள் அவருடையவர்களாய் இருப்பதினாலும், அவருடையவர்கள் அனைவரும் நம்முடையவர்களாய் இருப்பதினாலும், நம்மோடுகூட அவர்களும் அதே கொடியின் கீழ் ஒரே போராட்டத்தில் இணைந்திருப்பதினாலும், பிதா தம்முடைய ஆவியினால் ஜெநிப்பிக்கையில், அவர்களைத் தமது பிள்ளைகளென அங்கீகரித்துள்ளதினாலும், நாம் அவர்களை அன்புகூருகின்றோம். இக்காரணங்களானது, சீயோன் மலையில் ஏறிடுவதற்கு ஒருவருக்கொருவர் நமது உதவியை அளிப்பதற்கும், நம்முடைய அனுதாபம் பாராட்டப்படுவதற்கும், நம்முடைய அன்பு காட்டப்படுவதற்கும் வலியுறுத்துகின்றதாய் இருக்கின்றது.

சகோதரருக்கான நமது அன்பினால், அவருக்கான நம்முடைய அன்பானது அளவிடப்பட்டுப் பார்க்கப்படும் என்று நமது கர்த்தர் தெரிவித்துள்ளார் மற்றும் நம்முடைய தேவைகளுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் கர்த்தருடைய மனதுருக்கமும், கிருபைகளும் காணப்படுவது போன்று, மற்றவர்களுடைய தேவைகளுக்கேற்ப மற்றவர்கள் மீது நமது அனுதாபமும், அன்பும் செலுத்தப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். வளர்ச்சி ரீதியிலும், மனரீதியிலும் அல்லது ஆவிக்குரிய ரீதியிலும் நம்முடைய அளவிற்கு இணையாகக் காணப்படுபவர்களின் தோழமையைப் பிரதானமாய் நாடுதல் என்பது, நம்மையே பிரியப்படுத்துகிறதாய் இருக்கும் மற்றும் நாம் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் அல்லது ஒருவருக்கொருவர் ஊழியம் புரிந்திட வேண்டும் என்றும், நாம் நம்மைப் பிரியப்படுத்திடக் கூடாது என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார் மற்றும் இன்னுமாக கிறிஸ்துவும் தமக்குப் பிரியமாய் நடக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றார். இன்னுமாக நம்முடைய மாம்ச சரீரங்களிலும்கூட, நாம் சில சமயங்களில் ஆரோக்கியமாய் இருக்கும் பாகங்களுக்குச் செலுத்தும் பராமரிப்பைக் காட்டிலும், ஆரோக்கியமற்ற கைக்கோ அல்லது பாதத்திற்கோ, அதன் அவலட்சணத்தை மூடத்தக்கதாக அதிக கவனம் செலுத்துபவர்களாய் இருப்போம் என்றும், இப்படியாகவே நாம் கிறிஸ்துவின் சரீரத்திலும் செய்திட வேண்டும் என்றும், கிறிஸ்துவின் முழுச்சரீரமும் பக்திவிருத்தியடைந்து, தலையாகிய கிறிஸ்துவின் கீழ், அவரது அங்கத்தினர்களென அன்பின் கட்டுகளினால் இணைக்கப்பட்டு, கட்டப்படத்தக்கதாக, நம்முடைய பரிவும், உதவியும் மற்றும் ஐக்கியமும், அதிகமாய் யாருக்குத் தேவைப்படுகின்றதோ அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவது போன்று, சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும் நமக்குத் தேவையாயிருக்கின்றனர் மற்றும் நமக்கு முன்பு இருக்கும் சோதனையான வேளைகளானது, மிகவும் கடுமையாகிடுகையில், ஒருவர் இன்னொருவருக்கும் கொண்டிருக்கும் உண்மையான ஒத்துழைப்பும், ஆதரித்தலும், பரிவும் நமக்கு அதிகமதிகமாய்த் தேவைப்படும். ஆகையால் நாம் பிரிவினைகளையும், ‘‘அமைப்புகளையும்’’ தவிர்த்துக்கொள்வோமாக மற்றும் சரீரத்திற்குத் தகுதியான ஒருமைப்பாட்டின் ஆவியினைப் பெற்றுக்கொண்டிருப்போமாக; ஏனெனில் நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாயிருக்கின்றோம் மற்றும் ஒருவருக்கொருவர் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம். இம்மாதிரியான காரியங்கள் அனைத்திலும் கண்ணுக்குக் கண் பார்க்கத்தக்கதாக நாம் அதிகமதிகமாய் நாடிடுவோமாக.

* * * * * * *

**கேள்வி:-** அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத ஒருவர் மூப்பராக தேர்ந்தெடுக்கப்படுவது சரியாய் இருக்குமா?

**பதில்:-** அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் மற்றும் ஈடுபலியில் விசுவாசம் இருப்பதாகவும், கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ளதாகவும் அறிக்கைப்பண்ணுபவர்கள் அனைவரும், தண்ணீர் ஞானஸ்நான அடையாளத்திற்கான அவர்களது கீழ்ப்படிதலானது பொருட்படுத்தப்படாமலேயே சகோதரர்களென, சபையின் அங்கத்தினர்களெனக் கருதப்படுவதற்கும் மற்றும் கையாளுவதற்கும் நாம் வலியுறுத்தினாலும், இத்தகைய ஒருவரைச் சபையின் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது என்பது ஞானமாகவோ அல்லது கர்த்தருடைய போதனைகளுக்கு இசைவாகவோ இருக்குமென நாம் எண்ணுகிறதில்லை. இத்தகைய ஒருவர் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டதான விசுவாசத்தில்" தெளிவாய் இருக்கிறாரென நம்மால் கருதமுடியாது. இவரை நாம் சகோதரன் என்று ஏற்றுக்கொண்டாலும், இவர் சத்தியத்தில் நன்கு வளர்ந்துள்ளவராக நம்மால் கருதிட முடியாது. ஆகையால் தெய்வீகத் திட்டம் முதலானவைகள் குறித்து மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்கென்று விசேஷமாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு ஒரு பொருத்தமான நபராய் இவரை நாம் கருதிட முடியாது.

---

# ஓய்வுநாள்தன்னின் இனிமை

ஏன்னுடைய கர்த்தர்தான் ஓர்நாளில் வந்திடுவார்,
எந்தனது வீட்டினுள்ளே நுழைந்துவந்தேஅமர்ந்திடுவார்,
தன் மகிமையின் பிரசன்னம் என் வீட்டினுள்ளே வீசச் செய்வார்,
புதுரோஜா மலரும் மணம் தன்னை அவர் கொடுப்பார்
அவர்குரலோ என்காதில் இன்னிசையாய் ஒலித்துவிடும்,
எனக்குள்ளே குடியிருக்கும் பயம் முற்றும் பறந்துவிடும்,
என்னைஅவர் தன் மார்போடே சேர்த்தணைத்தே கொண்டிடுவார்,
அங்கே நான் இனிமையிலே, அமைதியிலே துயில்கொள்வேன்,
என்தேவனே, அந்த இனிமையான நாள்தனிலே,
போதும் என்குழந்தாய், நீ வீட்டிற்குள்ளே வந்துவிடு,
உந்தன் பணி நிறைவுற்றதே, அன்பே நீ வந்துவிடு,
கூப்பிட்ட குரல்கேட்டு வந்திடுவேன் உந்தனோடு,
ஜொலிக்கின்ற  பளிங்கு கடல் தனைத்தாண்டி வந்திடுவேன் பின்னோடு,
அலையடிக்கும் கடல்தன்னைக்கடந்திடுவேன் பொழுதோடு,
அங்கேதான் நாமெல்லாரும் வாழ்ந்திடுவோம் இனிதோடு.

-G.W. செய்பர்ட்.

# சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார்

King of peace Inaugrated

**1 இராஜாக்கள் 1:32–40; 50–53**

**ஆதார வசனம்:** ''என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; .....'' – 1 நாளாகமம் 28:9 .

சாலொமோன் என்ற பெயரின் அர்த்தம் சமாதானமாகும். சாலொமோனின் ஆசிரியராக இருந்த நாத்தான் தீர்க்கதரிசி, இவரை ''யெகோவாவிற்குப் பிரியமானவன்'' என்று அர்த்தம் கொள்ளும் யெதிதியா என்னும் பெயரில் அவரை அழைத்தார். இவருக்குள் காணப்பட்ட சில இயற்கையான பண்புகள், விசேஷித்த தெய்வீக ஆசீர்வாதத்தின் மூலம், இவருக்கு ''ஞானி'' என்ற பட்டத்தைக் கொடுத்தது.

ஓர் எழுத்தாளர் பின்வருமாறு எழுதுகின்றார். ''அதாவது சாலொமோன் தனது பெற்றோரிடமிருந்து சுதந்தரித்துக் கொண்ட விஷயங்களை, பல கோணங்களில் பார்க்கும் போது, பலமுள்ள விஷயங்களாக இருக்கின்றது. இவருடைய தகப்பனாகிய தாவீது முதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்டார்; இவரது தாயார், ''தேவனுடைய வாக்கைப் போல இருந்த ஆலோசனையைக்'' கொடுக்கும் அகித்தோபேலின் பேத்தி ஆவார். சாலொமோன் தனது தாயிடமிருந்து விவேகத்தையும், துல்லியமான நியாயம்தீர்க்கும் தன்மையையும், நீதியின் விஷயங்களில் நுண்ணறிவையும், ஒருவேளை உடல் சார்ந்த இச்சையான பலவீனங்களையும் சுதந்தரித்துக் கொண்டார்; மேலும் தனது தகப்பனிடமிருந்து ஆழ்ந்து சிந்திக்கிற தன்மையையும், இலக்கியத்தின் மீதான ரசனையையும், ஆளுகை செய்யும் ஆற்றலையும், மதத்தின் மீதான ஈடுபாட்டையும் சுதந்தரித்துக் கொண்டார். சாலொமோனின் அங்க வடிவும், அழகும், தாவீதின் மற்ற குழந்தைகளுக்கு இருப்பதைப் போன்ற அழகு காணப்பட்டிருக்க வேண்டும். உன்னதப்பாட்டின்படி, சாலொமோன் அழகுள்ளவராகவும், அடர்த்தியான முடி கொண்டவராகவும், காகத்தைப் போன்ற கருமையான முடியைக் கொண்டுள்ளார் என்பது தெரிகின்றது.''

சாலொமோன் ஆளுகைக்கு வந்த போது, 20 வயது உடையவராக காணப்பட்டார். அவரது தகப்பனாகிய, தாவீது இராஜா 70 வயது அடைந்தவராகவும், உடல் பலவீனம் அடைந்தவராகவும் இருந்தபடியால், தாவீதின் ஆளுகை ஸ்தானத்தை எடுக்க ஒருவர் விரைவில் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற நிலை எல்லோருக்கும் வெளியாக்கப்பட்டது. தாவீதின் மூத்த குமாரனாகிய அம்மோன், அடுத்த வயதினான அப்சலோமால் கொல்லப்பட்டார். அப்சலோமும் பின்னாளில், தனது கலகத்தில் கொல்லப்பட்டான். அப்சலோமுக்கு அடுத்த குமாரனாக வரிசையில் இருப்பவர் அதோனியா ஆவார். இவர் தனது தந்தையாகிய தாவீது இராஜா, தனக்குப் பின் சாலொமோனே அரியணையில் வர வேண்டும் என்று யோசித்து வைத்திருந்ததை அறிந்திருந்தபடியால், இதைத் தடுக்கும் விதமாக, தனது தந்தை வேலைகளைக் கவனிப்பதற்கு, மிகவும் வயது சென்றவராக இப்பொழுது காணப்படுகின்றார் என்ற காரணத்தைப் பயன்படுத்தி, இராஜ்யத்தைக் கைப்பற்ற முயற்சித்தார்.

அதோனியா தனது திட்டத்தைச் செயல்படுத்த சமயம் வந்துவிட்டது என்று கருதி, தனது ஆதரவாளர்களையும், சாலொமோன் தவிர மற்ற அனைத்து இராஜாவுடைய புத்திரர்களையும் இராஜாவின் தோட்டத்தில் அழைத்து பெரிய விருந்தை ஏற்பாடு பண்ணினான். விருந்தின் நடுவில், ''இராஜாவாகிய அதோனியா என்றென்றும் வாழ்க!'' என்ற சத்தம் கேட்டது. இராஜாவாகிய தாவீதின் திறமிக்க தளபதி யோவாப் மற்றும் பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரும், அதோனியாவிற்கு உடந்தையாக இருந்தனர். இரண்டாம் முறையாக தாவீதின் குடும்பத்தில் சதித்திட்டம் நடந்தது.

**''கர்த்தருடைய இராஜ்யம்''**

இவர்கள் தங்கள் யோசனைகளில் தேவனை நினைக்கவில்லை என்று எழுதுகின்றார் தீர்க்கதரிசி. அப்சலோமின் சதித்திட்டத்திலும் இப்படியாகத்தான் இருந்தது, பின்னர் அதோனியாவின் --1521--

திட்டத்திலும் இப்படியாகத்தான் இருந்தது. இவர்கள் இஸ்ரயேலின் இராஜ்யம் கர்த்தரால் விசேஷமாக நிறுவப்பட்டது என்றும், இஸ்ரயேலின் இராஜ்யம் மற்ற இராஜ்யங்களிடமிருந்து வேறுபட்டது என்றும், அது தேவனுடைய இராஜ்யமாக இருந்தது என்றும் நினைவு கூறவில்லை. ஆகவேதான் சாலொமோன், தனது தகப்பனாகிய தாவீதின் அறையில் இருந்த, கர்த்தருடைய சிங்காசனத்தின் மேல் அமர்ந்தார் என்று வாசிக்கின்றோம். (1நாளாகமம் 29:23). சதித்திட்டம் போட்டவர்கள், தாங்கள் தெய்வீக ஏற்பாடுகளுக்கு குறுக்கிடுகின்றோம் என்று உணர்ந்திருந்தார்களானால், அவர்களில் எவரும் இவ்விதமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இன்றைய காலக்கட்டத்தில், வாழும் தேவனுடைய ஜனங்கள், தங்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கர்த்தருடைய சித்தத்தை உணர்ந்து கொள்வதில்ஃபுரிந்து கொள்வதில் விழிப்பாய் இருக்க வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் அனைத்து விஷயங்களிலும், அவர்களின் நலன் கருதி, கர்த்தருடைய ஞானம் மற்றும் வல்லமை மிகுதியான அளவில் செயல்படுவதினால், மனித சதித்திட்டங்களும், எதிர்ப்புகளும் அவைகளைத் தீட்டினவர்களுக்கே பாதிப்பைக் கொண்டு வருகின்றது என்பதை நாம் உறுதியாய்ஃநிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டும். இப்படியான எதிர்ப்புகளைச் செய்பவர்கள் அதிக கிரியைகள் செய்ய, அதிக வெற்றி கொள்ள கர்த்தர் அனுமதித்திட்டாலும், உதாரணத்திற்கு, கர்த்தருக்கு எதிராக யூதாஸ், சதுசேயர்கள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் சதித்திட்டத்தை தேவன் அனுமதித்திட்டாலும், அல்லது தாவீது இராஜாவுக்கு எதிரான அப்சலோம் மற்றும் அவனுடைய கூட்டாளிகளின் சதித்திட்டத்தை தேவன் அனுமதித்திட்டாலும், விசுவாசம் உள்ள யாவருக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாவது, ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்,'' (ரோமர் 8:28), என்பதாகும். ''என் பிதா உமக்கு அதிகாரம் கொடுக்காதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது'' என்று இயேசு, பிலாத்துவிடம் கூறின விஷயம் அனைத்து கர்த்தருடைய ஜனங்களுக்கு பொருந்தக்கூடியதாக, எப்போதும் இருக்கின்றது. பிதா தமது மகிமையான திட்டத்தைக் குறுக்கிடும் எந்த விஷயத்தையும் அனுமதிக்க மாட்டார். இதை ஏசாயா 55:11–ஆம் வசனம் மூலம் நமக்கு அவர் உறுதியளிக்கின்றார்.

**''தெரிந்து கொள்ளப்பட்ட, அபிஷேகிக்கப்பட்ட, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட சாலொமோன்''**

ஏற்ற வேளையில், தெய்வீக சித்தம் நிறைவேறும்படி, அதோனியாவின் சதித்திட்டத்தின் மீது, தெய்வீக வழிநடத்துதலினால் தாவீது இராஜாவின் கவனம் திரும்பினது. தாவீது எவ்வாறு இன்னொரு ஆசாரியனையும், நாத்தான் தீர்க்கதரிசியையும், பெனாயாவாகிய வேறொரு தளபதியையும் அழைப்பித்து, அவர்கள் தனது குமாரனாகிய சாலொமோனோடு, பட்டணத்தின் வாயிலுக்கு வெளியே உள்ள பள்ளத்தாக்கிற்கு, அதாவது இயேசு கழுதையின் மேல் பவனி வந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள இடத்திற்கு போகச் சொன்னார் என்பதை நம்முடைய பாடம் நமக்குக் கூறுகின்றது. தாவீது இராஜா தனது சொந்த கோவேறு கழுதையின்மேல், சாலொமோனை ஏற்றிக்கொண்டு போகும்படிக்குக் கட்டளையிட்ட விஷயம், சாலொமோன் தாவீதினால் இராஜாவாக நியமிக்கப்பட்டதை எடுத்துக் காட்டியதுஃஅதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இந்த விசேஷமான சம்பவத்தின் போது, இராஜாவின் விசேஷமான காவலாட்களாகிய கிரேத்தியரும், பிலேத்தியரும் கூட சென்றனர். சாலொமோன் அபிஷேகிக்கப்பட்டார்; சாலொமோன் இராஜாவாக அறிவிக்கும் விதமாக எக்காளங்கள் ஊதப்பட்டன. அவரை இராஜாவாக அங்கீகரிக்கும் விதத்தில் ஜனங்கள் ஏகமாய் சத்தமிட்டு, சந்தோஷப்பட்டார்கள். இவ்விதமாக சாலொமோன் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டு, தனது தகப்பனாகிய தாவீதுடன் சுமார் 6 மாதங்கள் சேர்ந்து ஆளுகை செய்தார், பிற்பாடு தாவீது மரணம் அடைந்தார்.

**''சாலொமோனின் ஞானம் மற்றும் தன்னடக்கம்''**

இராஜாவாகிய சாலொமோன் மேல் வைக்கப்பட்டிருந்த பாரமான பொறுப்புகளைச் செய்வதற்கு அவர் மிகவும் இளைஞனாக இருந்தார். அவர் வெளிக்காட்டின தன்னடக்கமானது, அவர் சரியான மனநிலையில்

இருக்கின்றார் என்பதை மாத்திரம் காட்டாமல், அவர் நன்கு பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கின்றார் என்பதையும் காட்டுகின்றது. சாலொமோனின் பிறப்பின் போது, அவருடைய தகப்பனுக்கு 53 வயதாய் இருந்தது. இந்த வயதில் அநேகமாக, தாவீது தனது குடும்ப அங்கங்களை அவர்களின் இஷ்டப்படி விட்டுவிட்டதினால் வந்த அனுபவங்களிலிருந்து விஷயங்களைக் கற்றுக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. தாவீது தனது பிள்ளைகளை போதுமான கண்டிப்புடன் வளர்க்கவில்லை. பிள்ளைகளை கர்த்தருக்குள் எச்சரித்து வளர்க்கும் பயிற்சியின் அவசியத்தை தாவீது போதுமான அளவு உணர்ந்து கொள்ளவில்லை. நாட்டின் முக்கியமானஃ பெரிய விஷயங்கள் தாவீதின் கவனத்தை அவைகளின் பக்கமாக கேட்டபடியால், இராஜாவைப் போன்று அதிகம் பயபக்தியில்லாதவர்களின் கவனிப்பில், பராமரிப்பில் பிள்ளைகளை விட்டுவிட வேண்டியிருந்தது. தாவீது தனது வாலிப பிராயத்தில் பக்தியுடன் காணப்பட்டபடியால், தனது பிள்ளைகளும் தன்னைப் போன்ற இருதயமும், மனமும் உடையவர்களாக இருப்பார்கள் என்று எண்ணி விட்டார். மேலும் ஆஸ்தியும், பூமிக்குரிய கனங்களும் ஒழுக்கக்கேட்டை உண்டாக்கும் என்றும், அவைகள் தேவபக்திக்கு வழிநடத்தாமல், பெருமை, உலகப்பிரகாரமான மோகம் மற்றும் தேவபக்தியற்ற தன்மைகளை விருத்தி செய்கின்றது என்பதையும் தாவீது போதுமான அளவு உணர்ந்து கொள்ளவில்லை.

தாவீதுக்குக் கர்த்தர் மேல் வைத்திருந்த பக்தி வைராக்கியம் அதிகரித்தபடியாலும், தனது மற்ற பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் தான் பண்ணின தவறுகளை அவர் உணர்ந்து கொண்டபடியாலும், தனக்குப்பின் சிங்காசனத்தில் உட்காரும் தனது குமாரன் கர்த்தரைக் கனப்படுத்தி, மதத்தின் விஷயங்களின் மேல் ஈடுபாடு காட்ட வேண்டும் என்று விருப்பம் கொண்டபடியாலும்தான், இராஜா, சாலொமோன் எனும் தனது மகனை, நாத்தான் தீர்க்கதரிசியின் விசேஷமான பராமரிப்பின் கீழ் வைத்தார். அதாவது மகனாகிய சாலொமோன், கர்த்தரையும், அவருடைய இராஜ்யத்தையும் நீதி தவறா வண்ணம் சேவிக்கவும் (ஊழியம் செய்யவும்), தாவீது எண்ணியும் (விரும்பியும்) அனுமதிக்கப்படாத ஆலயத்தைக் கட்டுவதற்கும் ஆயத்தப்படுத்துவதற்கு தாவீது, சாலொமோனை நாத்தான் தீர்க்கதரிசியின் பராமரிப்பின் கீழ் வைத்தார். ஆலயத்தின் வேலை குறித்தும், அது தாவீதின் குமாரனால் கட்டப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் குறித்தும், சாலொமோன் கர்த்தராலும், இராஜாவினாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர் என்பதையும் குறித்து நாத்தான் தீர்க்கதரிசி அறிந்திருந்தார். இளவரசனான சாலொமோன் செய்து முடிக்க வேண்டிய கடமைகளுக்கு அவரை பயிற்றுவிப்பதில் தீர்க்கதரிசி எவ்வளவாக நேர்மையுடன் செய்திருப்பார் என்பதை நாம் கற்பனை செய்து கொள்ளலாம்.

அதோனியாவைக் குறித்து வாசிக்கையில், அவனுடைய தகப்பன்: நீ இப்படிச் செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்து கொள்ளவில்லை'' என்று பார்க்கின்றோம் (1 இராஜா 1:6). அதோனியா சீரழிக்கப்பட்ட பிள்ளையாக இருந்தார். மேலும் தனது தகப்பன், தன்னை நாத்தான் தீர்க்கதரிசி போன்ற மிகுந்த மத ஈடுபாடுள்ள, ஆசிரியரின் பாதுகாப்பின் கீழ் விடாததன் நிமித்தம் மகிழ்ச்சியடைந்திருப்பார். சில இன்பங்களை அனுபவிக்க முடியாதபடிக்கு சாலொமோன் விசேஷமாக தடை செய்யப்பட்டுள்ளார் என்று அதோனியா சிந்தித்திருப்பதில் ஐயமில்லை. சாலொமோனுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது என்றும் அதோனியா சிந்தித்திருப்பார். ஆனால் சாலொமோனோ இம்மாதிரியான அனுபவங்களுக்காக மிகவும் சந்தோஷம் அடைந்திருப்பார். இளந்தண்டுகள் வளைக்கப்பட வேண்டுமெனில், அவைகள் ஆரம்பத்திலேயே கையாளப்பட வேண்டும். இப்பாடத்தை அனைத்து பெற்றோருக்கும், காவலாளர்களுக்கும் முன்வைக்கின்றோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது கவனத்தையும், அன்பான மதக்கட்டுப்பாட்டையும் செலுத்த வேண்டும். ஆரம்ப காலங்களில் கவனம் செலுத்தாமல், பயிற்சி அளிக்காமல், வீணடித்து பின்னர் நற்பலன்களை எதிர்பார்ப்பது தவறாகும்.

### "நாம் அரியணைக்காக பயிற்றுவிக்கப்படுகின்றோம்"

நமது பிதா, மாபெரும் இராஜா ஆவார். அவர் கிறிஸ்து தனது சிங்காசனத்தில் உட்காருவார் என்று வாக்களித்துள்ளார். மேலும், நாம் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்துவின் அங்கங்களாகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். நாமும் இந்த முக்கியமான ஸ்தானத்திற்கு வர பயிற்றுவிக்கப்பட வேண்டும், என்று கூறும் போது ஆச்சரியப்படுவோமோ? இந்த உன்னதமான ஸ்தானத்திற்கு

அழைக்கப்படாதவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஒழுக்கத்தைக் காட்டிலும், அழைக்கப்பட்டுள்ள நம் மீது அதிக ஒழுக்க முறைகள் விதிக்கப்படுவதினால் வியப்படையலாமோ! ஆகையால் யாரெல்லாம் அவருக்கு இசைவாக இருக்கின்றார்களோ அவர்கள் இராஜ்யத்தின் கனத்தை பெறுவதற்கு பாடங்களைக் கற்றுக் கொண்டு ஆயத்தங்கள் செய்யவும் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் நிழலான அப்சலோம், மற்றும் அதோனியாவின் விருந்துகளிலும், தோழமையிலிருந்தும் தவிர்க்கப்பட்டதைக் குறித்து வியப்படைய வேண்டாம். தலை முதல் சரீரத்தின் கடைசி அங்கம் வரைக்கும் தீமையாய் பேசப்படுவார்கள், அவமதிக்கப்படுவார்கள், ஆனால் ஒருவேளை தெய்வீக தயவு இவர்களுக்கு இருக்குமாயின், இவர்கள் அபிஷேகிக்கப்படுவதோடு, சிங்காசனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். அன்பான சகோதர, சகோதரிகளே உங்கள் விடுதலையின் வேளை சமீபமாய் இருப்பதை உணர்ந்து பொறுமையாய் இருங்கள். 1 பேதுரு 5:6–ஆம் வசனம் வாசிக்கவும்.

### “நமது ஆதார வசனம்”

“நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி.” வெளிப்புறமான ஊழியங்கள் தேவனுக்குப் போதுமானவைகள் அல்ல. “ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்பவர்களையே” கர்த்தர் தேடுகின்றார். அநேக வருடங்களின் படிப்பிற்குப் பிறகே சாலொமோன் தனது உன்னதமான பணியை ஆரம்பித்தார், தேவனுடைய தயவையும் பெற்றுக் கொண்டார். தீர்க்கதரிசியின் வழிநடத்துதலினாலும், தனது தகப்பனின் ஆலோசனைகளினாலும், எருசலேமில் ஸ்தாபிக்கப் போகிற மாபெரும் ஆலயத்தைக் குறித்ததான தனது தகப்பனுடைய திட்டத்தின் ஆவிக்குள் சாலொமோனினால் ஈடுபட முடிந்தது. இவ்வாலயத்தைக் கட்டுவதன் மூலம் மதம், அதாவது உண்மையான மதமும், தேவனுடைய ஆராதனையும், இஸ்ரயேலர்கள் முன் முக்கியமான ஸ்தானத்தில் கொண்டு நிறுத்தப்படும். தேவனையும், அவருக்குரிய ஆராதனையையும், மற்ற எல்லா விஷயங்களுக்கு முன்பாக இஸ்ரயேலர்கள் வைக்கும் போது, முழு இஸ்ரயேல் தேசமும் விசேஷமாக ஆசீர்வதிக்கப்படும் என்பதை உணரச் செய்த தனது தகப்பனிடத்தில் இருந்த ஆவியை, சாலொமோனும் பெற்றுக் கொண்டார். ஆலயத்தைக் கட்டுவதற்கும், ஆலயத்தின் ஊழியத்திற்கென அர்ப்பணிப்பதற்கு, தனது தகப்பனால் சேர்த்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் ஆஸ்திகள் குறித்து சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவைகளில், சாலொமோன் தனது அறிவையும், தனது நோக்கங்களையும் செயல்முறைப்படுத்தும் அதிகமான வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டார்; மேலும் இது அவரை கர்த்தரிடம் அதிகமாய்க் கிட்டிச் சேரச் செய்து, தனது தகப்பனுக்குப் பின் எவ்வளவு சிறப்பாக கர்த்தருக்கும், இஸ்ரயேல் ஜனங்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்தது.

ஆகவே, நாம் அன்பான பிள்ளைகளாக, முழுமையான இருதயங்களோடும், வாஞ்சையான மனதோடும் தேவனை நாடித் தேடுவோமாகில், எதிர்காலத்தைக் குறித்ததான தமது மாபெரும் திட்டங்களையும், நோக்கங்களையும் நமக்கு வெளிப்படுத்துவார் என்று நாம் பார்க்கின்றோம். ஆலயம் வேண்டுவதற்கான தமது நோக்கத்தை நமக்கு அறிவித்துள்ளார், அது எப்படி, எப்பொழுது கட்டப்படும் என்றும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதே அதன் நோக்கம் என்றும் நமக்கு அறிவித்துள்ளார். நம்முடைய பாதையின் ஒவ்வொரு அடியிலும், தேவனுடைய யுகங்களைக் குறித்ததான மாபெரும் திட்டத்திற்கு நாம் இசைவாய் அதிகமதிகமாய் காணப்படும் போது, அந்த ஆலயம் மற்றும் இராஜ்யத்தில் நாம் பங்கடையத்தக்கதாக நம்மை ஆயத்தப்படுத்தி, அதிகமதிகமாய் நம்மை வளரச் செய்யும்.

### “சாலொமோனின் ஞானமான தன்னடக்கம்”

சாலொமோன், தனது சகோதரனாகிய அதோனியாவிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் சம்பவத்தோடு நம்முடைய பாடம் முடிவடைகின்றது. அந்த காலங்களில் உள்ள இராஜ்யங்களில் ஒரு இராஜா பதவி ஏற்கும்போது, தனக்கு எதிராக செயல்பட இருப்பவர்களை மரணத்திற்குள்ளாக்குவது வழக்கமாயிருந்தது. அதோனியா, தனது ஜீவன் ஆபத்தில் உள்ளது என்று எண்ணி தான் சாலொமோனுக்கு எதிராக செயல்பட்டதின் நிமித்தம், இப்பொழுது தனக்கு இராஜா தீங்கு செய்ய மாட்டார் என்ற உறுதி தனக்கு

கிடைக்கும் வரையிலும், பாதுகாப்புக்காக ஆசாரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு நின்றார். அதோனியாவுக்கு சாலொமோன் கொடுத்த விடையும், அவர் நடந்து கொண்ட விதமும், ஞானமாகவும், அன்பு நிறைந்ததாகவும் இருந்தது. 1 இராஜா 1:52,53–ஆம் வசனங்களை வாசிக்கவும். அதாவது எவ்விதமான தண்டனையும் கொடுக்கப்படவில்லை. தயவு காண்பிப்பது அருமையான விஷயமாகும். மேலும் அது பரலோக இராஜ்யத்திற்குரிய பிள்ளைகளிடத்தில் இன்றியமையாததாய் காணப்பட வேண்டிய பண்பாகும். லூக்கா 6:35–ஆம் வசனம் வாசிக்கவும்.

இறுதியில் அனைத்து தீமைகளும் அழிக்கப்படும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கின்றது. மனுக்குலத்தின் குடும்பத்தை அறியாமையும், பலவீனங்களுமே பிடித்து வைத்திருப்பதினால், தற்காலத்தில் தேவன் தமது சத்துருக்கள் மீதும், நீதியின் சத்துருக்கள் மீதும் அன்பையும், இரக்கத்தையும் காட்டுகின்றார். இந்த தேவனுடைய வார்த்தைகளில் இருக்கும் பரந்த கண்ணோட்டம் நமக்கு கிடைக்குமாயின், நம்முடைய சத்துருக்களும் நம்மைப் போன்று பலவீனம், குறைவுகள் மற்றும் அறியாமையினால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர் என்று உணர்ந்து, எல்லார் மேலும், நம்முடைய சத்துருக்கள் மேலும் அன்பு செலுத்த முடியும். இந்த பலவீனங்களை தேவன் இறுதியில் நமது மீட்பரின் புண்ணியத்தினால் மாற்றிப் போடுவார். தேவன் மனுஷர்கள் சுதந்தரித்துக் கொண்ட கறைகளைஃகுறைகளை தயவோடு பார்க்கிறது போல, அவருடைய ஆவியை உடையவர்களும், அவருடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகிறவர்களுமாகிய நாமும் தயவோடு நோக்குவோமாக.

**ஆமென்!**

.

-----------------------------------

**--1525--**

# *விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள்*

Desire and Choose,Then seek and Attain

1 இராஜாக்கள் 3 : 4 முதல் 15

‘‘கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.’’ நீதி 9 : 10

இராஜாவாகிய சாலொமோன் பயபக்தியுள்ள இருதயத்துடன் தனது ஆளுகையைத் தொடங்கினார் என்பது அவர் கிபியோனில் செலுத்தின பலியில் வெளிப்படுகின்றது. நம்முடைய ஆதார வசனம், அவருடைய வாழ்க்கையில் உண்மையாய் இருந்தது, மேலும் இதுவே அவர் கர்த்தரிடத்திலிருந்து தொடர்ந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக, அவருடைய இருதயத்தை ஆயத்தம் பண்ணிற்று. இஸ்ரயேலரின் இராஜ அதிகாரத்தைப் பேராசையுடன், துரோகமான விதத்தில் எடுத்துக் கொள்ள நாடின சாலொமோனின் இரண்டு சகோதரர்களிடமிருந்து அவருடைய மனப்பான்மை மிகவும் வேறுபட்டதாகும். இந்த வி'யத்தில் சாலொமோன் கர்த்தருக்கும், அவருடைய தெய்வீக நியமனத்துக்கும் சரியான மதிப்புக் கொடுத்தார். இந்த வி'யத்தில் சாலொமோன் நமது கர்த்தர் இயேசுவுக்கும், அவருடைய சரீரமாகிய சபைக்கும் அடையாளமாக விளங்குகின்றார். மேலும் அப்சலோமின் நடத்தை சாத்தானுக்கும், அவனை போன்று பேராசையுடன், கீழ்படியாமையின் பாதையில் கடந்து செல்பவர்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் பேரில் பயபக்தியும் கொண்டு, தன்னை ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாக இஸ்ரயேலின் உண்மையான இராஜாவாக அறிவித்து, தன்னை இஸ்ரயேலின் இராஜாவாக அறிக்கைப் பண்ணும் விதமாக பலிகள் செலுத்தின சாலொமோனாகிய வாலிப / இளம் இராஜா, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சரியான இருதய நிலையில் காணப்பட்டார். சாலொமோன் நித்திரை பண்ணினார் – சொப்பனம் கண்டார். சாலொமோனுடைய இருதயத்தில் காணப்பட்ட பக்தியின் நிமித்தமாக சொப்பனம் தோன்றி, கர்த்தர் பதில் கொடுத்தாரோ அல்லது கர்த்தர் அவனுடைய கற்றுக் கொள்கிற மனதைக் கண்டு, சாலொமோனின் நன்னடத்தைத் தொடர்பான பாடம் கொடுப்பதற்குச் சொப்பனம் கொடுத்தாரோ தெரியவில்லை, என்றாலும் அந்த இளம் இராஜா (சாலொமோன்) மிக அழகான / அருமையான சொப்பனம் கண்டார். இச்சொப்பனம்காலொமோனுடைய இருதய மனப்பான்மையின் வெளிப்படுத்துதலாக இருந்தது.

சாலொமோன், தான் சர்வவல்லமையுள்ளவரின் பிரசன்னத்தில் இருப்பதாக சொப்பனம் கண்டார், மேலும் சர்வவல்லமையுள்ளவர், அவர் விரும்புவதை கிருபையுடன் கேட்டார். சாலொமோனுடைய பதில் மிகவும் தாழ்மையுடன் காணப்பட்டது. இது சாலொமோன் தான் தெய்வீக தயவை பெற்றுக் கொள்வதற்கு, தன்னுடைய தகப்பனாகிய தாவீது இராஜாவாக வருடக் கணக்காக ஆசீர்வதித்து வந்த தெய்வீக இரக்கம் இன்னும் தொடர்வதினாலேயே காரணம் என்று உணர்ந்திருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. 1 இராஜா 3 : 6 – ம் வசனம் வாசிக்கவும். தாழ்மை எத்துனை அழகான அலங்காரமாக இருக்கின்றது. சிலர் மாத்திரம் இந்தக் குணலட்சணததைப் பெற்றிருக்கின்றார்கள் என்ற உண்மையானது, இதை உயர்வானதாகக் கருதச் செய்கின்றது. தாழ்மை என்பது உணவில் சேர்க்கப்படும் உப்பு போன்றதாகும். இப்பண்பு, நாம் பெற்றிருக்கும் ஒவ்வொரு கனிகள் மற்றும் தாலந்துகளுடன் கூட ஆசீர்வாதத்தைக சேர்கின்றது.

‘‘நானோவென்றால் சிறுபிள்ளையாயிருக்கிறேன்’’

சாலொமோன் கர்வம் கொண்டவர் என்றோ, பெருமை உடையவர் என்றோ நாம் சுட்டிக் காட்டுவதற்கு எதுவும் இல்லை. சாலொமோன் வியக்கத்தக்க மனு'னாக, திறளான ஞானத்தோடும்,

கனத்தோடும், ஆஸ்தியோடும் காணப்பட்டிருந்தாலும், இவைகளில் ஒன்றும் அவருடைய குழந்தை போன்றதான எளிமை தன்மையைக் கொஞ்சமும் பாதிக்கவில்லை. 1 இராஜா 3 : 7 முதல் 9 வரையிலான வசனப் பகுதிகளை வாசிக்கவும்.

இந்த ஜெபத்தில் காணப்படும் எளிமை மிகவும் அழகாக இருக்கினறது. சாலொமோன் தன்னிடத்தில் உள்ள குறைவையும், தனக்கு உதவி தேவை என்பதையும், தேவனுடைய மகத்துவம் மற்றும் உதவி செய்யும் வல்லமையையும் உணர்ந்திருந்தார். மேலும் சாலொமோன, ஜனங்கள் தன்னுடையவர்கள் அல்ல என்றும், அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்றும், தான் உண்மையில் இராஜா இல்லை என்றும், தெய்வீக நிர்ணயங்களின்படி ஜனங்களை ஆளுவதற்கு அல்லது நியாயம் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள தேவனுடைய வேலைக்காரன் என்றும் உணர்ந்திருந்தார். சாலொமோன் தன்னுடைய பூரணமற்ற தீர்ப்பில் நன்மை தீமையைப் போலும், தீமை நன்மையைப் போலும் தோன்றும் என்று உணர்ந்து, ஞானத்திற்காக விண்ணப்பம் பண்ணினார். சாலொமோன் நான் உலகத்திலேயே மிகுந்த ஞானமுள்ள மனு'ன் என்று புகழ்ச்சிப் பெறுவதற்காகவோ, தன்னுடைய சுயநலத்திற்காகவோ அல்லது பேராசைக்காகவோ ஞானத்தைக் கேட்காமல், தான் தேவனுடைய வேலைக்காரனாக உண்மையுடனும், ஞானத்துடனும் தனது வேலையின் கடமைகளை நிறைவேற்றி, தேவனுக்குக் கனம் சேர்த்து, தன்னுடைய உடன் இஸ்ரயேலர்களை ஆசீர்வதிப்பதற்காகவே ஞானத்தைக் கேட்டார். இந்றைய காலத்து சகல நியாயாதிபதிகளும், ஆளுகிறவர்களும் தங்களைக் குறித்து சாலொமோன் போன்று தாழ்மையாய் எண்ணி, தங்களுடைய பணியில் உள்ள கடமை மற்றும் பொறுப்புக்களை சாலொமோன் போன்று உணர்ந்து, தங்களை வழிநடத்துவதிலும் தங்களை பயன்படுத்துவதிலும், தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட பணியை ஆசீர்வதிப்பதற்கு, தேவனுடைய வல்லமையின் மேல் குழந்தை போன்ற விசுவாசம் கொண்டிருந்தால் எப்படியாய்! மேலும் இவர்கள் சகல ஜனங்களை தேவனுடைய ஜனங்கள் என்று உணர்ந்து தாங்கள் தேவனுக்கு, தாங்களால் முடிந்த அளவுக்கும், அறிவுக்கும் தகுந்தாற்போல், கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று உணர்வார்களானால் எப்படியாய் இருக்கும்.

''ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாய் இருந்தது''

சாலொமோன் தெரிந்து கொண்ட வி'யத்தைக் குறித்து தேவன் பிரியம் கொண்டதாக கொடுக்கப்பட்டுள்ள பதிவுகளில் நமக்கு ஆச்சரியமில்லை ஏனெனில், சாலொமோன் நீண்ட ஆயுசு நாட்களையோ, ஐஸ்வர்யங்களையோ, அவருடைய சத்துருக்களின் ஜீவனையோ கேட்காமல், இவைகள் எல்லாவற்றையும் விட மிகவும் சிறந்ததான ஞானத்தையே கேட்டார். பின்னர் மிகவும் இரக்கமுள்ளவரும், தாரான மனமுள்ளவருமான தேவன், சாலொமோனை நோக்கி, அவர் கேட்ட ஞானம் அவருக்கு அருளப்பட்டதாகவும், அதனோடு கூட சாலொமோனுடைய நாட்களில் வாழ்ந்த எந்த மனு'னைக் காட்டிலும் அதிகமான ஐஸ்வர்யங்களையும் கனத்தையும் கொடுத்தார். மேலும் சாலொமோன் இப்படியாக தொடர்ந்து அவருடைய வழிகளில் காணப்பட்டால், சாலொமோனுடைய ஆயுசு நாட்கள் நீடிக்கும் என்றும், அவருடைய இயற்கையான வலிமையைக் காட்டிலும் அதிகம் கொடுப்பார் என்றும் தேவன் வாக்களித்தார்.

சாலொமோன் விழித்தெழுந்து, அது சொப்பனம் என்று அறிந்த மாத்திரத்தில், நிச்சயம் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும் என்றாலும், அந்த சொப்பனம் மூலம், கர்த்தருக்கு மிகவும் பிரியமான மனநிலையை, இருதய நிலையை சாலொமோனால் தெளிவாக உணர்ந்து கொள்ள செய்தது. சில காலங்கள்

சாலொமோன் இம்மாதிரியான தாழ்மையான இருதயத்தையும், தேவனிடத்தில் உண்மையும் கொண்டிருந்தார் என்பதை நாம் நினைவில் வைக்கக்கடவோம் (இத்தன்மையை சில காலங்கள் தக்க வைத்தார்). சாலொமோன் எருசலேமுக்குத் திரும்பி, ஆசாரியர்கள் வாயிலாக கர்த்தருக்கு அநேக காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்தினார். சமாதான பலிகளில் உள்ள மாம்சமானது, சாலொமோனின் ஊழியர்களுக்கு, அதாவது இராஜாவின் வீட்டார் உட்பட அவர்களுக்கு விருந்தாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்விதமாக சாலொமோனின் ஆளுகை பயபக்தியுடனும், ஞானத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதமாக சாலொமோன், தேவனுடைய பிரதிநிதியாக இருந்து ஆளுகை செய்கிறதற்கும், ஊழியம் புரிவதற்கும், தனிப்பட்ட தன்னுடைய வளர்ச்சிக்கும் அஸ்திபாரம் போடப்பட்டது.

‘‘இக்கதையிலிருந்து, நம்முடைய நாட்களுக்கு உரிய பாடம்’’

‘‘ வாய்ப்பு’’ என்ற வார்த்தையின் முக்கியத்துவம், ‘‘வாசலருகே வந்து நிற்பதாகும்’’. சாலொமோனுடைய வாசல் அருகே எத்துனை மாபெரும் வாய்ப்புகள் வந்தது என்றும், அவைகளை அவர் எங்ஙனம் ஏற்றுக் கொண்டார் என்றும் நாம் பார்த்துள்ளோம். மேலும், வாய்ப்புகள் சாலொமோனுடைய இரண்டு சகோதரர்களின் வாசல் அருகேயும் கூட வந்து நின்றது, அவர்களொ அவைகளைப் பாவத்திற்கும், துரோகத்திற்கும் பயன்படுத்தினார்கள். நன்மை செய்வதற்கான வாய்ப்புகளும் நம் அனைவருக்கும் ஒவ்வொரு காலக்கட்டங்களில் வரும், ஆனால் எந்த வாய்ப்புகளை நாம் பயன்படுத்தப் போகின்றோம் என்பதை நாம் தான் தீர்மானிக்கின்றோம். ஆனால் வாய்ப்பு வருவதற்கு முன்பு, விருப்பம்ஃவாஞ்சை வருகின்றது. விருப்பம் தூய்மையாய் இல்லாத பட்சத்தில், தீமை செய்வதற்கான வாய்ப்புகள் கூடி வரும். ஒருவேளை விருப்பங்கள் தூய்மையானதாய் இருக்கும் பட்சத்தில், இதற்கு இசைவாக உண்மையும், நேர்மையுமான வாய்ப்புகள் கூடி வரும். நம்முடைய இருதயத்தின் விருப்பங்கள், ஒவ்வொரு வி'யத்திலும் நீதியானதாக் காணப்பட வேண்டும். மேலும் நன்மையான வாய்ப்புகள் மாத்திரமே வர வேண்டும் என்ற நோக்கத்திற்கு அனைத்து இழிவான விருப்பங்களும் கடுமையாக தள்ளிவைக்கப்பட வேண்டும் என்ற வி'யம் நம் மனங்களில் நன்கு பதிந்திருக்க வேண்டும். ஆனால் விருப்பமும், வாய்ப்பும் மாத்திரம் இருந்தால் போதாது. அநேகருக்கு இவ்விரண்டும் இருந்தும், ஒன்றும் கிடைக்காமலும் இருந்துள்ளது. நல்ல விருப்பங்களை விருத்தி செய்து, வளர்க்கும் போது, போக, போக நற்வாய்ப்புகள் நமக்கு முன்பாக வந்து நிற்கும், பின்னர், அதை பிடித்துக் கொள்வதற்கான பொறுப்பு வருகின்றது. அதாவது, தீர்மானம் எடுக்க வேண்டும். அநேகர் தீர்மானம் எடுக்கத் தவறி விடுகின்றனர்.

இவ்வி'யத்தில் நமது ஆலோசனை என்னவெனில்: ஒவ்வொருவரும் நல்ல விருப்பங்களைக் கொண்டிருந்து, தீமையானவைகளை எதிர்க்க வேண்டும், மேலும் இந்த நீதியான விருப்பங்களுக்கு இசைவாய் உள்ள வாய்ப்புகளை நாட வேண்டும். மேலும் வாய்ப்புகளை தங்கள் முழு பலத்துடன் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிடக் கூடாது. வெகு சிலர் மிகவும் கீழான சூழ்நிலைகளில் பிறந்து, சாதகமற்ற சூழ்நிலைகளில் வளர்ந்துள்ளதால், நல்ல கோட்பாடுகளில் முழுமையாய் அற்றவர்களாககோ அல்லது நல்லது மற்றும் தீமையான வி'யங்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள சிரமப்படுகிறவர்களாக காணப்படுகின்றனர். உண்மைதான் பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தினால் வனயப்பட்டு, இதே பாவ நிலையில் உள்ள மற்றவர்களால் சூழப்பட்ட நிலையில் இருக்கும்

போது, எவருக்கும் இழிவான எண்ணங்கள் வரலாம். இழிவான எண்ணங்களை எதிர்த்து, உயரிய, நேர்மையான எண்ணங்களை மனதில் கொண்டிருப்பது என்பது அவரவர் ஏறெடுக்கும் தங்களின் முயற்சியில் தான் உள்ளது. ஆகவே தான் உங்கள் தலையின் மேல் காகங்கள் பறப்பதை நீங்கள் தடுக்க முடியாது, ஆயினும், உங்கள் தலையின் மேல் கூடு கட்டுவதை நீங்கள் தடுத்து விடலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

தீமையான எண்ணங்களும், விழுந்துபோன சுபாவத்திற்கும் இடையே ஒற்றுமைஃஈர்ப்புஃஉறவு இருக்கும் பட்சத்தில், தீமையான எண்ணங்களை நமது மனம் உடனடியாக எதிர்த்து விடுவதில்லை. ஆகவே காகம் போன்ற எண்ணங்களோடு மாத்திரம் நமக்கு யுத்தம் இராமல், காகத்தின் தோழமையை விரும்பும் நமக்குள்ளாக காணப்படும் தவறான பண்புகளையும் எதிர்த்து, நாம் யுத்தம் பண்ண வேண்டும். ஒரு குழந்தையின் கை குறுகிய வாய் பகுதியை உடைய குடுமையில் (பூச்சாடியில்) மாட்டிவிட்டது. ஆவன் உதவிக்காக நாடின போது, அவன் தகப்பன், குடுவைக்குள் இருக்கும் உன் கை விரல்களை இறுக்காமல், தளர்த்தி விரி என்று ஆலோசனை வழங்கினார். குழந்தையானவன், ''சரி ஆனால் நான் அப்படிசெய்தால், என் கையில் இருக்கும் நாணயம் விழுந்துவிடுமே'' என்று பதில் அளித்தான். ஆகவே பாவத்தின் பிடியிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கு, ''தற்காலிகமான பாவ சந்தோ'ங்களை'', நம்முடைய விடுதலைக்கான விலையாக கொடுத்து சந்தோ'ங்களை இழந்து விடுவதற்கு நாம் விரும்பி செயல்பட வேண்டும்.

**கிறிஸ்து நமக்குள்ளாக இருப்பதன் அவசியம்:**

நமது கர்த்தர் ஓர் உவமையைக் கூறியுள்ளார். அதாவது தீய ஆவியினால் பிடிக்கப்பட்ட மனு'ன் ஒருவன், தீய ஆவியைத் தன்னிடத்திலிருந்து அவன் விரட்டின போது, அவனுடைய இருதயம் சுத்தம் செய்யப்பட்டு, அழகூட்டப்பட்டது, ஆனால் வெறுமையாய் இருந்தது. போகப் போக அந்தத் தீய ஆவியானது தன்னிலும் பொல்லாத ஏழு ஆவிகளை தன்னோடுக்கூடக் கூட்டிக்கொண்டு வந்து, அந்த மனு'னை மேற்கொண்டது. அந்த மனு'னுடைய பிந்தைய நிலை, முந்தைய நிலையைக் காட்டிலும் மிகவும் கேடாக இருந்தது. இதிலிருந்து ஒரு விலையேறப்பெற்ற பாடத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இது தற்கால தீமையான சூழ்நிலைகளின் கீழ் வாழும் நாம் நம்மை நாமே காத்துக்கொள்ள முடியாது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் நாம் ஒருவேளை பாவத்தின் அனைத்து வல்லமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், ஒருவேளை கடந்த கால பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு, நாம் நீதிமானக்கப்பட்டிருந்தாலும் நாம் நம்மை காத்துக் கொள்ள முடியவில்லை. உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவன் எண்ணற்ற விதத்தில் நம்முடைய நல்ல தீர்மானங்களை, பரிசுத்தம் மற்றும் நீதிக்கான நம்முடைய விருப்பங்களை நிச்சயமாக ஜெயம் கொண்டுவிடுகின்றது. நம்முடைய இருதயங்களில் குடியிருக்க ஒருவர் வேண்டும். அதாவது தெய்வீகமானவர் வேண்டும். ஒருவேளை நம்முடைய இருதயங்களில் கிறிஸ்து குடிக்கொண்டிருந்தால், நம்முடைய சித்தம் அனைத்தும் அவரிடம் முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பட்டால், அவர் நம்முடைய இருதயங்களைக் காத்துக்கொள்வதற்கும், பாதுகாப்பதற்கும் வல்லவராக இருக்கின்றார். இப்படிச் செய்கிறவர்களைக் குறித்து, அவர் நானும் என் பிதாவும் அவர்களிடத்தில் வந்து அவர்களிடத்தல் குடியிருப்போம் என்றார். ஓ! எத்துனை பாதுகாப்பு! நம்முடைய சித்தமேஃவிருப்பமே, இருதயத்தின் வாயில் காவல்காரன் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். மேலும் கர்த்தரின் பிரசன்னத்தைஃகுடியிருப்பை நாம் விரும்பாத வரையிலும், கர்த்தரின் பிரசன்னம் நம்மோடு இருப்பதில்லை. மேலும் நாம் ஒருவேளை நம்முடைய

இருதயத்திற்குள் தீய எண்ணங்களையும், தீய கற்பனைகளையும் அனுமதிப்போமேயானால், கர்த்தர் நமக்குச் செவிசாய்ப்பதில்லை. அவர் நம்மிடத்தில் குடியிருப்பதில்லை, மாறாக நம்மில் அதிகமதிகமான தீமையின் வி'யங்கள் புகுந்து, நம்மை ஆட்கொள்ளத்தக்கதாக, இடம் விட்டு விலகி போய் விடுவார். (காலி செய்து போய்விடுவர்).

ஆகையால் தான் ‘‘தேவனுடைய அன்பில் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.’’ என்ற எச்சரிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தீமையான பாவங்கள் நமக்குள் ஃநம்முடைய இருதயத்திற்குள் குடிக்கொண்டிருக்கவும், நம்முடைய சித்தத்திற்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கும் முயற்சிக்கின்றது. ஆனால் இவைகளால் தேவனுடைய நீதி மற்றும் பிரமாணங்கள் இப்படியாக நம்மிடத்தில் போராடுவதில்லை. ஆகவே தான சங்கீதக்காரன், ‘‘உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்’’ என்று ஜெபிப்பது போல நாமும் ஜெபிக்க வேண்டும். மேலும் எபேசியர் 4 : 30 ம் வசனத்தில் அப்போஸ்தலர் கொடுக்கும் எச்சரிப்கையும் நாம் நினைவுகூறக்கடவோம்.

இவைகள் அனைத்தையும் நாம் அறிந்து, இவைகளின் படி நடப்போமானால் நாம் மகிழ்ச்சியாய் இருப்போம். நல்ல விருப்பங்களின் முக்கிய தேவை குறித்தும், தீமையான விருப்பங்களைப் புறக்கணிப்பதின் முக்கிய தேவை குறித்தும் நாம் உணர்ந்திருப்போமானால் நாம் மகிழ்ச்சியாய் இருப்போம். தேவனுடைய கிருபையானது அவருக்கு திருப்பி செய்வதற்கான வாய்ப்பாக நம்மிடத்தில் வரும் போது, நம்மை விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் விசுவாசத்தினால் நீதிமாக்கியவரின் கரங்களிலிருந்து அதை நாம் ஏற்றுக்கொள்வது மகிழ்ச்சியாய் இருக்கும். நாம் பெருக்கப்பட்டு, ஜோடிக்கப்பட்டு, எதிராளியானவனின் வல்லமையினின்று விடுவிக்கப்பட்ட நிலையில், நாம் உடனடியாக நமக்கு அனைத்து ஆசிர்வாதங்களைக் கொடுத்தவருக்குக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து, அவருடனான உறவை நாடுவோமானால் மகிழ்ச்சியாய் இருப்போம்.

நம்முடைய இருதயத்தின் திறவுகோல்களை ஏற்றுக்கொள்ள, அதாவது நம்முடைய சித்தங்களை ஏற்றுக்கொள்ள அவருக்குள்ள விருப்பங்களை அறிந்து, நாம் அதை முழுமையாகவும், என்றென்றுமாகவும் அவருக்கு ஒப்புக்கொடுக்கும் போது மகிழ்ச்சியாய் இருப்போம். நாம் இதே விதமான இருதயத்தின் பரிசுத்தத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கர்த்தருடைய சித்தத்திற்கு நாடுபோமாகில், மற்றும் நம்முடைய இருதயத்தில் ஒவ்வொரு மூலைகளிலும் நிரப்பிக்கொள்ளத்தக்கதாக கர்த்தருடைய ஆவியை அதிகமதிகமாக அனுமதிப்போமாகில், மற்றும் நமது கர்த்தருடைய ஆவியாகிய, பரிசுத்த ஆவியினால் முற்றும் முழுவதுமாக நிரப்பப்படத் தக்கதாக பாவத்தையும், உலகத்தின் இலட்சியங்களையும் நாம் நம்முடைய இருதயத்திலிருந்து வெளியேற்றுவோமாகில் நாம் மகிழ்ச்சியாய் இருப்போம். இந்த பரலோக பேரின்பத்தை கெடுத்துப்போடாதபடிக்கு அல்லது இந்தப் பரிசுத்தமான நெருப்பை அணைத்துப் போடாதப்படிக்கு அல்லது நமது போதகரை துக்கப்படுத்தாதபடிக்கு நாம் தொடர்ந்து சாந்தத்தையும், தயவையும், சமாதானத்தையும், அன்பையும், பொறுமையையும், நீடிய பொறுமையையும், சகோதர ஸ்நேகத்தையும், அன்பையும் வெளிப்படுத்தினால் மகிழ்ச்சியாய் இருப்போம். நம்மிடத்திலான அவருடைய புன்முறுவலை நாம் இழப்பது என்பது சொல்லமுடியாதஃவிவரிக்க முடியாத துன்பமாகும்! கர்த்தருடைய சந்தோ'ம் நம்முடைய இருதயங்களில் தொடர்ந்து காணப்பட்டு, நம்முடைய ஜீவியங்களை ஆளுகைச் செய்து, பரலோக பட்டணம் மற்றும் அதன் மகிமைகளை நோக்கின நம்முடைய பிரயாணத்தில் நம்மை சந்தோ'ிக்கச் செய்யும் போது,

**--1530--**

நாம் மகிழ்ச்சியாய் இருப்போம். நம்முடைய மீட்பரின் நாமத்தை மகிமைப்படுத்துவதற்கும், அவருடைய ஜனங்களை ஆசிர்வதிப்பதற்கும், தவிக்கும் சிரு'டிகளை ஆசிர்வதிப்பதற்குமாக கர்த்தருடைய ஆவியானது நம்முடைய கரங்கள், பாதங்கள், நாவுகள் மற்றும் ஒவ்வொரு ஆற்றல்கள் மூலம் செயல்படும் போது மகிழ்ச்சியாய் இருப்போம்.

**கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்கள்:**

இராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் உள்ள அருமையான உடன் அங்கங்களே, நாம் அனைவரும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் மாபெரும் இராஜாவின் அபி'ேகத்தை ஏற்கனவே பெற்றிருக்கின்றோம். நாம் எதிர்காலத்திற்குரிய இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் நிலைக்கு கருவாக காணப்படுகின்றோம். நாம் ஒரு மாபெரும் வேலையின் நுழைவாயில் காணப்படுகின்றோம். இராஜ்யத்தில் நாம் கர்த்தரோடு உடன் வேலையாட்களாக இருக்கப்போகின்றோம். அதாவது பூமியின் குடிகள் மீது தெய்வீக ஆசிர்வாதங்களை அருளுவதற்கு அவருடன் உடன் வேலையாட்களாக இருக்கப்போகின்றோம். நம்முடைய நிலையும், சாலொமோனைப் போன்றே காணப்படுகின்றது. நாமும் அவரை போன்று சிலகாலம் கர்த்தருக்குப் பலிகள் செலுத்தத்தக்கதாக, வேலையிலிருந்து சற்று வேறு திசையில் நிறுத்தப்படுகின்றோம். ஒவ்வொருவரும் செலுத்துவதற்குப் பலிகளைப் பெற்றிருக்கின்றனர். அதாவது தன்னுடைய நீதிமான் நிலை, தன்னுடைய சித்தம், தன்னுடைய நேரம், தன்னுடைய செல்வாக்கு, தன்னுடைய தாலந்தை கொண்டிருக்கின்றனர். இப்பொழுது நமக்கு சொப்பணம் வருவதற்கான நேரம் வந்துள்ளது. கர்த்தர் நமக்குத் தோன்றி தம்முடைய வார்த்தைகளின் மூலம் நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களுக்கு முன்பாக நம்மை வெளிப்படுத்துகின்றார். நாம் தெரிந்துகொள்வதற்கு நம்மை வரவேற்கின்றார். நம்மிடத்தில் எவ்விதமான ஆவி இருக்கின்றது என்று நாம் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நாளுக்கு நாள் நாம் ஞானமான முறையில் அல்லது ஞானமற்ற முறையில் தெரிந்துகொள்கின்றோம். மேலும் நாளுக்கு நாள், யார் யார் சாலொமோன் போன்று ஞானமான விதத்தில் தெரிந்தெடுக்கின்றார்கள் என்று கவனித்து கொண்டிருக்கின்றார்.

நம்மை பாதுகாக்க நாடுவதன் மூலம் நீண்ட ஆயுசு நாட்களை நாம் கேட்கின்றோம். நம்முடைய மேலான நேரத்தையும், தாலந்துகளையும் செல்வங்களை குவிக்கும் பயன்படுத்துவதன் மூலம் செல்வத்தைக் கேட்கின்றோமா? அல்லது பூமிக்குரிய வி'யங்களில் ஜெயம்ஃவெற்றி கேட்கின்றோமா? நாம் இவைகளில் எவற்றையாகிலும் கேட்டால், நாம் நல்ல பங்கை தெரிந்துகொள்ளவில்லை என்றாகிவிடும், மேலும் நமது தெரிந்துகொள்ளுதல், கர்த்தருக்குப் பிரியமாய் இல்லை என்பதையும் அவர் கொஞ்ச காலத்திற்குப் பின்னர் நமக்கு அறிவுறுத்துவார்.

நாம் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்படிதலுடன் பின்பற்றுவதற்கும் ஏதுவாக ஒரு புரிந்துகொள்ளும் இருதயத்தை, அவருடைய வார்த்தைகளின் மூலம், கர்த்தரின் கரத்திலிருந்து நாளுக்கு நாள் நாடுகின்றோமா? இப்படியாக நாம் ஒருவேளை செய்வோமானால், நாம் ஞானத்துடனும், பயபக்தியுடனும் தெரிந்துகொள்கிறோம் என்பதை காட்டுகின்றது. “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் ............. உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.” (சங்கீதம் 25 : 14).

**--1531--**

கர்த்தரை பற்றின இரகசியத்தை அறிந்து கொள்வதற்கான நம்முடைய விருப்பம் இரண்டு விதத்தில் காணப்பட வேண்டும். அதாவது, **1.** கிருபையாக நாம் அழைக்கப்பட்ட வேலைக்கு நாம் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி அறிந்துகொள்ள விரும்ப வேண்டும் மற்றும் **2.** தற்காலத்திலும், பிற்காலங்களிலும் நம்முடனான ஐக்கியத்தில் வரும் யாவரையும் ஆசிர்வதிப்பதற்குரிய அவருடைய ஏற்பாடுகளுக்கு நாம் தகுதியாகும் பொருட்டு அறிந்துகொள்ள விரும்ப வேண்டும். சாலொமோனை போன்று நாமும் நம்முடைய குறைவுகளையும், மாபெரும் கனத்திற்கு நாம் பாத்திரமற்றவர்கள் என்பதையும் உணர வேண்டும். நிழலான தாவீதாகிய நம்முடைய அன்பான மீட்பருக்கும் நமக்கும் உள்ள உறவின் காரணமாகவே தெய்வீக தயவை பெற்றிருக்கின்றோம் என்று சலொமோனை போன்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ‘‘நீங்கள் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்’’ (மத்தேயு **18 : 3**) என்ற நமது இரட்சகரின் வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். இங்கு சரீரத்தில் சிறுவர்களையோ அல்லது முதிர்ச்சியற்ற நியாயத்தீர்ப்புகளையோ குறிக்காமல் எளிமை, தாழ்மை மற்றும் கற்றுக்கொள்ளும் நிலையே குறிப்பிடப்படுகின்றது. மேலும் கர்த்தருடைய ஏற்பாட்டில், நாம் இராஜ்யத்திற்குத் தொடர்புடைய வி'யங்களில் அழைக்கப்படும் காரியம், நம்மை தற்காலத்தில் மிகவும் தாழ்மையாக இருக்கவும் அவருடைய இராஜ்யத்தில், அவருடைய உடன் வேலையாட்களாக இருக்கப் போகிறவர்களுக்கு அதாவது, ‘‘தமது தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களுக்குப்’’ பரம பிதா கொடுக்க விரும்பும் அனைத்துப் பாடங்களை கற்றுக்கொள்ளவும் நம்மை நடத்த வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் ஆடுகளாக இருக்கின்றனர். அனைவரும் நல்ல மேய்ப்பனின் கீழ் காணப்படுகின்றனர். ஆனால் ஆடுகள் மத்தியில் சிலர் ஆடுகளை சரியான பாதையில் வழிநடத்துவதற்கும், உதவி கரம் நீட்டுவதற்குமென, அவரால் தம்மை அடையாளப்படுத்த பாத்திரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகையவர்கள், தங்களுக்கும், கர்த்தருடைய ஜனங்களுக்கும் இடையே காணப்படவேண்டிய உறவு நிலையைக் குறித்து இப்பாடத்திலிருந்து வி'ேசமான ஆசிர்வாதங்களைப் பெற்றிருப்பார்கள்.

கிறிஸ்துவின் சபையில் உள்ள எந்த மூப்பரும், ‘‘என் ஜனங்கள்’’, ‘‘என் மந்தை’’, ‘‘என் சபை’’ என்று சொல்லக் கூடாது. மாறாக தாழ்மையில் அவன் கர்த்தருடைய ஜனங்களை நடத்துவரதற்கு, போீப்பதற்கு, வழிகாட்டுவதற்கு தெய்வீக ஞானம் கேட்கும் சிறு குழந்தையை போன்று தன்னை சிந்தித்துக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய ஜனங்களுக்குரிய நன்மை என்பது மிக பெரியது, இராஜ்யத்தின் பாதையில் நடத்துவதற்கு உதவி அளிக்கிறதும், மிக சிறப்பானதுமாக இருக்கின்றது.

இவ்விதமாக தெரிந்துகொள்பவர்கள் அனைவருக்கும், இவ்விதமான கொள்கைகள் மற்றும் விருப்பங்கள் மீது தங்களுடைய இருதயத்தை உறுதியாக தரிக்கப்பெற்ற அனைவருக்கும், கர்த்தர் தமது அங்கிகரிப்பைக் கொடுக்கின்றார். மேலும் ஞானம் மற்றும் அறிவு தொடர்பான அவர்களுடைய இருதயத்தின் விருப்பங்களுக்கு அவர் இப்பொழுது அருளும் அதே சமயத்தில், அவர் அதிகமதிகமான ஞானத்தையும், ஐஸ்வரியத்தையும், கனத்தையும், நித்திய ஜீவனாகிய நீண்ட ஆயுசு நாட்களையும் கூட அருளுவார் என்று அவர்களுக்கு வாக்களிக்கின்றார். நம்முடைய அர்ப்பணிப்புக் குறித்ததான இவ்வி'யங்கள் சொப்பன நிலையில் மாத்திரமே காணப்படுகிறதென்றால், நாம் நிஜத்திற்கு விழித்தெழுந்து, செயல்படுவோமாக. மேலும் பிதாவுக்குப் பிரியமானவைகளை நாம் விரும்பி செய்வதற்கு மாத்திரமல்லாமல், அவைகளை

நம்முடைய வார்த்தையிலும், கிரியையிலும், சிந்தையிலும், இருதயத்தின் நோக்கத்திலும் விருத்தி செய்வதற்கு ஏதுவாக, கர்த்தருடைய நற்வாக்குத்தத்தங்கள் நம்மை விழிக்கப்பண்ணுவதற்கு அனுமதிப்போமாக. இப்படிச் செய்வோமானால், விரைவில், ''நமது கர்த்தரின் சந்தோ'த்திற்குள்ளாக'' பிரவேசிப்போம்.

- ***சு. 4290.***

***தேவ நாமம் கிறிஸ்து இயேசுவின் மூலம் மகிமைப்படுவதாக...!!!***

- ***ஆமென்...!!!***

-----------------------------------

# சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம்

அலிகெனியிலுள்ள பிட்ஸ்பர்க் சபையிலுள்ள அருமையான நண்பர்கள், பைபிள் ஹவுஸ் குடும்பத்தின் (Bible House Family) புறப்படுதல், அண்மையில் உள்ளதைக்குறித்து வேதனையுடன் காணப்படுகின்றனர்; எனினும் கர்த்தர் எங்குமுள்ள தம்முடைய ஜனங்களின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொள்வதற்கு மிகவும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார் என்றும், இந்த அனுபவத்தின் வாயிலாக அவர் தங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தைக்கொடுத்து, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் மீது அதிகம் பொறுப்பை வைத்துள்ளார் என்றும் எங்களோடுகூட அவர்களும் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.

கிறிஸ்மசுக்கு முன்னதாக புதன்கிழமை இரவன்று, எங்களுக்குத் தெரியாமல், அவர்கள் பைபிள் ஹவுஸ் சாப்பலில் ஒரு விசேஷித்த ஐக்கிய கூட்டத்தினை ஒழுங்குபண்ணியிருந்தனர் மற்றும் சகோதரர் ரசல் அவர்கள் வரவும், சில வார்த்தைகளைப் பேசவும் வேண்டிக்கொண்டனர். அவர் வந்தபோது, நியமிக்கப்பட்ட பேச்சாளர் ஒருவர், தங்களது பாஸ்டருக்கான சபையாரின் அன்பைத் தெரிவித்தார் மற்றும் தங்களது அன்பினை வெளிப்படையாய் வெளிப்படுத்த விரும்பி, அவர்கள் மென்மையான வெல்வெட் கம்பள விரிப்பு ஒன்றையும், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்ட மேஜை ஒன்றையும், அழகான நாற்காலி ஒன்றையும், சிறு மேஜை மற்றும் கடிதம் வைக்கும் பெட்டியையும் தெரிந்தெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்கள். இந்த அன்பளிப்புகளைக் கொடுப்பதற்காக எதிர்ப்பார்க்கப்பட்டத் தொகைக்கும் அதிகமாகவே காணிக்கை வந்ததால், மீதமிருந்த 138 டாலர்களும் சகோதரர் ரசல் அவர்களுடைய புதிய புரூக்கிலின் இல்லத்திலுள்ள அவரது அறைக்குப் பொருத்தமான எதையாகிலும் வாங்கிடுவதற்குப் பயன்படுத்தும்படிக்கு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அன்பிற்கு அடையாளமான இவைகளை (சகோ ரசல்) நாம் இருதயப்பூர்வமான உணர்ந்துகொள்ளுதலுடன் ஏற்றுக்கொண்டோம் மற்றும் இந்த இடமாற்றமானது கர்த்தருடைய முன்னேற்பாடு என்றும், இது அவரது வேலையில் ஓரடி முன்னோக்கி வைத்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது என்றுமுள்ள எங்களது திடநம்பிக்கை மாத்திரமே சபையாரின் பாஸ்டராக முப்பது வருடங்களுக்கும் மேலாக நாம் ஐக்கியப்பட்டிருந்த அன்புக்குரியவர்கள் அநேகரை மகிழ்ச்சியோடு நாம் விட்டுப் பிரிந்துபோக செய்கின்றது என்று அருமையான நண்பர்களிடம் நாம் தெரிவித்தோம்.

## சகோதரர் ரசல் மீண்டுமாக மேய்ப்பராக / பாஸ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னதாக, 1908-ஆம் வருஷத்தினுடைய கடைசி இரவன்று, ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்படும் என்றும், அதில் வரவிருக்கின்றதான வருடத்திற்குச் சபையாருக்கு யார் ஊழியம் புரிந்திடுவார்கள் என்பதைச் சபையார் தேர்ந்தெடுப்பார்களென எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்றும் அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. முழுமையான அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே வரவேற்கப்பட்டுள்ளனர் என்று தெளிவாய்த் தெரிவித்திருந்தப் போதிலும், பைபிள் ஹவுஸ் சாப்பலில் கூட்டம் குவிந்திருந்தது. முப்பது வருடங்களுக்கும் மேலாக சபையாரை, தான் மேய்த்திட்ட விஷயங்கள் தொடர்பான நிகழ்வுகள் சிலவற்றைச் சகோதரர் ரசல் அவர்கள் சுருக்கமாய் எடுத்துரைத்தப்போது கூட்டத்தில் நிசப்தம் நிலவினது. அந்தக் காலங்கள் அனைத்திலும் சத்தியத்திற்கு உண்மையுள்ள ஆதரவாளர்களாய் அங்கிருந்த சிலரின் பெயர்களை அவர் குறிப்பிட்டார். இருபது வருடங்களாக, பதினைந்து வருடங்களாக, பத்து வருடங்களாக, ஐந்து வருடங்களாக, ஒரு வருடமாக சத்தியத்திற்கு அறிமுகமாகியிருந்த அநேகர் அங்கிருந்தனர். தான் செய்யும்படிக்கு விரும்பிட்ட அனைத்தையும் தான் அவர்கள் அனைவருக்காகவும் அல்லது தனிப்பட்ட விதத்திலும் செய்திடவில்லை என்றும், ஆனால் தன்னால் முடிந்தமட்டும் அவர்களுடைய நலனுக்கடுத்தவைகளில் தான் ஊழியம் புரிந்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். தான் அறிந்திருக்கிற வரையிலும் மற்றும் நம்புகிற வரையிலும், வார்த்தையிலோ அல்லது சிந்தையிலோ அவர்களில் யாருக்கும் தீங்கு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். காரியங்கள் இப்படியாக இருந்ததினால், அவர் மேடையை விட்டு இறங்குகையில், மிகுந்த

திருப்திக்கொண்டிருந்தார். முடிவில் ஏதேனும் சமயத்திலோ அல்லது இடத்திலோ தான் யாருக்கேனும் ஏதேனும் விதத்திலோ, அளவிலோ, வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ தீங்கு செய்துள்ளதாக யாரேனும் எண்ணுவார்களானால், தான் அதை அறிந்து கொள்ளத்தக்கதாகவும் மற்றும் மன்னிப்புக் கேட்பதற்குரிய வாய்ப்பினை தான் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அத்தகையவர்கள் பேசிடும்படிக்கு தான் எதிர்ப்பார்ப்பதாக வேண்டிக்கொண்டார். இந்த வேண்டுகோளுக்கு எந்தப் பதிலும் வராததால், தான் அவர்களுக்கு வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ தீங்கிழைக்காமல் இருந்தது மாத்திரமல்லாமல், தன்னுடைய சிந்தையில் அவர்கள் பேணப்பட்டார்கள், அன்புகூரப்பட்டார்கள் என்றும், அவர்களுக்காக தான் மனதுருக்கம் கொண்டிருந்தார் மற்றும் ஜெபம்பண்ணினார் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார்.

மேடையை விட்டு இறங்குகையில் பயண ஊழியர் சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் வந்திருக்கின்றார்கள் என்றும், 1909-ஆம் வருடத்திற்குரிய சபையினுடைய ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும்படிக்கு ஆயத்தம்பண்ணப்பட்டதான அலுவல் கூட்டத்திற்குச் சிறந்த கூட்டத் தலைவராய் (chairman) இருப்பார் என்றும் சகோதரர் ரசல் அவர்கள் குறிப்பிட்டார். மறுப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லையெனில், அக்கூட்டத்திற்காகக் கூட்டத்தலைவராகச் சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்படுவதாகக் கருதப்படும் என்று தெரிவித்தார். அமைதியானது ஒப்புதலைத் தெரிவித்தப்படியால், சகோதரர் ரூதர்போர்ட் அவர்கள் மேடைக்கு ஏறினார் மற்றும் சகோதரர் ரசல் அவர்கள் கீழே இறங்கி, நண்பர்களுடன் தனது இருக்கையில் அமர்ந்துகொண்டார்.

அந்த வருடம் ஊழியம் புரிந்திட்டதான பாஸ்டர் மற்றும் மூப்பர்களுக்கு நன்றியுரை அளிக்கப்படலாமா என்று முன்வைக்கப்பட்டு, அதற்கு வழிமொழியப்பட்டு, ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. கூட்டத் தலைவரினால் கூட்டத்தின் நோக்கம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது மற்றும் அனைத்தும் ஒழுங்கின்படியுள்ளது என்பதற்கு ஒரு சைகைக் கொடுக்கப்பட்டது. உடனடியாகச் சகோதரர் டாக்டர் ஸ்பில் அவர்கள் எழுந்து, 1909-ஆம் வருடத்திற்காகச் சபையாரின் பாஸ்டராக சகோதரர் ரசல் மீண்டுமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் சகோதரர் ரசல் அவர்கள் எப்போதாவதுதான் சபையாருடன் காணப்பட்டாலும்கூட, அவர் பாஸ்டராக/மேய்ப்பனாகத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது, சபைக்கு இன்னும் அதிகமான பராமரிப்பை உறுதி செய்கிறதாயும், அதன் காரியங்கள் மற்றும் நலனுக்கடுத்த விஷயங்களுக்கு இன்னும் அதிகமாய் மனம் திறந்து ஆலோசனைகளை அவர் வழங்கும்படி செய்கிறதாயும் இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார். அநேகம் சபையார் இப்படியாகச் சகோதரர் ரசல் அவர்களைப் பாஸ்டராக தேர்ந்தெடுக்கும் வழக்கத்தில் இருக்கின்றனர் என்றும், இதை அவர்கள் தங்களது அன்பையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல், தங்கள் நலனுக்கடுத்த காரியங்களில் அவரது விசேஷித்த மேற்பார்வையைப் பெற்றிடுவதற்கான தங்களது விருப்பத்தை அவருக்கு உறுதிப்படுத்துவதற்குமே மற்றும் எப்போதாவது, அவர் தங்கள் மத்தியில் காணப்படுகையில், அவர் தங்கள் மத்தியில் சகஜமாய் உணர வைக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்திலுமே செய்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். அநேக சகோதரர்கள் இந்தக் கருத்திற்கு வழிமொழிந்தனர். சகோதரர் ரசல் அவர்கள் எழுந்துநின்று முன்மொழிந்தவருக்கும், வழிமொழிந்தவருக்கும் நன்றி தெரிவித்தார் மற்றும் தான் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், அவர்கள் தனது அன்பையும், பிராத்தனைகளையும், எல்லாவிதத்திலுமான ஆதரித்தலையும் எப்போதும் பெற்றிருப்பார்கள் என்று அருமையான நண்பர்களுக்கு உறுதிப்படுத்தினார். எதிர்க்காலத்தில் தன்னால் அடிக்கடி அவர்களோடு காணப்பட முடியாது என்று அவர்கள் புரிந்துகொள்ளும்படிக்கு அவர் விரும்புவதாகக் கூறினார். கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக, அவரால் மாதத்திற்கு ஒருமுறை மாத்திரம் அல்லது அவ்வப்போதுதான் அவர்களைச் சந்திக்க முடிந்த காரியத்திற்காகவும்கூடத் தான் மகிழ்வதாகவும்; ஏனெனில் இதுவே அனைவரையும் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தப் பிரிந்து செல்லுதலைச் சுலபமாய்ச் சந்திக்க உதவினதாகவும் தெரிவித்தார். இப்படித் தேர்ந்தெடுக்கும் காரியமானது, தன்னை அடிக்கடி பிட்ஸ்பர்கிற்கு வரவழைத்திடும் என்ற எண்ணத்தில் எவரும் தனக்கு வாக்களித்திட (vote) தான் விரும்பவில்லை, காரணம் பொதுவான ஊழியங்களுக்கடுத்தக் காரியங்களில் தான் ஈடுபட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார். அதுவும் ஏகமனதுடன் இல்லாததுவரையிலும், தன்னால் இத்தகைய தேர்ந்தெடுத்தல்களை ஏற்றுக்கொள்வதற்குச் சிந்திக்க முடியாது என்றும்கூட அவர் குறிப்பிட்டார். வாக்கு எடுக்கப்பட்டது மற்றும் அது ஏகமனதுடன் நடைமுறைப்படுத்தும்படியாகத் தெரிவிக்கப்பட்டது.

சகோதரர் ரசல் அவர்களுடைய யோசனையின்படி, பைபிள் ஹவுஸ் குடும்பத்தினர், இந்தத் தேர்ந்தெடுத்தலில் வாக்களிப்பதற்கு மறுத்தனர், காரணம் தாங்கள் அதிகக்காலம் இங்கு இருக்கப் போவதில்லை என்பதால், அவர்கள் ஒரு தெரிந்துகொள்ளுதலை வெளிப்படுத்துவது தகுதியாய் இராது. கூட்டத்தலைவராகிய ரூதர்போர்ட் இதைக்குறிப்பிட்டார் மற்றும் உள்ளூர் சபையார் ஏகமனதுடன் வாக்களித்துள்ளப்படியால், பைபிள் ஹவுஸ் குடும்பத்தினரையும் உள்ளடக்கி இன்னொரு வாக்குப் பதிவு செய்து, சகோதரர் ரசல் அவர்களுக்கான தங்களது அன்பை வெளிப்படுத்துவதற்கும் எந்த மறுப்பும் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். காரியம் முன்மொழியப்பட்டு, பைபிள் ஹவுஸ் குடும்பத்தினரின் வாக்களிப்பானது ஏகமனதுடன் நடைப்பெற்றது.

முந்தைய வருடங்களின் வழக்கத்தின்படியே, சகோதரர் ரசல் அவர்கள் மூப்பர்களாக, உதவிக்காரர்களாக, பெண் உதவிக்காரர்களாக - சபைக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்களாக இருப்பார்களென, தான் நம்பும் சிலரின் பெயர்களை யோசனையாக முன்வைத்தார். இவைகள் வெறும் யோசனைகள்தான் என்றும், பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் யார் ஒருவரும் அல்லது அனைவரும் நிராகரிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். அவர்களை அவர் முன்மொழிவதுகூட இல்லை, மாறாக யோசனையாக மாத்திரம் முன்வைத்ததாகவும், சபையார் தங்கள் சொந்த முன்மொழிதல்களைப் பண்ணும்படிக்கு விட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். சகோதரர் ரசல் அவர்களின் யோசனையின் படியானவர்கள் முன்மொழியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டனர் - சபையாரால் ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தக் கூட்டம் முழுவதுமே மகிழ்ச்சிகரமாய்க் காணப்பட்டது. தேர்ந்தெடுத்தலைத் தொடர்ந்து ஜெபம் மற்றும் துதிசெலுத்தும் கூட்டமும், சாட்சிக்கூட்டமும், நடு இரவையும் தாண்டி நீடித்தது. அருமையான நண்பர்களில் சிலர் இந்த இரவு கூட்டத்தினுடைய அபிஷேகத்தையும், உண்மையையும் குறித்தும் பிற்பாடு கருத்துத் தெரிவித்தனர்.

---

# களிமண்

பாரசீகச் சிறுகதை ஒன்று கூறுகிறதே,
ஓர்நாள் ஒரு வழிப்போக்கன்தனது வழியினிலே,
கண்டெடுத்தார் ஓர்களிமண் மொத்தையையே.
அக்களிமண்ணில் கூட நல்வாசனை வந்ததே,அறைமுழுதும் நிறைந்து நின்றதே,
இது என்ன வாசனை? களிமண்ணிலிருந்து சேற்று மணம்தவிர, நறுமணம் கூட வீசிடுமோ?
இக்களிமண்ணிலிருந்து நாம் எதை உருவாக்கிடலாம்?
சாமர்க்கண்டின் விலையுயர் வைரமா?வெட்டிவேரின்நறுமணத்தைலமா?
இல்லை, வேறெந்தவிலையுயர் பொருளினையா?
இல்லை,இல்லை, நான்ஓர் களிமண் மொத்தை மாத்திரமே.
அப்படியானால் இந்த வாசனை எங்கிருந்துதான் வருகிறதோ?
நண்பரே,இந்த இரகசியம் தன்னை நான் அவிழ்க்கத்தான் வேண்டுமோ?
நான்ஒருகாலத்தில்சாரோனின் ரோஜாதோட்டத்தில் பூக்களின் நடுவினில் வாழ்ந்து
வந்தேனே,அங்குவீசியஇனிமையான வாசனைதனையே எடுத்து வந்தேனே,
எங்களின்வாசம் குறைவானதாயினும், கர்த்தாவே எங்களில் வந்தே வாசம் செய்யும்.
உம்மிடமிருந்தே வாசம்பெற்றே இன்பமாகவே வீசிடச்செய்யுமே.

# உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

எபேசு சபையின் மூப்பர்களுக்கு உரைக்கப்பட்டதான அப்போஸ்தலனின் வார்த்தைகள் தேவ ஜனங்களிலேயே, இன்றுள்ளவர்களுக்கு மிகப் பொருத்தமாய் இருந்தளவுக்கு, யாருக்கும் இருந்ததில்லை. "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" என்று அவர்களிடம் அவர் கூறினார் (அப்போஸ்தலர் 20:28-31).

எங்கும் காணப்படும் மூப்பர்கள் விசேஷித்த எச்சரிக்கைக்கொள்வது அவசியமாய் இருக்கின்றது; ஏனெனில் ஒவ்வொரு சோதனைகளிலும் மிகவும் கிருபைப் பெற்றவர்களும், மிகவும் முதன்மையாகக் காணப்படுபவர்களும் கடுமையான இன்னல்களுக்கும், பரீட்சைகளுக்கும் ஆளாவார்கள். ஆகையால்தான், "என் சகோதரரே கடுமையான சோதனைக்குள்ளாவீர்கள்" என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலன் புத்திமதிக் கூறுகின்றார். இதுபோலவே இருதயத்தில் தூய்மையும், சுயநலமில்லாமையும் கொண்டிருக்கும் மூப்பர்கள் யாவரும் - அவர்கள் மனுக்குலம் யாவருக்கும் அன்பு மற்றும் நல்லெண்ணங்களை கொண்டிருக்கவும், அவர்கள் பரிசுத்த ஆவியின் கனிகளாலும், கிருபைகளாலும் அதிகமதிகமாய் நிரம்பிக் காணப்படவும் மற்றும் மந்தையைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்கவும் நாங்கள் புத்திமதி கூறுகின்றோம். மந்தை கர்த்தருடையது என்றும், உங்களுக்குக் கர்த்தரிடத்திலும், அவர்களிடத்திலும் ஒரு பொறுப்புக் காணப்படுகின்றது என்றும் நினைவில்கொள்ளுங்கள். மாபெரும் பிரதான மேய்ப்பனுக்கு அவர்களது ஆத்துமாக்களுக்காக (நலன்களுக்காக) உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் நீங்கள் விழித்திருக்க வேண்டும் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அனைத்திலும் அன்பே பிரதானம் என்றும் நினைவில் கொள்ளுங்கள்; அவர்கள் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாகத்தக்கதாகவும் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்கு ஏற்ப இந்தத் தீங்கு நாளில் இடறிப்போகாமலும், அனைத்தையும் செய்து முடித்தப்பிற்பாடு, கிறிஸ்துவில், அவரது சரீரத்தில், அவரது அங்கத்தினர்களில், அவரோடு உடன்பலிச்செலுத்துபவர்களில், அவரோடு உடன்சுதந்தரர்களில் முழுமையடைந்து நிற்கத்தக்கதாகவும் - உபதேசங்களைப் புறக்கணியாமல், அவரது சரீரத்தின் பல்வேறு அவயவங்கள் மத்தியில் கர்த்தருடைய ஆவி வளர்ந்திடுவதற்கு மிக விசேஷித்த கவனம் கொடுத்திடுங்கள்.

# ஜெபத்திற்கு விடையாக விடுதலை

## அப்போஸ்தலர் 12:1-19

***"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." சங்கீதம் 34:7***

## பஸ்கா காலப் புடைத்தெடுத்தல்கள்

யூதர்களுடைய அதிலும் விசேஷமாகச் செல்வாக்குமிக்கவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கத்தில் அகிரிப்பா, அப்போஸ்தலனாகிய யாக்கோபைச் சிரைச்சேதம் பண்ணினார் மற்றும் இது யூதர்களுக்கு மிகவும் பிரியமாய் இருப்பதைக்கண்டு இவர் அப்போஸ்தலனாகிய பேதுருவை கைதுசெய்தார். இங்கு இடம்பெறுகின்றதான கிரேக்க வார்த்தையானது, அவர் தேடப்பட்டு, கைதுசெய்யப்பட்டார் என்பதைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. அநேகமாக அப்போஸ்தலர்கள் அனைவரும் அந்த ஒரு காலப்பகுதியில் மறைவில் காணப்பட்டனர்; எனினும் பஸ்கா காலத்தின் நிமித்தமாகப் பரிசுத்த பேதுரு வெளியே வந்தபோது, அவர் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்; பஸ்கா வாரத்தினுடைய இறுதியில் இவரை நேரடியாய்க் கொன்றுபோடுவதற்கு அகிரிப்பா திட்டமிட்டிருந்தார். ஆனால் இதற்கிடையில் இந்தப் பாடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று, பரிசுத்த பேதுருவைக் கர்த்தர் விடுவித்தார்.

அந்தப் பஸ்கா காலக்கட்டத்தின் போதான சபையினுடைய துக்கத்தை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது மற்றும் இந்தத் துயரமானது, அவர்களுக்கு நமது கர்த்தருடைய மரணத்தின்போதான வேளையையும், அப்போது அவரது பின்னடியார்கள் மத்தியில் காணப்பட்டதான பீதிகளையும் ஓரளவுக்கு நினைப்பூட்டியிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் சில வருடங்களாக ஏதோ ஒவ்வொரு பஸ்கா காலமும், ஒவ்வொரு நினைவுகூருதலும், கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியிலான விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சைக்கான காலமாக இருப்பதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. வருடத்தினுடைய அந்த ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் யூதாசும், பேதுருவும், கர்த்தருடைய சீஷர்கள் அனைவரும் தங்கள் புடைத்தெடுத்தல்களைப் பெற்றுக்கொண்டதுபோன்று, கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள மற்றவர்களிடத்தில் சாத்தான் செய்ய விரும்புகின்றதான புடைத்தெடுத்தல்களும், நடுங்கவைத்தல்களும் நினைவுகூருதல் காலத்தில் விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாக நமக்குத் தோன்றுகின்றது. இந்த அனுமானமானது உண்மையானதாகவோ அல்லது உண்மையானதில்லை என்பதாகவோ இருப்பினும், கர்த்தருடைய ஜனங்கள் இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராக விசேஷமாய் ஜாக்கிரதையாய் இருப்பது என்பது ஒன்றும் அவர்களுக்கு நிச்சயமாய்ப் பாதகமாய் இருப்பதில்லை; ஏனெனில் சோதனைக்குட்படாதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனிடமிருந்து விசேஷமான சோதனைகள், விசேஷமான பரீட்சைகள் வரும் என்ற கருத்தானது, சபை சரித்திரத்தினுடைய பழைய வழிகள் வாயிலாக நம் மத்தியில் கடந்துவந்து காணப்படுகின்றதான விசேஷித்தக் கட்டுப்பாடுகளும், உபவாசங்களும், ஜெபமும் ஏறெடுக்கும் காலம் (அ) லெந்து காலங்கள் என்பதற்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது என்று தோன்றுகின்றது. இன்று அநேகர் லெந்து காலங்களைவெறுமனே ஆச்சாரமாய்க் கைக்கொள்வதினால், இப்படியாகவே அனைவருக்கும் இருக்க வேண்டுமென்றில்லை மற்றும் ஆரம்பத்திலும் இப்படியாக இருக்கவில்லை. வேதவாக்கியங்களுக்கு இசைவாக, அனைத்துக் காலப்பகுதிகளிலும் ஜெபம் பண்ணுவதற்கும், உபவாசம் இருப்பதற்கும் நாம் தீவிரமாய்ப் பரிந்துரைக்கின்றோம் மற்றும் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு முன்னதாக 40 நாட்கள் காலங்களில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கூடுமானமட்டும் விசேஷமாய் விழிப்புடன் காணப்படுவதற்கும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

நாம் ஏற்கெனவே விவரித்துள்ளதுபோலவே, நமது சுயத்தை வெறுத்தல்களானது, உணவு மற்றும் பானம் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய விருப்பங்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். எனினும் வருஷத்தினுடைய வசந்த/இளவேனிற் காலப்பகுதியில் மிகவும் எளிமையான மற்றும் மிகவும் வரையறைக்குட்பட்ட அளவிலான உணவை உண்பது என்பது, (ஜெபங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இல்லாமல் இருந்தாலுங்கூட) சாதாரணமாகவே பெரும்பான்மையான மனுக்குலத்திற்கு நன்மையாகவே இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. குளிர்க்

காலத்தினுடைய குளிரானது, நன்கு பசியைத் தூண்டி அதிகம் உணவு உட்கொள்ளப்படுவதன் விளைவாக, இளவேனிற் காலம் வரும்போதும் அதே பழக்கம் தொடர்வதினால் அளவு மீறி உண்ணும் தன்மை உண்டாவதினால் அல்லது ஜீரண உறுப்புக்களுக்கு அதிக பளு ஏற்படுவதினால், உணவு கட்டுப்படுத்தப்படுவதன் மூலம் பளு குறைக்கப்படுவது அவசியமாயிருக்கின்றது மற்றும் அளவு மீறி உண்ணும் தன்மையானது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமற்று இருப்பதினால், உணவு கட்டுப்படுத்துதல் என்பது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமாய்க் காணப்படுகின்றது.

*****

# கிறிஸ்து நமது பஸ்கா.
CHRIST OUR PASSOVER

எகிப்து அமைதியாய் படுத்துறங்கும் வேளைதனில்
தேவனுடைய கட்டளையை நிறைவேற்றவேண்டியே,
தூதனானவர்முன்னேறியே சென்றிட்டாரே,
அரியணைமீதினில்சொகுசாய்படுத்தே உறங்கிட்ட தலையீற்றுமுதலாய்
குடிசையில் வாழ்ந்த தலையீற்றுஈராய்கொன்றே குவித்தார் பாகுபாடுஇன்றியே,

நடுநிசிஇரவின் காற்றலைபோன்றே விரைந்தே முடித்தார் படைத்தவர் பணியையே.
வேதனை நிறைந்த அழுகை அங்கே, ஏதுமியலா நிலையின் அழுகுரல்,
ஒவ்வொருவீட்டின் இருதயம் தனிலே பிளந்துவந்ததே இறுதி வாதையே,
தேவனின் சொற்படி கடந்துவந்ததே மாபெரும் வாதையாய் எகிப்து தன்னிலே.

இஸ்ரயேலின் வாழிடம் தனிலோ என்னஓர் அற்புதக் காட்சி, ஆங்கே.
இருளே இன்றி வெளிச்சம் சூழவே கரத்தினில் கழியுடன்காலணி அணிந்தே
பயணத்திற்காய் விரைந்தே புறப்பட்டு பஸ்கா விருந்தை விரைந்தே உண்டார்.
அவர்பிதாக்களின்தேவன்-அவர்அழுகுரல்கேட்டார்,அவர்நேரமோவந்ததே,
அடிமைத்தனமும்முடிந்தேவிட்டதே,

எகிப்து முழுதும் துக்கித்தழுத அவ்வேளைதனிலே, கசப்பான கீரைகளுடனே புளிப்பில்லா
அப்பங்கள் செய்தே ஒருவயதானசெம்மறி ஆட்டினைசுட்டே உண்டனர்
ஒவ்வொரு வீட்டின் நிலைக்காலின்மீதும் இரத்தம் காணும் நோக்கம் யாதோ?
தேவ தூதனும் அதைக்கண்டபின்னரே அமைதியாகவேகடப்பதும் ஏனோ?
இஸரயேலின் தலையீற்றுப்பிள்ளைகள் எகிப்தின் வாதையில் பங்கில்லாமலே பாதுகாத்ததே
நிலைக்காலின் இரத்தமே.
நூற்றாண்டுகள் பலவும் ஓடியேகடந்தேமறைந்தேபோனாலும்,
இரத்தத்தால் இஸ்ரயேல் புத்திரர்காப்பாற்றப்பட்டார்,
ஆவிக்குரியஇஸ்ரயேலரோ கர்த்தரின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டார்,

ஒவ்வொரு ஆண்டிலும் பஸ்கா ஆட்டினைக் கொன்றே தின்றாலும் அதன் இரத்தம்
என்னவோ பாவ நிவாரணம் செய்வதற்கில்லை,
விரைவில் வருவதற்கோர் முன்னடையாளம் செய்தார்,-
தேவனின் திட்டம் நிறைவேறலாகுதே, மரத்தின்மீதே தொங்கி உயிர்நீத்த பாவமில்லா ஓர்
செம்மறி அவரே, அடிமைத்தனம் பூண்ட கைதிகள் யாவரையும் விடுவித்தே,
பூலோகம் அனைத்தின் பாவம் சுமந்தே,
பாவத்தால் அடிமையாகிட்ட அனைவர்க்கும் அடிமைத்தளையை
தகர்த்தே எறிந்தே
விடுதலை அளித்தார்,நீதிமான் ஒருவர், தேவனின் ஆட்டுக்குட்டியானவர்,
இம்முழுஉலகமாந்தர் யாவர்க்கும் தம் விலையேறப்பெற்ற இரத்தம் ஈந்தார்,
நம் அன்பின்கர்த்தரோ தம் அன்பிற்குரிய சீஷரை அமர்த்தி
விருந்து செய்தார், வெகு ஆவலோடே, தெரிந்துகொண்ட வெகுசிலருடனே.
"இந்தவிருந்தை நான் உங்களோடேஉண்ணவேண்டியே பேராவல் கொண்டேன"என்றே
உரைத்தார், தம் அன்பிற்குரிய சீடர் தமக்கே. "எந்தன் இருதயம் துக்கமாயுள்ளதே, **--1541--**
நான்தெரிந்தஎனது சோதரில் ஒருவன் என்னைக்காட்டிக் கொடுப்பானே,
என்றே உரைத்திட்டபோதினிலே நானோ, கர்த்தரேநானோ என்றே வினவினார்

ஒவ்வொரு சீடரும் நடுங்கும் குரலினிலே.
இல்லைகர்த்தரேஇல்லை,இல்லை. நாங்களும் உம்முடன்
இறந்தேவிடுவோம்,அழுதனர்சத்தமாய் ஆதங்கம் அடைந்தே.
கர்த்தரோமிகவும் துக்கமாய்கூறினார்,
ஒருவன் என்னைக்காட்டியேகொடுப்பான், ஒருவனோ என்னை மறுத்தேவிடுவான்,என்றே
மறமொழி துக்கமாய்கூறினார்." எல்லாரும் பயந்தே என்னைவிட்டே ஓடியேவிடுவார்,
ஆனாலும் தந்தையே,
நானோ தனியனாய்,பாடுபடவேண்டுமே.உமது
சித்தமேஇதுவேஅன்றோ,என்னைக்கொடுத்தேன் முழவதும் உமக்கே."

பந்தியில் அமர்ந்தே இருந்தபோதினில் அவர் அப்பத்தை எடுத்தே ஆசீர் அளித்தே,
பிட்டுத்தமது சீடர்க்குக்கொடுத்தே. இதனை நீங்கள் வாங்கிப்புசிப்பீர், உங்களுக்காகவே
பிட்கப்படுமே, இதுஎன் சரீரம் எனக்கூறி அளித்தார்,

பாத்திரமதனைக்கையில் எடுத்தே ஸ்தோத்திரம் பண்ணியேஅவர்களுக்களித்தே, நீங்கள்
இதிலே பானம் செய்வீர்,
பாவமன்னிப்புக்கெனவே அநேகருக்காகவே சிந்தப்படுமே-புது உடன்படிக்கைக்கான எனது
இரத்தமே என்றுரைத்தாரே".

இதுமுதல் இந்த திராட்சைப்பழ இரசமதனை நவமானதாய் உங்களுடனே எனதுபிதாவின்
இராஜ்ஜியம் தனிலே பானம் பண்ணும் நாள்வரையில் இதனை பானம் செய்வதில்லை",
என்றே பகர்ந்தே பகிர்ந்தே அளித்தார்,
பாராள வந்த பரமனின் குமரன்.

தமது சரீரம் இரத்தம் முழுதும் அனைத்து உலக சோதர்க்காகவே அன்புடன் அளித்தார்,
உலகத்தின்பாவம் அனைத்தும் சுமந்தே அவமானம் முழுதையும் தன்மேல் ஏற்றார்.
விரைவில் சோதரர்ஒருவர்என்னைக்காட்டிக்கொடுத்திடுவார்,
மற்றொருவரோ தன்னையே மறுதலிப்பார்
என்பதை அறிந்தே மனமும் கசிந்தார்,
எல்லாரும் கைவிட்டே ஓடியேவிடுவார் என்பதை கர்த்தர் உணர்ந்தே இருந்தார்.

நீங்கள் இதனைப்பானம் பண்ணும் போதினிலே என்னை நினைவுகூரும் படியாகவே
இதனைச்செய்தே வாருங்கள்என்றே கர்த்தர் உரைத்த வாக்கின்படியே வருடங்கள்
கடந்தும் ஒவ்வோர் ஆண்டும், உம் தம் பரிசுத்த ஜனங்கள்தாமே,பரிசுத்தமாகவே
கண்ணீர்சிந்தியே நினைவுகூர்ந்தே வருகிறார் இன்றும்,

இந்த இரவுக்காலத்திலே, கர்த்தாவே உமது முதற்பேரானயாமே, கையிலே கோலுடன்,
காலிலே பாதரட்சையுடன்
உம் பரிசுத்த இரத்தம் இதயத்தில் தெளித்தே,ஒன்றாய்கூடியே நினைவுகூர்ந்திடவே,
கர்த்தாவே இவ்வேளைதனிலே, எம்மண்டை வாரும், ஆசீர் தாரும்,
இந்தமாடி வீட்டினில் எமது விருந்தினராகவே வந்தே அமரும்,
யாம் உண்ணுகின்ற குடிக்கின்றவேளைதனிலே,யாம் செய்த பொருத்தனைகள் புத்தாக்கம்
பெற்றிடுமே,
--1542--
எம் பொருத்தனைக்கேற்பவே எம்மையுமே உண்மையுள்ளவராகவே மாற்றிவிடும்,

பூமியின் நம்பிக்கை மகிழ்ச்சிகள் எல்லாம் பின்னுக்குத்தள்ளியேஉமக்கு உண்மையாய் வாழ்ந்திடவே,
உம்மோடு இடுக்கமான வழிதனிலே நடந்திடஎமக்கருள்தந்திடுமே.
உம்முடன்சிலுவை சுமந்தே வந்திட,
இப்பூலோக ஆஸ்தி, மின்னும் கசடுகள், ஆசையாவையும் ஒதுக்கியே,
நும்மைப்பின்பற்றியே, உம்மைப்போல் பலியாக எம்மையுமேதகுதியாக்கித்தாரும்,இயேசுவே.

உம்மைப்போல் பிட்கப்படும் வேளையையாமே ஒருபாக்கியமாகவே
கருதிக்கொண்டே,ஒருபங்குநானும்
ஏற்றுச்சுமக்கவேண்டுமே,பாக்யமதைத்தாருமே,
ஒப்புரவாகும் இந்நன்னாளில்தாமே,
சமர்ப்பித்தோம்தந்தையே,
உமக்காகஒப்பளித்தோம் ஏற்றுக்கொள்ளும் எமையே.
எங்களதுபலிகளெலாம் சிறிதாகவே இருந்திட்டாலும், எடுத்துக்கொள்ளும்கர்த்தாவே, எம் முழுபலியும் அதுதானே, பலிசெலுத்தும் தந்தைக்கே.

திரைக்குஇப்புறம் எப்போதும் ஒவ்வொருநாள்பொழுதினிலும்
எமக்களித்தசோதனைகள்அதிகரித்தே வந்திடினும்,
அவை எப்போதும் நிறுத்துவதற்கில்லை என்பதறிவோம் எம் இறைவா.
பேரழிவோ, வாள்வீச்சோ, தீச்சுவாலை,
எதுவாகஇருந்திடினும், எங்களதுகெத்சமெனேயில்
உதவிசெய்யும் எம் இறைவா.

உம்இதழ்கள் சுவைத்திட்ட கசப்பான காடியினைநாங்களும் சுவைத்திடவே கர்த்தாவே ஆசிக்கிறோம்,
கசப்பாக உள்ளதென்றே பின்வாங்கிச் சென்றிடாமல், முன்னோக்கிவந்திட்டே பானமதைப்பருகவேண்டும்.
எம் வாழ்வின் கெத்சமெனே அனுபவிக்க வேண்டுமன்றோ, மகனுக்குரியதகுதிகளை யாம் அடைந்தே, எம் தலையுடனே ஒத்திசைவாய் யாம்அமையவேண்டுமன்றோ, உம்முடன் வாழ்ந்திடவே, உம்முடனே மரிக்கவேண்டும்,எமக்கான பாத்திரமோ வலியினாலும் துன்பத்தாலும் நிறைந்தங்கே அளித்திடினும், எனக்கான பாத்ரமதை ஏற்றுநடக்க அருள்தாரும். கடைசீசொட்டுவரை சுவைத்திடவே வேண்டுமன்றோ, மரணத்திற்கேதுவாக மரிக்கவே வந்திடினும் மீண்டும் மீண்டும் குடிக்கவேண்டும்,அனுமதிப்பீர் எம் தலைவா.பேரின்ப சந்தோஷம் இப்போதே நிறைந்துவிடும், பாத்திரமோ மகிழ்வுதரும், வாழ்க்கைப்பாத்திரம் இனித்துவிடும், சாகாமை வந்துவிடும். இறப்பும் மறைந்துவிடும்.

தேவனே, ஆசீர்வதிக்கப்பெற்ற விருந்தினையே உம்முடன்நாங்கள் உண்டுவிட்டோம்,
எத்தனை சோதனைகள் எதிர்கொண்டே வந்திட்டாலும்,
இப்போதும் கடந்து செல்வோம், எம் கர்த்தரையே
காட்டிக்கொடுக்காவண்ணம் உதவிசெய்யும் எம் இறைவா.
விரைப்புடனே இருந்துசாத்தான் எமை சோதிக்கின்ற வேளைதனில்,
கர்த்தாவேஎமக்காக வேண்டிக்கொள்ளவேண்டுமன்றோ.

**--1543--**

இந்த இரவுப்பொழுதினிலேபயமும் திகிலும் பேரச்சமும் காணுகின்றவேளையிலே,
காற்றுகளோ மூர்க்கமாய்சுழன்றடித்தே புயலாய்மாறி வாழ்க்கையையே
அடித்துக்கொண்டே சென்றிட்டாலும், உமது அன்புபரிசுத்தவான்கள்
அவரின் பஸ்காவை அநுசரித்தே முடித்திடுவார்.
மேசையை சுற்றியேஅமர்ந்துள்ளோர் சிலராகவே இருந்திட்டாலும்,
இதிலே பலர்உம் பரிசினையேஅடைந்தே நுழைந்திடுவாரே,
வீட்டுக்குள்ளே பாதுகாப்பாய் அழைத்துச்சென்றேசேர்த்திட்ட ஒருவரையே
தினம்புகழ்ந்தே வீடுபேற்றை அடைந்திடுவார்,

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணநாளுக்காககாத்தேஇருக்கின்றார்,
வேளைவந்தே சேர்ந்திடுமே.
போராட்டம் முடியுமுன்னே சிலர் களைப்படைந்தே போய்விட்டாலும்,
வெகுசிலரோஇது ஆகாது என்றேபின்வாங்கிச்சென்றிட்டாலும்,
வைராக்கியம் எனக்குள்ளே ஸ்திரமாய்நான்மேற்கொண்டே,
அன்பிற்கான சோதனையில் விழுந்திடாமல் நின்றிடவே வேண்டுமன்றோ.

விடுபட்டுள்ளநும் சோதரரோ உமதன்புபாதஅங்கமாகவேண்டும்,
உம் கிருபாசனத்தண்டையிலே இறுதிவிருந்தை
அநுஷ்டிக்கின்றார்,அவர்க்குமுன்பாய்உள்ளதற்கே பலம் முழுதும்
திரட்டிக்கொண்டே,அவர்மரணமதில் தியாகபலி
நிறைவேற்றிடவேவேண்டுமன்றோ.

விடியறகால நட்சத்திரதூதர்களோ ஏகமாகக்கூடிபாடி,
தேவபுத்திரர்எல்லாருமே கெம்பீரித்தே பாடுவாரே,
பரலோகத்தின் மணிஅனைத்தும் இசைக்கின்றமகிமையின் காலையிலே,
கிறிஸ்துவின் சபையோசோதனைநிலைகளையேகடந்தேவந்திடுவார்,
யுகாயுகத்திற்குமே அவா சந்தோஷம் நிலைத்திடுமே.
தந்தையின்அரியணை முன்பாகவேபேரன்புடனும் பெருமையுடனும்
கறைதிரையற்றமணவாட்டிதனை கிறிஸ்துசமர்ப்பணம் செய்திடுவார்,
திருமணத்திற்கானநேரம் வந்ததே, விருந்தும் கூட ஆரம்பமாகிவிட்டதே
கிறிஸ்துவும் அவர்சபையுமே என்றும் ஒன்றாய் வாழ்ந்திடுவார்.

ஆசீர்வதிக்கப்பெற்ற அந்தநன்நாள்தனிலே,
மணவாளன் அரியணையில் தம் மணவாட்டியுடன் அமர்ந்திருப்பார்,
அவர்மகிழ்வின்முகம் காண்பதற்கே அப்பெருங்கூட்டமத்தியிலே
கர்த்தாவே எமக்குங்கூட பாக்யமதைத்தாருமையா.

சகோதரி.ரெபேக்கா எப்.டோனி.

---------------------

**--1544--**

# கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி

பவுலையும், பர்னபாவையும் தவிர அந்தியோகியாவில் மூன்று (சத்திய தூதளிக்கிறவர்கள்) பேச்சாளர்கள் இருந்தார்கள் என்றும், இவர்கள் சுயத்தை வெறுத்தும், ஊழியம் செய்தும் கொண்டிருக்கையில், மற்றவர்களுக்குத் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் விசேஷித்த வேலையைப் பர்னபாவும், பவுலும் செய்திட வேண்டும் என்று பரிசுத்த ஆவியானது திருவுளம்பற்றினது என்று நம்முடைய இந்தப் பாடம் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இதிலிருந்து, தேவைக்கும் அதிகமாகவே (சத்திய தூதளிக்கிறவர்கள், பேச்சாளர்கள்) போதகர்கள், பெரோயா பாட வழிநடத்துனர்கள் முதலானவர்கள் காணப்படும் எந்த இடத்திலும் நாடப்பட வேண்டிய சரியான வழிமுறை தொடர்புடைய ஆலோசனையை நாம் பெற்றுக்கொள்கின்றோம். விலையேறப்பெற்ற நேரத்தையும், ஆற்றலையும் வீணடிப்பதற்குப் பதிலாக, அனைவருமே காரியத்தினுடைய உண்மையினை அடையாளம் கண்டுகொண்டு, இப்பாடத்தினுடைய அறிவுரைகளுக்கு இணங்கி, சிலரைக் கிறிஸ்தவத்தைப் பரப்பும் விசேஷித்த பிரயாசத்திற்காகப் பிரித்திட வேண்டும். கர்த்தருடைய வேலையின் மற்றும் ஊழியத்தின் சிலாக்கியங்களுடைய ஆழத்தினைக் கவனிக்கத் தவறுதல் என்பது சிலருக்குச் சோதனையாக அமைந்து, ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதற்கும், பரிவோடு உதவுவதற்கும், கர்த்தருடைய சந்தோஷத்தில் பெருகிடுவதற்கும் மற்றும் சத்தியத்தைப் பரப்புவதற்கும் பதிலாக, குற்றம் கண்டுபிடிப்பதற்கும், சண்டையிடுவதற்கும், இருதயத்தைக் காயப்படுத்துவதற்கும் மற்றும் மனத்தளர்வடைவதற்கும் நேராய் வழிநடத்திவிடுகின்றது. கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினனும், விசேஷமாகப் போதிக்கும் திறமையுள்ள ஒவ்வொருவரும், கர்த்தருடைய வேலைதொடர்புடைய விஷயத்தில் முடிந்தமட்டிலுமான பரந்த கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்ளவும் மற்றும் சக ஊழியக்காரர் ஒவ்வொருவருடைய பிரயாசங்களை மிகவும் அன்பாயும், மனதார பாராட்டும் கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளவும் நாட வேண்டும். இவ்வழிமுறையானது ஒருவரையொருவர் கட்டியெழுப்புவதற்கு ஏதுவாய் வழிநடத்திடும்; ஆனால் வேறுவிதமான வழிமுறையானது, உணர்வற்ற நிலைமைக்கும், வளர்ச்சியற்ற நிலைமைக்கும் வழிநடத்தி, ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்துப் போடுவதற்கும் நேராய் வழிநடத்திவிடும்.

## அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிடும் இந்த ஊழியத்திற்குச் சபையார் அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார்கள். கைகளை வைத்தல் என்பது ஏதேனும் ஆவிக்குரிய அல்லது மாய வல்லமைக் கொடுக்கப்பட்டதையும் குறிக்கிறதில்லை. அது அவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டதையும் குறிக்கிறதில்லை. இது அந்தியோகியாவிலுள்ள கர்த்தருடைய சபையார், இந்த இரண்டு மனுஷர்களையும் தேவனுடைய ஊழியக்காரர்களாக அங்கீகரித்ததையும் மற்றும் தங்களது பிரதிநிதிகளென அவர்கள் கடந்துபோவதற்குத் தாங்கள் அங்கீகரித்ததையும் மற்றும் தங்களது செலவில் அவர்கள் மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துச் செல்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆசாரியர்கள், பலியில் தங்களை அடையாளப்படுத்துகின்றதான விலங்குகள் மீது தங்கள் கைகளை வைப்பதுபோன்று சபையாரும், சத்தியத்தின் ஊழியத்தில் தங்களது பிரதிநிதியாகக் காணப்படப் போகின்றவர்கள் மீது தங்கள் கைகளை வைத்தார்கள்.

நற்செய்தியைப் பிரகடனப்படுத்துவதற்கெனப் பயண ஊழியர்களை அனுப்புகையில், பரிசுத்த ஆவியின் கட்டளை என்று நாம் நம்புகிறதையே இன்று நாம் பின்பற்றிக்கொண்டிருக்கின்றோம். இவர்களும் "பிரசங்கிப்பதற்கு" நாங்கள் மனுஷனாலோ அல்லது மனுஷர்களாலோ அல்லது மனித அமைப்புகளாலோ அதிகாரமளிக்கப்படாமல், மாறாக "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் - அதாவது முன்புபோல் யூதர்களை மாத்திரமல்லாமல், சகல ஜாதிகளிலுமுள்ள ஜனங்களையும் - சீஷராக்குங்கள் என்று கூறினவராலே அதிகாரமளிக்கப்பட்டுள்ளோம்" என்ற காரியத்தை அப்போஸ்தலர்கள் போன்று தெரிவித்துக் கடந்துபோகின்றனர். "எங்களுடைய ஒப்புதலுடன், நீங்கள் எங்களது பிரதிநிதிகளாகக் கடந்து செல்லுங்கள் மற்றும் உங்களது செலவுகள் அனைத்தும் Tract-நிதியிலுள்ள எங்களது நன்கொடைகளினால் சந்திக்கப்படும். கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யுங்கள் மற்றும் சொசைட்டியின் வழிவகைகள் வாயிலாக எங்களுக்குத் தகவல் அறிக்கைக் கொடுங்கள்" என்று சொல்வது, சபையார் பயண ஊழியர்கள் மீது கைகளை வைக்கின்றதாய் இருக்கின்றது.

--1545--

**இன்றுபெயர் சபைகளில்போதிக்கப்படும் அநேக போதனைகளில்**

பக்:393 குறிப்பு: தயவுசெய்து தலைப்பை மறந்துவிட்டுக்கவிதையைப் படிக்கவேண்டாம்.


எல்லா மதமும் ஒன்றேதான்,எந்த சபைக்குச்சென்றாலும்,எல்லா விசுவாசமும் ஒன்றேதான், வித்தியாசம்எதுவும் காண்பதற்கில்லை,அதன்போதனைகளிலே வாழ்வதிலே, ஏதும் வேறுபாடு தெரிவதில்லை.ஞாயிற்றுக்கிழமை தவிர,திரையரங்குகள் யாவும் உயர்வினைக் கொடுக்கும் நிலையங்களே,சினிமா பார்த்தல், சீட்டுவிளையாடுதல், நாவல் வாசித்தல், நடனமாடுதல்,மதுஅருந்துதல்,புகைப்பிடித்தல்வீண்பேச்சு பேசுதல் இவைபோல்மற்றெல்லாமும் கிறிஸ்துவ வாழ்க்கைக்கு முரணானது அல்ல, டார்வின்,காந்தி, நேரு,இளங்கோ,பாரதி,கம்பன்,வள்ளுவன்ஷேக்ஸ்பியர்,ஷெல்லியாவருமே,மோசேக்குஇணை யான தீர்க்கதரிசிகள்,"வேதாகமம் அறிவியலுக்கு ஒத்துப்போகவில்லையென்றால் வேதாகமத்தை புறக்கணித்துவிடலாம்" - ஐயகோ,இவை எல்லாமும் இப்போது எல்லாபெயர் சபைகளிலும்போதிக்கப்பட்டே கடைபிடிக்கலாகிறதே.

# எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம்

# THE COUNCIL AT JERUSALEM

(இந்தக் கட்டுரை, Settling Doctrinal differences மற்றும் Attaining Christian Liberty என்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டு, மறு பதிப்பாக வெளியிடப்படுகிறது).

**திறவுவசனம் :** "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்" – அப்போஸ்தலர் **15:11**



**ஆதார வசனங்கள் :** அப்போஸ்தலர் **15:1–35**

ஆதிகாலசபையில் சமாதானமும், முன்னேற்றமும் அறிவிலும் சகோதர எண்ணிக்கையிலும் வளர்ச்சியடைவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அதிகரித்தது, அதைத்தொடர்ந்து வேற்றுமைகளும், தர்க்கங்களும் உள்ள காலகட்டம் அந்தியோகியாவில் காணப்பட்டது. பவுலும் பர்னபாவும் தங்கள் ஊழியப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பி, தங்களது பிரயாண அறிக்கையை அந்தியோகியா சபைக்கு சமர்ப்பித்தனர். இந்த சபையே அவர்களது பிரயாணத்துக்கான செலவுகளை சந்தித்தது. சபையும் அவர்களது மிஷினரி ஊழியர்களும் சேர்ந்து புறஜாதியாருக்காக செய்த பரஸ்பர ஊழியத்திற்காக சந்தோஷப்பட்டனர். உண்மையாகவே எப்புறமும் இதற்கான காரணவிளக்கம் செழுமையைத் தந்தது. பின்பு சபையின் தலைமையகமாகிய எருசலேமிலிருந்து சில சகோதரர்கள் வந்தனர். இவர்கள் பிறப்பில் எபிரேயர்களாயிருந்து, புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தை புறக்கணிக்கிறார்கள் என்று கண்டுணர்ந்து, அந்த விஷயத்தில் பெரும்கிளர்ச்சியை எழுப்பினர். கிறிஸ்துவைஅல்லாமல் விருத்தசேதனம் மட்டுமே இரட்சிப்பை அளிக்காது என்ற புறஜாதியாரின் கருத்துக்கு எதிராக, இந்த எபிரேயர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பு விருத்தசேதனமின்றி செயல்படாது என கருத்துதெரிவித்தனர். இதனால் அநேக சகோதரர்களது மனம் கவலைக்குள்ளானது. சபையில் பிளவுஏற்படும் சூழலும் ஒருகாலகட்டத்தில் நிலவியது. ஆனால் சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அன்பு சகோதரர்களாகிய பவுலும் பர்னபாவும் விசாரணைக்குழுவாக, அங்குள்ள அப்போஸ்தலர்களோடும் மூப்பர்களோடும் கலந்தாலோசிக்க எருசலேமுக்கு அனுப்பப்பட்டனர். நாம் பார்க்கவிருக்கும் இப்பாடத்தில் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்ட காரியங்களும் அதன் முடிவுகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதிகால கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியை உடையவர்களாயிருந்தனர் என்று நாம் அவர்கள் வெளிப்படுத்தின ஞானத்தைக் குறித்து தற்செயல்நிகழ்வாக கருத்து தெரிவிக்கிறோம். பவுல் மற்றும் பர்னபாவின்மேல் அவர்கள் உண்மையாகவே மிகுந்த பற்றுறுதி கொண்டிருந்து, ஏற்கனவே அவர்களது ஊழியத்தின்மூலம் மாபெரும் ஆசீர்வாதங்களை கர்த்தரிடமிருந்து பெற்றிருப்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால் விருத்தசேதனமின்றி தெய்வீக தயவுபெறுவதற்கான சில முறையான பாடங்களை அவர்களால் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பு இராதிருந்தது.என்பது முரண்பட்ட கருத்தாயிராமல் உண்மையாயிருந்தது. ஆகவே இந்த பாடத்தைப் பொருத்தமட்டில் கர்த்தரது சித்தம் அப்போஸ்தலர்கள் மூலமாக நேர்மறையான கருத்தை அறிவுறுத்தியிருக்கிறது என்பதை ஞானமாய் வெளிப்படுத்தினார்கள். இந்த அப்போஸ்தலர்களைக் குறித்து கர்த்தர் ; "நீங்கள் பூமியில் எதைக் கட்டுவீர்களோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீங்கள் இப்பூமியில் எதை கட்டவிழ்க்கிறீர்களோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்றார்". அதன்பிறகு, இந்த அப்போஸ்தலர்கள், விருத்தசேதனம் யூதர்மேல் சுமத்தப்பட்டதுபோலவே புறஜாதியார்மேலும் சுமத்தப்பட்ட கடமையா ? அல்லது ஆபிரகாமின் முழு குடும்பத்திற்கும் இஸ்ரயேலர்மேலிருந்த அந்த கடமையிலிருந்து புறஜாதியார் விலக்கப்பட்டிருக்கிறார்களா என்று முறையாக அறிந்துகொள்ளவும், ஆலோசனை சொல்லும் ஆற்றலுடையோராயும் விளங்கினர்.

**எருசலேம் ஆலோசனைக் கூட்டம் :–**

அப்போஸ்தலர்கள் இக்காரியத்தில் பணிவோடு ஆலோசனைக்கூட்டத்தின் முன்வைத்த கருத்துக்கள் உற்று கவனிக்கத்தக்கது. இப்பாடத்தின்பேரிலான அவர்களது இறுதித்தீர்மானம் தெய்வீக வழிநடத்துதலின்படியும், வேதாகமத்தில்(பழையஏற்பாட்டில்) எழுதப்பட்ட வார்த்தைகளின்படியும் இருந்தது. பலஆண்டுகள் படிப்படியாக சத்தியம் அவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடியஅளவு அதிகரித்தது. யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷித்த தயவு ஒவ்வொரு தேசத்து ஜனங்களுக்கும் பொது தயவு தர எவ்வாறு இடமளித்ததோ, அவ்வாறே கர்த்தரை எப்புறத்திலிருந்தும் நம்பும் எல்லா மனிதர்களும், அவரது வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டு, அதற்கு இசைவாக தங்களது ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பவர்கள், இனிமுதல் எபிரேயர்க்கு சமமாக பாக்கியங்களையும் அனுகூலங்களையும் அடைவார்கள். அந்த தேசத்தோடு உள்ள தேவனது உடன்படிக்கையின் உறவை அவர்கள் அறிந்திருப்பர் என்றாலும், தெய்வீக நிகழ்ச்சிநிரலின் இன்னுமொரு படி முன்னோக்கி நகர்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு சிலகாலம் பிடிக்கும். அதுபோலவே சிறுமந்தை மட்டுமே

தற்போதைய பரம அழைப்பிற்குட்பட்டு அழைக்கப்பட்டிருந்து, செவிசாய்த்து, பலிசெலுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த யுகமுடிவில் அநேகர் உணர்ந்துகொள்வர். யுகமாறுதல் சமீபமாயிருக்கிறது என்பதையும், தெரிந்தெடுக்கப் பட்டோருக்கான பணியை இந்த யுகத்தில் நிறைவேற்றிமுடிக்க தேவன் நோக்கமாயிருக்கிறார் என்பதையும் பூமியின் எல்லாக் குடிகளும் ஆதாயமடையும்படிக்கு, தெரிந்தெடுக்கப்படாதோருக்காக புதிய யுகத்தில் புதிய பணியைத் துவங்கவும் தீர்மானித்திருக்கிறார் என்பதையும் கிரகித்துக்கொள்ள இவர்களுக்கு கடினமாயிருக்கும்.

ஆலோசனைச் சங்கத்தின் முடிவுகள் சில வார்த்தைகளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தேவனைப் பொருத்தமட்டில் பிறப்பில் எபிரேயராயிருந்த விசுவாசிகளை அவர் அங்கீகரித்ததுபோலவே, பிறப்பில் புறஜாதியாராயிருந்தும் விசுவாசத்தினால் அவரது பரிசுத்தஆவியைப் பெற்றவர்களை அங்கீகரிக்கிறார்.

“விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்”–அப் 15:9. இதைக்காட்டிலும் அதிகமாக என்னவிளக்கம் கேட்கமுடியும்? நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திற்குட்படாமலேயே புறஜாதியார் தேவதயவுகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். தேவன் அப்படிப்பட்ட நிபந்தனைகளை ஏற்படுத்தாதபட்சத்தில், ஏன் நாம் அவர்கள்மேல் நுகத்தை சுமத்தவேண்டும்? என்று அவர்கள் ஞானமாய் கேட்டனர். மெய்யாகவே நியாயப்பிரமாண உடன்படிக்கை ஒரு நுகமாகவே இருப்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த நுகம் அதிக பாரமாயிருந்து, அவர்களாலும் அவர்களது பிதாக்களாலும் சுமக்கக்கூடாதிருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திலிருந்து கிறிஸ்து அவர்களை விடுவித்திருந்தார். கர்த்தர் ஒருபோதும் அவர்கள்மேல் கொடுத்திராத அந்த நுகத்தை, சகோதரர்கள்மேல் ஏன் இவர்கள் சுமத்துகிறார்கள்?

இதற்கும் அப்பாற்பட்டு நோக்கும்போது, நியாயப்பிரமாணத்துக்கு விலக்கப்பட்டு, ஒருபோதும் நுகத்தினடியில் வராத புறஜாதியார், சில வகைகளில் தகுதியடைந்திருப்பதால், இருவரில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்துள்ளனர்; ஆகவே “ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள்(புறஜாதியார்) இரட்சிக்கப்படுவது எப்படியோ, அப்படியே நாமும் (எபிரேயர்) இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே“ என்றார்.

**இக்காரியத்தின் முடிவு :–**

இக்கேள்விக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த தீர்மானம் 22 முதல் 29 வசனங்களில் நாம் காண்கிறோம். அவர்கள் எழுதிவைத்ததோடு மட்டுமல்ல, அதை, நம்பத்தகுந்த இரு சகோதரர்களாகிய யூதாஸ்–பர்னபாஸ் மற்றும்சீலாவிடம் கொடுத்தனுப்பி, அவர்கள் அத்தீர்மானங்களை பவுல் மற்றும் பர்னபாவிடம் சேர்க்கும்படி எழுத்துவடிவிலும் மற்றும் வாய்மொழி சாட்சியமாகவும் பெறும்படி ஏற்பாடுசெய்தனர். தொல்லைதரும் இந்த போதனைகள் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களது அதிகாரம்பெற்றவைகளல்ல என்பதே அத்தீர்மானமாய் இருந்தது. அந்த கடிதத்தில் எழுதப்பட்டதன் ஒட்டுமொத்தக் கருத்தை தொகுத்து பிரமாணமாக அல்ல, அத்தியாவசியமான காரியங்களாக கொடுத்திருந்தனர். அவை :–

1. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளுக்கு விலகியிருத்தல்
2. இரத்தத்துக்கு விலகியிருத்தல்
3. நெருக்குண்டு செத்ததற்கும் விலகியிருத்தல்
4. வேசித்தனத்துக்கு விலகியிருத்தல்

இக்காரியங்களுக்கு விலகியிருத்தல் மட்டுமே அவர்களை கிறிஸ்தவர்களாக்கும் என்று அறிவுறுத்தப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசமும், அவருக்காக தங்களை தத்தம்செய்வதும், பெருமுயற்சியெடுத்து அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதுமே அவர்களை கிறிஸ்தவர்களாக உருவாக்கும் என்று இதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவைகளிலிருந்து விலகியிருத்தலைக் குறித்து அவர்கள் பிரகடனப்படுத்தியதாவது;

“இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும்” பரிந்துரைக்கப்பட்ட இவைகளை கடைப்பிடிப்பது ஆதாயமளிக்கும். உண்மையாகவே, அப்போஸ்தலர் பவுல் மிகவும் வலியுறுத்தி, “அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறு தலாயிருக்கிறது” என்று சுட்டிக்காட்டினார். ஏனெனில் தேவனிடத்திலான அன்பு பரிசுத்தத்தை நம் ஜீவியத்தில் கடைப்பிடிக்கும்படி கட்டுப்படுத்தும், நம் அயலானிடத்திலான அன்பு பூமிக்குரிய நீதிநியாயத்தைக் கடைப்பிடிக்கச்செய்யும். வேறுபட்ட பண்புகள் அறிவு மற்றும் மனஉணர்ச்சிகள்கொண்ட யூதர் மற்றும் புறஜாதியாரால் உருவாகிய “சரீரத்தின்” ஐக்கியத்தைப் பாதுகாக்க, இங்கு பரிந்துரைக்கப்பட்ட விஷயங்கள் அவசியமானவை.

இறைச்சிக்கடைகளில் விற்பவைகளை வாங்குவது தீங்கு விளைவிக்குமா, விளைவிக்காதா என்று விவாதிக்காமலும், அவைகள் கொல்லப்படும்போது நடத்தப்படும் அந்நிய சடங்கு முறைமைகளை பகுத்தறியாமலும், இவைகளிலிருந்து விலகியிருக்கவேண்டும் என்பதே கொடுக்கப்பட்ட ஆலோசனையாயிருந்தது. பரந்த நிலைப்பாட்டில் பார்க்கும்போது, விக்கிரகம் என்பது மரம், இரும்பு, கல் இவைகளால் உண்டாக்கப்பட்டாலும், இவைகள் உணவை எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தவோ, ஆதாயமளிக்கவோ முடியாது என்றாலும், அப்படிப்பட்ட இறைச்சியை புசிப்பது, புறஜாதியாரின் விக்கிரக ஆராதனையில் கலந்துகொள்வதற்கு ஒப்பாக கருதப்படும். இந்தவிஷயத்தில் புறஜாதியார் பலவீனமான சகோதரர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தங்களது சுயாதீனத்தை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கமுடியும். யூதரும் புறஜாதியாரும் மிக ஆழமாக தத்துவரீதியாக காரியங்களை அலசி ஆராயாமல், அவர்களது உணர்வுகள் காயப்படாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

இதுபோன்ற கருத்து, இரத்தத்தை புசிப்பதை தடைசெய்வதிலும் இணைந்துள்ளது. யூதருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இது தடைசெய்யப்பட்டிருந்தது, அவர்களுக்கு இது வாழ்வின் சின்னமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது, இதனைப் புசிப்போரது ஜீவன் எடுக்கப்படுவதற்கு, தானே பொறுப்பாளி ஆகிவிடுகிறார். அதோடுகூட, நியாயப்பிரமாணத்தில் நிழலாக கடைப்பிடிக்கப்பட்ட சடங்குகளில், தடைசெய்யப்பட்டிருந்த இரத்தம் பாவநிவாரணபலியைக் குறிப்பதன் அடையாளமாக உபயோகிக்கப்பட்டது, இதில் பாவத்துக்கான ஒப்புரவாக்குதல் இரத்தத்தின்மூலம் ஏற்பட்டதை இது குறிப்பிடுகிறது. இந்த நிழலான பாடங்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்து. யூதர்கள் இரத்தத்தை உபயோகிக்ககூடாது என விலக்கப்பட்டிருந்தனர். மேலும் இக்காரியத்தோடு தொடர்புடைய மற்ற தூய்மையான காரணங்களும் இருக்கக்கூடும், அவைகளை நம்மால் இதுவரை அறியமுடியவில்லை. புறஜாதியார் நியாயப்பிரமாண

உடன்படிக்கைக்குள் ஒருபோதும் வராததால், இந்த தடைகள் ஒருபோதும் அவர்களுக்கு வந்ததில்லை. ஆனால் இந்தப்பாடத்தைப் பொறுத்தவரையில் யூதர்களது கருத்துக்கள் ஆழமாய் ஆணிவேராய் பதிந்திருந்தபடியால், சபையின் சமாதானத்துக்காக புறஜாதியார் இந்த முறைமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாயிற்று. நெருக்குண்டு செத்தவை என்பதன்பொருள், கண்ணியில் சிக்குண்ட மிருகங்களைஎடுத்து, அதன் இரத்தம் சிந்தப்படாமல் அல்லது வழிந்தோடாமல் மரணத்துக்குள்ளாக்குவது. யூதரது பிரமாணத்தின்படி அப்படிப்பட்ட எல்லா இறைச்சிகளும் புசிக்கப்படக்கூடாது. இந்தத் தடையானது ஆவிக்குரிய இஸ்ரயேலின் இரண்டுகிளைகள் இணக்கமாயிருப்பதற்கு அவசியமாயிருந்தது. அந்த இரண்டுகிளைகள் யூத மார்க்கத்திலிருந்து வந்தவர்களும், புறஜாதியாரிலிருந்து வந்தவர்களுமாவர். அவர்கள் சண்டையிடவும் சபையில் பிரிவினைகளை உண்டாக்கவும் விரும்பாதிருந்தால் இவ்விஷயங்களை பொருத்தமட்டில் புறஜாதி சகோதரர்கள் நிச்சயமாக கட்டுப்படுத்தப்படுவர் அல்லது அவர்களது சுயாதீனத்தை பலியிட நேரிடும்.

நான்காவது காரியம் விலகியிருத்தலைக் குறித்தது – "வேசித்தனம்" ஆகும். ஏன் ஒழுக்கரீதியான கட்டளை இவ்வாறு மற்றவைகளிலிருந்து பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மற்ற சடங்காச்சார தேவைகளோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது என்பதும் புரிந்துகொள்ள கடினமாயுள்ளது. இன்னும் சரியாய் சொல்வோமானால், ஏன் அவபக்தி, போதை, விக்கிரக ஆராதனை, விபச்சாரம், பொய்சாட்சி, கொலை போன்றவை இதோடு சேர்க்கப்படவில்லை ? என்று நாம் வினவுகிறோம். புறஜாதியார் எல்லா குற்றங்களையும் செய்ய சுதந்திரம் பெற்றுள்ளார்களா என்று இம்மாநாட்டில் நிபந்தனை விதிக்கப்படவில்லை என்று நாம் புரிந்துகொள்ளவேண்டுமா ? மேலும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட இறைச்சியை அல்லது நெருக்குண்டு செத்ததற்கும்,இரத்தம் புசிக்கவும் வேசித்தனம் பண்ணாதிருக்கவும் மட்டும் ஆலோசனை தரப்பட்டதா ? நிச்சயமாக அப்படியல்ல. நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகள் அனைத்தும் புதுசிருஷ்டியின் ஒரே பிரமாணத்திற்குள் அடங்கியுள்ளது. உன் தேவனாகிய கர்த்தரை நேசி, உன் அயலானையும் நேசி என்பதே அக்கட்டளை.

விக்கிரகஆராதனை, அவபக்தி, கொலை, களவு, பொய்சாட்சி, விபச்சாரம் போன்றவைகளை அன்பு மூடவல்லது. ஆனால் அன்பின் பிரமாணம் ஆலோசனைசங்கத்தால் கணக்கிடப்பட்ட பட்டியலை முற்றிலுமாக மூடமுடியாது. பூமியின்மேல் எவைகளை கட்டுவார்களே அது தேவனால் அங்கீகரிக்கப்படும் என்ற அப்போஸ்தலர்கள் பெற்ற அதிகாரத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன. அவர்களும் அவ்வாறே தெய்வீக சித்தத்துக்கு முரண்படாது வழிநடத்தப்பட்டு, பூமியின்மேல் அவசியமற்றவைகளை கட்டாதபடிக்கு நிருபங்களில் வெளிப்படையாக எழுதிவைத்தனர். இந்தக் காரியங்களை எல்லா ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் தெய்வீக சித்தமாக கடைப்பிடிக்கும்படி இவ்வாறு அன்பின் பிரமாணத்தோடு கூட்டி சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா இறைச்சிக் கடைகளிலும் யூதரது நடைமுறைக்கு இணக்கமாகவே பின்பற்றப்பட்டு, அவர்களது ரபிமார்களால் பரிசோதிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றபிறகே உண்ணுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. ஆயினும் அநேக யூதர்கள் இதை உணரத் தவறுகின்றனர்.

இந்த ஞானமான நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு, நல்ல முடிவுகளை கொணர்ந்திருக்கிறது, அங்கங்களிடையே இணக்கம் நிலவுகிறது, ஒருமைப்பாட்டின் ஆவியும் ஐக்கியமும் ஏற்பட்டிருக்கின்றன. கர்த்தர் சபையாரது காரியங்களை இவ்வாறு மேற்பார்வையிட்டு, அவளது வழியை நியமிக்கப்பட்ட நீர்ச்சுனைகளாகிய அப்போஸ்தலர்கள்மூலம் வழிநடத்திவருகிறார் என்பதை உணர்வதே இதில் மறைந்துள்ள இரகசியமாகும். அதுபோலவே இன்றையநாளிலும், கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் நேர்மையான இருதயம்நிலவி, உட்பிளவு, பிரிவினைகள் ஆகியவை அறியப்படாதிருக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் மூலமாக கர்த்தர் கூறும் வார்த்தைகளால் அவரது வழிகட்டுதலும் அறிவுரையும் கண்டறியப்படவேண்டும். அதோடுகூட, அப்போஸ்தலர்கள் மரித்தபின்பு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக கூறப்பட்ட தம் வார்த்தைகளைக்கொண்டு, சரியான பாதையை காண்பிக்கும் கருவிகளாக உபயோகிப்பதில் பிரியப்படுகிறார். சுத்த இருதயமும், நேர்மையான மனசாட்சியும் பணிவுள்ள ஆவியுமே அத்தியாவசிய மானதாகும்.

**கிறிஸ்தவ சுயாதீனத்தை அடைதல் :–**

ஒரு சில காரியங்களைச்செய்ய அதிகாரமளிக்கும் சுயாதீனத்திலிருந்தும், சட்டதிட்டமற்ற நிலையினால் உண்டாகும் சுயாதீனத்திலிருந்தும், அராஜகத்தால் ஏற்படும் சுயாதீனத்திலிருந்தும், கிறிஸ்தவ சுயாதீனம் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பிக்கப்படவேண்டும். இவ்வுண்மையை எடுத்துக்காட்டுடன் விளக்குவதாக இப்பாடம் அமைந்துள்ளது. மோசேயின் முறைமைக்குள்ளாக இருந்துவந்த யூதர்களுக்கு உபவாசமிருத்தல், சுத்திகரித்தல், பண்டிகைகள், புதிய சந்திரன்கள், ஓய்வுநாட்கள் மற்றும் பரிசுத்தநாட்களை அனுசரிப்பது கட்டாயமாயிருந்தது. ஆனால் நியமிக்கப்பட்ட இந்த முறைமைகளை அனுசரிப்பதிலிருந்து கிறிஸ்தவனுக்குரிய சுயாதீனம் பெரும்பாலும் விடுதலை பெற்றுத்தந்துவிட்டது. இந்த முறைமைகளில் பெரும்பாலானவை தேவவீட்டின் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகவும், கற்பிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதே, மாறாக தேவவீட்டின் புத்திரர்களுக்கு இவை பொருந்தாது.

புறஜாதியாருக்கோ தேவன் ஒருபோதும் பிரமாணங்களை கொடுத்திருக்கவில்லை. ஆகவே அவர்கள் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டோ, அதன் நிபந்தனைகளுக்குட்பட்டோ, அதன் தேவைகளைச் சார்ந்தோ இருக்கவில்லை. மாறாக, அவர்கள் குறிப்பிட்ட சில மூடநம்பிக்கைகள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்கங்களுக்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்கும் ஆட்பட்டிருந்தனர். கிறிஸ்தவ சுயாதீனம் என்பது தவறான எல்லா சடங்கு சம்பிரதாயங்களையும், மூடப் பழக்கவழக்கங்களையும் ரத்துசெய்வதோடுகூட, ஒரு பிரமாணத்தை கட்டாயப்படுத்தி சுமத்துகிறது – மோசேயின் பிரமாணத்தையோ அதன் ஏற்பாடுகளையோ, சடங்குகளையோ அல்ல, மாறாக, பூரண சுயாதீனப்பிரமாணத்தை,"கிறிஸ்துஇயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தையே ஆகும்(யாக்1:25; ரோமர் 8:2). எதிரெதிரான திசைகளிலிருந்து வந்திருந்த யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவின் சபை மற்றும் அதன் பூரண சுயாதீனப்பிரமாணத்தின் நிபந்தனைகளையும், ஒழுக்கமுடைமைகளில் தவறாத நிலைப்பாட்டையும் கண்டு, குழப்பமடைந்து திகைப்படைந்தது நம்மை ஆச்சரியப்படுத்தவில்லை.

**--1549--**

பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு 20 வருடங்கள் கழித்து, நம் பாடத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைச்சங்கம் எருசலேமில் கூட்டப்பட்டது. கிறிஸ்துவின் பிரமாணத்தைக் குறித்த பாடத்திற்கு ஒருதீர்வை எட்டும் நோக்கத்திற்காகவே இது நடைபெற்றது. புறஜாதியாரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும், யூதரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும் இது ஆளுகைசெய்வது – யூதர்களைப் பொறுத்தமட்டில் மோசேயின் முறைமைப்படியான எதிர்பார்ப்புகள் எந்தளவு ஒழிக்கப்பட்டது என்றும், புறஜாதியாரிலிருந்து மனம்மாறியவர்கள்மேல் கிறிஸ்துவின் பிரமாணம் எந்தளவு கட்டுப்பாட்டை விதித்திருந்தது என்றும், இந்த இரண்டு வகுப்பாரும் முன்பு மோசேயின் பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதினிமித்தம் சமுதாயரீதியாக, மதரீதியாக பிரிந்திருந்தாலும், தற்போது யாருடைய மனசாட்சிக்கும் ஊறுவிளைவிக்காதபடி முழு சகோதர ஐக்கியத்திலும் உறவிலும் ஒன்றிணையவும், தேவையற்ற கட்டுப்பாடுகளால் யாருடைய சுயாதீனமும் பாதிக்கப்படாதபடி நடப்பதைக்குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

புறஜாதிதேசங்களில் பிறந்த யூதருக்கும் புறஜாதியாருக்குள்ளும் கிறிஸ்தவத்தின் மையமாக அந்தியோகியா சபை அமைந்திருந்தது. புறஜாதியாரால் சூழப்பட்டிருந்த அந்தியோகியாசபை, அதன் அங்கங்கள் அனைவரும் கிறிஸ்தவ சுயாதீனத்தின் பெருந்தன்மையான ஆவியை விளைவிப்பதில் கவனமாயிருந்தனர். அந்த சபையிலிருந்த சில அங்கங்கள், எருசலேமிலிருந்து வந்திருந்த சில சகோதரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதால், கிறிஸ்தவ சுயாதீனத்தின் காரியத்தில் எல்லை மீறுவதாக சபையார் பயப்பட்டனர். இதன்படி, விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதியார், மோசேயின் பிரமாணத்தையும், யூதமார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ளவும், இந்த நிபந்தனையின்கீழ் முழுவதுமாக வந்து, யூதராக பிறந்திருப்பினும் விருத்தசேதனம் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். எருசலேமிலிருந்து சமீபத்தில் வந்திருந்த சில சகோதரர்கள் இந்த காரியத்தினால் உண்டான பயத்திற்கு அதிக முக்கியத்துவமளித்ததன் விளைவாக, அந்தியோகியா சபையில் கருத்துவேறுபாடு உண்டானது. இது எந்தளவு சென்றது என்று கிரேக்க வார்த்தை குறிப்பிடுகிறதெனில், ஏறத்தாழ ஒரு உட்பிளவு அல்லது சபை உடைந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனாலும் சரியான ஆவியும் பரவலாக இருந்தது தெளிவாயிற்று. ஏனெனில், வெறுப்பளிக்கும் கேள்வியினால் அதிருப்திக் குழுக்களாக பிரிந்துபோவதற்கு பதிலாக, ஒவ்வொரு பிரிவும் மற்றவரது மனசாட்சியின் உறுதியை மதித்துநடந்தனர். எருசலேமிலுள்ள சபைக்கு இச்செய்தியைக் கொண்டுசென்று, அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களிடம் ஆலோசனையும் புத்திமதியும் பெறவும், அவர்கள்தரும் பொருத்தமான ஆலோசனையை பின்பற்றவும் தயாராயினர். தேவன் அப்போஸ்தலர்களை நியமித்திருந்தார் என்றும், இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன.ஆதலால் அவர்கள் தரும் இறுதி ஆலோசனை சரியாகவே இருக்கும் என்றும் அந்தியோகியா சபை சகோதரர்கள் தேவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தனர். அதேசமயத்தில், எருசலேமிலுள்ள சகோதரர்கள் யூதத்துவத்தின் ஆதிக்கத்தில் சூழப்பட்டிருப்பதை அறிந்து, மோசேயின் சடங்கு சம்பிரதாயத்தில் குறுகிய பார்வை உடையோராக இருந்தார்கள். அவர்கள் தங்கள் இரண்டு பிரதானமான பிரதிநிதிகளாகிய அப்.பவுல் மற்றும் பர்னபாவை அனுப்பினர். அவர்கள் எருசலேம் ஆலோசனை சங்கத்தின்முன்பாக, பெரும்பாலான சபைகளின் சரியான கருத்துக்களை சமர்ப்பித்தனர். இவ்வாறாக, முழு பாடங்களும், முழுவதுமாகவும், உண்மையாகவும் ஆய்வுசெய்யப்பட்டு, கூடுமானவரை துல்லியமாக கர்த்தருடைய சிந்தை கண்டறியப்பட்டது.

சகோதரர்களது அறிவு வரம்புக்குமீறி எந்த வழிமுறையையும் தீர்மானிக்காதபடி, இது ஒரு முறையானதும் அழகுவாய்ந்ததுமான ஆவியாக இருந்தது. இது தேவபார்வையிலும், தெளிந்தசிந்தையுடைய மனிதரது நிதானிப்பிலும் பாராட்டத்தக்கதாக இருந்தது. பொதுவாகவே அறிவுவரம்புக்கு மீறின வழிமுறைகளை பின்பற்றுவோர், கர்த்தர்மேல் போதுமானஅளவு விசுவாசமில்லாதவர்கள். அவர் சபைக்கு நிஜமான தலையாய் இருக்கிறார் என்றும், அவரது சித்தத்தை அறியத் தேடுகிறவர்களது நடவடிக்கைகளில் அவரது பராமரிப்பு இருந்து அவர்களை வழிநடத்தும். சாந்தகுணமுள்ள மோசே வனாந்திரத்தில் இரண்டாம்விசை கன்மலையை தவறாக அடித்து கூறினதுபோலவே, இவர்கள் கட்டுக்கடங்காதவழியில் சுயநிச்சயத்தின்படி செய்பவர்கள். “உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர்புறப்படப் பண்ணுவோமோ?” – எண் 20:10.

உண்மையினிமித்தமோ வெளிப்படையாக பேசுவது மற்றும் செய்வதினிமித்தமோ, பகுத்தறிவுள்ள நடக்கையின்மூலமோ அடையக்கூடிய எல்லா வெளிச்சத்தையும் அடைவதால், சத்தியம் எதையும் இழப்பதில்லை. பவுல் மற்றும் பர்னபாவினிடத்தில் அந்தியோகியா சபை மாபெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்த இரு மனிதர்களும் உண்மையாகவே கர்த்தரது விசேஷித்த ஊழியக்காரர்களாயும், நாவுகளுமாயிருந்ததற்கு எல்லா சாட்சியங்களையும் கொடுத்ததாக சபையார் சாட்சியமளித்தனர். இருதரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்வியின்மீது இருதரப்பினரும்கூடி அவரவர் கருத்தைக்கேட்டும், கர்த்தருடைய சித்தம் என்னவென்று முழு உடன்பாடுள்ள தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்பது விநோதமாய்த் தோன்றுகிறது. பொதுவாக சபைக்கு கர்த்தரின் சித்தமே நிச்சயத்தை ஏற்படுத்தும். அன்றைக்கு கடைப்பிடிக்கப்பட்ட இந்த உன்னத நோக்கத்தை இன்றையநாளிலும் கடைப்பிடிக்கவேண்டுமென்று நாம் பரிந்துரைக்கிறோம். ஆயினும் இன்றைக்கு, ஜீவனுள்ள அப்போஸ்தலர்களிடம் கேள்விகளைக்கேட்டு ஆலோசனை பெறமுடியாது, நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களது எழுத்துவடிவிலான போதனைகள் வழியாக தகவல் குறிப்பு பெறவேண்டும். தேவவசனத்தின்மேல் சிறந்த அறிவைப் பெற்றுள்ளோர் மற்றும் தெய்வீகத்திட்டத்தைக் குறித்த நுண்ணறிவு பெற்ற சகேதரர்களிடையே உதவிகேட்கத் தேடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் மத்தியில் உண்மை சுயாதீனத்தின் தரம், மிகைப்படுத்தி மதிப்பிடக்கூடாது. இது அவர்களது நிஜ வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிடுகிறது. ஏனெனில், அப்போஸ்தலர்கள் மரித்து நித்திரைக்குள்ளான உடனே வெளிப்பட்ட இருண்டயுகங்களில், இந்த ஐக்கியத்தைக்குறித்த தவறான கருத்தின் காரணமாக உண்மை சுயாதீனத்தின் ஆவி நசுக்கப்பட்டுவிட்டது. அவர்களது அறியாமை, மூடநம்பிக்கை, குருட்டுத்தனம், உபத்திரவம் இவைகளே இருண்டயுகத்தின் விளைவுகளாக வெளிப்பட்டன. 16ம் நூற்றாண்டில் துவங்கின மறுசீரமைப்பு இயக்கம், நம் ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீனத்தின்ஆவியை மறுபடியும் உயிர்ப்பிப்பதாக இருந்தது. கிறிஸ்துவின் போதனைகள் தந்த அஸ்திபாரத்தின் எல்லைக்குள் -1550- [illegible]தீனத்தைப் பற்றியும் சிந்திக்கச்செய்தது. மனநிலையும் சூழ்நிலையும் அனுமதிக்குமானால், மதக்கொள்கைகளுக்கு எதிரானவர்

என்ற முத்திரையைக் கொடுக்காமல் அல்லது சகோதரர்களால் வார்த்தையாலோ செயல்களாலோ துன்புறுத்தப்படாமல், நமது சுயாதீனம் இன்னும் அதிக அளவிலா அல்லது ஓரளவா என்று விசுவாசத்தின் மூலம் சிந்திக்க வழிவகுத்தது.

இன்றைக்கு பெயர்கிறிஸ்தவ மண்டலங்களில், அதிகப்படியான சுயாதீனமும், மிகக்குறைந்த அளவிலான சுயாதீனமும் சேர்ந்த, விநோதமான கலவை படிப்படியாக நடைபெற்றுவருகிறதை ஆச்சரியமாகக் காண்கிறோம். கிறிஸ்துவின் போதனைகளைக்குறித்தும், அப்போஸ்தலர்களது போதனைகளைக்குறித்தும் சில கருத்துவேறுபாடுகள் வெளிப்படும் என்பதால், கூடி விவாதிப்பதற்கு மிகக்குறைந்த சுயாதீனம் பெற்றுள்ளவர்கள் தடைசெய்யப்படுகிறார்கள். இருதயத்தின் ஐக்கியமும், சிந்தையின் ஐக்கியமுமின்றி, வெளித்தோற்றமான ஐக்கியத்தைப்பெறும் முயற்சியே இதுவாகும். இது, தவறை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பவர்களுக்கும், அந்த தவறுகள் வெளிப்படுத்தப்படாததால், அந்த சத்தியத்துக்கு கட்டுப்பட்டு அதைப் பற்றிக்கொண்டிருப்போருக்கும் இடையே காயத்தை வருவிக்கும். மேலும் கிறிஸ்து தம் பிள்ளைகளை விடுதலையாக்கி பெற்றுத்தந்த சுயாதீனங்களை முறையாக பயிற்சிசெய்யத் தேவையான கிருபை மற்றும் அறிவைத் தடைசெய்கிறது. இந்த விஷயங்களில் பொதுவாக அவர்கள் கடைப்பிடித்துவருபவை என்னவெனில், சத்தியத்தை மூடிமறைப்பதோடு, தவறுகளையும் மூடிமறைப்பது தயவளிப்பதுபோல் எண்ணுகின்றனர். ஐக்கியம்போல் தோற்றத்தை ஏற்படுத்துவது, நிஜமான ஐக்கியம் ஏற்படுத்தும் நோக்கத்துக்காகவே என்றும், கிறிஸ்துவின் சரீரமாகிய உண்மை அங்கங்களது வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கிறது என்றும், தவறான யூகத்தின் அடிப்படையில் இவ்வாறு செய்கிறார்கள். இப்படிப்பட்ட போலிஐக்கியம் உருவாகி, விளைவுகளை ஏற்படுத்தி, பெயர்கிறிஸ்தவ சபைகள் வளர்ச்சிபெற்றாலும், சிறிதுகாலம் மட்டுமே நிலைத்திருந்து, மகா உபத்திரவக்காலத்தின்போது அழிக்கப்பட்டுவிடும்.

மற்றொருவகையில், அதிகப்படியான சுயாதீனம் இருப்பதையும் நம்மால் காணமுடிகிறது. இவர்கள் யாரெனில், பரிணாமவாதக்கொள்கைக்காரர்களும், பகுத்தறிவு சிந்தனையாளர்களுமே. இவர்களுக்கு போதனைகள் இறையியல் கல்லூரிகளிலும், அன்றாட கருத்து பரிமாற்றம் செய்பவர்களிடமும், பிரசங்கமேடைகளிலும் கொடுக்கப்படுகிறது. இந்த போலிபோதனைகளுக்கு முரண்பாடாக பேசவோ, செயல்படவோ முயற்சித்தால், தடைசெய்யப்பட்டு சபையின் ஐக்கியத்தை அழிப்பவர்களாகவும், கலகத்தைத் தூண்டுபவர்களாகவும் எண்ணப்படுவர். இவ்வாறாக, அதிகப்படியான சுயாதீனமும், அதிகப்படியான அடிமைத்தனமும் ஒன்றிணைந்து, இன்றைக்கு பெயர்சபை அமைப்புகளில் கிரியை செய்துவருகிறது.சத்தியத்தை ஒதுக்கவும், அப்புறப் படுத்தவும், அதை நேசிப்பவர்களையும் , கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தின்படி நிற்க விரும்புவோரை வெளியேற்றவுமே இவ்வாறு நடக்கிறது. தவறை ஸ்தாபித்து, தகுதியுள்ளதாக்கி, அபிவிருத்திசெய்து, மேன்மைப் படுத்துவது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. இத்தவறுகளை அதிவிரைவாகப் பரப்புவதை மறுத்தாலும், தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தது. கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தினை ருசிபார்த்த கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும், அந்த சுயாதீனத்தில் நிலைத்துநின்று, அதைத்தடுக்க விரைவில் ஒருமுயற்சி எடுக்கும்போது கூடியவிரைவில் இல்லையென்றாலும், எல்லா மனித அமைப்புக்களின் அடிமைத்தனங்களையும் முழுமையாக அகற்றுவோமாக. இவ்வாறாக அவர்கள் நம் கர்த்தரும், நம் மீட்பரும், நம் போதகரும், நம் ராஜாவுமாயிருப்பவரோடு ஸ்திரமாகவும், உண்மையாகவும் நிலைத்திருப்பார்களாக.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதில் விலகியிருத்தலைக் குறித்த இந்த வழிமுறையிலிருந்து, கொரிந்து சபைக்கு எழுதின அப்போஸ்தலரது பிந்தைய போதனைகள் முரண்படுகிறதா ?(1கொரிந்தியர் 8ம் அதி.). இல்லை என்று நாம் பதிலளிக்கிறோம்.விக்கிரகங்களுக்கு முன்னதாகவே படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதை அப்போஸ்தலர் பரிந்துரைக்கவில்லை. அதற்கு மாறாக, அவ்வாறு உண்ணும் பழக்கமுடைய ஒரு சிலருக்கு பதிலளிக்கிறார். அவர்களது விவாதத்தின் காரணகாரியத்தை அவர் ஏற்றுக்கொள்கிறார், அதாவது, விக்கிரகம் என்பது, மரம் இரும்பு மற்றும் கல்லால் உண்டானது, இவை முன்பாக படைக்கப்படும் இறைச்சி எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை, நன்மையடைவதுமில்லை.ஆனால் ஒருசிலர் பகுத்தறிவில் பலவீனமாயுள்ளபடியால், அவர்களால் இவ்விஷயத்தை புரிந்துகொள்ளமுடியாமல், தங்கள் மனசாட்சியில் தங்களை கறைப்படுத்திக்கொண்டு பாவத்திற்குட்படுவர். இது அதிகமாகப்பெருகி, அதனிமித்தமாக அழிவுக்குள்ளாகிவிடாதபடி, அவர்களை காக்கவே அந்த இறைச்சியை புசிக்கக்கூடாது என்று தடைசெய்கிறோம் என்று காண்பித்தார். மனசாட்சியின் சத்தத்துக்கு கீழ்ப்படியவேண்டும். அதன் நிலைப்பாடுகள் எந்தளவு மூடப்பழக்க வழக்கமாக, தவறு நிறைந்ததாக இருந்தாலும் அது ஒருபொருட்டல்ல.– அது மீறுதலுக்குட்பட்டால் நமக்கு ஆபத்து. நமது மனசாட்சி சற்று தேர்ச்சியடையட்டும், அதன் அறியாமை ஒருபோதும் மீறுதலுக்குட்படாதிருப்பதாக. மனசாட்சியை மீறுகிற ஒவ்வொரு காரியமும் குணாதிசயத்தில் அழிவுக்கு அதிகமாக வழிவகுக்கும். எல்லோரும் அவரவரது சொந்த மனசாட்சியையும், அதோடுகூட தாங்கள் தொடர்புகொள்கிற மற்றவர்களோடும், விசேஷமாக குழந்தைகளோடும் காத்துக்கொள்ள நினைவில்கொள்ளவேண்டும்.

ஒருமித்திருப்போம் நாம் தவறை வெறுப்பதில்
ஒருமித்திருப்போம் நம் அன்பில் –
எல்லாம் இனிமையும் உண்மையுமாக;
ஒருமித்து மகிழ்ந்திருப்போம் –
அது பாடலாய் கட்டுக்கடங்காது செல்லட்டும்
ஒருமித்து துயரப்படுவோம் –
அது ஜெபத்தில் சுக்கு நூறாகட்டும்
ஒருமித்த வல்லமையை வெளிப்படுத்துவோம் –
அது உம் பிள்ளைகளை விடுவிக்கட்டும்
இப்படி சத்தியத்தைப் பின்பற்றுதல் –
உம்மைப் பின்பற்றுதலாகும்

**--1551--**

## <u>இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன்</u>– பிலிப் 3:13

ஏமாற்றங்கள் கடுமையாய் உணர்ந்தபோதிலும்,
உந்தன் புருவங்கள் மீதே காணும்போதும்;
நம்பிக்கை அழிந்துபோய்விட்டதாலே
உம் இருதயம் துன்பத்தால் நொறுங்கிடச் செய்திட்டாலும்;
நீர் அன்பு செய்த உம் நண்பர்கள் உம்மை விட்டே விலகிப்போயினும்,
எதிரிகள் கொடுமையாய் ஈட்டியை எறிந்து
இரக்கமின்றி இகழ்ந்து வில்லை வளைத்தாலும்
உம் இருதயத்தையே ஊடுருவக் குத்த எண்ணினாலும்;

விழிப்புடன் உறுதியாய் உண்மையாய் இருந்திடு,
ஒரு அமைதியான மனிதனாய் பொறுத்திரு;
ஜாக்கிரதையாய் தேவசித்தத்தை அறிந்திடு..
அவர் திட்டத்துக்கு ஒப்புவித்திரு;
செவிகொடாதே மனித ஆலோசனைக்கு,
அன்பாய் அவை அளிக்கப்பட்டபோதும்.
கிட்டப்பார்த்தால் அவை பொருத்தமாயிருக்கும்,
வழிவிலக்கும் தூரமாய் பரலோகப் பாதையினின்று.

தயாராயிரு கிறிஸ்துவைப் பின்பற்ற,
எங்கெல்லாம் அவர் நடத்தினாலும்;
சத்தம் அந்நியனுடையதா கேட்காதே,
சத்தம் அவருடையதா செவிகொடு.
நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும்
துளியும் அச்சமின்றி பின்பற்று;
உன் பாதம் சுயவழியை தேடாதிருக்கட்டும்,
உன் கர்த்தர் சென்றவழியோ அங்கே உண்டு.

மனிதர் சந்தேகத்தோடு பார்த்தால் என்ன
ஏளனமாய் நகைத்தாலென்ன வெறுத்து ஒதுக்கினாலென்ன ?
நீ ஒருபோதும் உணராய் திடீர்வேதனை,
உன் கர்த்தர் தாங்கியிருக்கிறார்;
சோதனைகள் தற்காலிக வாழ்வில்
ஒப்பிடத்தக்கவையல்ல – அடைவோம்
மகிமை நாம் அவரோடு பங்குபெறுவோம்,
அவரது பாடுகளை நாம் பகிர்ந்துகொண்டோம்.

– Herald Magazine

--------------

**--1552--**

R 4375 / ஏப்ரல் 1909

# நினைவுகூருதல் ஆசரிப்பு

புரூக்லின் கூடாரத்தில் (Brooklyn Tabernacle) கிட்டத்தட்ட 450 பேர் நமது அருமை மீட்பருடைய நினைவுகூருதல் இராப்போஜனத்தை, ஏப்ரல் 4-ஆம் தேதி, ஞாயிறு மாலையன்று ஆசரித்தார்கள். மிகவும் அதிகமானவர்கள் பங்குகொண்டதில் எங்களுக்கு மகிழ்ச்சியே. கலந்துகொண்டவர்கள் அனைவரும் புரூக்லினைச் சேர்ந்தவர்களல்ல. உண்மையைச் சொல்லவேண்டுமெனில் புரூக்கிலினில் வழக்கமாய்க் கலந்துகொள்ளும் சபையாரில் அநேகர் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வருபவர்களாகவே காணப்படுகின்றனர். அத்தருணமானது மிகவும் பயபக்தியுடனும், தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாகவும் காணப்பட்டது. எங்களுக்கு மதிய வேளையில் நிழலான மற்றும் நிஜமான பஸ்கா தொடர்பாகக் கொடுக்கப்பட்ட சத்திய தூதானது, பயபக்திக்குரிய நினைவுகூருதல் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்கு நேராக, எங்கள் மனங்களை வழிநடத்தினதாய்க் காணப்பட்டது மற்றும் மாலை நேரத்தின்போதான விளக்கவுரைகளானது, அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய அர்த்தம் தொடர்புடையதாகக் காணப்பட்டது. அப்பத்தைப் புசித்தல் என்பது, நமது கர்த்தருடைய மனுஷீக உரிமைகளைச் சொந்தமாக்கிக் கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதன் காரணமாக நாம் நீதிமானாக்கப்படுகின்றோம்; இதன் காரணமாக அபூரணங்களை — சுதந்தரித்துக் கொண்டதின் நிமித்தமான, அபூரணங்களை நாம் கொண்டிருந்தாலும்கூட, தேவனுடைய பார்வையில் நீதிக்கேதுவான நம்முடைய நீதிமானாக்கப்படுதலானது தக்கவைக்கப்படுகின்றது என்று நாம் விளக்கினோம். இரத்தம் என்பது நம்முடையதாக்கிக் கொள்ளப்பட்டதும், நம்மை ஜீவனுக்கு ஏதுவாய்த் தீர்த்திட்டதுமான நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளை முதன்மையாய்க் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாம் விளக்கினோம்.

அடுத்ததாக நாங்கள் இரண்டாவதும், பெரியதுமான கண்ணோட்டத்தை எடுத்துக்கொண்டு, அப்போஸ்தலனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில், உண்மையுள்ளவர்கள் அனைவரும், இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாரிலுள்ள அனைவரும், கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும், ஒரே அப்பமாகத்தக்கதாக தங்கள் ஆண்டவரோடு இணைந்துகொள்கின்றனர் மற்றும் அந்த அப்பம் பிட்கப்படுதலிலும் அவரோடுகூட இணைந்துகொள்கின்றனர் என்றும், இப்படியாக அந்த அப்பம் மனுக்குலத்தின் உலகத்திற்குரிய திரும்பக்கொடுத்தலின் அப்பமாகுகின்றது என்றும் கண்டோம். மேலும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் வெளிச்சத்தில், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகுகையில், நாம் நமது கர்த்தரோடுகூட, அவரது பாடுகளின் பாத்திரத்திலும், பூமிக்குரிய ஜீவனை அவர் பலிச் செலுத்துவதிலும் பங்காளிகளாகுகின்றோம் என்றும் கண்டோம். இன்னுமாக எப்படித் தெய்வீக நோக்கங்களின்படி, நாம் என்றென்றுமாய்க் கையளித்துவிடுகின்றதான இந்தப் பூமிக்குரிய ஜீவனானது, புது உடன்படிக்கையின்கீழ் இஸ்ரயேலுக்கு, யூதாவுக்கு மற்றும் மனுக்குலத்தின் குடும்பங்கள் அனைத்திற்கும் கடந்துபோகும் மற்றும் நமக்கு ஆவிக்குரிய ஜீவனும், உரிமைகளும் அருளப்படும் என்றும் கண்டோம்.

"கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் (அவரது பாடுகளில்) பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

இப்படியாக "தேவனுடைய ஆழங்களை" மீண்டுமாய்க் கணநேரம் கண்ணோக்கினபோது, எங்கள் இருதயங்களானது, உணர்ந்துகொள்ளுதலினால், ஆழமாய்த் தூண்டப்பட்டது. இந்தத் தற்காலத்தில் பாடுகளிலும், பின்வரும் மகிமையிலும்நமது கர்த்தரும், மீட்பருமானவருடன் இத்தனை நெருக்கமாய் இணைந்திடுவதற்கு நாம் அழைக்கப்பட்டிருப்பது, எத்துணை ஆச்சரியமாய்க் காணப்படுகின்றது! இதைக் காட்டிலும் குறைவாய் எதையும் கர்த்தர் நம்மிடம் எதிர்ப்பார்த்திட முடியாது என்றும், இது ஒரு நியாயமான ஊழியம், சிலாக்கியம் மற்றும் கனம் என்றும் உள்ள உண்மைகளை மனதினுடைய கவனத்திற்குள் கொண்டுவந்தோம். நாம் அவரது "அங்கத்தினர்களென" ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, நாம் பண்ணின வாக்குறுதிக்கு உண்மையற்றுப்போவதன் காரணமாக, நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திட தவறுவதினால் உண்டாகும் இழப்பானது, எத்துணை பெரிய இழப்பாய் இருக்கும் என்று மீண்டுமாக நாங்கள் உணர்ந்துகொண்டோம். திரள் கூட்டத்தில் அடங்குபவர்கள்கூட, மகா உபத்திரவத்தில், அந்த நிலைப்பாட்டினை அடைந்தாக வேண்டும் என்றும், இருதயத்தில்

சுத்தமுள்ளவர்களும், அவரது ஆவியினால் நிரம்பியிருப்பவர்களுமே தவிர, வேறு எவரும் நித்திய ஜீவன் பெற்றிடுவதற்குக் கர்த்தரினால் பாத்திரமாய்க் கருதப்பட முடியாது என்றும், அப்போஸ்தலன் கூறுகின்றதுபோல நம்முடைய காரியம் ஒன்றில் நித்தியமான ஜீவன் (அ) நித்தியமான மரணமாகக் காணப்படுகின்றது என்றும் நாங்கள் சுட்டிக்காட்டினோம். ஜெயம்கொள்ளத்தக்கதாக — நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாங்கள் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்திலும், அன்பிலும், பக்தியிலும், வைராக்கியத்திலும் கட்டியெழுப்பிடுவதற்கு மீண்டுமாக நாடினோம். லேவியர்களால் அடையாளப்படுத்தப்படும் ஆவிக்குரிய ஜீவிகள் கீழான தளத்தில் ஜீவனைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும், உயர்தளத்தில் நித்தியமான ஜீவனையும், திவ்விய சுபாவத்தையும், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில் அங்கத்துவத்தையும் பெற்றுக்கொள்வது என்பது சில விதங்களில் உண்மையில் சுலபமானதாகவே காணப்படும் என்று நாங்கள் புத்திக்கூறினோம்.

அங்குக் கூடியிருந்த அனைவருமே நினைவுகூருதலின் அடையாளச் சின்னங்களில் பங்கெடுத்தார்கள் மற்றும் நாங்கள் ஆராதனையை ஜெபத்துடன் நிறைவுசெய்தோம், பின்னர் ஸ்தோத்திர பாடல் பாடினோம்; பிற்பாடு வழக்கமாய்ச் சொல்லும் வாழ்த்துதல்கள் எதையும் சொல்லாமல், முடிந்தமட்டும் அத்தருணத்தின் விலையேறப்பெற்ற சிந்தைகளைச் சுமந்துகொண்டிருக்கத்தக்கதாக, அமைதலுடன் வெளியேறினோம்.

இதுவரையிலும் நாங்கள் பெற்றுக்கொண்டதான அறிக்கை தகவல்களை வைத்துப்பார்க்கும்போது, ஆசரிப்பானது பரவலாய் ஆசரிக்கப்பட்டுள்ளதாகவும், பெரும்பான்மையான சபை கூடுகைகளில், கடந்த வருடத்தைக்காட்டிலும், கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிகின்றது. சில இடங்களில் எண்ணிக்கையின் அதிகரிப்புக் கொஞ்சமாகவும் (அ) இல்லாமலும் இருந்திருக்கின்றது; ஏனெனில் முன்பு பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து ஓர் இடத்தில் ஒன்றுகூடினவர்கள், இப்பொழுது தனியே கூடிடுமளவுக்கு அதிக எண்ணிக்கையில் வளர்ந்துள்ளனர். பிட்ஸ்பர்கிலிருந்து (Pittsburgh) வந்த தகவலானது சிறப்பானதாய்க் காணப்பட்டது - நாங்கள் எதிர்ப்பார்த்ததுபோலவே காணப்பட்டது; பைபிள் ஹவுஸ் சாப்பலானது (Bible House Chapel) நிறைந்துபோனதால், கூடுதலான நாற்காலிகள் அவசியப்பட்டு, கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும் முன் தருணங்களில் காணப்பட்ட அளவுக்கு அதிகமாய் இருக்கவில்லை; நிழலிலுள்ள அறிவுரைப்படி குடும்பங்கள் கூடிக்கொள்வதுபோன்று, ஒவ்வொரு இடங்களிலுமுள்ள நண்பர்கள் தங்களுக்குள்ளாகக் கூடிக்கொள்வது நலமாய் இருக்கும் என்று நாம் அடிக்கடி நினைப்பூட்டின பிற்பாடும்கூட, முன் தருணங்களில் அருகாமையிலுள்ள இடங்களிலுள்ள நண்பர்களுடைய வருகையின் காரணமாக நினைவுகூருதல் ஆராதனையானது வழக்கமாக கார்நீஜீ அரங்கிலோ (Carnegie Hall) அல்லது வேறு ஏதேனும் பெரிய மண்டபத்திலோ நடைபெற்றுவந்தது.

அறுவடை வேலை மீதான பொதுவான கவனமானது ஆழமாகிக் கொண்டும், விரிவடைந்துக் கொண்டும் வருகின்றது. எவ்வளவுதான் சபை பரீட்சிக்கப்பட வாய்ப்பில்லாததுபோன்று தோன்றினாலும், அறுவடை வேலையினுடைய இறுதிவரையிலும் விசுவாசம் மற்றும் அன்பிற்கான பரீட்சைகள் தொடர்ந்து கொண்டிருப்பதையும், பெருகிக்கொண்டுவருவதையும் நாம் எதிர்ப்பார்த்திடலாம். இவ்வாறே பரிசுத்த பவுல் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கும் (உரோமர் 16:17), மற்றும் மீண்டுமாக உங்கள் மத்தியில் பிரிவினைகள் இல்லாமல் இருப்பதாக (1 கொரிந்தியர் 1:10) என்று நமக்குப் புத்திமதி கூறுகின்றபோதிலும், அவர் "முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னார் என்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:18, 19) மீண்டுமாகப் பரிசுத்த யோவானும்கூட, "அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்" என்று கூறுகின்றார். (1 யோவான் 2:19, 20)

இப்போதனையினுடைய பொருள் என்னவெனில்: கிறிஸ்துவின் சரீரமானது ஒன்றாக இருக்கின்றது என்பது உண்மையாக இருப்பினும், சபை அன்பின் கட்டுகளினாலும், சத்தியம் எனும் நரம்புகளினாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கட்டப்பட்டு இருப்பது உண்மையாக இருப்பினும், நம்முடைய அன்பினாலும், சத்தியத்தினாலும், சக அங்கத்தினன் ஒருவனை நம்மால் முடிந்தமட்டும் ஐக்கியத்திற்குள் நிலைக்கப்பண்ணிடுவதற்கு அனைத்தையும் செய்த பிற்பாடும், அவன் விலகிப்போவானானால், கர்த்தர் இருதயத்தை அறிவார் என்றும், நம்மால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்த பிற்பாடு, மீதியைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்றும், அவர் அந்த அங்கத்தினனை ஒழுங்கிப்படுத்தி, தம்முடையவர்களாய்க் காணப்படுபவர்களாகிய சபையினுடைய ஐக்கியத்திற்குள் திரும்பக்கொண்டுவருவார் என்றும் நினைவில் கொண்டவர்களாக, நாம் இக்காரியத்தினை அமைதியுடன் எடுத்துக்கொண்டிட வேண்டும். "கர்த்தர் தம்முடையவர்களை

அறிவார்;" ஆனால் நாம் அறியோம். இதை நன்கு நினைவில்கொண்டவர்களாக, கீழ்ப்படியாத ஒவ்வொரு அங்கத்தினனைக் கையாளும் விஷயத்தில், கர்த்தரிலும், அவருடைய ஞானத்திலும், அன்பிலும், வல்லமையிலும் முழு நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருத்தல்/செயல்படுத்திட வேண்டும். நமக்கும், மற்றவர்களுக்கும் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்றுள்ள கர்த்தருடைய வார்த்தைகளை நினைப்பூட்டிக்கொண்டு, நாம் அனைவரிடத்திலும் இரக்கமாயும், சாந்தமாயும் காணப்படுவதே நம் காரியமாய் உள்ளது.

*****

# நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை

**யாக்கோபு 3:1-12**

*"தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்." (நீதிமொழிகள் 21:23)*

இன்றைய நமது பாடமானது நடைமுறை கருத்துக்களை உடையதாய் இருந்து, பொதுவான விதத்தில் நாவிற்கும், விசேஷமாகச் சபையில் மூப்பர்களாக அல்லது போதகர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருப்பவர்களிலுள்ள நாவன்மைக்கும் பொருந்துகின்றதாய் இருக்கும். ஆகையால் நம்முடைய பாடமானது, "(போதகர்களாகிய நாம்) அதிக நியாயத்தீர்ப்பு அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக; ஏனெனில் நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்" என்ற புத்திமதியோடு துவங்குகின்றது. போதகராகிடுவதற்கோ, "ரபியாகிடுவதற்கோ" முற்படுபவர்கள், சபையிலுள்ள சாதாரண அங்கத்தினன் மீது வரும் விமர்சனத்தைக் காட்டிலும், அதிகமான விமர்சனத்திற்குள்ளாகும் நிலைக்குள்ளாகுகின்றான் என்பதே கருத்தாகும். ஒருவேளை அவர் தவறுசெய்வாரானால், அவர் இதே தவற்றைத் தனது தனிப்பட்ட கணிப்பில் பார்க்கையில் மேற்கொள்ளும் விமர்சனத்தையும், கடிந்துகொள்ளுதலையும் காட்டிலும் மற்றவர்களால் மிகக் கடுமையான விமர்சனத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் ஆளாவார். மேலும் கர்த்தருடைய கண்ணோட்டத்தில் அவர் சுவிசேஷத்தின் ஸ்தானாபதியாகவும் மற்றும் கர்த்தருடைய வாயாகவும் ஆகுகையில் அதிகமான பொறுப்பை உடையவராய் இருக்கின்றார். ஒருவேளை உண்மையும், ஜாக்கிரதைத் தன்மையும் அவருக்கு மாபெரும் ஆசீர்வாதத்தையும், பலனையும் கொண்டுவருமேயானால், உண்மையின்மை அல்லது அஜாக்கிரதை என்பது இதற்குத் தகுந்தார்போல் அதிக ஆக்கினையைக் கொண்டுவந்திடும்.

அப்போஸ்தலனின் இந்த வார்த்தைகளும் மற்றும் நாம் விருந்திற்கு அழைக்கப்படுகையில், நாம் முதன்மையான ஆசனங்களை எடுத்துக்கொள்ளாமல், தாழ்மையான ஆசனங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், நாம் "ரபி" என்று அழைக்கப்பட நாடக்கூடாது என்றும், "சிறுபிள்ளைகள்" போன்று தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றுமுள்ள நமது கர்த்தருடைய அறிவுரைகளும் - சபையின் மிக உயர்வான அதிகாரமுடையவரின் இந்த அறிவுரைகளும், "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்னும் பரிசுத்த பேதுருவின் புத்திமதிகளும், சபையில் போதகனுடைய ஸ்தானத்திற்குரிய பொறுப்புக் குறித்து நம்மை அச்சங்கொள்ள செய்யவேண்டும். ஒருவேளை கர்த்தருடைய ஏற்பாட்டினால் நாம் இத்தகையதொரு ஸ்தானத்தில் காணப்படுவோமானால், நாம் சோதனைக்குள்ளாகி, நம்மையும், மற்றவர்களையும் தப்பறையில் சிக்கவைத்திடாதபடிக்கு, அந்த ஸ்தானத்தில் மிகவும் தாழ்மையோடும், மகா பயத்தோடும் மற்றும் தொடர்ச்சியான விழிப்போடும், ஜெபத்தோடும் நாம் காணப்பட வேண்டும்.

## விழுதலுக்கு முன்னானது அகந்தை

ஆம், இந்த அபாயத்திற்கு ஒரு காரணம் இருக்கின்றது. அக்காரணம் குறிக்கோளில் காணப்படுகின்றது; இது சிலசமயம் பெருமையின் வழியை எடுத்துக்கொள்கின்றது மற்றும் சிலசமயங்களில் பாராட்டப்படுவதற்கான விருப்பம் எனும் வழியை எடுத்துக்கொள்கின்றது. இவைகளில் முதலாவதாக உள்ள அகந்தையானது, எப்போதும் கண்டனத்திற்குரியதாய் இருக்கின்றது; இது ஒருபோதும் பொறுத்துக்கொள்ளப்பட முடியாததாகும்; ஏனெனில் நம்முடைய இனத்திலுள்ள எந்த அங்கத்தினன் ஒருவனுக்கும் பெருமைக்கொள்வதற்கான - அதுவும் அவர் மனுக்குலத்திலுள்ள மீதமானவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப்பார்க்கையில், தான் அநேகரைக்காட்டிலும் குறைவான விழுகையை உடையவனாய் இருப்பதாக எண்ணிக்கொண்டாலும்கூட, பெருமைக்கொள்வதற்கான எந்த நியாயமான, காரணக் காரியத்திற்குட்பட்ட அடிப்படை இருப்பதில்லை. குறிக்கோளின் இரண்டாம் அபாயமாகிய

மற்றவர்களுடைய பாராட்டை விரும்புதலானது, ஒருவேளை தேவன் திசையில் சரியாய்ச் செயல்படுத்தப்பட்டால் சரியானதாய் இருக்கும் - ஆனால் அது மனித பாராட்டை நாடிடும் அளவுக்குத்தக்கதாய், அது அபாயமாய்க் காணப்படும்; ஏனெனில் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நம்மைப்போன்று அபூர்ணர்களாய் இருப்பதினால், அவர்கள் நமது கர்த்தரால் நிராகரிக்கப்படுபவைகளையும், கண்டிக்கப்படுபவைகளையும் எப்போதும் அங்கீகரிக்கிறவர்களாகவும், பாராட்டுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆகையால் தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் என்றும், அவரது அங்கீகரிப்பையும், இறுதியில் "நல்லது" எனும் அவரது வார்த்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புவதே, அனுமதிக்கப்பட்டுள்ள ஒரே குறிக்கோளாய் இருக்கின்றது. ஆம் இது கர்த்தருடைய ஆவியை - "கிறிஸ்துவின் சிந்தையை" கொண்டிருக்கும் கர்த்தருடைய சகோதரருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பத்தையும், எதிர்ப்பார்ப்பையும் இரண்டாம் நிலையில் குறிக்கின்றதாய் இருக்கும்; இது சகல மனுஷர்களுடைய அன்பையும், மரியாதையையும் ஏற்றுக்கொள்ளுதலையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கலாம். ஆனால் இவைகள் நம்முடைய குறிக்கோளினுடைய எந்த ஒரு பாகவுமாகிவிடக்கூடாது; மற்றும் பொதுவான மனுக்குலமானது நீதியினாலும், சத்தியத்தினாலும், இவைகளின் ஆவியினாலும் மிகவும் ஏவப்பட்டு, கர்த்தருக்கு மிகவும் பிரியமாய்க் காணப்படுபவைகளை அங்கீகரித்திடுவார்கள் மற்றும் பாராட்டுத் தெரிவித்துவிடுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திடவும் கூடாது. மாறாக ஒரு மனுஷன் உலகத்தையும், அதன் அங்கீகரிப்பையும், பாராட்டையும் அன்புகூருவானானால், அவனில் பிதாவுக்கான அன்பில்லை என்பதாக இருக்கும். அவன் உலகத்தின் அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வானானால், அவன், "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது, உங்களுக்கு ஐயோ" என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும் (லூக்கா 6:26). இது அவன் ஒரு முக்கியமான விதத்திலும், அளவிலும் கர்த்தருக்கும், அவரது செய்திக்கும் முரண்பாடாய்க் காணப்படுகின்றான் என்பதற்கான அடையாளமாய்க் காணப்படுகின்றது; இல்லையேல் உலகமானது கிறிஸ்துவைப் பகைத்து, "அவரைச் சிலுவையில் அறையும்" என்று கத்தினதுபோல, அவனையும் பகைத்திருக்கும்.

## கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்

பரிசுத்த யாக்கோபு ஊழியத்திற்கு எதிராக நம்மை எச்சரிக்கவில்லை; ஒருவருக்கொருவர் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் புரிந்திடும் சகல நற்கிரியைகள் யாவற்றையும் நாம் புரிவதைத்தடுக்க நாடவுமில்லை. (பள்ளிக்கூடத்தில்) நாம் போதகர்களாகிடுவதற்குரிய (அ) எஜமான்களாகிடுவதற்குரிய நம்முடைய முற்படுதலுக்கு எதிராகவே அவரது எச்சரிப்புக் காணப்படுகின்றது. இந்த யுகம் முழுவதிலும் கிறிஸ்துவினுடைய முழுச்சபைக்குமே ஒரேயொரு போதகர் அல்லது பள்ளி ஆசிரியர் காணப்படுகின்றார். அவரே தம்முடைய சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார் - அங்கத்தினர்களுக்கான இயக்குனராக, மேற்பார்வையாளராக, பொறுப்பாளராக, உபாத்தியாராகக் காணப்படுகின்றார்.

உண்மைதான் "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். கண், காது மற்றும் நாவானது தலைப் பண்புகளாகவும், கை, கால் முதலானவைகள் சரீர பண்புகளாகவும் காணப்படுகின்றது என்று அவர் தெரிவிக்கின்றார். நம் மத்தியில் இல்லாதிருக்கிற கர்த்தர் அல்லது தலையானவர், தம்முடைய ஜனங்கள் காணப்படும் ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரோடும் காணப்படுவதாக வாக்களித்துள்ளார். "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார் மற்றும் அவர்களது கூட்டத்திற்குச் சில விதத்தில் மற்றும் சில பிரதிநிதிகள் வாயிலாக தலைமைத்துவத்தைச் செயல்படுத்துவதற்கும், போதகராயிருப்பதற்கும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கின்றார். அவர் தமது தலைமைத்துவத்தினை நம்மீது திணிக்கிறதில்லை. தமது சித்தத்தை அறியவும், அதைச் செய்யவும் விருப்பமுடைய சரியான இருதய நிலையுடையவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களுக்கும் வழிக்காட்டுவதற்கும், போதிப்பதற்கும், ஊழியம் புரிவதற்கும் அவர் காத்திருக்கின்றார். தம்முடைய சித்தத்தைக்குறித்துத் தம்முடைய ஜனங்களுக்கு உபதேசத்திட்ட பிற்பாடு, தாம் அருளுவதற்குச் சித்தமாயிருக்கும் ஆசீர்வாதத்தினை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், அவர்கள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்கும்படிக்கு அவர் எதிர்ப்பார்க்கின்றார். ஆகையால் அவர்கள் அவருடைய நாமத்தில் கூடி, அவரது வசனத்தின் வழிக்காட்டுதல்களைப் பின்பற்றி, வேதவாக்கியங்களிலுள்ள அவரது சத்தத்திற்குச்

செவிக்கொடுத்து, அவரது ஆவியின் வழிநடத்துதல்களுக்காய் விழித்திருந்து, அதைக் காண்கையில் ஒருவருக்கொருவர் அதை அங்கீகரிப்பார்களானால், இதற்கேற்ப அவரது ஆசீர்வாதம் காணப்படும்.

இப்படியாக வேறு யாரையுமல்ல, மாறாக அர்ப்பணிக்கப்பட்டவர்களை தங்கள் வழிநடத்துபவராக அங்கீகரிப்பது என்பது ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாருடைய பொறுப்பாய் இருக்கின்றது. செம்மறியாட்டை வழிநடத்துவதற்குரியவராக, எந்த வெள்ளாடும் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது; தனது இருதயத்தினுடைய உண்மைக்கும், ஆண்டவருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கான வாஞ்சைக்குமாக வெளிப்புற நடத்தையில் சாட்சிப்பகராத எந்தச் செம்மறியாடும்கூடத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது. பெருமையும், மந்தையை இறுமாப்பாய் ஆளுவதற்குரிய தன்னல நாட்டமுள்ள குறிக்கோளும் சகித்துக் கொள்ளப்படக்கூடாது; காரணம் இவை விசுவாசிகளுடைய சபைக்குப் மாத்திரமல்லாமல், அவர்களை நடத்திட நாடிடும் இறுமாப்புடையவர்களுக்கும்கூடப் பாதகமாய்க் காணப்படும். ஆகையால் ஆவிக்குரிய விருந்துகளில் முதன்மையான ஆசனங்களை எடுத்துக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட வேண்டிய போது, சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் இது விஷயத்தில் அதிகப் பரீட்சைகளும், சோதனைகளும் காணப்படும் என்பதை நினைவில்கொண்டும், "நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்றும், தடையானது அன்பான, பரிவான விதத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் (கலாத்தியர் 6:1).

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்" என்று பரிசுத்த யாக்கோபு கூறுகின்றார். நாம் அனைவரும் பாவத்திற்குள்ளாக அல்லது கொடிதான தப்பறைக்குள்ளாக விழுவோம் என்ற அர்த்தத்தில் அவர் கூறாமல், மாறாக நாம் மாம்சத்தில் காணப்படுவது வரையிலும், கர்த்தருடைய ஆவியில், அவரது செய்தியும் நமது பூரணமற்ற வல்லமைகள் வாயிலாக தெரிவிக்கப்படுகின்றபடியால், எவரும் தவறிழைக்க முடியாதவர்களாய்க் காணப்படுவதில்லை என்ற அர்த்தத்திலேயே அவர் கூறியுள்ளார். ஆகையால் "பரிசுத்தவான்களின்" கூடுகைகளில் வழிநடத்துபவராகிடுவதற்கு விருப்பம் கொள்ளாதவர்கள் - இருதயத்தின் தாழ்மையினை வெளிப்படுத்துகிறவர்களும், தங்களுக்கு ஊழியம் புரிய பிரயாசப்பட்டு, தங்களுக்கு ஜீவ அப்பத்தைப் பிட்டுத் தருகின்றவர்களுமான சகோதரர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க முற்படக்கூடாது. இப்படிப்பட்டவர்களது அனைத்துப் போதித்தல்களும் தகுதியானவை என்று ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், இவர்களது கிரியைகளின் நிமித்தமாக இவர்கள் அன்புகூரப்பட வேண்டும் மற்றும் மதிக்கப்பட வேண்டும். இந்த மன உணர்வுகளானது வாய் வழியாகப் பேசிடும் போதகர்களுக்கு மாத்திரமல்லாமல், கூட்டத்தில் ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தும் அச்சிடப்பட்ட பக்கத்திற்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

---

# பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள்

சமீபத்தில் நாம் பஸ்காவை ஆசரித்ததான காரியமானது, முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்றுள்ள பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய பலியானது, ஏழாம் மாதத்தினுடைய 10-ஆம் தேதியன்றுள்ள பாவநிவாரண நாளின் பலியினுடைய அதே கருத்தைத்தான் அடையாளப்படுத்துகின்றதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். இந்த இரண்டு நிழல்களும் வருஷத்தினுடைய எதிர்முனைகளில் காணப்படுகின்றது; ஒன்று மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்திலும், மற்றொன்று மதச்சார்பற்ற ஆண்டின் துவக்கத்திலும் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. மதச்சார்ப்பற்ற ஆண்டானது இலையுதிர் காலத்திலும், மதச்சார்புடைய ஆண்டானது இளவேனிற் காலத்திலும் துவங்குகின்றதாய்க் காணப்படுகின்றது. மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்தின்போதான பஸ்கா பலியானது, சபை சார்பிலான நமது கர்த்தருடைய பலியை மாத்திரம் குறிப்பாய் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் மதச்சார்ப்பற்ற ஆண்டின் துவக்கத்தின்போதான பாவநிவாரண நாளினுடைய பலியானது, கிறிஸ்துவினுடைய பலியையும், "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராகிய" சபையின் பலியையும் மற்றும் "ஜனங்கள் அனைவருக்காகவும்" நிறைவேற்றப்பட்டதான பரந்த விரிந்த வேலையையும் சித்தரித்துக் காட்டுகின்றதாய் இருக்கின்றது.

பஸ்கா ஆட்டுக்குட்டியானது, தலையாகிய இயேசுவையும், அவரது சரீரமாகிய சபையையும் அடையாளப்படுத்துகிறதில்லை. அது குறிப்பாக "தேவ ஆட்டுக்குட்டியாகிய," நமது கர்த்தர் இயேசுவை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்று நமது கர்த்தரைக் குறித்துத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டியின் விஷயத்திலும், இப்படியாகவே கட்டளையிடப்பட்டிருந்தது. அது முழுமையாகச் சுடப்பட வேண்டும் மற்றும் புசிக்கையில், அதன் எலும்புகள் முறிக்கப்படக்கூடாது. இன்னுமாக பஸ்கா ஆட்டுக்குட்டியும், அதன் இரத்தமும், முதற்பேறானவர்களாகிய சபைக்கு மாத்திரம் அடையாளமாய்க் காணப்படுகின்ற முதற்பேறானவர்களுக்கு மாத்திரம் "கடந்துபோகுதலை," காப்பாற்றப்படுதலைச் சாத்தியமாக்கிற்று. மற்றவர்களுடைய விடுதலை, பஸ்காவினுடைய நிழலில் இடம்பெறுவதில்லை.

பாவநிவாரண நாள் பலியில், தெளிவான வித்தியாசம் உள்ளது. இரண்டு பலிகள் ஏறெடுக்கப்படுகின்றது – ஒன்று பிரதான ஆசாரியனுடைய சரீரத்திற்காகவும், மற்றும் அவரது குடும்பத்தாருக்காகவும் ஏறெடுக்கப்படுகின்றது, மற்றுமொரு பலியானது "ஜனங்கள் அனைவருக்காகவும் ஏறெடுக்கப்படுகின்றது. முதலாவது பலியானது (29 வருடங்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்டதான ஆசரிப்புக்கூடார நிழல்களில்) நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிற வண்ணம் சபைக்காகவும், "முழு விசுவாச வீட்டாருக்காகவுமான" நமது கர்த்தருடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பாவநிவாரண நாளின் இரண்டாவது பலியானது, "ஜனங்கள் அனைவருடைய பாவங்களுக்காக," கர்த்தருடைய ஆட்டினுடைய நிஜமாகிய சபையினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இரண்டையும் ஒரே பிரதான ஆசாரியன்தான் ஏறெடுத்தார் மற்றும் இவர் நமது கர்த்தர் இயேசுவுக்கும், இயேசு தம்மையே முதலாவது பலிச்செலுத்திடும் காரியத்திற்கும், பின்னர் அவரது அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொண்டிடும் நம்மை இரண்டாவதாகப் பலிச் செலுத்துகின்ற காரியத்திற்கும் நிழலாய்க் காணப்படுகின்றார்.

ஆசாரியர்களுக்கான பிரதிஷ்டையில், காளை மாத்திரமே பாவநிவாரணமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது (ஆடு இடம்பெறுவதில்லை, ஏனெனில் இது "ஜனங்களுக்காக" இல்லை). பின்னர் சர்வாங்க தகனபலி காண்பிக்கப்பட்டது மற்றும் இது கர்த்தரையும், சபையையும் அவர்களது ஒன்றுபட்ட மற்றும் அதேசமயம் பிரிக்கப்பட்ட நிலையையும்,உறவையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆட்டுக்கடா ஒன்று அடிக்கப்பட்டு, சந்துகளாக துண்டாக்கப்பட்டு, கழுவப்படுகின்றது; பின்னர் அதன் துண்டுகளானது, கர்த்தருடைய பலிபீடத்தில் தலையுடன் தொடர்புடையதாக, வரிசையாக வைக்கப்படுகின்றது; மற்றும் இது முழுவதும் தகனபலியாகச் செலுத்தப்படுகின்றது. இது சபையாகிய சரீரத்தினுடைய அங்கத்தினர்களுக்கு, சரீரத்தின் தலையாகிய கர்த்தரோடுள்ள உறவை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (யாத்திராகமம் 29:10-18)

## பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரித்தல்

பாவநிவாரண நாள் பலியினுடைய, பாவநிவாரணபலியின் விஷயத்தில் இன்னொரு விஷயமும் கவனிக்கப்பட வேண்டும்; இதுவும் பஸ்காவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; அதாவது பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும் காரியமாகும். காளை முதலாவதாகச் சுட்டெரிக்கப்படுகின்றது, மற்றும் இரண்டாவதாக வெள்ளாட்டுக்கடா சுட்டெரிக்கப்படுகின்றது. (லேவியராகமம் 16:27; யாத்திராகமம் 29:14) சுட்டெரித்தலானது, படிப்படியான மாம்சத்தினுடைய அழிவை அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது. பாளயத்திற்குப் புறம்பே என்பது மனிதனால் புறக்கணிக்கப்படுவதை, அவமதிப்பை, விலக்கிவைத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் இப்படியாகவே பாளயத்துக்குப் புறம்பே பாடுபட்டார் என்றும், நாமும் அவரோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபட வேண்டுமென்ற முழு நோக்கத்துடன், அதே மனப்பான்மையுடன் காணப்படுவோமாக என்றும் அப்போஸ்தலன் கூறுகின்றார். இவ்வுண்மையைப் பரிசுத்த பவுல் வலியுறுத்தும் வண்ணமாக, "எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் (பலிக்காக) பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, (கர்த்தருடைய ஆடுகளெனப்) பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்" என்று கூறுகின்றார். (எபிரெயர் 13:11-13)

பாருங்கள் இங்கு அப்போஸ்தலன் நிழலான பலிகளைச் சுட்டிக்காட்டி, அவைகளைக் கிறிஸ்து மற்றும் சபையினுடைய விசேஷித்த பலிகளுடன் ஒப்பிடுகின்றார்; மற்றும் கிறிஸ்துவின் பலியில் பங்கெடுக்கவும் – நமது கர்த்தரினால் அனுபவிக்கப்பட்டது போன்று பாளயத்துக்குப் புறம்பான அனுபவங்கள் வாயிலாகக் கடந்துசெல்லும் கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா வகுப்பாரில், நம்மை அங்கத்தினர்களாக்கிக் கொள்ளவும் அப்போஸ்தலன் நமக்குப் புத்திமதி கூறுகின்றார்; காளை கர்த்தருக்கும், வெள்ளாட்டுக்கடா நமக்கும் நிழலாய்க் காணப்படுகின்றது.

ஒருகாலத்தில் நம்மோடுகூடக் காணப்பட்டு, ஆனால் இப்பொழுது நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்களில் சிலர், தங்கள் ஆதிக்கத்தினை எவர்கள்மேல் செலுத்த முடிகின்றதோ, அவர்களுடைய விசுவாசத்தை அசைத்துப்போடுவதற்குத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கின்றனர். இவர்கள் வருடக்கணக்காக எங்களோடு காணப்பட்டு, (இந்த நிழலினுடைய நிறைவேறுதல் மற்றும், சபை அவளுடைய ஆண்டவரோடுகூடத் தற்காலத்தில், இந்தப் பாடுகளில் ஐக்கியம் கொண்டிருத்தல் தொடர்புடைய விஷயத்தில்) ஒருமித்தக் கருத்துக்கொண்டிருப்பதாகக் கூறினபோதிலும், இப்பொழுது இவர்கள் இவ்விஷயங்களில் எல்லாம் குருடாகிப்போனவர்களாகவும், முடிந்தமட்டும் அதிகமான நபர்களைக் குருடாக்கிப்போடுவதற்கும், குழப்பிடுவதற்கும் ஆவலாய்க் காணப்படுபவர்களாகவும் இருக்கின்றனர். நாம் இங்கு மேலே முன்வைத்துள்ளவைகளை, நம்மால் முடிந்தமட்டும் கடந்த 29 வருடங்களாக முன்வைத்து வருகின்றோம் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட சபையானது, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபடுவதற்குச் சிலாக்கியம் அடைந்துள்ளது என்றும், எதிர்க்காலத்தில் அவர் தலையாகக் காணப்படும் ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களென, அவரோடுகூட மகிமையடையவும் சிலாக்கியமடைந்துள்ளது என்றுமுள்ள இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய இரகசியத்தை வெளிப்படுத்தி வருகிறோம்.

இந்த விஷயம் தொடர்பாகவும், மற்ற எந்த விஷயம் தொடர்பாகவும் நாம் எழுதியுள்ளவைகளானது, நமது கர்த்தர் இயேசு நமக்கான பலியாக, தம்முடைய சொந்த இரத்தத்தைக் கொடுத்துள்ளார் என்றும், நமக்கான பலியை, அவர் கல்வாரியில், சிலுவையின் மீதினில், தம்முடைய சொந்த சரீரத்தில் நிறைவேற்றினார் என்றுமுள்ள கருத்துக்களை மறுக்கிறதாய்க் காணப்படுவதில்லை. அப்போஸ்தலனுடைய வார்த்தையின்படி, அவர் ஆவிக்குரிய சரீரத்திற்கு, ஆவிக்குரிய தலையென உயர்த்தப்படுவதற்கான வேளைவந்தது. அவர் மாம்சத்திலிருந்தபோது, அந்த ஆவிக்குரிய தலையாகக் காணப்படவில்லை. அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்னரே, அவர் சபையாகிய தம்முடைய சரீரத்திற்குத் தலையானார். சபையானது, தங்கள் அழிவுக்குரிய சரீரங்களைப் பலியில் அர்ப்பணித்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச் சிருஷ்டிகளாக மாத்திரமே, அவரது அங்கத்தினர்களானார்கள். நம்மைப் புதுச் சிருஷ்டிகளென ஏற்றுக்கொள்கையில், பிரதான ஆசாரியன் நமது அர்ப்பணிக்கப்பட்ட சித்தங்களை ஏற்றுக்கொள்கின்றார் மற்றும் இதை நாம் நிறைவேற்றிடுவது தொடர்புடையதாக நம்மைப் பரீட்சிக்கின்றார் மற்றும் நம்முடைய பலியின் இரத்தத்தினை அவருடையதெனக் கருதுகின்றார், ஏனெனில் அவருடைய இரத்தமே நம்முடையதை நீதிமானாக்கி, பலிச்செய்திடுவதற்கு ஏதுவாக்கிற்று.

தங்களைப் போஷிக்கத்தக்கதாக, தேவன் கொடுத்துள்ளதான இந்தச் சத்தியங்களை ஆராய்வதில் தங்கள் நேரத்தை ஞானமாய்ப் பயன்படுத்திக்கொள்பவர்களுக்கான அநுகூலத்தினை நாம் உணர்ந்துகொள்கின்றோம். வேத ஆராய்ச்சியில் உண்மையாய்க் காணப்பட்டு, மற்றும் அதற்கேற்ப ஜீவிப்பவர்கள், இப்பொழுது பலவான்களாய்க் காணப்படுகின்றனர். மற்றவர்களோ இப்பொழுது பெலவீனர்களாகிப்போய், ஒவ்வொரு உபதேசக் காற்றினால் இழுத்துச் செல்லப்படுவதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றனர். கூடுகைகள் மூலமாகவும், குறிப்பாக வாசிப்பதன் மூலமாகவும் அடையப்பெறும் ஆவிக்குரிய போஷாக்கின் அவசியத்தினை நாம் வலியுறுத்துகின்றோம். எவ்வளவுதான் கேட்டாலும், அது வாசிக்கிறதற்கு ஈடாகாது. இன்னுமாக ஆறு தொகுதிகளை/volumes வாசிப்பதற்கு நாம் அறிவுரைக் கூறுகின்றோம். கொஞ்சம் காலத்திற்கு முன்னதாக, ஒரு தாயாரும், அவரது மகளும், தாங்கள் ஒரு நாளுக்குப் பன்னிரண்டு பக்கங்கள் வைத்துப்படித்தால், ஆறு தொகுதிகளையுமே ஒரு வருடத்தில் வாசித்துவிடலாம் என்று கண்டுபிடித்ததாக வாட்ச் டவருக்குக் கடிதம் எழுதினதின் மூலமான யோசனையை இன்று அநேகர் பின்பற்றி வருகின்றார்கள் என்று நாங்கள் மீண்டுமாக நினைப்பூட்டுகின்றோம். இந்தத் தாயாரும், மகளும் இம்முறையை ஒரு வருடம் பின்பற்றி, அடுத்தும் இதையே பின்பற்றி இருந்திருக்கின்றனர். இந்த யோசனையானது, அநேகரால் கைக்கொள்ளப்பட்டு, நல்ல பலன்கள் கிடைத்துள்ளது மற்றும் அதையே நாமும் அனைவருக்கும் பரிந்துரைக்கின்றோம். நம்முடைய மனங்களானது ஓட்டையான பாத்திரங்களாகக் காணப்படுகின்றது மற்றும் பலமுறைகள் தொகுதிகளை வாசித்தவர்கள், தாங்கள் முன்பு வாசித்தப்போது வெளிப்படாதவைகள், பின்பு வாசிக்கையில் வெளிப்படுவதாகவும் கண்டிருக்கின்றனர்.

*****

# தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை

**1 தெசலோனிக்கேயர் 5:12-24**

## கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்து

*"அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து..." (1 தெசலோனிக்கேயர் 5:12)*

கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்குமான மனசாட்சியினுடைய சுயாதீனத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் விஷயத்தில் வேதவாக்கியங்களானது மிகவும் குறிப்பாய்க் காணப்பட்டப்போதிலும் மற்றும் கிறிஸ்துவில் ஆண் என்றோ பெண் என்றோ இல்லை, அடிமை என்றோ சுயாதீனன் என்றோ இல்லை, அவரது அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் அவரில் ஒன்றாய் இருக்கின்றனர், அவரது அங்கமாய் இருக்கின்றனர் என்று வேதவாக்கியங்களானது நமக்கு உறுதியளித்திட்ட போதிலும், தேவனே அவரது ஜனங்களுக்கான காரியங்களைக் கவனித்துக்கொள்கின்றார் என்றும், அவர்கள் கர்த்தருடைய தலைமைத்துவத்தினையும், தேவனால் சரீரத்தில் வைக்கப்பட்டவர்களாகிய - அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் முதலானவர்களையும் அங்கீகரித்துக்கொள்ளுதலின் பலனாகவே அவர்களது வளமைக் காணப்படும் என்றுமுள்ள கருத்தினை வேதவாக்கியங்களானது மிகவும் தெளிவாய் நமக்கு முன்வைக்கின்றதாய் இருக்கின்றன. "கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையினை" உடையவர்களாகிய தேவனுடைய பிள்ளைகளெனக் கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் காணப்படுகின்றனர்; எனினும் பாவம் செய்வதற்கான சுயாதீனத்தையல்ல, மாறாக பாவத்திலிருந்தும் அதன் அடிமைத்தனத்திலிருந்தும், அதன் அழிவிலிருந்துமுள்ள ஒரு விடுதலையையே அவர் நமக்குக் கொடுத்திருக்கின்றார். இப்படி விடுதலைப் பண்ணப்பட்டவர்கள் விசுவாசத்தின் மற்றும் அர்ப்பணிப்பின் வாயிலாகத் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டுள்ளபடியால், இவர்கள் பிதாவின் வீடும், அதன் ஏற்பாடுகள் அனைத்துமே, பரலோகத்தின் முதல் சட்டமாகிய - ஒழுங்கின்கீழ்க் காணப்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்வது அவசியமாய் இருக்கின்றது. இந்த ஒழுங்கினை - இவர்கள் தாங்கள் திவ்விய அன்பிலும், தயவிலும் நிலைத்திருப்பதற்கும், குடும்ப ஆசீர்வாதத்தில் பங்கடைவதற்குமான நிபந்தனையென, அதற்கு விருப்பத்தோடும், மகிழ்ச்சியோடும் கீழ்ப்படிவதற்கு முதலாவது கற்றுக்கொள்ள வேண்டும். இதனை புறக்கணிக்கும்போது, இவர்களால் அந்த வீட்டாருக்கடுத்த ஆவிக்குரிய காரியங்களில் ஆழமாயும், அதிகமாயும் ஒருபோதும் வளர்ந்திட முடியாது; மாறாக இவர்கள் திறமையற்ற குழந்தைகளெனவும், ஒழுங்கில்லாதவர்களெனவும், (nursery) குழந்தைகள் நிலையினைத் தாண்ட முடியாதவர்களாகக் காணப்படுவார்கள்.

கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ளுதலும் மற்றும் அவரது வார்த்தைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் வாயிலான அவரது வழிகாட்டுதலுக்குக் கவனித்திருப்பதும், கர்த்தருக்குள் தங்களை விசாரணை செய்யும்படிக்குத் தங்கள் மீது அவரால் ஏற்படுத்தப்பட்டவர்களை, கர்த்தருடைய ஜனங்கள் கண்டுகொள்ள உதவிடும். ஆகையால் திவ்விய ஒழுங்கில் சபையானது அதன் ஊழியக்காரர்களை, மூப்பர்களை, உதவிக்காரர்களை, மேய்ப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றாலும், ஒவ்வொரு அங்கத்தினனும் தன்னுடைய சொந்த பகுத்தறிதலுக்கு இசைவாய் மாத்திரமல்லாமல், திவ்விய சித்தம் குறித்த தன்னுடைய புரிந்துகொள்ளுதலுக்கு இசைவாக வாக்களிப்பதற்கென (vote) "தனது கையினை நீட்டிட" வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய வழிநடத்துதலில், இது விஷயமான நம்முடைய கருத்தானது உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், ஒருவேளை நியாயமான புரிந்துகொள்ளுதல் மற்றும் வாக்களித்தலின் (vote) கீழ், தெய்வீகச் சித்தம் குறித்த நம்முடைய கருத்திற்கு எதிர்மாறாக, யாரோ ஒருவர் சபையை விசாரிக்கும்படிக்கு ஏற்படுத்தப்பட்டால், நாமும் கீழ்ப்படிந்து

ஒப்புக்கொடுத்து, நம்மால் முடிந்தமட்டும் அத்தகையவருக்கு ஒத்துழைப்புக்கொடுத்திட வேண்டும்; ஏனெனில் திவ்விய ஞானத்தையும், வல்லமையையும் அடையாளம் கண்டுகொண்டவர்களாக, அர்ப்பணிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்களின் சித்தமானது தெய்வீகச் சித்தமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவேளை சிலசமயங்களில் சபையானவளின் மேலான நலன்களுக்கு எதிராக காரியங்கள் நடைபெறத்தக்கதாக கர்த்தர் அனுமதிப்பதுபோன்று தோன்றிடலாம்; நாம் அச்சம்கொள்ளக்கூடாது, மாறாக அனைத்தையும் அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டு, நம்மைப்போன்று மற்றவர்கள் பார்க்கின்றார்களோ அல்லது இல்லையோ, கர்த்தருடைய சித்தம் குறித்த நம்முடைய பகுத்தறிதலை முழுமையாய் வெளிப்படுத்துவதில் திருப்தியடைந்திட வேண்டும்.

நம்முடைய இந்தப் பாடத்தில், தெசலோனிக்கேயா சபையானது ஒழுங்குமுறையின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும், கர்த்தருடைய நாமத்தில் தங்கள் மத்தியிலிருந்து சிலரைத் தங்களை விசாரிக்கும்படிக்கு - வேலைக்கடுத்த நலன்கள் தொடர்புடைய விஷயத்தில் மேற்பார்வைப் பண்ணவும், கொஞ்சம் அதிகாரம் கொண்டிருக்கவும் நியமித்துள்ளனர் என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றனர். இத்தகையவர்கள் தனிப்பட்ட விதத்தில் மாத்திரமல்ல, சபையின் ஊழியர்களெனவும் மற்றும் சபை மூலமான திவ்விய நியமித்தலின்படியானவர்களெனவும் மதிக்கப்படும்படிக்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். சபையார் இவர்களிடமிருந்து ஆலோசனைகளை எதிர்ப்பார்த்திட வேண்டும். இவர்கள் தாங்கள் உண்மையுள்ள ஊழியர்களாகக் காணப்பட்டு, சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களைக் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்று உணர்ந்துகொள்ள வேண்டும். கர்த்தரையும், சத்தியத்தையும் அன்புகூருகிற யாவரும், தங்களால் முடிந்தமட்டும் தங்கள் பாதையில் இடர்ப்பாடுகளைக் கொண்டுவராமல் இருப்பதற்கு நாடிட வேண்டும் மற்றும் தங்கள் புத்திமதிகளையும், தகுதியான செல்வாக்கினையும் நிலைநிற்கப்பண்ணத்தக்கதாக தங்களால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களானவர்கள் சகோதரர்கள் மத்தியில் பிரயாசம் ஏறெடுப்பவர்களாகவும், அவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் இருப்பார்கள். சபைக்கான ஊழியம் என்பது, கனத்திற்குரியது மாத்திரமேயல்ல. "Minister" எனும் வார்த்தையின் அர்த்தம் பணிவிடைக்காரன் ஆகும் மற்றும் இது பொருத்தமான மற்றும் மிகவும் அர்த்தமுள்ள அர்த்தமாகவும் காணப்படுகின்றது - அநேகரால் கவனிக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமான அர்த்தம் கொண்டவையாகும்.

தொடர்ந்து, "அவர்கள் பணியின்பொருட்டு, அவர்களை உயர்வாகவும் அன்புடனும் கருதுங்கள்" என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:13; திருவிவிலியம்). உங்கள் சொந்த இருதயத்திற்குள்ளாக வருவதற்கும், மற்றவர்களில் கசப்பின் வேர்களாகக் காணப்படுவதற்கும் ஏதுவாக, போட்டிமனப்பான்மையின் ஆவி எதையும் அனுமதித்திடாதீர்கள். சபையினுடைய எந்த ஓர் ஊழியக்காரனுக்கும் எதிராக குறைக்கூறும் அன்பற்ற வார்த்தைகள் எதுவும் உங்கள் உதடுகளினின்று புறப்படுவதற்கு அனுமதித்திடாதீர்கள். மாறாக அவர்களது ஸ்தானங்களில் ஒருவிதத்தில் அவர்கள் கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகிறதால், அவர்களை உயர்வாய் எண்ணிடுங்கள், அவர்களைக் கனப்படுத்திடுங்கள். சபையில் அவர்களது அன்பின் பிரயாசங்களானது பாராட்டப்படுவதற்கு ஏதுவாய்க் காணப்படுமளவுக்குத்தக்கதாக அவர்களைக் கனப்படுத்திடுங்கள். கிறிஸ்துவுக்கொத்த சாயலை அதிகமாய்ப் பெற்றிருப்பவர்கள், அதிகமாய் அன்புகூரப்பட வேண்டும்.

இன்னுமாக, "உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று பரிசுத்த பவுலடிகளார் புத்திமதி கூறுகின்றார். ஏன்? உலகத்தை விட்டு வந்தவர்களாகவும், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டவர்களாகவும் மற்றும் சமாதானத்தின் பிரபுவினுடைய பின்னடியார்களென ஒன்றுகூடியுள்ளவர்களாகவும் காணப்படுபவர்கள் மத்தியில் சமாதானம், இணக்கம் காணப்பட வேண்டும் என்று புத்திமதி கூறப்படுவதற்குரிய அவசியமென்ன? இவர்களது சமாதானத்தை எது குலைத்துப்போடும்? நிச்சயமாகவே இவர்களில் ஒவ்வொருவரும் உலகத்தினுடைய சண்டைச் சச்சரவுகளைக்குறித்து அனுபவம் வாயிலாக அறிந்திருப்பார்கள். செம்மறியாடுகளென இவர்களில் ஒவ்வொருவரும் கொஞ்சம் ஓநாய்களினால் தொல்லைக்கொடுக்கப்பட்டிருப்பர் அல்லது பயமுறுத்தவாகிலும்பட்டிருப்பர். ஆனால் தொல்லைக்குட்படுத்தப்பட்டதான இந்தச் செம்மறியாடுகளானது, ஒன்றுகூடி வந்திருக்கையில், இவர்கள் மாபெரும் மேய்ப்பனுடைய குமாரனின் மற்றும் அவரால் நியமிக்கப்பட்டுள்ள

அவர்களுக்கான உடன்மேய்ப்பர்களின்கீழ் ஆறுதலையும், சமாதானத்தையும், இளைப்பாறுதலையும், சந்தோஷத்தையும் கொண்டிருக்க வேண்டுமல்லவா? இதுவே அடைய வேண்டிய சமாதானம், அன்பு, இணக்கமாகும். எதை விலைக்கொடுத்தேனும் வரும் சமாதானமல்ல, எதை விலைக்கொடுத்தேனும் வரும் இணக்கமல்ல, மாறாக கிறிஸ்துவின் சரீரத்தில் திவ்விய நிலைப்பாடானது/தரநிலைகளானது நன்கு ஆதரிக்கப்பட்டிருக்கும் காரணத்தினால் மற்றும் மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் ஆண்டவருடைய சத்தத்திற்குச் செவிக்கொடுத்துக்கொண்டிருக்கும் காரணத்தினால் மற்றும் கர்த்தரையும், அவரது சித்தத்தையும், அவரால் சபையாரை விசாரிக்கும்படிக்கு அவரால் ஏற்படுத்தப்பட்டவர்களை மதிக்கிறதற்கு அனைவரும் நாடிக்கொண்டிருக்கும் காரணத்தினால் மற்றும் அனைவராலும் மேய்ப்பனுடைய சத்தத்திற்குச் செவிக்கொடுக்கப்பட்டு வார்த்தையிலும், கிரியையிலும் சுயநல நாட்டத்தின் ஆவிக்கு எதிராய்ப் போராடப்படும் காரணத்தினால் உண்டாகும் சமாதானம் மற்றும் இணக்கமேயாகும்.

## ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள்

"மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:14). இந்த வார்த்தைகளை அப்போஸ்தலன் முழுச்சபையாருக்கும் கூறுகின்றார் என்றும், இந்தப் புத்திமதியினுடைய சில அம்சங்கள் சபையினுடைய தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய - மூப்பர்களுக்கு விசேஷமாய் உரியது என்றும் நாம் எண்ணிட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்தினனும், எந்த ஒரு சகோதரனுக்கும் முறையாய்ப் புத்திமதிக் கூறிடலாம் என்பதும், திடனற்றவர்களைத் தேற்றலாம் என்பதும், பலவீனரைத் தாங்கிடலாம் என்பதும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருப்பது என்பதும் சரியானதாக இருப்பினும், இந்தக் கடமைகளில் சில, தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களுக்கு விசேஷமாய் உரியதாகும்; இவர்கள் அறிவிலும், குணலட்சணத்திலும் மிகவும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றதான "மூத்த" சகோதரர்கள் என்ற உண்மையின் கண்ணோட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இளைய சகோதரர்கள், அதாவது சபையால் "மூப்பர்" என்று விசேஷமாக நியமிக்கப்படாதவர்கள் அக்கறையும், கவனமும் கொண்டிருக்க வேண்டும்; ஆனாலும் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லிடும் விஷயத்தில், சபையார் மூப்பராகிய சகோதரர்களெனச் சிலரை விசேஷமாய் நியமித்துள்ளனர் என்றும், இவர்களுக்கு இத்தகையவைகளைச் செய்வதற்கான கடமை விசேஷமாய்க் காணப்படுகின்றது என்றும் இளைய சகோதரர்கள் உணர்ந்து மிகுந்த ஜாக்கிரதைக் கொண்டிருக்க வேண்டும். ஒழுங்கில்லாதவர்கள் சரிப்படுத்தப்பட வேண்டியதாய் இருப்பினும், அது மிகவும் ஞானமாய்ச் செய்யப்பட வேண்டும், இல்லையேல் நன்மையுண்டாவதற்குப் பதிலாக மிகுந்த பாதகமே உண்டாகிவிடும். இப்பாடத்தினைக் கற்றுக்கொள்வதும் மற்றும் ஒரு காரியத்தினைக் கவனித்துக் கொள்ளத்தக்கதாக, திவ்விய ஏற்பாட்டின் கீழ் இன்னொருவர் நியமிக்கப்பட்டிருக்க, தாங்கள் அக்காரியத்தைக் கவனிக்க முற்பட்டு, ஒழுங்கில்லாதவர்களாகிப்போய்விடாமல் காணப்படத்தக்கதாக, தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்வதைக் கற்றுக்கொள்வதும், கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அநேகருக்கு அவசியமானதாய் இருக்கின்றது.

நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, "மூப்பர்" என்ற வார்த்தையானது, வயதைக் குறிப்பதாய் இராமல், மாறாக ஆவிக்குரிய வளர்ச்சியினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு இளைஞனாகக் காணப்பட்ட தீமோத்தேயு, சபையில் மூப்பராகக் காணப்பட்டார். ஆகையால் தெசலோனிக்கேயாவிலுள்ள இந்தப் புதியதாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சபையிலும், அவர்களில் யாருமே நீண்டகாலமாய்ச் சத்தியத்தில் காணப்பட்டவர்களாய் இல்லாமல் இருந்தபோதிலும், "கிறிஸ்துவின் மந்தையைப் போஷிக்கும் மேற்பார்வையாளர்களாக" மற்றவர்களுக்கு ஊழியம்புரியத்தக்கதாக, சிலர் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டனர்.

அப்போஸ்தலன் வாயிலான கர்த்தருடைய அறிவுரையிலுள்ள ஞானத்தினைக் கவனியுங்கள். இது சமாதானம் காணப்படுவதற்கேயாகும்; ஆனாலும் விலைக்கொடுத்து சமாதானத்தை அடைவதற்காக அல்ல. ஒழுங்கில்லாதவர்களுக்கு, குழப்பம் ஏற்படுத்துகிறவர்களுக்குப் புத்திமதி வழங்கப்பட வேண்டும். திடனற்றவர்கள் தேற்றப்பட வேண்டும். பலவீனமானவர்கள் தாங்கப்பட வேண்டும். சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும், மற்ற அங்கத்தினனிடம் சாந்தமாயும், பொறுமையாயும், நீடியபொறுமையாயும்

காணப்படுவதற்கு முயற்சித்திட வேண்டும். இக்காட்சி எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! அப்போஸ்தல கண்ணோட்டத்திலிருந்தும், திவ்விய கண்ணோட்டத்திலிருந்தும், நம்முடைய கண்ணோட்டத்திலிருந்தும் பார்க்கப்படுகையில் சபை அடைய வேண்டிய நிலை எத்துணைப் பிரம்மாண்டமானதாய்க் காணப்படுகின்றது.

இவைகளுக்கு நேராக நாம் ஒவ்வொருவரும் அதிகமதிகமாய்ப் பிரயாசம் எடுப்போமாக. நம்மைக் கர்த்தர் தனிப்பட்ட விதத்திலும் கையாளுகின்றார் மற்றும் நம்மை ஒட்டுமொத்தத்திலும் கையாளுகின்றார் என்பதை நினைவில்கொள்வோமாக. நம் ஒவ்வொருவரிடத்திலும் தனிப்பட்ட விதத்தில் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலில் வளர்ச்சியும், வனைதலும், மெருகூட்டுதலும் காணப்பட வேண்டும் என்றபோதிலும், இதே கருத்தானது ஒட்டுமொத்த சபை தொடர்பாகவும் காணப்பட வேண்டும். எந்த மனுஷனும் தனக்காக ஜீவிக்கிறதில்லை, தனக்காக மரிக்கிறதில்லை மற்றும் கிறிஸ்துவினுடைய சபையிலுள்ள எந்த ஓர் அங்கத்தினனுக்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சக அங்கத்தினனைப் புறக்கணிக்க உரிமையில்லை. இதுவே இப்பாடத்திலுள்ள அப்போஸ்தலனுடைய நிலைப்பாடாய் இருக்கின்றது.

## ஒருவனும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்

ஆம் ஒவ்வொருவனும், தான் மற்றவர்களுக்குத் தீமைக்குத் தீமைச் செய்யாதபடி முதலாவதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்; மேலும் இரண்டாவதாகச் சபையானது, ஐக்கியத்தில் காணப்படும் அதன் அங்கத்தினர்களில் யாரேனும் இப்படிச் செய்யாதபடிக்குப் புத்திமதிக் கூறிப்பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் ஏற்னெவே பார்த்துள்ளபடி, இது விசேஷமாய் "மூப்பர்களுடைய" கடமையாய் இருக்கின்றது - அதாவது மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகள் யாவற்றையும் மற்றும் சபைக்கும், மற்றவர்களுக்கும் இடையிலான உறவையும் பார்த்துக்கொள்வது, இவர்களது கடமையாய் இருக்கின்றது. சபை கர்த்தருடைய குடும்பமாக இருக்கின்றது மற்றும் நீதிக்கும், அன்பிற்கும் எதிராய் எந்தவொரு காரியத்தினையும் செய்திடும் இக்குடும்பத்திலுள்ள அங்கத்தினன் ஒருவன், அங்கத்தினர்கள் யாவருக்கும் மற்றும் விசேஷமாக வீட்டின் தலையாகிய நமது அருமை மீட்பருக்கும் நிந்தையை அல்லது கனவீனத்தைக்கொண்டு வருகின்றவனாய் இருப்பான்.

## தீர்க்கத்தரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்

நாம் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணிடக்கூடாது; மாறாக அவைகளை மதிக்க வேண்டும் மற்றும் அவைகளுக்குச் செவிக்கொடுத்திட வேண்டும். ஆனால் இதைக்குறித்து அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை. "தீர்க்கத்தரிசனம் உரைத்தல்" எனும் வார்த்தையானது, போதித்தலை, பொதுவில் போதித்தலைக் குறிக்கும் விதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். கிறிஸ்துவின் சபையில் தேவனுடைய பிள்ளையென யார் ஒருவரும் போதிக்கும் எதையும் அற்பமாய் எண்ணாதிருங்கள். மீட்பரிலும், அவரது பலியிலுமுள்ள விசுவாசத்தினைக் குறித்து இவர் அறிக்கைப்பண்ணுகிற காரியத்திலிருந்தும் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தின் வாயிலாக கர்த்தரை இவர் அறிக்கைப்பண்ணுகிற காரியத்திலிருந்தும், போதிப்பவர் உண்மையான கிறிஸ்தவனாக இருக்கின்றார் என்பதை உங்களால் கிரகிக்க முடிந்தவரையிலும், இப்படியானவருக்குச் செவிக்கொடுக்க விருப்பமாய் இருங்கள். கருத்துவேறுபாடுகளைப்பற்றி அவரோடு வாதாடாதீர்கள்; மாறாக ஒருவேளை அஸ்திபாரத்திற்கு இசைவான எதையேனும் இவர் பெற்றிருப்பாரானால், மேலும் அது மற்றவர்களுக்கும், சபைக்கும் உதவிகரமாய் இருக்கும் என்று இவர் நம்புவாரானால், திவ்விய திட்டத்தின் சத்தியம் குறித்த தனது கண்ணோட்டத்தினை இவர் சொல்லிடும்படிக்கு அனுமதித்திடுங்கள். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமெனில் சகோதரர்களுக்குச் செவிக்கொடுக்காதவர்களாய் இருந்துவிடாதீர்கள். எனினும் எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பற்றிக்கொள்ளுங்கள் - அதாவது பரீட்சையில் நிலை நிற்பவைகளைப் பற்றிக்கொள்ளுங்கள். ஒரு சகோதரன் உண்மையுள்ளவர், நேர்மையுள்ளவர் என்பதினால், வேதவாக்கியங்களுக்கான அவரது விளக்கங்கள் சரியானது என்பதாகாது. இத்தகையவர் சபையில் எந்தவொரு வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளாதபடிக்குத் தேவனால் தடைப்பண்ணிட முடியும். எனினும் இவர்களைத் தேவன் அனுமதித்துக்கொண்டிருப்பது என்பது சரியான இருதய நிலைமையில் காணப்படும் யாவருக்கும் ஓர் ஆசீர்வாதத்தை உருவாக்குவதாய் இருக்கும். உங்களால் இவரது கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், அப்பாடத்தினை ஆராய்வதும், அக்கூற்றினைச்

சோதித்தறியத்தக்கதாக வேதவாக்கியங்களை ஆராய்வதும், உங்களுக்கு நிலையான பலனைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும் மற்றும் முன்பில்லாதளவுக்குச் சத்தியத்தில் - உங்களை உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கும். ஆனாலும் நலமானதைப் பற்றிக்கொள்வதில் நாம் கவனமாய் இருப்போமாக. இந்த ஆலோசனையானது கவனமாய்க் கைக்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களை நாம் அறிவோம். சில தீமையானது, நலமானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் விளைவு சொல்ல முடியாதளவுக்கு உரிய தீமை உண்டாகுகின்றது.

---

# உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்

**அப்போஸ்தலர் 20:2-38**

*"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."*
*(பிலிப்பியர் 4:13)*

**க**லகத்திற்குப் பின்னர்ப் பரிசுத்தவானாகிய பவுல், எபேசுவிலிருந்து போன பிற்பாடு, அவர் ஸ்தாபித்த ஐரோப்பியாவிலுள்ள சபைகளைச் சந்திக்கும்படி பிரயாணம் மேற்கொண்டார். கொரிந்து பட்டணத்தை நோக்கி, அவர் மக்கெதோனியா வழியில் செல்கையில், அவர் மீண்டும் எபேசுவுக்குத் தெற்கே 50 மைல் தொலைவில் காணப்பட்ட மிலேத்துவுக்குக் கப்பலில் வந்தார். ஆசியா மைனரிலுள்ள பல்வேறு சபையின் பிரதிநிதிகளும் அவரோடேகூடப் பிரயாணப்பட்டிருந்தார்கள். அவர் எருசலேம் நோக்கிப் பிரயாணப்பட்டிருந்தார்; எருசலேமிலுள்ளவர்கள் ஏழைகளாக இருந்தபடியால், அவர் பிரசங்கித்துக்கொண்டிருந்த நான்கு மாகாணத்திலிருந்து அவர்களுக்கு உதவிகளைச் சேகரித்தார். தெசலோனிக்கேயா, பெரோயா, தெர்பை மற்றும் எபேசு பட்டணத்திலுள்ள சபையின் பிரதிநிதிகளாகிய, ஏழு நபர்களும் பவுலோடு சேர்ந்து வழித்துணையாய்ப் பிரயாணம் பண்ணினார்கள். இந்தப் பிரயாணத்திற்குப் பல மாதக்காலம் தேவைப்பட்டிருக்கும் என அனுமானிக்கப்படுகின்றது. மேலும், அவர் இப்பொழுது மிலேத்துவை அடைந்திருந்த இத்தருணமானது எபேசு பட்டணத்துச் சபையின் மூப்பர்களுக்குப் பிரியாவிடைக் கொடுப்பதற்கான கடைசி சந்தர்ப்பமாக இருந்தது. எருசலேம் துறைமுகத்தை நோக்கிப் பிரயாணித்த அவர்கள் சென்ற கப்பலானது மிலேத்துவில் நிறுத்தினபோது பவுல், எபேசுவிலுள்ள மூப்பர்களை வரும்படி செய்தி அனுப்பினபோது அவர்கள் மிலேத்துவுக்கு வந்தார்கள்.

இந்த மூப்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளைக் குறித்தே விசேஷமாக நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கப்போகின்றோம். அவர் இவைகளைப் பெருமையாகப் பேசினார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக தான் பேசும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் முழுமையாக ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களையே அவர் மீண்டும் எளிமையாகப் பேசினார். மேலும், இதில் பெருமைபாராட்டிக்கொள்ளுவதற்கும் ஒன்றுமில்லை. அவர் தனக்காகவோ அல்லது தன்னைப் புகழ்வதற்காகவோ இவைகளைக்குறித்து மீண்டும் பேசாமல், அந்தச் சகோதரர்களுக்கு அக்காரியங்களைக்குறித்து நினைப்பூட்டி, அக்காரியங்கள் அவர்களிடத்தில் நன்கு பதிய வேண்டும் என்பதற்காகவே பேசினார். அவர்கள் மூன்று வருட காலமாகத் தன்னைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருந்திருந்தார்கள், தனது ஜீவியத்தை அறிந்திருந்திருந்தார்கள் மற்றும் கர்த்தருக்கும், சத்தியத்திற்கடுத்த ஊழியங்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கடுத்த ஊழியங்களுக்கும், தான் கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் அறிந்திருந்திருந்தார்கள் என்று நினைப்பூட்டினார். தன்னுடைய தாழ்மையான மனதையும், தான் பெருமைபாராட்டாதவன் என்றும், தன்னுடைய நடத்தைகள் கர்வமற்றது, ஆணவமற்றது என்றும், சபையை "இறுமாப்பாய் ஆளுவதற்குத்" தான் நாடவில்லை என்றும் நினைப்பூட்டினார்; இன்னுமாக தனக்கு யூதர்களாலும், கள்ளச்சகோதரர்களினாலும் வந்திட்ட கஷ்டங்கள் மற்றும் அநேக சோதனைகளை அவர்களோடு அவர் சகித்ததையும் நினைப்பூட்டினார்.

பவுலுடைய வேலையைக்குறித்தும், அவர் சகித்துப் போராடினதைக்குறித்தும், சபைக்கு நன்மையாயிருக்கும் யாதொன்றையும் அவர் மறைத்துவைக்காததைக்குறித்தும், வாய்ப்புகள் அவருக்கு கிடைக்கும்பட்சத்தில் அவர் தனிப்பட்ட விதத்திலும், பொதுவாகவும் போதித்தார் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். யூதர்களிடமும், கிரேக்கர்களிடமும் கிறிஸ்துவின் ஒரே ஒரு சுவிசேஷம்தான் உள்ளது என்றும், அது விசுவாசத்தின் மூலமும், பாவத்திலிருந்து திரும்புவதன் மூலமும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் பவுல் சாட்சி பகர்ந்திருந்தார். இப்படியாக தன்னுடைய குணலட்சணங்களின் இவ்வம்சங்கள் மீது அவர்களுடைய கவனத்தைத் திருப்புவதன் வாயிலாக, தன்னுடைய பக்திவைராக்கியம் மற்றும் உண்மையை அவர்களும் பின்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த புத்திமதிக்கான அடித்தளத்தைப் போட்டார். அவர்

அவர்களது நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொண்ட உண்மையுள்ள கண்காணியாக இருந்துள்ளார். ஆவிக்குரிய விஷயங்களில் அவர்கள் போஷிக்கப்படத்தக்கதாக பார்த்துக்கொள்வதிலும், அவர்களது நலனுக்கடுத்தவைகளில் வழிநடத்துவதிலும் உண்மையுள்ள மேய்ப்பராக இருந்துள்ளார். இவைகள் அனைத்தும் உண்மை என்று அவர்கள் அறிந்திருப்பதினால், இத்தகைய ஒருவரிடமிருந்து வரும் அவருடைய கடைசி புத்திமதியையும் - அதாவது அவர் அவர்களுக்குக் கொடுக்கப்போகும் மாபெரும் பாடத்தையும் - ஏற்றுக்கொள்ள நன்கு ஆயத்தமாயும் இருந்திருப்பார்கள்.

## ஆவியிலே கட்டுண்டவனாய்

தான் சரீரத்தில் சுதந்திரமாய் இருப்பினும், தன்னால் தட்டிவிட முடியாத அளவுக்கு தனது மனம் கட்டப்பட்டிருப்பதை உணர்ந்திருக்கின்றார் என்றும், தான் எருசலேமுக்குப் போக வேண்டும் என்றும், அப்படிச் செய்வதே தனக்கான கர்த்தருடைய வழிநடத்துதலாய் இருக்கின்றது என்றும், அதே வேளையில் கட்டுகளும், உபத்திரவங்களுமே தனக்கு எருசலேமில் வைக்கப்பட்டுள்ளது என்று "வரங்கள்" வாயிலாக மற்றவர்கள் மூலம் தனக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சகோதரர்களுக்குப் பவுல் அறிவித்தார். அப்போஸ்தலர் பின்னர்த் தைரியமான வார்த்தைகளைப் பேசுகின்றார். அதாவது, "அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:24, 25). மற்றவர்களைக்காட்டிலும், எபேசு பட்டணத்துச் சபையாரோடு அப்போஸ்தலர் மிகவும் நெருக்கமாக இருந்தார். இக்காரியமே அவர்களுக்கு மிகப்பெரிய ஐசுவரியமாக இருந்ததாக தெரிகின்றது. கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவர்களோடு பவுல் அதிகக் காலம் செலவிட்டார் மற்றும் இதனால் உண்டாகியுள்ள பலன்களைப் பார்க்கையில், அவர் நீண்ட காலம் தங்கினதை நியாயப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது. நண்பர்கள் பிரியும் விஷயம் மிகவும் வேதனையுடையதாகும். திரைக்கு இப்பக்கத்தில் இனி மீண்டும் பார்ப்பதற்கான நம்பிக்கையில்லாமல் பிரியும் சம்பவமானது இரட்டிப்பான கடும் வேதனையாக இருக்கும்.

## தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

"தேவனுடைய இராஜ்யம் குறித்துப் பிரசங்கித்தலே"- கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் என்றுள்ள அப்போஸ்தலரின் விசேஷமான வலியுறுத்துதலை நாம் இங்குக் கவனிக்கின்றோம். இந்தச் சுவிசேஷத்தையே நாம் இன்று பிரசங்கித்துக்கொண்டிருக்கிறோம் என்று நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமானால் நல்லது; ஒருவேளை இல்லையெனில், நாம் சரியானதைப் பிரசங்கிக்கவில்லை என்றதாகிவிடும். தேவனுடைய கிருபையானது, அவருடைய ஈவாகிய குமாரனிடத்தில் வெளிப்பட்டது. மேலும் தேவனுடைய கிருபையினால் குமாரனானவர் எல்லா மனுஷருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கிறவரானார். கிறிஸ்துவின் மரணமானது எப்படி நம்முடைய மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் கொண்டுவரும்படி திட்டமிடப்பட்டுள்ளது என்பதில் - தேவனுடைய கிருபையானது இன்னுமாக வெளிப்பட்டுள்ளது. அதென்னவெனில்:-

(1) மனுக்குலத்தை ஆளுவதற்கும், பாவம் மற்றும் மரணத்தை அடக்குவதற்கும், சத்துருக்களால் கட்டுண்டவர்களைச் சீர்த்தூக்குவதற்கும், பரலோகத்தின் கீழ் இராஜ்யம் இறுதியில் ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் தேவனுடைய கிருபை வெளிப்படுகின்றது.

(2) "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று நாம் ஜெபிக்கும் உலகத்திற்குரிய பொதுவான ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னதாக, அந்த இராஜ்யத்தில் அருமையான மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகிடுவதற்குச் "சிறுமந்தையினர்" முதலாவதாக தெய்வீக அறிவிப்பினால் அழைக்கப்படுகின்றனர். தேவனால் நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட காரியங்களை நாம் அறிந்துகொண்டு, இவ்விதமாக நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்வதற்கு நாம் உதவிபெற்றிடவும்வேண்டி -

இருண்ட யுகத்தின் பாரம்பரியங்களினால் நமது பார்வையிலிருந்து நீண்ட காலமாய் மறைக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யம் மற்றும் தேவனுடைய கிருபைக் குறித்ததான இந்த விலையேறப்பெற்றச் சத்தியங்களானது - இப்பொழுது ஆவியினாலும், நம்முடைய கண்கள் பிரகாசிக்கப்பட்டிருப்பதினாலும் வெளியாகிக் கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி.

"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:26, 27) என்ற அழுத்தமிக்க வார்த்தைகளை அப்போஸ்தலர் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லையே. மூன்று வருடங்களாக எபேசு பட்டணத்துச் சபையாரோடு அவர் தங்கி போதித்த அதே விஷயங்களே, பல்வேறு சபைகளுக்கு அவர் எழுதிட்ட நிருபங்களின் வாயிலாகத் தெய்வீக ஏற்பாட்டினால் நமக்கும் வந்துள்ளது. பரிசுத்த பவுலின் செய்திகளில் - தெய்வீகத் திட்டத்தின் பாகமாயிராத நித்தியத்திற்குரிய சித்திரவதைக் குறித்த எந்த ஒரு வார்த்தையும் இடம் பெறாததை நாம் கவனிக்கலாம். பரிசுத்த பவுல், கர்த்தருடைய அருமையான ஜனங்களை உற்சாகப்படுத்துவதிலும், போதிப்பதிலும், கடிந்துகொள்வதிலும் மிகப் பொறுமையாக இருந்தார் என்பதை இந்த நிருபங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம். பவுல் தன்னை முற்றிலும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்திருந்தபடியால் அவர் கர்த்தரால் அதிகம் பயன்படுத்தவும்பட்டிருந்தார்.

இங்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கும், பரிசுத்தமில்லாத ஆவிகளாகிய விழுந்துபோன ஆவிகளின் செயல்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கலாம். இரண்டு விஷயங்களிலும்/பக்கத்திலும் எந்தளவுக்கு அந்த நபர் தனது சொந்த சித்தத்தை விட்டுக்கொடுக்கின்றாரோ, அவ்வளவாய் (ஆவியின்) கட்டுப்பாடும் காணப்படும். ஆனால், அதிர்ஷ்டவசமாக மனுக்குலமாகிய நாம் அனைவரும் நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க/ஒப்புக்கொடுக்க இயற்கையாகவே பயம் கொண்டுள்ளோம். இப்படியான சுபாவம் இல்லையெனில், சந்தேகத்திற்கிடமின்றி இன்று முழு உலகமும், அல்லது பெரும்பான்மையானவர்கள் விழுந்துபோன ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் போயிருந்திருப்பார்கள். ஆவியுலக ஊடகர்கள்கூடத் தங்கள் சித்தத்தைப் பகுதியளவே ஒப்புக்கொடுத்துள்ளபடியால், முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று ஆவிகள் வலியுறுத்துகின்றன. முழுமையாக சித்தத்தை ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து, இதனால் தீய ஆவிகள் முழு அதிகாரத்தையும் எடுக்க ஒப்புக்கொடுப்பது என்பது மாபெரும் அபாயம் என ஆவியுலக இடையீட்டார்களுக்கு, ஆவியுலக புத்தக வெளியீடுகளில் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தோ பரிதாபமான ஆவியுலக இடையீட்டாளர்கள்! இவர்கள் தங்கள் மூலம் தொடர்புகொள்ளும் அனைத்து ஆவிகளும் பொல்லாத ஆவிகள் என்றும், பிசாசுகள், விழுந்துபோன ஆவிகள் என்றும், மனிதர் போன்று வேஷம் தரித்த ஆவிகள் என்றும், நம்முடைய மரித்த நண்பர்கள் போன்று வேஷம்போடும் ஆவிகள் என்றும் அறியாமலிருக்கின்றார்கள்.

புருஷர்களும், மனைவிகளும்கூடத் தங்களுடைய சித்தங்களை ஒருவருக்கொருவர் முற்றிலும் ஒப்புக்கொடுக்க துணியும் விஷயத்திலும் பாதிப்புக்கேதுவான ஆபத்தில்லாமல் இல்லை. பெற்றோர்களும்கூடத் தங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில், பிள்ளைகள் தங்களுக்கென்று சொந்த சித்தம் வைக்காத அளவுக்கு அவர்களைக் கட்டுப்படுத்த/வற்புறுத்த முயற்சிக்கக்கூடாது. பிள்ளைகள் எவ்வளவாய்க் கட்டுப்படுத்துகிறார்களோ, அவ்வளவாய்ப் பெற்றோர்கள் அவர்களை பாதிப்புக்குள்ளாக்கி, அவர்களின் தனிமனித பண்புகளைக் குலைத்துப்போட்டு, விழுந்துபோன ஆவிகள் எளிதில் அவர்களை வஞ்சிக்கும் நிலையில் உள்ளாக்கிவிடுவார்கள்.

நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய ஒரே ஒருவர் கர்த்தராவார். இவரே தம்மிடத்தில் முழுமையாகச் சித்தத்தை ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கின்றார். மேலும் நாம் அவருடைய நாமத்தினால், அவருடைய ஸ்தானாபதிகளாக இருந்து, நமது பிள்ளைகளையும், நமது நண்பர்களையும், நமது அயலகத்தாரையும் கர்த்தரிடத்தில் தங்கள் இருதயத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கலாம். எந்தளவுக்குச் சித்தங்கள் முழுமையாக அர்ப்பணிக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு ஒப்புக்கொடுத்தலும் அதிகமாயிருக்கும். அத்தகைய அனுபவமும் மிக ஆசீர்வாதமாய் இருக்கும். அதாவது, கர்த்தருடைய வேலைகளில் அதிகம் பயனுள்ளவர்களாகவும் இருப்போம். இதுவே, "ஆவியினாலே நிறைந்து," உங்களைப் பரிசுத்தப்படுத்தி, முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுங்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களின் புத்திமதியில் உள்ள சாராம்சமாகும். இந்த அர்ப்பணிப்பு அல்லது சித்தத்தை ஒப்புக்கொடுக்கும் அளவிற்கு ஏற்ப, நாம் கர்த்தருடைய

வேலைக்கு, சத்தியத்தின் வேலைக்கு, மந்தையின் வேலைக்கு ஆயத்தமாய் இருக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படலாம். கர்த்தருக்கென்று முழுமையாகச் சுயத்தை அர்ப்பணிக்கும் விஷயத்திலும், ஆவியில் நிரப்பப்படும் விஷயத்திலும், சுயசித்தத்தை வெறுமையாக்கும் விஷயத்திலும், உலகத்திற்கும் அதன் திட்டத்திற்கும் அதன் சித்தத்திற்கும் அதன் வேலைகளுக்கும் மரிக்கும் விஷயத்திலும், பரிசுத்த பவுல் சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார்.

இப்படியாக, அப்போஸ்தலன் தான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, தன்னைச் சகோதரர்கள் பின்பற்றுங்கள் என்று சொன்னதில் ஆச்சரியமில்லையே. கிறிஸ்து பிதாவின் ஆவியினால் நிரப்பப்பட்டவராக இருந்தார். பரிசுத்த பவுல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுகிறவராக இருந்து, அவரைப்போன்றே ஆவியில் நிரப்பப்பட்ட அனுபவம் பெற்றிருந்தார். எனினும், குறைந்த அளவிலேயே நிரப்பப்பட்டிருந்தார். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகத் தேவபக்தியாய் ஜீவிக்கிற அனைவரும்கூட அவருடைய ஆவியினால், கிறிஸ்துவின் சித்தத்தினால், பிதாவின் சித்தத்தினால் நிரப்பப்பட்டு, பூமிக்குரிய நோக்கங்களுக்கு மரித்தவர்களாயிருக்க வேண்டும். மூப்பர்களை வரவழைப்பதற்கான அப்போஸ்தலனுடைய நோக்கமானது, தன்னைப்போன்று, கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினவர்களாக மாத்திரமல்லாமல், சபையில் போதகர்களாகவும் காணப்படும் அவர்கள், தங்களைக்குறித்தும் மற்றும் தங்களைக் கண்காணிகளாகக் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள சபைக்குறித்தும், இரண்டுமடங்கு பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர் எனும் உண்மையினை, அவர்களது மனதில் பதியவைப்பதற்கேயாகும். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய (குமாரனுடைய) சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக (கிரேக்க வார்த்தை, episcopos - bishops) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" எனும் அவரது வார்த்தைகளைக் கவனியுங்கள் (அப்போஸ்தலர் 20:28).

"Take heed un to yourselves, and to all the flock, **<u>in which</u>** the holy spirit hath made you bishops, to feed the church of God which he purchased with the blood of his own son." (Revised Version)

"Take heed to yourselves therefore and to all the flock **<u>among whom</u>** the holy spirit made you oversees to feed the church …" (Diaglott)

அப்போஸ்தலர் 20:28-ஆம் வசனத்திலுள்ள பல்வேறு விஷயங்களானது, மிகவும் கவனமாய்க் கவனிப்பதற்குப் பாத்திரமானவைகளாகும். ரிவைஸ்ட் மொழியாக்கத்தில் "<u>In the which</u> – the Holy Spirit hath made you bishops" என்று இடம்பெறும் மொழிபெயர்ப்பானது, சபையின் மூப்பர்களானவர்கள் மேற்பட்ட வகுப்பார் அல்லது "குருமார்" வகுப்பார் எனும் விதத்தில் சபை மீது ஏற்படுத்தப்படாமல், மாறாக சபை வாயிலான கர்த்தருடைய நியமித்தலின்படி அவர்கள் சபையில் - அதன் அங்கத்தினர்களாக - மேற்பார்வையிடும் அங்கத்தினர்களாக, உதவி செய்யும் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றனர் எனும் வேதவாக்கியத்தின் காரியத்திற்கு இசைவாயுள்ளது. இரண்டு விஷயங்களைக் கவனிக்கவும்:-

(1) அவர்கள் தங்களைக்குறித்தும் மற்றும் மந்தையைக்குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சபையில் மேய்க்கும் பணியினைச் செய்ய முற்படும் எவரும், முதலாவதாக தான் சோதனைக்குள் விழுந்துபோகாதபடிக்கு விழிப்பாய் இருப்பது அவசியம்; ஏனெனில் அப்போஸ்தலன் கூறுவது போன்று, சபையில் மூப்பர்களுடைய - போதகர்கள், மேற்பார்வையாளர்களுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் விசேஷித்த சோதனைகள், விசேஷித்த இடர்பாடுகளுக்கு உள்ளாவார்கள். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற இவர்கள், ஆகாதவர்களாய்ப் போய்விடாதபடிக்கு, இவர்கள் முதலாவது, தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

(2) "திவ்விய ஒழுங்குமுறையின் கீழ் மூப்பராகிய சகோதரர்களெனச் சபையில் ஊழியத்தினை ஏற்றுக்கொள்பவர்கள், தாங்கள் ஒரு கனமான பொறுப்பினை எடுத்துக்கொண்டுள்ளனர் என்றும், அது விஷயம் தாங்கள் தேவனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். இது சகோதரரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கிறதைக் குறிக்கின்றதாய் இராது. இது சகோதரருக்குப் பிரசங்கம் பண்ணுவதை மாத்திரமோ அல்லது வியாதியஸ்தர்களைப் போய்ச் சந்திப்பதை மாத்திரமோ மற்றும் பிரச்சனையில் இருப்போருக்கு ஆலோசனை வழங்குவதை மாத்திரமோ குறிப்பதாகாது. இது சபையாருடைய மற்றும் அதன் தனித்தனி நபர்களுடைய - இருவருடைய நலனுக்கடுத்த

காரியங்கள்குறித்த ஓர் ஆவிக்குரிய மேற்பார்வையை, பராமரிப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஜீவியத்திற்கடுத்த கவலைகளினால் பாரமடைந்திருப்பவர்கள், ஜீவனுள்ள தேவனுடைய சபையில் இந்த ஊழியத்திற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்குரிய நிலைமையில் எவ்விதத்திலும் காணப்படாதவர்களாய் இருப்பார்கள். மேலும் இத்தகையவர்கள் அப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அழைக்கப்படவும் கூடாது, மூப்பர் என (voted) வாக்களிக்கப்படக் கூடாது. கர்த்தருடைய இராஜ்யம் மற்றும் அதன் நீதிக்கடுத்தவைகளை முதலாவது நாடுபவர்கள் மாத்திரமே எவ்விதத்திலும், சபையிலுள்ள இத்தகைய ஊழியத்திற்குப் பொருத்தமானவர்களாய் இருப்பார்கள். மற்ற அங்கத்தினர்கள் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர், விசேஷமாக அவர்களது ஆவிக்குரிய காரியங்களில் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர் என்று கவனிப்பது தங்களது பொறுப்பினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று மூப்பர்கள் கருதிட வேண்டும். வாய்ப்புக் கிடைப்பதற்கேற்ப மற்ற அங்கத்தினர்கள் யாவருக்கும் புத்திமதி கூறுவதும், உற்சாகமூட்டுவதும், உதவிசெய்வதும் தங்களது கடமையினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று இவர்கள் உணர்ந்திட வேண்டும்.

தாங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் ஏதோ தனிப்பட்ட காரியமாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி ஒவ்வொருவரையும் சரிப்படுத்த முயற்சிப்பது என்பது சகோதர சகோதரிகள் யாவருக்குமான சிறப்புரிமையல்ல. தனிப்பட்ட காரியமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில், மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான நமது கர்த்தருடைய அறிவுரையானது கண்டிப்பாய்ப் பின்பற்றப்பட வேண்டும். மூப்பர் ஒருவர் இந்தத் தனது ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், சபையாரின் காரியங்கள் மீதான இத்தகைய கண்காணிப்பைப் பண்ணிடவும், சந்தர்ப்பத்தினுடைய தன்மைக்கேற்ப புத்திமதி வழங்கிடவும், கடிந்துகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்; மேலும் இவற்றைச் செய்கையில் - தானும் ஒருவேளை இதே விஷயங்களில் சோதனைக்குள்ளாகவில்லை என்றாலும், வேறு ஏதேனும் விஷயங்களில் சோதனைக்குள்ளாகக்கூடும் என்று நினைவில் கொண்டு சாந்தத்துடன் செய்திட வேண்டும். மூப்பரும்கூட மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களின் காரியங்களை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

## கொடிதான ஓநாய்களும், மாறுபாடானவைகளைப் போதிப்பவர்களும்

கண்காணிக்கும் இக்கடமையினை மூப்பர்களிடத்தில் பதியவைக்கும் வண்ணமாய்க் கர்த்தர் இந்த மந்தையைத் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தார் என்றும், கர்த்தருடைய பார்வையில் காணப்படும் இந்த விலையேறப்பெற்றக் காரியமானது - அவர்களால் ஏறெடுக்க முடியும் எந்த ஊழியத்திலும் சகோதரருக்கெனத் தங்கள் ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடுவதற்கு அவர்கள் விரும்பத்தக்கதாக - அவர்களது மனங்களில் மிக ஆழமாய்ப் பதிய பெற்றிருக்க வேண்டும் என்றும், அவர்களுக்குப் பரிசுத்த பவுல் அடிகளார் நினைப்பூட்டினார்.

முன்னமே கொடுக்கப்பட்ட எச்சரிப்பிற்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணமாக அப்போஸ்தலன் தீர்க்கதரிசனமாய், இவர்கள் தங்களுக்காகவும், மந்தைக்காகவும், தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பது மிகவும் அவசியம் என்றும், மூப்பர்கள் மத்தியிலிருந்து விசேஷமாக மனுஷர்கள் எழும்பிச் சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்றும் கூறினார். தலைவர்களாகிட வேண்டுமென்ற ஆசையில், தங்கள் பதவி ஆசை நிறைவேற உதவும்படிக்கு சபையில் பிரிவினையை உருவாக்கிடுவதற்கு இவர்கள் தயங்கிடமாட்டார்கள். வசனம் 30-இல் இடம் பெறும் 'perverse' (மாறுபாடானவைகள்) எனும் வார்த்தை அதன் மூல பாஷையில், திரித்துக்கூறுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஆவியினை இழக்கத் துவங்குபவர்கள், சத்தியத்தினைப் பற்றின தங்களது தெளிவான புரிந்துகொள்ளுதலையும் இழக்கத் துவங்குவார்கள் என்பதே கருத்தாகும். சுயநலமான மற்றும் தனிப்பட்ட ஆசைகளானது அவர்களது கண்பார்வையினை மறைக்கையில், அவர்கள் வேதவாக்கியங்களை மிகமிக மங்கலாய்க் காண்பார்கள் மற்றும் அவை தங்களது சொந்த ஆசையினை ஆதரிக்கத்தக்கதாக, அவற்றைத் தாராளமாய்த் திரித்திடுவார்கள்.

அப்போஸ்தலனின் வார்த்தைகள் எத்துணை உண்மையாய் உள்ளது! இவைகள் விஷயத்தில் விசேஷமாய் மூப்பர்களுக்கு, மந்தையினுடைய கண்காணிகளுக்கு எத்துணை மகா ஆபத்து உள்ளது! நிச்சயமாகவே சுயநலமான ஆசை என்பது இவர்கள் எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் சத்துருக்களில் ஒன்றாய் இருக்கின்றது. இந்தப் பதவி ஆசைகளானது,

சடுதியாய் முளைத்து, பூப்பூத்து, கனிகொடுத்துவிடுவதில்லை. இது ஒரு படிப்படியான காரியமேயாகும்; ஆகையால் மிகவும் அபாயகரமானதாகவும், மிகவும் வஞ்சனையுள்ளதாகவும், கவனிக்கத்தவறப்படுகிறதாகவும் காணப்படுகின்றது. ஆகையால் கர்த்தருடைய மந்தையில் அனைவரும், விசேஷமாக மூப்பர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருப்பதும், தங்கள் நடத்தைகளை அதிலும் குறிப்பாக தங்கள் செய்கைகளுக்குப் பின்னுள்ள நோக்கங்களைக்கூர்ந்து கவனிப்பதும் எவ்வளவு முக்கியமாயுள்ளது. சித்தத்தில் முழுமையான தூய்மை என்பது அவசியமாயுள்ளது என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. கலந்திடும் ஒவ்வொரு சுயநலமும், எவ்வளவு சிறியதாயிருப்பினும், அது கவனிக்கப்படாத பட்சத்தில், இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும் நச்சுக்கிருமியாயிருக்கும். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்பதே அப்போஸ்தலனின் எச்சரிப்பாய் இருக்கின்றது. ஏனெனில், மூப்பர்கள் மத்தியில்தான் சில மனுஷர் எழும்பி சீஷர்களைத் தங்கள் பக்கமாக இழுக்கவும், மந்தையில் தலைவர்களாக இருக்கவும், மனுஷனுடைய பாராட்டு மற்றும் கனம் பெற்றுக்கொள்ளும் காரணங்களுக்காக மாறுபாடானவைகளைப் பேசுவார்கள். ஆ! தெய்வீகக் கிருபையையும், நித்தியத்திற்குரிய ஜீவனையும் இழப்பது என்பது எத்துணைப் பெரிய விலை!

"கொடிதான ஓநாய்கள்" என்பது இரக்கமற்ற ஓநாய்களாகும். கொஞ்சக்காலம் இவர்கள் தங்கள் ஓநாய் சுபாவத்தை மூடிமறைத்துள்ள வெளிப்புறமான நடத்தையினாலும், வெளிப்புறமான அறிக்கையினாலும், செம்மறி ஆடுகளை ஏமாற்றிடலாம். மந்தையை வஞ்சிப்பதற்கான இவர்களது வெளித்தோற்றமான நடத்தையை, வேதவாக்கியங்களானது, "ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டுள்ள ஓநாய்" என்று குறிப்பிடுகின்றது (மத்தேயு 7:15, 16). இவர்களது குணலட்சணமானது, செம்மறி ஆடுகளுக்கு வெளிப்படுவதற்கு வெகுக்காலத்திற்கு முன்னதாகவே, மேய்ப்பன் அவைகளை அறிந்திருப்பார். ஆனால் ஓநாய்களானது, மந்தையைக் கடிக்கவும், பட்சிக்கவும், சிதறடிக்கவும் துவங்குவது வரையிலும் சாதுவான மற்றும் கபடற்ற ஆடுகளானது வஞ்சிக்கப்பட்டே காணப்படும். கோபத்தின், துர்க்குணத்தின், பகைமையின், பொறாமையின், சண்டைச் சச்சரவின் ஊளைகளானது, வேதவாக்கியங்களில் "மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது - இவை நீதியின், சமாதானத்தின் மற்றும் அன்பின், கர்த்தருடைய ஆவியின் கிரியைகள் அல்ல - ஓநாயானது அதன் வாயினாலே தீங்கு செய்கின்றது; அதுபோலவே "கொடிதான ஓநாய்களும்" செய்கின்றன. புறங்கூறுதல், தூற்றுதல் மற்றும் சகல பொல்லாத கிரியைகளைச் செய்கின்றனர். எவற்றை எதிர்ப்பார்த்திடலாம் என்று எபேசுவின் மூப்பர்களை அப்போஸ்தலன் எச்சரித்தார் மற்றும் அவரது வார்த்தைகள் உண்மையாகவுமானது. "இமெனே, அலேக்சந்தர், பிகெல்லு, எர்மொகெனே என்பவர்களுடைய நாமங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17). அதே கொள்கை இன்றளவும் கிரியைச் செய்கின்றது. அதே எச்சரிப்பிற்கு இன்றும் செவிக்கொடுக்கப்பட வேண்டும். ஆம் இதுபோன்றதான பல்வேறு அனுபவங்களானது, சுவிசேஷ யுகம் நிறைவடைகின்றதும், நாம் இப்பொழுது ஜீவித்துக்கொண்டிருக்கின்றதுமான, "பொல்லாத நாட்களில்" சபை மீது வருமென வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

## இரவும், பகலும் கண்ணீரோடே

வசனம் 31-இல், அப்போஸ்தலன் இரண்டு காரியங்களை நமக்கு முன்வைக்கின்றார். இவ்வளவுக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளதான இந்தத் தீமைகளுக்கு எதிராய் முதலாவதாக மூப்பர்கள் விழித்திருக்க வேண்டும். அவர்கள் ஓநாய்களுக்கு எதிராய், மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும். ஆடுகளில் யாரேனும் ஓநாயினுடைய வெறிக்கடியினால் (Rabies) வெறியடைந்து, ஜலபய வியாதிக்கான (hydrophobia) அறிகுறிகளை வெளிப்படுத்திடும் நிலை ஏற்படாதபடிக்கு, மூப்பர்கள் ஆடுகளுக்குப் புத்திமதி கூறிட வேண்டும்; ஒருவரையொருவர் புறங்கூறுதல் என்பது, ஜலபய வியாதியின் வழக்கமான அறிகுறியாகும் - இதோடுகூடச் சத்தியத்திற்கு அடையாளமான தண்ணீருக்கான தாகம் இருப்பது போன்று காணப்பட்டும், அதைப் பருகிடுவதற்கு மறுத்தல் - அதாவது அதற்கு எதிராய் மாறிவிடுதல் என்பதுமாகிய அறிகுறியும் காணப்படும்.

இரண்டாவதாக மூப்பர்கள் தங்கள் மத்தியிலிருந்து, நிச்சயமாக எழும்புபவர்களுக்கு எதிராகவும் கண்காணித்துக்கொள்ள வேண்டும். சரியாய்க் கண்காணித்தல் என்பது, நம்முடைய சொந்த இருதயங்களில் துவங்குகின்றதாயிருந்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்டிட

வேண்டும். இப்படியாகக் கண்காணிக்கும்போது, இமெனேயும் பிலேத்துவையும் போன்றவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். மேலும் சரியாய்க் கண்காணித்தலானது, உரிய காலத்தில் அத்தகைய பாத்திரங்களை அடையாளம் கண்டு கொண்டு, அத்தகையவர்களை - அவர்களின் மீதான எந்தவொரு கசப்பின் காரணமாக இல்லாமல், மாறாக மந்தையினுடைய பாதுகாப்பிற்காக அத்தகையவர்களை வெளிப்படுத்திடும் (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17).

இப்படியாகத்தான் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக, பரிசுத்த பவுல் அடிகளார் சகோதரருக்கு நினைப்பூட்டினார் - அதாவது அவர்கள் மீதும், ஆசியா மைனரிலுள்ள சபைகள் அனைத்தின் மீதும் மிகுந்த அக்கறையும், கவலையும், கண்காணிப்பும் உள்ள ஒன்றாய்த் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக அவர்களுக்கு நினைப்பூட்டினார். "இரவும், பகலும் கண்ணீரோடு" எனும் வார்த்தைகளானது - கிறிஸ்துவோடு ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்திடும், கிறிஸ்துவினுடைய மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கப்போகின்றவர்களை அழைப்பதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் உதவி செய்யத்தக்கதாக, சபையின் மாபெரும் தலையானவரால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதான "புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரரென," கர்த்தருடைய மந்தைக்கான கண்காணியென, உடன் மேய்ப்பனென, இராஜாதி இராஜனுடைய ஸ்தானாபதியென, தேவனுடைய ஊழியக்காரனெனத் தன்மீது காணப்படும் பொறுப்பினுடைய பாரத்தினைச் சரியாய் அவர் உணர்ந்து கொண்டிருந்ததைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

## தெய்வீக உதவி அருளப்பட்டுள்ளது

அப்போஸ்தலனுடைய அறிவுரையின் இறுதி வார்த்தைகளானது, அப்போஸ்தலன் தன்னுடைய வார்த்தைகளானது, தனது இந்த உள்ளார்ந்த போதித்தல்களானது, மூப்பர்களைத் தங்களது பொறுப்புகள் குறித்து விழிப்பிற்குள்ளாக்குவது மாத்திரமல்லாமல், இப்படியாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதான ஆபத்தின் விஷயத்தில் எந்தப் பாதுகாப்பின் மீது தாங்கள் சார்ந்திருக்க வேண்டும் என்று விசாரித்திட அவர்களை வழிநடத்திட வேண்டும் என்று அப்போஸ்தலனின் எண்ணம் காணப்பட்டதாகத் தெரிகின்றது. நமது ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் மகா மையமாகக் காணப்படுபவரும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் அளிப்பவருமான தேவன் நம்முடைய சார்பிலும், அவரது ஏற்பாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு நாடிடும் அனைவரின் சார்பிலும் காணப்படுகின்றார் எனும் உண்மையினிடத்திற்கு அப்போஸ்தலன் கவனத்தைத் திருப்புகின்றார்.

இன்னும் விவரிக்கும் வண்ணமாக, அவர் வேதவாக்கியங்களை, தேவனுடைய கிருபையுள்ள வசனத்தை, சுவிசேஷ செய்தியினைக் குறிப்பிடுகின்றார். தேவவசனமானது நம்மைக் கட்டியெழுப்ப முடிகிறதாகவும், அவசியமான குணலட்சணத்தினுடைய வளர்ச்சியினைக் கொடுக்க முடிகிறதாகவும், இந்தச் செய்தியினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் யாவருக்குமாக தேவன் வைத்துள்ளதான மாபெரும் சுதந்தரத்தில், நமக்கு ஒரு பங்கினை இறுதியில் கொடுக்க முடிகிறதாகவும் காணப்படுகின்றது என்று அவர்களுக்கும் மற்றும் நமக்கும்கூட அவர் கூறுகின்றார். இவை அனைத்தையும் இருதயத்தில் வைத்துக்கொள்வோமாக. தேவ வசனத்தைப் புறக்கணித்தல், அவரது வாக்குத்தத்தத்தைப் புறக்கணித்தல் என்பது, நமக்கான சோதனையைச் சகிப்பதற்கான பலத்தில் குறைவுப்பட்டிருப்போம் என்பதாகும். இது நம்மைக் குழப்பத்தக்கதாக, இருளுக்குப் பதிலாக வெளிச்சத்தையும், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளையும் சாத்தான் முன்வைத்திடுவதற்கு அவருக்குக் கதவைத் திறப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கும். மேலும், இதில் எச்சரிப்பாய் இருப்பதற்குக் கவனம் செலுத்தத் தவறினவர்கள் - ஆட்டினுடைய சத்தத்திற்கும், இரவில் ஊளையிடும் ஓநாயின் சத்தத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போவதைக் குறிக்கின்றதாகிவிடும். மேலும், கர்த்தருடைய வார்த்தையாகிய எக்காளத்தைப் பற்றிப்பிடித்து ஊதுகிறவர்களுக்கும் மற்றும் மந்தையைப் பிரித்துத் தங்கள் பக்கமாக ஆடுகளை இழுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக மாறுபாடானவைகளைப் பேசி ஆடுகளின் மத்தியில் பிரிவினைகளைக் கொண்டுவர நாடுபவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போகின்றதைக் குறிக்கின்றதாகிவிடும்.

தவறு செய்யாதிருப்போமாக. கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மத்தியில் பங்கு உண்டு அல்லது பங்கு இல்லை என்பதுதான் கேள்வியாகும். கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் கர்த்தரையும், பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய விஷயங்கள் தொடர்பான, அவருடைய சகல ஆசீர்வாதங்கள் தொடர்பான அவருடைய ஏற்பாடுகளை

ஏற்றுக்கொள்ளுகிறவனாயிருந்து, தொடர்ந்து வைராக்கியத்துடன் காணப்பட்டு மேய்ப்பனின் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வான். ஆனால், ஏற்றகாலச் சத்தியத்தையும், இந்த அறுவடை காலத்தின் விசேஷமான ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளாதவனோ ஆயத்தமற்றவனாயிருந்து, தன்னை வஞ்சிக்கவும், இழுத்துக்கொள்ளவும் நாடுபவர்களால் வஞ்சிக்கப்பட்டுப் போவான்.

## மந்தைக்கான ஒரு முன்மாதிரி!

போரடிக்கிற மாடானது கூலிக்குப் பாத்திரமாய் இருப்பதுபோல, ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்த ஒருவன், தான் சேவித்தவர்களின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் ஒரு பங்கை நியாயமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிசுத்த பவுல் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தான் பூமிக்குரிய விஷயங்களைப்பார்க்கிலும் மிக விலையேறப்பெற்ற ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்திருக்கிறபடியால், தன்னுடைய பூமிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் சபை புரியும் ஊழியம் சிறு காரியமே என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். இவைகள் சபையாரால் கடைப்பிடிக்க வேண்டிய நியாயமான விஷயங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும், அவைகளை அவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்ப்பார்க்கவில்லை. இந்த விஷயங்களைச் சரியான வெளிச்சத்தில் பார்ப்பது அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். ஆனால் பூமிக்குரிய விஷயங்களில் தனக்கும், சத்தியத்தின் மற்ற ஊழியர்களுக்கும் உதவிகள் புரியும் தங்களுக்குரிய சிலாக்கியங்களை அவர்கள் பார்க்கத் தவறினாலும், இதனால் அவர் சத்தியத்தின் சேவையில் சுயத்தைப் பலிச்செலுத்துவதற்கும், சுயத்தை வெறுப்பதற்கும் அதிக வாய்ப்புகளைப் பெற்றதாக உணர்ந்திருந்தார். அவர்கள் செய்யத் தவறின விஷயங்களுக்காகக் கோபம்கொண்டு நீங்கள் என் பூமிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுத்தபடியினால் நானும் உங்கள் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுக்கிறேன் என்று கூறவில்லை. மாறாக, அவருடைய எண்ணம் இப்படியாக இருந்தது:- இந்த அருமையான ஆடுகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தேவையாய் உள்ளது. மேலும், அவர்களுக்கு அவைகளை அளிப்பதற்கான கர்த்தருடைய ஊழியக்காரனாகும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளபடியினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எந்த அளவிற்கு என்னிடம் சுயத்தைப் பலிச்செலுத்தலும், சுயத்தை வெறுத்தலும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் அது நான் அவருக்காகவும், அவருடைய சத்தியத்திற்காகவும், அவருடைய மந்தைக்காகவும் கொண்டுள்ள அன்பை நிரூபிக்கின்றதாய் இருக்கும். மேலும் தம்முடைய பலியின் மூலமாய் ஆடுகளைச் சம்பாதித்த மாபெரும் மீட்பருக்கு ஒத்து நான் அதிகம் காணப்படுவதினால், மாபெரும் மேய்ப்பனின் கிருபையையும் நான் அதிகமாய் பெற்றுக்கொள்வேன் என்பதேயாகும்.

இவ்வாறாகத் தற்பெருமைக்காக அல்லாமல், அவர்களுடைய நலனுக்காக, கர்த்தருடைய உடன் மேய்ப்பனுக்குரிய சரியான குணலட்சணங்களை அவர்கள் நன்கு புரிந்துகொள்ளத்தக்கதாகத் தன்னுடைய நடத்தையின் மீது அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பினார். "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" என்று கூறினார் (அப்போஸ்தலர் 20:33). சொத்துக்களைக் குவிப்பதற்கோ அல்லது தற்கால ஜீவியத்தின் சொகுசுகளை அடைவதற்கோ அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு ஊழியம் புரியவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய இருதயத்தையே இச்சித்தார். சபையின் மாபெரும் தலையோடு அவர்களை உறவிற்குள் கொண்டுவரும் சந்தோஷத்தையே அவர் இச்சித்தார். கிறிஸ்துவின் சரீர அங்கங்களை ஆயத்தப்படுத்துவதிலும், தேவனுடைய வார்த்தையில் வாக்களிக்கப்பட்டுள்ள மகிமையான விஷயங்களுக்கு அவர்களுடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ள உதவுவதிலுமான புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரனான தனது சிலாக்கியங்களை அப்போஸ்தலர் பவுல் உணர்ந்திருந்தார்.

"நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது" (அப்போஸ்தலர் 20:34) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். பரிசுத்த பவுலோடுகூடப் பிரயாணம் மேற்கொண்டவர்களில் சிலருக்குத் தொழில் தெரியாத காரணத்தினாலும், இலாபகரமான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாததாலும், அப்போஸ்தலனாகிய பவுலின் கூடாரஞ்செய்யும் தொழிலானது பல்வேறு கடலோரப் பட்டணங்களில் வரவேற்கப்பட்ட நிலையில் இருந்ததினாலும், பவுலின்மீது இந்தச் சகோதரர்கள் அவர்களின் பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய தேவைகளுக்குப் பெரிதளவில் சார்ந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது.

அப்போஸ்தலர் பவுல் என்றுமே இதைக்குறித்து முறையிடவில்லை. இந்த வேதப்பகுதியிலும்கூட அவர் குற்றஞ்சாட்டவில்லை. மாறாக, கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் என்று தன்னால் நம்பப்பட்டதும், தன்னால் பின்பற்றப்பட்டதெனத் தான் நம்பினதுமான தகுதியான நடத்தையினை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார். அவர்களும் இதேவிதத்தில் சுயத்தைப் பலிச்செலுத்தி கர்த்தருக்காகவும், சபைக்காகவும், சத்தியத்திற்காகவும் அன்பின் ஆவியைக் கொண்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார். இவ்விதமாக அவர்கள் தேவனுடைய இரக்கத்தின் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாகவும், அவருடைய மந்தையை உண்மையாய்க் கண்காணிக்கிறவர்களாகவும் இருக்க முடியும். இதையே அவர் 35-ஆம் வசனத்தில் தெரியப்படுத்துகின்றார். "இப்படி பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார்."

---

# எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம்

## பரிசுத்த யோசேப்பு மாநாடு

தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நமது கர்த்தராம் இயேசு, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிதலுள்ள சுதந்திரவாளியெனத் தாம் உரிமைப்பெற்றிருந்த பூமிக்குரிய ஜீவனையும், சாம்ராஜ்யத்தையும் வைத்துக்கொள்வதற்குப் பதிலாக, அதை அவர் பலிசெலுத்திவிட்டார் - மரணத்தில் அதைக் laid it down/கொடுத்து வைத்திட்டார். இதுவே பிதாவின் எண்ணமாக இருந்தது - அதாவது பூமிக்குரிய ஜீவனையும், உரிமைகளையும் முழுமையாய்ப் பலிசெலுத்துமளவுக்கு இயேசு தமது விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் காண்பிப்பாரெனில், பிதா அவரைத் தெய்வீக வல்லமையினால் மரணத்திலிருந்து மறுபடியுமாய் பூமிக்குரிய நிலைமைகளுக்கு இல்லாமல், மாறாக பரலோக நிலைமைகளுக்கு எழுப்பிட - அதாவது "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவரை உயர்த்திட" எண்ணம் கொண்டிருந்தார் (எபேசியர் 1:20). இப்படி உயர்த்தப்பட்டிருக்கும் இயேசு அவரால் பலிசெலுத்தப்பட்ட பூமிக்குரிய உரிமைகளைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டும் என்பது பிதாவின் எண்ணமாக இருந்தது - இவற்றைப் பாவத்தின் விளைவாக தங்கள் ஜீவன்களையும், பூமிக்குரிய உரிமைகளையும் இழந்துபோயிருந்த ஆதாமையும், அவரது சந்ததியாரையும் ஆசீர்வதிக்கத்தக்கதாகக் give away/கொடுத்துவிடத்தக்கதாக, இயேசு இவற்றைச் சொத்தாக அல்லது விலையேறப்பெற்ற உடைமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பது பிதாவின் எண்ணமாக இருந்தது. உயிர்த்தெழுந்த மற்றும் மகிமையடைந்த நமது கர்த்தர் பரமேறினபோது, ஆதாமையும், அவரது சந்ததியிலுள்ள அங்கத்தினன் ஒவ்வொருவரையும் சீர்ப்பொருந்தபண்ணுவதற்கு அவசியமான ஆசீர்வாதத்தினைப் போதுமானதாகப் பெற்றிருந்தவராய் இருந்தார். கிறிஸ்துவினுடைய அந்த ஒரே பலியானது அனைவருக்கும் போதுமானதாய்க் காணப்படுகின்றது. இயேசு ஒப்புக்கொடுத்துவிட்டவைகளானது, பூமிக்குரிய ஆசீர்வாதங்களாக, பூமிக்குரிய ஜீவனாக, பூமிக்குரிய வல்லமையாக, பூமிக்குரிய பரதீசாக இருந்ததே ஒழிய, பரலோகக் காரியங்களல்ல.

# எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்

சபையினுடைய சுயாதீனங்களையும், அதிகாரத்தையும் குறித்தும் மற்றும் மேய்ப்பர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் என்பவர்கள் சபையினுடைய வேலைக்காரர்களே ஒழிய, அவளை ஆளுகிறவர்களல்ல என்பது குறித்தும் சுட்டிக்காட்டியதில் சபைக்கு நாங்கள் கொண்டிருந்த எங்களது உண்மைதான், மூப்பர்கள் மற்றும் வழிநடத்துபவர்களில் சிலர் வேதாகமப் பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியை எதிர்ப்பதற்குக் காரணமாக இருக்குமோ என்று நாங்கள் எண்ணினதுண்டு. சபையினுடைய சுயாதீனங்கள் வழிநடத்துபவர்களால் பறிக்கப்பட்ட மற்றும் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கென இத்தகைய வழிநடத்துபவர்கள் "வாட்ச் டவர்" வெளியீட்டுகளின் வாயிலாக - கர்த்தருடைய மந்தைக்குரிய சரியான பாதையை மந்தைக்குத் தெரிவித்திடும் மேய்ப்பனின் சத்தத்தை மந்தைக் கேட்காதப்படிக்குத் தடைப்பண்ணிட முற்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களானது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. யாரையும் நியாயந்தீர்ப்பது எங்கள் காரியமல்ல. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்." அனைவரும் எந்தளவுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளின் போதனைக்குத் தனிப்பட்ட விதத்திலும் மற்றும் சபையாராகவும், சபைகளாகவும் நெருக்கமாய்த் துல்லியமான இசைவிற்குள்ளாக வருவார்களோ, அவ்வளவுக்கு நம்மீது காணப்படுகின்றதான கடுமையான சோதனைகளில் நிற்பதற்கு ஆயத்தமாகவும், நிற்பதற்கு முடிகிறவர்களாகவும் காணப்படுவார்கள் என்று எங்கள் செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள் யாவருக்கும் முன்னெச்சரிக்கை வழங்குவதே எங்கள் காரியமாய் இருக்கின்றது.

இந்தச் "சோதனைகாலத்தின்" விசேஷித்த சோதனைகளானது, வழிநடத்துபவர்களுடன் துவங்கி, இருளினின்று தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துக் கொண்டுவரப்பட்டவர்கள் மத்தியில் அதிகமதிகமாய்ப் பெருகிடும் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது என்று நாம் சொல்ல விரும்புகின்றோம். பிற்பாடு அந்தச் சோதனையானது, பெயர்ச் சபைகளில் குருமார்கள் மீதும் மற்றும் சாதாரண வகுப்பார் மீதும் மற்றும் இறுதியில் ஜனக்கூட்டத்தார் மீதும் கடந்துவரும். "நான் மூன்று வருஷக்காலமாய் இரவும், பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்துக்கொள்ளுங்கள்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளானது, எங்களது செல்வாக்கு காணப்படுகின்ற யாவரிடத்திலுமான எங்களது மனவுணர்வுகளை நன்கு பிரதிபலிக்கின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 20:31).

---

## தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே
## REST IN GODS WILL

தேவசித்தமதிலே இளைப்பாறுதலிலே
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை இன்பம்
என்னதான் நமக்கே நேரிட்டேவிடினும்
அவர் நமக்கே நம் பக்கம் இருக்கின்றாரே
எத்தனை வலிகள் வேதனை இருப்பினும்,
இந்த சிந்தையே வலிகளைத் தாங்குமே,
மீண்டும் மீண்டும் பெலனடைந்திடவே
இதுவே உதவிடும் அனுதினம் நமக்கே,
குளிர்வீசும் காரிருள் இரவினிலே
வெளிச்சம் மங்கலாகவே தெரிகின்றதே
பரலோக வெளிச்சமோ அவ்விருளினை நிரப்பியே
வெதுவெதுப்பாகவே ஆக்குகின்றதே,
பூரண சமாதானம் இளைப்பாறுதலையே
நாளுக்குநாளே எப்போதும் அவரளிப்பாரே,
அவரது கிருபையோ நமக்கே போதுமானதே,
இருதயம் பலவீனமாகியே சோர்ந்தே முறுமுறுத்திட வேண்டாமே,
முகத்தினை மேல்நோக்கிப் பார்த்தே
நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையிலுமே
வேகமாகவே ஓடிட வேண்டுமே ஒரே சீராகவே,
தடயம் இல்லா விழிதனிலே, தொடர்ந்தே முன்னேறி
ஓடியே வெல்வோம் பரிசதனை.

-------------------------

**--1578--**

# சண்டைக்காரராயிருந்து

*"தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்." (ரோமர் 2:6-8)*

மேற்கூறப்பட்டுள்ளதான அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, கொஞ்சம் எல்லோருக்குமே பொருந்துகின்றதாக இருப்பினும், இவைகள் விசேஷமாய்ச் சபைக்குப் பேசப்பட்டுள்ளது மற்றும் சபைக்குப் பொருந்துகின்றதாகவும் இருக்கின்றது. பொதுவாகவே தாங்கள் தெய்வீகச் சித்தமென அறிந்திருக்கிற எவற்றிற்கும் அன்புடன் கீழ்ப்படிந்த நிலையில் மேலானவைகளையும், உன்னதமானவைகளையும் நாடுகின்றவர்கள், அவர்களது பாதையானது இடுக்கமானதாகவும், குறுகலானதாகவும் இருப்பினும், தினந்தோறும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருக்கின்றனர். ஆனால் சண்டைக்காரர்களாயும், குற்றம் கண்டுப்பிடிக்கிறவர்களாயும், எளிதில் கோபங்கொள்ளுகிறவர்களாயும், திருப்தியற்றவர்களாயும் இருப்பவர்கள் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் தொடர்ந்து பிரச்சனை உண்டுபண்ணுகிறவர்களாக இருப்பார்கள் மற்றும் தேவனாலும், தேவனுக்கு இசைவாய்க் காணப்படுகின்றவர்களாலும் அங்கீகரிக்கப்படாத ஒரு பண்பினை, நித்திய ஜீவனைப் பலனாகப் பெறமுடியாத ஒரு பண்பினை வளர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்; பிரச்சனையைத் தொடர்ந்து, கொண்டுவருகிறதும், இறுதியில் தோல்வியடையப் பண்ணுகிறதுமான ஒரு பண்பினை வளர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் அப்போஸ்தலன் இங்கு இவ்வார்த்தைகளைத் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்குப் பொருத்துவது போன்று, நாமும் பொருத்திப்பார்க்கும்போதே, நம்முடைய இந்தப் பாடம் மிகவும் தெளிவாய்ப் பிரகாசிக்கின்றதாய் இருக்கும். சிலரே - சிறுபான்மையானவர்களே தேவனுடைய சிறந்த மற்றும் பிரமாண்டமான ஈவிற்காக -- மீட்பரோடுகூட அவரது மகிமையின் இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாய் இருப்பதற்கும், அவரது மகிமையான திவ்விய சுபாவத்தில் பங்காளிகளாகுவதற்கும் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நாடுகின்றனர். இந்த மாபெரும் பரிசினை வெற்றிகரமாய் நாடிடுவதற்கு ஒரே ஒரு வழியுள்ளது; அது நமது மீட்பருக்கொத்த குணலட்சணத்தின் சாயலைப் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நமக்குள் விருத்திச்செய்து, வளர்த்திக்கொள்வதாகும் (உரோமர் 8:29). கர்த்தருக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான பல்வேறு வாய்ப்புகள் நம்முன் வைக்கப்பட்டுள்ளது மற்றும் அவைகள் ஆசீர்வாதமான சிலாக்கியங்களாக இருக்கின்றன; கிறிஸ்தவ குணலட்சணங்களில் நாம் வளர்ச்சியடைவதே இந்த ஊழியங்களை அனுமதித்திடுவதற்கான தெய்வீக நோக்கம் மற்றும் எண்ணமாகக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். அனைத்து மனுஷர்களுக்குமான கட்டளை - தேவனைப் பிரதானமாய்க் கனம்பண்ணுதல் மற்றும் நம்மை நாம் அன்புகூருவதுபோன்று பிறரை அன்புகூர்ந்தவர்களாக, நம்மை மற்றவர்கள் நீதியாய்க் கையாளப்படுவதற்கு நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களை நியாயமாய்க் கையாளுதலாகும்; ஆனால் புதுச்சிருஷ்டிக்கான விசேஷித்த கட்டளை - நம்முடைய மூத்த சகோதரன் சுயத்தைப் பலிச்செலுத்தி, நம்மை அன்புகூர்ந்தது போன்று, நாம் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் என்பதாகும். நாம் ஒருவருக்கொருவர் செய்திடுவதற்கு அனுமதிக்கப்படும் எதுவும், தேவனிடத்திலுள்ள நம்முடைய உண்மைக்கான, உலகத்தாரிடத்திலுள்ள நம்முடைய நீதிக்கான அல்லது சகோதர சகோதரிகளுக்கான நம்முடைய அன்புடன்கூடிய அர்ப்பணிப்பிற்கான பரீட்சையின் விதத்திலேயே காணப்படும்.

கர்த்தருடைய முன்மாதிரியைப் பின்பற்றினவர்களாக, நாம் சகோதர சகோதரிகளுக்கான ஊழியத்தில் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களாகக் காணப்பட வேண்டும். இந்தக் கட்டளையானது, நம்முடைய சுயத்தைப் பலிச்செலுத்தலானது சகோதர சகோதரிகளுக்குத் தேவையாக இருக்கின்றது என்பதற்காக மாத்திரமல்லாமல், நம்முடைய அன்பு வளருவதற்கும் மற்றும் நமது அன்பிற்கான பரீட்சைக்குமான நம்முடைய

தேவைக்குமாகும். "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார் (1 யோவான் 3:16).

ஆசாரியக்கூட்டத்தாரின் நலனுக்கடுத்தவைகளில் சுயத்தைப் பலிச் செலுத்திடுவதற்குத் திரளான வாய்ப்புகள் உள்ளன. இருளிலும், அறியாமையிலும் மற்றும் மூடநம்பிக்கையிலும் சகோதரர்களில் சிலர் காணப்பட்டு, தற்கால சத்தியத்திற்கான மகிமையான வெளிச்சத்திற்குள் வழிநடத்தப்படுவதற்காக நம்முடைய உதவி தேவைப்படும் நிலையில் இருக்கிறவர்களாக மாத்திரம் காணப்படாமல், இதனோடுகூடச் சகோதரர்களில் சிலர் பெலவீனங்களையும், குறைப்பாடுகளையும் பெற்றவர்களாய் இருந்து, ஆறுதலளிக்கும் நம்முடைய அனுதாபங்களுக்கும் மற்றும் பலப்படுத்தும் உற்சாகமூட்டுதல்களுக்கும் அல்லது அன்புடன்கூடிய கடிந்து கொள்ளுதல்களுக்கும் தேவைப்பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். எவ்வளவாய் இக்காரியங்களில் எல்லாம் நாம் உண்மையாய்க் காணப்படுகின்றோமோ, அவ்வளவாய் நாம் சுயத்தைப் பலிச்செலுத்துபவர்களாகவும், நமது பரலோகப் பிதாவிற்கும், நமது மீட்பருக்கும் பிரியமாகவும், அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாகவும் காணப்படுவோம்.

மூப்பனாய்க் காணப்பட்ட தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் விவரித்ததாவது: அவரை எதிர்ப்பவர்களை அவர் சாந்தத்துடன் கண்டித்திட வேண்டும் மற்றும் தீமைக்குத் தீமை செய்திடக்கூடாது; பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறக்கூடாது; குற்றச்சாட்டிற்குப் பதில் குற்றஞ்சாட்டிடக்கூடாது; மாறாக சாந்தத்துடனும், பொறுமையுடனும், அன்புடனும், தயவுடனும் சகோதர சகோதரிகளுக்கு மிகச் சிறந்த வழியைக் காண்பித்திட வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தில் நாம் வளர்த்திட வேண்டும் என்பதேயாகும். "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்கிறதன் மூலம்," "கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தினைச் சோர்ந்துபோகாமல் வளர்த்திடுவதன் மூலம்," இப்படி வளர்த்திடுபவர்களுக்குத் தேவன் வாக்களித்துள்ளதான மகிமை, கனம் மற்றும் அழியாமையினை வெற்றிகரமாய் நாடி அடைந்திட முடியும். ஏனெனில் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பித்துள்ளதுபோன்று, தெரிந்தெடுக்கப்பட்ட சபையில், மணவாட்டி வகுப்பாரில் அடங்குபவர்கள் அனைவரும், குணலட்சணத்தில், இருதயத்தில் தம்முடைய குமாரனுக்கொத்த சாயலாக வேண்டுமென்று தேவன் முன்குறித்திருக்கின்றார் (உரோமர் 8:29).

அந்தோ! வெகுசிலரே கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணத்தின் சாயலில் நன்கு வளர்ந்திருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! அநேகர் தேவன் அங்கீகரிக்கமாட்டார் என்று தாங்கள் அறிந்திருக்கிறதான - அதாவது ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் வளர்ப்பதற்குப் பதிலாக, விசுவாசத்தினை அழித்துப்போடுகிறதும், சமாதானத்தை அழித்துப்போடுகிறதும், நற்பண்புகள் அனைத்தையும் அழித்துப்போடுகிறதுமான தவறான ஆவியை - சண்டையிடும் ஆவியினை, குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பான்மையினை அபிவிருத்திச் செய்துகொண்டிருக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

அந்தோ பரிதாபம்! சத்தியத்தில் காணப்படுபவர்கள் மத்தியில், இந்தச் சண்டைக்காரர்கள் அதிகமான எண்ணிக்கையில் காணப்பட்டு, உதவும் பணியைப் பண்ணுவதற்குப் பதிலாக அழிவின் பணியை, பாதகமான பணியைப் பண்ணுகிறவர்களாக இருக்கின்றனர். இத்தகையவர்கள் தங்கள் குணலட்சணத்திற்குப் பாதகமும், களங்கமும் தாங்கள் உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்றும், தங்களை இராஜ்யத்திற்கு அல்லது எந்தத் தளத்திலுமுள்ள நித்திய ஜீவனுக்குப் பாத்திரமாகும் நிலையில் குறைவுப்படுத்திக்கொண்டே வருகின்றனர் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தாங்கள் அழிவுக்கேதுவான பணியைச் செய்துகொண்டுவருகின்றனர் என்று இத்தகையவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இத்தகையவர்கள் தாங்கள் விரோதத்தை விதைக்கின்றனர் என்றும், கசப்பின் வேர்களை முளைத்தெழுப்பிக்கொண்டிருக்கின்றனர் என்றும், இவைகள் அநேகருக்குப் பாதகமாய் விளங்கும் பொல்லாத பலன்களை நிச்சயமாய்க் கொணரும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். சபைக்குப் பாதகம் உண்டுபண்ணுகிறவர்களுக்குத் தேவன் வெளிப்படுத்தியுள்ளதான விசேஷித்த கண்டனத்தை, இத்தகையவர்கள் நிச்சயமாய் அறிந்துகொள்ள வேண்டும் (மத்தேயு 18:6; லூக்கா 17:2).

இத்தகையவர்களுக்கான பலன் என்ன? மகிமையும், கனமும், அழியாமையுமல்ல; மாறாக உபத்திரவமும், வேதனையும், உக்கிர கோபாக்கினையே என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆனால் இவைகள் நித்தியமான கோபாக்கினையாகவும், வேதனையாகவும் இருக்கும் என்னும் அர்த்தத்தில் அப்போஸ்தலனும் குறிப்பிடவில்லை, நாமும் குறிப்பிடுகிறதில்லை. தேவனை எதிர்ப்பதற்கான உச்சக்கட்டமான தண்டனை, "இரண்டாம் மரணமாக" காணப்படுகின்றது என்பதை நாம் அறிந்திருப்பதினால், உபத்திரவமும், வேதனையும் தற்கால ஜீவியம்

தொடர்புடையதாக இருக்கும் என்றே நாம் அனுமானிக்கின்றோம் - ஒன்றில் இத்தகையவர்கள் "திரள்கூட்டத்தாரில்" பங்கடைபவர்களாகக் காணப்பட்டு, மகா உபத்திரவக்காலம் வழியாய்க் கடந்துசென்று, இதில் தாங்கள் முன்பு கற்க தவறின படிப்பினைகளைக் கற்கின்றவர்களாய் இருப்பார்கள் அல்லது பண்புகளில் புளிப்படைந்தவர்களாக, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களெனத் தாங்கள் பெற்றிருந்திருக்க வேண்டிய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மற்றும் அன்பையும் தொலைத்து விட்டவர்களாக, திருத்தமுடியாதவர்களென, தேவனுடைய கிருபையையும், அவரது வார்த்தைகளினுடைய அறிவுரைகளையும் வீணாய்ப் பெற்றுக்கொண்டவர்களென "இரண்டாம் மரணம்" மரிப்பவர்களாய் இருப்பார்கள். திராட்சக்கனிகளால் அடையாளப்படுத்தப்படுகின்ற குணலட்சணத்தை வளர்த்திடுவதற்குப் பதிலாக, இத்தகையவர்கள் அழிவுக்கு வழிநடத்தும் முட்புதர்களின் இயல்புகளை வளர்த்துகின்றவர்களாய் இருப்பார்கள்.

## மறுரூபமாகுங்கள்

நன்கு செய்துகொண்டிருப்பவர்கள் மற்றும் நன்கு நாடிக்கொண்டிருப்பவர்கள் சார்பிலும் மற்றும் தீமை செய்துகொண்டிருப்பவர்கள் மற்றும் சண்டையிடுபவர்கள் சார்பிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லையெனில், திவ்விய கட்டளைகளாகிய இவைகள் மீது கவனத்தினைத் திருப்பிடுவதிலோ, கண்டனம் பண்ணும் இவ்வார்த்தைகளை அப்போஸ்தலன் எழுதிடுவதிலோ நமக்கு எந்தப் பிரயோஜனமும் இராது. இந்தக் கண்டனங்களானது, நம்முடைய குணலட்சணங்களைச் சரியான திசையில் உறுதிப்படுத்திடுவதற்கு நமக்கு உதவிசெய்வதற்கு நோக்கம் கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்தக் கட்டுரையைப் படிக்கும் யாரேனும், தான் தவறான திசையில் போய்க்கொண்டிருப்பதையும், சண்டையிடுகிற மற்றும் குற்றம் கண்டுபிடிக்கிற ஆவியை அபிவிருத்திச் செய்வதையும் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் மற்றும் அன்பின் ஆவியையும் குறைத்துப்போடுகிற மனப்பான்மையை அபிவிருத்திச்செய்வதையும் உணர்வார்களானால், தேவனுடைய கிருபையினால் மாறான நடக்கையை எடுத்திடுவதற்கு உடனடியாய்த் தீர்மானித்திடுவது நலமானதாய் இருக்கும். சோர்ந்துபோகாமல் நற்கிரியைச் செய்வதன் மூலமாகச் சரியான விதத்தில் பரலோக அழைப்பிற்கான மகிமையையும், கனத்தையும் மற்றும் அழியாமையையும் நாடிக்கொண்டிருப்பவர்கள் சரியான பாதையில் சோர்ந்துபோகாமல் காணப்படத்தக்கதாகவும், அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகவும் மற்றும் அதிகமதிகமாய்ப் பாதுகாப்பாய்க் காணப்படத்தக்கதாகவும் மற்றும் தேவன் அங்கீகரிக்கக்கூடியதும், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அவர் சொல்வதற்கு ஏதுவானதுமான குணலட்சணத்தில் பலப்படுத்தப்படத்தக்கதாகவும் உறுதிப்படுத்தப்படத்தக்கதாகவும் - உற்சாகமூட்டப்பட மற்றும் விழிப்படையப் பண்ணப்பட வேண்டும்.

தங்களைச் சண்டையிடும் தன்மையுடையவரென, குற்றம் கண்டுபிடிக்கும் தன்மையுடையவரென, மற்றும் ஆக்கப்பூர்வமாய் இருப்பதற்குப் பதிலாக தீங்கானவரென, எப்போதும் குற்றம் கண்டுப்பிடித்துக் கொண்டிருப்பவரென உணர்ந்துகொள்பவர்கள், மிகவும் துரிதமாய்ச் சீர்த்திருந்திடும்படி நாம் வலியுறுத்துகின்றோம். சபையினுடைய பரீட்சை நிலைமைக்கான முடிவை நாம் நெருங்கிகொண்டிருக்கின்றோம் என்றும், நாம் ஏற்கெனவே பரீட்சையின் காலத்தில் காணப்படுகின்றோம் என்றும், சரியான குணலட்சணங்களை வளர்த்திடாத காரணத்தினால், அநேகர் விழுந்துகொண்டிருக்கின்றனர் என்றும் இத்தகையவர்களுக்கு நாம் ஞாபகப்படுத்துகின்றோம். இத்தகையவர்கள் உடனடியாகக் காரியத்தை ஜெபத்தில் கர்த்தரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் மற்றும் உதவிகரமான அவரது கிருபையின் மூலமாக உடனடியாக தங்களுடைய ஜீவியத்தின் இந்தத் தவறான திசையிலான ஓட்டங்களைத் திருப்பிடுவதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம். இத்தகையவர்கள் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, "சமாதானத்தைத் தேடி, அவரைப் பின்தொடரக்கடவர்கள்" மற்றும் முடிந்தமட்டும் "எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருக்க" வேண்டும் மற்றும் "தேவசமாதானம் அவர்களின் இருதயங்களில் ஆளக்கடவது" மற்றும் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களுக்காக நன்றியுடன் காணப்படுவார்களாக. இப்படிப்பட்டதான இருதய நிலைமையானது, கர்த்தரிடத்திலோ அல்லது அவரது ஜனங்கள் மற்றும் அவரது வேலைகள் தொடர்புடையதான அவரது வழிநடத்துதல்களில் குற்றம் கண்டுபிடித்திடாது. இவர்கள் அனைவரிடமும் மற்றும் தங்களுக்கு பிரியமாய்

இராதபடிக்குக் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட அனைத்திலும் - குற்றம் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, "அவரிடத்தில் கற்றுக்கொள்ளுகிறவர்களாக" இருப்பார்கள்.

நிழலான இஸ்ரயேலர்கள் மத்தியில் காணப்பட்டதான முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும் கானானுடைய ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனும் உண்மையானது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு நாம் அனைவருக்கும் வலியுறுத்துகின்றோம் (1 கொரிந்தியர் 10:10). தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிரான முறுமுறுப்புகளானது உண்மையில் கர்த்தருக்கு எதிரான முறுமுறுப்புகளாகக் காணப்படுகின்றது எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் ஞாபகப்படுத்துகின்றோம். முறுமுறுக்காமல், முறையிடாமல், குற்றம் கண்டுப்பிடிக்காமல் நம்முடைய கைகளுக்கு அகப்படுபவைகளை நம்முடைய முழுப்பலத்துடன் செய்வோமாக (பிலிப்பியர் 2:14). தேவன் அவரது வேலைகளை நடத்திடுவதற்கு, அவரிடம் விட்டுவிடுவோமாக. ஒருவேளை அவரது வேலைகள் அனைத்தையும் அவர் நம் வசத்தில் ஒப்படைத்தாலும், நாம் அதை நடத்த முடியாதவர்களாய்க் காணப்பட்டு, திரும்பி அவரிடத்திலேயே எடுத்துச்செல்வதற்கும், அவரது வேலையை அவரே மேற்பார்வையிடுவதற்கு வேண்டிக்கொள்வதற்கும் கட்டாயத்திற்குள்ளாகுவோம் என்பதைத் தாழ்மையில் உணர்ந்துகொள்வோமாக.

கர்த்தரைக் காட்டிலும் நம்மால் நன்கு நிர்வகிக்க முடியும் என்றும், அவர் ஒழுங்குபண்ணியிருக்கிறதைக்காட்டிலும் நம்மால் அறுவடை வேலையை நன்கு வழிநடத்திட முடியும் என்றுமுள்ள எண்ணங்கள் நமக்கு வருமாயின், அவ்வெண்ணமானது - எதிராளியானவன் நம்மைச் சிக்கவைப்பதற்கு ஏதுவான கண்ணியாய் இருக்கின்றது என்று உணர்ந்து ஓடிவிடுங்கள். தெய்வீக ஏற்பாட்டில் குற்றம் கண்டுபிடித்து, அதில் மாற்றங்கள் பண்ணிடுவதற்கு முயற்சிப்பதற்குப் பதிலாக, கர்த்தர் நடத்திக்கொண்டுவருகிறதும் மற்றும் வழிகாட்டிக்கொண்டுவருகிறதுமான வேலைகளில், நம்முடைய மனசாட்சி மற்றும் தாலந்துகள் அனுமதிக்கிறதற்கேற்ப ஒத்துழைப்புடனும், முறையிடாமலும் நம்முடைய பங்கை உண்மையாய்ச் செய்திடுவோமாக. ஒருவேளை கர்த்தர் தம்முடைய அறுவடை வேலைக்கடுத்த முழு நிர்வாகத்தையும் நம் கைகளில் ஒப்புக்கொடுத்தாரெனில், நாம் அவரைக் காட்டிலும் சிறப்பாய்ச் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாய் நாம் அறியோம்; ஆகையால் தேவன் நம்மை ஏற்றகாலங்களில் உயர்த்தத்தக்கதாக, அவரது பலத்தக் கரங்களின் கீழ் நாம் நம்மைத் தாழ்த்துவோமாக.

இப்படியாக தங்களைத் தாழ்த்திக்கொண்டு, தேவனுடைய கிருபையையும், ஞானத்தையும் உணர்ந்துகொண்டு, இதற்கு இசைவாய்க் காணப்படுபவர்கள் மாத்திரமே, இராஜ்யத்தின் வேலையில் ஏதேனும் பங்கினை அடைவார்கள் என்பதை நாம் திட்டவட்டமாய்த் தெரிந்துகொள்வோமாக. இறுமாப்பானவர்கள், மேட்டிமைக்கொண்டவர்கள், சுயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள், சண்டைக்காரர்கள், திருப்தியடையாதவர்கள் தற்காலத்தினுடைய நன்மைகளையும் சரி, எதிர்க்காலத்தினுடைய கனங்களையும் சரி அடைவதில்லை.

## கடுமையான சோதனையை அடைவீர்கள்

"என் சகோதரரே, அதிக (மாபெரும் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை) ஆக்கினை (போதகர்களாகிய நாம்) அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம் - நாம் அனைவரும் பூரணமற்றவர்கள்" என்று கூறிப் போதகர்களாக விரும்புபவர்களை ஆட்கொள்ளும் விசேஷமான அபாயங்கள் தொடர்பாக அப்போஸ்தலனாகிய யாக்கோபு சகோதரரை எச்சரிக்கின்றார் (யாக்கோபு 3:1).

அப்போஸ்தலனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியத்தினை அனைவரும் அடையாளம் கண்டுகொண்டிருந்தாலும், இவ்வார்த்தைகளானது வெகுசிலரையே பெரிதும் தடுத்துள்ளதாய்க் காணப்படுகின்றது. இதன் விளைவாக, அநேகர் சபையில் போதகராகும்படிக்கு நாடுகின்றனர் என்று நாம் காண்கின்றோம். போதகர்களென இவர்கள் கடுமையான சோதனைக்குள்ளாகுகின்றனர் என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் உண்மையையும் மற்றும் சத்தியத்தில் இடறி, விழுபவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த (போதக) வகுப்பாராகவே காணப்படுகின்றனர் என்றும் நாம் காண்கின்றோம். போதகர்கள் என்பவர்கள்

அவசியமற்றவர்கள் என்றோ அல்லது தெய்வீக ஏற்பாடுகளுக்குப் புறம்பானவர்கள் என்றோ தெரிவிக்க வேண்டும் என்று நாம் இப்படியாக எழுதவில்லை; மாறாக போதகப் பணிக்குள் பிரவேசிக்கும் எவனும், தான் மேற்கொள்ளும் முக்கியமான பொறுப்புக் குறித்தும் மற்றும் பரம பட்டணத்தை நோக்கின தனது பாதையில் சூழும் சோதனைகள் அல்லது பரீட்சைகள் குறித்தும் உணர்ந்த நிலையில், அப்பணியினைச் செய்திட வேண்டும் என்று தெரிவிப்பதற்காகவே இப்படியாக எழுதியுள்ளோம்.

"கண்காணிப்பை (மேய்ப்பனுக்கான, கண்காணிக்கான பணியினை) விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" என்று பரிசுத்த பவுலடிகளார் எழுதியுள்ளார் மற்றும் இதன் காரணமாக யார் ஒருவன் சுத்தமான இருதயத்தில், ஆடுகளுக்கான உடன் மேய்ப்பன் என மற்றும் மீட்பருடன் உடன் வேலையாட்கள் எனக் கர்த்தருடைய காரணங்களுக்காக ஊழியம் புரிந்திட நாடுகின்றானோ, அவன் மிகவும் சிறந்த ஊழியத்தில் ஈடுபடுகின்றவனாக இருக்கின்றான். மந்தைக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான அக்கறையுடன்கூடிய வாஞ்சையில், மாபெரும் மேய்ப்பனுக்கு முழு இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற அக்கறையுடன்கூடிய வாஞ்சையில் - இந்த ஒரு நிலைப்பாட்டில் அவன் இவ்வூழியத்தினை நாடுவானாகில், அவன் இந்தளவுக்குக் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பதினால், களிகூருவதற்கு வெட்கமடையக் கூடாது. ஆனால் ஒருவேளை அவன் தனக்குள் பேராசையின் ஆவியையோ, மேட்டிமையின் ஆவியையோ, தற்பெருமையடித்துக்கொள்ளும் ஆவியையோ, விசுவாச வீட்டாரின் சகோதர சகோதரிகளை இறுமாப்பாய் ஆளுவதற்கான ஆசையோ அதிகளவில் அல்லது கொஞ்சமேனும் காணப்படுவதைக் கண்டுபிடிப்பானானால், அவன் பயம் கொள்ளக்கடவன். நடுங்கின இருதயத்துடன் அவன் ஒன்றில் அவ்வூழியத்தினின்று விலகிடுவானாக அல்லது கிருபையின் சிங்காசனத்திடத்திற்குப் போய், தன்னுடைய இருதயங்களிலுள்ள பொல்லாத பேராசைகளினின்று தன்னைச் சுத்திகரித்துக்கொண்டு, ஆண்டவருடைய ஆவியினால் நிரப்பப்படுவானாக. அந்தப் பரிசுத்த ஆவியானது, சாந்தத்தின், தயவின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியாய் இருக்கின்றது; அது தேவனுக்கு மகிமை சாற்றிடுவதற்கும் மற்றும் அவரது ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கும் விரும்புகின்றதாய் இருக்கின்றது; அது மந்தைக்கு உதவி செய்யத்தக்கதாக அல்லது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் சமாதானத்திற்காக எத்தருணத்திலும் சுயத்தைப் பலிச்செலுத்திடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்படும் ஆவியாய் இருக்கின்றது.

சபையில் போதிக்க முற்படும் சகோதரருக்கான விசேஷித்த அபாயங்களைக் குறித்து ஏன் இப்படியாக அப்போஸ்தலன் எழுதிட வேண்டும் என்று சிலர் யோசிக்கலாம். அவரது வார்த்தைகள் தெய்வீக ஏவுதலினாலானது என்று நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்றும், இன்னுமாக அனுபவங்களானது அவ்வார்த்தைகளின் உண்மையினை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இன்னுமாகப் போதகம் பண்ணும் விஷயத்தில் ஈடுபடாத கர்த்தருடைய அருமையான ஜனங்கள், தங்களால் போதகர்கள் என்று அங்கீகரிக்கப்படுபவர்களின் மற்றும் தங்களையும் அறியாமல் தங்களால் சோதனைக்குள் வழிநடத்தப்படுபவர்களின் திசைமாற்றங்களுக்குப் பெரும்பாலும் தங்களையும் அறியாமல் பொறுப்பு வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். போதகர்களைச் சுற்றி வளைப்பவைகள் (1) பெருமை மற்றும் (2) இறுமாப்பாகும்.

(1) சகோதர சகோதரிகளுடைய பாராட்டுப் பேச்சுகளினால் உற்சாகமூட்டப்படுகிறதினால், இவர்கள் தங்களைக் குறிப்பிடத்தக்கவர் என்று எண்ணும் விதத்திலேயும் மற்றும் தங்கள் பிரயாசங்களுக்குரிய வெற்றிக்கான காரணம் சத்தியத்தின் வியக்கத்தக்க ஆற்றலும், அருமையுமேயாகும் என்று சாற்றிடுவதற்குப் பதிலாக, தங்களுடைய இயற்கையான திறமைகள், தாலந்துகள் முதலானவைகளே வெற்றிக்கான காரணம் என்று சாற்றும் விதத்திலேயும் இவர்களுடைய மனப்போக்கானது காணப்படுகின்றது. இப்படியாகவே ஊழியக்காரர்கள் பொதுவாகக் கண்ணிக்குள்ளாகுகின்றார்கள்; காரணம் நம்முடைய சக அங்கத்தினர்கள் முன்னிலையில் மகிமையின் இராஜாவிற்கான ஸ்தானாபதிகளென நிற்பது உண்மையில் மிகவும் கனமிக்கக் காரியமாகும். சபை பிரிவிலுள்ளவர்களின் எண்ணிக்கையையும், ஞானத்தையும் குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்ளுவதே பொதுவாய் நிலவும் மனோநிலையாகக் காணப்படுகின்றது. ஆனால் "தற்கால சத்தியத்தினுடைய" வெளிச்சத்தில் காணப்படுபவர்கள் மத்தியில் தனிப்பட்ட விதத்தில் பெருமைக்கொள்வதற்கான சோதனை அநேகமாக இன்னும் அதிகமாகவே காணப்படும்.

திட்டம் நம்முடையதல்ல என்றும், அதன் நீளங்களும், அகலங்களும், உயரங்களும் மற்றும் ஆழங்களும் தேவனுடையது என்றும், அது அவரது ஜனங்கள் அனைவருக்குமானது

என்றும், முடிந்தமட்டிலுமான மிகுந்த தாழ்மையான விதத்தில் அத்திட்டத்தினை அறிவிப்பது நமக்கான கனமாகும் என்றுமுள்ள உண்மைகளை நன்கு நினைவுகூருவதே மருந்தாகும்.

கர்த்தருக்கு உண்மையாய் இருத்தலானது அனைத்துக் கனமும், மகிமையும் இரட்சிப்பின் திட்டத்திற்கான மகா ஆசிரியருக்கும், இத்திட்டத்திற்கு மையமாய்க் காணப்படும் பலியைச் செலுத்தினவரும் மற்றும் நம்முடைய செய்தி முழுவதிலும் அடங்கியுள்ள அன்பினைச் செலுத்தினவருமான மாபெரும் மீட்பருக்கும் சேரத்தக்கதாக, நம்மையே மறைத்துக்கொள்ளத்தக்கதாக நம்மை நடத்திட வேண்டும். இவ்வெண்ணங்களை நம் மனதில் பதியப்பெற்றவர்களாக, நமக்கு அனுமதிக்கப்பட்ட ஊழியம் பெரியதாய் இருக்கையில், நம்முடைய தாழ்மையும் மற்றும் மகிமையின் மகா கர்த்தருக்கான வாய்க்கருவிகளாக இருப்பதற்கு நமது அபாத்திர நிலைப் பற்றின நமது உணர்ந்துகொள்ளுதலும் பெரிதாய்க் காணப்பட வேண்டும்.

(2) இறுமாப்பு என்பது நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, சுற்றி நெருக்குகிற விஷயத்தில் ஒன்றாக இருக்கின்றது. அந்தோ பரிதாபம்! கர்த்தரால் அவரது செய்திக்கான அவரது வாய்க்கருவியாக இருப்பதற்கு ஒருவன் கனப்படுத்தப்பட்டிருப்பதினிமித்தம், அவன் தனது கர்த்தருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதற்கும் மற்றும் சகோதர சகோதரிகளிடத்தில் இறுமாப்பாய் நடந்துகொள்வதற்கும் முற்படுவது என்பது அல்லது அப்போஸ்தலன் சொல்லுவது போன்று "தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை" செய்ய முற்படுவது என்பது எவ்வளவு பொருத்தமற்றக் காரியமாய்க் காணப்படுகின்றது (1 பேதுரு 5:3). போதகர்களாய் ஊழியம் புரிந்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதான அந்தச் சகோதரர்கள், சபைக்கு அதிகாரிகளாக/சபையை இறுமாப்பாய் ஆளுகிறதற்காக இருப்பதற்குப் பதிலாக, சபையின் ஊழியக்காரர்களாக மாத்திரமே காணப்பட வேண்டுமென்றுள்ள முற்றிலும் மாறான ஒரு நிலைப்பாட்டினை வேதவாக்கியங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பினும், இவ்விஷயம் தொடர்பான தெய்வீக வழிகாட்டுதலானது, சபை மூலமாய் நாடப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் மூப்பர்கள், மேய்ப்பர்கள் அல்லது போதகர்களுடைய சபையின் தேர்ந்தெடுத்தலானது - சபைக்குரிய ஊழியங்களுக்கான, அதாவது சபைக்குப் பரிசுத்தக் காரியங்களில் ஊழியம் செய்திடுவதற்கும், சபைக்கு தேவகிருபையில் ஊழியம் செய்திடுவதற்கும், சபைக்குத் தெய்வீக வார்த்தைகளாகிய ஆவிக்குரிய உணவினைப் பரிமாறுவதற்கும் என்றுமுள்ள கர்த்தருடைய தேர்ந்தெடுத்தல் என்று அவர்களால் கருதப்படுபவர்களின் தேர்ந்தெடுத்தலாய் இருக்கின்றது.

மூப்பராகிய சகோதரர்கள் மற்றும் போதகர்கள் இடறும் விஷயத்தில், சபையாரும் அதிகளவில் பொறுப்பு வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். சபையார் தீமை நினைக்கக்கூடாது, தீமையாய்க் கற்பனை பண்ணிக்கொள்ளக்கூடாது அல்லது இறுமாப்பு என்று கற்பனை பண்ணிக்கொள்ளக்கூடாது என்றாலும், இந்தச் சகோதரர்களைத் தேவைக்கு மிஞ்சி முகஸ்துதி செய்யாதபடிக்கு, அவர்களைத் தேவைக்கு மிஞ்சி உற்சாகமூட்டாதபடிக்கு, புதிய வெளிச்சத்தை உண்டுபண்ணத்தக்கதாக அவர்களைத் தூண்டிவிடாதபடிக்கு, அவர்கள் விஷயத்திலுள்ள தங்கள் கடமைகளுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் சபையார் மிகவும் விழித்திருக்க வேண்டும்.

ஆவிக்குரியவர்களாகக் காணப்படும் அனைவரும் இந்த மூப்பர்களாகிய சகோதரர்களுக்கு உதவுபவர்களாகக் காணப்பட வேண்டும்; மற்றும் கர்த்தருக்கான அவர்களது உண்மையைக் குறித்து வாழ்த்திட/மகிழ்ச்சித் தெரிவித்திட வேண்டும் மற்றும் பழம்பெரும் காரியத்திற்கே (சுவிசேஷத்திற்கே) ஒழிய, மற்றப்படி கற்பனையான கட்டுக்கதைகளுக்காகப் பாராட்டப்படக்கூடாது அல்லது கட்டுக்கதைகளின் விஷயத்தில் தொடர்ந்து ஊக்குவிக்கக்கூடாது. கிருபையின் சுவிசேஷமானது இன்னும் மாறிடவில்லை; அது இன்னமும் இயேசுவையும், அவரது அன்பையும் குறித்தும் மற்றும் பிதாவின் அன்பையும் குறித்துமான பழம்பெரும் காரியத்தைக் குறித்தே தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; அது வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான நிபந்தனைகளுக்கு உண்மையாய் இருப்பதற்குரிய நமக்கான அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் குறித்த சிந்தனைகளை இன்னமும் பெற்றிருக்கின்றது. இவைகள் தொடர்பாகவே சகோதரர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமேயொழிய, தேவவார்த்தைகளினுடைய எந்த அங்கீகரிப்பும் இல்லாமல், யூகம் பண்ணி நிழல்களை உண்டுபண்ணுகிறது தொடர்பாக ஊக்குவிக்கப்படக்கூடாது.

வழிநடத்துபவர்களின் சார்பிலான இறுமாப்பின் விஷயத்திலும் மற்றும் அவர்கள் சபை மீது இறுமாப்பாய் ஆளும் விஷயத்திலும், சபைக்கே மாபெரும் பொறுப்பு இருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். பரிசுத்த பவுலடிகளார் சுட்டிக்காட்டுவது போன்று, புதிதாய் வந்துள்ளவர்கள் வேகமாய் முன்னுக்குத் தள்ளப்படக்கூடாது மற்றும் சத்தியத்தில் நன்கு வளர்ந்துள்ள மூப்பராய்க்

காணப்படும் சகோதரரில் யாரேனும் இறுமாப்பிற்கும், சபையாரின் குரலை/வாக்கை அலட்சியம் பண்ணுதலுக்கும் மற்றும் சபை சார்ந்த காரியங்கள் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகள் அனைத்திற்கும் இணங்கிட மனம் இல்லாமல் இருத்தலுக்குமான அறிகுறிகளை வெளிப்படுத்த துவங்குவாரெனில், இத்தகைய சகோதரனை இன்னும் தொடர்ந்து தேர்ந்தெடுக்க மறுப்பதன் மூலமும் மற்றும் சபையாருடைய உரிமைகளைக் குறித்து வலியுறுத்துவதன் மூலமும், இத்தகைய இறுமாப்பினைச் சபையார் உடனடியாய்க் கண்டித்திட வேண்டும். இப்படி வலியுறுத்திக் கூறும்போது, கோபத்துடன் (அ) சண்டைச் சச்சரவுடன் வலியுறுத்திடாமல், மாறாக அன்புடனும், சகோதரத்துவத்துடனும், பெருந்தன்மையுடனும் சபையின் உரிமைகளானது வலியுறுத்தப்பட வேண்டும் மற்றும் இது விஷயம் குறித்த சபையாரின் வாக்குகள் (Votes) கேட்கப்பட வேண்டும். ஒருவேளை சபையின் உரிமையைப் பாதுகாத்திட நாடிட்ட சகோதரனுக்கு வாக்குகள் (Votes) எதிராகக் காணப்படும் பட்சத்தில், அச்சகோதரன் தயவாய்க் கீழ்ப்படிந்திட வேண்டும்; ஏனெனில் அச்சகோதரனாலும்கூடச் சபையாருடைய வாக்கானது, முடிவு (decision) என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

தேவனுடைய ஏற்பாட்டின்படி கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையில் மூப்பர்களாகவும் மற்றும் போதகர்களாகவும் ஸ்தானம் வகிக்கும் அருமையான சகோதரர்களுக்காக நாம் மிகுந்த அனுதாபம் கொள்கின்றோம். ஆகையால் இத்தகையவர்கள் ஆளாகக்கூடியதான கடுமையான சோதனைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்தபோதிலும் மற்றும் சபையார் தங்கள் கடமையைச் செய்திடுவதற்கும் மற்றும் இத்தகையவர்கள் தாழ்மையாயும், உண்மையாயும் காணப்படுவதற்குச் சபையார் உதவிடுவதற்கும் வலியுறுத்தினபோதிலும், அப்போஸ்தலனுடைய மொழிநடையிலேயே நாம் இன்னும் வலியுறுத்துவது என்னவெனில்: உயர் பண்புகளுடனும், தாழ்மையுடனும், சுயத்தைப் பலிச்செலுத்தியும் காணப்படுபவர்கள், மிக உயர்வாகவும் பார்க்கப்பட முடியாது மற்றும் மிக நேர்மையாயும் ஆதரவு அளிக்கப்பட முடியாது. அப்போஸ்தலனின் வார்த்தைகள் பின்வருமாறு: "தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" (எபிரெயர் 13:7, 8, 17); மீண்டுமாக "அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:13)

கிறிஸ்துவின் சபையில் மூப்பர் மற்றும் போதகர் ஸ்தானம் என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகவும், தேவனுக்கும், சகோதரர்களுக்கும் பிரியமான விதத்தில் செயல்படுவதற்கு மிகக் கடினமான ஒரு ஸ்தானமாகவும் மற்றும் முழுக்க சோதனையுள்ள ஒரு ஸ்தானமாகவும் காணப்படுமாகில், சபையானது சோதனையை அதிகரிக்காதபடிக்கும், சோதனையைத் தூண்டிவிட்டு பொல்லாத கனிகளைக் கொணராதபடிக்கும், அனுதாபத்தினால் மிகவும் விழிப்புடன் காணப்பட வேண்டும். எங்கெல்லாம் உண்மையுள்ள ஊழியக்காரர் காணப்படுகின்றாரோ, இப்படிப்பட்டவருக்கு உண்மையுள்ள சகோதர சகோதரிகள் யாவரும் உதவியாய் இருப்பதற்கும் மற்றும் ஒத்துழைப்பதற்கும் எல்லா விதத்திலும் நாடிடவேண்டும்; குற்றம் கண்டுபிடிப்பதற்கும் மற்றும் அந்தக் காரியத்தையாவது, இந்தக் காரியத்தையாவது, வார்த்தையையாவது, தொனியையாவது, பார்வையையாவது, நடத்தையையாவது விமர்சிப்பதற்கு முற்படுவதற்குப் பதிலாக சகோதர சகோதரிகள் முழுக்க அன்பினாலும், அனுதாபத்தினாலும் நிறைந்து காணப்பட்டு மற்றும் அந்த ஊழியக்காரனுடைய அன்புடன்கூடிய வைராக்கியத்தையும், அர்ப்பணிப்பையும் மற்றும் தாழ்மையையும் மிகவும் உணர்ந்து, மதித்தவர்களாகி, முக்கியத்துவமற்ற, அற்ப காரியங்களைச் சுட்டிக்காட்டிடாமலும், கவனிக்காமலும் விட்டுவிட வேண்டும். அவ்வூழியக்காரனுடைய பணியின் பொறுப்பினை உணருகையில், சகோதர சகோதரிகள் தங்களால் ஒருவேளை அவர் வகிக்கும் ஸ்தானத்தில் நல்ல அல்லது மிகுந்த ஆற்றலுடனும், தாழ்மையுடனும் செயல்பட முடியுமா என்று சிந்தித்துப்பார்க்க முடிகின்றவர்களாகக் காணப்படுவார்கள்.

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தங்கள் மீது பொறுப்பானது காணப்படுகின்றது என்று நினைவில் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தெய்வீகச் சித்தம் குறித்துக் கருத்தூன்றி சிந்திக்காமலும் மற்றும் தெய்வீக வழிகாட்டுதலுக்காக

ஜெபம் ஏறெடுக்கப்படாமலும் எந்த வாக்கும் (Vote) அளிக்கப்படக்கூடாது. இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தத்தை உறுதிப்படுத்த நாடுகையில், வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான போதகருக்கான பண்புகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; அவை பின்வருமாறு: (1) ஐயத்திற்கிடமின்றி போதகர் என்பவர் போதிப்பதற்குரிய திறமிக்கவராகக் காணப்பட வேண்டும்; அவர் புரிந்திருப்பவைகளை எளிமையான விதத்தில் முன்வைப்பதற்குரிய இயல்பான திறன் அல்லது திறமை பெற்றிருக்க வேண்டும். (2) இன்னும் மிக முக்கியமானது என்னவெனில், அவருக்குப் போதிக்கும் திறமை இருக்குமானால், அவர் தப்பறையை அல்ல, மாறாக சத்தியத்தைத் தெளிவாய் முன்வைக்கத்தக்கதாக, அவர் சத்தியத்தில் தெளிவுள்ளவராய்க் காணப்பட வேண்டும். (3) தாழ்மையும், தேவபக்தியும் மூப்பருக்குத் தலைமையான மற்றும் அடிப்படையான/முதன்மையான தகுதிகளாகக் கருதப்பட வேண்டும். போதகர் ஒருவர் எவ்வளவுதான் திறமிக்கவராக இருப்பினும், எவ்வளவுதான் உபதேசத்தில் தெளிவானவராக இருப்பினும், அவருக்குத் தாழ்மையும், தேவபக்தியும் இல்லாதது வரையிலும் மற்றும் அவரது வார்த்தைகளும், கிரியைகளும், சகோதர சகோதரிகளுக்கான அவரது அன்பை வெளிப்படுத்தாதது வரையிலும் - அவர் இந்த ஸ்தானத்திற்குப் பொருந்தாதவராகக் காணப்படுவார். ஏனெனில் வேதவாக்கியங்கள் முன்வைப்பதுபோல, இந்தப் பண்புகளானது, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. முன்பு போலவே இப்பொழுதும் - நன்மை செய்திடுவதற்கான மாபெரும் வாய்ப்புகளானது, பாதகம் செய்வதற்கான மாபெரும் வாய்ப்புகளாகக்கூடக் காணப்படுவதற்கு ஏதுவாய் இருக்கிறது என்பது உண்மையாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் தற்கால நிலைமைகளின் கீழ்ப் பூமிக்குரிய நோய்கள் போலவே, ஆவிக்குரிய ஆரோக்கியத்தைக் காட்டிலும் ஆவிக்குரிய நோயும், தொற்றுகளும், மிக வேகமாக பரவுகின்றது மற்றும் தொற்றிவிடுகின்றதாய் இருக்கின்றது.

---

**R 4556**

# “கலிலேயாவின் தீர்க்கத்தரிசி”

## மத்தேயு 4:12-25

“இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்.” மத்தேயு 4:15.

முதலாம் வருகையின்போது, பாலஸ்தீனியா (palestine) நான்கு மாகாணங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. அதில் யூதர் சீமை/மாகாணம், வரிசையில் முதலாவதாக வடக்கிலும், அதைத் தாண்டி சமாரியா வடக்கிலும், பெரியா (Perea) கிழக்கிலும், கலிலேயா சமாரியாவைத் தாண்டி வடக்கின் தொலைதூரத்திலும் காணப்பட்டது. இயேசு யூதர் சீமையில் (Judea) பிரசங்கித்தும், இவ்விடத்திலும், பெரியாவிலும் (Perea) சில வல்லமையான கிரியைகளை நிகழ்த்தினாலும், இவருடைய பிரதானமான ஊழியம் கலிலேயாவில் காணப்பட்டது; ஆகவே இவரும், இவருடைய சீஷர்களும் கலிலேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசு, பெத்லகேமில் பிறந்திருந்தாலும், “நசரேயன் என்னப்படுவார்” என்று அவர் அழைக்கப்படத்தக்கதாக, அதாவது அவர் தாவீதின் ஊரில் பிறந்ததற்குரிய கனம் அவருக்கு வழங்கப்படாமல், மாறாக “ஓர் இழிவான பட்டணத்திற்குரிய கனத்தின் குறைவு அவருக்கு உண்டாகத்தக்கதாக அவர் நாசரேத்தில் வளர்க்கப்பட்டார். லூக்கா 23:5, 6, 49, 55 - ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆகவே நமது கர்த்தருடைய பெரும்பான்மையான அற்புதங்கள் மற்றும் போதகங்கள், கலிலேயர்கள் மத்தியிலேயே சம்பவித்தது. அவருடைய தலையான ஊழியங்கள் யூதர் சீமையில் சம்பவித்தது, அதாவது, இவ்வூழியங்கள் பஸ்கா மற்றும் கூடாரப் பண்டிகைக்காக அவர் வருடந்தோறும் இச்சீமைக்குப் பிரயாணித்தபோது சம்பவித்தவையாகும். சமாரியாவின் ஜனங்கள், யூதர்களின் இரத்தம் கலந்திருந்த புறஜாதிகளாக இருந்தார்கள். இந்தச் சமாரியா சீமையில் பிரசங்கிக்க வேண்டாம் என்று இயேசு தம்முடைய சீஷர்களை எச்சரித்தார் . . . . “இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்” (மத்தேயு 10:5-6). யூதர்கள் தங்கள் ஜாதியாருக்குள், கலிலேயர்களைக் கீழ் ஜாதியாராகக் கருதினார்கள். ஆகவே, “நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?” என்ற வாக்கியம் கலிலேயா முழுவதற்கும் கூடப்பொருந்தும் (மாற்கு 1:9; மத்தேயு 21:11 பார்க்கவும்).

சுவிசேஷத்தின் ஒளியானது முதலாவது கலிலேயாவில் வீச வேண்டும்/வீசப்படும் என்பது ஏசாயாவின் தீர்க்கத்தரிசனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதாவது, . . . “இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, ஏசாயா தீர்க்கத்தரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது” (மத்தேயு 4:15-16). கலிலேயாவின் கடற்கரை அருகிலுள்ள இஸ்ரயேலின் 12 கோத்திரத்தாரில், இருவரான செபுலோன் மற்றும் நப்தலியின் எல்லைகளைத் தீர்க்கத்தரிசி குறிப்பிடுகின்றார். கலிலேயா என்ற வார்த்தையின் அர்த்தமாவது வட்டம் (Circle) ஆகும்; எனவேதான் இந்தப்பட்டணம், புறஜாதியார்களால் சூழப்பட்டிருக்கும் என்று தீர்க்கத்தரிசனம் சுட்டிக்காட்டுகின்றது. உண்மையில் இப்படியாகத்தான் காணப்பட்டது; அதாவது சமாரியா, கலிலேயாவின் தெற்குத் திசையிலும், சமாரியா கலிலேயாவை யூதர் சீமையிலிருந்து பிரித்த விதத்திலும் காணப்பட்டது. இவ்விதமாக கலிலேயர்கள் அன்றைய நாட்களில் காணப்பட்ட மாபெரும் மதத்தின் மையப்பகுதியிலிருந்து (யூதர் சீமை) பிரிந்த நிலையில் காணப்பட்டு, தங்களுடைய சகோதரர்களைக் காட்டிலும் மிகுந்த இருளிலும், புறஜாதியார்மேல் காணப்பட்ட அதே மரண இருளின் நிழலின் கீழாகக் காணப்பட்டார்கள். எனினும் இக்குறிப்பிட்ட சம்பவப்பதிவின்படி, அதிகளவில் மத நம்பிக்கை கொண்டும், அதிகளவில் வெளிச்சமூட்டப்பட்டும், அதிகளவில் ஆசாரியர்களால் வழிநடத்தப்பட்டுமிருந்த சகோதரர்களாகிய யூதர்களைக்காட்டிலும், கலிலேயர்கள் இயேசுவின் போதனைக்கு இணக்கம் காண்பித்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

கலிலேயாவின் பிரதான பட்டணங்களாகிய நாசரேத், கோராசின், பெத்சாயிதா மற்றும் கப்பர்நகூம் மேல் வீசப்பட்டதான மாபெரும் ஒளியானது, மாபெரும் கனத்தையும், சிலாக்கியத்தையும் இப்பட்டணத்தின் ஜனத்தார் மீது கொண்டு வந்தபடியால், இப்பட்டணங்கள் வானப்பரியந்தம்

உயர்த்தப்பட்டதாக அடையாள வார்த்தைகளில் கூறப்பட்டது. ஆனால், இவர்கள் (சுவிசேஷ) செய்தியை ஏற்றுக்கொள்ளாததினால், இவர்கள் (hades) பாதாளத்திற்குத் தள்ளப்பட்டார்கள்/தாழ்த்தப்பட்டார்கள் (மத்தேயு 11:20-24). ஒளியானது இருளில் பிரகாசித்து, சிலரை அதாவது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்த்து ஆசீர்வதித்து விட்டு, பின்னர் மற்றவர்களைக் கூட்டிச்சேர்த்து, ஆசீர்வதிக்கும்படி கடந்து சென்று கொண்டே இருந்தது; அவ்வொளியானது இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இப்படியாகவே கூட்டிச் சேர்த்து, ஆசீர்வதிக்கும்படி கடந்து சென்று கொண்டே இருக்கின்றது. முழு உலகமும் மாபெரும் வெளிச்சமூட்டுதலுக்குள் கடந்து செல்வது இன்னும் எதிர்க்காலத்தில்தான் உள்ளது. ஆயிரம் வருஷம் அரசாட்சியின் விடியலில் மீட்பரும், அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையும், இஸ்ரயேல் மற்றும் முழு மனுக்குலம், அதாவது (hades) பாதாளத்தின் (சவக்குழியின்) இருளுக்குள் கடந்து சென்றுள்ள மில்லியன் கணக்கானவர்கள் உட்பட அனைவரையும் ஆசீர்வதிக்கவும், பிரகாசிப்பிக்கவும் நீதியின் சூரியனாக, ஆரோக்கியத்தின் செட்டைகளுடன் பிரகாசிப்பார்கள்.

## “இராஜ்யம் சமீபித்திருக்கிறது”

யூதர் சீமையிலுள்ள யூதர்களைக்காட்டிலும், புறஜாதிகளுக்கு அருகாமையில் காணப்பட்ட கலிலேய யூதர்கள், நீண்ட காலமாக வாக்களிக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யத்தின் அவசியத்தை உடனடியாகப் பார்க்க முடிந்தபடியால், இவர்கள் அதற்குச் செவிசாய்ப்பதற்காக மிகுந்த ஆயத்தத்துடன் காணப்பட்டார்கள். யூதர் சீமையிலுள்ள யூதர்களோ ஆலயத்திற்கடுத்தப் பணிகளில் சடங்காச்சரமான பகட்டுத்தனத்துடனும், பூமிக்குரிய ஆசாரியனுக்குரிய ஆடம்பரமான வஸ்திரங்களுடன், சாலொமோனைக் காட்டிலும் மிகப் பிரம்மாண்டமான ஆலயத்துடனும் காணப்பட்டபடியால், ஆவிக்குரிய இராஜ்யம் முன்வைக்கப்பட்டபோது அதற்குச் செவிசாய்க்க இவர்கள் மறுத்தார்கள். யூதர் சீமையிலுள்ள யூதர்களுக்கு அவர்களுடைய அமைப்பின் செழிப்பினுடைய பகட்டான வெளித்தோற்றமானது, பார்வையை மூடிப்போட்டக் கண்ணியாகவும், மாயையாகவும் இருந்தது. இந்நிலை இன்றளவும் இப்படியாகவே காணப்படுகின்றது. எளியவர்கள் மற்றும் அற்பமானவர்கள் மத்தியிலேயே தேவனுடைய கிருபையான சுவிசேஷமானது/செய்தியானது சில மிக உண்மையுள்ள நண்பர்களைக் கண்டுபிடிக்கின்றது. எனினும் எருசலேமைக் காட்டிலும் கப்பர்நகூமானது, நல்ல விஷயங்களிலும் சரி, தீய விஷயங்களிலும் சரி புறஜாதி உலகத்தோடு அதிகம் நெருக்கத்தில் காணப்பட்டது.

ஆபிரகாமின் மாம்சீக சந்ததியிடம், இராஜ்யத்திற்கான விதிமுறையின்படியான ஒப்பந்தத்தை (formal tender) ஏற்படுத்தவே, இயேசு வந்திருந்தார் என்ற விதத்திலேயே, பரலோக இராஜ்யம் சமீபித்திருந்தது. அவர்கள் இராஜாவை நிராகரித்தபோது, இராஜ்யத்தையும் நிராகரித்தவர்களானார்கள். எனினும், அவரை ஏற்றுக்கொண்ட அனைவரையும் அவர் ஆசீர்வதித்தார்; மேலும், முன்குறிக்கப்பட்டதின்படியும், வாக்களிக்கப்பட்டதின்படியும், அவர்கள் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் கருவாக ஆனார்கள்; பின்னர் சபையின் எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக அதுமுதல் புறஜாதியார் மத்தியிலிருந்து அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் வரும்படி அழைப்புச் சென்றது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் இயேசுவோடு, அவருடைய இராஜ்யத்தில் சேர்ந்து வேலை செய்யும்படிக்கு முதலாவதாக ஓர் ஆவிக்குரிய வகுப்பாரை, “இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராக” தெரிந்துக்கொள்வதும், பின்னர் இந்த யுகத்தின் முடிவில் அந்த ஆவிக்குரிய இராஜ்யத்தை வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிப்பதும், மகா ஒளியினாலும், வாய்ப்பினாலும் இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதும், மேலும் அவள் (இஸ்ரயேல்) மூலம் பூமியன் சகல குடிகளை ஆசீர்வதிப்பதுமே தேவனுடைய ஏற்பாடாகும்.

பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவனாகிய மீனவர்கள் இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியினால், அவருடைய பின்னடியார்களாகவும், “தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை” அழைக்கும் வேலையில் தம்மோடுகூடச் சேர்ந்து பணி புரிபவர்களாகவும், பின்னர் ஒருவேளை உண்மையுள்ளவர்களாக இருக்கக்கண்டால், தம்மோடுகூட, தமது சிங்காசனத்தில் உட்காரும்படியாகவும் அழைக்க/வரவேற்கப்பட்டார்கள். அவரைப் பின்பற்றிச் செல்லும்படி அனைத்தையும் விட்டுவிட்டுச் சென்றார்கள். “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” என்ற வசனமே அவருடைய நிபந்தனைகளாக இருந்தது (மத்தேயு 16:24). இவ்விதத்தில் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள தம்முடைய அனைத்துச் சீஷர்களுக்கும்

சத்தியத்தின் பிரதான ஊழியர்களாகும் (அப்போஸ்தலராகும்) வாய்ப்பின் கதவுகளைக் கர்த்தர் திறப்பதில்லை. தம்மைப் பின்பற்றுவதற்கான தங்களுடைய அனைத்தையும் விட்டுவிடாத எவரையும், அவர் தமது சீஷராக ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் அவர்கள் தங்கள் இருதயத்தில் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். சீஷத்துவம் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்தும் ஆவியுடையவர்களுக்கு, வாய்ப்பின் கதவு ஒருவேளை திறக்கப்படும் பட்சத்தில், இவர்கள் தங்களுடைய அனைத்தையும் தியாகம் செய்ய/விட்டுவிட வாஞ்சையுடன் காணப்படுவார்கள்.

இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் பிரசங்கம், "இராஜ்யத்தைப் பற்றின சுவிசேஷமாக" இருந்தது. இயேசு, நோய்கள் மீது தமக்கு இருந்த அதே அதிகாரத்தையும், பிசாசுகளைத் துரத்தும் தமக்கிருந்த அதே அதிகாரத்தையும் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார். தீர்க்கதரிசி மற்றும் அவருடைய செய்தியின் மீது கவனத்தை ஈர்ப்பதற்கு மாத்திரமே இந்த அற்புதங்களாகும். அனைத்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தவும், அனைத்து மரித்தவர்களை எழும்பப்பண்ணுவதும் (அன்றைய) நோக்கமாக இருக்கவில்லை. அந்த அற்புதங்கள் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படும் இராஜ்யத்தின் மகிமையான ஆசீர்வாதங்களின் வெளிப்பாடுகளே ஆகும். (யோவான் 2:11)

இவ்விதமாக, இயேசுவின் கீர்த்தி பரவினது. வியாதியஸ்தர்கள் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டுச் சொஸ்தமாக்கப்பட்டனர். மேலும், பாலஸ்தீனியாவின் அனைத்து/ஒவ்வொரு சீமையிலிருந்தும்/மாகாணத்திலிருந்தும் அர்ப்பணச் சிந்தையுள்ள மனுஷர்கள் அவருடைய பின்னடியார்கள் ஆனார்கள். அஞ்ஞான இருளில் சிக்கியிருந்த கலிலேயர்கள் மத்தியில் பிரகாசித்த மாபெரும் ஒளியினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனால் எப்போதும்போல, சத்தியமும், ஒளியும் அவர்களைப் பரீட்சித்துப்பார்த்தது. சொற்பமான வெளிச்சத்தின் பிள்ளைகள் வெளிப்படுத்தப்பட்டு, இருள் மற்றும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்திலிருந்து பிரிக்கப்பட்டனர். அன்றுபோல், இன்றும் அதாவது தேவனுடைய வார்த்தைகளின் மீது மாபெரும் ஒளியானது பிரகாசித்துக்கொண்டிருக்கும் நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமும் நம்மை வெளிச்சத்தின் பிள்ளைகளாக ஒளிக்கு ஆதரவு காட்டுபவர்களா? அல்லது இருளின் பிள்ளைகளாக ஒளியை எதிர்த்துக் கொண்டிருப்பவர்களா? என்று முடிவெடுத்து, நிரூபித்துக் காட்டுவதற்கான கடமையுடன் காணப்படுகின்றோம்.

**ஆமென்!**

---

R 4558

# “உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்”

## மத்தேயு 5: 19-36, 38-48

இருதயத்திலும், நோக்கத்திலும் தவிர மற்றபடி கர்த்தருடைய பின்னடியார்கள் விழுந்துபோன மாம்சத்தை உடையவர்களாக இருக்கின்றபடியால், பிதாவைப்போன்று பூரண சற்குணராக இருக்க முடியாது. ஆனால், கிறிஸ்துவுடன் கூட அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாக, அவருடைய இராஜ்யத்தின் மகிமைகளில் நாம் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக நிரூபித்துக் காட்டுவதற்கு இருதயத்தின் நல்ல நோக்கம் மாத்திரம் போதாது. நம்முடைய தூய்மையான இருதயமும், தேவனுக்கு ஒத்த தன்மைகளும் பரீட்சிக்கப்பட வேண்டும். இவைகள் நிரூபிக்கப்பட வேண்டும். இன்னுமாக, அசையாத அளவுக்கு வளர்க்கப்படவும் வேண்டும். இன்னுமாக, இவைகள் சோதனையின் பரீட்சைகளில் நிலைநிற்க வேண்டும். இவைகள் கடுந்துன்பங்களைச் சகித்து, உண்மையுடன் காணப்பட வேண்டும். ஆகவே, கிறிஸ்துவின் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள், மிகவும் கடுமையான சூழ்நிலைகளில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

யூதர்கள் படிப்படியாக தெய்வீக நியாயப்பிரமாணத்தை மறந்துபோய், இந்த நியாயப்பிரமாணத்துக்கு மாறான குறிப்பிட்ட பாரம்பரியங்களினால், தங்களுடைய மனங்களை நிரப்பிக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். மாபெரும் போதகர், ரபீகளைப் புறக்கணிப்பதின் மூலம், அவர் நியாயப்பிரமாணத்தை ஒதுக்கிவைப்பதாக சிலர் எண்ணியிருந்திருக்கலாம். மாறாக, அவரோ தாம் மனிதனுடைய பாரம்பரியங்களை ஒதுக்கிவைக்கவும், நியாயப்பிரமாணத்தை நிலைநாட்டவும், அதை அதிகமாய் வெளிப்படுத்தவுமே நாடுவதாக உறுதியளித்தார். பரிசேயர்களும், வேதபாரகர்களும் மிகவும் பரிசுத்தமானவர்கள் என்றும், பயபக்திக் கொண்டவர்கள் என்றும் ஜனங்களினால் கருதப்பட்டார்கள். ஆனால், ஜனங்களோ இந்தப் பரிசேயர், வேதபாரகரைக்காட்டிலும் அதிகமான பரிசுத்தத்தைக்கொண்டிருக்க வேண்டும், இல்லையேல், அவர்கள் ஒருபோதும் பரலோகத்தின் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியாது என்று இயேசு கூறினார்.

“கொலை செய்யாதிருப்பாயாக” என்றும், “கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்;” அதாவது, நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகளினால் விசாரணைக்கும், தண்டனைக்கும் ஏதுவாயிருப்பான் என்றும், பாரம்பரியமானது நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிடுகின்றது. ஆனால், இயேசுவோ, சகோதரனுக்கு எதிராக (இருதயத்திலும், வெளியே வெளிப்படுத்தப்படாத நிலையிலும்) கோபம் கொண்டிருப்பது என்பது மனம், கொலை செய்யும் மனப்பான்மை கொண்டுள்ளது என்றும், உண்மையில் வெளிப்படையான கொலை நிகழ்த்தப்படாவிட்டாலும், கொலைக்குச்சமமான சகோதரனுக்கு எதிரான கோபமானது தேவனுடைய பார்வையில் கண்டனத்திற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் மிகவும் கண்டிப்பான விதத்தில் போதித்தார். இன்னுமாக, சகோதரனை வீணனென்றும், மூடனே என்றும் கூறுவதையும் கண்டித்துப்பேசுகின்றார். இப்படியான வார்த்தைகள் இருதயத்தின் தவறான நிலையைச் சுட்டிக்காண்பிக்கின்றது என்பதையும், இப்படியாக இருப்பது அந்நபரை ஆலோசனை சங்கத்தின் தீர்ப்பிற்கு வழிநடத்தி, பின்னர் அந்நபரை கெஹென்னாவினால் அடையாளப்படுத்தப்படும் இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும் என்பதையும் கர்த்தர் கூறினார்.

இங்குவரும் எரிநரகம் கெஹன்னாவாகும். அதாவது, குப்பைகளை அழிப்பதற்கும், தொற்றுநோயை தடுப்பதற்கும், இன்னோம் பள்ளத்தாக்கில் தொடர்ந்து எரிந்துக்கொண்டிருக்கும் நெருப்புதான் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நெருப்பில் பொல்லாத செய்கைக்காரர்களின் சடலங்களும் அழிக்கப்படுவதற்காகப் போடப்படுகின்றது. இவ்வாறாக, இது இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. (வெளிப்படுத்தல் 20:14).

ஒருவன் மற்றவருக்கு எதிரான பகையைத் தன்னுடைய இருதயத்தில் கொண்டிருக்கும் நிலையில், பலியின் பொருளோடு தேவனுடைய பலிப்பீடத்தை நெருங்குவது, பலனற்றதாய் இருக்கும் என்பது கலிலேயா தீர்க்கத்தரிசியின் கணிப்பாக இருந்தது. ஆகவே, கர்த்தருக்குப் பலிச் செலுத்துவதற்கு முன்பு, கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய இருதயங்களை

ஆராய்ந்துப் பார்த்து, தங்களிடத்தில் காணப்படும் பகைமையை எடுத்துப்போட வேண்டும். அதாவது, இப்படிச் செய்யாதபட்சத்தில் தங்களுடைய பலிகளும், தாங்கள் ஏறெடுக்கும் துதிகளும் வீணாக இருக்கும் என்று உணர்ந்த நிலையில் இவர்கள் தங்களிடத்திலிருந்துப் பகைமையை எடுத்துப்போட வேண்டும்.

25 மற்றும் 26-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஆலோசனைகள் செம்மையானவைகளாகும். நமக்கு எதிராக ஏதேனும் விஷயங்கள் காணப்படுமாயின், அதனை முடிந்தமட்டும் விரைவாகச் சரிச்செய்து, முடித்துவிட வேண்டும். யூதர்கள் தங்களுடைய நண்பனாக, உதவியாளனாக, கருதிக்கொள்ளும் அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையானது, உண்மையில் அவர்களுடைய எதிராளியாக இருந்து, அவர்களைக் குற்றம்சாட்டிக் கொண்டிருக்கின்றது என்ற முக்கியமானப் பாடத்தை அனைத்து யூதர்களும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மாம்சத்தின் பூரணமின்மையினிமித்தம், இவர்களால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும் முடியவில்லை. இன்னுமாக, நியாயப்பிரமாணத்தினிடமிருந்து பாராட்டைப் பெற்றுக்கொள்ள முடியாமல், அதன் கண்டனத்தையே பெற்றுக்கொள்கின்றனர். இதனை உணர்ந்துக்கொள்பவர்கள் தங்களால் முடிந்தமட்டும் விரைவாகத் தங்களுடைய பூரணமின்மையை ஒப்புக்கொண்டு, நியாயப்பிரமாணத்துடன் நல்மனம் பொருந்திக்கொள்வதே, இவர்களுக்கு ஏற்ற வழியாகும்.

நமது கர்த்தருடைய ஆலோசனைக்குச் செவிச்சாய்த்தவர்கள் தங்களுடைய பூரணமின்மையை உணர்ந்தவர்களாக, உதவிக்காகக் கூக்குரலிட்டு, இயேசுவினுடைய பலியின் மூலம், அவரிடத்தில் மன்னிப்பையும் கண்டடைந்துள்ளனர். இப்படியாக, மன்னிப்பைக் கண்டடைந்தவர்கள் விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய தயவிற்குள்ளும், பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்திற்குள்ளும் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்கின்றோம் எனப் போலித்தனமாகக் கூறிக்கொண்ட பரிசேயர்களோ, நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளின்படியும் நடவாமல், மனம் வருந்தினவிதத்தில் தங்களுடைய பாவங்களை ஒப்புக்கொள்ளாமல், இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், பெந்தெகொஸ்தே நாளிற்குரிய ஆசீர்வாதங்களை அடையாமற்போனார்கள். இயேசுவைப் புறக்கணித்த யூததேசம் முழுவதும், சிறைச்சாலைக்குள் இடறிப்போனார்கள், மேலும், இவர்கள்மேல் கோபம் முழுமையாகக் கடந்துவந்தது. மேலும் நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கத்தரிசிகள் எழுதின அனைத்துக் காரியங்களும் நிறைவேறு மட்டும் இவர்கள் இவர்களுடைய சிறைச்சாலையிலிருந்து வெளியே வரப்போவதில்லை. "இவருடைய இரத்தம் எங்கள் மீதும், எங்களுடைய பிள்ளைகள்மீதும் வரக்கடவது" என்று இவர்கள் கூறினார்கள். மேலும், இவர்களுடைய பிரமாணமானது இவர்களைக் குற்றவாளிகளாக்கியது. இவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து வெளியே வருவதற்கென, இவர்கள் ஆயிர வருஷ அரசாட்சியின் சிலாக்கியங்களைப் பயன்படுத்தி, நன்மை பெற்றுக்கொள்வதற்கு முழு ஆயிர வருஷ யுகமும் தேவைப்படும். ஆயிர வருஷத்தின் முடிவில் கர்த்தருடைய கிருபையினால் இவர்கள், "ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத்தீர்ப்பார்கள்." பின்னர், விருப்பமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் விடுவிக்கப்படுவார்கள். எந்த யூதன் தன்னுடைய பூரணமின்மையையும், இயலாமையும் ஒப்புக்கொண்டு, கிறிஸ்துவின் பலியிலுள்ள பங்கை ஏற்றுக்கொள்கின்றானோ, அவன் நியாயப்பிரமாணத்தின் கடமையினின்று விடுவிக்கப்பட்டவனாவான். ஆனால், வெகு சிலரே நியாயப்பிரமாணத்தை எதிராளி என்று ஒப்புக்கொண்டார்கள். (யோவான் 1:12).

## "கண்ணுக்குக் கண் - பல்லுக்குப் பல்"

"கண்ணுக்குக் கண்" என்ற கண்டிப்பான நீதியை, இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் பின்பற்றும்படிக்கு, இந்தத் தெய்வீகக் கொள்கையை, மோசேயின் நியாயப்பிரமாணம் அருளினது. இந்தப் பிரமாணத்தை ஜனங்கள் தங்களுக்குள் தனிப்பட்டவிதமாக உத்தரவின்றி செயல்படுத்தினதால், இதன்விளைவாகக் கடினமான இருதயமும், சிறிய தவறும் காணப்படுவதை விரும்பாத தன்மையும், அனுதாபமற்ற தன்மையும் உண்டானது. நம்முடைய கர்த்தருடைய போதனைகளானது, தவறை வெளிக்காட்டி அன்பு எனும் மிகச்சிறந்த வழியை எடுத்துக்காட்டியது. பரம பிதாவே நியாயப்பிரமாணத்தை ஏற்பாடுபண்ணியிருந்தாலும், அவர் இரக்கத்தையும் ஏற்படுத்தி, அதைப் பாவிகள் அழிந்துபோகாமல், இரட்சகருக்குக் காட்டும் கீழ்ப்படிதல் வாயிலாக நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக, பிதா தம்முடைய குமாரனை, பாவிகளுக்கான மீட்பராக அனுப்பி, தம்முடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்பினதின்மூலம் வெளிப்படுத்தவும் செய்தார். பூரணமற்ற நிலையில், ஓட்டத்தின்போது பாடுகள் அனுபவிக்கின்ற உடன் அங்கங்கள் ஒருவருக்கொருவர் இரக்கத்துடனும், அனுதாபத்துடனும் இருப்பது சரியான காரியமாகும்.

"உங்களைப்போன்று பூரணமற்ற நிலையில் காணப்படும் உடன் மனுஷர்களிடத்தில் துல்லியமான/பிசகாத நீதியைச் சரிக்கட்ட வேண்டுமெனக் கண்ணுக்குக் கண் மற்றும் பல்லுக்குப் பல் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்களானால், உங்களுடைய இருதயங்களில் நீங்கள் சரியில்லாத ஆவியை ஊக்குவிக்கின்றவர்களாய் இருப்பீர்கள்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

(1) ஒருவேளை உங்கள் சத்துரு உங்களை வலதுகன்னத்தில் அறைந்தால், சொல்லர்த்தமாக இல்லாமல், உங்கள் இருதயத்தில், உங்கள் மனதில், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடுங்கள். எந்தவிதத்திலும் பழிக்குப்பழி வாங்காதிருங்கள். நம்முடைய கர்த்தருடைய விசாரணையின்போது, அவர் மறுகன்னத்தையும் காட்டி, அடியென்று சொல்லாததிலிருந்து, மத்தேயு 5:39-ஆம் வசனத்தைச் சொல்லர்த்தமானவிதத்தில் நம்முடைய கர்த்தர் கூறாதது விளங்குகின்றது. கர்த்தர் அடையாளமான விதத்திலேயே மறுகன்னத்தைத் திருப்பினாரே ஒழிய சொல்லர்த்தமாக அல்ல.

(2) ஒரு மனுஷன் நம்மோடு வழக்காடி, சட்டப்பூர்வமாக நம்முடைய ஆஸ்தியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருந்தால், நாம் அம்மனுஷனுக்கு எதிராக உட்பகை கொள்ளக்கூடாது. மாறாக, நீதிமன்றம் கட்டளையிடுவதைக்காட்டிலும், அதிகமாகவே கொடுத்துவிட விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் உச்சநிலையில் பிரமாணத்தின்படி நடந்துக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

(3) ஒருவேளை முற்காலத்து வழக்கத்தின்படி அரசாங்க சேவைகளில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு, ஒரு மைல் தூரம்வரை பாரம் சுமக்க வற்புறுத்தப்பட்டால், கர்த்தருடைய பின்னடியார்கள் துல்லியமாக ஒரு மைல் தூரம் அல்லது ஒரு மைலுக்கு அண்மைவரை அல்லாமல், தேவைப்படுமாயின் இன்னொரு மைல் தூரம் உதவியளித்துத் தங்களுடைய நல்ல மனப்பான்மையைக் காட்ட வேண்டும். அதாவது, முறுமுறுப்பு இல்லாமலும், சட்டப்பூர்வமாக இல்லாமலும், இவர்கள் தேவைப்படும் பட்சத்தில், இவர்கள் இன்னொரு மைல் தூரம்சென்று உதவியளித்துத் தங்களுடைய நல்ல மனப்பான்மையைக் காட்ட வேண்டும்.

(4) கர்த்தருடைய பின்னடியார்கள், பெருந்தன்மையை விருத்திச்செய்ய வேண்டும். பரம பிதா எப்போதும் கொடுப்பவராகவும், ஒருபோதும் திரும்பக் கேட்காதவராகவும் இருப்பதுபோன்று, அவருடைய அனைத்துப் பிள்ளைகளும், இந்தக் குணத்தைப்பெற்றிருந்து, தேவையுடன் காணப்படும் எவருக்கும் கொடுத்து உதவுவதற்கு ஆயத்தமாகக் காணப்பட வேண்டும். தேவை என்று இங்குக் குறிப்பிடப்படுவது, ஊதாரித்தனமான செலவுகளுக்கான தேவைகள் அல்ல, இன்னுமாக வேண்டிக் கேட்பவரின் அனைத்து விருப்பங்களும் தேவைகள் என்று கருதப்படவும் முடியாது. தேவை என்ன என்பதைக் கண்டறிய கணிப்பும், பகுத்தறிவும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், கொடுப்பதற்கும், உதவுவதற்குமான விருப்பம், இயேசுவின் ஒவ்வொரு பின்னடியாரின் இருதயத்திலும் விருத்திச் செய்யப்பட வேண்டும். கடன் கேட்கிறவர்களுக்கு இவர்கள் நன்மை செய்கிறவர்களாகவும், கொடுக்கின்றவர்களாகவும், பிரதிபலன் எதிர்ப்பார்க்காதவர்களாகவும் காணப்பட வேண்டும். மற்றவர்களைப்போன்று, கர்த்தருடைய ஜனங்கள், அதிகமான பணங்களைத் திரட்டிக் குவிப்பவர்கள் அல்ல. இவர்கள் தங்களுடைய பரம பிதாவைக் கனப்படுத்தி, பிரியப்படுத்தி, பரலோகத்தில் தங்களுடைய பொக்கிஷத்தைச் சேர்த்துவைத்து, இராஜ்யத்தில் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஏதுவான நிலையில் தங்களுடைய இருதயத்தைக் கொண்டு வருகின்றவர்களாக இருப்பார்கள்.

## "உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்"

"உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக" என்று பாரம்பரியம் கூறியுள்ளது. மாறாக, மாபெரும் போதகரோ, சத்துருக்களிடமிருந்து துன்பமும், பாதிப்பும் வருமாயினும், சத்துருக்கள் அன்புகூரப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார். இப்படியான புதிய மற்றும் மேலான போதனைகளே, நமது மீட்பர், மற்றவர்களைக்காட்டிலும் வித்தியாசமாகப் பேசினார் என்று கூறப்பட்டதற்கான காரணமாகும்.

நண்பர்கள் மேலும், சத்துருக்கள் மேலும் அன்பின் இந்த ஆவியை விருத்திச்செய்வது என்பது, இயேசுவின் பின்னடியார்கள், தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய ஆவியை,

குணலட்சணத்தைப் பெற்றுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கும். தேவன் பாவிகள் மீதும், பரிசுத்தவான்கள் மீதும் சூரியனை உதிக்கப் பண்ணுகின்றார், சூரிய ஒளியை அனுப்புகின்றார். மழையானது நீதிமான்கள் மீதும், அநீதிமான்கள் மீதும் பொழியப்படுகின்றது. தேவன் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைத் தவிர, மற்றபடி உள்ள தம்முடைய சத்துருக்கள் அனைவரையும் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்படுத்தும் தேவ நோக்கம் தொடர்பான "இருண்ட யுகத்தின்" பாரம்பரியங்கள், நம்முடைய மனங்களுக்கு எவ்வளவு தீமை விளைவித்துள்ளது என்பதைக் கணக்குப்பார்ப்பது கடினமே. இம்மாதிரியான போதனைகள், அவருடைய வேதத்தில் காணப்படாததற்குத் தேவனுக்கு நன்றி! இம்மாதிரியான பாரம்பரிய போதனைகள், நம்முடைய மூதாதையர்களை மதங்களுக்கு எதிரான கொள்கையுடையவர்களாக மாற்றியுள்ளது.

அன்பு, மகிமையான பண்பாகும், அது தேவனுடைய பண்பாகும். ஆனால், திருப்பி அன்பு காட்டுபவர்களிடத்தில் மாத்திரமே அன்பு காட்டப்படுமாயின், அது விசேஷமான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு எப்படிப் பாத்திரமாகும்? அந்நிய தெய்வங்களை வணங்குகின்றவர்களும், சொல்லப்போனால், எல்லா மனுஷரும் இப்படியாகவேதான், அன்பு செய்கின்றார்கள் அல்லவா? மரியாதையை நம்மிடம் காட்டுபவர்களிடத்தில் மாத்திரம் நாம் மரியாதை காட்டுபவர்களாய் இருப்போமானால், எவ்விதத்தில் நாம் புறஜாதிகள் மற்றும் பாவிகளைக்காட்டிலும் மேலானவர்களாக இருக்கக்கூடும்?

கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய, அவருடைய பள்ளிக்கூடத்தின் மாணவர்கள், தங்களுடைய அன்பான சிருஷ்டிகராகிய உயர்ந்தவரை தங்களுக்கான மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் பிதாவினுடைய பூரணத்தை/சற்குணத்தையடைய முயற்சிக்க வேண்டும். இதை இவர்கள் தங்களுடைய இருதயத்தில் அடைந்து, முடிந்தமட்டும் தங்களுடைய விழுந்துப்போன மாம்சத்தினுடைய ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் செயல்படுத்த வேண்டும்.

**ஆமென்!**

---

R 4566

# "தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள்"

## மத்தேயு 6:19-34

மாபெரும் போதகர் ஊதாரித்தனமான செலவு குறித்துப் போதிக்கவில்லை. அவர் பிதாவுக்கு அடுத்த வேலைகளில் சுறுசுறுப்புடன் காணப்பட்டார். மேலும், தம்முடைய பின்னடியார்களுக்கு, "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்ற காரியத்தையே போதிக்கின்றவராகக் காணப்பட்டார் (ரோமர் 12:11). இந்தப் பாடத்தில், பூமிக்குரிய பொக்கிஷங்களைச் சுயநலமாய்ச் சேர்க்கும் விதத்தில் நமது முயற்சிகள் காணப்படக்கூடாது என்று கர்த்தர் போதிக்கின்றார். பரலோகத்திலேயே நாம் பொக்கிஷங்களைச் சேர்க்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும். பூச்சியும், துருவும், திருடனும் பூமிக்குரிய பொக்கிஷங்களைக் கெடுக்கும் என்ற வார்த்தைகளைக் கர்த்தர் பயன்படுத்தியுள்ளபோதிலும், இவ்வார்த்தைகளில் விளங்கும் கொள்கை வெளிப்படையாக இருந்தாலும் கூட, இங்குள்ள அவருடைய போதனையை நாம் இன்னும் மேம்பட்ட கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றவர்களாய் இருக்கின்றோம். சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் தவிர மற்றபடி முன்கூட்டியே உடைகளையோ அல்லது உணவுகளையோ சேர்த்து வைப்பது என்பது அறிவீனமான காரியம் என்று அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால், பொன் சேர்க்கப்படலாம் அல்லது பணம் வங்கியில் சேர்த்து வைக்கப்படலாம், இருக்கும் வயல்களோடு கூட இன்னும் அதிகம் வயல்கள் வாங்கி சேர்க்கப்படலாம், அதிகம் வீடுகள் சேர்க்கப்படலாம். இவைகளெல்லாம் நாம் சேர்த்துவைத்தாலும் இவைகளும் அழியக்கூடியவைகளே.

வங்கி கணக்கைப் பூச்சியால் தொடமுடியாது என்றாலும், பொன்னைத் துரு சேதப்படுத்த முடியாது என்றாலும், சொத்துகளின் உரிமையைத் திருடனால் திருட முடியாது என்றாலும், இவைகள் நிரந்தரமானவைகள் அல்ல. நாம் உயிரோடு இருக்கும்போதும், இல்லாவிட்டாலுங்கூட, எல்லாவிதமான பூமிக்குரிய பொக்கிஷங்களும் அதற்குரிய மதிப்பை இழந்துவிடலாம். நாம் மரித்த பிற்பாடு நமக்கு அது மதிப்பு இழந்ததாகவே காணப்படும். தற்கால சூழ்நிலைகளில் கீழுள்ள பூமிக்குரிய பொக்கிஷங்கள் எவ்வளவுதான் முன்யோசனையுள்ள ஏற்பாடாக இருப்பினும், அவைகளை மரணமும், அழியும் தன்மையும் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுகின்றது. "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்" (யோபு 1:21). மரணத்திற்குப் பின்பு ஓர் எதிர்க்கால வாழ்க்கையைத் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், அது உயிர்த்தெழுதலின் காலைபொழுதில் கிடைக்கும் என்றும் புத்திசாலித்தனமான ஜனங்கள் பொதுவாக ஒத்துக்கொண்டுள்ளனர். நாம் நம்முடைய தற்போதைய வாழ்க்கையைப் பயன்படுத்துகிறதின் அடிப்படையிலேயே, அப்போதுள்ள நமக்கான ஆசீர்வாதம் இருக்கும் என வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இதையே நமது மாபெரும் போதகர் இன்றைய நமது பாடத்தில் வலியுறுத்துகின்றார். இதிலுள்ள நியாயத்தை அனைத்து அறிவுடைய மனங்களும் ஒப்புக்கொள்கின்றன.

சிலரால் கூறப்படும் எல்லை மீறின கண்ணோட்டத்தை நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஜனங்கள் தங்கள் முதிர்வயதில் பிறரின் தர்ம உதவிகளைச் சார்ந்து இருக்காமல் இருக்கத்தக்கதாக, தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான நியாயமான ஏற்பாடுகளைக் கூடச் செய்ய வேண்டாம் என்று ஆண்டவர் போதித்ததாக நாம் எண்ணிவிட வேண்டாம். பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தில் தங்களைச் சார்ந்துள்ள அங்கங்களுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து அலட்சியமாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் ஆண்டவர் பேசினதாகவும் நாம் எண்ணிவிட வேண்டாம். "ஒருவன் தன் சொந்த ஜனங்களை விசாரியாமற்போனால், அவன் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்" என்று தெளிவாக வேதாகமம் போதிக்கின்றது. பரிசுத்தவானாகிய பவுல், "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறியிருக்கின்ற பிரகாரம் நம்முடைய சொந்த எதிர்க்கால தேவைகளுக்கு அல்லது தேவைகளில் காணப்படும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவத்தக்கதாகப் பணத்தைச் சேமித்து வைப்பது சரியான விஷயமாகும் (1 கொரிந்தியர் 16:2 ). தேவனுடைய ஜனங்கள் சிக்கனமாய்ச் செலவு செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். கடன் வாங்குவதைத்

தவிர்க்க வேண்டும். தங்களிடத்தில் எதிர்க்கால தேவைக்கென, கொஞ்சம் பணம் சேமித்து வைத்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால், தேவனுடைய ஜனங்களுக்குப் பூமிக்குரியவைகள், அவர்களின் ஆத்துமாக்களுக்குப் பொக்கிஷங்களாக இருக்கக்கூடாது. மாறாக, அது அவர்களின் வேலைக்காரர்களாகவும், அவர்களுடைய வசதிகளுக்காக, எப்பொழுதும் பயன்பட ஆயத்தமாகவும், தேவைகளுக்கு இலவசமாகவும், முழுமையாகவும் பயன்பட ஆயத்தமாகவும் காணப்பட வேண்டும். இப்படியான நடத்தையைப் பின்பற்றுகிறவர்கள், அதிகமான பூமிக்குரிய ஆஸ்திகளைக் கொண்டிருப்பது அரிதான காரியமாகும். ஆஸ்திகளைப் பொக்கிஷமாக ஆக்கிக்கொண்டு, அவைகள்மேல் அளவுக்கு மீறின ஆசைகள் வைப்பவர்களே ஒன்றில் கருமிகளாக/பேராசைக் கொண்டவர்களாக அல்லது மிகவும் ஐசுவரியவான்களாகக் காணப்படுவார்கள். பரத்திற்குரிய காரியங்கள் மீது ஆசை வைப்பது என்பது, அதிகமான ஆஸ்திகள் குவிப்பதைத் தடைப்பண்ணத்தக்கதாக, உலக ஐசுவரியங்களிடத்தில், பற்று இல்லாமல் கையாளும் தன்மையைக் குறிக்கின்றது.

யாரொருவன் தனது ஆசையை, பூமிக்குரிய பொக்கிஷங்கள் மீது வைக்கின்றானோ, அவன் கஞ்சத்தனமானவனாகவும், சுயநலமுள்ளவனாகவும், உலகப்பிரகாரமாய் நடந்து கொள்பவனாகவும் ஆகிவிடுவான் என்பதே நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளாகும். ஆனால், ஒருவன் பரத்திற்குரிய காரியங்கள் மீது தனது ஆசையை வைப்பானானால், அவன் தாராளமுள்ளவனாகவும், பாக்கியவானாகவும், ஆவிக்குரியவனாகவும், பரத்திற்குரியவனாகவும் ஆகிவிடுவான். நமக்கு இரண்டு கண்கள் உள்ளன. மேலும், ஒருவேளை அவைகள் ஒன்றுக்கொன்று பொருத்தமாகச் செயல்படவில்லையெனில், நம்முடைய பார்வைத் தெளிவற்றதாக/உருவம் வேறுபட்டதாக இருக்கும். அனைத்தையும் நாம் சரியாகப் பார்க்கத்தக்கதாக இந்தக் கண் பிரச்சனையை நாம் சரிச் செய்துகொள்ள நாடுவோம். இப்படியே புரிந்துக்கொள்ளுதலின் கண்களினுடைய விஷயத்திலும் உள்ளது. நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கு, தற்கால மற்றும் எதிர்க்கால தோற்றங்கள் தெரியும். அதாவது, பூமிக்குரிய மற்றும் பரத்திற்குரிய பார்வைகள் உண்டு. அவையவைகளுக்குரிய வெளிச்சத்தில் இந்த இரண்டு பார்வைகளையும் நாம் சரியாய்ப் பொருத்திக்கொள்வது நல்லது. அதாவது, எதிர்க்கால வாழ்க்கையை, தற்கால வாழ்க்கையுடன் ஒப்பிட்டு, எதிர்கால வாழ்க்கையினுடைய மாபெரும் மதிப்பை நாம் உணர்ந்துக்கொள்ளத்தக்கதாகவும், இதன்விளைவாக நம் இருதயத்தின் ஆசைகள் பரத்திற்குரியவைகள்மேல் வைத்துக்கொள்வதற்கு உதவியாக வழிநடத்தப்படத்தக்கதாகவும் மற்றும் ஜீவியத்தின் விஷயங்களை ஞானமாய்ச் சரியான நிலையில் வைத்துக்கொள்ளத்தக்கதாகவும், நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுடைய இரண்டு பார்வைகளையும் சரியாய்ப் பொருத்திக்கொள்வது நல்லது.

நம்முடைய இயற்கையான சரீரத்தின் கண்கள் குருடான அல்லது இருண்டுபோன நிலைக்குச் எப்படிச் சென்றுவிடுகின்றதோ, அப்படியே நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுடைய விஷயங்களிலும் நடக்கின்றது. ஒருமுறை நம்முடைய கண்கள் பிரகாசிக்கப்பட்டு, தெய்வீக வாக்குத்தத்தங்களை நாம் ருசி பார்த்தப் பிற்பாடு, குருட்டுத்தன்மை நமக்கு ஏற்படுமாயின், நமது நிலைமை பரிதாபத்திற்குரியதாகக் காணப்படும். இப்படியான இருள் எவ்வளவு அதிகமானதாய் இருக்கும்!

இன்னும் ஒரு படிப்பினை இங்கு நமக்கு உள்ளது. உலகத்திற்கு ஊழியம் செய்வது, தற்காலத்தில் நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரக்கூடியதாக இருப்பினும், நம்முடைய எதிர்க்கால நன்மைகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், தேவனுக்கு ஊழியம் புரிவது என்பது எதிர்க்காலத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவனுக்கு கீழ்ப்படியத்தக்கதாக, பாவத்தினால் உண்டாகும் சந்தோஷங்களை நாம் இழந்துபோக வேண்டியதாய் இருப்பினும், தற்காலத்திலுள்ள சில நியாயமான உலக ஆசீர்வாதங்களை இழக்க வேண்டியதாய் இருப்பினும், தேவனுக்கும், நீதிக்கும் உண்மையான ஊழியர்களாக இருப்பவர்களாகிய நமக்கு தற்போதுங்கூட ஓர் ஆசிர்வாதம் உள்ளது. இதனோடுகூட மகிமையான எதிர்க்காலத்தின் ஆசிர்வாதங்கள் கூட இருக்கின்றன. ஆகவே, இரண்டு எஜமான்களில், எவர் பக்கம் நாம் நிற்க வேண்டும் என்பதை நாம் தெரிந்துக்கொள்வது அவசியமாய் உள்ளது. நம்மால் இரண்டு எஜமான்களுக்கும் ஊழியம் செய்யமுடியாது. இரண்டு எஜமான்களிடமிருந்தும் நம்மால் பலன்

பெற்றுக்கொள்ள முடியாது. "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்று யோசுவாவைப் போன்று நாமும் தீர்மானிப்போமாக (யோசுவா 24:15).

நாம் நம்முடைய அனைத்துக் காரியங்களையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவும், நம்மால் முடிந்தமட்டும் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் காணப்படுவோம் என முழுமையாய்த் தீர்மானிக்கவும், ஆண்டவர் நமக்கு வலியுறுத்துகின்றார். பின்னர், நாம் இப்படியாகத் தேவனுடன் ஒரு விசேஷமான உறவிற்குள் வந்தபடியாலும், அவருடைய வாக்குத்தத்தங்களின் காரணத்தினாலும் தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்தின் மத்தியிலும், நம்மீது தெய்வீகப் பராமரிப்புக் காணப்படுவதை நாம் உணர்ந்துக்கொள்ளவும் ஆண்டவர் நமக்கு வலியுறுத்துகின்றார். தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய பூமிக்கடுத்த காரியங்களில் கவலைக்கொள்ளாமல், தங்கள் அனைத்துக் காரியங்களையும் நம்பிக்கையுடன் தங்களுடைய பரம பிதாவிடம் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். தற்கால ஜீவியத்திற்குரிய உணவு மற்றும் வஸ்திரங்களைக்காட்டிலும் நமக்கான நித்திய ஜீவன் மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். நாம் ஞானத்துடன் காணப்பட்டால், தற்காலத்தின் எல்லா விஷயங்களையும் தியாகம்பண்ணி, எதிர்க்கால ஜீவியத்தை நாடுகின்றவர்களாய்க் காணப்படுவோம்.

நம்முடைய விஷயங்களில் நம்மைப் பராமரித்துக்கொள்வதற்கான நம்முடைய பரம பிதாவின் வல்லமை குறித்த விஷயத்தில், நாம் இயற்கையில் வெளிப்படும் அவருடைய வல்லமை, ஞானம் மற்றும் கிருபையையும் மற்றும் ஆகாயத்துப் பட்சிகளுக்கும், லீலி புஷ்பங்களுக்கும் அவர் பண்ணியுள்ள ஏற்பாடுகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். இவைகளின் தேவைகளையெல்லாம் பராமரிப்பதுபோன்று, நம்முடைய மேலான நன்மைக்கும் அவர் அருளுவதற்கும் சரிசமமான வல்லமை கொண்டுள்ளார் என்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும். என்ன வந்தாலும், விசுவாசத்தில் அவரை உறுதியாய் நம்ப வேண்டும். தற்கால ஜீவியத்திலும், எதிர்க்கால ஜீவியத்திலுமுள்ள காரியங்களுக்கு நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கின்றவர்களாய் இருக்கவேண்டும். நம்முடைய தற்கால அனுபவங்களையும், நமக்குரிய எதிர்க்கால பலன்களையும் தேவனுடைய ஞானம், அன்பு மற்றும் வல்லமையினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, அவருக்கான ஊழியங்களில் கடுமையாக உழைப்பவர்களாகக் காணப்படுவோமாக!

லீலி புஷ்பங்களையும், ஆகாயத்துப் பட்சிகளையும் பராமரிக்கின்றதைவிட, கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் மூலமாகவும், நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணம் பண்ணினதின் மூலமாகவும் அவருடைய பிள்ளைகளாக மாறியுள்ள நம்மை அதிகம் பராமரிக்க மாட்டாரோ? உலகத்தார் பொதுவாகக் கவலைப்படும் இவ்வுலகத்திற்கடுத்த உணவுகள், வஸ்திரங்கள் மற்றும் சகல காரியங்கள் தொடர்பான கவலைகளை அவரிடத்தில் வைத்துவிடுவோமாக. கவலைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பது சரியான அக்கறையுடன் இல்லாமல் காணப்படுவதையும், வேலை தேடுவதிலும், வேலை செய்வதிலும் முயற்சி எடுக்காமல் காணப்படுவதையும் குறிப்பதில்லை. நமக்கு உண்மையில் என்ன தேவை என்பதை நம்மைக்காட்டிலும் நமது பிதா அறிவார். மேலும், விசுவாசம் தேவனை நம்புகிறதாய் மாத்திரம் இராமல், நம்முடைய மேலான நலனுக்காக அவர் கொடுப்பதை ஏற்றுக்கொள்கிறதாயும் காணப்படவேண்டும்.

தேவனுடைய இராஜ்யத்தில், நம்முடைய அருமையான மீட்பருடன் பங்கடையும்படிக்கு நாடுவதே, கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நம்முடைய பிரதானமான கவனமாகக் காணப்பட வேண்டும். அதாவது, மனுக்குலத்தின் உலகத்தைச் சீர்த்தூக்குவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் கிறிஸ்துவின் மகிமையான சிங்காசனத்தில், கிறிஸ்துவின் மணவாட்டிகளாக, ஆயிரம் வருஷம் அரசாட்சியில் பங்கடைவதற்கும் நாடுவதே, நம்முடைய பிரதானமான அக்கறையாகக் காணப்பட வேண்டும். இப்படியாக, தேவனை விசுவாசிப்பவர்களுக்கு, அவர்களுக்கான மேலான நன்மைகளையும், பூமிக்குரிய நன்மைகளையும் பார்த்துக்கொள்வார் என ஆண்டவர் நமக்கு நிச்சயம் அளிக்கின்றார். இப்படியாக, நம்முடைய ஜீவியத்தில், அனைத்தையும் விசுவாசித்து ஒப்படைத்துவிட்ட நிலையில் நாம் காணப்படும்போது, கர்த்தரை விசுவாசிப்போருக்கு வசனங்களில் வாக்களிக்கப்பட்ட சமாதானமும், சந்தோஷமும், இளைப்பாறுதலும் நமக்குக் கர்த்தருக்குள் காணப்படும்.

**ஆமென்!**

---

R 4577

# "எதிரிாளியானவன் மீது வல்லமை /அதிகாரம்"

## மத்தேயு 8:23-34

"இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்." - மத்தேயு 8:27

அப்போஸ்தலர்களில் அநேகர் கலிலேயா கடலில் மீன்பிடிக்கிறவர்களாய் இருந்தனர். ஓய்வு எடுப்பதற்காகவும், அமைதலாய் இருப்பதற்காகவும், ஆண்டவர் அவ்வப்போது அப்போஸ்தலர்களுடன் படகில் ஏறிச் செல்வதுண்டு. ஏனெனில், அவர் கரையில் காணப்படும்போது அவரது ஊழியத்திலும், ஜனங்களுக்குப் போதிப்பதிலும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதிலும் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே காணப்படுவார். இப்படியாக, ஒருமுறை அவர் தமது சுறுசுறுப்பான அலுவல்களிலிருந்து, ஓய்வு எடுக்கும் தருணத்தில் நடந்த சம்பவம் தொடர்பாகவே நமது பாடம் காணப்படப்போகின்றது. அவர் களைப்படைந்தவராக மீன்பிடிக்கும் பாய்மரக் கப்பலின் பின்னணியத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருந்தார். திடீரென கடும் புயல் எழும்பிற்று; இப்படியாக புயல் உருவாகுவது இந்தக் கடலைப் பொறுத்தமட்டில் வழக்கமாகவே இருந்தது. சீற்றம் மிக்க அலைகள் கப்பலை நாசப்படுத்தும் வண்ணமாக இருந்தது. புயல்களுக்கு நன்கு பழக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்களும் கூட இப்புயலைக் கண்டு அச்சம் அடைந்ததிலிருந்து புயலின் வீரியம் குறித்து நாம் உணர்ந்துக்கொள்ளலாம். "ஆண்டவரே எங்களை இரட்சியும், அல்லது நாங்கள் மடிந்துபோவோம்" என்று கூறி, சீஷர்கள் ஆண்டவரை வந்து எழுப்பின போது, அவர் எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார் என்றும், மிகுந்த அமைதல் உண்டாயிற்று என்றும், பிற்பாடு, "அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று கூறி அப்போஸ்தலர்களைக் கடிந்துக் கொண்டார் என்றும் வெகு சுருக்கமாக பதிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. அநேகர் இந்த வார்த்தைகளை வாசித்து, மகா ஆறுதலும், நன்மையும் அடைந்துள்ளனர். காரணம், இவர்கள் கடலின் ஆபத்துக்கு ஆளாகாமல், மாறாக அனைவரும் ஜீவியத்தின் புயல்களுக்கு ஆளாகி இருக்கின்றபடியினாலேயாகும். இந்த ஜீவியத்தின் புயல்களினுடைய பயங்கரமான பேரலைகள், நம்மை அழிக்கும்விதத்தில் பயமுறுத்துகின்றன. சொல்லர்த்தமான பேரலைகளினின்று விடுவிக்கத்தக்கதாக வெளிப்பட்ட வல்லமையானது, (இதே) வல்லமையுள்ளவர் அனைத்துப் பிரச்சனைகளினின்று, விடுவிக்கவும் வல்லவர் என்ற நம்பிக்கையைக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. விசுவாச குறைச்சலினிமித்தம் அப்போஸ்தலர்களுக்கு வந்த கடிந்துக்கொள்ளுதலானது, நம்முடைய சர்வவல்லமையுள்ள நண்பருடைய முன்னேற்பாடான பராமரிப்பில் மிகுந்த நம்பிக்கை கொள்வதற்கும், மிகுந்த தைரியம் கொள்வதற்கும், மிகுந்த விசுவாசம் கொள்வதற்கும், கர்த்தருடைய ஜனங்களை உற்சாகமூட்டுவதாகவும் மற்றும் அவர்களைக் கண்டிக்கத்தக்கதாகவும், அவர்களுடைய இருதயத்தினிடத்திற்கும் கடந்து வருகின்றது.

"அப்போஸ்தலர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்" (மத்தேயு 8:27). இந்தப் பாடத்தை இவர்கள் கற்றுக்கொள்ளாதது வரையிலும், இவர்களுடைய சோதனைகள், நன்மைகள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பான விஷயங்களில், கர்த்தரை நம்புவதற்கு இவர்கள் ஆயத்தமாய் இருக்கமுடியாது. இதைப் போலவே இயேசுவின் "மேசியாத்துவம்" குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலின் போது "பரலோகத்திலும், பூமியிலும் சகல வல்லமை" அவருக்குக் கொடுக்கப்பட்டது என்பது குறித்ததுமான அதே மாபெரும் பாடங்களை நாமும் கற்றுக்கொள்ளாதது வரையிலும், நம்மாலும் அவரை முழுமையாய் நம்பவும், விசுவாசத்தில் அவருடைய அன்பான பராமரிப்பிலும், இளைப்பாறவும் முடியாது.

சாத்தான் ஓர் ஆவிக்குரிய ஜீவி என்றும், கண்ணுக்குப் புலப்படாதவர் என்றும், வல்லமையுள்ளவர் என்றும், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தெய்வீகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட நிலையில் மனிதனுடைய காரியங்கள் மீது வல்லமை கொண்டவர் என்றும் அனைத்து அப்போஸ்தலர்களும் புரிந்திருந்தது உறுதியே ஆகும். ஆகவேதான் சாத்தானைக் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபு" என்று அழைக்கின்றார் (எபேசியர் 2:2).

தீர்க்கத்தரிசியாகிய யோபுவின் விஷயம் குறித்தும், இவருடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனையைத் தேவன் அனுமதித்தார் என்றும், இவருடைய காரியங்கள் மீது எதிராளியானவன் அதிக வல்லமை கொள்ளும்படி அனுமதித்தார் என்றும், வேதாகமம் கொடுக்கும் சாட்சிக்குறித்தும்

நாம் நினைவுகூருகின்றோம். யோபுவின் பிள்ளைகள் கூடியிருந்த வீட்டை அழித்திட்ட புயல் மூலம், எதிராளியானவனுடைய அந்த வல்லமையில், சில செயல்படுத்தப்பட்டது என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

அநேகமாக அப்போஸ்தலர்களுக்குப் பாடம் கொடுக்கும் நோக்கத்திற்காகவே கலிலேயா கடலில் புயலை உருவாக்கும்படிக்கு, எதிராளியானவன் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். இரட்சகரைப் பிற்பாடு இரண்டு கள்வர்களுக்கு நடுவில் சிலுவையில் அறைந்திட செய்தது போன்று, ஆகாயத்து அதிகாரப் பிரபு இங்கு இவ்விதத்தில் (இப்பாடத்தின் சம்பவத்தில்) இரட்சகரை அழிக்கலாம் என்று எண்ணியிருக்கக் கூடும். முதல் சம்பவத்தில் எதிராளியானவனுடைய பிரயாசம், இயேசுவின் வார்த்தைகளினால் தோற்கடிக்கப்பட்டது. பிற்பாடு நடந்த சம்பவத்திலோ எதிராளியானவனுடைய பிரயாசம் ஜெயங்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஏனெனில் "அவருடைய வேளை வந்தது." யூதாசில் முன்பு கிரியை செய்துகொண்டிருந்த சாத்தான், நமது இரட்சகர் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முந்தின இரவில் முழுமையாக யூதாசுக்குள் புகுந்தான் என்ற பதிவுகளையும் நாம் நினைவுகூருகின்றோம். (லூக் 22:3; யோவான் 13:27)

விழுந்துபோன தூதர்களில் சிலருடனான, நமது கர்த்தருடைய போராட்டம் குறித்து, இந்தப் பாடம் நமக்குக் கூறுகின்றது. இந்தப் பிசாசுகளுக்குச் சாத்தான் தலைவனாய் இருக்கின்றான் என்று நாம் வாசிக்கின்றோம். இந்தப் பிசாசுகள், மனிதனுடைய சரீரத்தினின்று பிரியும் ஆவியாய் இராமல் மாறாக, இவர்கள் விழுந்துபோன தூதர்கள் என்று வேதவாக்கியங்கள் மிகத் தெளிவாகப் போதிக்கின்றன (2 பேதுரு 2:4; யூதா 1:6).

இந்த விழுந்துபோன தூதர்கள் முன்பு ஒரு காலத்தில் பரிசுத்தமாய் இருந்தார்கள் என்றும், ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதாக இவர்கள் மனுக்குலத்தோடு வைத்த தொடர்பினிமித்தம், பாவத்தினால் தீட்டுப்படுத்தப்பட்டார்கள் என்றும் வேதாகமம் கூறுகின்றது. ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு, பரிசுத்தமான தேவதூதர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டும், மனித உருவம் எடுத்துக்கொண்டு, மனிதனாகத் தோன்றும் சுதந்தரம் தடுக்கப்பட்டும் இருந்தாலும், இவர்கள் தடைகளைத் தகர்க்க நாடுகின்றனர். மனித சரீரத்தை எடுக்க அனுமதிக்கப்படவில்லை என்றாலும், மனித சரீரத்தைத் தங்களுக்கான ஊடகமாகப் பயன்படுத்தித் தடையாகிய மனித சித்தத்தை தங்களால் முடிந்தமட்டும் தகர்த்து, மனுக்குலத்தை ஆக்கிரமித்து ஆட்டிப் படைக்க நாடுகின்றனர். மரித்தவர்களுக்காகப் பேசுகிறவர்களாகவும், மரித்தவர்களை அடையாளப்படுத்துகின்றோம் எனக் கூறுகிறவர்களாகவும் இருக்கும் ஊடகங்கள், சூனியக்காரர்கள், சூனியக்காரிகள், ஆவியுலகப் பேச்சாளர்கள் போன்றவர்களுடன் எவ்விதமான தொடர்பும் நாம் வைத்துக்கொள்ளக்கூடாது என வேதவாக்கியங்கள் எப்போதும் நம்மை எச்சரிக்கின்றன. "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்றும், மரித்தவர்களுக்கான ஒரே நம்பிக்கை உயிர்த்தெழுதலில்தான் உள்ளது என்றும், மரித்த மனிதர்கள் அல்லாமல், விழுந்துபோன தூதர்களே நம்மிடத்திலும், நம் மூலமாகவும் தொடர்புகொள்ள நாடுகின்றனர் என்றும் வேதாகமம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. இந்த ஆவியுலக ஊடகர்கள் அறிந்தேதான் விழுந்துபோன தூதர்களுடன் இணைந்துள்ளனர் என நாம் இங்குக் குற்றம் சாட்டவில்லை. இந்த ஊடகர்களும், மற்றவர்களைப் போல வஞ்சிக்கப்பட்டே உள்ளனர் என நாம் நம்புகின்றோம். இக்காரியம் தொடர்பான வெளிச்சத்தை, உண்மையில் வேதாகம் மாத்திரமே நமக்குக் கொடுக்கின்றது. இதனாலேயே இதைக் குறித்து, இந்த வஞ்சகத்திலிருந்து நாம் மீட்டுக் கொண்ட அநேகருக்கு நம்மால் சுட்டிக்காட்ட முடிகின்றது.

வசனம் 28-இல் இடம்பெறும் இரண்டு பிசாசு பிடித்தவர்கள், பைத்தியக்காரர்களாய் இருந்தார்கள். காரணம், அநேக பிசாசுகள் அவர்களைப் பிடித்துக் கொண்டிருந்தன, மற்றும் பல்வேறு விதங்களில் அவர்களைக் கட்டுப்படுத்த முயற்சித்தவைகளாகவும் இருந்தன. பைத்தியக்கார விடுதிகளில் இருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பிசாசு பிடித்தவர்களே எனப் புத்தியுள்ள மருத்துவர்கள் உணர்ந்துக்கொள்வார்கள்.

பிசாசு பிடித்தவர்களிடம் நமது கர்த்தர் எப்படிக் கேள்வி கேட்டார் என்றும், தாங்கள் லேகியோன் அதாவது, அநேக பிசாசுகள் என்று அம்மனிதர்கள் மூலம் பொல்லாத ஆவிகள் எப்படிப் பதில் கொடுத்தன என்றும், வேறு ஒரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றது. மேலும், அந்தப் பிசாசுகள் தாங்கள் அம்மனிதனிடத்தில் தங்கக்கூடாதெனில், பன்றி கூட்டத்திற்குள் புகும்படிக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டன. அவைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன் விளைவாக முழுப் பன்றிக் கூட்டமும், அநேகமாக பல நூறு பன்றிகள் தாவி, மலையிலிருந்து குதித்து, கடலுக்குள் விழுந்து மாண்டன. பன்றிகள் நடந்துகொண்டதை வைத்துப்

பார்க்கும் போது, ஒவ்வொரு பன்றிக்குள்ளும் ஒவ்வொரு பிசாசு புகத்தக்கதாக அவ்வளவு பிசாசுகள் இருந்துள்ளது தெரியவருகின்றது. ஏனெனில், ஆடுகளைப் போலில்லாமல் பன்றி, பொதுவாக அதன் கூட்டத்திலுள்ள சகல பன்றிகளும் அதிகம் கிளர்ச்சி அடைந்திட்டாலும், அசையாமல் அப்படியே நிற்கும் சுபாவம் கொண்டவையாகும். ஒவ்வொரு பன்றியும் சுயமாகவே செயல்படுகின்றது (உடன் பன்றியின் கிளர்ச்சியினால் கிளர்ச்சி அடைவதில்லை). அம்மனுஷனிடமிருந்த பல பிசாசுகள், உண்மையில் லேகியோனேயாகும். மனித சித்தத்தைத் தகர்க்க முடியாத இந்தப் பிசாசுகள், ஒருவேளை அச்சித்தமானது ஒரு மனிதனுக்குள் தகர்க்கப்படுமாயின், இவைகள் இந்தப் பாவப்பட்ட மனிதர்களுக்குள் போய்க் குவிந்து விடுகின்றன. மாயவித்தை, ஆவியுலகக் கோட்பாடு ஆகியவை எதிராளியானவனுடையது என வேதவாக்கியங்களுக்கு இசைவாக நாம் எப்போதும் ஜனங்களை எச்சரித்துக் கொண்டிருக்கின்றோம். தன்வயப்படுத்தும் (மயக்கம் அடையப் பண்ணும்) வசீகர சாஸ்திரம் போன்று மனித சித்தத்தைத் தகர்ப்பவைகள் அனைத்தும் பாதகமானவைகள் என்றும், ஒருவேளை இந்த நபர் தனது மனநிலையை ஆட்டிப் படைக்க ஒப்புக்கொடுப்பாரானால், இவருடைய மனம் மற்றும் காரியங்களுக்குள் இந்த விழுந்துபோன ஆவிகள் பிரவேசிக்க மிகவும் ஏதுவாகிவிடுவார்கள் என்றும் நாம் எச்சரித்துள்ளோம்.

இந்த அற்புதம் காரணமாக உண்டான விளைவு, சுயநலத்தின் வல்லமையைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அற்புதத்தைக் காண திரளான ஜனக்கூட்டம் கூடினார்கள். பைத்தியமாய் இருந்த இரண்டு மனிதர்கள், இப்பொழுது வஸ்திரம் தரித்திருந்தார்கள். ஆனால், "என்னே ஓர் இழப்பு! பன்றிகள் செத்துக் கடலில் மிதப்பதைப் பாருங்கள்!" என்று ஜனங்கள் அற்பத்தனமாய்க் கூறினார்கள். "அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர்க் கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்" (மத்தேயு 8:34). இயேசுவும் அப்படியே உடனடியாகச் செய்துவிட்டார். இதே சுயநலத்தின் கோட்பாடானது இன்றும், எங்கும் கவனிக்கப்படலாம். பெரும்பாலான ஜனங்கள் விசேஷமாக தங்களது பூமிக்குரிய நலன்களையே கருதினவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், இவைகளோடு ஒப்பிட்டு பார்க்கையில், கர்த்தருடைய மாபெரும் ஆசீர்வாதங்களைக் கவனியாதே போகின்றார்கள். கலிலேயா தீர்க்கத்தரிசியின் சீஷர்களாகிய நாம், காரியங்களை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கின்றவர்களாயிருந்து, மனுக்குலத்தை விடுவிப்பதும், யூத பிரமாணம் தடை விதித்துள்ள பன்றியின் விஷயம் போல, தெய்வீகச் சித்தத்திற்கு வெறுப்பாய் இருக்கும் அனைத்தையும் அழிப்பதுமாகிய அவருடைய மகிமையான வேலைக்கு நமது இருதயங்களை இசைவாய்க் கொண்டிருப்போமாக.

**ஆமென்!**

**R 4587 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]**

இயேசுவின் மரணமானது உலகத்தினை மீட்டிடவில்லை; மாறாக அம்மரணமானது, எதிர்க்காலத்தில் பிரயோகிக்கப்படும் உலகத்திற்கான மீட்கும்பொருள் கிரயம் ஆனது. நமது இரட்சகர் தம்முடைய ஜீவனைக் கொடுத்துவைத்திட்டார், திவ்விய பரிந்துரைக்குக் கீழ்ப்படிந்தவராக அதைப் பிதாவிடம் ஒப்படைத்துவிட்டார். இதற்கு வெகுமானமாய் அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டு, எல்லா நாமத்திற்கும்மேலாக, ஆவிக்குரிய தளத்தில் உயர்த்தப்பட்டுள்ளார். பாவத்தின் காரணத்தினால் அவரது மனுஷீக உரிமைகளானது forfeited/பறிக்கொடுக்கப்படாததால், பிதாவின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தவராக அதைக் laid down/கொடுத்து வைத்தவராக மாத்திரம் காணப்படுவதினால், அதை மனுக்குலத்திற்குச் சொத்தாக அல்லது மரண சாசனமாகக் கொடுத்துவிடத்தக்கதாக, அவற்றை உடையவராய்க் காணப்படுவார்.

---

[R4587]

# பாவமும், வியாதியும் தொடர்புடையவகள்

**மத்தேயு 9:1-13**

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு." (வசனம்-6)

கெர்கெசேன பட்டணத்தார் இயேசுவை வேண்டிக்கொண்டதிநிமித்தம் இயேசு அப்பட்டணத்தை விட்டு புறப்பட்டார். காரணம், பிசாசு பிடித்த வேறே ஜனங்கள் சுகமளிக்கப்பட்டால், இந்த இடத்தின் முக்கிய தொழிலாகிய பன்றி கூட்டங்கள் அழிக்கப்பட்டுவிடுமோ என்று ஜனங்கள் பயந்துவிட்டனர். அவர் தம்முடைய வல்லமையுள்ள கிரியைகள் நடப்பிக்கப்பட்ட தமது சொந்த பட்டணமாகிய கப்பர்நகூமுக்கு படகில் ஏறிவந்தார். ஜனங்கள் அவரைச் சுற்றி கூடவே அவர் ஜனங்களுக்கு தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் குறித்தும் மனிதனுடைய கடமை மற்றும் பொறுப்பு குறித்தும் பிரசங்கிப்பதில் ஈடுபட்டார். அவர் பிரசங்கித்துக் கொண்டிருந்த வீட்டிற்கு ஒரு பெரிய கல் கூரையாகவும், கூரைக்குச் செல்வதற்கு வெளிப்புறத்தில் ஏணிப்படிகளும் இருந்தது. திமிர்வாதக்காரன் ஒருவனை, அவனுடைய நண்பர்கள் இயேசு சுகப்படுத்தும்படிக்கு படுக்கையில் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அரையிலும் வீட்டின் பிரகாரத்தில் ஜனங்கள் கூட்டம் இருந்தபடியினால், அவர்களால் உள்ளே பிரவேசிக்க முடியவில்லை. அவர்கள் ஆர்வத்தினால் படியேறி வீட்டின் நடுகூரையிலுள்ள கல்லை மாற்றி திமிர்வாதக்காரனை படுக்கையோடு உள்ளே இரட்சகர் முன் இறக்கினார்கள். விவரிப்பதற்கோ அல்லது மன்றாடுவதற்கோ அவசியப்படவில்லை. மாபெரும் வைத்தியனின் இருதயம் அன்பின் அனுதாபத்துடன் புறப்பட்டது. அவர் விசுவாசத்துடன் கூடிய ஜெபத்தை உணர்ந்து கொண்டு உடனடியாக அதற்கு பதில் கொடுத்தார். ஆனால் எதிர்பார்த்த விதத்தில் அல்ல.

பாவத்திற்கும், வியாதிக்கும் இடையிலான தொடர்பை விவரிப்பதற்கும், பாவத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுவிக்கிறதற்கு தனக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்கும், அவர் திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்!" (வசனம்-2) இதைக் கேட்ட மாத்திரத்தில் திமிர்வாதக்காரனும், அவனுடைய நண்பர்களும் ஏமாற்றமடைந்தது போன்று எண்ணியிருக்க வேண்டும். இன்றைய நாட்களில் நடப்பதுபோன்று அவரை ஒரு மீட்பராக, பாவம் சுமக்கிறவராக, புரிந்த வேலையையும், பாவங்களுக்கான மன்னிப்பும் இவர் மூலம் தான் வரும் என்பதையும் உணர்ந்து கொள்வதைக் காட்டிலும், நம்முடைய கர்த்தரால் கொடுக்கப்பட்ட அப்பங்களையும், மீனையும் சுகமளித்ததையுமே நன்கு உணர்ந்து கொண்டிருந்தனர்.

ஆனால் அங்கு நியாயப்பிரமாணத்தைக் கற்றவர்களும், நியாயப்பிரமாணத்தை திருப்தி செய்யாதவரையிலும் பிரமாணத்தை மீறின குற்றம் மன்னிக்கப்பட மாட்டாது என்பதை புரிந்திருந்தவர்களுமாகிய மதத் தலைவர்கள் காணப்பட்டனர். இவர்கள் தங்கள் இருதயத்தில் முறுமுறுக்க ஆரம்பித்தபோதோ, இயேசு அதை அறிந்தவராய், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" என்று கேட்டார். (வசனம்-5) போதகர் இந்த மாயக்காரருக்கு உணர்த்த விரும்பினது என்னவெனில், இவர்களும் எந்த அதிகாரமும் இல்லாமலேயே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று கூறிவிடலாம். ஆனால் அவர்கள் அந்த மனுஷனை சுகமாக்கி நீ எழுந்து நட என்று சொல்ல முடியாது என்பதேயாகும். இவ்விதமாக அவர்கள் எது கடினமானது என்று எண்ணினார்களோ, அதுவே உண்மையில்

எளிமையானது என்றும், எழுந்துபோ என்று ஒருவனால் சொல்ல முடிந்தால் கண்டிப்பாக அவனால் பாவம் மன்னிக்கப்பட்டது என்று சொல்லவும் முடியும் என்பதை அவர்களுக்குப் புரிய வைத்தார். பின்னர் இயேசு திமிர்வாதக்காரனை நோக்கி, "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டிற்குப் போ என்றார்." (வசனம்-6)

வேத வாக்கியங்களில் இடம்பெறும் இதே போன்றதான வேறொரு சம்பவத்திலும், சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனை நோக்கி கர்த்தர், "அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவஞ்செய்யாதே என்றார்." (யோவான் 5:14) வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நமது கர்த்தர் இவ்விடங்களிலெல்லாம் பாவம் மற்றும் வியாதிக்கிடையே உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுகின்றார். இந்த விஷயத்தின் மீது அதிகம் கவனம் செலுத்தும்போது, இவ்விஷயம் அதிகம் நமக்கு உறுதிபெறும். வியாதி என்பது மரணம் நிறைவேறுவதற்கு வழிநடத்துகின்றது. மரணத்தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்பு எந்த வியாதியும் இருக்கவில்லை. மீட்பர், ஆயிரவருட அரசாட்சியில் பாவத்தை அகற்றிவிட்ட பின்னர் காலம்வரும். அப்பொழுது, "மரணமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை" என சொல்லப்படும் என்று நாம் நம்புகின்றோம். (வெளிப்படுத்தல் 21:12) ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்துக் கொண்ட மரணத்தை மன ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் சரீர ரீதியான வியாதிகளும், பலவீனங்களும் வந்திருப்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கவில்லையா என்ன? மேலும் எந்த அளவிற்கு விருப்பத்துடன் பாவத்தில் ஈடுபட்டிருக்கிறோமோ, அதற்குரிய தாக்கம் ஒழுக்கத்திற்கேடாக மாத்திரம் இராமல், வியாதிகளின் பெருக்கமாகவும் இருந்து, சாவு நமக்குள் கிரியை செய்வதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கவில்லையா என்ன?

கடைபிடியுங்கள் அப்பொழுது ஜீவிப்பீர்கள் என்ற நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்கள் காணப்பட்டார்கள். ஆகவே இவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவது என்பது, ஆயிரவருட அரசாட்சியின் காலத்தில் புதிய உடன்படிக்கையின் கீழ் பாவத்தின் குறைவுகளிலிருந்து விடுவிக்கப்படுவதைச் சுட்டிகாட்டுகின்றது. (எரேமியா 31:31) மகிமையான கிறிஸ்து இந்த யுகத்தின் முடிவில் நிஜமாக சபைக்காக அல்லாமல், உலகத்திற்காக, சகல ஜனங்களுக்காக கிருபாசனத்தின் மீது தனது பலியின் புண்ணியத்தைத் தெளிப்பார். (லேவியராகமம் 16:33) இந்த சுவிசேஷ யுகத்தின் சபைக்கான தெய்வீக செயல்பாடு வேறுபட்டதாகும். ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவர்களிடம் பாவ மன்னிப்பு என்பது, இவர்கள் பரலோக ஜீவியம் அடைவதற்கும், மீட்பரோடு அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்கள் ஆகுவதற்குமென இவர்கள் பூமிக்குரிய வாழ்கையையும், அதன் விருப்பங்களையும் பலி செலுத்துவோம் என்று உரிய அர்ப்பணிப்பின் வாக்குறுதியின் மீது சார்ந்துள்ளது. ஆகவே இவர்களின் பாவம் மன்னிக்கப்பட்டது என்பது, சபை சரீர பாதிப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அர்த்தமாகாது.

இதற்கு பின்பு தான் லேவி என்று அழைக்கப்பட்ட மத்தேயு பனிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகும்படி அழைக்கப்பட்டார். இவர் ஓர் ஆயக்காரன். அதாவது, ரோம அரசாங்கத்திற்காக வரி வசூலிப்பவர் ஆவார். ஆயக்காரர்கள் இரண்டு காரணங்களால் வெறுக்கப்படுகின்றனர்:- அதாவது,

(1) தன்னுடைய நண்பனிடமிருந்து, உறவினரிடமிருந்து வரி வசூலித்த அந்நிய அரசாங்கத்திற்கு உதவுவது என்பது, மிகவும் அவமதிப்பானதாய் கருதப்பட்டது.

(2) ஆயக்காரர்களில் பெரும்பாலானவர்கள் நேர்மையற்றவர்களாய் இருந்து, தங்கள் ஸ்தானத்தினால் தங்களை ஐசுவரியவான்களாகும் பொருட்டு இலட்சமும் அதிகப்படியான வரிகளும் வாங்கினார்கள். மத்தேயு இப்படியான நேர்மையற்றவராய் இருந்திருக்க முடியாது. இல்லையேல், இப்படிப்பட்டவர் மேசியாவுடன் தொடர்பு வைப்பதற்கும், அவருடைய அப்போஸ்தலர்களில் ஒருவராகுவதற்கும், அவருடைய இராஜ்யம் அவருடன் உடன் சுதந்தரராகவும் அழைக்கப்பட்டிருந்திருக்க மாட்டார். ஒருவேளை இயேசு ஒருபோதும் நேர்மையற்ற மனுஷரை அழைக்கமாட்டார் எனில், நேர்மையற்ற மனுஷனும், அவருடைய அழைப்பையும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார். காரணம், இதில் இலாபம் ஈட்டுவதில் எதுவும் இல்லை. அதாவது, புகழ்ச்சியோ, சம்பளமோ, ஏமாற்றும் வாய்போ இல்லை. இதை போன்றவர் தான் ஆயக்காரனாகிய சகேயுவும் கூட. இவரும் நேர்மையான ஆயக்காரன் ஆவர். இல்லையேல் தான் யாருக்கும் அநீதி செய்திருந்தால், நாலத்தனையாகக் கொடுப்பேன் என்றிருக்கமாட்டார். இது இவர் நேர்மையற்றவராய் இருக்கவிரும்பவில்லை என்பதைக் காட்டுகின்றது.

மற்ற வேதவாக்கியங்களோ, மத்தேயு உடனடியாக தனது நண்பர்களுக்கும், பழக்கம் உள்ளவர்களுக்கும் விருந்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களும் அங்கு விருந்தாளியாக வந்திருக்க கர்த்தரோடு பழகி தொடர்பு கொள்ளும் மேலான வாய்பை அடையும்படி செய்தார். ஆனால் பரிசேயர்களோ, குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாக இயேசு நீதிமானாய் இருந்தால் இப்படிப்பட்ட கூட்டத்தோடு கூட்டம் சேரமாட்டார் என்று கூறினார்கள். நம்முடைய கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த பதில், "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல, சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" என்றார். (வசனம்-12) அதாவது, இந்த காரணத்திற்காகவே அதாவது, பாவிகளுக்கு நன்மை செய்வதற்காகவே அவர் பாவிகளோடு தொடர்பு வைத்திருக்கின்றார் என்பதை சுட்டிக்காட்டினார். அவர் எந்தவிதத்திலும் பாவத்திற்குள் கடந்துபோகவில்லை. மாறாக, பாவிகளைத் தூக்கிவிட்டார். பின்னர், பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று ஓசியா தீர்க்கதரிசி கூறின வார்த்தையை அவர்களுக்கு கோடிட்டுக் காட்டினார். (ஓசியா 6:6; மத்தேயு 9:13) அவர் தான் நீதிமானாக அழைப்பதற்காக அல்லாமல் பாவிகளை அழைப்பதற்காகவே வந்தார் என்பதை அவர்களுக்குக் கூறினார்.

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்ற பாடத்தை நாம் அனைவரும் கவனிக்க வேண்டும். (ரோமர் 3:10) அனைவரும் பாவிகள். அனைவரும் பூரணத்தின் தெய்வீக மாதிரிக்குக் குறைவாகவே காணப்படுகின்றனர். ஆகவே யார் தன்னை நீதிமான் என்று கூறுகின்றார்களோ, அவர்கள் மீட்பரை புறக்கணிக்கின்றார்கள், மாயக்காரராய் இருக்கின்றார்கள். அத்தகையவர்கள் தவறான மனநிலையில் இருப்பதால் தேவனால் இப்பொழுது கொடுக்கப்படுகின்ற எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்களாகி விடுகின்றனர்.

யார் தங்களை சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகள் என்று ஒப்புக்கொண்டு முதலாவதாக இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் வரும் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்கின்றார்களோ, அவர்களைத் தவிர வேறு எவரையும் கிறிஸ்துவுடன் சீஷனாக இருக்கும்படி தேவன் அழைப்பதில்லை. ஆமென்!

R 4588

# "ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம்"
## மத்தேயு 9:18-34

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்." - **மாற்கு 9:23**

தேவனிடத்தில் விசுவாசம் என்பது அவருடைய வார்த்தையை நம்புவதாகும். அதாவது, நம் தொடர்பாகவும், மற்றவர்கள் தொடர்பாகவுமுள்ள அவருடைய திட்டம் மற்றும் அவருடைய குணலட்சணத்தின் வெளிப்படுத்தல்களை நம்புவதும், ஏற்றுக்கொள்வதுமாகும். விசுவாசத்திற்கும் (faith), எளிதில் நம்பக்கூடிய தன்மைக்கும் (credulity) இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் தெளிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும். மிகவும் நல்ல சில ஜனங்கள், தாங்கள் எந்தளவுக்கு மிகவும் அர்த்தமற்ற காரியங்களை நம்புகின்றார்களோ, அந்தளவுக்கு அவர்களுடைய விசுவாசம் பெரியதாய் இருக்கும் எனத் தவறாக எண்ணிக்கொள்கின்றனர். விசுவாசமானது பகுத்தறிவைப் புறக்கணிப்பதில்லை. மாறாக, பகுத்தறிவைக் குறிப்பிட்ட நியாயமான வரையறைக்குள் விசுவாசமானது பயன்படுத்திக் கொள்கின்றது. தேவனிடத்தில் நாம் விசுவாசம் கொள்வதற்கு, முதலாவதாக நாம் நமது மனதின் விவாதங்களை திருப்திப் பண்ணிக்கொள்ள வேண்டும்:-

(a) அதாவது, தேவன் ஒருவர் இருக்கின்றார்;

(b) அதாவது, அவரில் நம்பத்தக்க குணங்கள் இருக்கின்றது, அதாவது அவர் நீதியுள்ளவர்; அவர் ஞானமுள்ளவர்; அவர் வல்லமையுள்ளவர்; அவர் கிருபையுள்ளவர்;

(c) அதாவது அவருடைய செய்தியென நாம் ஏற்றுக்கொண்டுள்ளது, ஏற்றுக் கொள்வதற்குப் பாத்திரமானது என்றும், உண்மையும், தெய்வீகக் குணலட்சணத்திற்கு இசைவையும் உள்ளது என்றும் நாம் நியாயமாக நமக்கே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படியாக விசுவாசத்திற்குச் சாட்சிகளைக் கொண்டிருக்க நாடாதவன், முழுமையான விசுவாசம் கொண்டிருக்கவில்லை, மற்றும் எளிதில் நம்பும் தன்மையை (credulity) உடையவனே ஆவான்.

கிறிஸ்தவ ஜனங்களில் அநேகர் விசுவாசத்தின், சரியான விளக்கத்தைப் புறக்கணிக்கின்றபடியினால், யதார்த்தமான மனங்கொண்ட அநேகர் அர்த்தமற்ற காரியங்களை நம்ப வேண்டும் என்று சொல்லப்படுவதினால், கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்க மறுக்கின்றனர். 1 பேதுரு 3:15-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகின்றது போல, கிறிஸ்தவ ஜனங்கள் தேவனிடத்திலும், வேதாகமத்திலுமான அவர்களது விசுவாசத்தை அதிக கவனத்துடன் ஆராய்ந்துப் பார்க்கும்படி நாம் வலியுறுத்துகின்றோம். இதை நமக்கும், தேவனுடைய வார்த்தைகளில் பிரியப்படும்படிக்கு நாம் கொண்டு வரக்கூடிய மற்றவர்களுக்கும், நாம் செய்ய கடமைப்பட்டுள்ளோம். தேவனுடைய வார்த்தைகள் மீது இன்று பிரகாசிக்கும் வெளிச்சத்தில், அப்போஸ்தலருடைய நாட்களில் இருந்தது போல, தேவனுடைய மனுஷன் "தேறினவனாகவும்", "சத்தியத்தை நிதானமாய் பகுத்துப் போதிப்பதற்கும்" கூடியவனாகி, தனது நண்பர்கள் மற்றும் அயலார்களுக்கு, தான் விசுவாசிக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் உறுதியான, நியாயமான அடிப்படைகளைக் காண்பிக்க முடியும். ஆனால் இப்படிச் செய்வது என்பது, முதல் நூற்றாண்டிற்கும், இந்த நூற்றாண்டிற்கும் (18) இடையே காணப்பட்ட இருண்ட யுகத்தில், நிச்சயமாய் முடியாததாகவே இருந்தது. வேதாகமம், ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் என்பதை நம்புவது தொடர்பான விஷயத்தில் குழப்பமாய்க் காணப்படும், அநேகர் மீது நமக்கு அனுதாபம் உள்ளதினால், இப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதவ முடியும் என்ற நிச்சயத்துடன், இவர்களிடமிருந்து, கடிதத்தை எதிர்ப்பார்த்து வரவேற்கின்றோம்.

நம்முடைய இந்தப் பாடமானது, விசுவாசத்தை நான்கு வெவ்வேறு கோணங்களிலிருந்து விளக்குகின்றது. அவை பின்வருமாறு:-

(1) யவீருவின் விசுவாசம் - தனது மகளுக்காக வைக்கப்பட்ட தகப்பனுடைய விசுவாசம்.

(2) தன் பொருட்டு, கர்த்தருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட ஸ்திரீயினுடைய விசுவாசம்.

(3) ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்ட இரண்டு குருடர்களின் விசுவாசம்.

(4) பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த ஊமையனும், வாய்ப் பேசாதவனுமாகிய மனுஷனைக் கர்த்தரிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தவர்களின் விசுவாசம்.

நமது கர்த்தருடைய (பிற்காலங்களில்) சொந்த ஊராகிய கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்தலைவரில் ஒருவராய் இருந்த யவீரு, இயேசுவை நன்கு அறிந்திருந்தார். இவர் கர்த்தரை, சில சமயம் ஓய்வுநாளின் பாடங்களை வாசிக்கவும் அழைத்திருக்கின்றார். இன்னொரு தருணத்தில் ஒரு நூற்றுக்கதிபதியினுடைய வேலைக்காரனுக்காக, மற்றவர்களுடன் இவர் (யவீரு) கர்த்தரை மன்றாடியுள்ளார் (லூக்கா 7:4). இப்பொழுது, யவீருவின் குடும்பத்திலேயே துன்பம் வந்துவிட்டது. பன்னிரெண்டு வயதுள்ள இவருடைய ஒரே மகள் மரித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் கர்த்தரும் அவ்விடத்தில் இல்லை. கர்த்தருக்காகக் காத்துக் கொண்டிருந்த ஜனக் கூட்டத்தில், யவீருவும் ஒருவராகக் காணப்பட்டார். மேலும், இவர் முக்கியமான நபராகக் காணப்பட்டபடியால், இவர் கர்த்தரை அணுக, ஜனங்கள் இவருக்கு இடம்விட்டுக்கொடுத்தனர். கர்த்தர் வந்து தனது மகளைச் சொஸ்தப்படுத்த வேண்டும் என்ற இவருடைய வேண்டுதலினால் மாத்திரம் இவர் தனது விசுவாசத்தை வெளிப்படுத்தாமல் இன்னுமாக, கர்த்தருடைய பாதத்தில் விழுவதாகிய தனது செயல்பாடு மூலமாகவும் வெளிப்படுத்தினார். அதாவது, பாதத்தில் விழுவதன் மூலம் தனது கீழ்ப்படிதலையும், மரியாதை அளித்தலையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார். மரிக்கும் நிலையிலிருந்த இவருடைய மகளை, இவர் தனது வீட்டில் விட்டு வந்திருந்தார். இவர் இயேசுவோடு பேசிக் கொண்டிருக்கும் போதும், இயேசுவை வரும்படிக்குத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கும் போதும், இவரது மகள் இறந்து போய்விட்டாள். இவரும், இயேசுவும் வீட்டிற்குச் சமீபிக்கும் போது, காலம் கடந்து விட்டது என்றும், மகள் இறந்து போனாள் என்றும் தூதுவர்கள் இவர்களிடம் வந்து அறிவித்தார்கள். இயேசு வந்த சமயம், அயலார்கள் யூத வழக்கத்தின்படி மரித்த வீட்டில் கூடியிருந்தனர். சிலர் துக்கம் கொடுக்கும் இசைகளை, இசைத்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டு, புலம்பிக் கொண்டிருந்தார்கள். குடும்பத்திலும், அண்டை வீட்டுக்காரர்களிலுமுள்ள பெண்கள் அவர்களின் வழக்கத்தின்படி, ஒருவர் மரித்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், கதறி, கூவி, பின்னர் சடலம் இருக்கும் அறைக்குள் பிரவேசித்து, துக்கித்து, புலம்பிக்கொண்டிருப்பார்கள். "சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" என்று ஆண்டவர் கூறி, கூட்டத்தார் புலம்புவதை நிறுத்தச் சொன்னார். இதைப் போன்ற வார்த்தைகளையே, ஆண்டவர் லாசருவின் விஷயத்திலும் பயன்படுத்தினார். பொதுவான மனித வார்த்தையின்படி சிறு பெண் மரித்திருந்தாள். ஆனால், தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி அவள் மரிக்கவில்லை. அதாவது, மிருகங்கள் மரித்து அழிந்து விடும் விதத்தில் அவள் அழிந்து போய்விடவில்லை. மனுக்குலத்தின் மீது இருக்கும் மரணத் தீர்ப்பானது, மீட்பருடைய பலியினால் ரத்து செய்யப்படும் என்பதும், இதன் விளைவாக நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்துப் போனவர்களின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் என்பதுமான காரியங்களே ஆரம்பத்திலேயே காணப்பட்ட தெய்வீக ஏற்பாடாக உள்ளது. இந்தக் கண்ணோட்டத்தின்படி மரித்தவர்கள் நித்திரையில் இருக்கின்றார்கள் என்றும், இந்த நித்திரையிலிருந்து உயிர்த்தெழுதலின் காலையில், ஆயிரம் வருஷம் யுகத்தின் விடியலில் ஒரு மகிமையான விழித்தெழுதல் இருக்கும் என வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஆகவேதான் ஆபிரகாமும், முற்காலங்களிலுள்ள மற்றவர்களும், நல்லவர்களும், கெட்டவர்களும் நித்திரையில் உள்ளதாகவும், அவர்களின் பிதாக்களுடன் நித்திரையடைந்தார்கள் என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் இரத்தச் சாட்சியாகிய ஸ்தேவானும் நித்திரையடைந்தார் (அப்போஸ்தலர் 7:60). மரித்தவர்கள் பரலோகத்திலோ, உத்தரிக்கும் ஸ்தலத்திலோ (அ) நரகத்திலோ நித்திரைப் பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதாகாது. பூமியின் தூளிலே நித்திரைப் பண்ணிக் கொண்டிருப்பவர்கள், எழுந்திருப்பார்கள் என்று வேதாகமம் தெரிவிக்கின்றது. (தானியேல் 12:2). "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:22). ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் மரணமாகவும், ஜீவிக்கும் தன்மை நித்தியத்திற்கும் நின்று போனதாகவும் இருந்தது. மீட்பருடைய பலியின் புண்ணியத்தினால் இது மாற்றப்பட்டது; மேலும் மரணம் என்பது, உணர்வில்லாத/உணர்வு இழந்த நித்திரையாகவே உள்ளது. இப்படியான நித்திரை நிலையானது, மாபெரும் மீட்பரானவர் லாசருவினிடத்தில் "வெளியே வா" என்றும், யவீருவின் மகளிடத்தில் "தலித்தாகூமி" அதாவது "சிறு பெண்ணே எழுந்திரு" என்று சொன்னது போன்று மனுக்குலம் அனைத்திடமும் சொல்லும் காலைப் பொழுது வரையிலும் நிலவும். ஆகவே, இறுதியில் பிரேதக்குழியில் இருக்கும் அனைவரும் மனுஷகுமாரனுடைய குரலைக் கேட்டு வெளியே வருவார்கள் என்பது நமக்கு உறுதியே (யோவான் 5:28). யவீருவின் வீட்டிற்குக் கர்த்தர் போகும்

வழியில், கர்த்தரைச் சூழ்ந்திருந்த கூட்டத்தாரில் ஒரு ஸ்திரீ அவருடைய மகத்துவத்திலும், வல்லமையிலும் நம்பிக்கைக்கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள, அவருடைய வஸ்திர ஓரத்தைத் தொட்டாள். மின்கல அடுக்கை (battery) கம்பி தொடும்போது, உடனடியாக மின்சாரம் பாய்வது போன்று, ஜீவனின் எழுச்சியும், பலமும் அவளுக்குள் உடனடியாகப் பாய்ந்தது. நமது கர்த்தர் உயிர் ஆற்றலினால் முழுவதும் நிரம்பப் பெற்றிருந்தார். அவர் பரிபூரணமாய் இருந்தார். மேலும், அவர் பாவத்திற்கு விலகினவராய் மாத்திரமல்லாமல், நோய் மற்றும் மரண நிலையிலிருந்து விலகினவராகவும் இருந்தார். தம்மிடமிருந்து ஆற்றல் புறப்பட்டதை உணர்ந்த கர்த்தர் திரும்பி, "என்னை தொட்டது யார்?" என்று வினவினார். அந்த ஸ்திரீயானவள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தான் பாத்திரமற்றவள் என்று எண்ணினாள், மற்றும் ஆசீர்வாதத்தைத் திருடினபடியால் பயந்தாள். ஆனால், உடனடியாக ஆண்டவருடைய இரக்கமான வார்த்தைகள் மற்றும் பார்வையினால் அமைதியடைந்தாள். இந்தச் சம்பவம், நமது கர்த்தருடைய அற்புதங்கள், அவருடைய உயிர்ஆற்றலைக் கரையப் பண்ணினது என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வாறாக யோர்தான் முதல் கல்வாரி வரையிலும் அவரிடமிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட அனைவரின் தேவைகளுக்கும், விரும்பி மகிழ்ச்சியுடன் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார்.

இயேசுவை மேசியா என்றும், தாவீதின் சந்ததியில் வரும் வாக்களிக்கப்பட்ட ராஜா என்றும் வாழ்த்தி, அவரைச் சந்தித்த இரண்டு குருடர்களும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொண்டு, அவர்களுடைய விசுவாசத்திற்கு ஏற்ப, விரும்பின ஆசீர்வாதங்களை இருவருமே பெற்றுக்கொண்டனர். இங்கு விசுவாசத்தைத் தூண்டக்கூடிய, சபை ஐக்கியத்தின் அனுகூலம் நமக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மகா பரிசுத்தமான விசுவாசத்தில் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்திடுவோமாக. நம்முடைய உடன் சகோதரர்களுக்கு, நாம் உதவிக்காரர்களாக இருப்போமாக; இடையூறு பண்ணுபவர்களாக இல்லாமல் இருப்போமாக. சகல ஜனங்களையும் சொஸ்தப்படுத்த ஆண்டவர் முற்படவில்லை. உதாரணத்திற்குச் சீலோவாம் குளத்தண்டையில் அநேகர் இருந்தும், ஒருவரே சொஸ்தப்படுத்தப்பட்டார். இங்கும் கண்கள் பார்வை பெற்றவர்கள், காரியத்தை இரகசியமாய் வைத்துக்கொள்ள இயேசு எச்சரித்தார். ஆனால், அவர்களால் அதை அடக்கி வைக்க முடியவில்லை. அவர்களுடைய சந்தோஷம் மிகுதியாய் இருந்தது, மற்றும் இவ்விஷயத்தில் கர்த்தரிடமிருந்த தாழ்மை, அவர்களை வெளிப்படையாக துதிக்க ஏதுவாக்கிற்று. நம்முடைய விஷயத்திலும் இப்படியே ஆகும்; மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, ஆவியில் சொஸ்தமாக்கப்பட்டு, புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்ற நம்மாலும் நற்செய்தியை அறிவிக்காமலும், கர்த்தரைத் துதிக்காமலும் இருக்க முடியாது. (ரோமர் 1:12; அப்போஸ்தலர் 4:20)

பிசாசினால் பிடிக்கப்பட்டு, ஊமையனாகவும், செவிடனாகவும் இருந்த மனுஷன் கவலைக்கிடமான நிலையில் காணப்பட்டான்; அவனால் அவனுக்கே உதவ முடியவில்லை, ஆண்டவரின் உதவியையும் கேட்க முடியவில்லை; ஒருவேளை எவரேனும் அவனிடத்திலுள்ள பிசாசுக்களை விரட்டினாலும் அவனால் கேட்கவும் முடியாது. இவனுக்காக, இவனுடைய நண்பர்கள் விசுவாசம் கொண்டார்கள். இயேசு இணங்கி, பிசாசை விரட்டினார், அம்மனுஷன் சொஸ்தமாக்கப்பட்டான்; ஜனக்கூட்டம் பிரமித்தது. ஆனால், பரிசேயர்கள் பொறாமை அடைந்தனர். பரிசேயர்கள் தாங்கள்தான் பிரதானமான பயபக்தியுடையவர்கள் என்று காண்பிக்க விரும்பினர். மற்றும் இயேசுவின் கூடவே கடந்து சென்றுக்கொண்டிருக்கும் பிரபலமும், கீர்த்தியும் தங்களுக்குத் தக்கவைக்கப்படவும் விரும்பினர். இயேசுவைச் சாத்தான் என்றும், பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூல் என்றும் கூறுமளவுக்கு, அவர்களுடைய மனங்களுக்குள் பொறாமையின் விஷம் ஊடுருவின. இப்பாடத்தை நாம் கற்றுக்கொண்டு, பொறாமை, வன்மம், பகை முதலியவைகளைத் தவிர்த்து, இவைகளுக்குப் பதிலாக சாந்தம், நற்குணம், பொறுமை எனும் அன்பின் ஆவியினால் நமது இருதயங்களை நிரப்பி, நமது விசுவாசத்தைப் பெருக்கிக் கொண்டு, அதிகமதிகமாக நமது ஆண்டவரைப் போன்று மாறுவோமாக.

**ஆமென்!**

---

# நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம்

யூதர்களுடைய காலக்கணக்கீட்டின்படி நினைவுகூருதல் இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளானது, இந்த வருடம் ஏப்ரல் 22-ஆம் தேதி, வெள்ளி மாலை 6 மணிக்குமேல் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. நாம் யூதர்களின் காலக்கணக்கீட்டின்படி கைக்கொள்வதுபோன்றே, ஆதியில் கிறிஸ்தவ சபையும் இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தைக் கைக்கொண்டுவந்தார்கள்; ஆனால் இதற்கான தேதிகளை மிகவும் சீராக பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும் மற்றும் யூதருடைய மாதிரியின்படி பின்பற்றும் எண்ணத்திலிருந்து கிறிஸ்தவர்களுடைய மனங்களைத் திசைத்திருப்பத்தக்கதாகவும் தேதியினை கணக்கடும் முறைமை கொஞ்சம் மாற்றப்பட்டது. யூதருடைய காலக்கணக்கீட்டுமுறைமை பஸ்காவானது, வாரத்தினுடைய எந்தக் கிழமையிலும் வருவதற்கு அனுமதித்ததாய் இருந்தது. ஆனால் காலக்கணக்கீட்டுமுறைமையின் மாற்றமானது — நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாளானது எப்போதும் வெள்ளிக்கிழமைகளில் வரப் பண்ணிற்று; இது "புனித வெள்ளி" என்று அழைக்கப்பட்டது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கான ஆண்டுநிறைவு நாளானது எப்போதும் "மூன்று நாளைக்குப்" பிற்பாடு, ஞாயிற்றுக்கிழமைகளில் வரப்பண்ணிற்று; இது பிற்பாடு ஈஸ்டர் ஞாயிறு என்று அழைக்கப்பட்டது. யூதர்களுடைய காலக்கணக்கீடுமுறைமையானது, சந்திரன் மற்றும் சூரியன் அடிப்படையிலாகும். ஆகவே அவர்களுடைய பெரும்பான்மையான வருடங்கள் பன்னிரண்டு மாதங்களை உடையதாக இருந்தது மற்றும் அவ்வப்போது சில வருடங்கள் பதிமூன்று மாதங்களை உடையதாக இருந்தது. யூதர்களுடைய காலக்கணக்கீடு முறைமையின்படி, வசந்த காலத்தின்/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடர்ந்துவரும் முதல் அமாவாசையிலிருந்து 14 நாட்களுக்குப் பின்வரும் பௌர்ணமி இடம்பெறும் நாளானது, பஸ்கா தேதியாகக் காணப்படுகின்றது. பிற்பாடு - இளவேனிற் சம இரவு பகல் நாளைக்கு முன்னதாகவே சந்திரனானது அமாவாசை நிலையில் காணப்படுகின்றபோதிலும், சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் பௌர்ணமிக்குச் சமீபமான வெள்ளிக்கிழமையினைக் கிறிஸ்தவ சபைகள் தெரிந்துகொண்டனர் - இதுவே இவ்வருடம் கத்தோலிக்கரின் கணக்குப்படி புனித வெள்ளியானது மார்ச் 25-ஆம் தேதியிலும், யூத கணக்கிடுதலின்படி, சரியான தேதி ஏப்ரல் 23-ஆம் தேதியாக இடம்பெறுவதற்கும் இடையிலான வித்தியாசத்திற்கான காரணமாகும். நாம் நினைவுகூருதலை முந்தின மாலையில் ஆசரிக்கின்றோம். நமது கர்த்தருடைய மரணத்திற்கான நாளோ (அ) வேளையோ அல்ல, அவரது மரணமே பிரதானமாய் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வருடம் இத்தகையதொரு நினைவுகூருதலானது ஏப்ரல் 22-ஆம் தேதி, வெள்ளி மாலை, 6 மணிக்குமேல் (நீசான் 14-ஆம் தேதியில்) ஆசரிக்கப்படும். அடுத்த நாள், ஏப்ரல் 23-ஆம் தேதி, சனி, பிற்பகல் 3 மணியானது, நமது கர்த்தருடைய மரணத்திற்கு இணையான வேளையாகும்; யூதருடைய பஸ்கா பண்டிகையானது மூன்று மணி நேரத்திற்குப் பின்னர் துவங்குகின்றதாய் இருக்கின்றது. அனைவருடைய மனங்களைத் திருப்திப்படுத்திடவே, இவ்வளவு விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

## நாம் எதை நினைவுகூருகின்றோம்?

நாம், நான்கு மாபெரும் காரியங்களை நினைவுகூருகின்றோம். அவை பின்வருமாறு:

(1) பஸ்கா ஆட்டுக்குட்டியாக நமது கர்த்தர் மரித்த விஷயம்.

(2) அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற பின்னடியார்களும், அவருடைய பாத்திரத்தில் பங்காளிகளுமானவர்களுமாகிய நமக்குக் கிறிஸ்துவின் மரணத்திலும்,கிறிஸ்துவின் பாடுகளிலும் அவரோடுகூட உள்ள நமக்கான உறவு அல்லது பங்கு பற்றின விஷயம்.

(3) தற்கால இரவில் நிகழும் இந்தக் கடந்துபோகுதலுக்குப்பின் விரைவாக வரப்போகின்ற மாபெரும் விடுதலையை எதிர்பார்த்தவர்களாக இப்பஸ்காவை நாம் அநுசரிக்கின்றோம். விடுதலையானது முதலாவதாகக் கடந்துபோகப்பட்டவர்களாகிய சபைக்கும் — "சிறு மந்தைக்கும்" மற்றும் திரள்கூட்டத்தினருக்கும், அதாவது நிஜமான இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாருக்கும் மற்றும் லேவி கோத்திரத்தாருக்கும் கடந்துவரும். இவர்களின் விடுதலையானது, காலையில், அதாவது, உயிர்த்தெழுதலின் காலையில், அதாவது ஆயிரவருடத்தின் காலைவேளையில் சம்பவிக்கும்.

(4) சபையைக் கடந்துபோகுதலுக்குப்பிற்பாடு தொடரும், "கொழுத்த பதார்த்தங்களின் மாபெரும் விருந்தையும்" நாம் நினைவுகூர்ந்து எதிர்பார்க்கின்றோம். அதாவது, கடந்துபோகப்பட்டவர்கள் தங்கள் கர்த்தரோடு சேர்ந்து அவருடைய பரலோக இராஜ்யத்தில் மாபெரும் நிஜமான தீர்க்கதரிசியாகவும், பூமி முழுவதற்கும் ஆசாரியராகவும், நீதிபதியாகவும்,

மத்தியஸ்தராகவும், இராஜாவாகவும் இருந்து, தற்காலத்தில் தாங்கள் பங்கடைவதற்கென அவர் அனுமதித்ததும் மற்றும் தங்களைப் பாத்திரவான்களாக்குவதற்கெனத் தங்களுக்குத் தரிப்பிக்கப்பட்டதுமான அவருடைய அதே இரத்தத்தின் புண்ணியத்தின் (தகுதியின்) மூலம் இவர்கள் மனுக்குலத்தைச் சீர்தூக்கி ஆசீர்வதிக்கப்போகும் காரியங்களையும் நாம் நினைவுகூர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

இந்த நினைவுகூருதலிலிருந்து நாம் மாபெரும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், மேற்பார்த்த அவ்விஷயங்களைத் தனித்தனியேயும், தெளிவாயும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

"தேவனுடைய ஆட்டுக்குட்டியென" இயேசுவை நாம் பார்க்கும்போது, அவர் கறைதிரையற்றவர் — "பரிசுத்தர், குற்றமற்றவர், மாசில்லாதவர், பாவிகளுக்கு விலகினவர், என்று அறிந்துகொள்கின்றோம். (எபிரெயர் 7:26) அவர் எப்படி, "ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்" என்றும், எப்படி "மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்" என்றும், நாம் அறிந்துகொள்கின்றோம் (அப்போஸ்தலர் 8:32). தம்மை அழிக்க நோக்கம் கொண்டிருப்பவர்களை இயேசு தமது பேச்சினாலேயே எதிர்த்திருக்க முடியும். எந்த மனுஷனும் அவரிடத்திலிருந்து அவருடைய ஜீவனை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அவர்தாமே விரும்பி முன்வந்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்றும் உள்ள காரியங்களை நமக்கு உறுதிபடுத்திக் காட்டியுள்ளார். இயேசு, பிதாவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கெனத் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லை. ஏனெனில் நீதியானது, பலிச்செலுத்த வேண்டுமென்று கேட்கவில்லை. மாறாக இயேசு, பிதாவின் சித்தத்திற்கு இசைவாக, "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச்செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று கூறி தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார் (சங்கீதம் 40:8). இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தமது பலியின் புண்ணியம் முதலாவது, தமது பின்னடியார்களுக்கான நன்மைக்காகவும், பின்னர் சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பதற்காகவும் உதவும் என்பது தெய்வீகத் திட்டமாக இருப்பதை முன்னறிந்திருந்த நிலையில், நமது மீட்பர் தம்மை தப்புவித்துக்கொள்ளாமல், தம்மை மனபூர்வமாய் ஒப்புக்கொடுத்ததினிமித்தம் கிறிஸ்தவ விசுவாசி அதிகமாய்க் களிகூரக்கடவன். ஆகவே, பிட்கப்பட்ட புளிப்பில்லாத அப்பத்தில் நாம் பங்குகொள்ளும்போது, தேவனுடைய ஏற்றவேளையில் மனுக்குலம் முழுவதற்குமான ஈடுபலியாக தம்மையே ஒப்புக்கொடுத்தவரின் தூய்மையையும், பாவமற்ற தன்மையையும் நாம் நினைவுகூருகின்றோம். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கையில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுக் காணப்படும் நமது இனத்தை, தெய்வீகப் பிரமாணத்தை மீறாமல் ஜீவனுக்குள் சீர்ப்பொருந்துவதற்கு இயேசுவின் மரணம் அவசியமாய் இருப்பதை அவருடைய சிந்தப்பட்ட இரத்தம் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இங்குச் சற்று நேரம் — கர்த்தராகிய இயேசு கிறஸ்துவின் அன்பை மாத்திரமல்லாமல், இத்திட்டத்தைத் திட்டமிட்ட பிதாவின் அன்பையும் மற்றும் இப்படியாக மாதிரியாக்கப்பட்ட அவருடைய நீதியையும் மற்றும் இப்படியான ஏற்பாடு செய்வதிலுள்ள அவருடைய ஞானத்தையும் நம்முடைய இருதயங்களில் நாம் நிதானித்து உணர முற்படுகின்றோம்; இன்னுமாக, இந்த ஏற்பாடுகளின் சகல மகிமையான அம்சங்களும் மற்றும் நாம் நினைவுகூரும் அனைத்து வாக்குத்தத்தங்களும் முழுமையாய் நிறைவேறும்போது விளங்கப்போகும் தேவனுடைய வல்லமையையும் நமது விசுவாசமானது கிரகித்துக்கொள்ள வேண்டும்.

முதலாம் கருத்துபோன்று, இரண்டாம் கருத்தும் நமக்கு முக்கியமானதாய் உள்ளது. மீட்பருடைய பலி மூலம் கடந்துவரும் முதல் ஆசீர்வாதமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் கேட்கின்ற செவிகளையுடையவர்களுக்கும், ஏற்றுக்கொள்ளத்தக்கதான இருதயமுடையவர்களுக்கும் அருளப்பட்டுள்ளது. இந்த ஆசீர்வாதமானது, மிகவும் பிரமிக்கத்தக்கதாகும். மேலும் இந்த ஆசீர்வாதமானது, பாவத்திலிருந்து திரும்பி விசுவாசம் மூலம் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, முழு அர்ப்பணிப்புடன் தங்களுடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம் என்று வாக்களிக்கும் மனுக்குலத்தின் மத்தியிலுள்ள சிலருக்கு இன்னும் அதிகமான ஆசீர்வாதத்திற்குள் வழி நடத்துகின்றது. இவர்கள் அனைவருக்கும் — இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்துகொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை நிறைவடைவது வரையிலும் — இவர்கள் மாம்சத்தில் அவரோடுகூடப்பாடுபட்டு, இப்பொழுது அவரோடுகூட ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலிலும், பின்னர் உயிர்த்தெழுதலின் மூலம் ஆவிக்குரிய தளத்தில் ஏற்படும் பிறப்பிலும் பங்கடையத்தக்கதாக, இவர்களுடைய பலிகள் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கதாக மீட்பர் தம்முடைய பலியின் புண்ணியத்தை இவர்கள்மேல்

தரித்திடுவார். இவ்விதமாக தேவனுக்கும், மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தராக அவர் தம் ஆயிரவருட இராஜ்யத்தில் காணப்படுகையில், இவர்கள் அவருடைய மகிமையடைந்த "அங்கங்களாக" அவரோடுகூடக் காணப்படுவார்கள். இங்கு மனுஷர் என்று குறிப்பிடப்படும் வார்த்தையானது, ஆவிக்குரிய தளத்தில் பரிசுத்த ஆவியினால், புதிய சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கப்படாத அனைவரையும் உள்ளடக்குகின்றது.

நாம் அப்பத்தில் பங்கெடுக்கும் காரியமானது, மனுஷனாகிய இயேசுவின் மாம்சீக பூரணத்திலுள்ள நம்முடைய பங்கெடுத்தலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. விசுவாசத்தின் வாயிலாகவே நாம் அவருடைய பூரணத்தில் பங்கடைகிறோமே ஒழிய நிஜமாய் அல்ல. அவர் நமக்கு மனித பூரணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை; மாறாக நாம் ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போம் என்று தேவனுக்கு உடன்படிக்கைப் பண்ணியுள்ள நம்முடைய மாம்சீக சரீரங்களின் பூரணமற்றத் தன்மைகளும், குறைகளும் தெய்வீகப் பார்வைக்கு முன் மூடப்பட்டுக் காணப்படத்தக்கதாக இயேசுவின் நீதியும், அவருடைய பூரணமும் நமக்குத் தரிக்கப்பட்டதாக மாத்திரமே உள்ளது.

மாபெரும் பரிந்து பேசுபவராக, நமக்குக் காணப்படும் நம் மீட்பரானவர், நம்முடைய பலியின் மீது, தமது பலியினுடைய புண்ணியத்தை (தகுதியை) தரிப்பிக்கும்போது, பிதாவானவர் அதை ஏற்றுக்கொண்டு, பலிச்செலுத்தும் அந்த நபரைக் கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குரிய புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கின்றார். நாம் உடனடியாக புதிய சுபாவத்தில் பூரணமடையாததாலும், அழியக்கூடிய மாம்சத்திலேயே இன்னமும் காணப்படுவதினாலும், பிதாவானவர் நம்மை தத்தெடுத்ததாக — நீதிமானாக்கப்பட்ட நம்முடைய மாம்ச நிலையை, அதன் சகல அம்சங்களுடனும் தத்தெடுத்ததாக ஒரு கோணத்தில் சொல்லலாம்.

யார் இப்படியாக கிறிஸ்துவின் புண்ணித்தில் பங்கெடுத்துள்ளார்களோ மற்றும் யாருடைய பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ, அப்படியானவர்கள் மாத்திரமே, அவர்கள் பண்ணியுள்ள பலியின் உடன்படிக்கைக்குப் பொருத்தமாக அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணவும், தினந்தோறும் அவருடைய மரணத்திற்குள்ளாக மூழ்கவும் வேண்டுமெனக் கட்டளைப் பெற்றுள்ளனர்.

## புதிய உடன்படிக்கைக்கான என்னுடைய பாத்திரம்

பாத்திரம் நம்முடையதாயிராமல், கர்த்தருடையதாய் இருக்கின்றது. இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்படும் பலி அல்லது ஜீவன் நம்முடையதாயிராமல், மீட்பருடையதாயிருக்கின்றது. அதைப் பருகுவதும், அதில் பங்கெடுப்பதற்கும் மாத்திரமே நமக்கான சிலாக்கியமாய் இருக்கின்றது. தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் இடையிலான மற்றும் இஸ்ரயேலர்கள் வழியாக சகல மனுக்குலத்திற்மான புதிய உடன்படிக்கையானது, நமக்கு வாய்ப்பு அளிக்கப்படாமலேயே, இயேசுவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டிருக்க முடியும். கிறிஸ்துவின் பாடுகளும், மரணமுமாகிய பாத்திரத்தில் பங்குகொள்வதற்கென நமக்கருளப்பட்டுள்ள சிலாக்கியமானது, கிறிஸ்துவின் மரணமும், பாடுகளும் போதுமானதாய் இல்லையென்றோ அல்லது நம்மால் எதையாகிலும் கூட்டிச்சேர்க்கக்கூடும் என்றோ சுட்டிக்காட்டுவதில்லை. மாறாக அது தேவனுடைய தயவை விவரிக்கின்றது. அதாவது, ஒருவேளை நமக்கும் அவருடைய ஆவி காணப்படுமாயின் நம்மையும் ஏற்றுக்கொண்டு, நமது கர்த்தரும், இரட்சகருமானவருடன் நம்மை உடன்சுதந்தரர்களாக ஆக்க தேவன் சித்தமுள்ளவராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. கிறிஸ்துவைப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு — சிறிய அம்சங்களைக்கூட விட்டுவிடாமல் நிறைவேற்றுவதற்கு மற்றும் மரணம்வரையிலும் நிறைவேற்றுவதற்கு அவரை இயக்கின வண்ணமாக அவருக்குள் காணப்பட்ட ஆவி, பயபக்தியின் ஆவியாகும். இதே ஆவிதான், இன்று கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கங்களாக, அவருடைய சரீரமாக, பரலோக மகிமைக்குரிய அவருடைய சபையாக பிதா ஏற்றுக்கொள்ளும் அனைவரிடமும் காணப்பட வேண்டும். ஆகவேதான் மீட்பர் தம்மோடுகூட, தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அனைவரும் சுயத்தை வெறுத்தல் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துதல் என்னும் தம்முடைய பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும் என்றும், தம்முடைய மரணத்திற்குள்ளான ஸ்நானம் பண்ணவேண்டும் என்றும் இவ்விஷயங்களைக்குறித்து திட்டவட்டமாய்த் தெரிவித்துள்ளார்.

இக்காரியங்களைக்குறித்துதான் பரிசுத்தவானாகிய பவுலும் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, நமது கர்த்தர்தான் வானத்திலிருந்திறங்கி வந்த மெய்யான அப்பமாக இருக்கின்றார் என்றும், இந்த ஒரே அப்பத்தில் நாம் பாகங்களாக இருப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும், இந்த ஒரே அப்பம்தான் இறுதியில் ஆயிரவருட யுகத்தின்போது, உலகத்திற்கான ஜீவ அப்பமாகக் காணப்படும் என்றும் சுட்டிக்காட்டுகின்றார். நாம் கிறிஸ்துவில் பங்கெடுப்பது

மாத்திரமல்லாமல், பிதாவின் திட்டத்தின்படி அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாம், பெரிய அப்பத்தில், அதாவது திரளான கிறிஸ்துக்களில் நமது கர்த்தரோடுகூட அங்கங்களாகவும் ஆகின்றோம். ஆகவேதான் நாம் ஒன்றுக்கூடி நினைவுகூருதலை அநுசரிக்கும் வண்ணமாக இந்த அப்பத்தைப் பிட்டுக்கொள்வதின் மூலம், நாம் நம்முடைய கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்தை மாத்திரம் அடையாளம் காட்டாமல், சபையின் பிட்கப்படுதலையும் மற்றும் அந்தச் சபையின் அங்கத்தினர்களென நம்முடைய சொந்த பிட்கப்படுதலையும் அல்லது மரித்துக்கொண்டே இருப்பதையும்கூட அடையாளம் காட்டுகின்றோம். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16-17).

திராட்சப்பழரசமுடைய பாத்திரமானது, நமது கர்த்தருடைய பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றதாயிருக்கின்றது. பாத்திரம் இந்த அர்த்தத்தை மாத்திரம் உடையதாய் இராமல், நாம் அவருடைய சீஷர்களானபோது, அவருடைய பாத்திரத்தில் பங்கடைவதற்கான அவருடைய அழைப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது. நமக்குப் பாத்திரம் என்பது, நாம் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மரணம்வரையிலும் சுயத்தைப் பலிச்செலுத்தும் விஷயத்தில் உண்மையாய் இருப்போமென்பதைக் குறிக்கின்றதாயிருக்கின்றது. "(நமக்கு அருளப்பட்டதான கற்பனைப்பண்ணிப் பார்க்கமுடியாத மா தயவுக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லி) கடவுளைப்போற்றி திருவிருந்து கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலின் பங்குகொள்ளுதல் அல்லவா!" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). பாத்திரம் நமது கர்த்தருடைய பலியையும், உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே இயேசுவோடு நம்மையும் முன்னறிந்திருந்த பிதாவினால், ஏற்பாடு பண்ணிவைக்கப்பட்டிருந்த திட்டத்திற்கு இசைவாகவும், மற்றும் கர்த்தருடைய அழைப்பினிமித்தமாகவும், அவருடைய பலியில் அவரோடுகூட நமக்கு இருக்கும் பங்கையும் அடையாளப்படுத்துகின்றது அல்லவா?

ஓ! இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது, இராப்போஜனத்தின் பாத்திரம் எத்துணை ஆழமான அர்த்தமுடையதாயிருக்கின்றது! ஓ! இப்பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் எவ்வளவாய் இருதயம் ஆராயப்பட வேண்டும்! இந்த இராப்போஜனப் பாத்திரம் பாவத்திலிருந்து திரும்புவதை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், இயேசுவின்மேல் நம்பிக்கை வைப்பதை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், தப்பான காரியங்களுக்குப்பதிலாக சரியான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், பிரதானமாக விசுவாசிகளின் சரீரங்கள் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்படுவதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது; இந்தப் பலிகள் இயேசுவினுடைய புண்ணியம் தரிபிக்கப்படுவதினால், பரிசுத்தமுள்ளவைகள் என்று கருதப்படுகின்றன; மேலும் தேவன் இவ்விதமாய் பலிச்செலுத்துபவர்களைப் புதிய சிருஷ்டிகளாக, புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பித்து, இவர்களுடைய இந்தப் பலிகளை ஏற்றுக்கொள்கின்றார்! (ரோமர் 12:1)

யாரொருவர் இவைகளின் அர்த்தம் அனைத்தையும் அறிந்திருந்தபோதிலும், பயபக்தி இல்லாமலும், சர்வ சாதாரணமாகவும், இந்த அடையாளமான மாம்சத்திலும், அடையாளமான இரத்தத்திலும் பங்குகொள்கின்றாரோ அவர் தன் மீதே ஆக்கினையை வருவித்துக்கொள்கின்றார் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியிருக்கும் விஷயத்தில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த இரத்தம் பார்க்கப்படும் கண்ணோட்டம் குறித்துதான் அப்போஸ்தலர், எபிரெயர் 10:29-ஆம் வசனத்தில் பேசியுள்ளார். தங்களைப் பரிசுத்தம்பண்ணின இரத்தத்தை சாதாரணமாய் எண்ணும் சிலரைக்குறித்து — இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமக்கு இந்தப் பரம அழைப்பைக் கொடுத்திட்டதான கிருபையின் ஆவியை அசட்டைப்பண்ணும் சிலரைக்குறித்து அப்போஸ்தலன் பேசுகின்றார். இப்படிப்பட்டவர்களுக்குத் தேவன் இரண்டாம் மரணத்தை ஏற்பாடு பண்ணியுள்ளார் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். தேவனிடம் உண்மையான அர்ப்பணிப்புப் பண்ணாமலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ள உண்மையான தேவனுடைய கிருபையையும், உண்மையான சிலாக்கியத்தையும், ஒருபோதும் புரிந்துகொள்ளாமலும், சபையில் அங்கங்களாகக் காணப்படுபவர்கள், இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரமாயிருப்பார்கள் என அப்போஸ்தலர் இவ்வசனத்தில் குறிப்பிடுவதாக நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக, இவ்வசனத்தில் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுபவர்கள், ஒருகாலத்தில் இயேசுவின் மாம்சம் மற்றும் இரத்தம்குறித்த விஷயங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டவர்களாக இருந்தார்கள்; இவர்கள் ஒருமுறை பிரகாசிக்கப்பட்டவர்கள்; இவர்கள் தேவனிடத்திற்குக் கிட்டிச்சேருவதற்கென்று விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசம் காரணமாக நீதிமான்களாக்கப்பட்டதோடல்லாமல், இந்த விசுவாசம் மூலமான

நீதிமானாக்கப்படுதலின் காரணமாக இவர்கள் பரிசுத்தமுமாக்கப்படுதல் நிலைக்குக் கடந்துபோய், தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்களுமாய் இருந்தார்கள். தங்களை அர்ப்பணம் பண்ணுகையில், "கிறிஸ்துவின் பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கு" ஒப்புக்கொண்டபோது, தங்களைப் பரிசுத்த ஆவியின் மூலம் ஜெநிப்பித்து, தங்களைப் பரிசுத்தம்பண்ணின (நாம் நினைவுகூரும் பாத்திரத்தை) உடன்படிக்கையின் இரத்தத்தைப் பிற்காலங்களில் சாதாரணமாய் எண்ணினவர்களைக் குறித்தே இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே...

சுவிசேஷத்தின் தற்கால அழைப்பினுடைய நோக்கத்திற்கு இசைவாகவும், தேவனுடைய சித்தமாகவும், விருப்பமாகவும் காணப்படும் நம்முடைய பரிசுத்தமாக்கப்படும் காரியமானது, நாம் அழைக்கப்பட்டபோது, நடைப்பெறுவதில்லை. நாம் பாவத்திலிருந்து திரும்பும்போதும், நடைபெறுவதில்லை. தேவனுடைய சத்தத்திற்கு நாம் செவிசாய்க்க ஆரம்பிக்கும்போதும், நடைபெறுவதில்லை. மாறாக, இவ்விதமான ஆசீர்வாதங்கள் மற்றும் தேவனுடைய இரக்கத்தின், தாக்கத்தின் காரணமாக நாம் முழுமையான அர்ப்பணிப்பின் நிலைக்கு வரும்பொழுது, அதாவது முழுமையான சீஷத்துவத்தின் நிலைக்கும், முழுமையான சரணடையும் நிலைக்கும் வரும்போதும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், தெய்வீகச் சுபாவம் மற்றும் நம்முடைய கர்த்தரோடுகூட அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்கள் நிலையை அடைவதற்குமென நம்முடைய சகல பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை முழுமையாய் பலிச்செலுத்தும் நிலைக்கும் வரும்போதே நடைபெறுகின்றது. "இப்படிப்பட்டதான கிருபைகளை யாராவது அசட்டைப்பண்ணுவார்களா? என்று கேள்விகள் எழலாம். கர்த்தரோடுகூட உடன் பலி செலுத்துபவர்களாகிய சிலாக்கியத்தை யாராவது உதறித்தள்ளுவார்களோ? என்று கேள்விகள் கேட்கப்படலாம். பாத்திரம் மற்றும் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் தொடர்பான விஷயத்தில், இதனால் உண்டாகும் பலனில் பங்கடைவதற்கான சிலாக்கியத்தை அறிந்தும், யாராவது, "பாத்திரத்தையும்" "மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தைப்" புறக்கணிப்பார்களா? என்றும் கேள்விகள் கேட்கப்படலாம். ஜெநிப்பிக்கப்பட்ட ஆவியை இன்னமும் தக்கவைத்துக்கொள்கிறவர்களும், மகிமை, கனம் மற்றும் அழியாமையாகிய பார்க்க முடியாதவைகளை இன்னும் விசுவாசத்தினால் உணர்ந்துகொண்டிருப்பவர்களுமாய்க் காணப்படும் எவரும் புறக்கணிக்கவோ, சாதாரணமாக எண்ணவோ, ஏற்க மறுக்கவோ மாட்டார்கள் என்பதே நம்முடைய பதிலாகும். ஒருவேளை ஒருவர் பரம ஈவை ருசிப்பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும் மற்றும் வரவிருக்கிற யுகத்திற்குரிய சிலாக்கியங்களிலும், வல்லமைகளிலும் பங்கடைந்தும் மறுதலித்து பின்வாங்கி போவாரானால், அப்படிப்பட்டவர்களை மீண்டும் புதுப்பிப்பது கூடாதகாரியமாகும்.

நம்மால் இருதயங்களை வாசிக்கமுடியாது. யாரெல்லாம் முதலாம் திரைக்கு அப்பால் பார்த்துள்ளார்கள் மற்றும் யாரெல்லாம் பார்க்கவில்லை என்பது திட்டவட்டமாய் நமக்குத் தெரியாது. யாரெல்லாம், "மரணத்துக்கு ஏதுவான பாவம்" செய்துள்ளார்கள் மற்றும் யாரெல்லாம் செய்யவில்லை என்பது நமக்குத் திட்டவட்டமாய் தெரியாது. நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கக்கூடாது. ஒருவருக்கொருவர் ஜீவியத்தின் போக்கில் வெளிப்படுத்துபவைகளை நாம் ஏற்றுக்கொண்டிட வேண்டும். ஒருவேளை, ஒருவர் தன்னைப் பரிசுத்தம் பண்ணின உடன்படிக்கையின் இரத்தத்தை மறுப்பாரானால், ஒருவேளை இந்த நினைவுகூருதலின் பாத்திரத்தில் கிறிஸ்துவோடு பங்குகொள்ளும் காரியத்தை ஒருவர், தான் அவருடைய மாபெரும் பலியில் பங்குகொள்வதாக எண்ணாமல், ஏதோ சாதாரணமாய்க் காணப்படும் ஒன்றில்தான் பங்குகொண்டதாக எண்ணுவாரானால், அந்நபர் கிறிஸ்துவின் பாத்திரத்தில் பங்காளியாக இருப்பதின் மதிப்பைப் புரிந்துகொள்ளும் அவரது ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலையும், அவரது ஆவிக்குரிய பார்வையையும் இழந்துபோய்விட்டார் என்று வெளியாகுகின்றது. புதிய உடன்படிக்கையானது, இன்னும் கொஞ்சம் காலத்தில் இஸ்ரயேலர்களுக்காகவும், இஸ்ரயேலர்கள் வாயிலாக தெய்வீக நிபந்தனைகளுக்கு இசைவாய் வரவிருக்கும் பூமியின் சகல குடிகளுக்கும் முத்திரையிடப்படும்.

தங்களால் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கமுடிகின்றது என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், மரணம்வரையிலான முழுமையான அர்ப்பணிப்புப் பண்ணியுள்ளோம் என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், ஒரே அப்பத்தில் பிட்டுப் பங்குகொள்வதிலும், கிறிஸ்துவுக்குள்ளான மரணத்தில் ஐக்கியமாகிய ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணுவதிலும் உள்ள அர்த்தத்தை தங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது என்று அறிக்கைப்பண்ணுகிற சிலர், இவைகள் அனைத்தையும் ஒருபோதும் உண்மையாய்ப் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு. இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வாக்குறுதிகளினால் நம்மை வஞ்சித்ததோடல்லாமல், தங்களையும் வஞ்சித்துப் போட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

“அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்” (மத்தேயு 7:16); “அவர்களின் செயல்களைக்கொண்டே அவர்கள் யார் என்று அறிந்துகொள்வீர்கள்” (திருவிவிலியம்) என்ற கர்த்தரின் வார்த்தைகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தங்களைப் பரிசுத்தம்பண்ணப்பட்டவர்கள் என்றும், பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்றும், கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாகிய அர்ப்பணம்பண்ணப்பட்ட பலிச் செலுத்துபவர்கள் என்றும் கூறி, பாடுகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் எனும் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுத்துக்கொண்டு, பரிசுத்தத்தின் ஆவியை/சிந்தையை வெளிப்படுத்தி, ஆவியின் கனிகள் மற்றும் வரங்களின் வளர்ச்சிக்கான அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் என்று நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால், ஒருவேளை இவர்கள் பிற்பாடு உடன்படிக்கையின் இரத்தத்தை மறுப்பவர்களாகவும், கிறிஸ்துவின் பாத்திரத்தில் பங்குகொள்ளும் சிலாக்கியத்தை ஏதோ சாதாரணமான ஒரு காரியம் என்றும், இச்சிலாக்கியம் கிறிஸ்துவின் அங்கங்களுக்கு மாத்திரமே உரியதல்ல என்றும் எண்ணுபவர்களாகவும், ஆவியின் கனிகளைப் பின்னர் வெளிப்படுத்தாதவர்களாகவும், எதிராளியானவனுடைய ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறவர்களாகவும் இருப்பார்களேயானால், இவர்கள் வெளிச்சத்தையும், ஆவியையும் இழந்துவிட்டார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர்கள் வெளியரங்கமாக வன்முறை, களவு, கொலை முதலியவைகளைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. இவர்களிடம் கோபம், பகைமை, துர்க்குணம், பொறாமை, சண்டைச் சச்சரவின் ஆவி வெளிப்பட்டால், இதுவே இவர்கள் கிறிஸ்துவின் ஆவியை இழந்துவிட்டார்கள் என்பதற்கான சான்றுகள் ஆகும். கோபம், பகைமை, துர்க்குணம், பொறாமை, சண்டைச் சச்சரவின் ஆவி ஆகியவைகளைப் பரிசுத்த.பவுல் அடிகளார் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்று குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட அங்கமாகிய ஒருவர், சில சந்தர்ப்பங்களில் பெலவீனத்தால் மேற்கொள்ளப்பட்டு, கோபமடைவது உண்மைதான். ஆனால், அவர் அதற்கென்று துர்க்குணமும், பகைமையையும் தனக்குள் வைத்திருக்கவே மாட்டார். இன்னுமாக, ஒருவேளை அவர் பெலவீனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உடனடியாக தனது பெலவீனத்தை உணர்ந்து, மன்னிப்பிற்காக பரலோக கிருபையின் சிங்காசனத்திற்குப் போவதோடல்லாமல், தன்னுடைய செயல்பாடுகளினால் பாதிக்கப்பட்ட, காயப்பட்ட நபரிடத்திலும் சென்று குற்றத்தை மனவருத்தத்தோடு ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கவும் செய்வார். ஆனால், தன்னுடைய ஆவியானது துர்க்குணத்தின் ஆவியாக மாற பெற்றிருப்பவன், தான் தேவனுடைய ஆவியை ஏற்கெனவே இழந்துவிட்டான் என்றும், தான் இரண்டுதரம் மரித்துவிட்டான் என்றும், வேரோடே பிடுங்கப்பட்டுவிட்டான் என்றும் காட்டுகின்றான். இப்படிப்பட்டவர்கள் திராட்சச்செடியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிராமல், முள்களின் குடும்பத்தையே சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

## நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரம்

நாம் நினைவுகூருதலை அநுசரிக்கும்போது, நம்முடைய இருதயங்கள் இயேசுவினுடைய பாடுகளை மாத்திரம் தியானித்தால் போதாது, இன்னுமாக, பலியின் மரணத்திற்கு நேராக அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கும் அவருடைய சரீரத்தின் அங்கங்களுடைய பாடுகளை மாத்திரம் தியானித்தாலும் போதாது. மாறாக, இந்தப் பாத்திரத்தில் நாம் பங்குகொள்வதின் மூலம், நாம் சரியான மகிழ்ச்சியின் ஆவியையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசு, ஆவியில் களிகூர்ந்தார் என்று நாம் வாசிக்கின்றோம். இன்னுமாக, பாத்திரத்தில் பானம்பண்ணும் நம் அனைவரையும், அப்போஸ்தலர், “கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்; மீண்டும் சொல்லுகின்றேன், சந்தோஷமாயிருங்கள்” என்று வலியுறுத்துகின்றார். கிறிஸ்தவனுடைய ஜீவியம் என்பது, துக்கமானதுமல்ல, மகிழ்ச்சியற்றதுமல்ல, மாறாக மிகுந்த சந்தோஷகரமானதாகும். “உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து”— “அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது” என்று அறிந்து — கிறிஸ்தவனால், உபத்திரவங்களிலும் சந்தோஷமாயிருக்க முடியும். (ரோமர் 5:3-4; 2 கொரிந்தியர் 4:17) இப்படியாக, நாம் பாடுகள் மற்றும் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாகிய (மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவதற்கான அடையாளமாகிய) பாடுகள் மற்றும் மகிழ்ச்சியின் பாத்திரத்தில் நாம் பானம் பண்ணுகின்றோம்; இந்தச் சந்தோஷத்தை நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்பொழுது, அவருடைய அங்கங்களாக அவருடைய மணவாட்டி வகுப்பாராக நாம் அவரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படும்பொழுது பெற்றுக்கொள்வோம். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும் விஷயத்தில் நாம் வைராக்கியத்துடனும், தைரியத்துடனும் இருப்பதற்கு ஆவியில் இந்த மகிழ்ச்சி என்பது அவசியமாய்

உள்ளது. பரிசுத்தவானாகிய பேதுரு, சீலாவுடன்கூடச் சிறைச்சாலையில் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையிலும், முதுகுக் காயங்களினால் காணப்பட்ட நிலையிலும், இந்த மகிழ்ச்சியின் ஆவி அவர்களுக்குள் கிரியைசெய்து, அவர்களைத் தேவனைத் துதித்துப்பாடச் செய்ததைக் கவனியுங்கள். இது இடுக்கமான வழியில் பிரயாணம்பண்ணும் கிறிஸ்துவின் உண்மையான அனைத்துப் பின்னடியார்களுக்கும் பொருந்தக்கூடியதாய் உள்ளது. ஒவ்வொரு முள்ளினாலும் உண்டாகும் காயங்கள் மத்தியிலும், கிறிஸ்துவினிமித்தம் கொடிதான வார்த்தைகளெனும் கூர்மையான ஒவ்வொரு அம்புகள் நம்மைத் தாக்கி உண்டுபண்ணும் வலியின் மத்தியிலும், சொல்லிமுடியாத சந்தோஷம் நமக்குக் காணப்படும்.

## புதிய உடன்படிக்கையின் சந்தோஷம்

நாம் பங்கடைவதற்கென நமது கர்த்தர் வாய்ப்பு அருளின புதிய உடன்படிக்கைக்கான இரத்தத்தினுடைய அர்த்தத்தை, முக்கியத்துவத்தை நாம் படிப்படியாக, அதிகமதிகமாக, முழுமையாகப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கையில், இன்னும் அதிகமான சந்தோஷம் நமக்குரியதாய் இருக்கின்றது. அவர் தமது புண்ணியத்தை நமக்குத் தரிப்பித்து, நம்மையும் அவரோடுகூட மரிக்கும்படிக்குச் செய்கின்றார். இவ்விதமாக, புதிய உடன்படிக்கைக்கான இரத்தத்தை அவருடைய அங்கங்களாகிய நம் மூலமாக சென்றடையச் செய்கின்றார். ஆனால், இது கிறிஸ்துவுடன் தங்களை மரிக்க ஒப்புக்கொடுக்கின்றோம் என்று வாக்களிக்கிறவர்களுக்கு மாத்திரமே அருளப்படுகின்றது; என்றாலும்கூட, அது நமக்கு (உரியதாய்) அளிக்கப்படவில்லை, மாறாக நம்முடைய பலிகளை நமக்குப் பரிந்துபேசுபவராகக் காணப்படும் நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியன், பிதாவின் நாமத்தினால் ஏற்றுக்கொண்டு, பிதாவின் நாமத்திற்கு ஒப்புக்கொடுத்து, புத்திரசுவிகாரத்தின் ஆவியை நமக்கு அருளத்தக்கதாக, நம்முடைய பலிகளைப் பாத்திரமானவைகள் ஆக்கத்தக்கதாக அவருடைய புண்ணியம் நமக்குத் தரிப்பிக்க மாத்திரமே பட்டுள்ளது அல்லது கடனாய் மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

நமது கர்த்தர் இயேசுவுக்கு மாத்திரமே உரியதான இந்தப் பூமிக்குரிய உரிமைகள், அவருடைய விருப்பத்தின்படியே, புதிய உடன்படிக்கையின் வாயிலாக, மாம்சீக இஸ்ரயேலர்களிடம் சென்றுசேரும். (எரேமியா 31:31). "அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:31). மாம்சீக இஸ்ரயேலர்கள்மீது வரப்போகும் ஆசீர்வாதத்தினிமித்தமும் மற்றும் அந்த ஆசீர்வாதங்களில் முழு மனுக்குலமும் கூடப் பங்கடைவதற்கான வாய்ப்பினை அடையப்போவதினிமித்தமும் நாம் மகிழ்ச்சிக் கொள்கின்றோம். சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பத்தில் மாம்சீக இஸ்ரயேலர்களுடைய தள்ளிவிடுதல், நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஆயத்தமாய் இருக்குமானால், நாம் ஏற்றுக்கொள்ளப்படும் காரியமானது, அவர்களுக்கு நித்திய இழப்பாய் இராமல், அவர்கள் — புதிய உடன்படிக்கைக்கு முழுமையாய்த் தகுதியாக்கப்பட்ட ஊழியர்களின் மற்றும் மாபெரும் மத்தியஸ்தரின் மற்றும் மாபெரும் பிரதான ஆசாரியரின் அங்கங்களாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் ஆசீர்வாதத்தின் வாயிலாக, நன்மை பெற்றுக்கொள்வார்கள் என்பதில் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம் (2 கொரிந்தியர் 3:6). இவ்விதமாக, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கே எனத் தேவனால் வைக்கப்பட்டிருந்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் இறுதியில் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு அளிக்கப்படும். இவைகள் அனைத்தும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினாலும், அதன் நிழலான மத்தியஸ்தராகிய மோசேயினாலும் நிழலாய்க் காட்டப்பட்டது. இந்த மோசே தேவனுடைய கிறிஸ்துவுக்கும், மாபெரும் மத்தியஸ்தருக்கும் நிழலாய் இருக்கின்றார். இந்த மாபெரும் மத்தியஸ்தரின் தலையாக இயேசுவும், அங்கங்களாக அவருடைய உண்மையுள்ள பின்னடியார்களாகிய ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களும் இருக்கின்றார்கள்.

ஆகவே, வருடங்கள் செல்ல செல்ல, மனித புத்திக்கு எட்டாத அளவுக்கு நீளமும், ஆழமும், அகலமும், உயரமும் கொண்டுள்ள எல்லா அன்புக்கும்மேலான தெய்வீக அன்பில் வெளிப்படும் இந்த மகிமையான நினைவுகூருதலை உணர்ந்துகொள்வோமாக.

## பண்டிகையை ஆசரிப்போமாக

இவ்விஷயங்களையெல்லாம் உணர்ந்துகொண்டிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள், "யூதர்களைப்போன்று நிழலை நினைவுகூராமல், பரிசுத்த.பவுல் 'நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்' என்று கூறியுள்ளதைப்போன்று, "என்னை நினைவுகூரும்படிக்கு இதைச்

செய்யுங்கள்" என்ற போதகரின் அழைப்புக்குச் செவிசாய்த்து, அவருடைய நாமத்தில், அவருடைய அங்கங்களாக ஒன்றுகூடிடுவதற்கு நாம் வலியுறுத்துகின்றோம். இதுவரையிலும் மகிமையில்லாததாய்க் காணப்படும் தமது சரீரத்தைக் கர்த்தர் தமது வருகையின்போது, தமது மகிமையான சரீரமாய் உண்மையில் மாற்றும்வரையிலும் இதை அநுசரிக்க வேண்டும்.

அருமையான சகோதர சகோதரிகள் சிறு கூட்டங்களாகக் கூடமுடியும் பட்சத்தில் கூடவேண்டும் என்றும், இப்படிக் கூடுவதற்கு வாய்ப்பில்லை என்னும் பட்சத்தில் கர்த்தரோடுகூட தனிமையில் இதை அநுசரிக்க வேண்டும் என்றும் நாம் ஆலோசனை வழங்குகின்றோம். இப்படியாக, அநுசரிக்கும்போது, பெருந்திரளாய்க் கூடி அநுசரிப்பதற்கு நாம் பரிந்துரைக்காமல், ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும் கிறிஸ்துவின் சரீரமெனத் தனி கூடுகையாகக்கூடி அநுசரிக்க நாம் பரிந்துரைக்கின்றோம். "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 18:20).

புரூக்கிலின் டேபர்நாக்கிளினுடைய (Brooklyn Tabernacle) சபையார் புரூக்கிளினுள்ள பின்வரும் முகவரியில் கூடிக்கொள்வார்கள்: எண்: 13-17, Hicks Street, Brooklyn. இதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையன்று ஞானஸ்நான ஆராதனை நடைப்பெறும். இதில் பங்கெடுக்க விரும்புகின்றவர்கள் அனைவரும், கூடுமானமட்டும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவும். இந்த ஞானஸ்நான ஆராதனையில், அருகாமையிலுள்ள நண்பர்கள் (சகோதர சகோதரிகள்) கலந்துகொள்ளலாம். ஆனால் நினைவுகூருதல் ஆராதனையில் பங்குகொள்வதற்கான அழைப்பு எதுவும் தொலைவில் இருக்கும் நண்பர்களுக்குக் (சகோதர சகோதரிகளுக்குக்) கொடுக்கப்படுவதில்லை. ஆனால் தங்கள் குடும்பங்களில் சாதகமான வாய்ப்புகளைப் பெற்றிராத தனி நபர்கள்/சகோதர சகோதரிகள், எவ்விடத்திலுமுள்ள சபையாராலும் வரவேற்கப்படுகின்றனர்.

*****

**R 4593**

# "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"
## மத்தேயு 10:1-15

"இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்." - **மத்தேயு 10:8**

இயேசு ஒரு வருடத்திற்கு மேலாக பிரசங்கித்துக் கொண்டு இருக்கும்போது, தம்முடைய பின்னடியார்களில் பன்னிரண்டு பேரைத் தம்முடைய பிரதிநிதிகளாக, அனுப்பப்படும் அப்போஸ்தலர்களாக நியமித்தார். அவர்களை இருவர், இருவராக யூதேயா முழுவதும் அனுப்பி வைத்தார். அவர்கள் பிதாவினால் (இன்னமும்) நியமிக்கப்படவில்லை. அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவியை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை; மற்றும் இரண்டு வருடங்களுக்குப் பிற்பாடு பெந்தெகொஸ்தே நாள் வரும் வரையிலும், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்குப் பரிசுத்த ஆவி இன்னமும் வழங்கப்படவில்லை. ஏனெனில், அதுவரையிலும் இயேசு மகிமையடையவில்லை (யோவான் 7:39). ஆனால் அவருடைய ஞானஸ்நானத்தின் போது, அவருக்கு அளவில்லாமல் பரிசுத்த ஆவி வழங்கப்பட்டபடியினால், அப்போஸ்தலர்கள் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் அவர்களுக்குத் தம்முடைய சொந்த விசேஷமான வல்லமைகளையே இயேசு கொடுத்தார். ஆனால், அவரைப்போன்று, அவர்களுக்கும் சரீர உபாதைகளைச் சொஸ்தப்படுத்துவது மாத்திரம் பிரதானமானவைகளாக இருக்கவில்லை. கர்த்தர் இயேசுதான் இராஜா என்றும், நீண்டகாலம் எதிர்ப்பார்க்கப்பட்ட மேசியா என்றும் அப்போஸ்தலர்கள் பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது; மற்றும் தங்களுடைய தேசம் தொடர்புடையதான அவருடைய மத்தியஸ்த இராஜ்யத்தின் ஸ்தாபிப்பு அண்மையில் காணப்படுகின்றது என ஜனங்களுக்குச் சொல்ல வேண்டியிருந்தது. இந்தச் செய்தியானது, அனைத்து யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பிற்கு இசைவாகவும் இருந்தது. ஏனெனில் இஸ்ரயேலர்கள் மூலம் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக, இஸ்ரயேலர்கள் நூற்றாண்டுகளாக காத்துக் கொண்டிருந்தனர். "பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற அறிவிப்பின் மீது கவனத்தை ஈர்ப்பதற்கே இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன (மத்தேயு 3:2). யோவான் ஸ்நானனுடைய செய்திக்கு இசைவான கர்த்தருடைய செய்தியானது, "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரையும் விழிக்கப் பண்ணுவதற்கும் மற்றும் இயேசுவை இராஜாவென அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குமேயாகும். அப்போஸ்தலர்களுடைய செய்தி புறஜாதிகளுக்கோ அல்லது தங்களது அயலார்களாயிருக்கும் கலப்பின ஜனங்களாகிய சமாரியர்களுக்குக்கூட அல்ல என்றும் அப்போஸ்தலர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். இராஜ்யத்திலும், அதன் மகிமைகளிலும் பங்கடையத்தக்கதாக யூதர்கள் மாத்திரமே தங்களுடைய இருதயங்களையும், மனங்களையும் ஆயத்தமாக்கிக்கொள்ள உண்மையில் அழைக்கப்பட்டவர்கள் ஆவர். "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாருக்கு" மாத்திரமே அப்போஸ்தலர்களின் செய்தி காணப்பட்டது (வசனம் 6).

அப்போஸ்தலர்கள் தங்களுடைய பிரயாணத்திற்கு எவ்விதமான முன்னேற்பாடும் செய்ய வேண்டாம், அதாவது பணமோ, அதிகபடியான வஸ்திரங்களையோ கொண்டிருக்க வேண்டாம் என்று கூறப்பட்டிருந்தார்கள். அவர்களை அனுப்பின ஆண்டவர் மீது, அவர்கள் முழுமையாய்ச் சார்ந்திருக்க வேண்டும் என்பது தொடர்பான படிப்பினையை அவர்கள் கற்க வேண்டியிருந்தது. அவர்கள் வீடுகள்தோறும் தேவைகளுக்காகக் கேட்கும் பிச்சைக்காரர்களாக இருக்கக்கூடாது. மாறாக, அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஊழியம் மற்றும் தேவனுக்கான வேலை மற்றும் மேசியாவின் ஸ்தானாதிபதிகளாகிய தங்களைப் பற்றியதுமான மரியாதையை உணர்ந்தவர்களாக, ஒவ்வொரு பட்டணத்திலும் மிகவும் பாத்திரமானவர்களாகவும், மிகவும் பரிசுத்தமாகவும், மிகவும் மாசற்ற ஜனங்களாக இருப்பவர்கள் யார் என்று விசாரித்து அறிந்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்படிப்பட்டவர்களே ஒருவேளை ஐசுவரியவான்களாகவோ (அ) தரித்திரவான்களாகவோ இருப்பினும், இவர்களே விசேஷமாக அப்போஸ்தலர்களுடைய செய்தியில் நாட்டம் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். மேலும், அப்போஸ்தலர்களின் செய்தியை ஏற்றுக்கொண்ட இப்படிப்பட்டவர்கள், அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்ட இராஜ்யத்திற்குரிய இராஜாவினுடைய பிரதிநிதிகளைப்போல அப்போஸ்தலர்களை நடத்துவதிலும் உண்மையில் சந்தோஷம் கொள்வார்கள். இப்படியாக அடுத்த ஊருக்குப் போக அப்போஸ்தலர்கள் ஆயத்தப்படும்வரையிலும், அவர்கள்

காணப்படும் ஊரில், விருந்தாளிகள்போல் தங்க வேண்டும். ஒரு வீட்டிற்குள் அப்போஸ்தலர்கள் பிரவேசிக்கும் போது, அவர்கள் வீட்டாரை மரியாதையான விதத்தில் வாழ்த்தி அவர்களுக்கான அழைப்பின் நோக்கம் குறித்து அறிவுரைக் கூற வேண்டும். ஒருவேளை சமாதானத்துடனும், இருதயப்பூர்வமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்போஸ்தலர்களுடைய ஆசீர்வாதம், அந்த வீட்டில் தங்கும். இப்படியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில், அப்போஸ்தலர்கள் தங்களது நம்பிக்கையையும், அமைதியையும் இழந்துவிடக்கூடாது. மாறாக, அவர்கள் கடந்துப் போய்ச் செய்தியை ஏற்றுக்கொள்வதற்கும், அச்செய்திக்கான பிரதிநிதிகள் தாங்களென ஏற்றுக்கொள்வதற்கும் அதிகம் பாத்திரமாய் இருக்கும் இன்னொருவரைத் தேட வேண்டும். அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொள்கின்றவர்கள் ஓர் ஆசீர்வாதம் அடைவார்கள். அப்போஸ்தலர்களையும், அவர்களது செய்தியையும் மறுக்கின்றவர்கள் ஒரு மாபெரும் சிலாக்கியத்தை இழந்துப் போய்விடுவார்கள்.

## "இராஜ்யத்தின் சுவிசேஷம்"

உண்மையில் இராஜ்யம் இன்னமும் வராதிருக்க நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது என்று அறிவிப்பது ஏன்? என்றும், கர்த்தருடைய கட்டளைகளின்படி, அக்கட்டளைகளைப் பின்பற்றுபவர்கள் இன்னமும், "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என ஜெபித்தும் வருவது ஏன்? என அநேகர் யோசித்திருக்கக்கூடும். இதைப் புரிந்துக்கொள்வதென்பது, இன்று தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு வரும் வேதாகமத்தின் அநேக காரியங்களைப் புரிந்திட உதவும் திறவுகோலாயிருக்கும். ஆகவே, இக்காரியத்தைக் குறித்துக் கொஞ்சம் நாம் விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது.

இஸ்ரயேலர்கள் மூலமாக, தெய்வீக ஆசீர்வாதம் ஒவ்வொரு ஜாதியாருக்கும் கடந்துச் செல்லத்தக்கதாக, தங்களை மிகவும் பெரியவர்களாக்கும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக, இஸ்ரயேலர்கள் பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். யூத தேசத்திற்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தையும், ஒருவேளை அவர்கள் ஆயத்தமாய் இருக்கும் பட்சத்தில், நிறைவேற்றுவதற்கான தேவனுடைய ஏற்றவேளை வந்துள்ளது என கர்த்தர், தமது அப்போஸ்தலர்கள் மூலம் குறிப்பிட்டார். அவர்கள் ஆயத்தமாய் இருப்பதற்கு, அவர்கள் பரிசுத்தமான ஜனமாகக் காணப்பட வேண்டும். அவர்களுக்கு அறிவுரைக்கூறவும், அவர்களை ஆயத்தப்படுத்துவதற்குமெனப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே மோசேயின் மூலமாக, அவர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இப்பொழுது இயேசுவுக்குள் கொஞ்சம் முன்பு, யோவான் ஸ்நானன், ஜனங்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக்கத்தக்கதாக அவர்களுக்கு மனந்திரும்புதலையும், நியாயப்பிரமாணத்திற்கு இசைவான நிலையில் வருவதையும், சீர்த்திருத்தத்தையும் குறித்துப் பிரசங்கித்தார். அப்போது உலகத்தில் இருக்கும் ஜனங்களிலேயே அவர்கள் மிகவும் பயபக்தியுடைய ஜனங்களாக இருந்தும், அவர்களிலும் சிலர் மாத்திரமே "உத்தம இஸ்ரயேலர்களாக" இருந்தனர்; அதாவது, இருதயத்தில் தேவனுக்கு முழுமையாக அர்ப்பணம் பண்ணினவர்களாகக் காணப்பட்டனர். இதன் காரணமாக முழுத் தேசமும் தேவனுடைய வேலைக்கு ஆயத்தமாய் இருப்பதற்குப்பதிலாக, அவர்களில் சிலரே பரிசுத்தமாய் இருந்தனர், மற்றும் செய்தியையும் ஏற்றுக்கொண்டனர். இயேசுவின் ஊழியத்தினுடைய முடிவில் சுமார் 500 பேர் மாத்திரமே பாத்திரமானவர்களாகக் காணப்பட்டார்கள், மற்றும் திரளான ஜனங்கள், "அவரைச் சிலுவையில் அறையும்!" எனக் கூக்குரலிட்டனர். இதற்குத் தேவ நம்பிக்கையற்ற பிலாத்து, "ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?" என்று வினவினார். ஆகவே, மற்ற ஜனங்களையெல்லாம் ஆசீர்வதிப்பதற்கெனத் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு இஸ்ரயேல் ஆயத்தமற்றுக் காணப்பட்டது.

தேவன் இதை முன்கூட்டியே அறிந்திருந்தார்; மற்றும் சொற்பானவர்கள் மாத்திரம் பாத்திரமாகக் காணப்படுவார்கள் என்றும் தீர்க்கத்தரிசிகள் மூலம் அறிவிக்கவும் செய்தார். "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று இந்தத் தேசத்தாரிடம் நமது கர்த்தர் கூறினார் (மத்தேயு 21:43). மேலும், கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாள் முன்னர் இவர்களிடம், "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர்

ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 23:38, 39).

மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முதலாவதாக அளிக்கப்பட்டிருந்த இராஜ்யத்தின் சிலாக்கியங்கள் (அ) வாய்ப்புகள், பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மாற்றப்பட்டது. மாம்சீக வீட்டாரிலுள்ள "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவருக்கும், ஆவிக்குரிய வீட்டாரில் அங்கமாகும் சிலாக்கியம் அருளப்பட்டது; அதாவது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடைந்து, சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் சேர்க்கப்படும் சிலாக்கியம் அருளப்பட்டது. இந்தச் சபையைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பேதுரு, "நீங்களோ இராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று கூறுகின்றார் (1 பேதுரு 2:9).

ஆவிக்குரிய இஸ்ரயேலில் இடம்பெறுவதற்குப் பாத்திரமான அநேக யூதர்களைத் தெரிந்துக்கொண்ட பிற்பாடு, ஆவிக்குரிய இஸ்ரயேலின் நிறைவடைவது வரையிலும், தேவனுடைய தயவு மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது மீண்டும் வருமென அவர் வாக்குத்தத்தங்கள் அறிவித்துள்ள காலம் வரையிலும், பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்கள், தெய்வீகத் தயவினின்று விலக்கிப் போடப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள். (ரோமர் 11: 25, 26). இதற்கிடையில் "உத்தம இஸ்ரயேலர்களுடைய" ஆவியை உடையவர்களையும், தேவனுக்கு உண்மையாய் இருக்கும் ஆவியைக் கொண்டிருக்கின்றவர்களையும் தேடும்படிக்கு, ஒவ்வொரு தேசத்திற்குக் கர்த்தருடைய உண்மையுள்ள அங்கங்கள் மூலம் அழைப்புச் சென்றது. இப்படியாக மற்றத் தேசத்தாரும் யூதர்களோடு கூட, அந்த ஒரே இராஜ்யத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைச் சூழ்ந்து பலவகையானவர்களும் சேர்ந்துக் காணப்படுகின்றனர்; ஆகவேதான், மில்லியன் கணக்கானவர்களைக் கொண்டுள்ள வெளித்தோற்றமான (அ) பெயரளவிலான சபைகள் காணப்படுகின்றன, மற்றும் இவர்கள் மத்தியில் உண்மையான சபையும் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றனர்.

யூத யுகத்தின் முடிவின்போது, பாத்திரமானவர்கள் காணப்படுகின்றார்களெனப் பார்ப்பதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குமென இயேசு வந்ததுபோன்று, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் செய்வார்; பரிசுத்தவான்களைக் காண்பதற்கென அவர் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்தில் வருவார். பெந்தெகொஸ்தே நாள் முதல், இந்த யுகத்தின் முடிவுவரையிலும், கிறிஸ்துவின் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதான போதுமான எண்ணிக்கையில் பரிசுத்தவான்கள் கண்டுபிடிக்கப்படுவார்களென வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன; உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான வேலையை ஆரம்பிப்பதற்கென, ஸ்தாபிக்கப்படப்போகும் ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில், கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவினுடைய ராணியாகவும், உடன் சுதந்தரராகவும் இருக்கும்படிக்குத் தேவன் திட்டமிட்டுள்ளார். தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யம் உயர்த்தப்பட்ட பின்னர், தேவனுடைய தயவானது, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு மீண்டும் திரும்பும் என்றும், அக்காலத்தில் விளங்கும் புதிய ஒழுங்கின் கீழ் ஆசீர்வதிக்கப்படுவதில் முதலாவது தேசத்தாராக மாம்சீக இஸ்ரயேலர்கள் காணப்படுவார்கள் என்றும், மற்றும் தேவனுக்கு இசைவாக மாறும் இந்த (மாம்சீக இஸ்ரயேல்) ஜனங்கள் மூலம் ஆசீர்வாதம், அனைத்து ஜனங்களுக்கும் கடந்துச் செல்லும் என்றும் ரோமர் 11:25-32 வரையிலான வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயமளிக்கின்றது.

## "சோதோமுக்கு இலகுவாயிருக்கும்"

சோதோம் ஜனங்கள் மிகவும் ஒழுக்கம் கெட்டவர்களாக இருந்தனர்; எனினும் சுவிசேஷத்தைக் கேட்ட பிற்பாடும், அதனை புறக்கணிப்பவர்களைப் பார்க்கிலும், சோதோம் ஜனங்கள் ஆண்டவருடைய கணிப்பில் கொஞ்சமாகவே பொல்லாதவர்களாய் இருந்தார்கள். இந்தக் கோட்பாடானது கப்பர்நகூமுக்கும், நம்முடைய நாட்களில் வாழும் அநேக ஜனங்களுக்கும், அநேக பட்டணங்களுக்கும் கூடப் பொருந்தும். மாபெரும் ஆயிரம் வருஷம் யுகம் அதாவது, நியாயத்தீர்ப்பின் நாளானது நித்திய ஜீவன் (அ) நித்திய மரணத்திற்கான பரீட்சையில் இடம்பெறுவதற்கான வாய்ப்பை முழு உலகத்திற்கும் அளிக்கும்போது, மற்றவர்களைக் காட்டிலும் சோதோம் ஜனங்களுக்கு மிகவும் இலகுவாயிருக்குமென ஆண்டவர் நமக்கு உறுதியளிக்கின்றார். எந்தளவுக்கு ஒருவர் கிறிஸ்துவைப் பற்றின அறிவிற்குள் வந்திருக்கின்றாரோ, அந்தளவுக்கு அவர் பொறுப்பாளியாகவும் இருக்கின்றார். கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் இரட்சிக்கப்படுவதற்கான முழு

வாய்ப்பைப் பெற்றுத் தருகின்றது. பெரும்பான்மையானவர்கள் எந்த வாய்ப்பும் இல்லாமலேயே, புற மதத்தின் இருளிலேயே இறந்துவிட்டனர்; மேலும், கிறிஸ்தவத் தேசத்திலுள்ள அநேகர், கப்பர்நகூமின் ஜனங்களைப் போன்று தங்களுக்கான வாய்ப்பை அலட்சியப்படுத்திவிட்டனர். கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் தங்களுக்கான சிலாக்கியம் பற்றின முழுமையான அறிவிற்குள்ளாக இராஜ்யத்தில் அனைவரும் கொண்டு வரப்படுவார்கள், பிற்பாடு புறக்கணிப்பவர்கள் யாவரும் அழிக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:23; 1 தீமோத்தேயு 2:4; மத்தேயு 20:28).

இயேசுவையும், அப்போஸ்தலர்களையும் பின்பற்றுவது அதாவது, அவர்களுடைய பக்தியின் அடிகளில் நாம் நடந்து, இப்படி மேசியாவோடு அவருடைய இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக நமது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதே நமக்கான காரியமாகும்; இந்த இராஜ்யத்தில், நியாயத்தீர்ப்பெனும் பெயரில் அடங்கும் பரிசளித்தல் மற்றும் தண்டனையளித்தலெனும் முறைமையின் கீழ், சபை மேசியாவோடு கூட இஸ்ரயேலையும் மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்கள். இந்தத் திரும்பக் கொடுத்தல் வேலையில் இஸ்ரயேலர்களும், சோதோமியரும் பங்கடைவார்களென வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றன (எசேக்கியேல் 16:50-55; அப்போஸ்தலர் 3:19-21).

**ஆமென்!**

---

# எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்?

*"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக்கோபு 5:16)*

**நா**ம் குற்றம் புரிந்திருக்கையில், யாருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டதோ, அவரிடம் குறிப்பாக உரிய வருத்தத்துடனும், முடிந்தமட்டிலுமான பிராயச்சித்தங்களுடனும் ஒப்புக்கொள்வதற்குரிய தாழ்மை மற்றும் விருப்பத்தின் - பொதுவான கொள்கையையே இவ்வசனம் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் பூரணர் இல்லை என்று மனம் திறந்து ஒப்புக்கொள்வது என்பது முற்றிலும் சரியானதே மற்றும் யாரும் பூரணராக தங்களைக் காட்டிக்கொள்வதற்கு முற்படக்கூடாது; மாறாக "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும், நம்முடைய நோக்கங்கள் மற்றும் பிரயாசங்களில் நீதியாய் மாத்திரம் இருக்கின்றோம் என்றும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக, தேவனுடைய பார்வையில் முழுமையான மூடுதலுக்காய் நம்பியிருக்கின்றோம் என்றும் வேதவாக்கியங்கள் கூறுபவற்றையே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கு அனுகூலமாய்க் காணப்படத்தக்கதாகச் சிலசமயங்களில் குற்றங்களை வெளிப்படையாய் அறிக்கையிட வேண்டியிருக்கும் மற்றும் நம்முடைய சொந்த குறைபாடுகளைக் குறித்துக் கூறிடுவது என்பது மற்றவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும் என்றால், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற கண்ணோட்டத்தில், அதைச் சரியான விதத்தில் சொல்லிடுவதற்கு நாம் தயக்கம் காண்பிக்கக்கூடாது; பொதுவாக நம்முடைய அபூரணங்களை மறைக்க முயற்சிக்கின்றோம்; ஆனால் நம்முடைய குற்றங்களை முழுவதுமாய் ஒழித்திடுவது என்பது தினந்தோறுமான நம்முடைய பிரயாசமாய்க் காணப்பட வேண்டும் என்பதே நம்முடைய கருத்தாகும்.

எனினும் இந்த வசனப்பகுதியில், அப்போஸ்தலன் ஆழமான சிந்தை ஒன்றைக் கொண்டிருக்கின்றார்; இங்குத் தேவனிடத்திலிருந்து ஒருவனை அந்நியனாக்கின மற்றும் அவனுக்கும், தேவனுக்கும் இடையில் மேகம் வர அனுமதித்திட்ட பாவம் ஒன்றினைச் செய்த ஒருவரின் காரியம் பற்றி அப்போஸ்தலன் பேசிக்கொண்டிருக்கின்றார். அது பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருப்பதாகும். அவன் சரீரப்பிரகாரமாக வியாதிப்பட்டிருக்கின்றானோ, இல்லையோ, அவன் ஆவிக்குரியவற்றில் வியாதிப்பட்டிருக்கின்றான். அவனுக்காக ஜெபம்பண்ணும்படிக்கும், அவனுக்குக் கர்த்தருடைய நாமத்தினால் எண்ணெய்ப் பூசும்படிக்கும், சபையின் மூப்பர்களை அவன் வரவழைப்பதே அவனுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" (ஆவிக்குரிய பிணியாளி - என்று நாம் எண்ணுகின்றோம்) மற்றும் "அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." அச்சகோதரன் தனது சொந்த நிலையினைக் கர்த்தரிடத்தில் பேசுவதற்குரிய நிலைமையில் இல்லை மற்றும் இதனால் நாம் நம்முடைய சகோதரரிடத்தில் அனுதாபங்கொள்ளவும், அவருக்கு உதவிசெய்யப்போகவும், அவருக்காக வேண்டிக்கொள்ளவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். நம்முடைய வேண்டுதல்களானது பலனளிக்கும் என்றல்ல, நீதிக்கு முன்பாக, குற்றங்களுக்கும், அபூரணங்களுக்கும் நமது பரிந்துபேசுபவரின் வேண்டுதல்தான் பலனளிக்கும்; ஆனால் நம்முடைய பரிந்து பேசுபவர் இப்படியாக அவ்வப்போது தம்மை நிறுத்தி வைத்துக்கொள்கின்றார் - அதாவது தவறில் காணப்படும் ஒருவரின் நன்மைக்காகவும், விஷயத்தை அறிந்திருக்கும் சகோதரர்களின் அனுதாபத்தினைத் தூண்டிடுவதற்காகவும், இவர்கள் தாங்களும் சோதனைக்குள்ளாகாமல் இருக்க வேண்டும் என்றும், தங்கள் உறுதியினின்று தாங்கள் விழுந்துபோகாமல் இருக்க வேண்டும் என்றும் நினைவில் கொண்டு உதவி புரிந்திட நாடிடுவதற்கும் மற்றும் இப்படியாகச் சபையில் அனுதாபத்தின் ஆவியும், ஒருவருக்கொருவர் உதவியும், ஏந்திடும் தன்மையும் ஊக்குவிக்கப்படுவதற்கும் என்று அவ்வப்போது நமக்கான பரிந்துபேசுபவர் தம்மைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்கின்றார்.

விசேஷமாய் வேண்டிக்கொள்ளப்படாமலேயே, சபையிலுள்ள மூப்பராகிய சகோதரர், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள சக அங்கத்தினர்களில் ஒருவருக்காக ஜெபம்பண்ணிடுவதற்கோ அல்லது சபையின் அங்கத்தினர் ஒருவர் இன்னொருவருக்காக பொதுவாய் ஜெபம்பண்ணிடுவதற்கோ எதிராய்ச் சொல்லப்படுவதற்கு எதுவுமில்லை. இது முற்றிலும் சரியே. ஒரு சகோதரன் தவறான பாதையில் செல்வதை ஒருவர் காண்பாரானால், அவருக்காக இவர் ஜெபம் மாத்திரம்பண்ணிடாமல், தன்னால் முடிந்தமட்டிலுமான ஞானமான விதத்தில் அவர் ஏறெடுத்துள்ளதான தவறான போக்கினை அவரது கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம், அவரைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதற்கு இவர் தாழ்மையான ஆவியில் நாடிட வேண்டும்; ஆகிலும் ஐயத்திற்கிடமின்றி இம்மாதிரியான முயற்சிகள் என்பது, மேலே சொல்லப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் - அதாவது தனது தேவையினை உணர்ந்து, தனக்காக ஜெபம்பண்ணும்படிக்கு மூப்பர்களைப் பிணியாளி அழைத்திடாதது வரையிலும் ஏறெடுக்கப்பட முடியாது.

தவறான வழியில் போகிறதாக தாங்கள் காண்கின்றவர்களுக்காக மூப்பர்கள் மாத்திரம் ஜெபம் பண்ணிடக்கூடாது; வாய்ப்பிற்கும், திறமைக்கும் ஏற்ப சபையின் சகல மற்ற அங்கத்தினர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான விசேஷித்தப் பொறுப்பினைக் கர்த்தர் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினன் - சபையின் ஒவ்வொரு அங்கத்தினன் மீதும் வைத்துள்ளார்; எனினும் முதிர்வயதுள்ள சகோதரனைச் சரிப்படுத்துவதற்கும், கடிந்துகொள்வதற்கும், அறிவுறுத்துவதற்கும் முற்படும் விஷயத்தில் சபையிலுள்ள இளவயதுள்ள சகோதரனிடத்தில் அதே அளவிலான பொறுப்போ அல்லது ஏற்புடைமையோ இருக்கமுடியாது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போல் பாவி" என்று தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் கூறுகின்றார்; இப்படியாகக் கர்த்தருடைய குடும்பத்தில் காணப்படும் இளவயதுள்ள சகோதரன் ஒருவர், சரியான நடத்தையினின்று விலகுதலாய் ஒரு காரியம் இருக்கின்றது என்று தான் உணரும் எதையேனும் காண்கையில், அவர் என்ன செய்திடலாம் என்று நாம் பார்க்கின்றோம். அவர் இக்காரியத்தினை அணுகுவதற்குத் தயக்கம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தான் ஒருவேளை மிகவும் அனுபவம் மிக்கவராய் இருந்திருந்து அணுகுகையில் அடையப்பெறும் நற்பலன்களைப் போன்று, தன்னால் நற்பலன்களை அடையமுடியாது என்றும், தன்னுடைய அணுகுதல் பாதிப்பையே உண்டுபண்ணும் என்றும் எண்ணிட வேண்டும். ஆகையால் அவர் அந்நபருக்கு ஆலோசனை வழங்க முற்படுவதற்குப் பதிலாக, கொஞ்சக்காலம் அந்நபருக்காக இரகசியமாய் ஜெபம்பண்ணிடுவது ஞானமான காரியமாய் இருக்கும். ஆனால் ஒருவேளை இறுதியாக, அவசியம் என்று அவர் கருதுவாராகில், சபையின் மூப்பர்கள் சிலரிடத்தில் பேசி, அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொள்வது அல்லது அவர்கள் வாயிலாக அச்சகோதரனிடத்தில் பேசிடுவது நலமாய் இருக்குமென மூப்பர்கள் எண்ணுவார்களா என்று கேட்டுக்கொள்வது, அவருக்கு ஞானமாய் அநேகமாக இருக்கும். அவர் அந்நபரைக்குறித்துத் தீமையாய் ஊகிக்கின்றார் - அதாவது "தீமை பேசுகின்றார்" என்று நாங்கள் அனுமானிக்கவில்லை; மாறாக தவறான பண்புகளின் தன்மைகள், தவறான ஜீவப்பாதைக் குறித்த சிலவற்றை, தவறு என்று அவர் அறிந்திருக்கும் ஏதோ சிலவற்றை, வெளிப்படையாய்த் தென்படுகின்ற ஏதோ சிலவற்றை, கற்பனை பண்ணிடாத ஏதோ சிலவற்றைப் பற்றி முழுமையாய்க் கொஞ்சம் அறிந்திருக்கின்றார் என்று நாம் எண்ணுகின்றோம். தீமை பேசுதல் முதலானவைகளில் உள்ளடங்குபவைகளில் அநேகமானவைகள் முற்றிலும் கற்பனையானவைகளாக . . . "அவர் இன்னவிதமாய்ச் செய்யப்போகின்றார் என்று நான் எண்ணினேன்" மற்றும் "அவள் இன்னவிதமாய் செய்துகொண்டிருக்கின்றாள் என்று நான் எண்ணினேன்" அல்லது "இன்னென்ன விதமாய்ச் செய்திடுவதற்கு அவள் நோக்கம் கொண்டிருந்தாள் என்று நான் எண்ணினேன்" . . . என்பதாகவே காணப்படுகின்றது. இவைகள் தீமைபேசுதலாக வகுக்கப்படலாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஒரு சகோதரன் தான் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடவில்லை என்றும், மிகவும் முக்கியமற்ற காரியங்களில் நியாயந்தீர்க்க தான் முற்படவில்லை என்றும், மற்றச் சகோதரனுக்கு விபரீதமான, கவலைக்கிடமான மற்றும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுச்சிருஷ்டியென அச்சகோதரனுக்கு ஆபத்தான ஏதோ விஷயம் உண்மையிலேயே இருக்கின்றது என்றும் அறியத்தக்கதாக, அக்காரியத்தினை ஜெபத்தில் வைத்திட வேண்டும்.

பொதுவான நடைமுறை, நமது கர்த்தர் மத்தேயு 18:15-ஆம் வசனத்தில் உபதேசித்துள்ளது போன்று, சம்பந்தப்பட்ட நபரிடத்தில் தனிமையில் செல்வதேயாகும்; மூப்பரிடத்தில் செல்வது என்பது, சம்பந்தப்பட்ட நபர் காரியத்தினைச் சரிப்படுத்துவதற்குத் தனது சொந்த ஆற்றல் முற்றிலும் போதாது என்று உணரும் சில மிகக் கவலைக்கிடமான காரியத்தில் மாத்திரமேயாகும். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் மிகவும் சொற்பமாகவே காணப்படும் என்பது

எங்களுடைய நம்பிக்கையாய் இருக்கின்றது. ஒருவேளை காரியம் தனக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டதாய் இருக்குமானால், அந்நபரிடத்தில் தனிமையில் செல்வது அவரது கடமையாக இருக்கும்; ஒருவேளை காரியம் சபைக்கு விரோதமானதாகவோ அல்லது வெளியரங்கமான ஒழுக்கக்கேடாகவோ, தவறாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நீதியின்கொள்கை எதையேனும் மீறியுள்ள காரியமாகவோ இருக்குமாயின், இது சற்று வேறுபட்ட நிலையிலுள்ள காரியமாய் இருப்பதினால், அதிகமாய் அதிகாரமுடைய ஒருவரை அழைத்திட வேண்டும்; காரணம் தனிப்பட்ட நபரின் உரிமைகளல்ல, மாறாக சபையினுடைய அல்லது சத்தியத்தினுடைய அல்லது கர்த்தருடைய காரணங்களுடைய நலனுக்கடுத்தவைகளுக்கு விரோதமாகவே குற்றஞ்செய்யப்பட்டுள்ளது; இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மூப்பர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி காரியத்தைக்குறித்து நன்கு பகுத்துணர முடிகின்றவர்களாகவும், காரியத்தை அணுகுவது எப்படி என்பதையும் நன்கு அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்.

---

[R4602]

## பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம்

கேள்வி:- ஆசாரியர்கள் பலிபீடத்திலிருக்கும் அக்கினித்தழல்களை எடுத்து, அதையே பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் தூபபீடத்திலும் பயன்படுத்துவதின் முக்கியத்துவம் என்ன?

பதில்:- இந்த அக்கினி பயன்படுத்தப்படும் மூன்று வெவ்வேறு இடங்களும், நம்முடைய ஆண்டவரின் மரணத்தை அல்லது மரிக்கும் தன்மையை அடையாளப்படுத்துகிறது. உலகத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பாளையத்திற்கு வெளியே இருக்கும் அக்கினி, அவருடைய மரணத்திற்கு காரணமாக எழும்பின எதிரான அழிவுக்குரிய தாக்குதலை அடையாளப்படுத்துகிறது. விசுவாசிகளின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பிரகாரத்திலிருந்த அக்கினி, அதேபோல அவருடைய மரணத்திற்குக் காரணமாயிருந்த அதே அழிவின் தாக்குதல்களை அடையாளப்படுத்துகிறது. பாளயத்திற்கு வெளியே எரிக்கப்படும் தோலும், கொம்புகளும், சாணமும் துர்நாற்றத்தை எழுப்பக்கூடியதாய் இருக்கிறது. ஆனால் பிரகாரத்திற்குள் இருந்தவர்கள், எரிக்கப்படும் கொழுப்பின் வாசனையை முகர்ந்தார்கள்-இது பாளயத்திற்குப் புறம்பாக எரிக்கப்படும் துர்நாற்றம் போல இல்லை. பொதுவாக பாவநிவாரண பலியாக பலிபீடத்தின் மேல் கொழுப்புகள் தகனிக்கப்பட்டது. இவைகள் சரியான சூழ்நிலையிலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு எரிக்கப்படும்போது, துர்நாற்றத்தை அல்ல, மாறாக சுத்தமான கரி எரியக்கூடிய வாசனையை எழுப்பக்கூடியதாய் இருக்கிறது. நாம் முன்னதாகவே அறிந்திருக்கிறபடி அங்கு தகனிக்கப்படும் கொழுப்பு, அன்பு மற்றும் வைராக்கியம் என்ற குணநலனை பலியாக செலுத்துவதைக் காட்டுகிறது. மெலிந்த மிருகத்திற்கு மிகக் குறைவான கொழுப்பு காணப்படும். அதே நேரத்தில் கொழுத்த மிருகத்திலுள்ள அதிகமான கொழுப்பு பலிபீடத்தின் மேல் தகனிக்கப்படும்போது, பற்றி எரியக்கூடிய வைராக்கியத்தைக் காணலாம். ஆனால் முழுமையாக பாளயத்திற்கு வெளியே பொருட்கள் எரிக்கப்படுவதற்கும், பிரகாரத்தில் கொழுப்பு எரிக்கப்படுவதற்கும் பரிசுத்தமான அன்பு மற்றும் ஜீவபலியையும் செலுத்துவதற்கு இந்த அக்கினியின் பயன்பாடு மிக அவசியமாயிருக்கிறது.

பலிபீடத்தின் மேல் தகனிக்கப்படும் கொழுப்புக்கு பயன்படுத்தப்பட்ட அக்கினித்தழல்கள், நம்முடைய ஆண்டவர் அல்லது அவர் செய்த கிரியைகளைத்தவிர வேறு எந்த காரியங்களை அடையாளப்படுத்தக்கூடும்? பலிபீடத்தின் மேல் பயன்படுத்தப்பட்ட விறகுகள் சந்தேகத்திற்கு இடமின்றி சில இடங்களில் நாம் வாசிப்பதுபோல, கொழுந்துவிட்டு எரியக்கூடிய அக்கினித்தழல்களாக பலிபீடத்தின் மேல் இருந்து எடுக்கப்பட்டு இரண்டாம் திரையைக் கடந்து, பொற்பீடத்தின் சுகந்தவர்க்கம் இடுவதற்காக அதில் நிரப்பப்படுகிறது. ஆகவே மூன்று இடங்களிலும் எரிக்கப்படும் இந்த அக்கினி - பாளயத்திற்குப் புறம்பே மிருகத்தை எரிக்கப்படுவதற்காக பயன்படுத்தப்பட்ட விறகுகள், பிரகாரத்தில் கொழுப்பை தகனிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட விறகுகள் மற்றும் பொற்பீடத்தில் சுகந்தவர்க்கத்தை இடுவதற்காக பயன்படுத்தப்பட்ட அக்கினித்தழல்கள் அல்லது பிரகாரத்தில் பயன்படுத்தப்பட்ட விறகுகள் - இவை அனைத்தும் ஒரேவிதம் என்று காட்டுகிறது.

இந்த அக்கினி எதை அடையாளப்படுத்துகிறது? இயல்பாக நாம் பதில் அளிப்பது போலவே, அக்கினி அழிக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இம்மூன்று இடங்களிலும் அக்கினியின் அழிக்கக்கூடிய தாக்குதலில் குறிப்பிட்ட வித்தியாசங்கள் காணப்படுகிறதா? உண்மை

என்னவெனில், இந்த அழிவுக்குரிய தாக்குதல்கள் பலிபீடத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த குறிப்பிடப்படும் அழிவுகள் பலிகளோடு சம்பந்தப்பட்டு இருக்க வேண்டும். மாறாக, பொதுவாக மனுக்குலத்திற்கு விரோதமாக இருக்கும் வியாதிகள், பஞ்சங்கள், வேதனைகள், அழிவுகளைக் குறிக்க வாய்ப்பில்லை. இந்த பலிக்காக ஏற்படுத்தப்படும் அக்கினி, சில காரியங்களை செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட காரியங்கள் பிதாவின் நியமனத்தின்படி பலிகளை செலுத்த அல்லது சோதனைகளை நிறைவேற்றக்கூடிய ஒரே நோக்கத்திற்காக இங்கு ஏறெடுக்கப்படுகிறது. "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்போனோ" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தை மிக அழகாக இதை வெளிப்படுத்துகிறது. ஆண்டவரின் பாத்திரத்தில் யூதர்கள் அல்ல, பரிசேயர்கள்அல்ல, ரோமர்கள் அல்ல, மாயக்காரராகிய மனுஷரும் அல்ல, பிதாவே அந்த பாத்திரத்தை நிரப்பினவர்.

ஒவ்வொரு இடங்களிலும் காணப்படும் அக்கினித்தழல்கள், ஒவ்வொருவருடைய உண்மையுள்ள பக்தியையும், குணநலன்களையும், விசுவாசத்தையும் நிரூபிப்பதற்காக பிதா ஒவ்வொருவருக்கும் கொடுக்கக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலைகளும் விதிமுறைகள் ஆகும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பலிபீடத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திலுள்ள தூபபீடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் அக்கினித்தழலை காணக்கூடிய பக்திக்குரிய ஆவியைப் பெற்ற விசுவாசிகள் காணும்பொழுது - அந்த பலிபீடங்களிலும் செலுத்தப்படும் பலிகள் தெய்வீக பிரமாணத்தின் படி அல்ல, நீதிக்கு இசைவாக தேவனுடைய பார்வையில் முழுமையான அங்கீகாரம் பெறும்படியாக, முழு விருப்பத்தோடும் செலுத்தப்பட வேண்டும் என்பதை அடையாளமாகக் காண்கிறார்கள். இதற்கு இசைவாக இருந்ததினால் நம்முடைய ஆண்டவர் தாமே இந்த அக்கினித்தழல்களின் மேல் சுகந்த வாசனையாக தம்மை பலியாக செலுத்தினார். இப்படியாக நாளுக்கு நாள் அவர் தம்முடைய ஜீவனை இந்த அனுபவங்களை அனுமதித்து தம்முடைய பூமிக்குரிய இயல்பை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து, தேவனுக்கு சுகந்த வாசனையாக செலுத்தினார். இவைகள் தேவனால் கொடுத்ததும், தம்முடைய முழுமையான பலியின் அனுபவங்களோடு இணைந்ததுமாய் இருக்கிறது.

-------------------------------

# இரத்தத்தினைச் சாதாரணமானதாய் எண்ணுதல்

***"தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி (சாதாரணமானதென்று எண்ணி), கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாய் இருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்." எபிரெயர் 10:29***

அப்போஸ்தலன் இங்கு மோசே மற்றும் அவரது பிரமாணத்தை, நிஜமான மோசே மற்றும் மேலான பிரமாணத்தோடு ஒப்பிட்டுக்காட்டுகின்றார். மோசேயின் பிரமாணத்தையும், நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட மற்றும் நிறுவப்பட்டதான ஏற்பாடுகளையும் இழிவாகக் கருதுபவன், மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகின்றான்; இந்தத் தீர்ப்பினின்று அவன் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக விடுவிக்கப்படுவான். இந்த மரண ஆக்கினையானது தற்காலிகமான தன்மையில் காணப்படுவதினால், இது அவனது நித்தியத்திற்கடுத்த நலன்களைப் பாதிப்பதில்லை.

இந்த இரண்டு ஆக்கினைகளுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது; ஒருவன் நிஜமான மோசேயினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானானால், அவனது தண்டனையானது மிகவும் அதிகக் கடினமானதாய் இருக்கும். இந்தக் கடுமையான (அ) "கொடிதான ஆக்கினை" என்பது "இரண்டாம் மரணம்," அதாவது முற்றிலுமான அழிவைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாம் புரிந்திருக்கின்றோம். ஒருவன் கிறிஸ்து மூலமான மற்றும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டினுடைய தேவனுடைய பிரமாணங்கள் எதையேனும் அசட்டைப்பண்ணுவானானால், அவன் இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரமாக இருப்பான். இந்தக் கொள்கையானது, ஆயிரவருட யுகம் முழுவதும்கூடப் பொருந்தும்; அதாவது கிறிஸ்து மூலமாய்த் தேவன் அருளியுள்ளதான கிருபைகள் மற்றும் ஏற்பாடுகள் குறித்த அறிவிற்குள் ஒருவன் வந்த பிற்பாடு, அவன் அவைகளைப் பெரிதாய் எடுத்துக்கொள்ளாமலும், அன்பைப் பரிமாறத் தவறியும், தனக்கு உதவிபுரியும் அந்த ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிய தவறியும் இருப்பானானால், அவன் தொடர்ந்து இனிமேலும் தேவதயவைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரமானவனாய்க் கருதப்பட்டு, இரண்டாம் மரணத்திற்குள் கடந்துசெல்லுவான். ஆனால் இங்கு அப்போஸ்தலன், ஆயிரவருட யுகத்தின் முடிவில் நடக்கப்போவதைக் குறித்துக் குறிப்பிடவில்லை என்பது நிச்சயமே மற்றும் மோசேக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான அநேகமான ஒப்புமைகளைக் காண்பிப்பதற்கு மாத்திரமே, இவைகளை இங்குக் குறிப்பிட்டோம்.

இந்த ஆதார வசனத்தை அப்போஸ்தலன் உலகத்திற்கும் பொருத்தாமல், மாறாக சபைக்கே பொருத்திக் குறிப்பிடுகின்றார். வசனத்தின் முன் பின் வசனங்களும்கூட, அப்போஸ்தலன் சபைக்கே, அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கே, கிறிஸ்துவினுடைய நீதி தரிப்பிக்கப்பட்டதன் வாயிலாக தங்கள் பாவங்களை மூடப்பெற்றவர்களுக்கே, இந்த மூடுதலின் பெலத்தில் நீதிமானாக்கப்பட்டு, தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்தவர்களுக்கே பேசிக்கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நாம் என்ன நோக்கத்திற்காக இப்படி அர்ப்பணம் பண்ணுகின்றோம்? கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணிடுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம் கொள்ளுவதற்கும், நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாகவும், மகிமையின் தளத்தில் அவரது அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாகவும், மாம்சீக இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதும் மற்றும் இவர்கள் வாயிலாக பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதுமான மாபெரும் வேலையைச் செய்யும் ஆபிரகாமின் சந்ததியில், ஆவிக்குரிய இஸ்ரயேலில் அங்கத்தினர்களாகக் காணப்படத்தக்கதாகவும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பாடுபடுவதற்குமான நமது கர்த்தருடைய அழைப்பின் காரணமாகவே அர்ப்பணம் பண்ணினோம்.

ஆகையால் அப்போஸ்தலன் இக்காரியத்தை நம் கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாக, நம்மில் எவரேனும், அதாவது பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவை நம்முடைய பாவங்களுக்கான மாபெரும் பாவநிவிர்த்தி என்று மாத்திரம் உணர்ந்துள்ளவர்களாகிய எவருக்கேனும் சம்பவிப்பதைப்பற்றிக் குறிப்பிடவில்லை; இல்லை; மாறாக அவரது இரத்தத்தின்மீதான விசுவாசத்தின் வாயிலாக நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகிய நம்மில் எவரேனும், விழுந்துபோவோமானால், சம்பவிப்பவைப் பற்றியே சபையிடம் குறிப்பிடுகின்றார்.

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், கடைசி இராப்போஜனத்தை அவர் நிறுவின இரவில், அவர் பாத்திரத்தை எடுத்து, "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினதை நாம்

நினைவில்கொள்கின்றோம். (மத்தேயு 26:28) இந்த இரத்தத்தை, புது உடன்படிக்கையை முத்திரிக்கும் இரத்தம் என்று கருதுவதிலுள்ள தேவனுடைய நோக்கம் என்னவெனில், அது ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளினுடைய பாவங்கள் அனைத்திற்கும் பாவமன்னிப்பைச் சாத்தியமாக்க வேண்டும் என்பதேயாகும். இந்த ஒரு நோக்கத்திற்காகவே நமது கர்த்தருடைய இரத்தம் சிந்தப்பட்டது. "இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது" — 'உங்களுடைய இரத்தமல்ல. நான் ஜெநிப்பிக்கப்பட்டபோது, நான் அர்ப்பணித்ததுமான இரத்தத்தை (அ) ஜீவனை நான் கொடுக்கப்போகின்றேன்; இன்று சிலுவையில் அதை நான் கொடுத்துவிடப்போகின்றேன் (ஏனெனில் அவர் ஒரே நாளினுடைய ஒரு பகுதியில்தான் சிலுவையில் அறையப்பட்டார்). இன்று என்னுடையதாய் இருக்கும் இதில் - தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையிலான புது உடன்படிக்கையினை முத்திரிக்கின்றதான இரத்தத்தில் - நீங்கள் பங்கெடுக்க நான் உங்களை அழைக்கின்றேன். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." நீங்கள் எல்லாரும் இதில் பானம் பண்ணிடுங்கள் மற்றும் அனைத்தையுமே பானம்பண்ணிடுங்கள். மீதி வைக்காதிருங்கள். இந்த இரத்தத்தில், இந்தப் பாத்திரத்தில் பங்கெடுப்பதற்கான அழைப்பானது, வேறெந்த ஜனங்களுக்கோ (அ) வகுப்பாருக்கோ கொடுக்கப்படப் போவதில்லை; உங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களே இந்த நோக்கத்திற்காக விசேஷமாய் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நான் பேசிக்கொண்டிருக்கின்றதான அப்போஸ்தலர்களாகிய உங்களுக்கு மாத்திரம் இல்லாமல் உங்கள் வார்த்தைகள் வாயிலாக என்மேல் விசுவாசம் வைத்து, இதுபோன்று அர்ப்பணம்பண்ணி, என்னுடைய மரணத்திற்குள்ளாக ஸ்நானம் எடுப்பவர்களையும், என் பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதற்கு நான் அழைக்கின்றேன்' என்ற விதத்தில் கர்த்தர் பேசியுள்ளார்.

இராப்போஜனத்தில் நாம் பங்கெடுப்பதான இந்தப் பாத்திரம் தொடர்பாகவே அப்போஸ்தலன், "திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குக்கொள்ளுதல் அல்லவா?" என்று கேட்கின்றார். (1 கொரிந்தியர் 10:16; திருவிவிலியம்) ஆம், என்று நாம் பதிலளிக்கின்றோம். கிறிஸ்துவினுடைய இரத்தமானது, புது உடன்படிக்கையின் இரத்தமாய் இருக்கிறதல்லவா? ஆகையால் புதிய உடன்படிக்கையின் இரத்தத்தில் நாம் பங்குகொள்கின்றோம் அல்லவா? நமது கர்த்தருடைய அழைப்பிற்கேற்ப, நாம் அந்த இரத்தத்தில் பங்குகொள்வதினால், நாம் அவரது "பாத்திரத்திலும்," அது தொடர்புடையதான அனைத்திலும் பங்காளிகளாக இருக்கிறோம் அல்லவா? ஆம். இது எத்தகைய தாக்கத்தினை நம்மிடத்தில் ஏற்படுத்திடக்கூடும்? அதிக அளவிலாகும்; அவரது "பாத்திரத்தில்" பங்கடைவதற்கும், "அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம் கொள்வதற்கும்" என்று நமக்கு அருளப்பட்டிருக்கின்றதான மாபெரும் சிலாக்கியத்திற்கென்று நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தினுடைய மூன்றாம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், தான் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ளவும், அவருடைய பாடுகளில் ஐக்கியம் கொள்ளவும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்நானம்கொள்ளவும், அவரது பாடுகளின் "பாத்திரத்தில்" பங்கடையவும் வேண்டி, தான் மற்ற அனைத்தையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்; நாமும் இப்படியாகவே எண்ணிக்கொள்ள வேண்டும். நமக்கு சுவிசேஷ யுகத்தில் அருளப்பட்டிருக்கின்றதான இந்த மாபெரும் சிலாக்கியத்திற்கு முன்பாக, மற்ற நலன்களும், நோக்கங்களும் ஒரு பொருட்டானவைகள் அல்லவென்று பவுல் அடிகளார் கருதினார்கள்.

இந்த அருமையான சிலாக்கியத்தின் விஷயத்திற்கு ஒருவேளை நாம் எப்போதாகிலும் குருடர்களாய்ப் போவோமானால், நமது கர்த்தருடைய "பாத்திரத்தில்" பங்கடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், புது உடன்படிக்கையினை முத்திரையிடுகிற (அ) உறுதிச்செய்கிறதுமான இந்த இரத்தத்தில், அதாவது புது உடன்படிக்கைக்கான இரத்தத்தில், அவரோடுகூடப் பங்கெடுப்பதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதுமான உண்மைகளின் மதிப்பினை உணர்ந்துகொள்வதில் குறைவுபடும் நிலைக்குள் ஒருவேளை எப்போதாகிலும் நாம் வருவோமானால், இது நமக்கு விசேஷமாய்க் கொடுக்கப்பட்டதும், உலகத்திலுள்ள வேறெந்த ஜனங்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படாததும், மீண்டும் ஒருபோதும் கொடுக்கப்படாததும், தேவதூதர்களுக்கும் ஒருபோதும் கொடுக்கப்படாததும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், இந்த யுகத்தில், அவரது ஆவியை உடையவர்களுக்கும் மாத்திரம் அருளப்பட்டதுமான இந்தச் சிலாக்கியங்கள் மற்றும் தயவுகள் அனைத்தையும் அசட்டைப்பண்ணுகிறதாய் இருக்கும்.

ஒருவேளை "பாத்திரத்தினுடைய" மதிப்புக் குறித்த உணர்ந்துகொள்ளுதலில் நாம் குறைவுபட்டு, பெயரளவிலான கிறிஸ்தவர்கள் அனைவரும் எண்ணியிருக்கின்றது போன்று, அது வெறுமனே சாதாரணமானதுதான் என்று சொல்லுவோமானால்; பாவத்திலிருந்து மாத்திரம் திரும்பி, நேர்த்தியான ஜீவியம் ஜீவிக்க முற்படுவோமானால்; இது விசேஷித்த பலியல்ல, இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் பங்கு கொள்ளுவதாகவோ, அவரது "பாத்திரத்தில்" பானம்பண்ணுவதாகவோ இராது என்போமானால்; அப்படியானால் நாம் மற்ற ஜனங்கள் அனைவருக்கும் மேலாக, நமக்கு விசேஷமாய் அருளப்பட்டதான சிலாக்கியங்கள் அனைத்தையும்

அசட்டைப்பண்ணுகிறவர்களாகவும், புறக்கணிக்கிறவர்களாகவும் இருந்துவிடுவோம். இது முழு ஏற்பாட்டினையும் நாம் அசட்டைப்பண்ணுகிறதைக் குறிக்கின்றதாகவும், நம்முடைய இருதயத்தில் ஏதோ பிரச்சனை இருக்கின்றதைக் குறிக்கின்றதாகவும் இருக்கும்; நாம் இதைப் பலிசெலுத்துவதற்கான சிலாக்கியம் என்று கண்டுகொண்ட பிற்பாடே, "நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதற்கென," கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம் என்பதை நாம் அறிந்துகொண்டபிற்பாடே நாம் மனப்பூர்வமாய், விரும்பி மற்றும் அறிந்து இப்படியாய்ச் செய்திருப்போம்.

இப்படியாய்த் தெளிவான அறிவையும், உணர்ந்து/புரிந்துகொள்ளுதலையும் பெற்றுக்கொண்டு, திரும்பிச் செல்பவர்கள், "உடன்படிக்கையின் இந்த இரத்தத்தினை" உதறித்தள்ளுபவர்களாகவும், அதை அசட்டைப்பண்ணுகிறவர்களாகவும், அருளப்பட்ட சிலாக்கியங்களைப் பயன்படுத்த தவறுபவர்களாகவும் இருப்பார்கள். இந்தச் சிலாக்கியங்களைப் பயன்படுத்துவதற்கு, இவர்கள் முதலாவதாக பூமிக்குரிய சுபாவத்தினை பலிசெலுத்துவது அவசியமாய் இருந்தது. ஆகையால் இப்பொழுது இவர்களிடத்தில் எதுவும் மிஞ்சியிருப்பதில்லை; ஏனெனில் இவர்கள் புதிய சுபாவத்தையும், கிறிஸ்துவின் பலியில் பங்கெடுப்பதன் வாயிலாக மாத்திரம் அடையப்பெறுகின்றதான கர்த்தருடைய ஏற்பாடுகளையும் இகழ்ந்து ஒதுக்கினவர்களானார்கள். சீர்ப்பொருந்துதலுக்கான எந்த வாய்ப்பும் இவர்களுக்கு இருப்பதில்லை. ஆகையால் இவர்களுக்கு — தேவனுடைய ஏற்பாடுகளைக் குறித்து ஒருமுறை புரிந்துகொண்ட பிற்பாடு, அதை அசட்டைப்பண்ணுகிறவர்களுக்கு எது பொருந்துகின்றதோ, அது மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்கின்றது; அது இரண்டாம் மரணமாகும்.

அப்போஸ்தலனால் "கொடிதான ஆக்கினை" என்று குறிப்பிடப்படுவது, "மரணத்துக்கு ஏதுவான பாவமாகும்." (எபிரெயர் 10:29) யார் இந்தப் பாவத்தைச் செய்திருக்கின்றனர் என்று சுட்டிக்காண்பிக்க நமக்குத் தகுதியுள்ளதா? இந்த விஷயத்தில் நியாயத்தீர்ப்புச் செய்யாமல் இருப்பதற்கும், இப்படியாக நியாயந்தீர்ப்பது கர்த்தருக்கு உரியது என்று மாத்திரம் கூறிடுவதற்கும் நாம் விரும்புகின்றோம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை நாம் காண்பது வரையிலும், நாம் எந்தத் தீர்மானமும் எடுப்பதில்லை.

நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கக்கூடாது என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். உதாரணத்திற்கு ஒருவேளை நீங்கள் "இயேசு மரித்தார் என்றும், அவர் நம்முடைய மீட்பர் என்றும் நான் நம்புகிறவன்; ஆனால் ஒரு காலத்தில் நான் அவரோடுகூட மரிப்பதற்கும், தற்காலத்தில் அவரோடுகூட அவரது பாடுகளில் பங்கடைவதற்கும், பின்வரும் மகிமையில் பின்னர் பங்கடைவதற்குமாய் அழைக்கப்பட்டேன் என்று அறிந்திருந்த கருத்தை நான் தொலைத்துப் போனவனானேன்" என்று கூறுவதாக வைத்துக்கொள்ளுங்கள். இதற்கு நாங்கள் உங்களிடம்: "ஓ! நீங்கள் மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்துள்ளீர்கள்; உங்களைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தினை நீங்கள் அசட்டைப் பண்ணியுள்ளீர்கள்; இதனால் சீர்ப்பொருந்துவதற்கான சிலாக்கியங்கள் உங்களுக்கு இல்லாததினால், நீங்கள் இரண்டாம் மரண நிலைக்குள்ளாகக் கடந்துபோய் விட்டீர்கள்" என்று நாங்கள் சொல்ல வேண்டுமோ? இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம். உங்களை நியாயந்தீர்ப்பதோ (அ) உங்களைக் குறித்துத் தீர்மானிப்பதோ எங்களுக்கடுத்தது என்று நாங்கள் எண்ணுகிறதில்லை, ஏனெனில் உங்களது முந்தின அறிக்கைகளானது எந்தளவுக்கு உண்மையானது என்பதை நாங்கள் அறியோம். நீங்கள் முழு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக, நீங்கள் எண்ணினபோது, நீங்கள் செய்வது என்ன என்பதை நீங்கள் புரிந்திருந்தீர்களா என்பதை நாங்கள் அறியோம். ஒருவேளை நீங்கள் உங்களையே புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆகையால் இந்தக் காரியத்தில் எதுவும் எங்களுக்கு நிச்சயமாய்த் தெரியாததினால், நியாயந்தீர்ப்பது எங்களுக்கடுத்தக் காரியமல்ல என்று சொல்லிடுவதற்கே நாங்கள் விரும்புகின்றோம். இது தொடர்பாக வேதவாக்கியங்களானது, "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரிப்பார்" என்று கூறுவதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் ஒருவேளை உங்களைப் பரிசுத்தஞ்செய்த அல்லது சரீரத்தின் அங்கத்தினன் என்று, பலி என்று உங்களை விசேஷமாய்ப் பிரித்தெடுத்த உடன்படிக்கையின் இரத்தத்தினை நீங்கள் புறக்கணித்துத் தள்ளின பிற்பாடு, தேவனும் உங்களை வெளிப்படையாய்ப் புறம்பே தள்ளி, உங்களிடமிருந்து வெளிச்சம் அனைத்தையும் பின்வாங்கப்பண்ணி, நாங்கள் காணும் அளவுக்கு அவருடைய தயவினின்று உங்களை வெளியேற்றிவிடுவதை நாங்கள் காண்போமானால், கர்த்தர் உங்களிடத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றார் என்று மற்றவர்களிடத்தில்

குறிப்பிடுகிறோமோ, இல்லையோ, நாங்கள் எங்களுக்குள்ளாகிலும் சொல்லிடுவதில் தவறு இருக்காது.

எந்த ஒரு விதத்திலாகிலும் கர்த்தரைப் புறக்கணிக்கிற எவனும், தொடர்ந்து சத்தியத்தின் வெளிச்சத்தில் காணப்படுவான் என்று எங்களால் கற்பனைப்பண்ணிட முடியாது. ஒருவன் கர்த்தரைப் புறக்கணிப்பானானால், சத்திய வெளிச்சமானது, அவனிடமிருந்து படிப்படியாய் வெளியேறும் என்றும், அவன் அநேகர் காண்பதற்கு மேலாக — சபைக்குச் செல்லுகிற பெயரளவிலான நபர் (அ) எந்த உலகப்பிரகாரமான மனிதன் காண்பதைக்காட்டிலும் மேலாக — காணமாட்டான் என்றும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியானவர்கள் புறம்பான இருளுக்குள் கடந்து செல்வது என்பது இவர்கள் கர்த்தருடைய தயவை இழந்துவிட்டார்கள் என்பதற்கான அடையாளமாய் இருக்கின்றது. எந்தளவுக்கு இழந்துள்ளார்கள் என்பதைத் தீர்மானிக்க நாம் விரும்புவதில்லை; ஆனால் ஒருவேளை இந்த அடையாளத்தோடுகூட, எதிராளியானவனின் சுபாவமான, சாத்தானின் ஆவி — கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, விரோதம் போன்றவையும் வெளிப்படுகின்றதானால், கர்த்தருடைய ஆவியானது கடந்துபோய்விட்டது என்றும், இழந்தவர் மரித்துவிட்டார் - "இரண்டுதரஞ் செத்து, வேரற்றுப்போனவர்களாகிவிட்டனர்" என்றுமுள்ள முடிவிற்கு நாம் வரலாம். (யூதா 12)

இப்படியானவருக்கு, நம்மால் முடிந்தது அனைத்தையும் நாம் விசேஷமாய்ச் செய்து முடித்தப் பிற்பாடு, இவர்களுக்கு நாம் தொடர்ந்து ஜெபிப்பதில் பிரயோஜனமில்லை. செய்ய முடிந்த அனைத்தையும் செய்திடுவதற்குத் தேவன் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் சில மாறாத சட்டங்களையும், கொள்கைகளையும் கொண்டிருக்கின்றார் மற்றும் ஒருவன் இவைகளையெல்லாம் ஒரு காலத்தில் அனுபவித்துவிட்டு, பிற்பாடு இவற்றை அசட்டைப்பண்ணுவானானால், எந்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டாலும், அக்கறையுடன் கண்ணீரோடுகூட ஏறெடுக்கப்பட்டாலும், இதற்காகக் கர்த்தர் தம்முடைய கொள்கைகளை மாற்றுவதில்லை.

*****

R 4608

# "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்"

## மத்தேயு 12:22-32, 38-42

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." - மத்தேயு 12:30

சில சமயங்களில் யுத்தங்களில் ஒவ்வொரு மனுஷனும் தனக்காகவே யுத்தம்/போராடுவது போன்று தோன்றும். குழப்பத்தில் யுத்தத்திற்கான அனைத்து வரம்பு எல்லைக்கோடுகள் மறந்துவிடப்படுகின்றன. எனினும், முடிவில் வெற்றிக் கிடைக்கும்போது, யுத்தத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட வரம்பு தெளிவாக மீண்டும் பார்க்கப்படலாம். மாபெரும் போதகரைப் பொறுத்தமட்டில், மனுக்குலத்தின் முழுக் குடும்பமானது சத்தியத்திற்கும் மற்றும் தப்பறைக்கும், சரியானதற்கும் மற்றும் தவறானதற்கும், தேவனுக்கும் மற்றும் சாத்தானுக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாபெரும் யுத்தத்தினுடைய ஏதோ ஒரு பக்கத்தில் காணப்படுகின்றனர். யுத்தத்தின் முடிவு பற்றி எந்தச் சந்தேகமும் இல்லை, தேவனே ஜெயம் அடைவார். தேவனால் எந்த நேரத்திலும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, தமது பரிசுத்தவான்களை விடுவித்து, சாத்தானையும் அவன் சாம்ராஜ்யத்தையும் கவிழ்த்துப்போட முடியும் என வேதாகமம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. ஆனால், இவைகள் தேவனுடைய "ஏற்றவேளையில்" நிறைவேற்றப்படும் என்பதாக தெய்வீக வாக்குத்தத்தங்கள் காணப்படுகின்றது. அதாவது, சபை நிறைவடைந்து முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் மாற்றப்பட்ட பிற்பாடு, பூமியின் ஜாதிகளை ஆசீர்வதிப்பதற்கான மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் வரும் என்று தெய்வீக வாக்குத்தத்தங்கள் காணப்படுகின்றது.

ஆறாயிரம் வருஷம் காலமான தாமதிப்பும், பாவிகளை மீட்பதற்காகவும், அவர்களை மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிப்பதற்காகவும், மேசியா மரித்தும் இரண்டாயிரம் வருஷம் காலமான தாமதிப்பும் ஏன்? என்ற கேள்விகள் எழும்பலாம். இந்தப் பத்தொன்பது நூற்றாண்டுகளாக தேவன் தமது சித்தம் தொடர்பான கொஞ்சம் அறிவை வெளிப்படுத்தியுள்ள சிலருடைய விஷயத்தில், அவர்கள் தம்மிடத்திலும், தம்முடைய பிரமாணங்களுக்கும், தம்முடைய பிரதிநிதிகளுக்கும் கொண்டிருக்கும் உண்மையைப் பரிசோதிக்கின்றார் என்பதே பதிலாகும். உண்மையுள்ளவர்களெனத் தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்கள் மத்தியில், நீதியினுடைய கொள்கைகளை இருதயத்தில் கொண்டிருப்பவர்களைத் தேவன் நாடுகின்றபடியினாலே அவர் பரிசோதிக்கின்றார். இவ்விதமாகக் கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, சிலர் எப்படிப் பரீட்சிக்கப்பட்டார்கள் என்பதை நம்முடைய இன்றைய பாடம் காட்டுகின்றது. இன்னுமாக, நசரேயனாகிய அவருக்கு என்ன நேர்ந்ததோ, அதுவே அவருடைய அடிச்சுவடுகளை இந்தப் பத்தொன்பது நூற்றாண்டுகளாகப் பின்பற்றி வருகின்ற பின்னடியார்களுக்கும் அனுபவமாக இருக்கும் என நாம் அறிவோம். அடிக்கடி அவர்கள் முகாந்தரம் இல்லாமல் பகைக்கப்பட்டனர்; முகாந்தரமில்லாமல் அவர்கள் பழித்தூற்றப்பட்டார்கள், தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டார்கள், அவதூறாய்ப் பேசப்பட்டார்கள். அதுவும் இப்படியாகச் சிலசமயம் கனமுள்ள ஸ்தானத்தில் காணப்படும் மதத்தில் ஈடுபாடுள்ள உடன் நபர்களாலே நடத்தப்பட்டார்கள். இப்படியான ஒவ்வொரு சூழ்நிலையிலும், யுத்தத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றது. அதாவது, தேவன், சத்தியம், நீதி எனும் பக்கமும் மற்றும் தவறுகள், தப்பறைகள், சாத்தான் எனும் பக்கமும் இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

### "ஒவ்வொரு பரீட்சைக்கும் இரண்டு பக்கங்கள்"

பரிசேயர்களும், வேதபாரகர்களும், நியாயசாஸ்திரிகளும் எவ்வளவு குருட்டுத்தனமாக இயேசுவைப் பகைத்து, அவருக்கு எதிராக சகலவிதமான தீமைகளைப் பேசினார்கள் என்று நாம் பார்க்கையில், இவர்கள் உண்மையில் சாத்தானுடைய பக்கத்தில் காணப்பட்டார்கள் என்று உணர்ந்துக்கொள்கின்றோம். தர்சு பட்டணத்தானாகிய சவுல், ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றதையும், அநேகர் இயேசுவின் பின்னடியார்களைத் துன்புறுத்தியதையும் நாம் பார்க்கையில், இவர்கள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, அவனுக்கு ஊழியம் புரிகின்றவர்களாக இருந்துள்ளதை நாம் தெளிவாகப் பார்க்கின்றோம். இன்னுமாக, சில தருணங்களில் தாங்கள் தேவனுடைய வேலையைச் செய்கின்றதாக இந்தச் சாத்தானுடைய மற்றும் அநீதியினுடைய ஊழியக்காரர்கள்

எண்ணிக்கொண்டனர். ஆகவே, இம்மாதிரியான விஷயங்களில், "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்ற மாபெரும் போதகருடைய வார்த்தைகளை நினைவில் கொண்டவர்களாக எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." (மத்தேயு 12:30). அந்தோ, எத்தனை நல்ல ஜனங்கள், அவர்களையும் அறியாமல் மாபெரும் யுத்தத்தில் தவறான பக்கத்தில் அதாவது, தேவன் மற்றும் சத்தியத்திற்கு எதிராக, அறியாமையினால், எதிராளியானவனால் ஏமாற்றப்பட்டு யுத்தம் பண்ணுகிறவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தப் போராட்டத்தையும், இருளையும் அனுமதிப்பதின் மூலம், தம்முடைய ஜனங்களாக இருக்க அழைத்தவர்களைத் தேவன் நன்கு பரீட்சிக்கின்றார், பரிசோதிக்கின்றார். நாம் எப்பக்கத்தில் காணப்படப்போகின்றோம் என்பது தொடர்பாக நாம் நேரடியாக பரீட்சிக்கப்படுவதோடு கூட, நம்முடைய தாழ்மை தொடர்பாகவும் நாம் மறைமுகமாகப் பரீட்சிக்கப்படுகின்றோம். இருதயத்தில் நேர்மையுள்ளவர்களாக இருந்தும், கண்கள் திறக்கப் பெற்றிருந்துங்கூட, தேவனுக்கு எதிராக யுத்தம் பண்ணும் தவறைச் செய்தவர்களுக்கு, தங்கள் தவறை ஒப்புக்கொள்ளும் விஷயத்திலும், சத்தியத்திற்காக வைராக்கியம் கொள்கின்றவர்களாக மாறும் விஷயத்திலும் தாழ்மைக்கான மாபெரும் பரீட்சை உள்ளது. சரியான பக்கத்தில் காணப்படுகிறவர்களுக்குக்கூட தாழ்மைக்கான பரீட்சை உள்ளது. அதாவது, இவர்கள் தாங்கள் சரியான பக்கத்தில் காணப்படுவதினாலும், ஜெயிப்பதினாலும் மிகைப்படாமல், மாறாக "ஏற்றக்காலத்தில் தேவன் தங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்தக் கரத்தில் அடங்கியிருக்க வேண்டும்."

சாத்தான், உயர்த்தளத்தில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளபடியால், அவனுக்கும், விழுந்துபோன தூதர்களுக்கும் இருக்கும் தொடர்பினிமித்தம் பேய்களின் அதிபதியென அழைக்கப்படுகின்றான். பரிசேயர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட தவறான கணிப்பானது ஆண்டவரைச் சாத்தான் என்றும், சாத்தானுடைய வல்லமையினாலேயே அவர் பிசாசுகளைத் துரத்துகின்றார் என ஆண்டவரைக் குற்றம் சாட்ட ஏவிற்று. இவ்விஷயம் குறித்து அவர்களுக்கு அறிவுரைக் கூற கர்த்தர் முற்பட்டார். இன்னும் சாத்தான் தன்னுடைய சொந்த வேலைக்காரர்களுக்கும், கூட்டாளிகளுக்கும் எதிராக கிரியை புரிகின்ற காலம் வரும்போது, அது அவனுடைய சாம்ராஜ்யம் விரைவாக விழப்போகின்றதைக் குறிக்கும் என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட முற்பட்டார். இன்னுமாக, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டும், கனப்படுத்தப்பட்டும் இருக்கும் சிலர் கூடப் பிசாசுகளைத் துரத்துவதாகவும் கர்த்தர் சுட்டிக்காட்டினார். ஒருவேளை தாம் பெயல்செபுலினாலே பிசாசுகளைத் துரத்துகிறவராக இருந்தால், இதே வல்லமையைச் சிலசமயம் செயல்படுத்தியுள்ள அவர்களுடைய நண்பர்கள் மற்றும் நெருக்கமானவர்கள் குறித்து என்ன முடிவிற்கு வருவார்கள் என்று அவர்களிடம் கர்த்தர் கேட்டார். ஆனால், ஒருவேளை தாம் தேவனுடைய வல்லமையினால்தான் பிசாசுகளைத் துரத்தினார் என்றால், அது தாம் அறிவித்துள்ள பிரகாரம் தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளதற்கான அறிகுறியாகும் என்றார்.

## "துணிகரமான பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை"

இப்படியாக, அவர்களது எதிர்ப்பிற்குக் கர்த்தர் பதிலளித்ததின் மூலம், அவர்கள் தமக்கு எதிராக காணப்படுகின்றார்கள் என்றும், தமது வார்த்தைகளை எதிர்க்கின்றார்கள் என்றும், தாம் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கையில், அவர்கள் இப்படியாகத் தம்மை எதிர்ப்பது என்பது அவர்கள் தேவனை எதிர்ப்பதைக் குறிக்கின்றது என்றும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். பின்னர், தமக்கு இருக்கும் தேவனுடைய ஆவியை, தேவனுடைய வல்லமையை அவர்கள் பிசாசின் வல்லமையாகக் கூறினதின் மூலம், அவர்களுடைய வார்த்தைகள் தேவதூஷணமாக இருக்கின்றது என்ற உண்மையின் மீது அவர்களது கவனத்தைக் கர்த்தர் கொண்டுவந்தார். ஆயினும், இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்கள் ஏதோ சினம் அடைந்ததால் பேசவில்லை மற்றும் ஒவ்வொரு சாட்சிகளைப் பார்த்த பின்னரும், சாட்சிகளை எதிர்த்தே பேசினார்கள். ஆகவே, அவர்கள் இருதயத்தில் பொல்லாதவர்கள் என்பது தெரிகின்றது. விழுகையின் காரணமாகவும், அறியாமை, மூடநம்பிக்கை போன்றவைகளின் விளைவாக உண்டாகும் சாதாரணமான பாவங்கள் அனைத்தும் தேவனுடைய ஏற்பாட்டின்படி இறுதியில் மன்னிக்கப்படும். ஆனால், வெளிச்சத்திற்கு எதிராகவும், அறிவிற்கு எதிராகவும் செய்யப்படும் துணிகரமான பாவங்கள் தேவனுடைய ஆவிக்கு எதிரான பாவமாகும். இப்படிப்பட்டதான பாவத்திற்கு இந்த யுகத்திலும் (அ) வரவிருக்கின்ற யுகத்திலும், அதாவது சுவிசேஷ யுகத்திலும் (அ) ஆயிரம் வருஷம் யுகத்திலும் எவ்விதமான மன்னிப்பும் இல்லை. முழுமையான வெளிச்சத்திற்கு எதிராக ஒருவேளை பாவம் செய்யப்பட்டிருக்குமாயின், அதற்கான பலன் (அ) தண்டனை அழிவாக இருக்கும்; அதாவது, இரண்டாம் மரணமாக இருக்கும். ஆனால் இப்படியான பாவத்தை உடையவர்கள் சொற்பமானவர்களாகவே இருப்பார்கள்.

பெரும்பாலானவர்களுடைய பாவத்தில் துணிகரமும், அறியாமையும் கலந்து காணப்படுகின்றது. இப்படியான சூழ்நிலையில் அறியாமையினால் செய்யப்பட்ட தப்பிதத்தின் பாகம் மன்னிக்கப்படும்; ஆனால் துணிகரமாகச் செய்யப்பட்ட தப்பிதத்தின் பாகமோ மன்னிக்கப்பட முடியாததினால் தண்டிக்கப்பட வேண்டியுள்ளது.

பரிசேயர்களும், வேதபாரகர்களுமே அவருடைய பிரபலத்தினிமித்தம் பொறாமை கொண்டபடியால், அவருடைய போதகங்களையும், அவருடைய அற்புதங்களையும் அவர் மேசியா என்பதற்கான போதுமான ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளாமல் அவரிடம் அடையாளம் கேட்டார்கள். அவரோ நெடுநாட்களுக்குப் பின்னர் நடக்கப் போகும் ஓர் அடையாளத்தை அவர்களிடம் கூறினார். அதாவது, தாம் கல்லறைக்குள் காணப்படப் போகின்ற காரியமானது, யோனா பெரிய மீனின் வயிற்றில் காணப்பட்ட காரியத்திற்கு ஒத்ததாகும் என்று கூறினார். யோனா பிரசங்கம் பண்ணினதினிமித்தம் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; ஆனால் யோனாவிலும் பெரியவருடைய பிரசங்கத்தைக் கேட்டுப் பரிசேயர், வேதபாரகராகிய இவர்கள் மனந்திரும்பாத காரணத்தினால், நியாயத்தீர்ப்பின் நாளில், ஆயிரவருஷ யுகத்தின்போது. அந்நிய தேவனை வணங்கினவர்களாகிய நினிவே பட்டணத்தார், இவர்களைக் காட்டிலும் மேலான சூழ்நிலையில் காணப்படுவார்கள் என்று இவர்களுக்குக் கர்த்தர் உறுதியளித்தார். சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கும்படிக்குச் சேபா நாட்டு ராஜஸ்தீரி வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தாள்; ஆனால், பரிசேயர்கள், வேதபாரகர்களாகிய இவர்கள் மத்தியில் சாலொமோனிலும் பெரியவர் இருந்தும், இவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவுமில்லை, மற்றும் அவருடைய செய்திக்கும் செவிசாய்க்கவுமில்லை. இவ்விதமாக நாம் குருடர்களாகக் காணப்படாதிருப்போமாக. மாறாக, நம்முடைய முழு இருதயங்களோடு நசரேயனை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்தொடருவோமாக!

**ஆமென்!**

R 4618

# "ஆண்டவரே என்னை இரட்சியும்" பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார்

## மத்தேயு 14:22-36

"அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்." வசனம் 33

மற்றச் சமய புஸ்தகங்களைப் போலல்லாமல், வேதாகமத்தின் கதாப்பாத்திரங்கள் தொடர்புடைய விஷயத்தில், அவர்களைப்பற்றின அப்பட்டமான உண்மைகளை வேதாகமம் கூறுகின்றது. பரிசுத்தவானாகிய பேதுருவின் சுபாவக் குணத்தினுடைய பலவீனங்கள் மற்றும் பலங்கள் பற்றியே, நம்முடைய இன்றைய பாடம் காணப்படுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கின்ற அதே கதாப்பாத்திரம், வேறு சில தருணங்களில் தைரியமுள்ளவராகவும், உயர் குணமுள்ளவராகவும், அதேசமயம் தற்பெருமையடித்துக் கொள்பவராகவும், துடுக்குத்தனமுள்ளவராகவும் காட்டப்படுகின்றார். வேதாகமத்திலுள்ள எந்த ஒரு கதாபாத்திரத்தின் ஒரு பெலவீனமும் கூட உருமாற்றப்பட்டோ அல்லது பதிவும் பண்ணப்படாமலும் இல்லை. இயேசு தமக்குச் சம்பவிக்க இருக்கும் மரணத்தைக் குறித்துச் சொல்வதைக் கேட்ட இதே பரிசுத்தவானாகிய பேதுரு, ஆண்டவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், இப்படியாக இயேசு பேசியதினிமித்தம் அவரைக் கடிந்துக்கொள்ள ஆரம்பித்து, இயேசு உண்மையைச் சொல்லவில்லை என்றும், இயேசுவைக் காட்டிலும் சீஷர்களாகிய தங்களுக்கு அதிகம் தெரியும் என்றும், இயேசு அறியாமையில் பேசுகின்றார் அல்லது வேண்டுமென்றே தம்முடைய எதிர்காலத்தைத் திரித்துக் காட்டுகின்றார் என்றும் இயேசுவுக்குப் புரிய வைக்க முயற்சித்தார். இந்த விஷயத்தில் அவருடைய பேச்சுகள் எதிராளியானவனிடமிருந்து வந்தது என ஆண்டவர் கடிந்துக் கொண்டதில், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அதே தைரியமுள்ள மனுஷன்தான் (பேதுருதான்) பின்னாளில் தனது ஆண்டவரைப் பாதுகாப்பதற்கென, தனது பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டினார். இப்படியெல்லாம் செய்த சில மணி நேரத்திற்குப் பிற்பாடுதான் சத்தியம் செய்தும், சபித்தும், ஆண்டவரைப் பேதுரு மறுதலிக்கவுஞ்செய்தார். எனினும், இவரை ஆண்டவர் அன்பு கூர்ந்தார்; இப்படியாகப் பலமும், பலவீனமும் கொண்டிருந்த இவர், "உம்மை அனைவரும் கைவிட்டு ஓடிப்போனாலும், நான் உம்மை விட்டு ஓடமாட்டேன்" என்று பெருமையாய்க் கூறினாலும், இவரிடம் பெருந்தன்மையும், உண்மையுமுள்ள இருதயமும் இருந்தது. பரிசுத்தவானாகிய பேதுருவும், மற்றச் சீஷர்களும், சீற்றம் நிறைந்த கடலின் மேல், மீன் பிடிக்கும் படகில் போய்க்கொண்டிருந்தனர். இயேசு அவர்களோடு படகில் செல்லாமல், ஜெபம் பண்ணும்படிக்கு மலைக்குப் போனார். ஆண்டவர் கடலின் மீது நடந்துத் தங்களை நோக்கி வருவதைச் சீஷர்கள் கண்டபோது, படகு இன்னும் செல்ல வேண்டிய கரையை அடையவில்லை. முதலில் அனைவரும் அச்சம் அடைந்தனர்; இயேசுவினுடைய வார்த்தை, அவர்களுடைய அச்சத்தைப் போக்கினது; பின்னர் பரிசுத்தவானாகிய பேதுரு தானும் தண்ணீரின் மீது, அவர் அண்டைக்கு நடந்து வரத்தக்கதாக, கர்த்தரிடத்தில் அனுமதிக் கேட்டார்; அனுமதி வழங்கப்பட்டது; மேலும் ஒருவேளை அப்போஸ்தலன் தனது விசுவாசத்தைத் தக்க வைத்திருந்திருப்பாரானால், அவர் பாதுகாப்பாய்க் கர்த்தர் அண்டைக்குத் தண்ணீர் மேல் நடந்துப் போய்ச் சேர்ந்திருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. ஏனெனில், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குவதிலும், பிசாசுகளைத் துரத்துவதிலும் பேதுருவின் மூலமும், மற்ற அப்போஸ்தலர்கள் மூலமும் செயல்பட்ட அதே வல்லமையானது, நிச்சயமாய்ப் பேதுரு தண்ணீருக்குள் மூழ்குவதிலிருந்தும் அவரைக் காத்துக்கொண்டிருக்கும்.

### "அற்ப விசுவாசியே"

தண்ணீரின் மேல் நடக்க முயற்சிக்கும் விஷயத்தில், மற்றவர்களைக்காட்டிலும் மற்றும் இன்றுள்ள நம்மைக்காட்டிலும் பரிசுத்தவானாகிய பேதுருவின் விசுவாசம் பலமானதாக இருப்பினும், போதுமானளவுக்குப் பலமுடையதல்ல. பேதுருவின் கண்கள் கடல் சீற்றத்தின் மேல் நொடி நேரம் விழுந்தபோது, அவருடைய விசுவாசம் விழுந்துவிட்டது. அவர் மூழ்க ஆரம்பித்துவிட்டார். "உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" (மத்தேயு 14:31). அச்சம்பவத்திற்குரிய படிப்பினை முடிந்ததும், காற்று அமர்ந்தது. "அப்பொழுது, படவில்

உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" (மத்தேயு 14:33).

அனைவரும் பாவிகள், "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." சிலர் தங்களுடைய பூரணமின்மையின் அளவை உணர்ந்துக்கொள்வதில்லை. புத்தியுள்ள ஜனங்களனைவரும் தாங்கள் பூரணமற்றவர்கள் என்றும், இதனால் மாபெரும் சிருஷ்டிகரால் அங்கீகரிக்கப்படுவதற்குத் தாங்கள் பாத்திரவான்களல்ல என்றும் உணர்ந்துக்கொள்வார்கள். இன்னுமாக, தாங்கள் அவருடைய தயவுக்கும், நித்திய ஜீவனைப் பெறுவதற்கும், பாத்திரவான்களாய் இருக்கின்றார்கள் என்று, தேவனிடத்தில் இவர்கள் தங்களுக்காக பரிந்து பேசவும் முடியாது. இப்படியாகப் பாத்திரமின்மை எனும் குற்றத்தீர்ப்பு ஆழமாகப் பதியப் பெற்றிருக்கும்போதும், 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று உணர்ந்துக்கொள்ளுதல் கூர்மையாகும்போதும்தான் இருதயமானது, நித்திய ஜீவனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துக்கொண்டு, இருளிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திடமிருந்தும், அதன் மரணத் தண்டனையிலிருந்தும் விடுவிக்கும்படிக்குக் கர்த்தரிடம் கூக்குரலிடும். இப்படிப்பட்டவர்கள் அனைவருக்கும், பரிசுத்தவானாகிய பேதுருவின் விஷயத்தில் செய்யப்பட்டதுபோல, உதவிகரத்தைக் கொடுக்க இரட்சகர் ஆயத்தத்துடன் நின்று கொண்டிருக்கின்றார். இவர்கள் ஒருவேளை பாவத்திற்காக மனம் வருந்தி, நீதியினிடத்திற்குத் திரும்பினார்கள் என்றால், இவர்களுடைய பாவங்களுக்காக, இவர்களை இரட்சகர் கடிந்துக்கொள்வதில்லை. மாறாக, 'ஏன் நீ சீக்கிரமாக வரவில்லை? நீ கூக்குரலிட்ட/கூப்பிட்ட மாத்திரத்திலேயே உனக்கு உதவிடுவதற்கு நான் விருப்பம் கொண்டிருந்தேன்' என்றே கூறுவார்.

## ''சித்திரவதைப் பற்றின பயமுறுத்துதல், உலகத்தை மாற்றுவதில் தோற்றது''

பாவிகளுடைய மனங்களுக்கு முன்னதாக, பிசாசுகளின் கரங்களில் நித்திய காலத்திற்குமுரிய சித்திரவதைக் காட்சியைக் கொண்டு வரவேண்டும் என்று நம்முடைய முன்னோர்கள் எண்ணிக் கொண்டார்கள். இப்படியான ஒரு காட்சியானது, பாவத்தின் சம்பளம் மரணம், அதாவது, நித்திய அழிவு என்று வேதவாக்கியங்களால் தெரிவிக்கப்படும் தண்டனையைவிட, மனிதனைப் பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குக் கொண்டுவரும் விஷயத்தில், மிகவும் வெற்றிகரமாகக் காணப்படும் என நமது முன்னோர்கள் எண்ணினார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:9). ஆனால், இதைக் கொஞ்சம் அளவுக்கு மிஞ்சியே செய்துவிட்டனர். இவர்களுடைய இந்தச் செய்தி உலகத்தை மாற்றும் விஷயத்தில் தோற்றுப்போனது. இந்தச் செய்தி, பரிசுத்தமானவர்களாக, அன்பானவர்களாக, நல்லவர்களாக இருந்தவர்களுக்கு மாத்திரமே சித்திரவதையாக இருந்தது. இச்செய்தியில் ஏதோ தவறு உள்ளது என்று மனுஷர்கள் நிதானித்து/பகுத்து அறிந்தார்கள், காரணம், இப்படிச் சொல்ல முடியாத அளவிலான சித்திரவதைக்குள் ஜீவன் மாயும் என்ற செய்தியானது, மனிதனுடைய சகல அனுபவங்களுக்கும் எதிர்மாறாகக் காணப்படுகின்றது. எனினும் இப்பொழுதோ நவீன வேதாகமம், மேம்பட்ட மொழியாக்கங்கள், ஓரக் குறிப்புகள் முதலியவைகளின் உதவியினால், தேவனுடைய வார்த்தை உண்மையானது என்றும், அது திரித்துக் கூறப்படக்கூடாது என்றும், வேதாகமம் மரணம் என்று சொல்லும்போது, அது சித்திரவதை வாழ்க்கையைக் குறிக்காது என்றும், தேவனுடைய ஜனங்கள் அதிகமதிகமாய்க் கற்றுக்கொண்டு வருகின்றார்கள்.

தேவன் அளிக்கும் அனைத்து வாய்ப்புகளையும், இரட்சிப்பையும் மறுத்துவிடுகின்றவர்களின் இறுதி முடிவாக, தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள காரியமாகிய, முற்றிலுமாக ஒன்றுமில்லாமல் அழிக்கப்படுவது (இரண்டாம் மரணம்) என்பது, சித்திரவதையில் கழியும் வாழ்க்கையைவிட, அச்சுறுத்தலாகத் தோன்றுகின்றது என்று சிலர் நம்மிடம் சொல்லியிருக்கின்றனர். இப்படியான மிகுந்த அச்சத்திற்கான காரணங்கள் என்னவெனில், இது நியாயமானதாக இருக்கின்றது என்பதும், மற்றும் சிந்திக்கின்ற ஜனங்களால் இதற்கு ஒப்புதல் அளிக்க முடியும் என்பதும் ஆகும். மரணத்தண்டனை என்னும் அழிவிலிருந்து, ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் விடுவிப்பதற்கு இரட்சகர் ஆயத்தமாக நிற்கின்றார். அதாவது, கல்லறையிலிருந்தும், மரணத்தின் காரணமாகச் சரீரம் மற்றும் மனதில் ஏற்பட்ட சகல பூரணமின்மைகளிலிருந்தும், விடுவிப்பதற்கு இரட்சகர் ஆயத்தமாக நிற்கின்றார். முதல் மனிதனுடைய பாவத்தையும், ஆதாமோடு அவருடைய மரணத்தண்டனையில் பங்கடைந்துள்ள அனைவரின் பாவத்தையும் தள்ளுபடிச் செய்வதற்கு கல்வாரியில் நடந்திட்ட இயேசுவின் மரணம் இல்லாமல், எந்த உயிர்த்தெழுதலும், எந்த எதிர்க்கால ஜீவியமும் இருப்பதில்லை.

இன்னுங்கொஞ்ச காலத்தில் உண்மையுள்ளவர்கள் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாக இருக்கும்படிக்கு, "முதலாம் உயிர்த்தெழுதலின்" மூலம் வருவார்கள். பின்னர் மரண நித்திரையிலுள்ள முழு உலகத்தின் விழித்தெழுதலும், மனுக்குலத்தின் பொதுவான மேம்படுத்தப்படுதலும் சம்பவிக்கும். நமது கர்த்தர், பேதுருவுக்கு உதவிச் செய்தது என்பது, முழு உலகத்திற்கும் அளிக்கப்படும் மாபெரும் உதவிக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக, தேவனுடைய பிள்ளைகளாக ஏற்கெனவே ஆனவர்களுக்கு, நமது கர்த்தருடைய உதவிகரம் இல்லையெனில், அவர்கள் மீண்டுமாக பாவம் செய்வதற்கான ஆபத்தில் எப்படிக் காணப்படுவார்கள் என்பதையும் சித்தரிக்கின்றது.

**ஆமென்!**

R 4634

# "நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள்"

## மத்தேயு 13:1-9; 18-23.

"ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்."

**யாக்கோபு 1:21**

தேவன் தம்முடைய ஆயிரவருஷ இராஜ்யத்தின் நிர்வாகத்தில் கிறிஸ்து இயேசுவுடன் அங்கங்களாக இருக்கும்படிக்கு அழைக்கும் சிறுமந்தையைத் தெரிந்தெடுக்க சர்வவல்லமையுள்ளவர் பயன்படுத்தும் முறை தொடர்பான மிக அருமையான பாடத்தை நமது கர்த்தர் படகில் இருந்துகொண்டு போதித்தார். இங்கு இடம்பெறும் உவமையிலுள்ள "விதையானது," இராஜ்யத்தின் செய்தி அல்லது அழைப்பாகும். இந்த விதைகளோ சாதகமான சூழ்நிலைகளில் முளைத்து, தேவைப்படும் குணலட்சணத்தின் வளர்ச்சியாகிய பலனைக்கொண்டு வருகின்றது. நமது கர்த்தரானவரே இராஜ்யத்தின் இந்த நல்ல விதைகளை விதைக்கும் மாபெரும் விதைப்பாளராக இருக்கின்றார். கர்த்தருக்குப் பின் அப்போஸ்தலர்கள் அதைச் செய்தார்கள். அதுமுதல் கர்த்தர், தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைவரையும் விதை விதைக்கும் வேலையில் ஏறக்குறைய பயன்படுத்தியுள்ளார்.

தெய்வீகச் செய்தி எனும் விதை பெரும்பாலும் வீணடிக்கப்பட்டது என்ற உண்மையானது, இந்தச் செய்தி நல்லதல்ல என்பதற்கும், விரும்பத்தக்கதல்ல என்பதற்கும் எவ்விதத்திலும் நிரூபணமாகாது. நிலத்தில், அதாவது இருதயத்திலேயே தவறு உண்மையில் காணப்படுகின்றது என இந்த உவமை காட்டுகின்றது. ஒருவேளை அனைத்து இருதயங்களும் சரியாக இருந்திருக்குமாயின், விதை (அ) செய்தி எல்லா இடத்திலும் அதிக பலனைக் கொடுத்திருக்கும்.

### "வழியோரமாகக் கேட்டுச்செல்பவர்கள்"

எல்லா நிலமும் நல்ல (அ) பொருத்தமான நிலமாக இல்லாவிட்டாலும், அநேகர் தங்களிடத்தில் இருக்கும் சாதகமற்ற நிலைமையைச் சரிச்செய்துகொள்வதற்கும், சீர்ப்படுத்துவதற்குமான ஆற்றல் பெற்றிருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டும் விதத்தில் உவமையின் காரியங்கள் முன்வைக்கப்படுகின்றது. இந்த உவமையின் அர்த்தம் தொடர்பாகவும் நாம் யூகம் பண்ண வேண்டியதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே விளக்கம் கொடுத்த சில உவமைகளில், இந்த உவமையும் ஒன்றாக உள்ளது. இவ்விஷயத்தை அநேகர் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

"விதை" என்பது இராஜ்யத்தின் செய்தியாக இருக்கின்றது. அநேகர் இதைப் புரிந்துக்கொள்வதில்லை. இப்படியாகப் புரியமுடியாதவர்களின் செவிகள், இச்செய்தியை இழந்துவிடுகின்றன. ஏனெனில், இச்செய்தியை எடுத்துப்போடும்படிக்கு எதிராளியானவன் விழிப்பாகக் காணப்படுகின்றான். இந்த எதிராளியானவன், "வழியருகே விழுந்துள்ள விதைகளைப்" பட்சித்துப் போடும் பறவைகளாக அடையாளப்படுத்துகின்றான். இப்படியாக, "வழியருகே" கேட்டுச் செல்பவர்கள்தான் அனைத்துப் பெயரளவிலான சபை கூட்டத்தார்களிலுள்ள, பெரும் திரளான வகுப்பாராய் இருக்கின்றனர். இவர்கள் சம்பிரதாயமானவர்களே.

### "செவிகொடுத்துக் கேட்ட கற்பாறை நிலம் போன்றவர்கள்"

"கற்பாறையான" நிலம் என்பது, இராஜ்யத்தின் செய்தியைக் கேட்கும் மற்றொரு வகுப்பாரை அடையாப்படுத்துகின்றது. இவர்களுக்கு இந்தச் செய்தி நல்லதாகத் தோன்றுகின்றது. இவர்கள் இதில் விருப்பம் கொள்கின்றனர். ஆனால், குணலட்சணத்தின் ஆழம் விஷயத்தில் இவர்கள் குறைவுபடுகின்றனர். இவர்கள் தங்களை (கிறிஸ்தவர்களென) அறிக்கை செய்துகொள்கின்றனர். இன்னுமாக, சில காலம் வரையிலும் அபரிவிதமாகத் தழைத்தோங்குகின்றனர். ஆனால், இராஜ்யத்தின் வேலைக்காக, இவர்களைக் கர்த்தர் பயன்படுத்துவதற்கு ஏதுவான

குணலட்சணத்தின் வளர்ச்சிக்கு அவசியமான ஆழத்தில் இவர்கள் குறைவுபடுகின்றனர். மேலும், சோதனைகளும், பரீட்சைகளும் வரும்போது, இவர்கள் இடறி விழுந்து போய்விடுகின்றனர். "மற்றவர்கள் பரிசை வெல்லத்தக்கதாகப் போராடுகையில்," இவர்கள், தாங்கள் "மலர் மெத்தைகளில் சுகமாக" இராஜ்யத்திற்குச் சுமந்துகொண்டு செல்லப்படுவார்கள் என எண்ணுகின்றனர். இராஜ்யத்திற்கு எவ்விதமான சுலபமான சாலையும் இல்லை. தெரிந்துக்கொள்ளப்பட்ட "மணவாட்டியாக" இருக்கப்போகிறவர்கள் அனைவரும், "மிகுந்த உபத்திரவத்தினாலே இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்" என ஆண்டவர் கூறியுள்ளார்.

## "நல்லவிதை ஆனால் முள்ளுள்ள இடம்"

முட்செடிகளை முளைப்பிக்கும் நிலமானது, சரியான கிறிஸ்தவக் குணலட்சணத்தை உருவாக்குவதற்குரிய ஐசுவரியமும், மிகவும் பொருத்தமுமான நிலமாகவே காணப்பட்டது. ஆனால், இந்த நிலமானது முட்செடியின் விதைகளைப் பெருமளவில் கொண்டிருக்கின்றது, மற்றும் இந்த நிலமானது கோதுமையையும், முட்செடிகளையும் வெற்றிகரமாக விளைவிக்க முடியாது. ஆகவே, உவமை கூறுகின்றதுபோல, முள் வளர்ந்து கோதுமையை நெருக்கிப் போடுகின்றபடியால், போதுமானளவுக்குக் கோதுமை விளைவதில்லை. இந்த முட்கள் சிலர் கருத்துத் தெரிவிப்பது போன்று தீயொழுக்கமும், குற்றமான ஆசைகளும் அல்ல; சுயநல வேட்கைகளுள்ள இருதயங்களை உடையவர்கள் இராஜ்யத்தின் செய்தி தொடர்பான எதையும் கேட்பதில்லை. மேலும், இப்படிப்பட்டவர்கள் இவ்வுமையில் குறிப்பிடப்படவும் இல்லை. மாறாக, துணிகரமான பாவிகளாய் இல்லாமலும், வெளிப்புறமாக நீதியின் பாதையில் நடக்கிறவர்களுமாய் இருப்பவர்கள்தான் இந்த உவமையில் குறிப்பிடப்பட்டுள்ளனர். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்" (மத்தேயு 13:22). உவமையில் இடம்பெறும் இந்த வகுப்பாரில் அநேக பெருந்தன்மையுள்ள நல்ல ஜனங்கள் அடங்குகின்றனர். ஒருவேளை உலகத்தின் ஆவியினின்றும், அதன் இலட்சியங்கள், ஐசுவரியம், செல்வாக்கிலிருந்தும், இந்த ஜீவியத்திற்கான நற்பொருள்களின் மீதான நேசத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டால், நீதியில் மிகவும் பலன் கொடுக்கின்றவர்களாய் இருப்பார்கள் என நாம் கருதும் அநேக ஜனங்களும் கூட இந்த உவமையிலுள்ள இவ்வகுப்பாரில் அடங்குகின்றனர். நாம் நம்மையும், நாகரிகமான இடங்களிலுள்ள அநேக ஜனங்களுடைய ஊதாரித்தனத்தையும், வீரியத்தையும் பார்க்கும்போது, நமக்குள்ளே பின்வருமாறு கூறுவோம், "ஒருவேளை இவர்களுடைய ஜீவியங்கள் கர்த்தருடைய வழிக்கு நேராகத் திருப்பப்பட்டால் மற்றும், இந்தப் பூமிக்குரிய சுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டால், எத்துணை அருமையான பாத்திரங்களாக இவர்கள் இருந்திருப்பார்கள்." எனினும் இவர்களுடைய பலம், இவர்களுடைய ஆற்றல்/சக்தி உலகக்காரியங்களினாலும், கவலைகளினாலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு உன்னதமான கனத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியென அவசியப்படும் கனிகளை இவர்களால் கொடுக்க இயலாது. இத்தகையவர்களுக்கு ஆண்டவருடைய செய்தி பின்வருமாறு உள்ளது; அதாவது, "உலகப்பிரகாரமான காரியங்களுக்கு உங்களுடைய நேரத்தையும், பெலத்தையும், செல்வாக்கையும் கொடுத்துக்கொண்டு, அதேசமயம், என்னுடைய இராஜ்யத்தில் என்னோடு கூட ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக உங்களால், உங்கள் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப் பண்ணிக்கொள்ள முடியாது; மற்றும் என்னுடைய சீஷனாக இருக்கிறவன், தனது சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றுவானாக. நான் எங்கேயோ, அங்கே என் சீஷனும் இருப்பான்" என்பதேயாகும்.

## "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்"

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" என்று ஆண்டவர் கூறினார் (யோவான் 15:8). இந்த உவமையில், நல்ல நிலத்தின் பலன் வேறுபடுகின்றது. அதாவது, 30, 60 மற்றும் 100 ஆக பலன் தருகின்றது. அதிகமான பலன் இருக்கையில், பிதாவின் மகிழ்ச்சியும், இரட்சகருக்கான மகிமையும் அதிகமாகக் காணப்படும். இருதயத்திலும், ஜீவியத்திலும், குணலட்சணத்திலும் பலன் கொடுக்கிற காரியமானது, அந்த நபரையும், அவர் எப்படி இராஜ்யத்தின் செய்தியை ஏற்றுக்கொள்கின்றார் என்பதையே அதிகமாய்ச் சார்ந்துள்ளது. அதிகமான பலனைக் கொடுப்பவர்கள் என்பவர்கள், அழைப்பை மிகவும் உண்மையாகவும், புத்திக் கூர்மையுடன் பற்றிப் பிடித்துக் கொண்டவர்கள் ஆவார்கள். "வசனத்தைக் கேட்கிறவன் உணருகிறவனுமாயிருக்கிறான்"

(மத்தேயு 13:23). யாருடைய இருதயம் தேவனுக்கு உண்மையாக இருக்கின்றதோ, மற்றும் யார் தன்னைத் தடைகளிலிருந்தும், உலகப்பிரகாரமான ஆசைகள் மற்றும் குறிக்கோள்களிடமிருந்தும் விடுவிக்கின்றனரோ, மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல, "ஒன்றையே செய்கிறேன்" எனக் கூற முடிகின்றதோ, அவர் நிச்சயமாய் இராஜ்யத்தை அடைவார்.

இராஜ்யத்தின் செய்தியை நாம் கேட்பது மாத்திரம் போதாது; இராஜ்யத்தின் செய்தி தொடர்பான நல்ல இருதயங்களை (அ) நல்ல நோக்கங்களை நாம் பெற்றிருப்பது மாத்திரம் போதாது; இவைகளுடன்கூட ஆண்டவர் கூறுவதுபோன்று, நாம் இராஜ்யத்தின் செய்தியை புரிந்துக்கொள்கின்றவர்களாகவும் இருப்பது அவசியமாகும். ஆகவே, வேத ஆராய்ச்சி அவசியமாய் உள்ளது. பூமிக்குரிய ஜீவியத்தின் சொற்ப வருடங்களுக்காக ஆயத்தப்படுவதில் நாம் பல ஆண்டுகள் (கல்வி) கற்றுக்கொள்வது மிகவும் சரியானதும், ஞானமானதுமாக இருக்கின்றது என்பதைப் புத்தியுள்ள ஜனங்கள் எண்ணுகின்றார்கள். அப்படியானால் நித்தியத்திற்குரிய ஜீவியத்திற்கும், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குமான நமது ஆயத்தமாகுதலுக்கு எவ்வளவு கற்றுக்கொள்ளுதல் (அவசியமாய்) சரியானதாய் இருக்கும். இராஜ்யத்திற்கான குணலட்சணத்தின் வளர்ச்சியில் செலவழிக்கப்பட்ட நேரமும், பிரயாசமும் ஞானமான செலவழித்தல் ஆகும். மற்றும், 30, 60 அல்லது 100 என்ற அறுவடை பலனானது நம்முடைய உண்மையின் அளவையும், வீரியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இராஜ்யத்தில் வெகுமானமும் சரிவிகிதமான அடிப்படையிலேயே இருக்கும். "மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது." இராஜ்யத்தில் மகிமையில் பல்வேறு அளவுகள் காணப்படும், எனினும் போதுமானளவு பலனைக்கொடுக்காத எவரும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்; தகுதியில்லாத எவருக்கும் "நல்லது" என்ற வார்த்தை ஒருபோதும் சொல்லப்படாது.

**ஆமென்!**

---

R 4635

# "கோதுமை மற்றும் களைகள்"

## மத்தேயு 13:24-43

"அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்." - **மத்தேயு 13:43**

இங்கு நாம் "இராஜ்யத்தின் மற்றொரு உவமைக்கு," ஒரு மாபெரும் தீர்க்கதரிசனத்திற்கு அறிமுகமாகுகின்றோம். கடந்த பாடத்தில் சத்தியத்தைக் கேட்கும் பலவேறு வகுப்பாரைக்குறித்து நாம் பார்த்தோம். இன்றைய நாளின் பாட ஆராய்ச்சியானது, "நல்ல நிலமாகிய" சத்தியத்தைக் கேட்டவர்களை மாத்திரமே கருத்தில் எடுத்து, மற்றவைகளையெல்லாம் புறக்கணித்து விடுகின்றது. மேலும், நமது கர்த்தர் சுவிசேஷ யுகத்தின் வரலாற்றை முன்னறிந்தவராக இருக்கின்றார் என்பதையும் காட்டுகின்றது. கர்த்தரும், அவருடைய அப்போஸ்தலர்களும் நல்ல விதைகளையே விதைத்தார்கள் என்றும், அப்போஸ்தலர்கள் மரண நித்திரைக்குள் போன பிற்பாடு, மாபெரும் எதிராளியானவனாகிய சாத்தான் கோதுமை வயலில், களைகளின் விதையை/புல்லை விதைத்தான் என்றும் நமக்குக் கூறப்படுகின்றது. கிழக்கத்திய நாடுகளிலுங்கூட இப்படியான கெட்ட எண்ணத்துடனான வேலைகள், வழக்கத்திற்கு மாறானதல்ல என்று நமக்குக் கூறப்படுகின்றது. "புல்லின்" விதைகள் கோதுமையினின்று முற்றிலும் வேறுபட்டது ஆகும். ஆனால், இவைகளில் வளர்ந்து வரும் தண்டுகள் ஒன்று போலவே காணப்படும்; கதிர்கள் முதிர்வது வரையிலும் கைத்தேறினவர்களைத் தவிர, மற்றபடி எவர் கவனித்தாலும், இரண்டும் ஒன்று போன்றே தோன்றும்; கதிர்கள் முதிர்ந்த பிற்பாடு, கோதுமையின் கதிர்கள் பாரம் கூடினதாகக் காணப்படும். ஆனால், களை/புல் மிகவும் பாரம் குறைந்ததாக இருப்பதினால், இவைகள் நேராக நிற்கும். கைத்தேறினவர்களுக்கே கோதுமை வளரும் போதே கோதுமையினின்று களைகளை வேறுபடுத்தத் தெரியும்.

சாத்தானால், சபைக்குள் எப்படித் தப்பறைகள் கொண்டு வரப்படும் என்பது குறித்தும், தப்பறைகள் மூலம் உருவாகும் பிள்ளைகள், சத்தியத்தினால் உருவாகும் பிள்ளைகள் போலவே அநேகவிதத்தில் காணப்படுவார்கள் என்பது குறித்தும் விவரிக்கவே ஆண்டவர் இந்த உவமையைக் கொடுத்தார். இயேசுவினாலும், அப்போஸ்தலர்களாலும் விதைக்கப்பட்ட சத்தியத்தின் விதைகளை அழிப்பது என்பது எதிராளியானவனால் கூடாத காரியமாகும். இயேசுவும், அப்போஸ்தலர்களும் விதைத்ததை, எதிராளியானவன் குறுக்கிடுவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், கோதுமைகளுக்குள் களைகளை விதைத்திட, எதிராளியானவன் அனுமதிக்கப்பட்டான். அநேகமாக கோதுமையை நெருக்கிப் போடுவதற்கும் மற்றும் கோதுமையின் அதாவது, இராஜ்யத்தின் பிள்ளைகளினுடைய உண்மையான குணலட்சணம் தொடர்பான விஷயத்தில் வெளி உலகத்தை ஏமாற்றுவதற்கும் ஏதுவாக எதிராளியானவன் கோதுமைகளுக்குள் களைகளை நடுகின்றான்.

சாத்தானைத் தடைபண்ணக் கூடியதும், அவனுடைய திட்டங்களின் நிறைவேறுதலை எக்காலத்திலும் தடுப்பதற்குரியதுமாகிய தேவனுடைய சர்வவல்லமையை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தேவன் அங்கீகரிக்காததும், அவருடைய வார்த்தைகள் கண்டிக்கிறதுமான அநேக காரியங்களை, யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டமானது அனுமதிக்கின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தெய்வீகத் திட்டமானது பல யுகங்கள் அடங்கிய காலஅளவு கொண்டது என்பதையும், திட்டம் நிறைவடையும் போது மாத்திரமே தெய்வீக ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையை முழுமையாக வெளிப்படுத்தும் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். பிசாசுகள் மற்றும் மனுஷனுடைய கோபம் தேவனுடைய நோக்கங்களை எதிர்க்கத்தக்கதாக அனுமதிக்கின்றார். அதுவும் இவைகளையெல்லாம் தம்முடைய சொந்த மகிமைக்காகவும், தம்மோடு இசைவாக உள்ள அனைவரின் நன்மைக்காகவும் தம்மால் மாற்ற முடிகிற மற்றும் மாற்றும் அளவுக்குத் தக்கதாகவே அனுமதிக்கின்றார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## "இரண்டையும் வளரவிடுங்கள்"

வேலைக்காரர்கள், தாங்கள் போய்க் கோதுமையினின்று களைகளைப் பிடுங்கிப் போட உமக்கு சித்தமா? (அ) இல்லையா? என்றும், இவ்வாறாகச் சத்துருவின் வேலை அழிக்கப்படுமே என்றும் கேட்பதாக உவமையில் இடம்பெறுகின்றது. பதில் இல்லை என்று வருகின்றது. ஏனெனில், இப்படியாகச் செய்வது என்பது அனைத்துக் கோதுமைகளையும் துயரப்படுத்தத்தக்கதாக, கோதுமை

நிலத்தில் அப்படி ஒரு குழப்பத்தை/அமைதியின்மையை ஏற்படுத்திவிடும். உண்மையானவர்களும், போலியானவர்களும் மிகவும் நெருக்கமாக வாழ்வில் பிணைந்துக் காணப்படுகின்றனர். இவர்களுடைய வேர்கள் சமுதாயத்திலும், குடும்பங்களிலும் ஒன்றோடொன்றாகப் பின்னிப் பிணைந்துக் காணப்படுகின்றது. ஆகவே, யுகத்தின் முடிவாகிய அறுப்பின் காலம் வரையிலும், இரண்டுமே சேர்ந்து வளர விடப்பட வேண்டும் என்று ஆண்டவர் கூறினார். அப்போது இந்த இரண்டு வகுப்பரைச் சேகரிப்பதும், பிரிப்பதும் தொடர்பான அறிவுரைகள் "அறுக்கிறவர்களுக்கு" அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஆண்டவர் கூறினார். கோதுமை களஞ்சியத்தில் சேர்க்கப்படும், களைகளோ சுட்டெரிக்கப்படுவதற்காகக் கட்டப்படும். அதாவது, எதிர்க்கால விளைச்சலை, எந்தக் கெட்ட விதைகளும் பாதிக்காத அளவுக்குச் சுட்டெரிக்கப்படுவதற்காகக் கட்டப்படும்.

சீஷர்களுடைய விசேஷமான வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டவர் இந்த உவமையினுடைய அர்த்தத்தையும் விளக்கினார். இயேசு தாமே இராஜ்யத்தின் சுவிசேஷம் எனும் நல்ல விதையை விதைத்தவர் ஆவார். தவறான உபதேசம் மற்றும் வஞ்சனையின் விதைகளை விதைத்தவன் சாத்தான் ஆவான். "அறுப்பின் காலம்" என்பது கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் புதிய யுகம் ஆரம்பிப்பதற்கு முன்னர், இடம்பெறும் இந்த யுகத்தின் முடிவாகும். கோதுமை வகுப்பார் என்பவர்கள் கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில் அவரோடு மகிமையில் பங்கடைவதற்கெனப் பாத்திரமாய்க் கருதப்படுபவர்கள் ஆவர்; மற்றும் "களஞ்சியத்தில்" சேர்க்கப்படுதல் என்பது இந்தக் கோதுமை அனுபவிக்கும் உயிர்த்தெழுதலின் மாற்றத்தைக் குறிக்கின்றது. "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, அவிக்குரிய சரீரமுமுண்டு." "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்." (1 கொரிந்தியர் 15:43-44; வெளிப்படுத்தல் 20:6).

களைகள் வகுப்பார், இராஜ்யத்திலிருந்துச் சேர்த்து வெளியே எடுக்கப்படுவதாக 41–ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் காணப்படும் சபையானது, கரு நிலையில் இருக்கும் தேவனுடைய இராஜ்யமாக உள்ளது; அதாவது, எதிர்க்கால வேலை மற்றும் மகிமைக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது வளர்ந்துக் கொண்டிருக்கும் நிலையில் காணப்படுகின்றது. இராஜ்ய வகுப்பார் அனைவரும் தேவனுக்கென்று முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர்களாகவும், உயிர்த்தெழுதலில் தெய்வீக ஆவியின் ஜீவிகளாக மாறுவது தொடர்பாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறாக, ஆவியில் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் "கோதுமை" என்று தங்களை உரிமைப் பாராட்டிக்கொள்வதற்கோ, தங்களை இராஜ்யத்தின் சுதந்தரர்கள் என்று கருதிக்கொள்வதற்கோ உரிமையற்றவர்களாவர். இவர்கள் கிறிஸ்துவினுடைய சபைக்குள் காணப்படுவது என்பது, முறையற்ற விஷயமேயாகும். இவர்கள் நூற்றாண்டு காலங்களாக கோதுமையுடன் சேர்ந்துக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், யுகம் முடியும் போது அதாவது, ஆயிரம் வருஷம் யுகத்தின் ஆரம்பம் சம்பவிக்கும்போது, யுக மாறுதல்கள் நடைபெறும்.

இந்தக் களை வகுப்பாரில் திருடர்கள், கொலைக்காரர்களாகிய குற்றவாளிகளில் மிகவும் இழிவானவர்கள் உள்ளடங்குகின்றார்கள் என்று அனுமானிப்பது தவறாகும். எனினும், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளை நடப்பிக்கின்றவர்கள் என அப்போஸ்தலரால் விவரிக்கப்படுகின்றவர்கள், இதில் உள்ளடங்குகின்றனர், அதாவது கோபம், பகை, வன்மம், பொறாமை, விரோதம் கொண்டவர்கள் ஆவர். ஆனாலும் பெரும்பாலான களைகள், பெருந்தன்மையான குணமுடைய நல்ல ஜனங்களாக இருக்கின்றனர், எனினும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான "புதிய சிருஷ்டிகள்" அல்ல. இவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதற்காக அல்லாமல் பெயர்ச்சபையில், கிறிஸ்தவர்களெனத் தங்களைக் காட்டிக்கொள்வதினாலேயே குற்றஞ்சாட்டப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். இந்தக் காரணத்தினாலேயே இவர்கள் ஆண்டவருடைய பார்வையில் குற்றத்திற்குரியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தங்களையே கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்ட குற்றத்திற்கு முழுமையாக இவர்கள் பொறுப்பாளிகளும் அல்ல. இப்படியாக, இவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொள்வதற்கும், செயல்படுவதற்கும், இவர்கள் பிரசங்கிமார்களாலும், போதகர்களாலும் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் போலவே இந்தப் பிரசங்கிமார்களும், போதகர்களும் கூட இராஜ்யத்தைப் பற்றின அறிவோ (அ) இராஜ்யத்தில் அங்கத்துவம் பெற்றிட உதவும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலின் வல்லமையைக்குறித்தோ அறியாதவர்கள்தான். இவர்கள்

கட்டுகளாகக் கட்டப்படுதல் அதாவது சமுதாயங்களென, புகலிடங்களென, சபைகளென, சபை பிரிவுகளெனக் கட்டுகளாகக் கட்டப்படுதல் என்பது, "அறுப்பு" வேலை நடந்து கொண்டிருப்பதற்கான விசேஷமான நிரூபணமாகக் காணப்படும். உண்மையுள்ள வகுப்பார், கிறிஸ்துவானவர் அவர்களை விடுவித்துக் கொண்டு, அளித்துள்ள சுயாதீனத்தில் உறுதியாய்த் தரித்து நிற்கும்படிக்கும், அவர்கள் சபை பிரிவுகளின் கட்டுகளுக்குள் வரக்கூடாது என்று புத்திமதிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் "கட்டுகளுக்குள்" அங்கத்துவம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். மாறாக, உண்மையான "கோதுமை" வகுப்பாரிலுள்ள அனைவருடனான முழுமையான ஐக்கியத்தில் நிலை நிற்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும்.

இந்தக் கட்டுக்கள் அக்கினியில் போடப்படுவது என்பது, இவர்களின் அழிக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனாலும் அக்கினிச் சூளை என்பது, சொல்லர்த்தமான அக்கினிச் சூளை என்றோ, களைகளைப் பட்சித்துப் போடும் அக்கினி என்பது, சொல்லர்த்தமான அக்கினி என்றோ நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. இந்த யுகம் நிறைவடையும்போது வரும் அக்கினியானது, வேதவாக்கியங்கள் முன்னறிவிக்கின்றபடி ஆயிரம் வருஷம் இராஜ்யத்தை அறிமுகப்படுத்தும் "மகா உபத்திரவக் காலமாகும்." "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" (தானி 12:1). இந்த மகா உபத்திரவக் காலத்தில், இப்பொழுது தாங்கள்தான், உண்மையான சபை எனக் களைகளை எண்ணிக் கொண்டிருக்கச் செய்திட்ட தவறான நம்பிக்கைகள் யாவும் கரைந்துவிடும். இவர்கள் தங்களுக்குரிய சரியான தளம், பூமிக்குரிய தளமே என்று புரிந்துக்கொள்வார்கள். தாங்கள் வெறும் பூமிக்குரியவர்களே என்றும், எவ்விதத்திலேயும் அழைக்கப்பட்டு, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டு, ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான சபையில் தாங்கள் அங்கங்கள் ஆகவில்லை என்றும் புரிந்துக்கொள்வார்கள்.

## "தங்கள் பிதாவின் இராஜ்யத்தில்"

இந்த யுகத்தின் முடிவில், சபையினுடைய எதிர்ப்பார்ப்பு நிறைவேறும் என்பது தொடர்பான ஆண்டவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள், "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 13:43). அனைவரிடமும் கேட்கக்கூடிய செவிகள் இல்லை. ஆனால், இவ்வசனத்திலுள்ள கர்த்தருடைய செய்தியானது, சரியான இருதய நிலையைக் கொண்டிருப்பவர்களுக்கே அதாவது, ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ளக் கூடியவர்களுக்கேயாகும். இப்படிப்பட்டவர்கள், இந்த யுகத்தின் முடிவில் பூமிக்குரிய சபை அமைப்புகள் எவ்வளவு இருந்தாலுங்கூட, கர்த்தருடைய பரிசுத்தவான்களே, மீட்பருடைய ஆயிரம் வருஷம் அரசாட்சியிலுள்ள மகிமையில் பங்கடைந்து, மனித குடும்பத்தை ஆசீர்வதிப்பதற்கும், சத்தியத்தினால் வெளிச்சமூட்டுவதற்கும் தூக்கிவிடுவதற்குமெனச் சூரியனைப் போன்று பிரகாசிப்பார்கள் என்பதைப் புரிந்துக்கொள்வார்களாக.

**ஆமென்!**